1271

# THE
# MIND of CHRIST

7 MAR 1932

## கிறிஸ்துவின் சிந்தை

**S. Paramanandam.**

76872

Q6:33
N31

# THE MIND OF CHRIST

# கிறிஸ்துவின் சிந்தை

BY

**Rev S. Paramanandam**
*Royapuram, Madras.*

K. R. Press, Madras.

1931.

Price Rs. 1—0—0.] [விலை ரு. 1—0—0.

7-MAR 1932

# FOREWORD

BY

## The Rev. C. H. Monahan, M. A.,

*Chairman & General Superintendent*
*Wesleyan Mission, Madras District.*

---

It gives me much pleasure to commend to my friends in the Tamil country this book of addresses by Rev. S. Paramanandam. It was my privilege to hear at the Ikkadu convention the great address on "God is love" which is No. III in this book. The other addresses I have read also convince me that in this book the Tamil Church will hear the authentic message she needs for the fuller understanding of the Gospel of God. I could wish every leader of the church throughout the Tamil land to possess a copy and to read the book with prayerful attention. But it is a book which the simple hearted members of our congregations may also read with much profit. The writer makes his meaning clear. He uses language which all can understand. On every page he shows the results of patient study of Holy Scripture. But here is the living spirit and not the slavery of the letter. These are addresses that spring out of a living experience of the grace of God. I pray for a wide circulation of such a vital message, which keeps very near to the heart of the Gospel.

*Vepery, Madras.*
7—12—1931.

(Sd.) C. H. Monahan.

17 MAR 1932

# முகவுரை.

---

தமிழ் நாடெங்குமுள்ள என் சிநேகிதர்களுக்கு கனம் [illegible]ணர்தம் ஐயருடைய பிரசங்கங்கள் அடங்கிய இப்புஸ்தகத்தை மிகவும் நன்கு மதிப்புக்குரியதெனக் கையளிப்பதில் நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். இப்புஸ்தகத்திலுள்ள மூன்றும் பிரசங்கமாகிய "கடவுள் அன்பே" என்னும் விசாலமான பிரசங்கத்தை ஈக்காடு கன்வென்ஷனில் நான் கேட்கும் பாக்கியம் பெற்றேன். நான் இதில் படித்த மற்றப்பிரசங்கங்களும், தமிழ்ச்சபையானது தேவனுடைய சுவிசேஷத்தின் பூரண அறிவை அடையும்படி, தனக்கு அவசியமாயுள்ள திடநிச்சயமான செய்தியை இப்புஸ்தகத்தில் கண்டடையும் என்பதை எனக்கு உணர்த்தின. தமிழ் நாடெங்குமுள்ள திருச்சபைத் தலைவர் ஒவ்வொருவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கவும், அதை ஜெபசிந்தையோடு படிக்கவும் வேண்டுமென்பது எனது அபேட்சை. அது மாத்திரமல்ல, இந்தப் புஸ்தகம் நமது சபைகளிலுள்ள சாதாரண ஜனங்களுங்கூடப் படித்துப் பிரயோஜனமடையக் கூடியதாகும். இதன் ஆக்கியோன் தமது கருத்தைத் தெளிவாய்க் காண்பிக்கிறார். எல்லாரும் அறியக்கூடிய எளிய நடையில் பேசுகிறார். பரிசுத்த வேதாகமத்தைப் பொறுமையோடு படித்ததின் பலனை புஸ்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம். ஆனால் அது எழுத்துக்கு அடிமைப்பட்டதாயிராமல் ஜீவனுள்ள ஆவியாயிருக்கிறது. இப்பிரசங்கங்கள் தேவகிருபையின் ஜீவனுள்ள அனுபவத்திலிருந்து புறப்படுகிறவைகளாகும். சுவிசேஷத்தின் முக்கிய அம்சமாகிய இந்த ஜீவனுள்ள செய்தி எங்கும் விஸ்தாரமாகப் பரவ வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்.

வெப்பேரி.
சென்னை.
7-12-31.

C H MONAHAN.

# CONTENTS


| | | |
|---|---|---|
| I. | The Mind of Christ ... ... ... | 1 |
| II | Heart Without Understanding ... ... | 26 |
| III. | God is Love ... ... ... ... | 44 |
| IV. | The Body of Christ ... ... ... | 64 |
| V. | To me to live is Christ ... ... | 79 |
| VI. | Seal-Inheritance-Earnest ... ... | 98 |
| VII. | All in Christ ... ... .. ... | 116 |
| VIII. | The Cure of Care ... ... ... | 141 |
| IX. | How to overcome Evil ... ... ... | 167 |
| X. | Reconciliation ... ... ... | 189 |
| XI. | Humility ... ... ... ... | 205 |
| XII. | The Death of Christ ... ... ... | 225 |
| XIII. | What happened at Pentecost ... ... | 254 |
| XIV. | God's guidance ... ... | 277 |
| XV. | The Kingdom and the Cross ... ... | 304 |

# பொருள் அட்டவணை.


| | | |
|---|---|---|
| I. | கிறிஸ்துவின் சிந்தை .... .... .... | 1 |
| II. | உணர்வற்ற இருதயம் .... .... .... | 26 |
| III. | கடவுள் அன்பே .... .... .... | 44 |
| IV. | கிறிஸ்துவின் சரீரம் .... .... .... | 64 |
| V. | என் பிழைப்பே கிறிஸ்து .... .... | 79 |
| VI. | முத்திரை—சுதந்தரம்—அச்சாரம் .... .... | 98 |
| VII. | சகலமும் கிறிஸ்துவுக்குள் .... .... | 116 |
| VIII. | கவலைக்குப் பரிகாரம் .... .... .... | 141 |
| IX. | தீமையை வெல்லும் வழி .... .... | 167 |
| X. | ஒப்புரவாகுதல் .... .... .... | 186 |
| XI. | மனத்தாழ்மை .... .... .... | 205 |
| XII. | கிறிஸ்துவின் மரணம் .... .... .... | 225 |
| XIII. | பெந்தெகொஸ்தின் விசேஷம் .... .... | 254 |
| XIV. | தேவ நடத்துதல் .... .... .... | 277 |
| XV. | தேவராஜ்யமும் சிலுவையும் .... .... | 304 |

# I

# The Mind of Christ

# கிறிஸ்துவின் சிந்தை

“கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது” பிலி. 2: 5.

கிறிஸ்தவர்களின் தொகை பெருகவேண்டுமென்பது நமது பேராவல். “இந்தியா முழுவதும் கிறிஸ்தவ தேசமாகிவிட்டால் ஐக்கியமும் சமாதானமும் உண்டாகும்” என்று இரட்சண்ய சேனைத் தலைவர் ஒருவர் கூறினார். அவர் சொன்னது அநேகருக்கு நியாயமாகவும் தோன்றும். ஆனால் யூதர் ஒரு தேசமாக, ஒரு ஜாதியாக கடவுள் ஜனமென்று எண்ணப்பட்டபோதிலும், அவர்கள் தேவசத்தத்திற்குச் செவிகொடாதபடியால் ஆக்கினைக்குள்ளானார்கள். ஆகையால் கிறிஸ்தவ தேசமென்று மேன்மை பாராட்ட இடமில்லை. பேர்க்கிறிஸ்தவர்கள் செய்யும் அடாத செய்கைகளால் கிறிஸ்துமார்க்கம் குறைவாய் எண்ணப்படுகிறது. உத்தம கிறிஸ்தவர்கள் எத்தனைபேர் இருந்தபோதிலும் அதைப்பார்க்கிலும் பேர்க்கிறிஸ்தவர்கள் செய்யும் தீமைகளே உலகத்தின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளுகின்றன. ஆகையால் கிறிஸ்து மார்க்கமாவது என்ன? கிறிஸ்தவர்களென்றால் என்னவென்பது நாம் முதல்முதல் கேட்க வேண்டிய கேள்வியாகும். உலகத்தில் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களா? அல்லது அந்தந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களா? ஒரு சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்குள் அன்பும் ஐக்கியமும் உண்டா? கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவருடைய மகிமைக்கென்று பிழைக்கிறார்களா? இருக

யங்களை ஆராய்ந்து பார்க்கும் ஆண்டவர் பார்வையில் நாம் கிறிஸ்தவர்களா? இல்லையென்றால், இந்தியாமுழுவதும் நம்மைப்போல் கிறிஸ்தவர்களாலும் ஐக்கியமும் சமாதானமும் எப்படி உண்டாகும்?

கிறிஸ்துமார்க்கம் என்றால் என்ன, கிறிஸ்தவன் என்றால் என்னவென்பதை அநேகர் யோசிக்கிறதில்லை. அந்தந்த மார்க்கங்களில் பிறந்தவர்கள் அந்தந்த மார்க்கத்தாராயிருப்பது போல, கிறிஸ்தவர்களுக்குப் பிறந்ததினிமித்தம் நம்மில் அநேகர் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்தந்த பிரிவுகளில் பிறந்து வளருகிறவர்களுக்கு அந்தந்தச் சபையே சத்திய சபையாகவும் தோன்றும். இது பழக்கத்தால் உண்டாகிற அபிமானமே தவிர மார்க்க ஆராய்ச்சியால் கண்டுபிடித்ததல்ல. இதிலிருந்து தர்க்கங்களும் பிரிவினைகளும் ஏற்படுகின்றன. நாம் ஏன் கிறிஸ்தவர்களாயிருக்கிறோமென்று நாம் யோசிக்கிறதில்லை. இது பிறப்பினால் உண்டாகும் தொகைப் பெருக்கம். இந்துக்களிலிருந்தும் பல நோக்கங்களோடு கிறிஸ்துமார்க்கத்தில் சேருகிறவர்கள் உண்டு. இவ்வாறு கிறிஸ்து மார்க்கத்தின் வல்லமையைத் தங்கள் அனுபவத்தில் அறியாத அநேகர் சபைகளில் இருந்தபோதிலும், கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவரிலே நிலைத்திருந்து பிழைக்கும் உத்தமகிறிஸ்தவர்கள் உலகமெங்கும் இருக்கிறார்களென்பது நிச்சயம்.

கிறிஸ்துமார்க்கம் என்னும் வார்த்தை வேதத்தில் இல்லை. உலகத்தில் பலமார்க்கங்கள் இருப்பதால் கிறிஸ்துமார்க்கம் என்று பேச வேண்டியதாயிற்று. கிறிஸ்தவர்கள் என்னும் பெயரும் கிறிஸ்துவின் அடியார்களுக்கு மற்றவர்களால் கொடுக்கப்பட்ட பெயரே. "முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப். 11:26). முந்திச் சீஷர்களாயிருந்தவர்களுக்குப் பிந்திக் கிறிஸ்தவர்கள் என்னும் பேருண்டாயிற்று. ஆண்டவர் அவர்களைத் தமக்குச் சீஷராயிருக்கும்படி தெரிந்துகொண்டார். அவர்கள் கடைசிவரை அவருடைய சீஷராகவேயிருந்தார்கள். சீஷரென்பதற்குக் கற்றுக்கொள்ளுகிறவர்கள், கீழ்ப்படிகிறவர்கள், பின்செல்லுகிறவர்கள் என்று அர்த்தம். ஆண்டவருடைய சீஷரிடத்தில்

இந்த மூன்று லட்சணங்களும் காணப்பட்டன. கிறிஸ்துவே அவர்கள் எண்ணமும், பேச்சும், வேலையும், ஜெபமும், நோக்கமும், வாஞ்சையு மாயிருந்தார். மற்றவர்கள் கிறிஸ்துவின் சாயலை அவர்களில் கண்ட போது: இவர்கள் கிறிஸ்தவர்கள் என்றார்கள். ஆண்டவரால் அந்தப் பேர் அங்கீகாரம் பெற்று இந்நாள் வரையில் நிலைநிற்கிறது. சீஷரா யிருந்தவர்கள் கிறிஸ்தவர்களானார்கள். நமது காரியமோ இதற்கு எதிரிடையாயிருக்கிறது. கிறிஸ்தவர்களை நாம் சீஷராக்கவேண்டிய இருக்கிறது. நாம் சீஷர்களான பின்பே கிறிஸ்தவர்கள் என்னும் பேருக்குத் தகுதியுள்ளவர்களாவோம். இதைக் கவனிக்கும்போது, கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்ளாதவர்களும், அவருக்குக் கீழ்ப்படியாத வர்களும், அவரைப் பின் செல்லாதவர்களும், அவருடைய சாயலும் சிந்தையும் இல்லாதவர்களும் கிறிஸ்தவர்கள் என்னும் சிறந்த பேருக் குத் தகுதியுள்ளவர்களல்ல வென்பது தெளிவாயிருக்கிறது.

கிறிஸ்துமார்க்கமாவது என்ன வென்று புறம்பேயுள்ளவர்களைக் கேட்டால், அவர்கள் கண்டதைத்தான் சொல்லுவார்கள். ஒரு ஆல யம், ஆராதனை, போதகர், பிரசங்கம், பாட்டுகள் என்பார்கள். அதற் குமேல் அவர்கள் என்ன அறியக்கூடும்? நம்மில் அநேகருடைய கிறிஸ்துமார்க்கமும் அவ்வளவுதான், ஞானஸ்நானம்பெற்று சபை யைச் சேர்ந்தோம். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப் போகிறோம். பிரசங்கங்களைக் கேட்கிறோம். ஜெபக்கூட்டங்களுக்குப் போகிறோம் என்பார்கள். இவைகளை ஒழுங்காய் ஆசரித்தால் ஒரு திருப்தி. இவைகளில் தவறிப்போனால் துக்கம். இதுதானா கிறிஸ்துமார்க்கம்? இவைகள் யாவும் நல்ல காரியங்களே. ஒரு சிறந்த நோக்கம் நம்மில் நிறைவேறும்படி ஆண்டவர் இவைகளைத் திருச்சபையின் எத்தனங் களாகத் தந்தார். அந்த நோக்கம் நம்மில் நிறைவேறாவிட்டால் நமது ஆசாரங்கள் யாவும் வீணாகும். நாமும் வஞ்சிக்கப்பட்டவர்களாவோம். அந்த நோக்கமென்ன? கிறிஸ்துவின் சிந்தையை நாம்பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே. அவருடைய சாயலுக்கொப்பாக நாம் நாளுக்குநாள் மாறவேண்டுமென்பதே. தமது சிந்தையையும் தமது சாயலையும் பெற் றவர்களைக் கொண்டு ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தார். அவர்

கள் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தும் சாட்சிகளாக அதாவது
மாதிரிகளாக இருக்கும்படி கட்டளையிட்டார். ஒருவன் தான் உண்
மையென்று அறிந்ததைச் சாட்சியாகச் சொல்லலாம். கிறிஸ்து
உயிர்த்தெழுந்த சரித்திரத்தை நல்மனதோடு ஆராய்ச்சிசெய்கிறவன்,
அவர் உயிர்த்தெழுந்தது வாஸ்தவந்தான் என்று சொல்லலாம். ஆண்
டவர் சாட்சிகள் என்று சொன்னது அதுமாத்திரமல்ல. அவர் உயிர்த்
தெழுந்ததை அறிந்திருப்பதோடு, அவர் உயிர்த்தெழுதலின் புதிய
ஜீவனைப் பெற்றுக்கொண்டவர்களாயே தமக்குச் சாட்சிகளாயிருக்கும்
படி ஏற்படுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துமார்க்கம்
ஆரம்பித்தது. எப்படி ஆரம்பித்தது? ஆண்டவர் சிலரைப் பிரித்
துத் தம்மோடு வைத்துக்கொண்டார். தேவராஜ்யங்களின் காரியங்
களை அவர்களுக்குப் போதித்து அவர்களைப் பக்குவப்படுத்தினார்.
தமது மரணம் உயிர்த்தெழுதலின் அவசியத்தை அவர்களுக்குச்
சொன்னார். அவர்கள் அவரிடம் அன்புவைத்து, அவர் போதனையை
அறிந்துகொள்ளவும், அவர் மாதிரியைப் பின்பற்றவும் முயன்றும்
அவர்களால் கூடாமற் போயிற்று. ஆண்டவர் மனஞ்சோர்ந்து போக
வில்லை. இதோ, நாள் வரும், அப்பொழுது தாம் ஆவியின் மூலமாய்
அவர்களுக்குள் வருவதினால் தம்மை இன்னாரென்று அவர்கள்
அறிந்து கொள்வார்களென்றும், திராட்சச் செடியும் கொடியும்போல
அவருக்கும் அவர்களுக்கும் பிரான ஐக்கியம் உண்டாகுமென்றும்,
தாமே அவர்களுக்குள்ளிருந்து பிழைப்பதையும், அவர்கள் மூலமாய்
கிரியை நடப்பிப்பதையும் அவர்கள் தங்கள் அனுபவத்தில் காண்
பார்களென்றும் சொன்னார். ஆண்டவர் சொல்லியிருந்தபடியே பெந்
தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. அப்போஸ்தலர் இதைத் தங்
கள் அனுபவத்தில் கண்டார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதா
வோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்
கிறது" என்று யோவான் சொன்னார். "தம்முடைய குமாரனுடனே
ஐக்கியமாயிருக்கும்படி அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" என்
றும்; "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்
றும் பவுல் சொன்னார். "அவருடைய திவ்ய சுபாவத்திற்கு நாம்



பங்குள்ளவர்களாகவேண்டும்" என்று பேதுரு சொன்னார். புறம்
பான ஆசாரங்களை அனுசரிப்பதல்ல, உள்ளான மறுரூபமே கிறிஸ்து
மார்க்கம். கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வந்து நமது மூலமாய் ஜீவ
தண்ணீருள்ள நதிகள் பிறருக்குப் பாயவேண்டுமென்பதே அவர் நம்
மைச் சேர்த்துக்கொண்ட நோக்கம். புறம்பான காரியங்களால்
கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையை ரூபிக்க முடியாது. ஜனத்தொகை
பெரிய ஆலயங்கள், மிகுந்த வருமானம், மார்க்க ஆசாரங்கள் முதலா
னவை கிறிஸ்துமார்க்கத்தின் வல்லமையை வெளிப்படுத்தாது. மது
ரை மீனாட்சி ஆலயத்திலும் சிறந்த கட்டடம் எது? அங்கே சுவாமி
கும்பிடப்போகும் ஜனத்திரளை எண்ண முடியுமா? அந்த ஆலயத்
தின் வருமானத்துக்குக் கணக்குண்டா? அதற்குமுன் ஏழைச்
சபைகள் எம்மாத்திரம்? நாம் என்னத்தைக்கொண்டு கிறிஸ்துமார்க்
கத்தின் உண்மையை ரூபிக்கலாம்? நமது பாவங்களிலிருந்து நாம்
விடுவிக்கப்பட்டு, ஆவியின் மூலமாய் கிறிஸ்து நமக்குள் வசிப்பதி
னால், அவருடைய சாயலுக்கொப்பாக மாறி, அவருடைய சிந்தை
யைத் தரித்துக் கொள்வதினால்தானே.

## கிறிஸ்துவின் சிந்தையாவது என்ன?

இது மிகவும் விசாலமான விஷயம், என்றாலும் நமக்குப் பிர
யோஜனமாக ஆண்டவரில் விளங்கின சிந்தைகளில் சிலவற்றைத்
தெரிந்தெடுத்து அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாய்ச் சிந்திப்போம்.

1. அன்பு நிறைந்த சிந்தை. "என் பிதா என்னிடத்தில் அன்
பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" (யோ.
15. 9). கிறிஸ்துவின் அன்பு ஒப்பற்றது. சூரியன் பட்சபாதமின்றி
எல்லார்மேலும் பிரகாசிக்கிறதுபோல ஆண்டவர் எல்லார் பேரிலும்
அன்பாயிருக்கிறார். நமது திரளான பாவங்கள் அவர் நம்மை நேசிப்
பதற்குத் தடையாயிருக்கவில்லை. ஒருவனுடைய குணம் நமக்கு
வெறுப்பாயிருக்குமானால் அவனை நேசிப்பது நமக்குக் கஷ்டமாயிருக்
கும். அவன் துர்ச்செய்கையை வெறுப்பதோடு அவனையும் சேர்த்து
வெறுப்போம். பரிசுத்தமுள்ள ஆண்டவருக்கு நமது பாவம்

முழுவெறுப்பாயிருந்தும் நம்மீது அவருக்கிருக்கும் அன்புக்கு அளவில்லை. நமது பாவம் அவருக்கு நம்மீது வெறுப்பை உண்டாக்குவதற்குப்பதிலாக அனுதாபத்தையும் பரிதாபத்தையும் உண்டாக்கினது. நம்மை எவ்விதத்திலும் ரட்சிக்கும்படி தீர்மானித்து வந்தவர் நம்மை வெறுப்பதெப்படி? நம்மை அவர் வெறுத்தால் அவர் நம்மை ரட்சிப்பதெப்படி? நமது சகல பாவங்களும் அவருக்குத் தெரிந்திருந்தும் நம்மீதுள்ள அவரது அன்பு சற்றும் குறையவேயில்லை. தமது சீஷர்களிடத்தில் எத்தனையோ குறைவுகளிருந்தும் "தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." (யோ. 13 : 1). அவருக்கொப்பான அன்பை எந்தப் பக்தனிடத்திலும் காணமுடியாது. ஏனென்றால் கிறிஸ்துவில் விளங்கின அன்பு தேவ அன்பு. கடவுள் அன்பின் மயமாயிருக்கிறார். கிறிஸ்து பிதாவிடம் பூரண அன்புள்ளவராயிருந்தார். பிதாவின் அன்பு அவர் இருதயத்தை நிரப்பினது. அந்தத் திவ்ய அன்பின் பெருக்கத்தாலேயே ஆண்டவர் மனுஷரிடத்திலும் அன்பாயிருந்தார். அவரிலிருந்த அன்பும் அவர் மனுஷருக்குப் பாராட்டின அன்பும் கடவுளுடைய ஒரே அன்பே. நாம் பிதாவின் அன்பென்றும், கிறிஸ்துவின் அன்பென்றும் பிரித்துப் பேசினாலும் இரண்டு அன்பல்ல. பிதாவின் அன்பே குமாரன் மூலமாய் ஆவியினாலே நம்முள்ளங்களில் ஊற்றப்படுகிறது. நம்மீது அன்புகூர்ந்து நம்மை ரட்சிக்கும்படி வாஞ்சைகொண்டவர் பிதா. நம்மை ரட்சிக்கும்படி அவர் தமது குமாரனை அனுப்பினார். ஆகையால் பிதா நம்மீது வைத்த அன்பு, அவர் வாஞ்சையை நிறைவேற்றும்படி வந்த குமாரனுக்குள் இருந்தது. அந்த அன்பின் குமாரன் பிதாவின் அன்பை மனுமக்களுக்கு வெளிப்படுத்தினார். அந்த அன்பின் பெருக்கத்தை நாம் இதுவரை அறிந்தவர்கள் அல்ல.

"என் பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்கிறார். போல என்னும் வார்த்தை அளவைக் காட்டுகிறது. அந்த அன்பின் ஆழம், அகலம், நீளம், உயரம், எவ்வளவென்பதை அறிந்தவர்கள் ஒருவருமில்லை.



அது "அறிவுக்கெட்டாத அன்பு." சமுத்திரம்போன்ற அன்பில் நாம் ஒரு துளி முதலாய்ச் சரியாய் அனுபவித்தவர்கள் அல்ல. ஆண்டவர் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்தபோது அவர் அன்பும் அனுதாபமும் சிறந்து விளங்கின. தகப்பனார் வீட்டிற்குள் வந்தால் பிள்ளைகள் ஓடி ஒளித்துக்கொள்வார்கள், ஏனென்றால் தகப்பனார் அவ்வளவு தேவபக்தியுள்ளவர் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆண்டவர் மா சுத்த பரிசுத்தராயிருந்தார். அப்படியிருந்தும் சகல ஆயக்காரரும் பாவிகளும் வேசிகளும் யாதொரு பயமின்றி அவரிடத்தில் தாராளமாய் வந்து கூடினார்கள். சிறுபிள்ளைகள் அவரிடம் போகவோ, அவர் மடியில் உட்காரவோ பயப்படவில்லை. ஸ்திரீகள் அவரோடுகூடவே கிராமம் கிராமமாய்ப் பிரயாணம்செய்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். மார்த்தாள் மரியாள் அவரை அடிக்கடி தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டு உபசரித்தார்கள். இவர்கள் எல்லாரும் பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் அல்ல. எவ்வளவோ குற்றங்களும் குறைகளுமுள்ளவர்கள். தம்மிடத்தில் வந்த ஒவ்வொரு ஆண், பெண்ணுடைய அந்தரங்க ஜீவியம் அவருக்குத் தெரியும். அதினிமித்தம் அவர் அவர்களை இழிவாய் நினைக்கவில்லை. தமது பரிசுத்தத்தினிமித்தம் தம்மை உயர்த்தி அவர்களோடு மேட்டிமையாய்ப் பேசவுமில்லை. நம்முடைய காரியம் ஒன்றும் அறியாத ஓர் மனுஷன் நம்மோடு எப்படி நடந்துகொள்வானோ அதேமாதிரி அவர் அவர்களோடு மரியாதையாய், அன்னியோன்னியமாய் நடந்துகொண்டார். அவர் பாவிகளோடு உறவாடின தாராளத்தைப் பார்த்த சத்துருக்கள் அவரைப் பாவிகள் சிநேகிதன் என்று அழைத்தார்கள். அன்பே உருவெடுத்து வந்திருப்பதை அவர்கள் அறியார்கள். அவர் ஒருவரையும் பகைத்தவரல்ல. யூதாவின் துரோகம் ஆதிமுதல் அவருக்குத் தெரிந்திருந்தும் அவனை அவர் பகைக்கவில்லை. அவனை ரட்சிக்கும்படி வந்தவர் அவனை எப்படிப் பகைப்பார்? அவனை எப்படிக்கெடுப்பார்? அவன் அவரது அன்பைப் புறக்கணித்தபடியால் தன்னைத் தானே கெடுத்துக்கொண்டான். அவர் அன்பை நாம் ஒருக்காலும் சந்தேகிக்காதபடி தமது ஜீவனை நமக்காகக் கொடுத்து நிரூபித்துக்காண்பித்திருக்கிறார்.

கிறிஸ்துவில் விளங்கிய இந்த அன்பின் சிந்தை நமக்கும் வேண்டும். நாம் அவரது அடியார்களென்பதை உலகம் அறிவதற்கு அன்பையே அடையாளமாகத் தந்தார். "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோ. 13 : 34, 35). இந்தப் பிரதான கட்டளையைக் கவனிக்கிறது யார்? நமக்குள் பெருமையும், பொறாமையும், பகையும், பிரிவினையும், தீமையும், அவதூறும் காணப்படுமானால் நாம் யாருடைய சீஷர்கள்? ஒருவேளை இவைகளுக்கு நாம் இடங்கொடாவிட்டாலும் சகோதர அன்பு இல்லாமற்போனால் என்ன பிரயோஜனம்? வேத அறிவும், ஆராதனைகளும், ஜெபக்கூட்டங்களும், பிரசங்கங்களும் நமக்குள்ளிருந்தும் அன்பில்லாமற்போனால் நாம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவின் சிந்தையாகிய அன்பு இல்லாதவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்து மார்க்கம்.

2. அமர்ந்த சிந்தை. சாந்தமான ஆட்டுக்குட்டி என்பது அவருக்கே தகும். அவர் உலகத்தில் நிறைவேற்ற வந்த வேலை மகத்தானது. உலகத்தைக் கொடிய பாவத்திலிருந்து மீட்டிரட்சிக்கவேண்டும். கடவுளை மறந்து தன்தன் வழியில்போன மனுமக்களை தேவஆளுகைக்குட்படுத்தி அவரது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும். இது அநேகர் கூடிச் செய்கிற வேலையல்ல. அவர் ஒருவரே நடப்பிக்கவேண்டியது. இந்த ரக்ஷணியவேலைக்குத் தம்மைப் பிரதிஷ்டைபண்ணியிருந்தார். அதை நிறைவேற்றி முடிப்பதிலே அவர் முழுக்கவனமும் இருந்தது. ஆனால் அவர் உலகத்தில் வந்தபோது சகலமும் பிரதிகூலமாயிருக்கக் கண்டாரேயல்லாமல் ஒன்றும் அவருக்கு அநுகூலமாயில்லை. உலகத்தின் அதிபதி அவருக்கு விரோதமாக எழும்பி அவர் வந்த நோக்கத்தைக் கெடுத்துவிடும்படி தீர்மானித்தான். அவர் வளர்ந்த குடும்பத்திலுள்ள சகோதரர் அவருக்கு ஆதரவாயிருக்கவில்லை. அவர்கள் அவரை இன்னாரென்று அறியாததால் அவருக்கும்



பலவீனத்திலும் இடைஞ்சலாயிருந்தார்கள். அவருடைய ஆவிக்குரிய சிந்தைக்கும் அவர்களுடைய உலகசிந்தைக்கும் அகாதவித்தியாசமிருந்தது. மற்றவர்கள் அவரை விசுவாசித்த காலத்திலுங்கூட அவர் சகோதரர் அவரை நம்பவில்லை. முப்பது வருஷகாலமாய் இப்படிப்பட்டவர்கள் மத்தியில் வளர்ந்து வேலைசெய்த ஆண்டவருக்கு அது எப்படியிருந்திருக்கும்? அவருடைய பரிசுத்த குணத்தையும் உன்னத சிந்தையையும் கிரகித்துக் கொள்ளாமல், அவரும் தங்களைப்போன்ற வாலிபன்தான் என்று நினைத்தபிறகு அவருக்கு வீட்டில் மரியாதை ஏது? மனம்கொண்டபடி பேசியிருப்பார்கள், தாக்கியிருப்பார்கள். இப்படிப்பட்ட முள்ளுகளுக்குள் அவர் லீலிப்புஷ்பம்போல் வளர்ந்தார். கோபமோ எரிச்சலோ இல்லாமலும், பதிலுக்குப் பதில் பேசாமலும், பொறுமையோடும் சாந்தத்தோடும் நடந்துகொண்டார். அவருடைய சாந்தமும் அமைதலுமான குணம் ஒரே நாளில் உண்டானதல்ல. அவர் குடும்பத்திலிருந்த காலத்தில் தமது பிதாவோடு இடைவிடாமல் சஞ்சரித்ததால், அவர் ஒன்றிலும் ஆத்திரப்படாமல் அமைதலான ஜீவனம் செய்தார். அவர் இருதயம் பிதாவை நம்பி உறுதியாயிருந்தபடியால் ஒன்றினாலும் அவர் அசைக்கப்படவில்லை.

அவர் ஊழியத்தில் பிரவேசித்துத் தமக்குச் சீஷர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் தம்மோடிருக்கவும் தம்மிடத்தில் அன்பாயிருக்கவும் விரும்பினார். தமது மகத்துவமான ஊழியத்தில் அவர்களைப் பயிற்றுவிக்கவும், பிற்காலத்தில் அவர்கள் தமக்குச் சாட்சிகளாயிருக்கவும் தீர்மானித்தார். அவர்கள் அவரைப் பின்சென்றபோதிலும் அவரையாவது அவர் போதனைகளையாவது அறிந்துகொண்டவர்கள் அல்ல. அவர்களுடைய அறிவீனத்தையும் குறைவுகளையும் கவனிக்காது எவ்வளவோ பொறுமையோடு அவர்களை நடத்திவந்தார். அவர்களிடத்தில் அவர் காண்பித்த சாந்தம் ஆச்சரியமானது. கடைசியாக ஒருவன் காட்டிக்கொடுத்தான், வேறொருவன் மறுதலித்தான், மற்றவர்கள் அவரைத் தனியேவிட்டு ஓடிப்போய் விட்டார்கள். அவர் கொஞ்சமேனும் கலங்காமலும் ஆத்திரப்படாமலும் சாந்தமான ஆட்டுக்குட்டியாக விளங்கினார்.

யூத அதிகாரிகள் அவரைப் பகைத்துக் கொலைசெய்யத் தீர்மானித்து விட்டார்கள். அதிகாரிகளின் நோக்கத்தைக் கவனிப்பது ஜனங்கள் வழக்கம். அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதிகள் என்று கண்டவுடன் அவரை மதித்துப் பின்சென்ற ஜனங்களும் அவரை விட்டு விலகினார்கள். அவருடைய சீஷரில் அநேகரும் பின்வாங்கிப் போனார்கள். அவர் உலகில் வந்த நோக்கம் நிறைவேறாதபடி சகலமும் அவருக்கு விரோதமாயிருந்தன. ஒருவன் தான் ஜீவனைப் போல் கருதி நடத்தும் கருமத்திற்கு அழிவு நேரிடுமானால் அவன் அதைச் சகிக்கமாட்டான். எவ்வளவோ ஆத்திரமும் பதஷ்டமும் கொள்வான். ஆண்டவரோ சற்றும் கலங்காமலும் பதஷ்டப்படாமலும் அமர்ந்த இருதயத்தோடிருந்தார். தமது வேலையை நடப்பிப்பதில் அவர் கொஞ்சமாகிலும் சோர்வடையவில்லை. இதற்குக் காரணமென்ன? அவர் தமது பிதாவில் இடைவிடாமல் பிழைத்து அவரையே பூரணமாய் நம்பியிருந்தார். என்ன நேரிட்டபோதிலும் ஒன்றும் தம்மை மேற்கொள்ளாதென்றும், தமது ஊழியம் கட்டாயம் வெற்றியடையும் என்றும் அவர் நிச்சயமாய் அறிவார். இதுவே அவர் அமர்ந்த சிந்தைக்குக் காரணம். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த அமர்ந்த சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். ஆத்திரமும், பதஷ்டமும், அவசரமும், நடுக்கமும், மூர்க்கமும், கடுக்குரலும் கிறிஸ்தவனுடைய லட்சணங்கள் அல்ல. ஆண்டவர்மீது நமக்கு நம்பிக்கையில்லை என்பதற்கு அவைகள் அடையாளங்களாகும். அமர்ந்த சிந்தை நமக்குண்டா?

3. **தாழ்மை வடிவான சிந்தை.** கிறிஸ்துவின் தாழ்மை உன்னதத்தில் ஆரம்பித்தது. இதைக்குறித்து பவுல் பிலிப்பியர் நிருபத்தில் சில ரகசியங்களை வெளிப்படுத்துகிறார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்."



இதிலே சில முக்கியமான விஷயங்களைக் காண்கிறோம். முதலாம் பிரதான சத்தியம் "அவர் கடவுளுடைய ரூபம்" என்பது. இது கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு உறுதியான ஆதாரம். அவர் கடவுளுக்குச் சமானமானவர். அப்படியிருந்தும், அதாவது தேவனுடைய ரூபமாயிருந்தும், அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷர் ரூபமானார். இங்கே ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறோம். விண்ணுக்குரிய தெய்வீக ரூபம் மண்ணுக்குரிய மனுஷரூபமாயிற்று. இந்த மாறுதலில் நடந்ததென்ன? அவர் தமது தெய்வீகத்தை இழந்து மனுஷீகத்தை எடுத்துக்கொண்டாரோ? ஒருக்காலுமல்ல. கடவுளுடைய ரூபம் மனுஷனுடைய ரூபமாயிற்று. கடவுளானவரே மனுஷனானார். ஆகையால் "தம்மைத் தாமே வெறுமையாக்கி" என்பது தமது தெய்வீகத்தை வெறுமையாக்கினார் என்று அர்த்தமல்ல. ரூபம் என்பது என்னவென்று அறிந்துகொண்டால் அவரில் உண்டான மாறுதல் என்னவென்று விளங்கும். அவர் உயிர்த்தெழுந்தபின் தமது அடியாருக்குத் தரிசனமானார். மகதலேனா மரியாளுக்கு தோட்டக்காரன் ரூபத்தில் காணப்பட்டார். எம்மாவு ஊருக்குச்சென்ற இருவருக்கு வேறு ரூபத்தில், அதாவது ஒரு பிரயாணியைப்போல் காணப்பட்டார். கடற்கரையில் ஓர் செம்படவனைப்போல் அதிகாலையில் தோன்றினார். அவர் எந்தெந்த ரூபத்தில் காணப்பட்டாலும் ஆள் அவர்தான். இயேசு கிறிஸ்துவே அவர். ரூபம் மாறினதாலே ஆள் மாறிப்போகவில்லை. தேவரூபமாயிருந்தவர் மனுஷரூபமானதும் இதுபோலவே. தெய்வீக ஆள் மாறவில்லை. உன்னதத்திலிருந்த அவரே பூமியில் தோன்றினார். ஆனால் ரூபத்தில் அதாவது சாயலில் மாறினார்.

அப்படியானால் அவர் வெறுமையானது என்ன? அவரில் உண்டான மாறுதல் என்ன? அவர் பிதாவோடிருந்தபோது அவரை வெளிப்படுத்தும் குமாரனாயிருந்தார். தெய்வீகம் தெய்வீகத்தின் மூலமாய் மாத்திரம் வெளிப்படக்கூடும். பிதாவை வெளிப்படுத்துவதே குமாரனுடைய நித்தியவேலை. இந்த வெளிப்படுத்தல் உன்னதத்தில் புத்திக்கெட்டாத விதமாயிருந்தது. [illegible]

அந்த மகிமையுள்ள குமாரன் நம்மை ரட்சிக்கும்படி சித்தங்கொண்டபோது மூர்த்தி அவர் வெளிப்படுத்தின விதத்தை மாற்றி, தாம் எடுத்துக்கொண்ட மனுஷீக நிலைமைக்கேற்றபடி பிதாவை வெளிப்படுத்துகிறவராக வந்தார். ஆள் மாறவில்லை; அவர் வெளிப்படுத்தின விதம் மாறிற்று. அவர் எடுத்துக்கொண்ட ரூபம் மனுஷர் காணக்கூடியதும் தொடக்கூடியதும் அவர் மூலமாய் பிதாவை அறியக் கூடியதுமாயிருந்தது. இது விஷயத்தில் ஆண்டவரில் விளங்கின தாழ்மையின் சிந்தையை அப்போஸ்தலன் காண்பிக்கிறார். அவர் கடவுளுக்குச் சமமாயிருக்கிற மகிமையை விட்டுப் பிரியமாட்டேன் என்று சொல்லாமல், தூதர்கள் யாவரும் பிரமிக்கத்தக்கவண்ணமாய், தமக்குரிய மகிமையைத் தாமே வெறுமையாக்கி மனுஷசாயலை அணிந்து கொள்ளச் சித்தங்கொண்டார்.

அவர் மனுஷனான பின்பும் தாழ்மையின் சிந்தை அவரைவிட்டு நீங்காமல் வரவர அதாவது மகாநிந்தையான சிலுவை மரணம் வரை அவரது மனத்தாழ்மை ஆழமாய் அவரில் சிறந்து விளங்கினது. உலகத்தில் மேன்மையாய்க் கருதப்படுகிற எந்த அந்தஸ்தையும், வேறு எந்தப் பெருமையையும் அவர் நாடாமல், கடவுளுக்குமுன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் தம்மை அடிமையாக்கினார். எல்லாருக்கும் அவர் பணிவிடைக்காரனானார். தலைசாய்க்க இடமற்ற தரித்திரரானார். அடியார் கால்களைக் குனிந்து கழுவும் அடிமை போலானார். தாம் ஒன்றுமில்லை, பிதாவே தமக்கெல்லாம் என்பது அவர் ஜீவிய பிரமாணம். அவரே "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று சொன்னார். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த மனத்தாழ்மையின் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். எத்தனையோ விஷயங்களைக் குறித்து நாம் பெருமை பாராட்டுகிறோம். நான் என்னும் அகங்காரம் நம்மைப் பலமாய்ப் பிடித்து ஆட்டுகிறது. பெருமையிலிருந்தே ஆங்காரம், மூர்க்கம், பகை, சண்டை, பிரிவினை உண்டாகின்றன. நமது ஆவி, ஆத்துமா, சரீரம் முதல் சகல நன்மைகளும் நாம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளும்போது பெருமைக்கு இடமேது? தாழ்மை கிறிஸ்துவின் சிந்தை; பெருமை பிசாசின் சிந்தை.

பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். பெருமையுள்ளவர்கள் நிச்சயமாய்ச் சிறுமையடைவார்கள். பெருமைக்காரர் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் தாழ்மையுள்ள சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

**4. மன்னிக்கும் சிந்தை.** பாவிகளை ரட்சிக்கும்படி அன்பு மயமாகப் புறப்பட்டுவந்தவர் நமது குற்றங்களை மன்னிக்காதிருப்பது எப்படி? நம்மைக் கைதூக்கி ரட்சிக்கும்படி தமது தெய்வீக மகிமையைக் களைந்து வைத்து, அடிமை ரூபமெடுத்துப் புவியில் தோன்றி, மனுமக்கள் நடுவில் பணிவிடைக்காரனைப் போலிருந்தவர் நம்மை வெறுத்துத் தள்ளுவாரா? நமது பாவங்களைத் தாமே ஏற்றுக்கொண்டு, அப்பாவங்களை அகற்றும்படி தமது ஜீவனைச் சிலுவையில் கொடுத்தவர் நமது பாவங்களை மன்னியாதிருப்பாரா? "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு" என்று அவர் சொன்னது சரியே. அவர் ஊழிய நாட்களில் மனுஷருடைய பாவங்களை மன்னித்து அவர்களுக்கு ஆத்தும இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் அருளும்படி வாஞ்சித்தார். நமது பாவங்களை அவர் கணக்குப் பார்க்கவில்லை. பெரிய பாவி, சின்னப்பாவி என்று வித்தியாசம் பாராட்டவில்லை. தம்மைத் தேடிவந்தவர்களுக்குத் தாராளமாய் தெய்வீக மன்னிப்பைக் கொடுக்கிறவராயிருந்தார். "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன", "மகளே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன, சமாதானத்திற்குள் பிரவேசி" என்பது அவர் கூறின திருவாக்காகும். அவரோடிருந்த சீஷர்கள் குற்றம் குறைகள் இல்லாதவர்கள் அல்ல. அவர்கள் மனம், வாக்கு, செய்கையில் எவ்வளவோ தவறினார்கள். அவைகள் அவருக்குத் தெரியும். [illegible]களைச் சொல்லிக் காட்டினாரா? அவர்களுக்கு மன்னிக்கிறவரா[illegible] இருந்தார். "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்னும் [illegible] குப்படி, அவர் இருதய அன்பு, அவர்கள் குறைகளை [illegible] அவர்களுக்கு இரக்கம் பாராட்டுகிறவராகவே யிருந்தார். [illegible] துரோகம் ஆதிமுதல் அவருக்குத் தெரிந்திருந்தும், அவனை [illegible] தாழ்ச்சியாய் நடத்தவுமில்லை, அவனை மற்றச் சீஷர்களுக்கு[illegible]

கொடுக்கவுமில்லை. சீஷர்கள் தம்மைவிட்டு ஓடிப்போனபோதிலும் அவர்கள்மேல் கோபங்கொள்ளாமல் அவர்கள் காக்கப்படும்படி ஜெபித்தார். தம்மைப் பலவிதமாய்ப் பாடுபடுத்திச் சிலுவையிலறைந்தவர்கள் எல்லாருக்காகவும், மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டார். ஒருவரையாவது அவர் பகைத்ததில்லை. ஒருவருக்காவது தீமைக்குத் தீமை செய்ததில்லை. அவர் எல்லார் பேரிலும் அன்பும் கிருபையுமுள்ளவராயிருந்தார். தமது ரத்தத்தாலே பாவமன்னிப்பை நமக்காகச் சம்பாதித்தவர் நமக்கு இரங்காதிருப்பது எப்படி? மன்னிக்கும் சிந்தை அவரிலிருந்ததைக் கண்டே சகல ஆயக்காரரும் பாவிகளும் தாராளமாய் அவரை நெருங்கினார்கள். அவரை நம்பினவர்கள் யாவரும் இரக்கம் பெற்றார்கள்.

ஒரே ஒரு பாவம் மாத்திரம் மன்னிக்கப்படாது என்றார். அது "பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மூலம் மன்னிப்புத் தேடுகிறவர்கள் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தவர்கள் அல்ல. "மனுஷர் செய்யும் எந்தப் பாவமும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்" என்ற வாக்கு பாவமன்னிப்பின் விசாலத்தை நமக்குக் காட்டுகிறது. நான் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன் என்று ஒருவரும் பயப்படவேண்டியதில்லை. பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தவன் அப்படிச் சொல்லவுமாட்டான். பாவங்களை மன்னிக்கும் கிறிஸ்துவை வேண்டாமென்று முடிவாகத் தள்ளிவிடுவதே பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம். ஒருவேளை சிலகாலம் கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள், அதற்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி அவரை ஏற்றுக்கொள்ளுகிறதாயிருந்தால் அவர்கள் பாவம் மன்னிக்கப்படும். கடவுள் மன்னிக்கக்கூடாத பாவமில்லை. ஒருவன் கிறிஸ்துவை மனதார வெறுத்து, தன் பாவத்தில் நிலைத்திருக்கும்போது, அவனுடைய இருதயமிலே, மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு வந்து விடுகிறது. அதுவே பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம். ஆனால் ஆண்டவருக்கு ஒருவராகிலும் கெட்டுப்போகப் பிரியமில்லை. அவர் எல்லாருக்காகவும் மரித்த



படியால் எல்லாரும் மன்னிப்புப்பெற வேண்டுமென்பது அவர் பேராவல்.

கிறிஸ்து இயேசுவில் விளங்கிய இந்த மன்னிப்பின் சிந்தை நமக்கு வேண்டும். ஆண்டவர் நமது பாவங்களை மன்னிக்கிறது மாத்திரமல்ல, நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும் என்பதைக் குறித்து வெகு தெளிவாயும் திட்டமாயும் போதித்திருக்கிறார். "நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ?" "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்." "எங்கள் கடனாளிக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." என்று ஜெபியுங்கள். "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்." இதைப்பார்க்கிலும் தெளிவான போதனை வேண்டியதில்லை. மற்றவர்கள் குற்றங்களை மன்னிப்பதே நமக்குக் கஷ்டமானால் "ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்" என்கிற கட்டளையை நாம் நிறைவேற்றுவது எப்படி? தேவனுடைய மக்களுக்குள்ளேயே தப்பெண்ணங்களும், பேச்சில்லாமையும், மனவருத்தங்களும், பிரிவினையும் இருக்குமானால் மற்றவர்களைப்பற்றி என்ன கூறுவது? ஆண்டவர் காரியங்களில் பிரியமும், ஆராதனைகளில் விருப்பமும், கர்த்தருடைய பந்தியில் வாஞ்சையும் நமக்கிருந்தும் மற்றவர்கள் விஷயத்தில் பொறாமையும் எரிச்சலும் கூடவேயிருக்குமானால் நமது கிறிஸ்துமார்க்கம் எப்படிப்பட்டது? அன்பும் சகோதர சிநேகமும் கிறிஸ்தவர்கள் லட்சணமாயிருக்கவேண்டியதிருக்க, பகையும் பிரிவினையுங் காணப்படுமானால் எவ்வளவு துயரமான விஷயம்! இதில் ஒருகாரியம் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனுக்கீடாகக்கொண்டு அவருக்கென்றே பிழைக்கிறவர்கள் அவருடைய அன்பாலும் மன்னிக்கும் சிந்தையாலும் நிறைந்திருப்பார்கள். [illegible]

சபையிலுள்ளவர்களெல்லாரும் உத்தம கிறிஸ்தவர்களாயிருப்பதில்லை. இங்கேதான் சங்கடமுண்டாகிறது. யூதாஸ் இருக்குமட்டும் ஆண்டவர் இருதயம் கலங்கினது. அவன் அகன்றுபோனவுடனே: "இப்பொழுது மனுஷ குமாரன் மகிமைப்படுகிறார்" என்றார். நமக்குள்ளும் அநேகர் வேறு சிந்தையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களோடு அன்னியோன்னியமாயிருப்பது கஷ்டமாயிருக்கிறது. என்றாலும் நாம் அவர்களைப் பகைக்கக்கூடாது. நமது அன்பினால் அவர்களை ஆதாயப்படுத்தப் பார்க்கவேண்டும். அவர்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவார்களானால் நாமும் அவர்களோடு ஐக்கியமாயிருப்பது லேசாயிருக்கும். அதுவரை அவர்கள் நமக்குள் அன்பையும் பொறுமையையும் உண்டாக்கும் கருவிகளாயிருப்பார்கள். ஒருவர் நம்மோடு அன்பாயிருக்க மனமில்லாதிருந்தாலும், அவர்கள் குறையை நாம் மனதில் பேணாமல் நல்மனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் பொல்லாத குணம் நமக்கு அவர்கள்மேல் வெறுப்பை உண்டாக்குமானால் நமது இருதயம் கறைப்படும். நாம் [illegible]மனதோடு பிதாவின் சமூகத்தைச் சேரமுடியாது. கிறிஸ்துவின் சிந்தையால் நிறைந்து எல்லார்பேரிலும் இரக்கமாயிருக்கவேண்டும். பகை, விரோதம், பிரிவினை, வியாச்சியம் இவைகளில் பிரியப்படுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.

5. தேவசித்தத்திற்கு அமைந்த சிந்தை. கிறிஸ்துவுக்குச் சொந்தமான ஒரு சித்தமிருந்தது. நான் என்று பேசக்கூடியவருக்கு ஒரு சித்தம் இருக்கவேண்டும். அவருக்குப் பிரியமானால் அவர் இஷ்டப்படி நடக்கலாம். ஆனால் அவர் எப்பொழுதும்போல இப்பொழுதும் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றுகிறவராக வந்தார். ஆகையால் அவர் ஜீவியமுழுவதிலும், அவரிலும் அவர் மூலமாகவும் பிதாவின் சித்தம் ஒன்றே நிறைவேறினதைப் பார்க்கிறோம். அவர் பூமிக்கு வரும்போதே "தேவனே, உமது சித்தப்படி செய்ய வருகிறேன்" என்று சொல்லிவந்தார். சகல விஷயத்திலும் ஒன்று பிசகாமல் பிதாவின் சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றுவது லேசான காரியமல்ல. ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவின் சித்தத்தை அறியும்படி அவரோடு பூரண ஐக்கியத்தில் பிழைக்கவேண்டும். அவர் சித்தம் வெளிப்படும்வரை அவர் பிதாவுக்குக் காத்திருக்கவேண்டும். சித்தத்தை அறியும்போது உடனே கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் ஜீவியத்தில் முழுவதும் பிதா சித்தம் ஒன்றையே காண்கிறோம். அவர் உபதேசம் கிரியைகளில் எது பிதாவின் சித்தம், எது கிறிஸ்துவின் சித்தமெனப் பிரித்துப் பேசமுடியாது. கிறிஸ்துவின் சித்தம் பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய், இடைவிடாமல் கீழ்ப்படிந்திருந்தபடியால், குழாயின் வழியாய் தண்ணீர் பாய்வதுபோல, பிதாவின் சித்தம் அவர் சித்தத்தின் மூலமாய் வெளிப்பட்டது. இதைக் குறித்து ஆண்டவர்: "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்" என்றும், "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" என்றும்; "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றும் சொன்னார். இது என்ன அற்புதமான ஜீவியம்! உலகில் எந்த மனுஷன் இப்படிச் சொல்லக்கூடும்? அவருடைய நினைவுகள், வார்த்தைகள், செய்கைகள், பிரயாணங்கள், பாடுகள் சகலமும் பிதாவின் சித்தமாகவேயிருந்தன. ஆகையால் அவர் பேசின வார்த்தைகள் கடவுள் வார்த்தைகளும், அவர் செய்த கிரியைகள் கடவுள் செய்த கிரியைகளுமாயிருந்தனவென்பது நிச்சயம். தேவசித்தம்போல் பிழைத்த கிறிஸ்துவே கடவுளை வெளிப்படுத்தின அவரது தற்சொரூபமானவர்.



கிறிஸ்து இயேசுவில் விளங்கின இந்தச் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். தேவமக்கள் பிதாவின் சித்தம்போல் பிழைக்கவேண்டியவர்கள். "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்" இன்னதென்று நாம் அறிந்து அந்தச் சித்தத்தின்படி பிழைக்கவேண்டும். "பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்

படி ஆண்டவர் கற்பித்தார். கர்த்தருடைய ஜெபத்தை ஒரு மந்திரம் போல் சொல்லிவிடுகிறோம். அதன் பொருளைக் கவனிக்கிறதில்லை. "ஆண்டவரே, பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவது போல் பூமியிலேயும் செய்யப்படுவதாக," ஆனால் என்னைத் தவிர என்பதுதான் நமது கருத்து. இப்படி எல்லாருமே தங்களை விலக்கிக்கொண்டு பூமியில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று ஜெபித்தால் அவர் சித்தம் யாரில்தான் செய்யப்படுவது? கிறிஸ்துவில் பிரதானமாக விளங்கின சிந்தை தேவசித்தத்திற்கு அமைந்து தேவசித்தத்தை நிறைவேற்றின சிந்தை. கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டவனும் தன் சித்தப்படியல்ல, தேவசித்தப்படியே பிழைக்க நாடுவான். பவுல் கிறிஸ்துவைக் கண்டடைந்த நாளில் கேட்ட கேள்வி உத்தம கிறிஸ்தவனுடைய வாஞ்சையைக் காட்டுகிறது. "ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" இது வெறுங்கேள்வியல்ல. பவுல் தமது ஜீவகாலமுழுவதும் தேவசித்தப்படியே பிழைக்கவும் ஊழியஞ்செய்யவும் விரும்பித் தம்மைப் பூரணமாய் ஆண்டவர் நடத்துதலுக்கு ஒப்புவித்து விட்டார். அவருடைய ஆவியினால் நடத்தப்பட்டார். அவர் ஜீவியமும் ஊழியமும் உலகத்திற்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருப்பதற்குக் காரணம் அதுதான். கிறிஸ்து: நானல்ல, என் பிதாவே இவைகளைச் செய்கிறார் என்றார். அவருடைய அடியானாகிய பவுல், கிறிஸ்துவின் சிந்தையுடையவராயிருந்து: "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைக்கிறார்" என்றார். இப்படிச் சொல்லக் கூடியவர்களே கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் கிறிஸ்தவனல்ல. கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வரும்போது அது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றின ஆவியானபடியால், நாமும் பிதாவின் சித்தப்படியே பிழைக்க நாடுவோம். கிறிஸ்துவில் விளங்கிய தேவசித்தத்தைக் கவனியாமல், நாமும் தேவசித்தப்படி பிழைக்கவேண்டும் என்பதை உணராமல், தங்கள் இஷ்டம்போல் சகல காரியங்களையும் நடப்பித்துக்கொண்டு, தங்கள் மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்கிறவர்கள் கிறிஸ்துவின் சிந்தைக்கு அந்நியராயிருக்கிறார்கள். நாம்



மனது இஷ்டம்போல் பிழைக்கும்போது கிறிஸ்தவர்கள் என்கிற பேர் நமக்கு என்னத்திற்கு? சகல காரியங்களிலும் தேவசித்தம் அறிந்து பிழைக்கிறவர்களே தேவமக்களாவார்கள். கிறிஸ்துவின் சகோதரராவார்கள். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." என் தாயார் யார்? என் சகோதரர் யார்? பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறான்." தேவசித்தப்படி பிழைக்கிறவன், தேவசித்தப்படி பிழைத்த கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறான். தன் சுய இஷ்டப்படி பிழைக்கிறவனை அவர் அறியேன் என்கிறார்.

6. தேவராஜ்யத்தைத் தேடின சிந்தை. இதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. நாம் சுவிசேஷத்தைப் படிக்கும்போது தேவராஜ்யத்தைக் குறித்து ஆண்டவருக்கிருந்த தீராத வாஞ்சையைக் காணலாம். அவர் உபதேசிக்கும்படி முதல் முதல் வாய்திறந்தபோதே "மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றார். அதுமுதல் கடைசிவரை தேவராஜ்யம் அவர் மனதை விட்டு விலகவேயில்லை. அவர் செய்த உபதேசங்கள் எல்லாம் தேவராஜ்யத்தைப் பற்றினதாகவே யிருந்தன. தேவராஜ்யம் என்னும் வார்த்தை மத்தேயுவில் நாற்பத்தேழுதரம், மாற்குவில் பதின்மூன்று தரம், லூக்காவில் முப்பத்தோறு தரம், யோவானில் ஐந்து தரம் வருகிறது. யோவானில் குறைவாய் வருகிறதென்று நாம் நினைக்கக் கூடாது. அவர் தேவராஜ்யத்திற்குப் பதிலாக நித்திய ஜீவன் என்கிற வார்த்தையை அடிக்கடி உபயோகிக்கிறார். மற்றவர்கள் ராஜ்யம் என்று சொல்லும்போது, யோவான் ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைக் குறித்துப் பேசுகிறார். தேவராஜ்யம் என்பது தேவ ஆளுகை. நித்திய ஜீவன் என்பது அந்த ஆளுகையின் பலன்.

கடவுள் ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்பது கிறிஸ்துவின் ஒரே வாஞ்சை. இரவும் பகலும் அதே சிந்தையாயிருந்தார்.

அவர் உபதேசங்களெல்லாவற்றிலும் தேவராஜ்யத்தைக் காணலாம். அவருடைய உவமைகள் யாவற்றிலும் தேவராஜ்யபோதனையை அறியலாம். அவர் எங்கெங்கே போனாலும், யாரோடே பேசினாலும், எதைச் செய்தாலும் தேவராஜ்யமே அவர் மனதிலிருந்தது. அவர் நிக்கொதேமோடு பேசினபோது: "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்றார். லேகியோன் என்னும் பிசாசுகள் நீங்கின மனுஷனைப் பார்த்து: "நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" என்றார். தமது சீஷர்களை அனுப்பினபோது, தேவராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கியுங்கள் என்றார். அவர் குழந்தைகளை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கையில் பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார். அவர் செய்த அற்புத கிரியைகளெல்லாம் தேவராஜ்யத்திற்கு அடையாளங்களாயிருந்தன. பரிசேயரைப்பார்த்து: "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" என்றார். மலைப்பிரசங்கத்தில் தேவராஜ்யத்தைப்பற்றியும் அதன் ஆசீர்வாதங்களைப் பற்றியும் போதித்தார். ஒலிவமலையில் தமது சீஷருக்கு வருங்காரியங்களைப் பற்றிப் பேசினபோது, தேவராஜ்யம் அவர் பிரதான எண்ணமாயிருந்தது. பிலாத்துவிடம்: "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல" என்றார். இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் தேவராஜ்யத்தைப் பற்றிப் பேசினார். அவர் உயிர்த்தெழுந்த பின்பும் நாற்பது நாளளவும் தமது சீஷரோடு தேவராஜ்யத்தைக் குறித்துத் திரும்பவும் பேசினார். ஆவியானவர் வரும்போது தேவராஜ்யம் பலமாய் வரும் என்றார். ஆம், ஆண்டவர் ஒரு க்ஷணமாகிலும் தேவராஜ்யத்தை மறந்தவரல்ல. அதுவே அவரது இடைவிடாத வாஞ்சையும் சிந்தையும் உபதேசமும் கிரியையுமாயிருந்தது. தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டே சிலுவையிலும் மரித்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த தேவராஜ்ய சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும்.

'கிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது நாம் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாகிறோம். அவர் நமது ஜீவனாக நமக்குள் வசிக்கும்போது அவரிலிருந்த சிந்தையே நமது சிந்தையாகிறது. அவர் தேவ ஆளுகையைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டு 'பிழைத்தது போல நாமும் தேவ ஆளுகைக்குட்படுகிறோம். அவர் தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கும்படி பிரயாசப் பட்டதுபோல நாமும் பிரயாசப்படுகிறோம். அவர் தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும், பாடுகள் மரணத்தாலும் தேவராஜ்யத்தை ஸ்தாபித்தார். 'அவருடைய கிருபையால், அவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால், மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி நாம் செய்யக்கூடியதையெல்லாம் செய்கிறோம். திருச்சபை தேவராஜ்யத்திற்கு விரோதமானதல்ல. அவை இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது. சபையை ஸ்தாபிப்பேன் என்று ஆண்டவர் சொன்னபோது, ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்றும் சொன்னார். ஆகவே தேவராஜ்யத்தை திருச்சபையோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். அவர் தமது ஆவியின் மூலமாய் சரீரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறார். தமது சரீரமாகிய சபையைக் கொண்டு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது ஆண்டவர் சித்தம். ஆகையால் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு திருச்சபை கருவியாயிருக்கிறது. நாம் தனித்தனியே அவருடைய சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறோம். நமது ஜீவியத்தின் நோக்கமென்ன? நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளானால் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும். எல்லாவற்றைப் பார்க்கிலும் "தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும்" நாம் பிரதானமாய்த் தேடவேண்டும். ஆவியினால் நிறைந்த நமது ஜீவியம் ராஜ்யத்தின் பலத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி நாம் முழுபலத்தோடே ஊழியஞ்செய்யவேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த தேவராஜ்யத்தின் சிந்தை நம்மை ஆளாவிட்டால் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் அல்ல.

7. அவமானம் பாடுகளைச் சகித்த சிந்தை. ஆண்டவர் உலகில் வந்தபோது அவர் எவ்வளவோ அநியாயங்களைச் சகிக்கவேண்டிய

தாயிருந்தது. சகிக்க முடியாவிட்டால் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றியிருக்கமாட்டார். தம்மை அறிந்துகொள்ளாத மனுஷர் நடுவில் சஞ்சரித்ததே பெரிய சங்கடம். அவர் எண்ணத்தையும், நோக்கத்தையும், அவர் போதனைகளையும், ஊழியத்தையும் அறிந்துகொள்ளாதவர்களோடு அவர் சஞ்சரிக்கவேண்டியதாயிற்று. இந்த உள்ளான பிரிவால் அவர் திரளான மனுஷர் நடுவில் இருந்தும் தனித்தவராகவே யிருந்தார். சீஷர்களுங்கூட அவரை அறிந்து அவரோடு அனுதாபப்பட ஏதுவில்லை. அவர்களுடைய அறிவீனத்தையும், மந்த இருதயத்தையும், அவர்களிடம் காணப்பட்ட குறைவுகளையும் எவ்வளவோ பொறுமையாய்ச் சகித்தார். இனத்தாரின் அறியாமையையும் அவிசுவாசத்தையும் சகித்தார். பாவிகள் நடுவில் பரிசுத்தர் சஞ்சரிப்பது எவ்வளவோ போராட்டம். புண்களும் நாற்றமும் நிறைந்த குஷ்டரோகிகள் மத்தியில் சுகதேகி ஒருவன் வசிக்கவேண்டிவிட்டால் எவ்வளவு அவஸ்தைப் படுவானோ அதுபோலவே சகல அக்கிரமங்களும் பாவங்களும் நிறைந்த மனுஷர் நடுவில் அவர் அவஸ்தைப் பட்டார். என்றாலும் பாவிகளைப் புறக்கணியாமல் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். அவர் முற்றிலும் ஆவிக்குரியவராயிருந்ததால் மாம்சத்துக்குரிய மனுஷர் அவரைப் பகைத்தார்கள். அவருடைய மாசற்ற பரிசுத்த ஜீவியம் அவர்கள் பாவங்களைக் கண்டித்தது. அவருடைய மேலான உபதேசம் அவர்களுடைய மாயமான ஆசாரங்களைத் தகர்த்தது. அவர்கள் அவரை முழுப்பகையாய்ப் பகைத்துக் கொன்றுபோடத் தீர்மானித்தார்கள். அவரைத் தூஷித்தார்கள். அவர் பேரைக் கெடுத்தார்கள். அவர் ஊழியத்திற்கு இடையூறு செய்தார்கள். அவரைப் பிடித்தார்கள். அவரை அவமானப் படுத்தி இழிவாய் நடத்தினார்கள். அவரை அடித்து, இம்சித்து, கொடிய வேதனைப்படுத்தினார்கள். சிலுவையில் அறைந்து அவரைப் பரியாசம் பண்ணினார்கள். சகிக்க முடியாத இந்தப்பாடுகள் யாவற்றிலும் அவர் காண்பித்த பொறுமை ஆச்சரியம். சகல தீமைகளையும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டார். "வையும்போது பதில் வையாமலும் பாடுபடுத்தும்போது பயமுறுத்தாமலும்" பிதாவின் சித்தத்திற்-



குத் தம்மைக் கையளித்து மகா பொறுமையாய் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். இவ்வாறு சகித்துக்கொண்டது அவருடைய ஏலாமையல்ல. அவர் பார்வைக்குமுன் நிற்பவன் யார்? அவர் பேச்சுக்குப் பதில் பேசத்தக்கவன் யார்? அவர் பலத்தை மேற்கொள்ளக் கூடியவன் யார்? அப்படியிருந்தும், நம்மை ரட்சிக்கும்படி வந்தவர் நமது பாவங்களினிமித்தம் தமக்கு ஏற்படும் சகல அவமானங்களையும் பாடுகளையும் சகித்துக்கொள்ளவேண்டியது தேவ ஏற்பாடாகயிருந்தது. இதுதவிர, அவர் தம்முடைய ஆத்துமாவில் அடைந்த போராட்டமும் வியாகுலமும் நமது புத்திக்கு எட்டாது. பிதா தமக்கு ஏற்படுத்தின இருள் நிறைந்த பாதையில் அவர் நடந்து கொடிய கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணவும் சம்மதித்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்தச் சகிப்பின் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும்.

ஆண்டவரோடு நமக்கு ஐக்கியமுண்டானால் அவருடைய சிந்தை நம்முடையதாகவேணும். அவர் எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டதுபோல நாமும் சகிக்கவேண்டும். "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்." (எபி. 12 : 3). கிறிஸ்தவர்களாகிய நமக்குள் சகிக்கும் சிந்தை இல்லாததினாலேயே சகல சச்சரவுகளும், பிரிவினைகளும் காணப்படுகின்றன. ஏன் சகிக்க முடியவில்லை? கிறிஸ்து நமக்குள் ஜீவிக்காததினாலேயே. அவராலே யன்றி நம்மால் சகிக்கமுடியாது. அவர் நமக்குள் ஜீவனாய் [illegible]பது நிச்சயமானால் நமக்கு விரோதமாய்ச் செய்யப்படும் சகல தீமை களையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வோம். கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகும்போது அவருடைய பாடுகளில் [illegible] குண்டாகும். எல்லாரும் ஆவிக்குரியவர்கள் அல்ல. [illegible] குடும்பத்திலும், சபையிலும், மற்றவர்களாலும் நமக்குப் பாடுகள் [illegible] உண்டாகும். தீமைக்குத் தீமைசெய்யாமல் பொறுமையாய்ச் [illegible] சகிக்கும்போது ஆண்டவர் நமது ஜீவியத்தில் [illegible] [illegible] மூர்க்கமும், கோபமும், எதிர்ப்பும், அவமானப்படுத்தலும், [illegible]

செய்தலும் கிறிஸ்தவர்கள் லட்சணங்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையில்லாதவன் கிறிஸ்தவன் அல்ல.

8. எல்லாருக்கும் நன்மைசெய்யும் சிந்தை. "அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார்." அவரிலிருந்து நன்மையேயல்லாமல் தீமை புறப்பட்டதில்லை. அவருடைய நினைவுகள் நன்மையானவைகள். அவருடைய பேச்சுகள் நன்மையானவைகள். அவருடைய கிரியைகள் நன்மையானவைகள். அவர் மனுமக்கள் நடுவில் நன்மையச் சொரூபியாய் விளங்கினார். அவர் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருந்தார். மனுஷருடைய மனதுக்கு நன்மை செய்தார். ஆத்துமாவிற்கு நன்மைசெய்தார். அவர்கள் சரீரத்திற்கு நன்மை செய்தார். எங்கும் நன்மைசெய்தார். எல்லாருக்கும் நன்மை செய்தார். எப்பொழுதும் நன்மைசெய்தார். இன்னும் அவரை நம்பும் பிள்ளைகளுக்கு நன்மை செய்கிறவராகவேயிருக்கிறார். அவர் ஒருவருக்கும் தீமை செய்ததேயில்லை. கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த நன்மைசெய்யும் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும்.

கிறிஸ்தவர்கள் என்னும் சிறந்தபேரை நாம் வைத்துக்கொண்டு எவ்வளவோ தீமைகளால் நிறைந்திருக்கிறோம். எங்கும் தீமை செய்கிறவர்களாய்ச் சுற்றித்திரிகிறோம். கோழிகள் இரை பொறுக்கும்போது தானியத்தில் ஒரு கொத்தும், பக்கத்திலிருக்கிற கோழிக்கு ஒரு கொத்தும் கொடுத்துக்கொண்டே இரை பொறுக்குவதுபோல, அதிகாரியிடத்தில் சம்பளம் வாங்குகிறவர்கள் உடன் ஊழியரைக் கொத்திக்கொண்டே பிழைக்கிறார்கள். அன்பு, அனுதாபம், இரக்கம், பெருந்தன்மை, நற்குணம் நம்மில் இல்லை. பொறாமையும் எரிச்சலும் கேடுசெய்யும் சிந்தையும், தீமையை விரும்பும் குணமும் நம்மில் காணப்படுகின்றன. இது எவ்வளவு துயரமான விஷயம். கடவுள் ஆசிர்வாதம் நம்மோடிராது. அவருடைய நற்சிந்தைக்கு விரோதமாய் நாம் நடக்கும்போது அவர் நம்மை உபயோகிக்க மாட்டார்; தன்னயமே சகல தீமைகளுக்கும் காரணம். எங்கும் நன்மை செய்த ஆண்டவர் தன்னயமுள்ளவரல்ல. "அவர் தமக்கே பிரிய



மாய் நடக்கவில்லை." நன்மைச் சொரூபியாகிய கிறிஸ்து நமக்குள் வசிப்பாரானால், பெருந்தன்மையும் எல்லாருக்கும் நன்மை செய்யும் சிந்தையும் நமக்கு உண்டாகும். நாம் இயல்பிலே தீயவர்கள் தான். நன்மை நம்மில் இல்லை. 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல' ஆண்டவர் நமக்குள் வசிப்பதாலும், அவரோடுள்ள ஐக்கியத்தாலும், தீயகுணம் நீங்கி நன்மைசெய்யும் குணம் நமக்கு உண்டாகும்.

மேற்கூறியவைகளைச் சுருக்கிப் பார்ப்போம். நாம் கிறிஸ்துவின் அடியார் என்பது உண்மையானால் அவர் சிந்தை நம்மிலிருக்கவேண்டும். அவர் சாயல் நம்மில் காணப்படவேண்டும். அவருடைய அன்புள்ள சிந்தையும், அமர்ந்த சிந்தையும், தாழ்மையான சிந்தையும், மன்னிக்கும் சிந்தையும், தேவசித்தத்திற்கு அமைந்த சிந்தையும், தேவராஜ்யத்தைத் தேடின சிந்தையும், அவமானம் பாடுகளைச் சகித்த சிந்தையும், எங்கும் எல்லாருக்கும் நன்மைசெய்த சிந்தையும் நமது சிந்தையாயிருக்கவேண்டும். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லாவிட்டால் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பிரயோஜனமில்லை. நமக்கு அறிவிருக்கலாம், ஆளுந் திறமையிருக்கலாம், காரியங்களை நடத்தும் சமர்த்து இருக்கலாம். கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லையென்றால் என்ன பிரயோஜனம்? புறம்பான ஆசாரங்களில் நாம் ஒழுங்காயிருந்தும், உள்ளான மறுரூபத்தை நாம் பெற்றுக்கொள்ளாமற்போனால் என்ன லாபம்? கிறிஸ்து நமது உள்ளத்தில் வசிக்காவிட்டால் அவருடைய ரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் நமக்கு எப்படிக் கிடைக்கும்? இப்போது நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால் இனிமேல் நாம் அவருக்கு ஒப்பாயிருப்பது எப்படி? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த அநேகர் அக்கினியில் தகிக்கும்படி நேரிடும். ஆண்டவர் தாமே அவ்வாறு எச்சரித்திருக்கிறார். "நான் உங்களை அறியேன்" என்பார்.

# II

# Heart Without Understanding

## உணர்வற்ற இருதயம்

"உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது" ரோ. 1: 21.

தேவகாரியங்கள் நமது வாழ்க்கையில் ஆசீர்வாதமாகப் பலிக்க வேண்டுமானால் உணர்வுள்ள இருதயம் அவசியம். சத்தியத்தை ஆவலுடன் ஏற்றுக்கொண்டு, அதை இருதயத்திலும் சிந்தையிலும் உறுதியாய்ப் பேணி, அமர்ந்த ஆவியுடன் அதை ஆழமாகத் தியானிப்போமானால் அந்தச் சத்தியவசனம் நமது ஜீவிய முழுவதையும் ஆண்டு நடத்தும் சக்தியாக விளங்கும். உணர்வுள்ள இருதயம் பிரகாசிக்கும். உணர்வற்ற இருதயமோ இருளடையும். இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்ப்போம்.

உணர்வற்ற இருதயம் என்றால் என்ன? என்ன நேரிட்டாலும், எதைக்கண்டாலும், எதைக் கேட்டாலும் உணர்வற்ற இருதயத்தாருக்கு அவைகளைப்பற்றி ஒன்றுமில்லை. அவர்களுக்கு எல்லாம் சரிதான். இன்னார் மரித்துப்போனார் என்றால்: சரிதான் என்பார்கள். இன்னாருக்குக் கலியாணமாயிற்று என்றால் அதற்கும் சரிதான் என்பார்கள். நாம் சொல்வதை அவர்கள் கொஞ்சமும் காதில் போட்டுக்கொள்ள மாட்டார்கள். "கல்லியோன் இவைகளில் ஒன்றைக் குறித்தாகிலும் கவலைப்படவில்லை" என்பதுபோல் இவர்களுக்கும் கவலை கிடையாது. கொஞ்சமும் உணர்வில்லை. ஆழமான சிந்தையில்லை. மற்றக்காரியங்களில் அவர்கள் உணர்வற்றிருப்பது போலவே தேவ காரியங்களிலும் அவர்களுக்கு உணர்வில்லை. உணர்வற்ற இருதயம் உபயோகமற்றது.

உணர்வுள்ள இருதயமோ காரியங்களை ஆழமாய் ஆராய்ச்சிசெய்யும் தன்மையுள்ளது. தான் கண்டகாரியங்களை அவை தோன்றுகிற



படியல்ல, அவற்றின் உள்ளான விஷயம் என்னவென்று யோசிக்கும். தான் கேட்கும் வார்த்தைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவற்றின் மறைவான பொருள் என்னவென்று சிந்திக்கும். நடக்கும் சம்பவங்களைக்கொண்டு அவற்றில் மறைந்திருக்கும் தேவகரத்தை அறியும்படி நாடும். உணர்வுள்ள இருதயத்தார் ஆத்திரமின்றி பதஷ்டமின்றி அமர்ந்த சிந்தையுடன் சகல காரியங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பார்கள். ஞானமும் அனுதாபமும் குணசீலமும் உணர்வுள்ள இருதயத்தாரிடம் விளங்கும். ஆகவே உணர்வற்ற இருதயம் நமக்குக் கேடாம், உணர்வுள்ள இருதயம் நமக்கு ஆசீர்வாதமுமாகும்.

### 1. உணர்வற்ற இருதயத்தின் கேடுகள்.

முதலாவது வனாந்தரத்திலிருந்த சபையைக் கவனிப்போம். அவர்கள் சரித்திரத்தை பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் விவரமாய்க் காண்கிறோம். சங்கீதக்காரன் அவைகளைச் சுருக்கி 78-ம், 106-ம் சங்கீதங்களில் பாடியிருக்கிறார். உணர்வில்லாத இருதயத்தின் கேடுகளை அங்கே தெளிவாய்க் காணலாம். கடவுளுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும் அவர் கட்டளைகளின்படி நடக்கச் சம்மதிக்காமலும், அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குச் செய்த அதிசயங்களையும் மறந்தார்கள். கடவுளுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து உன்னதமானவருக்குக் கோபமூட்டினார்கள். இருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள். கடவுளை விசுவாசியாமலும் அவருடைய ரட்சிப்பை நம்பாமலும் போனார்கள். தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம் பேசி தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய் சொன்னார்கள். அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை. அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை. இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள். அவருடைய வல்லமையையும் அவர் தங்களைச் சத்துருக்களுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள். தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபமூட்டி தங்கள் விக்கிரகங்களினால் அவருக்கு எரிச்சலுண்டாக்கினார்கள். தேவ ஆலோசனைக்குக் காத்திராமல் தங்கள் மனம்போல் நடந்தார்கள். கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி

கொடாமல் தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள். புறஜாதிகளோடு கலந்து அவர்கள் துர்க்கிரியைகளைப் பின்பற்றினார்கள். இவை யாவற்றையும் கவனிக்கும்போது அவர்களிடத்தில் அவிசுவாசம், கீழ்ப்படியாமை, முறுமுறுப்பு, கலகம், எதிர்ப்பு, துரோகம், நன்றிகேடு, விக்கிரகாராதனை, துர்இச்சை முதலான பாவங்களைக் காண்கிறோம். இத்தனை அக்கிரமங்களுக்கும் மூலகாரணம் இன்னதென்றும் சங்கீதக்காரனே சொல்லுகிறார். "கடவுள் தங்களுக்குச் செய்த அதிசயங்களை உணராமலும், அவருடைய கிருபைகளின் திரட்சியை நினைவுகூராமலும் போனார்கள்". ஆகையால் உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

கடவுள் விஷயத்தில் உணர்வற்ற இவர்கள் அவர் தாசனாகிய மோசேயிடமும் அவ்வாறே நடந்துகொண்டனர். அவர்கள் மோசேயை எதிர்த்து அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, அவருடைய ஜீவனைச் சலிப்பாக்கினார்கள். இழிவும் கொடுமையுமான அடிமைத்தனத்திலிருந்து கடவுள் அவர்களை விடுவிப்பதற்கு அவர் கையாடின கருவி மோசே என்பதை அவர்கள் உணரவில்லை. மோசே தங்களைப் போன்ற ஒரு மனுஷன்தானே, அவனை என்ன பேசினாலென்ன, என்ன பாடுபடுத்தினாலென்ன என்று வெகு லேசாய் நினைத்துவிட்டார்கள். மோசே ஒரு மனுஷன்தான், அவர் வானத்திலிருந்து குதித்தவரல்ல. ஆனால் இத்தனை மகத்தான விடுதலையை அருளவும், அதிசயமான காரியங்களைத் தங்களுக்காக நடப்பிக்கவும் அவர் கடவுளால் ஏற்படுத்தப்பெற்ற ஊழியக்காரன் அல்லவா? கடவுளுக்கும் ஜனங்களுக்கும் மத்தியிலிருந்து கடவுளுக்காக ஜனங்களோடும், ஜனங்களுக்காக கடவுளோடும் போராடவேண்டிய மத்தியஸ்தன் அல்லவா? அவர் அழைக்கப்பெற்ற அழைப்பும் நிறைவேற்றவேண்டிய வேலையும் எவ்வளவு உத்தரவாதமானது! கடவுளை அறியாத அந்த ஜனங்களைச் சகல காரியங்களிலேயும் வழிநடத்தும்படி கடவுள் ஸ்தானத்தில் நிற்கிறவரல்லவா மோசே? அவரை எவ்வளவோ மதித்து, அவர் சொல் கேட்டு, சகல விஷயத்திலும் அவரை உற்சாகப்படுத்தவேண்டியது அவர்கள் கடமை. அப்படியிருக்க அவர்களோ



அவருக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவரைத் தூஷித்துப் பலவகையிலும் அவரைச் சஞ்சலப்படுத்தினார்கள். உபத்திரவம் சகிக்கக்கூடாமல் ஒர் சமயம் மோசே கடவுளைப் பார்த்து, கர்த்தாவே, நானா இவர்களைப் பெற்றேன், எனக்கேன் இந்தத் தொல்லை என்று புலம்பவும் நேரிட்டது. மோசேக்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தத்தை உணர்வற்ற இருதயமுள்ள இந்த ஜனங்கள் அறிந்துகொள்ளவில்லை. சூரிய உஷ்ணத்தைச் சகித்தாலும் சூரிய அனல் பெற்ற மணலில் நடக்கமுடியாது என்கிற சொற்படி, தேவ அருள்பெற்ற மோசேக்கு விரோதமாய் அவர்கள் கலகம்பண்ணி நாசத்துக்குள்ளானார்கள். சற்றுவிலகு மோசே, நான் இந்த ஜனங்களை ஒரு நிமிஷத்தில் அதமாக்குவேன் என்று புறப்பட்டார் கடவுள். ஜனங்கள் அழிவது மோசேக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. ஆ, எவ்வளவு சாந்தம்! எவ்வளவு பொறுமை! அவர் முகங்குப்புற விழுந்து மன்னிக்கும்படி மன்றாடுகிறார். இல்லை மோசே, அவர்கள் உன்னையல்ல, என்னையே நிந்தித்து எனக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்களை அழிப்பதே சரியென்று மோசேக்கு எதிர்த்துநின்ற கோராகு தாத்தாம் அபிராம் என்பவர்கள் தங்கள் குடும்பங்களோடு பாதாளத்தில் அமிழ்ந்துபோகும்படி செய்தார். துணிந்து தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பிரபுக்கள் அக்கினிக்கு இரையானார்கள். இது போதாதென்று மூர்க்கம் நிறைந்த ஜனங்கள் முறுமுறுக்க, அவர்களுக்குள் வாதையுண்டாகி பதினாலாயிரத்து எழுநூறுபேர் செத்தார்கள். அதற்குமேல் ஒருவரும் சாகாதபடி மோசே காப்பாற்றினார். இத்தனை துணிகரமான பாவங்களுக்கும் அழிவுக்கும் காரணம் உணர்வில்லாத அவர்கள் இருதயமே. அவர்களுக்கு உணர்வுள்ள இருதயம் இருந்திருக்குமானால் சகல தீங்குகளுக்கும் விலகி கடவுளின் மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள். உணர்வற்ற இருதயத்தால் பாவங்களும், பாவங்களால் அழிவும் நேரிட்டன. இதே உணர்வற்றகுணம் அவர்கள் பின் சந்ததிகளிலும் இருந்தது. இவர்களைக் குறித்து: "இந்த ஜனங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும் இருக்கிறவர்கள்" என்று ஏசாயா அறிவித்தார்.

கடைசியாக கடவுள் குமாரன் மாம்சத்தில் வெளிப்பட்டுத் தம்மை ஏற்றுக்கொள்ளவேண்டிய தமது சொந்த ஜனத்தாரிடம் வந்தபோது, அவர்கள் அவருக்கு என்ன செய்தார்கள் என்பதை நாமறிவோம். அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளாதபடி அவர்கள் கண்களைக் குருடாக்கினது அவர்கள் உணர்வற்ற இருதயமே. இந்த ஜனங்கள் மனந்திரும்பாமலும், பாவங்கள் மன்னிக்கப்படாமலும், குணப்படாமலுமிருக்கும்படி, உணர்வில்லாத அவர்கள் இருதயம் அவர்களைக் கெடுத்ததென்று ஆண்டவரே சொன்னார். தமது வசனத்தைக் கேட்கும் ஜனங்கள் உண்மையடையவேண்டும் என்று அவர் விரும்பி ஒரு சமயம் ஜனங்களெல்லாரையும் தம்மிடத்தில் அழைத்து: "நீங்கள் கேட்டு உணருங்கள்" என்றார்.

இந்த உணர்வில்லாமை பொது ஜனங்களிடத்தில் மாத்திரமல்ல, தமக்குச் சொந்தமானவர்களிடத்திலும் காணப்பட்டது. "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா" என்று அவர் சிறுபிராயத்தில் சொன்ன வார்த்தைகளைப் பெற்றோர் அறியவில்லை. காரணம் என்ன? "தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை". இந்த உணர்வற்ற குணமே அவர் சீஷர்களிடத்திலும் அடிக்கடி காணப்பட்டது. "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்றார். சீஷர்கள் அதை அறிந்துகொள்ளாமல் தங்களுக்கு விளக்கிக் காட்டும்படி கேட்டார்கள். அப்பொழுது ஆண்டவர்: "நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா?" என்று சொல்லி அதை விளக்கிக் காட்டினார். தமக்கு நேரிடும் பாடுகளைக் குறித்து அடிக்கடி அவர்களுக்குச் சொன்னபோதிலும் "அவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை." இவ்வாறு ஆண்டவர் போதித்த அநேக காரியங்களை சீஷர்கள் துவக்கத்தில் உணர்ந்துகொள்ளவில்லை.

உணர்வுள்ள இருதயம் நமக்கு அவசியம் என்பதை ஆண்டவர் முக்கியப்படுத்திப் பேசியிருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். "பரிசேயரின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"



என்று அவர் சீஷர்களுக்குச் சொன்னபோது, தங்களிடத்தில் அப்பமில்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று நினைத்தார்கள். உடனே ஆண்டவர் அவர்களைப் பார்த்து ஒன்பது கேள்விகளைக் கேட்டார். உணர்வுள்ள இருதயம் எவ்வளவு முக்கியம் என்பதை இதனாலே அறிகிறோம்.

1. "உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாததினாலே யோசனை பண்ணுகிறதென்ன?"
2. "இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா?"
3. "இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?"
4. "உங்களுக்குக் கண்கள் இருந்தும் காணாதிருக்கிறீர்களா?"
5. "காதுகள் இருந்தும் கேளாதிருக்கிறீர்களா?"
6. "நினைவு கூராமலுமிருக்கிறீர்களா?"
7. "நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?" சீஷர்கள் அதிகம் பேசாமல் பன்னிரண்டு என்றார்கள்.
8. "நான் ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பங்கிட்டபோது மீதியான துணிக்கைகளை எத்தனைகூடை நிறைய எடுத்தீர்கள்?" கேள்விமேல் கேள்வி சரமாரியாய் வருகிறதைக் கண்டு இத்தனை கூடைகள் என்று சொல்லாமல் ஏழு என்றுமாத்திரம் மெள்ளச் சொன்னார்கள்.
9. "அப்படியானால் நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?" என்றார்.

இவை யாவற்றையும் நாம் கவனிக்கும்போது உணர்வில்லாத இருதயம் எவ்வளவு மோசமானதென்றும், உணர்வுள்ள இருதயமே நமக்கு ஆசீர்வாதமென்றும் அறிகிறோம். உணர்வற்ற இருதயம் ஜென்ம சுபாவத்துக்குரியது. ஒருவனுக்கு புத்தி சாமர்த்தியமும் உலகஞானமும் இருப்பதால் அவனை உணர்வுள்ளவனென்று சொல்லக்கூடாது. கடவுள் விஷயத்தில் அறிவும் அனுபவமுமில்லாதவர்கள் உணர்வுள்ளவர்கள் அல்ல. காண்கிறவைகளையும் சரீரத்தில் அனுபவிக்கக் கூடியவைகளையுமே நாம் பிரதானமாய்ப் பற்றிக்கொள்ளும்

போது உணர்வற்றுப்போகிறோம். நாம் காண்கிற யாவும் காணப்படாத, மெய்யான, நிலையான காரியங்களுக்கு அடையாளங்களாக மாத்திரம் இருக்கின்றன. மெய்யான நிலையான காரியங்களைக் கவனியாமல் காணப்படுகிறவைகளிலே மாத்திரம் மனதைச் செலுத்துகிறவர்கள் உணர்வுள்ளவர்கள் அல்ல. தோன்றும் காரியங்களைக்கொண்டு மறைந்திருக்கும் நித்தியகாரியங்களை நாம் கண்டடையவேண்டுமென்பது தேவ ஏற்பாடு. ஆவியாயிருக்கிற கடவுள் நாம் காணக்கூடிய சரீரத்தில் வெளிப்பட்ட காரணமும் அதுவே. இராப்போஜனமாத்திரமல்ல, சகலத்தையும் ஆண்டவர் சாக்கிரமெந்துகளாக ஏற்படுத்தியிருக்கிறார். நம்மைச்சூழ்ந்திருக்கும் ஒவ்வொன்றும் ஆவிக்குரிய நித்தியகாரியங்களை நமக்குப் போதிக்கிறது. நாம் சரீரத்தில் பூமியோடும், ஆவியில் கடவுளோடும் சம்பந்தமுள்ளவர்களாயிருக்கிறோம். சரீரமல்ல, ஆவியே நித்திய மனுஷன். நாம் புசிக்கும் ஆகாரம் ஜீவ அப்பத்தையும், தண்ணீர் ஜீவதண்ணீரையும், காற்று பரிசுத்த ஆவியையும், நமது ஜீவன் நித்திய ஜீவனையும், பெற்றோர் பிள்ளைகள் கடவுளுக்கும் நமக்கும் உள்ள நிலையான பிதாபுத்திர சம்பந்தத்தையும், நமது சிநேகம் நிலையான சகோதர அன்பையும், இவ்வாறு ஒவ்வொரு காரியமும் மறுமைக்குரிய காரியங்களை நமக்குப் போதிக்கிறது. நாம் இவைகளைக் கவனிக்கிறதில்லை. காணப்படுகிறவைகளையே முடிவாக நாம் நினைத்து அவைகளை அனுபவிக்கும்போது மறைவான நித்தியகாரியங்களை அறியாமல் போகிறோம். உணர்வற்ற இருதயமே இதற்குக் காரணம். ஆண்டவரைப்போல் உணர்வுள்ள இருதயமுள்ளவர்கள் யார்? அவர் ஒன்றையும் அற்பமாய் நினைக்கவில்லை. சகலத்திலும் தேவஞானத்தைக் கண்டார். ஒவ்வொன்றிலும் மறுமையின் போதனையை எடுத்துக் காண்பித்தார். காட்டுப் புஷ்பத்திலும், காகம் அடைக்கலான் குருவிமுதலான பறவைகளிலும் பிதாவைச் சம்பந்தப்படுத்திப் பேசினார். சிறுபிள்ளைகளில் தேவராஜ்யத்தின் தன்மையைக் கண்டார். ஒன்றையும் இருக்கிறபடி அவர் பார்ப்பவரல்ல. ஒவ்வொன்றிலும் மறுமைக்குரிய போதனையைக் கண்டார். பூமிக்குரிய காரியங்களெல்லாம் அவருக்குப் பரம மகிமையை வெளிப்படுத்



தும் உவமைகளாயிருந்தன. கிறிஸ்துவின் ஆவிபெற்றவர்கள் அவரைப்போல் சகலத்திலும் தேவஞானத்தைக்கண்டு மகிழ்வார்கள். இவர்களே உணர்வுள்ள இருதயத்தார்.

## II. உணர்வுள்ள இருதயத்தின் பாக்கியம்.

1. உணர்வுள்ள இருதயம் தன்னை அறியும். இதைப்போல் பாக்கியமில்லை. உல்லியம் லா என்பவரைப்பற்றி நம்மில் அநேகர் அறிவோம். அவர் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்தவர். அவர் எழுதிய நூல்கள் மகா சிறந்தவை. சில புஸ்தகங்களைப்போல் வாசித்துத் தள்ளத்தக்கவையல்ல. எக்காலத்துக்கும் அருமையானவை. தேவபக்தி வாஞ்சையுள்ளவர்கள் எக்காலத்திலும் அவர் புஸ்தகங்களை மதிக்கவேண்டும். தற்காலத்தில் அவை மதிப்புப் பெறவில்லையென்றால் நமது அவபக்தியும் உலகசிந்தையுமே அதற்குக் காரணம். அவர் மரணப்படுக்கையிலிருந்த சமயத்தில் அவர் சிநேகிதரில் ஒருவர் அவரைப் பார்த்து கடவுளைப்பற்றி இவ்வளவு மேலான அறிவு உங்களுக்கு எப்படிக் கிடைத்ததெனக் கேட்க, அவர்: ஜெர்மனி தேசத்து ஜேக்கப் பீமன் என்னும் ஓர் எளிய மனுஷனால் தனக்குக் கிடைத்ததெனக் கூறினார். ஒருவன் தன்னைத்தான் அறியவேண்டுமென்பதே ஜேக்கப் பீமனுடைய பிரதான போதனை. இந்தப் போதனையை ஆதாரமாக வைத்துக்கொண்டு உல்லியம் லா தேவகாரியங்களைப் புறம்பேயல்ல தனக்குள்ளேயே தேடினார். அதன் வல்லமையைத் தன் அனுபவத்தில் கண்டார். அநேக பிரபந்தங்களை எழுதினார்.

தன்னை அறிவதற்கு உதவிவேண்டும். ஒருவன் தானாக யோசித்துக்கொண்டிருப்பதினால் மாத்திரம் தன்னை அறிகிற அறிவு வராது. நான் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும், இப்போது எப்படிப்பட்டவனாயிருக்கிறேன் என்று அறிவதற்கு மாதிரி வேண்டும். கிறிஸ்துவே அந்த மாதிரி. அவர் நமது உள்ளான சகல கேடுகளையும் பிரத்தியக்ஷமாய்க் காட்டும் கண்ணாடிபோலிருக்கிறார். அவரோடு நெருங்கிப் பழகப்பழக அவரது பூரணமான மனுஷீகம் நமது குறைவுகளை நமக்கு உணர்த்துவதோடு அவருக்கொப்பாய் நாம் பிழைக்கவேண்டு

மென்கிற ஆவலையும் உண்டாக்குகிறது. சகல நற்குணங்களும் தன்னை அறிகிற அறிவால் உண்டாகின்றன. ஆண்டவர் தமது சீஷர்களை மாற்றின விதம் அதுவே. அவர் அவர்களோடிருந்த காலத்தில் தங்கள் குறைவுகளைக் கண்டார்கள். அவரைப்போல் நடக்க முடியவில்லை. அவர்கள் குறைவை உணர்த்தின ஆண்டவரே பெந்தெகோஸ்தே நாளில் தமது ஆவியால் அவர்களுக்குள் வந்து குறைவைப் போக்கி நிறைவை அளித்தார். தாங்கள் ஒன்றுமில்லாமையை அந்நாளில் கண்டார்கள். கிறிஸ்துவை அறிகிற அறிவும், தேவவெளிப்படுத்தலும் அவர்களுக்குள்ளே கிடைத்தன. கிறிஸ்துமார்க்கம் இருதயத்துக்குரியது. புறம்பான ஆராதனைகளையும், புறம்பான போதனைகளையும், புறம்பான ஆசாரங்களையும் நம்பி நாம் மோசம்போகக்கூடாது. கடவுள் சகலத்தையும் நமது இருதயத்தில் நிறைவேற்றுகிறார். கிறிஸ்து மார்க்கம் உற்பத்தியான விதம் அதுவே.

தன்னை அறிந்தவன் பிறர் காரியத்தில் தலையிடான். நம்மில் அநேகர் பிறர்காரியங்களை அறிவதில் வெகு முயற்சியுள்ளவர்கள். அவர்கள் யார்? அவர்கள் சம்பாத்தியமென்ன? அவர்கள் சாப்பிடுவதென்ன? உடுத்துவதென்ன? அவர்கள் எங்கே போகிறார்கள்? எங்கே வருகிறார்கள்? அவர்கள் மக்கள் காரியங்கள் என்ன? அந்தக் கலியாண விஷயம் எப்படியாயிற்று? அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்? தந்தி வந்ததாமே என்ன விசேஷம்? இவ்வாறு பிறருடைய காரியங்களை அறிந்துகொள்வதில் எவ்வளவோ ஆத்திரம்! தன்னை அறிந்தவன் இப்படிச் செய்யமாட்டான். தன்னை அறிந்தவனுக்குப் போதுமான வேலையுண்டு. தன் குறைவுகளை எண்ணித் தன்னை மிகவும் தாழ்த்தி, ஆண்டவர் கிருபையைத் தேடுவதில் அனுதினமும் கருத்தாயிருப்பான். தன்னால் பிறருக்கு நன்மையுண்டாகும் விஷயங்களிலேயன்றி மற்றக்காரியங்களில் அவன் தலையிடமாட்டான். மற்றவர்கள் ஊர்க் காரியங்களை அவன் காதில் போட்டாலும் அவை தன் மனதில் தங்க இடங்கொடுக்க மாட்டான். கொடுத்தால் தன் ஜீவியத்தின் சிறந்த நோக்கத்துக்கு இடையூறாகுமென்று அறிவான். பக்தனான சங்கீதக்காரன் "கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள்



மேட்டிமை யுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும் எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை" என்றான். பேதுரு இன்னொரு அப்போஸ்தலன் காரியத்தில் தலையிட்டு: "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" என்று கேட்க, ஆண்டவர்: "அதைப்பற்றி உனக்கென்ன? நீ என்னைப்பின்பற்றி வா" என்றார். தன்னை அறியாத குறையே பிறர் காரியங்களில் பிரவேசிப்பதற்குக் காரணம். தான் ஆண்டவரை சிலாட்களுக்கு முன்பு மறுதலித்ததையும், வெட்கத்தோடும் துக்கத்தோடும் மனங்கசந்து தான் அழுததையும் பேதுரு உணர்ந்திருப்பாரானால், அவன் காரியமென்ன? இவன் காரியம் என்னவென்று கேட்டிருக்கமாட்டார். இதை நினைத்துத்தான் தாவீது: "தன் பிழைகளை உணருகிறவன் யார்? என்று கேட்டான்.

உணர்வுள்ள இருதயம் தன் நிலைமையை அறிந்து தன்னைத் தாழ்த்தும். தன்னை அறிந்தவன் தன்னைப் பாவிகளில் பிரதான பாவி என்று சொல்லுவான். அவன் பிரதான பாவம் செய்திருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. அவன் அநேகரைப் பார்க்கிலும் நல்லவனாயிருந்தாலும், கிறிஸ்துவோடு அவன் பிழைப்பதினாலும், அவன் ஜீவிக்கவேண்டிய மாதிரி தன் கண்முன்னிருப்பதாலும், மற்றெல்லாரைப் பார்க்கிலும் தான் பெரும்பாவி என்றுணர்ந்து நடக்கும் சிந்தை யுண்டாகிறது. இந்த உணர்வு அவனில் தாழ்மையையும் பொறுமையையும் உண்டாக்குகிறது. வீண்பெருமைக்கும், கோபத்துக்கும், மூர்க்கத்துக்கும், பிடிவாதத்துக்கும் அவனில் இடமிராது. தன்னை அறியாததே சகல பாவங்களுக்கும் காரணம். இஸ்ரவேலிடம் காணப்பட்ட பாவங்களைப்பற்றி சற்றுமுன் கவனித்தோமே. தீர்க்கதரிசி அவர்களைக்குறித்து: "நீ வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும் தோண்டியெடுக்கப்பட்ட துரவின் குழியையும் நினைத்துப்பார்" என்று எச்சரித்தார். அவர்களுடைய உணர்வற்ற இருதயமே அவர்கள் அக்கிரமங்களுக்குக் காரணம். கடவுள் உனக்குச்செய்து வந்திருக்கிற அவருடைய அதிசயமான கிரியைகளை மறவாமல் எப்பொழுதும் நினைத்துக்கொள் என்று மோசே அவர்களுக்கு அடிக்கடி போதித்தார்; மறந்தார்கள்; தொலைந்தார்கள். நமது பாவங்களையும் ஆண்டவர் [illegible]

பாராட்டிவருகிற கிருபைகளையும் நாம் சரியானபடி உணர்ந்து கொள்ளும்போது கடவுளுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் பணிந்த சிந்தையுடன் நடந்துகொள்வோம். நம்மை நாமிருக்கிறபடி அறியும்போது நான் பூரணன், நான் நீதிமான், என்னில் குறையொன்றுமில்லை என்று நினைக்கிற அறிவீனம் நீங்கி, சாந்தமும் மனத்தாழ்மையும் உண்டாகும். தாழ்மையுள்ளவர்களுக்கு பரமபிதா கிருபை அருளுகிறார். பெருமை அவருக்கு வெறுப்பு.

தன்னை அறியும் அறிவில் உத்தரவாதம் ஏற்படுகிறது. நான் யார்? நான் எப்படி உருவானேன்? நான் ஏன் உலகில் இருக்கிறேன் என்னும் கேள்விகள் முக்கியம். ஆடுமாடுகள் அங்கங்கே கண்ணுக்குத் தோன்றும் புல்லுகளை மேய்ந்துகொண்டு போவதுபோல அநேகர் கைக்கெட்டினது எதுவோ, வாய்க்கெட்டினது எதுவோ அதைச் சாப்பிட்டுக் காலங்கழிப்பதே தாங்கள் உலகத்தில் வந்த நோக்கம் போல் நடக்கிறார்கள். அதற்குமேல் விசாரணை என்னத்துக்கு? உணர்வுள்ளவர்களோ கடவுள் தங்களை ஒரு விசேஷித்த நோக்கத்துடன் உலகத்தில் அனுப்பியிருக்கிறதாக அறிவார்கள். "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், நான் ஒளிப்பிடத்தில் உண்டாக்கப்பட்டு ..விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டன. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தன. தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள், அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்!" என்று உணர்வுள்ள சங்கீதக்காரன் சொன்னார். "நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்துத் தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்" என்று உணர்வுள்ள பவுல் சொன்னார். கடவுள் தமது ஆலோசனைப்படி ஒரு விசேஷித்த நோக்கத்துடன் நம்மை உலகத்தில் அனுப்பியிருக்கிறார் என்று உணரும்போது நமது ஜீவியத்தின் உத்தரவாதம் தானே ஏற்படும். ஆண்டவர் அப்போஸ்தலரையும் தமது அடியார் யாவரையும் தமது சித்தத்தை நிறைவேற்றும் நோக்கமாய் உலகத்தில் அனுப்பினதுபோல, நாம் மனுஷர் பார்வையில் அற்பராயிருந்தாலும் தமது ராஜ்யத்துக்காக உழைக்கும்படி நம்மையும் அவரே அனுப்பியிருக்கிறார் என்பது நிச்சயம். அதற்கு வேண்டிய கிருபையையும் வரங்களையும் அவர் நமக்குத் தந்திருக்கிறார். பிதா தம்மை அனுப்பினதை ஒரு நிமிஷமும் மறவாமல் பிழைத்த நமது ஆண்டவரைபோல் நாமும் அவரால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து ஜீவிப்போமானால் நமது உத்தரவாதத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். யோ. 20 : 21.



2. உணர்வுள்ள இருதயம் கடவுளை அறியும். மனுஷன் பாவத்தால் தேவசாயலை இழந்தபோதிலும் தன்னைப் படைத்தவரை முற்றிலும் மறந்துவிட முடியாது. தன்னைச் சூழ்ந்துள்ள சிருஷ்டிப்பும் உள்ளான ஆவியும் கடவுளை அவனுக்கு ஞாபகப்படுத்துகின்றன. ஆனால் அவன் பூமிக்குரியவைகளிலே மனதைச் செலுத்திப் பாவத்துக்கு அடிமைப்பட்டுப் போகும்போது அவன் புத்தி அந்தகாரமடைந்து, அவன் சித்தம் பலவீனப்பட்டு, இருதயம் கடினமாகிறது. இந்நிலையில் அவன் கடவுளற்றவனாகிறான். பரம பிதாவை அறியவும் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவும் நமக்கு உணர்வுள்ள இருதயம் வேண்டும். "தேவனைத் தேடுகிறவன் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை" என்று சங்கீதக்காரன் சொன்னார். உணர்வில்லாத இருதயத்தார் கடவுளைத் தேடமாட்டார்கள். "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்... தேவனைத் தேடுகிறவன் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை" என்று கண்டார். உணர்வில்லாதவர்கள் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போகிறார்கள். உணர்வில்லாத இருதயமுள்ள இஸ்ரவேலர் ஏகமாய் அழிந்துபோக, உணர்வுள்ள இருதயமுடைய காலேப் கடவுளால் விசேஷித்த தயவையும் சிறப்பான சுதந்தரத்தையும் பெற்றார். கடவுள் தங்களுக்குச் செய்த அதிசயங்களையும் அவரது கிருபைகளின் திரட்சியையும் காலேப் மறந்து போகவில்லை. "என்னை உத்தமமாகப் பின்பற்றின என் தாசனாகிய

காலேப்" என்று கடவுளும் அவனைப் புகழ்ந்துபேசினார். கடவுளைப் பற்றிய பொதுவான அறிவு ஒருவனுக்கு இருக்கலாம். வேதசாஸ்திர விஷயங்களை எடுத்துக் கூறும் திறமையும் அவனுக்கிருக்கலாம். உணர்வுள்ள இருதயம் அவனுக்கில்லையென்றால் அவன் தேவபக்தனாகமாட்டான். கடவுள் யாரென்றும், அவருக்கும் தனக்குமுள்ள சம்பந்த மின்னதென்றும், அவர் கிறிஸ்துவின் மூலமாய்த் தனக்குப் பாராட்டின அளவில்லாத தயவும் கிருபையும் எவ்வளவு பெரிதென்றும் உணர்ந்து கொள்ளுகிறவன் அவரை இடைவிடாமல் தேடி, முழு இருதயத்தோடு அவரை நம்பி, அவருடைய கட்டளைக்குத் தன்னை ஒப்புவித்து விடுவான். அவர் தன்னை நடத்தும் அனுபவத்தால் அவரை அறிகிற அறிவிலே வளருவான்.

3. உணர்வுள்ள இருதயம் நன்றியுள்ளதாயிருக்கும். கடவுள் தங்களுக்குச்செய்த அதிசயமான செயல்களை மறந்த இஸ்ரவேலர் நன்றிகெட்டவர்களும் துரோகிகளுமானார்கள். கடவுளிடத்திலும் மனுஷரிடத்திலும் நன்றியாயிருப்பதற்கு நமக்கு உணர்வுள்ள இருதயம் அவசியம். நமது குழந்தைப் பருவமுதல் இதுவரை ஆண்டவர் நமக்குச் செய்துவந்திருக்கிற சகல உபகாரங்களையும் நன்மைகளையும் நாம் யோசிப்போமானால் நன்றியற்றவர்களாயிருக்கமாட்டோம். உணர்வுள்ள இருதயமுள்ளவர்கள் தாவீதோடு சேர்ந்து "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர்செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று சொல்லுவார்கள். கடவுள் தனக்குச் செய்த சகல கிருபைகளையும் ஆழமாய் உணர்ந்துகொண்ட சங்கீதக்காரன்: "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கின்றன; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்" என்று பாடினார். அவர் கடவுளுக்கு நன்றி பாராட்டி இடைவிடாமல் அவரை ஸ்தோத்திரித்துப் பாடினதற்குக் காரணம் அவருடைய

உணர்ச்சியற்ற இருதயமே. நமது காரியம் என்ன? தாவீது இடைவிடாமல் ஸ்தோத்திரித்தாரென்றால் நாம் இடைவிடாமல் முறுமுறுக்கிறோம். ஆண்டவர் நமக்கு எவ்வளவு நன்மைகள் செய்திருந்தாலும் அவைகளை நாம் சீக்கிரம் மறந்து, நமக்கு நேரிடும் அற்ப சொற்பக் கஷ்டங்களைப் பிரதானமாக நினைக்கிறோம். தாவீதைப் போல் உபத்திரவப் பட்டவர்கள் யார்? அவைகளைப்பற்றி அவர் ஆண்டவரிடத்தில் மன்றாடியிருக்கிறார். அப்படியிருந்தும் கடவுள் தமக்குச் செய்த நன்மைகள் எண்ணிக்கைக்கு மேலானவையென்று சொல்லுகிறார். நமக்கோ ஆண்டவர் எண்ணிக்கைக்கு மேலான தீமைகளைச் செய்ததுபோல் தோன்றும். நமது தன்னயமான ஜீவியமே அதற்குக் காரணம். சங்கீதக்காரன் தமக்கு நேரிட்ட உபத்திரவங்களுங்கூட தமக்கு ஆசீர்வாதமாயிருந்ததென்று கண்டு அதற்காகவும் ஆண்டவரை ஸ்தோத்திரித்தார். நன்மையோ தீமையோ எல்லாம் தமக்கு ஆசீர்வாதமாயிருந்ததென்று அறிந்து கடவுளுக்கு நன்றி பாராட்டினார். கடவுள் நடத்துதலை நுட்பமாய்க் கவனித்து நடக்கும் தேவமக்கள் அவருடைய தயவுள்ள ஆலோசனையையும் கிருபைகளையும் உணர்ந்து என்றும் நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள்.

மனுஷரிடத்திலும் நாம் நன்றியாயிருப்போம். இது நன்றி கெட்டகாலம். ஒருவர் மற்றொருவருக்குக் காலமெல்லாம் நன்மை செய்தும், நன்மை பெற்றவர் எப்போதோ ஒரு அற்பவிஷயத்தைத் தப்பிதமாக நினைத்துக்கொண்டு, தாம் பெற்றுக்கொண்ட சகல உபகாரங்களையும் நிமிஷத்தில் மறந்து, தன் உபகாரியைத் தனக்குப் பெரிய சத்துருவாக நினைத்து, அவருக்கு விரோதமாகப் பேசவும் தீமைசெய்யவும் துணிந்தால் அதைப்போல் துரோகம் வேறில்லை. யூதாசின் கூட்டத்தார் திரளாயிருக்கிறார்கள். கடைசிவரைக்கும் ஆண்டவர் அவனுக்கு நன்மை செய்தார். அவன் துரோகமோ அவர் இருதயத்தைக் கலங்கச் செய்தது. நன்றிகேட்டைப்போல் அசுத்தமான பாவம் வேறில்லை. உணர்வில்லாத இருதயமே நன்றி கெட்[illegible] ளம். மற்றவர்கள் நமக்குச்செய்யும் நன்மைகளை ம[illegible] நன்றியற்றுப் போவோம். அவைகளை எப்பொழுதும் [illegible]

கொள்ளுவோமானால் நன்றியற்றிருக்கமுடியாது. குஷ்டரோகம் மகா கொடிய வியாதி. ஆண்டவர் பத்துக்குஷ்டரோகிகளைக் குணமாக்கினார். ஆ, எவ்வளவு பெரியதுஉதவி. அவர்களில் ஒருவன் மாத்திரம் திரும்பிவந்து ஆண்டவரை ஸ்தோத்திரித்து நன்றிசெலுத்தினான். மற்றவர்களைக் குறித்து: அந்த ஒன்பது பேர் எங்கே என்று ஆண்டவர் கேட்டார். தங்களுக்கு இவ்வளவு பெரியகாரியத்தைச் செய்தாரே என்கிற உணர்வு அவர்களுக்கில்லை. உணர்வில்லாத மனுஷனுக்கு நன்றி கிடையாது. “நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்” (கொலோ. 3. 15).

4. உணர்வுள்ள இருதயம் உலகத்துக்கு ஆசீர்வாதம். உணர்வுள்ள இருதயத்தில் தேவவசனம் நிறைவான பலனைக்கொடுக்கும். நல்ல நிலத்தைப்பற்றி ஆண்டவர் விஸ்தரித்துப் பேசினபோது ஐந்து முக்கியமான காரியங்களைச் சொன்னார். அதாவது, அவர்கள் வசனத்தைக் “கேட்டு” “ஏற்றுக்கொண்டு” “உணர்ந்து” “காத்து” “பொறுமையுடன்” பலன் கொடுக்கிறார்கள் என்றார். ஆண்டவர் வசனம் தந்தார். அவ்வசனம் ஆலயங்கள்தோறும் பிரசங்கிக்கப்படுகிறது. விதைப்போடு பலனை ஒப்பிட்டுப்பார்த்தால் எவ்வளவோ துயரம்! நிலத்தில் விதை விதைக்கும் சமுசாரி பலனற்றுப் போவானால் எவ்வளவோ சஞ்சலப்படுவான். தேவவசனத்தை விதைக்கும் ஊழியராகிய நமக்கு அவ்வளவு சஞ்சலமில்லை. ஏனென்றால் நாம் பலனை எதிர்பார்க்கிறதில்லை. விதைத்தாலே போதும் என்றிருக்கிற சமுசாரியை நாம் இதுவரை கண்டதில்லை. பிரசங்கித்தாலே போதும் என்றிருக்கிற சமுசாரிகளோ அனந்தம்! விதைப்பது எதற்காக? பலனை அறுப்பதற்காக. பிரசங்கிப்பது எதற்காக? மனுஷர் ஆசீர்வதிக்கப் பெற்று நற்பலனைக் கொடுப்பதற்காக. நாம் பலனை எதிர்பார்க்கிறோமா? நோக்கமில்லாத ஆராதனைகளாலும் பிரசங்கங்களாலும் சபைகள் பாழாய்ப் போகும். பலனை எதிர்பாராத கடமை ஊழியம் இருதயத்தைக் கடினப்படுத்தி, ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரத்தை உண்டாக்கும்.



பலன் கொடுப்பதைப்பற்றி ஆண்டவர் சொன்ன ஐந்து காரியங்களைக் கவனிப்போம். கேட்டு, ஏற்றுக்கொண்டு, உணர்ந்து, காத்து, பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள். பலன் கிடைப்பது லேசான காரியமல்ல. அது லேசாயிருக்குமானால் சபைகள் தோறும் நடக்கிற ஆயிரக்கணக்கான பிரசங்கங்களுக்கு ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்களையும் பரிசுத்தவாட்டிகளையும் இன்று நாம் காணலாம். பலனே இல்லை என்று நாம் சொல்லுகிறதில்லை; கடவுளுக்குத் தங்களை ஒப்புவித்து, அவர் சித்தப்படி பிழைத்து, தங்கள் ஜீவியத்தில் நற்கனிகள் நிறைந்து விளங்குகிற தேவமக்கள் அங்கங்கே இருக்கிறார்கள். ஆகிலும் விதைப்பின் அளவுக்குத் தக்க பயன் இல்லை என்பதும் உண்மையே. வசனத்தைக் கேட்போரிடம் ஆண்டவர் சொன்ன ஐந்து குறிப்புகளும் பலிக்குமானால், கட்டாயம் அவர்கள் ஜீவியத்தில் மிகுதியான பலனைக் காணலாம். முதலாவது, முழுக்கவனத்தோடும் வாஞ்சையோடும் தேவ வசனத்துக்குச் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். இந்தக் கவனமும் கூர்மையுமான கேள்வியினால் சத்தியத்தை அறியும் அறிவு கிடைக்கும். கேட்ட சத்தியத்தை இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அநேகர் வசனத்தை ஆவலோடு கேட்கிறார்கள், ஆனால் அதை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர்கள் காலமெல்லாம் கேட்கிறவர்களே யன்றி பலன் கொடுக்கிறவர்கள் அல்ல. அவர்கள் ஜீவியம் மாறுவதில்லை. இப்படிப்பட்ட கேள்விக்காரரை சபைகளெங்கும் காணலாம். மூன்றாவது உணர்வு. கேட்ட சத்தியத்தை இருதயத்தில் ஏற்றுக்கொண்டபின் அதைப்பற்றி ஆழமாய் யோசிக்கவேண்டும். சத்தியம் நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளத்தக்கதாக உணர்ந்து, தியானிக்கவேண்டும். இந்த உணர்வு விதை மண்ணோடு சேர்ந்து, ஈரத்தால் ஊறி, முளை கிளம்பக்கூடிய பக்குவமடைவது போலிருக்கிறது. நாம் ஒரு சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆழமாய் ஆராய்ச்சிசெய்து, அமர்ந்த மனதுடன் உணரும்போது, ஆவியானவரின் உதவியால் தேவவசனமாகிய விதை நமக்குள் முளைக்க ஆரம்பிக்கிறது. நாலாவது காத்துக்கொள்ள வேண்டும். இச்சமயத்

தில் பாதுகாப்பு மிகவும் அவசியம். நாம் பலன் கொடுப்பது சாத்தானுக்குப் பிரியமில்லை. ஆகையால் நாம் கேட்டு, ஏற்றுக்கொண்டு உணரும் சமயத்தில், அது முளைக்கும் சமயமானதால் பலவித இடையூறுகளை அனுப்பி நமது தியானத்தைக் கெடுப்பான். ஆயிரம் வருஷம் நாம் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. அநேகரை இந்த வஞ்சகமான நிலைமையில்தானே அவன் இன்னும் வைத்திருக்கிறான். ஆனால் சத்தியத்தை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அதைப் பற்றித் தியானித்து உணருவதை அவன் சகிக்கமாட்டான். எப்படியாவது இடையூறுசெய்து கெடுக்கப் பார்ப்பான். உணர்வுள்ள சிந்தையை அவன் வெறுக்கிறான். இதை அறிந்த ஆண்டவர் வசனத்தைக் காத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றிப் போதிக்கிறார். முடிவாக பொறுமைவேண்டும் என்கிறார். "பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள்." பல இடையூறுகள் நேரிட்டாலும் பாடுகள் உண்டானாலும் மனஞ்சோர்ந்து போகாமல் பொறுமையுடன் சத்தியத்தில் நிலைத்திருக்கவேண்டும். "முன்மாரி பின்மாரி வருமளவும் சமுசாரி பொறுமையுடன் காத்திருக்கிறான்." நாம் நல்லவர்களாவதும், கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாவதும், நாம் கனிநிறைந்து உலகத்துக்கு ஆசீர்வாதமாயிருப்பதும் சாத்தானுக்குப் பிரியமில்லை. நம்மைப் பலவிதத்திலும் உபத்திரவப்படுத்த ஆரம்பிப்பான். பாடுகள் அனுபவித்த ஆண்டவர் பொறுமையை இழந்திருப்பாரானால் உலகத்தை ரட்சித்திருக்கமாட்டார். நமது ஜீவியத்தைக் கசப்பாக்கி, ஊழியத்தில் சோர்வை உண்டாக்கி, நம்மைப் பிரயோஜனமற்றவர்களாக்க வேண்டுமென்பது சாத்தானுடைய தீர்மானம். இச்சமயத்தில் தான் நமக்குப் பொறுமை மிகவும் அவசியம். "பொறுமையுடன் பலன்" என்னும் வார்த்தைகளை மறக்கவேகூடாது. தேவவசனத்தில் உறுதியான நம்பிக்கைகொண்ட பரிசுத்தவான்களுக்கு நேரிட்ட துன்பங்கள் அநேகம். என்றாலும் அவர்கள் சோர்ந்துபோகாமல் பொறுமையாய்ச் சகலத்தையும் சகித்துக் கொண்டிருந்தலேயே உலகத்துக்கு மிகுந்த ஆசீர்வாதமானார்கள். உணர்வற்ற இருதயத்தின் கேடுபாடுகளைக் கவனித்



தோம். உணர்வுள்ள இருதயத்தின் பாக்கியத்தையும் பார்த்தோம். உணர்வுள்ள இருதயம் ஆண்டவர் அருளும் ஈவு. அதற்காக நாம் ஜெபிக்கவேண்டும்.

"உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"உமது சாட்சிகளை அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"உமது வசனத்தின்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"என்னை உணர்வுள்ளவனாக்கும்; அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்" சங். 119.

---

# III

# God is Love

# கடவுள் அன்பே

"தேவன் அன்பாகவேயிருக்கிறார்" 1. யோ. 4: 8.

அன்பென்னும் வார்த்தையை அறியாதாரில்லை. கிறிஸ்தவர்களாகிய நமக்கோ அது வெகு சாதாரணம். ஏனென்றால் நமது மார்க்கம் அன்பின் மார்க்கம். அன்பென்னும் வார்த்தையை நமது வாசிப்பில், ஜெபத்தில், பாட்டில், பிரசங்கத்தில், சம்பாஷணையில் இடைவிடாது உபயோகிக்கிறோம். இந்த இடைவிடாத பழக்கத்தால் அன்பை நாம் அறிந்துகொண்டதாகவும், அனுபவிக்கிறதாகவும் எண்ணிக்கொள்ளுகிறோம். அன்பாவது என்னவென்று நாம் விசாரித்ததில்லை. அதை விசாரிக்க ஆரம்பித்த நிமிஷத்தில் அன்பென்பது நமக்கு விளங்காத ரகசியமாகும். எந்த விஷயத்தையும் நாம் விசாரிக்காத வரையில் நாம் அதை அறிந்தவர்களே. அது என்னவென்று ஆராயத் தொடங்கினவுடனே நமது அறிவீனம் வெளியாகும். அன்பு அறிவல்ல, எழுப்புதல் அல்ல, பரவசமல்ல, கண்ணீரல்ல, ஈகையல்ல, பாடுபடுதல் அல்ல. இவையாவும் அன்பின் அறிகுறிகளாகும். அன்பென்பது இன்னும் எட்டாமலேயிருக்கிறது. அது அறிவுக்கெட்டாத அன்பு. மருந்தின் சேர்க்கையை நாம் அறியாவிட்டாலும் அதை உட்கொண்டு சுகமடைவதுபோல அன்பை விஸ்தரிக்க முடியாவிட்டாலும் அதை நாம் அனுபவிக்கக் கூடும்.

யோவான் அன்பாவது என்னவென்று விஸ்தரிக்கவில்லை. அவர் அன்பினால் நிறைந்திருந்தார். அவருக்கு அன்பே கடவுள்; கடவுளே அன்பு. கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்ட பரமபிதாவின் அன்பை ஆழமாய்த் தியானித்து, பரவசமடைந்து, ஆச்சரியத்துடன் "தேவன் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரி



தென்று பாருங்கள்" என்கிறார். அவருள்ளத்தில் பிரவாகித்த அன்பின் அனுபவத்தால் அன்பின் ரூபங்களை எழுதினார். அன்பைக் குறித்து அவர் எழுதின மாட்சிமையான வசனங்களை நாம் அடிக்கடி வாசித்து வருவதால், அவைகளை எடுத்துப் போதிப்பதால், அவைகள் நமக்கு மனப்பாடமானதால் நாமும் அன்பைப் பெற்றவர்கள்போல் எண்ணிக்கொள்ளலாம். மதுரமான ஒரு கனியை ருசித்தவன் அதைப்பற்றிப் புகழ்ச்சியாக எழுதியிருப்பதை நாம் வாசிப்பதால் அல்லது மனப்பாடம் பண்ணுவதால் நாமும் அந்தக் கனியை ருசித்தவர்களாகுமா? அறிவு வேறே, அனுபவம் வேறே என்பதை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது. தேவகாரியங்களில் நமக்கு அனுபவமில்லாததே சபைகளின் பலவீனமான நிலைமைக்குக் காரணம்.

## கடவுள் அன்பைப்பற்றிச்சில குறிப்புகளைச் சிந்திப்போம்.

1. கடவுளே அன்பு. அன்பு கடவுள் லட்சணங்களில் ஒன்றல்ல. அவர் நித்திய தன்மையே அன்பு. கடவுளை நீதியுள்ளவர் என்கிறோம். ஆனால் நீதியற்ற அன்பு இளக்காரமாகும். கடவுள் பரிசுத்தர் என்கிறோம்; ஆனால் பரிசுத்தமில்லாத அன்பு இச்சையாகும். கடவுளை ஞானம் என்கிறோம்; ஆனால் ஞானமற்ற அன்பு சங்கடமாகும். கடவுளுடைய சகல லட்சணங்களும் சேர்ந்ததே அன்பு. சூரியனுக்கு ஏழு நிறங்கள் உண்டு. எல்லாம் சேர்ந்து வெண்ணொளியாய்ப் பிரகாசிக்கிறது. பிரகாசிப்பதே சூரியனுடைய தன்மை. அது வேறு விதமாக இருக்கமுடியாது. அன்பே கடவுள் தன்மை. உலகத்தில் கோடிக்கணக்கான அக்கிரமங்களும் பாவங்களும் பெருகியிருந்தும் கடவுள் உலகத்தில் அன்பாகவேயிருக்கிறார். நாம் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும், அதை மதித்தாலும் மதிக்காமற் போனாலும், அதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், கடவுள் அன்பு உலகத்தில் பிரவாகித்துக் கொண்டேயிருக்கிறது. "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை." கடவுளின் அன்பு கூடுவதுமில்லை குறைவதுமில்லை; மாறுவதுமில்லை மறைவதுமில்லை. அன்பு மாறி மறைந்துபோனால் கடவுளே மாறி மறைந்து

போவதாகும். ஏனென்றால் அன்பே கடவுள். அறிவோ, தீர்க்கதரிசனமோ, பாஷைகளோ ஒழிந்துபோகலாம். நிறைவானது வரும்போது குறைவானவைகள் ஒழிந்தேபோகும். "அன்பு ஒருக்காலும் ஒழியாது." கடவுளே அன்பு.

உலகத்தில் என்னென்ன சம்பவித்தாலும் சூரியன் பிரகாசித்த வண்ணமாயிருக்கிறது. மனுமக்கள் சிரித்தாலும் சரி அழுதாலும் சரி; சாப்பிட்டாலும் சரி பசியால் வருந்தினாலும் சரி; சுகமாயிருந்தாலும் சரி நோயாயிருந்தாலும் சரி; பிழைத்தாலும் சரி ஏகமாய்ச் செத்தாலும் சரி சூரியன் பிரகாசித்தவண்ணமாயிருக்கும். உலகத்தில் எல்லாரும் சேர்ந்து சூரியனைத் திட்டினாலும் சூரியன் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும். பிரகாசிப்பதே சூரியனுடைய தன்மை. அன்பே கடவுளுடைய தன்மை. உலகத்தின் பாவங்களெல்லாம் சேர்ந்து அவரன்பை அழிக்க முடியாது. தன் வீட்டு ஜன்னல்களையும் கதவுகளையும் இறுக்கமாய் அடைத்துக் கொள்ளுகிறவன் இருளிலிருப்பான். சூரியனோ பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். சூரிய ஒளி அவன் வீட்டைச் சூழ்ந்துகொண்டு உட்பிரவேசிக்க இடமுண்டோ என்று மோதிக்கொண்டிருக்கும். திறந்த நிமிஷத்தில் உள்ளே வெளிச்சம். வெளிச்சம் உள்ளே எப்போ வந்தது, எப்படி நுழைந்ததென்று சொல்லமுடியாது. வெளிச்சம் உள்ளே வந்ததுபோலிராமல் உள்ளேயே இருந்ததுபோல் தோன்றும். அதன் உட்பிரவேசம் அவ்வளவு தீவிரமானது. கடவுள் அன்பு மனுஷனைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அவரன்புக்கு மறைந்துபோக நம்மால் முடியாது. அவரன்புக்குள் இருக்கிறோம்; அசைகிறோம், பிழைக்கிறோம். என்றாலும் அந்த அன்பு நமக்குள் பிரவேசிக்கும்வரை நாம் அதை அறிகிறதில்லை, அனுபவிக்கிறதுமில்லை. மல்லிகைப் புஷ்பம் எங்கும் பரிமளித்தாலும் மூக்கடைத்தவன் வாசனை அறியாததுபோல, பாவத்தால் நமதிருதயம் அடைபட அன்பு உட்பிரவேசிக்க இடமில்லை. கடவுள் அன்பாயிருப்பாரோவென்று சந்தேகிக்கச் செய்வது நமது பாவமே. நல்லவர்களுக்கு அவர் அன்புள்ளவரென்றும், கெட்டவர்களுக்கு அவர் பொல்லாதவரென்றும் நாமே நினைத்துக் கொள்ளுகிறோம். ஓய்வு



நாள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் ஒருவன் உபாத்தியாரைப் பார்த்து: ஐயா, கடவுள் கெட்ட பையன்களை நேசிப்பாராவென்று கேட்டான். அதற்கு உபாத்தியார்: கெட்டபையன்களை கடவுள் ஒருக்காலும் நேசிக்கமாட்டார் என்று சொன்னார். இதுபோலவே மக்களுக்குப் போதிக்கிற பெற்றோரும் உண்டு. இப்படிப் போதிப்பது பொய்யல்லவா? நாம் நல்லவர்களாயிருந்தாலும் பொல்லாதவர்களாயிருந்தாலும் கடவுள் எல்லார் பேரிலும் அன்பாயிருக்கிறார். நல்லவர்கள் அன்பை அனுபவிக்கிறார்கள்; பொல்லாதவர்கள் அன்பை அனுபவிக்கிறதில்லை. இதுதான் வித்தியாசம். மேலும் நாம் நல்லவர்களாயிருந்ததினிமித்தம் அன்பு வெளிப்படாமல், நாம் பாவிகளாயிருக்கும்போதே அவர் அன்பு வெளிப்பட்டது. எல்லார்மீதும் அவர் அன்பாயிருந்தும் சிலரே அவரன்பை ருசிக்கிறார்கள். அவரன்பு மாறுவதில்லை. பூரணசந்திரன் பிரகாசித்த ஓர் இரவில் இரண்டு சிறுவர் கிணற்றண்டை நின்று தண்ணீரில் தோன்றின சந்திரனைப்பார்த்தார்கள். அவர்களிலொருவன் மறைவாய் ஒரு கல்லை எடுத்துத் தண்ணீரில் போட்டான். பக்கத்தில் நின்றவன் ஐயோ, சந்திரன் உடைந்துபோய்விட்டதே என்று கூவினான். அடுத்தவன் அவன் தலையைப் பிடித்து நிமிர்த்தி ஆகாயத்திலிருந்த சந்திரனைக் காட்டி, சந்திரன் உடையவில்லை, தண்ணீரில் தோன்றின அதன் சாயலே கலைந்தது என்றான். இதற்குள் கலங்கின தண்ணீர் அமைதிபெறவே சந்திரனுடைய சாயல் மறுபடியும் அங்கே அழகாய்த் தோன்றினது. பரமபிதாவின் அன்பு ஒருக்காலும் உடைபடுவதில்லை. பாவத்தால் உள்ளம் குழம்பினவர்கள் அவரது அன்பை அனுபவிக்கக் கூடாதிருக்கிறார்கள். தகப்பனுடைய அன்பு மாறாதிருந்தும் கெட்டகுமாரன் தன் [illegible] பாவத்தால் தகப்பனுடைய அன்பைச் சந்தேகித்தான். வீட்டுக்குத் திரும்பி வந்தபோதோ தகப்பன் அன்பு கொஞ்சமும் மாறவில்லை என்று கண்டு ஆனந்தித்தான். கடவுள் அன்பாகவேயிருக்கிறார்.

2. கடவுள் அன்பு வலிய வந்தது. நாம் கடவுளுக்குப் பிரியமாய் நடந்தால் அவர் நம்மை நேசிப்பார் என்பது நமது பொதுவான

எண்ணம். தேவ அன்பைச் சம்பாதிக்கும் தகுதி நம்மில் இல்லை. நமது நற்குணத்தினிமித்தமோ அல்லது நாம் செய்த எந்த நற்கிரியையினிமித்தமோ கடவுள் அன்பு வெளிப்பட்டதில்லை. நாம் அதைத் தேடாமலும் அறியாமலுமிருக்க அன்பு வெளிப்பட்டது. சொல்லவேண்டுமானால் அந்த அன்பிற்கு நாம் முற்றிலும் அபாத்திரரே. இனம் இனத்தை விரும்புவது உலக இயற்கை. கல்விமான் கல்விமானையும், சங்கீத வித்வான் சங்கீத வித்வானையும், சாஸ்திரி சாஸ்திரியையும், தனவான் தனவானையும், பராக்கிரமன் பராக்கிரமனையும் விரும்புவது இயல்பு. அவரவருக்குள்ள பொதுவான லட்சணங்களே அவர்கள் பிரியத்துக்குக் காரணம். கடவுள் நம்மில் அன்பு கூருவதற்கு நம்மில் என்ன உண்டு? அவர் யார்? நாம் யார்? நமது நடபடிக்கைகள் யாவும் கடவுளுக்கு நேர் எதிரிடை. அவர் பரிசுத்தர் நாம் அசுத்தர். அவர் நீதியுள்ளவர் நாம் அநீதியுள்ளவர்கள். அவர் ஞானமுள்ளவர் நாம் அறிவீனர். அவர் வல்லவர் நாம் பலவீனர். அவர் சம்பூரணர் நாம் தரித்திரர். அவர் நம்மை விரும்புவதற்கு நம்மில் என்னவுண்டு? அவர் முழுப்பகையாய்ப் பகைக்கும் பாவம் நமக்கு முழு இன்பமாயிருக்கிறது. இவ்வாறு சகல விதத்திலும் நாம் அபாத்திரராயிருந்தும் அவர் நம்மீது அன்பாயிருக்கிறார், உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால் அதனால் உங்களுக்குப் பலன் என்ன? அதிலே விசேஷம் என்னவென்று கேட்ட பகவான் தாமே அன்பாவது என்னவென்று காண்பிக்கிறார். எவ்வித தகுதியும் எவ்வித காரணமுமின்றித் தமது அன்பை நமக்கு அவர் வெளிப்படுத்தினபடியால் அது வலியவந்த அன்பாகும்.

இது வலியவந்த அன்பென்பதை பவுல் தெளிவாய் எடுத்துக் காண்பிக்கிறார். நாம் "பலமற்றவர்களாயிருக்கையில்," "அக்கிரமக்காரராயிருக்கையில்," "பாவிகளாயிருக்கையில்," "அவருக்குச் சத்துருக்களாயிருக்கையில்" பரம பிதாவின் அன்பு திருக்குமாரன் மூலமாய் வெளிப்பட்டது (ரோ. 5.6-10). நாம் பிதாவாகிய கடவுளை மறந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, பற்பல பாவங்களால் நமது புத்தி, சித்தம், ஆத்துமாவை



நாசம்பண்ணிக் கொண்டிருந்தபோது கடவுள் நம்மீது வைத்த தமது அன்பைப் பிரவாகிக்கச் செய்தார். இது வலிய வந்த அன்பென்பதை யோவானும் எடுத்துக் காண்பிக்கிறார். "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து...... தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்ததினாலே நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" என்கிறார். இவ்வாறு தமது ஜனங்களல்லாதவர்களைத் தமது ஜனங்களும் தமது பிள்ளைகளுமாக்கி, சிநேகிக்கப்படாதிருந்தவர்களைத் தமது சிநேகத்துக்குரியவர்களாக்கிக்கொள்வது அவர் திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. (ரோ. 9: 25, 26).

இவையாவும் உண்மையாயினும் கடவுள் தமது அன்பை நமக்கு வெளிப்படுத்துவதற்கு முக்கியமான காரணமுமுண்டு. அது அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமே. தங்கம் அழுக்கடைந்து போனாலும் தங்கம் தங்கமே. மகன் எவ்வளவு கெட்டுப்போனாலும் மகன் மகனே. ஆண்டவர் சொன்ன கெட்டகுமாரன் உவமையே இதற்கு ஆதாரம். நாம் எவ்வளவாகக் கெட்டுப்போனாலும் நம்மைப் பிறப்பித்தவரும் நம்மைப் பிழைக்கவைத்தவரும் பரமபிதாவல்லவா? நாம் அவர் [illegible] தாரும் சுதந்தரருமாயிருக்கிறோம். இந்த நெருங்கிய பிராண சம்பந்தத்தால் அவர் நம்மைக் கைவிட்டுவிடமுடியவில்லை. "எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" என்று புலம்பினாரே. பாவஞ்செய்த மனுஷரைச் சமூலமாய் அழித்துவிட்டாலும் அது கடவுளுக்கு நீதியாகவே யிருக்கும், அப்படியிருந்தும் அவர் நம்மை ரட்சித்தது பெரிய கிருபை என்பதுபோல் போலவு குண்டு. அந்த உபதேசத்தை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. கடவுள் மனுஷனை ஓர் தீர்மானத்தோடே உண்டாக்கினார். அவன் பாவஞ்செய்து தன்னைக் கெடுத்துக்கொண்ட போதிலும் வல்லமையுள்ள தேவன் தமது தீர்மானத்தை நிறைவேற்றாது விடார். அவர் மனுஷனை உண்டாக்கினபோது அவன்மேலிருந்த அன்பும் அவ

னைப்பற்றிய மேலான தீர்மானமும் பாவத்தால் மாறிப்போகவில்லை. ஆகையால் கெட்டுப்போன மக்களுக்குத் தமது அன்பைப் பாராட்டி அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளும் உத்தரவாதம் கடவுளுக்கு உண்டு. மகன் எக்கேடு கெட்டழிந்தால் எனக்கென்னவென்று சொல்லுகிற தகப்பன் தகப்பனல்ல. நமது ரட்சிப்பு தேவ கிருபை என்பது மெய்தான். ஆகிலும் அவர் பெற்ற பிள்ளைகளைக் கைவிடக்கூடாத உத்தரவாதமும், தம்மோடு சேர்த்தணைக்கும் அன்பின் சம்பந்தமும் பரமபிதாவுக்குண்டு. கடவுள் சகலத்தையும் தமது பிரமாணப்படி ஆளுகிறாரென்றும், நாம் செய்யும் நன்மையோ தீமையோ அதற்குத் தக்கபலனை நாமே அனுபவிக்கவேண்டுமென்றும், கடவுள் அவைகளில் பிரவேசிப்பதில்லையென்றும் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அப்படியானால் கடவுள் அறிவு, உணர்வு, அனுதாபமற்ற ஓர் யந்திரத்திற்குச் சமானமாவார். ஒரு தகப்பன் தன் பிள்ளையைப் பார்த்து: நெருப்பண்டை போகாதே, போனால் நெருப்பு உன்மேல் பற்றி எரியும் என்கிறான். இது தகப்பன் பிள்ளைக்குக் கொடுத்த பிரமாணம். சில நாட்கழித்து அந்தப் பிள்ளை நெருப்பண்டை போனதால், உடுப்பில் நெருப்புப்பற்றவே பிள்ளை [illegible] இச்சமயத்தில் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்ட தகப்பன் என்ன சொல்லுவான்? சரி, என் பிரமாணத்தை மீறினதால் நீ எரிந்து போகவேண்டியதே நியாயம், நான் அதில் பிரவேசிக்க மாட்டேன், நான் நீதிமான் என்று சொல்லுவானோ? ஒருக்காலும் அப்படிச் சொல்லமாட்டான். உடனே பாய்ந்து விழுந்து பிள்ளையை ரட்சிக்கும்படி துடிப்பான் அல்லவோ? மனுஷனுக்கு இவ்வளவு இரக்கமிருக்குமானால் அன்பின் சொரூபியாகிய பரமபிதா நமது காரியத்தில் பிரவேசித்து நம்மை ரட்சிக்காதிருப்பது எப்படி? "பலியைப் பார்க்கிலும் இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று சொன்னவர் அவரல்லவா? ஆகையால் நமது பாவநிலைமை அவர் கோபாக்கினையை அல்ல, அவர் பரிதாபத்தையும் அன்பையும் கொண்டுவந்தது. சூரியன் பாத்திரம் அபாத்திரமறியாமல் சர்வ மனுஷர்பேரிலும் பிரகாசிக்கிறதுபோல பரமபிதா தமது குமாரனைத் தந்து "இவ்வளவாய் உலகத்



தில் அன்புகூர்ந்தார்" (யோ. 3, 16). நாம் அறியாமலும் தேடாமலும் வந்த அன்பாகையால் அது வலியவந்த அன்பாகும்.

3. கடவுள் அன்பு ரூபிக்கப்பட்டிருக்கிறது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோ. 5, 8). விளங்கப்பண்ணுகிறார் என்பது வெளிப்படுத்துகிறார், பிரத்தியட்சமாக்குகிறார், திருஷ்டாந்தப்படுத்துகிறார், ரூபித்துக்காண்பிக்கிறார் என்று அருத்தமாகும். கடவுள் வல்லமை ரூபிக்கப் படவேண்டியதில்லை. ஆகாயத்தில் நின்று சுழலும் பிரமாண்டமான உலகங்கள் உன்னத [illegible] யார்? கடவுள் ஞான சக்தியின் மாட்சிமையை உணராதவர் யார்? கடவுள் ஞானம் ரூபிக்கப் படவேண்டியதில்லை. சர்வ சிருஷ்டிப்புகளின் ஒழுங்கையும் அவைகள் ஆண்டு நடத்தப்படும் ஞானத்தையும் புலனாக்க வேண்டியதில்லை. பிரமாணன் யார்? கடவுள் மகிமையை ரூபிக்கவேண்டியதில்லை. பிரமாண்டமான சிருஷ்டிப்பு முதல் சிறிய புல்வரை தேவமகிமையை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன" என்று சங்கீதக்காரன் பாடினார். பிரபஞ்ச ஆராய்ச்சிக்காரரான சாஸ்திரிகளுக்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். காலத்துக்குக் காலம் அவர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தும் சிருஷ்டிப்பின் அதிசயங்கள் கடவுளின் வல்லமை ஞானம் மகிமைகளை நாம் அதிகமதிகமாய் அறிந்து பரவசமடையச் செய்கின்றன.

அன்போ ரூபிக்கப் படவேண்டும். அவரது வல்லமை ஞானத்தைப்போல் அன்பு சிருஷ்டிப்பில் தானாக வெளிப்படவில்லை. சமுத்திரம் மின்னல் அன்பை வெளிப்படுத்துமோ? வானத்தின் நட்சத்திரங்களில் அன்பைக் காணலாமோ? உலகம் அவரன்பைப் பிரத்தியட்சமாக்குமோ? உலகத்தின் காரியங்களைக் கவனித்தால் கடவுள் அன்புள்ளவரோவென்று சந்தேகிக்கவேண்டியதிருக்கிறது. இவ்வுலகம் பெரிய போர்க்களம் போலிருக்கிறது. மனுஷனுக்கு மனுஷன், மிருகத்துக்கு மிருகம், பட்சிக்குப் பட்சி, மீனுக்கு மீன், பூச்சிக்குப் பூச்சி எங்கே பார்த்தாலும் போர். இந்தப் போர் எதற்காக

லும் வார்த்தைகளால் பயனில்லை. ஆகையால் கடவுள் தமது அன்பை ரூபித்துக் காண்பிக்கவேண்டியது அவசியம். அதை அவர் இந்த பேற்றின மகத்தான கிரியையினால் வெளியாக்கினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து 'அக்கிரமக்காரருக்காக மரித்ததால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." கடவுள் கிறிஸ்துவுக்குள் நமக்காகப் பட்ட பாடுகள் மரணத்தால் நம் மீதுள்ள தமது பேரன்பை ரூபித்துக் காண்பிக்கிறார். ஆனால் ஆண்டவர் தமது அன்பைக் காட்டும்படிக்காக மாத்திரம் மரித்தவரல்ல. ஒருவன் தன் சிநேகிதன் மீதுள்ள அன்பை ரூபிக்கும்படி உயிரை விடுவானாகில் அது பெரிய கஷ்டமாகும். ஆனால் தன் சிநேகிதனை ஆபத்திலிருந்து ரட்சிக்கும்படி அவன் மரிக்கவேண்டியிருந்தால் அதிக பொருத்தக் கருத்தாகும். நமக்கு [illegible] ரட்சிப்பை [illegible] [illegible] அவர் ஜீவனைக்கொடுத்து தமது அன்பை [illegible]. [illegible] [illegible] அவர் அன்புக்கு [illegible] [illegible] அன்பின் அதிசயம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. அந்த மரணத்தின் [illegible] அந்த அன்பு [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible].

கடவுள் அன்பு [illegible] வெளிப்படுத்தப் பட்டிருந்தபோதிலும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ரூபிக்கப்பட்டிருக்கும் [illegible] சொல்லுகிறதில்லை. அவரன்பு ரூபிக்கப்பட்டிருக்கும் [illegible] [illegible] அவரது பேரன்பை இன்னும் [illegible] [illegible] [illegible] [illegible] நிச்சயம். கடவுள் [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] பாவிகள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. இப்பாவிகள் [illegible] [illegible] [illegible] [illegible] கடவுள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அன்பு ரூபிக்கப்பட்டிருக்கும் நமது பாவிகள் [illegible] [illegible] [illegible] [illegible] அன்பை அறிவதற்குமுன் [illegible] [illegible] [illegible] அவர் அன்பு [illegible] [illegible] [illegible].

அறிந்தபின்பும் இன்னும் நமது மனதுக்குத் திருப்தியுண்டாகவில்லை. சிலுவைப்போதனையை நாம் சரியாய் அறிந்தோமானால், பிதா நம்மில் அன்பாயிருப்பதால் நமக்குப் பாடுகள் கூடாது என்று சொல்லமாட்டோம். பிதாவின் பூரண அன்புக்குரிய குமாரன் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. நாம் பாடுபட்டதால் நமது பிதாவின் அன்பை அவர் சந்தேகிக்கவில்லை. அதற்குப் பதிலாக: "நான் என் ஜீவனைக் கொடுக்கிறதினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" என்றார். நாம் கஷ்டப்பட்டாலும் கஷ்டப்படாதிருந்தாலும் பிதா நம்மேல் அன்பாயிருக்கிறார் என்பது நிச்சயம். அந்த அன்பு சிலுவையில் ரூபிக்கப்பட்டு நமது கண்முன் நிற்கிறது. அந்த அன்பை மாற்றவோ குறைக்கவோ, அழிக்கவோ ஒருவராலும் முடியாது. அந்த அன்பை ஆதாரமாக வைத்துக்கொண்டு நமது பாடுகளின் தத்துவத்தை அறியவேண்டும். நமக்குப் பாடுகளிருப்பதால் ரூபிக்கப்பட்டிருக்கிற அன்பை இல்லையென மறுக்கமுடியாது. பிதா என்னில் அன்பாயிருக்கிறார் என்று நிச்சயத்துக்கொண்டு அப்புறம் நமது உபத்திரவங்களுக்குச் சமாதானம் தேடவேணும். என்னிடத்தில் அன்புகூர்ந்து எனக்காக ஜீவனைக்கொடுத்த ஆண்டவர் வேண்டுமென்று என்னைச் சஞ்சலப்படுத்துவாரா? ஒருபோதுமில்லை. அவர் அன்பு நமதுள்ளத்திலிருக்கும்போது அந்த அன்பின் பலத்தாலே நாம் பாடுகளைச் சகிக்கக்கூடும். மேலும் கடவுளிடத்தில் அன்புகூரும் பிள்ளைகளாகிய நமக்குச் சகலமும் சேர்ந்து நன்மைக்காகவே நடக்கிறதென்கிற நிச்சயமும் இருக்கிறது. "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது". நாம் மெய்யாகவே பிதாவிடத்தில் அன்புள்ளவர்களாயிருந்தால் அவர் அறியாத பாடுகள் நமக்கு வருவதில்லை. அப்படியே நாம் பொறுமையாய்ச் சகிக்கும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்கும். அவர் அன்பாயிருந்தால் நமக்கேன் இந்த உபத்திரவம் என்று சொல்லமாட்டோம். அப்போஸ்தலனைப்போல் பாடுபட்டவர்கள் யார்? தேவன் அன்பாயிருந்தால் எனக்கேன் இந்தப் பாடுகள் என்று அவர் சொல்லவேயில்லை. அதற்குப் பதிலாக உபத்திரவங்களில் மேன்மை பாராட்டினார். எந்தப் பாடுகளும் எந்த வல்லமையும் பிரிக்க இயே

சலிலுள்ள தேவனுடைய அன்பிலிருந்து தம்மைப் பிரிக்கமுடியாதென்று வெற்றிக்கீதம் பாடினுர் (ரோ. 8 : 35-39). பிதா ரூபித்துக் காண்பித்திருக்கும் கல்வாரி அன்பில் நாம் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

4. அன்பு பிரதி அன்பை நாடுகிறது. தமது அன்பை நமக்கு ரூபித்துக் காண்பிக்கிற பரமபிதா நம்மிலிருந்து பதில் அன்பை வாஞ்சையோடு எதிர்பார்க்கிறார். இது நியாயமே. பிதா இறந்தவர்க்குள்ளிருந்து பேதுருவைப் பார்த்து: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்டார். நம் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் நாம் ஒவ்வொருவரையும் பார்த்து அவ்வாறு கேட்பது நியாயமே. கேள்விக்கு உத்தரவு கொடு. இருதயங்களை அறிந்திருக்கிற ஆண்டவருக்கு நாம் என்னபதில் சொல்லுவோம்? கிறிஸ்துவின் பேரால் நாம் அனேக காரியங்களைச் செய்யலாம். நாம் செய்யும் எந்தக் காரியமும் அன்புக்கு ஈடாகாது. இதைத் திட்டமாய் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அன்பிலிருந்து உண்டாகாத முயற்சிகள் ஆண்டவருக்கு ஏற்காது. அன்பற்ற ராஜ்யிருந்தும் அருவருப்பாகும். அன்புடன் உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பது அமிர்தமாகும். மெய்தான் என் உள்ளத்தில் அன்பில்லை. ஆண்டவரோடு அந்நியோன்னியமாக நான் உறவாடுகிறதில்லை, ஆகிலும் நான் செய்கிற ஏராளமான வேலைகளைப்பார்த்து ஆண்டவர் சந்தோஷப் படமாட்டாராவென்று நினைக்கிறோம். ஒருக்காலுமில்லை. எபேசு சபையைப் பார்த்து ஆண்டவர் சொன்னது நமக்கு எச்சரிப்பாயிருக்கட்டும். உன் கிரியைகளையும் உன் பிரயாசங்களையும் அறிந்திருக்கிறேன், ஆகிலும் உன்பேரில் எனக்குக் குறை உண்டு; நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டாய் என்றார். அன்பின் வழியே ஆண்டவருக்கு உகந்த வழியாம். மார்க்கத்துக்காக நமது சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் ஆண்டவரிடத்தில் அன்பில்லையென்றால் ஒன்றுமில்லை. ஆண்டவர் பட்டபாடுகள் மரணம் அவர் நம்மீது கொண்ட அன்புக்கு அடையாளம். அதுபோல நமது முயற்சிகள் யாவும் நம்

மீதுள்ள அன்பினால் பிறக்கவேண்டும். நம்மில் அன்புகூர்ந்த ஆண்டவரிடம் நாமும் அன்பாயிருக்கவேண்டும்.

அன்பு எப்படி உண்டாகும்? "என் இயேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்; என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்" என்று பாடுவது அநேகருடைய விஷயத்தில் பொய்யல்லவா? இதைப்போல் ஜெபத்திலும் பிரசங்கத்திலும் லோகாய்ச் சொல்லுகிறோம். நமது உள்ளத்தில் அன்புண்டோவென்று நாம் விசாரிக்கவில்லை. கருத்தும் யோசனையுமில்லாமல் செய்கிற ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களால் நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளுகிறோம். பேதுருவைப்போல "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று அவர் திருமுகத்தைப் பார்த்து நாம் சொல்லக்கூடுமா? உள்ளத்தில் அன்பு உண்டாவதெப்படி? இது விஷயத்தில் அநேகர் தவறிப்போகிறார்கள். என்னிடத்தில் அன்பாயிருக்கும்படிக்கு நான் ஒருவருக்குக் கட்டளையிடலாமா? என்னிடத்தில் அன்பாயிரு என்று நான் ஒருவனை அடித்துப் பலவந்தப்படுத்தலாமா? அதிகாரத்தால் அநேக வேலைகள் கொள்ளலாம். வேலைக்காரர் மனதில் முறு முறுத்துக் கொண்டாகிலும் வேலையைச் செய்வார்கள். அதுபோல அன்பையும் அப்படி உண்டாக்கமுடியுமா? அன்பு இருதயத்துக்குரியது. அது தானாய்ப் பிறக்கவேண்டியது. சபையார் கடவுளிடத்தில் அன்புகூராததற்காகப் போதகர்கள் கோபித்துக் கொள்ளலாம். பெற்றோர் தங்கள் மக்களை ஆண்டவரிடத்தில் அன்பு கூருங்கள் என்று அதட்டலாம். மனைவி தன் புருஷனைப்பார்த்து: என் மேலே நேசமில்லை என்று சண்டை போடலாம். இதெல்லாம் காரியம் அறியாதவர்கள் செய்கையாகும். நான் எவ்வளவோ பிரயாசப்படுகிறேன், தீர்மானம் பண்ணுகிறேன், ஆண்டவர்பேரில் எனக்கு அன்பு வரவில்லையே என்று புலம்புகிறவர்களுமுண்டு. அன்பு கட்டளையால், அதட்டுதலால், பிரயாசத்தால், தீர்மானத்தால் உண்டாகிறதில்லை. தேவ அன்பு நிறைய மனதில் பதிக்கப்படவேண்டுமானால் அவர் கல்வாரி மலைக்கு வந்தார். அன்பை நாமே நமக்குள் பிறப்பிக்க முடியாது. கடவுள் ஒருவரே அன்பு. அன்பு வேறெங்குமில்லை. அன்பு என்னும் வார்த்தை

தயத்தை நிரப்பி மறுபடியும் தான் புறப்பட்டுவந்த இடமாகிய பிதாவின் இருதயத்துக்குத் திரும்பிப் போகிறது. இதுவே கடவுளிடத்தில் நாம் அன்பு கூருவது. அன்புக்குப் பதில் அன்பு காண்பிக்கும் வழி இதுவே.

இதன் உண்மையை நமது அநுபவத்திலும் அறிந்திருக்கிறோம். நாம் எத்தனையோ மனுஷரைச் சந்திக்கிறோம்; அவர்களைக் கண்டும் காணாதவர்களைப்போல் போய் விடுகிறோம். இன்னும் பலரோடு நாம் பேசிப் பழகுகிறோம் என்றாலும் எல்லாரும் நமக்கு உற்ற சிநேகிதர்கள் ஆவதில்லை. அப்படியிருக்க சிலரை மாத்திரம் நமது மனம் நாடுகிறது. அவர்கள் சிநேகத்தை விரும்புகிறோம். இதற்குக் காரணமென்ன? அவர்களுடைய வசீகர தோற்றமோ, நயமான பேச்சோ, கல்வித் திறமையோ, ஆழ்ந்த புத்தியோ, அன்பின் சிந்தையோ ஏதோ ஒன்று நமது உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. அவர்களைச் சிநேகிக்காமலிருக்க முடியவில்லை. இந்தச் சிநேகம் எப்படி உண்டாயிற்று? அவர்களிலிருந்து ஏதோ ஒரு விசேஷித்த காரியம் நமது மனதை முந்திக் கவர்ந்து கொண்டிருக்கும் அல்லவா? ஒரு வழியே போகிறோம். புஷ்பங்கள் நிறைந்த மரங்களைக் காண்கிறோம். ஒரு மரம் நிறையப் பூவரசம் பூக்கள். பக்கத்தில் உள்ள தோட்டத்தில் எங்கும் பூசணிப் பூக்கள். இவைகளில் நமது மனம் கட்டவில்லை. சற்று கடந்து போகிறோம். ஒரு தோட்டம் நிறைய ரோஜாப்புஷ்பங்கள். அதைவிட்டு முன் நடக்கக் கால்வரவில்லை. எப்படியாவது இரண்டு புஷ்பங்களைப் பறித்துக்கொள்ளலாமா? அல்லது காசு கொடுத்தாகிலும் சில புஷ்பங்களை வாங்கலாமா என்கிற ஆசை உண்டாகிறது. வழியில் கண்டதெல்லாம் புஷ்பங்கள் தானே, அவைகளை நாம் விரும்பாமல் இந்த ரோஜாமேல் மாத்திரம் நமக்குப் பிரியம் வந்த காரணமென்ன? மற்றப்புஷ்பங்களுக்கு நமது மனதைக் கவர்ந்துகொள்ளும் சக்தியில்லை. ரோஜாவின் அழகான வடிவமும் அதன் நறுமணமும் நமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆகையால் ரோஜாவில் நமக்குள்ள பிரியம் நமது சுய பிரியமல்ல; அந்த ரோஜாவே நமதுள்ளத்தைக் கவர்ந்து தன்னில் பிரியங்கொள்ளும்

படி செய்தது. நாம் ரோஜாவை விரும்புவதற்குக் காரணம் ரோஜாவே. நாம் கடவுளிடம் அன்பு கூருவதற்குக் காரணம் கடவுளே. நமக்குள் அன்பில்லை. வேறொன்றும் அன்பில்லை. கடவுள் ஒருவரே அன்பு. அவர் தமது பேரன்பை கிறிஸ்துவுக்குள் சிலுவையில் வெளிப்படுத்த நாம் அந்த அன்பை அறிந்து தியானிக்கும் வேளையில் ஆவியானவர் தேவ அன்பை நமது இருதயங்களில் ஊற்றுகிறார். அந்த அன்பின் காந்தம் நமது உள்ளத்தை இழுத்துத் தான் புறப்பட்டுவந்த பிதாவோடு நம்மை இணைத்துக் கட்டுகிறது. அவர் நமது அருமைப் பிதாவும் நாம் அவர் அருமைப் பிள்ளைகளுமாகிறோம். இந்த அன்பின் கட்டிலிருந்து ஒன்றும் நம்மைப் பிரிக்கமாட்டாதென்பது நிச்சயம். ஏனென்றால் இந்த அன்பின் சக்தி கடவுளே.

**5. தேவ அன்பால் நிரப்பப்படுவதின் பலன் என்ன?**

ஆண்டவரிடத்தில் அன்புகூருவதின் பலன்கள் அநேகம். அவைகளை இங்கே விவரிக்காமல் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணமாயிருக்கிற மூலபலனைக் கவனிப்போம். ஆண்டவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவதே அந்தப்பலன். "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவனுக்கு நான் என்னை வெளிப்படுத்துவேன்" என்றார் (யோ. 14:21). சங்கீதம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்கு காதுகளிருந்தும் பிரயோஜனமில்லை. சாஸ்திரம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்குக் கண்களிருந்தும் பிரயோஜனமில்லை. சிருஷ்டிப்பு அதில் பிரியமுள்ளவர்களுக்கே தன் அழகை வெளிப்படுத்தும்; மற்றவர்கள் அதை ஆயிரந்தரம் பார்த்தாலும் அவர்கள் ஒன்றும் காணாதவர்களே. சிநேகிதன் தன் சிநேகிதனுக்கே தன் உள்ளத்தை வெளிப்படுத்துவான்; அந்நியனிடத்தில் ஒன்றுமே சொல்லமாட்டான். அன்பற்றவர்களுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துகிறதில்லை.

கிறிஸ்துவை உள்ளத்தில் வெளிப்படுத்தப் பெற்றவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். ஆண்டவரைத் தங்கள் உள்ளத்தில் வெளிப்படுத்தப் பெற்றவர்கள் மூலமாய் கிறிஸ்துமார்க்கம் உண்டா

யிற்று. புறம்பான ஆராதனைகளும் புறம்பான வேலைகளுமே அநேகருடைய கிறிஸ்துமார்க்கம். உயிரில்லாத விக்கிரகத்தைப் புறம்பே பீடத்தில் வைத்துப் பூஜிக்கிறார்கள். ஆவியும் ஜீவனுமாயிருக்கிற ஆண்டவரை எந்த மேடையில் வைத்து நாம் பூஜிக்கிறது? அவர் சீஷர்களுக்கு வெளியேயிருந்த மூன்று வருஷகாலமும், அவர்கள் அவரைப் பார்த்தார்கள், அவர் போதனைகளைக் கேட்டார்கள்; அவர் ஜீவியமாதிரியைக் கவனித்தார்கள். என்றாலும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை அப்போது உண்டாகவில்லை. கிறிஸ்தவர்கள் என்னும் பேரும் அப்போது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆண்டவர் மகிமையடைந்த பின்பு அவர் வாக்குப் பண்ணினபடியே தமது ஆவிமூலம் அவர்களுக்குள் வந்தார். அவர்கள் கிறிஸ்துவைத் தங்களுக்குள் கண்டார்கள். அவரே அவர்களுக்கு ரட்சிப்பும், ஜீவனும், நீதியும், சமாதானமும், உன்னத பலமுமானார். அவர்கள் ஜீவியமும் ஊழியமும் வல்லமை நிறைந்து விளங்கின. கிறிஸ்துவுக்கொப்பான சாயலை அவர்களிடம் கண்டவர்கள் அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள். அவர்கள் ஆண்டவரிடம் முழு அன்பு வைத்தபடியால் அவர் தமது வாக்குப்படியே தம்மை அவர்களுக்குள் வெளிப்படுத்தி, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை உலகத்துக்கு ஆசீர்வாதமாக்கினார்.

கிறிஸ்துவைத் தங்களுக்குள் வெளிப்படுத்தப் பெறாதவர்கள் கிறிஸ்தவர்களல்ல. ஞானஸ்நானம், ராப்போஜனம், ஆராதனைகள் நம்மைக் கிறிஸ்தவர்களாக்காது. இவைகள் கிருபையின் எத்தனங்களாயிருந்தாலும் அநேகருடைய ஜீவியம் மாற்றப்படவில்லையே. அவர்கள் நினைவுகள், வார்த்தைகள், செய்கைகள் ஆண்டவருக்குப் பிரியமானவைகளல்ல. ஜென்ம சுபாவத்தின்படியே நடக்கிறார்கள். ஆண்டவரை அவர்கள் முழு இருதயத்தோடும் நேசிக்கிறதில்லை. அன்பற்ற அவர்களுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துவதுமில்லை. அப்படியிருந்தும் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்களென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பேர்க் கிறிஸ்தவர்கள் ஆயிரமாயிரமாய் பெருகினாலும் ஆண்டவருக்கு அதனால் மகிமையில்லை.

சபைகளுக்கும் உலகத்துக்கும் அவர்களால் ஆசீர்வாதமில்லை. இந்தக் களில் அநேகர், நாங்கள் கிறிஸ்துவை மதித்து வணங்குகிறோம், ஆனால் உங்கள் சபைகளில் சேரமாட்டோம் என்று சொல்லுகிறதற்குக் காரணம் இதுவே. கிறிஸ்துமார்க்கம் அன்பின் மார்க்கம். அது பகையும், விரோதமும், பிரிவினையும், பெருமையும், பொறாமையும், எரிச்சலும், தீமைபேசுதலும், அவமானப்படுத்தலுமான மார்க்கமல்ல. உலகத்தாரைப்போல நாம் நடந்துகொண்டு, கிறிஸ்தவர்கள் என்னும் பேரை வைத்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? நாம் அழைப்பைப் பெற்றிருக்கிற அன்பின் அழைப்புக்குப் பாத்திரராய் நடக்க மனமில்லாவிட்டால் கிறிஸ்தவர்கள் என்னும் பேரை விட்டுவிடுவது நல்லது. இருந்தால் உண்மையாயிருக்கவேண்டும். மாயத்தை ஆண்டவர் முழுப்பகையாய்ப் பகைக்கிறார். அன்பே கடவுள். அவரே நமது அன்புள்ள பிதா. அவர் தமது அன்பைத் தமது குமாரன் மூலமாய்ச் சிலுவையில் ரூபித்துக் காண்பிக்கிறார். இந்த அன்பை நாம் அறிந்து, உள்ளத்தில் பெற்று, அவரிடத்தில் பதில் அன்புகூரவேண்டுமென்று விரும்புகிறார். அவ்வாறு நாம் அன்புகூரும்போது ஆண்டவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துகிறார். இந்த உள்ளான வெளிப்படுத்தலே நமக்கு ஜீவனும் ரட்சிப்புமாகும். இந்த அனுபவம் நமக்கிருந்தாலே நாம் உண்மையான கிறிஸ்தவர்களாகலாம். புறம்பான ஆசாரங்கள் ஆராதனைகளை நம்பி நாம் மோசம் போகக்கூடாது. நமது குணமும் ஜீவியமும் ஆண்டவருக்குப் பிரியமும், மனுஷருக்கு ஆசீர்வாதமுமாக மாற்றப்படவில்லையென்றால் நாம் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

முடிவாக ஒருவார்த்தை. தேவன் தமது குமாரன் மூலமாய் வெளிப்படுத்தின அன்பு இரண்டாயிரம் வருஷத்துக்குமுன் நடந்த ஓர் சம்பவமாயிராமல் இக்ஷணத்திலும் பிரவாகித்துக்கொண்டிருக்கிற அன்பாயிருக்கிறது. எப்படியென்றால், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார் என்று சொல்லாமல், விளங்கப் பண்ணுகிறார் என்று சொல்லுகிறார். சூரியப் பிர

ஆகாசம் எப்பக்கத்திலும் நம்மைச் சூழ்ந்துகொண்டிருப்பது போல, பரம பிதாவின் அன்பு நம்மைச் சூழ இந்த நிமிஷத்திலும் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது. நமது பாவங்களை நீக்கி நம்மை ரட்சிக்கும்படி நமது கண்களுக்கு முன்பாக இப்போதே ஆண்டவர் சிலுவையில் தொங்குகிறதுபோலிருக்கிறது. ஆகையால் பிதா தமது அன்பை இப்போதே நமது கண்களுக்கு முன்பாக விளங்கப் பண்ணுகிறார். தமது அதிசயமான அன்பை இப்போதே வெளிப்படுத்துகிறார், இப்போதே பிரத்தியக்ஷமாக்குகிறார், இப்போதே நமது கண்களுக்கு ரூபித்துக் காண்பிக்கிறார். நமது பக்தியினிமித்தமல்ல, புண்ணியங்களினிமித்தமல்ல, நீதியின் நிமித்தமல்ல. எந்த நற்கிரியையினிமித்தமுமல்ல. இப்போது நாம் பாவஞ்செய்து கொண்டிருக்கிறோம். ஆண்டவரை மறந்தோம், வேதத்தை அசட்டை செய்தோம்; ஜெபத்தை விட்டோம், தீய வழியில் செல்லுகிறோம். நாம் செய்கிறது நமக்கே தெரியவில்லை; நமது மனச்சாட்சி நம்மை வாதிக்கிறது. நமது நிலைமை இவ்வளவு கேவலமாயிருந்தும், பிதாவின் அன்பு நமக்கு ஆக்கினை கூறாமல் நம்மை ரட்சிக்க வாஞ்சைகொண்டு நமது உள்ளத்தில் பிரவேசிக்கும்படி நம்மை மோதிக்கொண்டிருக்கிறது. பிதா தமது அன்பை நமக்கு இந்த நிமிஷத்தில் விளங்கப் பண்ணுகிறார். இது பாவிகளாகிய நம்மிடத்தில் வலிய வந்திருக்கிற அன்பு. சகோதரனே, சகோதரியே, உன் காரியங்கள் எவ்வளவு கேவலமாயிருந்தாலும் மனம் கலங்காதே. ஆயக்காரரையும், பாவிகளையும், வேசிகளையும் அன்பின் கரத்தால் அணைத்து, அவர்களை ராஜ்யத்தின் மக்களாக்கின காருண்யமும் அனுதாபமும் இரக்கமும் நிறைந்த ரட்சகர் உன் பக்கம் நிற்கிறார். உன் சகல பாவங்களையும் அவர் அறிந்திருந்தும் உன்பேரிலுள்ள அவர் அன்பு மாறவில்லை. உனக்காக அவர் சகித்த மரணத்தை உனக்குக் காட்டி, தமது அன்பை உனக்கு ரூபித்துக் காண்பிக்கிறார். நீ என்ன சொல்லப் போகிறாய்? என் பாவத்திலேயே நிலைத்திருப்பேன், உமது அன்பு எனக்கு வேண்டாமென்றும் நீ சொல்லுவாயா? அல்லது நான் பாவியாயிருந்தும், என்மீது அன்புகொண்டு எனக்காக உயிர்கொடுத்த பகவானே, என் அருமை ரட்சகனே, இனி எனக்கு-

பாவ ஜீவியம் வேண்டாம் உமது அன்பு ஒன்றே எனக்குப் போதும் என்றும் சொல்லலாம். ஆண்டவர் உன்னைப் பலவந்தம் பண்ணமாட்டார். பலவந்தத்தால் வருவது அன்பல்ல. நீயே அவரன்பை அறிந்து அவரை நேசிக்கவேண்டுமென்பது அவர் விருப்பம். அவர் அன்பின் கரத்தைப் பிடி. காந்தம்போல் அவரன்பு உன் உள்ளத்தில் பெருகக் காண்பாய். உன் இருதயத்தில் அன்புண்டானவுடனே ஆண்டவர் தம்மை உனக்குள் வெளிப்படுத்தித் தமது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களால் உன்னை நிரப்புவார். ஆண்டவர் உன்னோடு பேசும் இந்த நேரத்தைத் தவற விடாதே.

பரமபிதாவின் அன்பை கிறிஸ்துமூலம் ஆவியானவர் நமது உள்ளத்தில் ஊற்றும்போது நாம் கடவுளிடத்தில் அன்பு கூருவது நமக்கு இயல்பாயிருக்கும். தேவனிடத்தில் மாத்திரமல்ல மனுஷரிடத்திலும் அன்பாயிருப்போம். பாஷைகள், வரங்கள், ரகசியங்கள், சகல அறிவுகள் இவை யாவற்றிலும் அன்பே விசேஷம். இவை யாவுமிருந்தும் அன்பில்லாமற்போனால் நாம் ஒன்றுமில்லை. ஏனென்றால் கடவுள் அன்பே. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். எல்லாம் ஒழிந்தாலும் அன்பு ஒருக்காலும் ஒழியாது. கடவுளே அன்பு. அன்பால் நிறைந்தவர்கள் கடவுளால் நிறைந்தவர்கள். அன்பில்லாதவன் கடவுளை அறியான். அன்பற்றவன் கிறிஸ்தவனல்ல.

# IV

# The Body of Christ

# கிறிஸ்துவின் சரீரம்

"கிறிஸ்துவின் சரீரமாகிய சபை........தலையாகிய கிறிஸ்து"

எபே. 4:12, 15.

திருச்சபை "தேவனுடைய ஆலயம்" என்றும், "ஆவிக்குரிய மாளிகை" என்றும், "கடவுளுடைய வாசஸ்தலம்" என்றும், "கிறிஸ்துவின் மணவாட்டி" என்றும் அழைக்கப்படுகிறது. அது "கிறிஸ்துவின் சரீரம்" என்று அழைக்கப்படும்போது மேலான நெருங்கிய உயிருள்ள சம்பந்தமுள்ளதாயிருக்கிறது. கிறிஸ்துவைத் தங்கள் ரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரோடிணைக்கப் பெற்ற விசுவாசிகள் எல்லாரும் அவரது சரீரத்தின் அங்கங்களாகிறார்கள். எல்லாரும் சேர்ந்து அவருக்குச் சரீரமாகிறார்கள். அந்தச் சரீரத்துக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இன்னும் பூரணப்படவில்லை. அது கட்டப்பெற்று வளர்ந்துகொண்டு வருகிறது. அதை மாளிகையாகப் பேசும்போது: "அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார், அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பெற்று, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பெற்று வருகிறீர்கள்" என்று பவுல் சொல்லுகிறார். இதன் சம்பந்தமாக பேதுரு: "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகக் கட்டப்பெற்று வருகிறீர்கள்" என்கிறார். திருச்சபையை எந்த உவமானத்தைக்கொண்டு பேசினாலும், அது ஜீவ

றுள்ளதென்பதும் கிறிஸ்துவாகிய சிரசோடு இணைக்கப்பெற்றுக் கட்டப்படுகிறதென்பதும் நிச்சயம்.

**தலையும் சரீரமும்.** சரீரத்தில் தலை சிறிய பாகமாயிருந்தாலும் தலையே பிரதானம். சரீரத்துக்கு அவசியமான முக்கிய உறுப்புகள் யாவும் தலையிலேயே அமைக்கப்பெற்றிருக்கின்றன. காரியங்களைப் பார்த்து அறியும் கண்கள், மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் செவிகள், பிறரோடு பேசும் வாய், சுவாசிக்கும் மூக்கு, விஷயங்களைச் சிந்தித்து ஆலோசிக்கும் மூளை இவையாவும் தலையிலேயே இருக்கின்றன. இவ்வுறுப்புகள் கெட்டுப்போவது சரீரத்துக்கு நஷ்டம். குருடர், செவிடர், ஊமையர், பைத்தியகாரர் முதலானவர்களைக் கண்டு பரிதபிக்கிறோம். தலையிலுள்ள இவ்வுறுப்புகளின் வேலையால் சரீரம் ஆளப்படுகிறது. கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருக்கிறார். சரீரமாகிய சபைக்காகப் பார்க்கிறவரும், பேசுகிறவரும், கேட்கிறவரும், ஆலோசிக்கிறவரும், பிழைக்கிறவரும், சரீரத்தை நடத்துகிறவரும் அவரே. மேலும் சரீரத்தை இனங் காட்டுவது தலையாகும். ஒருவனைக் கொலைசெய்தபின் அவனை இனம் கண்டுகொள்ளாதபடி கொலைகாரர் தலையை மறைத்து விடுகிறார்கள். சபை எத்தன்மையானதென்பதை தலையாகிய கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். தலையின்றி சரீரமில்லை. கைகள் கால்கள் இழந்தவர்கள் பிழைத்திருக்கிறார்கள். தலையிழந்து பிழைத்தவர்கள் இல்லை. தலையாகிய கிறிஸ்து இல்லாமல் சரீரமாகிய சபை இல்லை. சரீரத்துக்குத் தலை பிரதானம்.

சரீரத்துக்குத் தலை பிரதானம் என்பது போலவே தலைக்கும் சரீரம் பிரதானம். சரீரமின்றி தலை என்ன செய்யக்கூடும்? ஏரோதியாள் போன்றவள் ஸ்நானகன் தலையைக் கேட்டாள். அது பார்க்காது, கேட்காது, பேசாது, பிழைக்காது. தலை எவ்வளவு பிரதானமானாலும் அது தன் கிரியைகளை நடப்பிக்க அதற்கும் சரீரம் அவசியம். கிறிஸ்து தம்மிலே எவ்வளவு பூரணமுள்ளவராயிருந்தும், நம்மையல்லாமல் அவர் எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருந்தும், இரட்சண்ய ஒழுங்குப்படி சரீரமாகிய திருச்சபையில்லாமல் அவர் தாமாக ராஜ்யத்தின் வேலையை நடப்பிக்க மாட்டார். [illegible]

யால் சரீரத்துக்குத் தலை பிரதானமாயிருப்பதுபோல, தலைக்குச் சரீரமும் பிரதானம். ஒன்றின்றி மற்றது பிழைக்காது. இரண்டும் சேர்ந்தே பூரணமாகிறது. இதுவும் தேவச் செயலே.

ஆண்டவர் உலகத்திலிருந்தபோது அவருக்கே ஒரு சரீரம் இருந்தது. பிதா அவருக்கு அந்தச் சரீரத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். அவர் அதில் வசித்துப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். ஆண்டவர் தமது சரீரத்தை பிதாவாகிய கடவுளை உலகத்துக்கு வெளிப்படுத்தும் சாதனமாகக் கொண்டார். மனுஷனுடைய கெட்டுப்போன நிலைமையை தமது சரீரத்தால் வெளிப்படுத்தினார். அவரது சிலுவை ஜீவியத்தைக் கண்டதால் நமது பாவக்கேட்டை உணர்ந்தோம். இது மாத்திரமல்ல, அந்தச் சரீரத்தின் மூலமாய் நாம் கடவுளோடு ஒப்புரவாகும் வழியை உண்டாக்கினார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்." இவ்வாறு தேவராஜ்யத்திற்காக ஆண்டவர் செய்து முடிக்கவேண்டிய சகல காரியங்களுக்கும் அவரது சரீரம் அவருக்கு அவசியமாயிருந்தது. ஜனங்களெல்லாரும் அவர் சரீரத்தின் மூலமாக அவரை அறிந்து, அவர் திருவசனத்தைக் கேட்டு, அவர் செய்த கிரியைகளையும் கண்டார்கள். அவர் உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றபின் அவர் சரீரம் மறைந்தது. அவர் தொடங்கின வேலையோ முடியவில்லை. அவர் மறைந்தாலும் அவர் தொடங்கின வேலை பூமியில் நடக்கவேண்டும். அதற்காக ஒரு சரீரம் அவருக்கு அவசியம். திருச்சபையே அந்தச் சரீரம். அவர் ஜீவரோடிருந்த காலத்திலும் தமது சரீரமாகிய சபையைக் கட்டுவதாகச் சொன்னார். அவர் மகிமையடைந்தபின்பே சபையைக் கட்டினார். இந்த வேலை பெந்தெகோஸ்தே நாளில் ஆரம்பித்தது. மகிமையடைந்த ஆண்டவர் அதற்குத் தலையானார், சபை அவரது சரீரமாயிற்று. "கிறிஸ்துவின் சரீரமாகிய சபை."

ஆதிச்சபையை நாம் குழந்தைச் சபையென்று அழைப்பதுண்டு. இப்போது இரண்டாயிர வருஷகாலமானதால் நாம் அநேக விஷயங்களில் வளர்ந்து பெருகினதாக எண்ணுகிறோம். ஒரு விதத்

றில் இது உண்மைதான். நமக்கு அநேக சிறந்த ஆலயங்களும், கல்வியறிவு பெற்ற திரளான ஊழியக்காரரும், பொன்மயமான பூவினை வேதாகமங்களும், பாட்டுப் புஸ்தகங்களும், விலையேறப்பெற்ற சின்னங்களும், ஒழுங்கான ஆராதனைகளும், மிகுதியான பணமும், பற்பல சங்கங்களும் உண்டு. இவைகளைக் குறித்து அவர்கள் மேன்மை பாராட்ட முடியாது. ஆனால் அவர்களுக்குள்ளது நமக்குண்டோவென்பதுதான் கேள்வி. நமக்குப் புறம்பான எவ்வளவு சிலாக்கியங்கள் இருந்தபோதிலும் சபைக்குரிய பிரதான அடையாளங்கள் அவைகள் அல்ல. இவைகள் யாவும் மாறிப்போகும். சபைக்குரிய மேலான காரியங்கள் உண்டு. அவைகளையே நாம் கருத்தாய் தேடவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை ஆண்டவர் கட்டத் தொடங்கின மாதிரியின்படியே கட்டப்படவேண்டும். கர்த்தர் மோசேயைப் பார்த்து: "நான் உனக்கு மலையில் காண்பித்த மாதிரியின்படியே கட்ட எச்சரிக்கையாயிரு" என்றார். ஆசரிப்புக் கூடாரம் முதலில் கடவுளுடைய மனதிலிருந்தது. பின்பு மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டது. பின்பு பற்பல வேலைக்காரரால் கடவுள் வெளிப்படுத்தின மாதிரிப்படியே கூடாரம் கட்டி முடிந்தது. திருச்சபையும் முதலில் கடவுள் மனதில் இருந்தது. பின்பு அது கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது. பின்பு ஆண்டவர் தமது ஆவியினால் பெந்தெகோஸ்தே நாளில் கட்டத் தொடங்கினார். அன்று முதல் இதுவரை திருச்சபையைக் கட்டும் வேலை நடந்தேறிவருகிறது. ஆண்டவர் அதைக் கட்டத்தொடங்கின மாதிரியை நாம் மறந்து நமது இஷ்டம்போல் வேலைசெய்யக்கூடாது. "அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக் கடவன்" என்று அப்போஸ்தலன் எச்சரிக்கிறார்.

## கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஆண்டவர் கட்டத் தொடங்கின மாதிரி என்ன ?

1. ஜீவனுள்ள கற்களைக்கொண்டு கட்டுகிறார். "ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்த நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல்

ஆவிக்கேற்ற பலிகளையாகக் கட்டப்பெற்று வருகிறீர்கள்." (1. பேது 2 : 4, 5). கிறிஸ்துவின் சரீரமாகிய சரீரத்தில் உயிரற்ற அவயவங்கள் இருக்கமுடியாது. இதன் உண்மையை திருச்சபை ஸ்தாபிக்கப்பெற்ற நாளிலே காண்கிறோம். "ரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்." (அப். 2 : 47). பாவத்தால் மரித்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவனைக் கண்டடைகிறார்கள். இவ்வாறு ஜீவன்பெற்ற விசுவாசிகளை ஆண்டவர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக் கட்டுகிறார். தலையின் ஜீவனே சரீரத்தின் ஜீவன். தலையும் சரீரமும் ஒரே ஜீவனால் பிழைக்கின்றன. பரிசுத்த ஆவி கிறிஸ்துவின் ஜீவனாயிருந்தார். அவர் ஆவியினால் பிறந்தார். ஆவியில் வளர்ந்தார். ஆவியினால் நிறைந்தார். ஆவி வசத்தால் வனாந்தரம் சென்றார். ஆவியின் பலத்தால் ஊழியத்தில் பிரவேசித்தார். ஆவியினால் உபதேசித்தார். ஆவியின் வல்லமையால் அற்புத கிரியைகளை நிறைவேற்றினார். நித்திய ஆவியினால் சிலுவைக்குச் சென்று மரித்தார். ஆவியினால் உயிர்த்தெழுந்தார். ஆவியினால் பரத்துக்குச்சென்று மகிமையடைந்தார். ஆகவே ஆவியானவரே கிறிஸ்துவின் ஜீவனாக விளங்கினார். தலையின் ஜீவனே சரீரத்துக்கும் ஜீவன். ஆண்டவர் தமது ஜீவனாகிய ஆவியின் மூலமாக விசுவாசிகளுக்கு உயிரளித்து அவர்களைத் தமது சரீரத்தின் அங்கங்களாக இணைத்துக்கொள்கிறார். இதுவே நாம் கட்டவேண்டிய மாதிரி.

ஆண்டவர் காண்பித்த இந்த மாதிரியை நாம் மறந்துவிடுகிறோம். சபையின் தொகையைப் பெருகச் செய்யவேண்டும் என்கிற ஆத்திரம் நமக்குப் பலத்த சோதனையாயிருக்கிறது. மார்க்கத்தில் சேருகிறோம், வேதத்தில் விழுகிறோம் என்று பேசுகிறவர்கள் கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல. மார்க்கத்தில் சேருகிறீர்களா என்று கேட்பவர்களும் ரட்சிப்பின் வல்லமையை அறிந்தவர்கள் அல்ல. எவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் ரட்சகராக அறிந்து அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்களோ அவர்களே ஜீவன் பெற்றவர்கள். கிறிஸ்து அவர்களுக்கு ஜீவன். ஜீவன்பெற்ற விசுவாசிகளை கிறிஸ்துவின்

சரீரமாகிய சரீரத்தில் அவயவங்களாகக்கூடும். காரியம் அறியாதவர்களை ஞானஸ்நானத்தின் மூலமாய் சபையில் சேர்ப்பது மிகுந்த தீமையைப் பிறப்பிக்கும். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதிருந்தும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லி வஞ்சித்துக்கொள்வார்கள். சபையிலுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் பெருந்த இடறலாயிருப்பார்கள். சபையைக் கவனிக்கும் மற்றவர்கள் நிந்திப்பதற்குக் காரணமாவார்கள். ஆண்டவர் நாமத்துக்கு அவமானமாயிருப்பார்கள். தற்காலத்துச் சபைகளில் உண்டாகும் சகல குழப்பங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணம் இப்படிப்பட்டவர்களே. ஆயிரம்பேர்க் கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் ஐம்பது உத்தம கிறிஸ்தவர்களே சபைக்குப் பலம். காரியங்கள் நடந்தால் போதுமென்றிராமல் சரீரமாகிய சபையின் அங்கங்களில் ஜீவனுண்டாவென்பதை நாம் கவனிக்கவேண்டும். "அவனவன் தான் அதன்மேல் இன்னவிதமாகக் கட்டுகிறான் என்று பார்க்கக் கடவன்".

2. ஆவியின் ஒற்றுமையில் கட்டினார். இந்த ஒற்றுமையை நமது சரீரத்தின் அவயவங்களுக்குள் நிச்சயமாகக் காண்கிறோம். அவயவங்கள் அநேகமாயிருந்தும், ஒன்றுக்கொன்று சாயலில் வித்தியாசமாயிருந்தும், அவைகளின் வேலை வெவ்வேறாயிருந்தும், அவைகளுக்குள் பூரண ஒற்றுமையைப் பார்க்கிறோம். ஒரு அவயவத்தின் சந்தோஷம் முழுச்சரீரத்துக்கும் சந்தோஷம். ஒரு அவயவத்தின் துக்கம் எல்லாவற்றிற்கும் துக்கம். கையின் ஓர் விரலில் மோதிரம் போட்டால் எல்லா அவயவங்களும் சந்தோஷப்படுகின்றன. அவைதங்களுக்கேகிடைத்த மேன்மைபோல் எண்ணுகின்றன. அந்த மோதிரத்தை என் காதில் ஏன் போடக்கூடாதென்று காது பொறாமைப் படுகிறதில்லை. அதுபோலவே ஏதாவது ஒரு அவயவத்துக்கு நோயோ அல்லது சேதமோ ஏற்பட்டால், மற்ற அவயவங்கள் படும்பாடு கொஞ்சமல்ல. கண்கள் அனுதாபக் கண்ணீர் வடிக்கின்றன. கைகள் உதவிசெய்யத் தீவிரிக்கின்றன. சரீரத்திலுள்ள அவயவங்களின் ஒற்றுமை ஆச்சரியம்.

ஆண்டவர் தமது சரீரமாகிய சபையில் அவயவங்களை அமைத்த மாதிரியும் இதுபோலவே. "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்". அவர்கள் தங்களுக்குள் எத்தனையோ வித்தியாசம் உள்ளவர்கள். கல்வியில், அறிவில், வரத்தில், வேலையில், சுபாவத்தில், சாமர்த்தியத்தில் கட்டாயம் வித்தியாசம் இருக்கவேயிருக்கும். அதை மாற்றமுடியாது. எல்லாரையும் ஒரே மாதிரியாக்கிவிடுவது தேவசித்தமல்ல. பேதுரு பேதுருதான். யோவான் யோவான்தான். தோமா தோமாதான். ஸ்தேவான் ஸ்தேவான்தான். அவயவங்களாகிய இவர்களுக்குள் பற்பல வித்தியாசங்களிருந்தபோதிலும், அவர்களெல்லாரும் "ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்".

இந்த ஒற்றுமைக்குக் காரணமென்ன? ஆயிரக்கணக்கான அவர்களெல்லாரும் ஒரே ஜீவனாலே பிழைத்ததே காரணம். நமது சரீரத்தின் அவயவங்களுக்குள் நாம் காண்கிற ஒற்றுமைக்குக் காரணம் ஒரே ஜீவனாலே அவை பிழைப்பதேயாகும். காலுக்கு ஒரு ஜீவனும் கைக்கு வேறு ஜீவனுமல்ல. அவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துவே ஜீவன். தலையாகிய கிறிஸ்துவோடு ஒரே ஜீவனாலே இணைக்கப் பெற்றிருந்தார்கள். அது அன்புநிறைந்த ஜீவன். அன்பாகிய ஜீவனாலே அவர்கள் பிழைத்ததால் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் சிந்தை கிறிஸ்து. அவர்கள் பேச்சு கிறிஸ்து. அவர்கள் ஜெபம் கிறிஸ்து. அவர்கள் வேலை கிறிஸ்து. அவர்கள் பாடு கிறிஸ்து. அவர்கள் நோக்கம் கிறிஸ்து. அவர்கள் பிழைப்பு கிறிஸ்து. இவ்வாறு அன்புமயமாகிய கிறிஸ்துவுடன் அவர்கள் ஒவ்வொருவரும் இணைக்கப் பெற்றிருந்ததால், தங்களுக்குள் அன்பின் ஒற்றுமையில் பிழைப்பது இயல்பாயிருந்தது. இது வேறுவிதமாய் இருக்கமுடியாது. கிறிஸ்துவோடு ஒற்றுமைப் படாதவர்களை, அவர் அன்பில் பிழைக்காதவர்களை ஒற்றுமைப்படுத்தப் பார்ப்பது மேற்பூச்சும் வீண் பிரயாசமுமாகும். ஒரு தனிச்சபைக்குள் ஒற்றுமை காணப்படவேண்டுமானால் இதுவே பிரமாணம். பல சபைகள் சேர்ந்து ஐக்கியப்படவேண்டுமானாலும் இதுவே பிரமாணம். ஒவ்வொரு அவ-

வரும் தனித்தனியாக கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவர் அன்பில் பிழைக்கும்போது தங்களுக்குள் கட்டாயம் அன்பாயிருப்பார்கள். ஒருவருடைய உற்ற சிநேகிதர்கள் தங்களுக்குள் சிநேகிதர்கள். இதுவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

நமது சபைகளின் காரியங்கள் எப்படியிருக்கின்றன? நாம் ஆதிச் சபையைப் பார்க்கிலும் அநேக விஷயங்களில் வளர்ந்துவிட்டோம் என்கிறோமே, எதிலே வளர்ந்தோம்? ஒரு சகோதரன் சகோதரி மேன்மையடைந்தால் நமக்குப் பொறாமை உண்டாகிறது. அவர்களைக் குறைவுபடுத்த ஆரம்பிக்கிறோம். அல்லது ஒரு சகோதரன், சகோதரி தவறிவிட்டால் நமது சந்தோஷத்திற்கு அளவில்லை. அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல் அதோகதியாக்கிவிட நினைக்கிறோம். முன் கவனித்தபடி நமது சரீரத்தில் ஒரு அவயவத்தின் மேன்மை எல்லா அவயவங்களுக்கும் மேன்மை, ஒரு அவயவத்தின் வேதனை எல்லா அவயவங்களுக்கும் வேதனை. நமக்குள் ஏன் அப்படியிருக்கிறதில்லை? "அழுகிறவர்களோடே அழுவதும், சந்தோஷப்படுகிறவர்களோடே சந்தோஷப்படுவதுமே" மெய்யான அனுதாபம். மற்றவர்கள் அழுவது நமக்குச் சந்தோஷமும், அவர்கள் சந்தோஷம் நமக்கு அழுகையுமாயிருந்தால் நாம் ஆண்டவர் சரீரத்தின் அவயவங்கள் அல்ல. அவர் ஜீவனும் அன்பும் அனுதாபமும் நமக்குள் இல்லை. நமது பேர் சபை டாப்பில் இருக்கலாம்; ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறதோ? ஞானஸ்நானம் இராப்போஜனம்பெற்று நாம் ஓர் ஆலயத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம்; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நாம் ஜீவனுள்ள அவயவங்களாகப் பிழைக்கிறோமா?

பிரிவினைகளும் சண்டைகளும் கிறிஸ்துவின் சரீரத்துக்குரியவைகள் அல்ல. பேர்க்கிறிஸ்தவர்களின் தொகை பெருகப்பெருக சபைகள் பாழாய்ப்போகும். சபைக்கு அவர் பிரதானமாகக் கொடுத்த அடையாளத்தை நாம் புறக்கணிக்கிறோம். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்றார். இந்தப்பிரதான கட்டளையை நாம் கவனிக்காமல் நமது ஆராதனைகளையும் ஆரா

ரங்களையும், ஒழுங்காய் நடத்திக்கொண்டு போகிறோம். ஆண்டவருக்கு இது எவ்வளவு விசனம்! "மதிகேடரே குருடரே எது முக்கியம்?" என்று கேட்கிறார். இந்த அன்பின் ஒற்றுமைக்காக ஜெபித்தார். "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." ஜெபித்தது மாத்திரமல்ல, அவ்வாறு நிறைவேறும் என்பதாக சீஷர்களுக்குச் சொன்னார். "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலு மிருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்றார். அவர்கள் ஆவியினால் நிறைந்தபோது இந்த ஒற்றுமையை அநுபவத்தில் அறிந்தார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்றார்கள். "திரளான விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்." ஆண்டவர் வாக்குப்பண்ணினதும் அடியார் பெற்றுக்கொண்டதுமான ஐக்கியம் ஜீவனுள்ளது. இந்த ஒற்றுமையை உண்டாக்க அநேக சங்கங்கள் கூடி தர்க்கிக்க வேண்டியதில்லை. நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுங்கள், நாங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கிறோம் என்று புலம்ப வேண்டியதில்லை. தற்காலத்து சபை ஐக்கியம், புறம்பான கொள்கைகள் ஆசாரங்களைப் பற்றியதாயிருக்கிறது. ஒருவேளை இந்த ஐக்கியம் வாய்த்தாலும் அது ஆண்டவர் கூறினதும், அடியார் அநுபவித்ததுமான உயிருள்ள ஐக்கியம் ஆகாது. ஆண்டவர் தமது அன்பின் ஒற்றுமையில் இணைத்த அவரது சரீரமாகிய சபையை "அவனவன் தான் என்ன விதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்."

3. ஆவியின் நிறைவில் கட்டினார். "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" (அப். 2, 4). கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை உண்டானது ஆவியினாலேயே. சீஷர்கள் தம்மோடிருந்தபோது சபையைக் கட்டுவதாகச் சொன்னார். என்றாலும் சபை அப்போது கட்டப்படவில்லை. ஆண்டவரது ஜீவிய மாதிரியாலும், போதனையாலு மாத்திரமே சபை ஸ்தாபிக்கப்படவில்லை.

இதை ஆண்டவர் அறிந்து ஆவியானவரால் அவர்கள் நிரப்பப்படும் நாளுக்காக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சீஷரின் அறியாமை பலவீனங்களைக் குறித்து அவர் சோர்ந்து போகவில்லை. ஆவியானவர் வரும்போது எல்லாம் சரியாயிருக்கும் என்பதை அவர் அறிவார். அதற்குமுன் அவர் மரித்து, எழுந்து மகிமைக்குள் பிரவேசிக்கவேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளின் விசேஷமென்ன? சீஷர் ஆவியால் நிறைந்தார்கள். ஆவியால் நிறைந்ததின் பயன் என்ன? ஆண்டவர் எதிர்பார்த்திருந்த காரியம் கைகூடினது. கைகூடின காரியம் என்ன? கிறிஸ்து அவர்களுக்குள் வந்தார். ஆவியால் அவர்கள் நிறைந்தபோது கிறிஸ்துவை தங்களுக்குள் கண்டார்கள். ஆண்டவர் தம்மோடிருந்த நாட்களில் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. அவரது தெய்வீக அறிவு உள்ளத்துக்கு வெளிப்பட்டு அறியவேண்டியதாகும். "நான் என்பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்" என்றார். அந்தப்படியே அவர் தமது ஆவியால் அவர்களுக்குள் வந்து, தம்மை அவர்கள் உள்ளத்துக்கு வெளிப்படுத்தினபோது, அவருக்கும் பிதாவுக்குமுள்ள சம்பந்தத்தைக் கண்டார்கள். அவர் அவர்களோடிருந்தபோது அவர் போதனைகளை அறிந்துகொள்ளவில்லை. இப்போது அவரே அவர்களுக்குள்ளிருந்து போதிக்க யாவையும் அறிந்துகொண்டார்கள். மூன்று வருஷமாக அறிய முடியாத காரியங்களை அரைமணிநேரத்தில் அறிந்துகொண்டார்கள். முன்னே ஆண்டவர் மாதிரியைப் பின்பற்ற அவர்கள் பிரயாசப்பட்டும் முடியவில்லை இப்போது அவரே அவர்களுக்குள் வந்து ஜீவித்து தம்மைப்போல் நடக்கும்படி அவர்களைப் பலப்படுத்தினார். முன்னே ஆண்டவர் ஏவின வேலைகளைச் செய்தார்கள். இப்போது அவரே அவர்களுக்குள்ளிருந்து கிரியை நடப்பித்தார். அப்படியானால் பெந்தெகொஸ்தே நாளின் விசேஷமென்ன? முன்னே சீஷர்களுக்கு வெளியேயிருந்து ஜீவித்து, உபதேசம்பண்ணி, கிரியைகளை நடப்பித்த ஆண்டவர், இப்போது சீஷருக்குள்ளே வந்து தாம் முன்செய்த வேலையை அவர்கள் மூல

மாய்ச் செய்தார். தமது ரட்சிப்பை அவர்களுக்குள் பலிதப்படுத்தினார். திருச்சபை உண்டான ரகசியம் இதுதான். இவ்வாறு தமது ஆவியினால் அவர்களுக்குள் ஜீவனாக வெளிப்பட்டு, அவர்களைத் தம்மோடும், அவர்களை ஒருவரிலொருவரோடும் இணைத்து தமது சரீரமாகிய சபையை ஸ்தாபித்தார். ஆவியினால் நிறைந்தவர்கள் ஆவியைப்பற்றிப் பேசாமல் கிறிஸ்துவைப் பற்றியே பேசினார்கள். ஏனென்றால் ஆவியானவர் தம்மை வெளிப்படுத்தாமல் கிறிஸ்துவை வெளிப்படுத்தி அவரை மகிமைப்படுத்தும்படி வந்தவர். "அவனவன் தான் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்."

4. தம்மை வெளிப்படுத்தும் சரீரமாகக் கட்டினார். கிறிஸ்துவின் சுயசரீரம் மற்ற மனுஷருக்கு அவரை வெளிப்படுத்தும் சாதனமாயிருந்தது போல, திருச்சபையாகிய சரீரம் அவரை உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டும். "நீங்கள் எனக்குச் சாட்சிகள்" என்றார். தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சொல்லுகிறவர்கள் சாட்சிகள். சீஷர் ஆண்டவரிடத்தில் கண்டதையும் கேட்டதையும் உலகத்துக்கு அறிவிக்கவேண்டியவர்களே. ஆகிலும் சாட்சிகள் என்பதற்கு இதிலும் மேலான கருத்துண்டு. அதாவது அவர்கள் தங்கள் வாயால் அவரைப்பற்றிப் பிரசங்கிப்பதுந் தவிர, தங்கள் ஜீவியத்தால் அவரை எப்படிப்பட்டவரென்று வெளிப்படுத்தும் மாதிரிகளாயிருக்கவேண்டும். சாட்சிகள் என்பதற்கு மாதிரிகள் என்று அருத்தம். கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவது லேசு, அவரைக் காண்பிப்பதோ கஷ்டம். ஆண்டவருக்கு இரண்டும் தேவை. தலை எப்படிப்பட்டதென்பது சரீரத்தில் விளங்கும். மதிகெட்ட தலையோ அல்லது ஞானமுள்ள தலையோ என்பது சரீரத்தின் கிரியைகளினால் வெளிப்படும். நான் என் பிதாவினிடம் போகிறேன், உலகம் இனி என்னைக் காணாது, நீங்கள் என்னை உங்களுக்குள் இருக்கக் காண்பீர்கள். ஆகையால் நான் எப்படிப்பட்டவரென்பதை நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். இதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்றார்.

ஆவியின் ஜீவனும் சரீரத்தின் ஜீவனும் ஒன்றென்று ஏற்கனவே கவனித்தோம். கிறிஸ்துவின் ஜீவனால் பிழைத்த, அவருடைய அன்பால் ஒருவரோடொருவர் இணைக்கப்பெற்ற, அவர் ஆவியால் கிறிஸ்துவை தங்களுக்குள் கண்ட அவரது சரீரமாகிய சபை ஆண்டவரை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் சபையாயிருக்கும். நம்மில் காணப்படும் பாவங்களும், கிறிஸ்துவின் சிந்தைக்கு விரோதமான காரியங்களும் ஆண்டவரை உலகத்துக்கு மறைக்கின்றன. அவரைத் தப்பாய்க் காண்பிக்கிறோம். ஆண்டவர் சபையை ஸ்தாபித்த நோக்கம் தவறுகிறது. அவர் நமக்குள் வசிப்பது உண்மையானால் அவரது பரிசுத்தம், தாழ்மை, சாந்தம், பொறுமை, அன்பு, அனுதாபம், மன்னிக்கும் சிந்தை, நன்மைசெய்யும் குணம், தேவசித்தப்படி பிழைத்தல், ஆத்மவாஞ்சை முதலான லட்சணங்கள் நம்மில் காணப்படவேண்டும். மாதிரித் தூதர்களாகிய நம்மைப் பார்த்து கிறிஸ்துவை இன்னாரென்று மனுஷர் அறிந்துகொள்வார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை "அவனவன் இன்னவிதமாகக் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்."

மார்க்கவிஷயத்தில் நாம் மிகவும் நெருக்கடியான காலத்திலிருக்கிறோம். நமக்கு இது பரீட்சைகாலமாகும். இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்தால் இந்துக்களை கிறிஸ்துமார்க்கத்தில் சேர்க்கும் வேலையை மிஷனெரிமார் நடத்திப்போக இடங்கொடுப்பீர்களா என்று ஓர் பத்திரிகாசிரியர் மகாத்மா காந்தியைக் கேட்க அவர், கல்விச்சாலை வைத்தியசாலை மூலமாய் மதமாற்றஞ் செய்வது தமக்குப் பிரியமில்லையென்றும், எல்லா மார்க்கங்களிலும் சத்தியமுண்டென்றும், அவரவர் மதம் அவரவருக்குப் போதுமென்றும், ஆனால் உண்மையான குணப்படுதலுக்குத் தாம் விரோதியல்லவென்றும் சொன்னார். அவரை மதிப்பவர்கள் அவர் சொன்னதை வேதவாக்காகக் கொண்டு அப்படியானால் கிறிஸ்துமார்க்கத்தில் சேரவேண்டிய அவசியமில்லை யென்பதாகவும் பேசினார்கள். அவர் சொன்ன வார்த்தையினிமித்தம் பலரும் பலவிதமாய்ப் பேசவும் எழுதவும் ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட மகாத்மா மறுபடியும்

தாம் சொன்னதை விளக்கிக்காட்டி: உண்மையான குணப்படுதலை நான் தடுக்கிறவனல்ல, ஆனால் தகாத முறைகளால் மதமாற்றஞ் செய்வதை நான் இன்னும் ஆட்சேபிக்கிறேன் என்றார். அவர் இவ்வாறு கூறினதால் கிறிஸ்துமார்க்கத்துக்கு ஆபத்து வந்ததென நாம் கலங்க அவசியமேயில்லை. கடவுளருளிய ஜீவனுள்ள மார்க்கத்தை அழிக்க ஒருவராலும் முடியாது. ஆனால் கிறிஸ்து மார்க்கத்தின் பேரில் இவ்வாறு இந்துக்கள் யாவரும் கவனஞ்செலுத்த நேரிட்டதும் தேவச் செயலே. மிஷனெரிமாரும், சுதேச போதகர்களும், பிரசங்கிகள் யாவரும் தங்கள் ஜீவியத்தைக் குறித்தும், தாங்கள் செய்துவரும் வேலையின் தன்மையைக் குறித்தும் ஜாக்கிரதையாயிருப்பதற்கு இது அவசியம். இந்துக்கள் மத்தியில் சஞ்சரிக்கும் கிறிஸ்தவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் எந்த விஷயத்தில் தாங்கள் விசேஷித்தவர்கள் என்பதைக் காட்டுவதற்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மகாத்மாவின் வார்த்தைகளும் அவற்றாலுண்டான தர்க்கங்களும் நமக்குத் தீமையாயிராமல் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமது நடுவில் பற்றியெரியும் அக்கினியாயிருக்கின்றன.

மேலும் மகாத்மா எவ்வளவு பெரியவராயிருந்தபோதிலும், தாழ்மை, சாந்தம், பொறுமை, சுயவெறுப்பு, முதலான நற்குணங்கள் வாய்ந்தவராயிருந்தாலும், பவுலும் மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை இன்னாரென்று அறிந்திருந்தது போல அவர் அறிந்தவரல்ல. பவுலுக்கும் அவரைப்போன்ற விசுவாசிகள் யாவருக்கும் கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள். மகாத்மா காந்திக்கோ கிறிஸ்து ஓர் சிறந்த போதகராக மாத்திரம் தோன்றுகிறார். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தர் என்று ஒருவரும் அறியமுடியாது." அப்படியிருக்க அந்தந்த மதம் அவரவருக்குப் போதுமென்று அவர் சொன்னதைக் குறித்து நாம் ஏன் ஆத்திரப்படவேண்டும்? அவர் சொன்னதைக் குறித்து ஆயாசப்படாமல் கிறிஸ்து இன்னாரென்பதை உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டியது சரீரமாகிய சபையின் கடமை. ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரமாயிருந்த அநேகர் விழித்தெழும்பும்படி ஆண்டு

விட்ட மகாத்மாவுக்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். அவர் கிறிஸ்தவர்கள் காரியங்களை கவனிக்காதவரல்ல. பேர்க்கிறிஸ்தவர்களுடைய தகாத நடக்கைகளையும், உலக சிந்தையையும், அதிகாரப் பெருமையையும், சுயநலத்தையும் அவர் அறிந்தேயிருக்கிறார். "கிறிஸ்துவை மதிக்கிறோம், அவரைப் பின்பற்ற விரும்புகிறோம், ஆனால் உங்கள் சபையில் சேரமாட்டோம்" என்று இந்த நண்பர்கள் நம்மிடம் சொல்வதற்குக் காரணமென்ன? இதைப்பற்றி நாம் யோசிக்கவேணும். வீண் வைராக்கியம் கொள்வதில் பிரயோஜனமில்லை. நமது பாவங்களை உணர்ந்து கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவது நல்லது. ஆலயங்களாலும் புறம்பான ஆசாரங்களாலும் காரியம் பலிக்காது. நாமே கடவுள் வசிக்கும் ஜீவனுள்ள ஆலயமாகவேண்டும். நாமே பிறர் படிக்கும் நிருபங்களாகவேண்டும். நாமே சுகந்தமாக மணக்கவேண்டும். நம்மில் கனிகள் உண்டானால் பட்சிகள் தாங்களாகவே வரும். நமக்குள் ஜீவதண்ணீருண்டானால் தாகமுள்ளோர் தண்ணீரண்டை வருவார்கள். கிறிஸ்துவின் சிந்தையற்றுப் பேருக்குக் கிறிஸ்தவர்களாயிருந்துகொண்டு, மற்றவர்களைக் குணப்படுத்தப் பார்ப்பது பிரயோஜனமற்ற வேலையாகும். ரோஜாவின் மணத்துக்கும், கரும்பின் மதுரத்துக்கும் விளம்பரம் தேவையில்லை.

ஆகையால் ஆண்டவர் சபையைக் கட்டின மாதிரியையும் நோக்கத்தையும் மனதில் வைத்து நமது ஊழியத்தை நடத்துவோமாக. ஆலயங்களை எப்படிக் கட்டவேண்டும், ஞானஸ்நானம் இராப்போஜனம் எப்படிக்கொடுக்கவேண்டும், ஆராதனைகளை எப்படி நடத்தவேண்டும், பண்டிகைகளை எப்படிக்கொண்டாடவேண்டும் என்பதைக் குறித்து அவர் நமக்கு விவரம் கூறவில்லை. ஆவியினால் போதிக்கப்பெற்ற கடவுளடியார் திருச்சபையின் பக்தி விருத்திக்கேதுவாக இவைகளைச் செவ்வையாய் நடத்திக்கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவருடைய முழுக்கவனமும் பேதுரு, யோவான் முதலான ஆட்களின் பேரிலேயே இருந்தது. அவர்கள் ஜீவியம் மாற்றப்படவேண்டுமென்பதே அவருடைய தீராத வாஞ்சை. இன்னும் அதுவே அவர் வாஞ்சை. நமது சரீரமாகிய சபையை

ஆண்டவர் கட்டத் தொடங்கினபோது அவர்களுக்கு ஆலயமில்லை. நாம் அநுசரித்துவரும் அநுகூலமான காரியங்களும் சௌக்கியங்களும் அவர்களுக்கில்லை. ஆனால் அவர்களே "ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருந்தார்கள்". கடவுள் மெய்யாகவே அவர்களுக்குள் வசித்தார். நமது கவனமோ புறம்பான ஆசரிப்புகளில் பிரதானமாகச் செல்லுகிறது. இவைகள் ஒழுங்காய் நடந்தால் நமக்குத் திருப்தியும் உண்டாகிறது. எத்தனமோ, காரியமோ எது பிரதானம்? காரியமே பிரதானம். கிறிஸ்து தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால் அவருடைய சிந்தையும் அவருடைய சாயலும் நமக்குக் கிடைக்கவேண்டும். அவர் மூலமாய் பிதாவோடு நாம் ஐக்கியமாகிப் பிழைப்பதால் நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாகயிருக்கவேண்டும். மற்றவர்களுக்கு நாம் ஜீவதண்ணீருள்ள நதிகளாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் இதுவே. இந்த நோக்கம் நம்மில் நிறைவேறும்படி கிருபையின் ஈவுகள் அருளப்பட்டிருக்கின்றன. காரியம் பலிக்காவிட்டால் நமது மார்க்க ஆசாரங்கள் யாவும் வீணும் வியர்த்தமுமாகும். பேர்க்கிறிஸ்தவர்களின் பெருக்கம் திருச்சபைக்குப் பெருத்த இடறல். கிருபையுள்ள ஆண்டவர் தமது ஆவியால் நம்மை உயிர்ப்பித்து ரட்சிப்பாராக. தமது சரீரமாகிய சபையில் நாம் ஜீவனுள்ள அவயவங்களாயிருக்கும்படி அருள்செய்வாராக.

# V

# To me to live is Christ

## என் பிழைப்பே கிறிஸ்து.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" பிலி. 1 : 21.

கிறிஸ்துமார்க்கம் என்றால் என்னவென்று புறம்பேயுள்ள ஒருவரைக் கேட்டால் அவர்: ஒரு கூட்டம், ஒரு ஆலயம், ஆராதனை, போதகர், பிரசங்கம், ஞானஸ்நானம் என்பவைகளை நினைப்பார். ஏனென்றால் அவர் புறம்பேயிருந்து கண்டவைகள் அவைகளே. நம்மில் அநேகருடைய கிறிஸ்து மார்க்கமும் அதுதான். தாங்கள் அநுசரித்துவரும் ஆசாரங்களே கிறிஸ்துமார்க்கம் என்பது பொதுவான எண்ணம். இவைகளை ஒழுங்காய் ஆசரித்தால் ஓர் திருப்தி; தவறினால் விசனம். ஆராதனைக்குப்போகத் தவறிவிட்டால், வேதம் வாசிக்கத் தவறிவிட்டால் கடவுள் தங்கள்மேல் கோபமாயிருப்பதுபோல் நினைத்து இவர்கள் துக்கிப்பார்கள். இவைகளின் நோக்கம் என்னவென்பதையும், எது பிரதானமென்பதையும் இவர்கள் யோசிக்கிறதில்லை. நாம் ஆசரித்துவரும் காரியங்கள் யாவும் ஆண்டவர் நமக்கருளிய கிருபையின் எத்தனங்களாகும்; நாம் அடையவேண்டிய ஓர் பிரதானமான காரியத்துக்கு இவைகள் சாதனங்களாகும். மனுஷர் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு நோக்கமுண்டு. நோக்கம் கைகூடாவிட்டால் பட்டபாடுகள் யாவும் வீணாகும். ஏராளமான திரவியம் செலவுசெய்து ஒருவன் கப்பலை உண்டுபண்ணுகிறான். அந்தக் கப்பல் பிரயாணத்துக்கு உதவாது என்று தள்ளப்படுமானால் அவன் கஷ்டத்துக்கும் துக்கத்துக்கும் அளவிராது. கிறிஸ்தவர்களில் அநேகர் நோக்கமற்றுக் காரியங்களை வழக்கம்போல் நடத்திக்கொண்டு போகிறார்கள். நமது மார்க்கத்தின் நோக்கம் கிறிஸ்து. நமது வேத அறிவு, ஆராதனைகள், கொள்கைகள் இவை யாவற்றி

னுடைய முடிவான நோக்கம் கிறிஸ்து. அவரே மெய்ப்பொருளானவர். கிறிஸ்துவை நமது ஜீவனாக அனுபவிக்கும்போதுதான் கிறிஸ்து மார்க்கத்தின் வல்லமையை அறிவோம். ஏனென்றால் கிறிஸ்துவே கிறிஸ்துமார்க்கம். ஆராதனைகள், கொள்கைகள், ஆசாரங்களை இட்டமாய் அனுசரித்துவந்த அப்போஸ்தலன் தமது கிறிஸ்துமார்க்கம் இன்னதென்று சுருக்கிச் சொல்லுகிறார். "கிறிஸ்து எனக்கு ஜீவன்." அதாவது "நான் பிழைப்பதே கிறிஸ்து" என்கிறார். கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே நாம் பிழைக்காவிட்டால் நாம் அனுசரித்துவரும் சகல காரியங்களும் வீணாகும்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அப்போஸ்தலன் எந்தச் சமயத்தில் சொன்னார்? அவர் ரோமாபுரிச் சிறையிலிருந்தபோது பிலிப்பியருக்குத் தாம் எழுதின நிருபத்தில் இந்த வார்த்தைகளைச் சொன்னார். அச்சமயத்தில் இரண்டு காரியங்கள் அவர் கண்முன் நின்றன. ஒன்று நேரோ ராயன் கட்டளை பிறந்தவுடன், தான் பட்டணத்துக்கு வெளியே கொண்டு போகப்பட்டு, சிரச்சேதமடைந்து சாகவேண்டும். ஒருவேளை ராயன் விடுதலை செய்தால் உடனே பிலிப்பிப் பட்டணம்போய் அங்குள்ள தேவமக்களைக்கண்டு அவர்களுக்கு ஆசீர்வாதமான ஊழியம் செய்யவேண்டும். இவ்விரண்டினாலும் நெருக்கப்பட்டார். சரீரத்தை விட்டுப்பிரிந்து கிறிஸ்துவிடம் போகவும் அவருக்கு ஆசை. அது அவருக்கு அதிக நன்மை. ஆனால் சரீரத்தில் பிழைத்திருப்பதோ பிலிப்பியருக்கு அதிக நன்மை. இவற்றில் எதைத் தெரிந்துகொள்வதென்று அவருக்குத் தெரியவில்லை. இரண்டும் அவருக்குச் சரிதான். கிறிஸ்து அவருக்கு ஜீவனாகையால் சாவு அவருக்கு லாபம். சரீரத்தில் அவர் தங்கினாலும் அவருக்கு ஜீவன் கிறிஸ்துவே. சரீரத்தைவிட்டுப் போனாலும் அவருக்கு ஜீவன் கிறிஸ்துவே. ஆகையால் சரீரத்தில் இருந்தாலும் சரீரத்தை விட்டுப்போனாலும் இரண்டும் அவருக்கு ஒன்றுதான். இவ்வளவு நிச்சயமான அனுபவம் நமக்கிருந்தால் எவ்வளவு பாக்கியம்! "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்னும் இந்த வசனம் எல்லாருக்கும் தெரியும். தெரிந்து பிரயோஜனமென்ன? கிறிஸ்துவை ஜீவனாக்

கண்டவர்கள் எத்தனைபேர்? எங்கள் பிழைப்பே கிறிஸ்து என்று சொல்லக்கூடியவர்கள் எத்தனைபேர்? ஒருவன் கிறிஸ்துவைத் தனக்கு ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே பிழைக்கிறதாயிருந்தால் அவன் ஜீவியம் முற்றிலும் மாறி அநேகருக்கு அவன் ஆசீர்வாதமாயிருப்பான் என்பது நிச்சயம். கிறிஸ்துவே கிறிஸ்துமார்க்கம்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொன்ன அப்போஸ்தலனுடைய கருத்து என்னவென்பதை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

1. **ஜீவனின் உற்பத்தி கிறிஸ்து.** அப்போஸ்தலன் எந்த நாளில் கிறிஸ்துவைக் கண்டடைந்தாரோ அதையே தமது பிறந்த நாளாகக் கொண்டாடினார். அந்த நாளை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. அதற்கு முன்னுள்ள காலத்தை உயிருள்ள காலமாக அவர் எண்ணவில்லை. அதை மரித்தகாலமாகவே மதித்தார். கிறிஸ்துவைத் தரிசித்த நாளிலேதான் அவர் பிழைத்தார். ஆகையால் தமது ஜீவகாலத்தை இரண்டாகப் பிரிக்கிறார். முந்தினதை மரித்த காலமென்றும் பிந்தினதைப் பிழைத்த காலமென்றும் பேசுகிறார். மரித்த நிலைமையைப் பழைய மனுஷனென்றும் பிழைத்த நிலைமையைப் புது மனுஷனென்றும் அழைக்கிறார். அவர் புதிய ஜீவனை கிறிஸ்துமூலமாய்க் கண்டடைந்தது தமக்கே ஆச்சரியமாயிருந்தபடியால் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்று கூறுகிறார். பின்னானவைகளை மறந்து, புதிதாய்த் தாம் பெற்றுக்கொண்ட ஜீவனாலே, ஆவிக்குரிய புதிய காரியங்களிலே பிழைத்தார். கிறிஸ்துவை அவர் ஜீவனாகக் கண்டபோது அவர் பிழைப்பு முழுவதும் கிறிஸ்துமயமாயிருந்தது.

அப்போஸ்தலனுடைய முந்தின ஜீவியத்தில் விசேஷம் ஒன்றுமில்லையா? பவுலே! நீர் கிறிஸ்துவைச் சந்திப்பதற்குமுன் எவ்வளவோ விசேஷித்த மனுஷனாயிருந்தீர். எல்லாரும் அதை அறிவார்கள். கீர்த்திபெற்ற கமாலியேலின் பாதத்திலிருந்து கல்வி கற்றீர். யூதமார்க்கத்தின் சகல சிலாக்கியங்களையும் அனுபவித்தீர். நீர் தன் மார்க்கமாக நடந்தவரல்ல. நீர் பரிசேயரில் பரிசேயன். எபிரேய

தில் பிறந்த எபிரேயன். நியாயப் பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவர். கடவுளுக்காக மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவர். அறிவிலும் ஞானத்திலும் சிறந்தவர். அப்படியிருக்க அக்காலத்தைச் செத்தகாலமென்று நீர் சொல்வதெப்படி? மெய்தான். ஆனால் அக்காலத்தில் காரியம் அறியாத குருடனைப் போலிருந்தேன். மார்க்கம் என்னும் பேராலே நான் என்பவனையே பூஜித்துவந்தேன். தமஸ்குவுக்குப் போகிறவழியில் நான் கண்டகாட்சியும் கேட்ட வார்த்தைகளும் செத்தவனைப்போல் என்னைக் கீழே விழச்செய்தன. நான் என்பவன் நொறுங்கினான். என் ஜீவனாகிய கிறிஸ்து சிங்காசனம் ஏறினார். அதுமுதல் அவரே எனக்கு ஜீவனானார். முன்னே எனக்கு மேன்மையாய்த் தோன்றினவைகள் எவைகளோ, லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவையெல்லாம் இப்பொழுது எனக்குக் குப்பையாகத் தோன்றுகின்றன. கிறிஸ்து என்னைப் பிடித்ததுமுதல் அவரே எனக்கு ஜீவனானார். அவர் சித்தமே எனக்குச் சித்தமாயிற்று. என் ஜீவனின் உற்பத்தி அவரே. நான் பிழைப்பதும் அவரே. ஆகையால் நான் கிறிஸ்துவைக் கண்டநாளே நான் பிறந்த நாள் என்கிறார்.

அநேகர் தாங்கள் பிறந்தநாளை வருஷாவருஷம் கொண்டாடுகிறார்கள். அந்நாளில் இனத்தார் சிநேகிதர் நம்மை வாழ்த்துவதும் வெகுமதிகளை அனுப்புவதும் வழக்கம். ஆண்டவர் நம்மை வருஷாவருஷம் காப்பாற்றிவந்த தயவை நினைத்து அவரை ஸ்தோத்திரிப்பது நல்லது. ஆனால் நமது ஜீவனாகிய கிறிஸ்துவை நாம் கண்டடைந்த நாளே கடவுள் பார்வையில் உண்மையாய் நாம் பிறந்தநாள். அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்த நாம் ஜீவனாகிய கிறிஸ்துமூலமாய் எந்த நாளில் உயிர்ப்பிக்கப்படுகிறோமோ அதுவே நாம் பிறந்த நாள். இதற்கு மறுபிறப்பு என்று பேர். இது ஆவியின் பிறப்பு. இந்தப் பிறப்பினாலே நாம் “மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பிரவேசிக்கிறோம்.” சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு நீங்கி தேவராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். பழைய காரியங்கள் ஒழிந்தன, சகலமும் புதிதாயின. இன்று

நமக்குச் சோதனைகளும், போராட்டங்களும், கலக்கமும் இருந்த போதிலும் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது ஒரு பெரிய மாறுதல் நம்மில் சம்பவிக்கிறதென்பது நிச்சயம். "நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாகும்படி வந்தேன்" என்று ஆண்டவர் சொன்னார். "குமாரனையுடையவன் ஜீவனுடையவன்." ஆகையால் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லும்போது நமது ஜீவனின் உற்பத்தி கிறிஸ்து என்று அர்த்தம்.

2. ஜீவனின் வளர்ச்சி கிறிஸ்து. நாம் கிறிஸ்துமூலமாக ஜீவனைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, அந்தப் புதிய ஜீவன் வளர்ந்து பூரணப்படுவதும் அவராலேயே. அப்போஸ்தலன் கிறிஸ்துவைச் சொந்தமாக்கின சமயத்தில் ஜீவனைக் கண்டடைந்தார். அதுமுதல் இதுவரை முப்பது மூன்று வருஷங்களாகின்றன. இதற்கிடையில் எத்தனையோ மாறுதல்கள்! எத்தனையோ பாடுகள், எத்தனையோ பிரயாணங்கள், எத்தனையோ கஷ்டங்கள், கவலைகள்! கடைசியாக இப்போது சிறைபிடிக்கப்பட்டு மரணமோ விடுதலையோ எதுவென்று தெரியாத நிலைமையிலிருக்கிறார். அப்படியிருந்தும் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அவர் எழுதும் நிருபத் தொனியோ மங்கவில்லை. அவரில் பெற்றுக்கொண்ட ஜீவன் குறைவுமில்லை, மறைவுமில்லை, அழிவுமில்லை. அது நாளுக்கு நாள், வளர்ந்தோங்கும் அளவாய் அவருக்குள் வளர்ந்து பெருகி அவர் ஜீவியத்திலும் வழியத்திலும் சிறந்து விளங்கினது. ஏனென்றால் கிறிஸ்துவே அவருக்குள் ஜீவனாயிருந்தார். கிறிஸ்து மாறவில்லை. திருச்சபை சரித்திரத்தில் எந்த மனிதனாவது பவுலைப்போல் கிறிஸ்துவின் ஜீவனைத் தன் ஜீவியத்தில் வெளிப்படுத்தினதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான தேவ சித்தத்தை அவரைப்போல் தன் அனுபவத்தில் கண்டவருமில்லை. இதற்குக் காரணமென்ன? அவர் பிழைப்பே கிறிஸ்து. "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை! தன் சுய ஞானத்தால், சுய பலத்தால், சுய பிரயாசத்தால் ஒன்றையும் அவர் செய்யவில்லை. "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே

எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" என்று சொல்லுகிறார் (பிலி 4 : 13). கிறிஸ்துவாகிய ஜீவனாலே அவர் பிழைத்தது மாத்திரமல்ல, அந்த ஜீவனாலேயே வளர்ந்தார்; சகல கிரியைகளையும் நிறைவேற்றினார். நான் கிறிஸ்துவைப் பிடித்த பிடியல்ல, அவர் என்னைப் பிடித்த பிடி; என் நம்பிக்கையல்ல, அவர் என்மீது வைத்த நம்பிக்கை; என் உண்மையல்ல, அவர் உண்மை; என் அன்பல்ல அவர் அன்பின் பெருக்கம்; என் பலமல்ல அவர் வல்லமை; என் தீர்மானமல்ல அவர் மாறாத் தீர்மானம் இதுவரை என்னைப் பிழைக்கச் செய்திருக்கிறது. எல்லாரையும் விட அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன் ஆகிலும் நான் அல்ல, எனக்குள்ளிருந்த தேவகிருபையே அப்படிச் செய்தது என்கிறார். அந்தத் தேவகிருபை கிறிஸ்துவே.

நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணப்படும் சகல குறைவுகளுக்கும் காரணம் நாம் நம்மையும் நமது வேலைகளையும் பிரதானமாய் நோக்குவதால்தான். எந்த ஜீவனால் நாம் பிழைத்தோமோ அந்த ஜீவனாலேயே நாம் வளர்ந்து பெருகவேண்டும். கிறிஸ்துவை நாம் ஜீவனாகக் கண்டபோதில் நமது ஒன்றுமில்லாமையை முற்றிலும் உணர்ந்து நம்மைத் தாழ்த்தி அவரையே உறுதியாகப் பிடித்தோம். காலம் செல்லச் செல்ல, அறிவும் வேலைகளும் பெருகவே, கிறிஸ்து நமது ஜீவன் என்பதை மறந்தோம். அவரோடிருக்கவேண்டிய இடைவிடாத உயிருள்ள ஐக்கியத்தை விட்டுவிட்டோம். சகலமும் நமது யோசனைகளும் நமது முயற்சிகளுமாக மாறிவிட்டன. ஜீவனாகிய கிறிஸ்துவாலே நாம் பிழைக்கிறதுமில்லை, உழைக்கிறதுமில்லை. ஒரு ஜெபம் செய்துவிட்டால் சகலமும் முடிந்ததென்று நினைக்கிறோம். ஒரு கூட்டத்தை நடத்தும்போது ஆரம்பத்தில் வேதம் வாசித்து சுருக்கமாய் ஜெபித்துவிட்டுப் பகல் முழுவதும் பேசுவதும் தர்க்கிப்பதும் தீர்மானிப்பதும் நமது இஷ்டமாயிருப்பது எவ்வளவு வஞ்சகமான காரியம். கிறிஸ்துவே நமது ஜீவனின் உற்பத்தி. அவரே நமது ஜீவனின் வளர்ச்சி. அவரே நமது சகல காரியங்களிலும் விளங்கவேண்டிய ஜீவன். அவர் திராட்சச்செடி; நாம் கொடிகள் என்றால் அருத்தமென்ன? கிறிஸ்துவை அடிப்படையாகவும் நம்

வைகளையும் தன்னகத்தேகொண்டது என்று வழக்கம். ஒரு விதத்தில் அது சரியே. ஆண்டவர் சொன்ன அந்த உவமை மேலான கருத்துள்ளது. அவர் தம்மை அடிமரமாகப் பேசவில்லை. "நானே திராட்சச்செடி" என்றார். திராட்சச்செடியானது என்ன? வேர், அடிமரம், கொடிகள், இலைகள், கனிகள் எல்லாம் சேர்ந்தே திராட்சச் செடி. அடிமரமாத்திரம் திராட்சச்செடியல்ல, அல்லது கொடிகள் மாத்திரம் திராட்சச்செடியல்ல. எல்லாம் சேர்ந்தே திராட்சச்செடி. இந்தத் திராட்சச் செடியின் ஜீவன் ஒன்றே. செடியின் ஜீவனும் கொடிகளின் ஜீவனும் ஒரே ஜீவன். கொடிகள் உண்டாவதும், வளருவதும், பூரணப்படுவதும், கனிகொடுப்பதும் செடியின் இடைவிடாத ஜீவனாலேயே. "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அப்போஸ்தலன் சொன்னபோது இந்த கருத்துதான் அவர் மனதிலிருந்தது. அதாவது தமஸ்குவுக்குப் போகும் வழியில் கிறிஸ்துவால் நான் பிழைத்ததுமாத்திரமல்ல, இந்த முப்பத்துமூன்று வருஷகாலமும் அவராலேயே பிழைத்திருக்கிறேன். அவரே என் ஜீவனின் உற்பத்தியும் வளர்ச்சியுமானவர். "நான் அவைகளுக்கு ஜீவனுண்டாகவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன்".(யோ. 10:10).

3. ஜீவனின் பிரமாணம் கிறிஸ்து. நியாயப் பிரமாணத்தாலே நீதியைத் தேடினவர் பவுல். அவர் அறியாத பிரமாணம் இல்லை. நியாயப் பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவர். நியாயப் பிரமாணத்தில் அவருக்கு இவ்வளவு பற்றுதல் இருந்தபோதிலும் மெய்ச் சமாதானம் அவருக்கில்லை. ஜீவனுக்குப் பதிலாக மரணத்தையும் ஆசீர்வாதத்துக்குப் பதிலாகச் சாபத்தையும் கண்டார். அவர் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டபோது கிறிஸ்துவே அவருக்குப் பிரமாணமானார். கிறிஸ்துவின் ஜீவனுள்ள ஆவியின் பிரமாணம் அவரை பாவம் மரணம் என்னும் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்று. சுபாவத்திற்கு அந்நியமான சட்டங்களாலும் பிரமாணங்களாலும் பாரமடைந்த பவுல் கிறிஸ்துவைத் தமது ஜீவப் பிரமாணமாகக் கொண்டபோது, நியாயப் பிரமாணத்திலும் மேலான பிரமாணம்

தம்மை ஆளுவதைக் கண்டார். "கிறிஸ்துவே நியாயப் பிரமாணத்தின் முடிவு."

கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்ட கலாத்திய சபையினர் அதில் நிலைத்திராமல் யூதரால் வஞ்சிக்கப்பட்டு மறுபடியும் நியாயப் பிரமாண நுகத்தில் சிக்கிக்கொண்டதைக் கண்ட பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு: புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் படம்போல் வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. நியாயப் பிரமாணத்தினாலேயா ஆவியைப் பெற்றீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா அற்புதங்கள் நடந்தன? நியாயப் பிரமாணத்தினாலேயா நீதிமான்களானீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா தேவ மக்களானீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா ஆசீர்வாதங்களைப் பெற்றீர்கள்? நியாயப் பிரமாண ஆசரிப்புக்காரர் யாவரும் சாபத்துக்கும் மரணத்துக்கும் உரியவர்களாயிருக்கிறார்களே. ஏனெனில் நியாயப் பிரமாணம் முழுவதையும் தவறின்றிக் கைக்கொள்ளுகிறவன் ஒருவனுமில்லையே. அப்படியிருக்க கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்ற சபையினரான நீங்கள் மறுபடியும் நியாயப் பிரமாணத்துக்கு அடிமைகளானதென்னவென்று கேட்டார்.

கிறிஸ்துவின் பிரமாணம் அன்பு. அது புது உடன்படிக்கைக்குரியது. புது உடன்படிக்கைப் பிரமாணம் புஸ்தகங்களில் எழுதப்படாமல் இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொள்ளுகிறவன் அவரது அன்பின் பிரமாணத்தால் ஆளப்படுகிறான். அன்பின் பிரமாணத்துக்கு நிகரான பிரமாணமில்லை. சகல விதிகளும் பிரமாணங்களும் அன்புக்குள் அடக்கம். உலக சரித்திரத்தையும், மனுஷர் காரியங்கள் காலத்துக்குக் காலம் மாறுவதையும் கவனித்தால் எத்தனை பிரமாணங்களைத்தான் உண்டாக்குவது? மீறுதல்களும் பெருகும் பிரமாணங்களும் பெருகுங் காரியமே வாய்க்காது. அவசரச் சட்டங்களை உண்டாக்கினபோதிலும் அவசர மீறுதல்களும் கூடவே பெருகும். சட்டங்களும் பிரமா

ங்களும் நற்குணத்தை உண்டாக்குவதில்லை. ஒரு தகப்பன் தன் மகனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினபோது: நீ இப்படி அப்படி நடக்கக்கூடாதென்று சட்டங்களைக்கொடுத்து அனுப்பினான். மகன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஏதோ ஒரு தப்பிதம் செய்ததாகத் தெரியவந்தது. தகப்பன் மகனைப்பார்த்து நீ ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்க அவன்: நீங்கள் அப்படிச் செய்யவேண்டாம் என்று சொல்லவில்லையே என்றான். சரி, நீ இதையும் செய்யக் கூடாதென்று கற்பித்து அனுப்பினான். அன்று வேறொரு புதிய குற்றத்தைச் செய்ததாகத் தெரியவந்தது. தகப்பன் பார்த்தான், இது என்ன தொந்தரவாயிருக்கிறது, புதிதுபுதிதாக அவன் தப்பிதத்தைச் செய்ய, நானும் புதிதுபுதிதாகச் சட்டங்களை உண்டுபண்ணினால் இதற்கு முடிவு எங்கே என்று எண்ணி, மகனைத் தன்னிடம் அழைத்து: மகனே நீ நல்லபிள்ளையாயிரு என்று மாத்திரம் சொல்லி அனுப்பினான். அந்த ஒரு சொல் மகனைச் சகல குற்றங்களிலுமிருந்து காப்பாற்றினது. இதுதான் அன்பின் பிரமாணத்தின் ரகசியம். கிறிஸ்துவை பிதாவுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மாசற்ற பரிசுத்தராய் நடத்தினது இந்த அன்பின் பிரமாணமே. கிறிஸ்து நமக்குள் வரும்போது அன்புமயமாகிய அவரே நமது ஜீவிய முழுவதுக்கும் பிரமாணமாகிறார். அன்பின் பிரமாணத்துக்கு அளவு எல்லையில்லை. கிறிஸ்து நமக்கு ஜீவனாகும்போது, நாம் அவராலே பிழைக்கும்போது, புறம்பேயுள்ள சட்டங்கள் அல்ல, நமக்கு நாமே பிரமாணங்களாகிறோம். சகல விஷயங்களிலும் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று அன்பு நமக்கு போதிக்கிறது. கிறிஸ்துவைத் தன் ஜீவியத்துப் பிரமாணமாக்கிக் கொண்டவன் ஆவிக்குரிய மேலான பிரமாணத்தின்படி நடக்கிறான். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அப்போஸ்தலன் சொன்னபோது இதுவும் அவர் கருத்தாகும்.

4. நமது ஜீவியத்தில் வெளிப்படுவார் கிறிஸ்து. அந்தந்த ஜீவன் தன்தன் இனத்தை வெளிப்படுத்துவது இயல்பு. ஜீவன் ரூபத்தி

யுள்ளது. மறைவான ஜீவன் தன் தன்மையைப் புறம்பே வெளிப்படுத்தும். வேம்பு தன் தன்மையாகிய கசப்பை வெளிப்படுத்தும். கரும்பு தன் தன்மையாகிய மதுரத்தை வெளிப்படுத்தும். மல்லிகை ரோஜா தங்கள் மணத்தை வெளிப்படுத்தும். ஜீவராசிகளெல்லாம் தம்தம் ஜீவனுக்குரிய தன்மையை வெளிப்படுத்தாமல் இல்லை. புலி ஆட்டைப்போல் சாந்தமாயும், ஆடு புலியைப்போல் மூர்க்கமாயுமிருக்கும் என்று எதிர்பார்ப்பது வீண். அப்போஸ்தலன் கிறிஸ்துவைத் தன் ஜீவனாகக் கண்டடையுமுன் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தினவர். தேவசாயலையணிந்த கிறிஸ்தவர்களைப் பலவாறு துன்பப்படுத்துவதும் கொலைசெய்வதும் அவருடைய கெட்டுப்போன ஜீவனுக்கு நியாயம்போலிருந்தது. அவரில் காணப்பட்ட சுயநீதி, குருட்டு வைராக்கியம், தற்பெருமை, மூர்க்கவெறி முதலான துர்க்குணங்களைப்பற்றி அவரே எடுத்துரைக்கிறார். அது நான் என்பவன் ஆளுகைசெய்த காலம். ஆனால் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக் கொண்டபின் அவர் காரியம் வேறே. "இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். அவர் பிழைத்த ஜீவன் கிறிஸ்துவாயிருந்தால், கிறிஸ்துவின் ஜீவனே அவரில் வெளிப்படவேண்டும். ஆ! என்ன மாறுதல்! இவர் இரண்டாம் கிறிஸ்துதானோ என்று சொல்லத்தக்கதாக பவுல் கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்திருந்தார். "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று சொன்னவரும் அவரே. அவரில் வெளிப்பட்ட சாந்தம், மனத்தாழ்மை, அனுதாபம், அன்பு, பொறுமை, சுயவெறுப்பு, சகோதர சிநேகம், முதலான லட்சணங்களைக் கவனிக்கும்போது அவர் கிறிஸ்துவின் அவதாரமோ வென்றும் நினைக்கவேண்டியதிருக்கிறது. இவ்வளவு பலத்த மாறுதலுக்குக் காரணம் கிறிஸ்து அவருக்கு ஜீவனாயிருந்ததே. கிறிஸ்துவாகிய ஜீவனாலே அவர் பிழைத்தார். அந்த ஜீவன் அவரில் வெளிப்பட்டது.

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று நாம் லேசாய்ச் சொல்லி விடுகிறோம். அது உண்மையா? அவர் நமது ஜீவனா? நம் பிழைப்

பது கிறிஸ்துவா? நமது நினைவு, வாக்கு, செய்கை எப்படிப்பட்டவை? அவைகள் கிறிஸ்துவில் காணப்படுமோ? நாம் மனங்கொண்டபடி நடந்துகொண்டு "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லுவதில் பிரயோஜனமென்ன? பெருமையும், பொறாமையும் கோபமும், மூர்க்கமும், இடும்பும், பகையும், பிரிவினையும், தீமைசெய்யும் குணமும், குடி வெறியும், துன்மார்க்கமும் கிறிஸ்துவில் காணக்கூடுமா? அவர் நமது ஜீவனானால், அவராலே நாம் பிழைப்பது மெய்யானால் அவர் ஜீவனுக்கு முற்றிலும் விரோதமான இத்தீயகுணங்கள் நம்மில் காணப்படுவது நியாயமா? நாம் இன்னும் கிறிஸ்துவுக்கொப்பாகப் பூரணராகவில்லை என்பது மெய்தான். இன்னும் நாம் அநேக விஷயங்களில் தவறுகிறோம் என்பதும் மெய்தான். ஆனாலும் நமது ஜீவியத்தின் வாஞ்சையென்ன? சகல பாவங்களுக்கும் நாம் நீங்கலாக, ஜீவிப்பவருடைய உதவியினால் நாளுக்குநாள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறவேண்டுமென்பதல்லவா? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லிக்கொண்டு அவருடைய குணத்துக்கும் சித்தத்துக்கும் விரோதமாய் நடந்தால் அது துணிகரமான பொய்யாகும். அவர் நமக்குள் பிழைப்பது மெய்யானால் அவர் தம்மை நமது மூலமாய் வெளிப்படுத்துவாரேயன்றி, பிசாசின் குணங்களை வெளிப்படுத்தமாட்டார். மார்க்க வைராக்கியத்தில் பிரயோஜனமில்லை. காரியத்தை அமர்ந்து யோசிக்கவேண்டும். ஆயிரம் காரியங்களை யோசிப்பார்கள். ஆத்ம காரியங்களை அமர்ந்து யோசிக்கிறவர்கள் யார்? கிறிஸ்து நமது ஜீவனின் உற்பத்தியும், வளர்ச்சியும், பிரமாணமுமானால் அவரது சிந்தை கட்டாயம் நம்மில் காணப்படவேண்டும். இல்லையானால் கிறிஸ்து நமக்கு ஜீவனாக இல்லை.

5. ஜீவியத்தின் நோக்கம் கிறிஸ்து. கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது, கிறிஸ்துவின் நோக்கமே பவுலின் நோக்கமாயிற்று. ஆண்டவர் ஜீவிய நோக்கம் என்ன? மனுக்குலத்தாரின் ரட்சிப்பே. கெட்டுப்போன குமாரர் குமாரத்திகளை பிதாவோடு ஐக்கியப்படுத்தும் நோக்கத்தோடே அவர் உலகில் வெளிப்பட்டார். அவர் மரித்து-

ஜீவியமும், நிகரற்ற உபதேசமும், அற்புத செயல்களும், கொடிய பாடுகளும், புத்திக்கெட்டாத மரணமும் மகத்துவமான உயிர்த்தெழுதலும், மானிடர் ரட்சிப்புக்காக அவர் தம்மில் நிறைவேற்றின அரிய கிரியைகளாகும். நாம் ரட்சிக்கப்படவேண்டும் என்கிற ஒரே நோக்கமே ஆண்டவர் பட்ட சகல பாடுகளுக்கும் காரணம்.

கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது கிறிஸ்துவின் நோக்கமே பவுல் நோக்கமுமாயிற்று. எதற்காக ஆண்டவர் பிழைத்தாரோ, உழைத்தாரோ, பாடுகள் அனுபவித்தாரோ, அதற்காகவே பவுலும் பிழைத்தார், உழைத்தார், பாடுகளை அனுபவித்தார். "எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொல்லுகிறார். பாவிகளின் ரட்சிப்பே அப்போஸ்தலனுடைய ஜீவியத்தின் நோக்கமாயிருந்தது. இதற்காக நீண்ட பிரயாணங்கள் செய்தார், மோசங்களில் அகப்பட்டார், உபத்திரவங்களைச் சகித்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எங்கும் கூறி அறிவித்தார். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு ரட்சிப்பைப் பெற்றவர்களுக்கு அங்கே சபைகளையும் ஸ்தாபித்தார். தமது ஞானப்பிள்ளைகளை நினைத்து இடைவிடாது ஜெபித்தார். அவர்கள் தவறிப்போகாதபடி அவர்களை விசுவாசத்தில் ஊன்றக் கட்டும்படி சமயோசிதமான நிருபங்களை எழுதியனுப்பினார். சிறைச்சாலையும் விலங்குகளும் அவர் ஊக்கத்தைக் குறைக்கவில்லை. அவர் எழுதிய நிருபங்கள் நாளதுவரை உலகெங்குமுள்ள சபைகளுக்கு அழியாச் செல்வமாயிருக்கின்றன. ஆதிமுதல் திருச்சபையில் ஊழியஞ்செய்துவரும் கண்காணிமார், குருமார், பிரசங்கிகள், சபையார் அப்போஸ்தலனுக்கு எவ்வளவோ நன்றியாராட்டக் கடனாளிகளாயிருக்கிறார்கள். அவர் ஊழியம் அவரோடு மறையாமல் கணக்கற்ற தேவ ஊழியருக்குச் சுதந்தரமாகக் கிடைத்திருக்கிறது. பிரசங்கங்களும் வியாக்கியானப் புஸ்தகங்களும் எங்கேயிருந்து வந்தன? தலைமுறை தலைமுறையாக தேவ ஊழியஞ்செய்து பிழைக்கிறவர்கள் பிரசங்கிக்கும் வாக்கியங்களை எங்கிருந்து எடுக்கிறார்கள்? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்னும் வாக்கியத்தை எடுத்துப் பிரசங்கிக்கிறோம். அந்த வசனத்தை நமக்குத் தந்தவருக்கு நன்றியாயிருக்

கிறோமா? எங்கிற வசனங்கள் வேதாகமத்திலிருக்கிறதென்று நினைக்கிறோமே தவிர பக்தனாகிய பவுல் உள்ளத்திலிருந்து வந்தவைகள் என்று உணருகிறோமா? கிறிஸ்துவைத் தம் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவர் ஜீவிய நோக்கத்தையே தமது பிழைப்பின் நோக்கமாக்கிக் கொண்ட ஒரு பவுலாலே ஆண்டவர் உலகத்துக்குச் செய்த நன்மைகளை அளவிடமுடியாது. நமது ஜீவியத்தின் நோக்கமென்ன? எதைப் பற்றி அடிக்கடி நினைக்கிறோம்? எதைப்பற்றிப் பேசுகிறோம்? எதைப்பற்றி இடைவிடாது கவலை கொள்ளுகிறோம்? எதற்காக நமது நேரத்தையும் பலத்தையும் செலவுசெய்கிறோம்? அதுவே நமது ஜீவியத்தின் நோக்கம். கிறிஸ்து நமது ஜீவன் என்பது மெய்யானால் அவர் நோக்கம் நமது நோக்கமாகி, மற்றவர்கள் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பிழைப்போம், உழைப்போம், சகலத்தையும் செய்வோம்.

6. ஜீவிய வாஞ்சை கிறிஸ்து. கிறிஸ்துவின் வாஞ்சையே பவுலின் வாஞ்சையாயிற்று. ஆண்டவர் நம்மை ரட்சிக்கும்படி உழைத்துப் பலபாடுகள் பட்டதுமாத்திரமல்ல, தமது ஜீவனை நமக்காகக் கொடுக்க ஆவலுள்ளவராயிருந்தார். சத்துருக்கள் அவரைப் பிடித்துக் கொன்றுபோடவில்லை. அவர் ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. "ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்று ஆண்டவரே சொன்னார். நம்மீதுள்ள அன்பினால் தமது ஜீவனை நமக்காகக் கொடுக்க வாஞ்சையாயிருந்தார். "நான் முழுகவேண்டிய ஓர் ஸ்நானம் உண்டு; அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றார். வேளை வந்தபோது எருசலேமுக்கு நேராகத் தமது முகத்தைத் திருப்பி முன் நடந்துபோனார். தமது உயிரைக் கொடுத்து நம்மைப் பிழைக்க வைத்த ரட்சகன் அவர். கிறிஸ்துவைத் தமக்கு ஜீவனாக்கிக் கொண்ட பவுலுக்கும் அதே வாஞ்சையிருந்தது. மற்றவர்களை ரட்சிக்கும்படி அவர் தமது பிராணனையும் அருமையாக எண்ணவில்லை. "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே

நிறைவேற்றுகிறேன்" என்று சொன்னார். பாவிகள் ரட்சிப்புக்கு கிறிஸ்து பட்டபாடுகள் குறைவாயிருந்தது என்று அருத்தமல்ல. ஆண்டவர் பாடுகள் உலகத்தின் ரட்சிப்புக்குப் பூரணமானவை. ஆனால் ஆண்டவர் சம்பாதித்த அந்த ரட்சிப்பை உலகத்துக்குச் கொடுக்கும் ஊழியத்தில் அப்போஸ்தலன் பாடுபட அவசியமாயிற்று. பாடுபட்ட கிறிஸ்துவின் ஜீவன் பவுலுக்குள்ளிருந்ததால் ஆண்டவர் "பாடுகளில் ஐக்கியப்பட" வாஞ்சித்தார்.

மேலும் சிலுவை சாபத்துக்குரியது. "மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்றெழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமானார்." இந்த வாஞ்சையும் அப்போஸ்தலனுக்குள் இருந்தது. ரோமர் ஐந்தாம் அதிகாரத்தில் நீதியையும், ஆறில் பாவத்தைப்பற்றியும், ஏழில் பாவப் போராட்டத்தைப்பற்றியும், எட்டில் பாவ விடுதலையைப் பற்றியும் பேசி முடிவில் எப்பேர்ப்பட்ட வல்லமையும் கடவுள் அன்பிலிருந்து தம்மைப் பிரிக்கமாட்டாதென்பது நிச்சயம் என்று முழங்குகிறார். இப்படிச் சபதம் கூறினவர் ஒன்பதாம் அதிகாரம் முதல் வசனத்தில் "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது" என்று புலம்புகிறார். இந்தத் துக்கத்துக்கும் இடைவிடாத மனவேதனைக்கும் காரணமென்ன? "நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்; மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" என்றார். எப்பேர்ப்பட்ட வல்லமையானாலும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய அன்பிலிருந்து தன்னைப் பிரிக்கமுடியாதென்று கர்ச்சித்தவர் கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்பின காரணமென்ன? கடவுளுடைய மகத்தான ரட்சிப்பையும் அவரது அதிசய அன்பையும் தமக்குள் அனுபவித்த பவுல், யூதர்களான தமது இனத்தாருடைய மோசமான நிலைமையை நினைத்தபோது, சகிக்கவொண்ணாத துக்கத்திற்குள்ளாகி அவர்கள் ரட்சிக்கப்படக்கூடுமானால் அதற்கு ஈடாகத் தாம் சபிக்கப்பட்டுப் போனாலும் பரவாயில்லை

என்கிறார். இது கிறிஸ்துவிலிருந்த வார்த்தையல்லவா? நம்மை ரட்சிக்கும்படி எல்லா பாவிகளுக்கும் அவமானங்களுக்கும் சிலுவைக்கும் மனதாரத் தம்மை ஆண்டவர் ஒப்புக்கொடுத்தாரே. அவரே பவுலுக்குள் ஜீவனுள்ளவராயிருந்ததால் அதே வார்த்தையை பவுலிடத்திலும் காண்கிறோம். இதுபோலவே மோசேயும் தன் சமயத்தில் பாவஞ்செய்த இஸ்ரவேலருக்காக கர்த்தரை நோக்கி, அவர்களை நீர் அழிப்பதைப் பார்க்கிலும் ஜீவ புஸ்தகத்திலிருந்து என்பேரைக் கிறுக்கிப்போடுவது நலமாயிருக்கும் என்று மன்றாடினார்.

பாவிகளின் ரட்சிப்பு லேசானதான காரியமல்ல. எப்பாடுகளால் ரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டதோ அப்பாடுகளாலேயே ரட்சிப்பு பலிதப்படக்கூடும். ரட்சிப்பின் பிரமாணம் எக்காலத்திலும் ஒன்றே. ஆத்துமாக்களை அடிமைப்படுத்தி யிருக்கும் சாத்தான் அவைகளைத் தன் பிடியிலிருந்து லேசாய் விடமாட்டான். அவர்களை ஜீவ வழிக்குத் திருப்பும்படி முயற்சிக்கும் ஊழியர் பாடுகளுக்கும் சிலுவைக்கும் தப்பமுடியாது. அவர்களை இருளிலிருந்து ஒளியினிடம் திருப்புவது லேசான காரியமல்ல. அலங்காரமான உபதேசங்களும், ஒழுங்கான வாசிப்புகளும், வெகுவான சத்தமும், இனிமையான பாட்டுகளும் ஆராதனைக்குச் சிறப்பாகத் தோன்றினாலும் காரியம் பலிக்காது. பாவத்தால் வஞ்சிக்கப்பட்ட மனுஷர் புதுச் சிருஷ்டிகளாய் மாறுவதும், பல இக்கட்டின்போல் கடப்பவர்கள் தேவ சித்தத்தின்படி பிழைக்கத் தங்களை ஒப்புக்கொடுப்பதும் லேசாய் நடக்கிற காரியமல்ல. ஜனங்கள் ரட்சிக்கப்படவேண்டுமே, அவர்கள் ஆவிக்குரியவர்களாகி பிதாவால் அனுதினமும் நடத்தப்படவேண்டுமே என்று கவலைகொண்டு உழைக்கும் ஊழியர்களுக்கே இதன் கஷ்டம் தெரியும். எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறவர்கள் எல்லாருக்கும் எல்லாமாகாமல் தீராது. தாம் சிறுமைப்பாதை செல்லாமல் பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்கமுடியாது. பிழைப்புக்காகவும் உணவுக்காகவும் செய்யப்படும் ஊழியம் சாபத்துக்குரியது. கிறிஸ்துவின் வார்த்தையற்ற மனுஷர் செய்யும் ஊழியத்தால் சபையார் மனக்கடினமாகிக் கெட்டுப்போவார்கள்.

தற்காலத்தில் அநேக சபைகளின் மோசமான நிலைமை இதுவே. உலகம் ரட்சிக்கப்படும்படி அருமை ரட்சகர் மூழ்கின ஸ்நானத்தில் நமக்கும் பங்குண்டு. கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது அவரிலிருந்த ஆத்தும வாஞ்சையே பவுலுக்குள்ளும் இருந்தது. நமக்கும் அந்த வாஞ்சையில்லாவிட்டால் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று நாம் சொல்லுவது பொய்.

7. ஜீவகிரீடம் கிறிஸ்து. ஆண்டவர் அப்போஸ்தலனுக்கு ஜீவ உற்பத்தியும், ஜீவ வளர்ச்சியுமாத்திரமல்ல அவரே அவருக்கு ஜீவ கிரீடமுமானார். கிரீடம் என்பதற்கு பூரணம் அல்லது நிறைவு என்று அருத்தம். பாவத்தால் மரித்த பவுல் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டபோது புதிதாகப்பிறந்தார். அது முதல் தன் ஜீவகால முழுவதும் கிறிஸ்துவாகிய ஜீவனாலேயே பிழைத்தார். இந்த ஜீவன் இடையில் மாறிப்போகவில்லை, நின்று போகவுமில்லை. இம்மை மறுமை என்று நாம் பிரித்துப் பேசினபோதிலும் இரண்டு ஜீவன்கள் இல்லை. கிறிஸ்துவின் ஜீவன் ஒரே தொடர்ச்சியான நித்திய ஜீவன். கிறிஸ்துவே நமக்கு ஆதியும் அந்தமுமான ஜீவனானவர். அவரது ஜீவனை அழிக்க மரணத்துக்கு அதிகாரமோ வல்லமையோ இல்லை. கிறிஸ்துவின் ஜீவன் மரணத்தை விழுங்கி வெற்றியடைந்த ஜீவன். ஆகவே நாம் மரணம் என்று பேசுவது பூரண ஜீவனுக்குள் நாம் பிரவேசிக்கும் வாசலேயாகும்.

இப்போது கிறிஸ்து நமது ஜீவனாக நமக்குள் பிழைப்பதால் நமது ஜீவியம் ஆசீர்வதிக்கப்பெற்று கனிகள் நிறைந்ததாயிருந்த போதிலும் அது இன்னும் குறைவுள்ளதே. "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்." அப்போஸ்தலனுடைய ஜீவியமும் ஊழியமும் நமக்குப் பிரமிப்பை உண்டு பண்ணினபோதிலும் அவர் முற்றிலும் தேறிவிட்டதாக எண்ணவில்லை. எவ்வளவோ கிருபை அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது, அப்படியிருந்தும் தாம் பூரணராகும் ஓர் காலத்தை எதிர்நோக்கியே பிழைத்தார். அவர் எவ்வளவு நல்ல ஜீவியம் செய்து, எவ்வளவு சிறந்த ஊழியத்தை நிறைவேற்றி வந்தபோதிலும் அநேக இடையூறுகளின் மத்தியிலேயே

அவைகளைச் செய்துவந்ததாக அவருக்குத் தெரியும். அவர் செய்த திருப்பணிவிடைக்கு அவர் சரீரம் துணையாயிருந்ததுபோலவே அந்தச் சரீரமே பெரிய இடையூறா யிருந்ததையும் அறிவார். அதைக் குறித்து: "ஆவியின் முதற்பலன்களைப்பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" என்கிறார் (ரோம 8 . 23). ஆகையால் ஜீவகிரீடமாகிய பூரண ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வாஞ்சை அவருக்கிருந்தது. அந்த ஜீவகிரீடமும் கிறிஸ்துவே. "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம்" என்கிறார் (கொலோ. 8 : 4). தமது பலவீனமான சரீரத்தைக் குறித்து: "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்றார் (பிலி. 3 : 21). அதுவே பூரண ரட்சிப்பு. அப்போஸ்தலனுக்கு ஆண்டவர் ஜீவ உற்பத்தி மாத்திரமல்ல ஜீவகிரீடமுமானார். ஆகையினால்தான் "சாவு எனக்கு ஆதாயம்" என்றார்.

யாருக்கு சாவு ஆதாயம்? கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அந்த ஜீவனில் வளர்ந்து, அந்த ஜீவனைத் தங்களுக்குப் பிரமாணமாக்கி, அந்த ஜீவனைத் தங்கள் வாழ்க்கையில் வெளிப்பத்தி. அந்த ஜீவனையே தங்கள் ஜீவியத்தின் நோக்கமாக்கி, அந்த ஜீவனிலே மற்றவர்கள் ரட்சிப்புக்காக வாஞ்சைகொண்டு பாடுபட்டு, கிறிஸ்துவை ஜீவகிரீடமாகப் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கிறவர்களுக்கே சாவு ஆதாயமாகும். அது மரணம் என்று எண்ணப்படாமல் அவர்களைப் பூரண ஜீவனுக்குள் நடத்தும் வாசலாகும். அநேகருடைய ஜீவியத்தில் கிறிஸ்து ஜீவனாக விளங்கவில்லை. ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களுக்குப் போவதாலேயோ, படிக்கும்போது 'இயேசுவே ரட்சியும்' என்று தலை சாய்ப்பதாலேயோ, அவர் நமக்கு ஜீவனாகிவிடமாட்டார். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் பார்க்கிலும் நமது சரீர ஜீவன் நமக்கு அருமை. ஏனென்றால் நாம் எதை இழந்தாலும் உயிருள்ளவரை அதைத் திரும்பவும் சம்பாதிக்கலாம். உயிர் போய்விட்டால் என்னவாகும்? ஆகையால் சரீர ஜீவனைக் குறித்து

மனுஷர் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். கிறிஸ்துவாகிய நித்திய ஜீவனைப்பற்றி இவ்வளவு ஜாக்கிரதை நமக்குண்டா? ஒருவன் எதைப் பிரதானமாக நாடுகிறானோ அதுவே அவனுக்கு ஜீவன். அழிந்துபோகும் உலகக் காரியங்களில் நமக்கிருக்கும் பற்று அழியாத ஜீவனாகிய கிறிஸ்துவின் பேரில் இல்லையே. உலகக் கல்வி, உத்தியோகம், பணம், அந்தஸ்து முதலான காரியங்களை ஜீவனைப்போல் பற்றிக்கொண்டிருக்கிறோம். இவைகளில் நமக்கு நஷ்டம் நேரிடுமானால் எவ்வளவோ சோர்ந்து புலம்புகிறோம். இவைகளில் நாம் க்ஷேமமாயிருக்கும்படிக்கே இயேசுவே ரட்சியும் என்னும் மந்திரத்தையும் சொல்லிக் கொள்ளுகிறோம். கிறிஸ்து நமது பிரதான வாஞ்சையுமல்ல, நமக்கு ஜீவனுமல்ல. கிறிஸ்து இன்னாரென்றும், அவர் மகிமை எப்படிப்பட்டதென்றும் நாம் இன்னும் சரியாய் அறிந்தவர்களல்ல. அவரை அறிந்தவன் அவரை விடமாட்டான். தன் ஜீவனாகிய கிறிஸ்துவைவிட்டு அவனால் விலக முடியாது. அவரை ருசித்தவன் அந்த ருசியிலேயே வளருவான். "அவர் சாயல் கண்டவன் அந்தச் சாயலுக் கொப்பாக மாறுவான். இவர் ஆராதனைக்கும் ஜெபக்கூட்டத்துக்குமாத்திரம் உரிய கிறிஸ்து அல்ல. ஆபத்துகாலத்தில்மாத்திரம் தேடி அனுப்பிவிடும் வைத்தியன் அல்ல. இடைவிடாமல் இரவும் பகலும் நிமிஷந்தோறும் நமக்குள் பிழைக்கிற நித்திய ஜீவனாயிருக்கிறார். ஆகையால் சாவு நமக்கு ஆதாயம்.

சாவு எப்படி ஆதாயம்? சாவு என்று அப்போஸ்தலன் நாட்டோடிய பாஷையில் பேசினபோதிலும் அவர் கருத்து நோக்கிலும் வேறே. "நான் சரீரத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருப்பேன்" என்பதே அப்போஸ்தலன் சாவு என்பதற்குக் கொடுத்த அருத்தம். தன் ஜீவனாகிய கிறிஸ்துவை முகமுகமாய்ச் சந்திக்கும்படி அவர் ஆவலாயிருந்தார். அது நமக்கு அதிக நன்மையாயிருக்கும் என்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியும்படி எல்லாவற்றையும் குப்பையாக எண்ணி விட்டுவிட்டவர் பவுல். மரணத்தின் மூலமாய் கிறிஸ்துவின் பக்கத்தில் போனால் முன்னில்லாத புதிய அறிவு, புதிய ஊழியம், புதிய அனுபவம், புதிய ஆனந்தம்

தமக்குக் கிடைக்கும் என்கிற நிச்சயத்தால் சாவு நஷ்டமல்ல
லாபமே என்கிறார்.

என் லாபம்? ஜீவனாகிய கிறிஸ்துவை முகமுகமாய்ப் பார்ப்ப
தால், அவரோடு நெருங்கிப் பழகுவதால், மறைவாயிருந்த அநேக ரக
சியங்களை அறிவதால், மாம்ச இடையூறுகள் நீங்கிப் பூரணமாய் ஆண்
டவரை அனுபவிப்பதால், திரளான பக்தர்களைச் சந்திக்கப்போவ
தால் சாவு தமக்கு லாபமேயன்றி நஷ்டமல்ல என்கிறார். நமக்குச்
சகிக்கமுடியாத நஷ்டமாகிய சாவு அப்போஸ்தலனுக்கு அளவில்லாத
லாபம். நாம் ஜீவனாகிய கிறிஸ்துவை மறந்து இம்மைக்கென்று
பிழைப்பதால் மரணம் நமக்குக் கொடிய கசப்பாயிருக்கிறது. கிறிஸ்
துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலேயே நாம் பிழைப்
போமானால் நமக்கும் சாவு ஆதாயமாகும். இதை வாசிக்கும் சகோ
தரனே, சகோதரியே, இயேசு கிறிஸ்துவை உன் ஜீவனாக ஏற்றுக்
கொண்டு அவரால் பிழைக்கிறாயா? அந்த நிச்சயம் உனக்கு உண்டா?
இல்லையென்றால், வீணே கிறிஸ்துமார்க்கத்தில் இருப்பதால் என்ன
பிரயோஜனம்? கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்கிற பேர் நம்மை
ரட்சிக்காது. நமது ஜீவனாகிய கிறிஸ்துவே நம்மை ரட்சிப்பவர்.

# VI

# Seal - Inheritance - Earnest

## முத்திரை — சுதந்தரம் — அச்சாரம்

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" எபே. 1 : 13, 14.

இவ்விரண்டு வசனங்களில் அப்போஸ்தலன் நாம் அறியவேண்டிய மூன்று முக்கியமான காரியங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதாவது, நாம் சுவிசேஷ வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, கிறிஸ்துவை நமது ரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை கிறிஸ்துவுக்குள் முத்திரிக்கிறார். இந்த முத்திரையினாலே நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறோம். இவ்வாறு அவருக்குச் சொந்தமானவர்களுக்கு சுதந்தரமுண்டு என்பதை நிச்சயப்படுத்தும்படி ஆவியானவர் இப்பொழுதே நமக்கு அச்சாரமாய் அருளப்பட்டிருக்கிறார் என்பது. ஆகையால் அந்த மூன்று விஷயங்களையும் குறிக்கிற மூன்று வார்த்தைகளை எடுத்து வரிசையாய்ச் சிந்திப்போம்.

### I. முத்திரை.

முத்திரை பலகாரியங்களுக்கு உபயோகப்படும். பத்திரங்கள், மரணசாதனங்கள், உடன்படிக்கை முதலிய ஏற்பாடுகளுக்கு முத்திரை போடுவார்கள். இது அவைகளின் உண்மைக்கு ஆதாரம். தானியேலைப்போட்ட சிங்கக்குகைக்கு முத்திரை போட்டார்கள். பிரதான ஆசாரியர் நமதாண்டவருடைய கல்லறைக்கு முத்திரை போட்

டார்கள். கணக்கர் காகிதங்களைத் தபாலில் அனுப்பும்போது முத்திரை போடுவார்கள். இது அவைகளைப் பத்திரப்படுத்துவதற்கு அடையாளம். மரவியாபாரிகள் தங்கள் மரங்கள் கலந்து போகாதபடி மரத்தில் தங்கள் பேரை முத்திரை போடுவார்கள். புஸ்தகவியாபாரிகளும் தங்கள் புஸ்தகங்களில் முத்திரை போடுவார்கள். இது அவர்களுக்குச் சொந்தம் என்பதற்கு அடையாளம். ஆண்டவர் நமது ஆவியால் நம்மை முத்திரிக்கும்போதும் இந்த மூன்று கருத்துகளும் அதிலுண்டு. நாம் போக்கிறிஸ்தவர்கள் அல்ல, உண்மையாய்க் கடவுள் பிள்ளைகளென்பதற்கு பரிசுத்த ஆவியின் முத்திரை அவசியம். தீமைகளால் நாம் கெட்டுப்போகாதபடி நாம் பாதுகாக்கப்பட முத்திரை அவசியம். நாம் பிதாவுக்குச் சொந்தமானவர்கள் என்று விளங்க நமக்கு முத்திரை அவசியம். இந்தக் கடைசிக் கருத்தையே அப்போஸ்தலன் முக்கியப்படுத்திப் பேசுகிறார். இந்த முத்திரையின் பலனாக நாம் கடவுளுடைய சுதந்தரமென்றும், அவருக்குச் சொந்தமானவர்கள் என்றும் சொல்லுகிறார்.

முத்திரை போடும் சமயம். பிறக்கும்போதே இந்த முத்திரையுடன் நாம் பிறந்தவர்கள் அல்ல. மாம்சத்தின்படி பிறப்பது மாம்சமே. அல்லது இந்த முத்திரையை நாமே போட்டுக்கொள்வதுமல்ல. பரமபிதா தமது ஆவியால் இந்த முத்திரையை நமக்குள் பதிக்கிறார். முத்திரையைப் பெற்றுக்கொள்ளத்தக்க நிலைமையில் நமது இருதயம் இருக்கும்போது உடனே ஆவியின் முத்திரையைப் போடுகிறார். கடினமானபொருள்மேல் முத்திரை பதியாது. அரக்கை நெருப்பில்காட்டி அது இளகும்போது முத்திரையைப் பதிப்பார்கள். செம்போ, வெள்ளியோ, பொன்னோ இளகும்போது ராஜாவின் சாயலையுடைய முத்திரையை அவற்றில் பதிப்பார்கள். சிலுவைக்காட்சியின் உன்னத ரகசியத்தை நாம் அறிந்து, கிறிஸ்துவில் விளங்கிய பிதாவின் அதிசய அன்பு நமதுள்ளத்தில் பிரவேசித்து, அவருடைய பாடுகள் மரணத்துக்கு அடியேன் பாவங்கள் அல்லவோ காரணம் என்றுணர்ந்து, நமது உள்ளம் நொறுங்கி உருகும் சமயத்தில் தேவன் தமது பரிசுத்த ஆவியின் முத்திரையை நமது இருதயத்தில் பதிக்

கிறார். கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொள்ளும் நிமிஷத்தில் கிறிஸ்துவின் சாயலாகிய பரிசுத்த ஆவியின் முத்திரையை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். நமது ஜீவியம் மாறுகிறது. நாம் புதுச் சிருஷ்டியாகிறோம். புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் போலிருக்கிறோம். நாம் இன்னும் பூரணராகவில்லை. இன்னும் வளரவேண்டியதிருக்கிறது. ஆனால் நாம் பெற்றுக்கொண்ட இந்த ஆவியின் முத்திரை நாம் உண்மையாகவே தேவமக்கள் என்பதற்கும், அவரது பாதுகாப்புக்குரியவர்கள் என்பதற்கும், நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கும் ஆதாரம்.

இது கிறிஸ்துவுக்குப் புறம்பான முத்திரையல்ல. "அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்," என்கிறார். "கிறிஸ்துவுக்குள்" "அவருக்குள்" என்னும் வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய முப்பது தரம் வருகின்றன. ஆகையால் அதை நாம் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவுக்குப் புறம்பேயுள்ளவனுக்கு பரிசுத்த ஆவியின் முத்திரை கிடையாது. அவரோடு சம்பந்தப்பட்டவனுக்கே கிடைக்கும். நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்போது அவர் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகிறார். இது ஒரு வட்டத்தின் மத்தியில் ஒருவன் இருப்பதுபோல் அல்ல. வட்டம் ஒரு பக்கமாத்திரம் அவனைச் சூழ்ந்திருக்கும். கிறிஸ்துவோ ஒரு கோளம்போல் எப்பக்கத்திலும் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகிறார். இது தண்ணீருக்குள் அமிழ்ந்திருக்கும் ஒரு குடம்போல. அந்தக் குடத்துக்குள்ளும் தண்ணீர், அதைச் சுற்றிலும் எப்பக்கத்திலும் தண்ணீர். விசுவாசி கிறிஸ்துவுக்குள் தங்குகிறான். இவ்வாறு நாம் அவருக்குள்ளிருக்கும்போது, நோவா பேழைக்குள்ளிருந்து நடத்தப்பட்ட விதமாய், புறம்பேயுள்ளவைகளிலிருந்து நம்மைப் பிரித்து, சகல தீமைகளுக்கும் நம்மைப் பாதுகாத்து, நம்மைப் போஷித்துப் பராமரிக்கிறார். கிறிஸ்துவுக்குள் பிழைக்கும் விசுவாசிகளின் பாக்கியம் இதுவே.

இவ்வாறு நாம் கிறிஸ்துவுக்குள் முத்திரிக்கப்படும்போது பிதா நம்மைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறார். ஒரு நல்ல நிலத்தை அல்லது வீட்டைச் சொந்தமாக்கிக் கொண்டவன், நல்ல உத்தியோகத்

தைச் சொந்தமாக்கிக் கொண்டவன், நல்ல மனைவியைக் கண்டடைந்தவன் மகிழ்ச்சியடைவதுபோல "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்" என்னும் நிச்சயத்தால் பிதா சந்தோஷப்படுகிறார். அவர் ஆதியில் பூமியைச் சிருஷ்டித்த நாளில் மகிழ்ந்ததைவிட, இழந்துபோன தேவசாயலை நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் புதிய சிருஷ்டிப்பைக் காணும்போது அவர் திருவுள்ளம் பூரிக்கிறது. கிறிஸ்து பிதாவுக்கு மிகவும் பிரியமானவர். பிரியமானவருக்குள் இருப்பவர்களும் அவருக்குப் பிரியமானவர்களே. ஆகையால் அவர் கவனமும் பார்வையும் இடைவிடாது நம்மீதிருக்கின்றன.

நாம் பெற்றுக் கொண்ட முத்திரையின் சாயல் மங்கவும் இடமுண்டு. எப்படியென்றால் ராஜாவின் சாயல்பெற்ற அழகான நாணயங்கள் பலர் கைக்குப்போவதால் அழுக்குப் பதிந்து சாயல் மறைந்து போகின்றன. மேலும் நெடுங்கால உபயோகத்தால் ராஜாவின் சாயல் முழுவதுமே தேய்ந்து மழுங்கிச் செல்லாக் காசுகளாகின்றன. பரம பிதா தமது குமாரனுடைய சாயலை நம்மில் பதிந்தவுடனே நம்மை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை. அப்படிச் சேர்க்கக்கூடாதென்று ஆண்டவர் பிதாவை நோக்கி ஜெபித்திருக்கிறார். "பிதாவே, நீர் இவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல் தீமையிலிருந்து காக்கும்படிக்கே வேண்டிக்கொள்கிறேன்." ஆவியின் முத்திரையாகிய கிறிஸ்துவின் சாயல் பெற்றவர்கள் உலகத்துக்கு அவசியம். அவர்கள் பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும், கனிநிறைந்த விருக்ஷங்களாகவும் இருக்கவேண்டும். இதற்குத் தாங்கள் பெற்றுக்கொண்ட முத்திரை மங்காமலும் அழிந்துபோகாமலும் காக்கப்படவேண்டும். இங்கேதான் நமக்குப் போராட்டமிருக்கிறது. பலவித கவலைகள், குடும்பப் பாரங்கள், வறுமை, நோய், பல சோதனைகள் வெள்ளம்போல் நம்மை மோதுகின்றன. நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் சாயலை அழிப்பதற்குப் பல இடையூறுகள் உண்டு. நாம் செல்லாக்காசுகளாகி விடுவோமோ? அப்படியானால் ஒருவரும் ஈடேறப்போகிறதில்லை. தமது

குமாரனைக் கொடுத்த பிதாவுக்கு அதைப்போல் வேறு தோல்வியு மில்லை. தேவ சாயலாகிய முத்திரை ஒருநாள் இரண்டு நாட்களுக் கல்ல; மீட்கப்படும் கடைசிநாளுக்கென்று நமக்கு அச்சாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முத்திரையைப் பெற்றுக்கொண்டு கிறவர்கள் இடையில் அதை இழந்துபோனால் முடிவில் என்னசெய் வார்கள்? ஒரு ஸ்டேஷனில் டிக்கட்டுப்பெற்றுத் தூரமான இடத்துக்குப் பிரயாணம் பண்ணுகிறவன் டிக்கட்டை வழியில் இழந்துவிட்டு, இறங்கு மிடத்தில்: உண்மையாகவே டிக்கட்டை வாங்கினேன், பத்திரமாகவே வைத்திருந்தேன், அது எனக்குச் சொந்தமாகவே யிருந்தது என்று சொன்னால் அவனை விட்டு விடுவார்களா? நாம் பெற்றுக்கொண்ட ஆவியின் முத்திரை கடைசிவரை நமக்குள்ளிருந்து நம்மை வழி நடத்தவேண்டும். நாம் பெற்றுக்கொண்ட தேவசாயல் வரவரப் பெருகிப் பூரணப்படவேண்டும். ஆனால் அந்தச் சாயல் மங்கி அழுக் கடையலாம். இதற்குப் பாவமே காரணம். நம்மேல் இடைவிடாது கண்ணோக்கமாயிருக்கும் பரமபிதா அழுக்கைப் போக்குகிறவரும் சாய லைப் புதுப்பிக்கிறவருமாயிருக்கிறார். அழுக்கடைந்த காசைக் கழு வினால் ராஜாவின் சாயல் தோன்றும். காசு மழுங்கிப்போனால் அதை உருக்கிச் சாயலைப் பதிக்கலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம் அழுக்கைப்போக்கி தேவசாயலைப் புதுப்பிக்கும். சாயல் மழுங் கிப்போகிற நிலைமையிலிருந்தால் கடவுள் தமது கூர்மையான ஆயுதங் களைக் கையாடவேண்டியதிருக்கும். நமக்கு நேரிடும் பாடுகள் துன் பங்களின் நோக்கம் அதுவே. உபத்திரவப்படுகிறவர்கள் தேவன் தங்கள்மேல் கோபமாயிருக்கிறார் என்று நினைக்கக்கூடாது. உபத்திர வமாகிய புடத்தின் மூலமாய் தமது குமாரனுடைய சாயலை நமக்குள் புதுப்பிக்கிறார் என்றறிய வேண்டும். ஏன் எனக்கு இந்தப் பாடுகள்? இப்பாடுகளில்லாவிட்டால் நாம் சந்தோஷமாயிருந்து வேலைசெய்ய லாமே என்று நினைக்கிறோம். பரிசுத்தாவியின் முத்திரையினால் பிதா நமக்குள் பதித்த கிறிஸ்துவின் சாயல் மங்கிப்போவதை அவர் சகிக்கமாட்டார். தேவமக்களுக்கு நேரிடும் பாடுகளில் அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவே. ஆயுதத்தைக் கையாடு

...து அன்புள்ள பிதாவின் நாம் கற்பனை மறக்கலாகாது. இதனாலே தான் "ஆவியைத் துக்கப் படுத்தாதிருங்கள்" என்றும், "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" என்றும் "ஆவியிலே அனலாயிருங்கள்" என்றும் அப்போஸ்தலன் கூறினார். எவ்வளவுக்கு நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு ஆவியானவர் கிறிஸ்துவின் சாயலை நம்மில் உண்டாக்குவார். அவர் செய்ய வந்தவேலை அதுவே.

பரிசுத்த ஆவியின் முத்திரையை நாம் பெற்றுக்கொள்ளும்போது அதை நாம் அறிவோம். நமக்குத் தெரியாமல் பிதா நம்மை முத்திரிக்கிறதில்லை. நாம் அதை அறியாதபடி மறைக்கவேண்டுமென்பது அவர் நோக்கமல்ல. நமது இருதயத்தை, நமது ஜீவியத்தை நமது உள்ளத்துக்கு அனுப்பி அதை நமக்கு மறைப்பதால் பிரயோஜனமென்ன? நமக்கு நிச்சயம் வேண்டுமே. நாம் கடவுள் பிள்ளைகளோ என்னவோ? ரட்சிப்பைப் பெற்றோமோ என்னவோ? தேவனோடு ஒப்புரவானோமோ என்னவோ என்கிற சந்தேகங்கள் இருந்தால் நமக்குச் சந்தேகமாயிராது, பிறருக்கும் பிரயோஜனப்படமாட்டோம். அநேகர் தங்கள் ஆத்ம விஷயத்தில் நிச்சய மற்றவர்களாயிருக்கிறார்கள். அந்தந்த மார்க்கங்களில் பிறந்தவர்கள் அந்தந்த மார்க்கத்தாராயிருப்பதுபோல, கிறிஸ்தவர்களுக்குப் பிறந்ததின் பலனாக கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் அநேகர். ஏன் நாம் இந்த மார்க்கத்திலிருக்கிறோம், இதனால் நமது ஆத்துமாவுக்குக் கிடைத்த ஆசீர்வாதமென்னவென்று அவர்கள் கேட்பதில்லை. என்னவோ மார்க்கத்திலிருக்கிறோம், ஆராதனைகளுக்குப் போகிறோம்; செய்யவேண்டிய காரியங்களைச் செய்கிறோம், அவ்வளவுதான், ஆனால் நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது என்பார்கள். இன்னும் அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லியும் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாய் நடக்கிறார்கள். இது எவ்வளவு துக்கமான விஷயம்! நமது காரியம் இப்படியிருந்தால் மற்றவர்களுக்கு நாம் என்னத்தைப் போதிப்பது? நமது விஷயமே நிச்சயமற்றிருக்கும்போது நாம் எவ்வளவு வாஞ்சித்தாலும் நாம் ஜெயத்தில் பிரவே...

ஜனம் என்ன? பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றவர்கள்
நிச்சயமுள்ளவர்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோ
மென்று ஆவியானவர் தாமே நமது ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்
கிறார்." "அவர் உங்களுக்குள்ளே வாசம்பண்ணி உங்களுக்குள் இருப்
பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்." பரமபிதா தமது ஆவியின்
முத்திரையால் நம்மைத் தமக்குச் சொந்தம் பாராட்டுவதுபோல, நாம்
அவருக்குச் சொந்தமானவர்கள் என்கிற நிச்சயம் நமக்கும் வேண்
டும். அது நமது ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் மிகவும் அவ
சியம். "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்." 1. கொ. 9: 26.

நாம் முத்திரைபெற்றவர்கள் என்பதை மற்றவர்களும் அறிவார்
கள். ஆண்டவர் நிக்கோதேமோடே ஆவியானவரைப்பற்றிப்
பேசின சமயத்தில் காற்றைக் காணாவிட்டாலும் அதன் கிரியைகளை
அறியலாமென்று சொன்னார். காற்றைப்பற்றி நமக்கென்ன தெரி
யும்? என்றாலும் அது நமது தேகத்தில் வீசுவதாலும், மரக்கிளைகள்
அசைவதாலும், பாய்க்கப்பல்கள் ஓடுவதாலும், நாம் சுவாசித்துப்
பிழைப்பதாலும் காற்று இருக்கிறதென்று நிச்சயமாய் அறிகிறோம்.
ஆவியானவரை நமது கண்ணால் காணக்கூடாவிட்டாலும் அவர் நமது
இருதயத்தில் பிரவேசித்து அங்கே தங்கும்போது அவர் நடப்பிக்கும்
கிரியைகள் நமது ஜீவியத்தில் காணப்படும். பெருமை தாழ்மையாக,
பகை அன்பாக, பிடிவாதம் இணக்கமாக, ஆக்கிரமம் சாந்தமாக, தீமை
நன்மையாக, பொருளாசை பரலோக ஆசையாக, தன்னயம் சுயவெறுப்
பாக ஒருவனுடைய ஜீவியம் மாறுதலடையும்போது யார் இந்த மாறு
தலை அறியாதிருக்கக் கூடும்? ரோஜாப்புஷ்பம் பரிமளிப்பதுபோல
கிறிஸ்துவின் சாயல்பெற்றவனுடைய ஜீவியமும் சுகந்தமாக விளங்
கும். நமது குணத்தை மாற்றாத கிறிஸ்துமார்க்கத்தால் என்ன பிர
யோஜனம்? புறம்பான ஆசாரங்களை ஒழுங்காய் ஆசரிப்பது, செய்ய
வேண்டிய கடமைகளைச் செய்து விடுவதுமே கிறிஸ்து மார்க்கமாகாது.
மனுஷன் புதுச் சிருஷ்டியாகவேண்டும். பரமபிதா தமது ஆவியின்
முத்திரையினால் புதிய சிருஷ்டிப்பை நம்மில் உண்டாக்கி மற்றவர்
கள் அதை அறியும்படி செய்கிறார். கிறிஸ்துவின் சிந்தையற்றவர்
கள் கிறிஸ்தவர்களல்ல.

## II. சுதந்தரம்.

நம்மை முத்திரிக்கும் "ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." தேவமக்கள் அனுபவிக்கப் போகிற சுதந்தரத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டில் பலவிடங்களிலும் வாசிக்கிறோம். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோ. 8: 17). "நீ புத்திரனையானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய்" (கலா. 4: 7). சுதந்தரம் என்னும் சொல் நாம் அறிந்த ஒரு வார்த்தையாயிருந்தாலும் கடவுள் நமக்கு வைத்திருக்கிற சுதந்தரமானது என்னவென்று நமக்குத் தெரியவில்லை. பிதாவும் அதை நமக்கு விளக்கிக் காட்டவில்லை. விளக்கிக் காட்டினாலும் இவ்வாழ்வில் அது நமக்கு விளங்காது. சுதந்தரத்தின் மேன்மையைப்பற்றி: அது "சிறப்பான சுதந்தரம்," "மாசற்றதும் வாடாததுமான சுதந்தரம்," "அழியாத சுதந்தரம்," "மகிமையுள்ள சுதந்தரம்," "பரிசுத்தவான்களுடைய சுதந்தரம்," "வாக்குப்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரம்" என்று புகழ்ச்சியாகக் கூறியிருந்தபோதிலும் அந்தச் சுதந்தரம் இன்னதென்று சொல்லப்படவில்லை. மனுஷன் பாவத்தால் கெட்டபோது அவன் பாஷையும் கெட்டது. தேவனுடைய மேலான ஆவிக்குரிய காரியங்களை மனுஷர் பாஷையில் விஸ்தரிப்பது கஷ்டம். இந்தக் கஷ்டம் சரீரத்தில் வெளிப்பட்ட நமதாண்டவருக்கும் இருந்தது. அவர் தேவராஜ்யத்தின் காரியங்களை இருக்கிறபடியே கண்டார். ஆனால் அவைகளை இருக்கிறபடி பேசமுடியாமல் உலககாரியங்களைக் கொண்டு உவமானமாகப் பேசினார். அப்போஸ்தலன் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டுத் தாம் அங்கு கண்டவைகளையும் கேட்ட வார்த்தைகளையும் திரும்ப அவரால் பேசமுடியவில்லை. ஏனென்றால் அவைகள் "மனுஷரால் பேச முடியாததும் வாக்குக் கெட்டாதவைகளுமாயிருந்தன." மனுஷனுடைய நாவு அவைகளை உச்சரிக்கவும் தகுதியுள்ளதல்ல. "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவு

யில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." நமது சுதந்தரம் எத்தன்மையானதென்று கடவுள் விஸ்தரிக்காமல் விட்ட காரணம் இதுதான். கடைசியாகப் பார்க்கப்போனால் "கர்த்தரே நம்து சுதந்தரமாவார்." அதற்குக் குறைந்ததொன்றும் நம்மைத் திருப்தி செய்யாது.

அந்தச் சுதந்தரத்தின் பூரண மகிமையை இப்போது நாம் பூரணமாய் அறிய முடியாவிட்டாலும், அதன் முன் ருசியை இங்கேயே அனுபவிக்கலாம். "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே" (கொலோ. 1: 12). எப்படி ஆயத்தப்படுத்துகிறார்? முதலாவது, பாவத்தால் மரித்தவர்களான நம்மை உயிர்ப்பித்துப் புதுச்சிருஷ்டியாக்குகிறார். கிறிஸ்துவின் மூலமாய் தேவ ஜீவனை நாம் பெற்றுப் பிழைக்கிறோம். இரண்டாவது, நம்மைத் தமக்குப் புத்திரராக்குகிறார். கிறிஸ்துவைத் தங்கள் சொந்த ரட்சகராக்கிக் கொண்டவர்கள் யார் யாரோ அவர்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாகும்படியான அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் என்னும் சொல் நமக்குள் வெகு சாதாரணமாய்ப் போய்விட்டதால் அதன் மகத்துவத்தையும் மேன்மையையும் நாம் சரியாய் உணரவில்லை. இராஜகுமாரன் ஒருவன் தன் உடையால் நடையால் பார்வையால் சத்தத்தால் தன் தேகத்தில் ஓடும் ரத்தத்தால் தான் இராஜகுமாரன் என்பதை உலகத்துக்குக் காண்பிக்கிறான். நாம் சர்வத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றும் ராஜாதிராஜாவின் பிள்ளைகளாயிருக்கும் நமது காரியம் பரிதாபமாயிருக்கிறது. உலகத்தில் நாம அற்பராயிருந்தாலும் கடவுளுடைய சொந்தப் பிள்ளைகள் என்பது நிச்சயமல்லவா? கடவுள் நமது பிதாவென்பதையும் நாம் அவருடைய பிள்ளைகளென்பதையும் நாம் இன்னும் சரியாய்க் கிரகித்துக்கொள்ளவில்லை. ஐந்து நிமிஷமாவது அமர்ந்திருந்து இந்த மகத்துவமான பிதாபுத்திர சம்பந்தத்தின் உன்னதமான மேன்மையை நாம் உணர்ந்தால் நலமாயிருக்கும். நாம் பிள்ளைகள் என்கிற உணர்ச்சிபற்றுப் போகும்போது அவர் நமது பிதாவென்கிற உணர்ச்

சியும் அற்றுப்போகும். பிள்ளைகள் என்கிற நிச்சயம் பெருகும்போது சுதந்தரர் என்கிற நிச்சயமும் பெருகும். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே", என்றுவது, சுதந்தரவாளிகளாக்குகிறார். சுதந்தரம் அந்நியருக்கல்ல, மக்களுக்கே உரியது. அரசர் மாளிகை ஒன்றைச் சுற்றிப்பார்க்கப் போனவர்கள், பல அறைகளைப் பார்த்தபோதிலும் சில அறைகளுள் பிரவேசிக்க அவர்களுக்கு அனுமதியில்லை. இப்படியிருக்க வெளியிலிருந்து வந்த ஒரு சிறுவன் தாராளமாய் அந்த அறைக்குள் சென்றான். அவன் யாரென்று விசாரித்ததில் அரசர் குமாரன் என்றறிந்தார்கள். அவனே சுதந்தரவாளி. அந்நியருக்கு அங்கு இடமில்லை.

பாவத்தால் இழந்த பிதாபுத்திர சம்பந்தம் திரும்பக்கிடைக்கும்போது இழந்துபோன சுதந்தரமும் நமக்குக் கிடைக்கவேண்டியது நியாயமே. தகப்பன் மரித்தபின்பே மக்கள் சுதந்தரத்தைப் பெறுவார்கள். இது மக்கள் பிரயாசப்பட்டுச் சம்பாதித்த சுதந்தரமல்ல. தகப்பனுக்கும் மக்களுக்குமுள்ள சம்பந்தத்தின் பலனைக் கிடைக்கும் சுதந்தரம். தகப்பனுக்குப் பின்பே மக்களுக்குச் சுதந்தரம் கிடைக்கும் என்று சொன்னோம். நமது பரம தகப்பன் மரிப்பதெப்போ, நாம் சுதந்தரத்தைப் பெறுவதெப்போ? நித்திய பிதாவுக்குச் சாவில்லை. ஆகையால் நமக்குச் சுதந்தரமில்லையென்று சொல்லலாமா? அவர் சாவாமையுள்ளவராதலால் அவர் சாகுங்காலத்துக்காக நாம் காத்திருக்கவேண்டியதில்லை. பூரண சுதந்தரம் இனி வருகிறதாயிருந்தாலும், அதன் முன் ருசியை இப்போதே நாம் அனுபவிக்கவேண்டுமென்பது நமது பிதாவின் சித்தம். அவர் "நம்மை கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார்". கிறிஸ்துவினுடையவைகள் யாவும் நம்முடையவைகளே. அவைகளை அனுபவியாதிருப்பது நமது குற்றமே. சகல சம்பூரணமுமுள்ள ஒரு தகப்பனுடைய பிள்ளை சரியாய்ச் சாப்பிடாமலும் உடுத்தாமலும் ஏழைக்கோலமாய் நடந்தால் அது அவன் தப்பிதமே. அவ்வாறு நடப்பதால் தகப்பனுக்கும் அவமானத்தை உண்டாக்குகிறான்.

நமது காரியமும் அதுபோலவே. நமது பாவத்தாலும் அவிசுவாசத்தாலும் பரமபிதா நமது ஆன்மாவுக்குள் நமக்காக வைத்திருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவியாதிருக்கிறோம். கிறிஸ்து எப்படி நமக்குச் சொந்தமோ அதுபோலவே அவருடைய சுதந்தரமும் நமக்குச் சொந்தம். பிதாவினுடையவைகள் நம்முடையவைகளே. பூமியில் நிறைந்துள்ள அலங்காரமான சிருஷ்டிப்புகளைக் காணும்போதும், வான ஜோதிகளை நோக்கும்போதும், விசாலமான சமுத்திரத்தையும் உன்னதமான மலைகளையும் பார்க்கும்பொழுதும், இவை யாவும் என் பிதாவினுடையவைகள் அல்லவா? ஆகையால் அவைகள் என்னுடையவைகளே என்று நாம் ஏன் சொல்லக்கூடாது? நாம் தரித்திரராயிருப்பதால் அப்படிச் சொல்லக்கூடாதோ? தரித்திரமென்றால் என்ன, ஐசுவரியமென்றால் என்னவென்பதையும் நாம் சோதித்து அறியவேண்டும். ஆபிரகாமுக்கு ஒரு அடி நிலமாவது சொந்தமில்லாதிருந்தபோது தேவன் அவரைப்பார்த்து: "ஆபிரகாமே, உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலேயிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்குக் கொடுத்தேன்; நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி, அதை உனக்குத் தருவேன்" என்றார். பார்வைக்கு ஆபிரகாம் பரதேசி. தேவன் ஆபிரகாமைப் பார்த்து நீ பரதேசியல்ல, நீ என் பிள்ளையாகையால் என்னுடையவைகள் யாவும் உன்னுடையவைகளே என்றார். தலை சாய்க்க இடமற்றவரான பரதேசியாகிய கிறிஸ்து தாம் சர்வபூமிக்கும் ஆண்டவரென்பதை மறக்கவில்லை. "பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகளே" என்று சொன்னவரும் அவரே. "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்றார். இந்த நிச்சயத்தாலே அப்போஸ்தலன் "நாங்கள் தரித்திரரென்றெண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். தரித்திரத்திற்கும் ஐசுவரியத்திற்குமுள்ள வித்தியாசத்தைத் திரும்பவும் காண்கிறோம். கடவுள் பார்வையில் பொருளுள்ளோர் ஐசுவரியவான்களல்ல; ஏழைகள் தரித்திருமல்ல

திருப்தியுள்ளவனே ஐசுவரியவான். திருப்தியற்றவன் தரித்திரன். ஐசுவரியவான்கள் எப்பொழுதும் அதிருப்தியுடையவர்கள். அவர்கள் பணம் பொன்னும் வெள்ளியுமோ அவர்கள் தாகத்தைத் தீர்ப்பதில்லை. மற்றவர்கள் அவர்களை ஐசுவரியவான்கள் என்று போற்றினாலும் கடவுள் பார்வையில் அவர்கள் தரித்திரரே. அவர்கள் மனக்கவலையும் பேராசையும் பொருளைப்பற்றிய இடைவிடாத அச்சமும் அவர்களை நிர்ப்பாக்கியராக்கிவிடுகின்றன. கடவுள் பிள்ளைகள் ஏழைகளானாலும் அவர்கள் மனோரம்மியத்தையும், அமர்ந்த சிந்தையையும், முக மலர்ச்சியையும் அவர்கள் காணும்போது வெட்கப்படவேணும். அவர்கள் தரித்திரரென்றெண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கும் சித்து அவர்கள் வசமிருக்கிறது. ஐசுவரியவான்களோ அநேகரைத் தரித்திரராக்குகிறார்கள். ஏனென்றால் அநேகருடைய வறுமையே ஒருவனுடைய ஐசுவரியம். கடவுளிடத்தில் ஐசுவரியவான்யிருக்கும் வழிபாராமல் தங்களுக்காகவே ஆஸ்தியைச் சேர்க்கிறவர்களுக்கு சுதந்தரம் இங்குமில்லை அங்குமில்லை. கர்த்தரைச் சுதந்தரமாக்கிக்கொண்ட பிள்ளைகளின் நற்காலம் பிறந்து வருகிறது. கடவுளுடைய கரம் வெளிப்பட்டு, தேவராஜ்யம் எங்கும் ஆளுகை செய்யும்போது, தேவமக்கள் யாவரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராயிருந்து அந்தப் பாக்கியமான காலத்தில் ஆளுகை செய்வார்கள். அழிந்துபோகும் வெள்ளியும் பொன்னும் அவர்கள் சுதந்தரமல்ல. அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரத்தைப் பெற்று வாழுவார்கள். இம்மையிலும் அவர்கள் கைவிடப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் சுதந்தரமாக்கியிருப்பதால் அவர்களுக்குத் தேவையான நன்மைகளை பிதா தவறாமல் அவர்களுக்குச் சேர்த்துப் பராமரித்துவருகிறார். ஆண்டவர் கிருபையாய்த் தங்களை நடத்துவதை அவர்கள் அறிந்து மகிழ்ச்சியுடன் பிழைக்கிறார்கள். இவர்களே சுதந்தரவாளிகள்.

## III. அச்சாரம்

பரமபிதா நம்மைத் தமது சொந்தப் பிள்ளைகளும் சுதந்தரருமாக்கினதுமன்றி பூரண சுதந்தரத்தை நாம் பெற்றுக்கொள்ளுவோம்

என்கிற நிச்சயம் நமக்கு உண்டாகும்படி ஆவி என்னும் அச்சாரத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கு முத்திரையும், சுதந்தரிப்போம் என்பதற்கு அச்சாரமும் நமக்கு வேண்டும். "அவர் நம்மை முத்திரித்து நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவோர்கள் என்பதற்கு ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (2 கொ. 1 : 22; எபே. 1 : 14).

அச்சாரமாவது என்ன? பின் வரப்போகிற பெருந்தொகைக்கு முன் பெற்றுக் கொள்ளும் சிறு தொகை. வியாபாரம் விற்பனை முதலிய விஷயங்களில் அச்சாரம் என்னும் சொல் ஆதிமுதல் வழங்கப்பெற்று வருகிறது. அதே வார்த்தையைத்தான் அப்போஸ்தலன் இந்த இடத்திலும் உபயோகிக்கிறார். நிலத்தை விற்பவன் முதலில் பெற்றுக் கொள்ளும் அச்சாரமாகிய சிறுதொகை இனி அவன் பெற்றுக்கொள்ளப் போகிற பெருந்தொகைக்கு ஆதாரமும் உறுதியுமாயிருக்கிறது. யூதர்கள் வயலிலிருந்து சேர்க்கும் முதற்பலன் சொற்பம், ஆகிலும் சீக்கிரத்தில் கிடைக்கும் பெரிய அறுப்புக்கு அது அச்சாரமும் நிச்சயமுமாகிறது. இம்மையில் நாம் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அப்போஸ்தலன் முதற்பலன் என்று அழைக்கிறார். "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாம்" (ரோ. 8:23). ஒரு பெண்ணை விவாகம் செய்யப்போகிறவன் நிச்சயார்த்த தினத்தில் அவளுக்கு ஒரு ஆபரணத்தைக் கொடுக்கிறான். அது ஒரு மோதிரம் அல்லது பொற்சங்கிலியாயிருக்கலாம். பெண் அணிந்துகொள்ளும் இந்த ஆபரணம் புருஷனுடைய ஆஸ்திமுழுவதும் சீக்கிரம் தனக்குச் சொந்தமாகுமென்பதற்கு அச்சாரம். இதுபோலவே நமக்குள் வசிக்கும் ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். நமக்குச் சுதந்தரம் உண்டோ இல்லையோவென்று வேறொருவரை நாம் கேட்கவேண்டியதில்லை. ஆவியானவர்தாமே நமக்குள்ளே உறுதியான சாட்சியாயிருக்கிறார். அதுவே நமக்கு ஆதாரம். உலகத்தில் அச்சாரத்தைக் கொடுத்த பின்பு வாக்குமீறி மோசஞ்செய்கிற மனுஷ

இருக்கிறார்கள். பரமபிதாவோ உண்மையுள்ளவர். அவர் வாக்கு மாறுகிறவரல்ல. ஒருசமயத்தில் ஆம் என்றும் மறுசமயத்தில் அல்லவென்றும் அவர் ஒருபோதும் சொல்லமாட்டார். அவர் ஆவியானவரால் நம்மை முத்திரித்தபோது ஆம் என்று சொன்னார். ஆமென் என்பதே அவரது நித்திய வசனம்.

இந்த ஆவியின் அச்சாரத்தை நாம் பெற்றிருக்கிறோமா? சுதந்தரம் கிறிஸ்துவினுடையது. அவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியத்தின் பலனாக நாம் உடன் சுதந்தரராகிறோம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." அவருடையவனல்லவென்றால் பின்னை யாருடையவன்? அவனுக்கும் சுதந்தரமேது? தேவனுடைய சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளே. அவர் தமது ஆவியினால் நமக்குள் வரும்போது அவருடைய ஆசீர்வாதங்களும் நமக்குள்ளே வருகின்றன. இனி நாம் அடையப்போகும் பூரணமான சுதந்தரத்திற்கு அவருடைய ஆவி இப்போது நமக்கு அச்சாரமும் நிச்சயமுமாயிருக்கிறார். ஆவியானவரே நமது சுதந்தரத்தின் முன்ருசி.

ஆவியானவர் நமக்குள்ளிருந்தால் ஆவியின் கனி நம்மில் காணப்படவேண்டும். ஆவியின் கனிகளே நமது சுதந்தரத்தின் முதற்பலன்கள். நமதாண்டவருடைய ஜீவிய முழுவதும் ஆவிக்குரியதாயிருந்தது. ஆவியில் பிறந்து, ஆவியில் வளர்ந்து, ஆவியில் நிறைந்து, ஆவியில் வனாந்தரஞ்சென்று, ஆவியில் கலிலேயா திரும்பி, ஆவியில் உபதேசித்து, ஆவியில் பலத்த கிரியைகளை நடப்பித்து, ஆவியில் கல்வாரி சென்று, ஆவியில் உயிர்ப்பிக்கப்பெற்று, ஆவியில் மகிமைக்குள் பிரவேசித்து, தம்மை முழுவதுமாய் ஆண்டுநடத்தின அந்த ஆவியையே சீஷர்கள்மேல் பொழிந்தார். திருச்சபை பிறந்தது. கிறிஸ்துமார்க்கம் உண்டாயிற்று. அவரது அடியாரும் ஆவியினால் நிறைந்து, ஆவியினால் போதிக்கப்பெற்று, ஆவியினால் நடந்து, ஆவியினால் பிரசங்கித்து, ஆவியினால் ஜெபித்து, ஆவியினால் நிருபங்களையும் சுவிசேஷத்தையும் எழுதினார்கள். ஆவியின் பலத்தால் சபைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த ஆவியானவரே நமது சுதந்-

தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். அச்சாரமில்லாதவர்களுக்குச் சுதந்தரமில்லை.

இவ்வளவு முக்கியமான விஷயத்தைக் குறித்து நாம் அஜாக்கிரதையாயிருக்கக் கூடாது. நமது காரியம் எப்படியென்று திட்டமாய் அறியவேண்டும். நாம் ஆவிக்குரியவர்களோ, மாம்சத்துக்குரியவர்களோ? கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மாற்றுவதே ஆவியானவர் நமக்குள் நடப்பிக்கும் பிரதானமான வேலை. நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போது கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகிறது. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்து மார்க்கம். நமது ஆலய அலங்காரங்களைக் குறித்தும், ஆராதனை ஒழுங்கைக் குறித்தும், ஆசாரங்களின் சிறப்பைக் குறித்தும், பற்பல முயற்சிகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுவதில் பிரயோஜனமில்லை. பரமபிதா தமது குமாரனை அனுப்பின நோக்கம் நம்மில் பலிக்காமற்போனால் இவைகள் யாவும் வீணாகும். நமது புறம்பான காரியங்களைக் கண்டு ஆண்டவர் திருப்தியடையமாட்டார். கிறிஸ்தவர்கள் என்கிற பேரை வைத்திருக்கிற ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவின் சிந்தையை அணிந்து அவர் சாயலுக்கொப்பாக மாற்றப்படவேண்டும். அவர் பட்ட பாடுகளும் அவர் நிறைவேற்றின சகல கிரியைகளும் இதற்காகவே. காலமெல்லாம் பாவமன்னிப்புக் கிறிஸ்தவர்களாயிருப்பதில் பிரயோஜனமில்லை. பாவமன்னிப்பு அவசியமே. பாவமன்னிப்புக்காக மாத்திரமல்ல, தமது திவ்ய சுபாவத்துக்கு ஒப்பாக நம்மை மாற்றும்படிக்கே ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்தார். நோய் நீங்கினால் மாத்திரம் போதாது; ஆள் பலப்படவேண்டும். நமக்குள் வசிக்கும் ஆவியானவர் கிறிஸ்துவின் அழகை நமக்குக் காண்பித்து, அவர்மேல் நமக்கு ஆவலை உண்டுபண்ணி, நம்மை அவருடைய சாயலுக்கொப்பாக மாற்றுகிறார். இந்த மாறுதல் இனி நாம் அவருக்கொப்பாக மாற்றப்படுவதற்கு அச்சாரம். இப்போது ஜீவியத்தில் மாறுதலடையாதவர்கள் இனி அவருக்கொப்பாக மாறுதலடையும் பாக்கியத்தைப் பெறமாட்டார்கள். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு

ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." (2 கொ. 3 : 18) இந்த அறிவும் இந்த வாஞ்சையும் அநேகருக்கு இல்லை. அவர்களுடைய கிறிஸ்து மார்க்கம் சுவிசேஷமார்க்கமல்ல. முற்றிலும் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து தங்கள் சுய இஷ்டப்படி நடந்து, சகல பாவங்களையும் நடப்பித்துக்கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவற்ற கிறிஸ்துமார்க்கம் எங்கேயாவது உண்டா? இந்தியா முழுவதும் இம்மாதிரிக் கிறிஸ்தவர்களாவார்களானாலும் அதைப்போல் ஆண்டவருக்கு மனவேதனையான காரியம் வேறில்லை. ஆனால் நம்முடைய சந்தோஷத்திற்கோ அளவிராது. ஏனென்றால் நமது அறிக்கைப் பத்திரங்களில் கிறிஸ்தவர்கள் தொகையைக் கோடிக்கணக்காய்க் கண்டு மகிழுவோம். நமது சபை ஜாபிதாவில் பேர் எழுத இடமிராது. ஆகிலும் என்ன? இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒருவர் பேராகிலும் ஜீவ புஸ்தகத்தில் இராதென்பது நிச்சயம். காரியம் அறியாமல் அநேகர் மோசம் போகிறார்கள். ஏராளமான ஜனங்களை மார்க்கத்தில் சேர்த்துவிட வேண்டுமென்பது அவர்கள் தீர்மானம். மார்க்கத்தில் அல்ல, கிறிஸ்துவிடத்தில் சேர்ந்தால் அல்லவோ அவர்களுக்கு மீட்புக்கிடைக்கும். கிறிஸ்து மார்க்கம் ஒரு ஜாதிக்கோ ஒரு தேசத்துக்கோ உரிமையானதல்ல. அக்கிரமங்களால் நிறைந்திருக்கும் நாங்கள் கடவுளுக்குச் சொந்தமான ஜனமென்று பெருமைபாராட்டின யூதஜாதி வேருடன் அழிந்தது. எவனொருவன் மனந்திரும்பி கிறிஸ்துவைச் சொந்தமாக்கி அவரால் புதுச்சிருஷ்டியாக்கப் படுகிறானோ அவனே அவருக்கு உரியவனுவான். எங்கள் தேசம் கிறிஸ்தவதேசம் என்னும் பெருமை ஒழிந்தது. கிறிஸ்தவர்கள் என்னும் பேர்பூண்ட தேசத்தவர் நடப்பிக்கும் அக்கிரமங்களும் கொலைபாதகங்களும் சிறப்பெருமையும் உலகம் அறியாத விஷயமல்ல. உள்ளம் கலங்கத்தக்க பயங்கரமான காரியங்களை இவர்கள் துணிந்து நடப்பிக்கிறார்கள்; பெரிய கிறிஸ்து

வர்கள். இவர்களை நினைத்து அருமை ரட்சகர் இடைவிடாது கண்ணீர் சிந்துகிறார். ஒரு சபையில் அல்ல, ஒரு தேசத்திலே மல்ல கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான அருமையான தேவமக்கள் உலகமெங்கும் சிதறுண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித்தனியே அவயவமாயும், எல்லாரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமாயுமிருக்கிறார்கள். அவருடைய ஆவிபெற்றவர்களே அவர் சரீரத்தின் அவயவங்களாயிருக்கக்கூடும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."

ஆண்டவர் அச்சாரமாகிய ஆவியைப்பெற்ற தமது சீஷர்களைப் பார்த்து: நீங்கள் உலகத்தில் எனக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்றார். தான் கண்டதையும் கேட்டதையும் சொல்லுகிறவனே சாட்சியாவான். சீஷர்களும் ஆண்டவரிடத்தில் தாங்கள் கண்டதையும் கேட்டவைகளையும் உலகத்துக்கு அறிவிக்கவேண்டியவர்களே. ஆனால் சாட்சிகள் என்று ஆண்டவர் சொன்னபோது அவர் கருத்து மிகவும் மேலானது. அவர்கள் தமக்கு மாதிரிகளாயிருக்கவேண்டுமென்று விரும்பினார். சாட்சி வாய்க்குரியது; மாதிரி ஜீவியத்துக்குரியது. அவர்கள் வாக்கிலும் ஜீவியத்திலும் ஆண்டவருக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும். வியாபாரிகள் சிறு மாதிரித் துண்டுகளை நமக்குக் காண்பித்து; அவற்றில் எந்த மாதிரியை நாம் கேட்கிறோமோ அதில் எவ்வளவு துணி வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள். எந்த ஒரு மனுஷனும் தன்னிலே பூரணமுள்ளவனல்ல. கிறிஸ்துவின் சாயல்பெற்ற பிள்ளைகள் தனித்தனியே சிறு மாதிரித்துண்டுகள்போலிருக்கிறார்கள். நான் இனி உலகத்திலிரேன், நான் என் பிதாவிடம் போகிறேன். நீங்கள் உலகத்தில் இருக்கிறீர்கள், நீங்கள் எனக்கு மாதிரிகள் என்றார். கிறிஸ்துவின் சாயல்பெற்ற பிள்ளைகள் மூலமாய் கிறிஸ்து உலகத்தில் அறியப்படவேண்டும். நமது வார்த்தைகளைப் பார்க்கிலும் நமது ஜீவியமே விசேஷம்.

இதுவரை தியானித்ததைச் சுருக்கிப்பார்ப்போம். கர்த்தரே நமது சுதந்தரம். அவரை நாம் அனுபவிப்பது நித்திய பேரின்பம். "பரா

லோகத்தில் உம்மையல்லாமல் எனக்கார் உண்டு; பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை." கர்த்தர் நமது சுதந்தரமாயிருப்பதுபோல நாமும் அவர் சுதந்தரமாயிருக்கிறோம். "நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்" என்பதற்கு அடையாளமாகத் தமது ஆவியினால் நம்மை முத்திரித்திருக்கிறார். நாம் சுதந்தரவாளிகள் என்பதற்கு ஆவியானவர் நமக்கு அச்சாரமாயிருக்கிறார். நாம் பிள்ளைகளாகாவிட்டால் சுதந்தரமில்லை. மறுபிறப்பில்லாமல் பிள்ளைகளாவதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் மறுபிறப்பில்லை. விசுவாசமில்லாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. அவரை இன்னதென்று அறிவதுமில்லை, ஆசீர்வாதமுமில்லை.

பட்டு, யுகாயுகமாய் ஜாதிகள் வழியாகச் சென்று காலம் நிறைவேறின போது பிரத்தியக்ஷமாக வெளிப்பட்டிருக்கிறார். பரலோகத்தி லிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமான சகலமும் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமைப் படவேண்டுமென்பதே அந்தத் தீர் மானம்.

கடவுள் தமது தீர்மானத்தை ஆதியிலேயே ஏன் நிறைவேற்றக் கூடாது? இது அவர் பலக்குறைவும் வாஞ்சைக்குறைவுமல்ல. மனு ஷனுடைய அறியாமையும் சுயசித்தநாட்டமுமே தாமதத்திற்குக் காரணம். மற்றச் சிருஷ்டிகளைப்போல் மனுஷனை நடத்துவதற்கு மனுஷன் ஒரு யந்திரமல்ல. பிரமாண்டமான உலகங்களை கடவுள் தமது சித்தப்படி எத்தடையுமின்றி நடத்தக்கூடும். மனுஷன் விஷயத்தில் மாத்திரம் அவர் கஷ்டப்படுகிறார். அவன் இணங்கும் வரை காத்திருக்கிறார். தம்மைப்போல் மனுஷனுக்கும் சுயாதீன சித்தத்தைக் கொடுத்தார். அதுவே தேவசாயல். அவன் பலவந்த மில்லாமல் தானாகவே தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்து கொண்டு பிழைக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால் எங்கே சுயசித்தமுண்டோ அங்கே நன்மையைத் தெரிந்துகொள்வது போலவே தீமையைத் தெரிந்துகொள்ளும் இயல்பு இருக்கவேண்டும். மற்றப்படி மனுஷன் ஆட்டிவிட்ட பம்பரத்துக்கும், தட்டி நடத்தும் மோட்டாருக்கும் ஒப்பாவான். தானே தெரிந்துகொள்ளும் இந்தச் சுயாதீனமே பாவ ஆரம்பத்துக்கும் பாவப்பெருக்கத்துக்கும் காரணம். இன்று நாம் நன்மைசெய்தாலும் தீமை செய்தாலும் நாம் தானே செய்கிறோம். கடவுளைக் குற்றப்படுத்துவதில் என்ன லாபம்? சுயா தீன சித்தம் மனுஷனுக்குப் பாக்கியமும் மேன்மையுமானது. அது கடவுளுக்குக் கீழ்ப்படியவும் கூடும், எதிர்க்கவும் கூடும். இந்த எதிர்ப்பை அடக்குவதற்கு ஆண்டவர் கையாடின முறை காலங்கள். நீண்டகாலமாக மனுமக்கள் பட்ட கஷ்டங்களாலும், பாவத்தின் கேடுக ளாலும், தாங்களே கடவுளைத் தேடவும், ரட்சிப்பை வாஞ்சிக்கவும் அவர் சித்தத்திற்குக் கீழடங்கவும் ஏதுவுண்டாயிற்று. இதன் உண் மையை வேதசரித்திரங்களில் காண்கிறோம். அவர்களுக்கு இக்கட்

மும் சஞ்சலமும் உண்டானபோது அவரே தங்கள் ரட்சிப்பின் கன்மலையென்று உணர்ந்து அதிகாலமே அவரைத் தேடினார்கள். பசியில்லாதவன் விருந்தை அசட்டை செய்வான். காலம் நிறைவேறினபோது அதாவது ஏற்றசமயத்தில் கடவுள் தமது குமாரனை உலகத்தில் அனுப்பினார். அவர் வெகுதூரத்திலிருந்து வந்தவரல்ல. உலகத்திலிருந்தவரை அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர் மாம்ச சரீரத்தில் வெளிப்பட்டபோது அவரைக் கண்டார்கள். உலகத்தின் பாவப்பெருக்கம் கடவுளின் அநாதி தீர்மானத்தை அழிக்காமல் அந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கே ஏதுவாயிற்று. "பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படவேண்டும்" என்பதே அந்தத் தீர்மானம்.

சகலமும் ஒற்றுமைப்படும் வழி கிறிஸ்து. "கிறிஸ்துவுக்குள்ளே" என்பது விசேஷமாய் அவர் சிலுவையைக் குறிக்கும். சிலுவை என்பது மரத்தையல்ல அவரடைந்த மகாபெரிய ரகசியமாகிய அவருடைய மரணத்தைக் குறிக்கும். அவருடைய மரணத்தின் மூலமாகவே பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் பூரண ஒற்றுமைப் படவேண்டியது. எனக்காக மரித்தீரே, என் பாவங்களை மன்னியும் என்பது அநேகருடைய ஜீவகால விண்ணப்பம். அதற்குமேல் அவர்கள் யோசிக்கிறதில்லை. கிறிஸ்துவின் மரணத்தில் வெளிப்பட்ட தேவதீர்மானமோ மகா விசாலம். நாம் அதை அறியவேண்டும். நமது மனம் பரவசப்படத்தக்கதாக நாம் அதைத் தியானிக்கவேண்டும். இந்த மகத்தான பெரிய ரட்சிப்பை நாம் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். சகலமும் ஒற்றுமைப்படுவது நாளைச் சம்பவிக்கும் காரியமல்ல. அல்லது நாம் தீர்மானிக்கும் காலத்தில் நடக்கும் காரியமுமல்ல. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி" என்று அப்போஸ்தலன் கூறுகிறார். கடவுள் ஆதிமுதல் உலகத்தை நடத்திவந்திருக்கிற விதம் காலக்கிரமப்படியே. அவர் ஒரு காரியத்தை ஆரம்பித்து, அதற்குக் காலங்கொடுத்து, அது முடிவுக்கு வரும்போது மறுகாரியத்தை ஆரம்பிக்கிறார். இவ்வாறு ஆதிமுதற்கொண்டு காலத்துக்குக்காலம் பழம்

படியாக மனுஷரைப் பக்குவப்படுத்தித் தமது தீர்மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி வந்திருக்கிறார். சகலத்தையும் ஒற்றுமையாய்க் கூட்டிச் சேர்க்கவேண்டும் என்கிற அவருடைய தீர்மானத்தை கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றி, அவரையே அதை நடத்திவைக்கும் தலையாக்கினார். மகிமையடைந்த ஆண்டவர் தமது ஆவியின் வல்லமையால் ஒற்றுமையாக்கும் ஊழியத்தை உலகில் நடப்பித்து வருகிறார். பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் கிறிஸ்துவுக்குள் பூரண ஒற்றுமைப்படுங்காலம் எப்போதென்று நமக்குத் தெரியாது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும்." இதுவரை உலகத்தைத் தமது சித்தப்படி நடத்தி வந்தவரே, இனிமேலும் நடத்தித் தமது தீர்மானத்தை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்.

## கிறிஸ்துவுக்குள்ளே நடக்கவேண்டிய ஒற்றுமையைக் கவனிப்போம்.

1. **தேவனுக்கும் மனுஷனுக்கும் ஒற்றுமைவேண்டும்.** இதை "ஒப்புரவாகுதல்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஒப்புரவாகுதல் என்றால் ஒற்றுமைப்படல் அல்லது ஐக்கியப்படல் என்று அருத்தம். பாவம் மனுஷனை கடவுளைவிட்டுப் பிரித்தது. அவன் தன் பாவத்தால் கடவுளுக்குப் பகைஞனானான். பரம பிதாவாகிய கடவுளோ மனுஷனைத் தள்ளிவிடவில்லை. இருதயமுள்ள பிதா பாவியைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளச் சித்தங்கொண்டார். நாம் அவரோடு ஒப்புரவாகிற வழியை அவரே உண்டாக்கினார். அந்த வழி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணமே. கிறிஸ்துவின் சிலுவை பாவிகளை இழுத்துக்கொள்ளும் சர்வசாதனம். "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்" என்று அவரே சொன்னார். "கடவுள் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்." அவர் வழியை உண்டாக்கின பின் நாம் அவரோடு ஒப்புரவாகும்படி அன்புடன் நம்மை அழைக்கிறார். பாவத்தால் என்னைவிட்டுப் பிரிந்துபோன மக்களே, நீங்கள் என்னோடு ஐக்கியப்படக்கூடிய வழியை நானே உண்டாக்கியிருக்கி

றேன், நீங்கள் என்னிடம் வாருங்கள் என்று தமது கரத்தை நீட்டி நம்மைக் கூப்பிடுகிறார்.

நமது பாவங்களுக்காகத் துக்கப்பட்டு கடவுளிடம் மன்னிப்புக் கேட்டால் அவர் மன்னிக்கக் கூடாதா? குற்றமற்ற கிறிஸ்துவைத் தண்டித்து அவரை மரணத்திற்குள்ளாக்கித் தானா நம்மோடு ஒப்புரவாகவேண்டும் என்று கேட்பார் பலர். இது சிலுவையின் தாற்பரியத்தை அறியாத பேச்சு. இந்த அறியாமைக்குக் காரணம் சிலுவையைப்பற்றிய தவறான போதனை. அந்தப் போதனை பாவத்தால் வேதனையடைகிறவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கலாம்; யோசிக்கிறவர்களுக்கோ சங்கடமாயிருக்கும். அந்தப் போதனை என்ன? கடவுள் மகா பரிசுத்தரும் நீதியுமுள்ளவர்; நாமோ அந்தப் பாவிகள். நீதியின்படி கடவுள் கோபம் நம்மேல் பற்றியெரிந்து நாம் அழிந்தோர்களாகவேண்டியது நியாயம். ஆனால் அவர் தமது கோபத்தைக் கிறிஸ்துவின்மேல் சுமத்தி, நமக்குப் பதிலாக அவரைத் தண்டித்து, அவரை மரிக்கும்படி செய்ததால் கடவுள் கோபம் நீங்கி சாந்தம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு மன்னிக்க அவருக்கு மனமுண்டாயிற்று என்பதே. இந்தப் போதனை கடவுள் நம்மேல் கோபமாயிருந்ததுபோலவும், கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து நமக்கு வரவேண்டிய ஆக்கினையைத் தாம் ஏற்றுக்கொண்டு பாடுபட்டதால், கடவுள் கோபம் தீர்ந்து, நமக்கு மன்னிக்க அவருக்கு மனம் வந்தது போலவும் காட்டுகிறது. இது வேதபோதனைக்கு விரோதம். ஆண்டவர் நமக்காகக் கொடிய பாடுகள் பட்டது உண்மையே. அது கடவுள் கோபத்தைத் தீர்ப்பதற்கும், அவரை நம்மோடு ஒப்புரவாக்கச் செய்வதற்கும் அல்ல. அவர் பாடுகளின் ரகசியத்தை நாம் அறியவேண்டும்.

பாவ மன்னிப்பும் ஐக்கியமும் லேசாய்க் கிடைக்கிற காரியமல்ல. ஒருவனுடைய அக்கிரமத்தை உண்மையாய் மன்னிப்பது மன்னிக்கிறவனுக்கு வேதனையான காரியம். பெருந்தொகை கடன்பட்டவனுக்கு மன்னிக்கவேண்டுமானால் அத்தொகையை இழந்து நஷ்டப்படாமல் முடியாது. கடவுள் நமக்கு மன்னித்துக்கொள்ளக் கூடாதா? ஆண்டவருக்கு இவ்வளவு அவஸ்தைகள் என்னத்துக்கு என்று பேசு

கிறவர்கள் முன்பின் யோசிக்காதவர்கள். ஒரு நல்ல தகப்பனுடைய மகன் ஒரு பொல்லாப்பைச் செய்து மன்னிப்புக் கேட்டால் தகப்பன் மன்னித்துக்கொள்ளக் கூடாதா? மன்னிப்பம் இலேசு காரியம். தகப்பனைப் பாருங்கள்! அவன் அவமானத்தாலும் துக்கத்தாலும் நிறைந்து கண்ணீர் வடிக்கிறான். சாப்பிடவோ தூங்கவோ முடியாமல் அவஸ்தைப் படுகிறான். இவ்வளவு துயரத்துக்கும் காரணம் என்ன? மகன் செய்த பாவமும், பிதாபுத்திர சம்பந்தமுமே. மகன் குற்றத்தைத் தன் குற்றமாகவும், மகன் அவமானத்தைத் தன் அவமானமாகவும் உணர்ந்து புலம்பாத தகப்பன் ஒரு தகப்பனா? மன்னித்து விடுவதா பெரிய காரியம்? கடவுள் நமது பிதாவும் நாம் அவர் பிள்ளைகளுமானால் நமது பாவமும் அவமானமும் அவர் இருதயத்தைச் சஞ்சலப் படுத்தாதிருப்பது எப்படி? அவரைப்போல் பரிசுத்தமும் அன்புமுள்ள தந்தை யார்? அவரைப்போல் பாவத்தைப் பகைக்கிறவர்கள் யார்? மகன் தன் துர் நடத்தைக்காகத் துக்கப்படுவதைப் பார்க்கிலும் பெற்றதாய் அதிகமாய்த் துக்கப்படுகிறாளே. நமது பாவத்தை நாம் உணரவுமில்லை அதற்கேற்ற துக்கம் நம்மில் உண்டாகவுமில்லை. பிதாவாகிய கடவுளோ சகிக்கமுடியாத அவஸ்தைப் படுகிறார். ஆனால் ஆவியாயிருக்கிற கடவுள் நமக்காகப் படும் வேதனையை அறியக் கூடியவன் யார்? சொன்னாலும் நம்பப்போகிறவன் யார்? ஆகையால் நமது பாவத்தினிமித்தம் அவர் நெடுநாளும் தமக்குள் அடைந்த அவஸ்தையை மாம்சத்தில் வெளிப்பட்டு உலகத்துக்குப் பிரத்தியக்ஷமாக வெளிப்படுத்தினார். "தேவன் நம்மேல் கோபமாயிருக்க," "கிறிஸ்து நம்மேல் அன்பாயிருக்க" என்பதல்ல. தேவனே நம்மேல் அன்புகூர்ந்து நாம் தம்மோடு ஒப்புரவாகும் வழியை உண்டாக்கினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." அவரே தமது குமாரனைத் தந்து இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். நிந்தையைச் சகிக்க முடியாமல் மரித்தவர்களுண்டு. பாவத்தின் பலனாகிய மரணத்தை ஆண்டவர் ஏற்றுக்கொண்டார். தேவன் கிறிஸ்துவுக்



குள்ளிருந்து நமது பாவங்களினிமித்தம் பாடுபட்டு வெற்றிசிறந்தார். இந்த அதிசயமான அன்பின் காட்சி பாவியின் உள்ளத்தை நொறுக்கி கிறிஸ்துவைப்பற்றிக் கொள்ளும்படி செய்கிறது. பிதாவோடு ஒப்புரவாகும் வழியைக் கண்டடைகிறான். கடவுளோடுள்ள ஐக்கியத்துக்கு சிலுவையே ஆதாரம். கடவுள் சும்மா மன்னித்துக்கொள்ளக் கூடாதாவென்றால் அவர் மன்னித்தாரென்பதற்கு ஆதாரமென்ன? நமக்கு நிச்சயமுண்டாவதெப்படி? அதுமாத்திரமல்ல, சிலுவையில்லாமலே கடவுள் மன்னிக்கிறாரென்று வைத்துக்கொண்டாலும் தேவ ஐக்கியம் கிடைப்பதெப்படி? காலமெல்லாம் அவர் மன்னிக்கிறவராகவும் நாம் அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தைச் செய்து மன்னிப்புக் கேட்கிறவர்களாகவுமே யிருப்போம். கிறிஸ்துவின் மரணம் நமக்கு மன்னிப்பை மாத்திரமல்ல, பாவ வல்லமையிலிருந்தும் பாவ ஆளுகையிலிருந்தும் நம்மை விடுவித்து பரிசுத்த பிதாவோடு நாம் அந்நியோன்னியமாய்ப் பிழைக்கச் செய்கிறது. பாவமன்னிப்புக்காக மாத்திரம் அவர் மரிக்காமல், கடவுளையும் நம்மையும் பிரித்த பாவத்தை ஏற்றுக்கொண்டு, அதைச் சிலுவையில் ஆக்கினைக்குள்ளாக்கி நிர்மூலம் பண்ணினார். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் பாவமன்னிப்போடு, பிதாவுக்குப் பிரியமான பிள்ளைகளாகி, அவரோடு ஒற்றுமைப்பட்டுப் பிழைக்கிறார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று அறிக்கையிடுகிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் கடவுளோடு ஒன்றுமைப் படவேண்டுமென்பது அவரது தீர்மானம். அந்த வழியை விட்டால் வேறு வழியில்லை.

2. மனுஷனுக்குள்ளேயே ஒற்றுமை வேண்டும். மனுஷன் ஒருவனேயானாலும் அவன் பல அம்சங்கள் சேர்ந்தவன். ஆவி, ஆத்துமா, சரீரமாகிய மூன்று பிரதான பாகங்கள் அவனிலுண்டு. இவை தவிர மனம், புத்தி, சித்தம், உணர்ச்சி, இருதயம், ஆசை முதலிய அம்சங்களும் உண்டு. இவையாவும் ஒற்றுமையுடன் பிழைப்பது மனுஷனுக்குப் பாக்கியம். ஆனால் வெடிகுண்டு ஓர் வீட்டுக்குள் விழுந்து வீட்டிலுள்ள யாவும் நொறுங்கிச் சிதறுவதுபோல, பாவம் மனுஷ

னுக்குள் பிரவேசிக்கவே அவன் காரியங்கள் யாவும் அலங்கோல மாயின. பாவம் மனுஷனை கடவுளை விட்டுப் பிரித்தது மாத்திர மல்ல, அவனுக்குள்ளேயே குழப்பங்களும் பிரிவினைகளும் ஏற்பட்டன. தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்திருக்கும் வீடும் ராஜ்யமும் தத்தளிப்பதுபோல மனுஷன் தன்னில் தானே சஞ்சலமடைகிறான். கண் ஒன்று பார்க்க, மனம் ஒன்று யோசிக்க, வாய் ஒன்று பேச, கை ஒன்று செய்ய, கால் ஒருதிசை நோக்க, இவ்வாறு ஏழைமனுஷன் குடிகாரனைப்போல் தள்ளாடுகிறான். இது வெளிக்கு அவ்வளவாய்த் தோன்றுகிறதில்லை. மனுஷர் பொதுவாய் இந்நிலைமையிலிருக்கிற படியால் உள்ளான சீர்கேட்டை அவர்கள் கவனிக்கிறதில்லை. உள்ளூர் கலகம்போல் அவனுக்குள்ளேயே விரோதங்கள் ஏற்பட்டு மனுஷன் சமாதானமிழந்து சஞ்சலத்துக்குள்ளாகிறான். தன் உள் வினையை அறிந்த மனுஷனே தன்னை மனுஷனல்லவென்றும், தான் ஒரு புழுவென்றும், நாயென்றும் தன்னை இகழுகிறான். அந்தோ! என்ன பரிதாபம்! "நிர்ப்பந்தமான மனுஷன் நான்."

மனுஷனுக்குள்ளே ஒற்றுமையில்லை யென்பதைப் புறம்பான குறிப்புகளால் அறியலாம். ஒருவன் ஒன்று கேட்டால் சள்ளென்று விழுதல், தனக்கு விரோதமாய் ஒருவர் பேசினதை அறிந்தால் ஆங்காரம் பொங்குதல், பெற்றமக்களை மரியாதையின்றி நாயே கழுதை என்று கூப்பிடல், வேலைக்காரர்மேல் வெடு வெடுவென்று விழுதல், முகத்துக்குமுன் மரியாதையாகவும் அப்புறம் போய் அவமானமாக வும் பேசுதல், சிறிய நஷ்டத்தையும் சகிக்க முடியாமல் தவிக்குதல், தீமைக்குத் தீமை செய்யும் ஆத்திரம், சரீரம் ஆலயத்திலும் மனம் வேறிடத்திலும் செல்லுதல், காரியங்களைச் சீக்கிரமாய் மறந்து சண் டைப்படல், இவை போன்ற குறிப்புகள் யாவும் மனுஷன் தனக்குள் ளே ஒற்றுமையற்றிருக்கிறான் என்பதற்கு அடையாளங்கள்.

உள்ளான ஒற்றுமை கிறிஸ்துவுக்குள் கிடைக்கும். கிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது பிதாவோடு நம்மை ஒற்று மைப்படுத்தி அதன் பலனாக நமக்குள்ளே ஒற்றுமையை உண்டாக்கு கிறார். "அவர் தமது ஜனத்துக்கு சமாதானம் கூறுவார்." சகல



மும் நமக்குள் ஒற்றுமைப்படும். கிறிஸ்து பிரிந்தவரல்ல. அவரி லுள்ள சகல தத்துவங்களும் பூரண ஒற்றுமைப் பட்டிருந்தன. அவர் தமது ஆவியின் மூலமாய் நமக்குள் வசிக்கும்போது தேவ சமாதா னம் நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளும். உல கம் கொடுக்கமுடியாததும் நம்மிலிருந்து எடுக்கமுடியாததுமான சமா தானத்தை ஆண்டவர் அருளுகிறார். புறம்பே எவ்வளவு பாடுகள் துன்பங்கள் இருந்தபோதிலும் உள்ளான சமாதானம் சகலத்தையும் சகிக்கும். சகலத்தையும் மேற்கொள்ளும். உள்ளான குழப்பமே சிறிய விஷயத்தையும் மலைபோல் காண்பிக்கிறது. நடத்துகிறவ னின்றி வாத்தியக்காரர் அவரவர் இஷ்டம்போல் வாசிப்பார்களானால் சர்வ குழப்பமாகவும், காதுக்கு அருவருப்பாகவும் இருக்கும். தலைவன் நடத்தும்போது சகலமும் ஒற்றுமைப் பட்டு கேட்பதற்கு இன்பமா யிருக்கும். ஆண்டவர் நமக்குள் பிரவேசித்து நம்மை நடத்தும் போது நமது ஆவி, ஆத்துமா, சரீரம், சித்தம், புத்தி, விருப்பம் முதலான தத்துவங்கள் பூரண ஒற்றுமைப்படும். தேவ சமாதானம் நமது பங்காகும். காற்றையும் கடலையும் பார்த்து: இரையாதே அமைதலாயிரு என்று அவர் சொன்னவுடனே, படிப்படியாக அல்ல, அதே நிமிஷத்தில் விரித்த பாய்போல கடலின் கொந்தளிப்பு அடங்கி மிகுந்த அமைதலுண்டானது. அந்த அதிசய காட்சி சீஷர்களுக்கு பிரமிப்பை உண்டாக்கினது. அதேமாதிரி சமாதானகாரணரும் சமா தான கர்த்தருமாகிய ஆண்டவர் நமக்குள் பிரவேசிக்கும்போது சகல கொந்தளிப்புகளும் உள்ளூர் கலகமும் நீங்கி பூரண ஒற்றுமை உண்டா கும். பங்கிட்ட நேசம் பராபரனுக்கு உகவாது. நமக்குள் ஒற்றுமை உண்டாகும்போது நாம் பிதாவிடத்தில் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் முழுச் சிந்தையோடும் முழு பலத்தோடும் அன்பு கூருகிறவர்களாயிருப்போம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டிச்சேர்க்கப் படவேண்டும்."

3. மனுஷனுக்கு மனுஷன் ஒற்றுமை. நாம் கிறிஸ்துவின் மூல மாய் பிதாவோடு ஒற்றுமைப் படும்போது நமக்குள்ளேயே ஒற்றுமை உண்டாகிறது. இதன் பலனாக கடவுள் பிள்ளைகளோடும் ஒற்றுமைப்

பகைக்கிறோம். நமக்குள்ளேயே குழப்பமிருந்தால் பிறரோடு அன்பும் சமாதானமுமாய் நடந்துகொள்ளமுடியாது. சகோதர சிநேகத்தைப் பற்றியும் ஒருவரிலொருவர் அன்பும் ஐக்கியமுமாயிருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் ஆண்டவர் பிரதானமாய்ப் போதிக்கிறார். அவர் எதைப் பிரதானமாகப் போதித்தாரோ அதுதான் நம்மிடத்தில் இல்லை. நமக்குள் பொறாமையும், பெருமையும், குற்றம் பிடித்தலும், அவமானப் படுத்தலும், தீங்குசெய்வதும் காணப்படுவது எவ்வளவு துயரமான விஷயம்! இப்படிப்பட்ட தீய சுபாவங்கள் நம்மை ஆண்டு கொண்டிருக்கும்போது கிறிஸ்தவர்கள் என்னும் பேர் நமக்கென்னத்துக்கு? ஆண்டவர் தமதடியாருக்கு அன்பையே அடையாளமாகத் தந்தார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனாலே நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றார். பொறாமையும் பகையும் பிரிவினையும் கேடான சிந்தையுமுள்ளவர்களை யாருடைய சீஷரென்று சொல்வது? ஜனங்களுக்குள் வெளியரங்கமாகப் பகைக்கிறவர்களும் தீமை செய்கிறவர்களுமுண்டு. மரியாதையாக நடப்பவர்கள் அவ்வளவு தூரம்போகமாட்டார்கள். "வைத்தியர் கொலைகாரர் அல்லவென்றாலும் அவர்கள் செய்யும் கொலைகள் சாஸ்திரமுறைப்படி யிருக்கும்" என்று ஒருவர் சொன்னார். நமது உத்தியோகம் அந்தஸ்தினிமித்தம் நாம் பகிரங்கமாய்த் தீங்குசெய்யாவிட்டாலும் நமது அறிவுக்கேற்றபடி ரகசிய தீமைசெய்யும் சுபாவம் நீங்காது.

நமக்குள்ளே பல வித்தியாசங்கள் ஒற்றுமைக்கு இடையூறாயிருக்கின்றன. கற்றோர் கல்லாதவர்; தனவந்தர் ஏழைகள்; எஜமான்கள் வேலைக்காரர்; பலசாலிகள் பலவீனர்; நாகரீகத்தார் நாகரீகமற்றவர்கள்; செல்வாக்குள்ளவர்கள் செல்வாக்கற்றவர்கள்; உயர்ந்தோர் தாழ்ந்தோர் இவைமுதலான பேதங்கள் நமக்குள் பிரிவினையை உண்டாக்கி நம்மைப் பாழாக்குகின்றன. அப்படியானால் நமக்குள் ஒற்றுமையும் சிநேகமும் உண்டாவதெப்படி? கிறிஸ்துவே அதற்குப் பரிகாரம். கிறிஸ்துவுக்குள்ளேயே மெய்யான ஒற்றுமை உண்டாகும். "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்றார். நாம் ஒவ்வொருவரும் அவர் அன்பின் காந்தத்தால் இழுக்கப்பட்டு அவரையே ஜீவனாக நாம் ஏற்றுக்கொண்டு பிழைப்பது உண்மையானால், மேற்கூறிய வித்தியாசங்கள் யாவும் இடையூறாயிராமல் ஒருவருக்கொருவர் அனுகூலமாகயிருக்கும். அவரது அன்பின் வெள்ளம் நமக்குள் வரும்போது, சிம்சோனைக் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்கள்போல எரிந்துபோனதுபோல நமது பிரிவினைகள் அழிந்துபோகும். இதன் உண்மையை அப்போஸ்தலர் நடபடியில் காண்கிறோம். "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்." நமக்குள் ஒரு சபையிலுள்ள சொற்பப்பேர் முதலாய் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருக்கிறதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான அன்பும் ஒற்றுமையும் நமக்கில்லையென்றால் நாம் செய்துவருகிற சகல காரியங்களும் வீணாகும். திரளான ஆதிச் சபையார் பூரண ஒற்றுமையில் பிழைத்ததெப்படி? அவர்கள் நிர்மாணமும் பிரயாசமுமல்ல. அவர்கள் நோக்கம் கிறிஸ்து, ஜீவன் கிறிஸ்து, நினைவு கிறிஸ்து, தேட்டம் கிறிஸ்து, பேச்சு கிறிஸ்து, ஊழியம் கிறிஸ்து, எழுத்து கிறிஸ்து, ஜெபம் கிறிஸ்து, பாட்டு கிறிஸ்து, நம்பிக்கை கிறிஸ்து, மகிமை கிறிஸ்து, மோட்சம் கிறிஸ்து, அவர்களுக்குச் சகலமும் கிறிஸ்துவே. இவ்வாறு பற்பல வித்தியாசங்களுள்ள திரளான விசுவாசிகள் தனித்தனியே கிறிஸ்துவோடு ஒற்றுமைப்பட்டிருந்ததால், அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையும் ஒரே மனமுமாயிருப்பது இயல்பாயிருந்தது. ஒருவருடைய சிநேகிதர் தங்களுக்குள் சிநேகிதர். அவர்களெல்லாரும் கிறிஸ்துவாகிய ஒரே ஜீவனாலே பிழைத்தார்கள். நமக்கும் கிறிஸ்துவுக்கும் அன்பும் ஐக்கியமுமில்லாமற் போனால் நாம் மற்றவர்களோடு ஒற்றுமையாயிருக்கமுடியாது.



இந்த மெய்யான ஒற்றுமை கிறிஸ்துவுக்குள்ளாக வேண்டுமென்பது தேவ தீர்மானமாயிருக்க, அதுவே நியாயமுமாயிருக்க, மனுஷரை ஒற்றுமைப் படுத்தும்படி கடந்த ஐம்பது வருஷகாலங்களாக ஞானிகள் சாஸ்திரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சமல்ல. சமுதாயத்தை விருத்திபண்ணவோ, நாகரீகத்தைப் பெருக்கவோ,

கல்வியை உயர்த்தவோ, சுகாதாரத்தை உண்டாக்கவோ, வேலையில்லாக் கஷ்டத்தை நீக்கவோ, ஆயுதங்களைக் குறைக்கவோ, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்துப் போடவோ, ராஜ்யமந்திரிகள் கூடி ஆலோசிக்கவோ, ஆகா! உலகில் சமாதானத்தை நிலைநாட்டும்படி அறிவாளிகள் எடுத்துக்கொண்ட பிரயாசங்களுக்கு அளவில்லை. இப்போர்க்கொத்த சீர்திருத்தங்களால் மனுமக்களுக்குள் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்கி விடலாம் என்பது நாளதுவரை அநேகருடைய நம்பிக்கையாயிருக்கிறது. உள்ளே அழுக்கடைந்த பாத்திரங்களை வெளியே பூசி பளபளப்பாக்குவதால் பிரயோஜனம் என்ன? சட்டங்களாலும் பிரமாணங்களாலும் ஜாதிகளுக்குள் உண்மையான ஒற்றுமை ஏற்படமாட்டாது. மெய்யான ஒற்றுமை இருதயத்துக்குரியது. இருதயம் சரிப்படாவிட்டால் ஒன்றுமே சரிப்படாது. சிலுவை நாயகன் இருதயத்தைக் கைப்பற்றித் தமது அன்பை அங்கே ஊற்றுகிறார். அவருடைய ஒரே அன்பு பலருடைய இருதயங்களில் ஊற்றப்படும்போது, பலரான மனுஷர் சகல வித்தியாசங்களையும் மறந்து தங்களுக்குள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாகிறார்கள். உண்மையான ஐக்கியம் கிறிஸ்துவுக்குள்ளேதான் ஆகவேண்டியது. ஏனென்றால் சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்பது தேவ தீர்மானம்.

4. குடும்பத்தில் ஒற்றுமை. குடும்பம் என்றாலே ஒற்றுமையென்று அருத்தம். அவர்கள் ஒரே ரத்தமாகையால் இயற்கையாகவே அங்கே ஒற்றுமையிருக்கவேண்டியது. அப்படியிருந்தும் குடும்பங்களில் ஒற்றுமை காண்பதரிது. ஆண்டவர் சொன்னதுபோல் அநேக குடும்பங்கள் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்கின்றன. கடவுள் அறிவற்ற குடும்பங்களைக் குறித்துப் பயங்கரமான காரியங்களைக் கேள்விப்படுகிறோம். தகப்பன் மகனை, மகன் தகப்பனை; புருஷன் மனைவியை, மனைவி புருஷனை; சகோதரன் சகோதரனை, தகப்பன் பிள்ளைகளை கொலைசெய்யும் விஷயத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் வாசிக்கிறோம். இது எவ்வளவு கொடிய விஷயம்! நமக்குள் அப்போர்க்கொத்த துணிகரச் செயல்கள் இல்லாவிட்டாலும்,

பற்பல காரணங்களாலே மனஸ்தாபமும் பிரிவினைகளும் குடும்பங்களில் காணப்படுவது உண்மையே. உடற்கூற்றின் வித்தியாசம் ஒரு காரணம். சிலருடைய சரீரம் பலமும் உறுதியுமானது; எதையும் செய்ய, எதையும் சகிக்க அவர்களால் கூடும். மற்றவர்கள் சரீரத்தில் பலவீனர்; சோர்வும் தளர்ச்சியுமே அவர்கள் பங்கு. இந்த வித்தியாசத்தால் குறைகூறுதலும் மனஸ்தாபமும் ஏற்படும். வேறொரு காரணம் குணபேதம். ஒருவருக்கு துடுக்கான சுபாவம், மற்றவருக்கு அசமந்தம்; ஒருவருக்கு உற்சாகமான ஆவி, மற்றவருக்கு அமரிக்கை; ஒருவருக்கு வாய்ப்பேச்சு, மற்றவருக்கு மௌனம்; ஒருவருக்குச் சிரிப்பு, மற்றவருக்கு விசனம். இப்படியுள்ள சுபாவ வித்தியாசங்களாலும் பிரிவினை உண்டாகிறது. இன்னொன்று, வயதுகளில் வித்தியாசம். ஒருவருக்குப் புஸ்தகவாசிப்பே பிரியம், மற்றவர் அதைக் கையிலேனும் தொடுவதில்லை. ஆனால் இவருக்குக் கருவிகளும் யந்திரங்களுமே ஆராய்ச்சி. ஒருவருக்குச் சங்கீதமே பிரியம், மற்றவருக்கு வீட்டுவேலையே கவனம். ஒருவருக்கு ஓயாத முயற்சி, மற்றவருக்கு ஆழ்ந்த சிந்தை. இவ்வாறு தேக வித்தியாசம், குணபேதம், வரங்கள் வித்தியாசங்களால் தங்களுக்குள் பொருந்தமின்றி மாறுபடுகிறார்கள். பிள்ளைகள் சாமர்த்தியம், முக அழகினிமித்தம் பெற்றோர் சில பிள்ளைகளை விசேஷித்து நேசிக்கும்போதும் குடும்பத்தில் முறுமுறுப்பும் பிரிவினையும் உண்டாகும்; ஆஸ்தியைப் பாகம் பிரிக்கும் விஷயத்திலும் அதிருப்தியும் சண்டையும் வியாச்சியமும் ஏற்படும். பூரண அன்பும் ஒற்றுமையும் காணப்படவேண்டிய குடும்பங்களில் பகையும் பிரிவினையும் காணப்படுவது எவ்வளவோ துயரமான விஷயம்!

குடும்பங்களில் ஒற்றுமை உண்டாவதெப்படி? இவர்கள் எல்லாரையும் ஒரே தேகக்கட்டும், ஒரே நிறமும், ஒரே அழகும், ஒரே குணமும், ஒரே புத்தியும், ஒரே வேலையும் உள்ளவர்களாய் அமைத்தால் ஒற்றுமை ஏற்படுமோ? அவ்வாறு எல்லாரும் ஒரே தேகக்கட்டும், ஒரே தோற்றமும், ஒரே குணமும், ஒரே வரமுமாயிருக்க வேண்டுமென்பது தேவசித்தமோ? ஒருக்காலும் அல்ல. அப்படி எல்லாரையும்

ஒன்றுபோலாக்கக் கூடுமானாலும் நாம் எதிர்பார்க்கும் ஒற்றுமை வராது. கிறிஸ்துவினால் மாத்திரம் குடும்பத்தில் மெய்யான ஒற்றுமை உண்டாகும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் சித்தத்தால் நடத்தப்படும்போது நிச்சயமாகவே அவர்களுக்குள் ஒற்றுமை காணப்படும். அவரவருக்குரிய இயற்கையான வரங்களையும் திறமையையும் அழிப்பதினால் அல்ல, எல்லாரையும் தமது ஒரே ஆவியினால் ஆளுவதாலேயே ஒற்றுமை உண்டாகும். பேதுரு யார்? யோவான் யார்? கிறிஸ்துவின் ஒரே ஆவி அவர்களிருவரையும் இணைத்ததால் அவர்களிருவரும் எவ்வளவோ அன்பாய் ஒருமித்து ஊழியஞ்செய்தார்கள். சகோதரரையே எடுத்துக்கொண்டாலும் அந்திரேயாவுக்கும் பேதுருவுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! யாக்கோபுக்கும் யோவானுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! ஆனால் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பூரண ஒற்றுமையுடன் பிழைக்கவில்லையா? அருணோதயப் பிரகாசம் பட்சிகள்மேல் பட்ட மாத்திரத்தில் எல்லாப் பட்சிகளும் ஒரே குரலில் பாடாமல், ஒவ்வொரு பட்சியும் தன்தன் சுயசத்தத்தில் மகிழ்ச்சியுடன் பாடுவது போல, கிறிஸ்துவின் அன்பு மக்கள் உள்ளத்தில் பிரவேசித்தவுடனே அவரவருக்கு இயற்கையாயுள்ள சுபாவலட்சணங்கள் அழிந்துபோகாமல் மேன்மையாக விளங்கும். பெற்றோரும் மக்களும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இணைக்கப்பெற்று ஆண்டவர் அன்பால் நடத்தப்படுவார்கள். இதுவே குடும்பத்தின் பாக்கியம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்."

5. திருச்சபையின் ஒற்றுமை. திருச்சபையை எங்கே காணலாம்? எந்த பிரிவினில் காணலாம்? அது இங்கே என்றும் அங்கே என்றும் சொல்லப்படுவதற்கு ஏதுவில்லை. ஆவிக்குரிய பகுத்தறிவில்லாமல் புறம்பான காரியங்களில் பற்றுதல் வைத்தவர்கள் தங்களுடைய சபையே மெய்யான சபையென்று சாதிப்பார்கள். திருச்சபை ஒரு இடத்துக்கும் ஒரு கூட்டத்தாருக்கும் உரியதல்ல. பெந்தெகோஸ்தே நாளில் ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தார். அது அவர் கிருபையால் உலகமெங்கும் பரவியிருக்கிறது. எந்த ஒரு சபையும்



தனியே பூரணமுள்ளதல்ல. விசுவாசிகளான கடவுள் பிள்ளைகள் உலகெங்கும் சிதறுண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமென்றும், தனித்தனியே அவயவமென்றும் அழைக்கப்படுகிறார்கள். ஆண்டவர் உலகத்திலிருந்தபோது தமது சொந்தச் சரீரத்தின் மூலமாய்த் தம்மை வெளிப்படுத்தினார். தமது சரீரத்தின் மூலமாய் உபதேசித்து, நற்கிரியைகளைச் செய்து, கடைசியாக தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினால் ஒப்புரவாகுதலையும் உண்டாக்கினார். அவர் மகிமையடைந்தபோது அவர் சரீரம் மறைந்தது. ஆனால் உலகத்தில் அவர் தொடங்கின ரட்சிப்பின் ஊழியம் நடந்தேறவேண்டும். அப்படியானால் மகிமையடைந்த ஆண்டவருக்கு உலகத்தில் சரீரம் அவசியம். திருச்சபையே அந்தச் சரீரம். சபையாகிய சரீரத்துக்கு ஆண்டவர் தலையானவர். சரீரத்திற்குத் தலை பிரதானம். சரீரத்திற்குரிய காரியங்களை நடத்துவது தலையே. அதுபோலவே தலைக்கும் சரீரம் அவசியம். சரீரமில்லாமல் தலை என்ன செய்யும்? இது ஆண்டவருக்கும் சபைக்குமுள்ள பிராண ஐக்கியத்தைக் காட்டுகிறது. தலையின் ஜீவனும் சரீரத்தின் ஜீவனும் ஒன்றே. கிறிஸ்துவின் ஜீவன் பரிசுத்த ஆவி. ஆண்டவர் தமது ஜீவனாகிய ஆவியை அடியாருக் கருளினபோது அவர் சரீரமாகிய திருச்சபை உண்டானது. அந்த ஜீவனாலேயே சபை பிழைத்து வளரவேண்டியது. விசுவாசிகள் யாவரும் அவர் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஜீவனாலே அவர்கள் பிழைக்கிறார்கள். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." அவன் பூமியில் ஒரு சபையைச் சேர்ந்திருந்தாலும் ஆண்டவருடைய சரீரத்தின் அவயவமல்ல.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள பிராண ஐக்கியத்தைப் பற்றியும், சரீரத்தின் அவயவங்களில் ஒவ்வொன்றுக்குமுள்ள ஐக்கியத்தைப் பற்றியும் அப்போஸ்தலன் தமது நிருபங்களில் தெளிவாய்ப் பேசுகிறார். தலைக்கும் சரீரத்திற்கும் ஒற்றுமையிருக்கிறது போல, அவயவங்களுக்குள்ளும் ஒற்றுமையிருக்கவேண்டும். நமது சரீர அவயவங்களை நாம் பகைக்கிறதில்லை. அவயவங்களுக்குள் எவ்

வரேயோ ஒற்றுமையைக் காண்கிறோம். ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் பாடுபடுகிறது. ஒரு அவயவம் மேன்மையடைந்தால் எல்லா அவயவங்களும் மேன்மை பாராட்டுகிறது. துக்கத்திலும் சந்தோஷத்திலும் அவயவங்கள் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. அவயவங்களெல்லாம் சரீரத்தின் ஒரே ஜீவனாலே பிழைப்பதே இந்த ஒற்றுமைக்குக் காரணம். விசுவாசிகள் எல்லாரும் கிறிஸ்துவின் ஜீவனாலே பிழைக்கிறதாயிருந்தால் கட்டாயம் அவர்களுக்குள் ஒற்றுமையிருக்கும். கிறிஸ்துவைப் பார்க்கிலும் மற்றக் காரியங்களில் வைராக்கியம் பாராட்டுவதால் பிரிவினை உண்டாகிறது. சபைகள் தம்தமக்குள்ள அந்நிய பேர்களாலும், கொள்கை ஆசாரங்களாலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கின்றன. ஒரு கொள்கையில் பற்றுள்ள கூட்டத்தார், தாங்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, மற்றக் கிறிஸ்தவர்களைவிட்டு விலகி, மற்றவர்களை அந்நியரைப்போல் பார்க்கிறார்கள். அவர்களை தங்களுடைய பந்தியில் சேர்க்கிறதில்லை. அந்தக் கூட்டத்தாரிலும் தங்களுக்குள் ஒற்றுமையாயிருக்கிறார்களென்று பார்த்தால் அவர்களுக்குள்ளும் பலபிரிவு. இது எங்கேபோய் நிற்கும் என்று தெரியவில்லை. ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு மிஷன் ஆதிக்கன் நிறும்போலிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் கிறிஸ்துவை பிரதானமாய்ப் பற்றிக்கொண்டிராமல் மற்றமற்ற விஷயங்களை முக்கியப்படுத்தினதே யாகும். இவ்வாறு மிஷன் பேர்களாலும், ஆசாரக் கொள்கையாலும் சபைகளுக்குள் பிரிவினை வைப்பது எவ்வளவு துயரமான விஷயம்! இன்னும் எத்தனை புதுக்கூட்டத்தார் புறப்படுவார்களோ தெரியாது. ஜீவனுள்ள கிறிஸ்துவைப் பிரதானமாய்ப் பற்றிக்கொண்டிராமல் நாமங்கள், சடங்காசாரங்கள், ஆளுகை முதலான காரியங்களில் நாம் வைராக்கியம் பாராட்டும்போது கட்டாயம் பிரிவினை இருக்கவேயிருக்கும். மிஷன் பேர்களும் சபைப்பேர்களும் ஆலயங்களின் சிறப்பான காரியங்களும் அழிந்துபோகும். எல்லா நாமத்துக்கும் மேலான நாமமாகிய இயேசுவின் நாமம் ஒன்றே நித்தியமாய் நிலைத்திருக்கும். தேவராஜ்யத்தின் திறவுகோல்கள் எங்களுக்கே உரியதென்று எந்தச் சபையும் பெருமை பாராட்ட முடியாது. நாம் ஒரு சபையின் அங்கங்



களாயிருப்பதால் கிறிஸ்துவின் சரீரத்திலும் அவயவமாயிருக்கிறோம் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது. எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் கிறிஸ்துவின் ஜீவனாலே பிழைப்பவர்கள் மாத்திரமே அவரது சரீரத்தின் அவயவங்களாயிருப்பார்கள். அவர்கள் கட்டாயம் தங்களுக்குள் ஒற்றுமையும் ஐக்கியமுமாயிருப்பார்கள். சபையில் ஏதோ மந்திர மிருக்கிறதென்றும், அதைச் சேர்ந்தாலே மோட்சம் என்றும் நினைக்கவேண்டாம். சபைக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள ஐக்கியத்துக்குத் தக்கதாகவே சபையில் அவருடைய ஆசீர்வாதமும் வல்லமையும் விளங்கும். புறம்பேயுள்ள ஒரு மனுஷன் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவர் சித்தங்கொண்டு பிழைப்பானானால், சபையிலிருக்கிற நூறுபேர்க் கிறிஸ்தவனைப் பார்க்கிலும் அவனே ஆண்டவருக்கு உகந்தவனாவான். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. ஆலய அலங்காரங்களையும் ஆராதனைச் சிறப்பையும் ஜனத்தொகையையும் கண்டு ஆண்டவர் ஏமாந்துபோகிறவரல்ல.

ஒரு சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள்ளேயே அன்பும் ஐக்கியமும் இல்லாதபோது மற்றச் சபைகளின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவானேன்? ஆதிச்சபை ஆவியினால் பிறந்தது, அன்பில் நிறைந்தது, சகோதர சிநேகமுள்ளது, கிறிஸ்துவோடிணைக்கப்பெற்றது. அதுவே கிறிஸ்துவின் சரீரம். தலையாகிய கிறிஸ்து சரீரமாகிய சபையைப் போஷித்துக் காப்பாற்றினார். திரளான விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். தற்காலத்துச் சபைகள் காரியம் முற்றிலும் வித்தியாசம். ஆவியல்ல, மாம்சம் நம்மை ஆளுகிறது. அன்பல்ல, பொறாமை ஆளுகிறது. சகோதர சிநேகமல்ல, பகைவிரோதம் நிலைக்கிறது. கிறிஸ்துவோடல்ல, உலகத்தோடிணைக்கப் பெற்றிருக்கிறது. எல்லாரையும் குறித்து நாம் இப்படிச் சொல்லுகிறதில்லை. சபைகள்தோறும் ஆண்டவரை உத்தமமாய்ப் பின்பற்றுகிற கடவுள் பிள்ளைகளுண்டு. சபையிலுள்ள பேர்க்கிறிஸ்தவர்களால் அவர்களுடைய சஞ்சலம் கொஞ்சமல்ல. கடந்த பத்து வருஷங்களாகச் சபைகளை ஐக்கியப்படுத்தும்படி சபைத் தலைவர்கள் அரிய முயற்சிசெய்து வருகிறார்கள். ஐக்கியம் விரும்பத்

தக்க காரியமே. அதற்கு இவ்வளவு போராட்டமும் தாமதமும் ஏன்? நாங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கிறோம், நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள் என்று புலம்புவது எவ்வளவு பரிதாபம்! மறுபடி உண்டு கொள்கை. ஆராதனை, ஆசாரம் முதலியகாரியங்களை முக்கியப் படுத்தி அவற்றில் ஐக்கியப்படுவோமானால் அந்த ஐக்கியம் வாய்க்காது. சபைகளின் மெய்யான ஐக்கியம் கிறிஸ்துவுக்குள்ளாகவேண்டும். அவர் ஆதிச்சபையை எப்படி ஒற்றுமைப்படுத்திக் கட்டினாரோ அதே மாதிரி [நாமும்] கட்டவேண்டியது. "பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனாலே நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்." "நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலுமிருப்பதை அந்நாளில் அறிவீர்கள்." ஆண்டவர் விரும்பின ஐக்கியமும் ஒற்றுமையும் எத்தன்மையானதென்று மேற்கூறிய வசனங்களில் திட்டமாய் காண்கிறோம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப் படவேண்டும்."

8. பரலோக பூலோக ஒற்றுமை. கிறிஸ்துவால் உண்டாகும் ஒற்றுமை பூமிக்குரியது மாத்திரமல்ல. அது பரலோகத்தையும் சேர்த்து இணைக்கிறது. ஏனென்றால் "அவர் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராயிருக்கிறார்." இவ்வுலகில் சகல பாடுகள் போராட்டங்கள் மத்தியில் தேவராஜ்யத்துக்காக உழைத்துவருகிற நாமும், நம்மைவிட்டுப் பிரிந்து மறுமைக்குட் பிரவேசித்திருக்கிற திரளான விசுவாசிகளும் சேர்ந்து கிறிஸ்துவுக்குள் ஒரே குடும்பமாக யிருக்கிறோம். அவர்கள் கிறிஸ்துவுடன் கூட அவர் பாதுகாப்பில் இருப்பதுபோலவே நமது ஜீவனும் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நமது சரீரம் இங்கேயிருந்தாலும் நமது குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. நாம் ஆவியில் உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு அவர்களோடு உலாவுகிறோம். நாம் இப்பக்கத்திலும் அவர்கள் அப்பக்கத்திலும் இருந்தாலும் ஓர் மெல்லிய திரையே இடையிலிருக்கிறது. நாம் ஜீவ



னுடப் பற்றிப் பிடித்துப் பிழைக்கிற ஆண்டவரையே அவர்களும் பற்றிப் பிடித்து, அவருடைய ஐக்கியத்தில் ஆனந்தித்து, அவராலே பிழைக்கிறார்கள். அவர்களும் நாமும் சேர்ந்தே கிறிஸ்துவின் சரீரமாகிறோம். பரமபிதா இருதிறத்தாரையும் ஒரே குடும்பமாகப் பாவித்து கிறிஸ்துவுக்குள் பராமரித்துக் காப்பாற்றுகிறார். அவர்களை நம்மை விட்டுப் பிரிக்க மரணத்துக்கு அதிகாரமில்லை. அவர்கள் சரீரத்தில் இராததினாலே, நாம் அவர்களைக் கண்ணால் காணாததினாலே, அவர்களை நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள் என்று உலக முறைப்படி பேசுகிறோம். அவர்கள் நமக்கு அந்நியர்கள் அல்ல. அவர்களும் நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே குடும்பமாகயிருக்கிறோம். ஆண்டவர் அப்படியே காண்கிறார். இதுவே சிலுவையின் வெற்றி.

தேவதூதர்களையும் கவனிப்போம். இவர்கள் கடவுள் சமூகத்தில் வசிப்பவர்கள். அவர்கள் முற்றிலும் ஆவிக்குரியவர்களானதால் மாம்சசரீரத்தில் வசிக்கிற நமது தற்கால நிலைமைக்கு சற்று மேற்பட்டவர்களே. மனுஷனைக்குறித்து "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்" என்று சொல்லியிருக்கிறது. ஆண்டவர் கூட மாம்சத்தில் வந்தபோது அவரைக்குறித்தும் அப்படியே சொல்லியிருக்கிறது (எபி. 2: 9.) ஆவியே மெய்யான மனுஷன். அவன் பூமியில் பிழைக்கவேண்டியவனானதலால் கடவுள் அவனுக்குச் சரீரத்தைக் கொடுத்தார். இந்தச் சரீரத்தாலேயே மனுஷன் தேவதூதர்களுக்குத் தாழ்ந்தவன்போல் எண்ணப்படுகிறான். வாஸ்தவத்தில் அவன் தாழ்ந்தவனல்ல. கடவுளுடைய பரிசுத்த தூதர்கள் அவனுக்கு வேலைக்காரர். நமக்காகவே தேவதூதர் பூமியிலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதுமா யிருக்கிறார்கள். சிறுபிள்ளைகளுக்காக அவர்கள் பிதாவின் சமூகத்தை ஓயாது தரிசிக்கிறார்கள். பக்தர்கள் விஷயமாய் அவர்கள் செய்திருக்கும் பணிவிடைகளை வேதத்தில் எங்கும் வாசிக்கிறோம். அப்படியிருந்தும் நாம் அவர்களுக்குப் பயப்படுகிறோம். பாவமும் பலவீனமுமுள்ள இந்தச் சரீரத்தில் நாம் குடியிருப்பதால் தேவதூதர்களைச் சந்திப்பது நமக்கு நடுக்கத்தை உண்டாக்குகிறது. [illegible] ஸ்திரீகள் தேவதூதர்களைக் கண்டபோதெல்லாம் பயந்

கவிக்கிறார்களென்பதை வேதத்தில் படிக்கிறோம். ஆவி, சரீரம் என்னும் வித்தியாசத்தால் அவர்களோடு நெருங்கிப் பழகக் கூடவில்லை. கிறிஸ்துவின் சிலுவை இந்தப் பிரிவினையை உடைத்தெறிந்தது. இனி வருங்காலத்தில் நாம் தேவதூதரோடு ஒற்றுமைப்பட்டு வாழுவோம். நமது தலையாகிய "கிறிஸ்து பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன." (1 பேதுரு 3: 22). "மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2: 10). பாவத்தால் தாழ்ந்துபோன நாம் கிறிஸ்துவுக்குள் பரிசுத்த தூதர்களோடு ஒற்றுமையாய்ப் பிழைக்கும் திருவை கிடைத்தது. இதைக்குறித்து ஆண்டவர்: "அவர்கள் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" என்றார். அதாவது, ஆவிக்குரிய தன்மையில் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், சம்பந்தத்தில் கடவுளின் பிள்ளைகளுமாய் அவர்களிலும் மேலான பதவியிலிருப்போம். இந்த உன்னத ஒற்றுமையை நாம் சம்பாதிக்கவில்லை. நமது ரட்சகரான இயேசு கிறிஸ்து சிலுவையின் மூலம் இதை நமக்காகச் சம்பாதித்தார். அவரைவிட்டால் இகமும் பரமும் ஒற்றுமைப்பட வழியில்லை. சிலுவையில் தேவதூதர்களும் சம்பந்தப்பட்டிருக்கிற ரகசியம் ஆழமானது. "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்."

7. சர்வ சிருஷ்டிக்கும் ஒற்றுமை. இப்பிரபஞ்சம் அநேக விஷயங்களில் நமக்கு ஆச்சரியமாயிருப்பது போலவே, அவற்றால் ஆபத்துகளும் உண்டாகின்றன. இயற்கையில் சம்பவிக்கும் அழிவை மேற்கொள்ளும்படி மனுஷன் செய்த ஆராய்ச்சி கொஞ்சமல்ல. அழிவை உண்டாக்கும் சக்திகளின் பிரமாணங்களைக் கண்டுபிடித்து அவைகளைக் கீழ்ப்படுத்தி மனுஷருடைய பிரயோஜனத்திற்கென்று உபயோகித்து வருகிறார்கள். கடல் அலைகளுக்குள் அடங்கியிருக்கும் மின்சக்தி பிரயோகிக்கத்தக்கது. இன்னும் என்னென்ன நூதன விஷயங்களை மனுஷன் கண்டுபிடிக்கப்போகிறா-



னென்று சொல்லுவதற்கில்லை. எப்படியிருந்தபோதிலும் இயற்கைக்கு முன் மனுஷன் எம்மாத்திரம்? திடீரெனக் கிளம்பும் புயல்காற்று அநேக பட்டணங்களைத் தரைமட்டமாக்குகிறது. எதிர்பாராத வெள்ளப்பெருக்கு கிராமங்களையும் வயல்களையும் பாழாக்கி மனுஷனைத் தத்தளிக்கச் செய்கிறது. விளைந்தது அறுத்தோம் என்று சொல்ல இடமில்லை. எரிமலைகளாலும் பூகம்பங்களாலும் உண்டாகும் அழிவு சேதத்திற்குக் கணக்கில்லை. பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் பல ஆபத்துகளாலும் மனுஷர் பாழாய்ப்போகின்றனர். இயற்கை வல்லமைக்கு முன் மனுஷனுடைய ஞானம் கவிழ்ந்துபோகிறது. உள்ளான பாவவினையால் மனுஷன் சஞ்சலப்படுவது போதாதென்று இத்தனை புறம்பான தீங்குகளும் அவனைச் சூழ்ந்து வதைக்கின்றன. மனுஷனிலுள்ள தத்துவங்கள் ஆரோக்கியமான பலனுக விருத்தியடைவதற்கும், சர்வத்துக்கும் மேலான கடவுளை அறிந்து அவர் சித்தப்படி பிழைப்பதற்கும் பாடமாக இத்தீங்குகளை வைத்தாரோ? பிதா அறியாமல், அவர் இடங்கொடாமல் தீங்கு சம்பவிப்பதில்லை. என்றாலும் இந்தப் பயங்கரமான போராட்டத்துக்கும் முடிவு உண்டு. கடவுள் மற்றக் காரியங்களை ஒற்றுமைப்படுத்தி, இந்தப் பிரபஞ்சத்தை அழிவுக்குரிய மோசமான நிலைமையில் விட்டுவிடமாட்டார். அப்படி விடுகிறதாயிருந்தால் "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்" என்கிற தேவவாக்கியம் பொய்யாகும். இதைப்பற்றி அப்போஸ்தலன் சொல்லுவதைக் கேட்போம். "நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது. ஆனால் அந்தச் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையினாலே மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" என்கிறார் (ரோ. 8: 20-22). பாவத்தால் சீர்குலைந்துபோன மனுக்குலத்தை ரட்சிக்கும்படி உயிர்கொடுத்த ஆண்டவர், பாவத்தால் சாபத்துக்குள்ளான சிருஷ்டிப்பைப் புதுப்பிக்காமல் விடார். பாவத்தால் எங்கெங்கு கேடு விளைந்ததோ அங்கெல்லாம் அவர் சிலுவை வெற்றியடையும். மேலும்

கிறிஸ்துவுக்கும் சிருஷ்டிக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிக்கும்போது பிரபஞ்சத்தை இந்தப் போராட்டமான அழிவுக்குரிய நிலைமையில் விட்டுவிடமாட்டாரென்பது நிச்சயம். "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன." "உண்டானதொன்றும் அவராலேயன்றி உண்டாகவில்லை." (கொலோ. 1 : 16; யோ. 1 : 3). இது மெய்யானால் தமது மகிமைக்கென்று அவர் உண்டாக்கினவைகளை அழிவும் ஒழுங்கீனமுமான நிலைமையில் அவர் விட்டுவிடுவதெப்படி? "சகலமும் அவருக்குள்ளே ஒற்றுமைப் படவேண்டும்." சகலமும் அவருக்குள் கெம்பீரிக்கவேண்டும். கல்வாரிச் சிலுவையின் வெற்றி அளவு கடந்தது. அந்தச் சிலுவையின் ஆழம் அகலம் உயரம் நீளம் எல்லையென்பதை அறிந்தவன் யார்? கிறிஸ்தவர்களின் அநேகர் சிலுவையின் விரிவான நோக்கத்தை அறியவில்லை. "என் பாவங்களை மன்னிக்கவே மரித்தார்" என்பதே அவர்கள் காலமெல்லாம் படித்த பாடம். ஆனால் சிலுவையோ பரலோகத்திலிருக்கிறவைகள் பூலோகத்திலிருக்கிறவைகளுமான சர்வத்தையும் சேர்த்து ஒற்றுமைப்படுத்தும் தேவசாதனமாயிருக்கிறது. இவ்வாறு பாவமும் சாபமும் மரணமும் சகல இடறலும் முற்றிலுமாய் நீங்கி, எங்கும் எல்லாருக்குள்ளும் ஆனந்தத்திலும் இடைவிடாமல் தேவசித்தமும் தேவ ஆளுகையுமே நடக்கும். இதுவே சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படும் நித்திய ராஜ்யம். இதுவே தேவராஜ்யம்! இதுவே தேவ நகரம்! இதுவே தேவ மாளிகை! பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள சகலத்தையும் தமக்குள் ஒற்றுமையாக்கி, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஆளுகையை ஒப்புக்கொடுக்கும் காலம் இதுவே! "புதிய வானம் புதிய பூமி" என்னும் பூரிப்பான காலம் இதுவே! "இதோ சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்னும் வாக்கு நிறைவேறும் காலம் இதுவே! கிறிஸ்து சிலுவையில் அடைந்த வெற்றியின் பூரணமகிமையை நாம் கண்டு களிகூரும் காலம் இதுவே!



உலகத்தின் காரியங்களைக் கவனிக்கும்போது இப்பேர்க்கொத்த பாக்கியமான காலமும் வருமோவென நாம் சந்தேகிக்கலாம். மனுஷர் முயற்சியால் இது ஆகவேண்டியதாயிருந்தால் அக்காலம் ஒருக்காலும் வராது. ஆனால் கடவுளே அந்தக் காலத்தைக் கொண்டுவருகிறவர். அவரே தமது ராஜ்யத்தைத் தமது மக்களுக்குக் கொடுப்பவர். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." சகலத்தையும் தமது சித்தத்தின் ஆலோசனைக்கேற்றாற்போல் நடப்பித்துக்கொண்டு போகிற அவருடைய மறைவான கரத்தை நாம் மறக்கக் கூடாது. சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டிச் சேர்க்கப் படவேண்டுமென்பது கடவுளுடைய நினைவும். பூமியில் சகலமும் பேர்விரோதம்போல் நடப்பதாக நமக்குத் தோன்றினாலும், வல்லமையும் உண்மையுமுள்ள கடவுள் தமது தீர்மானத்தை நிறைவேற்றாமல் விடார். அவரே நமது நம்பிக்கை. சிலுவையின் பலனாக நமக்கும் பிதாவுக்கும், நமக்குள்ளேயும், நமக்கும் தேவமக்களுக்குள்ளும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், நமக்கும் பிரிந்துபோன விசுவாசிகளுக்கும் ஐக்கியமும் ஒற்றுமையும் ஏற்பட்டிருப்பதை நாம் ஒருவாறு இங்கேயே அனுபவிக்கிறோம். இவ்வளவு தூரம் நமக்குள் ஒற்றுமைப்படுத்தின பரமபிதா, சீர்கேடான சகலத்தையும் கிறிஸ்துவுக்குள் சீக்கிரம் கூட்டிச்சேர்த்து ஒற்றுமைப்படுத்துவாரென்பது நிச்சயம். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தமது தயவுள்ள சித்தத்தின் ரகசியம்" வெளிப்படையாய் நிறைவேறும்.

இன்னும் எங்கெங்கே சிருஷ்டிகள் வசிக்கிறார்களென்றும், அவர்கள் எத்தன்மையுள்ளவர்களென்றும் நமக்குத் தெரியாது. மேலுலகில் வாழும் தேவதூதர்களைப்பற்றியும் அவர்கள் வகுப்பு அந்தஸ்துகளைப் பற்றியும் சொற்பம் அறிந்திருக்கிறோம். நமது வேதாகமம் நம்மைக் குறித்த புஸ்தகமேயல்லாமல் ஆண்டவர் சிருஷ்டித்த சர்வலோகங்

களைப் பற்றிக் கூறும் புஸ்தகமல்ல. நாம் வசிக்கும் பூமி மகா சிறிய கிரகம். எல்லையில்லா அகண்ட ஆகாயத்தில் எத்தனையோ கிரகங்களும் அவைகளுக்குரிய சூரியர் சந்திரரும் இருக்கின்றனவென்று சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அங்கே வசிப்பவர்கள் யாரென்று நாம் அறியோம். சமுசாரி தன் சிறு நிலத்தில் நாற்றுண்டாக்கி, அவைகளை விசாலமான நிலங்களில் நடுவதுபோல, பரமபிதா நம்மை நாற்றுகளாக இங்கே வைத்திருக்கிறார். ஆதிமுதல் சென்றுபோன கோடா கோடி மனுஷர் பிழைக்கிறதாயிருந்தால் இந்தப்பூமி கொள்ளுமா வென்று சிலர் கேட்கிறார்கள். கடவுளுக்குச் சித்தமானால் அவர்களைக் குடியேற்ற வேண்டிய அநேக வாசஸ்தலங்கள் அவருக்குண்டு. சர்வ சிருஷ்டிப்புகளும் சேர்ந்து பிதாவின் வீடாகிறது. "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று ஆண்டவரும் சொன்னார். தேவன் தமது குமாரனைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார்" என்று எபிரேயர் நிருபத்தாரும் சொல்லுகிறார். கடவுளின் அதிசயமான சிருஷ்டிப்புகளை அறிந்தவர்கள் யார்? சமுத்திரப்பிரயாணம் செய்கிறவர்கள் உலகத்தைச் சுற்றிவிட்டோம் என்கிறார்கள். அகண்ட ஆகாயத்தில் பிரயாணம் செய்து அதன் தூரத்தைக்கண்டவன் யார்? எத்தனைகோடி வருஷம் அவன் வாயுவேகமாய்ப் பிரயாணம் செய்யக்கூடுமானாலும் அவன் போய்க்கொண்டே யிருக்கவேண்டியதுதான். அகண்ட ஆகாயத்திற்கு எல்லையுமில்லை, முடிவுமில்லை. அதை யோசிக்கப்போனால் புத்தி தடுமாறுகிறது. சாட்சாத் பகவானுடைய அதிசயந்தான் என்ன? அப்போர்க்கொத்த பெருமான் மனுக்குலத்தை தேடிவந்த கிருபையை, அவரது தாழ்மையை விஸ்தரிக்க கோடி நாவுகளாலும் முடியாது. சர்வ சிருஷ்டிப்புகளும் கிறிஸ்துவைக்கொண்டும் அவருக்கென்றும் உண்டாக்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதால், சகலமும் கட்டாயம் அவருக்குள் பூரண ஒற்றுமைப்படும் என்பது நிச்சயம். அவருக்கே சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, ஆமென்.

# VIII
# The Cure of Care
# கவலைக்குப் பரிகாரம்

"நீங்கள் கவலைப்படுகிறதென்ன?" மத். 6: 28.

## I. கவலை என்றால் என்ன?

நமது விருப்பத்துக்கும் எதிர்பார்க்குதலுக்கும் விரோதமாய்க் காரியங்கள் சம்பவிக்கும்போது மனதிலுண்டாகும் குழப்பம், துக்கம், விசாரமே கவலையாகும். நமது குடியிருப்பு, கல்வி, உத்தியோகம், பிழைப்பு, சுகம் இவையாவும் திருப்தியாயிருக்கும்போது நாம் சந்தோஷமாயிருப்போம். இவைகளுக்கு இடையூறுகள் நேரிடும்போது மனங்கலங்கிக் கவலைக்குள்ளாகிறோம். பாவத்தின் பலனாக புத்தி அந்தகாரமடைந்து, சித்தம் பலவீனமாகி, நமது அறியாமையினால் நாமே பலகாரியங்களில் சிக்கிக்கொண்டு சங்கடப்படுகிறோம். கவலைக்குத் தப்பினவன் ஒருவனுமில்லை. குழந்தைகள்கூட பசிக்கும்போது முகத்தைச் சுளித்துக்கொண்டு அழுகின்றன. பரீட்சையில் தேறாத பிள்ளைகள் முகம்வாடிக் கவலைக்குள்ளாகிறார்கள். மாலை இருண்ட நேரத்தில் தகப்பனோடு நடந்துவந்த சிறுவன் கண்களில் கண்ணீரைக் கண்டு: என் அப்பா அழுகிறாய் என்று அவர் கேட்க, மகன் கவலை என்றான். ஆஹா, இந்த வயதிலேயே இவருக்குக் கவலை வந்துவிட்டதென்று சொல்லி தகப்பன் சிரித்தார். கவலை யாரைத்தான் விட்டது? வேலையில்லாமை, வியாதி, தரித்திரம், விக்கினம், நிந்தை, அவமானம், மரணம் முதலியவற்றால் மக்கள் படும்பாடு கொஞ்சமல்ல. யாரிடம் போவோம்? எங்கே குடியிருப்போம்? என்னத்தை உண்போம்? என்னத்தை உடுப்போம்? எப்படிப் பிழைப்போம் என்கிற கவலைகள் நமது மனதைப் புண்ணாக்கி நம்மை ஆழ்ந்தபாரத்தில் அமிழ்த்து

இன்றனே. நம்மை ஆட்கொண்ட பகவான் மனுமகன் உலகில் சஞ்சரித்தபோது அவர்கள் பற்பல கவலைகளால் மனம் நொறுங்கித் தவிப்பதைக் கண்டு அவர்களுக்காகப் பரிதபித்தார். கவலை தன்னிலே பிரயோஜனமற்றதென்றும், பரமபிதாவின் பராமரிப்பை அறியாததே கவலைக்குக் காரணமென்றும், கவலைக்குப் பரிகாரம் இன்னதென்றும் ஜனங்களுக்குப் போதித்தார்.

## II. கவலையும் முன் யோசனையும்.

கவலைக்கும் முன்யோசனைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆண்டவர் கவலையைக் கண்டித்தாரே யொழிய, முன்யோசனை முன்ஜாக்கிரதையை அவர் கண்டிக்கவில்லை. ஆகாரமில்லையே என்று துக்கித்து மூலையில் படுத்துக்கொள்வது கவலையாகும். புறப்பட்டுப்போய் ஏதாவது ஒரு வேலையைச் செய்து காசு சம்பாதிப்பது முன்யோசனையாகும். மழைகாலம் வருகிறது, வீடு ஒழுகுமே என்று புலம்பிக்கொண்டிருப்பது சோம்பேறித்தனமும் வீண்கவலையுமாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முந்தியே செய்துமுடிப்பது முன்ஜாக்கிரதையாகும். காரியத்தில் கவனம், எச்சரிக்கை, முன்யோசனையில்லாததே கவலைக்குக் காரணம். ஆகையால் முன்யோசனை கவலைக்கு எதிரான நிலைமை. கவலைக் குள்ளானவன் ஒன்றும் செய்யமுடியாதிருக்கிறான். முன்யோசனையுள்ளவன் ஜாக்கிரதையாய்க் காரியங்களை நடப்பிக்கிறான். கவலையினால் மாத்திரம் காரியம் ஆவதில்லை என்பதை அவன் அறிவான். செய்யவேண்டிய காரியங்களை கடவுளை நம்பி முன் ஜாக்கிரதையுடன் செய்துமுடிப்பான். வெள்ளிக்காசைக் காணாமற் போட்டவள் தன் கவலையினால் அல்ல, ஜாக்கிரதையாக அதைத் தேடினதினாலே கண்டடைந்தாள். வருங்காரியங்களைப் பற்றியும் அவைகள் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதைப்பற்றியும் கர்த்தருக்குள் நாம் ஆலோசிக்க வேண்டும். நாம் யோசிக்கும்போது ஆண்டவர் தமது ஆலோசனையை நமக்கு வெளிப்படுத்துவார். முன் யோசனையை ஆண்டவர் குற்றப்படுத்தவில்லை. அவர் தாமே சீஷர்களோடிருந்த நாட்களில் தமது தினசரி வேலையைச்செய்துகொண்டிருக்கும்போதே வருங்காரியங்களைப்பற்றியும் யோசித்தார். தமக்கு



நேரிடப்போகும் பாடுகளையும் அவற்றின் முடிவையும் சீஷர்களுக்கு முன்னதாகவே அறிவித்தார். சீஷர்கள் தம்மைவிட்டு ஓடிப்போவதையும் முன்னதாக அறிந்து தெரிவித்தார். ஆனால் கவலைக்கு அவர் இடங்கொடுக்கவேயில்லை. அவர் இருதயம் தமது பிதாவை நம்பித் திடனாயிருந்தது. செய்யவேண்டிய சகல வேலைகளையும் ஒழுங்காய் நடத்திக்கொண்டே போனார். எவ்விதமான கவலையும் அவர் ஜீவியத்திலோ ஊழியத்திலோ இடைபுகுந்திருக்க அவர் இடங்கொடுக்கவில்லை. அவர் கவலையால் மேற்கொள்ளப் பட்டிருந்தால் கவலையற்றிருக்கும்படி மற்றவர்களுக்கு அவர் போதிப்பது வீணாகும். பவுலும் தமது காரியங்களைக் குறித்து முன்யோசனை செய்யாதவரல்லவென்பது அவர் ஜீவியத்தைப் படித்தால் தெரியும். நாம் அவசியம் யோசிக்கத்தான் வேண்டும். முன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். காரியங்களைத் தீவிரமாய் நடப்பிக்கவேண்டும். சகலத்திலும் தேவசித்தத்திற்குக் கீழடங்கி நடக்கவேண்டும். கவலை வேறே; முன்யோசனை வேறே. விசாரத்தில் ஆழ்ந்தவன் ஏதும் செய்யமுடியாதவனாகிறான். தீராத கவலை தீமையையும்; அமர்ந்த யோசனை நன்மையையும் விளைவிக்கும்.

## III. கவலையால் உண்டாகும் கேடுகள்.

கவலை கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொள்ளும்போது நமது மனம் குழம்பி இருதயம் கலங்குகிறது. ஆண்டவர் தங்களை விட்டுப்போய்விடுவார் என்ற கவலை சீஷர்கள் இருதயங்களைக் கலங்கப்பண்ணிற்று. இதை அறிந்த ஆண்டவர் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்றார். மார்த்தாளைப் பார்த்து: "நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" என்றார். நாம் கவலைக்குள்ளாகும்போது, நமது சித்தம் தடுமாறி புத்தி குழம்பும். ஒன்றும் செய்யமுடியாத நோயாளியைப் போலாகிறோம். அல்லது பதட்டமாக ஏதாகிலும் ஒன்றை மதியீனமாய்ச் செய்கிறோம். நமக்கு நேரிடும் கஷ்டத்தைப் பார்க்கிலும் அதைப்பற்றிய விசாரமே அதிகத் தீமை உண்டாக்கும்.

சியில் பணியிலிருந்தவர்களில் சிலர் மிஞ்சின விசாரத்தால் புத்தி மாறாட்டமடைந்தார்கள். வேறு சிலர் தாங்க முடியாத கவலையால் தற்கொலை செய்துகொண்டனர். மற்றவர்களோ கவலையில் அமிழ்ந்துபோகாமல் இனிப்பிழைக்கும் வழி என்னவென்பதை அமர்ந்து யோசித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். கவலை நம்மையுங் கெடுத்து பிறருக்கும் நம்மைப் பிரயோஜனமற்றவர்களாக்கும். மார்த்தாள் தன் மனக்கவலையால் கலங்கித் தன்னைக் கெடுத்து மரியாள்பேரில் எரிச்சலும், ஆண்டவர் பேரில் அதிருப்தியுமடைந்தாள். மனக்கலங்கின பின் நமக்கு நிதானமான யோசனையும் நிதானமான பேச்சுமிராது.

கவலை அவநம்பிக்கையை உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொண்டால் கர்த்தர்மேல் இருக்கவேண்டிய நம்பிக்கை அற்றுப்போகும். சீஷர்கள் காற்றின் மும்முரத்தையும் கடலின் கொந்தளிப்பையும் கண்டு கலங்கினபோது, ஆண்டவர் அவர்களைப்பார்த்து: "உங்கள் விசுவாசம் எங்கே?" என்று கேட்டார். ஆபத்திலிருந்து அவர்கள் கலங்கினது இயற்கையே. நாம் அந்த மோசத்தில் அகப்பட்டிருந்தால் அவர்களைப் பார்க்கிலும் அதிகமாய்க் கலங்கியிருப்போம். அருமைக் குழந்தை கொடிய ரோகத்தால் அவஸ்தைப்படும்போது பெற்றதாய் அதை எப்படிச் சகிக்கக்கூடும்? அவள் மனதில் கவலையும் கலக்கமும் வராதிருப்பதெப்படி? நமது வாழ்க்கையில் சம்பவிக்கும் எதிர்பாராத சங்கடங்களால் நாம் மிகுந்த கவலைக்குள்ளாகித் தத்தளித்துப்போகிறோம். கவலை நமது சரீரத்தையும் தாக்குகிறது. மனக்கலங்கும்போது போஜனத்தின்மேல் பிரியமற்றுப் போகிறது. தண்ணீர் வாய்க்குக் கசப்பாகிறது. கண்களுக்கு நித்திரை வருவதில்லை. நாம் படும் அவஸ்தையைப் பார்த்து ஆண்டவர்: உங்கள் விசுவாசம் எங்கே? பிதாவின் மீதுள்ள உங்கள் நம்பிக்கை எங்கே என்கிறார். அவர் அன்பாய்க் கேட்கும் இக்கேள்வி கூட நமக்குச் சங்கடமாயிருக்கிறது. ஏனென்றால் நாம் படும் அவஸ்தையில் அவர் அன்பை நம்புவது நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. பிதா அன்புள்ளவரானால் நான் ஏன் இப்படிக் கலங்கவேண்டும்? எனக்கேன் இந்தத் துன்பம்? நான் என்ன



செய்தேன்? என் கவலை என்னால் சகிக்க முடியவில்லையே என்று புலம்புகிறோம். அவ்வேளையில் ஆண்டவரை உறுதியாய் நம்பமுடிகிறதில்லை. சிலர் இயற்கையிலே தைரியமுள்ளவர்கள். என்ன நேரிட்டாலும் கலங்கமாட்டார்கள். அது கடவுள்மீதுள்ள நம்பிக்கையாலுண்டாகும் தைரியமல்ல. அவர்கள் உணர்ச்சியற்றவர்கள். அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான். வீட்டில் என்ன ஆபத்து நேரிட்டாலும், கொடிய வியாதியால் அவஸ்தைப்பட்டாலும், திருடரால் பொருள் நஷ்டம் நேரிட்டாலும் அவர்கள் எப்போதும் போலவே ஒழுங்காய்ச் சாப்பிடுவார்கள், ஒழுங்காகத் தூங்குவார்கள். எதையும் வேடிக்கையாகச் செய்வார்கள்; அதுவும் ஒரு இயந்திரம் போலத்தான். இப்படிப்பட்டவர்களுக்குக் கவலை என்பது தெரியாது. ஆனால் அதிகம் அன்பும் அனுதாப உணர்ச்சியுமுள்ளவர்களோ சீக்கிரத்தில் மனமுடைந்துபோவார்கள். இரக்கமுள்ள அவர்கள் இருதயத்திற்குக் குடும்பத்தில் பிறரின் கஷ்டங்களைச் சகிக்கமுடிகிறதில்லை. நோய், பசி, அவமானம் உண்டானால் அவர்கள் இருதயம் குழம்பி துக்கசாகரத்தில் அமிழ்ந்துபோவார்கள்.

நாம் எவ்வளவு கவலைப்பட்டபோதிலும் அந்தக் கவலையால் மாத்திரம் நமக்கு விமோசனம் வராது. நமது கஷ்டங்களையும் நமது மனவியாகுலங்களையும் ஆண்டவர் அறியாதவரல்ல. நமக்குக் கவலைகள் உண்டென்று ஆண்டவர் அறிவார். ஆனால் பிதாவின்மீது வைக்கும் நம்பிக்கையினால் கவலைகளை நாம் மேற்கொள்ளவேண்டுமென்பதே ஆண்டவர் போதனை. இது விஷயத்தில் கடவுள் பிள்ளைகளையும் உலகத்தாரையும் அவர் பிரித்துப்பேசுகிறார். உலகத்தார் பிதாவின் அன்பையும் அருளையும் அறியாததால் பற்பல கவலைகளால் தங்களைப் பாரப்படுத்திக் கெட்டுப்போகிறார்கள். கடவுள் பிள்ளைகளாகிய நீங்களோ அவரது அதிசய அன்பையும், கிருபையையும், காப்பாற்றும் வல்லமையையும், தவறாத விசாரணையையும், மாறாத வாக்குகளையும் அறிந்திருக்கிறீர்கள். அப்படியிருக்க நீங்களும் அவர்களைப்போல் கவலைப்பட்டுக் கலங்குவது சரியா? பிதாவின்மேல் உங்களுக்கு இருக்

கவேண்டிய பற்றும் நம்பிக்கையும் எங்கே? உங்கள் அவநம்பிக்கையல்லவா இந்தக் கவலைக்கும் கலக்கத்துக்கும் காரணம் என்கிறார்.

இதெல்லாம் உண்மைதான். ஆகிலும் துன்பங்கள் நேரிடும்போது கவலைப்பட்டுக் கலங்காதிருக்கமுடியவில்லையே. அன்புள்ள பிதாவை நாம் மறுதலிக்கவில்லை. அவர் வல்லமையைச் சந்தேகிக்கிறதில்லை. அப்படியிருந்தும் காரியங்கள் மனதுக்குச் சஞ்சலமாய் நேரிடும்போது எப்படிக் கவலைப்படாதிருக்கமுடியும் என்று கேட்கிறோம். பிதாவின்மீதுள்ள நம்பிக்கை கவலையை மாற்றும் என்று அறிவோம். அவரை நம்பும்போதே கவலையும் கூடவேயிருப்பதற்குக் காரணமென்ன? பிதாவை நாம் காண்பதைப் பார்ப்பதிலும் நமது பாடுகள் அதிகப் பிரத்தியக்ஷமாய் நமக்குக் காணப்படுகின்றன. அவர் அன்பு நமது இருதயத்தை ஆளுவதைப்பார்க்கிலும் நாம் அனுபவிக்கும் துன்பம் அதிகப்பலமாய் நம்மை ஆண்டுகொள்ளுகிறது. அவ்வேளையில் பிதாமீதுள்ள நம்பிக்கையின் உணர்ச்சியைப் பார்க்கிலும் நமது கஷ்டங்களின் உணர்ச்சி ஆழமாய் நம்மை ஆண்டுகொள்ளுகிறது. ஆவியாயிருக்கிற ஆண்டவர் சமுகம் நிச்சயமாயிருப்பதைவிட நமக்கு அருமையானவர்கள் படும் அவஸ்தையே அதிக நிச்சயமாய்த் தோன்றுகிறது. இதுவே நமது கவலைக்கும் கலக்கத்துக்கும் காரணம். நமதாண்டவர் சகல பாடுகளின் மத்தியில் யாதொரு மனக்குழப்பமின்றி தைரியமாக நடந்துகொண்டதற்குக் காரணம் தம்மோடிருந்த பிதாவின் பிரத்தியக்ஷமான சமுகமே. மக்களைப் பார்க்கிலும் பிதாவின் முகத்தையும், வியாதிபாடுகளைப்பார்க்கிலும் அவர் அன்பையும், இந்த வேதனையைப்பார்க்கிலும் அவர் வல்லமையையும் நாம் நிச்சயமாய்க் காணக்கூடுமானால் துன்பத்தின் மத்தியில் அமைதியும் நம்பிக்கையும் நமது மனதில் உண்டாகும். பூமிக்குரிய சரீர சம்பந்தமான பற்று குறைந்து, நாம் ஆவிக்குரியவர்களாகி, ஆண்டவரையே நமது ஜீவனும் பொக்கிஷமுமாக்கிக் கொள்வோமானால், அவர் சித்தம் எப்பொழுதும் நமக்கு நன்மையாயிருக்கும் என்கிற நிச்சயத்தால் சகலத்தையும் பொறுமையாய்ச் சகித்துக் கொள்வோம். இந்தப் பொறுமை நமக்கு ஆசீர்வாதமாகும்.



களை நம்மைக் கனியற்றவர்களாக்கும். தேவனுடைய பிள்ளைகள் கனிநிறைந்தவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் பெற்றிருக்கிற பிதாவின் ஆவியானவர் கிறிஸ்துவின் லட்சணங்களாகிய கனிகளை அவர்களில் உண்டாக்குகிறார். இந்தக் கனிகளைப்பற்றி கலாத்தியர் ஐந்தில் வாசிக்கிறோம். அவை அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகளே. இவைமாத்திரமல்ல, நமதாண்டவரிடத்தில் என்னென்ன தேவலட்சணங்கள் காணப்பட்டதோ அவைகளெல்லாம் நம்மிலும் காணப்படவேண்டும். கிறிஸ்துவின் ஆவியை நாம் பெற்றிருப்பதும், அந்த ஆவிக்கேற்றபடி நாம் நடப்பதும் உண்மையானால் ஆவியின் கனியாகிய கிறிஸ்துவின் சிந்தை நம்மில் காணப்படவேண்டியது அவசியம். அவ்வாறு காணப்படும்போது நாம் அநேகருக்கு கனிகள் நிறைந்த விருக்ஷம்போல் ஆசீர்வாதமாயிருப்போம். நமது ஜீவியமும் ஊழியமும் மற்றவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்புவதற்கும், தேவராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்கும், அவர்கள் பாவங்களை மேற்கொண்டு கிறிஸ்துவின் சாயலில் வளருவதற்கும், துக்க துன்பகாலங்களில் பொறுமையுடன் தேவசித்தத்திற்குக் கீழடங்குவதற்கும், தங்கள் தினசரி ஜீவியத்தில் சகல காரியங்களிலும் கடவுளால் நடத்தப்படுவதற்கும் அநுகூலமாயிருக்கும். ஆண்டவருக்குத் தன்னைப் பூரணமாய் ஒப்புவித்து அவரால் நடத்தப்படுகிற ஒரு மனுஷனால் மற்றவர்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதம் உண்டாகக் கூடுமென்று அளவிட நம்மால் முடியாது. அதை அவன்தானும் அறியமாட்டான். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் பிழைக்கும் அவன் உள்ளத்திலிருந்து "ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று சொன்னவர் உண்மையுள்ளவர். ஆனால் பற்பல கவலைகள் நம்மை ஆண்டுகொண்டு நமது இருதயத்தைக் கலங்கச் செய்யும்போது நாம் ஒருக்காலும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமுடியாது. யார் யாருக்குள் கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் சம்பூரண ஆளுகை செய்கிறதோ அவர்கள் ஜீவியமே ஆசீர்வாதமான கனிகள் நிறைந்ததாயிருக்கும். கவலைகள் நமது உள்

ளத்தைப் பாரப்படுத்தி நெருக்கும்போது நாம் பலன் கொடுக்கமுடியாது. விதைக்கிறவன் உவமையில் ஆண்டவர் சொன்ன காரியம் அதுதான். விதைகள் விழுந்து முளைத்துப் பயிர் வளர்ந்தன. பக்கத்தில் முட்செடியும் வளர்ந்தது. பலன்கொடுக்கப்போகிற சமயத்தில் முட்செடிகள் வளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன. நாம் திருவசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டபோதிலும் "உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால்" நாம் பலனற்றவர்களாகிறோம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு எவ்வளவு வேத அறிவு, பிரசங்கக்கேள்விகள் கிடைத்தும் நாம் பிரயோஜனமற்றவர்களாயிருப்பதற்குக் காரணம் கவலைகளே. கவலைகளாகிய முட்களால் நமது ஆவிக்குரிய ஜீவியம் பாழாய்ப்போகிறது.

கவலை நமது வேலையைக்கெடுக்கும். கடவுள் ஊழியத்தை மனுஷருக்குள் நடப்பிப்பதற்கு நமக்குத் தெளிந்த புத்தியும் அமர்ந்த மனமும் வேண்டும். கவலையோ இவை இரண்டையும் கெடுக்கும். கவலை நமது புத்தியை அந்தகாரப்படுத்தி மனதைக் கலக்கஞ்செய்வதால் ஆண்டவர் ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்றமுடியாது. முழுமனதோடும் முழுக்கருத்தோடும் முழுபலத்தோடும் செய்வதே உண்மையான ஊழியமாகும். பற்பல உலகக்கவலைகள் நம்மை ஆண்டுகொள்ளும்போது நமது வாய் பேசினாலும், கைகள் முயற்சியிலிருந்தாலும், மனம் வேறுபட்டிருப்பதால் நமது ஊழியம் மாயமும் பொய்யுமாகும். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது" என்றார். அதாவது "கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது." உலகக்காரியங்களில் பற்றுதல் வைத்து, அதே விசாரமாயிருப்பவர்கள் கடவுள்மீது பற்றுதல் வைப்பது முடியாத காரியம். அவர்மீது பற்றுதல் இல்லாதபோது அவருக்கு ஊழியஞ்செய்வதாக நினைப்பது வஞ்சனையாகும். அநேகர் இந்த நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் புறம்பாகச் செய்வதை மனுஷர் தேவ ஊழியமென்று நினைக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தைக் கண்டதார்? உள்ளம் உலகமயக்கத்தால் கடவுளை விட்டுப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய ஜீவியத்தின் நோக்



கம் எதுவோ அதுவே அந்த மனுஷன். நமது இருதயத்தை பூமிக்குரிய ஆசாபாசங்கள் நிரப்பிக்கொண்டிருக்கையில் கடவுளுக்கு எப்படி நாம் ஊழியஞ்செய்யமுடியும்? முடியாது என்று ஆண்டவர் சொல்லும்போது முடியும் என்று சொல்லுகிறவன் யார்? இப்படிப்பட்ட இரண்டான ஊழியங்களால் அநேக சபைகள் பாழாய்ப்போகின்றன. பூமி, பொருள், தங்கம், பெருமை முதலியவற்றால் நிறைந்த இருதயங்கள் அவைகளைப்பற்றிய உபந்நியாசங்களை நடத்துவதே உண்மை. ஏனென்றால் இருதயத்தின் நிறைவின்படிதானே வாய் பேசவேண்டும். அப்படியிருக்க இருதயம் ஒருவிதமும் வாய் வேறுவிதமுமாயிருப்பது மாயமல்லவா? உலகக்கவலை ஊழியத்தைக்கெடுக்கும்.

கவலையால் ஒரு பிரயோஜனமுமில்லை. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று நினைத்து கவலைகொண்டிருப்பதாலே உணவும் பானமும் உடுப்பும் வரமாட்டாது. கவலையால் முன் கவனித்தபடி நஷ்டமேயன்றி லாபமில்லை. "கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடே ஒரு முழத்தைக் கூட்டுவான்?" என்று ஆண்டவர் கேட்கிறார். கவலையால் ஒரு முழமல்ல ஒரு அங்குலமாகிலும் கூடுவதில்லை. "மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க நீங்கள் கவலைப்படுகிறதென்ன?" என்கிறார். எத்தனை மணிநேரமாய், எத்தனை நாட்களாய் நாம் கவலை என்னும் மஞ்சத்தில் படுத்துப் புரண்டாலும் கடுகளவு நன்மை ஏற்படப்போவதில்லை. கவலையால் கால நஷ்டமும், தேகநஷ்டமும், வேலை நஷ்டமும், கடவுள்மீது அவநம்பிக்கையுமே கைகண்ட பலனாகும்.

## IV. கவலைக்குப் பரிகாரம்.

நமது பாவங்களாலும், பலகாரணங்களாலும் கவலைக்கு ஆளாவோம். கவலையற்ற மனுஷன் உலகில் இல்லை. மனுஷனுக்குக் கவலையில்லையென்றால் கவலையைப்பற்றி ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் அவ்வளவு விஸ்தாரமாகப் பேசவேண்டியதில்லை. கவலையற்றிருக்கவேண்டும் என்று அவர் போதித்ததே உலகில் கவலை இருக்கிற

தென்பதற்கு ஆதாரம். அப்படியானால் இந்தக் கவலைக்குப் பரிகாரமென்ன? அதை மூன்று வார்த்தைகளில் சொல்லி விஸ்தரிப்போம். கவலைக்குப் பரிகாரம்: தெரியப்படுத்தல், வைத்துவிடல், தேடுதல் என்பவைகளே.

தெரியப்படுத்தலைப்பற்றி பவுல் பேசுகிறார். இது அவர் தமது அநுபவத்தில் கண்ட நிச்சயமான விஷயம்: "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி. 4: 6, 7). கிறிஸ்துவைப் பின்சென்ற பிலிப்பி சபையார் பாடுகள் உபத்திரவங்களுக்கு ஆளானார்கள். எங்கே உபத்திரவங்களுண்டோ அங்கே கவலையுமுண்டு. அந்தக் கவலைக்குப் பரிகாரமென்னவென்பதை அப்போஸ்தலன் தமது அநுபவத்திலிருந்து கூறுகிறார். கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் கவலை நீங்காது. காரியங்களை உள்ளபடி ஒன்றையும் மறைக்காமல் பிதாவுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர் இதுவரை நமக்குச்செய்த எல்லா உபகாரங்களையும் கிருபைகளையும் நினைவுகூர்ந்து, துக்கமும் கவலையும் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி நமது கஷ்டங்களை அவருக்கு அறிவிக்கவேணும். நன்றியறிதலான ஸ்தோத்திரம், நமது உள்ளத்தை ஆண்டுகொண்டிருக்கும் அந்தகாரமாகிய கவலையை நீக்கிப் புது நம்பிக்கையை உண்டாக்கும். அதுமாத்திரமல்ல, புத்திக்கெட்டாத உன்னத தேவசமாதானம், கலவரமின்றி நமது இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குள் எல்லாத் தீமையிலிருந்தும் காத்துக்கொள்ளும். அருமை ரட்சகர் நமது ஊக்கமான ஜெபத்தைக்கேட்டு அதிசயமான பிரகாரம் நம்மை ஆபத்திலிருந்து ரட்சிப்பார். அல்லது நமது பாடுகளைச் சகிக்கத்தக்க கிருபையளித்து நமது கவலையைப் போக்கிச் சமாதானத்தை அருளுவார். நமது கவலைகளை மனதில் வைத்து வியாகுலப்பட்டுக்கொண்டிருப்போ



மானால் நமது ஆத்துமாவுக்குச் சுகமிராது. "நான் அடக்கிவைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உருகிப்போயிற்று" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். ஆனால் அவர் தமது காரியங்களை கர்த்தருக்கு விபரமாய் அறிவித்து விண்ணப்பித்தபோது ஆண்டவர் அவருடைய கலக்கத்தை நீக்கி ரட்சணிய பாடல்கள் அவரைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார். நமது துயரங்களை ஆண்டவர் பாதத்தில் கொட்டிவிடும் வரைக்கும் நமக்கு ஆறுதல் கிடையாது. இதன் உண்மையை மனுஷருக்குள்ளேயே காண்கிறோம். மனுஷர் நமது மனக்கவலையை நீக்க வல்லவர்களல்ல. அப்படியிருந்தும் நமது துயரங்களை அநுதாபமுள்ள சிநேகிதரிடம் சொல்லுவதால் ஒருவிதமான ஆறுதல் கிடைத்ததுபோல் தோன்றுகிறது. சிநேகிதன் சிநேகிதனிடம் தன் பாடுகளைச்சொல்லி அழுவதால் ஒருவகை ஆறுதலைக் காண்கிறான். அப்படியானால் அன்பும் கிருபையும் அநுதாபமும் நிறைந்த ஆண்டவர் நமது விண்ணப்பத்தைக்கேளாதிருப்பாரா? நமது கவலையை நீக்கி நம்மை ஆறுதல்படுத்த அவருக்கு வல்லமையில்லையா? அன்னாள் மனதைப் புண்படுத்தின அவமானமும் நிந்தையும் கொஞ்சமல்ல. கவலையால் நிறைந்து மனக்கிலேசமுள்ள ஸ்திரீயாகக் காலங்கழித்தாள். கவலை மிஞ்சிப்போகவே அதைச் சகிக்கமுடியாமல், பவுல் பிற்காலத்தில் பிலிப்பியருக்குச் சொன்ன ஆலோசனைப்படி, அவள் விரைந்து தேவசமூகம் சென்று தன் சஞ்சலம் யாவையும் ஆண்டவர் பாதத்தில் ஊற்றிவிட்டாள். கடவுள் அவள் மனக்கவலையை அகற்றி அவளை ஆறுதல் படுத்தி ஆசீர்வதித்தார். "அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை."

ஜெபத்தின் வல்லமையை நாம் இன்னும் சரியாய் அறிந்தவர்களல்ல. வாயில் வந்ததெல்லாம் ஜெபமாகாது. உத்தமமான ஜெபத்துக்கு சுத்த ஜீவியமும் விசுவாசமும் வேண்டும். ஜெபத்தில் ஜீவனுள்ள பிதாவோடு பேசுகிறோம். நாம் சொல்லுவதை அவர் செவிசாய்த்துக் கேட்கிறார் என்கிற நிச்சயம் நமக்கு வேண்டும். அந்த நிச்சயம் நம்மில் ஊக்கத்தையும் பயபக்தியையும் உண்டாக்கும். ஜெபம் ஆகாயக்கிலம்பமல்ல, அநேக வார்த்தைகள் அல்ல. நமக்கே நாம்

விண்ணப்பித்துக்கொள்வதல்ல. ஜெபிக்கும்போது சர்வவல்லமையுள்ள பிதாவாகிய கடவுளிடத்தில் பேசுகிறோம். நமது கவலைகளையும் மனவியாகுலங்களையும் நமது பாவங்களையும் உள்ளதை உள்ளபடி அவருக்குத் தெரிவித்து இரக்கத்துக்காகக் கெஞ்சுகிறோம். அவர் நமது காரியங்களை இருக்கிறபடி அறிந்திருக்கிறபடியால் மாயக்காரப் பரிசேயனைப்போல் ஜெபிக்கக்கூடாது. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறார். நமது சஞ்சலங்களைக் கண்ணீரோடு தகப்பனுக்கு அறிவிக்கும்போது அவர் இருதயம் நமக்காகப் பரிதபிக்கும். அவர் வல்லமை நமக்கு உதவிசெய்யத் தீவிரிக்கும். ஊக்கமும் உண்மையுமான விண்ணப்பம் ஒருக்காலும் வீண்போகாது. கொடிய கவலை ஊக்கமான மன்றாட்டுக்கும், ஊக்கமான மன்றாட்டு பெரியவெற்றிக்கும் வழிநடத்தும். எல்லாம் க்ஷேமமாயிருக்கும்போது நாம் ஆண்டவரை கரிசனையோடு தேடுகிறதில்லை. ஒருவேளை ஜெபித்தாலும் அதை ஒரு கடமைபோல் செய்கிறோம். கடவுள் தமது வல்லமையை நமக்கு வெளிப்படுத்த விரும்புங்காலத்தில் நம்மை அந்தகாரமான பாதையில் நடத்துகிறார். காரிருள் நம்மைச் சூழ்ந்துகொள்ள நாம் கலங்குகிறோம். யாதொரு துணையுமின்றி அவர் பாதத்தில் விழுந்து இரக்கத்துக்காக ஊக்கமாய்க் கெஞ்சுகிறோம். "ஆபத்துகாலத்தில் நீ என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" என்று அவர் சொன்ன வாக்கு நமக்குப் பலிக்கிறது. நமது பாரத்தை அவர் அகற்றி "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தால் நமது இருதயத்தை நிரப்புகிறார்." ஆகையால் நமது கஷ்டம் கவலையை உள்ளபடி பிதாவுக்குத் தெரிவிப்பது கவலைக்குப் பரிகாரமாகும்.

வைத்து விடுவதைப்பற்றி பேதுரு சொல்லுகிறார். "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1. பேது. 5 : 7). இங்கே ஒரு காரியம் நமக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுக்கிறது. பரம பிதா நமது க்ஷேமங்களை விசாரிக்கிறவர். சிநேகிதர் நமது சுகசெய்தியை விசாரிப்பது நமக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. எல்லாம்



வல்ல கடவுள், சர்வத்தையும் ஆண்டு நடத்தும் சிருஷ்டிகர்த்தா, தமது பிள்ளைகளின் க்ஷேமத்தை விசாரிக்கிறவராயிருக்கிறார். தமது திருக்குமாரனைக்கொடுத்த நம்மிடத்தில் அதிசயமாய் அன்புகூர்ந்த பிதா நமது காரியங்களை அற்பமாய் நினைக்க முடியவே முடியாது. கடவுள் எவ்வளவு பெரியவர்! என் காரியங்களை அவர் கவனிப்பாரா என்று நாம் நினைக்கிறோம். இந்த நினைவு அவருக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது. நிச்சயமாகவே அவர் விசாரியாத காரியமில்லை. அவர் தமது அருமைப் பிள்ளைகளை விசாரிக்காவிட்டால் வேறு யார் நம்மை விசாரிப்பது? இந்த உலககாரியங்களில் அவர் நம்மை விசாரிக்காவிட்டால் கிறிஸ்துவுடன் நாம் உடன் சுதந்தரராவதும் அவர் மகிமையில் பங்குபெறுவதும் வீண்பேச்சேயாகும். அன்புள்ள பிதா நம்மை நாள்தோறும் விசாரிக்கிறார். இன்று உன் சுகம் எப்படி? பிள்ளைகள் காரியங்கள் எப்படி? செலவுக்குப் பணமில்லையோ? சாப்பாட்டுக் கஷ்டமுண்டோ? இன்னார் உன்னை நிந்தித்தது உன் மனதுக்கு வேதனையாயிருக்கிறதோ? மக்கள் உத்தியோகம் விவாக விஷயங்களில் கவலைப்படுகிறாயோ? என்பதுபோல் நமது காரியங்களை அனுதாபத்தோடு விசாரிக்கிறார். எல்லாம் அறிந்த பரமபிதா நமக்கு உதவிசெய்யவும் வல்லவராயிருக்கிறார்.

இவ்வாறு அவர் நம்மை விசாரிக்கிற தகப்பனாயிருப்பதால் நாம் நமது கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடவேண்டும் என்று பேதுரு தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறார். பவுல் நமது கவலைகளை தேவனுக்குத் தெரியப்படுத்துவதினால் உண்டாகும் சமாதானத்தைப்பற்றிச் சொன்னார். பேதுரு தெரியப்படுத்துவதுமாத்திரமல்ல, அவைகளை அவரிடமே வைத்துவிடவேண்டும் என்கிறார். வைத்துவிடவேண்டும் என்னும் சொல்லானது, கவலைகளை ஒரு மூட்டைபோல் கட்டி அதை ஆண்டவரிடம் விட்டுவிடவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இதே அனுபவம் சங்கீதக்காரனுக்கும் இருந்ததாகத் தோன்றுகிறது. "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு" என்று அவரும் சொல்லியிருக்கிறார். திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வந்ததைக்கண்ட நமதாண்டவரும் அவர்கள் [illegible]

கவலைகளால் அமிழ்த்தப்படுவதை அறிந்து: “வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்றார். கவலைக்குள்ளானவர்கள் பாரமான மூட்டையைச் சுமக்கிறவர்கள்போலிருக்கிறார்கள் என்பது ஆண்டவர் சொன்ன வார்த்தைகளிலும் வெளிப்படுகிறது. பிதா நம்மை விசாரித்து நமது பாரத்தை நீக்கச் சித்தமுள்ளவரென்பது ரட்சகர் ஜீவியத்தில் காணப்படுகிறது. ஏனென்றால் கிறிஸ்துவானவர் நமது பாவங்களையும், நோய்களையும், கவலைகளையும் பலவீனங்களையும் சுமந்தாரென்பது நிச்சயம். விசாரிக்கிறவர் என்பது அவர் நமக்காகக் கவலைப்படுகிறவர் என்றும் அர்த்தமாகும்.

நாம் பிதாவுக்கு நமது கவலைகளைத் தெரியப்படுத்துவதோடு கவலைகளாகிய பாரத்தை அவரிடத்திலேயே விட்டுவிடவேண்டும். இப்படிச் செய்யக்கூடுமானால் சமாதானமும் ஆறுதலும் நமது பங்காகும். இதை மனுஷருக்குள் பார்த்திருக்கிறோம். ஒரு சிக்கலான விஷயத்தில் நாம் அகப்பட்டுக்கொண்டோம். அதைச் சமாளிக்க நம்மால் முடியவில்லை. நாம் கலங்கித் தவிக்கிறோம். அனுதாபமும் திறமையும் வாய்த்த ஒரு சிநேகிதன் நமது ஞாபகத்தில் வருகிறார். அவர் காரியத்தை முடிப்பதில் வல்லவர். அவரிடத்தில் ஓடி நமது தத்தளிப்பை அறிவித்து உதவி செய்யும்படி கேட்கிறோம். அவர் நம்மைப்பார்த்து: பயப்படவேண்டாம், நான் இந்தக் காரியத்தை உங்களுக்காகச் செய்து முடிக்கிறேன் என்கிறார். நமது கலக்கம் நீங்கி தைரியமும் சந்தோஷமும் உண்டாகின்றன. வேறொரு சிநேகிதர் நம்மைப்பார்த்து: சந்தோஷமாயிருக்கிறீர்களே, அந்தக்காரியம் எப்படி முடிந்தது என்று கேட்கிறார். அந்தப்பாரத்தை இன்னார் ஏற்றுக்கொண்டதால் கவலை விட்டது என்கிறோம்.

பிதாவிடம் நமது பாரத்தை விட்டுவிடுவதும் இதுபோலேயன்றி வேறல்ல. நமது திண்டாட்டத்துக்குக் கவலை நம்மை ஆண்டுகொள்ளுவதற்கும் காரணம் உண்டு. மனுஷர் நமது கண்களுக்குப் பிரத்தியக்ஷமாயிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கிறோம், அவர்கள் சத்தம் கேட்கிறோம். ஆகையால் அவர்கள்மேல் நமக்கு நம்பிக்கையும்



பற்றுதலும் அதிகம். கடவுள் அவ்வளவு பிரத்தியக்ஷமாய் நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை, ஆகையால் அன்புள்ள பிதாவிடம் மனுஷரிடத்தில் வைக்கும் அவ்வளவு நம்பிக்கைகூட நாம் வைக்கிறதில்லை. காணப்படுகிறவைகளையே பிடித்து நடக்கும் நமக்கு ஆவியாயிருக்கிற பிதா மங்கி மறைந்துபோனார். நமது மார்க்கந்தான் என்ன? நமது பக்திதான் என்ன? தேவசமுகத்தில் இடைவிடாமல் சஞ்சரிக்கப் பழகாத நாம் ஆராதனைகளாலும் ஜெபக்கூட்ட உற்சாகங்களாலும் நம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம். நாசியில் சுவாசமுள்ள மனுஷன்மேல் நாம் வைக்கிற அவ்வளவு நம்பிக்கை நமக்காக உயிர்கொடுத்த அப்பன்மேல் நமக்கில்லையே. நம்மைப்போன்ற மனுஷனாகிய மோசே லட்சக்கணக்கான முரட்டு இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்ததும், வனாந்தரத்தில் வழிநடத்தினதும் எப்படி? அதரிசனமான கடவுளை நேருக்கு நேரே தரிசிப்பதுபோல் அவர் நடந்துகொண்டதினால் அல்லவோ? அவருடைய விசுவாசப்பார்வைக்கு கடவுள் மனுஷரைப்பார்க்கிலும் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டார். சகிக்கமுடியாத தொல்லைகள் கவலைகள் மத்தியில் மோசே அவ்வளவு சாந்தமும் பொறுமையும் தாழ்மையுமாய் நடந்துகொண்டதற்குக் காரணம் தேவசமுகத்தை எப்போதும் அவர் தரிசிக்கிறவராயிருந்ததாலேயே. உயிரோடிருக்கும் ஆண்டவரை நமது ஆத்துமா காணக்கூடுமானால், நமக்குக் கஷ்டம் கவலை நேரிடும்போது உடனே அவருக்கு அவைகளைப்பற்றித் தெரிவிப்போம்.

நமது கஷ்டங்களை பிதாவுக்குச் சொல்லுவதோடுகூட அந்தப் பாரத்தை அங்கேயே விட்டுவிடவும் வேண்டும். கிறிஸ்தவ ஜீவியம் லேசான காரியமல்ல. ஒரு மணிநேர ஆராதனைக்குமாத்திரம் உரியதல்ல. சகல காரியங்களிலும் நாம் ஆண்டவருக்குப் பிரியமானதைச் செய்து ஜீவியத்தில் பூரணப் படவேண்டியதிருக்கிறது. அதற்கேற்றபடியே ஆண்டவரும் நம்மை நடத்துகிறார். நாம் எவ்வளவு தவறினாலும் சோர்ந்துபோகாமல் புதுப்புதுப் பாடங்களைப் படித்துத் தேறவேணும். நமக்குக் கஷ்டங்கள் நேரிட்டால் நாம் பிதாவுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பது ஒருபாடம். தெரியப்படுத்துவது

மாத்திரமல்ல நமது பாரத்தை அவரிடமே விட்டுவிட வேண்டுமென்பது இன்னொரு பாடம். இந்தப் பாடத்தில்தான் நம்மில் அநேகர் தேறவில்லை. ஜெபிக்கு முன்னும் கவலை, ஜெபித்தபின்னும் கவலை. பாரத்தை ஆண்டவரிடம் கொண்டுபோய் அதைப்பற்றி அவருக்குச் சொல்லிவிட்டுத் திரும்பவும் அந்தப் பாரத்தை எடுத்துச் சுமந்து கொண்டு வருகிறோம். கடவுளுக்குத் தெரியப்படுத்தியும் பாரம் பாரமாகவே யிருக்கிறது. இதனாலேதான் பேதுரு: "உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" என்றார். ரஸ்தா மார்க்கமாய் ஒரு வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டிக்குப் பின்னாலே ஒரு மனுஷன் தலையில் ஒரு பாரத்தைச் சுமந்துகொண்டு கஷ்டத்தோடு நடந்து வந்தான். அவன் வண்டிக்காரனைக் கூப்பிட்டு: ஐயா, பாரம் சுமக்க முடியவில்லை, வண்டியில் என்னை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சினான். வண்டிக்காரன் மனமிரங்கி அவனை ஏறிக்கொள்ளும்படி சொன்னான். சற்றுதூரம் சென்றபின் வண்டிக்காரன் திரும்பி அந்த மனுஷனைப்பார்த்து: பெரியவரே, இன்னும் தலைமேலே மூட்டையை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்க அவன்: எனக்குத் தானே வண்டியில் இடங்கொடுத்தீர், என் மூட்டைக்குமா என்றான். அதற்கு வண்டிக்காரன்: நீயும் உன் மூட்டையும் சேர்ந்துதானே என் வண்டிக்குப் பாரம், அதை வண்டியில் வைத்துவிட்டால் உன் தலைப்பாரம் நீங்கிச் சுகமாயிருக்கலாமே என்றான். நமது கவலைகளை ஆண்டவருக்குச் சொல்லியும் மூட்டையை அவரிடம் விட்டுவிடாதிருந்தால் நமக்கு இளைப்பாறுதல் இல்லை. "உன்னை ஏந்துவேன், சுமப்பேன், தாங்குவேன்" என்று பிதா வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நம்மையே சுமக்கும்போது நமது கவலைகளாகிய பாரத்தை ஏன் சுமக்கமாட்டார்? நாமே அந்த மூட்டையை நமது தலையில் வைத்துக்கொண்டால் அவர் என்ன செய்வார்? ஆகையால் நமது பாரத்தை அவரிடமே விட்டுவிடுவது நமது கவலைக்குப் பரிகாரம்.

3. தேடுதல். "நீங்கள் தேவராஜ்யத்தையே தேடுங்கள் அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"



என்றார். பவுல் பேதுரு சொன்னதை நிறுத்தி, கவலைக்கு ஆண்டவர் சொல்லும் பரிகாரத்தைப் பார்ப்போம். நமது கவலைகளைப் பிதாவுக்குத் தெரியப்படுத்தி அவைகளை அவரிடம் விட்டுவிட்டபின் நமது மனம் வெறுமையாயிருந்தால் போன கவலைகள் திரும்பவும் வந்து நம்மை ஆண்டுகொள்ளும். கவலை மனதுக்குரியது. ஆகையால் நமது மனம் வேறுகாரியங்களில் முயற்சியாயிருக்கவேண்டும். அந்த வேறுகாரியங்கள் ஆவிக்குரிய தேவகாரியங்கள். அநேகர் தங்கள் கவலைகளைப்போக்க வேடிக்கை கண்காட்சிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். அவற்றால் கவலைகள் நீங்கிச் சமாதானம் கிடைப்பதில்லை. இது குடிகாரன் தன் கவலையை மறக்கும்படி மதுபானம் பண்ணுவதற்கு ஒப்பாகும். வெறி நீங்கினபின் கவலை கவலைதான்.

ஆண்டவர் காண்பிக்கும் வழியோ ஆசீர்வாதமானது. அதுவே தேவராஜ்யத்தின் பிரமாணம். நமக்கடுத்த கவலைகள் யாவும் இச் சரீரத்துக்குரியவை என்பது நிச்சயம். இதற்கு என்ன செய்வோம்? அதற்கு என்ன செய்வோம்? இதை எப்படி முடிப்போம்? அதை எப்படி நடத்துவோம் என்று நமது வாழ்க்கைக்கடுத்த அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறோம். எல்லாம் நமது விருப்பம்போல் நடந்தால் நமக்குக் கவலையில்லை. அப்படி நடப்பதும் முடியாத காரியமே. எத்தனையோ காரியங்கள் சரியாய் நடவாததால் நமக்குக் கவலை ஏற்படுகிறது. "நீங்கள் கவலைப்படுகிறதென்ன? தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்கிறார். அவர் பொய் சொல்லமாட்டார். கூடக்கொடுக்கப்படும் என்பதாலே ஐசுவரியத்தையும் உலகப்பொருள்களையும் ஏராளமாய் நமது வீட்டில் கொட்டிவிடுவார் என்று அருத்தமல்ல. அப்படிச் செய்வாரானால் அது நமது அழிவுக்கே ஏதுவாகும். "எல்லாம் கூடக்கொடுக்கப்படும்" என்பது நமது நிலைமைக்கும் தேவைக்கும் அவசியமான நன்மைகள் எவைகளோ அவைகளைத் தவறாது கொடுப்பார் என்பதே கருத்து. "நமக்கு இன்னது தேவை என்பதை நமது பரமபிதா அறிந்திருக்கிறார்" அந்த நன்மை நமக்குக் கிடைப்பதற்கு நாம் தேவராஜ்யத்தைத் தேட வேண்டும்.

ஏன் தேவராஜ்யத்தைத் தேடவேண்டும்? தேவராஜ்யம் என்பது தேவ ஆளுகை. அதைத் தேடுதல் என்பது, முதலாவது நாமே தேவ ஆளுகைக் குட்பட்டு, அவர் சித்தப்படி பிழைப்பதோடு, மற்றவர்களும் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி உழைப்பதைக் குறிக்கும். தேவராஜ்யம் என்னவென்பதை நமது ஆண்டவர் ஜீவியத்தில் திட்டமாய்க் காண்கிறோம். மனுஷன் ஆவியாயிருக்கிறான். அவன் வசிக்கும் வீடு சரீரம். ஆவி கடவுளோடு சம்பந்தப்பட்டது; சரீரம் பூமியோடு சம்பந்தப்பட்டது. பூமிக்குரிய நன்மைகளாலே சரீரம் பிழைக்கவேண்டியதிருக்கிறது. அப்படிப் பிழைத்தாலும் அந்தச் சரீரம் நமது ஆவிக்குரிய ஜீவியத்துக்கு உதவிசெய்யும் சாதனமாயிருக்கவேண்டும். ஆனால் காரியமோ தலைகீழாய் மாறிவிட்டது. பாவத்தால் மனுஷனுடைய புத்தி அந்தகாரப்பட்டதால் ஆவியை மறந்து சரீரத்தையே பிரதானமாக்கினான். அழிந்துபோகும் வீட்டை முக்கியப்படுத்தி, ஆவிக்குரிய உள்ளான மனுஷனை அசட்டை செய்தான். ஆவிக்குரியவனாயிருக்கவேண்டியவன் மாம்சத்துக் குரியவனானான். பரத்துக்குரியவனாகப் பிழைக்கவேண்டியவன் இகத்துக்குரியவனானான். உலககாரியங்களில் வாஞ்சையுற்று, கண்கண்டதே காட்சி என்பதுபோல, சரீரத்தை வளர்ப்பதும் சந்தோஷடி கொண்டாடுவதுமே தன் ஜீவியத்தின் பிரதான நோக்கம்போல் பிழைக்கிறான். தேவ அமைப்பின் ஒழுங்கு தவறினபோதே சகல கேடுகளும் கவலைகளும் மனுஷனை ஆண்டுகொண்டன. உலக மனுஷன் தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததால் சரீரத்தைவிட்டு அவன் ஆவி பிரியும்போது பரத்தில் அவனுக்கு இடமிராது. அவன் பூமியில் தேவசித்தப்படி பிழைக்காததால் உலககாரியங்களிலும் தேவாசீர்வாதம் இராது. ஆகவே ஆவியை மறந்து மாம்சசரீரத்திற்கென்று பிழைப்பவனுக்குப் பங்கு இங்குமில்லை அங்குமில்லை. வெளித்தோற்றத்தைக் கண்டு அவர்கள் நன்றாயிருக்கிறார்களே என்று நாம் பேசக்கூடாது. கடவுளற்ற ஜீவியத்தில் எப்படி ஆசீர்வாதமிருக்கும்? ஆத்ம ஆசீர்வாதமே நிறைந்த ஐசுவரியம். மனுஷர் பார்வையில் ஆண்டியாக எண்ணப்பட்ட யோவான்ஸ்நானன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருந்தான்.



இந்த இருமோசங்களையும் அறிந்த ஆண்டவர் மனுஷன் பிழைக்கும் ஆசீர்வாதமான வழியை அவனுக்குப் போதிக்கிறார். "நீ தேவனுடைய ராஜ்யத்தையே தேடு, அப்பொழுது இவைகள் யாவும் உனக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்கிறார். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய நன்மைகளும் கொடுக்கப்படும். ஒருவன் கடவுளுக்குரிய காரியங்களைப் பிரதானமாய்த் தேடும்போது, அவர் அவனுக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பதில் உண்மையும் ஜாக்கிரதையுமாயிருக்கிறார். அவனைச் சகல விஷயங்களிலும் நடத்த வேண்டிய கவலையை அவர் எடுத்துக்கொள்ளுகிறார். இதுவரை அவனைப் பாரப்படுத்தின கவலைகள் ஒழிந்தன. பிழைக்கும் வழியறியாமல் நம்மில் அநேகர் வீணாய் நம்மைப் பாரப்படுத்திக்கொள்ளுகிறோம். தேவராஜ்யத்தின் பிரமாணத்தை நாம் கவனிக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களைப் பிரதானமாய்த் தேடும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய நன்மைகளும் நமக்குக் கிடைக்கின்றன. நமது ஜீவிய வண்டி சரியாய் ஓடவேண்டுமானால் குதிரையைச் சரியான இடத்தில் கட்டவேண்டும். வண்டி முன்னும் குதிரை பின்னுமாகக் கட்டினால் வண்டி ஓடாது. நமது ஜீவியத்தில் தேவராஜ்யமாகிய ஆளுகை முதலிடத்தில் இருக்கவேண்டும். ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவே நமது பிரதான நோக்கமும் வாஞ்சையும் முயற்சியுமாயிருக்கவேண்டும். நமது இஷ்டம்போல் அல்ல, அவர் சித்தம்போலவே பிழைக்கவேண்டும். அவர் மகிமை ஒன்றையே நாடி அநேகர் தேவராஜ்யத்தின் மக்களாகும்படி உழைக்கவேண்டும். இதுவே பாக்கியமான ஜீவியம். நாம் இவ்வாறு பிழைக்கும்போது பரமபிதா தமது மாறாத வாக்கின்படி நமக்கும் நமது குடும்பத்துக்கும் தேவையான சகல நன்மைகளையும் தவறாது கொடுப்பார். இது மெய்தான் என்பதைத் தங்கள் அனுபவத்தில் அறிந்த தேவமக்கள் அநேகர் உண்டு. நாம் தேவசட்டத்துக்கும் அவர் சித்தத்திற்கும் நம்மை ஒப்புவிக்காமல், நமது இஷ்டம்போல் நடந்துகொண்டிருக்க, நமக்குச் சங்கடங்கள் நேரிடும்போது முறுமுறுப்பதும் அவரைக் குற்றப்படுத்திப் பேசுவதும் சரியல்ல. அறிவிருந்தும் அனுபவமற்ற

பேர்க்கிறிஸ்தவர்களாலே ஆண்டவர் நாமத்துக்கு எவ்வளவோ அவமானமும் இடறலும் உண்டாகின்றன!

தேவராஜ்யத்தைத் தேடுவதே கவலைக்குப் பரிகாரமென்றும், பிதா நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பவரென்றும் சொல்லி, அதை உறுதிப்படுத்த ஆண்டவர் சில திருஷ்டாந்தங்களை எடுத்துக்காண்பிக்கிறார். ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை, சாலொமோன் முதலாய்த் தன் சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? மேலும் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா என்கிறார். மேற்கூறியவைகளை நாம் அடிக்கடி வாசித்து வெகுசாதாரணமாகிவிட்டன. ஆண்டவர் நமது கவலையைப்போக்கும்படி சொல்லும் நியாயங்கள் நமக்குள் நம்பிக்கையை உண்டாக்குகிறதில்லை. அவை யாருடைய வார்த்தைகள்? யாருக்குச்சொல்லப்பட்ட வார்த்தைகள்? பரமபிதாவாகிய கடவுளே தமது குமாரனுக்குள்ளிருந்து பேசின வார்த்தைகள். நாம் அவைகளை எவ்வளவோ பயபக்தியுடன் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்போது பிதாவின்மேல் பற்றுதலுண்டாகி நமது கவலைகள் நீங்கும். மனுஷன் தேவசாயல் தேகரூபத்தின்படி உண்டாக்கப்பட்டவனாகையால் சர்வ சிருஷ்டிக்கும் மேலானவன். அற்பப்பட்சிகளைத் தவறாது போஷித்து, காட்டுப்புஷ்பங்களை அலங்கரிக்கும் பரமபிதா நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடாதிருப்பாரா? ஆகாரம் ஜீவன் இவை இரண்டிலும் ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவன் எவ்வளவோ மேலானது. மேலான ஜீவனைக்காப்பாற்ற அதைப்பார்க்கிலும் அற்பமான அழிந்துபோகிற போஜனத்தைக் கொடாமலிருப்பாரா? சரீரம் உடை இவை இரண்டிலும் அற்புதமான சரீரம் எவ்வளவோ மேலானது. மேலான சரீரத்தை உடுத்த அற்பமான உடையைக்கொடாதிருப்பாரா? வயலில் நாற்றை நட்டின சமுசாரி தன்னை நம்பியிருக்கும் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சாதிருப்பானா? கடவுள்மீது நம்பிக்கையற்றுப் பல கவலைகளுக்குள்ளானவர்களுக்கு ஆண்டவர் நியாயமான திருஷ்டாந்தங்களை எடுத்து மனதில் படும்படி பேசுகிறார். நமக்காகக் கவலைப்படுகிற பிதா ஒருவர் இருக்கிறார் என்கிற நிச்சயம் இருந்தால்தானே இந்தத் திருஷ்டாந்தங்கள் நமக்குப் பிரயோஜனப்படும். பிதாவுக்கே மோசமானால் ஆண்டவர் எவ்வளவு ஊக்கமாய்ப்பேசினாலும் என்ன பிரயோஜனம்? காலமெல்லாம் கவலைதான்.



தேவனுடைய ராஜ்யத்தையே தேடிக்கொண்டிருந்தால் ஆண்டவர் சாப்பாடுகொண்டுவந்து வாயில் ஊட்டுவாரா என்று கேட்பவருண்டு. அப்படி ஊட்டத்தக்க நிலைமையில் நாம் இருந்தபோது ஊட்டியுமிருக்கிறார். ஆனால் சோம்பேறிகளைப் போஷிப்பதாக வாக்கில்லை. "ஒருவன் வேலைசெய்ய மனமற்றவனாயிருந்தால் அவன் சாப்பிடாதிருக்கக் கடவன்" என்றும், வேலைசெய்கிறவனைக் குறித்து "உன் கையின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்" என்றும் வேதம் கூறுகிறது. ஆண்டவர் நமக்கு நன்மை செய்யவேண்டுமானால் நாம் தேவராஜ்யத்தையே தேடவேணும் என்றும், தேவபக்தியாய் ஜீவனம் பண்ணவேண்டுமென்றும் சொல்வதை அநேகர் தப்பாய் அருத்தப்படுத்துகிறார்கள். ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஆண்டவர் எல்லாவற்றையும் கொடுக்கவேணும் என்பது அவர்கள் அருத்தம். பட்சிகளைக் குறித்தும் காட்டுப் புஷ்பங்களைக் குறித்தும் ஆண்டவர் சொன்னதை தப்பாய் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகாயத்துப் பறவைகள் சோம்பலாய் உட்கார்ந்திருந்தால் சாகும். காட்டுச்செடிகள் தங்கள் வேர்களை ஆழத்தில் அனுப்பிச் சாரத்தை உட்கொள்ளாதிருந்தால் பட்டுப்போகும். அவைகளே முயற்சியாயிருக்கும்போது புத்தி சித்தம் பலமுள்ள மனுஷன் முயற்

கியதிருப்பது நியாயமா? நாம் கவலை யற்றிருக்கவேண்டுமென்று அவர் சொன்னாரே யன்றி, வேலை செய்யக்கூடாதென்று சொல்லவில்லை.

மேலும் தேவபக்தியுள்ளவன் கடவுளோடு ஐக்கியப்பட்டவர்கள் சோம்பேறிகளாயிருக்கமுடியாது. நமது பிதா இடைவிடாமல் கிரியை செய்கிறவர். [illegible] இடைவிடாமல் கிரியை செய்கிறவர். ஆவியானவர் சுறுசுறுப்பாய் உழைக்கிறவர். இப்படியிருக்க தேவபக்தன் எப்படிச் சோம்பலாயிருக்கக் கூடும்? தேவராஜ்யத்திற்காகப் பிழைப்பவனுக்குக் காலம் மகா அருமை. பகற்காலமிருக்கு மட்டும் தன்னை உலகத்தில் அனுப்பினவருடைய சித்தத்தை அவன் செய்து முடிக்க வேண்டும். அவன் எந்த இடத்தில் இருந்தாலும், எந்த வேலையைச் செய்தாலும் தன்னை மீட்டுக்கொண்ட ஆண்டவருக்காகவும் அவர் ராஜ்யத்திற்காகவும் பிழைப்பான் என்பது நிச்சயம். தனது நேரம், பணம், வரம் யாவையும் மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்காகச் செலவிடுவான். ஆவிக்குரியவன் இடைவிடாத வேலைக்காரன். ஆராதனை முடிந்தால் சகலமும் முடிந்ததென்று அவன் நினைக்கமாட்டான். ஆராதனை வேளையிலிருக்கும் தேவசிந்தையே இரவும் பகலும் அவனுக்குள் இருக்கும். ஒருமணி நேரமாத்திரமல்ல, இடைவிடாமல் அவன் ஆண்டவர் சமூகத்தில் சஞ்சரிப்பான். எங்கே போனாலும், யாரோடு பேசினாலும், கடிதம் எழுதினாலும் அவரவருடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமான காரியங்களைச் சொல்லாதிரான். இதுவே தேவராஜ்யத்தைப் பிரதானமாகத் தேடுதல். தான் தேவபக்தியாயிருப்பதினிமித்தம் தன் வேலையை, வீட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளை அசட்டைசெய்யமாட்டான். இவன் இவ்வாறு எப்பொழுதும் பிதாவைச் சார்ந்து பிழைக்கிறபடியால் அவர் இவனுக்குத் தேவையான நன்மைகளையும் அனுகூலங்களையும் கொடுத்து, அவனைப் பராமரித்து நடத்துகிறார். கடவுள் சகல காரியங்களையும் அவனுக்காக நடத்துவதால் அவன் கவலையற்று வாழ்கிறான். நாம் கவலையற்ற ஜீவியம் செய்யவேண்டுமானால் மேற்கூறிய மூன்று காரியங்களையும் அனுபவத்துக்குக் கொண்டுவரவேண்டும். நமக்கு எவ்வ



ளவு கஷ்டங்கள் சஞ்சலங்களிருந்தபோதிலும் அவைகளை மனதில் வைத்து வேதனைப்பட்டுக்கொண்டிராமல், அன்புள்ள பிதாவிடம் சென்று, அவர் நமக்கு இதற்குமுன் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஸ்தோத்திரித்து, நமது கஷ்டங்களைத் தாராளமாய் அவருக்குத் தெரிவிக்கவேண்டும். தெரிவித்தபின் அவைகளை மறுபடியும் மனதில் வைக்காமல் அந்தப் பாரத்தை ஆண்டவரிடமே வைத்துவிடவேண்டும். [illegible] நமது மனம் [illegible] காரியங்களில் [illegible] படி தேவராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் நாம் முயற்சியாயிருக்க வேண்டும். நம்மை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புவித்து, அவர் சித்தப்படிமாத்திரம் பிழைத்து, அவரை மகிமைப்படுத்தும்போது, இரக்கமுள்ள பிதா தமது மாறாத வாக்கின்படியே நமது சகல காரியங்களையும் நமக்காக நடப்பித்து நம்மை ஆசீர்வதிப்பார். "எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே" (ஏசா. 26:12). கவலைக்குப் பரிகாரம் இதுவே.

## V. நமக்கு இருக்கவேண்டிய கவலை.

தேவமக்களான ராஜ்யத்தின் புத்திரர் கவலையற்றவர்களும் கவலையுற்றவர்களுமாயிருக்கிறார்கள். சரீரத்துக்கடுத்த, உலகத்துக்கடுத்த கவலைகள் ஒழிந்தன. ஆவிக்குரிய, பரத்துக்கடுத்த கவலைகள் ஒழியவில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்குக் கவலை கூடாதென்று போதித்த ஆண்டவரே நமக்குக் கவலைவேண்டுமென்றும் போதித்திருக்கிறார். இது என்ன கவலை? தேவ கவலையே நமது கவலை. இந்தக் கவலை ஆசீர்வாதமும் பிரயோஜனமுமானது. மனுமக்களுடைய ரட்சிப்புக்காகவும், அவர்கள் தம்மோடு ஐக்கியப்படும்படியாகவும், கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் அவர்கள் வளரும்படியாகவும் பிதா எவ்வளவோ கவலையோடிருக்கிறார். அவருடைய கவலையை கிறிஸ்துவில் காண்கிறோம். கிறிஸ்துவைப்போல் துக்கம் நிறைந்தவர்கள் யார்? அவருடைய ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருந்தது. வியாகுலமும் பயமும் திகிலும் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்தன. அவர் கண்களிலிருந்து கண்ணீர் பாய்ந்தது. அவர

வியர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தன. அவருக்கொப்பான கவலை யாருக்குண்டு? இது என்ன கவலை? நிலமில்லையே, உத்தியோகமில்லையே, பொருள் இல்லையே, சாப்பாடில்லையே, உடுப்பு இல்லையே என்னும் கவலையோ? ஒருக்காலும் அல்ல. அவர் ஒருபோதும் தமக்காகக் கவலைப்பட்டவரல்ல. உலகம் ரட்சிக்கப்படவேண்டும் என்பதே ஆண்டவர் கவலை. நமது ரட்சிப்புக்காகப் பரமபிதா எவ்வளவு பாடுபடுகிறார் என்பதை சரீரத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவில் காண்கிறோம். நாம் ஆண்டவரிடம் காண்பது யாவும் பிதாவின் கிரியைகளே. இந்தக் கவலையில் பாவமில்லை. இது பாவத்தை அகற்றும் கவலை. இந்தக் கவலைதான் நமக்கும் வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை நமக்குள்ளிருந்தால் கிறிஸ்துவின் கவலையும் நமக்குள்ளிருக்கும். தேவராஜ்யத்திற்கென்று நாம் பிழைப்போமானால், பிறர் ரட்சிப்புக்காக நாம் உழைப்போமானால், தேவ கவலை தானாகவே நமக்குள் வரும்.

“நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்” என்று கொரிந்தியருக்கு எழுதின பவுல் தாமே கவலையுள்ளவராயிருந்தார். தேவ கவலையே அவர் கவலையாயிருந்தது. மனுஷர் ரட்சிக்கப்படும்படி அவரடைந்த பாடுகளும் சிந்தின கண்ணீரும் கொஞ்சமல்ல. “எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறதென்றும்,” “எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாடோறும் நெருக்குகிறது” என்றும் பவுல் புலம்பினார். தேவராஜ்யத்துக்குரிய கவலை நம்மை ஆண்டுகொள்ளும்போது, நம்மைப் போஷித்துக் காப்பாற்றி வழிநடத்தவேண்டிய கவலை பரமபிதாவை ஆண்டுகொள்ளுகிறது. நாம் அவர் காரியங்களில் கவலைப்படும்போது அவர் நமது காரியங்களில் கவலைப்படுகிறார். தேவமக்களுக்கும் தேவ ஊழியர்களுக்கும் ஆவிக்குரிய மோசேகள் வேண்டும். வழிவிலகிப்போன இஸ்ரவேலருக்காக எரேமியா அழுதவண்ணமாயிருந்தார். ரட்சிப்பின் ஊழியம் சொகுசான வேலையல்ல. சந்தைபொருந்திய பட்டத்திற்காகத் தவிப்பவர்கள் பலர். கிறிஸ்துவின் சிந்தையை அணிந்து உண்மையாய் ஊழியம் செய்யும்போது



தான் அதன் உத்தரவாதம் தெரியும். அலங்கார உடையாலும், ஒழுங்கான வாசிப்பாலும், இனிய குரலாலும், சாமர்த்தியப் பேச்சாலும் காரியம் பலிக்காது. மனுஷர் ரட்சிக்கப்படும்படி அப்போஸ்தலன் “கர்ப்பவேதனைப்படுகிறேன்” என்றார். சபைகள் எத்தனை! ஊழியர் எத்தனை! ஆராதனை பிரசங்கங்கள் எத்தனை! கண்ட பலன் என்ன? நமது வேலைக்கும் முயற்சிகளுக்கும் தகுந்த பலனில்லையே. கிறிஸ்துவை அறியாத கிறிஸ்தவர்கள் ஏராளம்! ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்ததே கண்டபலன். கிறிஸ்துவின் சிந்தையுள்ள ஆண்கள் பெண்கள் எத்தனைபேர்? கிறிஸ்துவின் சிந்தையற்றவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. தேவ ஊழியர்களாகிய நாம் இதை உணர்ந்தோமா? அவர்களை கிறிஸ்துவிடம் நடத்தி அவரோடு இணைக்கும் உத்தரவாதமான வேலை நம்முடையதென்பதைக் கண்டோமா? அவர்களில் அநேகருடைய ஜீவியம் மாறாதிருப்பது நமக்குத் துக்கத்தை உண்டாக்குகிறதா? தனித்தும் மொத்தமாகவும் அவர்களை தேவமக்களாக்கும்படி, ஆவிக்குரியவர்களாக்கும்படி, வாஞ்சையோடு பேசுகிறோமா? நமது ஜீவியத்தின் ஒரே நோக்கம் தேவராஜ்யமும் பாவிகள் ரட்சிப்புமாயிருக்கிறதா? நமது ஜீவியத்தின் ஒரே நோக்கம் அதுதான் என்று சபையார் அறிந்திருக்கிறார்களா? நமது வார்த்தைக்கும் கண்டிப்புக்கும் மதிப்புண்டா? அல்லது யார் கெட்டால் எனக்கென்ன? என்வேலை முடிந்ததென்று இருக்கிறோமா? ஆண்டவர் ஊழியத்தில் நாம் பாரம் சுமந்து தவிக்காவிட்டால், நமது ஜீவனும் பலமும் வரமும் அவர்களுக்காகச் செலவழிக்கப்படாவிட்டால் ஆண்டவர் நமது வேலையை ஆசீர்வதிக்கமாட்டார். கிறிஸ்துவில் விளங்கின தேவ கவலையும் துயரமும் வாஞ்சையும் நம்மையும் ஆண்டுகொள்ளவேண்டும். இது ஆசீர்வாதமான தேவ கவலை. பாவிகள் தங்கள் ரட்சிப்புக்காகக் கவலைப்படும்படி நாம் தேவகவலையோடு ஊழியஞ்செய்யவேண்டும். இவ்வளவு பெரிதான ரட்சிப்பைக் குறித்து அவர்கள் கவலையற்றிருந்தால் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். இதை உணர்ந்து மிகுந்த கவலையுடன் நாம் போதிக்கவேண்டும். அவர்களுக்கு நாமே மாதிரியாகப் பிழைக்கவேண்டும். நமக்கில்லாததை நாம் மற்ற

வர்களுக்குக் கொடுக்கமுடியாது. ஜனங்களில் நடக்கவேண்டிய ஆவிக்குரிய வேலை முதலில் நம்மில் நடந்திருக்கவேண்டும். அதுவே உண்மையான ஊழியமாகும். நாம் அறியாததையும் அனுபவிக்காததையும் குறித்து எவ்வளவு சிறப்பாய்ப் பேசினாலும் அது பொய்யாகும். கிறிஸ்துவை அறிகிற அறிவிலும், அன்பிலும், ஐக்கியத்திலும் நாம் வளரும்போது கிறிஸ்துவின் ஆத்ம வாஞ்சையும் கவலையும் நமக்குண்டாகும். உலகக் கவலை நீங்கி ஆவிக்குரிய தேவ கவலை நம்மை அணுகவே நாம் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு நிச்சயமான வழி.

---

# IX

# How to overcome evil

# தீமையை வெல்லும் வழி

“நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு” ரோ. 12: 21.

“என்னிடம் வாருங்கள்,” “என்னைப் பின்செல்லுங்கள்,” “என்னில் நிலைத்திருங்கள்,” என்பவை ஆண்டவர் நமக்கருளிய இனிமையுள்ள கட்டளைகள். என்னிடம் வாருங்கள் என்பது அழைப்பு. என்னைப் பின்செல்லுங்கள் என்பது கற்றுக்கொள்ளுதல். என்னில் நிலைத்திருங்கள் என்பது கனிகொடுத்தல். பாவி ஆண்டவரைத் தேடிப் போகும்போது அவர் அவன் பாவங்களை மன்னித்துச் சமாதானமருளுகிறார். அவரைப் பின்பற்றுவதால் அவரால் போதிக்கப்பெற்று அவருடைய சாயலுக்கொப்பாக மாறுகிறான். அவரில் நிலைத்திருக்கும்போது அவர் ஆவியின் மூலம் கனிகொடுத்து பிறருக்கு ஆசீர்வாதமாகிறான். இவைகளை லேசாய்ச் சொல்லிவிட்டோம். ஆனால் ஆண்டவரை இடைவிடாது பின்பற்றுவதும், அவரில் நிலைத்திருப்பதும் லேசான காரியமல்ல. கிறிஸ்துவைப் பின்செல்ல விரும்பும் உத்தம விசுவாசிக்குப் பாடுகளும் உபத்திரவங்களும் சேரிடும். நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்கும்போது நமக்கேன் பாடுகளென்று ஆச்சரியப்படக்கூடாது. கிறிஸ்தவ ஜீவியம் ஒருநாள் காரியமல்ல. ஒரு நொடிப்பொழுதில் முடிவதல்ல. ஒரு சிறு செடி பெரிய விருக்ஷமாக வளருவதுபோல நாம் கிறிஸ்துவுக்குள் பிறந்து பூரணபுருஷராகும்வரை வளரவேண்டும். கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இந்த வளர்ச்சிக்கு இடையூறுகள் அனந்தம். போராட்டமில்லாமலும், போராட்டத்தை மேற்கொள்ளாமலும் நமக்கு வளர்ச்சியில்லை. வளர்ச்சியின்றி ஜெயமில்லை. நாம் ஆண்டவரை உண்மையாகப் பின் செல்லுகிறோமென்

பதற்கு காரணமில்லாத பாடுகள் அடையாளம். அப்பாடுகளை நாம் பொறுமையுடன் சகிப்பது நமது ஜீவியம் பூரணப்படுவதற்கும், மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாயிருப்பதற்கும் அவசியம்.

"நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு." அதாவது, மற்றவர்கள் உனக்குச் செய்யும் தீமைக்கு நீ பதில் தீமைசெய்து தோல்வியடையாமல், அத்தீமையை நீ பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, அதற்குப் பதிலாக நன்மை செய்வதினாலே அந்தத் தீமையை நீ மேற்கொள்ளவேண்டும். நமக்கு நேரிடும் பாடுகளைப்பற்றிக் கவனிக்குமுன், நமதாண்டவருக்கு நேரிட்ட தீமைகளையும் அவைகளை அவர் மேற்கொண்ட விதத்தையும், அது விஷயத்தில் அவர் மாதிரி என்னவென்பதையும் பார்ப்போம்.

1. **ஆண்டவருக்கு நேரிட்ட தீமைகள்.** பரிசுத்தத்தை விரும்பும் ஓர் மனுஷன் மகா அசுத்தத்தின் மத்தியில் சஞ்சரிக்க நேரிட்டால் எப்படிச் சஞ்சலப்படுவானோ, அதுபோலவே மாசற்ற பரிசுத்தராகிய கிறிஸ்து பாவம் நிறைந்துள்ள உலகத்தில் தோன்றினபோதே அவருக்குப் பாடுகள் ஆரம்பித்தன. அவர் பிறக்கத்தான் இடமுண்டா? பிறந்தாலும் ஏரோது குழந்தையை அமர்ந்திருக்க விட்டானா? அதுமுதல் கடைசிவரை அவர் பாடனுபவித்தவராகவே யிருந்தார். தாம் நிறைவேற்ற வந்த ஊழியத்துக்கு நேர் எதிரிடையான மனுஷர் நடுவில் அவர் வேலைசெய்யவேண்டியதாயிற்று. மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரியவரை அறியவில்லை. உலக மக்கள் பரலோக புருஷனை விரும்பவில்லை. ஆகவே அனுதாபமற்ற மனுஷர் நடுவில் அவர் ஊழியஞ்செய்தார். தமக்குச் சில சீஷரைத் தெரிந்துகொண்டார். அவர்களைத் தம்முடன் வைத்து, தமது அன்பாலும், உபதேசத்தாலும், நற்கிரியைகளாலும் பக்குவப்படுத்தினார். அவர்கள் அவரைப் பின்சென்றபோதிலும் அவர் இன்னாரென்றும் அவரது ராஜ்யத்தின் தன்மை இன்னதென்றும் கடைசிவரை அறிந்துகொள்ளவில்லை. உலக ராஜ்யமும் உலக மேன்மையுமே அவர்கள் எண்ணமாயிருந்தது. அவர் மரித்தபோது அவர்களும் மறைந்தார்கள். திரளான வேறு சீஷர்களும் அவருக்கிருந்தார்கள்—



அவர்கள் எங்கும் அவரைப் பின்சென்றார்கள். ஆவிக்குரிய அவரது போதனையை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்களும் பின்வாங்கிப் போனார்கள். அவருக்குச் சகோதரர் இருந்தார்கள். இவர்கள் அவரை நம்பவில்லை. இவைகளெல்லாம் ஆண்டவர் மனதுக்கு எப்படி யிருந்திருக்கும்? ஆகிலும் அவரிடத்தில் யாதொரு பதட்டம், ஆத்திரம், மனச்சோர்வு, வெறுப்பு முதலிய குறிப்புகளை நாம் காண[illegible]

ஒரு காரியத்தில் ஒருவன் எவ்வளவு தூரம் கருத்துடையவனாயிருக்கிறானோ, அவன் எடுத்துக்கொண்ட கருமத்துக்கு ஆபத்து [illegible]னால் சகிக்கக்கூடாத சஞ்சலமடைவான். பாவிகளை ரட்சிக்கும் ஒரே நோக்கத்துடன் ஆண்டவர் உலகத்தில் பிரவேசித்தார். சகலமும் அந்த நோக்கத்துக்கு விரோதமாயிருந்தன. அவருடைய ரட்சிப்பு பலிக்கவேண்டுமானால் ஜனங்கள் அவரை நம்பவேண்டும். நம்பாதவர்களை ரட்சிக்க பகவானாலும் முடியாது. அவரை நம்பாதவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் ரட்சிக்கப்படமாட்டார்கள். ஜனங்கள் அவரை நம்பாதிருக்கும்படி செய்வதே அக்காலத்து அதிகாரிகள் தீர்மானமும் முயற்சியுமாயிருந்தன. தங்கள் ஆண்டவர் எங்கெங்கே போனாரோ அங்கெல்லாம் இவர்கள் [illegible] ஆட்களை அனுப்பி அவர் ஊழியத்தைக் கெடுக்கும்படி வேண்டிய [illegible] விரோத பாடு செய்தார்கள். தீமையான காரியங்களை அவருக்கு விரோதமாய்ப் பிரஸ்தாபித்தார்கள். ஆவிக்குரிய அவரது உன்னத பதவியை உணர்ந்துகொள்ளாமல் வீண்பழிகளை அவர்மீது சுமத்தி ஜனங்கள் அவருக்குச் செவிகொடாதபடி செய்தார்கள். ஓய்வுநாளை மீறுகிறவன், மோசேயின் பிரமாணங்களை அழிக்கிறவன், பிசாசு பிடித்தவன், பைத்தியக்காரன், ஜனங்களை வஞ்சிக்கிறவன், தேவதூஷணம் சொல்லுகிறவன், பெயல்செபூலை உடையவன், போஜனப்பிரியன், மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்று பலவாறாய் அவரைத் தூஷித்து அவர் வேலைக்குப் பலத்த இடையூறு செய்தார்கள். கடவுள் ஊழியர் என்றெண்ணப்பெற்ற அதிகாரிகளின் சொல்லை மீறி நடக்க ஜனங்களுக்குத் தைரியமில்லை. ஊழியத்தின் ஆரம்பமுதல் ஆண்டவருக்குச் சந்தோஷத்தை

கொடுத்தபோதிலும், வரவர எல்லாம் அவர் வந்த நோக்கத்துக்கு நேர் விரோதமாகத் திர்ந்தது. இவ்வளவெல்லாம் நேரிட்டபோதிலும் அவரிடத்தில் கொஞ்சமாகிலும் ஆத்திரமோ, கோபமோ, பழிவாங்கும் சுபாவமோ காணப்படவில்லை. சாந்தமுள்ள ஆட்டுக்குட்டியாகிய அவர் சகல தீமைகளையும், விரோதங்களையும், இடையூறுகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, தமது ஊழியத்தைக் கைவிடாது நடத்திக்கொண்டே போனார்.

சிலுவை சமீபித்தது. அவரைப் பிடித்தார்கள். திருக்கரங்களைக் கட்டினார்கள். தங்கள் கைகளில் அவர் அகப்பட்டுக்கொண்டதை பெரிய வெற்றியாக நினைத்தார்கள். மாய விசாரணை நடத்தினார்கள். வாய்க்கு வந்தபடி அவரைத் தூஷித்தார்கள். கண்களைக் கட்டி மறைத்தார்கள். கன்னத்தில் அடித்தார்கள். முகத்தில் துப்பினார்கள். கூரிய ஆணிகள் இணைந்த வார்களால் அவரை அடித்து அவர் முதுகைக் கிழித்தார்கள். பலத்த முள்ளுள்ள பிலாறுகளால் ஒரு கிரீடத்தைப் பின்னி அவர் சிரசில் வைத்து கோலால் தலையில் அடித்தார்கள். இவை யாவற்றாலும் மிகக்களைத்திருந்த அவர் தோள் மேல் பாரச் சிலுவையை ஏற்றி நகரத்துக்குப் புறம்பே தள்ளிக் கொண்டுபோனார்கள். அங்கே இருகள்ளர் நடுவில் அவரைச் சிலுவையிலறைந்து எல்லோரும் பார்க்கத்தக்க மேட்டில் நிறுத்தினார்கள். இத்துடன் திருப்தியடையாமல் வேதனையோடு சாகிற மனுஷனை நிந்தித்துப் பரியாசம் பண்ணினார்கள். இவ்வளவெல்லாம் தமக்கு நேரிட்டும் சகலத்தையும் அவர் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டார். மறு வார்த்தை பேசவில்லை. காரணமென்ன? தீமையினால் தம்மை மேற்கொள்ளத் துணிந்தவர்களைத் தமது நன்மையினால் மேற்கொள்ள வேண்டுமென்பதே ஆண்டவர் தீர்மானம்.

2. இவ்வளவு சகிப்புப்பொறுமைக்கும் காரணம் என்ன? தீமையின் மத்தியில் நன்மை பாடுபடும் என்றறிவார். ஓநாய்கள் நடுவில் ஆடு தப்பாது. பொல்லாத மனுஷர் நல்லவரைப் பகைத்தார்கள். "பொல்லாங்கு செய்கிற எவனும் இந்த ஒளியைப் பகைக்கிறான்." உலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகள் என்று அவர்



பிரசங்கித்தது அவர்களுக்குப் பிரியமில்லை. உலகத்தின் நோக்கமும் அவர் நோக்கமும் நேர் விரோதமாயிருந்தபடியால் அவர்கள் தம்மைப் பகைத்ததைக் குறித்து அவர் ஆச்சரியப்படவில்லை. இப்படியெல்லாம் தமக்கு நடக்கும் என்பதை முன்னறிந்தே அவர் வந்தார். கொதிதண்ணீரை [illegible]ார்ப்பவன் சுடுதண்ணீருக்குப் பயப்படான். இன்[illegible]டன் எதிர்[illegible] பாடுகளே அவருக்குச் சம்பவித்தபடியால் அவர் அவைகளைச் சகித்துக்கொள்வதே சரி.

தமக்கு நேரிட்ட பாடுகளுக்கு ஜனங்களுடைய அறியாமை காரணம் [illegible]பதையும் அறிவார். ஆகையால் அவர்கள் தமக்கு விரோதமாகப் பேசின, செய்த தீமைகளை அவர் நோக்காமல் அவர்கள் அறியாமைக்காகப் பரிதபித்தார். அவர்களுக்கு தேவ அறிவில்லை. தேவ பக்தியில்லை. ஆவிக்குரிய சிந்தை இல்லை. அவர்கள் இருதயம் எப்படியோ அப்படியே அவர்கள் பேசினார்கள்; தீமைகளை நடப்பித்தார்கள். முட்செடிகளிலிருந்து அத்திப் பழங்களையும், எட்டி மரத்திலிருந்து திராட்சப்பழங்களையும் அவர் எதிர்பார்த்தவரல்ல. அவர்கள் தம்மைச் சிலுவையிலறைந்தபோது, மகாவேதனையான சமயத்தில், அவர்கள் செய்த தீமையை நோக்காமல் சகல தீமைகளுக்கும் காரணமாயிருந்த அவர்கள் அறியாமையை நினைத்து: "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று மன்றாடினார்.

தீமைக்குத் தீமைசெய்தால் தமக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியம் கெடுமென்று அறிவார். பிதா தீமையற்றவர். அன்பின் சொரூபி. திருக்குமாரன் பிதாவின் பூரண ஐக்கியத்தில் பிழைத்திருந்தார். அந்த ஐக்கியமே அவருக்கு ஜீவன், சுவாசம், வர்மம். தீமை அவருக்குள் பிரவேசித்தால் ஜீவன் போன்ற பிதாபுத்திர ஐக்கியம் கெட்டுப்போகும். எவ்வளவு தீமைகளானாலும் சகித்துக்கொள்வாரேயன்றி, தீமைக்குத் தீமைசெய்து தமக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியத்தை இழக்கச் சம்மதிக்கமாட்டார். அவரது ஆச்சரியமான பொறுமைக்கு இதுவும் காரணமாகும்.

மன்னிக்க மனதில்லாவிட்டால் மன்னிக்கும் சிந்தையுள்ள பிதாவின் முகத்தைப் பார்க்கமுடியாது. தமக்குத் தீமை செய்தவர்களுக்கு அவர் பதில் தீமைசெய்தால் அவர் இருதயத்தின் சமாதானம் கெடும். ஆகையால் தம்மைப் பகைத்த ஒருவரையாவது அவர் பகைக்கவில்லை. சமாரியர் தம்மை ஏற்றுக்கொள்ளாதபோது அவ்வூராரை அழிக்கும்படி சீஷர்கள் கேட்டார்கள். அந்தப் பழிவாங்கும் சுபாவத்தை ஆண்டவர் வெறுத்து அவர்களைக் கடிந்துகொண்டார். பிதா எல்லார்மேலும் இரக்கமாயிருப்பதுபோல ஆண்டவரும் சத்துருக்கள்மீது இரக்கமுள்ளவராயிருந்தார். பிதாவின் சிந்தையே கிறிஸ்துவின் சிந்தை. அவரது மன்னிக்கும் சுபாவமே தீமைகளை அவர் சகித்துக்கொண்ட காரணம்.

பாவிகளை ரட்சிக்கவந்தவர் அவர்களை அழிப்பதெப்படி? பைத்தியகார மகன் என்னென்ன பேசினாலும், எப்பாடு படுத்தினாலும் பெற்ற தகப்பன் மனமுருகி அவனைக் குணமாக்க வாஞ்சிப்பதுபோல், புத்தியில் அந்தகாரப்பட்ட பாவிகள் தமக்கு எவ்வளவு தீமைகள் செய்தபோதிலும் அவர்களை ரட்சிக்கும்படியான அளவில்லாத அன்பு அவர் உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருந்தபடியால் தீமைக்குத் தீமை செய்ய அவருக்கு மனம் வரவில்லை. மேலும் அவர்கள் ஈடேற்றத்துக்காகத் தமது உயிரையும் கொடுக்க வாஞ்சைகொண்டிருந்த ஆண்டவர் எப்படி அவர்கள் தீமைக்குப் பதில் தீமை செய்வார்? தமக்கு விரோதமாகச் சத்துருக்கள் பேசின, செய்த சகலகாரியங்களையும் ஒன்றுவிடாமல் அறிந்திருந்த ஆண்டவர் தமது சீஷரிடம் அவைகளைப்பற்றிப் பேசாமலும் சனுகை சொல்லாமலும் இருந்தது எவ்வளவு ஆச்சரியம்! அவர் ஒன்றையும் தமது மனதில் போட்டுக்கொள்ளவில்லை. அன்பு சகலத்தையும் சகிக்கும்.

தமக்கு நேரிட்ட சகல தீமைகளிலும் பிதாவின் சித்தத்தைக் கண்டார். பிதா சித்தமின்றித் தமக்கு ஒன்றும் சம்பவிப்பதில்லையென்று அறிவார். பிதாவின் சித்தப்படி பிழைப்பதே அவர் ஜீவியத்தின் ஒரே வாஞ்சை. அந்தச் சித்தத்தை நிறைவேற்றும் வழியில் நேரிடும் பாடுகளும் பிதா சித்தமே. ஆகையால் அவர் தீமைக்குத்



தீமை செய்வாரானால் தேவசித்தத்திற்கு எதிர்த்து நிற்பதாகும். "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்றார்.

முடிவாகச் சொல்லவேண்டுமானால் தமக்குச் சம்பவித்த சகல தீமைகளையும் நியாயத் தீர்ப்புச்செய்யும் பிதாவின் கையில் விட்டுவிட்டார். எல்லாவற்றையும் இடைவிடாமல் கவனித்துக்கொண்டிருக்கும் பிதா நியாயத்தீர்ப்புச் செய்வார் என்பது அவர் பூரண நம்பிக்கை. ஆகையால் அவர்கள் தம்மை வையும்போது பதில் வையவில்லை பாடுபடுத்தும்போது அவர்களைப் பயமுறுத்தவில்லை. எல்லாவற்றையும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டார். அவர் தம்மைத் தாழ்த்தினதினிமித்தம் அவர் நியாயத்தைக் கவனிப்பாரில்லை. அவருடைய சாந்தம் கோழைத்தனமாகத் தோன்றினது. தங்கள் இஷ்டப்படி அவரைப் பாடுபடுத்தி அவரை மேற்கொண்டதாக நினைத்தார்கள். வெற்றி யாருடையதென்பது அவர்களுக்குத் தெரியாது. தீமை செய்கிறவன் சண்டாளன். அவன் கடவுள் ஆக்கினைக்குரியவன். தீமைகளைப் பொறுமையாய்ச் சகிப்பவனே வெற்றியடைந்தவன். கடவுள் புகழ்ச்சி அவனுக்கே உரியது. நமதாண்டவருக்குத் தீமை செய்தவர்கள் குற்றவாளிகளாகித் தோல்வியடைந்தார்கள். ஆண்டவர் அவர்கள் செய்த தீமைகளைத் தமது நன்மையினால் மேற்கொண்டார். அவருடைய நீடியபொறுமையும் சாந்தமும் உலகத்துக்கு ரட்சிப்பாயிற்று.

இது விஷயத்தில் ஆண்டவர் தமதடியாருக்குச் சிறந்த மாதிரியானார். அவருடைய ஆச்சரியமான பொறுமையை அப்போஸ்தலர் ஒருக்காலும் மறக்கமுடியவில்லை. "கிறிஸ்துவின் பொறுமை," "கிறிஸ்துவின் பொறுமை" என்று தங்கள் நிருபங்களில் எழுதினார்கள். தீமையை நன்மையினால் வென்ற கிறிஸ்துவின் சிந்தை அவர்கள் இருதயங்களில் ஆழமாய்ப் பதிந்தது. "இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உடன் பங்காளியாயிருக்கிற யோவானாகிய நான்" என்று யோவானும், "கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்

துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக" என்று பவுலும்; "அவர் வையப்படும்போது பதில் வையாமலும் பாடுபடும்போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" என்று பேதுருவும்; "தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எபிரேயர் நிருபத்தாரும் எழுதினார்கள். பொறுமையுள்ள ஆண்டவர் தாமே நம்மைப் பார்த்து, "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். அப்போஸ்தலரும் தேவபக்தர் யாவரும் ஆண்டவர் பொறுமையைப் பின்பற்றி நடந்தவர்களே. "நாங்கள் நிந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்படுத்தப்பட்டு ஜெபிக்கிறோம்" என்றார் பவுல். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும்."

## II. இந்த உபதேசத்தின் தாற்பரியம் என்ன?

பதிலுக்குப் பதில் செய்யாவிட்டால் காரியம் மிஞ்சிப்போகாதா? நாமாக வலியச் சண்டைக்குப் போகாவிட்டாலும் வந்த சண்டையை விடலாமா? உலகத்துக்கு இந்த உபதேசம் பொருந்துமா? நியாயஸ்தலத்தில் இந்தப் போதனை செல்லுமா? தீமையைச் சகித்துக்கொண்டே போனால் தீமைசெய்கிறவர்கள் கொழுத்துப் போகமாட்டார்களா? நாமும் அழிந்துபோக நேரிடுமே. வந்த யுத்தத்தை எதிர்த்துப்போராடுவதை நீதியுள்ள யுத்தம் என்றும் சொல்லுகிறார்களே என்று கேட்கலாம். தீமையைச் சகித்துக்கொள்வதும்; தீமைக்கு நன்மை செய்வதும் உலகத்துக்கு விபரீதந்தான். பேச்சுக்குப் பேச்சு, தூஷணைக்குத் தூஷணை, அவமானத்துக்கு அவமானம், கேட்டுக்குக்கேடு என்பதே உலகவழக்கம். இது "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்னும் பூர்வகாலத்து முரட்டுப்பிரமாணத்தை ஒத்தது. தேவராஜ்யத்தின் காரியமோ வேறு. அதன் வல்லமையை உலகம் அறியாது. தேவமக்கள் கையாடும் போராயுதங்கள் தடிகளும், கத்திகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளுமல்ல. ஆனாலும் ஆவிக்குரிய ஆயுதங்கள் அரண்களையும் நிர்மூலமாக்கக்கூடிய தேவபலமுள்ளவைகள். நீதி-



யுள்ள சண்டை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அவர்கள் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாதலால் அவர்கள் ஆயுதங்கள் ஆவிக்குரியவைகளே. அவர்கள் ஆட்டுக்குட்டியைப்போல் சாந்தமும் தாழ்மையுமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களை மேற்கொள்ள சத்துருக்கள் எவர்களாலும் முடியாது. அவர்கள் தேவசித்தப்படி பிழைக்கிறபடியால் அவர் சித்தமின்றி அவர்கள் தலைமயிர்களில் ஒன்றாகிலும் தரையிலே விழுவதில்லை. தேவனே அவர்களைப் பாதுகாக்கிறவர்; அவரே அவர்களுக்காகப் போராடுகிறவர். ஒருவேளை அவர்களுக்குத் தீமை நேரிட்டாலும் அதுவும் அவர்களுக்கு நன்மையாகவே இருக்கும். அவர்கள் தீமைக்குப் பதிற்றீமை செய்யமாட்டார்கள். தீமையை நன்மையாலே வெல்லவேண்டுமென்பதே அவர்கள் பிரமாணம். இதன் தத்துவத்தை ஆராய்வோம்.

1. நியாயந் தீர்ப்பு கடவுளுக்கே உரியது. "பழிவாங்குதல் எனக்கே உரியது நானே பதில் செய்வேன்" என்று சிருஷ்டிகர்த்தர் சொல்லுகிறார். அவன் என்னை அடித்தான்; அதற்காக நான் அவன் தலையை உடைத்தேன் என்னும் பேச்சு நியாயஸ்தலத்தில் செல்லாது. சர்க்கார் அதிகாரத்தை அவன் தன் கையில் எடுத்துக்கொண்ட குற்றத்துக்குள்ளாகித் தண்டனை அடைவான். ஒருவர் நமக்குத் தீமைசெய்யும்போது நாமே பதிலுக்குப் பதில் செய்வோமானால் கடவுள் ஏன் இருக்கிறார்? சகலத்தையும் நாமே நடத்துகிறதானால் அவர் நியாயாதிபதியுமல்ல, பூமியை ஆளுகிறவருமல்ல. "நானே பதில் செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நாமே பதில் செய்வோமானால் காரியம் நல்லமுடிவுக்கு வராது. முடியாத தொல்லையே அதன் பலனாகும். நமது இருதயம் கெடும், சத்துருவுடைய மனமும் கடினப்படும். கடவுள் பதில் செய்யும்போது நாவுகள் யாவும் அடங்கும். அவரை எதிர்ப்பவன் யார்? அவர் செய்வதே நீதி. மற்றவர்களுடைய கெட்ட எண்ணங்களை அறிகிறவரும், அவர்கள் துரோகப்பேச்சைக் கேட்பவரும், அவர்கள் தீமைகளைக் கவனிப்பவருமான கடவுள் நியாயத் தீர்ப்புச் செய்வாரென்று நம்பி, நாமே தீமைக்குத் தீமைசெய்யாமல் அதைப்பொறுமையாய்ச் சகித்-

துக்கொள்வதே நல்லது. ஆண்டவர் நமக்குக் காண்பித்த மாதிரி அதுவே. கூடுமானால் நாம் செய்யும் நன்மையினால் தீமையை மேற்கொள்ளவேண்டும்.

2. குற்றவாளி குற்றவாளியை நிந்திப்பதில் பிரயோஜனமில்லை. ஜெயில் கைதிகளில் ஒருவன் மற்றக் கைதிகளைப் பார்த்து: நீங்கள் என்ன அயோக்கியர், வெட்கமில்லாமல் கைகளில் விலங்கு பூண்டு இங்கே அடைபட்டுக் கிடக்கிறீர்கள் என்று தூஷித்தால் எப்படியிருக்கும்? தானும் ஒரு கைதிதானே என்பதை யோசிப்பானானால் அப்படிப் பேசுவானா? மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவர்களும் ஆக்கினைப்படுத்தப் பார்க்கிறவர்களும் தங்களை அறியாதவர்களே. ஒரு கிராமத்தில் ஒருவன் ஏதோ குற்றத்தைச் செய்ததாகச் சில மனுஷர் அவனைப் பிடித்துக் கட்டி, அவன் முகத்தில் துப்பி, அவனை அடித்தார்கள். அப்படி அடித்தவர்கள் யாரென்று பார்த்தால் சகல அக்கிரமங்களுக்கும் உறைவிடமாகிய பேர்வழிகளே. நல்லமனுஷர் தகாத செய்கையைக் கண்டு வருந்துவார்களேயன்றி மூர்க்கமாக எதையும் செய்யார்கள். குற்றஞ்செய்தவனைத் தண்டிக்கவேணும் என்பதைப் பிரதானமாகக் கருதாமல் அவனைச் சீர்ப்படுத்தும் வழியைத் தேடுவார்கள். இதுவிஷயத்தில் ஆண்டவர் போதனை தெளிவாயிருக்கிறது. "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" இதன் சம்பந்தமாக அப்போஸ்தலன் சொல்வதையும் பார்ப்போம். "மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே! நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்."



இவைகளின் தாற்பரியம் என்ன? மனுஷர் எல்லாரும் கடவுள் பார்வையில் குற்றமும் குறைவுமுள்ளவர்களே. தேவபக்தியில் எவ்வளவு தேறினாலும், கிறிஸ்துவுடன் நெருங்கி ஜீவிக்கும்போது, நமது குறைவுகள் நமக்குக் காணப்பட, எவ்வளவோ துக்கப்பட்டு நம்மைத் தாழ்த்தவேண்டியதாயிருக்கிறது. ஆண்டவருடைய மாதிரிப்படி பிழைக்கத் தீர்மானித்தவர்களுக்கே இதன் உண்மை தெரியும். கிறிஸ்துவின் பிரகாசத்தில் நம்மை இன்னும் ஆண்டுகொண்டிருக்கும் சுயசுபாவம் வெளிப்படுவதால் நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து நம்மைத் தாழ்த்துகிறோம். மற்றவர்கள் நமக்கு விரோதமாகப் பேசினாலும் நாம் அதைக் கவனிக்கமாட்டோம். அவர்கள் பேசும் தீமை நாம் நம்மை அறிந்திருப்பதைப் பார்க்கிலும் பெரிதல்ல. ஒரு தேவபக்தனை ஒருவர் குறைவாய்ப்பேசினதாக அவருக்கு அறிவித்தபோது அவர் சிரித்துக்கொண்டு: அவர் என்னை உள்ளபடி அறியாததற்காக விசனப்படுகிறேன், என்னை அவர் பேசினதைப் பார்க்கிலும் நான் அதிகக் குறைவுள்ளவன் என்று எனக்குத் தெரியும் என்று சொன்னார். தீமைக்குத் தீமை செய்ய முன்னிற்கிறவர்களும் தீமையைச் சகிக்காதவர்களும் தங்களை அறியாதவர்களே. தங்கள் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணர்ந்தால் பிறர் துரும்பின்மேல் இவ்வளவு வைராக்கியம் பாராட்டமாட்டார்கள். நமது உள்ளான தீமையை மேற்கொள்ளும் வேலையில் நாம் கவனம் செலுத்துவோமானால் பிறர் பேசும் தீமையைக் கவனிக்கவும் நமக்கு நேரமிராது. தீமைக்குத் தீமை செய்கிறவர்கள் தீமையை மேற்கொள்ளாமல் தீமையினால் மேற்கொள்ளப்படுகிறார்கள். தங்கள் உள்ளான தீமையை வெளிப்படுத்துகிறார்கள்.

3. தீயோராகிய நமக்கு தேவன் இரங்கவேண்டியதாயிருப்பதால் தீயோருக்கு நாமும் இரங்கவேண்டும். ஆண்டவர் இரக்கமும் மன்னிப்பும் எக்காலமும் நமக்கு வேண்டியதே. நமது ஜீவகாலமுழுவதிலும் அவர் நமக்குக் காண்பித்த பொறுமை தயவு எவ்வளவு! நமது பாவங்களுக்குத் தக்கதாக அவர் நமக்குச் செய்யவில்லை; நமது அக்கிரமங்களுக்குத் தக்கதாக அவர் நமக்குப் பதிலளிக்கவில்லை. மீறுத

மன்னிக்கிற அவருக்கு ஒப்பானவர் யார்? அவருடைய இரக்கமும் மன்னிப்பும் நமக்குக் கிடைத்திராவிட்டால் நாம் இதுவரை பிழைத்திருக்கமாட்டோம். அவருடைய நீடியபொறுமையையும் அன்பையும் யோசிக்கும்போது நமது இருதயம் நன்றியால் பொங்குகிறது. நாம் இவ்வாறு இரக்கம்பெற்றவர்களாதலால் மற்றவர்களுக்கும் இரங்கவேண்டியதே நியாயம். ஆண்டவர் சொன்ன உவமை இதற்குப் பலத்த திருஷ்டாந்தம். ஒருராஜாவிடம் ஒருவன் பதினாயிரம் தாலந்து கடன்பட்டிருந்தான். அதைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகமில்லை. அவன் தாழவிழுந்து வணங்கி: ஆண்டவனே, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று கெஞ்சினான். ஆண்டவன் மனதிரங்கி கடனை அவனுக்கு மன்னித்துவிட்டான். இவனிடத்தில் வேறொருவன் நூறுவெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தான். அவனை இவன் பிடித்துத் தொண்டையை நெரித்து: நீ பட்டகடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அந்த ஏழைமனுஷன் இவன் காலில் விழுந்து: என்னிடத்தில்பொறுமையாயிரும் எல்லாவற்றையும் உமக்குக்கொடுத்துத் தீர்க்கிறேன் என்று வெகுவாய்க் கெஞ்சினான். இவனோ அதற்குச் சம்மதியாமல் அவனைக் காவலில் போட்டான். இதைக் கேள்விப்பட்ட எஜமான் அவனை அழைத்து: பொல்லாத மனுஷனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியால் உன் பெரியகடன் முழுவதையும் மன்னித்தேன் அல்லவா? நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலையாளுக்கு இரங்கவேண்டாமா என்று சொல்லி அவன் பட்டகடனைக் கொடுக்குமளவும் வேதனைப்படுத்துகிறவர்களிடம் ஒப்புவித்தான் என்றார். பெருங்கடன் மன்னிக்கப்பெற்று, குதூகலத்தோடே போனவன் மறுபடியும் அந்தக் கடனைத் தீர்க்கும்வரை சித்திரவதை செய்வோரிடம் அகப்பட்டுக்கொண்ட காரணம் என்ன? எஜமான் தனக்கு இரங்கினதுபோல் தன் சகோதரனுக்கு இரங்க மனதில்லாததினாலே அல்லவா? "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதத்தை மனப்பூர்வமாய் மன்னிக்காமற் போனால் என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார்.



மற்றவர்களுக்கு இரங்கும் குணமில்லாததினாலேயே அநேகர் மனதிலும் சரீரத்திலும் சித்திரவதைக்குள்ளாயிருக்கிறார்கள். நமது பாவக்குற்றங்களை பிதா நமக்கு மன்னிக்கவேண்டுமென்றும், ஆபத்து அவசரங்களில் அவர் நமக்கு இரங்கவேண்டுமென்றும் நாம் விரும்புகிறோமே. மற்றவர்களுக்கு இரங்கவோ மன்னிக்கவோ நமக்கு மனதில்லை. பிறரிடம் வர்மத்தையும் பகையையும் சாதிக்கிறோம். இரக்கமற்ற சுபாவம் நமக்கிருக்கிறதனால் நாம் அடிக்கடி சொல்லுகிற கர்த்தருடைய ஜெபத்தை நமக்கு விரோதமாகவே சொல்லுகிறோம். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். ஆண்டவர் எவ்வளவு ஞானமாய் இந்த விண்ணப்பத்தை அமைத்திருக்கிறார். பிறர் செய்யும் தீமைகளை நாம் சகித்து அவைகளை மன்னித்தாலன்றி நாம் மன்னிப்பை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. நாங்கள் மன்னிப்பதுபோல எங்களுக்கு மன்னியும் என்பது, நாங்கள் மன்னிக்காதிருப்பதுபோல எங்களுக்கும் மன்னியாதிரும் என்று அர்த்தமாகும். ஆண்டவர் நமக்கு எவ்வளவோ இரங்கியிருக்கிறாரே என்பதை உணரும்போது மற்றவர்களுக்கு நாம் இரங்காதிருக்கமுடியாது. இரங்கும் சிந்தை நமக்கிருக்குமானால் தீமைக்குத் தீமை செய்ய வழியில்லை.

4. தீமையைச் சகிப்பது நமது ஜீவியவளர்ச்சிக்கு அவசியம். நம்மை ரட்சித்த ஆண்டவர் தம்மைப் பின்பற்றி நடக்கும்படி அழைக்கிறார். அவரைப் பின்பற்றும்போது நமக்குப் பாடுகள் வரும். ஆண்டவர் இதைப்பற்றித் திட்டமாய் அறிவித்திருக்கிறார். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு; ஆகிலும் என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானமுண்டு." இரண்டும் கலந்ததே ஆண்டவருடைய ஜீவியம். தீமைகள் சமுத்திர அலைகள்போல் அவரை மோதி அடித்தன; அவர் இருதயமோ தேவசமாதானத்தால் நிறைந்திருந்தது. அவருடைய ஜீவனையே நாம் பிழைக்கும்போது அதே அனுபவம் நம்முடையதாகும். ஆகையால் தீமைகள் நேரிடும்போது "ஏதோ புதுமையென்று நீங்கள் நினைக்கவேண்டாம்" என்று பேதுரு சொல்லு

கிறார். கர்த்தர் நிமித்தமும் அவர் ஊழியத்தினிமித்தமும் பாடுகளை நாம் சகிக்கும்படி அழைப்புப் பெற்றிருக்கிறோம்.

தீமைகளைச் சகிப்பதால் பிரயோஜனம் என்ன? நமது ஜீவியம் பலப்படவும் அனுபவம் உண்டாகவும் ஏதுவாகும். கிறிஸ்தவ ஜீவியம் லேசானதல்ல. ஜெபக்கூட்டங்கள் ஆராதனைகள், பாட்டுகளிலே அடங்கினதல்ல. கிறிஸ்தவர்களாயிருப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறதென்று யாராகிலும் சொல்லுவார்களானால் அவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் பிரவேசித்தவர்கள் அல்லவென்பது நிச்சயம். "துன்பப்படவேண்டியது அவசியம்" என்று பேதுரு சொல்லுகிறார். கிறிஸ்தவ ஜீவியத்திலுள்ள போராட்டத்தைக் குறித்துப் பேசாத அப்போஸ்தலர் பரிசுத்தவான்கள் இல்லை. செத்தமீனுக்கு வெள்ளத்தின் பலம் தெரியாது; உயிருள்ள மீனே அதை அறியும். ஆண்டவரைத் தங்கள் தினசரி ஜீவியத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் பின்பற்ற விரும்பும் தேவமக்களுக்கே போராட்டமின்னதென்று தெரியும். கஷ்டமில்லாத ஜீவியம் குழந்தைக் கொப்பானது. அது பலவீனமுள்ளது. தாதி குழந்தையைக் கையிலெடுத்து விளையாடுவது பிள்ளைக்குச் சந்தோஷம். ஆனால் அது தானாக நடந்தோடித்திரியும் காலத்தில் தான் அதன் தேகம் பலப்படும். போராட்டமில்லாத சொகுசான ஜீவியம் பிரயோஜனமற்றது. பலத்த காற்று அடித்து மரத்தை இரக்கமின்றி அசைப்பது மரத்தின் வேர்கள் பலப்படுவதற்கு ஏதுவாயிருப்பதுபோல "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை அனுபவத்தையும், அனுபவம் நம்பிக்கையையும்" நம்மில் உண்டாக்குகின்றன. தீமைக்குத் தீமைசெய்வது கோழைத்தனம். தீமையைச் சகிப்பதும் அத்தீமையை நன்மையினால் மேற்கொள்ளுவதுமே சிறந்த தேவலட்சணம். "பட்டணத்தைப் பிடிப்பவனைப் பார்க்கிலும் தன் ஆவியை அடக்குகிறவனே பராக்கிரமன்". பாடுகளின்றிப் பொறுமை என்கிற வார்த்தைக்கு இடமேயில்லை. "பொறுமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்", நமக்குத் தீமைகள் நேரிடாமலும், தீமையைச் சகிக்காமலும் பொறுமை சாந்தம் முதலான நற்குணங்கள் உண்டாவதெப்படி? தீமை நம்மைச் சூழ்ந்துகொள்



ளும்போது, உபத்திரவம் தாங்கக்கூடாமல் ஆண்டவரிடம் நமது துயரத்தைத் தெரிவிக்கிறோம். அவர் தமது கிருபையால் நம்மைத் தாங்கிப் பலப்படுத்துகிறார். பாடுகள் நம்மைப் பாவங்களிலிருந்து விடுவித்து கிறிஸ்துவின் சாயலில் வளரச்செய்கின்றன. நாம் தீமைக்குத் தீமை செய்வோமானால் இவ்வாசீர்வாதங்களை இழந்துபோவோம்.

5. தீமைக்குத் தீமை பரிகாரமாகாது. ஒருவன் நமக்குத் தீமை செய்யும்போது அதைச் சகிக்கமுடியாமல் அவனுக்குத் தீமைசெய்ய யோசித்தால் அல்லது செய்தால் இருபட்சத்தாருக்குமே அது கேடாகும். நாம் தீமை செய்யும்போது நமக்குள் வசிக்கும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். கிறிஸ்துவின் சித்தத்துக்கு விரோதமாக நடக்கிறோம். பிதாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறோம். சாத்தானுக்குக் கீழ்ப்படிகிறோம். அவன் கையைப் பலப்படுத்துகிறோம். நாம் பெற்றமக்களுக்கு கெட்டமாதிரி காண்பிக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்குச் சஞ்சலத்தை உண்டாக்குகிறோம். சபையில் பிரிவினைக்குக் காரணமாகிறோம். இத்தனை கேடுகளுக்கும் காரணமாகிய ஒரு தீமையைச் செய்துவிட்டு நமது பிதாவின் முகத்தைப் பார்த்து நாம் ஜெபிப்பதெப்படி? ஆராதனையில் பங்குபெறுவதெப்படி? ஆண்டவர் இரக்கத்தையும் அன்பையும் குறித்து மற்றவர்களுக்குப் போதிப்பதெப்படி? குடும்ப ஜெபம் நடத்துவதெப்படி? மக்களே நீங்கள் நல்ல பிள்ளைகளாயிருங்கள் என்று அவர்களுக்குப் புத்திசொல்வதெப்படி? தீமை செய்வதாலுண்டாகும் கேடுகள், சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்துவது போலிருக்கும்.

நாம் செய்யும் தீமையால் எதிரிக்காவது நன்மை உண்டாகுமா? அதுவுமில்லை. தீமைக்குத் தீமைசெய்வது கொடியதீமையாகும். தீமைக்குத் தீமை பரிகாரமாகாது. நமக்குத் தீமைசெய்தவன் நாம் அவனுக்குப்பதில் தீமை செய்தோம் என்று அறிந்தவுடனே முன்னிலும் அதிக மூர்க்கங்கொள்வான். முன்னிலும் அதிகமான தீமையை நமக்குச்செய்ய வகைதேடுவான். அதைச்செய்தே முடிப்பான். இதனால் நாம் கண்ட பலன் என்ன? நம்மையும் கெடுத்து அவனையும்

கெடுத்து நமக்கே அதிகத் தீமையைச் சம்பாதித்துக்கொள்ளுகிறோம். தேவபக்தியற்ற மனுஷர் தீமைக்குத் தீமைசெய்யவேண்டுமென்ற வைராக்கியத்தாலே துணிகரமாய் நடந்து பெரும்பாதகங்களை நடப்பிக்கிறார்கள். ஆங்காரத்தால் கொலைசெய்த, மரணாக்கினைக்குள்ளாகி, ஆஸ்தியை இழந்து, தங்கள் மனைவிமக்களைத் திக்கற்றவர்களாக விட்டுப்போகிறார்கள். நாம் அவ்வளவு தூரம் போகாவிட்டாலும் கொடிய பகை கொலைக்குச் சமானம் என்றறியவேண்டும். விரோதிகளைக் கொலைசெய்யும் தைரியம் நமக்கில்லாவிட்டாலும் அவர்கள் சாகமாட்டார்களாவென்று நினைக்கும் தீய எண்ணமும் கொலையாகும். தீமைக்குத் தீமை ஒருபோதும் பரிகாரமாகாது. "இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமற் செய்கிறார்களே" என்று ஜெபித்த ஆண்டவர் சிந்தை எப்போதும் நமது சிந்தையாயிருக்கவேண்டும்.

6. தீமைக்கு நன்மை இருபட்சத்தாருக்கும் நன்மை. பிறர் செய்யும் தீமைகளை நாம் சகித்துக்கொள்வது மாத்திரமல்ல, சமயம் வாய்க்கும்போது அவர்களுக்கு மனப்பூர்வமாய் நன்மை செய்யவேண்டும். அநேகருக்கும் அடிகளுக்கும் அடங்காத பிள்ளைகள் அன்புக்கு அடங்குவார்கள். அன்புக்கு நிகரான சக்தி இல்லை. "நீ தீமையால் வெல்லப்படாமல் தீமையை நன்மையால் வெல்லு." ஆண்டவர் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட தீமைகளைத் தமது நன்மைகளாலே வென்றார். அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் அவரை வென்றதாக நினைத்தார்கள். ஆகிலும் சில நாட்களுக்குள்ளாக அவரது ஒப்பற்ற அன்பையும், அவர் நடப்பித்த காருண்ய செயல்களையும் நினைத்து, இருதயம் நொறுங்கி, அவர் பாதாரவிந்தத்தில் விழுந்து இரக்கத்துக்காகக் கெஞ்சினார்கள். அன்பு எப்பேர்ப்பட்ட கல்நெஞ்சையும் மாற்றும். ஒரு பட்டாளத்தில் ஒர் போர்வீரன் இருந்தான். அவன் அடங்காத்தனத்துடன், அவன் அடைந்த தண்டனைகளுக்கோ கணக்கில்லை. தண்டனை பெருகப்பெருக அவன் மீறுதல்களும் பெருகின. அவன் தனக்கு மேற்பட்ட அதிகாரிகளை மதிக்கிறதில்லை. சேனாவிதிகளுக்குக் கீழ்ப்படிகிறதில்லை. அவனை எப்படிச் சகிப்



பமைத்துகிறதென்று அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. இப்படியிருக்கும்போது பட்டாளமுழுமைக்கும் மேலதிகாரியான ஜெனரல் இந்தச் சேனையைப் பார்வையிட வந்தார். இந்தத் துஷ்டனுக்கு விரோதமாக அநேக பிராதுகளை அவர்முன் சமர்ப்பித்தார்கள். ஜெனரல் தமது அறையில் தனித்திருந்தபோது அவனைத் தம்மிடம் வரும்படி கட்டளையிட்டார். தனக்கு என்ன ஆக்கினை வரப்போகிறதோவென்று அவன் நடுக்கத்தோடு அந்த அறைக்குட்சென்றான். ஜெனரல் யாதொன்றும் அறியாதவர்போல் புன்சிரிப்போடு அவனைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு: அப்பா, உனக்கு விரோதமாக எத்தனையோ பிராதுகள் வந்திருக்கின்றன. நான் செய்யப்போகிறதை உனக்கு அறிவிக்கிறேன். உன் சகல குற்றங்களையும் நான் மன்னித்துவிட்டேன், நீ நல்லவனாயிரு என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் அவன் உள்ளமுடைந்து கண்ணீர் சிந்தி அழுதான். அதுமுதல் அவன் மகாயோக்கியமாய் நடந்துகொண்டான். நன்மை தீமையை வென்றதின் உண்மையை இங்கே காண்கிறோம். தீமைக்கு நாம் நன்மை செய்யும்போது கடவுள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஏனென்றால் நமது பிதா நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்யும் சுபாவமுள்ளவர். இனம் இனத்தை விரும்புவதுபோல் அவர் சிந்தை நமக்குள்ளிருக்கும்போது அவர் பிரியம் நம்மீதிருக்கும். தீமையை மறந்து நாம் நன்மைசெய்யும்போது நமக்குத் தீமைசெய்தவன் அதை உணர்ந்து தனக்குள் வெட்கப்படுவான். அவன் சீர்ப்படவும் ரட்சிக்கப்படவும் அது ஏதுவாகும். இவ்வாறு தீமைக்கு நன்மைசெய்வது இருபட்சத்தாருக்கும் ஆசீர்வாதமாகும்.

7. தீமையைச் சகிப்பவர்கள் மற்றவர்களுக்கு மாதிரியாவார்கள். உலகம் பார்த்து நடப்பதற்கு மாதிரி வேண்டும். தீமைக்குத் தீமை செய்கிறவன் எப்படிப்பட்ட மாதிரியாவான்? அவனைப் பின்பற்றுகிறவர்கள் கெட்டேபோவார்கள். தீமைக்கு நன்மைசெய்த ஆண்டவரோ தமது அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி நடக்கும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவரது அடியாராகிய அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும்

தங்களுக்கு நேரிட்ட சகல தீமைகளிலும் பொறுமையைக் காண்பித்து, தீமைசெய்தவர்களுக்கு நன்மைசெய்ததால் அவர்களுடைய ஜீவியத்தை எக்காலமும் நமக்குச் சிறந்த மாதிரியாக நோக்குகிறோம். ஒருவன் தீமை பாடுகளால் சூழப்பட்டிருக்கும்போது மற்ற மனுஷர் அவனைக் கவனிக்கிறார்கள். அவன் பதில் தீமைசெய்யாமல் சகலத்தையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வதையும், தீமை செய்தவர்களுக்கு அவன் நன்மை செய்வதையும் பார்க்கிற அவர்கள் அந்த ஜீவியத்தைத் தங்களுக்கு மாதிரியாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆயிரம் போதனைகளைப் பார்க்கிலும் உத்தம ஜீவியமே வல்லமையுள்ளது. நமது பேச்சைப் பார்க்கிலும் நமது மாதிரியே நமது மக்கள் மனதில் ஆழமாய்ப் பதியக்கூடியது. கிறிஸ்துவின் சிந்தையற்ற பெற்றோர் தங்கள் சட்டங்களால் மக்களை தேவபக்தராக்கலாமென்று நினைப்பது வீண்.

நாம் பிறருக்கு மாதிரியாயிருப்பதோடு, தீமைகளால் மனங்கலங்கி நிற்பவர்களை ஆறுதல்படுத்தக் கூடிய அனுபவமும் நமக்குக் கிடைக்கும். தனக்கு நேரிடும் தீமைகளை நினைத்துக் கலங்கி நிற்கும் மனுஷனிடம், தீமைக்குத் தீமைசெய்யும் சுபாவமுள்ளவன் போனால் எவ்வாறு ஆறுதல்படுத்துவான்? அவன் அந்த மனுஷன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு: இதைக்குறித்து நீ ஏன் இவ்வளவு கவலைப்படுகிறாய்? என் சொல்லைக்கேட்டு நீ இன்னின்ன பிரகாரம் செய்துவிட்டால் கட்டாயம் அவனுக்குக் கேடு வந்தே தீரும் என்று ஆலோசனை சொல்லுவான். தீய ஆலோசனைக்குச் செவிகொடுத்துத் தங்களையும் மற்றவர்களையும் கெடுத்துக்கொண்டவர்கள் அநேகர். "தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்" என்று ஆண்டவர் சொல்லியிருக்க, இந்த மனுஷனோ தீமையைத் தீமையினால் வெல்லவேண்டுமென்று ஆலோசனை கூறுகிறான். இது மனுஷரைக் கெடுக்கும் சாத்தானுடைய ஆலோசனையேயன்றி வேறல்ல. ஆனால் உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்து, தீமைகளை நன்மைகளால் மேற்கொண்ட அனுபவமுள்ள ஒருவன் அந்த மனுஷனிடம் சென்றால், அவனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவனைத் தைரியப்படுத்தி, இரு-



ரும் முழங்கால்படியிட்டு, நீதியாய் நியாயந் தீர்க்கும் பிதாவுக்குச் சகல காரியங்களையும் ஒப்புவிப்பார்கள். தீமைசெய்தவனுக்கு நல்லுணர்வுண்டாகவும், சமயம் வாய்த்தால் அவனுக்கு நன்மைசெய்யவும் வேண்டிய கிருபைக்காக ஜெபிப்பார்கள். தீமையைப் பொறுமையாய்ச் சகிப்பவர்களும் தீமைசெய்தவர்களுக்கு நன்மை செய்யும் சுபாவமுடையவர்களுமே மற்றவர்களுக்கு நல்மாதிரியாயிருப்பார்கள்.

8. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் கர்த்தரால் மாத்திரம் உறுதிப்படும். ஒருவனைத் தாழ்த்தவோ உயர்த்தவோ கூடிய அதிகாரம் அவருக்கே உரியது. தேவமக்கள் மற்ற மனுஷர் தங்களைப் புகழுகிறார்களா, இகழுகிறார்களாவென்பதைக் கவனியாமல் ஆண்டவர் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதையே யோசிப்பார்கள். தேவபக்தன் ஒருவரை பெருமாட்டி ஒருத்தி விருந்துக் கழைத்திருந்தாள். விருந்துவேளையில் அவள் அவரைப்பார்த்து: பக்திமானே, கடவுளைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர் என்று பரியாசமாய்க் கேட்டாள். அம்மா! கடவுளைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பது பெரியகாரியமல்ல, கடவுள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதே காரியம் என்றார். மற்றவர்கள் நம்மை நிந்தித்து அவமானமாகப் பேசுவதால் நமக்கு அவமானம் வந்துவிடாது. அல்லது மற்றவர்கள் நம்மைப் புகழ்ந்து பேசுவதாலே நமக்குப் புகழ்ச்சி வந்துவிடாது. ஆண்டவர் நம்மை மகிமைப்படுத்தும்போது நம்மை அவமானப்படுத்தக் கூடியவன் யார்? ஆண்டவர் நம்மைத் தாழ்த்தும்போது நம்மை உயர்த்த வல்லவன் யார்? மனுஷரால் நிந்தைகளையும் அவமானங்களையும் அடைந்த அப்போஸ்தலன் கொஞ்சமும் கலங்காமல் "கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" என்றும், "எனக்கோ ஆண்டவரால் வரும் புகழ்ச்சியே போதும்" என்றும் சொன்னார். நாம் ஆண்டவரை உறுதியாய் நம்பி, அவர் அன்பில் நிலைத்திருந்து, அவருக்குப் பிரியமானதைச் செய்யும்போது, யார் என்ன பேசினாலும், யார் என்னென்ன தீமைகளை நமக்கு விரோதமாய் நடப்பித்தாலும், அதனாலே நாம் கெட்டுப்போவதில்லை. தீமை செய்கிறவர்களைத் தீமை கெடுக்குமேயன்றி நமக்கு ஒரு சேதமும்

இல்லை. இதை நமது அனுபவத்தில் நிச்சயமாய்க் கண்டிருக்கிறோம். "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும்." எவ்வளவோ அவமானங்களும் தீமைகளும் அவருக்கு நேரிட்டபோதிலும், அவர் அவமானத்துக்குள்ளாகாமல் சர்வத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டு மேன்மையையும் மகத்துவத்தையும் அடைந்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து பின்செல்லும் அடியார் பங்கும் அதுவே. ஆகையால் நாம் தீமைக்குத் தீமை செய்யாமல் தீமையை நன்மையினால் மேற்கொள்ளவேண்டும்.

9. தீமை தீமையாக முடியாமல் நன்மையாக முடியும். கடவுள் பிள்ளைகளுக்கு நேரிடும் தீமைகள் ஒருக்காலும் தீமையாக முடியாது. "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாகத் தோன்றாமல் துக்கமாகவே தோன்றும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." தீமைகள் அவமானங்களைப் பொறுமையாய்ச் சகிப்பது லேசான காரியமல்ல. ஒருவேளை நாம் பதிலுக்குப் பதில் பேசாமலும் செய்யாமலும் இருந்தாலும் நமது இருதயம் சஞ்சலப்படாமலிருக்காது. நாம் தீமைக்குத் தீமை செய்யாவிட்டாலும் மனது வேதனைப்படும் என்பது நிச்சயம். வெளிக்குப் பொறுமையும் உள்ளுக்குள் வேதனையும். ஆகையால் இது "சந்தோஷமாகக் காணப்படாமல் துக்கமாகத்தோன்றும்" என்று பேதுரு சொல்லுகிறார். பவுல் இதற்கும் ஒரு அடி மேலே போகிறார். நாம் பொறுமையோடு சகிக்கவேண்டும் என்பது மாத்திரமல்ல "சந்தோஷத்தோடே கூடிய பொறுமையோடு" சகிக்கவேண்டும் என்கிறார். அவ்வளவு மேலான ஜீவியத்துக்கு நாம் இன்னும் வரவில்லையே. நமதாண்டவர் "சிலுவையை அவமானமாக எண்ணாமல் தமக்குமுன் வைத்திருக்கும் சந்தோஷத்தினிமித்தம் நிந்தையைச் சகித்தார்" அவமானமும் நிந்தையும் அவரைச் சூழ்ந்துகொண்டபோதிலும் அவைகளுக்காக அவர் துக்கப்படாமல், தமது பாடுகளினாலுண்டாகும் பெரிய ரட்சிப்பை நினைத்துச் சந்தோஷப்பட்டார். நாம் பொறுமையோடு சகிக்கலாம், சந்தோஷத்தோடே சகிக்கமுடியவில்லையே. காரணமென்ன? தீமைகளைப் பொறுமையாய்ச் சகிக்கும்போது முடிவு நன்மையாயிருக்கும் என்பதை நாம் உணருகிறதில்லை. ஆதிமுதல் சாத்தானுக்கு வேதனையான ஓர் காரியமுண்டு. அவன் கடவுள் பிள்ளைகளுக்குத் தீமை செய்யும்போதெல்லாம், தேவ ஆளுகையால் அத்தீமை நன்மையாகவே முடிகிறது. அவன் நோக்கம் தேவ மக்களிடத்தில் எப்போதும் தோல்வியே அடைகிறது. அப்படியிருந்தும் அவன் தீமைசெய்வதை நிறுத்துவதில்லை. ஆதாமை வஞ்சித்தபோது அவன் கெட்டே போவான் என்று சாத்தான் நினைத்தான். கிறிஸ்துவாலுண்டான ரட்சிப்போ மனுஷனை முன்னிருந்த நிலைமையிலும் மேலான பதவிக்கு உயர்த்திவிட்டது. பாவத்தாலுண்டான கேட்டைப் பார்க்கிலும் பிதாவாலுண்டான ஈவு மகா மேன்மையுள்ளது. "பாவம் பெருகின இடத்தில் கிருபை மிகவும் ஏராளமாய்ப் பெருகிற்று" மனுஷனை உன்னத நிலைமைக்கு உயர்த்திவிட்டது. இப்படியாகும் என்று சாத்தான் நினைத்தானில்லை. நாம் செய்யும் பாவங்களைக்கூட நம் மேலான ஜீவியத்துக்கு ஏறிச்செல்லும் படிகளாகும்படி தேவன் செய்கிறார். கடவுள் பிள்ளைகளுக்கு நேரிடும் தீமைகள் ஒருக்காலும் தீமையாக முடிகிறதில்லை. யாக்கோபின் மக்களுக்குள் சாத்தான் புகுந்து யோசேப்புக்கு அநேக தீமைகளைச் செய்யும்படி ஏவிவிட்டான். யோசேப்போடு கர்த்தர் இருந்தார். யோசேப்பு கெட்டுப்போகவில்லை. அவன் எகிப்தில் மேலான பதவிக்கு உயர்த்தப்படுவதற்கு அந்தத் தீமைகளே படிகள் போலிருந்தன. யோசேப்பு தன் சகோதரரைக் கண்டபோது: "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான். தேவமக்களுக்கு இதுவே எக்காலமும் பிரமாணம். கடந்தகால அனுபவம் இதற்கு ஆதாரம். இப்போதும் நமக்குத் தீமை நேரிடுகிறதானால் அதைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்துவருவோமானால், தீமை நன்மையாக முடிந்ததென்பதைக் கண்டு சந்தோஷப்படுவோம். நமது சொந்த ஆத்துமாவுக்கு ஆசீர்வாதமாயிருக்குமானால் இந்தத் தீமைகள் நமக்கு இருமையின் வந்தனங்களாகும். ஒருவேளை நமக்கு நன்மை

போல்தோன்றுவிட்டாலும் அதனாலுண்டாகும் ஆசீர்வாதத்தை நமது சபையார் கண்டடைவார்கள். ஒருபக்கம் பாடில்லாமல் மறுபக்கம் ஆசீர்வாதமில்லை. ஆகையால் நாம் தீமைக்குத் தீமைசெய்யாமல் தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்.

தீமையைச் சகிப்பதும் தீமைக்கு நன்மை செய்வதும் நம்மால் முடியுமாவென்று கேட்கலாம். தீமைக்குத் தீமைசெய்யும் ஆத்திரம் ஜென்ம சுபாவத்துக்குரியது. நான் என்கிற உணர்ச்சியே சகல தீமைகளுக்கும் காரணம். கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரே நமக்குள் பிழைக்கும்படி இடங்கொடுப்போமானால், நம்மைப் பலப்படுத்தும் கிறிஸ்துவாலே சகலத்தையும் சகிக்கவும், பொறுக்கவும், மன்னிக்கவும், நன்மை செய்யவும் நமக்குப் பலமுண்டாகும். நமது சுயபலத்தால் சுயதீர்மானத்தால் காரியம் பலிக்காது. கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லாமல் கிறிஸ்தவர்கள் என்னும்பேர் நமக்குத் தகாது. கிறிஸ்துமார்க்க ஆசாரங்களாலே நாம் வஞ்சிக்கப்படக் கூடாது. ஆயிரங்காரியங்களை நாம் கொண்டாடினாலும் நமது ஜீவியம் மாற்றப்படவில்லையென்றால் அவைகளால் பிரயோஜனமில்லை. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

---

# X

# Reconciliation

# ஒப்புரவாகுதல்

"முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களை பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" கொலோ. 1. 21.

மார்க்க விஷயத்தில் மனுஷர் எவ்வளவு வாய் வேதாந்தம் பேசினாலும் நாம் அதைக்கேட்பதேயன்றி அதற்குமேல் நாம் யோசிக்கிறதில்லை. ஆனால் கடவுளைப்பற்றி ஒருவர் அனுபவமாக அறிந்ததைத் தீர்க்கமாய்ச் சொல்லும்போது அது நமது கவனத்தை நிச்சயமாய் ஆண்டுகொள்ளும். பவுல் கிறிஸ்துவைப்பற்றிய அபிப்பிராயங்களையும் உத்தேசங்களையும் வெளியிட்டவரல்ல. ஆண்டவர் தமது உள்ளத்தில் நிறைவேற்றின ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அனுபவத்தில் அறிந்தவராக அவைகளைப் பிரசங்கித்தார். "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்துக்குரிய நயவசன முள்ளதாயிராமல் ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது." "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது." "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோம் என்பதற்கு நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி" என்று திருச்சபைக்கு எழுதினார் (1. கொ. 2 : 5; 1. தெச. 1 : 5; 2 : 10).

அப்போஸ்தலனுடைய உபதேசம் அதை ஏற்றுக்கொண்டவர்களின் ஜீவியத்தை மாற்ற வல்லமையுள்ளதாயிருந்தது. மார்க்

விஷயத்தில் அறிவாளிகளின் சுய அபிப்பிராயப் போதனைகள் சமய விசுவாசத்துக்குப் பங்கமுண்டாக்கும் இக்காலத்தில், உண்மையுள்ள சாட்சியாகிய பவுலுடைய போதனைக்கு நாம் செவிகொடுப்பது நல்லது. அவர் கிறிஸ்துவைக் குறித்து எவ்வளவு உன்னதமான காரியங்களைச் சொன்னாலும் அவைகளைச் சந்தேகிக்காமல் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால் அவருடைய மேலான ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் அறிவோம். அவர் வயிற்றுப் பிழைப்புக்காகவோ, சுயமகிமைக்காகவோ, பிறரை வஞ்சிப்பதற்காகவோ ஊழியஞ்செய்தவரல்ல. அவர் கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து அவர் நாமத்துக்காகப் பட்ட பாடுகளும் அவமானங்களும் கொஞ்சமல்ல. அவர் போதனைக்கு விரோதமாக ஒருவன் பேசுவானானால் அவன் அவரைப்பார்க்கிலும் மேலான ஜீவியமும் ஆவிக்குரிய அநுபவமுமுள்ளவனாயிருக்கவேண்டும். அப்பொழுது நாம் அவனுக்குச் செவிகொடுக்கலாம். உலகஞானத்தையும் தன்னயமும் தற்பெருமையுள்ள மனுஷர் தங்கள் கல்விச்செருக்கினால் எதையும் துணிந்து எழுதுகிறார்கள். படிக்கும் புஸ்தகங்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பவுல் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம். அவர் போதனைகளை நாம் ஏற்றுக்கொள்ளும்போது அவருக்கொப்பான ரட்சிப்பின் அநுபவத்தை ஆண்டவர் நமக்கும் தருகிறார். தேவஊழியர் என்னும் பேர்கொண்ட திரளான மனுஷர் ரட்சிப்பின் அநுபவமுள்ளவர்களாக வேலைசெய்தால் திருச்சபைக்கு எவ்வளவோ ஆசீர்வாதம்!

கொலோசெயர் நிருபத்தின் மொத்தப் போதனையை அப்போஸ்தலன் இரண்டு வசனங்களில் அடக்கினார். அதாவது, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." "அவருக்குள் நீங்களும் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (2: 9, 10). மகிமையான கிறிஸ்து! அவர் மகிமையாவும் தேவனுடைய தன்மையும் பரிபூரணமுமான சித்தத்தை நாம் நிறைவேற்றும்படி திருச்சபைக்குச் சுதந்தரமாக அளிக்கப்பட்டிருக்கிறது என்பதே இந்த நிருபத்தின் மொத்தப்பொருள். அப்போஸ்தலன் இதை விளக்கிக்காட்டும்போது நமதாண்டவருடைய மூன்றுவிதமான



மகிமைகளை எடுத்துக் காண்பிக்கிறார். (1) பிதாவோடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம்" (2) சர்வசிருஷ்டியோடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன; எல்லாம் அவருக்குள் நிலைநிற்கின்றன." (3) திருச்சபையோடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்." இவ்வாறு கிறிஸ்துவின் மூன்றுவித மகிமைகளை விவரித்து, சர்வத்துக்கும் அவரை நடுநாயகமாக நிறுத்தினபின், அவரது சிலுவையையும் சர்வத்துக்கும் மத்தியாக நிறுத்துகிறார். சிலுவையாலுண்டான ஒப்புரவாகுதல் மகா விசாலம். சிலுவையில் அறையுண்டவர் எவ்வளவு மகிமையுள்ளவரோ, சிலுவையாலுண்டான ஒப்புரவாகுதலும் அவ்வளவு மகிமையுள்ளது. அது நம்மைத் தனித்தனியாகப் பிதாவோடு ஒப்புரவாக்குகிற[illegible] பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்[illegible] சகலத்தை[illegible]யும் ஒப்புரவாக்கும் சர்வகாந்தமாயிருக்கி[illegible] பிரசங்க வசனத்தை ஆராய்ந்துபார்க்கும்போது, நாம் ஒப்புரவாகவேண்டிய அவசியம்; ஒப்புரவாகும் வழி; ஒப்புரவாகும் நோக்கம் என மூன்று காரியங்களைக் காண்கிறோம்.

## 1. ஒப்புரவாகுதல் அவசியம்.

ஒப்புரவாகுதல் என்பது ஒற்றுமை, இணக்கு, சமாதானம், [illegible] ஐக்கியம், அன்னியோன்னியம் எனப்பொருள்[illegible] இடைவெளி[illegible] லாத விடத்தில் ஒப்புரவாகுதல் என்னும் பேச்[illegible] அவசியந்தான் மனுஷன் கடவுளோடு ஒப்புரவாகவேண்டியது அவசியம் என்பதை வசனத்தில் காண்கிறோம். "முன்னே அந்நியராயும் துர்க்கிரியையினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்தீர்கள்" மனுஷன் ஆவி; ஆத்துமா, சரீரமாகிய மூன்று பாகங்களுள்ளவன். அவன்

பாவஞ்செய்தபோது இந்த மூன்றிலும் கேடு வந்தது. அவன் ஆவி கடவுளை விட்டுப்பிரிந்தது; ஆகையால் அவன் கடவுளுக்கு அந்நியனானான். அவன் மனம் அந்தகாரமடைந்தது; ஆகையால் அவன் கடவுளை வெறுத்து மனதிலே சத்துருவானான். கடவுளை விட்டுப்பிரிந்த ஆவி அவன் சரீரத்தை ஆளுவதால் அவன் கிரியைகள் துர்க்கிரியைகளாயின. பிரிவு, பகை, பொல்லாங்கு ஆகிய மூன்று தீமைகளும் பாவத்தின் பலனாக வந்தன.

முதலாவது அந்நியர். பாவம் மனுஷனை தேவ ஐக்கியத்திலிருந்து பிரித்ததால் அவன் கடவுளுக்கு அந்நியனானான். ஒருவன் தேச துரோகியாகும்போது அவனைத் தேசத்துக்குப் புறம்பாக்குவது போல, மனுஷன் பாவஞ்செய்தபோது தேவன் அவனைத் தமது சமூகத்திலிருந்து அகற்ற வேண்டியதாயிற்று. கடவுள் எங்குமிருப்பதால் அவர் சமூகத்துக்கு மனுஷன் எப்படி விலகமுடியும் என்று கேட்கலாம். இங்கே சமூகத்தைவிட்டு விலக்கினாரென்பது அவரோடுள்ள பாக்கியமான ஐக்கியத்திலிருந்து நீக்கினார் என்பதே கருத்து. அவன் தேவ ஐக்கியத்தை இழந்தபோதிலும் தோட்டத்திற்குள்ளேயே இருந்துகொள்ளலாமென்று நினைத்தான். கர்த்தரோ அவனைத் தோட்டத்தைவிட்டு வெளியே போகும்படி செய்தார். இது அவர் கோபத்தால் செய்ததல்ல. பரிசுத்தர் பாவத்தோடு அந்நியோன்னியமாய் இருக்கமுடியாது. பாவிமேல் கடவுள் கிருபையுள்ளவராயிருந்தபோதிலும் அவனிடத்தில் பாவம் இருக்கும்வரை அவர் அவனோடு ஐக்கியமாயிருப்பது முடியாதகாரியம். தேவ ஐக்கியத்தை இழந்த இஸ்ரவேலரைக்குறித்து: "உங்கள் பாவங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவே பிரிவினையை உண்டாக்கியிருக்கிறது" என்று தீர்க்கதரிசிகள் சொன்னார்கள். இது எக்காலமும் உண்மையே. பாவத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்தவர்கள் பரமபிதாவுக்கு அந்நியரே. நாம் ஜெபிக்கலாம், பாடலாம், பிரசங்கிக்கலாம், ஆலயம் சென்று ஆராதிக்கலாம். ஆனால் நமக்குள் பாவமிருக்கும்வரை ஆண்டவருக்கும் நமக்கும் ஐக்கியமில்லை என்பது நிச்சயம். பரமபிதாவின் ஐக்கியத்தில் நாம் பிழைக்கிறோம் என்கிற நிச்சயம் நமக்கில்லா



திருக்கும்போது கிறிஸ்தவர்கள் என்னும் பெயரால், நாம் நிறைவேற்றும் ஆசாரங்களால் நமக்குப் பிரயோஜனமென்ன?

இரண்டாவது மனதிலே சத்துருக்கள். கடவுள் ஐக்கியத்திலிருந்து பிரிந்ததின் பலனாக மனதில் பகை உண்டாகிறது. பரிசுத்த தேவன் பாவத்தோடு ஒருக்காலும் சமாதானமாகமாட்டார். பாவத்தை அவர் நித்திய பகையாய்ப் பகைக்கிறார். மனுஷனோ பாவத்தால் வஞ்சிக்கப்பட்டுப் பாவவழியில் நடக்கிறான். நாம் பாவிகள், அவர் பரிசுத்தர் என்னும் அறிவு நமது மனதில் பகையை உண்டாக்குகிறது. நாம் விரும்புகிற பாவத்தை அவர் வெறுப்பதாலே நாம் அவரை வெறுக்கிறோம். வேறே காரணமில்லை. அவர் நமது பாவத்தைப் பகைக்கிறவர் என்னும் அறிவே நாம் அவரைப் பகைக்கும்படி செய்கிறது. அவரை நினைப்பது நமக்குச் சங்கடமாயிருக்கிறது. ஒழுங்கீனமான பையன் கண்டிப்பான உபாத்தியாயரை வெறுக்கிறான். பொல்லாத காயீன் நல்ல ஆபேலைப் பகைத்துக் கொன்றான். துஷ்டரான யாக்கோபின் மக்கள் நீதிமானான யோசேப்பைத் துன்பப்படுத்தினார்கள். கலகக் குணமுள்ள யூதர், சாந்தகுணமுள்ள கிறிஸ்துவைப் பகைத்துக்கொன்றார்கள். தீமை எக்காலமும் நன்மையைப் பகைக்கும். பொல்லாங்கு செய்கிறவன் ஒளியைப் பகைக்கிறான். ஆகவே பாவத்தில் நிலைத்திருக்கும் மனுஷர் தேவ பகைஞராயிருக்கிறார்கள். கடவுளின் பரிசுத்த தன்மையை அறியாததினாலே அநேகர் தேவபக்தியுள்ளவர்கள்போல் தோன்றலாம். அவர் பாவத்தை முழுப்பகையாய்ப் பகைக்கிறவர் என்று அறிந்தவுடனே அவர்கள் தேவபக்தி பறந்துபோகும். அநேகருக்கு கடவுளோடு தனித்துப்பேச ஏன் பிரியமில்லை? பாவமே அதற்குக் காரணம்.

மூன்றாவது துர்க்கிரியைகள். தேவ ஐக்கியத்தைவிட்டு நாம் பிரிந்து, நமது மனது கடவுளை வெறுக்கும்போது, நம்மிடத்தில் நற்கிரியைகள் காணப்படுவது கூடாதகாரியம். மரம் நல்லதென்றால் அதன் கனிகள் நன்றாயிருக்கும்; மரம் கெட்டதானால் கனிகளும் கெட்டதாகவேயிருக்கும். மனுஷருக்குள் இவை நற்கிரியைகள்,

இவை துர்க்கிரியைகள் என்று பேசப்படுவதுண்டு. நமது பார்வையில் அவைகள் அவ்வாறு தோன்றலாம். கடவுள் இருதயத்தை ஆராய்கிறவர். அவரோடு ஐக்கியமில்லாமலும் மனதிலே அவரை விரும்பாமலும் இருக்கிற மனுஷர் செய்யும் கிரியைகள் எப்படி நற்கிரியைகளாயிருக்கக்கூடும்? அவை தகாத நோக்கத்தோடும், தன்னயத்தோடும், சுயமகிமைக்காகவும் செய்யப்படுவதால் அவைகள் துர்க்கிரியைகளே. இதுவே பாவியின் நிலைமை. அவன் கடவுளைவிட்டுப் பிரிந்து அவருக்கு அந்நியனானான். அவர் பாவத்தைப் பகைக்கிறவர் என்னும் அறிவால் மனதிலே அவருக்குச் சத்துருவானான். இவ்வாறு ஆவியில் பிரிவும் மனதில் பகையும் உண்டானபடியால் அவன் செய்கைகள் துர்க்கிரியைகளாயின. இப்படியிருக்க நாம் பரிசுத்த கடவுளோடு ஒப்புரவாகிறதெப்படி?

## II. ஒப்புரவாகும் வழி.

பாவத்தால் மனுஷன் கடவுளைவிட்டுப் பிரிந்தபோதிலும் அவனை அப்படியே விட்டுவிட அவருக்கு மனம் வரவில்லை. அவர் அன்பும் கிருபையுமுள்ள பரமபிதா. ஆகையால் தமது குமாரன்மூலமாய் நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக்கொள்ளச் சித்தமானார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். மாம்ச சரீரம் என்பது கிறிஸ்துவை நமக்குக் காண்பிக்கிறது. அவர் சரீரத்தில் வந்தவுடனே சிலுவையில் மரிக்கவில்லை. தாம் பூமியில் நிறைவேற்றவேண்டிய சகல கிரியைகளையும் முடித்தபின்பே தமது சரீரத்தைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். ஆண்டவர் ஜீவியத்தில் சிலுவை கடைசிக் காரியம். ஆகையால் நம்மை ஒப்புரவாக்கும்படி வந்தவர் எப்படிப்பட்டவரென்பதை முதலில் கவனிக்கவேண்டும். இவருக்கும் மற்ற மனுஷருக்கும் உள்ள வித்தியாசமென்ன? சற்றுமுன் நாம் கவனித்தபடி நமது பாவத்தால் நாம் கடவுளைவிட்டுப் பிரிந்து அவருக்கு அந்நியரானோம். கிறிஸ்துவோ பிதாவின் பூரண அன்பிலும் ஐக்கியத்திலும் இடைவிடாது பிழைத்தவர். நாம் மனதிலே கடவுளுக்குச் சத்துருக்களானோம். இவரோ தமது பிதா-



வைப் பூரணமாய் நேசித்து எப்பொழுதும் அவருக்குப் பிரியமாய் நடந்தவர். நாம் துர்க்கிரியைகளுக்கு ஆளானோம். இவரோ எங்கும் எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மைசெய்கிறவராகவே யிருந்தார். பிரிவு, பகை, பொல்லாங்கு நமது பங்காயிற்று. ஐக்கியம், அன்பு, நற்கிரியை அவர் பங்காயிற்று. ஆகையால் அவரை நம்மோடு ஒப்பிட முடியாது. பார்க்கும்போது அவர் நம்மைப்போல் ஒரு மனுஷன். ஆனால் அநுபவத்தில் அவருக்கும் நமக்கும் எவ்வளவோ தூரம்! அவர் பரிசுத்தர்; நாம் பாவிகள். நாம் பிரிக்கப்பட்டவர்கள், மனதிலே சத்துருக்கள், துர்க்கிரியைகளை நடப்பித்தவர்கள். அவரோ பிதாவின் ஐக்கியத்தில் பிழைத்தவர், மனதிலே அன்பர், கிரியைகளில் நன்மை செய்தவர். மரணத்துக்கு முன்னுள்ள கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பார்க்கும்போது இதுவே நாம் காண்கிற காரியம்.

இன்னும் நாம் ஒப்புரவாகிற வழியைக் காணோம். ஏனென்றால் சிலுவைக்கு முன்னுள்ள அவரது ஜீவியத்தை நாம் மாதிரியாக விரும்பலாம். அவரைப்போல் நாமும் பிழைத்தால் நல்லதே என்று நினைக்கலாம். ஆகிலும் அவரது ஜீவியம் உபதேசம் கிரியைகளால் நாம் ஒப்புரவாகும் வழியைக் காண்பதில்லை. அவரது ஜீவியம் கடவுளோடு நாம் ஒப்புரவாகலாம் என்னும் நம்பிக்கையை அழித்து, இன்னும் அதிகத் தூரத்தில் விலகிப்போகும்படி செய்கிறது. "ஐயா, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போய்விடும்" என்றே சொல்லவேண்டியதிருக்கும். ஏனென்றால் அவரது மாசற்ற பரிசுத்த ஜீவியம் என் பாவஜீவியத்தைக் கண்டித்து என்னை வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறது. அவரது உபதேசம் என்னைக் குற்றவாளியாக்கி ஆக்கினைக்குள்ளாக்குகிறது. அவரது நற்கிரியைகள் என் துர்க்கிரியைகளைக் கண்டித்து என்னைக் கலங்கச் செய்கின்றன. அவரைப்போல் நான் ஜீவிக்கமுடியாது. அவர் உபதேசங்களைக் கைக்கொண்டு நடக்கமுடியாது. அவரைப்போல் நற்கிரியைகளைச் செய்யவும் முடியாது. இப்படியிருக்க நான் எப்படி கடவுளோடு ஒப்புரவாகிறது? ஆகையால் "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

ஆண்டவரின் ஜீவியம் உபதேசம் சற்கிரியைகளை அனாவசியமென்று நாம் ஒருக்காலும் சொல்லுகிறதில்லை. அவர் வெளிப்பட்டதின் பலனாக கடவுளுடைய அளவில்லாத கிருபையையும் அன்பையும் அறியலானோம். அவர் வெளிப்பட்டதினாலே நாம் பாவத்தால் எவ்வளவு சீர்கெட்டுப்போயிருக்கிறோமென்றும், கடவுளுக்குமுன்பாக நாம் எப்படிப் பிழைக்கவேண்டியவர்கள் என்பதையும் அறிந்துகொண்டோம். ஆனால் நமது பாவத்தோடு நீங்குவதற்கும், அவர் மாதிரியைப் பின்பற்றுவதற்கும் சக்தி ஒன்றும் உண்டாகவில்லை. இந்நிலையில் கடவுளோடு ஒப்புரவாகிறது எப்படி? இதை உணராமல் அவர் மாதிரிபோதும், அவர் உபதேசப்போதும் என்று பேசுகிறவர்கள் அநேகர். இவர்கள் கிறிஸ்துவைச் சிறந்த போதகரென்று அழைக்கிறார்கள். அவரது ஜீவிய மாதிரியும் அவர் உபதேசமும் தங்கள் சீர்கேடுகளை வெளியாக்கித் தங்களை ஆக்கினைக்குள்ளாக்குகிறதென்பதை இவர்கள் அறிகிறதில்லை. ஆகையால் அவர்கள் கிறிஸ்துவைப்போல் நடக்கப் பார்க்கிறோம் என்பதும், அவர் உபதேசத்தைக் கைக்கொள்ளுகிறோம் என்பதும் உண்மையல்ல; வெறும் பேச்சு. ஆண்டவர் சரீரத்தில் வெளிப்பட்டது நமக்கு அதிகத் துயரத்தையும் மனச்சோர்பையும் உண்டாக்கினதேயன்றி தேவ ஐக்கியத்தை உண்டாக்கவில்லை.

அவர் மரித்தார். பரிசுத்த மாதிரி காண்பித்ததும், நிகரற்ற உபதேசம் செய்ததுமான தமது சரீரத்தைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். இது தற்செயல் அல்ல. எதிலும் அவர் எதிர்பார்த்திருந்த ஸ்தானம் அதுவே. நாம் கடவுளோடு ஐக்கியப்படுவதற்கு தமது மரணம் அவசியம் என்பதைத் திட்டமாய் அறிவார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்." "இயேசுகிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபி 10:10). அவரது ஜீவியம் உபதேசத்தால் நாம் கடவுளோடு ஐக்கியப்படக் கூடுமென்பது உண்மையானால், அவர் மரணத்தைப்போல் அநியாயமும்கொடுமையுமானது வேறொன்றுமில்லை. ஏனென்றால் பிதாவிடம் இவ்வளவு ஐக்கியமும் அன்பும் பூரணகீழ்ப்படிதலுமுள்ளவரை, சாகும்படி சத்துருக்களின் இஷ்டத்துக்கு விட்டுவிடுகிறதாயிருந்தால், அது கடவுள் வல்லமைக்கும் ஞானத்துக்கும் அன்புக்கும் மகா குறைவாகும். அவர் ஜீவியம் உபதேசத்தால் ஒப்புரவாகுதல் கிடைக்கக் கூடுமானால் அவர் மரித்தது அநாவசியமும் வீணுமாகும். மேலும் சத்துருக்கள் தங்கள் இஷ்டப்படி அவரைப் பிடித்துக் கொன்று போட்டார்கள் என்பதுமாத்திரம் அவர் மரணத்தின் சருக்கமாயிருக்குமானால், கடவுள்மேல் நாம் நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவில்லை. அவரது நீதி அன்பைப் பற்றி நாம் சந்தேகிப்போம். ஏனென்றால் மனுஷனைப் பற்றிய தேவ சித்தத்தைப் பூரணமாய்த் தமது ஜீவியத்தாலும் கிரியைகளாலும் நிறைவேற்றி, சகல காரியங்களிலும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்த அவரை மகிமைப் படுத்தினவரை கடவுள் காப்பாற்றாமல், சத்துருக்களின் இஷ்டத்துக்கு விட்டுவிட்டாரேயானால் நாம் அவரை எப்படி நம்பக்கூடும்? "இவன் தேவனை நம்பியிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை ரட்சிக்கட்டும்" என்று சத்துருக்கள் செய்த பரியாசம் உண்மையாகும். ஆகையால் இந்த மரணத்தில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். அந்த விசேஷத்தை பேதுரு கொஞ்சம் விளக்கிக் காட்டுகிறார். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியும் அவர் முன்னறிவின்படியும் ஒப்புக்கொடுக்கப்பட்ட இயேசு." கடவுளைவிட்டு நம்மைப் பிரித்த பாவத்தை நீக்கவும், பகையைச் சிலுவையினால் கொல்லவும், பிதாவோடு நமக்கு ஐக்கியத்தை உண்டாக்கவும், தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான வழியை உண்டாக்கவும், அவர் தேவசித்தத்தின்படியே சிலுவைக்குப் போனார். தமது மரணத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் ஒப்புரவாகுதலையும் தேவ ஐக்கியத்தையும் நினைத்து, அவமானத்தை எண்ணாமல் சிலுவையை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு மரித்தார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்."

அந்த மரணத்தின் விசேஷமென்ன? இருபக்கத்துச் சிலுவைகளில் கள்ளர் மரித்ததுபோல் மரித்தாரோ? தமது சரீரத்தைவிட்டு ஜீவன் போய்விடுமே என்பதைக் குறித்துத்தான் அவர் நெடுகிலும் கலங்கினாரோ? தம்மைச் சிலுவையிலறைந்து கொன்றுவிடுவார்கள் என்பதை நினைத்துத்தான் தோட்டத்தில் திகிலடைந்தாரோ? மிகுந்த வியாகுலப்பட்டு ரத்த வேர்வை சிந்தினாரோ? என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்று புலம்பினாரோ? இந்த மரணமாகிய வேளை தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டுமென்றுதான் பிதாவைநோக்கி வேண்டிக்கொண்டாரோ? உயிர் போய்விடுமே என்று பயந்துதான் கீழேவிழுந்து கண்ணீர்விட்டு அழுதாரோ? ஆண்டவர் சிலுவையில் அடைந்த மரணம் அதுவாயிருந்தால் அவர் இவ்வளவு பயந்து நடுங்கவேண்டிய தென்ன? எத்தனையோ மனுஷர் தைரியமாக சாந்தமாக மரித்திருக்க உலகரட்சகன் இவ்வளவு பயந்து கலங்குவானேன்?

தமது சரீரம் கொல்லப்படுவதற்கு ஆண்டவர் பயந்தவரல்ல. சரீரத்தைக்கொல்லுகிறவர்களுக்குப் பயப்படக்கூடாதென்று அவர் தமது சீஷர்களுக்குச் சொன்னார். அவர்களும் பயப்படவில்லை. அவரைச் சிலுவைவரை எவ்வளவோ கொடியபாடு படுத்தினார்கள். சித்திரவதை செய்து அவர் ரத்தத்தை ஏராளமாய்ச் சிந்தினார்கள். ஏறக்குறைய அவர் உயிரே அவரைவிட்டு நீங்கினதுபோலாயிற்று. ஆண்டவரோ கொஞ்சமாகிலும் கலங்கவில்லை, கண்ணீர்விட்டு அழவில்லை. தமது ஜீவன் போய்விடுமே என்று எவ்வளவேனும் அவர் பயந்தவரல்ல. “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளுக்குள்ளே எழுப்புவேன்” என்றும், “என் ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு” என்றும் கர்ச்சித்தவர் அவர். தமது சீஷர்களிடத்தில் எருசலேமுக்குப்போய்த் தாம் சிலுவையில் அறையப்படவேண்டுமென்றும் ஆனால் மூன்றாம் நாளில உயிரோடெழும்பி விடுவதாகவும் உறுதியாய்ச்சொன்னார். தமது சரீரம் கொல்லப்படும் விஷயத்தில் பயமோ திகிலோ ஒன்றும் அவர் காண்பிக்கவில்லை. ஆகிலும் அவர்



பயந்து நடுங்கின மரணம் ஒன்றுண்டு. அதுவே உலகத்தின் ரட்சிப்புக்காக அவர் சிலுவையில் சகித்த மரணம். மனுமக்களில் அவர் ஒருவரே அந்த மரணத்தை அனுபவித்தவர். “கிறிஸ்துவே மரித்தவர்” என்றும், “எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்” என்றும், “ஒவ்வொருவருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்” என்றும், “கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்” என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். ஆண்டவர் மரணம் என்று சொன்னபோதெல்லாம் அவர் கருத்து வேறே. சரீரத்தைவிட்டு ஜீவன் பிரிவதே மரணமானால் “உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் மரிப்பதில்லை” என்று சொன்னாரே. விசுவாசிகளில் மரிக்காதிருந்தவர்கள் யார்?

சரீரத்தை விட்டு உயிர் நீங்குவதை ஆண்டவர் நித்திரை என்று போதித்தார். அதை அவர் மரணம் என்று சொல்லவில்லை. ஆண்டவர் சகலமும் முடிந்தது என்று கண்டபோது மற்ற மனுஷரைப் போலவே தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். அவர் நித்திரையடைவதற்கு முன்னே மரணத்தை அனுபவித்தார். அந்த மூன்றுமணிநேரமும் அவர் தமது ஆத்துமாவில் அடைந்த போராட்டத்தை மனுஷன் அறியமாட்டான். “என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று அவர் சொன்னவார்த்தைகள் நடந்த காரியத்தைக்கொஞ்சம் நமக்கு வெளிப்படுத்துகின்றன. கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்ட மனுஷன் உலகத்தில் ஒருவனுமில்லை. நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, நமக்காகப்பாவமான ஆண்டவர் பாவத்தின் பலனாகிய கொடிய மரணத்தை, அதாவது கடவுளை இழந்து தவிக்கும் நிலைமையைத் தமது ஆத்துமாவில் அனுபவித்தார்.

அவர் மரணத்தின் ரகசியத்தை நாம் அறிந்துகொண்டவர்கள் அல்ல. அவர் மரணத்தை அறியுமுன் மரித்தவர் இன்னாரென்பதை முந்தி அறியவேண்டும். நாம் முன் கவனித்தபடி “அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம்.” “உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை.” சகலமும் அவரைக்கொண்

டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." சர்வத்தையும் ஓர் பூர்ண ஒற்றுமைக்கு நடத்திக் கொண்டுபோகும் ஆண்டவர் அவர். அவர் மரித்தார். ஆள் நமது புத்திக்கு எட்டாதிருப்பது போல அவர் மரணமும் நமது புத்திக்கு எட்டவில்லை. ஆகிலும் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவர் மரணத்தின் பலனாகிய நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

ஆண்டவர் தமது மரணத்தால் சம்பாதித்த ஒப்புரவாகுதல் மகா விசாலமானது. "பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய காணப்படுகிறதும் காணப்படாததுமான சகலமும்" அவருக்குள் ஒப்புரவாக்கப் படவேண்டும். பாவிகளான நமக்குத்தானே ஒப்புரவாகுதல் அவசியம்; நமக்காகத்தானே கிறிஸ்து மரித்தார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் நமது பாவம் கடவுள் முதற்கொண்டு சர்வசிருஷ்டிப்புகளிலும் குழப்பத்தை உண்டாக்கினதென்பதை நாம் அறியவேண்டும். அன்புள்ள பிதாவின் உள்ளம் நமது பாவத்தால் வேதனையடைந்தது. தேவதூதர்கள் நம்மைப்போல் பாவிகள் அல்லவென்றாலும், நமது பாவம் அவர்களுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தில் குழப்பத்தை உண்டாக்கினது. பாவியின் மனந்திரும்புதல் அவர்களுக்குச் சந்தோஷமானால் அவன் கெட்டிருப்பது அவர்களுக்குத் துக்கமல்லவா? சாபத்துக்குள்ளான சிருஷ்டிப்புக்கும் விமோசனம் வேண்டும். சிலுவையின் வெற்றியால் சகலமும் ஒற்றுமைப்படும். கிறிஸ்துவின் சிலுவை நம்மில் உண்டாக்கும் மாறுதல் மாத்திரமல்ல அது சகலத்திலும் நடப்பிக்கும் முடிவான வெற்றியைக் காணும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கும். தேவனுடைய பிள்ளைகளான நாம் இப்போதே அந்த ஒப்புரவாகுதலின் பலனை அனுபவிக்கிறோம். கடவுளைவிட்டுப் பிரிக்கப்பட்டிருந்த நாம் அவரைப் பிதாவாகக் கண்டு அவரோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம். மனதிலே சத்துருக்களாயிருந்த நாம் முழுமனதோடு அவரில் அன்புகூருகிறோம். சரீரத்தில் துர்க்கிரியை நடப்பித்த நாம் அவர் ஆவியின் பலத்தால் நற்கிரியைகளைச் செய்கிறோம். இந்த அனுபவம் சகலமும் கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாகும் காலம்வரும் என்கிற நிச்சயத்தை நமக்குத்தருகிறது.



## III. ஒப்புரவாகும் நோக்கம்.

இப்போது கிறிஸ்துவின் மூலமாய் பிதாவின் ஐக்கியத்தில் நாம் பிழைப்பது உண்மையாகிலும் நமது ஐக்கியம் பூரணமுள்ளதல்ல. எத்தனையோ விஷயங்களில் தவறுகிறோம். நினைவிலும் வாக்கிலும் செய்கையிலும் எப்பொழுதும் இடைவிடாமல் பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்யமுடியவில்லையே என்னும் துக்கம் நமது மனதிலிருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையில் பிழைக்க விரும்புகிறவர்களுக்கே இதன் உண்மை தெரியும். நாட்களெல்லாம் மனம்போல் நடந்துகொண்டு ஞாயிறு ஒருமணிநேரம் ஆராதனைக்குப்போவதே போதும் என்றிருப்பவர்கள் என்ன அறிவார்கள்? தேவபக்தர்கள் எப்பொழுதும் கிறிஸ்துவோடு ஜீவிக்க விரும்புவதால் தங்கள் குறைவுகளைக் காண்கிறார்கள். "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நமது சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" என்று பரிசுத்த அப்போஸ்தலன் சொன்னார். ஒப்புரவாகுதலின் பூரண ஆசீர்வாதம் இனி வருகிறதாயிருக்கிறது. அதைக்குறித்து அப்போஸ்தலன்: "உங்களைப் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப் படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்திலே அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்கிறார்.

ஒப்புரவாகுதலின் முடிவான நோக்கம் கர்த்தருக்குப் பிரியமான ஜீவியம். அநேகர் இதை யோசிக்கிறதில்லை. பாவமன்னிப்புக்காக மாத்திரம் சிலுவையை நோக்குகிறார்கள். கிறிஸ்துவின் மூலமாய் பிதாவோடு ஐக்கியப்பட்டு அவருக்குப் பிரியமான குமாரர் குமாரத்திகளாக நாம் பிழைப்பதே சிலுவையின் முடிவானநோக்கம். இந்த நோக்கத்தோடே நாம் ஜீவிக்கவேண்டும். ஆண்டவர் தமது ஆவியினால் நமக்குள் வசிக்கும்போது அவர் சிந்தை நமக்குண்டாகும். இதுவே ஆவியினால் உள்ளாக உண்டாகும் மறுரூபம். பொருளாசையும், உலக நேசமும், பொறாமை, பெருமை, பகை, தீமைசெய்யும்

சுபாவமும் கிறிஸ்துவில் காணமுடியாது. இப்படிப்பட்ட குணங்கள் நம்மிலிருக்குமானால் நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களல்ல. அன்புள்ள பிதாவோடு ஒப்புரவானவர்கள் அல்ல. பிதாவோடு ஐக்கியப்பட்டு அவர் சிநேகத்தை அனுபவிப்பது நமது கிறிஸ்தவ ஜீவிய வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கவேண்டும். நாம் நாளுக்குநாள் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் அவர் சாயலுக்கொப்பாக மாறவேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கிற நோக்கம் இதுதான். இவ்வாறு பல போராட்டங்களின் மத்தியில் அவர் சாயலுக்கொப்பாக வளருவது மெய்யானால் அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருப்போம் என்பது நிச்சயம். "பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும்" ரட்சிப்பின் பூரண ஆசீர்வாதத்தைப் பெற்று அருமைப் பிதாவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம்.

இந்த ஒப்புரவாகுதலுக்கு கிறிஸ்துவின் மரணம் அவசியமா? அன்புள்ள கடவுளுக்கு கிறிஸ்துவின் மரணமில்லாமல் நம்மோடு ஒப்புரவாக முடியாதோ? அவரைப் பாடுபடுத்தி மரணத்திற்குள்ளாக்கின பின்புதான் அவர் கோபந்தீர்ந்து ஒப்புரவாக மனம் வந்ததோ? பழிக்குப் பழி வாங்கின பின்புதான் அவர் சமாதானமானாரோ? இது போன்ற கேள்விகள் காலத்துக்காலம் கேட்கப்படுகின்றன. நாம் கற்றுக்கொண்ட வேதசாஸ்திரமும் இக்கேள்விகளுக்குக் காரணமாகும். நீதியுள்ள கடவுள் பாவிகளைத் தொலைப்பதற்குக் கச்சைகட்டிக்கொண்டிருந்தது போலவும், கிறிஸ்து நடுவில் விழுந்து நமக்காகப் பரிந்து, கடவுள் தண்டனையைத் தாம் ஏற்றுக்கொண்டு அவரைச் சாந்தப்படுத்தினது போலவும் பேசுவாருண்டு. இது முழுவதும் காரியம் அறியாத பேச்சு. கிறிஸ்து மரித்ததினாலே கடவுள் நம்மில் அன்புகூராமல், கடவுள் அன்பாயிருந்ததினாலேயே கிறிஸ்து மரித்தார். மேலும் கடவுளே கிறிஸ்துவுக்குள்ளிருந்து இந்த ஒப்புரவாகும் வழியை உண்டுபண்ணினார். ஒப்புரவாகுதல் நம்மால் உண்டானதல்ல. பிதாவாகிய கடவுளே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி, இந்த நற்செய்தியை உலகத்துக்குத் தெரிவித்தார். கிறிஸ்து



வில் நாம் காண்கிற சகல கிரியைகளும் பிதாவினுடையவைகளே. கடவுள் நம்மேல் கோபமாயிருந்தார்; கிறிஸ்து நம்மேல் அன்பாயிருந்தாரென்று நாம் ஒருக்காலும் பேசக்கூடாது. நாம் கிறிஸ்துவில் காண்கிற அன்பு பிதாவின் அன்பே. கிறிஸ்துவில் வெளிப்பட்ட கிருபை கடவுள் கிருபையே. கிறிஸ்து பட்டபாடுகள் பிதாவின் பாடுகளே. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ஆகையால் கடவுள் நம்மேல் வைத்த தமது கோபத்தை கிறிஸ்துவின்மேல் வைத்து, அவரைத் தண்டித்து விட்டபடியால் நம்மோடு ஒப்புரவாகக் கூடியவரானார் என்று நாம் பேசக்கூடாது.

பாவம் தேவ ஆளுகைக்கு விரோதம். பாவம் இருக்கும் வரையில் பிதாவுக்கும் நமக்கும் ஐக்கியமிருக்காது. பாவம் ஆக்கினைக்குள்ளாகி அகற்றப்படவேண்டும். உலகத்தின் மனுமக்கள் பாவத்துக்கு அடிமைகளானதால் அவர்களால் பாவம் நீங்காது. கடவுளே அதை நீக்கினால் அல்லாமல் அது நீங்காது. பாவத்தால் நாம் தேவனுக்குச் சத்துருக்களானது அவருக்குச் சொல்லமுடியாத சஞ்சலம். ஆகையால் அவர் தமது குமாரன் மூலமாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளச் சித்தங்கொண்டார். கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு மனுக்குலத்தின் பிரதிநிதியானார். பரிசுத்த ஆண்டவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி நமது பாவத்தை ஏற்றுக்கொண்டார். பாவம் எங்கேயோ அங்கே மரணம் உண்டு. பாவத்தால் விளைந்த பிரிவினை, பகை, பொல்லாங்கு ஒழியவேண்டுமானால் பாவம் அழிக்கப்படவேண்டும். சத்துருவோடு நேருக்கு நேர் போராடி வெற்றியடையும்படி வந்த வீரன் அவர். அவர் ஏற்றுக்கொண்ட போரின் கொடுமையை நாம் அறிந்தவர்களல்ல. அவர் மரணத்தை ஏற்றுக்கொண்டு தமது மரணத்தாலே மரணத்தை அழித்து, பகையைச் சிலுவையினால் கொன்று, நாம் பிதாவிடம் சேரும் திறந்த வழியை உண்டாக்கினார். நாம் பாவமன்னிப்பையும் பிதாவோடு ஐக்கியத்தையும் பெற்றுக்

கொள்ள கிறிஸ்து வழியானார். வேறு வழியிருக்குமானால் கடவுள் அப்படிச் செய்யாதிருக்கமாட்டார். இதுவே அன்பும் நீதியுமுள்ள பிதாவின் இருதயத்திற்கு ஏற்றவழி. இந்த ஒப்புரவாகுதலை நாம் நமது அனுபவத்தில் கண்டு பாவிகளைத் தம்மிடம் சேர்த்துக்கொண்ட அன்புள்ள பிதாவைத் துதிக்கிறோம். நாம் அவரோடு ஐக்கியமாகும்படி அவரது அன்பின் கரம் கிறிஸ்துவுக்குள் நீட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிதான கிருபையை அசட்டை பண்ணுகிறவன் தன்னைத்தானே அழிவுக்குரியவனாக்கிக் கொள்ளுகிறான்.

---

# XI
# Humility
## மனத்தாழ்மை

"மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" 1. பேது. 5:5.

கிறிஸ்தவ லட்சணங்களில் மிகச் சிறந்தது மனத்தாழ்மை. மனத்தாழ்மை எவ்வளவு அவசியம் என்பது இன்னும் நமக்குத்தெரியவில்லை. இது பிரதானமாகப் போதிக்கப்படுவதுமில்லை. போதகர்மார் தங்கள் சபையாருக்கோ, பெற்றோர் தங்கள் மக்களுக்கோ, உபாத்திமார் தங்கள் மாணாக்கருக்கோ, சிநேகிதர் தங்கள் சிநேகிதருக்கோ மனத்தாழ்மையைப் பற்றிப் பேசுவது அபூர்வம். தாழ்மையை இழிவாகவும் கோழைத்தனமாகவும் உலகம் நினைக்கிறது. பெருமையே உலகத்துக்குச் சிறப்பு. பெருமையை விரும்பாதவர்கள் இல்லை. அது ஐசுவரியவானை மாத்திரமல்ல, கொடியதரித்திரனையும் ஆண்டுகொண்டிருக்கிறது. இடுப்பில் கந்தையும் கையில் ஓடுமுள்ள பிச்சைக்காரன் தன் முன்னோர்களுக்கு எத்தனையோ ஏக்கர் நிலங்களும், அநேக வீடுகளும், திரளான ஆடுமாடுகளும், தோட்டம் துரவுகளும், ஏராளமான வேலைக்காரரும் இருந்தார்கள் என்று பெருமையாய்ப் பேசத் தவறுவதில்லை. பிச்சையிலும் பெருமை! இது பெரியவர்களை மாத்திரமல்ல குழந்தைகளையும் ஆளுகிறது. தொட்டிலில் கிடக்கும் குழந்தையை அதட்டினால் முகத்தைச் சுழித்துக்கொண்டு அழும். இல்லடா ராஜா என்று கொஞ்சினால் அழுகை நீங்கி முகத்தில் மகிழ்ச்சி தோன்றும். இளமையிலே பெருமை! அவர்கள் வளரவளர பெருமையிலேயே வளருகிறார்கள். இதற்குப் பக்கத்தூண்டுதலும் உண்டு. பெற்றோர் தங்கள் மக்கள் முன்னுக்குவர விரும்பி அவர்களைப் பார்த்து: இன்னாரைப் பார்த்தீர்களா? அவர்கள் கல்வியென்ன! உத்தியோகம் என்ன! சம்பாத்தியம் என்ன! பங்களாக்கள் என்ன! உடை நடைகள் என்ன! மோட்டார்கள் என்ன!

வேலைக்காரர் என்ன! அவர்கள் எவ்வளவு மேன்மையாய் வாழுகிறார்கள் என்று உற்சாகப்படுத்துவது வழக்கம். மக்கள் சிறுமையடைய எவரும் விரும்பார்கள். முன்னுக்கு வரவேண்டுமென்பதே எல்லாருக்கும் வாஞ்சை. ஆனால் இவை யாவற்றிலும் பெருமைக்கும் பொறாமைக்கும் போட்டிக்கும் இடமுண்டாகிறது. முன்னுக்கு வரவேண்டுமென்பது நல்விருப்பமானாலும் உண்மையான மேன்மை எதுவென்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். மனத்தாழ்மையின் பாக்கியத்தைப்பற்றிப் பேசுமுன் பெருமையின் கேட்டை முந்தி ஆராய்வது நல்லது.

## I. பெருமை உலகத்தைக் கெடுத்தது.

உலகத்தில் எண்ணுதற்கரிய ஏராளமான பாவங்கள் பெருகின. அவற்றை இவ்வளவென்று சொல்லமுடியாது. அவைகள் கணக்கிற்கடங்காத பெயர்கொண்டவை. உலகில் காணப்படும் பகை விரோதங்கள், சண்டை பிரிவினைகள், பொறாமை யுத்தங்கள், மூர்க்கம் கொலைகள், களவு தூஷணங்கள், அவமானம் தீமைகள், கண்ணீர் பெருமூச்சுகள் முதலான யாவும் பெருமையால் விளைந்த கேடுகளே. இவை யாவற்றிற்கும் ஊற்று பெருமை. பெருமை மனுமக்களை அரிபிளவையைப்போல் அரிக்கிறது. சரீரத்தில் வேதனைப் படுகிற ஒருவன் தன் நோய் இன்னதென்று அறியாதிருப்பதுபோல, நமது சகல கேடுகளுக்கும் காரணமாயிருப்பது பெருமை என்பதை நாம் அறியாதிருக்கலாம்.

பெருமையாவது என்ன? சிருஷ்டியாகிய மனுஷன் தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தைவிட்டு விலகினதே பெருமை. கடவுளைச் சார்ந்து பிழைப்பதும் அவரால் நடத்தப்படுவதும் சிருஷ்டியின் ஸ்தானம். மனுஷன் கடவுளை அகற்றி நான் என்பவனைச் சிங்காசனம் ஏற்றினான். சகல கேடுகளும் இங்கேயிருந்து ஆரம்பித்தன. நாம் ஒரு அதிசய காட்சியைப் பார்க்கும்போது, நம்மையும் மறந்து, நாம் நிற்கும் இடத்தையும் மறந்துபோகிறோம். அந்த அதிசய காட்சி நமது கவனமுழுவதையும் ஆண்டுகொள்ளுகிறது. இதைப்போல் அளவில்லாத ஞானமும் வல்லமையும் மகிமையும் நிறைந்த



கடவுளுடைய ஐக்கியத்திலிருப்பவன் ஆனந்த பரவசமடைந்து தன்னை முற்றிலும் மறந்துபோகிறான். இதுவே மனுஷனுடைய ஆதி நிலைமை. இந்த நிலைமையை அவன் காத்துக்கொள்ளவில்லை. மற்றச் சிருஷ்டிப்புகள் யாவும் கடவுளைச் சார்ந்து பிழைக்கும் பாக்கியமான நிலைமையில் நிலைத்திருக்கின்றன. அவர் தமக்குச் சித்தமான யாவற்றையும் அவைகள்மூலம் நிறைவேற்றி மகிமைப்படுகிறார். அவைகள் தங்களில் ஒன்றுமில்லை. அவரே அவைகளைச் சிருஷ்டித்தவரும் ஆண்டு நடத்துகிறவருமாயிருக்கிறார். மனத்தாழ்மை என்று அவைகள் சொல்லாவிட்டாலும் மனத்தாழ்மையாவது என்னவென்பதை அவைகள் நமக்குப் போதிக்கின்றன. நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து பரமபிதாவைச் சார்ந்து பிழைப்பதே மனத்தாழ்மை. அவர் நமக்குள் வசித்து நம்மை ஆண்டு நடத்துவதே மனத்தாழ்மை. சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் மற்றச் சிருஷ்டிகளைப்போல் தான் உண்டாக்கப்பட்ட ஆதிநிலைமைக்கு வருவதே மனத்தாழ்மை. அந்த நிலைமையே அவனுக்குப் பாக்கியம். பெருமை கடவுளையும் மனுஷனையும் பிரித்தது. அவர் வசித்த இடத்தில் நான் என்பவன் உட்கார்ந்தான். அவர் சித்தம் செய்யப்பட்ட இடத்தில் சுயசித்தம் ஏற்பட்டது. மனுஷன் கெட்டான்.

பெருமையே ஆதிவித்து. அந்த வித்திலிருந்து பாவம் என்னும் மரம் முளைத்து, விஷம் நிறைந்த கனிகளைக் கொடுத்து, மனுமக்களைச் சாபத்திற்குள்ளாக்கிற்று. பெருமை பரத்தில் உண்டானது. கடவுள் கணக்கற்ற தேவதூதர்களை உண்டாக்கியிருந்தார். அவர்கள் அவருடைய மகிமையாலும், பிரகாசத்தாலும், பலத்தாலும் நிறைந்திருந்தார்கள். தங்கள் சிருஷ்டிகரின் மகத்துவத்தைக் கண்டு, ஆனந்த பரவசமடைந்து, இடைவிடாமல் அவரைப் போற்றி, அவர் சித்தத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். அவரைக் கண்ட காட்சியில் தங்களை மறந்தார்கள். இப்படியிருக்க, அவர்களில் ஒருகூட்டத்தார் சாத்தான் என்னும் அவர்கள் தலைவனால் இழுப்புண்டு, தங்களை நோக்கிப்பார்த்து, தங்கள் மகிமையையும் பலத்தையும் தங்களுடையதென்று எண்ணி, கர்வங்கொண்டு; நாம் என்

கடவுளைச் சார்ந்து பிழைக்கவேண்டும்? இவ்வளவு மகிமையும் பிரகாசமும் நமக்கிருக்கும்போது, நாமும் கடவுளைப்போல் ஏன் சுயாதீனமாய் நடக்கக்கூடாது என்று நினைத்தார்கள். தங்கள் பாக்கியமும் மகிமையும் தங்களுடையதல்ல வென்பதையும், தாங்கள் சிருஷ்டிகரைச் சார்ந்து பிழைப்பதின் பலனாகவே அந்த மகிமை தங்களில் காணப்படுகிறதென்பதையும் மறந்துபோனார்கள். இந்தத் தீய எண்ணம் அவர்களில் தோன்றின நிமிஷத்தில், அவர்கள் இருதயபற்று கடவுளைவிட்டுப் பிரிந்தபடியால், எல்லா மகிமையையும் பிரகாசத்தையும் இழந்து இருள்நிறைந்த பிசாசுகளாகிக் கீழே தள்ளப்பட்டார்கள். "தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட" இந்தக் கூட்டத்தாரான தூதர்கள் அந்தகாரத்திற்குரியவர்களானார்கள். மற்றத் தூதர்களும் பெருமைகொண்டு கெட்டுப்போகாதபடிக்கு இவர்களுடைய விழுதல் அவர்களுக்கு எச்சரிப்பாயிற்று. "தங்களுக்குரிய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல்" என்று சொல்லியிருக்கிறது. அந்த ஆதிமேன்மையாவது என்ன? தங்கள் ஒன்றுமில்லாமையை உணர்ந்து சிருஷ்டிகர்த்தாவைப் பூரணமாய்ச் சார்ந்து பிழைப்பதே அந்த ஆதிமேன்மை. இதையே மனத்தாழ்மை என்கிறோம். சிருஷ்டி தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இருப்பதே மனத்தாழ்மை. அதைவிட்டு விலகுவது மனப்பெருமை. பெருமையே அவர்களை கடவுளைவிட்டுப் பிரித்தது. சகல பாக்கியங்களும் மறைய, சகல கேடுகளும் அவர்கள் பங்காயின.

தேவன் அவர்களை நல்லவர்களாக உண்டாக்கியிருக்க தீமை எப்படி அவர்களுக்குள் வந்தது? தீமை எங்கிருந்தும் வரவேண்டியதில்லை. நன்மையும் தீமையும் உள்ளேயே யிருக்கிறது. தீமை என்பது ஒரு ஆள் அல்ல. நன்மையை இழப்பதே தீமையாகும். ஒளியை இழப்பதே இருளாகும். ஜீவனை இழப்பதே மரணமாகும். ஒன்று ஒன்றோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. தீமையே செய்யமுடியாமல் நன்மை மாத்திரமே செய்கிறவர்களாக தூதர்கள் உண்டாக்கப் படவில்லை. அப்படியானால் சுயசித்தமற்ற ஒரு இயந்திரத்திற்கு



அவர்கள் சமானமாவார்கள். நாம் சாவிகொடுத்து ஓட்டும் கடிகாரத்தைப்போலும் ஆட்டிவிட்ட பம்பரம்போலும் இருப்பார்கள். இங்கேதான் அறிவுள்ள சிருஷ்டிக்கும் அறிவில்லாத சிருஷ்டிக்கும் வித்தியாசமிருக்கிறது. அறிவில்லாத சிருஷ்டிகள் வானத்திலும் பூமியிலும் தேவசித்தத்தை நிறைவேற்றுகின்றன. நிறைவேற்றுகிறோம் என்பது அவைகளுக்குத் தெரியாது. கடவுளே அவைகளில் தமது சித்தத்தை நிறைவேற்றுகிறவர். அவர் தேவதூதர்களையும் அவ்வாறு நடத்துவாரானால், அவர்கள் கீழ்ப்படிதல் சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் கீழ்ப்படிதலைப்போலவே அறிவற்ற கீழ்ப்படிதலாகும். அறிவும் உணர்வுமுள்ள தேவதூதர்கள் அறிவு உணர்வோடு கீழ்ப்படிய வேண்டும். அறிவு உணர்வு எங்கே உண்டோ அங்கே உத்தரவாதமும் உண்டு. ஆகையால் சுயாதீன சித்தமுள்ள தேவதூதர்கள் நன்மைக்குச் சாயும் இயல்புடையவர்களாயிருந்தது போலவே தீமைக்கு அதாவது நன்மையைவிட்டு விலகும் இயல்புடையவர்களாகவு மிருக்கவேண்டும். மற்றப்படி அவர்கள் சுயாதீனரல்ல. அவர்கள் தங்கள் இஷ்டப்படி கீழ்ப்படியாமல், கடவுள் அவர்களைப் பலவந்தமாய்க் கீழ்ப்படியச் செய்வாரானால், அது கீழ்ப்படிதல் ஆகாது; அவர்கள் தவறவுமாட்டார்கள். சுயாதீன சித்தம் எங்கே உண்டோ அங்கே கீழ்ப்படிவதுபோலவே, கீழ்ப்படியாதிருப்பதற்கும் ஏதுவுண்டு. ஆகையால் தூதர்கள் பெருமை கொள்வதற்குப் பாவம் வெளியே யிருந்து வரவேண்டியதில்லை.

இப்போது மனுஷனுடைய தவறுதலைக் கவனிப்போம். மனுஷன் தானாகக் கெடாமல் சாத்தானுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக் கெட்டான் என்பது சரித்திரம். மனுஷன் கடவுளோடுள்ள ஐக்கியத்தில் பிழைத்து ஆனந்த சந்தோஷத்திலிருந்தான். அந்தப் பாக்கியமான நிலைமையைக் கண்டு பொறாமைகொண்ட சத்துரு, அனுபவத்தில் இன்னும் குழந்தைகள் போன்ற ஆதித்தம்பதியரை ஏமாற்றினான். நீங்கள் தேவனையே சார்ந்திருக்கவேண்டியதென்ன? இது அடிமைத்தனமல்லவா? நீங்கள் உங்கள் இஷ்டம்போல் நடந்தால் கடவுளைப்போலாவீர்கள். இதை அறிந்துதானே

நீங்கள் அந்தக் கனியைப் புசிக்கக் கூடாதென்று உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அதைப் புசித்துப் பாருங்கள், அப்பால் உங்கள் பாக்கியத்தை நீங்களே கண்டுகொள்வீர்கள் என்றான். இவனை "ஆதி முதல் பொய்யன்" என்று ஆண்டவர் சொன்னதும் சரிதானே. சாத்தான் சொன்ன வார்த்தைகள் அவர்களுக்குச் சோதனையாயிருந்தது. இந்த வார்த்தைகளைக் கேட்டதால் அவர்கள் பாவிகளாகவில்லை. சோதிக்கப்படுவது பாவமல்ல. அவர்கள் பாவிகளாவது அவர்கள் செய்யும் தீர்மானத்திலிருக்கிறது. பிதாவாகிய கடவுள் தங்களுக்குக் கொடுத்த எச்சரிப்பு அவர்களுக்குத் தெரியும். இப்போது சாத்தான் சொன்ன வார்த்தைகளையும் கேட்டார்கள். அவர்கள் வெற்றியும் விழுதலும் அவர்கள் செய்யும் தீர்மானத்திலிருக்கிறது. கடவுள் வார்த்தையை நம்பி சாத்தான் வார்த்தையைப் புறக்கணிக்கவேண்டும். அல்லது சாத்தான் வார்த்தையை நம்பி கடவுள் வார்த்தையைப் புறக்கணிக்கவேண்டும். இரண்டிலொன்றைத் தீர்மானிக்கும் சுயாதீன சித்தம் அவர்களுக்குண்டு. அவர்கள் செய்ததென்ன? சாத்தான் சொல்லுக்கு இணங்கினார்கள். ஏன் இணங்கினார்கள்? மனுஷனுக்கு விசுவாசப் பார்வையை விட காணப்படுகிறவைகளில் கவர்ச்சி அதிகம். கிறிஸ்தவ ஜீவியத்தில் நமது போராட்டங்களுக்குக் காரணம் அதுதானே. எவ்வளவாய் நாம் ஆண்டவரையும் அவரது அன்பையும் அறிந்திருந்தாலும், காணப்படுகிறவைகளால் லேசாய் இழுப்புண்டு போகிறோம். ஆவிக்குரிய ஜீவியத்தின் பலம் விசுவாசப் பார்வையில் இருக்கிறது. காணப்படுகிறவைகளோ இப்போது உடனே நாம் அனுபவிக்கக் கூடியதாய் நமது கண்முன் நிற்கின்றன. "ஸ்திரீயானவள் அந்த விருக்ஷம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருக்ஷமுமாயிருக்கக் கண்டாள்" (ஆதி. 3:6). வினை வந்தது! நாங்கள் ஒன்றுமில்லை, எங்களுக்கு எல்லாம் கடவுளே என்று அவருடைய ஐக்கியத்தில் பிழைத்தவர்கள், இப்போது நாங்கள் என்றும், கடவுளைப்போலாவோம் என்றும் நினைத்தது அவர்களுக்குக் கேடாயிற்று. இவ்வாறு சாத்தான் தான் கெட்ட பெருமையின் விதைத்தையே அவர்களுக்குள்ளும் ஊற்றி அவர்களையும் கெடுத்தான். வளரும் எந்த மரமும் அதன் வேரின் ஜீவனைப் பெற்றே வளருவதுபோல, மனுக்குல முழுவதும் ஆதாமிலிருந்து வந்தவர்களானதால் அவன் பெருமைக்கு ஆளாகிக் கெட்டார்கள். பாக்கியமான நிலைமையாகிய மனத்தாழ்மையை இழந்த தூதர்கள் பிசாசுகளானார்கள். சாத்தானுடைய வஞ்சகத்தை நம்பி ஏற்றுக்கொண்ட மனுஷனும் தன் பெருமையால் கடவுளை இழந்து கெட்டான். நான் என்னும் கர்வமும் சுய இஷ்டப்படி நடக்கும் பெருமையும் உலகத்தைக் கெடுத்தது.



## II. மனத்தாழ்மை உலகத்திற்கு ரட்சிப்பு.

"பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்." எதினாலே நாம் கெட்டோமோ அதிலிருந்து ரட்சிக்கப்படுவதே நமக்கு ரட்சிப்பாகும். பெருமை மனுக்குலத்தைக்கெடுத்தது மெய்யானால் மனத்தாழ்மையே உலகத்தை ரட்சிக்கும். பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தது மெய்யானால், அவர்களுக்குள் மனத்தாழ்மையை உண்டாக்குவதே அவர்களுக்கு ரட்சிப்பாகும். ரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டவனுக்கு: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்கள்" என்று அப்போஸ்தலன் சொன்னார். அன்று ராத்திரி அவனுக்குச் சொல்லக்கூடியது அவ்வளவுதான். ரட்சிப்பாவது என்னவென்றும் விசுவாசமாவது என்னவென்றும் விஸ்தரிப்பதற்கு அது சமயமல்ல. விசுவாசத்திற்கும் ரட்சிப்புக்குமுள்ள சம்பந்தத்தை அவன் பிந்தி அறியலாம். தன்மீது பற்றும் நம்பிக்கையுமுள்ள ஒருவனும் ரட்சிக்கப்படமாட்டான். தன்பாவங்களையும் தன் ஒன்றுமில்லாமையையும் நினைத்து மனம் நொறுங்கி, ஆண்டவரைப்பற்றிப் பிடித்து, அவரையே தனக்கு எல்லாமாக்கிக் கொள்ளுகிறவனே ரட்சிக்கப்படுவான். இதுவே மனத்தாழ்மை. நமது ரட்சிப்பு மனத்தாழ்மையிலே ஆரம்பித்து, மனத்தாழ்மையில் வளர்ந்து, மனத்தாழ்மையில் பூரணப்படுகிறது. ஆண்டவர் நம்மை ரட்சிக்கவந்தார் என்று சொல்லுவதும், அவர் நமக்குள் மனத்தாழ்

மையை உண்டாக்கவந்தார் என்று சொல்வதும் சரிதான். பெருமை நமக்குக் கேடானால் மனத்தாழ்மையே நமக்கு ரட்சிப்பாகும். தமது சிலுவை மரணத்தால் நமது பெருமையைத் தகர்த்து, தமது உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனால் நமக்குள் மனத்தாழ்மையை உண்டாக்கி நம்மை ரட்சிக்கிறார். மனுஷன் கடவுளுக்குமுன்பாக எப்படிப் பிழைக்கவேண்டும் என்பதற்கும், எது அவனுக்குப் பாக்கியமான நிலைமை என்பதற்கும் அவரே நமக்குச் சிறந்த மாதிரியாகவும் வெளிப்பட்டார்.

## III. கிறிஸ்துவிலிருந்த மனத்தாழ்மை.

“நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்” என்றார். இந்த மனத்தாழ்மை அவர் மனுஷனாக வெளிப்பட்டபோதல்ல, பரத்திலேயே காணப்படுகிறது. அவர் எக்காலமும் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் திருக்குமாரன். அவருக்குள் மனத்தாழ்மை இருந்திராவிட்டால் பிதா சித்தப்படி பிழைத்திருக்கமாட்டார். மனத்தாழ்மை என்பது தெய்வீக லட்சணம்; அது இழிவான குணமல்ல. குமாரன் எப்பொழுதும் பிதாவைச் சார்ந்து பிழைப்பவர். இந்தச் சார்புதான் மனத்தாழ்மை. இது பரலோக சிந்தை. இப்படியிருக்க அவர் நம்மை ரட்சிக்கும்படி உலகத்திற்கு வரவேண்டிய திருந்தபோது மனுஷநிலைமைக்குத் தக்கவாறு அவர் தம்மைத் தாழ்த்தவேண்டியதாயிருந்தது. “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின (விட்டுப் பிரியக்கூடாத) பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்; அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகித் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான



நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.” (பிலி. 2:6-11). அந்த மேலான நாமம் அவர் பிறக்கும்போது பிதாவால் அவருக்குக் கொடுக்கப்பட்ட இயேசு என்னும் நாமமே. அது மனுஷரால் அற்பமாய் எண்ணப்பட்டாலும், எல்லாரும் நம்பவும் நமஸ்கரிக்கவும் ஏற்ற மேலான உன்னத நாமமாயிற்று. மேற்கூறிய வசனங்களில் கிறிஸ்துவின் மனத்தாழ்மையும், அதனால் அவரடைந்த மேன்மையும் காட்டப்பட்டிருக்கின்றன. தேவதூதர்களும் பிரமிக்கத்தக்கவிதமாய் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினார். தமது தெய்வீகத்தை அவர் வெறுமையாக்கவில்லை. தமக்குப் பிதாவோடிருந்த மகிமையை அங்கிருந்து அவர் பிதாவை வெளிப்படுத்தின போங்கை மாற்றி, நமது நிலைமைக்கேற்ற பிரகாரம் தமது நிலைமையை அளவுக்குட்படுத்தினார். ஆள் மாறிப்போகவில்லை. பரத்திலிருந்த குமாரனையே சிலுவையிலும், உயிர்த்தெழுதலிலும் காண்கிறோம். ஆனால் அவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலில் காணப்பட்டார். அவருடைய மனத்தாழ்மை எந்த நிலைமையிலும் அவரை மனரம்மியமாய் இருக்கச்செய்தது. “நரிகளுக்குக் குழிகள் உண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை” என்றார். இங்கே சௌகரியமாய் வாழவேண்டுமென்று அவர் விரும்பினவரல்ல. பிறந்த இடம் அவருக்குச் சொந்தமல்ல. பிரயாணம் செய்த படவு சொந்தமல்ல. தங்கின வீடு சொந்தமல்ல. அவர் தூங்கின தலையணை சொந்தமல்ல. ஏறின வாகனம் சொந்தமல்ல. அடக்கமான கல்லறை சொந்தமல்ல. மற்றவர்கள் செய்த உபகாரத்தால் பிழைத்தார்.

அவர் பேச்சில் மனத்தாழ்மை வெளிப்படுகிறது. “நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. என்னில் வாசமாயிருக்கிற பிதாவே இந்தக் கிரியைகளைச் செய்கிறார். என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை.” அவருடைய ஜீவியத்தைப் படிக்கும்போது அவர் தம்மை மறைத்து பிதாவையே முற்றிலும் சார்ந்து பிழைத்ததாகக் காண்கிறோம். “நான் அல்ல, பிதாவே” என்பது

அவரது ஜீவியத்தின் பிரமாணமாயிருந்தது. 'தமது சித்தப்படி பிழைக்காமல் பிதாவின் சித்தப்படியே பிழைத்தார். இவ்வாறு பூரணமாய் இடைவிடாமல் பிதாவைச்சார்ந்து பிழைத்த கிறிஸ்துவின் மூலமாய் பிதா தாராளமாகக் கிரியைசெய்ய இடம்பெற்றிருந்தார். "கடவுள் அல்ல, நான்" என்பதிலேதான் பாவம் உண்டானது. "இனி நான் அல்ல கடவுள்" என்பதிலேதான் ரட்சிப்பு உண்டாக வேண்டும். நமக்குள் மனத்தாழ்மையை உண்டாக்கி நம்மை ரட்சிக்க வந்த ஆண்டவர் மனத்தாழ்மையின் பாக்கியத்தைத் தமது ஜீவியத்திலே உலகத்திற்கு மாதிரியாகக் காண்பித்தார். கிறிஸ்துவால் ரட்சிப்படைந்த பவுல்: "இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். மனத்தாழ்மையை அவர் அணிந்துகொண்டவர். மனத்தாழ்மை கிறிஸ்துவோடு நம்மை இணைத்து ரட்சிக்கிறது. பெருமை தாழ்மைச் சொரூபியாகிய ஆண்டவரை விட்டு நம்மைப் பிரித்துக் கெடுக்கிறது.

## IV. ஆண்டவர் போதனையில் மனத்தாழ்மை.

பெருமையால் மனுஷன் கெட்டது மெய்யானால் மனத்தாழ்மையாலேதான் அவன் ரட்சிக்கப்படவேண்டும் என்று அறிந்த ஆண்டவர் மனுஷன் கடவுளுக்குமுன் எப்படிப் பிழைக்கவேண்டும் என்பதைத் தாமே தமது ஜீவியத்தில் மாதிரியாகக் காட்டினதுமல்லாமல், தமது போதனையில் மனத்தாழ்மையை முக்கியமாய் எடுத்துக் காண்பித்தார்.

மலைப்பிரசங்கத்தில்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்களென்றும், சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்களென்றும், தேவராஜ்யம் அவர்களுக்கே உரியதென்றும் போதித்தார். திரளான ஜனத்தை அவர் கண்டபோது: வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்கள் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கொடுப்பேன் என்றார். எப்படிக் கொடுப்பாரென்று கேட்டால்: நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன், என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார். அவருடைய சீஷருக்குள் பெருமை கடைசிவரை இருந்தது. தங்களுக்குள் யார் பெரியவன் என்பதைக் குறித்து அடிக்கடி தர்க்கித்தார்கள். ஆண்டவர் ஒரு சிறுபிள்ளையை அவர்கள் மத்தியில் நிறுத்தி: இந்தச் சிறுபிள்ளையைப்போல் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பெரியவனாயிருப்பான் என்றார். ஜனங்கள் தம்மைத் தொடர்ந்து வந்தபோது அவர் திரும்பிப்பார்த்து: ஒருவன் எனக்குச் சீஷனாயிருக்கவேண்டுமென்று விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுக்கவேண்டும் என்றார். நான் என்னும் கர்வமுள்ளவன் அவருக்குச் சீஷனாயிருக்கமுடியாது. செபெதேயுவின் குமாரர் யாக்கோபும் யோவானும் அவருடைய ராஜ்யத்தில் வலது இடது பக்கங்களில் இருக்க உத்தரவாகவேண்டுமென்று கேட்டபோது: உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். மனுஷகுமாரனாகிய நான் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவே வந்தேன் என்று சொல்லி மனத்தாழ்மையே மேன்மைக்கு வழி என்று காண்பித்தார். பரிசேயர் விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் விரும்பும் பெருமையைக் கண்டித்து: "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன், தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான்" என்றார். வேறொரு பரிசேயன் வீட்டில் அவர் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தபோது, அழைக்கப்பட்டவர்கள் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொள்வதைக் கண்டு: "தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்" என்றார். ஆயக்காரன் பரிசேயனைப்பற்றி அவர் சொன்ன உவமையில்: "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று சொல்லி முடித்தார். வியாழன் இரவில், மேல் வீட்டிலே, பந்தியிருக்குமுன் கால்களைக் கழுவும் விஷயத்தில், சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருக்க, ஆண்டவர் தாமே அவர்கள் கால்களைக் கழுவி அவர்களை

நோக்கி: ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவ வேண்டாமா? நான் உங்களுக்குச் செய்ததுபோல் நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். இக் கட்டளையை எழுத்தின்படி சடங்காகச் செய்கிறவர்களுமுண்டு. கால்களைக் கழுவியும் மனதில் தாழ்மை யற்றவர்களுமுண்டு. நமக்கு மனத்தாழ்மை வேண்டுமென்பதே ஆண்டவர் போதனையின் முக்கிய கருத்து. அதே இரவில் சீஷர்களுக்குள் தங்களில் யார் பெரியவன் என்னும் தர்க்கம் மறுபடியும் உண்டானது. "உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கவேண்டும். பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போலிருக்கிறேனே" என்று ஆண்டவர் அவர்கள் பெருமையைக் கடிந்துகொண்டு தாழ்மையின் அவசியத்தை வற்புறுத்தினார். மனத்தாழ்மை என்பது ஆண்டவர் போதனையில் ஒரு சாதாரண விஷயமாயிராமல், அவர் போதனை முழுவதிலும் மகா பிரதானமான அம்சமாகக் காண்கிறோம். நான் என்னும் பெருமைச் சிந்தை மனுஷனை கடவுளைவிட்டுப் பிரித்துக் கெடுத்தது மெய்யானால், இனி நான் அல்ல, பிதாவாகிய கடவுளே எனக்கெல்லாம் என்னும் தாழ்மையான சிந்தையே மனுஷனை ரட்சிக்கும். தேவராஜ்யத்தின் குமாரர் குமாரத்திகளிடம் இருக்கவேண்டிய பிரதான லட்சணம் மனத்தாழ்மையே.

ஆண்டவர் ஜீவியத்தில் மனத்தாழ்மை சிறந்து விளங்குவது மாத்திரமல்ல, அவர் போதனையில் மனத்தாழ்மையின் அவசியம் வற்புறுத்தப்பட்டது மாத்திரமல்ல, அவர் கடைசியாகப் பட்டபாடுகளில் மனத்தாழ்மையின் பரிபூரணத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். சாந்தமுள்ள தேவாட்டுக்குட்டியாகிய அவர், கெத்சமெனேதொடங்கி கல்வாரிச் சிலுவை வரையில் அடைந்த பாடுகளும், அவமானம் நிந்தையும், சித்திரவதைகளும் புத்தியால் கிரகிக்கவோ, நாவால் விவரிக்கவோ முடியாது. இதைக் குறித்து அப்போஸ்தலன்: "மரண



பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் அவர் தம்மைத் தாமே தாழ்த்தினார்" என்று சொல்லுகிறார். ஆண்டவர் சர்வசக்தியுள்ளவராயிருந்தும் பதிலுக்குப் பதில் செய்யாமல், சகல பாடுகளையும் விபரீதங்களையும் அவ்வளவு பொறுமையோடு சகித்துக்கொண்டதற்கு இரகசியம் அவருடைய மனத்தாழ்மையே. ஆகையால் பிதா அவரைச் சர்வத்திற்கும் மேலாக உயர்த்தி, அவரே ஆண்டவரும் கர்த்தருமானவரென்று ரூபித்துக் காண்பித்தார். "தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று ஆண்டவர் சொன்ன சத்திய வாக்கு முதலில் அவருக்கே பலித்தது.

## V. அப்போஸ்தலர் போதனையில் மனத்தாழ்மை.

ஆண்டவர் ஜீவியத்திலும் அவர் உபதேசத்திலும் பிரதானமாக விளங்கின மனத்தாழ்மையை அவரது அடியார் மறக்கமுடியுமா? பவுல் எழுதின நிருபங்களிலெல்லாம் மனத்தாழ்மையைப்பற்றி முக்கியமாய்ப் பேசியிருக்கிறார். "நீங்கள் மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள் அதாவது தாழ்மைப்படுங்கள்" என்பதாக பேதுரு எழுதுகிறார். "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்; கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று யாக்கோபு எழுதுகிறார். "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்" என்று நமது ஆண்டவர் போதித்த போதனை அப்போஸ்தலர் மனதில் ஆழமாய்ப் பதிந்தது என்பதின் உண்மையை நிருபங்களில் காணலாம்.

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் **எதிர்த்து நிற்கிறார்.** இது எவ்வளவு பயங்கரம்! அவர் நமக்கு எதிர்த்து நிற்பதானால் நாம் பிழைப்பதெப்படி? நமது காரியங்கள் நமக்கு அனுகூலமாய் முடிவ

தெப்படி? அன்புள்ள பிதா நம்மை எதிர்ப்பாரா? நாம் அவருக்கு ஒரு எதிரியா? இதன் கருத்தென்ன? கடவுள் மனுஷனைப் பகைக்கிறவரல்ல. அவர் நம்மை கெடுக்க விரும்புகிறவரல்ல. ஆனால் பெருமை நம்மை கடவுளைவிட்டுப் பிரித்து, அவருடைய ஆசிர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளக் கூடாதபடி செய்கிறது. நமது இருதயத்தில் நான் என்பவன் ஆளுகை செய்யும்போது பரமபிதாவுக்கு உள்ளத்தில் இடமில்லை. நான் என்பவன் கடவுளுக்கு விரோதி. அவர் இருக்கவேண்டிய ஆசனத்தில் அவன் இருப்பதை அவர் சகிக்கமாட்டார். ஏனென்றால் "என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடேன்" என்று அவரே சொல்லியிருக்கிறார். தூதர்கள் மேன்மையிலிருந்து தள்ளப்பட்டதும், மனுஷன் பரதீஸின் பாக்கியத்தைவிட்டுத் துரத்தப்பட்டதும் இந்தப் பெருமையினாலேயே. தனக்கு ஜீவனை கடவுளை இழந்த மனுஷன் சமாதானத்தைக் காணமாட்டான். அவன் உள்ளத்தில் இடைவிடாத போராட்டமே இருக்கும். கடவுளும் தமது வாசஸ்தலமாகிய நமது இருதயத்தைத் திரும்பக் கைப்பற்றுகிறவரை சும்மா இருக்கமாட்டார். எந்த விதத்திலாவது நான் என்பவனைத் தகர்த்துத் தமது ஆளுகையை உள்ளத்தில் ஸ்தாபிக்கப் போராடுவார். அதுவே இப்போது நடக்கிற காரியம். பெருமைக்காரர் படும் பாடுகளுக்கும் சீரழிவிற்கும் காரணம் இந்தப்போராட்டமே. நான் ஒன்றுமில்லை சுவாமி என்று மனுஷன் புலம்பும் வரையில் அவனை ஒரு கை பார்ப்பார். ஆம், கடவுள் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் என்பது உண்மையே. நேபுகாத்நேச்சார் என்பவன் தன்னை உண்டு பண்ணினவரும் தனக்குச் சகல மேன்மைகளையும் அளித்தவருமான கடவுளைப் புறக்கணித்து, நான் என்னும் விக்கிரகத்தை இருதயத்தில் ஏற்றி வணங்கினான். "இது நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" என்றான். அடுத்த நிமிஷத்தில் வனத்தின் மிருகங்களோடு புல்மேயும்படி கடவுள் அவனைத் தாழ்த்தினார். அவனுக்குப் புத்திதெளிந்து, நான் என்பவனை அகற்றி, கடவுளை உயர்த்தினபோது மேன்மையடைந்தான். பெருமைக்காரருக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறார்.



பெருமை நமக்குப் பிறப்புரிமையாகிவிட்டது. அது எவ்வாறு நம்மை ஆளுகிறதென்பதை முதலாய் நாம் அறியாதிருக்கலாம். பெருமைக்குத் தப்பின மனுஷன் இல்லையென்பது நிச்சயம். சிலரிடம் பகிரங்கமாகவும், சிலரிடம் அந்தரங்கமாகவும் அது ஆளுகிறது. உலகத்தை வெறுத்த சந்நியாசியிலுங்கூட தான் எல்லாம் வெறுத்தவன் என்கிற எண்ணம் பெருமையாகும். அப்படியானால் மற்றவர்களைக் கேட்பானேன்? பெருமை கணக்கற்ற விதமாய் ஆண்கள், பெண்கள், பிள்ளைகளை ஆளுகிறது. சிலருக்குள் அது மறைந்திருந்தாலும் சமயம் வாய்க்கும்போது அது வெளிப்படும். மற்றவர்கள் நம்மை எந்தக் காரியத்திலாவது குறைவாய் நினைப்பது நமக்குப் பிரியமில்லை. அவர்கள் நம்மை அவமானமாய்ப்பேசுவது நமக்குத் துக்கத்தையும், புகழ்ச்சியாய்ப் பேசுவது நமக்கு மகிழ்ச்சியையும் கொடுக்கும்போது, பெருமையின் உணர்ச்சியை அது வெளிப்படுத்துகிறது. உலகத்தின் மேன்மை, தாழ்வு நம்மில் பலமாய்க் கிரியை செய்யும்போது நான் என்னும் பெருமையாகிய உணர்ச்சி இன்னும் நீங்கவில்லை.

மேலும், நம்மைக் குறித்தும் நமக்குள்ளவைகளைக் குறித்தும் பெருமை பாராட்டுவது நியாயமல்ல. நம்மையும் நமக்குள்ளவைகளையும் நாம் சிருஷ்டித்தவர்களல்ல. நம்மை உண்டாக்கினவரும் நமக்குள்ளவைகளைக் கொடுத்தவரும் கடவுள். பெருமை அவருக்கே உரியது. நாம் பெற்றுக்கொண்ட ஈவுகளுக்காக கடவுளை ஸ்தோத்திரித்து அவரையே மகிமைப்படுத்தவேண்டியது. இவ்வளவு யோசனையில்லாமல் பெருமைக்கு இடங்கொடுத்து கடவுளால் தாழ்த்தப்படப்போகிறோம். "உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் அதாவது தானே உண்டாக்கிக்கொண்டவன்போல் என் பெருமை பாராட்டுகிறாய்? (1. கொ. 4: 7) சரீர பலமோ, அழகோ, கல்வியோ, செல்வமோ, உத்தியோகமோ, காரியங்களை நடத்தும் திறமையோ, என்னவானாலும் கடவுள் கொடுக்க நாம் பெற்றுக்கொண்டவைகளே. மகிமை அவருக்குரியதே யன்றி நமக்குரியதல்ல. இவைகள் மூலமாய் நமக்

குப் பெருமை உண்டாகும்போது தேவன் நமக்கு எதிர்த்து நிற்கிறார். இவைகள் நாம் அறியாத விஷயங்கள் அல்ல. தாழ்மையின் பாக்கியத்தையும், பெருமையின் கேட்டையும் நாம் அறிந்துகொள்ளும்படி கடவுள் திருஷ்டாந்தங்களை நமது கண்முன் வைத்திருக்கிறார். "உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த விருட்சத்தை உயர்த்தினேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசேக். 17 : 24). கோலியாத்தைத் தாழ்த்தி தாவீதை உயர்த்தினார். ஆமானைத் தாழ்த்தி மொர்தெகாயை உயர்த்தினார். பரிசேயனைத் தாழ்த்தி ஆயக்காரனை உயர்த்தினார். சாதாரணமான நிலைமையிலிருக்கும் மனுஷர் மேலான பதவியடைந்து, சிறுமை நீங்கிச் செல்வம் வந்தவுடனே தங்களை முற்றிலும் மறந்துபோகிறார்கள். அவர்கள் நடையும், பார்வையும், சத்தமும், கைவீச்சும் வித்தியாசப்படுகின்றன. முந்தின சிநேகிதர்களைக் கண்டால் இனம் தெரியவில்லை. ஐயோ, இது என்ன பரிதாபம்! இவர்கள் வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்கள் என்று நாம் நினைக்கிறதில்லை. அந்தஸ்து, பணப்பெருக்கத்தாலுண்டான மயக்கம் இது! இந்த மயக்கமும் நீங்கி சுயபுத்தி வருவதற்கும் நாட்செல்லாது. எல்லாரையும் குறித்து இப்படிச் சொல்லமுடியாது. சிலர், எவ்வளவு உலக மேன்மையடைந்தாலும் சற்றும் கர்வமடையாமல் எப்பொழுதும்போலவே தாழ்மையாய் இருக்கிறார்கள். இந்தத் தாழ்மையுள்ள சிந்தை கிறிஸ்துவால் அவர்களுக்குக் கிடைத்தது. "தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்" என்பது நிச்சயம். ஏனென்றால் பெருமையுள்ளவர்களுக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறார்.

## VI. மனத்தாழ்மையின் பாக்கியம்.

மனத்தாழ்மை என்பது நாம் முன்னே கவனித்தபடி இழிவல்ல, கோழைத் தனமல்ல. சிருஷ்டி தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இருப்பது மனத்தாழ்மையாகும். சர்வ சிருஷ்டிப்பும் சிருஷ்டிகரைச் சார்ந்து, அவரால் நடத்தப்படுகின்றன. ஆனால் கடவுள் அவைகளை நடத்துகிற மாதிரி மனுஷனை நடத்தமுடியாது. மனுஷனுக்குச்



சுயாதீன சித்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அறிவு உணர்வு இல்லாத மற்றச் சிருஷ்டிப்புகளை அவைகள் அறியாமலே அவர் ஆண்டு நடத்துவதுபோல மனுஷனை நடத்துவது ஒருக்காலும் சரியல்ல. மனுஷன் தானே தன் ஒன்றுமில்லாமையை உணர்ந்து, சிருஷ்டிகர்த்தருக்குத் தன்னைக் கையளித்து, அவர் தன்னை ஆண்டு நடத்தும்படி, அவரைச் சார்ந்து பிழைப்பதே மனத்தாழ்மையாகும். மனத்தாழ்மையின் ஜீவியம் எப்படிப் பட்டதென்பதை நமது ஆண்டவர் நமக்குக் காண்பித்திருக்கிறார். அவரைப்போல நாமும் பிதாவை முற்றிலும் சார்ந்து பிழைப்போமானால் அதுவே நமக்கு மனத்தாழ்மையாகும். இவ்வாறு நாம் மனத்தாழ்மையுள்ளவர்களாய்ப் பிழைக்கும்போது பரமபிதா நம்மைச் சகலவிஷயத்திலும் ஆசீர்வதித்து நடத்துகிறார்.

நமது பாவத்தினிமித்தம் இருதயம் நொறுங்குண்டு ஆண்டவர் பாதத்தில் நம்மைத் தாழ்த்தும்போது, அவர் கிருபையாய் நமது பாவங்களை நமக்கு மன்னித்து நம்மை நீதிமான்களாக்குகிறார். இதற்கு ஆயக்காரன் பரிசேயன் உவமை நமக்கு ஆதாரம். தேவசமுகத்தில் தன்னைத் தாழ்த்தி, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்த ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டு வீட்டுக்குத் திரும்பினான். பெருமைக்காரப் பரிசேயனோ அவர் சந்நிதானத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டான். மனத்தாழ்மையுள்ள ஆயக்காரனுக்கு தேவன் பாவமன்னிப்பு அளித்தார்.

பாவிகளுக்கு மாத்திரமல்ல பரிசுத்தவான்களுக்கும் மனத்தாழ்மை அவசியம். முன் கவனித்தபடி சிருஷ்டியின் பாக்கியமான நிலைமையே மனத்தாழ்மை. கிறிஸ்து பாவமற்றவராயிருந்தும் மனத்தாழ்மையுள்ளவராயிருந்தார். ஆவியினால் நிறைந்த யோவான் ஸ்நானகன் மனத்தாழ்மையுள்ளவராயிருந்தார். பரத்தின் பரிசுத்த தூதர்கள் மனத்தாழ்மை யுள்ளவர்களாக யிருக்கிறார்கள். சிருஷ்டிகளை கடவுளோடு இணைப்பது மனத்தாழ்மை. அதாவது நான் என்பவன் ஆளாமல் கடவுளே நமது உள்ளத்தில் ஆளுகைசெய்வது மனத்தாழ்மை. தேவனுடைய பிள்ளைகள் மேலும் மேலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு மனத்தாழ்மை அவர்களுக்கு எப்பொழுதும் அவசியம்.

மனத்தாழ்மையுள்ளவர்களை கர்த்தர் உயர்த்துகிறார். இந்த உயர்வு உலகத்தின் மேன்மையையும் ஐசுவரியத்தையும் குறிக்காது. "உலகத்தில் மேன்மையாய் எண்ணப்படுகிறவைகள் கர்த்தருக்குமுன்பாக அருவருப்பாயிருக்கின்றன". ஆகையால் இந்த உயர்வு உலகமேன்மையல்ல. கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு அவசியமான உலக நன்மைகளைக் கொடாதிரார். மனத்தாழ்மையுள்ளவர்கள் கிறிஸ்துவுடனேகூட உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். பரமபிதா அவர்களில் வசிப்பதே அந்த உயர்வு. அவர் தமது ஆசீர்வாதங்களால் அவர்களை நிரப்ப, அவர்கள் அவரது ராஜ்யத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறார்கள். மனுஷரால் அற்பமாய் எண்ணப்பட்ட யோவான்ஸ்நானகன் கடவுள் பார்வையில் பெரியவனாயிருந்தார். கடவுளால் வரும் உயர்வை உலகம் அறியாது.

தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். கிருபையின் மாட்சிமையை விஸ்தரிக்க யாரால் கூடும்? சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று கிருபையே. தேவகிருபையில்லாமல் அரை நிமிஷம் நாம் பிழைப்பதெப்படி? இதை அறிந்தல்லவா சங்கீதக்காரன்: "ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது" என்றார். என்னை வேதனைப்படுத்தும் முள்ளை நீர் எடுக்காவிட்டாலும் உமது கிருபை ஒன்றே எனக்குப் போதும் என்று பவுல் சொன்னார். "சுவாமி உன்றன் கிருபைக் கடையமே" என்று சாஸ்திரியார் பாடினார். கிருபை என்னும் வார்த்தை வரும் வாக்கியங்களை வேதத்தில் ஆராய்ந்து படித்தால் அதன் ஆச்சரியம் விளங்கும். பள்ளங்களில் மாத்திரம் தண்ணீர் நிறைவதுபோல அவருடைய கிருபையின் ஐசுவரியம் மனத்தாழ்மையுள்ளவர்களுக்கே அளிக்கப்படும். எல்லாம் நமக்கு விரோதமாய்த் தோன்றும் காலத்தில் அவர் கிருபை ஒன்றே நமக்கு ஆதரவு. இவை யாவும் மனத்தாழ்மையுள்ளவர்களின் பாக்கியமாகும்.

## VII. மனத்தாழ்மை எப்படிக் கிடைக்கும்?

மனத்தாழ்மை போதனையைக் கேட்பதினால் மாத்திரம் வராது. மனத்தாழ்மையைப்பற்றிய இந்தப் பிரசங்கத்தைப் படிப்பதால் மாத்திரம் வராது. ஆண்டவர் தமது சீஷர்களுக்குக் கடைசிவரை பெரு



மையால் வரும் கேட்டையும், தாழ்மையால் வரும் பாக்கியத்தையும் எவ்வளவோ திருஷ்டாந்தங்களோடே தெளிவாய்ப் போதித்தார். அவர்களும் அவரை நேசித்து அவர் போதித்தபடி நடக்கும்படி விரும்பினார்கள் என்றாலும் பெருமை கடைசிவரை அவர்களைவிட்டு நீங்கவில்லை. போதனை மாத்திரமா? அவரே அவர்கள் கண்களுக்கு முன்பாக "சாந்தமும் மனத்தாழ்மையும்" உள்ளவராய், சிறந்த மாதிரியாக அவர்கள் நடுவில் சஞ்சரித்தார். அந்த மாதிரிப்படி நடக்க அவர்கள் பிரயாசப்பட்டும் கடைசிவரை பெருமை அவர்களைவிட்டு நீங்கவில்லை. அநேக சிறந்த காரியங்கள் அவர்களில் இருந்தன. அவர்கள் எல்லாவற்றையும் விட்டு அவர் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின் சென்றார்கள். எத்தனையோ கஷ்டங்களைச் சகித்து அவர் கொடுத்த வேலைகளைச்செய்தார்கள். அப்படியிருக்க ஆண்டவர் தாழ்மையைப்பற்றிப் போதித்ததையும், அவர் காண்பித்த மனத்தாழ்மையின் மாதிரியையும் குறித்து அவர்கள் அசட்டையாய் இருந்தார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. மனத்தாழ்மை போதனையால், மாதிரியால் வருவதல்ல. அது மனத்தாழ்மை. மனுஷரிடத்தில் முகத்தாழ்மை, வாய்த்தாழ்மை, தொனித்தாழ்மை, தோற்றத்தாழ்மை காணப்படுவதுண்டு. கொஞ்சம் அவர்களைத் தீண்டினால் உள்ளே மறைந்திருக்கும் பெருமை இடிமுழக்கம்போல் வெளியே புறப்படும். ஆண்டவர் போதித்தது மனத்தாழ்மை. அது மனதில் உண்டாகி புறம்பே காணப்படவேண்டியது.

இந்த மனத்தாழ்மை சீஷர்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஆண்டவர் அவர்கள் பெருமையை அல்லது நான் என்னும் அகங்காரத்தைத் தமது சிலுவையால் நொறுக்கி, அவர் உயிர்த்தெழுந்த புதிய ஜீவனை ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் அனுப்பி, மனத்தாழ்மையை அவர்களில் உண்டாக்கினார். அதை வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால், மனத்தாழ்மையுள்ள ஆண்டவர், மகிமையடைந்தபின், தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து, தாமே அவர்கள் மனத்தாழ்மையானார். "இனி நாங்கள் அல்ல, மனத்தாழ்மையுள்ள கிறிஸ்துவே எங்களில் பிழைக்கிறார்" என்று சொல்லக்கூடிய

வர்களானார்கள். தங்கள் ஒன்றுமில்லாமையை உணர்ந்து கிறிஸ்துவின் மூலம் பிதாவோடு ஐக்கியப்பட்டு, அவரையே சார்ந்து பிழைக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். இவ்வாறு மனத்தாழ்மையை அவர்கள் ஈவாகப் பெற்றதுமன்றி, ஆண்டவர் அவர்களை உலகத்தில் நடத்தின மாதிரியாலும் அவர்கள் மனத்தாழ்மையை உடைபோல் அணிந்துகொள்ளவும் ஏதுவாயிற்று. எப்படி பொறுமைக்குணம் தானாய் வராமல், சகலவித பாடுகளையும் நாம் சகிக்கச்சகிக்க அந்தப் பொறுமைக்குணம் நமக்குச் சொந்தமாகிறதோ, அதேபோல, மனத்தாழ்மையும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் நமக்குக் கிடைத்தபோதிலும், நம்மைச் சிறுமைப்படுத்தும் வழியில் நாம் நடத்தப்படும்போது, தேவனுடைய பலத்த கரத்திற்குள் நாம் அடங்குவதால், மனத்தாழ்மை நமக்குச் சொந்தக்குணமாகிறது. ஆண்டவரின் மனத்தாழ்மை அவரடைந்த அவமானம் நிந்தைகள் மூலமாகப் பூரணப்பட்டது. அந்த வழியை நாம் மறந்துவிடக்கூடாது. மனத்தாழ்மையுள்ள ஆண்டவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால் மனத்தாழ்மை நமக்குள் வருகிறது. ஆனால் ஆண்டவர் பலவிதமான பாடுகள் அவமானங்கள் வழியாக நம்மை நடத்தும்போது, உள்ளே ஈவாக நாம் பெற்றுக்கொண்ட மனத்தாழ்மை, நமது ஜீவியத்தில் அதாவது நமது அனுபவத்தில் பலிதப்படுகிறது. ஆகையால் நிந்தை அவமானங்களைக் குறித்து நாம் கலங்கக்கூடாது. மேலும் நமது சொந்தப் பாவங்கள் தவறுதல்கள் நம்மில் சோர்வை உண்டாக்காமல் இன்னும் அதிக மனத்தாழ்மையை நம்மில் உண்டாக்குவதற்கு ஏத்தனங்களாக்கிக் கொள்வோமாக. கிறிஸ்து நமக்குள் இடைவிடாமல் வசிப்பதால் அவரிலிருந்த மனத்தாழ்மையாகிய சிந்தை நம்மிலும் காணப்படும்.

---

# XII
# The Death of Christ
# கிறிஸ்துவின் மரணம்

"எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" 2. கொ. 5:14.

மரணம் பயங்கரமான சத்துரு. மனுஷன் எதை இழந்தாலும் தன் உயிரை இழக்கச் சம்மதிக்கமாட்டான். ஆகையால் ஒருவன் தன் உயிரைக் கொடுக்கக் கூடிய அன்புக்கு நிகரான அன்பு இல்லையென்று ஆண்டவரும் சொன்னார். மனுக்குல மனைத்துக்கும் மரணம் என்றால் கொடிய திகில்தான். என்ன நேரிட்டபோதிலும் ஊரை விட்டு நீங்காதவர்கள், கொள்ளைநோய் வந்து குடும்பங்கள் சாவதைக் கண்டால் நெடுங்காலம் வாழ்ந்த கிராமத்தைவிட்டு ஓடிப்போவார்கள். பணமிழந்தால் திரும்பச் சம்பாதிக்கலாம். உத்தியோக மிழந்தால் வேறொன்றைத் தேடலாம். சுக மிழந்தால் சுகப்படுத்திக்கொள்ளலாம். உயிர்போன பின் மனுஷன் என்ன செய்வான்? ஆகையால் குடும்பங்களில் சாவுநேரிட்டால் மக்கள் படும்பாடு கொஞ்சமல்ல. அவர்கள் அழுது புலம்புவதையும் முட்டிமோதுவதையும் யார் தடுக்க முடியும்? இருதயத்தின் தவிப்பு இருதயத்திற்கே தெரியும். 'போனது போயிற்று, அழுதால் இனிவரப்போகிறதா' என்னும் ஞான உபதேசம் அச்சமயத்தில் பலிக்காது. மரண கஷ்டம் சகிக்கவொண்ணாத கஷ்டம். அன்புக்குரிய கணவர் மரிக்கக் கூடவே மரித்த மனைவிகள் உண்டு. கூடவே மரிக்காவிட்டாலும் ஆறாத்துயரத்தில் அமிழ்ந்து, பட்டினியாய்க் கிடந்து, அகாலமரணமடைந்தவர்கள் பலர். மரணத்துக்கொப்பான கஷ்டமும் துக்கமும் வேறில்லை.

## 1. மரணம் என்றால் என்ன?

மனுஷனுடைய ஆவி அவன் சரீரத்தைவிட்டு நீங்குவதைச் சாவு என்று எல்லா மனுஷரும் அழைக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய

நாமுங்கூட அதே வார்த்தையையே உபயோகித்து வருகிறோம். ஒருவர் நோயினாலோ விருத்தாப்பியத்தினாலோ தேகத்தைவிட்டுப் போய் விடுவாரானால் இன்னார் மரித்துப்போனாரென்றே நோட்டீஸ் அனுப்புகிறோம். எல்லா மனுஷரும் பேசுகிறபடியே நாமும் பேசுகிறோம். எல்லா மனுஷரும் துக்கிக்கிறபடியே நாமும் துக்கிக்கிறோம். மறுமையைப்பற்றிய நம்பிக்கை நமக்கிருந்தபோதிலும் இந்தத் துயரமான சமயத்தில் அந்த நம்பிக்கை மங்கி மறைந்துபோகிறது. நம்மைவிட்டுப் பிரிந்துபோகிறவர்கள் வேதனை பாடுகளில்லாத ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறார்களென்றும், சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவிடம் போயிருக்கிறார்களென்றும் மற்ற நேரங்களில் நாம் சந்தோஷமாகப்பேசி மோட்ச கீதங்கள் பாடினபோதிலும், நமக்கு அருமையானவர்கள் நம்மை விட்டுப் பிரியும் வேளை வரும்போது சகலமும் மாறிப்போகிறது. அவர்கள் மகிமையில் பிரவேசித்து கிறிஸ்துவிடம் போயிருக்கிறார்கள் என்பதற்காகவே நாம் அழுது புலம்புகிறதுபோல் தோன்றுகிறது. அவர்கள் ஆண்டவரிடத்தில் போயிருக்கிறார்கள் என்பதற்காக நாம் அழுகிறதில்லை என்பது வாஸ்தவமானாலும், நம்மை விட்டுப் போய்விட்டார்களே, இனி அவர்களைப்பார்த்து அவர்களோடு பேசமுடியாதே, அவர்களும் நம்மோடு பேசமுடியாதே என்பதை நினைத்தே அழுகிறோம். என்றாலும் அவர்கள் கர்த்தரிடம் போனதற்காக நாம் அழுகிறதுபோலவே தோன்றும்.

தேவ கிருபையால் நமது எண்ணங்களும் விருப்பங்களும் வேறு விதமாய் மாறவேண்டியதிருக்கின்றன. நாம் பூமிக்குரிய காரியங்களில் அதிகப்பற்றுவைத்து, நமக்கருமையானவர்கள் கடவுளைப்பார்க்கிலும் நமக்கே அதிகச் சொந்தம்போல் உரிமை பாராட்டி நேசித்து, இப்பூமியையே நமது நித்திய குடியிருப்பாகவும், அதன் இன்ப சந்தோஷங்களை நமது அனுபவமாகவும் பாவித்து நடக்கும்போது, அவர்கள் நம்மை விட்டுப் பிரிவது மரணமாகவும் தாங்கமுடியாத துயரமாகவும் இருக்கும் என்பது நிச்சயம். இங்கிருக்கும் காலத்தில் நாமும் நமக்குச்சொந்தமானவர்களும் கிறிஸ்துவுக்குள் பிழைத்து, பரத்தை நமது குடியிருப்பாக்கி, ஆவிக்குரிய அந்த ராஜ்யத்திற்காக நம்மை



தோறும் ஆயத்தஞ்செய்துகொண்டுபோவோமானால், அருமையானவர்கள் நம்மைவிட்டுப் பிரிவது சாவாயிராமல் அவர்கள் அன்புள்ள பிதாவின் வீட்டுக்குப் பிரயாணம் போவதாயிருக்கும். அவர்கள் பிரிவால் நாம் துக்கித்துக் கண்ணீர் சிந்தினபோதிலும், மறுமையின் நிச்சயமில்லாத மற்றவர்களைப்போல் நாம் ஆறாத்துயரத்தில் அமிழ்ந்து போகமாட்டோம். நாம் கண்ணீர் சிந்துவதற்காக ஆண்டவர் ஒருக்காலும் நம்மைக் கடிந்துகொள்வதில்லை. ஏனென்றால் நமது உள்ளத்தின் நம்பிக்கை அவருக்குத் தெரியும். சிலுவை சுமந்த ஆண்டவர் எருசலேம் குமாரத்திகளைப்பார்த்து: நீங்கள் எனக்காக அழவேண்டாம் என்றதுபோல, பாக்கியமான இடத்துக்குப் போனவர்களுக்காக நாம் அழாமல், அவர்கள் நம்மோடில்லையே என்கிறதற்காகவே அழுகிறோம். இது இயற்கை. பில்லி பிரே என்பவர் தன் மனைவி ஆவி பிரிந்தவுடனே, ஆ, என் அருமை மனைவி ஆண்டவரிடம் போயிருக்கிறாளே, அங்கே என்ன சந்தோஷம்! என்ன ஆனந்தம்! என்று அவள் கட்டிலைச் சுற்றி ஆடிப் பாடினதுபோல, நாம் அழுகையை நிறுத்தி ஸ்தோத்திர கீதம் பாடக் கூடுமானால் அதற்கு நிகரான விசுவாசம் இல்லை. ஆனால் கிறிஸ்துவின் சமுகம் நமக்கு அவ்வளவு பிரத்தியக்ஷமாகாததினால் நாம் கலங்கித் தவிக்கிறோம்.

ஒரு காரியம் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மனுஷருக்குள் மரணம் என்பது மகா பயங்கரமும் துக்கமுமான விஷயம். இன்னார் மரித்தாரென்றால் எல்லாரும் அதைக் குறித்துக் கவலையோடு பேசிக்கொள்வார்கள். மரணம் நமக்குள் இவ்வளவு பெரிய சம்பவமாகக் கருதப்படும்போது, ஆண்டவர் தமது போதனைகளில் அதைப்பற்றி ஒன்றுமே பேசாமல் விட்ட காரணமென்ன? அவர் மரணமென்றும், மரித்தோர் என்றும் பேசியிருக்கிறார். ஆனால் அதன் கருத்து வேறே என்பது பிரத்தியக்ஷம். நாம் மரணம் என்று சொல்வதை ஆண்டவர் மரணம் என்று சொல்வதில்லை. மரணத்தை அவர் நித்திரையென்றே அழைக்கிறார். அவர் யவீரின் வீட்டில் நுழைந்தபோது அங்கே அழுது புலம்புகிறவர்களைக் கண்டு: ஏன் இப்படி அழுகிறீர்கள்? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவர்களெல்லாரும்

அவரைப் பைத்தியகாரனென்றே நினைத்தார்கள். பிரத்தியக்ஷமாய்த் தங்கள் கண்கள் காண பிள்ளை மரித்திருக்கும்போது, அது நிச்சயமாயிருக்கும்போது, பிள்ளைக்குப் பேச்சு மூச்சில்லாதிருக்கும்போது, பிள்ளை மரிக்கவில்லை, நித்திரைசெய்கிறது என்று சொன்னால் யார்தான் பரியாசஞ் செய்யாதிருப்பார்கள்? லாசரு மரித்து, அடக்கமாகி, நாலு நாளுமாகிவிட்டது. லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்று ஆண்டவர் சொன்னார். அவன் வியாதியாயிருந்ததை அறிந்திருந்த சீஷர்கள் அவரைப் பார்த்து அவன் நித்திரைசெய்தால் சுகமாவான் என்று நாம் சொல்லுகிறது போலவே அவர்களும் சொன்னார்கள். காரியம் அறியாமல் பேசுகிறார்கள் என்று ஆண்டவர் அறிந்து, நாம் உபயோகிக்கிற தப்பிதமான வார்த்தையையே அவரும் அவர்கள் நிமித்தம் உபயோகித்து "லாசரு மரித்துப்போனான்" என்றார். உடனே அதை அறிந்துகொண்டு விசனப்பட்டார்கள். ஜீவனாவது என்னவென்று கேட்டால் உடனே நமது சரீரத்தையே நினைக்கிறோம். மரணமாவது என்னவென்று கேட்டால் உடனே ஜீவனில்லாத ஒரு சரீரத்தையும், பிரேதப்பெட்டியையும், கல்லறையையும் நினைக்கிறோம். ஆகவே ஜீவனாவது என்னவென்பதையும், மரணமாவது என்னவென்பதையும் நாம் சரியானபடி கிரகித்துக்கொண்டவர்களல்ல. ஜீவன் என்பதும் மரணமென்பதும் நமது அறிவுக்கு எட்டாமலேயிருக்கிறது. நமது சரீரமும் நம்மைச்சூழ்ந்திருக்கும் சகல காரியங்களும், நாம் அனுபவிக்கும் நன்மைகளும், மறைவான மெய்யான நிலையான நித்தியகாரியங்களுக்குப் புறம்பான அடையாளங்களாகும். அநேக காரியங்களில் நமது அறியாமையைப் போக்கி உண்மையை வெளிப்படுத்தின ஆண்டவர், மரணம் என்னும் விஷயத்தின்பேரில் போதிப்பதற்கு நாம் செவிகொடுக்கவேண்டும். அவர் போதிப்பது நமது வழக்கத்துக்கு விரோதம்போல் தோன்றினாலும், அதை ஏற்றுக்கொள்வது நமக்குக் கஷ்டம்போலிருந்தாலும், சத்தியபரனாகிய ஆண்டவரிடத்தில் கற்றுக்கொள்ளும் வாஞ்சை நமக்கிருக்கவேண்டும். அவர் வாக்கை நம்புவதாலேயே மரணத்தின் பயமும் கசப்பும் நீங்குகிறது. நாம் மரணமென்று



அழைப்பதை அவர் நித்திரையென்று அழைப்பதாலே நாமும் அதை நித்திரையென்றே சொல்லவேண்டும். அவர் சரீரத்தைவிட்டு ஆவி நீங்குவதை நித்திரையென்று சொன்னபடியால், மரணம் என்பதே இல்லை என்று நாம் நினைக்கக்கூடாது. பாவத்தின் சம்பளமாகிய மரணம் இருக்கவேயிருக்கிறது. அது மகா பயங்கரமானது, மகாகொடியது. அந்த மரணம் எப்படிப்பட்டதென்பதை கிறிஸ்து ஒருவரே அறிவார். ஏனென்றால் அவர் ஒருவரே அந்த மரணத்தை ருசி பார்த்தவர். அத்துடன் போராடினவர். அதை மேற்கொண்டு வெற்றிபெற்றவர். "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" (2. கொ. 5. 14). சரீரத்தைவிட்டு ஆவி பிரியும் அனுபவத்தை அவர் மரணமென்று ஒப்புக்கொள்ள மாட்டார். அப்படியானால் ஆண்டவர் கருத்துப்படி, அவர் அனுபவத்தின்படி மரணமாவது என்னவென்று சற்று சிந்திப் பார்ப்போம்.

## II. மரணத்திலிருந்து நமக்கு ரட்சிப்பு.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து படிக்கும்போது பாவத்தால் மரணம் வந்ததென்றும், அந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்க கிறிஸ்து வந்தாரென்றும் அறிகிறோம். சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதே மரணமானால் ஆண்டவர் தம்மை நம்பின ஒருவரையும் அந்த மரணத்திலிருந்து ரட்சிக்கவில்லை என்றே சொல்லவேண்டியதாகும். ஏனென்றால் தேவமக்கள் யாவரும் சகல பரிசுத்தவான்களும் நமது கருத்தின்படி மரித்தே போனார்கள். ஆகையால் ஆண்டவர் நம்மை ரட்சிக்கும்படி வந்த மரணம் வேறே. சரீரத்தைவிட்டு ஆவி பிரிவது அந்த மரணமல்ல. சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதை ஆண்டவர் நித்திரை என்கிறார். ஆகையால் அவர் நம்மை நித்திரையிலிருந்து ரட்சிக்கும்படி வராமல், பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்தே ரட்சிக்க வந்தார். சரீரத்தை விட்டு ஆவி பிரிவதையே நாம் மரணம் என்று சொல்லுவோமானால் மரணத்தைப்பற்றி ஆண்டவர் கூறின வசனங்கள் குழப்பமாகும். திருஷ்டாந்தமாக இரண்டு மூன்று வசனங்களை மாத்திரம் நாம் எடுத்து ஆராய்வோம். "ஒருவன் என்

வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோ. 8: 51). அப்போஸ்தலர் ஆண்டவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளவில்லையா? ஆதிமுதற்கொண்டு பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும் அவர் வசனத்தைக் கைக்கொண்டு நடக்கவில்லையா? அவர்களெல்லாரும் நமது பாஷையின்படி மரித்துபோனார்களே. ஆனால் ஆண்டவரோ அவர்கள் ஒருவனும் மரணத்தைக் காண்பதில்லை என்றாரே. அவர்கள் சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோனதை நாம் மரணம் என்று சொல்வோமானால் ஆண்டவர் சொன்னது பொய்யாகுமே. ஆண்டவர் போதித்தபடி சரீரத்தைவிட்டு ஆவி நீங்குவதை நாம் நித்திரையென்று ஒப்புக்கொள்ளுவோமானால் ஆண்டவர் நம்மை ரட்சிக்கவந்த மரணம் வேறொன்றாக யிருக்கவேண்டும். இன்னொரு வசனம். "இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் மரிக்காமலிருக்கும்படி வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே." (யோ. 6 : 50). ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவை அனுதினமும் உட்கொண்டு பிழைக்கும் தேவபக்தர்கள் ஆதிமுதல் இருந்துவந்திருக்கிறார்களே. அவர்களில் யார்தான் நமது பேச்சுப்படி சாகாதிருந்தார்கள்? கிறிஸ்துவைத் தங்களுக்கு ஜீவனாக்கி நிமிஷந்தோறும் அவராலே பிழைத்த பவுல் யோவான் முதலானவர்கள் மரிக்காதிருந்தார்களா? அவர்கள் மரித்தார்கள் என்று சொல்வோமானால், அவர்கள் "மரிக்காமலிருக்கும்படி நான் வானத்திலிருந்து இறங்கின அப்பம்" என்று ஆண்டவர் சொன்ன வார்த்தை பொய்யாகுமே. ஆகையால் ஆண்டவர் போதனைப்படி அவர்கள் தேகத்தைவிட்டு நீங்கினதை நாம் நித்திரை என்று ஏற்றுக்கொள்வோமானால், அவர்கள் மரிக்கமாட்டார்கள் என்று ஆண்டவர் சொன்ன மரணம் வேறொன்றாயிருக்கவேண்டும். வேறொரு வசனம். "என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோ. 5 : 24.) இந்த வசனத்தை ஆராயும்போது, மனுஷன் ஏற்கனவே மரணத்துக்குட்பட்டி



ருக்கிறான் அதாவது மரித்திருக்கிறான் என்றும், அவன் ஆண்டவர் வசனத்தைக் கேட்டு அவரையும் அவர் மூலமாய் பிதாவையும் நம்பி ஏற்றுக்கொள்ளும்போது, தன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பிரவேசிக்கிறான் என்றும் தெளிவாய் அறிகிறோம். ஜீவனில் மரணமில்லை. அவன் நித்திய ஜீவனுக்குரியவனாகிவிட்டான். அவன் மரணத்துக்குரியவனல்ல. இதுவே ஆண்டவருடைய தெளிவான போதனை. இதன் உண்மையை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் அநேக வசனங்கள் உண்டு. இப்படியிருக்க தேவமக்கள் பரிசுத்தவான்கள் நோயாலோ அல்லது விருத்தாப்பியத்தாலோ பலவீனப்பட்டு அவர்கள் ஆவி தேகத்தை விட்டுப் பிரிந்துபோனால், உடனே இன்னார் மரித்துப்போனார் என்று எங்கும் நோட்டீஸ் அனுப்புகிறோம். இன்னார் மரிக்கவில்லை நித்திரையாயிருக்கிறார் என்று ஆண்டவர் யவீரின் மகளைக் குறித்துச் சொன்னதுபோல் நாம் சொல்லுவோமானால் அது எல்லாருக்கும் விகாரமாகத்தோன்றும். ஆகையால் ஆண்டவர் லாசருவைக்குறித்து: "அவன் மரித்துப்போனான்" என்று சீஷர்களினிமித்தம் சொன்னதுபோல நாமும் பேசவேண்டியதாயிருக்கிறது. வழக்கம் வல்லமையுள்ளது. அதை மாற்றிப்பேசுவது எவ்வளவோ கஷ்டம். கிறிஸ்துமூலம் வெளிப்பட்ட சத்தியத்தை நாம் ஏற்றுக்கொள்ளும்போது "சத்தியம் நம்மை விடுதலையாக்கும்." சரீரத்தைவிட்டு ஆவி பிரிவது நமக்கு மரணமாயிராமல் நித்திரையாகும். ஆண்டவர் நமது சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதாகிய நித்திரையிலிருந்து நம்மை ரட்சிக்க வராமல், பயங்கரமான கொடிய மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்க வந்தார். ஜீவனாகிய அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் மரண நிலைமையைவிட்டுநீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்களைக் குறித்து மரணம் என்று பேச இனி இடமில்லை. நித்திரை எல்லாருக்கும் உரியது. நல்லார் பொல்லார் யாவரும் நித்திரையடைவார்கள். ஆனால் எல்லாரும் மரிக்கமாட்டார்கள். கிறிஸ்துவைத் தங்களுக்கு ஜீவனாக்கி அவராலே பிழைக்கிறவர்களுக்கு இனி மரணம் இல்லை. அவர்கள் ஒருக்காலும் மரிக்கமாட்டார்கள். நித்திரை

மரணம் என்னும் இரண்டு வார்த்தைகளை நாம் இதுவரை உபயோகித்தபோதிலும், நித்திரையைப்பற்றி விஸ்தரித்தோமே யல்லாமல் மரணமாவது என்னவென்று இன்னும் நாம் பார்க்கவில்லை. அதை கிறிஸ்துவிலேதான் அறியக்கூடும்.

## III. கிறிஸ்து மரித்தார்

கிறிஸ்துவின் நிகரற்ற ஜீவியத்தையும் அவரது மேலான உபதேசத்தையும் போற்றுவார் அநேகர். அவரைக் குருவாக மதித்து அவர் நல்மாதிரியைப் பின்பற்றப் பார்ப்பவர் அநேகர். ஆண்டவர் ஜீவியத்தில் அவர் மரணமே பிரதானம். அவர் எவ்வளவு பரிசுத்தமாகப் பிழைத்தும், எவ்வளவு தெய்வீக உபதேசங்கள் செய்தும் மரிக்காமலே மறுமைக்குட் பிரவேசித்திருப்பாரானால் உலகத்துக்கு ரட்சிப்பில்லை. ஆகையால் அப்போஸ்தலன்: "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" என்றார். ஆகையால் கிறிஸ்துவின் ஜீவியத்தில் அவர் மரணமே பிரதானம். எல்லா மனுஷரும் பாவத்தால் மரணத்துக் குள்ளானவர்கள். அந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்கும்படி பாவமற்ற கிறிஸ்து நமக்காக மரணத்தை ஏற்றுக்கொண்டார். மரணமாவது என்னவென்பதை அவரிலேதான் அறியவேண்டும். நமக்கு அருமையானவர்கள் தேகத்தைவிட்டுப் போவதை நாம் மரணமென்று பேசுவது நமக்கு வழக்கமானபடியால் கிறிஸ்துவும் அவ்வாறே மரித்ததாக நினைக்கிறோம். ஆ, என் ஆண்டவர் எனக்காகச் சிலுவையிலறையப்பட்டு, ரத்தஞ்சிந்தி, வேதனையுற்று, தலை சாய்த்து மரித்தாரே என்று புலம்புகிறோம். அவர் சரீரத்தைவிட்டு ஆவி பிரிந்ததையே நாம் மரணமாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் விஷயத்தில் நித்திரை என்னப்படுவது அவர் விஷயத்தில் மாத்திரம் மரணமாகுமோ? சரீரத்தைவிட்டு ஜீவன் பிரிவதை அவர் மரணமென்று சொல்லாமல் நித்திரையென்று போதித்தாரே. அப்படியிருக்க மற்றவர்களுக்கு ஒருபோதனையும் தமக்கு ஒரு போதனையுமா? சத்தியமென்றால் எல்லாருக்கும் எக்காலத்திலும் சத்தியந்தானே. அப்படியிருக்க மற்ற-



வர்களுக்கு நித்திரையாயிருப்பது தமக்குமாத்திரம் மரணமாகுமா? ஆகையால் ஆண்டவர் தமது ஆவியை பிதாவின் கரத்தில் ஒப்புவித்தது அவருக்கு நித்திரையாகும். "கிறிஸ்து நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார்" என்று சொல்லியிருப்பதால் சிலுவையில் அவர் நித்திரை யடைந்தாரென்பதும் உண்மை. சிலுவையில் இரண்டு காரியங்கள் சம்பவித்தன. ஒன்று மரணம், மற்றது நித்திரை. மரணம் முந்தினது; நித்திரை பிந்தினது. அவர் மரணத்தை ஏற்றுக்கொண்டு அத்தோடு போராடி, அதன் கசப்பை ருசிபார்த்து, மரணத்தை மேற்கொண்டு வெற்றியடைந்த பின்பே தமது ஆவியைத் தமது பிதாவின் கரத்தில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். "முடிந்தது" என்று அவர் சொன்ன சொல்லானது, வியாதியால் அதிகக் கஷ்டப்பட்டு, சகலமும் ஒடுங்கி, ஆவிபிரியும் வேளையில், நோயாளி பெருமூச்சோடு சொல்லுகிற வார்த்தை போன்றதல்ல. சிலுவையில் தொங்கின ரட்சகர் இன்னும் பலத்தோடிருக்கும்போதே தாம் அடைந்த ஒரு வெற்றியைக் குறிக்கும்படி "முடிந்தது" என்று கர்ச்சித்தார். ஆகையால் ஏதோ ஒரு கொடிய போராட்டம் அதற்குமுன் அவருக்குள் நடந்திருக்கிறது. அந்தப் பயங்கரமான போராட்டத்தில் ஆண்டவர் வெற்றிபெற்றார். அந்தப் போராட்டமே மரணம். அவர் சரீரத்தில் பிழைத்திருக்கும்போதே மரித்து, தமது மரணத்தால் நமது மரணத்தை அழித்தார். அவர் நித்திரையடைவதற்குமுன் சிலுவையில் அனுபவித்த மரணத்தின் ரகசியத்தை நாம் பூரணமாய் அறியமுடியாது. ஆள் ரகசியமாயிருப்பதுபோலவே அவரடைந்த மரணமும் ரகசியமாயிருக்கிறது. அவர் ஒருவரே மரித்தபடியால் அவருக்கே அதன் ரகசியம் தெரியும். பாவமற்றவர் மரிக்கவேண்டுமானால் அது எப்படிப்பட்ட மரணம்? அதற்கு நிகரான மரணம் வேறில்லை. "கிறிஸ்துவே மரித்தவர்" (ரோ. 8: 34). "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" (2 கொ. 5. 14). "ஒவ்வொருவருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்" (எபி. 2: 9). "கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" (1. கொ. 15: 3). மேற்கூறிய வசனங்கள் எவ்வளவோ கருத்துள்ளவைகள். மரணமாவது என்னவென்பதை கிறிஸ்து ஒருவரே பூரணமாய் அறிச்-

தவர். அவர் ஒருவரே மரித்தவர். அவர் ஒவ்வொருவருக்காகவும் மரித்தவர். நமது பாவத்தின் பலனாகிய மரணத்தை அழித்து நமக்கு நித்திய ஜீவனை அருளும்படி மரித்தவர்.

## அந்த மரணமாவது என்ன?

ஆண்டவர் அடைந்த மரணத்தை நாம் பூரணமாய் அறியமுடியாவிட்டாலும், அவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளைக்கொண்டு ஒருவாறு அனுமானிக்கலாம். வியாழன் இரவு தமது சீஷரோடு அவர் பேசினபோது, பிதா தம்மோடு கூடயிருப்பதாகவும், பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டென்பதாகவும், தாம் பிதாவிடம் போவதாகவும், பிதா தம்மில் அன்பாயிருப்பதாகவும், தாம் பிதாவிலும் பிதா தம்மிலும் பூரண ஐக்கியத்திலிருப்பதாகவும் அமர்ந்த இருதயத்தோடும் உறுதியான நிச்சயத்தோடும் பேசினார். கெத்செமனே தோட்டத்தில் பிரவேசித்ததும் காரியமுழுவதும் வேறுவிதமாகக் காணப்படுகிறது. மகா தைரியமுள்ள ஆண்டவர், அற்புதமூர்த்தி, அஞ்சா நெஞ்சன், ஜீவநாயகன் அங்கே படும்பாடுகள் பிரமிக்கத்தக்கதாயிருக்கின்றன. அவரைப் பிடிப்பாரில்லை அடிப்பாரில்லை. சத்துருக்கள் இன்னும் அங்கே வரவில்லை. அப்படியிருக்க ஆண்டவர் படுங்கொடிய அவஸ்தைகளுக்குக் காரணமென்ன? காற்றையும் கடலையும் அதட்டி அமைதலுண்டாக்கினவர், பிசாசுகளைத் துரத்தினவர். உயிர்போனவர்களைப் பிழைக்கவைத்தவர் இச்சமயத்தில் பயந்து நடுங்குவதின் ரகசியமென்ன? பேதைச் சீஷர்களின் துணையை நாடுகிற காரணமென்ன? மும்முறை தரையில் விழுந்து "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்" பிதாவைநோக்கி வேண்டிக்கொள்வதின் முகாந்தரமென்ன? தம்மை மரணத்திலிருந்து ரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார் என்று எபிரேயர் நிருபத்தார் சொல்லுகிறார். அது எந்த மரணம்? ஆண்டவர் சிலுவைக்குப் பயந்தாரோ? வாரடிகள் வேதனைகளுக்குப் பயந்தாரோ? சிலுவையிலறைந்தால் தமது ஜீவன் சரீரத்தைவிட்டுப் போய்விடுமே என்று பயந்தாரோ? சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்குப் பயப்படவேண்டா



லென்று சீஷர்களைத் தைரியப்படுத்தினவர் தமது சிலுவைக்குப்பயந்து
நடுங்கினாரோ? ஒருக்காலும் இவைகள் அவர் பயத்துக்குக் காரணமல்ல.
தமக்கு நேரிட்ட சகலபாடுகளையும் வேதனைகளையும் எவ்வளவோ
பொறுமையாய் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டாரென்பது நிச்சயம்.
அவரது அடியார்கள் கொடிய பாடுகளையும் குரூர வேதனைகளையும்
பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு தங்கள் பிராணனைச் சந்தோஷமா
கக்கொடுத்திருக்க, அவர்கள் எஜமானும் ஆண்டவருமானவர் சிலுவை
யில் தமது ஜீவன் போய்விடுமே என்று பயந்தார் என்று சொல்வது எவ்
வளவு அவமானம்! தமது ஆவியைத் தமது பிதாவின் கையில் ஒப்பு
விக்கும்வரை சகல பாடுகளையும் வேதனைகளையும் எவ்வளவோ சாந்த
மாய் தைரியமாய்ச் சகித்தாரென்பதற்கு சுவிசேஷ சரித்திரமே ஆதா
ரம். அப்படியானல் கெத்செமனேயில் அவர் எதற்காகப் பயந்து நடுங்
கினார்? தாம் சிலுவையில் அனுபவிக்கப்போகிற, மனுஷர் கண்காணுத,
புத்திக்கெட்டாத மரணத்தை நினைத்தே அவர் மயங்கினார். இது சரீ
ரத்தைவிட்டு ஆவி பிரிவதல்ல. அது என்னவென்று பார்ப்போம்.

மகா பயங்கரமான ஓர் போராட்டம் தோட்டத்தில் அவருக்கு
உண்டானதென்பது நிச்சயம். அதைப்பற்றி ஆண்டவர் தாமே வாய்
விட்டுச் சொல்லாதிருந்தால் நமக்கு ஒன்றுமே தெரியாது. கிறிஸ்து
மரிப்பதற்காகவே வந்தவர். தமது மரணத்தால் நமது மரணத்தை
அழிக்கவேண்டுமென்பது அவர் தீர்மானம். இந்த விஷயம் தொடு
கிலும் அவருக்குத் தெரிந்திருந்தபோதிலும் அவர் பயப்படவில்லை.
அவர் ஊழியத்தில் உற்சாகம் குறைப்பவுமில்லை. இந்த மரணத்தை
அவர் நினைத்தபோதெல்லாம் அதை வேளை என்று அழைத்தார்.
அதாவது மரணத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் போராடும் வேளை.
அவர் சிலுவைக்குப் போகவேண்டிய நாள் சமீபித்தபோது அந்த
வேளை அதிகப் பலமாய் அவர் மனதில் வந்தது. "இப்பொழுது
என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன்? பிதாவே,
இந்த வேளையிலிருந்து என்னை ரட்சியும் என்று சொல்வேனோ?
ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்றார். சிலு
வைக்கு முந்தின நாள் இரவில் "பிதாவே வேளை வந்தது" என்றார்.

மரணமாகிய அந்த வேளைக்குள் பிரவேசிக்கும் நேரம் சமீபித்துவிட்டது. தோட்டத்தில் மரணமாகிய அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளவேணும். சிலுவையில் அதைப் பானம் பண்ணவேண்டும். பிதாவே அந்தப் பாத்திரத்தை அவருக்குக் கொடுத்தவர். அதில் பானம் பண்ணுகிற விஷயத்திலேதான் மகா போராட்டம் நேரிட்டது. நெடுகிலும் அவர் எதிர்பார்த்த வேளை தோட்டத்தில் முகமுகமாய் வந்தது. இதுவரை சகல விஷயத்திலும் பிதாவின் சித்தத்துக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்த ஆண்டவர் இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் திகைக்கிறார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய அவருக்கு மனமுண்டு. ஆனால் பாத்திரமோ மகா பயங்கரமானது. பாவிகளை ரட்சிக்க அவருக்கு எவ்வளவோ வாஞ்சையுண்டு. ஆனால் பானம் பண்ணவேண்டிய பாத்திரமோ கொடிய கசப்பு. இதுவரை உடனுக்குடனே கீழ்ப்படிந்த ரட்சகர் இந்த இடத்தில் மாத்திரம் தாமதிக்கிறார். சரீரத்தில் எவ்வளவு பாடுகள் வேதனைகளானாலும் சந்தோஷமாய்ச் சகித்துக்கொள்வார். தாம் அனுபவிக்கப்போகிற மரணத்தை நினைத்தபோதோ நிற்கமுடியாமல் கீழே விழுகிறார். "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்." "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். முகங்குப்புற விழுந்து: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்தார். "திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்." அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று பிதாவை வேண்டிக்கொண்டார். "அவருடைய வேர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தன." நம்மை ரட்சிக்கும்படி வந்து எவ்வளவோ காரியங்களை நிறைவேற்றினவர் கடைசிநேரத்தில் நம்மை ரட்சிக்கத் தமக்கு மனமில்லை என்று சொல்வாரா? அந்த வேளை தம்மைவிட்டு நீங்கவேண்டுமென்று ஜெபிப்பதைப் பார்க்கும்போது அப்படித்தோன்றுகிறது. ஆனால் நடந்த காரியம் வேறே. நம்மை மரணத்திலிருந்து ரட்சிக்கவேண்டுமானால் அந்த மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டு, அதன் கொடிய பயங்கரத்தை தமது ஆத்து



மாவில் அனுபவிக்கவேண்டும். இதுவே பானம் பண்ணுதல், ருசிபார்த்தல் என்பதின் அருத்தம். காலமெல்லாம் மறுவார்த்தை பேசாமல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினதுபோல, தோட்டத்திலும் ஒரு வார்த்தையின்றி பாத்திரத்தை ஏற்றுக்கொண்டிருப்பாரானால் ஆண்டவர் அனுபவித்த மரணத்தின் பயங்கரத்தை நாம் அறியவேமுடியாது. அவர் நமக்காகச் சிலுவையில் மரித்தாரென்று வெகு சாதாரணமாய்ப் பேசுவோம். ஆனால் ஆண்டவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளும் அவரடைந்த பயம் திகில் வியாகுலங்களும், அவர் தேகத்திலிருந்து கீழேவிழுந்த ரத்தத்தின் பெருந்துளிகளும், அவர் ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கின கொடிய மரணத்தின் தன்மையைக் கொஞ்சமாகிலும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அப்படியிருந்தபோதிலும் எப்பொழுதும்போல பிதாவின் சித்தத்துக்குக் கீழடங்கி, மனப்பூர்வமாய் அந்தக்கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டு சிலுவைக்குப் புறப்பட்டார். அந்த மரணமாவது என்னவென்று இன்னும் நாம் சொல்லவில்லை.

சரீரத்தைவிட்டு ஆவிநீங்குவதை நித்திரையென்றோம். ஆண்டவர் சிலுவையிலிருந்து தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்தபோது நித்திரை அடைந்தார். ஆகையால் அவர் மரணத்தை அனுபவித்தது அதற்கு முந்தி நடந்திருக்கவேண்டும். அவர் சிலுவையில் உயிரோடிருந்தபோதே மரணத்தை அனுபவித்தார். பாவியின் நிலைமையும் அதுதானே. "நீ உயிருள்ளவனென்று பேர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்." பலிக்காகப் பாவமான ஆண்டவர் தமது ஆத்துமாவில் மரணத்தை ஏற்றுக்கொண்டார். தோட்டத்திலிருந்தபோது "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். சிலுவையில் அந்த மரணதுக்கத்தை அனுபவித்தார். அவர் சிலுவையிலறையப்பட்டபோது யாதொரு திகிலின்றி சாந்தத்தோடு தொங்கினார். சத்துருக்களை மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டார். கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தார். தாயாரை யோவானிடம் ஒப்புவித்தார். மரண அனுபவத்திற்குள் இன்னும் அவர் பிரவேசிக்கவில்லை. மூன்றாம் வசனம் சொல்லி முடித்தும்

அவர் தோட்டத்தில் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டிய வேளை வந்தது. அப்போது மத்தியானம் பன்னிரண்டு மணி. பன்னிரண்டு முதல் மூன்றும் மணிவரை ஆண்டவர் யாதொரு வார்த்தையும் பேசவில்லை. சூரியன் இருண்டுபோனதால் அந்த மூன்றுமணிநேரமும் எங்கும் அந்தகாரமாயிருந்தது. சிலுவையில் தொங்கினவரை ஒருவரும் பார்க்கமுடியாதபடி இருள் மூடிக்கொண்டது. ஆண்டவர் அடைந்த கொடிய மரணபோராட்டத்தை மனுஷன் பார்க்க யோக்கியன் அல்ல. சிலுவையைச் சூழ நின்ற சத்துருக்கள் இருளில் அகப்பட்டுத் திகைத்து நின்றார்கள். பரிபாசக்காரர் வாயடங்கி பேச்சு மூச்சற்றுப்போனார்கள். இந்த மூன்றுமணிநேரமாக ஆண்டவர் பட்ட அவஸ்தையை அவரேயன்றி அறிந்தவர்களில்லை. கொடிய இருள் அவர் ஆத்துமாவை மூடிக்கொண்டது. பயந்த வெள்ளப் பிரவாகம் அவரை மோதியடித்தது. அவர் தோட்டத்தில் வெளியிட்ட வார்த்தைகளைக்கொண்டுதான் அந்த மரணத்தின் தன்மையை அனுமானிக்கக்கூடும். பிதாவும் வாசஸ்தலங்களும் மறைந்தன. திக்கற்றவராய், துணையற்றவராய், கைவிடப்பட்டவராய், இருளில் தள்ளுண்டவராய்க் கலங்கித் தவித்தார். கொடிய திகிலும் மிகுந்த வியாகுலமும் அவர் இருதயத்தை ஆண்டுகொண்டன. சுருக்கிச் சொல்லவேண்டுமானால் கடவுளற்றவராய்ப் போனதே அவரடைந்த மரணம்.

கடவுளால் கைவிடப்படுவதே மரணம். பிதா தம்மோடிருக்கிறவரை, பிதாவின் ஐக்கியத்தில் அவர் பிழைக்கும் வரை, எவ்வளவு கொடிய பாடுகளையும் வேதனைகளையும் அவர் அஞ்சாது சகித்துக் கொள்வார். பிதாவாகிய தேவனை இழந்துபோவதை அவர் சகிக்கவே முடியாது. அவர் தோட்டத்தில் ஏற்றுக்கொள்ளத் திகைத்த பாத்திரம் அதுதான். தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கவேண்டுமென்று அவர் ஜெபித்த வேளை அதுதான். பிதாவாகிய தேவன் அவருக்கு ஜீவன். அவரை இழந்துபோகும் அனுபவம் மரணம். மூன்றுமணிநேரம் இந்த நிலைமையிலிருந்து போராடினார். சாத்தான் அவரது திக்கற்ற, கைவிடப்பட்ட நிலைமையை அறிந்து அவர் ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்டு கொடிய உபத்திரவப்படுத்தினான். திக்



கற்ற, கைவிடப்பட்ட, மகா பயங்கரமான வேளையில் அவரிருந்தாலும் கடவுள்மீதுள்ள நம்பிக்கையை அவர் இழந்துபோகவில்லை. காரிருளில் மறைந்துபோன கடவுளை அவர் இருதயம் தொடர்ந்து பற்றிக்கொண்டேயிருந்தது. மூன்றுமணிநேரமானதும் அந்தகாரம் நீங்கி வெளிச்சம் தோன்றினது. உடனே அவர் மறுபடியும் வாய்திறந்து: "என் தேவனே, என் தேவனே, என் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டார். அந்த மூன்றுமணிநேரத்தில் நடந்ததென்னவென்பதை இந்த வார்த்தைகள் மகா தெளிவாய் உண்மையாய்க் காண்பிக்கின்றன. கடவுளால் கைவிடப்படும் அனுபவமே மெய்யான மரணம். பாவிகளில் ஒருவனாகிலும் கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்டவனல்ல. அவன் கடவுளைக் கைவிட்டாலும் கடவுள் அவனைக் கைவிடவில்லை. கொடிய துன்மார்க்கனையும் அவர் பராமரித்துக் காப்பாற்றுகிறார். கடவுள் ஒருவனை முற்றிலும் கைவிட்டால் அவன் அதைச் சகிக்கமுடியுமா? உயிரோடே நரகத்திலிருப்பானே. பாவி மரணத்துக் குரியவனாயிருந்தாலும், அவன் மரணத்துக் குட்பட்டிருந்தும், தேவகிருபைக்கும் தேவ அன்புக்கும் அவன் புறம்பானவனல்ல. ஆனால் கிறிஸ்துவோ நமக்காகப் பாவமாகிப் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைப் பூரணமாய் ருசிபார்த்தவர். ஆகையால் "கிறிஸ்து ஒருவரே மரித்தவர்" என்று சொல்லியிருக்கிறது. மரணத்தை மேற்கொண்டு ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கின ஆண்டவரை முற்றிலும் புறக்கணிக்கும் பாவிகள், மரணத்தின் பூரண பயங்கரத்தை, கடவுளற்ற மோசமான நிலைமையை தாங்களே அனுபவித்துப் புலம்பும் காலம் வரும். அதுவே நரகம்

பாவமற்றவருக்கு மரணமேன்? ஆண்டவரிடத்தில் பாவமில்லை. அவர் எப்பொழுதும் பிதாவுக்குச் சித்தமானதைச் செய்து சகலகாரியங்களிலும் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்தவர். அப்படியிருக்க கடவுளால் கைவிடப்படுவதாகிய கொடிய மரணம் அவருக்கேன் வந்தது? அவருக்கு வந்த மரணம் நமது மரணமே. பாவத்தின் பலனாகிய மரணத்துக்குரியவர்களாயிருந்த நம்மை அந்தக் கொடிய மரணத்திலிருந்து ரட்சிக்கும்படிக்கு அவர் ஒருவரே நமக்காக மரித்தார்.

இது அவருடைய அளவற்ற அன்பும் கிருபையுமாகும். அவர் உலகத்தில் வந்தபோது மற்றவர்களைப்போல் ஒரு தனிமனுஷனாக வராமல், மனுக்குல முழுவதுக்கும் பிரதிநிதியாக, நம்மை அவர்களோடு பூரணமாய் ஒன்றுக்கின மனுஷகுமாரனாக வந்தார். இந்த ஒற்றுமையின் பலனாக அவர் மரணத்தைச் சகிக்கவேண்டியதாயிற்று. நாம் அவரை நமது ரட்சகனாக ஏற்றுக்கொண்டு அவரோடு ஐக்கியப்படும் பலனாக மரணத்தைவிட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறோம். மனுமக்கள் யாவரும் "பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தால்" ஆளப்பட்டுத் தவிக்கிறார்கள். பாவம் எங்கேயோ அங்கே மரணம் உண்டு. பாவத்தையும் மரணத்தையும் அழிக்கவே பாவமற்ற கிறிஸ்து நமக்காகப் பாவமாகி பாவத்தின் பலனான மரணத்தையும் ஏற்றுக்கொண்டு வெற்றியடைந்தார். "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" என்பதற்கு கைவிடப்பட்ட கிறிஸ்து உயிர்த்தெழுந்து பிதாவின் மகிமைக்குள் பிரவேசித்து அவருடைய பூரண ஐக்கியத்தில் நிலைப்படுத்தியதே ஆதாரம். இவ்வாறு மகிமையடைந்த ஆண்டவர் தமது புதிய ஜீவனை விசுவாசிகள் உள்ளங்களில் அருளி, அவர்கள் மரணத்தை விட்டு நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கச் செய்கிறார். "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்றே" (ரோ. 8: 2). நாம் மரணத்தைவிட்டு நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்தாயிற்று. நாம் நித்திரை யடையலாம், ஆனால் மரணம் என்று பேச இனி இடமில்லை. மரணத்தை மேற்கொண்ட ஆண்டவரைத் தங்களுக்கு ஜீவனாகக்கொண்டவர்களுக்கு இனி மரணமில்லை. கிறிஸ்து மரித்ததின் பலனாக நமக்குக் கிடைத்த ரட்சிப்பு இதுவே. கிறிஸ்து நமக்கு ஜீவனானார். நாம் அவராலே பிழைக்கிறோம். "நமது ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது."

## IV. மரணத்தைப்பற்றி அப்போஸ்தலர் போதனை.

மரணத்தைப்பற்றி இதுவரை ஆண்டவர் போதித்ததைக் கவனித்தோம். சரீரத்தை விட்டு ஆவி பிரிவதை நித்திரையென்றும்,



கடவுளை இழந்து, காரிருள் சூழ்ந்து, முற்றிலும் கைவிடப்பட்ட நிலைமையை மரணமென்றும் ஆண்டவர் அழைக்கிறார். பவுல் சொல்வதையும் கவனிப்போம். நாம் சாவு என்று அழைப்பதை அப்போஸ்தலன் "தேகத்தைவிட்டுக் குடிபோகுதல்" என்கிறார். அதாவது, ஒரு மனுஷன் ஒரு வீட்டில் குடியிருந்து வரும்போது, அந்தவீடு விழுந்து போகத்தக்க மோசமான நிலைமையிலிருந்தால் உடனே அந்த மனுஷன் அந்த வீட்டைவிட்டு வேறு வீட்டுக்குக் குடிபோவான். பவுல் சரீரமாகிய தமது வீட்டில் குடியிருக்கும்போது அந்தச் சரீரம் நோயாலோ அல்லது சிரச்சேதத்தாலோ தாம் வசிக்கத்தகுதியற்றதாகும்போது உடனே அதைவிட்டு கர்த்தரிடம்போய் குடியிருப்பதாகப் பேசுகிறார். ஆவியே மெய்யான மனுஷன். அவன் வசிக்கும் வீடு சரீரம். ஆனால் உள்ளே வசிக்கும் ஆவியாகிய மனுஷனை வெளிப்படுத்தும் சாதனம் சரீரமாயிருப்பதால் சரீரத்தையே நாம் ஆளாகப் பாவிக்கிறோம். ஆவிக்கும் சரீரத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. சரீரமாகிய வீடு பலவீனப்பட்டு, கண்மங்கி, காதடைத்து, பேச்சுநின்று, கால்கள் தள்ளாடி, மூச்சுத்திணறி, அது குடியிருக்கத் தகுதியற்றதாகும்போது மனுஷன் வீட்டைக் காலிபண்ணி விடுகிறான். தேவபக்தியுள்ள விருத்தாப்பியர் ஒருவரைப் பார்த்து. ஐயா, உங்கள் சுகமெப்படி என்று கேட்டபோது அவர்: நான் சுகமாகவே யிருக்கிறேன், ஆனால் நான் வசிக்கும் வீடுதான் மோசமான நிலைமையிலிருக்கிறது என்றார். வீடு அழிந்தாலும் அவனே இருக்கிறான். ஆதலால் அது அவனுக்கு மரணமாகாமல் குடிபோகுதலாகும் என்று பவுல் போதிக்கிறார். அவர்தாமே வேறொரு இடத்தில் சரீரத்தைப் போர்வைக்கு ஒப்பிடுகிறார். குளிர்காலத்தில் போர்வை மூடினவன் உஷ்டண காலத்தில் அதை எடுத்துவிடுவதற்கொப்பாகும் என்கிறார். பேதுரு சொல்வதையும் கேட்போம். "நான் கூடாரத்தைவிட்டுப் போவது சீக்கிரம் நேரிடும், இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயம்." சரீரத்தைக் கூடாரத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். நான் என்று அவர் சொல்வது கூடாரத்தில் வசிக்கும் பேதுருவையும், கூடாரம் என்பது அவர் சரீ-

ரத்தையும் காட்டுகின்றன. அதேயிடத்தில் "நான் சென்று போன பின்பு" என்று பிரயாணத்துக்கு ஒப்பிட்டும் பேசுகிறார். மரணம் என்கிற பேச்சில்லை. நித்திரை என்று ஆண்டவர் போதித்த வார்த்தையை அப்போஸ்தலரும் உபயோகித்திருக்கிறார்கள். ஆகிலும் தங்கள் சொந்த உவமானங்களைக் கொண்டும் பேசியிருக்கிறார்கள். ஆண்டவர் தாமே வேறொரு இடத்தில் "நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்துக்கு வந்தேன், மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவிடம் போகிறேன்" என்றார். இதுவும் பிரயாண உவமானமே. மரணம் என்று பேச இடமில்லை. இவை யாவற்றையும் கவனிக்கும்போது சரீரத்தை விட்டு ஆவி நீங்குவது மரணமல்லவென்றும், அது நித்திரை, பிரயாணம், வீடுமாற்றுதலாகுமென்றும் அறிகிறோம். கடவுளற்ற, திக்கற்ற, கைவிடப்பட்ட, காரிருள் சூழ்ந்த மகா பயங்கரமான நிலைமையே மரணமாகும். அந்த மரணத்தை கிறிஸ்து ஏற்றுக்கொண்டு போராடி மேற்கொண்டார். அவரைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டவர்கள் இந்த மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குரியவர்களாகிறார்கள். இனி அவர்கள் மரிப்பதில்லை. இது உண்மையானால் நமக்கு அருமையானவர்கள் சரீரத்தைவிட்டுப் போகும்போது நாம் சகிக்கமுடியாத துக்க சாகரத்தில் அமிழ்ந்துபோகிற காரணமென்ன?

## V. துக்கசாகரத்துக்குக் காரணம்.

இரண்டு காரணங்கள். இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஒன்று இம்மைக்குரிய பற்று; மற்றது மறுமையில் பற்றில்லாமை. இம்மைக்குரிய பற்றினால் மறுமையில் பற்றில்லாமற்போகும்; மறுமையில் பற்றில்லாமற்போனால் இம்மையில் பற்றுவைக்க நேரிடும்.

இம்மைக்குரிய பற்று மகா வல்லமையுள்ளது. அதை இல்லையென்று மறுக்கமுடியாது. ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் ரத்தச் சம்பந்தமுள்ளவர்கள். நீண்டகாலம் ஒன்றாய் வசிக்கிறவர்கள். தாய், தகப்பன், சகோதரர், சகோதரிகள், பெற்றோர் மக்கள் என்னும் அருமையான நெருங்கிய சம்பந்தத்தில் வாழ்கிறவர்கள். முகம், பார்வை,



பேச்சு, சத்தம், அன்பு, வேலை, உதவி முதலான காரியங்களில் ஒருமித்துப் பிணைக்கிறவர்கள். சந்தோஷமோ துக்கமோ, லாபமோ நஷ்டமோ, கீர்த்தியோ அவமானமோ, சகலத்தையும் அவர்கள் பொதுவாய் அனுபவிக்கிறவர்கள். இச் சம்பந்தத்தில் காலம் செல்லச்செல்ல அவர்கள் அன்பும் பாசமும் வளர்ந்து பெருகுகின்றன. அவரவருடைய சரீரங்களே நமக்கு அருமையான ஆட்களாகின்றன. அவர்கள் எங்கேயாகிலும் சிலகாலம் பிரிந்துபோக நேரிட்டால் அவர்கள் முகப்படங்களைப்பார்க்க எவ்வளவோ ஆவலாயிருக்கிறோம். நமக்கு அருமையானவர்களுடைய சரீரத்தோற்றமும் அவர்கள் அன்பான முகமும் நமது இருதய பற்றைக் கவர்ந்துகொள்ளுகின்றன. இப்படியிருக்க நமக்கு அருமையாயிருப்பவர்களில் யாராவது ஒருவர் தன் சரீரத்தைவிட்டுப் பிரியநேரிட்டால் நம்மால் சகிக்கமுடியவில்லை. அவர்களுக்கும் நமக்கும் உண்டான ஆழமான அன்பின் பற்றே நமது ஆறாத் துயரத்துக்குக் காரணம். அந்நியர் ஒருவருடைய பிரிவுக்கு நாம் இதைப்போல் அழுது புலம்புவதில்லை. வழியிலே ஒரு பிரேதத்தைக் கண்டால் நாம் அழுவதில்லை. அதுவும் மரணந்தானே. நாம் ஏன் அழக்கூடாது? அந்த ஆளுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை. அது யாரோ நமக்குத் தெரியாது. அப்படியானால் இந்த ஆறாத் துயரத்திற்குக் காரணம் குடும்பப்பற்றும் அன்புமே. ஒரு தகப்பனுடைய பிள்ளைகளில் ஒன்று சிறு குழந்தையாயிருக்கும்போதே பெற்றோரை விட்டுப் பிரிந்து சிறியதாயார் வீட்டில் வளர்ந்தது. அந்தச் சிறிய தாயாரையே தன் சொந்தத் தாயாராகப் பாவித்து வந்தது. அந்த அம்மாளும் இந்தப் பிள்ளையை தான் பெற்றபிள்ளை போல் அன்புடன் வளர்த்தார்கள். அந்தப் பிள்ளைக்குத் தன் சிறிய தாயார்மேல் இருந்த பாசமும் அன்பும் சொந்தப் பெற்றோர்மேல் இல்லை. பெற்றோருக்கும் மற்றப்பிள்ளைகள்பேரில் இருந்த அன்பு அந்தப் பிள்ளையின்பேரில் இல்லை. இதில் ஒருவரையும் நாம் குறைசொல்லமுடியாது. இயற்கையே அப்படி. பெற்றோரென்பதும் பிள்ளையென்பதும் நெடுங்காலம் அன்பில் ஒருமித்து வாழுகிறதினால் உண்டாகிறதேயன்றி மற்றப்படியல்ல. சொந்தப் பிள்ளையாயினும் குழந்

தையில் பிரிந்துபோனால் பெற்றோரை அறியாது. அந்நிய பிள்ளையாயினும் தன்னை வளர்த்தவர்களையே பெற்றோராக மதிக்கும். உலகத்தில் அன்பும் பாசமும் இவ்வாறாக இருக்கின்றன. அந்தப் பிள்ளைக்கு மரணம் நேரிட்டால் எடுத்து வளர்த்தவர்கள் அழுவதுபோல் பெற்றோர் அழமாட்டார்கள். இது நெடுங்காலப் பழக்கத்தால் உண்டாகும் அன்பின் பற்றாகும். இந்த அன்பின் பற்றுக்குத்தக்கபடியே துக்கமும் துயரமும் உண்டாகின்றன. சரீரமே நமக்கு மெய்யான ஆளாகத் தோன்றுவதால் அந்தச் சரீரம் மறைவதை நாம் சகிக்கமுடியவில்லை. ஆகையால் சொந்தம் பாராட்டுவதில் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அளவுக்குமிஞ்சிச் சொந்தம் பாராட்டுவது சகிக்கக்கூடாத துயரத்தை உண்டாக்கும்.

மக்கள் உற்பத்தியைக் கவனிப்போம். எபிரேயர் நிருபத்தார் பெற்றோரை "நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்" என்றும், கடவுளை "ஆவிகளின் பிதா" என்றும் பேசுகிறார். நமது சரீரத்துக்கு பெற்றோர் காரணமென்பது உண்மையாயினும் அதைச் சிருஷ்டித்தோம் என்கிற பெருமை அவர்களுக்கு ஏற்காது. நமது புத்திக்கெட்டாத பிரகாரம் மக்கள் பிறக்கிறார்கள் என்பது நிச்சயம். அவர்கள் சாயல், வடிவம், நிறம், குணம் முதலானவைகள் நமக்கே ஆச்சரியமாயிருக்கின்றன. மக்கள் உற்பத்தி விஷயத்தில் பெற்றோர் உதவி அற்பத்திலும் அற்பமென்றே சொல்லவேண்டும். இதை நினைத்தல்லவா சங்கீதக்காரன்: "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும், நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டன, அவைகளில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தன" என்கிறார். பெற்றோர் சம்பந்தத்தைக் குறித்தோ "இதோ துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்



தில் கர்ப்பந்தரித்தாள்" என்கிறார். மக்கள் உற்பத்தியில் பரமபிதாவின் அதிசய செயல்களை உணர்ந்தவர்கள் தாங்கள் என்னமோ பிரமாதமாகச் சாதித்தோம் என்று எண்ணாமல், கடவுளே தங்கள் மக்கள் ஆவிக்குப் பிதாவும், அவர்கள் சரீரத்திற்கு ஆண்டவருமாயிருக்கிறார் என்று சொல்லுவார்கள். இது உண்மையானால் நமது மக்கள் நமக்குச் சொந்தமாயிருப்பதிலும் அவர்களைத் தமது ஆலோசனைப்படி அதிசயமாய் உருவாக்கி உலகத்தில் அனுப்பின பிதாவுக்கே அவர்கள் முற்றிலும் சொந்தம் என்பது நிச்சயம். ஆகவே அவர்கள் கடவுளுக்குச் சொந்தம் என்பதை மறவாமல் அவருடைய மகிமைக்கென்று வளர்த்துவிடுவதே நமது கடமை. பார்வோன் குமாரத்தி மோசே என்னும் குழந்தையை அதன் தாயிடம் கொடுத்து: "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்காக வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்" என்று சொன்னதுபோல பரமபிதா நமது மக்களைத் தமக்காக வளர்க்கும்படி நமது கையில் கொடுத்திருக்கிறார். அவர்கள் நம்மைப் பார்க்கிலும் அவருக்கே சொந்தம். அவருக்குச் சொந்தமானவர்களாக அவர்களை வளர்ப்பதே நமக்குக் கிடைத்த சிலாக்கியமும் ஆசீர்வாதமுமாகும். அவர்கள் தங்கள் ஆவிகளின் பிதாவை அறிந்து, அவரில் அன்புகூர்ந்து, அவர்மேல் பூரண நம்பிக்கைவைத்து அவரால் நடத்தப்படுவார்களானால் மக்களைப்பற்றிய நமது கவலைகள் ஒழிந்துபோகும். அவர்கள்மேல் நாம் வைக்கும் அன்பு கிறிஸ்துவுக்குள்ளான அன்பாயிருக்கவேண்டும். மாம்ச சம்பந்தமான பற்றுவைப்போனால் அவர்கள் சரீரத்தைவிட்டுப் பிரியுங்காலம் வரும்போது நாம் சகிக்கமுடியாத துயரத்தில் அமிழ்ந்துபோவோம். குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் பரமபிதாவுக்குத் தங்களை ஒப்புவித்து அவர் சித்தம்போல் பிழைக்கும்போது சகல தீமைகளுக்கும் அவர் நம்மை விலக்கிக்காத்து கடைசிவரை நம்மை நடத்துவாரென்பது நிச்சயம். அவர் சித்தமின்றி நமக்கு ஒன்றும் சம்பவிக்காது. அவர் ஞானமும் கிருபையும் நிறைந்த பிதா.

வேறொரு காரணம் மறுமையில் பற்றில்லாமை. மறுமையைப் பற்றிய அறிவும் நிச்சயமும் நமக்கில்லாமற்போனால் நமக்கு அருமை

யானவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும் வேளை வரும்போது நாம் எப்படிச் சகிக்கக்கூடும்? நாம் பிறந்ததுமுதல் இந்தப் பூமியோடு சம்பந்தப்பட்டிருக்கிறோம். பூமிக்குரிய காரியங்கள் நமது சரீரத்துக்கு அவசியமானதால் அவைகளைப் பிரதானமாய்த் தேடுகிறோம். இவ்வாறு நாம் காண்பதும், தொடுவதும், அனுபவிப்பதுமான காரியங்கள் நமது கவனத்தைப் பூராவாய் ஆண்டு கொள்ளுகின்றன. நாம் பூமிக்குரியவர்களாகவே பிழைக்கிறோம். இம்மைக்குரிய காரியங்கள் நமக்கு அனுகூலமாய் முடியும்படி வேளாவேளை ஜெபம் செய்துகொள்ளுகிறோம். மோட்சத்தைக் கடைசியில் சேர்த்துக்கொள்ளுகிறோம். ஆகவே நமது நோக்கமும் பிரயாசமும் பிழைப்பும் பூமிக்குரியதாகி விடுகின்றன. மறுமைக்குரிய நித்திய மெய்யான காரியங்கள் பங்கலாகி நிச்சய மற்றுப்போகின்றன. கிறிஸ்து உலகத்துக்கு வந்தது முதல் பிதாவைக்குறித்தும், மறுமையின் பாக்கியங்களைக் குறித்தும் எவ்வளவோ அறிவு நமக்குக் கிடைத்திருந்தும், நமது மனம் பூமிக்குரியவைகளில் உலாவுவதுபோல பரத்தில் உலாவுவதில்லை. ஒரு விஷயத்தில் நாம் எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அவ்வளவுக்கு அது நம்மை ஆண்டுகொள்ளும். மறுமைக்குரிய காரியங்களில் நமக்கு அவ்வளவு கரிசனை இல்லை.

அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் சரீரத்தில் பிழைத்தாலும் அவர்கள் குடியிருப்பு பரலோகத்திலிருந்தது. அவர்கள் தங்கள் மனக்கண்களால் பிதாவையும் அருமை ரட்சகரையும், கோடிக்கணக்கான தேவதூதர்களையும், பூரணராக்கப்பட்ட ஆவிகளையும் கண்டார்கள். நமக்கு இந்த உலகம் எவ்வளவு பிரத்தியக்ஷமாயிருக்கிறதோ, அதைப் பார்க்கிலும் அதிகமாய் மறுமை அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாயிருந்தது. ஆதலால் அவர்கள் வாஞ்சையும், சம்பாஷணையும், எதிர்பார்க்குதலுமாயிருந்தது. எப்போது பிதாவின் வீட்டுக்குப் போகலாம், எப்போது கிறிஸ்துவிடம் சேரலாம் என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். "அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருந்தது." அவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும்வேளை வந்தபோது கிறிஸ்துவிடம் போவதை நினைத்து மகிழ்ச்சி



ஒன்று. கிறிஸ்து எக்காலும் கிறிஸ்துவா யிருக்கும்போது மற்றவர்கள் மாத்திரம் இனம் மாறிப்போவ தெப்படி?

அவர்கள் கிறிஸ்துவோடேகூட யிருக்கிறார்கள். "தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூடயிருக்க எனக்கு அதிக ஆசையுண்டு" என்றார் பவுல். அவர் சாவுப்பெட்டியை நினைக்கவில்லை. கல்லறையையும் அடக்கமாவதையும் முற்றிலும் மறந்தார். தன் ஜீவனாகிய கிறிஸ்துவையே லக்ஷ்யமாக நோக்கினார். அவர் விரும்பினபடியே ஆண்டவர் பாதுகாப்பில் போய்ச்சேர்ந்தார். கிறிஸ்துவில் அன்பு வைத்து அவருக்கென்று பிழைக்கிற தேவமக்கள் யாவரும் தங்கள் தேகத்தைவிட்டுப் பிரியும்போது ரட்சகரிடம் போய்ச்சேருகிறார்கள் என்பது நிச்சயம். ஆண்டவர் நம்மில் அன்பாயிருக்க, நாமும் ஆண்டவரிடத்தில் அன்பாயிருக்க, இந்த அன்பில் நாம் வளர்ந்து பெருகியிருக்க, திடீரென இந்த அன்பு இருபக்கமும் அழிந்து, ஆயிரமான வருஷங்களுக்கப்புறம் திரும்பவும் அந்த அன்பு தொடங்கும் என்று சொல்லுகிறவன் யார்? அன்பு இடையில் நின்றுபோகுமானால் அது அன்பாகாது. வேதவாக்கியம் கூறுகிறபடி "அன்பு ஒருக்காலும் ஒழியாது". ஆகையால் ஆண்டவரிடத்தில் அன்புவைத்தவர்கள் சரீரத்தைவிட்டு நீங்கும்போது அந்த அன்பரிடமே போய்ச் சேருகிறார்கள்.

அவர்கள் சந்தோஷமும் பாக்கியமுமான நிலைமையிலிருக்கிறார்கள். ஆண்டவர் வலதுபக்கத்துக் கள்ளனைப்பார்த்து: "இன்று நீ என்னோடேகூடப் பரதீசில் இருப்பாய்" என்றார். அவன் சரீரம் சிலுவையிலிருந்தது. அவன் ஆவியோ பரதீசுக்குள் பிரவேசித்தது. பரதீஸ் என்றால் இன்பமும் சந்தோஷமும் அழகும் ஆனந்தமும் நிறைந்த தோட்டம் என்று அருத்தம். இது மறுமைக்குள் பிரவேசித்தவர்களின் பாக்கியமான நிலைமையைக் குறிக்கும். இந்த இடம் "ஆபிரகாமின் மடியென்றும்" சொல்லப்பட்டிருக்கிறது. லாசருவின் ஆவியைத் தேவதூதர்கள் ஆபிரகாமின் மடியில்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மடி என்பது அன்புக்கும் ஐக்கியத்திற்கும் அடையாளம். லாசரு காணாமற்போகவில்லை. இல்லாமல் அழிந்துபோகவு

யில்லை. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு முதலான கணக்கற்ற விசுவாசிகள் கடவுளுக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறார்கள். அவர்களோடு லாசருவும் சேர்ந்துகொண்டான். தேகத்தைவிட்டுப் பிரியும் தேவமக்கள் பாக்கியமான இடத்தில், திரளான விசுவாசிகள் கூட்டத்தில் சேர்ந்து மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். உலகிலுள்ள கவலை, கஷ்டம், துன்பம், சோதனை, பாவம் அவர்களை அணுகுவதில்லை. நாமோ அவர்களை நினைத்து அழுகிறோம்.

அறிவு விர்த்தியாகிற இடம். மறுமைக்குட்பிரவேசித்தவர்கள் யோசனை அறிவு இல்லாதவர்கள் அல்ல. மனுஷன் சாகும்போது அவன் மூளை அழிந்துபோவதால் யோசனையும் அழிந்துபோகவேண்டியதுதானே என்று ஒரு வகுப்பார் கூறுகிறார்கள். மனுஷன் மரிக்கும்போது அவன் அழிந்துபோகிறான் என்றும், இடையில் அவன் இல்லையென்றும், கிறிஸ்து வரும்போதுதான் மறுபடியும் புதிதாய் அவனை உயிரோடெழுப்புகிறார் என்றும் சொல்லுகிறார்கள். இது சதுசேயர் கொள்கையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் முற்பிதாக்கள் மரித்து இல்லாமற்போனார்கள் என்பது சதுசேயர் கொள்கை. ஆண்டவர் அதற்கு உத்தரவாக: கடவுள் அவர்கள் கடவுளாய் இருந்தேன் என்று சொல்லாமல், அவர்கள் கடவுளாய் இருக்கிறேன் என்றல்லவா சொன்னார். மரித்து இல்லாமற்போனவர்களுக்கு அவர் கடவுளாயிருப்பதெப்படி? அவர்கள் கடவுளுக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறார்களே; அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல் ஜீவனுள்ளோர் தேவனாயிருக்கிறாரே என்று சொன்னார். மேலும் மூளை அழிந்தால் யோசனையும் அழியும் என்பது உண்மையா? மூளையே அறிவுக்கும் யோசனைக்கும் கருவியானால் அந்த மூளையைப்பற்றி ஆராய்ச்சிசெய்து எழுதும் யோசனை எங்கேயிருந்து வந்தது? மனம் மூளைக்கு மேலானது. மூளையில்லாத தேவதூதர்கள் எப்படி யோசிக்கிறார்கள்?

பலிபீடத்தின் கீழுள்ள ஆவிகள் தேவனைப்பார்த்து: ஆண்டவரே எதுவரைக்கும் தாமதிப்பீர், பொல்லாதவர்களுக்கு நியாயத் தீர்ப்புச் செய்யுங்காலம் இன்னும் வரவில்லையா என்று கேட்டார்கள். யோச-



னையும் அறிவுமற்றவர்கள் இப்படிப் பேசுவார்களா? யோசிப்பதற்கும் பேசுவதற்கும் மாம்ச சரீரம் அவசியம் என்று நினைப்பது பிசகு. கடவுள் ஆவியாயிருக்கிறார். அவருக்கு நம்மைப்போல் சரீரமில்லை. ஆகையால் அவருக்கு ஞானமும் அறிவும் இல்லையா? நமது சரீர அனுபவத்தால் ஆவிக்குரிய அனுபவத்தை அறியக் கூடாதவர்களாயிருக்கிறோம். அறியக்கூடாததால் அதை நம்புவது கஷ்டமாயிருக்கிறது. காணப்படுகிறவைகளிலேயே பழகினவர்களுக்கு, காணப்படாதவைகள் சந்தேகமாயிருக்கின்றன. என்றாலும் ஆவிக்குரிய காரியங்களே நிலையுள்ளவைகள். நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள் நாமறியாத காரியங்களை அறிவார்கள். கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவருக்கு ஒப்பாக மாற்றப்பட்டு பரம காரியங்களை இருக்கிறபடி அறிந்துகொள்வோம். "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்."

தேகத்தைவிட்டுப் பிரிவது குணத்தை மாற்றாது. எவ்விதமான குணத்தோடு இம்மையில் பிழைக்கிறோமோ அதே குணத்தோடுதான் மறுமைக்குள் பிரவேசிப்போம். துன்மார்க்கன் தூங்கி விழித்தாலும் துன்மார்க்கனே. நித்திரை அவனைப் பரிசுத்தவானாக்காது. கிறிஸ்துவின் அன்பிலும் அறிவிலும் நாம் இங்கே பிழைத்தால், மறுமையில் பிரவேசிக்கும்போது அந்த அன்பிலும் அறிவிலும் வளருவோம். இம்மையில் ஆண்டவரை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரிலே பிழைத்தால், ஆவிபிரியும்போது பூரண ஜீவனுக்குள் பிரவேசிப்போம். இங்கே ஜீவனாகிய கிறிஸ்துவைச் சொந்தமாக்காமல் பேர்க்கிறிஸ்தவர்களாக மாத்திரம் நாம் பிழைத்தால் புறம்பான இருளில் தள்ளப்படுவோம். அதுவே கொடிய மரணமாகும். ஆவிக்குரிய நித்திய காரியங்களில் அநேகர் நிர்விசாரமாயிருக்கிறார்கள். இம்மைக்காகவே பிழைத்து இம்மைக்காகவே முயற்சி செய்கிறார்கள். நினையாதநேரம் அவர்கள் சரீரத்தைவிட்டு நீங்கவேண்டியது நிச்சயம். அப்போது என்ன செய்வார்கள்? தாங்கள் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்த உலகத்தைவிட்டு விடவேண்டும். தாங்கள் அசட்டையாயிருந்த மறுமைக்குள் பிரவேசிக்கவேண்டும். இவர்கள் கண்ட பலன் என்ன? இங்குமில்லை; அங்குமில்லை. இகத்தையும் இழந்து

பரத்தையும் இழந்து மரணமாகிய நரகத்துக்கு ஆளாகவேண்டியது தான்.

இதுவரை கவனித்ததைச் சுருக்கிப் பார்ப்போம். தேகத்தை விட்டு ஆவி நீங்குவதை நாம் மரணம் என்று பேசுகிறோம். ஆண்டவரோ அதை நித்திரை என்று அழைக்கிறார். அப்போஸ்தலரும் அதை நித்திரை, குடிபோகுதல், போர்வை களைதல், கூடாரத்தைவிட்டு நீங்குதல், பிரயாணம் என்று அழைக்கிறார்கள். பாவத்தின் பலனான மரணத்தையே ஆண்டவர் மரணம் என்று அழைத்தார். இந்த மரணம் பயங்கரமானது. ஆண்டவர் நம்மை நித்திரையாகிய அல்லது பிரயாணமாகிய அனுபவத்திலிருந்து ரட்சிக்க வராமல் கொடிய மரணத்திலிருந்து ரட்சிக்க வந்தார். பாவிகள் சரீரத்தில் உயிரோடிருக்கும்போதே இந்தக்கொடிய மரணத்தில் அகப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உலகத்தோடுள்ள சம்பந்தத்தால் இழுப்புண்டு இந்த மரணத்தை அவர்கள் உணருவதில்லை. மேலும் கடவுள் மனுஷரைக் கைவிடவில்லை. அவருடைய அன்பும் கிருபையும் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றன. ஆகையால் மனுஷர் தங்கள் மரணத்தின் பயங்கரத்தை உணராதிருக்கிறார்கள். அவர்கள் ஆத்துமா தேகத்தைவிட்டுப் பிரியும்போது மரணத்தின் பயங்கரத்தை அறிவார்கள். ஆண்டவர் உயிரோடிருக்கிறவர்களை மரித்தோர் என்று அழைத்தார். இந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்கும்படி அவர் தாமே மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவர் சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதாகிய நித்திரைக்குப் பயப்படவில்லை. "என் ஜீவனைக் கொடுப்பேன், திரும்பவும் எடுத்துக் கொள்ளுவேன்" என்று அவரே சொன்னார். பாவத்தின் பலனான மரணத்திற்கு ஆண்டவர் பயந்து கெஞ்சினார். சிலுவையில் அந்த மரணத்தை ஏற்றுக்கொண்டு, போராடி மேற் கொண்டார். அவர் ஒருவரே மரித்தவர். அவர் ஒருவரே அந்தப் பயங்கரமான மரணத்தை மேற் கொண்டவர். மரணத்தை மேற்கொண்ட பின்பு தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். அவர் உயிர்த்தெழுதல் அவரடைந்த வெற்றிக்கு ஆதாரம். கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக் கொள்ளுகிறவன் இப்போதே மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்



யடைந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து நிற்கும் தேவமக்கள் பிரிவாற்றாமையால் கண்ணீர் சிந்தினபோதிலும் நம்பிக்கையற்றவர்களைப் போல துக்கத்தில் அமிழ்ந்துபோனதில்லை. மறுமையைப்பற்றிய நிச்சயமே இந்த ஆறுதலுக்கும் அமைதலுக்கும் காரணம்.

கொடிய காலத்தில் நாம் இருக்கிறோம். பூமிக்குரிய நாட்டமும் கவலையும் மனுமக்களை ஆண்டுகொண்டன. ஐசுவரியவான் பொருள் தாகத்தால் கவலைகொண்டிருக்கிறான். ஏழைகள் இல்லையே எனக் கவலைகொண்டிருக்கிறார்கள். சரீரம் பிழைப்பதற்காகவே மனுஷர் இரவும் பகல் பாடுபடுகிறார்கள். மாம்சத்துக்குரிய உலகசிந்தையே பிரதானமாய் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த வெள்ளத்தால் இழுப்புண்டு போகிறோம். "உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயம் இருக்கவேண்டும்" என்றும்; "பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே தேடுங்கள்" என்றும்; "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்" என்றும் நாம் போதிக்கப்பெற்றிருந்தும் அவைகளை மறந்தோம். மறுமையைப்பற்றிய பிரசங்கங்களும் குறைவு. ஞானப் பாட்டில் பாடுகிற எழுந்து மோட்சத்தை யன்றி வேறு மோட்சம் நமக்குத் தோன்றவில்லை இவ்வாறு மறுமையில் நம்பிக்கை யற்றுப் போகும்போது, நமக்கு அருமையானவர்கள் நம்மை விட்டுப் பிரிவது கொடிய சஞ்சலமாகிறது. "விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல்" என்னும் ஓர் அருமையான புஸ்தகம் உண்டு. அது இப்போது கிடைப்பது அரிது. அந்தப் புஸ்தகத்தை நாம் கவனத்தோடு படிப்போமானால் நாம் உலகத்தை மறந்து பரத்தில் வசிக்கிறவர்களாவோம். பரம நாட்டம் சந்நியாசிக்கோலமல்ல. நமதாண்டவரைப்போல் பரம சிந்தையுள்ளவர்கள் யார்? அவர் பரத்துக் குரியவராகவே இகத்தில் பிழைத்தார். அவர் சரீரத்திலிருந்தபோது மோட்சமகிமை அவரைச் சூழ்ந்திருந்தது. ஆகிலும் எவ்வளவோ அன்போடும் கிருபையோடும் மனுமக்களோடு உறவாடினார். அவர் உலகத்தால் இழுப்புண்டு போகாமல் உலகத்தைத் தம்மிடம் இழுத்துக்கொள்ளும் பரம நாட்டமுள்ள

வராயிருந்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும். நித்திய வீட்டில் நாம் பிரவேசிப்பதற்கு நம்மை ஆயத்தப் படுத்திக்கொள்வதற்காகவே ஆண்டவர் சுருக்கமான காலத்தைத் தந்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

## VI. மறுமைக்குட் சென்றவர்கள் நிலைமை என்ன ?

மறுமையின் அனுபவத்தைப்பற்றிப் பூரணமாய் நமக்குத் தெரியாது. "மரணத்துக்குப்பின் ஜீவன்" "மறுமையின் வாழ்வு" என்னும் புஸ்தகங்களைக் கண்டால் நாம் ஆவலோடு வாசிக்க விரும்புகிறோம். அது இயற்கையே. ஆனால் வேதமோ அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவில்லை. ஏனென்றால் சரீரத்தில் பிழைக்கிற நமக்கு மறுமைக்குரிய அனுபவம் சொன்னாலும் விளங்காது. பாவத்தால் நாம் கெட்டபோது நமது பாஷையும் கெட்டது. நமது பாஷை பரலோக காரியங்களை இருக்கிறபடி விளக்கத் தகுந்ததல்ல. ஆண்டவர் கூட தேவராஜ்யத்தின் காரியங்களை பூமிக்குரிய காரியங்களைக்கொண்டு ஒப்பிட்டுப் பேசினாரேயன்றி இருக்கிறபடி பேசவில்லை. யோவான் மோட்ச மகிமையை உலகத்தில் விலையேறப் பெற்றதும் அழிந்து போவதுமான கற்களுக்கு ஒப்பிட்டுப் பேசினார். பவுல் பரதீசில்கண்ட காட்சியை மற்றவர்களுக்குச்சொல்ல முடியாமல் விட்டுவிட்டார். பரம காரியங்களை உள்ளபடி நாம் அறிந்துகொள்ள முடியாமற் போனாலும் பொதுவாகச் சிலவிஷயங்களைத் திட்டமா யறியலாம்.

**அவர்கள் இனம் மாறாது.** பூமியிலிருந்த ஆபிரகாமே மறுமையிலும் ஆபிரகாம். பூமியிலிருந்த லாசருவே மறுமையிலும் லாசரு. மறுமைக்குட் பிரவேசிப்பவர்கள் நாம் இனம் அறிய முடியாதபடி வேறு ஆட்களாக மாறுவதில்லை. எவ்வளவோ காலத்துக்கு முன்னுள்ள மோசே எலியா மறுரூபமலையில் ஆண்டவரைச் சந்தித்துப் பேசினபோது இன்னும் மோசே எலியாவாகவே யிருந்தார்கள். நாம் நாமாகவே இருப்போம். நமக்கு அருமையானவர்களையும் அன்பான சிநேகிதர்களையும் இருக்கிறபடி அறிந்து கொள்வோம். இவ்வாறு நாம் இனம் அறிந்து சந்தோஷப்படுவது பரலோக பாக்கியங்களில்



கிறான். இனி அவனுக்கு மரணமில்லை. அவன் ஆவி சரீரத்தைவிட்டு நீங்குவது அவனுக்கு நித்திரையாகும். அவனோ கிறிஸ்துவிடம் போய் குடியிருக்கிறான். நமக்கு அருமையானவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும் வேளை வரும்போது நாம் நம்பிக்கை யற்றவர்களைப்போல் துக்கசாகரத்தில் அமிழ்ந்து போகாதபடி, நாம் பரத்திற்குரியவர்களாக ஜீவிப்பதோடு, நமக்கு அருமையானவர்களையும் ஆவிக்குரியவர்களாகவும், கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாகவும் பாராட்டி வளர்க்கவேண்டும். பூமிக்குரிய காரியங்களை நாம் கண்டு அவைகளில் பற்று வைப்பதைப் பார்க்கிலும் மறுமைக்குரிய நித்தியகாரியங்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு, மேலானவைகளில் நாட்டங் கொள்ளவேண்டும். நம்மை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவரால் அனுதினமும் நடத்தப்பட்டு, அவர் சிக்ஷையால் நிறைந்து, அவருடைய ராஜ்யத்திற்கென்று பிழைப்போமானால் பவுல் சொன்னதுபோல "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று நாமும் சொல்லலாம்.

# XIII

# What happened at Pentecost

# பெந்தெகொஸ்தின் விசேஷம்

"அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" யோ. 14: 20.

கிறிஸ்தவர்களாகிய நாம் சில பண்டிகைகளை விசேஷித்துக் கொண்டாடுகிறோம். கிறிஸ்மஸ் பண்டிகை நமக்கு மகா சந்தோஷமான நாள்! அந்த நாளை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள் அநேகர். எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நாள்! உலகமுழுவதும் அந்த நாளை அறியும். உலகத்தை ரட்சிக்கும்படி கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்ட நாள்! ஆகையால் அந்த நாளை நாம் மிகுந்த நன்றியோடும் சந்தோஷத்தோடும் கொண்டாடுவது நியாயமே. கிறிஸ்து பாடுபட்ட தினமாகிய பெரிய வெள்ளிக்கிழமையையும் கொண்டாடுகிறோம். இதற்கு ஆங்கிலத்தில் நல்ல வெள்ளிக்கிழமை என்று பெயர். இந்த நாளில் அநேக சபைகளில் ஆண்டவர் பாடுகளைத் தியானிக்கும்படி மூன்று மணிநேர ஆராதனைகள் நடக்கும். அப்புறம் உயிர்த்தெழுந்த பண்டிகை. ஆண்டவர் மரணத்தை ஜெயித்து மறுபடியும் உயிரோடெழுந்ததால் ஈஸ்தர் பண்டிகையை மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடுகிறோம். பின்பு கிறிஸ்து பரத்திற்கு எழுந்த திருநாள். இதைப் பண்டிகைபோல் கொண்டாடாவிட்டாலும் அவர் பரமேறி மகிமையடைந்ததை நாம் மறக்கிறதில்லை. கடைசியாக பரிசுத்த ஆவியின் திருநாள். இதற்கு பெந்தெகொஸ்தே நாள் என்று பெயர். ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளில் தேவ ஆவியானவர் சீஷர்களை நிரப்பினார். இது ஓய்வு நாளாயிருப்பதால் ஆலயங்களில் ஆராதனைகளும், ஆவியானவரைப் பற்றிய பிரசங்கங்களும் நடக்கும். இந்த நாளை மறந்துபோகிற சபைகளும் உண்டு. இவைகளில் நமக்கு கிறிஸ்மஸ் பண்டிகையே எல்லாவற்றிலும் பிர



தானமாகத் தோன்றும். பெரிய வெள்ளிக்கிழமையும் உயிர்த்தெழுந்த பண்டிகையும் விசேஷந்தான். ஆனால் பரிசுத்த ஆவியின் பண்டிகையை நாம் அவ்வளவு விசேஷமாகக் கொண்டாடுவதில்லை. பார்க்கப்போனால் எல்லாப்பண்டிகைகளிலும் விசேஷித்த பண்டிகை பரிசுத்த ஆவியின் பண்டிகையே. எல்லா நாட்களுக்கும் அதுவே சிறந்த நாள். ஆண்டவருடைய ஜீவியம் ஊழியம் யாவுக்கும் அதுவே கிரீடம்

கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டது மகா பெரிய கிருபையே. அது நாம் என்றும் மறக்கக்கூடாத விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் அவர் பிறப்பில் நிறைவேறினதோ? இல்லை. பாவிகளை ரட்சிக்கும்படி அவர் பட்டபாடுகளும் மரணமும் விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் நிறைவேறினதோ? இல்லை. அவர் உயிர்த்தெழுதல் மகா பெரிய வெற்றியே. ஆகிலும் அவர் வந்த நோக்கம் நிறைவேறினதோ? இன்னும் இல்லை. மனுக்குலத்தின் பிரதிநிதியாயிருந்து கடவுளுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மகா தாழ்மையாய் நடந்த மனுஷகுமாரன் உன்னதத்திற்கு உயர்த்தப்பெற்று,பிதாவினால் மகிமையையும் கனத்தையும் அடைந்தது பெரிய விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் நிறைவேறினதோ? இன்னும் இல்லை. இவை யாவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் நடந்த காரியங்கள். ஆண்டவர் தமது பிறப்புமுதல் மகிமையடைந்ததுவரை நிறைவேற்றின காரியங்கள் யாவும் நமது ரட்சிப்புக்கு அவசியமே. என்றாலும் அவர் உலகத்திற்கு வந்தநோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. ரெயில் வண்டி ஓடவேணுமானால் நிலம் வாங்கி, பாதை உண்டாக்கி, இரும்புச் சட்டிகள் பதித்து, தண்டவாளங்கள் போட்டு, வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தவேண்டியது அவசியமே. இவையாவும் அவசியமான வேலைகள்தான். என்றாலும் என்ஜின்வந்து வண்டிகளோடு சேர்க்கும்வரை வண்டி ஓடமாட்டாது. பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் நமது ஆண்டவர் நிறைவேற்றின கிரியைகள் யாவும் அவசியந்தான்.

ஆகிலும் பரிசுத்த ஆவி சீஷர்களை நிரப்புகிறவரை அவர் வந்த நோக்கம் நிறைவேறாது.

உலகம் ரட்சிக்கப்படும்படி ஆண்டவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினபடியால் பெந்தெகொஸ்தே மகா விசேஷித்த நாள் என்பது நிச்சயம். உலக சரித்திரத்திலும் திருச்சபை சரித்திரத்திலும் பெந்தெகொஸ்தே நாள் விசேஷித்த நாளாகும். தேவ ஒழுங்கிலும் ஏற்பாட்டிலும் பெந்தெகொஸ்தே நாள் விசேஷித்த நாள். ஆதிமுதல் சகலமும் இந்த நாளையே நோக்கியிருந்தது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் உள்ள சடங்குகளும், அடையாளங்களும், சகல விதிகளும், பிரமாணங்களும், தீர்க்கதரிசனங்களும் இந்த நாளையே நோக்கியிருந்தன. ஆவியானவர் பிதாவின் வாக்குத்தத்தம். தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர். வெகு காலமாக நம்பிக்கையோடு எதிர் பார்க்கப்பட்டவர். கடைசியாக பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களை நிரப்பினவர். ஆகையால் பெந்தெகொஸ்தே நாள் தேவ ஒழுங்கில் சிறந்த நாள். மனுஷர் சரித்திரத்தில் மகா விசேஷித்த நாள். அதற்கு ஒப்பான நாள் முன்னில்லை. ஆண்டவர் வாக்குப் பண்ணின திருச்சபை அந்த நாளில் உண்டானது. ஆண்டவர் நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பு அந்த நாளில் பலித்தது. இந்த நாளுக்காக ஆண்டவர் எவ்வளவோ ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருந்தார். "பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன்; ஆகிலும் நான் முழுகவேண்டிய ஓர் ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." இங்கே அக்கினி என்பது பரிசுத்த ஆவிக்கு அடையாளம். பெந்தெகொஸ்தே நாளில் அக்கினி நாவுகள் போன்ற நாவுகள் சீஷர்கள்மேல் இறங்கின. ஆவியானவர் சீக்கிரம் வரவேண்டுமென்பது ஆண்டவர் பேராவல். ஏனென்றால் அதுவரை அவர் நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பை நிறைவேற்ற முடியாமல் நெருக்கப்பட்டார். அவர் மகிமையடைந்த போது தமது ஆவியை அனுப்பி தாம் உலகத்திற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றினார்.



இதற்குமுன் ஆவியானவர் உலகத்தில் இருந்ததில்லையா? சந்தேகமில்லாமல் இருந்தார். ஆதியாகமம் முதற்கொண்டு பழைய ஏற்பாடு ஆகமங்களில் அவரைப்பற்றி வாசிக்கிறோம். ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். கிதியோன்மேல் வந்திறங்கினார். ஒத்னியேல் மேல் வந்தார். சிம்சோன்மேல் பலமாய் இறங்கினார். யோசுவாவுக்கு ஞானத்தைக் கொடுத்தார். கூடாரவேலை செய்வதற்கு பெசலெயேலுக்கு ஞானத்தையும் புத்தியையும் தந்தார். விசுவாசிகளை நடத்தினார். தீர்க்கதரிசிகளைப் பேசும்படி ஏவினார். ஆவியின் பலத்தை அருளினார். ஆவியானவரின் கிரியைகளை பழைய ஏற்பாட்டில் ஏராளமாகக் காணலாம். அப்படியானால் பெந்தெகொஸ்தே நாளின் விசேஷமென்ன? பெந்தெகொஸ்தே நாளின் விசேஷம் விசுவாசிகள் உள்ளத்தில் தேவ ஆவியானவர் என்றென்றைக்கும் வாசம் பண்ணும்படி வந்தார். முன் காலங்களில் நிலைவரமான ஆவி கிடைக்கவில்லை. விசேஷித்த சமயங்களில் விசேஷித்த வேலையை நடப்பிப்பதற்காக ஆவியானவர் அருளப்பட்டார். அவர் போகிறதும் வருகிறதுமாயிருந்தார். தாவீது வாஞ்சித்த "நிலைவரமான ஆவி" பெந்தெகொஸ்தே நாளில் வந்தார். இந்த நாளின் விசேஷத்தைப்பற்றி யோவேல் தீர்க்கதரிசியும் முன்னுரைத்தார். சீஷர்கள் ஆவியினால் நிறைந்து பேசினபோது, எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்றார்கள். பேதுரு அவர்களைப்பார்த்து: தீர்க்கதரிசியாகிய யோவேலினால் முன்னுரைக்கப்பட்டதே இது என்றார்.

இன்னும் இந்த நாளின் விசேஷம் என்னவென்றால், கடவுள் தாம் இழந்த மனுஷனைக் கண்டடைந்தார், மனுஷனும் தான் இழந்த கடவுளைக் கண்டடைந்தான். பாவத்தால் மனுஷன் பிதாவாகிய கடவுளை இழந்தான். "இழந்து போனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்." இதற்காகவே அவர் மனுஷர் [illegible] மாசற்றவராகச் சஞ்சரித்து, அரிய உபதேசங்கள் செய்து, மகத்துவமான கிரியைகளை நிறைவேற்றி, பாடுபட்டு மரித்து, உயிர்த்தெழுந்து மகிமையடைந்து, பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியை

அனுப்பினார். ஆவியானவரால் சீஷர்கள் நிரப்பப்படுவதின் அவசியத்தைப் பற்றி அவர் அவர்களோடிருந்தபோது திரும்பத் திரும்ப அவர்களுக்குச் சொல்லியிருந்தார். அவரைப் பெற்றுக் கொள்ளும் வரை அவர்கள் எருசலேமைவிட்டுப் போகக் கூடாதென்றும் கட்டளையிட்டிருந்தார். அவர்கள் ஒருமனப்பட்டுக் கூடியிருந்தபோது பெந்தெகோஸ்தே நாளில் ஆண்டவர் சொல்லியிருந்தபடியே ஆவியானவர் அவர்களை நிரப்பினார். ஆவியானவர் வந்தபோது கடவுளே அவர்களுக்குள் வந்து வாசம்பண்ணினார். கடவுள் வாசம் பண்ணுவதற்காகவே மனுஷன் உண்டாக்கப்பட்டான். பாவம் கடவுளை அகற்றி, நான் என்பவனை சிங்காசனம் ஏற்றினது. ஆவியானவர் வந்து நிரப்பினபோது நான் என்பவன் நிர்மூலமாகி கடவுள் சிங்காசனம் ஏறினார். "நாங்கள் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்று ஆண்டவர் சொல்லியிருந்த வாக்கு பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. திரித்துவத்தைப் பிரிக்கமுடியாது. ஆவியானவர் எங்கேயோ அங்கே குமாரனும் இருப்பார். குமாரன் எங்கேயோ அங்கே பிதாவும் இருப்பார். பிதா, குமாரன், ஆவியே கடவுள். மேலும் "தேவன் ஆவியாகவே இருக்கிறார்." ஆகையால் சீஷர்கள் ஆவியானவரால் நிறைந்தபோது கடவுள் தங்களுக்குள் வசிப்பதை அறிந்தார்கள். "நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்" என்று ஆண்டவர் குறிப்பிட்ட நாள் இந்த பெந்தெகொஸ்தே நாளே. மனுஷனுக்கு ஜீவனுள்ள தேவனுடைய ஐக்கியம் கிடைத்தது. "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று அப்போஸ்தலர் அநுபவ நிச்சயத்துடன் சொன்னார்கள். இந்த உன்னதமான ஐக்கியத்திற்குக் காரணம் பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவர் முற்காலங்களில் மனுஷரிடத்தில் கிரியை செய்திருந்தபோதிலும், சீஷர்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் கிடைத்த நிலைவரமான கடவுள் ஐக்கியம் முன் ஒருபோதும் ஒருவருக்கும் கிடைத்ததில்லை. இதுவே ரட்சிப்பு. இதுவே கிறிஸ்து மார்க்கம். ஆவியானவர் மூலமாய் கடவுளை உள்ளத்தில் பெற்றுக்கொள்



வதே கிறிஸ்துமார்க்கம். முன்பின் யோசியாமல் மனுஷருக்கு ஞானஸ்நானம் கொடுத்துச் சபையில் சேர்த்துக்கொள்வது கிறிஸ்துமார்க்கமல்ல. ஆவியானவரால் ஆண்டவர் கட்டின சபையை மாம்ச முயற்சியினால் கட்டப் பார்ப்பது தேவ சித்தத்திற்கும் அவர் ஏற்பாட்டிற்கும் விரோதமாகும். அப்படிப்பட்ட புறம்பான வேலைகள் அக்கினியால் எரியுண்டுபோகும்.

## 1. பெந்தேகோஸ்தே நாள் ஆண்டவருக்கு விசேஷம்.

இந்த நாளுக்காகத் தானே அவர் ஆவலோடு எதிர்நோக்கி வந்திருந்தார். தாம் உலகத்திற்கு வந்த நோக்கம் இந்த நாளில் தான் நிறைவேறுமென்பது அவருக்குத் தெரியும். தமது பரிசுத்த ஜீவியம், தேவ உபதேசம், அற்புதகிரியைகள், பாடு, மரணம், உயிர்த்தெழுதல் யாவும் உலக ரட்சிப்புக்கு அவசியமானாலும், பரிசுத்த ஆவி வராமல் தாம் சம்பாதிக்கும் ரட்சிப்பு மனுஷருக்குப் பலிதப்படாதென்பது அவருக்குத் தெரியும். ஆகையால் மனுஷர் ரட்சிக்கப்பட பெந்தெகொஸ்தே நாள் அவர்களுக்கு எவ்வளவு அவசியமோ அதுபோலவே மனுஷரை ரட்சிப்பதற்கு பெந்தெகொஸ்தே நாள் ரட்சகருக்கும் அவசியம். ரட்சகர் நமக்குள் வராமல் நாம் ரட்சிக்கப்படுவதில்லை. ஆவியின் மூலமாயல்லாமல் ரட்சகர் நமக்குள் வருவதில்லை. கிறிஸ்துவே நமது ரட்சிப்பு. இதை அறியாமல் அநேகர் ரட்சிப்பைப் பிரத்தியேகப் படுத்திப் பிரசங்கிக்கிறார்கள். ஆண்டவர் கொடுக்கிறார், நீ விசுவாசத்தினாலே வாங்கிக்கொள் என்கிறார்கள். என்னத்தை வாங்குகிறது? இப்படிப்பட்ட போதனைகளால் குழப்பமுண்டாகும். கிறிஸ்துவே நமது ரட்சிப்பு. ரட்சிப்பின் ஆசீர்வாதங்களெல்லாம் அவருக்குள் இருக்கின்றன. அவரைச் சொந்தமாக்கிக் கொண்டவன் அவரது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைச் சொந்தமாக்கிக் கொள்வான். அவரில் நிலைத்திருந்து பிழைக்கிறவன் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவிப்பதில் வளருவான். நமது ரட்சிப்பு, ஞானம், நீதி, பரிசுத்தம், சமாதானம், சகலமும் கிறிஸ்துவே. "அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று சீஷர்களுக்குச் சொன்னார். அந்தப்படியே ஆவியானவர்

அவர்களை நிரப்பினபோது கிறிஸ்துவைத் தங்களுக்குள் கண்டார்கள். "இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார்" என்று சொல்லக்கூடியவர்களானார்கள். இவ்வாறு கிறிஸ்து ஆவியின் மூலமாய் அவர்களுக்குள்ளே வந்தது அவருக்கு மிகுந்த அனுகூலமாயிற்று. தாம் உலகத்தில் செய்யும்படி வந்த வேலையை அவர்களுக்குள் நிறைவேற்றக் கூடியவரானார். தாம் அவர்களோடு சரீரத்தில் இருந்த காலத்தில் நிறைவேற்ற முடியாதிருந்த காரியங்களை ஆவியின்மூலமாய் அவர்களுக்குள் வந்தபோது நிறைவேற்றினார்.

ஆண்டவர் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் செய்த ஊழியத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று வெளிப்படுத்தல்; இன்னொன்று ரட்சித்தல். அவர் பிதாவை உலகத்திற்கு வெளிப்படுத்தும்படி வந்தார். அந்தப் பிதா அவருக்குள்ளேயே இருந்து தம்மை அவர் மூலமாய் வெளிப்படுத்தினார். ஆகையால் பிதாவை அறிவதற்கு கிறிஸ்துவை அறியவேண்டும். வேறு வழியில்லை. கிறிஸ்துவை இன்னாரென்று அறியாவிட்டால் பிதாவை அறிய முடியாது. ஆண்டவர் தமது கிருபை நிறைந்த ஜீவியத்தாலும் அருமையான உபதேசத்தாலும், அரிய கிரியைகளாலும் பிதாவை வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் அவரோடேகூடயிருந்த சீஷர்களாவது, அவரைப் பின்பற்றின மற்ற மனுஷராவது, அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. அவர் ஜீவியத்தைக் கவனித்து அவரைப் பரிசுத்தர் என்றார்கள். அவர் உபதேசத்தைக் கேட்டு அவரை நிகரற்ற போதகர் என்றார்கள். அவர் கிரியைகளைக் கண்டு: "அவர் கைகளிற் பலத்த செய்கைகள் விளங்குகின்றன" என்றார்கள். ஆகிலும் அவரை இன்னாரென்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவரை அறியாதபோது அவர் வெளிப்படுத்தின பிதாவையும் அவர்கள் அறியவில்லை. ஆண்டவர் மாம்சத்தில் தங்கின நாட்களில் பிதாவை வெளிப்படுத்துகிறவராகவே யிருந்தார். அவர் ஜீவியம் உபதேசம் கிரியைகளின் நோக்கம் அதுதான். பிலிப்பு அவரைப் பார்த்து: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்டபோது, ஆண்டவர் துக்கத்தோடு: "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே



கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். மறுபடியும் "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்" என்றார். சீஷர்களும் ஜனங்களும் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லையே என்பது ஆண்டவருக்கு விசனம். அவர் சமாரியா ஸ்திரீயைப் பார்த்து: "தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதை நீ அறிந்திருந்தாயானால்" என்கிறார். அதிகாரிகளைப் பார்த்து: "மனுஷகுமாரனைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்டார். சீஷர்களைப்பார்த்து ஓர் சமயம்: "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" என்றுகேட்டார். சீஷர்களையே பார்த்து: "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று கேட்டார். இக்கேள்விகளினாலே ஜனங்கள் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை என்பதும், தம்மை அறிந்துகொள்ளாததால தாம் வெளிப்படுத்தும்படி வந்த பிதாவையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை என்பதும் தெளிவாகிறது. அப்படியானால் அவரையும் பிதாவையும் நாம் அறியாத நிலைமையிலேயே ஆண்டவர் நம்மை விட்டு விடுவாரா? ஒருபோதும் அல்ல. தமது அடியார் தம்மையும் பிதாவையும் கட்டாயம் அறிவார்கள் என்பது ஆண்டவருக்குத் தெரியும். அப்படி அறியும் நாள் பெந்தெகொஸ்தே நாள் என்பதையும் அவர் ஏற்கனவே அறிவித்தார். பிதாவை வெளிப்படுத்த வந்தது தவறிப்போனதே என்று ஆண்டவர் துக்கப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் நீங்கள் என்னையும் பிதாவையும் அறிவீர்கள் என்று திட்டமாகச் சொன்னார். அப்படியே ஆயிற்று.

ஆவியானவர் சீஷர்களை நிரப்பினபோது கிறிஸ்துவே அவர்களுக்குள் வந்தார். மாம்சத்திலிருந்தபோது இன்னாரென்று அறியாத கிறிஸ்துவை அவர் உள்ளத்தில் வெளிப்பட்டபோது சீக்கிரத்தில் அறிந்தார்கள். அவரை அறிந்தபோதே பிதாவையும் அறிந்தார்கள். கிறிஸ்துவை அறியும் மெய்யான அறிவு உள்ளான அறிவு. உள்ளான அறிவு ஆவியினால் கிடைக்கிற அறிவு. ஆவியின் உள்ளான வெ

வெளிப்படுத்தல் இல்லாமல் கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறியமுடி
யாது. இதனாலேதான் "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை
கர்த்தர் என்று ஒருவனும் சொல்லமுடியாது" என்று பவுல் சொன்
னார் (1. கொரி. 12: 3). தமது அனுபவத்தைக் குறித்தும்: "தேவன்
தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்
தார்" என்கிறார். (கலா. 1. 16). ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிய
கேள்வி அறிவும், புஸ்தக அறிவும், மற்றவர்கள் கற்றுக்கொடுத்த
பின்பின்ன அறிவும் நமது ரட்சிப்புக்கேற்ற அறிவாகாது. ஆண்ட
வர் கூடவேயிருந்து தம்மை வெளிப்படுத்தியும் சீஷர்கள் அவரை
அறிந்துகொள்ளவில்லை யென்றால் நாம் எப்படி அவரை அறியமுடி
யும்? ஆவியின் உன்னான வெளிப்படுத்தலைப் பெறாத அநேகர் அவ
ரை கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஜீவி
யம் மாற்றப்படாமலிருப்பதே அவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்கள்
என்பதற்கு அடையாளம். மெய்க்குள் வரும் ஆவியானவர் தம்மையல்ல
கிறிஸ்துவையே மெய்க்குள் மகிமைப்படுத்துகிறார். ஆவியினால் நிறைந்
தவர்கள் ஆவியைப்பற்றிப் பேசாமல் கிறிஸ்துவைப்பற்றியே பேசு
வார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு ஐக்கியப்படும்போது பிதாவோ
டேயும் ஐக்கியப்படுகிறார்கள். அவரை அறிவதே பிதாவை அறிவது;
அவரை விசுவாசிப்பதே பிதாவை விசுவாசிப்பது; அவரை ஏற்றுக்
கொள்வதே பிதாவை ஏற்றுக்கொள்வது; அவரைக் கனம்பண்ணு
வதே பிதாவைக் கனம்பண்ணுவது; அவரில் அன்பாயிருப்பதே
பிதாவில் அன்பாயிருப்பது; அவரில் நிலைத்திருப்பதே பிதாவில்
நிலைத்திருப்பது. ஆகையால் ஆவியால் நிறைந்தவன் பிலிப்புவைப்
போல, ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்க
மாட்டான். கிறிஸ்துவை உள்ளத்தில் கண்டவன் பிதாவைக் கண்
டான். ஆண்டவர் விரும்பின பிரகாரம் தமது மூலமாய் பிதா சீஷர்
கள் உள்ளத்திற்கு வெளிப்பட்டபடியால், பெந்தெகொஸ்தே நாள்
ஆண்டவருக்குச் சந்தோஷமான விசேஷித்த நாள். அவர் பிதாவை
வெளிப்படுத்தும்படி உலகத்திற்கு வந்த நோக்கம் அந்த நாளில்
நிறைவேறினது. ஆகையால் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் ஆண்



டவர் பிதாவை வெளிப்படுத்தும்படி எடுத்துக்கொண்ட முயற்சிகள்
அனாவசியமென்றாவது வீணென்றாவது நாம் சொல்லுகிறதில்லை.
இந்த உன்னான வெளிப்படுத்தலுக்கு புறம்பான அவரது ஜீவியமும்
உபதேசமும், கிரியைகளும் ஆயத்தம் செய்வதாக இருந்தன. அவை
களின் மூலமாய் அவர்கள் பக்குவப்படுத்தப் பட்டிருந்ததினாலேதான்
இந்த உன்னான வெளிப்படுத்தலைப்பெறத் தகுதியுள்ளவர்களாயிருந்
தார்கள்.

ஆண்டவர் விசேஷமாய் நாம் கவனிக்கவேண்டிய இரண்டாம்
காரியம் அவர் சம்பாதித்த ரட்சிப்பு. அவரது ஜீவியம், உபதேசம்,
கிரியைகள் தம்மை வெளிப் படுத்துவதற்கு அவசியமாயிருந்தது
போல, அவரது பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், மகிமைப்படு
தல் அடியாரின் ரட்சிப்புக்கு அவசியமாயிருந்தன. ஆண்டவருடைய
பாடுகள் மரணம் சீஷர்களுக்குப் பிரியமேயில்லை. அவர் மரிக்கக்
கூடாதென்பதே அவர்கள் தீர்மானம். அவர் மரித்தபோது எல்லா
ரும் சிதறுண்டு ஓடிப்போய் விட்டார்கள். அவரை நம்பி நாங்கள்
மோசம் போனோம் என்பதே அவர்கள் எண்ணம். "இஸ்ர
வேலை மீட்டு ரட்சிப்பார்" என்று எண்ணியிருந்தோம், இப்படி
எங்களைக் கைவிட்டு மடிந்துபோனாரே என்பதுதான் அவர்கள்
புலம்பல். இப்படியிருக்க நிலைமையிலிருந்து தங்களுக்கு ரட்சிப்பு
[illegible] ஆண்டவர் மரித்த
வரும் என்று அவர்கள் எப்படிச் சொல்லக்கூடும்? தெரியும் அப்படியும்
போது சீஷர்கள் இருந்த நிலைமை [illegible]? இதை மூலம்
பட்டவர்கள் இதுவரையைப் பற்றிப் பேசுவார்களா? அவர் உயிர்த்தெழுந்த
ரட்சிப்பு உண்டென்று பிரசங்கிப்பார்களா? அவர் பரத்திற்கு
ஏறினதைக் கண்டபோது சந்தோஷப்பட்டார்கள். அவர் உயிர்த்
தெழுந்து போனதைப் பார்த்தபோது இன்னும் அதிகமாய் சந்தோ
ஷப்பட்டார்கள். [illegible]
மனம் கலங்கியிருந்த சீஷர்கள் அவர் உயிரோடே [illegible]
திற்கு ஏறினதையும் கண்டபோது [illegible] அவர் ரட்சக
கர். ஆகிலும் என்ன? [illegible]
வெற்றியையும் அறிந்துகொண்டார்களா? அல்ல

பெந்தெகொஸ்தே நாள் வந்தது. ஆண்டவருக்கு அதைப்போல் மகிழ்ச்சியான நாள் வேறில்லை. தாம் சிலுவையில் சம்பாதித்த ரட்சிப்பை சீஷர்கள் உள்ளத்தில் பலிதப்படுத்தினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் ரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் ஆண்டவர் தமது ரட்சிப்பை அவர்கள் உள்ளங்களில் பலிதப்படுத்தினார். அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் பாவமன்னிப்பைப் பற்றியும், சமாதானம் நீதியைப் பற்றியும், பரிசுத்தம் நித்திய ஜீவனைப்பற்றியும், சாந்தம் மனத்தாழ்மையைப் பற்றியும், தேவராஜ்யம் அதனால் வரும் பாக்கியங்களைப்பற்றியும், பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டென்பதைப் பற்றியும் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் கவனமாய்க் கேட்டார்கள். இவை யாவும் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களாகும். இவைகள் நமக்குக் கிடைப்பதற்கு அவர் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும் அவசியம் என்று சொன்னார். இவைகளின் கருத்துக்களை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ரட்சிப்பின் வழியை அவர்கள் அறியாதிருக்கும்போது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை எப்படிப் பெற்றுக்கொள்ளக் கூடும்? அவர் தமது ஜீவியத்தில் பிதாவை வெளிப்படுத்தியிருந்தும் அவர்கள் கண்டும் காணாதவர்களாக இருந்ததுபோலவே, ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைக் குறித்துக் கேட்டும் அறியாதவர்களாகவே யிருந்தார்கள். கிறிஸ்து ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்தபோது தமது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் ஜீவியத்திற்குச் சொந்தமாக்கினார். முன்னே தாங்கள் கேட்ட ரட்சிப்பு தங்களுக்குச் சொந்தமானதைக் கண்டார்கள். அவர்கள் ஜீவியத்தில் பலத்த மாறுதலடைந்தார்கள். கிறிஸ்துவே அவர்கள் ரட்சிப்பும், ஞானமும், நீதியும் பரிசுத்தமும், நித்திய ஜீவனும், உன்னத பலமுமானார். அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதலின் கருத்தின்னதென்று அனுபவத்தில் கண்டுகொண்டார்கள். வேண்டாமெனத் தாங்கள் வெறுத்த சிலுவை ஜீவனாயிருப்பதை அறிந்து: "கிறிஸ்துவுடன் கூடச் சிலுவையில் அறையப்பட்டோம், இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார்கள். அவர் உயிர்த்தெழுதலின் புதிய ஜீவ



னைப்பெற்று தாங்களும் அவரோடே கூட எழுந்தவர்கள் என்றார்கள்.
அவர் பரமேறினதைக் குறித்து: நாங்கள் கிறிஸ்துவுடன் எழுந்த
படியால் பூமிக் குரியவைகளை அல்ல, மேலானவைகளையே நாடு
கிறோம்; நாங்கள் கிறிஸ்துவுடன் கூட உன்னதங்களில் உட்கார்ந்
தோம் என்றார்கள். அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் எவ்வ
ளவு பலத்த மாறுதலைக் காண்கிறோம். மாங்கொட்டை போட்டு மரம்
முளைக்கப் பண்ணுவேன் என்று மாய வித்தைக்காரன் சொன்னால்
அதைப்பார்க்க எத்தனையோபேர் கூடுவார்கள். பரம வித்தைக்காரன்
செய்த அற்புதத்திற்கு நிகரானதுண்டோ? தெற்கு வடக்குத் தெரியாத
செம்படவர்களைப் பிடித்து தமது அன்பினால் அவர்களை வசப்படுத்தி,
மூன்றுவருஷக் காலமாய் தேவராஜ்யத்திற்குரிய காரியங்களில் பக்கு
வப் படுத்திவந்தார். புத்தியில்லாத மந்தகதியுள்ளவர்கள்! அவர் ஒன்று
சொன்னால் அவர்கள் ஒன்று சொல்லுவார்கள். சிலுவை என்றால்
கூடாது என்பார்கள். ராஜ்யம் என்றால் இக்காலத்திலா என்பார்கள்.
தாழ்மை என்றால் தங்களில் யார் பெரியவன் என்பார்கள். அருமை
ஆண்டவரின் பொறுமைதான் என்ன? இந்த ஆசாமிகளை அவ
ருடைய சீஷர்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது
போல இந்தப் பேதையர்களைக் கொண்டு தமது மகிமையை வெளிப்
படுத்த வேண்டுமென்பது அவர் சித்தம். அவர்கள் எவ்வளவு குறை
வுள்ளவர்களா யிருந்தபோதிலும் அவர்களைக்கொண்டு தாம் பூமியில்
வந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடும் என்று உறுதியாய் நம்பியிருந்
தார். ஆகையால் அவர்களைக் கோபிக்காமல் சாந்தமாய் நடத்தினார்.
அவர் பிடிபட்டதும் அவர்கள் சிதறுண்டு போவார்கள் என்பது அவ
ருக்குத் தெரியும். அவர் கொஞ்சமாகிலும் மனஞ்சோர்ந்து போக
வில்லை. பெந்தெகொஸ்தே நாள் வரும்போது தமது சித்தம் அவர்
கள் மூலமாகப் பரிபூரணமாய் நிறைவேறும் என்று அறிவார். அந்
தப்படியே ஆயிற்று. அறிவீனரும் பலவீனருமான அவர்களைத் தமக்
குச் சிறந்த சாட்சிகளாக ஆக்கினார். அவர்களைக்கொண்டு தமது
சபையை உலகத்தில் ஸ்தாபித்தார். அந்தச்சபை இன்று உலகமுழு
வதையும் ஆண்டுகொண்டது. அந்த நிறத்தை என்ன சொல்ல?

ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும், சர்வத்துக்கும் மேலான கடவுளும் இயல்லவா? அவருக்கே என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் மகிமையும் கனமும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

## II. பெந்தெகோஸ்தே நாள் சீஷர்களுக்கு விசேஷம்.

பெந்தெகொஸ்தே நாள் ஆண்டவர் உலகத்திற்கு வந்த நோக்கத்தை சீஷர்களுக்குள் நிறைவேற்றினதால் அவருக்கு அனுகூலமான நாளாக இருந்ததுபோல, சீஷர்களுக்கும் அது விசேஷித்த நாளாகவிருந்தது. சீஷர்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள சம்பந்தம் மூன்று வகைப்படும். அவர்கள் அவருக்குச் சீஷராகவும், சிநேகிதராகவும், ஊழியக்காரராகவும் இருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னும் அவர்கள் அவ்விதமாகவே யிருந்தார்கள். ஆனால் அந்த மூன்று சம்பந்தமும் புறம்பானதாக மாத்திரம் இராமல், உள்ளான ஆழமான கருத்துள்ளதாயிருந்தது. இந்த மாறுதலை அவர்களே தங்கள் அனுபவத்தில் அறிந்தார்கள்.

சீஷர்களாக அவர்களைப் பார்ப்போம். பரம குருவாகிய கிறிஸ்துவோடு அவர்கள் மூன்று வருஷமாய் இருந்து அவர் போதனைக்குச் செவிகொடுத்தார்கள். குருவிடம் கற்றுக்கொண்டு அவரைப் பின்செல்லுகிறவனே சீஷன். ஆண்டவரின் சீஷர்கள் அவரிடம் கற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர் போதித்த ஆவிக்குரிய காரியங்கள் அவர்களுக்கு விளங்கவில்லை. சாதாரணமான காரியங்களைக்கூட அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. "இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா" என்று ஆண்டவர் அடிக்கடி அவர்களைக் கேட்கவேண்டியதாயிற்று. இது அவர்கள் கவனக்குறைவல்ல. அவர் போதனைக்குச் செவிகொடாததினாலுமல்ல. சத்தியம் உள்ளத்தில் வெளிப்படுத்தப்பட்டால் அல்லாமல் நாம் அதைக் கேள்வியால் மாத்திரம் அறியமுடியாது. ஆண்டவர் அவர்களுக்குப் போதித்த உபதேசங்கள் வீணாய்ப் போகமாட்டாது. பெந்தெகொஸ்தே நாள் வந்தது. கிறிஸ்து தமது ஆவியினால் அவர்களுக்குள் வந்தார். அவரே அவர்களுக்கு ஜீவனானார். ஒளியாக அவர்கள் உள்ளத்தில் பிரகாசித்தார். முன்னே அவர்



போதித்ததும் அவர்கள் அறிந்து கொள்ளாததுமான சத்தியங்களை இப்பொழுது அவர்கள் உள்ளத்தில் வெளிப்படுத்தினார். [illegible] மூன்று வருஷமாய் அறியாதிருந்த அநேக சத்தியங்களை அவர்கள் [illegible] அறிந்துகொண்டார்கள். கிறிஸ்துமார்க்கத்திற்கும் மற்ற மார்க்கங்களுக்குமிருக்கிற வித்தியாசம் இதுதான். மற்றமார்க்கங்களில் குருக்கள் [illegible] உபதேசங்கள் [illegible] [illegible] குருக்கள் [illegible], அவர்கள் உபதேசங்கள் வேறே. இங்கே கிறிஸ்துவிலிருந்து அவர் உபதேசத்தை பிரிக்கமுடியாது. அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். மேலும் உலகத்தில் குருக்கள் [illegible] இறவர்கள் புறம்பேயிருந்து உபதேசம் சொல்ல, கேட்கும் [illegible] முன் பக்தியாயத்தோடிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். கேட்ட உபதேசம் பிரயோஜனப்படுவதும், பிரயோஜனப்படாததும் சீஷர்களைப் பொறுத்தது. ஏனென்றால் குருக்கள் வேறே. சீஷர்கள் வேறே. எவ்வளவு சிறந்த குருக்களானாலும் சீஷர்களுக்குள் தங்கள் ஜீவனை அனுப்பி தங்கள் போதனையை அவர்கள் அறிந்து கொள்ளவும் அதன்படி நடக்கவும் செய்யமுடியாது. கிறிஸ்துவின் காரியமோ அப்படியல்ல. அவர் சரீரத்தில் இருந்த காலத்தில் சீஷர்களுக்கு ராஜ்யத்திற்குரிய காரியங்களைப் போதித்தார். அவர் அக்காலத்தில் அவர்களுக்குப் புறம்பேயிருந்தார். அவர்கள் அவரால் போதிக்கப் பெற்றார்கள். ஆனாலும் அவர் போதித்தவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவுமில்லை, அதன்படி நடக்கவுமில்லை. பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து, தாமே அவர்களுக்கு ஜீவனானார். அவரே அவர்களுக்கு ஜீவனானபோது அவர் சிந்தை அவர்களுக்கு உண்டாயிற்று. அவர் செய்த உபதேசங்களை யெல்லாம் அறிந்துகொண்டார்கள். முன்னே இருளாயிருந்தவைகள் தெளிவாயிற்று. ஒன்றும் கூடாதென்று நினைத்துக்கொண்ட பேதுரு, ஆவியினால் [illegible] தும், அதாவது கிறிஸ்து உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு [illegible] கோத்தில் பிரசங்கித்த போதனையை நாம் மறக்கமுடியாது. [illegible] வின் அவசியத்தையும் அதனால் கிடைக்கும் ரட்சிப்பையும் [illegible] யத்துடன் கூறி அறிவிக்க, மூவாயிரம்பேர் கிறிஸ்து அடியார் [illegible]

கள். புறம்பான போதனை அவசியம் என்றாலும், சத்தியம் உள்ளத்திற்கு வெளிப்படுத்தப்படும் வரை நாம் அதை அனுபவத்தில் நிச்சயமாய் அறிய முடியாது. நம்மில் அநேகர் புறம்பான கேள்விக்காரரே. எத்தனை பிரசங்கங்களைக் கேட்டாலும், எத்தனை புஸ்தகங்களைப் படித்தாலும் நமது ஜீவியமோ மாற்றப்படவில்லை. சத்தியமாகிய கிறிஸ்து நமக்குள் வந்து தமது பரம ரகசியங்களை நமக்குள் வெளிப்படுத்தும் வரை நாம் அவைகளை அறிய முடியாது. வெளியிலிருந்து போதித்த கிறிஸ்து, சீஷர்களுக்கு உள்ளே வந்து சத்தியங்களை வெளிப்படுத்தினதினாலே பெந்தெகொஸ்தே சீஷர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதமான நாளாயிற்று.

சிநேகிதராக அவர்களைக் கவனிப்போம். ஆண்டவர் அவர்களைச் சிநேகிதர் என்றழைத்தபோது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் யார்? நாம் யார்? அவருக்குச் சிநேகிதராயிருக்க நாம் பாத்திரவான்களா என்பதுபோல் நினைத்தார்கள். அவர்களிடத்தில் எத்தனை குறைவுகள் இருந்தபோதிலும், அவர்கள் அவரை இன்னும் சரியாய் அறியாதிருந்தபோதிலும், ஆண்டவர் அவர்களைச் சிநேகிதராகப் பாராட்டி நடத்தினது உண்மையே. அவர்களும் தங்களால் இயன்றமட்டும் அவரை நேசித்தார்கள். அவருக்கு நேரிட்ட சோதனைகளில் அவரோடு நிலைத்திருந்தார்கள். தங்களுக்குரியவைகளை விட்டுப் பிரிந்து அவரையே பற்றிக்கொண்டிருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளிலும் அவர்கள் அவருடைய சிநேகிதர்கள்தான். ஆனால் நடந்த காரியம் வேறே. முன்னே கிறிஸ்து அவர்கள் சிநேகிதராக அவர்களோடுகூட அவர்கள் பக்கத்தில் இருந்தார். இப்போது ஆவியின் மூலமாக அவர்களுக்குள்வந்து அவர்கள் பிராண சிநேகிதனானார். சிநேகிதனே அவர்களுக்கு ஜீவனானார். செடியும் கொடியும்போல் ஒரேஜீவனால் அவர்கள் அவரோடிணைக்கப்பட்டார்கள். அவர் காரியம் வேறே, அவர்கள் காரியம் வேறே அல்ல. சகலமும் அவர்களுக்குப் பொது. சந்தோஷமோ துக்கமோ, லாபமோ நஷ்டமோ, மேன்மையோ அவமானமோ, சகலமும் சிநேகிதர்களுக்குப் பொது. அவர்தான் அவர்கள், அவர்கள்தான் அவர். நான் என்றும் நீங்கள் என்றும் சிநேகிதருக்-



குள் வித்தியாசமில்லை. இதுவே பிராணசிநேகம். "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அறிவீர்கள்" என்று ஆண்டவர் சொன்னவாக்கு இந்தப் பிராணசிநேகத்தை நிச்சயப்படுத்துகிறது. முன்னே அவர்களுக்கு வெளியே, புறம்பே இருந்த சிநேகிதராகிய ஆண்டவர், பெந்தெகொஸ்தே நாளில் அவர்களுக்குள் ஜீவனாக வந்தபோது அவர்கள் அவருக்குப் பிராணசிநேகிதர்கள் ஆனார்கள். அவருடைய அன்பு அவர்கள் உள்ளங்களில் பிரவாகித்தது. கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவினது.

ஊழியக்காரராக அவர்களை நோக்குவோம். பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் அவர்கள் ஆண்டவருடைய ஊழியக்காரராயிருந்தார்கள். அவர் கற்பித்தவைகளைச் செய்தார்கள். நீங்கள் புறப்பட்டுப் போய் கிராமங்களில் பிரசங்கியுங்கள் என்று அவர் கட்டளையிட்டால் அப்படியே செய்வார்கள். உங்களுக்கு முன்னேயிருக்கிற கிராமத்திற்குப்போய் கழுதையை அவிழ்த்து வாருங்கள் என்றால் அப்படியே செய்வார்கள். எருசலேமுக்குப் போய் மேல்வீட்டறையை ஆயத்தம் பண்ணுங்கள் என்றால் அப்படியே செய்வார்கள். அவர்கள் எஜமானுக்குக் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் என்பது நிச்சயம். இப்போதும் அவர்கள் ஊழியக்காரர் தான். ஆனால் நடந்த காரியம் வேறே. முன்னே அவர் புறம்பேயிருந்து அனுப்ப அவர்கள் போகிறவர்களாகவும், அவர் ஒன்றைக் கற்பிக்க அவர்கள் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். உலகத்தில் எஜமான்கள் வேலைக்காரருக்குள்ள சம்பந்தம் போலவே அப்பொழுதிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் அந்தச் சம்பந்தம் வேறுவிதமாக மாறினது. கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து அவர்கள் ஜீவனானபோது, எஜமான் வேறே ஊழியக்காரர் வேறே என்கிற சம்பந்தம் மாறி, அவரே அவர்களுக்குள்ளிருந்து உபயோகிக்கும் கருவிகளானார்கள். அவர்கள் மனம் அவருக்கு மனமாயிற்று. அவர்கள் கண்கள் அவர் கண்களாயிற்று. அவர்கள் வாய் அவருக்கு வாயாயிற்று. அவர்கள் கைகள் அவருடைய கைகளாயிற்று. அவர்கள் கால்கள் அவருடைய கால்களாயிற்று. இவ்வாறு அவரே அவர்களை முழுவதுமாய் ஆண்டுகொண்டு தமது ராஜ்யத்தின் வேலையை அவர்களைக் கொண்டு நடத்தினார்.

இதன் உண்மையை அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணலாம். அப்போஸ்தலர் நடபடியின் விசேஷம் அதுதான். அவர்கள் ஜீவியத்தில் கிறிஸ்துவின் சிந்தையையும் அவருடைய சாயலையும் காண்கிறோம். முன்னே ஆண்டவர் எவ்வளவாகப் போதித்தாலும் அவரது சாந்தம், மனத்தாழ்மை, பொறுமை, அன்பு முதலான திவ்ய லட்சணங்கள் அவர்களிடத்தில் காணப்படவில்லை. இப்பொழுதோ கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்தவர்களானார்கள். ஊழியத்திலும் ஆண்டவர் போக்கு காணப்படுகிறது. "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று ஆண்டவர் சொன்னார். "ஐனேயாவே, நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என்று பேதுரு சொன்னார். "தலீத்தாகூமி" என்று ஆண்டவர் சொன்னார். "தபீத்தாள் கூமி" என்று பேதுரு சொன்னார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்றும், "என் ஆவியை உமது கைகளில் ஒப்புவிக்கிறேன்" என்றும் ஆண்டவர் சொன்னார். "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்றும், "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்றும் ஸ்தேவான் சொன்னார். பவுலிடத்தில் விளங்கிய கிறிஸ்துவின் சிந்தையை விவரிக்கப்போனால் இடம் போதாது. "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று அவரே சொன்னார். ஆண்டவர் தமது அடியார்களைப் பூரணமாய் ஆண்டுகொண்டு அவர்களுக்கு அவரே ஜீவனானபோது, அவர்கள் ஜீவியமும் ஊழியமும் அவருடையதாகவே இருந்தன.

இவையாவையும் கவனிக்கும்போது நாம் எங்கேயிருக்கிறோம்? அவர்களும் ஊழியர்கள் நாமும் ஊழியர்களா? நமது இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நமது ஊழியத்தைக் குறித்துப் புறம்பேயுள்ளவர்கள் குறைவாய் நினைக்கிறார்கள். மிஷனில் சம்பளம் பெறுவதால் இவர்கள் பிரசங்கிக்கிறார்கள்; மிஷன் போய்விட்டால் இவர்கள் வேலை செய்வார்களோ என்கிறார்கள். சம்பளம் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் நாம் போதிப்பது சத்தியமென்பதை இவர்கள் கவனிக்கிறதில்லை. ஆகவே நன்மைக் கேதுவான

மிஷன்கள் நிலைமைக்கேதுவாய்ப் பேசப்படுகிறது. இந்தியாவிற்குச் சுவிசேஷத்தைக் கொண்டுவந்த மிஷனெரிகளுக்காக நாம் கடவுளை ஸ்தோத்திரிக்கிறோம். ஆனால் நாம் எக்காலமும் அவர்களையே சார்ந்திருப்பது சரியல்ல. எதைப் பார்த்தால் நமது ஜனங்களுக்கு ஊழியஞ்செய்யும் உத்தரவாதம் நம்மையே பொறுத்திருக்கிறது. மிஷன்களின் உதவி எக்காலமும் இருக்குமென்பது என்ன நிச்சயம்? மிஷனெரிமார் பணத்தினால் எவ்வளவு உதவிசெய்தபோதிலும் நமது ஜனங்களை நாம் அறிந்திருப்பதுபோல அறியவும், அவர்களுக்குள் நெருங்கி வேலைசெய்யவும் அவர்களால் முடியாது. ஆகையால் நமது ஜனத்தின் ரட்சிப்பு, அயல்தேசத்து மிஷனெரிமார் இங்கே திரளாய் வருவதினால் அல்ல, கர்த்தருக்குத் தம்மை ஒப்புவித்து, ஆவியின் பலத்தோடு ஊழியஞ்செய்யும் தேச மக்களையே ஆகவேண்டியதிருக்கிறது. ஒர் காலத்தில் முழுவதும் மிஷன்களால் பராமரிப்புப் பெற்ற சபைகள் இப்பொழுது தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்வதைக் காண்கிறோம். எல்லாச் சபைகளும் சுயபராமரிப்புள்ள சபைகளாகுங் காலம் சீக்கிரம் வரும். மிஷன் உதவி நிற்குமானால் நாம் கர்த்தரைப் பூரணமாய்ப் பற்றிப்பிழைப்பதற்கு அவசியமாகும். தேவ ஊழியர் மிஷனில் சம்பளம் பெறுவதால் சபையார் தங்கள் பொறுப்பை உணராமல் நிர்விசாரமாயிருக்க இடமுண்டாகிறது. தங்களுக்காக வேலைசெய்யும் ஊழியரைச் சபையாரே ஆதரிப்பார்களானால், இவர்கள் மிஷன் சம்பளத்திற்காகப் பிரசங்கிக்கிறார்கள் என்கிற பேச்சு நீங்கிப்போகும். ஏனென்றால் ஜனங்கள் தங்கள் குருக்களைப் போஷிக்கவேண்டிய கடமையை எல்லா மதஸ்தரும் அறிந்தேயிருக்கிறார்கள்.

உத்தம ஊழியர்களை ஜனங்கள் உற்சாகமாய்ப் பராமரிப்பார்கள். அதுவே தேவ ஏற்பாடு. நாம் ஜனங்களுடைய ஆத்தும நன்மைக்காகப் பாடுபடுகிறோம் என்பதை அவர்கள் காணும்போது, தங்கள் சரீர நன்மைகளால் நமக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருப்பார்கள். கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆவியின் பலத்தோடே நாம் ஊழியஞ்செய்யும்போது, பரமபிதா நமக்குத் தேவையானவை சகலமு

களைக் கொடாதிரார். பஞ்சம் வருகிறதென்று அறிந்தபோது அந்தியோகியாவிலுள்ள கிரேக்க கிறிஸ்தவர்கள் பணம் சேகரித்து எருசலேமிலிருந்த தேவ ஊழியருக்கு அனுப்பினார்கள். இப்படி உதவிசெய்யும்படி அப்போஸ்தலர் அவர்களைக் கேட்கவுமில்லை. ஆவிக்குரிய தேவ ஊழியர் தங்கள் பராமரிப்பைக் குறித்து ஒருக்காலும் கவலைப்படவேண்டியதில்லை. ஆகையால் மிஷன்கள் உதவி நின்றாலும் ஆண்டவருடைய ஊழியம் நிற்காது. கர்த்தரை முழுவதுமாய்ப் பற்றிக்கொள்ளாமல் சம்பளத்திற்காக மாத்திரம் வேலைசெய்கிறவர்கள் கஷ்டத்திற்குள்ளாவார்கள். மிஷனில் பலதிறத்தாரும் வேலை செய்யலாம். மாதச் சம்பளம் தவறாது. ஆனால் சபையாரோ, ஒருவருடைய ஊழியம் தங்களுக்கு ஆசீர்வாதமாயில்லை என்று கண்டால் அவரைப் பராமரிப்பதற்கு முன் வரமாட்டார்கள்.

மேலும் இந்த ஊழியம் குறிக்கப்பட்ட சிலரை மாத்திரம் பொறுத்ததல்ல. தேவமக்கள் எல்லாரும் சேர்ந்து ஆண்டவரை மகிமைப் படுத்தவேண்டும். நாம் எந்தெந்த வேலையில், எந்தெந்த நிலைமையிலிருந்தாலும் நமது அன்புள்ள ஜீவியமும் கிருபையுள்ள பேச்சும் ஆண்டவருக்குச் சாட்சியாக விளங்கவேண்டும். அக்கினி பரவுவதுபோல் ஆவியைப்பெற்ற தேவமக்களால் கிறிஸ்துவின் நற்கந்தம் ஜனங்களுக்குள் இயல்பாகவே பரவும். நமது தேசத்தார் கிறிஸ்துவை அறிவதற்கு இதுவே சிறந்த வழி. பெந்தெகொஸ்தே சபையின் லட்சணமும் இதுவே. கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஜீவியத்தில் மாறுதலடைந்து, கிறிஸ்துவின் அன்பிலே பிழைப்பார்களானால் மற்ற மனுஷருக்கு ஜீவநதிகளாயிருப்பார்கள்.

## III. பெந்தேகோஸ்தே நாள் உலகத்திற்கு விசேஷம்.

பெந்தெகொஸ்தே விசேஷத்தில் உலகத்திற்கும் சம்பந்தம் உண்டு. ஆண்டவர் மாம்சத்தில் வெளிப்படுமுன் உலகத்திலிருந்தார். உலகத்தில் வருகிற எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகயிருந்தார். உலகம் அவரை அறியவில்லை. அவருடைய ஒளி யார் யாருக்குள் அக்காலங்களில் பிரகாசித்ததோ அவர்கள் கட-

யுள் அடியாரானார்கள். அவர் சரீரத்தில் வெளிப்பட்டபோது ஒளியாகிய அவர் உலகத்திற்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தமானார். இது பெரிய கிருபை! நித்திய ஒளியாகிய அவர் மனுஷருக்குள் மனுஷனாக வந்து தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும் தமது ஒளியைப் பரவச்செய்தார். உலகம் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருந்தபடியால் அவர்கள் ஒளியாகிய கிறிஸ்துவை விரும்பவில்லை. நாட்செல்லச் செல்ல அவரைப் பகைத்து அந்த ஒளியை அவித்துப்போடத் தீர்மானித்தார்கள். அவரைச் சிலுவையிலறைந்ததினால் ஒளியை அவித்துவிட்டதாக நினைத்தார்கள். ஜீவனுள்ள நித்திய ஒளியை அவிக்க யாராலாகும்? அவர் சரீரத்தைக் கொலைசெய்தார்கள். ஒளியை அவர்கள் தொடவில்லை. சூரியன் தன் மண்டலத்தில் மகிழ்ச்சியாயிருக்கிறதுபோல நித்தியமாகிய ஒளி தமது பிரயாணத்தை முடித்து மகிமையில் பிரவேசித்து மறுபடியும் தமது அடியார் உள்ளங்களில் பிரகாசித்தார். ஒளியோடு ஐக்கியப்பட்ட அவர்களும் ஒளியில் நடந்துகொண்டார்கள். வெளிச்சம் மறைவான காரியங்களை வெளிப்படுத்துவதுபோல, மனுமக்களின் மறைவான பாவங்களை வெளிப்படுத்தும்படி தமதடியாரை வெளிச்சங்களாக உலகத்தில் வைத்தார்.

உலகத்தின் பாவம் திருச்சபையால் உணர்த்தப்படவேண்டும். “அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.” உலகம் உணர்த்தப்படுவது பெந்தெகொஸ்தே நாளின் பலனாயிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளிலே தானே மூவாயிரம்பேர் பாவத்தை உணர்ந்து ரட்சிக்கப்பட்டதை காணுகிறோம். அதுமுதற்கொண்டு ஆவியினால் நிறைந்த ஊழியர் மூலமாய் மனுஷர் திரள் திரளாக உணர்த்தப் பட்டார்களென்பது நிச்சயம். ஆண்டவர் ஊழிய நாட்களில் உலகம் இதே மாதிரி ஏன் உணர்த்தப்படவில்லை? கிறிஸ்து மரிப்பதற்குமுன் பிரசங்கிப்பதற்குச் சுவிசேஷமில்லை. அவர் மரிக்குமுன் சுவிசேஷமேது? “என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற

கிரியைகளையும் செய்வான், இதைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று ஆண்டவர் சொன்ன கருத்தும் அதுதான். காட்டு யானையைப் பிடித்துப் பழக்கி அதைக்கொண்டு மற்ற யானைகளைப் பிடிப்பதுபோல, பாவிகளை ரட்சித்து, அவர்களைத் தமக்குச் சொந்தமாக்கி, அவர்களைக்கொண்டு மற்ற மனுஷரை ரட்சிப்பது ஆண்டவருடைய ஒழுங்கு. மீன் பிடிக்கிறவர்களைப் பார்த்து: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று ஆண்டவர் சொன்ன வாக்கு பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது.

ஆவியினால் நிறைந்த அடியார் கிறிஸ்துவின் சாட்சிகளானார்கள். சாட்சிகள் என்பது கிறிஸ்துவின் மாதிரிகளானார்கள் என்று அருத்தம். தங்களைப்போன்ற பலவீனமான பாவிகள் கிறிஸ்துவை நம்பி மேலான ஜீவியம் செய்வதை உலகத்தார் கண்டார்கள். அவர்கள் கிறிஸ்துவைப்பற்றிப் பேசின வார்த்தைகள் உண்மையும் ஆவியின் பலமும் பொருந்தினதாயிருந்தன. அவர்கள் பேச்சுக்கு எதிர் நிற்கக் கூடாமல், தங்கள் பாவங்களை உணர்ந்து அறிக்கைவிட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்பட்டார்கள். உலகம் தன் பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்தப்படுவதற்கு ஆவியினால் நிறைந்த தமது சபையை ஆண்டவர் பெந்தெகொஸ்தே நாளில் கட்டினார். இந்தச் சபை ஆண்டவர் உலகத்தில் தமது ரட்சிப்பை நிறைவேற்றுவதற்கு, ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு, அவர் கிரியை நடப்பிக்கும் சரீரமாயிருக்கிறது. கிறிஸ்து தமது ஆவியினால் நமக்குள் வசிப்பதும், நாம் அவரோடிணைக்கப்பட்டதும் நிச்சயமானால் அவர் நம்மைக்கொண்டு உலகத்தில் தமது சித்தத்தை நிறைவேற்றி வருகிறாரென்பது நிச்சயம். அவர் நமக்குள் வசிக்கிறதில்லையென்றால் நாம் ஒன்றுக்கும் உதவாதவர்களும், அவருடைய ராஜ்யத்திற்கு இடறல் உண்டாக்குகிறவர்களுமாயிருக்கிறோம் என்பது நிச்சயம்.

முடிவாகச் சில கேள்விகள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாக நமக்குள் வசிக்கிறாரா? அவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவதால் அவரை இன்னாரென்று நாம் அறிந்துகொண்டோமா? அவரை அறிந்

தால் அவர் மூலமாய்ப் பிதாவையும் அறிந்திருக்கிறோமா? நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறதா? ஆண்டவர் தமது போதனைகளை நமக்குள் வெளிப்படுத்துகிறாரா? சத்தியத்தை அறிகிற அறிவில் நாம் நாளுக்குநாள் வளருகிறோமா? கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த ரட்சிப்பை நமது ஜீவியத்தில் பலிதப்படுத்தியிருக்கிறாரா? ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிறைந்து மற்றவர்களுக்கு ஜீவநதிகளாயிருக்கிறோமா? அவர் நமக்குள்ளே வல்லமையாய்க் கிரியை செய்வதால் நாம் புறம்பே ஊழியஞ்செய்கிறோமா? கிறிஸ்துவின் சிந்தையும் அவர் சாயலும் கொஞ்சமாகிலும் நம்மில் காணப்படுகிறதா? நமது வீட்டாரும், நமது சபையாரும், நம்மோடு பழகுகிறவர்களும் கிறிஸ்துவின் சாயலை நம்மில் காண்கிறார்களா? நாம் கிறிஸ்துவை உலகத்திற்கு வெளிப்படுத்தும் மாதிரிகளா? கிறிஸ்துவின் அன்பு நம்மை நிரப்புவதால் நாம் விசேஷமாய் தேவமக்களோடும், மற்றவர்களோடும் அன்பாயிருக்கிறோமா? துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறோமா? எல்லாருக்கும் முன்பாகத் தாழ்மையாக நடந்துகொள்ளுகிறோமா? "அழுகிறவர்களோடு அழுது சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்பட்டு" நமது அனுதாபத்தைக் காண்பிக்கிறோமா? மற்றவர்கள் நமது ஜீவியத்தாலும் ஊழியத்தாலும் உணர்வடைந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரால் நடத்தப் படுகிறார்களா? தீமை ஒருவருக்கும் செய்யாமல் எப்பொழுதும் நன்மையே செய்துவருகிறோமா? எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் கர்த்தரையே நம்பியிருக்கிறோமா? தேவன் நிச்சயமாகவே நம்மை நடத்துகிறார் என்பதை மற்ற விசுவாசிகள் கண்டு அவர்களும் தேவநடத்துதலைத் தேடுகிறார்களா? ஜெபமானாலும், வேதவாசிப்பானாலும், பாட்டானாலும், சம்பாஷணையானாலும், பிரசங்கமானாலும் முழு இருதயத்தோடும் உண்மையோடும் வாஞ்சையோடும் செய்கிறோமா? கிறிஸ்து ஒருவரே நமது ஜீவியத்தின் நோக்கம் என்பதை மற்றவர்கள் அறிவார்களா? ஆண்டவர் நமது ஊழியத்தை ஆசீர்வதிக்கிறார் என்கிற நிச்சயம் நமக்குண்டா?

இக்கேள்விகள் உன்னதமானவைகள்போல் தோன்றலாம். அதுவே பெந்தெகொஸ்தே சபையின் அடையாளங்கள். அதுவே உண்மையான கிறிஸ்துமார்க்கம். 'மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடியபொறுமையும் உள்ளவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்பதை ஆலயத்தில் வாசிப்பதும் சபையார் அதைக் கேட்பதுமே போதுமா? அவ்வாறு நாம் நடக்கவேண்டுமென்பது தேவ நோக்கமா? இவ்வாசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்காவிட்டால் நமது ஆலயங்கள், சபைகள், ஆராதனைகள், போதனைகளால் பிரயோஜனமென்ன? இவைகள் இல்லாததினால் தானே கிறிஸ்துமார்க்கத்தின் வல்லமையை மற்றவர்கள் அறியக் கூடாமல் எல்லா மார்க்கங்களும் ஒன்றுதான் என்று பேசத்துணிந்திருக்கிறார்கள். நாம் தனித்தனியே கிறிஸ்துவின் ஐக்கியத்தில் பிழைத்து, அதன் பலனாக நமக்குள் அன்பும் ஒற்றுமையும் பெருகுமானால் திருச்சபையின் பலத்தை உலகம் அறியும். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் நமக்குள் வசிப்பதும், போதிப்பதும், கிரியை செய்வதுமே பெந்தெகொஸ்தின் விசேஷம்.

# XIV

## God's Guidance

## தேவ நடத்துதல்

*"கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது, நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்"* எரே. 10 : 23.

நாம் சிறுவர்களாயிருக்கும்போது நமது பெற்றோரைச் சார்ந்து பிழைக்கிறோம். நாம் பெரியவர்களாகும்போது உத்தரவாதம் நமது பேரில் விழுகிறது. கடவுளை அறிந்து அவராலே நாம் நடத்தப்பட வேண்டியது அவசியம். சிறு பிராயத்தில் நம்மைக் காப்பாற்றின தேவனே முடிவுபரியந்தம் நம்மைக் காப்பாற்றி நடத்தவேண்டியவராயிருக்கிறார். நம்மை நாமே நடத்திக்கொள்ளத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். பாவத்தால் நமது புத்தி அந்தகார மடைந்து, சித்தம் பலவீனமாகி, கடவுளுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்னதென்று பகுத்தறியக் கூடாதவர்களானோம். அவரவருக்கு நலமாகத்தோன்றின பாதையில் நடந்து அநேக சங்கடங்களுக்கு ஆளானோம். கர்த்தருடைய வழியோ ஜீவனும், சமாதானமும், ரட்சிப்புமான வழி. அந்த வழியில் நடப்பதே நமக்குப் பாக்கியம். ஆண்டவரே அந்த வழியில் நம்மை நடத்தவேண்டும். ஆண்டவரைப் பற்றிய நிச்சயம் நாம் செய்கிற ஆராதனைகள் ஆசாரங்களால் அல்ல; அவர் நமது ஆவிக்கும் சரீரத்திற்கும் உரிய காரியங்களில் நம்மை நடத்துவதினாலே தான் உண்டாகவேண்டும். அவருடைய நடத்துதல் நிற்கும்போது நாம் திகைக்கிறோம். ஏனென்றால் "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல; தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல."

## 1. பிதா நம்மை நடத்தவேண்டியது அவசியம்.

"கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது." சிருஷ்டிகர் பிரபஞ்சமனைத்தையும் உண்டாக்கின பின் அவை தாங்களே தங்களை நடத்திக்கொள்ளும்படி விட்டுவிட்டவரல்ல. அவர் சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கிரியை இடைவிடாமல் நடந்துகொண்டேயிருக்கிறது. கடவுள் நமது கண்களுக்கு மறைவாயிருப்பதுபோல, அவரது ஆளுகையும் நமக்கு மறைவாயிருக்கிறது. கடவுளை ஒப்புக்கொள்ளாத சாஸ்திரிகளுங்கூட பிரபஞ்சத்தின் ஒற்றுமையையும், அது ஆண்டு நடத்தப்படுகிற ஒழுங்கையும் கவனித்து, இவை யாவற்றையும் ஓர் பெரிய மனது நடத்துகிறது என்று அறிக்கையிட்டிருக்கிறார்கள். கடவுளை ஏற்றுக்கொண்ட தேவபக்தியுள்ள சாஸ்திரிகளோ, சிருஷ்டிப்பில் விளங்கும் அவரது அளவற்ற ஞானத்தையும் இடைவிடாத அவரது ஆளுகையையும் சிந்தித்து ஆனந்த பரவசமடைந்து அவரைப் போற்றுகிறார்கள். தேவாவியால் மனக்கண் பிரகாசிக்கப்பெற்ற சங்கீதக்காரன்: "கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார், அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது" என்கிறார். சர்வத்தையும் ஆளுகிறது என்று சொல்லும்போது அவர் ஆளுகைக்குத் தப்பினது ஒன்றுமில்லை. சகலமும் அவர் பார்வையிலும் விசாரணையிலும் இருக்கிறதென்பது நிச்சயம். நாம் உலகத்தின் காரியங்களைக் கவனிக்கும்போது தேவன் ஆளுகிறதுபோல் நமக்குத் தோன்றுகிறதில்லை. சகலமும் தன்தன் இஷ்டம்போல் நடக்கிறதாகத் தோன்றும். கடவுளற்ற மனுஷர் உலகத்தில் நன்றாயிருக்கிறார்களே, அவர்கள் தங்கள் சுய இஷ்டப்படி காரியங்களை நடத்திக்கொள்ளுகிறார்களே, தேவ நடத்துதலை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதிருந்தும் அவர்கள் கெட்டுப்போகவில்லையே என்கிறோம். அவர்கள் நன்றாயிருக்கிறார்கள் என்று நாம் நினைத்துக்கொள்வதேயல்லாமல், தங்களைத் தாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்கள் நன்றாயிருப்பதில்லை. கடவுளால் நடத்தப்படும் சிருஷ்டிப்புகளில் அவருடைய ஞானம் மகிமை விளங்குவதுபோல, தங்களைத் தாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்களில் அவருடைய மகிமை விளங்காது. ஏனென்றால் "மனுஷ

னுடைய வழி அவனாலே ஆகிறதல்ல, தன் நடையை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல." உலகத்தில் க்ஷேமமாயிருப்பதுபோல் அவர்கள் காணப்படலாம், ஆகிலும் கடவுள் நடத்துதல் இல்லாத வாழ்வில் சகலமும் சஞ்சலமாக முடியும்.

மேலும் கடவுளற்ற மனுஷரும் அவர் ஆளுகைக்குத் தப்பினவர்கள் அல்ல. பொல்லாதவர்கள் செழித்தோங்குகிறார்களே என்று நாம் கலங்கவேண்டியதில்லை. மனதாரத் தங்களை தேவ நடத்துதலுக்கு ஒப்புவித்து அவரால் நடத்தப்படுகிறவர்கள் அவருடைய ஆசீர்வாதத்திற்கு உரியவர்களாயிருப்பதுபோல, கடவுளை மறந்து, சுய இஷ்டப்படி நடந்து, பொல்லாப்பைச் செய்கிறவர்கள் அவருடைய ஆக்கினைக்கு உரியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவ ஆளுகையை உதறித் தள்ளிவிட்டாலும் அவர் அவர்களை ஆளாமல் விடார். நல்லோர் பொல்லார் யாவரும் அவர் ஆளுகைக் குட்பட்டவர்களே. பொல்லாதவர்கள் செய்யும் தீங்குகளையும் தமது ஆலோசனைக் கேற்றபடி நடத்த அவர் வல்லவராயிருக்கிறார். எஸ்தரின் புஸ்தகம் இதற்கு ஏற்ற திருஷ்டாந்தம். எஸ்தர் புஸ்தகம் வேதத்தில் இருந்தும் கடவுள் என்னும் பேர் அந்தப் புஸ்தகத்தில் இல்லை. அப்படியானால் அது கடவுளற்ற புஸ்தகமா? ஒருக்காலுமல்ல. கடவுள் பேரை அங்கே காணாவிட்டாலும் அவர் நடத்துதலை பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். அந்தச் சரித்திரத்தில் தேவகரம் மறைந்திருக்கிறது. மறைவான அவரது கரம் செய்த கிரியையோ பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ஆகாஸ்வேரு, வஸ்தி, எஸ்தர், மொர்தெகாய், ஆமான் என்பவர்களை சரித்திரத்தில் காண்கிறோம். சகலமும் அவர்கள் பேச்சும் அவர்கள் நடத்துதலும் போல் தோன்றுகிறது. மெய்யாகவே தேவன் அங்கேயிருந்தார். சரித்திரமுழுவதையும் அவரே நடத்தினார். தீமையைத் தண்டித்தார், நன்மையை மேன்மைப்படுத்தினார். உலகசரித்திரமும் இதுபோலவே அவரால் ஆளப்படுகிறது. சகலமும் தேவசித்தத்திற்கு விரோதம் போல் தோன்றினாலுமென்ன? ஆண்டவர் காரியத்துக்கு அயர்ந்ததுபோல் காணப்பட்டாலுமென்ன? பிரபஞ்சத்தின் அதிகாரம் அவர் கையிலிருக்கிறதென்பது நிச்சயம். நாம் சொற்பப் பார்வை

யுள்ளவர்களாதலால், நீண்டபார்வை யுள்ளவரின் நடத்துதலை கிரகித்துக் கொள்ளமுடியாமல், ஆண்டவர் சும்மாயிருக்கிறார் என்று நினைக்கிறோம். அவர் ஆளுகிறது மெய்யானால் இப்படிப்பட்ட அக்கிரமங்களை ஏன் அடக்கவில்லை என்கிறோம். அவர் பொல்லாதவர்களைக் கொஞ்சத்தூரம் போகவிட்டிருப்பது மெய்தான். ஆகிலும் அவர்கள் அவருடைய ஆளுகைக்கு மிஞ்சிப் போகமுடியாது. மனுஷன் தீமையானவைகளை யோசிக்கவோ செய்யவோ விடாமல் அவர் தடுக்கிறதாயிருந்தால் உலகத்தில் பாவமேயிராது. அப்படிச் செய்கிறதாயிருந்தால் அவர் ஆதாமைத் தடுத்திருப்பார். அப்படித் தடுக்கிறதாயிருந்தால் மனுஷன் சுயாதீனன் அல்ல. சாத்தான் சகல தீமைகளுக்கும் காரணனாயிருந்தும் அவனும் அவர் ஆளுகைக்குட்பட்டவனே. அவன் கடவுள் முன்பாக ஆஜராகி உத்தரவுபெற்றே தன் காரியங்களை நடத்தவேண்டும். ஆண்டவர் குறித்த அளவுக்கு மிஞ்சி ஒரு அங்குலமாகிலும் அவன் அசையக்கூடாது. நல்லோரின் செய்கையை அவர் ஆசீர்வதிப்பதுபோல, பொல்லாதவரின் செய்கைகளை தமது நோக்கத்துக் கிசைவாக மாற்ற வல்லவராயிருக்கிறார். இதுவே அவர் ஆளுகையின் மகத்துவம். அவருடைய திட்டத்திற்கு மிஞ்சிப்போக ஒருவனாலும் முடியாது. "அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது."

தேவமக்களாகிய நம்மை தேவன் நடத்தவேண்டும். அவருடைய நடத்துதலுக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புக் கொடுக்கும்போது, தமது அன்புள்ள சித்தத்தின்படியும், கிருபையுள்ள ஆலோசனைப்படியும் அவர் நம்மை நடத்துவார். காலம் கொடிய காலமாயிருக்கிறது. வேலையில்லாமை, சம்பாத்தியமில்லாமை, சரீரத்திற்குத் தேவையான நன்மைகள் இல்லாமை முதலான கஷ்டங்கள் மனுஷரைச் சஞ்சலத்திற்குள் அமிழ்த்தியிருக்கின்றன. மக்களைப்பற்றிய கவலையும் குடும்பத்திலுள்ள பலசிக்கலான விஷயங்களும் மனதைப் பாரப்படுத்துகின்றன. கடவுளுடைய பிள்ளைகள் என்பது நமக்குப் பெயர்; நிலைமையோ மகாபரிதாபம். இதற்குக் காரணமென்ன? பரமபிதா நம்மைச் சகல விஷயத்திலும் நடத்தும்படி நாம் அவருக்கு இடங்கொடுக்கவில்லை. எல்லாம் நமது சுய ஆலோசனைகளும் சுயமுயற்சிகளுமா

யிருக்கின்றனர். சர்வத்தையும் ஞானமாய் ஆளுகிற பரமபிதா தமது பிள்ளைகளை இவ்வுலகில் நடத்தாதிருப்பாரா? அவர் நம்மை நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். "நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." இதைவிடத் தெளிவான வாக்கு வேண்டுமோ? சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கடவுள் சர்வத்துக்கும் மேலானவர், தமக்கு அருமையான பிள்ளைகளை விசாரித்து நடத்துவதில் கவலையற்றிருப்பாரா? "அவர் உங்களை விசாரிக்கிறவர்" என்று வேதம் கூறுகிறது. நட்சத்திரங்களைப் பேர் சொல்லி அழைக்கிறவர் நமது தலையிலுள்ள மயிரை எண்ணியிருக்கிறார். உன்னதமான பர்வதங்களைப் பார்க்கிறவர், சிறுபுல்லின் இழையும் கவனிக்கிறார். விசாலமான சமுத்திரத்தை ஆளுகிறவரின் கண்களுக்கு புல்லின் மீதிருந்திலங்கும் பனித்துளியும் மறைவானதல்ல. அடைக்கலான் குருவிமுதலாய் அவர் கூடயிராமல் விழுவதில்லை. இவ்வாறு ஒவ்வொன்றும் அவர் கவனத்தில் இருக்கும்போது தமது பிள்ளைகளை அவர் மறப்பதெப்படி? நம்மை இடைவிடாது நடத்த அவர் வாஞ்சையுள்ளவரா யிருக்கிறார். "தன்வழியை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல." தன்னைத்தான் நடத்துகிறவன் கெட்டுப்போவான். கடவுள் நம்மை நடத்தவேண்டியது அவசியம்.

## II. கடவுள் யார் யாரை நடத்துவார்?

1. சாந்தகுணமுள்ளவர்களை. "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங். 25:9). தேவ நடத்துதலை நாம் பெற்றுக்கொள்வதற்குச் சாந்தகுணம் அவசியம். சாந்தகுணம் என்பது அமர்ந்த குணம். பெற்றோர் தனக்கு வேண்டியதெல்லாவற்றையும் செய்வார்கள் என்று நம்பி சாந்தமாயிருக்கும் குழந்தையைப்போல, நமது பரமபிதாவை நம்பி நாமும் சாந்தமாயிருக்கவேண்டும். மனுஷர் செய்யும் தீமைகளும் பலவித தொல்லைகளும் நம்மைக் கலக்கச் செய்வதால் நமக்கு ஆத்திரமும் பதட்டமும் உண்டாகலாம். நாம் ஆத்திரப்பட்

நமது சுய இஷ்டப்படி காரியங்களை நடத்தத் துணியலாம். ஆத்திரமும் பதஷ்டமும் எங்கே உண்டோ அங்கே சாந்தகுணம் என்று பேச இடமில்லை. பரம பிதா இருக்கிறார். அவர் எல்லாம் அறிவார். அவர் நமக்கு நன்மையானதைச் செய்வாரென்று நம்பி நாம் அமர்ந்திருப்பதே சாந்தகுணம். மனுஷர் நமக்கு அநியாயம் செய்தபோதிலும் நாம் ஆண்டவர் பேரில் நம்பிக்கையாயிருக்கும்போது அவர் நம்மை நியாயத்திலே நடத்தித் தமது வழியை நமக்குப் போதிக்கிறார். அவர் ஆசீர்வாதமுள்ள நடத்துதலை நாம் காணலாம். வீட்டிலுள்ள ஒரு பையன் துடுக்கனாயிருந்து, தகப்பன் சொல் கேளாமல், தன் இஷ்டப்படியே நடக்கிறதாயிருந்தால் தகப்பன் அவனை நடத்தமுடியாது. மற்ற மகன் தகப்பனை நம்பி சாந்தகுணமுள்ளவனாயிருந்தால் அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்ய தகப்பன் உத்தரவாதியாயிருப்பான். நமது குணம் எப்படிப்பட்டது? நமது இருதய நிலைமை என்ன? சாந்தகுணம் நமக்குண்டா?

2. குருடரை. "குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்" (ஏசா. 42.16). குருடன் துணிந்து நடக்கமாட்டான், ஏனென்றால் தான் போகும் வழி இன்னதென்று அவனுக்குத் தெரியாது. அவனுக்கு எல்லாம் இருளே. அவன் துணிந்து நடந்தால் குழியில் விழுவான் அல்லது வேறு ஆபத்திற்குள்ளாவான். ஆகையால் குருடன் தன்னை வழி நடத்தும்படி நம்பிக்கையான ஒரு மனுஷனை எப்பொழுதும் சார்ந்திருக்கிறான். அவன் குருடனானபடியால் காலமெல்லாம் பார்வையுள்ள மற்றொருவனால் நடத்தப்படவேண்டியவனாயிருக்கிறான். தேவனுடைய பிள்ளைகளும் குருடரே. ஆண்டவரும் அவர்களை அப்படியே பாவித்து நடத்துகிறார். "என் தாசனையல்லாமல் குருடன் யார்? உத்தமனையல்லாமல் குருடன் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனையல்லாமல் அந்தகன் யார்?" முதலில் குருடரைத் தாம் நடத்துவ

தாகச் சொல்லி, சற்று பின்பு அந்தக் குருடர் இன்னாரென்று விவரிக்கிறார். ஆண்டவருடைய பிள்ளைகளும் உத்தம ஊழியருமே குருடர். அவர்கள் சுய இஷ்டப்படி எதையும் துணிந்து செய்யார்கள். சகல காரியங்களையும் பிதாவுக்கு ஒப்புவித்து அவருடைய நடத்துதலுக்குக் காத்திருப்பார்கள். ஆண்டவர் அவர்களை நடத்துவதற் கேற்றாற்போல் இணங்கி நடப்பார்கள். அவர்கள் குடும்பக் காரியங்களில் இதைப்பற்றி அதைப்பற்றி என்னசெய்யப்போகிறீர்களென்று யாராகிலும் அவர்களைக் கேட்டால்: தெரியாது என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்வது பெருமையுமல்ல பொய்யுமல்ல. உண்மையிலேயே அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் பரம பிதாவின் கரத்தைப் பிடித்து நடக்கும் குருடர்கள். அவரையே பூரணமாய் நம்பி அவர் நடத்துதலுக்கு மனப் பூர்வமாய்க் காத்திருப்பவர்கள். இவர்கள் தாங்களாக ஒன்றைச் செய்யத் திராணியற்றவர்களாக இருப்பதால் ஆண்டவரே தங்களை நடத்தும்படி தங்களையும் தங்கள் காரியங்களையும் அவர் கையில் விட்டு விடுகிறார்கள். உண்மையுள்ள ஆண்டவர் தமது வாக்குப் பிசகாமல் அவர்களைக் கிருபையாய் நடத்துகிறார். அவர்களுக்கு முன்பாக இருளைவெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குகிறார். அவர் அவர்களைப் படிப்படியாக நடத்தி, இருள் என்று நினைத்த காரியத்தை வெளிச்சமாகவும், கோணல் என்று மயங்கின விஷயத்தைச் செவ்வையுமாக்கி அவர்களை மகிழ்ச்சியாக்குகிறார். இந்த அனுபவம் அவர்களுக்கு இருப்பதால் சுய இஷ்டப்படி எதையும் செய்யத் துணியார்கள். கர்த்தரை எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் நம்பிப் பிழைப்பதே அவர்கள் பாக்கியம். மற்றவர்கள் விஷயத்தில் எவ்வளவோ பிரயாசத்தோடும் எவ்வளவோ காலஞ்சென்றும் முடிகிற காரியங்கள், இவர்கள் விஷயத்தில் ஒரே நாளில் முடியும். இவ்வாறு கர்த்தரையே அவர்கள் சார்ந்து பிழைப்பதால் அவர்கள் சாந்தகுணமுள்ளவர்களா யிருக்கிறார்கள். "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்தகுண முள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."

3. **தேவராஜ்யத்தைத் தேடுவோரை.** நமது வேலைகள் யாவும் முக்கியமாய் நமது சரீரத்தைப் பற்றினதா யிருக்கின்றன. என்னத்

தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், எங்கே குடியிருப்போம், மக்கள் காரியங்களை எப்படி ஒழுங்கு பண்ணுவோம், கடனை எப்படித் தீர்ப்போம் என்று குடும்பத்திற்குரிய பற்பல கவலைகள் நம்மைப் பாரப்படுத்துகின்றன. ஐசுவரியவான் தனக்குள்ளதைப் பாதுகாப்பதில் விசாரமுற்றிருக்கிறான். லட்சாதிபதியும் கவலைக்கு நீங்கினவனல்ல. உள்ளவன் தனக்குள்ளதில் கவலைகொள்ளும்போது, இல்லாதவன் தனக்கு இல்லையே எனக்கவலை கொள்ளுகிறான். இதுவிஷயத்தில் கடவுள் நடத்துதல் நமக்கு மிகவும் அவசியம். அவர் நம்மைச் சகல காரியங்களிலும் பராமரித்து நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். நமது சங்கடங்கள் நீங்கி சமாதானத்தோடு நமது வாழ்நாளைக் கழிப்பதற்கு ஒரு வழி தோன்றுமானால் நமக்கு எவ்வளவோ சந்தோஷம்! அந்த வழியைத்தான் ஆண்டவர் நமக்குக் காண்பிக்கிறார். "நீங்கள் தேவராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் கூடக்கொடுக்கப்படும்." ராஜ்யத்தையே தேடுங்கள் என்பது தேவ ஆளுகையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதாவது தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களில் நாம் முழுக்கவனம் வைத்து, அவருடைய ராஜ்யத்திற்காகச் சிரமம் எடுத்துக் கொள்ளும்போது, நமக்கான காரியங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் ஏற்றுக்கொண்டு நம்மை நடத்துகிறார். காலமெல்லாம் நம்மைப் பாரப்படுத்திக் கவலைக்குள்ளாக்கின காரியங்களை அவர் ஏற்றுக்கொண்டு காலமெல்லாம் நாம் அனுபவிக்காத ராஜ்யத்தின் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நமக்கு அருளுகிறார். இதுவே தேவ ஒழுங்கு. இதுவே நாம் பிழைக்கும்வழி. ஆண்டவர் காரியத்தில் நாம் சிரத்தையாயிருக்கும்போது, நமது காரியத்தில் அவர் சிரத்தையாயிருக்கிறார். ஆவிக்குரிய ராஜ்யத்தின் பிள்ளைகளாக நாம் பிழைக்கும்போது இருபக்கங்களிலும் நமக்கு ஆசீர்வாதமுண்டாகும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுவோம், சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளையும் அடைவோம். தேவராஜ்யத்தை அசட்டை செய்து சரீரத்திற்குரிய காரியங்களுக்காக நாம் கவலைப்படுவோமானால், ஆவிக்குரிய நன்மைகளையும் பூமிக்குரிய பராமரிப்பையும் இழந்துபோவோம்.

அப்படியானால் நாம் வேலை செய்யாமலும் பிரயாசப் படாமலும் கடவுளைத் தியானித்துக் கொண்டேயிருந்தால் ஆண்டவர் சாப்பாடு போடுவாரா என்று கேட்பவரும் உண்டு. இப்படிக் கேட்பவர் கடவுளை அறியாதவர் என்பதற்கு இந்தக் கேள்வியே அத்தாட்சி. சோம்பேறியைப் போஷித்துக் காப்பாற்றுவதாக ஆண்டவர் சொல்லவில்லை. "உன் கையின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்" என்பதே அவர் வாக்கு. மூன்று வருஷகம் பிரசங்க ஊழியம் செய்த ஆண்டவர் பதினெட்டு வருஷங்களைப் பாடுபட்டு வேலைசெய்து குடும்பத்தைப் பராமரித்தார். பரம பிதா அவர் கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்தார். அவர் முற்றிலும் ராஜ்யத்தின் ஊழியத்திற்கென்று வெளிப்பட்டபின் அவருக்குத் தேவையானதை பிதா அவருக்குக் கொடுத்தார். ஆண்டவர் நம்மை எந்த நிலைமையில், எந்த இடத்தில், எந்த வேலையில் வைத்திருக்கிறாரோ, அங்கே நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளாக நடந்துகொண்டு, நமது வேலையை கடவுள் பார்வையில் உண்மையோடும் முழுபலத்தோடும் செய்யவேண்டும். ஆண்டவர் தமது வாக்குப்படி நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பார். நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து, அவருடைய பிள்ளைகளிடத்தில் அன்புவைத்து, அவருடைய ராஜ்யத்திற்காக உழைக்கும்போது பரம பிதா நமது குடும்பக் காரியங்களை ஏற்றுக்கொண்டு, நம்மைக் கிருபையாய் நடத்தி, நமக்கு வேண்டிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பார். முக்கின கவலையும் கலக்கமும் நீங்கி நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம்.

4. **தமது ஆடுகளை.** "தன் ஆடுகளைப்பேர் சொல்லிக் கூப்பிட்டு அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான்." (யோ. 10:3). இந்த அதிகாரத்தில் ஆண்டவர் தம்மை நல்ல மேய்ப்பன் என்கிறார். தமது ஆடுகளை நடத்துவதாகச் சொல்லுகிறார். கபடும் தந்திரமுமுள்ள நரிகளை அல்ல. பிடிவாத குணமுள்ள கரடிகளை அல்ல. பட்சிக்கும் குணமுள்ள ஓநாய்களை அல்ல. சாந்தமுள்ள ஆடுகளை அவர் நடத்துவார். தமது ஆடுகளுக்கு மூன்று அடையாளங்கள் கொடுக்கிறார். அவைகள் அவரை அறியும்; அவரும் அவைகளை அறிவார். ஆடுகளை அறிந்த மேய்ப்பன்; மேய்ப்பனை அறிந்த ஆடுகள்.

ஆடுகள் அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். ஆடுகள் அவரைப் பின்செல்லும். ஆண்டவர் நடத்தும் ஆடுகள் அவரை இன்னாரென்று அறிந்து, அவர் வார்த்தைக்குச் செவிகொடுத்து, அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும். மேய்ப்பனாகிய அவர் அவைகளுக்கு நல்ல மேய்ச்சல் கொடுத்து, தண்ணீர் காட்டி, மத்தியானத்தில் சோலையின் கீழ் மடக்கி இளைப்பாற வைத்து, இரவில் துஷ்டமிருகங்களால், திருடரால் மோசம் வாராதபடிக்கு விழித்திருந்து பாதுகாக்கிறார். தமது உயிரையும் அவைகளுக்காகக் கொடுப்பார். இதுவே தேவ நடத்துதல். அந்த நடத்துதலில் பராமரிப்பும் பாதுகாப்பும் உண்டு. தேவனுடைய மக்கள் பேதை ஆட்டுக்கொப்பானவர்கள். அவர்கள் சாந்தகுணமுள்ளவர்கள். அவர்கள் தங்கள் பலவீனத்தை உணர்ந்து தேவனையே சார்ந்து பிழைப்பதால் அவர்களை வழி நடத்தும் உத்தரவாதத்தை அவரே எடுத்துக்கொள்ளுகிறார். ஆண்டவருடைய கிருபையுள்ள நடத்துதல் நமக்குக் கிடைக்கவேண்டுமானால் நாமும் ஆடுகளைப்போல நல்ல மேய்ப்பராகிய கிறிஸ்துவை அறிந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

5. கர்த்தரை எப்பொழுதும் நினைத்துக் கொள்ளுகிறவர்களை. "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்" (நீதி. 3.6). எங்கேயிருந்தாலும், எங்கே போனாலும், என்னவேலை செய்தாலும், இரவும் பகலும் கர்த்தரை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். இது மந்திர உச்சரிப்பு போல் அல்ல. ஜெப மாலையைக் கையில் வைத்து எண்ணுவதல்ல. உண்மையிலேயே நமது இருதயம் ஆண்டவர் அன்பால் நிறைந்து, அவர் சமுகம் நம்மோடிருப்பது நமக்குப் பிரத்தியட்சமாக வேண்டும். அவர் நமது பாதைகளைச் செவ்வை பண்ணவேண்டுமானால் அவர் கூடயிருப்பதை நாம் மறந்துபோகக் கூடாது. நமது கண்கள், கைகள், கால்கள் வேலையில் முயற்சியாயிருந்தாலும் நமது மனம் எப்போதும் ஆண்டவர் பேரிலேயே யிருக்கவேண்டும். ஒரு வேளை வேலையின் ஊக்கத்தால் நாம் அவரை நினைக்கக் கூடாமற்போனாலும் அது மறதியல்ல. நாம் முழுக்கவனத்தோடு செய்யும்

வேளையும் அவரை நினைப்பதாகும். நாம் நினைக்காத நேரத்திலும் "கர்த்தரோ நம்மை நினைத்திருக்கிறார்." இவ்விதமாய் நமது ஜீவியத்தில் ஆண்டவரை நினைத்துக்கொள்ளும்போது அவர் நமது காரியங்களைச் செவ்வைப் படுத்துகிறார்; அநேக தீமைகளுக்கு நம்மை விலக்கி ரட்சிக்கிறார். அந்நிய தேசத்தில் யோசேப்பு கர்த்தரோடு சஞ்சரித்தார். கர்த்தரும் யோசேப்பை விட்டு விலகவில்லை. எவ்வளவோ பாடுகள் அவமானங்கள் நேரிட்டும், கர்த்தர் அவைகளின் மூலமாய் யோசேப்பின் பாதைகளைச் செவ்வைப் படுத்தினார். யோசேப்பு எகிப்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார். கர்த்தரை எப்பொழுதும் நாம் நினைத்துக்கொள்ளும்போது நாம் ஒன்றிலும் சோர்ந்து போகமாட்டோம். ஒருவரிடத்தில் ஒரு தயவுக்காகப் போகிறோம். நமக்கு உதவிசெய்யும்படி அவரைக் கேட்கிறோம். அவர் அனுகூலமான உத்தரவு கொடுத்தாலும் சரிதான், முடியாது என்று சொல்லிவிட்டாலும் சரிதான். ஏனென்றால் கர்த்தரை எப்பொழுதும் நினைத்து, நமது கண்கள் அவர் பேரில் இருக்கிறபடியால், அவர் நமக்கு நன்மையாயிருப்பதைச் செய்வாரென்று அறிந்திருக்கிறோம். சுய இஷ்டப்படி முயற்சி செய்வோமானால் காரியம் வாய்த்தால் சந்தோஷமும், வாய்க்காவிட்டால் மனச்சோர்வும் துக்கமும் உண்டாகும். நமது வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்ளும்போது அவர் நமது பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.

6. **தமக்குக் காத்திருப்பவர்களை.** "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" (ஏசா. 64 : 4). இது மகா உன்னதமான வாக்கு. ஆண்டவர் தமக்குக் காத்திருக்கும் பிள்ளைகளுக்குச் செய்யும் நன்மைகளையும், அவர்களை நடத்தும் வழியையும் மனுஷன் அறியமுடியாது. அவர் ஒருவருக்கே அது தெரியும். அவர் நன்மையானவைகளைச் செய்யும்போது மனுஷர் கண்டு ஆச்சரியப்படுவார்கள். அவர் தமது பிள்ளைகளை நடத்தும் விஷயத்தில்

ஒருவரிடத்திலும் ஆலோசனை கேட்பதில்லை. இந்த ஆசீர்வாதமான நடத்துதல் அவருக்குக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கே கிடைக்கும்.

நாம் சுருக்கமான வாழ்வுள்ளவர்களாதலால் நாம் விரும்பும் காரியங்களை ஆண்டவர் சீக்கிரமாய்ச் செய்யவேண்டுமென்று ஆத்திரப்படுகிறோம். அதற்காக ஊக்கமாய் ஜெபிக்கிறோம். உத்தரவைக்காணோம். என் ஆண்டவர் காது கேளாதவர்போலிருக்கிறார், ஏன் மறு உத்தரவு கொடாதிருக்கிறார் என்று நமக்குள்ளே கேட்டுக்கொள்ளுகிறோம். ஆனால் ஆண்டவர் நமது காரியங்களை அறியாதவர் அல்ல. நமது ஜெபங்களைக் கேளாதவருமல்ல. நாம் கேட்பதிலும் மேலான நன்மைகளை நமக்குக் கொடுப்பதற்காக அவர் தாமதிக்கிறார். நம்மைக் காத்திருக்கும்படி வைக்கிறார். நாம் விரும்புகிறபடியல்ல அவர் விரும்புகிறபடி; நாம் கேட்கிற நேரத்தில் அல்ல அவர் கொடுக்கும் நேரத்தில் நன்மையானவைகளை நமக்குச் செய்வார். ஒரு நிமிஷமும் முந்தவுமாட்டார் ஒரு நிமிஷம் பிந்தவு மாட்டார். ஆகையால் தேவமக்கள் ஆண்டவருடைய வேளைக்காகக் காத்திருக்கவேண்டும். அவர் சும்மாயிருப்பதுபோல் நமக்குத்தோன்றலாம். ஏன் சும்மாயிருக்கிறீர் என்று நாமும் கேட்கலாம். அவர் சும்மாயிருப்பதுபோல் தோன்றும்போதுதான் நமக்கான காரியத்தை அவர் ஆயத்தம் பண்ணுகிறார். தகப்பனைப் பார்த்து மகன்: அப்பா, நான் கேட்டதைப் பற்றி ஒன்றும் பேசாமலிருக்கிறீர்களே என்று கேட்க, தகப்பன்: மகனே, உன் காரியமாகத்தானே அலுவலாயிருக்கிறேன் என்றார். சங்கீதக்காரனும் நம்மைப்போலவே ஜெபித்தும் உத்தரவு வராதபோது: என் ஆண்டவரே, பேசாமலிருக்கிறீர்? ஏன் பேசாமல் சும்மாயிருக்கிறீர் என்று கேட்டார். காத்திருக்கவேண்டிய அவசியம் அப்போது அவருக்குத் தெரியவில்லை. பிற்பாடு அதை அறிந்துகொண்டார். "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்" என்கிறார். கர்த்தருக்காக நாம் பொறுமையுடன் காத்திருக்கும்போது, நாம் எதிர்பார்த்ததிலும் மேன்மையான காரியங்களை அவர் நமக்குச் செய்வார். என்னைக் காத்திருக்கும்படி செய்த ஆண்டவர் எனக்குப் பெரிய காரியத்தைச் செய்

தாரே என்று சொல்லி, ஆனந்த பரவசமடைந்து, ஆனந்தக்கண்ணீர் சொரிவோம்.

ஆத்திரமும் அவசரமும் நமக்கே கேடாகும். இஸ்ரவேல் தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திராமல் வனாந்தரத்தில் தங்களை அழித்துக்கொண்டார்கள். ஆத்திரமான நினைவு, ஆத்திரமான பேச்சு, ஆத்திரமான செய்கை நமக்கே அவமானத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கும். தேவ நடத்துதலுக்குக் காத்திராமல் குறுக்கு வழி பாய்வது நமக்கே ஆபத்தாகும். தேவ ஆலோசனைக்குக் காத்திராமல் அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று காரியத்தை நடத்துவதும் கவலைக்கு இடமாகும். உயர்ந்த சிகரத்தில் ஏறும்படி சிலர் மலையேறினார்கள். மலை வழிகாட்டி அவர்களைத் தகுந்த பாதை வழியாக நடத்திக்கொண்டுபோனான். அந்தச் சிகரத்திற்குச் சமீபிக்கவே, அவர்களில் ஒருவன் எல்லாருக்கும் முந்திச் சிகரத்தில் ஏறும்படி விரும்பி, திடீரென அவர்களைவிட்டுப் பிரிந்து குறுக்குவழி பாய்ந்தான். இதைக் கண்ட வழிகாட்டி வேகமாய்ப் பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்துப் பின்னாக இழுத்து: நீ அவ்வழி நடந்திருந்தால் சில நிமிஷத்திற்குள் பாதாளம்போய்ச் சேர்ந்திருப்பாய் என்றான். ஏனென்றால் அவன் பாதை என்று நினைத்து நடக்க ஆரம்பித்த குறுக்குவழி பயங்கரமான பிளப்புள்ள அகாதப்படுகுழி. உறைபனி அந்தப் பிளப்பை மறைத்திருந்தது. தேவன் நம்மை நடத்தும் பாதையைவிட்டு நாம் குறுக்குவழி பாய்வது நமக்கு அபாயமாகும்.

தேவ நடத்துதலை அறிவதற்குப் பொறுமையுடன் காத்திருப்பது நல்லது. பொறுமை அமர்ந்த மனதை நமக்குத் தந்து ஆண்டவர் நம்மை நடத்தச் சித்தங்கொண்டிருக்கிற வழியை நாம் காணும்படிசெய்யும். ஆத்திரமும் பதஷ்டமும் நமது புத்தியைக் குழப்பி நமது மனதைக் கலங்கச் செய்யும். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் மண்டித் தண்ணீரை வார்த்தால் அந்தத் தண்ணீரின் அடியைப் பார்க்கமுடியாது. அதை அப்படியே ஒரு மேஜைமேல் வைத்து சற்றுநேரம் காத்திருந்தால் வண்டல் யாவும் அடியில் இறங்க, தண்ணீர் தெளிவாகி, நாம் ஊடுருவிப் பார்க்கக் கூடியதாகும். தேவ

னுடைய தன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்னதென்று நாம் பகுத்தறிய வேண்டுமானால் நமக்குத் தெளிந்த புத்தி அவசியம். கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறவர்களுக்கே இந்தத் தெளிவுள்ள புத்தி கிடைக்கும். அவர்கள் ஜீவ பாதையில் நடத்தப்பட்டு தேவனால் ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள்.

## III. எப்படி நடத்துவார்?

கடவுள் நம்மை நடத்தவேண்டியது அவசிய மென்பதையும், அவர் யார் யாரை நடத்துவார் என்பதையும் கவனித்தோம். இப்போது அவர் நம்மை எப்படி நடத்துவார் என்பதைப் பார்ப்போம். இது நமது அநுபவத்தோடு சம்பந்தப் பட்டிருப்பதால் இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது அவசியம்.

1. தமது வசனத்தால் நடத்துவார். "நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" என்கிறார். எப்படிப் போதிப்பார்? வானத்திலிருந்து அசரீரி வாக்கு நமது காதிற்குத் தொனிப்பதல்ல. நமது கையிலிருக்கும் திருவசனத்தின் மூலமாய் அவர் நம்மைப் போதித்து நடத்துகிறார். கர்த்தருடைய வசனம் நமது பாதைக்கு வெளிச்சமும் நமது வழிக்கு ஒளியாகவும் இருக்கிறது. கர்த்தருடைய வசனத்தில் பிரியமாயிருந்து எப்பொழுதும் அதில் தியானமாயிருப்பவர்கள் தங்கள் வாழ்விற்கடுத்த காரியங்களில் தேவ சித்தமின்னதென்று அறிந்துகொள்ளுகிறார்கள். இது வேதாகமத்தைத் திடீரெனத் திறந்து ஒரு வாக்கியத்தில் விரல் வைத்துப் பார்ப்பதல்ல. அது நல்ல வழக்கமல்ல. தேவசித்தம் அறிய விரும்பின ஒருவன் இவ்வாறு திறந்து விரல் வைத்து வாசித்தான். "யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்" என்னும் வாக்கியம் வந்தது. அதை வெறுத்து மறுபடியும் திறந்து வேறொரு இடத்தில் விரல் வைத்து வாசித்தான். "நீயும் போய் அந்தப்படியே செய்" என்று வந்தது. ஆ, இந்த வழக்கம் மோசம் என்று அதை விட்டுவிட்டான். தேவ சித்தம் அறிய விரும்புகிறவர்கள் நாள்தோறும் ஒழுங்காய்ச் சில அதிகாரங்கள் வாசித்துத் தியானிப்பார்கள். அவர்கள் கருத்தாய் வாசித்து ஆராய்ச்சிசெய்யும் வசனங்

கள் மூலமாய்த் தேவன் தமது சித்தத்தை அவர்களுக்குத் தெரிவிக்கிறார். ஜார்ஜ் முல்லர் இதற்குப் பலத்த திருஷ்டாந்தம். அவர் மனுஷரிடம் உதவிதேடாமல் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை போஷித்துக் காப்பாற்றி வந்தார். இது மகா பொறுப்பும் உத்தரவாதமுமான வேலை. தமக்கு வேண்டிய சகல காரியங்களுக்கும், செய்யவேண்டிய சகல வேலைகளுக்கும் தேவ நடத்துதலைத் தேடினார். அந்த நடத்துதலை தாம் தினந்தோறும் வாசிக்கும் வேதவசனத்தின் மூலமாய்க் கண்டடைந்ததாக அவரே சொல்லுகிறார். இதன் உண்மையை தேவ மக்கள் அநேகர் அறிவார்கள். தங்கள் குடும்பம் உத்தியோகம் முதலிய பல காரியங்களில் தேவ நடத்துதல் அவர்களுக்கு வேண்டியதிருக்கிறது. தாங்கள் அனுதினமும் வாசிக்கும் வேத வசனத்தின் மூலமாகவும், அனுதின தியானம், வழிக்கு ஒளி என்னும் புஸ்தகங்கள் மூலமாகவும் தேவ சித்தத்தைக் கண்டடைகிறார்கள். அவர்கள் யோசனைகளை அறிந்த ஆண்டவர் தமது வசனத்தின் மூலமாய் அவர்கள் மனதைப் பிரகாசிப்பித்து, அவர்கள் கலங்கின காரியத்தில் தைரியத்தையும், சந்தேகித்த விஷயத்தில் நிச்சயத்தையும் கொடுக்கிறார். தேவ வசனம் அவர்கள் இருக்கும்போது அவர்களோடு சம்பாஷிக்கும். நடக்கும்போது வழிகாட்டும், படுக்கும்போது அவர்களைக் காப்பாற்றும். தேவ ஆலோசனையைத் தேடும் மக்களை ஆண்டவர் தமது வசனத்தின் மூலமாய்ப் போதித்து நடத்துகிறார். வேதத்தை அசட்டை செய்கிறவர்களுக்கு தேவ நடத்துதல் இல்லை.

2. **ஆவியினால் நடத்துவார்.** “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.” கர்த்தாண்டவருடைய ஜீவியம் முழுவதும் ஆவியின் நடத்துதலே. அவர் ஆவியினால் பிறந்தார். ஆவியில் வளர்ந்தார். ஆவியினால் வனாந்தரம் சென்றார். ஆவியின் பலத்தால் கலிலேயா திரும்பினார். ஆவியினால் உபதேசித்தார். ஆவியினால் பலத்த கிரியைகளைச் செய்தார். ஆவியினால் சிலுவைக்குச் சென்றார். ஆவியில் உயிர்த்தெழுந்து மகிமைக்குட் பிரவேசித்தார். தம்மை நடத்தின அதே ஆவியைச் சீஷர்களுக்கு அருளினார். அந்த ஆவியானவர் சீஷர்களை நடப்பி

அவர்களை ஜீவியத்திலும் ஊழியத்திலும் வழி நடத்தினார். "சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்." தேவ வசனத்தின் ரகசியங்களை வெளிப்படுத்தி, நமது ஜீவியத்தைப் பலப்படுத்தி, நமது ஊழியத்தில் நம்மை நடத்துவதும் தவிர, சகல காரியங்களிலும் ஆவியானவர் நம்மை நடத்துகிறார். நாம் ஆவிக்குரியவர்களாயிருந்து, ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போது ஆவியானவரின் உள்ளான போதனையும் நடத்துதலும் நமக்குக் கிடைக்கும். ஒரு காரியம் தேவ சித்தத்திற்கு விரோதமாயிருந்தால் ஆவியானவர் சந்தேகத்தையும் மனக்குழப்பத்தையும் உண்டாக்குவார். ஒரு காரியம் அவருக்குச் சம்மதியானால் உற்சாகத்தையும் நிச்சயத்தையும் உண்டாக்குவார். இது விஷயத்தில் நாம் தவறிப் போகாதபடி தேவ வசனத்தின் போதனையையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் ஆவியானவரின் போதனை எப்பொழுதும் சத்திய வசனத்திற்கு ஒத்திருக்கும். அவர் வஞ்சக வழியில் அல்ல, சகல சத்தியத்திலும் நடத்தும் சத்திய ஆவியாயிருக்கிறார். ரதத்துடனே சேர்ந்துகொள்ளும்படி பிலிப்புவை ஏவி நடத்தினார் (அப். 8:29). கொர்நேலியு அனுப்பின மனுஷரோடே போகும்படி பேதுருவை ஏவி நடத்தினார் (அப். 10:19). ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குத் தடை பண்ணினார். அவர்கள் பித்தினியா நாட்டுக்குப் போகவேண்டாம் என்று தடுத்தார் (அப். 16.6, 7). இவ்வாறு தடுத்த ஆவியானவரே அவர்கள் பிலிப்பிப் பட்டணத்துக்குப் போகவும் அங்கே சபை உண்டாகவும் செய்தார். இது புறம்பான நடத்துதல் அல்ல. தேவாவியானவர் நமது ஆவியின் மூலமாய் இதைச் செய், செய்யாதே; போ, போகாதே என்று ஏவி நடத்துகிறார். ஆவிக்குரியவர்களுக்கு இதன் அனுபவம் தெரியும். ஒரு மனுஷன் தங்களைப் பார்க்க வரும்போதே அவன் முகத்தைப் பார்த்து, ஆள் எப்படிப்பட்டவன் என்று அறிந்து கொள்வார்கள். ஒருவன் பேசும்போதே அவன் சத்தத்தைக் கொண்டு அவன் தன்மையைக் கண்டுகொள்ளுவார்கள். உத்தமன் இன்னான், மாயக்காரன் இன்னான் என்பதை ஆவியினால் பகுத்தறிவார்கள். ஜெபம் எவ்வளவு தொனியாயிருந்தாலும், பிரசங்கம் எவ்வளவு சாமர்த்தியமாயிருந்தாலும் அவைகள் ஆவிக்குரியவைகள் அல்லவென்

பதை உடனே அறிந்துகொள்வார்கள். இதுபோலவே சகல காரியங்களிலும் ஆவியானவர் அவர்களைப் போதித்து நடத்துகிறார். கிறிஸ்துவின் ஆவியில்லாதவர்களுக்கு தேவ நடத்துதல் இல்லை.

**3. தமது பிள்ளைகளைக்கொண்டு நடத்துவார்.** தேவதூதர்கள் தமது பணிவிடைக்காரராகுதும் அவர்களை நமது கண்கள் காண்பதில்லை. அவர்கள் பணிவிடை நமக்குண்டென்பது நிச்சயம். ஆனால் நமது கண்கண்ட தேவதூதர்கள் கடவுளுடைய பிள்ளைகளே. ஆண்டவர் தமது பிள்ளைகளைக்கொண்டு தமது பிள்ளைகளை நடத்துகிறார். பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில் கீழே விழுந்து, கண்பார்வையற்று: ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேட்க அவர்: நீ எழுந்து பட்டணத்திற்குள்போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அந்தப்படி ஆண்டவர் தமது அடியானாகிய அனனியாவை அனுப்பி பவுலைத் தைரியப்படுத்தி வழி நடத்தினர். பவுல் பிந்தி அப்போஸ்தலரோடு சேர்ந்துகொள்ளப் பார்த்தபோது, அவர்கள் சந்தேகப்பட்டு அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. பர்னபா பவுலைச் சேர்த்துக்கொண்டு அவரைத் தைரியப்படுத்தினர். இதுபோலவே ஆண்டவர் காலத்துக்காலம் தமது பிள்ளைகளைக்கொண்டு நம்மைத் தைரியப்படுத்தி வழிநடத்தி வந்திருக்கிறார். தேவனுக்குத் தங்களை ஒப்புவித்து அவருடைய ராஜ்யத்திற்கென்றும் அவருடைய மகிமைக்கென்றும் உத்தமமாய் உழைக்கிற தமது அடியாருக்கு உதவிசெய்ய, அவர் தமது மக்களை எப்பொழுதுமே ஆயத்தமாய் வைத்திருக்கிறார். நமது ஜீவகாலத்தைக் கொஞ்சம் பின்னுகப் பார்ப்போமானால் ஆண்டவர் தமது பிள்ளைகள் மூலம் நம்மைத் தைரியப்படுத்தி நம்மை வழிநடத்தி வந்த கிருபையைக் காணலாம். அவர்கள் ஆலோசனையும், அன்பும், அனுதாபமும், சகாயமும் நாம் நமது ஊழியத்தில் முன்னேறிச் செல்வதற்கு எவ்வளவோ அனுகூலமாயிருந்தன வென்பது நிச்சயம். நாம் [illegible] திரியவேண்டிய அவசியமில்லை. நமது ஜீவியமும் ஊழியமும் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்குமானால், நமக்குத் தேவையான நன்மைகளை நமக்குக் கொடுத்து [illegible]

களையைப் பலப் படுத்துவதற்கு ஆண்டவர் தமது பிள்ளைகளை எழுப்புவார் என்பது நிச்சயம்.

கிராமங்களில் வசிக்கும் ஊழியக்காரர் மிகுந்தொடுக்கும் சொற்பச் சம்பளத்தில் பிழைக்கவேண்டியதிருக்கிறது. குழந்தைகள் பெருகவே அவர்களைப் போஷிக்கவும் கல்வி கற்பிக்கவும் முடியாமல் கடனுக்குள்ளாகிக் கலங்கித் தவிக்கிறார்கள். பற்பல கவலைகள் அவர்களைப் பாரப்படுத்தவே தேவ ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்ய முடியவில்லை. அநேகருடைய நிலைமை இவ்வண்ணமாகவேயிருக்கிறது. இதற்குப் பரிகாரமென்ன? என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்னும் கவலைகள் நம்மை மேற்கொள்ளுமானால் நாம் ஆண்டவருக்கு உற்சாகமாய் ஊழியஞ்செய்வதெப்படி? கர்த்தர் தமது ஊழியரை மறந்துவிட்டாரா? "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை என் பிதா கனம்பண்ணுவார்" என்று ஆண்டவர் சொன்னாரே. மனுஷர் காணாமல் வனாந்தரத்தில் இருந்த எலியாவை அவர் காகங்கள் மூலமாய்ப் போஷித்தாரே. கர்த்தர் நம்மைப் பராமரிக்கக் கடமைப்படுகிறதில்லையென்றால் நாம் அவருடைய ஊழியக்காரர் அல்ல. ஆண்டவர் தமது ஊழியத்தில் நம்மை உபயோகிக்கக் கூடாதபடி பாவம் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. நாம் சுய இஷ்டப்படி நடக்கும் பாவத்தில் ஜீவித்திருக்கும்போது அவருடைய கிருபையுள்ள நடத்துதல் நமக்குக் கிடைக்காது. இதில்லாமல், ஆத்துமாக்களை ரட்சிப்பதே நமது ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்து, நாம் அவருக்கென்றே பிழைத்து உழைப்போமானால் நமக்கும் நமது குடும்பத்திற்கும் தேவையான சகல நன்மைகளையும் அவர் நிச்சயமாகவே அருளுவார். மிஷன் கொடுப்பது நமக்குப் போதாதிருந்தாலும் தேவன் தமது பிள்ளைகளை எழுப்பித் தமது ஊழியக்காரருக்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பார். தங்களுடைய ஆத்துமா ரட்சிப்புக்காகவே நாம் பாடுபடுகிறோம் என்பதைச் சபையார் உணருவார்களாகில் தங்களுடைய நன்மைகளில் நமக்குப் பகிர்ந்து கொடுக்கும்படி வாஞ்சையுள்ளவர்களாயிருப்பார்கள். இவ்வாறு கடவுள் தம்மைப் பராமரித்து நடத்துவதை அநுப

வத்தில் அமிர்த தேவ ஊழியர் அநேகரிருக்கிறார்கள். கர்த்தரே லேவியரின் சுதந்தரம்.

இதன் சம்பந்தமாய் என் உடன் ஊழியர்களோடு நான் பேச வேண்டும். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் தமக்குச் சித்தமான வரங்களை அளித்து அவர் ஊழியத்தை உலகத்தில் நிறைவேற்றும்படி நம்மை அனுப்பியிருக்கிறார். ஆகையால் நாம் தனித்தனியே ஆண்டவருக்கு உத்தரவாதிகளாயிருக்கிறோம். பல மிஷன்கள் நமது தேசத்தில் வேலைசெய்து வருகின்றன. இவற்றில் ஏராளமான தேவ ஊழியருண்டு. நமது வேலைகளைக் கவனிக்கவும் நமக்குச் சம்பளம் கொடுக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் நமக்குச் சம்பளம் கொடுக்கிறவர்களாதலால், அவர்கள் தயவைச் சம்பாதிக்கும்படி, எவ்விதத்திலும் அவர்களுக்குப் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டும் என்கிற கவலை நமக்கு உண்டாகிறது. இதனாலே அவர்களே நமது கண்ணும் கருத்துமாகிறார்கள். நாம் அவர்கள்மேல் பற்றுதல்வைத்து அவர்கள் இஷ்டம்போல் பிழைக்க நாடும்போது, அறிந்தோ அறியாமலோ, நமது சுயசித்தத்தை இழந்துபோகிறோம். இவ்வாறு ஒருவருடைய சித்தம் அநேகருடைய சித்தத்தை ஆண்டுகொள்ளுகிறது. அவர்கள் பிரியமென்ன, அவர்கள் சொல்வதென்ன என்பதே நமது கவலையாயிருக்குமானால் நமக்குரிய சுயாதீனத்தை நாம் இழந்துபோவோம். நமக்குச் சுயாதீனமில்லாவிட்டால் ஆண்டவர் நமக்குத் தந்த வரங்களை நாம் தாராளமாய் விருத்திபண்ணவோ உபயோகிக்கவோ முடியாது. தேவ ஊழியரான பலர், ஒருவருடைய இஷ்டத்தையே நிறைவேற்றும் கருவிகளாகும்போது, ஆண்டவர் அவர்களை உலகத்தில் அனுப்பின நோக்கத்தை நிறைவேற்றக் கூடாதவர்களாவார்கள். அநேக சித்தங்களை ஒரு சித்தம் ஆளும்போது, அவர்களுக்குச் சுயாதீனமில்லாததால், ஆண்டவர் அவர்களுக்கு அருளிய வரங்கள் மங்கி மழுங்கிப்போகவுங் கூடும். காலம் செல்லச் செல்ல, குடும்பமும் பெரிதாக, அவர்களைப் பராமரிக்கும் பாரம் நம்மேல் விழுவதால், எஜமான் தயவிருந்தாலேபோதும் என்கிற எண்ணமும் உண்டாகிறது. குடும்பக்காரியம் நடக்கவேண்டிய திருப்

நால், உபகாரிகள் தயவைச் சம்பாதிப்பதே நமது ஜீவியத்தின் நோக்கமாகிவிடுகிறது. நாமாக ஒன்றை யோசிக்கவோ செய்யவோ வழியில்லை. ஆவிக்குரிய வல்லமையையும் சந்தோஷத்தையும் இழந்துபோகிறோம்.

இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமையில் நாம் என்ன செய்யக் கூடும்? நாம் எழும்பிப் பிரகாசிப்பதெப்படி? அதிகாரிகள் என்ன சொல்லுவார்களோ, என்ன நினைப்பார்களோ என்கிற பயம் உண்டாகிறது. கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய அநேக சகோதரர் சகோதரிகள் நிலைமை இப்படியே இருக்கிறது. அதிகாரிகளாலும் ஊழியர்களாலும் நாம் அன்பில் கட்டுப்படலாமே தவிர நமது சுயாதீனத்தை விற்றுப்போடக் கூடாது. நமது சித்தம் ஆண்டவருக்கே உரியது. பிதாவின் சித்தம் கிறிஸ்துவின் சித்தத்தை ஆண்டு நடத்தினதுபோல தேவசித்தம் நம்மையும் ஆண்டு நடத்த வேண்டும். "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்ட பவுல், கடவுளால் நடத்தப்பட்டு உலகத்திற்கு நிறைந்த ஆசீர்வாதமானார். அவர் மற்றவர்களுக்கு அடிமைப்பட்டவரல்ல. "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைத்திருங்கள்" என்று சொன்னவரும் அவரே.

ஊழியத்தில் நாம் அதிகாரிகளோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், நமது நம்பிக்கையும் பற்றுதலும் கர்த்தர் பேரிலேயே இருக்கவேண்டும். அவர் நடத்துதலை அனுதினமும் தேடவேண்டும். ஆண்டவர் நமக்கருளிய அறிவு, வரம், பலத்துக்குத் தக்கதாக, அவர் மகிமைப்படும்படி உண்மையோடும் ஊக்கத்தோடும் ஊழியஞ்செய்யவேண்டும். ஒருவேளை நாம் உத்தியோகம் பார்க்கிற இடத்தில் பூரணமாய் ஊழியஞ்செய்யக்கூடாதபடி இடைஞ்சல் உண்டாகுமானால், கர்த்தர் வேறு வழியை நமக்குக் காண்பிக்கும்படி கருத்தாய் ஜெபிக்கவேண்டும். உண்மையான ஊழியர்களை அவர் நிச்சயமாகவே வழி நடத்திப் பராமரிப்பார். நமது வரங்கள் மற்றவர்களால் அடக்கப்பட இடங்கொடுக்கக் கூடாது. கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்தவர்களும், இன்று செய்கிறவர்களும் கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தைப்

பெற்றவர்களே. அடிமைத் தனம் புருஷத்துவத்தை அழித்து கடவுள் நம்மைக்கொண்டு செய்யத் தீர்மானித்திருக்கும் காரியங்களுக்கு இடையூறாயிருக்கும். நம்மை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதை ஆண்டவர் ஒருவரே அறிந்திருக்கிறார். அவர் நடத்துதலே நமக்கு ஆசீர்வாதம். அவர் நம்மை நடத்தவேண்டுமானால் நாம் முற்றிலும் அவருக்குச் சொந்தமாகி, அவர் பேரில் பூரண பற்றுதல் உள்ளவர்களாயிருக்கவேண்டும். மனுஷர்மேல் நம்பிக்கை வைத்தவர்களை ஆண்டவர் நடத்தமுடியாது. மனுஷர்பேரில் பற்றுதல் வைத்து அவர்களால் பிழைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறவர்கள் கைவிடப் படுவார்கள். அவர்கள் செய்யும் ஊழியமும் தேவ ஊழியமாயிராமல் மனுஷரைப் பிரியப்படுத்தும் ஊழியமாகவே யிருக்கும். தேவபக்தியுள்ள மிஷனெரிமார் அதை விரும்ப மாட்டார்கள். கடவுள் தயவு நமக்கு இருக்குமானால் மனுஷர் தயவு தானாகவே வரும். ஆகையால் நாம் எந்தச் சபையிலிருந்தாலும், எந்தச் சங்கத்தைச் சேர்ந்து வேலைசெய்தாலும், கிறிஸ்து ஒருவரே நமது எஜமான் என்பதை மறவாமல், அவர் சித்தப்படியே பிழைத்து, அவருக்குப் பிரியமாக ஊழியஞ் செய்யவேண்டும். நமது சகலகாரியங்களையும் அவர் நமக்காக நடத்தி நம்மை ஆசீர்வதிப்பார் என்பது நிச்சயம்.

**4. எதிர் பாராத சம்பவங்களைக் கொண்டு நடத்துகிறார்**

நாம் எதிர் பாராத விதமாய் ஆண்டவர் நம்மை நடத்துகிறார். கழுதை தேடப் புறப்பட்ட சவுல் ராஜாவானான். உழுதுகொண்டிருந்த எலிசா தீர்க்கதரிசியானான். ஆடுமேய்த்த தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவானான். மீன் பிடித்தவர்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலரானார்கள். இதைப்போல் திரளான திருஷ்டாந்தங்களை திருச்சபை சரித்திரத்தில் அறிந்திருக்கிறோம். சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கர்த்தர் எதிர் பாராத காரியங்களைச் செய்யும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தம்மை நம்பியிருக்கும் பிள்ளைகள் விஷயமாய் அவர் எதிர் பாராத காரியங்களைச் செய்து, அவர்களை மகிழ்ச்சியாக்கி நடத்துகிறார். நாளை நடப்பது நமக்குத் தெரியாது. நாம் வழக்கம்போல் அன்றுடைய வேலையைச் செய்துகொண்டு போகிறோம். திடீரென

நாம் எதிர்பாராத விதமாய்ச் சந்தோஷமான காரியத்தை அவர் நடப்பித்து நம்மை உற்சாகப் படுத்துகிறார். அவர் என்ன செய்யப் போகிறார் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் நமது ஊழியத்தை ஊக்கமாய் நிறைவேற்றிக்கொண்டுபோகிறோம். நமக்கு எந்தெந்தச் சமயத்தில் என்னென்ன செய்யவேண்டுமென்பதை அவர் ஒருவரே அறிந்திருக்கிறார். அவர் ஆலோசித்த நன்மைகளைத் திடீரெனச் செய்யும்போது நாம் ஆனந்த பரவசமடைந்து அவர் திருநாமத்தைப் போற்றுகிறோம். நமது காரியம் எப்பொழுதும் ஒன்றுபோலிருந்தால் நாம் சோர்ந்து போவோம் என்றறிந்து, எதிர் பாராத நன்மைகளால் நம்மை உற்சாகப் படுத்துவது அவரது சித்தமாயிருக்கிறது.

5. சாதாரண காரியங்களைக்கொண்டும் நடத்துகிறார். அவர் நடத்தும் வழியில் சமயத்திற்கேற்றபடி நாம் நடந்துகொள்ளவேண்டியது. சாமுவேல் சவுலை அனுப்பியபோது அவனைப்பார்த்து: நீ ராகேலின் கல்லறையண்டை போகும்போது இரண்டு மனுஷர் உன்னைச் சந்தித்து, உன் தகப்பன் கழுதைமேல் உள்ள கவலைநீங்கி உன்பேரிற் கவலையாயிருக்கிறார் என்று சொல்லுவார்கள். அதன்பின் தாபோரின் சமபூமியில் நீ சேரும்போது பெத்தேலுக்குப் போகிற மூன்று மனுஷர் உன்னைச் சந்திப்பார்கள். அவர்கள் உன் சுகசெய்தியை விசாரித்து உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள். பின்பு பெலிஸ்தர் தாணையம் இருக்கிற இடத்திற்கு நீ போகும்போது தீர்க்கதரிசிகளின் கூட்டம் உனக்கு எதிர்ப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார், நீயும் தீர்க்கதரிசனம் சொல்லி வேறு மனுஷனாவாய். இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது, சமயத்திற்கு ஏற்றபடி நீ செய், தேவன் உன்னோடே இருக்கிறார் என்றான். சாதாரணமான காரியங்களில் தேவநடத்துதலைக் காண்கிறோம். நாம் ஆவியைப்பெற்ற தேவனுடைய பிள்ளைகளானாலும் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்து, அவர்களோடு சேர்ந்துதான் காரியங்களை நடத்துகிறோம். உலகத்தைவிட்டு நாம் போய்விடவில்லை. கடவுளை அறிந்த, அவரை அறியாத சகல மனுஷரோடும் நாம் சம்பந்தப்பட்டிருக்கிறோம். இவர்கள் நடுவில் நாம் எப்படி

நடந்துகொள்ளவேண்டு மென்பதை ஆவியானவர் நமக்குப் போதிக்க வேண்டும். அந்தந்த இடத்திலும் சமயத்திற் கேற்றபடி நாம் நடந்து கொள்ள ஆண்டவர் நம்மோடு கூடவிருக்கிறார். சாதாரண காரியங்களை நாம் அற்பமாய் நினைக்கக் கூடாது. விசேஷித்த சமயங்களில் மாத்திரம் தேவ நடத்துதல் நமக்கு வேண்டுமென்று எண்ணக் கூடாது. நமது ஜீவியம் மிகுதியாய் சாதாரண காரியங்கள் நிறைந்துள்ளது. இந்தச் சாதாரண காரியங்களிலேயே நாம் தவறிப்போகிறோம். பெரிய விஷயங்களைப்போலவே, சாதாரண காரியங்களிலும் தேவ நடத்துதல் அவசியம். நமது ஜீவியம் ஒரே தொடர்ச்சியானது. அது பங்கிடப்பட்டதல்ல. அநேக சாதாரண காரியங்கள் சேர்ந்தே ஜீவியமாகிறது. நிமிஷங்களை அற்பமாய் நினைத்தால் மணியேது? மணியை அலட்சியஞ்செய்தால் நாள் ஏது? நிமிஷங்கள் சேர்ந்தே நமது ஜீவகால மாகிறது. ஆகையால் ஒவ்வொரு விஷயத்திலும் தேவ நடத்துதல் நமக்கு வேண்டும். சமயத்திற்கேற்றபடி பேசவும் செய்யவும் தகுந்த ஞானம் நமக்கு அவசியம். ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை நடக்கும் காரியங்களில் தேவகரத்தை நாம் காணவேண்டும். கர்த்தரை நம்பிப் பிழைக்கும் பிள்ளைகளுக்குத் தற்செயல் என்பதில்லை. நம்மைப் பார்க்க வரும் மனுஷரை நாம் கவனிக்கவேண்டும். நம்மை அழைக்கும் இடங்களுக்குப் போவதில் தேவ நடத்துதலை நாம் அறியவேண்டும். வரும் கடிதங்களைப்பற்றியும் நாம் எழுதும் பதிலைப்பற்றியும் கவனமிருக்கவேண்டும். அந்த நாளில் நமக்குச் சந்தோஷமோ, அல்லது விசனமான காரியமோ சம்பவிக்கலாம். இவை யாவற்றிலும் நமது கண்கள் கர்த்தர் பேரில் இருக்கவும், நாம் சமயத்திற்கேற்றபடி நடந்துகொள்ளவும் தேவ கிருபையைத் தேடவேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் முக்கியமான விஷயம் தேவ நடத்துதலே. நாம் கடவுளோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்பதற்கும், அவரையே நம்பிப் பிழைக்கிறோம் என்பதற்கும் அவர் நம்மை நடத்துவதே அத்தாட்சி. தேவ நடத்துதலைப் பற்றிப் பேசாதவர்கள் தேவனை அறிந்தவர்கள் அல்ல. தங்கள் சுய இஷ்டப்படி நடக்கிற

வர்கள் தேவனால் நடத்தப் படுகிறவர்கள் அல்ல. எவ்வளவாய் வேதம் கற்றாலும், எவ்வளவு வேலை செய்தாலும், எத்தனை ஆராதனைகளை நடத்தினாலும், தேவன் நம்மை நடத்துகிறார் என்கிற நிச்சயம் நமக்கில்லாவிட்டால் இன்னும் நாம் அவருக்குத் தூரமானவர்களே. என் பேனாவை ஒருவன் கையில் விட்டு விடாவிட்டால் அவன் எப்படி எழுதுவான்? நாம் நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கா விட்டால் அவர் எப்படி நம்மை நடத்துவார்? "உமது ஆலோசனையின் படியே நீர் என்னை நடத்தி முடிவிலே உமது மகிமையில் என்னைச் சேர்த்துக் கொள்ளும்." என்று ஜெபிப்போமாக.

முடிவாக நாம் கவனிக்கவேண்டிய ஓர் விஷயம் உண்டு. பிதாவுக்கு நம்மைச் சமூலமாய் ஒப்புவித்து ஜீவிப்பதால் சகலமும் நமது பிரியம்போலவே நடக்குமென்று எண்ணிக்கொள்ளக்கூடாது. கொஞ்சந்தூரம் எல்லாம் நமக்குச் சந்தோஷமாக நடக்கலாம். ஆனால் நாம் எதிர்பாராத சங்கடங்களும் நேரிடலாம். நமது எண்ணம் தேவ எண்ணத்திற்கு இசைந்திருக்கும் காரியங்களில் அவர் ஆசீர்வாதத்தைக் காண்போம். ஆனால் எப்பொழுதும் நமது நினைவுகள் கடவுள் நினைவுகளோடு இசைந்திருப்பதில்லை. நமது அறியாமையால், ஆத்திரத்தால் சில சமயங்களில் நாம் வழி விலகிப் போகிறோம். அதனாலே நமக்குக் கஷ்டங்களும் கவலைகளும் ஏற்படும். ஆண்டவர் நம்மை வழி நடத்தாமல் நம்மை விட்டு விலகினதுபோல் தோன்றும். அது மாத்திரமல்ல, கழுகு தன் கூட்டைக் கலைப்பதுபோல் தேவன் சில சமயங்களில் நமது ஒழுங்குகளையும் ஏற்பாடுகளையும் திடீரெனக் கலைப்பார், அவர் நடத்துதல் கலைத்துத் தன்மையுள்ளது. தேவ மக்கள் இதன் உண்மையை அறிவார்கள். அவ்வாறு அவர் நம்மைக் கலைப்பது நமக்குச் சங்கடமாயிருந்தாலும் சிறந்த நோக்கத்தோடேயே அவர் அப்படிச் செய்கிறார். கழுகு கூட்டைக் கலைக்கும்போது குஞ்சுகள் திகைக்கும். அப்புறம் அந்தக் குஞ்சுகளைக் கழுகு தன் பலத்த சிறகுகளால் சுமந்து, உயரத்தில் கொண்டுபோய் கீழே தள்ளிவிடும். குஞ்சுகள் கீழே விழும்போது பயந்து உயிர்தப்பும்படி தாங்கள் அறியாமலே தங்கள் சிறு சிறகுகளை விரித்து அடிக்கும். இதற்குள்ளாக

தாய்க் கழுகு குஞ்சுகளுக்குக் கீழே வேகமாய் வந்து அவைகளை மறுபடியும் தன் சிறகுகளால் ஏந்தி மேலே பறந்துபோய்த் திரும்பவும் கீழே விழும்படி விட்டுவிடும். இப்படிப் பலமுறை செய்வதால் குஞ்சுகளுக்குத் தங்கள் சிறகுகள் எதற்காகவென்பது தெரியவரும். அவைகளை அடிக்கடி உபயோகிப்பதின் பலனாகத் தாய்க் கழுகைப் போலவே அவைகளும் உன்னதத்திற்கு எழும்பப் பறக்கும். தேவ நடத்துதலின் சம்பந்தமாய் மோசே இந்த உவமானத்தைச் சொன்னார். நம்மாலுண்டான பாடுகளானாலும், ஆண்டவர் கலைப்பதால் உண்டாகும் பயமானாலும், அவர் நடத்துதலை ஏற்றுக்கொண்டவர்களுக்கு சகலமும் நன்மையாகவே முடியும்.

சந்நியாசி சாதுக்கள் ஜீவியத்தை மனுஷர் மேன்மையாக எண்ணுவது வழக்கம். ஆண்டவருக்குத் தம்மை முழுவதுமாய் ஒப்புவித்து ஊழியஞ்செய்த அப்போஸ்தலனுக்குப் பல பாடுகள் நேரிட்டதென்பது நிச்சயம். அவரும் ஒரு சாதுதான். மனைவி, மக்கள், கல்வி, உத்தியோகம் முதலான காரியங்களைப்பற்றிய கவலைகள் அவருக்கு இருக்கவில்லை. குடும்பத்திலிருந்துகொண்டு கடவுளுக்குப் பிரியமாய் நடப்பதும் உத்தம ஊழியஞ்செய்வதும் லேசான காரியமல்ல. இங்கேதான் நமக்குப் போராட்டமிருக்கிறது. இங்கேதான் அநேகர் நிலை நிற்காமல் தவறிப்போகிறார்கள். ஆவியில் ஆரம்பித்தவர்கள் உலகத்தால் இழுப்புண்டு போகிறார்கள். கர்த்தரைவிட்டு எவ்வளவு தூரம் விலகிப்போனோம் என்பது முதலாய் அவர்களுக்குத் தெரிகிறதில்லை. இந்த நிலைமையிலிருந்துகொண்டுதான் கடவுள் ஊழியத்தையும் பேருக்கு நடத்திக்கொள்ளுகிறார்கள். சாதாரணமான உலகக் காரியங்களைப்போலவே கடவுள் காரியமும் நடக்கிறது. இப்படியிருப்பது சரியல்ல.

குடும்ப சாகரம், உத்தியோகம், சம்பாத்தியம், பல மனுஷரோடுள்ள சம்பந்தம் இவை யாவற்றிலும் நமக்கு உத்தரவாதமுண்டென்பது நிச்சயம். சம்மந்தமான பாடுகளில் தனித்து விலகும் சந்நியாசிகள் அல்ல. அது தேவசித்தமும் அல்ல. ஆண்டவர் நம்மை வைத்த ஸ்தானங்களிலே நாம் அவருக்குப் பிரியமாய் நடக்கவேண்டும்.

காலமோ மிகவும் கொடியதாயிருக்கிறது. உலகத்துக்குத் தப்ப நம்மால் முடியாது. இவைகளின் மத்தியில் கடவுளால் நாம் நடத்தப்படுவதற்கு அவருடைய விசேஷித்த கிருபை வேண்டும். குடும்பத்திற்கு அடுத்த பற்பல விஷயங்கள் நமக்குக் கவலையை உண்டாக்கும். அயலகத்தாரின் காரியங்கள் நம்மைக் கலக்கச் செய்யும். நமக்கு ஆகவேண்டிய காரியங்களைக் குறித்து, என்ன செய்வது, எவ்வழி நடப்பது என்று தெரியாமல் நாம் திகைக்க நேரிடும். நோய், வேதனை, பசி, தரித்திரம் நம்மைப் பாரப்படுத்தும். இவ்வாறு பல சிக்கலுக்குள் நாம் அகப்படும்போது கலங்குகிறோம். கடவுள் நம்மை நடத்துவது மெய்யானால் இந்தக் கஷ்டங்களேன் என்று கேட்கிறோம். நம்முடைய பாதை அந்தகாரமாயிருப்பதால் ஆண்டவர் விலகிவிட்டாரே, அவர் நம்மை நடத்தவில்லையே என்று பேசுகிறோம். நேரிடும் சங்கடமான விஷயங்கள் மீது கவனத்தை ஊன்றிக்கொள்வதால் அவை ஆண்டவர் சமுகத்தையும் அவர் நடத்துதலையும் நமக்கு மறைக்கின்றன. ஆனால் ஆண்டவரோ தம்மை நம்பியிருக்கும் பிள்ளைகளை ஒருபோதும் கைவிடுகிறவரல்ல. நம்மைவிட்டு அவர் ஒரு நிமிஷமாகிலும் விலகுகிறவரல்ல. நடத்துவோம் என்னும் தமது வாக்கை அவர் மீறுகிறவரல்ல. வெளிச்சத்தில் அவர் நம்மோடு கூடயிருந்தது போலவே அந்தகாரத்திலும் அவர் கூடயிருக்கிறார். சந்தோஷத்தில் அவர் நம்மை நடத்தினது போலவே துக்கத்திலும் நம்மை நடத்துகிறார். நமது விசுவாசத்தைப் பலப்படுத்தவும் நமது நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் சிலசமயங்களில் நெருக்கமான பாதையை அவர் தெரிந்துகொள்ளுகிறார். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பூரணப்படவும், அனுபவத்தில் உறுதிப்படவும் கஷ்டமானபாதை நமக்கு அவசியம். இருண்டமேகத்தில் வானவில் அழகாய்த் தோன்றுவதுபோல பாடுகளைப் பொறுமையாய்ச் சகிக்கும் தேவமக்கள் ஜீவியத்தில் தேவ மகிமை வெளிப்படுகிறது. பிரகாசமான காலத்தில் நாம் அவரில் நம்பிக்கை வைப்பதுபோல, சங்கடமான நாட்களிலும் நம்பிக்கையாயிருந்து அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்பது தேவசித்தம். சொகுசான கிறிஸ்துமார்க்கத்தில் பலனில்லை, கர்த்தருக்கு மகிமையு

மில்லை. ஆகையால் நன்மையானாலும் தீமையானாலும், சந்தோஷமானாலும் துக்கமானாலும், மேன்மையானாலும் அவமானமானாலும், அன்புள்ள பிதாவின் மீதுள்ள நம்பிக்கையை மாத்திரம் நாம் விட்டுவிடாமல், ஊக்கமாய் ஜெபித்து, அவர் வேளைக்காகப் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். சீக்கிரத்தில் ஆண்டவர் நமது இருளை வெளிச்சமும், கோணலை நேரும், கவலையைக் களிப்பாகவும் மாற்றி நம்மை ஜீவபாதையில் நடத்துவார். நமது ஜீவியம் பலப்படுவதற்கும் தேவ அறிவில் நாம் வளருவதற்கும் சிலசமயங்களில் கஷ்டமான பாதையில் நாம் நடத்தப்படுவதும், நமது கூடு அசைக்கப்படுவதும் அவசியம். குடும்பத்திலிருந்து கர்த்தரை மகிமைப்படுத்தும் தேவ மக்கள் எவ்விதத்திலும் சோர்ந்து போகக்கூடாது. நம்மால் முடியாத காரியங்களை அவர் நமக்காக முடிக்க வல்லவராயிருக்கிறார். விசுவாசமும் ஊக்கமான ஜெபமும் அதிசயமான காரியங்களை நடப்பிக்கும். நமதாண்டவரும் உலகத்திற்கு ஆசீர்வாதமாயிருந்த அவரது உத்தம அடியார் யாவரும் போராட்டமான பாதைகளில் நடத்தப்பட்டு வெற்றியடைந்தவர்களே. "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங். 48: 14).

# XV

# The Kingdom and the Cross

# தேவராஜ்யமும் சிலுவையும்

"பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்றார். அதுமுதல் இயேசு தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தமது சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" மத். 16 : 19, 21.

இயேசு கிறிஸ்து உலகத்தில் செய்யும்படி வந்தவேலை மகாபெரிதும் உன்னதமுமானது. "பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" என்று பவுல் கூறினது உண்மையே. அந்த ரட்சிப்பாவது என்னவென்பதைத்தான் நாம் அறியவேண்டியது. கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தபடியால் நமக்குப் பாவ மன்னிப்பு கிடைக்கும்படி அவரை நோக்கிப் பார்க்கிறோம். மற்றவர்களும் ஆண்டவரை விசுவாசித்து அவரால் பாவ மன்னிப்பாகிய ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பிரசங்கிக்கிறோம். ஆனால் ஆண்டவர் உலகத்தில் நிறைவேற்றும்படி வந்தவேலை பாவ மன்னிப்பு மாத்திரமல்ல. அதுவே பூரணமான ரட்சிப்பும் அல்ல. அநேகருடைய கிறிஸ்துமார்க்கம் பாவ மன்னிப்பு தேவையிலேயே நின்று விடுகிறது. "எங்கள் பாவங்களை மன்னித்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்பதே அவர்கள் ஜெபம். பாவம் என்று பேசும்போது நம்மில் காணப்படும் தீமையான காரியங்களை நினைக்கிறோம். பாவமாவது என்னவென்று அறிவோமானால், கிறிஸ்து நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பாவது என்னவென்பது நமக்குத் தெரியவரும்.

மனுஷன் கடவுள் ஆளுகைக்கு விலகித் தன் சுய இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்ததே பாவம். தேவசித்தப் பாதையை விட்டு விலகி வருவதே பாவமாகவும், அவ்வாறு விலகினதால் சம்பவித்த செய்கைகள் பாவங்களும் சகல கேடுகளுமாகத் தோன்றின. அவனவன் தன் தன் வழியில் நடந்ததே சகல பாவங்களுக்கும் காரணமாயிற்று. தேவ ஆளுகைக்கு விலகினது பாவமானால், அந்த ஆளுகைக்குள் நாம் மறுபடியும் பிரவேசிப்பதே நமக்கு ரட்சிப்பாகும். நாம் வழி விலகினதின் பலனாக ஏற்பட்ட பாவங்களை மன்னித்துவிடுவதுமாத்திரம் நமக்கு ரட்சிப்பாகாது. தேவசித்தப்படி நாம் பிழைக்கும் வரையும் நாம் ரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. பாஷாணத்தைத் தின்ற மகன் சாகுந்தருவாயிலிருக்கும்போது தாய் அவனுக்கு மன்னிப்பதால் என்ன பிரயோஜனம்? சாவுக் கேதுவான பாஷாணத்தை மகனை விட்டு அகற்றுவதே அவனுக்கு ரட்சிப்பாகும். வழி விலகிப்போன பாவிகளாகிய நம்மை தேவ ஆளுகைக் குட்படுத்தவே இயேசு உலகத்திற்கு வந்தார். நாம் தேவனால் ஆளப்படுவதே நமக்கு ரட்சிப்பு.

## I. தேவராஜ்யமும் கிறிஸ்துவும்.

தேவராஜ்யமென்பது தேவ ஆளுகை. தேவஆளுகையே நமக்கு ஆசீர்வாதம். தேவ ஆளுகை கடவுளுக்கு மகிமை. மனுஷன் தவிர சர்வ சிருஷ்டிப்பும் கடவுளால் ஆளப்படுகிறது. அவரது ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது. அவர் சித்தம் ஒன்றே எங்கும் செய்யப்படுகிறது. தேவதூதர்கள் அவர் சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள். ஆகையால் அவருடைய ஆளுகை அவர்களுக்குள் நடக்கிறது. வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சிருஷ்டிப்பிலும் அவரது ஆளுகை நடக்கிறது. மனுஷன் மாத்திரம் தன் சுய சித்தப்படி நடக்கிறான். மனுஷன் சுயாதீனமுள்ளவனாகையால் மற்றமற்ற சிருஷ்டிகளை ஆண்டவர் ஆண்டு நடத்துவதுபோல் அவனை நடத்துவது சரியல்ல. மற்றச் சிருஷ்டிகள் தாங்கள் அறியாமலே தேவ சித்தத்தை நிறைவேற்றுகின்றன. கடவுளே தமது சித்தத்தை அவைகள் மூலம் நிறைவேற்றுகிறார். மனுஷனோவென்றால் தேவதூதரைப்போல் மனப்பூர்

மாக தேவ ஆளுகையை ஏற்றுக்கொண்டு தேவ சித்தப்படி பிழைக்க வேண்டும். இது பலவந்தத்தினால் ஆகிற காரியமல்ல. ஆகையினால்தான் உலகத்தின் ரட்சிப்புக்கு கஷ்டமாயிருக்கிறது. ஆண்டவர் எவ்வளவு அன்பு பாராட்டினாலும், எவ்வளவு பாடுகள் பட்டாலும், எவ்வளவு கிருபைகளை அருளினாலும், மனுஷன் தானாக, மனப்பூர்வமாக தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் ராஜ்யத்தின் புத்திரன் ஆகமாட்டான். தேவ ஆளுகையே பாவியின் ரட்சிப்பு.

ஆண்டவர் ஊழியத்தில் பிரவேசித்தபோது அவர் முழுமனதையும் ஆண்டுகொண்டிருந்த ஒரே விஷயம் தேவராஜ்யமே. தேவ சித்தத்தை விட்டு விலகிக் கெட்டுப்போன உலகத்தை தேவ ஆளுகைக்குட்படுத்தி ரட்சிக்க வேண்டுமென்பது அவரது உறுதியான தீர்மானம். அந்தத் தீர்மானத்தை அவர் முதலிலிருந்து கடைசிவரை விட்டு விடவேயில்லை. சகலமும் அவர் நோக்கத்திற்கு விரோதமாக நேரிட்டும் அவர் தேவ ராஜ்யத்தை விட்டுவிட்டவரல்ல. தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடாமற் போனதினால் அதற்குப் பதிலாக திருச்சபையை ஸ்தாபித்தாரென்பது சிலருடைய அபிப்பிராயம். அது ஒருபோதும் உண்மையல்ல. தேவராஜ்யத்திற்குப் பதிலாக திருச்சபையை ஸ்தாபிக்காமல், தேவராஜ்யத்திற்காக உழைக்கும்படி திருச்சபையை ஸ்தாபித்தார். திருச்சபை தேவராஜ்யத்திற்குள் அடங்கினதே. நாமோவென்றால் ஆண்டவருடைய விசாலமான நோக்கத்தை மறந்து சபைகளையே பிரதானப்படுத்துகிறோம். கிறிஸ்தவர்களில் அநேகர் தேவராஜ்யம் என்பதை முற்றிலும் மறந்தவர்களாயிருக்கிறார்கள். சபைகளையும் சபைக்கொள்கைகளையும் முக்கியப்படுத்தி சபை பிரிவினைகளுக்கும் ஆளாகிறோம். ஆண்டவருடைய விசாலமான எண்ணம் நமக்கில்லை. அவர் இருதயத்தை நிரப்பிக்கொண்டிருந்தது தேவராஜ்யமே. அவர் பட்டபாடுகள் யாவும் உலகில் தேவராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே. சபையை நாம் அற்பமாய் நினைக்கிறதில்லை. பரிசுத்த பவுல் திருச்சபையைக் குறித்துச் சொல்லியிருக்கிற மகத்தான காரியங்களை நாம் எப்படி மறக்கக்கூடும்? ஆனால் சபைகள் எண்ணத்திற்காக இருக்கின்றனவென்றும், அவற்றின் நோக்கு,

வரை சேர்க்கும் என்னவென்பதும் அவரே எடுத்துக் கூறியிருக்கிறார். சபையினுடைய பின்னோர்கள் ராஜ்யத்தின் புத்திரராயிருந்து தேவராஜ்யத்திற்காக உழைக்கவேண்டியவர்கள். தேவ ஆளுகை பிரத்தியக்ஷமாக வெளிப்பட்டு, தேவனே சகலத்திலும் சகலமுமாய் இருக்கும் அக்காலத்தில் இவர்கள் அதற்குப் பங்காளிகளான ஆசீர்வாத காலத்தில் பிரவேசிப்பார்கள். இந்த நம்பிக்கையும் எதிர்பார்க்குதலும் நமது சபையாருக்குண்டா?

தேவராஜ்யத்தைக் குறித்து ஆண்டவர் போதித்தவைகளில் சில முக்கியமான விஷயங்களைக் காண்கிறோம். முதலாவது, அவர் ஜீவியத்தில் பரிபூரண தேவராஜ்யம் அடங்கியும் வந்தது. இது எவ்வளவு உண்மை! அவர் ஜீவியத்தில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். அவரைப்போல் தேவ ஆளுகையை தம் ஜீவியத்தில் பூரணமாய் ஏற்றுக்கொண்டவர்கள் வேறு யாருமில்லை. பூர்வபிதாக்கள், தீர்க்கதரிசிகள், எப்பேர்ப்பட்ட பரிசுத்தவான்களானாலும் சரி, கொஞ்சமேனும் பிசகாமல் எப்பொழுதும் இடைவிடாமல் தேவசித்தப்படி பிழைத்தவர்கள் ஒருவருமில்லை. ஆவியின் நிறைவைப் பெற்று நடத்தப்பட்ட அப்போஸ்தலருங்கூட அநேக விஷயங்களில் தவறினார்கள். இயேசுவுக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியத்திற்கு ஒப்பான ஐக்கியத்தை யாரும் அடைந்ததில்லை. என்ன ஆச்சரியமான புருஷன் இவர்! அவர் தேவசித்தப்படியே பிழைத்து, தேவ ஆளுகைக்குட்பட்டவராய் ஜீவித்தபடியினாலே "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்றார். அவர் வெளிப்பட்டபோதே அவருக்குள்ளும் அவர் மூலமாயும் தேவராஜ்யம் வெளிப்பட்டது.

இரண்டாவது அவர் உபதேசத்தில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். அவரது போதனைகளின் மொத்தச் சாரம் தேவராஜ்யமே. அவர் சொன்ன உவமைகளெல்லாம் தேவராஜ்யத்தைப் பற்றினவைகளே. மலைப்பிரசங்கத்தின் சாரமெல்லாம் தேவராஜ்யமே. சீஷர்களை ஆசீர்வதிக்கும்போது தேவராஜ்யப் போதனையே. அவர் சிஷரோடு செய்த சம்பாஷணைகளில் தேவராஜ்யமே. [illegible] அவர் சொன்ன தீர்க்கதரிசனங்களில் தேவராஜ்யமே. [illegible]

இரவில் இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் தேவராஜ்யமே. "நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழ ரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லை." உயிர்த்தெழுந்த பின்னும் சீஷர்களோடு தேவராஜ்யத்தைக் குறித்தே பேசினார். தேவராஜ்யம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு சுவிசேஷத்தை வாசிப்போமானால் முழுவதும் தேவராஜ்யமாகவேயிருக்கக் காண்போம். தேவராஜ்யத்தை அதாவது தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்பதே ஆண்டவருடைய தீராத வாஞ்சையும், ஸ்திரமான தீர்மானமும், உறுதியான நோக்கமும், பிடிவாதமான வேலையுமாயிருந்தது. ஒரு க்ஷணமாகிலும் அவர் அதை மறந்தவரல்ல. தாம் உபதேசித்தது மாத்திரமல்ல தமது சீஷர்களான பன்னிரண்டு பேரையும், எழுபது பேரையும் அனுப்பினபோது: "மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபம்" என்று பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார்.

மூன்றாவது, அவர் கிரியைகளில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி மனுஷரைக் குணமாக்கினார். பிசாசுகளைத் துரத்தினார். மரித்தோரை எழுப்பினார். பசித்திருந்த திரளான ஜனங்களைப் போஷித்தார். அவர் செய்த அற்புதகிரியைகளில் நாம் காண்பதென்ன? பாவத்தால் விளைந்த கேடுகள் மனுஷரை ஆண்டுகொண்டு சஞ்சலப்படுத்துவது தேவ சித்தமல்ல. தேவ ஆளுகையில் அப்படிப்பட்ட குறைவுகள் ஒன்றும் இருக்கப்படாது. வெளிப்படப்போகிற தேவராஜ்யத்தில் மனுஷருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் சகல பாடுகளும் நீங்கிப் பூரண சுகத்தோடிருக்கும் என்பதற்கு ஆண்டவர் செய்த அற்புதங்கள் அடையாளங்களாகும். பரிசேயர் அவரைக் குறித்து: பெயல்செபூலினாலே இவன் பிசாசுகளைத் துரத்துகிறான் என்ற போது, அவர்: "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் வந்திருக்கிறதே" என்றார். ஆகையால் ஆண்டவர் செய்த அற்புதகிரியைகள் யாவும் தேவராஜ்யத்தின் கிரியைகளாகும்.

நாலாவது நாம் ராஜ்யத்தின் புத்திரர் ஆகவேண்டுமானால் தேவ ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்கவேண்டும் என்றார். இதை நிக்கொதேமுடன் சொன்னார். (யோ. 3 : 3, 5). மனுஷன் இருக்கிறபடி தேவராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல. தேவ ராஜ்யம் ஆவிக்குரியது. மனுஷனோ மாம்சத்துக்குரியவன். இவன் தேவ ராஜ்யத்தை அறிந்து அதில் பிரவேசிக்கவேண்டுமானால் தேவ ஆவி முந்தி அவனுக்குள் பிரவேசிக்கவேணும். அவன் ஆவியினால் பிறக்க வேண்டும். இது ஒரு அற்புதம். அவன் கண்கள் திறக்கப்படும். தேவ ஆளுகையின் மாட்சிமையை அவன் அறிவான். தேவ ஆவி எங்கேயோ அங்கே தேவசித்தம் செய்யப்படும். அவன் ராஜ்யத்தின் புத்திரன் ஆகிறான். தேவராஜ்யத்திற்குரியவர்கள் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள் என்று ஆண்டவர் சொன்னார். சிறுபிள்ளைகள் பெற்றோரை முற்றிலும் நம்பிப் பிழைப்பதுபோல இவர்களும் தங்கள் பிதாவைப் பூரணமாய் நம்பி அவரையே சார்ந்து பிழைக்கிறார்கள். ஆகையால் நாம் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்கு மறுபிறப்பு அவசியம். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்டவர்கள் மறுபடி பிறந்தவர்கள். அவர்களே தேவஆளுகைக்குள் பிரவேசித்தவர்கள்.

ஐந்தாவது, தேவராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறார்கள். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது." "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது." "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்." மறுபிறப்பால் நாம் ராஜ்யத்திற்குள் பிரவேசித்து, ராஜ்யத்தின் பிள்ளைகளாயிருப்பதுமாத்திரமல்ல, அந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கும் ஸௌக்கியங்களுக்கும் சுதந்தரவாளிகளாகிறோம். நம்மை ஆண்டு நடத்தும் பரமபிதா நமக்குத் தேவையான நன்மைகளை நமக்குக் கொடுக்கிறார்.

ஆறாவது, நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளாயிருந்து, ஆசீர்வாதங்களை அனுபவிப்பதோடு, ராஜ்யத்திற்காக உழைக்கும் உத்தரவாதமும்

நமக்குண்டு. "நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி." "நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள்." "பரலோக ராஜ்யத்திற்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்." பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, 'உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபியுங்கள். இவைகளைக் கவனிக்கும்போது தேவராஜ்யத்தின் பிள்ளைகளுடைய உத்தரவாதம் இன்னதென்று தெரிகிறது. அவர்கள் ராஜ்யத்தின் புத்திரராக ஜீவிக்க வேண்டும்; ராஜ்யத்தின் புத்திரராக ஊழியம் செய்யவேண்டும்; ராஜ்யம் பகிரங்கமாய்ப் பூமியில் வரும்படி ஜெபிக்கவேண்டும். இந்த மூன்றிலும் நாம் உண்மையாயிருக்கிறோமா? ஞானஸ்நானம் பெற்றபோதே பரலோகராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகி விட்டோம் என்கிற எண்ணம் நமக்கிருக்கும்போது அப்புறம் அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படப்போகிறோம். "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்களும் அதில் பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" என்று நமதாண்டவர் யூதச் சபையின் ஊழியர்களை எச்சரித்தது நமக்கும் எச்சரிப்பாயிருக்கிறது.

ஏழாவது தேவராஜ்யம் பெரிய போராட்டத்தின் பலனாகவே உலகில் ஸ்தாபிக்கப்படும் என்கிறார். ராஜ்யத்தைப்பற்றி ஆண்டவர் சொன்ன உவமைகளில் இதன் உண்மையைக் காணலாம். ஆண்டவருக்கு விரோதியான பொல்லாங்கன் ஒருவன் இருக்கவே இருக்கிறான். அவன் தேவ ஆளுகைக்கு விரோதி. அவன் முதலில் தேவ ஆளுகையை மீறி ஆக்கினைக்குள்ளானவன். தேவ ஆளுகையை மீறி சுயசித்தம்போல் நடக்கும்படி மனுமக்களை வஞ்சித்தவன். தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி கிறிஸ்து குழந்தையாய்ப் பிறந்தபோது அப்

போதே அவரைக் கொல்லும்படி துணிந்தவன். வனாந்தரத்தில் உலக ராஜ்யத்தையும் அதன் மகிமைகளையும் அவருக்குக்காண்பித்து, தேவ ராஜ்ய பாதையைவிட்டு விலகும்படி அவரை வஞ்சகமாய்ச் சோதித்த வன். மனுமக்களை நாளதுவரை தன் அந்தகார ஆளுகைக்குள் வைத்து நடத்துகிறவன். இப்படிப்பட்ட உலகத்தில் தேவ ஆளுகையை ஸ்தாபிப்பதென்றால் லேசல்ல. அது ஒரு நாள் இரண்டு நாள் காரிய மல்ல. மேலும் மனுஷர் அறியாமல், அவர்களுக்குத் தெரியாமலே, அவர்கள் உள்ளங்களில் தேவ ஆளுகையை ஸ்தாபித்து விடுவதல்ல. அவ்வரா ராஜ்யத்தின் சுவிசேஷத்தை மனுஷர் கேட்டு, உணர்ந்து, இருளின் ராஜ்யப் பொல்லாங்கனுடைய ஆளுகையைவிட்டு நீங்கி, ஒளியின் ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படி அவர்களே தீர்மானிக்கவேண்டும். ஆகையால் ராஜ்யம் ஸ்தாபிப்பதில் போராட்டமுண்டு. காலதாமதமும் ஆகும். நிலையுள்ள தீமைகள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டு நீதியுள்ள ராஜ்யம் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

உலகம் வரவரக் கெட்டுப்போகிறது என்பார் ஒரு திறத்தார். உலகம் வரவரச் சீர்ப்படுகிறது என்பார் மறுதிறத்தார். அப்படியல்ல, இரண்டுமே உண்மைதான். ஆண்டவர் போதனையும் அதுதான். கோதுமையும் களையும் பக்கத்திற்குப் பக்கம் வளருகிறது. கோதுமையின் வளர்ச்சி களையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. களையின் வளர்ச்சி கோதுமையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. உலகத்தின் தற்கால நிலைமை அதுவே. உலகமெங்கும் சபைகள் பெருகினதைக் குறித்தும், தேசங்கள் கிறிஸ்தவ தேசமாயிருப்பதைக் குறித்தும் நாம் சந்தோஷப்பட்ட காலங்கள் உண்டு. காலம் செல்லச்செல்லக் காரியம் வெளிப்படுகிறது. வளர்ச்சியில்தான் தீமை நன்மை திட்டமாய்த் தெரியும். கிறிஸ்தவ தேசத்தார் என்னும் பேர் பூண்டவர்கள் துணிந்துசெய்யும் அக்கிரமங்களை வாசிக்க உள்ளம் நடுங்குகிறது. கொள்ளை, கொலைகள் வளர்ந்து வெளியரங்கமாகும் காலம் வந்துவிட்டது. கடவுள் இல்லை யென்று மறுப்பவர்களும், கிறிஸ்துவை மறுதலிப்பவர்களும், வேதப்புரட்டரும், அசட்டைக்காரரும் தற்காலம் திரள் திரளாகப் பெருகியிருக்கிறார்கள். பெற்றோர் உலகசிந்தையில் அமிழ்ந்து மக்களின் தேவ பக்தியைப் 

னிக்காததினாலும், கல்லூரிகளில், வேதசாஸ்திரப் பாடசாலைகளில் வேதத்திற்கு விரோதமான போதனைகள் செய்வதாலும், மக்கள் பெரியவர்களாகும்போது முற்றிலும் கெட்டுப்போகிறார்கள்.

தீமை வளருகிறதுபோலவே நன்மையும் வளருகிறதென்பது நிச்சயம். ராஜ்யத்தின் புத்திரர் தேவ ஆளுகையை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் வளருகிறார்கள். மற்றவர்களை ராஜ்யத்தின் புத்திரராக்கும்படி ஊக்கமாய் உழைத்து, தேவராஜ்யம் பூமியில் வரும்படி கருத்தாய் ஜெபிக்கிறார்கள். அவர்கள் தொகையும் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. என்றாலும் தேவ்ராஜ்யம் எப்படிப் பட்டதென்று உலகம் இன்னும் அறிய ஏதுவில்லை. எந்த ஒரு சபையும் தேவராஜ்யத்தின் சிறப்பை, அதன் பலத்தை வெளிப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை. புறம்பேயுள்ளவர்கள் ஒரு சபையைக் கவனிக்கும்போது தேவராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைக் காண்பதில்லை. சபையில் கோதுமையும் களையும், சொல்லவேண்டுமானால் கோதுமையைப் பார்க்கிலும் களைகள் ஏராளமாயிருப்பதே இந்தக் குறைவுக்குக் காரணம். என்றாலும் தேவ ராஜ்பத்தை உள்ளத்தில் பெற்ற தேவ மக்கள் உலகமெங்கும் சிதறுண்டிருக்கிறார்கள். பொல்லாங்கனுடைய ராஜ்யத்திற்கும் தேவராஜ்யத்திற்கும் போராட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது. தீமைகளின் மத்தியில் ஆண்டவர் பிள்ளைகள் தற்காலம் எவ்வளவோ சங்கடப்படுகிறார்கள். அவர்கள் பெருமூச்சையும் கண்ணீரையும் கர்த்தர் ஒருவரே அறிவார். இதற்கு முடிவு இராதோ? முடிவு உண்டு. கோதுமைகள் களைகளை மேற்கொள்வதாலுமல்ல, அல்லது களைகள் கோதுமைகளை மேற்கொள்வதாலுமல்ல. இயேசு ராஜா வெளிப்படவேண்டும். அவர் வெளிப்பட்டுச் சகல இடறல்களையும் தீமைகளையும் முற்றிலுமாய் அழித்து, தேவராஜ்பத்தை பூமியில் வெற்றியுடன் ஸ்தாபிப்பதே முடிவு.

## II. தேவ்ராஜ்யமும் சிலுவையும்.

தேவராஜ்யத்தின் பாக்கியம் இன்னதென்றும், மனுஷர் தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததால் சகல விதத்திலும் கெட்டுபோனார்களென்றும் கவனித்தோம். அவர் தேவராஜ்யத்தை உலகத்தில்

ஸ்தாபிக்கும்படி வந்தார். அவர் வந்தபோதே ராஜ்யமும் வந்தது. அதைத் தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும் விளங்கக் காட்டினார். பாவத்தின் வஞ்சகத்தால் மனுமக்கள் இருதயம் அந்தகாரப்பட்டு, சித்தமும் பலவீனப்பட்டிருந்ததால் அவர்கள் தேவராஜ்யத்தின் காரியங்களை அறிந்துகொள்வதோ, தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளுவதோ மகா கடினமாயிருந்தது. ஆண்டவரோ கொஞ்சமும் மனஞ்சோர்ந்து போகவில்லை. தேவராஜ்யம் உலகில் ஸ்தாபிக்கப்படுமோ என்னமோ என்று அவர் என்னவும் சந்தேகிக்கவில்லை. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு எவ்வளவு விரோதம் இடையூறுகள் இருந்தபோதிலும், கடவுளுடைய பூரணமான ஆளுகை பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதில் உறுதியான நிச்சயமுள்ளவராயிருந்தார். ராஜ்யத்தின் போதனையைச் சீஷர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும், ஜனங்கள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் முடிவு வெற்றியாயிருக்கும் என்பதில் அவருக்கு எவ்வளவேனும் சந்தேகம் இருந்ததில்லை. ஆகையால் ஊழியத்தின் ஆரம்பமுதல் முடிவுவரை, கொஞ்சமும் பின்வாங்காமல், தாம் ஸ்தாபிக்க வந்த ராஜ்யத்தைக் கண்ணாரக் கண்டவர்போல, ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கிறவராகவும், ராஜ்யத்தின் கிரியைகளை நிறைவேற்றுகிறவராகவும் முன்னேறிச் சென்றார். தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குச் சிலுவை அவசியமென்றும், தேவராஜ்யம் உலகில் அறியப்பட திருச்சபை அதற்குக் கருவி என்றும், திருச்சபையாலே ராஜ்யம் வெளிப்படாதபடி தீமை அதற்கு விரோதமாய்ப் போராடும் என்றும், கடைசியாகத் தாமே வந்து சகல இடறல்களையும் அக்கிரமங்களையும் முற்றிலும் அழித்து, ராஜ்யத்தை பகிரங்கமாய் உலகம் அறிய ஸ்தாபிப்போம் என்றும் சொன்னார்.

அவர் பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது தமது சீஷரைப்பார்த்து: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லு

கிறார்கள் என்றார்கள். நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு சொன்னார். இதன் கருத்து என்னவென்றால்; யூதர்களாகிய நாங்கள் நெடுநாளும் எதிர்பார்த்திருந்த மேசியாவும் ராஜாவும் நீரே என்பதாகும். இந்த உத்தரவு ஆண்டவருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. இது பேதுருவுக்குக் கிடைத்த அனுபவ அறிவல்ல. பிதா சொல்லிக்கொடுக்க அவர் சொன்னதாகும். என்றாலும் அச்சமயத்தில் நல்லறிக்கை செய்தார். உடனே ஆண்டவர் சபை ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றியும், சிலுவையின் அவசியத்தைப்பற்றியும், நேரிடும் போராட்டத்தைப்பற்றியும், முடிவான வெற்றியைப்பற்றியும் அவர்களுக்குச் சொன்னார். இந்த நாலு விஷயங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுள்ளது. இச்சமயத்தில் ஆண்டவர் இரண்டுமுறை ராஜ்யத்தைப்பற்றிப் பேசினார். பேதுருவைப்பார்த்து: "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" என்றார். சற்றுபிந்தி, "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

ஆண்டவர் தமது சிலுவைப் பாடுகளை அறிவித்த சமயத்திலேயே தேவராஜ்யத்தைப்பற்றியும் பேசுகிறார். ஆகையால் சிலுவை தேவராஜ்யத்தோடு சம்பந்தப்படாததல்ல. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சிலுவை அவசியம் என்கிறார். சிலுவை என்பது யூதர்களுக்கு எவ்வளவேனும் பிரியமேயில்லை. ராஜா மரிக்கிறதாயிருந்தால் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது எப்படி? ஆகையால் சிலுவை கூடாதென்பதே அவர்கள் தீர்மானம். அவர்களுக்கு விளங்கினாலும் விளங்காவிட்டாலும் ஆண்டவர் தமது தீர்மானத்தை விட்டு விலகவில்லை. தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குச் சிலுவை அவசியம் என்பதை அவர் திட்டமாய் அறிவித்தார். ஆகையால் சிலுவையைப்பற்றி யூதர்களுக்குத் திரும்பவும் போதித்தார். சிலுவைப்பாதை வழியாகத்தான் தேவராஜ்யம் வெளிப்படவேண்டும் என்பதை ஆண்டவர் அறிவார்.

அதற்கு ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். அதுவே அவருடைய இடை
விடாத எண்ணமாயிருந்தது.

பிலிப்புச்செசரியாவில் தாம் மரிக்கவேண்டும் என்று சொன்ன
திலிருந்து ஒருவாரமாகப் பேச்சு மூச்சைக் காணோம். ஆண்டவர்
அவர்களோடு பேசினதாவது அல்லது அவர்கள் ஆண்டவரோடு பேசி
னதாவது சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. அந்த ஆறுநாட்களை
மௌன நாட்களென்று சொல்லவேண்டும். தாம் மரிக்கவேண்டியது
அவசியமென்று ஆண்டவர் உறுதியாய்ச் சொன்னது சீஷர்களுக்குக்
கொடிய சஞ்சலமாயிற்று. அவர்கள் அதுமுதல் ஒன்றும் பேசக்கூடா
தவர்களானார்கள். ஆண்டவரோ தமது பாடுகளையும் அவற்றின் மூல
மாய் உண்டாகும் ராஜ்யவெற்றியையும் நினைத்து ஆழ்ந்த சிந்தை
யுள்ளவராயிருந்தார். ஆறுநாட்களுக்குப் பின்பு ஒரு விசேஷித்த சம்
பவம் நடந்தது. அது அவருடைய மறுரூபமானமை. இந்தச் சம்ப
வத்தைப் பற்றிச் சொல்லுகிற மூன்று சுவிசேஷகர்களும் அவர்
தமது மரணத்தைப்பற்றியும் தேவராஜ்யம் வருவதைப்பற்றியும்
சொன்ன ஒரு வாரத்திற்குள் மறுரூபமானார் என்று எழுதியிருக்கிறார்
கள். மறுரூபத்தின் நோக்கமென்ன? அங்கே நடந்த சம்பவம்
வெளிப்படப்போகிற தேவராஜ்யத்திற்கு முன்னடையாளம் என்று
சொல்லலாம். ஆண்டவர் மகிமையாய்ப் பிரகாசிக்கிறார். மோசே
யும் எலியாவும் அவரோடு சம்பாஷிக்கிறார்கள். ராஜரீக மகிமை
யடைந்த ஆண்டவர் அவர்களோடு செய்த சம்பாஷணை என்ன?
"அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்
தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்" (லூக். 9: 31). "நிறை
வேற்றப் போகிற" என்கிற வார்த்தை, அவர் சத்துருக்கள் கையில்
அகப்பட்டுக்கொண்டு சாகிறவராக அல்ல, தாமே போய்த் தமது பாடு
கள் மரணத்தை நிறைவேற்றுகிற அவருடைய முயற்சியைக் காண்
பிக்கிறது. இங்கேயும் தேவராஜ்யத்தோடு சிலுவை சம்பந்தப்பட்டி
ருப்பதைப் பார்க்கிறோம். சிலுவையில்லாமல் தேவராஜ்யம் வரும்
படி விரும்பின சீஷர்களோடு பிதா பேசினார். "இவர் என் நேச
குமாரன் இவருக்குச் செவிகொடுங்கள்" என்றார். அதாவது, என்

குமாரன் போகிறவழியே சரியானவழி; சிலுவை மூலமாகத்தான் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று அவர் சொன்னால், நீங்கள் மறுவார்த்தை பேசாமல், அவர் சொல்லுகிறதற்குச் செவி கொடுக்கவேண்டும் என்கிறார். அவர்கள் மலையிலிருந்து இறங்கின பின்பு, தமது மரணம் உயிர்த்தெழுதலின் அவசியத்தைப்பற்றி மறுபடியும் சீஷர்களுக்குச் சொன்னார். அவர்கள் அதைக்கேட்டுத் துக்கப்பட்டார்களேயன்றி, அவர் சொன்னவைகளின் கருத்தை அறிந்துகொள்ளவில்லை. யாக்கோபும் யோவானும் அவருடைய ராஜ்யத்தில் வலது இடது பக்கம் இருக்கும்படி உத்தரவாகவேண்டுமென்று கேட்டபோது, "நான் குடிக்கும் பாத்திரம், நான் பெறும் ஸ்நானம்" என்று அவர் சொன்னது சிலுவையையே குறித்தது. இவ்வாறு நமதாண்டவருக்கு தேவராஜ்யம் சிலுவையோடு சம்பந்தப்பட்டிருந்தது. தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சிலுவை அவசியம் என்பதை மகா உறுதியாய்ப் போதித்தார். ராஜ்யத்திற்கும் சிலுவைக்கு முள்ள சம்பந்தத்தை மறுரூபக்காட்சியில் சீஷர்களுக்குப் படம்போல் காண்பித்தார்.

## III. சிலுவை அவசியம் என்பதற்குக் காரணங்கள் எவை?

1. **விரோதிகளின் எதிர்ப்பு.** சனகரீம் என்னும் யூதருடைய ஆலோசனைச் சங்கம் தேவராஜ்யத்தின் விரோதியாகிய அந்தகார அதிபதியின் கையிலிருந்தது. இந்தச் சங்கத்தில் மூப்பர், பிரதான ஆசாரியர், வேதபாரகர் என்னும் அதிகாரக் கூட்டத்தார் ஆளுகை செய்தார்கள். இங்கே பரிசேயரைக் காணோமே என்று நினைக்க வேண்டாம். வேதபாரகரே பரிசேயராவார்கள். இந்த மூன்று வகுப்பாரும் சேர்ந்து யூதருக்குள் அதிகாரஞ்செலுத்தினார்கள். மூப்பர் தேசகாரியங்களில் அதிகாரிகள். பிரதான ஆசாரியர் மார்க்க அதிகாரிகள். வேதபாரகர் சன்மார்க்க, சடங்காசார அதிகாரிகள். இந்த மூன்று அதிகாரங்களும் சேர்ந்து தம்மை எதிர்க்கும் என்றும், தாம் அவர்கள் கையில் பாடுபடவேண்டியது அவசியம் என்றும் ஆண்டவர் சீஷர்களுக்குச் சொன்னார். "தாம் எருசலேமுக்குப்போய், மூப்பரா

லும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும்” என்றார். ஏனென்றால் இந்த மூன்று அதிகாரங்களும் கெட்டுச் சீரழிந்துபோயிருந்தன. இவர்கள் தேச விசாரணையாலும், மார்க்க ஆசாரங்களாலும், பாரம்பரியங்களாலும் கடவுளுடைய ஜனங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு, ஆத்துமாதொய்ந்து, சிதறுண்ட ஆடுகளைப்போல் வழிதப்பி அலைந்தார்கள். ஈனமான ஜனங்களை ஆண்டவர் கண்டபோது, அவர்களுடைய ஆத்தும நிலைமை அவருக்குள் பரிதாபத்தையும் மனதுருக்கத்தையும் உண்டாக்கினது. இயேசுகிறிஸ்து கடவுளால் அபிஷேகம் பெற்ற ராஜா. உலகத்தில் தேவ ஆளுகையை ஸ்தாபிக்கும்படி பிதாவால் அதிகாரம் பெற்று வந்தவர். ஆனால் அவருடைய ராஜ்யம், பிலாத்துவிடம் அவர் சொன்னதுபோல, இவ்வுலகத்துக்குரியதல்ல. அவர்களுடைய ராஜ்யமோ இவ்வுலகத்துக்குரியது. ஆண்டவருடைய ராஜ்யம் ஆவிக்குரியது; அவர்களுடைய ராஜ்யமோ மாம்சத்துக்குரியது. இது ஒன்றோடொன்று கட்டாயம் மோதும் என்பது நிச்சயம். சாந்தமுள்ள ராஜா அவர்களோடு சண்டைசெய்யப் போகிறவரல்ல. தீமைக்குத் தீமை செய்கிறவருமல்ல. பாவிகள் கையில் என்ன பாடுபட்டாகிலும் தமது ஆவிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது அவருடைய உறுதியான தீர்மானம். அவரை எவ்விதத்திலும் பிடித்துப் பாடுபடுத்திக் கொன்றுபோடவேண்டுமென்பது தேவராஜ்யத்தின் விரோதிகளாகிய அவர்களுடைய உறுதியான தீர்மானம். இதை அறிந்துதான் ஆண்டவர் தமக்குப் பாடுமரணம் அவசியம் என்று அறிவித்தார். விரோதிகளின் கொடிய எதிர்ப்பு தமது மரணத்தில் முடியும் என்பது ஆண்டவருக்குத் தெரியும். சிலுவை அவசியம் என்பதற்கு இது ஒரு காரணம்.

2. **பிதாவின் கட்டளை.** நாம் இப்பொழுது கவனித்த முதல் காரணம் நமது மனதிற்கு திருப்தியாயில்லை. ஏனென்றால், எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்த ஆண்டவரை, எப்பொழுதும் நன்மைசெய்த ராஜாவை தீயோர் கையில் மடியும்படி விட்டது நியாயமா? கடவுள் ஏன் அக்கிரமக்காரரை அழித்து, தமது குமார

னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடாது என்று கேட்டோம். நான் எருசலேமுக்குப் போகவேண்டும், பல பாடுகள் பட்டு மரிக்க வேண்டும் என்று ஆண்டவர் சொல்வதைப் பார்க்கும்போது, ஏதோ ஒரு பலத்த காரணம் இருப்பதுபோல் தோன்றுகிறது. அவர்கள் என்னைக்கொலைசெய்ய விரும்புகிறார்கள், ஆகையால் நான் எருசலேமுக்குப்போய் அவர்கள் என்னைக் கொல்லும்படி ஒப்புக்கொடுப்பேன் என்பதுமாத்திரம் நியாயமான காரணமாகாது. வேறொரு பலத்த காரணமும் உண்டு. ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி வந்த கிறிஸ்து பிதாவின் ஆலோசனைப்படியும் அதிகாரத்தின்படியும் நடத்தப்பட்டவர். அவர் இப்படிப் பாடுபட்டு மரிப்பதும் பிதாவின் ஏற்பாடாகயிருந்தது. அதைக்குறித்து ஆண்டவர் தாமே என்ன சொல்லுகிறார்? "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக்கொடுக்கிறேன், அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு; இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்" என்கிறார் (யோ. 10: 17, 18). முந்தின காரணத்தைப் பார்க்கிலும் இரண்டாம் காரணம் பலமாயிருக்கிறது. இப்படிப் பாடுபட்டு மரிக்கவேண்டுமென்பது பிதாவின் தீர்மானமும் கட்டளையுமாயிராவிட்டால் ஆண்டவர் எருசலேமுக்குப் போயிருக்கமாட்டார். அவரைப் பிடிக்கவோ கொல்லவோ ஒருவனாலும் முடியாது. அவர் தம்மை ஒப்புக்கொடுத்ததினால் அவர்கள் அவரைக் கொன்றார்களேயல்லாமல், மற்றப்படி அவரைப் பிடிக்க முடியவேமுடியாது. முன் பல சமயங்களில் அவரைக் கொல்லவும், கற்களை அவர்மீது எறியவும் துணிந்தபோது அவரைக் காணோம். இப்பொழுதோ அவர் தம்மை அவர்கள் கையில் ஒப்புவித்தபடியால் அவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி செய்தார்கள். பேதுரு ஆவியினால் நிறைந்து பேசினபோது இந்த மறைவான காரணத்தைச் சொல்லுகிறார். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனைப்படியேயும் அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய

கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" (அப். 2: 23). இங்கே மனுஷன் மாத்திரமல்ல, கடவுளும் சிலுவையில் சம்பந்தப்பட்டிருக்கிறார் எனத்தெரிகிறது.

கடவுள் தமது ராஜ்யத்தைப் பாடுகளின் வழியாக ஸ்தாபிக்க வேண்டியதென்ன? அவர் நீதியுள்ளவரானால் துன்மார்க்கரை வேரோடே அழித்து நிக்கிரகம்பண்ணி, தமது நீதியுள்ள ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கக்கூடாதா? ஆம், அவருடைய நீதியைப்பற்றி மாத்திரம் பேசுவோமானால், உலகத்தில் அவர் ஆளுகைக்கு விரோதமாயிருக்கிற எல்லா மனுஷரையும் எல்லாக் காரியங்களையும் சர்வநாசம் பண்ணுவதே சரி. அப்படிச் செய்வாரானால் கடவுளுக்கு என்ன கீர்த்தி? "நன்மை செய்வதோ, தீமை செய்வதோ; ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்?" என்று அவரே கேட்டவர். ஒரு துஷ்டனை நீதியின்படி அழித்துவிடுவதிலும் அவனை எவ்விதத்திலும் நல்லவனாக்கக் கூடுமானால் அதுவே சிறந்த வெற்றியாகும். ஒரு அரசன் தன்னை எதிர்த்து நிற்கும் பட்டணத்தை அழித்துவிடுவது நீதியாகலாம். ஆனால் அந்தப் பட்டணத்தாரை மனப்பூர்வமாய்த் தனக்குக் கீழ்ப்படியச் செய்யக்கூடுமானால் அதற்கு நிகரான வெற்றியில்லை. கடவுள் உலகத்தை அழித்துவிடுவாரானால் அவருடைய ராஜ்யம் எங்கே? அவர் ஆளுவதற்கு மனுஷர் எங்கே? தமது ராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு ஏலாமல் சர்வநாசம் செய்துவிட்டார் என்றாகுமல்லவா?

அதுமாத்திரமல்ல, அப்படிச்செய்வது அவருடைய தன்மைக்கு விரோதமுமாகும். கடவுளுடைய தன்மை அன்பு. அந்த அன்பிலேதான் நீதி, பரிசுத்தம், வல்லமை, ஞானம் என்பவைகள் அடங்கியிருக்கின்றன. இவையாவும் சேர்த்து அவர் அன்பின் மயமாயிருக்கிறார். அன்பு அழிப்பதையல்ல, ரட்சிப்பதையே நாடும். தம்மை இன்னாரென்று அறியாமலும், தமது ராஜ்யத்தின் தன்மையை அறியாமலும், தம்மை எதிர்க்கும் மனுஷரை ரட்சிக்க வேண்டுமென்பதே அவர் வாஞ்சை. அவர்கள் அவரைப் பகைத்து அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தாலும், அவரோ அவர்களுக்கு மன்னித்து அவர்

களை ரட்சித்துக் கொள்ளும்படி விரும்பினார். ஒரு அன்புள்ள தாய் தன் துஷ்டமகனை நல்வழிக்குத் திருப்பும்படி பிரயாசப்படுகையில், மூர்க்கனாகிய மகனால் ஏச்சையும், அவமானத்தையும், அடிகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வதுபோல, பாவிகள் தமக்குச் செய்த சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்து, அவர்கள் தீமையைத் தமது நன்மையால் வென்று, எப்படியாகிலும் அவர்களை ராஜ்யத்தின் பிள்ளைகளாக்க வேண்டுமென்பது தேவ தீர்மானமாக யிருந்தது. அப்படியே அவர் மரணத்திற்குப் பின் அநேகர் இருதயம் நொறுங்கி, கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டு ராஜ்யத்தின் புத்திரரானார்கள். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்" என்று ஆண்டவர் சொன்ன பிரகாரம் அவர்கள் அவரைச் சிலுவையில் உயர்த்தின பின்புதான் அவரை இன்னாரென்று அறிந்தார்கள். அவருடைய சிலுவையில் வெளிப்பட்ட அன்பின் காந்தம் உலகத்தில் ஆயிரமாயிரமான பாவிகளை இழுத்து தேவராஜ்யத்தின் பிள்ளைகளாக்கி யிருக்கிறதென்பது நிச்சயம். ஆக்கினையினால் அல்ல, தமது அன்பினாலேயே ஆண்டவர் உலகத்தை ரட்சித்தார். அவர் ஸ்தாபிக்கும் ராஜ்யமும் அன்பின் ராஜ்யமே யாகும்.

3. பொல்லாங்குக்கு அழிவு. விரோதிகள் எதிர்ப்பும், பிதாவின் கட்டளையு மாத்திரமல்ல, தீயோனாகிய சாத்தானையும் அவன் சகல கிரியைகளையும் அழிப்பதற்கு சிலுவை அவசியமென்பது மூன்றாம் காரணமாகும். மனுமக்கள் தேவ ஆளுகையைவிட்டு விலகிப்போகும்படி வஞ்சித்தவன் சாத்தான். அவன் வஞ்சகத்தாலேயே பாவமும் சாபமும் மரணமும் சகல கேடுகளும் மனுமக்களை ஆண்டுகொண்டன. அவன் தூண்டுதலாலேயே மனுஷர் கடவுளைப் பகைக்கவும், அவருடைய ஆளுகையை எதிர்க்கவும் துணிந்தார்கள். ஆகையால் சகல கேடுகளுக்கும் மூலகாரணனாகிய சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழிக்காவிட்டால் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வழியிராது. தீயோன் ஆளும்வரை தீமைகளும் இருக்கும். தீமைகள் இருக்கும்வரை தேவ ஆளுகை என்று பேசவிடமிராது. 'மனை

ஷரத் தீமையிலிருந்து ரட்சிப்பதும், அவர்கள் தேவ ஆளுகையைத் தங்கள் ஜீவியத்தில் ஏற்றுக்கொள்வதும் ஒரு விதத்தில் சந்தோஷமான காரியமானாலும், தீயோன் இருக்கும் வரை தீமைக்கு இடமுண்டு என்பது நிச்சயம். தேவராஜ்யம் உலகில் வெளிப்படும்போது அங்கே பாவம், சாபம், பிணி, வேதனை, மரணம் முதலான எவ்வித கேடும் தலைகாட்டக்கூடாது. அப்படித் தலைகாட்டுமானால் அது தேவராஜ்யமாகாது; அது கடவுள் ஏகாதிபத்தியம் ஆகாது. ஆகையால் தேவராஜ்யத்திற்கு விரோதமான சகல தீமைகளுக்கும் மூலகாரணனாகிய சாத்தானையும் அவன் விளைத்த சகல கேடுகளையும் அழிக்க வேண்டும். "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவகுமாரன் வெளிப்பட்டார்" (1. யோ. 3:8) ஆண்டவர் தமது மரணத்தைப் பற்றிப் பேசினபோது "இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்றார் (யோ. 12:31). "மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு" ஆண்டவர் சிலுவையில் மரித்ததாக எபிரேயர் நிருபத்தார் கூறுகிறார் (எபி. 2:14).

ஆண்டவருடைய மரணம் எப்படி சாத்தானையும் அவன் சகல கிரியைகளையும் அழிக்கக்கூடும் என்பது முக்கியமான கேள்வி. "இதுவே உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்று ஆண்டவர் சொன்னபடி, அவருடைய பாடுகளையும் மரணத்தையும் கவனிக்கும்போது, அவர் சத்துரு கையில் அகப்பட்டுக்கொண்டதால் அவரும் அவர் ஊழியமும் அழிந்துபோல் தோன்றுகிறதேயல்லாமல் அவர் சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழித்ததுபோல் தெரியவில்லையே. இதனாலேதான் சிலுவையை ரகசியம் என்று அழைக்கிறோம். சிலுவையில் நடந்த காரியங்களை நாம் பூராவாக அறிந்தவர்கள் அல்ல. முதல் மூன்று வசனங்களை அவர் சொன்னபின்பு மூன்று மணி நேரங்களாக யாதொரு பேச்சில்லை. அந்த மூன்றுமணிநேரமும் நடந்த காரியத்தை மனுஷர் அறியாதபடி காரிருள் சிலுவையை மூடிக்கொண்டது. சிலுவையில் தொங்கின ஆண்டவரை மனுஷர் பார்க்கமுடியவில்லை. அந்த மூன்று

மணிநேரத்தில் ஆண்டவர் சாத்தானோடும் அவன் சகல வல்லமைகளோடும் வெகுமும்முரமாய்ப் போராடினார். உலகத்தின் பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் தாமே தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டு, அவற்றால் விளைந்த பயங்கரமான கசப்பை அனுபவித்து வெற்றியடைந்தார். அவர் தமது சரீரத்தைச் சிலுவையில் அறைந்தபோதே அவைகளையும் சேர்த்து ஆணியறைந்தார். தம்மை மரணத்திற்கு ஒப்புவித்த போதே அவைகளையும் மரணத்திற்குள்ளாக்கினார். அவரடைந்த மரணமே பாவத்துக்கும் சாபத்துக்கும் மரணத்துக்கும் மரணமாயிற்று. இவ்வாறு மரணத்திற்கு அதிகாரியான பிசாசையும் அவன் சகல தீயகிரியைகளையும் தமது மரணத்தினாலே அழித்தார். அவர் சற்றுநேரத்திற்குப்பின் "முடிந்தது" என்று முழங்கின கர்ச்சிதமானது அவரடைந்த வெற்றியை வெளிப்படுத்தினது.

அவர் சாத்தான்மேல் வெற்றியடைந்தா ரென்பதற்கு அவர் மரணமாத்திரம் போதாது. சற்றுமுன் நாம் கவனித்தபடி அவரது மரணம் சாத்தான் அவர்மேல் அடைந்த வெற்றிபோல் தோன்றிற்று. சிலுவையில் மறைவாய் நடந்த காரியத்தை அறியாதவர்களுக்கு ஆண்டவர் தோல்வியுற்றது போலவே தோன்றும். அவர் மரணம் சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழித்ததென்பது வாஸ்தவம். அதற்கு ஆதாரமென்ன? ஆண்டவர் தாம் மரிக்கவேண்டும் என்று மாத்திரம் சொல்லாமல் உயிரோடெழும்பவேண்டும் என்றும் சொன்னார். அவர் தமது மரணத்தைப்பற்றிப்பேசின இடங்களிலெல்லாம் உயிர்த்தெழுதலையும் சேர்த்தே பேசியிருக்கிறார். "மெய்யாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்" (லூக். 24: 34). முந்தின நெருக்கமும் பாடுகளும் நீங்கிப் புதியஜீவனோடு வெற்றியாய் எழுந்தார். இதுவரை மனுமக்களை மரணத்தால் நடுங்கவைத்த சாத்தானுடைய கர்வம் அழிந்தது. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களைப் பிடுங்கிக்கொண்டு, மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று கர்ச்சித்தார். அவர் உயிர்த்தெழுதலின் வெற்றியே அவர் பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் முதலாவது தம்மிலே அழித்தவரென்பதற்கும், அவரோடு ஐக்கியப்படு

கிறவர்களுக்கு தமது ரக்ஷண்ய வெற்றியை அருளுகிறவரென்பதற்கும் உறுதியான ஆதாரம். இவ்வாறு நமக்கு விரோதமாயிருந்த சகல நிலைமைகளையும் அழித்து, நாம் தேவராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு தமது மரணத்தின் மூலமாய் "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை" உண்டாக்கினார்.

நாம் சுவிசேஷத்தை வாசிக்கும்போது சத்துருக்கள் அவரைப் பிடித்ததையும், பாடுபடுத்தினதையும், அவமானப்படுத்தினதையும், கடைசியாகச் சிலுவையில் அறைந்து கொன்றதையும் காண்கிறோம். சகலமும் சத்துருக்களின் ஆரவாரமும், அவர்கள் முயற்சியும், அவர்கள் தீர்மானமும், அவர்கள் வெற்றியுமாகத் தோன்றும். அவரோ வாய்திறவாமல் சாந்தமான ஆட்டுக்குட்டியைப்போல் சகல பாடுகளையும் சகித்து மரித்தார் என்பதாகத் தோன்றும். சரித்திரப்படி நாம் காண்கிற காரியம் அதுதான். ஆகிலும் விஷயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, சத்துருக்களின் முயற்சியல்ல, சகலமும் ஆண்டவருடைய முயற்சிதான் என்பது தெரியவரும். தமது பாடுகளைக்குறித்து மோசே எலியாவோடு அவர் பேசினபோது, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற மரணத்தைக்குறித்து" பேசினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "நிறைவேற்றப்போகிற" என்கிற வார்த்தை அவருடைய முயற்சியைக் காட்டுகிறது. "என் ஜீவனை ஒருவனும் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்" என்று அவர் சொன்னதும் அவருடைய முயற்சியைக் காட்டுகிறது. இதைச் சத்துருக்கள் அறியார்கள். தாங்களே அவரைப் பிடித்துக்கொண்டது போலவும், தாங்களே அவரைக் கொன்றுவிட்டது போலவும் அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். பாடுகளும் சிலுவைமரணமும் பிதா தமக்கு ஏற்படுத்தின பாதை என்பதை ஆண்டவர் அறிந்து, தோல்வியுற்றவனைப்போல் அல்ல, ஒரு யுத்தவீரனைப்போல சத்துருக்களுக்கு எதிர்கொண்டு போனார். அவ்வாறு போகும்போது: "என் பிதா எனக்குத் தந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று சொல்லிக்கொண்டு போனார். கொடிய போரில் சென்ற யுத்தவீரன் சத்துருவை ஜெயித்

துத் திரும்பும்போது, அவன் தேகத்திலுள்ள காயங்களும் ரத்தமும் அவனுக்குப் பெருமையாய் விளங்குவதுபோல, ஆண்டவர் தமது ராஜ்யத்திற்காக நடத்தின இந்த யுத்தத்தில் அவர் சிந்தின ரத்தமும் காயங்களும் அவருக்கு வெற்றிச் சின்னங்களாயிருக்கின்றன. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து தம்முடைய ரத்தத்தினாலே நமது பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக." (வெளி. 1: 6).

## IV. தேவராஜ்யமும் நாமும்.

கிறிஸ்து தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி உலகத்திற்கு வந்தார். ராஜர் வந்தபோதே ராஜ்யமும் அவரோடே வந்தது. அவர் தமது ஜீவியத்திலும், உபதேசங்களிலும், கிரியைகளிலும் தேவராஜ்யத்தின் தன்மையை, அதன் பலத்தை, அதன் ஆசீர்வாதங்களை வெளிப்படுத்தினார். உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுக்குச் சகிக்கக் கூடவில்லை. அவன் தன் ஆட்களைச் சேர்த்து அவரைப் பகைக்கவும், தங்கள்மேல் அவர் ராஜராயிராதபடி அவரை அகற்றிக் கொலைசெய்யவும் தீர்மானித்தான். ஆண்டவரோ, அவர்கள் தமது சரீரத்தைக் கொலைசெய்தாலும் தமது ராஜ்யத்தை அழிக்க முடியாதென்று அறிந்தவராக, தமது ஊழியத்தைக் கடைசிவரை நடத்திக்கொண்டே போனார். தமது ராஜ்யம் அன்பின் ராஜ்யமாதலால், அவர் தீமைக்குத் தீமைசெய்து, சத்துருக்களை நிர்மூலம் பண்ணி, அவ்விதமாய்த் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கருதாமல், சத்துருக்களையும் ஆதாயம்பண்ணி, அவர்களையும் ராஜ்யத்தின் புத்திரர் ஆக்க வேண்டுமென்று விரும்பி, அவர்கள் தமக்குச் செய்த சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டார். மனுமக்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி பாவம் குறுக்கே நின்றபடியால், உலகத்தின் பாவத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு, தமது மரணத்தால் பாவத்தையும் பிசாசின் சகல கிரியைகளையும் அழித்தார். அவர் புதிய ஜீவனோடு உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்று, ஆவியின்

மூலம் தமது அப்போஸ்தலருக்குள் வந்து அவர்களை ஆசீர்வதித்தார். அவர் கட்டுவேன் என்று சொல்லியிருந்த சபை உண்டாயிற்று. இவர்கள் தேவராஜ்யத்தின் புத்திரராகி, தேவ ஆளுகையைப் பெற்றார்கள். தேவராஜ்யம் பலமாய் அவர்களுக்குள் வந்தது. அவர்களுடைய ஆவிக்குரிய மாறுதலைக் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தேவராஜ்யத்தின் பலமும் ஆசீர்வாதமும் அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் சிறந்து விளங்கின.

இனிமேல் பகிரங்கமாக பூமியில் வெளிப்படப்போகிற தேவராஜ்யத்திற்கு இந்தத் திருச்சபையைத் தமது கருவியாகக் கொண்டார். தேவராஜ்யத்தின் திறவுகோல்களை அதற்குக் கொடுத்தார். ராஜாவாகிய அவர் அவர்களுக்குள்ளும் அவர்களோடும் இருப்பதால், அவர்கள் எங்கும் புறப்பட்டுப்போய், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்கவும், மனுஷர்களை ராஜ்யத்தின் புத்திரராக்கவும் கட்டளையிட்டார். அந்த ஊழியம் அந்நாள் தொடங்கி இந்நாள்வரை நடந்து வருகிறது. உலகமெங்கும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் தேவராஜ்யத்தை வெளிப்படுத்தும் விஷயத்தில் சபைகள் தவறிப்போயின வென்றே சொல்லவேண்டும். நாம் ஆதிச்சபையைப் போல் இல்லை. ராஜா நம்மைப் பூரணமாய் ஆண்டு நடத்தும்படி நாம் இடங்கொடாததால், அவரது ராஜ்யத்தின் சிறப்பை மற்றவர்கள் நம்மில் காணமுடியவில்லை. கிறிஸ்துவை அறியாதவர்களும், அவர் அன்பில் நிலைத்திராதவர்களும், அவரோடு ஏக ஐக்கியமில்லாதவர்களும் சபைகளில் மிகுதியாய் இருப்பதால், புறம்பேயிருந்து கவனிக்கிறவர்களுக்கு சபைகளில் யாதொரு விசேஷமுமில்லை. திருச்சபை கோதுமைகளாயிருப்பதற்குப் பதிலாக, சபைக்குள்ளேயே கோதுமைகளும் களைகளும் கலந்திருப்பது மகா விசனமான காரியம்.

தேவராஜ்யத்தை உலகில் பரவச்செய்வதற்கு ஆண்டவர் திருச்சபையைத் தமது கருவியாகக் கொண்டார் என்று கவனித்தோம். சபைகள் தேவ ஆளுகைக்கு இடங்கொடாமல் உன்னத பலமிழந்து தவிப்பதால் ராஜாவின் கட்டளையை நிறைவேற்றக் கூடாதிருக்கின்றன. ஜனங்கள் மார்க்கத்தில் சேருகிறதாயிருந்தாலும் அது களைகள்போய்க்

களைகளைக்கொண்டு வருவதுபோலிருக்கிறது. ஒரு சபையின் நிலைமை எப்படியோ அதுபோலவே அதில் சேருகிறவர்களுமிருப்பார்கள். ஆகையால் எந்த ஒருசபையும் தேவராஜ்யத்தின் ஆவிக்குரிய பலத்தை வெளிப்படுத்தத் தகுதியுள்ளதல்ல.

அப்படியானால் ஆண்டவர் சபையை ஸ்தாபித்த நோக்கம் தவறிப்போகுமோ? தேவராஜ்ய ஆளுகை பூமியில் பகிரங்கமாய் வெளிப்படும் காலம் வராதோ? தேவராஜ்யம் பூமியில் கட்டாயம் ஸ்தாபிக்கப்படும். ஒரு தனித்த சபை அவருடைய ராஜ்யத்தின் சிறப்பை வெளிப்படுத்தக் கூடாமற்போனாலும், உலகமெங்கும் சிதறுண்டிருக்கிற ராஜ்யத்தின் புத்திரருடைய ஆவிக்குரிய ஜீவியமும் ஊக்கமுள்ள ஊழியமும் வியர்த்தமாகாது. அவர்களெல்லாரும் சேர்ந்து தேவ பார்வையில் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயிருக்கிறார்கள். அவர்களெல்லாரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஜீவனுள்ள அவயவங்களாயிருக்கிறார்கள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வசித்து, அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்துகிறார். அவர்கள் உள்ளங்களிலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் பாய்கின்றன. அநேகருக்கு அவர்கள் ஆசீர்வாதமாயிருக்கிறார்கள். அவர்கள் மூலமாய் அநேகர் கிறிஸ்துவோடு ஐக்கியமாகி ராஜ்யத்தின் புத்திரராகிறார்கள். உலகெங்கும் சிதறுண்டிருக்கிற இவர்கள் மூலமாய் ராஜ்யத்தின் ஊழியம் நடந்தேறுகிறது.

ராஜ்யத்தின் சுவிசேஷம் சபைகளில் ஆவியின் பலத்தோடும் அனுபவத்தோடும் பிரசங்கிக்கப் படாததால் புதிய சுவிசேஷங்கள் எழும்பக் காரணமாயிற்று. கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கத்தினாலேயே காரியம் பலிக்காது என்றும். ஜனங்கள் எத்தனையோ கஷ்டங்களிலிருக்கிறார்கள், அவர்களுக்கு உண்ண ஆகாரமும், உடுத்த வஸ்திரமும், சரீரத்திற்குச் சுகமும், சகல சௌகரியங்களும் வேண்டுமென்றும், அப்படியானால்தான் அவர்கள் கடவுளைத் தேடுவார்கள் என்றும் போதிக்கிற புதிய சுவிசேஷங்கள் கிளம்பியிருக்கின்றன. அவைகளுக்கு சோஷல் காஸ்பல், லேபர் காஸ்பல், மதுவிலக்கு காஸ்பல், சுகாதார காஸ்பல் என்று பேர் சொல்லுகிறார்கள். இச்சங்கங்களுக்

குப் பணவிடைக்கும் உபகாரிகளும் அநேகர். மனுஷருக்குப் பிழைக்கும் வழி காண்பித்து அவர்கள் சௌக்கியமாக வாழ்வதற்கு ஏற்பாடுகள் செய்வது எக்காலமும் பாராட்டத்தக்கதே. ஆனால் தேவ ராஜ்யத்தின் சுவிசேஷ வேலையால் மாத்திரம் காரியம் பலிக்காதென்றும், இப்படிப்பட்ட புதிய சுவிசேஷ வேலைகளாலேதான் ஜனங்கள் ஆத்மகாரியங்களில் பிரியப்படுவார்கள் என்றும் சொல்வது சரியோ?

பரத்தின் தேவதூதன் "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் சுவிசேஷத்தை" (நற்செய்தியை) அறிவித்தான். அது என்ன சுவிசேஷம்? "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" என்பதே. அவர்தான் சுவிசேஷம். மனுஷனுடைய ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் தேவையான சகல நன்மைகளும் அவருக்குள்ளிருக்கின்றன. ஆத்துமாவுக்கு ஒரு சுவிசேஷத்தையும் சரீரத்துக்கு வேறொரு சுவிசேஷத்தையும் தேவதூதன் பிரசங்கிக்கவில்லை. கிறிஸ்து நமது ஆத்துமாவை மாத்திரம் ரட்சிக்கிறவராயிருந்து, சரீர நன்மைகளை நமக்குக் கொடாவிட்டால் அவர் எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குவதெப்படி? அப்படியிருக்குமானால் வேறே சுவிசேஷங்கள் அவசியந்தான்.

ஆண்டவர் ஊழிய நாட்களில், பிழைக்கும்வழி, மதுவிலக்கு, சுகாதாரம், கைத்தொழில், நாகரீகம் முதலான முயற்சிகளில் அவர் ஈடுபட்டவரல்ல. அவரது அப்போஸ்தலரும் ஜனசமுதாய ஊழியத்தில், சரீரத்திற்குரிய புறம்பான சீர்திருத்தங்களில் பிரவேசித்தவர்கள் அல்ல. ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்போது சகல நன்மைகளும் கூடக்கொடுக்கப்படும் என்பது ஆண்டவருடைய உறுதியான வாக்கு. இரண்டு சமயங்களில் பசியாயிருந்த ஜனங்களுக்காகப் பரிதபித்து அவர்களைப் போஷித்தார். அவர்கள் அப்பம் சாப்பிடுவதற்காகவே தம்மைப் பின்செல்லுகிறார்கள் என்று கண்டபோது அதை நிறுத்திவிட்டார். ஜனங்களும் அதுமுதல்

அவரைப் பின்செல்லாமல் விலகிப்போனார்கள். சரீர நன்மைகளைக் கொடுப்பதால் ஜனங்கள் கடவுள் பக்தராவார்கள் என்று எப்படிச் சொல்லலாம்? ஜனங்களைப் போஷித்துக் காப்பாற்றும் காருண்ய ஊழியத்தில் ஈடுபட்டிருந்த லார்ட் ஷாவ்ட்ஸ்பரி என்ன சொன்னார்? “மனுமக்களைப் பராமரித்துப் போஷிக்கும் ஊழியத்தில் ஐம்பது வருஷக்காலம் நான் சம்பந்தப்பட்டிருந்தேன், ஆனால் அதன் மூலமாய் மனுஷர் கடவுளை நெருங்கினார்கள் என்று நான் சொல்லமுடியாது” எனவெழுதிவைத்தார். இப்படிப்பட்ட தர்ம ஊழியங்களை நாம் குற்றப்படுத்துவதில்லை. கிறிஸ்துவின் சபைகளில் தர்மசகாய ஊழியம் ஆதிமுதல் இருந்தே வந்திருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் மாத்திரம் காரியம் பலிக்காது என்றும், இப்படிப்பட்ட புதிய சுவிசேஷ வேலைகளாலேதான் ஜனங்கள் கடவுளைத் தேடக்கூடும் என்றும் சொல்வது மரத்தைத் தலைகீழாய் நடுவதற்குச் சமானமாகும்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆத்துமாவையும் சரீரத்தையும் ரட்சிக்கிறது. சகல ஆசீர்வாதங்களும் அவரது ராஜ்யத்தின் சுவிசேஷத்தில் அடங்கியிருக்கின்றன. “நீங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் கூடக்கொடுக்கப்படும்” என்று சொன்னார். இதன் உண்மையை அனுபவத்தில் கண்டுகளித்தவர்கள் அனந்தம். ஆகையால் வேறொரு சுவிசேஷத்திற்கு இடமில்லை. ஒரு தனி மனுஷனானாலும், ஒரு குடும்பமானாலும், ஒரு கிராமமானாலும் கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஜீவியத்தில் மாறுதல் அடைந்து, ராஜ்யத்தின் புத்திரராய்ப் பிழைக்கட்டும், அவர்களை ஆண்டவர் தமது வாக்கின்படியே போஷித்துக் காப்பாற்றுகிறாரோ இல்லையோ வென்பது அப்போது தெரியும். கர்த்தரை நம்பாதவர்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்தாலும் அவர்கள் கடவுளைவிட்டுத் தூரமாய்ப் போவதற்கே ஏதுவாகும். உள்ளான மாறுதலே புறம்பான ஆசீர்வாதம். குடிகாரன் குடும்பத்தைப் பாருங்கள். வீட்டில் ஓயாச்சண்டை. சம்பாத்தியம் மனைவி கையில் கிடைப்பதில்லை. எல்லாம் ஒழுங்கீனம்.

வீடு அசுத்தம். ஜாமான்கள் உடைந்து சிதறுண்டிருக்கின்றன. மக்கள் உடைகள் கந்தை. அவர்கள் தேகம் அழுக்கு. அவர்களுக்குச் சந்தோஷமில்லை. எவ்வளவு பரிதாபமான காட்சி! இப்படியிருக்க கிறிஸ்து அடியான் ஒருவர் அங்கே போய் அவர்களுக்கு ரட்சிப்பின் வழியை விளக்கமாய்ப் போதித்தார். அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, ஆண்டவரைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, ரட்சிப்பைக் கண்டடைந்தார்கள். சிலகாலம் சென்று அந்தக் குடும்பத்தைப் பார்ப்போம். எவ்வளவு மாறுதல்! சகலமும் சுத்தமாய் ஒழுங்காய்க் காணப்படுகின்றன. புருஷன்மனைவி மக்கள் சுத்தமாய் உடைதரித்து மகிழ்ச்சியோடு காணப்படுகிறார்கள். அவர்கள் மக்கள் ஒலிவமரக்கன்றுகளைப்போல் பந்தியைச் சுற்றிலும் உட்கார்ந்திருக்கிறார்கள். சச்சரவும், அதிருப்தியும், குழப்பமும் அகன்றுபோயின; சந்தோஷமும் சமாதானமும் நிலவுகின்றன. வேறே சுவிசேஷம் அல்ல, புறம்பான சீர் திருத்தமல்ல, கிறிஸ்துவே இந்த மாறுதல்களுக்குக் காரணம். அவர் எங்கே பிரவேசிக்கிறாரோ அங்கே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் சரீரத்திற்குரிய நன்மைகளும் குறைவுபடாது. தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள் இருக்கிறது. பவுல் என்ன சொல்லுகிறார்? "நாம் அனுபவிப்பதற்கு சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கக்" என்கிறார் (1. தீமோ 6 : 17). ஜனசமுதாயச் சுவிசேஷம் ஒருவேளை சரீரத்திற்கு நன்மை அளித்தாலும் நித்திய ஆசீர்வாதத்தைக் கொடாது. "சரீர முயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது; தேவபக்தியோ இம்மைக்கும் இனிவரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1. தீமோ. 4:8). இப்படியிருக்க, தேவ ஊழியராகிய நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதாலேயே காரியம் வாய்க்காது என்று சந்தேகித்து, வேறுமுறைகளைக் கையாடும்படி சங்கங்கூடி ஆலோசிப்பது எவ்வளவு பரிதாபம்! கிறிஸ்துவின் சுவிசேஷம் வல்லமையற்றுப்போகவில்லை. நாம் மாறினோமேயல்லாமல் ராஜ்யத்தின் சுவிசேஷமும் அதன் ஆசீர்வாதங்களும் மாறவில்லை. கடவுளை மறந்து அவர் ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததே உலகத்தின் தத்தளிப்புக்கும் தவிப்புக்கும் காரணம்.

அப்படியானால் திருச்சபை செய்யும் ஊழியத்தின் பலனாகவே தேவராஜ்யம் பூமியில் வரப்போகிறதா? ஒருக்காலும் அல்ல. அநேகருடைய எண்ணம் அப்படியே இருக்கிறது. தேர்ந்த வேதபண்டிதர்களுடைய பேச்சிலும் அவர்கள் புஸ்தகங்களிலும் இந்தக் குறிப்புகளைக் காணலாம். நமது முயற்சிகளாலும், தீமைகளை மேற்கொள்ளும்படி நாம் செய்யும் பலத்த வேலைகளாலும் தேவராஜ்யத்தைக் கொண்டு வரலாம் என்பது இவர்கள் நம்பிக்கை. தீவிரமாய் வளர்ந்து பெருகுகிற சாஸ்திர அறிவு இதற்கு அனுகூலம் என்று நினைக்கிறார்கள். வெளிப்படப்போகிற தேவராஜ்யத்தின் தன்மையை நாம் அறிந்தோமானால் ஒருபோதும் இப்படி நினைக்கமாட்டோம். அது கடவுளால் மாத்திரம் ஆகுமேயன்றி மனுஷனால் ஆகிறகாரியமல்ல. மனுஷன் புறம்பான சீர்திருத்தங்களை எவ்வளவோ செய்வான். உள்ளான பாவவினையை அகற்றி பாக்கியமான காலத்தைக் கொண்டுவர அவனால் ஆகவே ஆகாது. மனுஷர் படும்பாடுகளுக்கும் உள்ளான சஞ்சலங்களுக்குங் கணக்கு வழக்கில்லை. மக்கள் விடும் பெருமூச்சுகளையும் சிந்தும் மறைவான கண்ணீர்களையும் அறிந்தவன் யார்? எந்த மந்திராலோசனைச் சபையாலும், ஜாதிகளின் சங்கமானாலும், சாஸ்திரிகளின் ஞானமானாலும் நமது உள்ளத்தின் தவிப்பை அகற்றி, பாடுகள், நோய்கள், மரணத்தை அழித்து நமக்குப் பாக்கியமும் சமாதானமுமான வாழ்வைக் கொடுக்கமுடியுமா? இது கடவுளால் மாத்திரம் ஆகுமேயன்றி மனுஷனால் ஆகிற காரியமல்ல.

தேவராஜ்யம் மனுஷனுடைய பிரயத்தனத்தால் எப்படி வரமாட்டாதோ அதுபோலவே அது திருச்சபையின் பிரயத்தனத்தால் மாத்திரம் வரமாட்டாது. ராஜ்யத்தின் புத்திரராகிய நாம் ஆண்டவருக்கு எவ்வளவு பிரியமாய் நடந்துகொண்டபோதிலும், இன்னும் நமது ஜீவியத்தின் குறைவுகளையும் ஊழியத்தின் குறைவுகளையும் நன்கு அறிந்தேயிருக்கிறோம். தீமை எவ்வளவு பலமாய் உலகத்தை ஆண்டுகொண்டிருக்கிறது என்பதை நாம் நினைக்கும்போது நமது உள்ளம் கலங்குகிறது. "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட

நம்முடைய சமீபமாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்தி ருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" என்று பவுல் புலம்பினார். அதுவே நமது அனுபவம். இதை மறுக்க எந்தப் பரிசுத்தவானாலும் முடியாது. ஆகையால் நமது பிரயாசத்தாலேயே பாக்கியமும் நீதியும் சமாதான மும் நிறைந்த தேவராஜ்யம் உலகத்தில் வரமாட்டாது. ராஜ்யத்தை உலகத்தில் கொண்டுவந்த கிறிஸ்துவே ராஜ்யத்தைப் பூரணப்படுத்த வல்லவர். ராஜாவாகிய கிறிஸ்து மறுபடியும் வந்து சகல இடறல்களை யும், அக்கிரமங்களையும், பாவத்தையும், சாபத்தையும், மரணத்தை யும், இவையாவற்றிற்கும் காரணனான சாத்தானையும் அறவேஒழித்து; தேவராஜ்யத்தை பூமியில் பகிரங்கமாய் நிலைநாட்டுவார். இதுவே அவர் வருகைக்கு ஆதாரம். சிலர் சொல்லுகிறபடி அவர் திரும்ப வருவ தில்லையென்றால் உலகத்திற்கு விமோசனம் என்ன? உலகத்தை இப் படியே விட்டுவிடுகிறதானால் இதன் கதி எப்படியாகும்? இதுவரை உலகத்தின் கல்வியும் நாகரீகமும் சாஸ்திரமும் சாதித்ததென்ன? முன்னில்லாத பிரகாரம் அக்கிரமங்களும், கொலைபாதகங்களும், பயங் கரமான துணிகரச் செயல்களும், கடவுள் மறுப்புமே நாம் கண்ட பலன். எவ்வளவுதான் உலகத்தின் காரியங்களை மனுஷன் சீர்திருத் தக்கூடுமானாலும் அது தேவராஜ்யமாகாது.

தேவராஜ்யம் மனுஷனுடைய பிரயாசத்தின் பலனாயிராமல் கடவுளுடைய ஈவாக இருக்கிறது. "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்." இது பிதாவின் ஈவு. நமது மக்களுடைய இருதயங்களில் மறைவாகத் தொடங்கின ராஜ்யம் கிறிஸ்துவின் மூலமாய் பூமியில் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்படும். இதைக் குறித்து பவுல்: அவர் வருகையில் அவரு டையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள், அதன் பின்பு முடிவு உண்டா கும்; (இந்த முடிவு உலகத்தின் முடிவல்ல, சகல தீமைகளையும் முற் றிலுமாய் அழிக்கும் முடிவு) அப்பொழுது அவர் சகல துரைத்த னத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து தேவ னும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்... சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது தேவனே சகலத்திலும்

சகலமுமாயிருப்பார்" என்கிறார். அதாவது நன்மை தீமையைப்படிப்படியாய் மேற்கொள்வதினால் அல்ல, அல்லது ஞானிகள் சாஸ்திரிகள் சேர்ந்து தீமையோடு போராடி அதை மேற்கொள்ளுவதினாலுமல்ல, ஆண்டவர் தாமே சொன்னபடி, அவரே தீமை நிறைந்துள்ள உலகத்தில் திடீரென வெளிப்பட்டு, முதலாவது களைகளைப் பிடுங்கிச் சுட்டெரித்து, கோதுமையாகிய ராஜ்யத்தின் புத்திரரை தமது களஞ்சியத்தில்சேர்ப்பார். கிறிஸ்துவின் ராஜ்யத்தில் திரளான தேவமக்கள் அவரோடு கூடச் சேர்ந்து ஆளுகைசெய்வார்கள். அவருடைய ஆளுகையின் காலத்தில் சகல தீமைகளும் சாபங்களும் முற்றிலுமாய் அகற்றப்படும். இவ்வாறு பழையவைகள் ஒழிந்து சகலமும் புதிதாகும்போது, அதாவது எங்கும் நீதியும் சமாதானமும் ஆசீர்வாதமும் நிறைந்து பூரிக்கும்போது, "புதியவானமும் புதிய பூமியும்" வந்தது என்று சொல்லத்தக்கதாகயிருக்கும். அவர் ஆளுகைக்கு விரோதமான ஒரு சிறு காரியமாகிலும் பூமியில் காணப்பட மாட்டாது. இவ்வாறு நமதாண்டவர் தாம் ஏற்றுக்கொண்ட ரட்சிப்பின் கிரியையைப் பூரணப்படுத்தி, உலகில் தேவராஜ்யத்தை ஸ்தாபித்தபின் பிதாவைப் பார்த்து: பிதாவே, நீர் ஆதியில் எனக்குத் தந்த ரக்ஷண்ய வேலையைச் செய்து முடித்தேன்; தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபித்தேன், இதோ, உமது ராஜ்யத்தை நீர் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி பிதாவுக்கு ராஜ்யத்தை ஒப்புவித்துவிடுவார். அப்பொழுது "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்." பரலோகத்தில் அவர் சித்தம் பரிபூரணமாய்ச் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் எங்கும் எல்லாவற்றிலும் தேவசித்தம் ஒன்றே செய்யப்படும். இதுவரை நாம் செய்துவருகிற கர்த்தருடைய ஜெபம் அப்பொழுது நிறைவேறும். "உம்முடைய நாமம் பரிசுத்தமாக்கப்படுவதாக உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபித்துவருகிறோம். எத்தனை ஆயிரம் முறை ஜெபித்தாலும் காரியம் இன்னும் பலிக்கவில்லை. ஆண்டவர் ராஜ்யத்தை பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, "தேவனே சகலத்திலும் சகலமுமாய்" இருக்கும் அக்-

காலத்தில் அவர் நாமம் பூரணமாய் அர்ச்சிக்கப்படும். அவர் ஆளுகை பூரணமாய் நடக்கும். எங்கே அவர் ஆளுகை பூரணமாய் நடக்கிறதோ அங்கே அவர் சித்தமும் பூரணமாய்ச் செய்யப்படும். தேவன் தமது குமாரனுக்குள் செய்த அறுதி தீர்மானத்தை இவ்வாறு நிறைவேற்றி முடிப்பார். என் பாவத்தை மன்னித்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும் என்பது சிலுவையின் முடிவான நோக்கமல்ல. நாமெல்லாரும் தேவனால் பூரணமாய் ஆளப்படுவதே சிலுவையின் முடிவான நோக்கம். அதற்கொப்பான ஆசீர்வாதமும் பாக்கியமுமான காலமுமில்லை. பிதாவே, உமது மகிமையின் ராஜ்யம் சீக்கிரம் வருவதாக.

---

# BOOKS & BOOKLETS.

BY

Rev. S. PARAMANANDAM,

ROYAPURAM.

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்துவின் ஜீவியம் | ... | 3 | 0 | 0 |
| நூறு பிரசங்கங்கள் | ... | 1 | 8 | 0 |
| கிறிஸ்துவின் சிந்தை | ... | 1 | 0 | 0 |
| விசேஷ பிரசங்கங்கள் | ... | 0 | 8 | 0 |
| இரட்சண்ய கீர்த்தனைகள் | ... | 0 | 8 | 0 |
| தேவனுடைய ஈவு | ... | 0 | 4 | 0 |
| வலையும் வேடனும் | ... | 0 | 1 | 0 |
| நாங்கள் அநேகர் | ... | 0 | 1 | 0 |
| தேவகுமாரனுடைய சத்தம் | ... | 0 | 1 | 0 |
| மேன்மையான மதிப்பு | ... | 0 | 1 | 0 |
| தேவன்மீது தாகம் | ... | 0 | 1 | 0 |
| உன்னதமான கன்மலை | ... | 0 | 1 | 0 |
| எரிந்து பிரகாசிக்கிற விளக்கு | ... | 0 | 1 | 0 |
| அன்பே பிரதானம் | ... | 0 | 1 | 0 |
| ஆத்தும தாகம் | ... | 0 | 1 | 0 |
| பிதாவின் வாக்குத்தத்தம் | ... | 0 | 1 | 0 |
| தேவ அக்கினி | ... | 0 | 1 | 0 |
| கிரியை செய்யும் மூவர் | ... | 0 | 1 | 0 |

Copies can be had from the C. L. S. Madras, or from the Author or from K. R. Press, Madras.

1271

# THE
# MIND of CHRIST

7 MAR 1932

## கிறிஸ்துவின் சிந்தை

S. Paramanandam.

76872
Q6:33
N31

# THE MIND OF CHRIST

# கிறிஸ்துவின் சிந்தை

BY

**Rev S. Paramanandam**
*Royapuram, Madras.*

K. R. Press, Madras.

1931.

Price Rs. 1—0—0.]

[விலை ரு. 1—0—0.

7 - MAR 1932

# FOREWORD

BY

## The Rev. C. H. Monahan, M. A.,

*Chairman & General Superintendent*
*Wesleyan Mission, Madras District.*

---

It gives me much pleasure to commend to my friends in the Tamil country this book of addresses by Rev. S. Paramanandam. It was my privilege to hear at the Ikkadu convention the great address on "God is love" which is No. III in this book. The other addresses I have read also convince me that in this book the Tamil Church will hear the authentic message she needs for the fuller understanding of the Gospel of God. I could wish every leader of the church throughout the Tamil land to possess a copy and to read the book with prayerful attention. But it is a book which the simple hearted members of our congregations may also read with much profit. The writer makes his meaning clear. He uses language which all can understand. On every page he shows the results of patient study of Holy Scripture. But here is the living spirit and not the slavery of the letter. These are addresses that spring out of a living experience of the grace of God. I pray for a wide circulation of such a vital message, which keeps very near to the heart of the Gospel.

*Vepery, Madras.*
7—12—1931.

(Sd.) C. H. Monahan.

# முகவுரை.

---

7 MAR 1932

தமிழ் நாடெங்குமுள்ள என் சிநேகிதர்களுக்கு கனம் [illegible]ணர்தம் ஐயருடைய பிரசங்கங்கள் அடங்கிய இப்புஸ்தகத்தை மிகவும் நன்கு மதிப்புக்குரியதெனக் கையளிப்பதில் நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். இப்புஸ்தகத்திலுள்ள மூன்றும் பிரசங்கமாகிய “கடவுள் அன்பே” என்னும் விசாலமான பிரசங்கத்தை நக்கா சன்வென்ஷனில் நான் கேட்கும் சிலாக்கியம் பெற்றேன். நான் இதில் படித்த மற்றப்பிரசங்கங்களும், தமிழ்ச்சபையானது தேவனுடைய சுவிசேஷத்தின் பூரண அறிவை அடையும்படி, தனக்கு அவசியமாயுள்ள திட்டநிச்சயமான செய்தியை இப்புஸ்தகத்தில் கண்டடையும் என்பதை எனக்கு உணர்த்தின. தமிழ் நாடெங்குமுள்ள திருச்சபைத் தலைவர் ஒவ்வொருவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கவும், அதை ஜெபசிந்தையோடு படிக்கவும் வேண்டுமென்பது எனது அபேட்சை. அது மாத்திரமல்ல, இந்தப் புஸ்தகம் நமது சபைகளிலுள்ள சாதாரண ஜனங்களுங்கூடப் படித்துப் பிரயோஜனமடையக் கூடியதாகும். இதன் ஆக்கியோன் தமது கருத்தைத் தெளிவாய்க் காண்பிக்கிறார். எல்லாரும் அறியக்கூடிய எளிய நடையில் பேசுகிறார். பரிசுத்த வேதாகமத்தைப் பொறுமையோடு படித்ததின் பலனை புஸ்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம். ஆனால் அது எழுத்துக்கு அடிமைப்பட்டதாயிராமல் ஜீவனுள்ள ஆவியாயிருக்கிறது. இப்பிரசங்கங்கள் தேவகிருபையின் ஜீவனுள்ள அனுபவத்திலிருந்து புறப்படுகிறவைகளாகும். சுவிசேஷத்தின் முக்கிய அம்சமாகிய இந்த ஜீவனுள்ள செய்தி எங்கும் விஸ்தாரமாகப் பரவ வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்.

வெப்பேரி.<br>
சென்னை.<br>
7-12-31.

C H MONAHAN.

# CONTENTS


| | | |
|---|---|---|
| I. | The Mind of Christ ... ... ... | 1 |
| II | Heart Without Understanding ... ... | 26 |
| III. | God is Love ... ... ... ... | 44 |
| IV. | The Body of Christ ... ... ... | 64 |
| V. | To me to live is Christ ... ... | 79 |
| VI. | Seal-Inheritance-Earnest ... ... | 98 |
| VII. | All in Christ ... ... .. ... | 116 |
| VIII. | The Cure of Care ... ... ... | 141 |
| IX. | How to overcome Evil ... ... ... | 167 |
| X. | Reconciliation ... ... ... | 189 |
| XI. | Humility ... ... ... ... | 205 |
| XII. | The Death of Christ ... ... ... | 225 |
| XIII. | What happened at Pentecost ... ... | 254 |
| XIV. | God's guidance ... ... | 277 |
| XV. | The Kingdom and the Cross ... ... | 304 |

# பொருள் அட்டவணை.


| | | |
|---|---|---|
| I. | கிறிஸ்துவின் சிந்தை | 1 |
| II. | உணர்வற்ற இருதயம் | 26 |
| III. | கடவுள் அன்பே | 44 |
| IV. | கிறிஸ்துவின் சரீரம் | 64 |
| V. | என் பிழைப்பே கிறிஸ்து | 79 |
| VI. | முத்திரை—சுதந்தரம்—அச்சாரம் | 98 |
| VII. | சகலமும் கிறிஸ்துவுக்குள் | 116 |
| VIII. | கவலைக்குப் பரிகாரம் | 141 |
| IX. | தீமையை வெல்லும் வழி | 167 |
| X. | ஒப்புரவாகுதல் | 186 |
| XI. | மனத்தாழ்மை | 205 |
| XII. | கிறிஸ்துவின் மரணம் | 225 |
| XIII. | பெந்தெகொஸ்தின் விசேஷம் | 254 |
| XIV. | தேவ நடத்துதல் | 277 |
| XV. | தேவராஜ்யமும் சிலுவையும் | 304 |

# I

# The Mind of Christ

# கிறிஸ்துவின் சிந்தை

“கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது” பிலி. 2: 5.

கிறிஸ்தவர்களின் தொகை பெருகவேண்டுமென்பது நமது ஆசை. அதுபோலவே “இந்தியா முழுவதும் கிறிஸ்தவ தேசமாகி விட்டால் ஐக்கியமும் சமாதானமும் உண்டாகும்” என்று ரக்ஷண்ய சேனைத் தலைவர் ஒருவர் கூறினார். அவர் சொன்னது அநேகருக்கு நியாயமாகவும் தோன்றும். ஆனால் யூதர் ஒரு தேசமாக, ஒரு ஜாதியாக கடவுள் ஜனமென்று எண்ணப்பட்டபோதிலும், அவர்கள் தேவசத்தத்திற்குச் செவிகொடாதபடியால் ஆக்கினைக்குள்ளானார்கள். ஆகையால் கிறிஸ்தவ தேசமென்று மேன்மை பாராட்ட இயலவில்லை. பேர்க்கிறிஸ்தவர்கள் செய்யும் அடாத செய்கைகளால் கிறிஸ்துமார்க்கம் குறைவாய் எண்ணப்படுகிறது. உத்தமகிறிஸ்தவர்கள் எத்தனைபேர் இருந்தபோதிலும் அந்தப்பார்க்கிலும் பேர்க்கிறிஸ்தவர்கள் செய்யும் தீமைகளே உலகத்தின் கவனத்தை ஆகர்ஷித்துக் கொள்ளுகின்றன. ஆகையால் கிறிஸ்து மார்க்கமாவது என்ன? கிறிஸ்தவர்களென்றால் என்னவென்பது நாம் முதல்முதல் கேட்கவேண்டிய கேள்வியாகும். உலகத்தில் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களா? அல்லது அந்தந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களா? ஒரு சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்குள் அன்பும் ஐக்கியமும் உண்டா? கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவருடைய மகிமைக்கென்று பிழைக்கிறார்களா? இருந்

யங்களை ஆராய்ந்து பார்க்கும் ஆண்டவர் பார்வையில் நாம் கிறிஸ்தவர்களா? இல்லையென்றால், இந்தியாமுழுவதும் நம்மைப்போல் கிறிஸ்தவர்களானாலும் ஐக்கியமும் சமாதானமும் எப்படி உண்டாகும்?

கிறிஸ்துமார்க்கம் என்றால் என்ன, கிறிஸ்தவன் என்றால் என்னவென்பதை அநேகர் யோசிக்கிறதில்லை. அந்தந்த மார்க்கங்களில் பிறந்தவர்கள் அந்தந்த மார்க்கத்தாராயிருப்பது போல, கிறிஸ்தவர்களுக்குப் பிறந்ததினிமித்தம் நம்மில் அநேகர் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்தந்த பிரிவுகளில் பிறந்து வளருகிறவர்களுக்கு அந்தந்தச் சபையே சத்திய சபையாகவும் தோன்றும். இது பழக்கத்தால் உண்டாகிற அபிமானமே தவிர மார்க்க ஆராய்ச்சியால் கண்டுபிடித்ததல்ல. இதிலிருந்து தர்க்கங்களும் பிரிவினைகளும் ஏற்படுகின்றன. நாம் ஏன் கிறிஸ்தவர்களாயிருக்கிறோமென்று நாம் யோசிக்கிறதில்லை. இது பிறப்பினால் உண்டாகும் தொகைப் பெருக்கம். இந்துக்களிலிருந்தும் பல நோக்கங்களோடு கிறிஸ்துமார்க்கத்தில் சேருகிறவர்கள் உண்டு. இவ்வாறு கிறிஸ்து மார்க்கத்தின் வல்லமையைத் தங்கள் அனுபவத்தில் அறியாத அநேகர் சபைகளில் இருந்தபோதிலும், கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவரிலே நிலைத்திருந்து பிழைக்கும் உத்தமகிறிஸ்தவர்கள் உலகமெங்கும் இருக்கிறார்களென்பது நிச்சயம்.

கிறிஸ்துமார்க்கம் என்னும் வார்த்தை வேதத்தில் இல்லை. உலகத்தில் பலமார்க்கங்கள் இருப்பதால் கிறிஸ்துமார்க்கம் என்று பேசவேண்டியதாயிற்று. கிறிஸ்தவர்கள் என்னும் பெயரும் கிறிஸ்துவின் அடியார்களுக்கு மற்றவர்களால் கொடுக்கப்பட்ட பெயரே. "முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப். 11:26). முந்திச் சீஷர்களாயிருந்தவர்களுக்குப் பிந்திக் கிறிஸ்தவர்கள் என்னும் பேருண்டாயிற்று. ஆண்டவர் அவர்களைத் தமக்குச் சீஷராயிருக்கும்படி தெரிந்துகொண்டார். அவர்கள் கடைசிவரை அவருடைய சீஷராகவேயிருந்தார்கள். சீஷர் என்பதற்கு கற்றுக்கொள்ளுகிறவர்கள், கீழ்ப்படிகிறவர்கள், பின்செல்லுகிறவர்கள் என்று அருத்தம். ஆண்டவருடைய சீஷரிடத்தில்

இந்த மூன்று லட்சணங்களும் காணப்பட்டன. கிறிஸ்துவே அவர்கள் எண்ணமும், பேச்சும், வேலையும், ஜெபமும், நோக்கமும், வாஞ்சையுமாயிருந்தார். மற்றவர்கள் கிறிஸ்துவின் சாயலை அவர்களில் கண்டபோது: இவர்கள் கிறிஸ்தவர்கள் என்றார்கள். ஆண்டவரால் அந்தப் பேர் அங்கீகாரம் பெற்று இந்நாள் வரையில் நிலை நிற்கிறது. சீஷராயிருந்தவர்கள் கிறிஸ்தவர்களானார்கள். நமது காரியமோ இதற்கு எதிரிடையாயிருக்கிறது. கிறிஸ்தவர்களே நாம் சீஷராக்கவேண்டியதிருக்கிறது. நாம் சீஷர்களான பின்பே கிறிஸ்தவர்கள் என்னும் பேருக்குத் தகுதியுள்ளவர்களாவோம். இதைக் கவனிக்கும்போது, கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்ளாதவர்களும், அவருக்குக் கீழ்ப்படியாதவர்களும், அவரைப் பின் செல்லாதவர்களும், அவருடைய சாயலும் சிந்தையும் இல்லாதவர்களும் கிறிஸ்தவர்கள் என்னும் சிறந்த பேருக்குத் தகுதியுள்ளவர்களல்ல வென்பது தெளிவாயிருக்கிறது.

புறம்பேயுள்ளவர்களைக் கிறிஸ்துமார்க்கமாவது என்ன வென்று சொல்லுவார்கள். ஒரு ஆல கேட்டால், அவர்கள் கண்டதைத்தான் பாட்டுகள் என்பார்கள். அதற் யம், ஆராதனை, போதகர், பிரசங்கம், அறியக்கூடும்? நம்மில் அநேகருடைய குமேல் அவர்கள் என்ன அறியக்கூடும்? ஞானஸ்நானம்பெற்று சபை கிறிஸ்துமார்க்கமும் அவ்வளவுதான். ஒழுங்காய்ப் போகிறோம். யைச் சேர்ந்தோம். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப் போகிறோம் பிரசங்கங்களைக் கேட்கிறோம். ஜெபக்கூட்டங்களுக்குப் போகிறோம் என்பார்கள். இவைகளை ஒழுங்காய் அனுசரித்தால் ஒரு திருப்தி. இவைகளில் தவறிப்போனால் துக்கம். இதுதானா கிறிஸ்துமார்க்கம்? இவைகள் யாவும் நல்ல காரியங்களே. ஒரு சிறந்த நோக்கம் நம்மில் நிறைவேறும்படி ஆண்டவர் இவைகளைத் திருச்சபையின் எத்தனங்களாகத் தந்தார். அந்த நோக்கம் நம்மில் நிறைவேறாவிட்டால் நமது ஆசாரங்கள் யாவும் வீணாகும். நாமும் வஞ்சிக்கப்பட்டவர்களாவோம். அந்த நோக்கமென்ன? கிறிஸ்துவின் சிந்தையை நாம்பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே. அவருடைய சாயலுக்கொப்பாக நாம் நாளுக்குநாள் மாறவேண்டுமென்பதே. தமது சிந்தையையும் தமது சாயலையும் பெற்றவர்களைக் கொண்டு ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தார். அவர்

கள் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தும் சாட்சிகளாக அதாவது மாதிரிகளாக இருக்கும்படி கட்டளையிட்டார். ஒருவன் தான் உண்மையென்று அறிந்ததைச் சாட்சியாகச் சொல்லலாம். கிறிஸ்து உயிர்த்தெழுந்த சரித்திரத்தை கவனத்தோடு ஆராய்ச்சிசெய்கிறவன், அவர் உயிர்த்தெழுந்தது வாஸ்தவந்தான் என்று சொல்லலாம். ஆண்டவர் சாட்சிகள் என்று சொன்னது அதுமாத்திரமல்ல. அவர் உயிர்த்தெழுந்ததை அறிந்திருப்பதோடு, அவர் உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனைப் பெற்றுக்கொண்டவர்களாயே தமக்குச் சாட்சிகளாயிருக்கும்படி ஏற்படுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துமார்க்கம் ஆரம்பித்தது. எப்படி ஆரம்பித்தது? ஆண்டவர் சிலரைப் பிரித்துத் தம்மோடு வைத்துக்கொண்டார். தேவராஜ்யங்களின் காரியங்களை அவர்களுக்குப் போதித்து அவர்களைப் பக்குவப்படுத்தினார். தமது மரணம் உயிர்த்தெழுதலின் அவசியத்தை அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் அவரிடம் அன்புவைத்து, அவர் போதனையை அறிந்துகொள்ளவும், அவர் மாதிரியைப் பின்பற்றவும் முயன்றும் அவர்களால் கூடாமற் போயிற்று. ஆண்டவர் மனஞ்சோர்ந்து போகவில்லை. இதோ, நாள் வரும், அப்பொழுது தாம் ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வருவதினால் தம்மை இன்னாரென்று அவர்கள் அறிந்து கொள்வார்களென்றும், திராட்சச் செடியும் கொடியும்போல அவருக்கும் அவர்களுக்கும் பிராண ஐக்கியம் உண்டாகுமென்றும், தாமே அவர்களுக்குள்ளிருந்து பிழைப்பதையும், அவர்கள் மூலமாய் கிரியை நடப்பிப்பதையும் அவர்கள் தங்கள் அனுபவத்தில் காண்பார்களென்றும் சொன்னார். ஆண்டவர் சொல்லியிருந்தபடியே பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. அப்போஸ்தலர் இதைத் தங்கள் அனுபவத்தில் கண்டார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று யோவான் சொன்னார். "தம்முடைய குமாரனுடனே ஐக்கியமாயிருக்கும்படி அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" என்றும்; "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்றும் பவுல் சொன்னார். "அவருடைய திவ்ய சுபாவத்திற்கு நாம்



பங்குள்ளவர்களாகவேண்டும்" என்று பேதுரு சொன்னார். புறம்பான ஆசாரங்களை அனுசரிப்பதல்ல, உள்ளான மறுரூபமே கிறிஸ்து மார்க்கம். கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வந்து நமது மூலமாய் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் பிறருக்குப் பாயவேண்டுமென்பதே அவர் நம்மைச் சேர்த்துக்கொண்ட நோக்கம். புறம்பான காரியங்களால் கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையை ரூபிக்க முடியாது. ஜனத்தொகை பெரிய ஆலயங்கள், மிகுந்த வருமானம், மார்க்க ஆசாரங்கள் முதலானவை கிறிஸ்துமார்க்கத்தின் வல்லமையை வெளிப்படுத்தாது. மதுரை மீனாட்சி ஆலயத்திலும் சிறந்த கட்டடம் எது? அங்கே சுவாமி கும்பிடப்போகும் ஜனத்திரளை எண்ண முடியுமா? அந்த ஆலயத்தின் வருமானத்துக்குக் கணக்குண்டா? அதற்குமுன் ஏழைச் சபைகள் எம்மாத்திரம்? நாம் என்னத்தைக்கொண்டு கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையை ரூபிக்கலாம்? நமது பாவங்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டு, ஆவியின் மூலமாய் கிறிஸ்து நமக்குள் வசிப்பதினாலும், அவருடைய சாயலுக்கொப்பாக மாறி, அவருடைய சிந்தையைத் தரித்துக் கொள்வதினால்தானே.

## கிறிஸ்துவின் சிந்தையாவது என்ன ?

இது மிகவும் விசாலமான விஷயம், என்றாலும் நமக்குப் பிரயோஜனமாக ஆண்டவரில் விளங்கின சிந்தைகளில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாய்ச் சிந்திப்போம்.

**1. அன்பு நிறைந்த சிந்தை.** "என் பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" (யோ. 15 : 9). கிறிஸ்துவின் அன்பு ஒப்பற்றது. சூரியன் பட்சபாதமின்றி எல்லார்மேலும் பிரகாசிக்கிறதுபோல ஆண்டவர் எல்லார் பேரிலும் அன்பாயிருக்கிறார். நமது திரளான பாவங்கள் அவர் நம்மை நேசிப்பதற்குத் தடையாயிருக்கவில்லை. ஒருவனுடைய குணம் நமக்கு வெறுப்பாயிருக்குமானால் அவனை நேசிப்பது நமக்குக் கஷ்டமாயிருக்கும். அவன் துர்ச்செய்கையை வெறுப்பதோடு அவனையும் சேர்த்து வெறுப்போம். பரிசுத்தமுள்ள ஆண்டவருக்கு நமது பாவம்

முழுவெறுப்பாயிருந்தும் நம்மீது அவருக்கிருக்கும் அன்புக்கு அளவில்லை. நமது பாவம் அவருக்கு நம்மீது வெறுப்பை உண்டாக்குவதற்குப்பதிலாக அனுதாபத்தையும் பரிதாபத்தையும் உண்டாக்கினது. நம்மை எவ்விதத்திலும் ரட்சிக்கும்படி தீர்மானித்து வந்தவர் நம்மை வெறுப்பதெப்படி? நம்மை அவர் வெறுத்தால் அவர் நம்மை ரட்சிப்பதெப்படி? நமது சகல பாவங்களும் அவருக்குத் தெரிந்திருந்தும் நம்மீதுள்ள அவரது அன்பு சற்றும் குறையவேயில்லை. தமது சீஷர்களிடத்தில் எத்தனையோ குறைவுகளிருந்தும் "தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." (யோ. 13 : 1). அவருக்கொப்பான அன்பை எந்தப் பக்தனிடத்திலும் காணமுடியாது. ஏனென்றால் கிறிஸ்துவில் விளங்கின அன்பு தேவ அன்பு. கடவுள் அன்பின் மயமாயிருக்கிறார். கிறிஸ்து பிதாவிடம் பூரண அன்புள்ளவராயிருந்தார். பிதாவின் அன்பு அவர் இருதயத்தை நிரப்பினது. அந்தத் திவ்ய அன்பின் பெருக்கத்தாலேயே ஆண்டவர் மனுஷரிடத்திலும் அன்பாயிருந்தார். அவரிலிருந்த அன்பும் அவர் மனுஷருக்குப் பாராட்டின அன்பும் கடவுளுடைய ஒரே அன்பே. நாம் பிதாவின் அன்பென்றும், கிறிஸ்துவின் அன்பென்றும் பிரித்துப் பேசினாலும் இரண்டு அன்பல்ல. பிதாவின் அன்பே குமாரன் மூலமாய் ஆவியினாலே நம்முள்ளங்களில் ஊற்றப்படுகிறது. நம்மீது அன்புகூர்ந்து நம்மை ரட்சிக்கும்படி வாஞ்சைகொண்டவர் பிதா. நம்மை ரட்சிக்கும்படி அவர் தமது குமாரனை அனுப்பினார். ஆகையால் பிதா நம்மீது வைத்த அன்பு, அவர் வாஞ்சையை நிறைவேற்றும்படி வந்த குமாரனுக்குள் இருந்தது. அந்த அன்பின் குமாரன் பிதாவின் அன்பை மனுமக்களுக்கு வெளிப்படுத்தினார். அந்த அன்பின் பெருக்கத்தை நாம் இதுவரை அறிந்தவர்கள் அல்ல.

"என் பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்கிறார். போல என்னும் வார்த்தை அளவைக் காட்டுகிறது. அந்த அன்பின் ஆழம், அகலம், நீளம், உயரம், எவ்வளவென்பதை அறிந்தவர்கள் ஒருவருமில்லை.



அது "அறிவுக்கெட்டாத அன்பு." சமுத்திரம்போன்ற அன்பில் நாம் ஒரு துளி முதலாய்ச் சரியாய் அனுபவித்தவர்கள் அல்ல. ஆண்டவர் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்தபோது அவர் அன்பும் அனுதாபமும் சிறந்து விளங்கின. தகப்பனார் வீட்டிற்குள் வந்தால் பிள்ளைகள் ஓடி ஒளித்துக்கொள்வார்கள், ஏனென்றால் தகப்பனார் அவ்வளவு தேவபக்தியுள்ளவர் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆண்டவர் மகா பரிசுத்தராயிருந்தார். அப்படியிருந்தும் சகல ஆயக்காரரும் பாவிகளும் வேசிகளும் யாதொரு பயமின்றி அவரிடத்தில் தாராளமாய் வந்து கூடினார்கள். சிறுபிள்ளைகள் அவரிடம் போகவோ, அவர் மடியில் உட்காரவோ பயப்படவில்லை. ஸ்திரீகள் அவரோடுகூடவே கிராமம் கிராமமாய்ப் பிரயாணம்செய்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். மார்த்தாள் மரியாள் அவரை அடிக்கடி தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டு உபசரித்தார்கள். இவர்கள் எல்லாரும் பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் அல்ல. எவ்வளவோ குற்றங்களும் குறைகளுமுள்ளவர்கள். தம்மிடத்தில் வந்த ஒவ்வொரு ஆண், பெண்ணுடைய அந்தரங்க ஜீவியம் அவருக்குத் தெரியும். அதினிமித்தம் அவர் அவர்களை இழிவாய் நினைக்கவில்லை. தமது பரிசுத்தத்தினிமித்தம் தம்மை உயர்த்தி அவர்களோடு மேட்டிமையாய்ப் பேசவுமில்லை. நம்முடைய காரியம் ஒன்றும் அறியாத ஓர் மனுஷன் நம்மோடு எப்படி நடந்துகொள்வானோ அதேமாதிரி அவர் அவர்களோடு மரியாதையாய், அன்னியோன்னியமாய் நடந்துகொண்டார். அவர் பாவிகளோடு உறவாடின தாராளத்தைப் பார்த்த சத்துருக்கள் அவரைப் பாவிகள் சிநேகிதன் என்று அழைத்தார்கள். அன்பே உருவெடுத்து வந்திருப்பதை அவர்கள் அறியார்கள். அவர் ஒருவரையும் பகைத்தவரல்ல. யூதாவின் துரோகம் ஆதிமுதல் அவருக்குத் தெரிந்திருந்தும் அவனை அவர் பகைக்கவில்லை. அவனை ரட்சிக்கும்படி வந்தவர் அவனை எப்படிப் பகைப்பார்? அவனை எப்படிக்கெடுப்பார்? அவன் அவரது அன்பைப் புறக்கணித்தபடியால் தன்னைத் தானே கெடுத்துக்கொண்டான். அவர் அன்பை நாம் ஒருக்காலும் சந்தேகிக்காதபடி தமது ஜீவனை நமக்காகக் கொடுத்து நிரூபித்துக்காண்பித்திருக்கிறார்.

கிறிஸ்துவில் விளங்கிய இந்த அன்பின் சிந்தை நமக்கும் வேண்டும். நாம் அவரது அடியார்களென்பதை உலகம் அறிவதற்கு அன்பையே அடையாளமாகத் தந்தார். "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோ. 13 : 34, 35). இந்தப் பிரதான கட்டளையைக் கவனிக்கிறது யார்? நமக்குள் பெருமையும், பொறாமையும், பகையும், பிரிவினையும், தீமையும், அவதூறும் காணப்படுமானால் நாம் யாருடைய சீஷர்கள்? ஒருவேளை இவைகளுக்கு நாம் இடங்கொடாவிட்டாலும் சகோதர அன்பு இல்லாமற்போனால் என்ன பிரயோஜனம்? வேத அறிவும், ஆராதனைகளும், ஜெபக்கூட்டங்களும், பிரசங்கங்களும் நமக்குள்ளிருந்தும் அன்பில்லாமற்போனால் நாம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவின் சிந்தையாகிய அன்பு இல்லாதவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்து மார்க்கம்.

2. அமர்ந்த சிந்தை. சாந்தமான ஆட்டுக்குட்டி என்பது அவருக்கே தகும். அவர் உலகத்தில் நிறைவேற்ற வந்த வேலை மகத்தானது. உலகத்தைக் கொடிய பாவத்திலிருந்து மீட்டெடுக்கவேண்டும். கடவுளை மறந்து தன்தன் வழியில்போன மனுமக்களை தேவ ஆளுகைக்குட்படுத்தி அவரது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும். இது அநேகர் கூடிச் செய்கிற வேலையல்ல. அவர் ஒருவரே நடப்பிக்கவேண்டியது. இந்த ரக்ஷணியவேலைக்குத் தம்மைப் பிரதிஷ்டை பண்ணியிருந்தார். அதை நிறைவேற்றி முடிப்பதிலே அவர் முழுக்கவனமும் இருந்தது. ஆனால் அவர் உலகத்தில் வந்தபோது சகலமும் பிரதிகூலமாயிருக்கக் கண்டாரேயல்லாமல் ஒன்றும் அவருக்கு அனுகூலமாயில்லை. உலகத்தின் அதிபதி அவருக்கு விரோதமாக எழும்பி அவர் வந்த நோக்கத்தைக் கெடுத்துவிடும்படி தீர்மானித்தான். அவர் வளர்ந்த குடும்பத்திலுள்ள சகோதரர் அவருக்கு ஆதரவாயிருக்கவில்லை. அவர்கள் அவரை இன்னாரென்று அறியாததால் அவருக்குப்



பலவிதத்திலும் இடைஞ்சலாயிருந்தார்கள். அவருடைய ஆவிக்குரிய சிந்தைக்கும் அவர்களுடைய உலகசிந்தைக்கும் அகாதவித்தியாசமிருந்தது. மற்றவர்கள் அவரை விசுவாசித்த காலத்திலுங்கூட அவர் சகோதரர் அவரை நம்பவில்லை. முப்பது வருஷக்காலமாய் இப்படிப்பட்டவர்கள் மத்தியில் வளர்ந்து வேலைசெய்த ஆண்டவருக்கு அது எப்படியிருந்திருக்கும்? அவருடைய பரிசுத்த குணத்தையும் உன்னத சிந்தையையும் கிரகித்துக் கொள்ளாமல், அவரும் தங்களைப்போன்ற வாலிபன்தான் என்று நினைத்தபிறகு அவருக்கு வீட்டில் மரியாதை ஏது? மனம்போனபடி பேசியிருப்பார்கள், தாக்கியிருப்பார்கள். இப்படிப்பட்ட முள்ளுகளுக்குள் அவர் லீலிபுஷ்பம்போல் வளர்ந்தார். கோபமோ எரிச்சலோ இல்லாமலும், பதிலுக்குப் பதில் பேசாமலும், பொறுமையோடும் சாந்தத்தோடும் நடந்துகொண்டார். அவருடைய சாந்தமும் அமைதலுமான குணம் ஒரே நாளில் உண்டானதல்ல. அவர் குடும்பத்திலிருந்த காலத்தில் தமது பிதாவோடு இடைவிடாமல் சஞ்சரித்ததால், அவர் ஒன்றிலும் ஆத்திரப்படாமல் அமைதலான ஜீவனம் செய்தார். அவர் இருதயம் பிதாவை நம்பி உறுதியாயிருந்தபடியால் ஒன்றினாலும் அவர் அசைக்கப்படவில்லை.

அவர் ஊழியத்தில் பிரவேசித்துத் தமக்குச் சீஷர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் தம்மோடிருக்கவும் தம்மிடத்தில் அன்பாயிருக்கவும் விரும்பினார். தமது மகத்துவமான ஊழியத்தில் அவர்களைப் பயிற்றுவிக்கவும், பிற்காலத்தில் அவர்கள் தமக்குச் சாட்சிகளாயிருக்கவும் தீர்மானித்தார். அவர்கள் அவரைப் பின்சென்றபோதிலும் அவரையாவது அவர் போதனைகளையாவது அறிந்துகொண்டவர்கள் அல்ல. அவர்களுடைய அறிவீனத்தையும் குறைவுகளையும் கவனிக்காது எவ்வளவோ பொறுமையோடு அவர்களை நடத்திவந்தார். அவர்களிடத்தில் அவர் காண்பித்த சாந்தம் ஆச்சரியமானது. கடைசியாக ஒருவன் காட்டிக்கொடுத்தான், வேறொருவன் மறுதலித்தான், மற்றவர்கள் அவரைத் தனியேவிட்டு ஓடிப்போய் விட்டார்கள். அவர் கொஞ்சமேனும் கலங்காமலும் ஆத்திரப்படாமலும் சாந்தமான ஆட்டுக்குட்டியாக விளங்கினார்.

யூத அதிகாரிகள் அவரைப் பகைத்துக் கொலைசெய்யத் தீர்மானித்து விட்டார்கள். அதிகாரிகளின் நோக்கத்தைக் கவனிப்பது ஜனங்கள் வழக்கம். அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதிகள் என்று கண்டவுடன் அவரை மதித்துப் பின்சென்ற ஜனங்களும் அவரை விட்டு விலகினார்கள். அவருடைய சீஷரில் அநேகரும் பின்வாங்கிப் போனார்கள். அவர் உலகில் வந்த நோக்கம் நிறைவேறுதபடி சகலமும் அவருக்கு விரோதமாயிருந்தன. ஒருவன் தான் ஜீவனைப் போல் கருதி நடத்தும் கருமத்திற்கு அழிவு நேரிடுமானால் அவன் அதைச் சகிக்கமாட்டான். எவ்வளவோ ஆத்திரமும் பதஷ்டமும் கொள்வான். ஆண்டவரோ சற்றும் கலங்காமலும் பதஷ்டப்படாமலும் அமர்ந்த இருதயத்தோடிருந்தார். தமது வேலையை நடப்பிப்பதில் அவர் கொஞ்சமாகிலும் சோர்வடையவில்லை. இதற்குக் காரணமென்ன? அவர் தமது பிதாவில் இடைவிடாமல் பிழைத்து அவரையே பூரணமாய் நம்பியிருந்தார். என்ன நேரிட்டபோதிலும் ஒன்றும் தம்மை மேற்கொள்ளாதென்றும், தமது ஊழியம் கட்டாயம் வெற்றியடையும் என்றும் அவர் நிச்சயமாய் அறிவார். இதுவே அவர் அமர்ந்த சிந்தைக்குக் காரணம். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த அமர்ந்த சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். ஆத்திரமும், பதஷ்டமும், அவசரமும், நடுக்கமும், மூர்க்கமும், கூக்குரலும் கிறிஸ்துவனுடைய லட்சணங்கள் அல்ல. ஆண்டவர்மீது நமக்கு நம்பிக்கையில்லை என்பதற்கு அவைகள் அடையாளங்களாகும். அமர்ந்த சிந்தை நமக்குண்டா?

3. **தாழ்மை வடிவான சிந்தை.** கிறிஸ்துவின் தாழ்மை உன்னதத்தில் ஆரம்பித்தது. இதைக்குறித்து பவுல் பிலிப்பியர் நிருபத்தில் சில ரகசியங்களை வெளிப்படுத்துகிறார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்."



இதிலே சில முக்கியமான விஷயங்களைக் காண்கிறோம். முதலாம் பிரதான சத்தியம் "அவர் கடவுளுடைய ரூபம்" என்பது. இது கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு உறுதியான ஆதாரம். அவர் கடவுளுக்குச் சமானமானவர். அப்படியிருந்தும், அதாவது தேவனுடைய ரூபமாயிருந்தும், அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷர் ரூபமானார். இங்கே ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறோம். விண்ணுக்குரிய தெய்வீக ரூபம் மண்ணுக்குரிய மனுஷரூபமாயிற்று. இந்த மாறுதலில் நடந்ததென்ன? அவர் தமது தெய்வீகத்தை இழந்து மனுஷீகத்தை எடுத்துக்கொண்டாரோ? ஒருக்காலுமல்ல. கடவுளுடைய ரூபம் மனுஷனுடைய ரூபமாயிற்று. கடவுளானவரே மனுஷனானார். ஆகையால் "தம்மைத் தாமே வெறுமையாக்கி" என்பது தமது தெய்வீகத்தை வெறுமையாக்கினார் என்று அருத்தமல்ல. ரூபம் என்பது என்னவென்று அறிந்துகொண்டால் அவரில் உண்டான மாறுதல் என்னவென்று விளங்கும். அவர் உயிர்த்தெழுந்தபின் தமது அடியாருக்குத் தரிசனமானார். மகதலேனா மரியாளுக்கு தோட்டக்காரன் ரூபத்தில் காணப்பட்டார். எம்மாவு ஊருக்குச்சென்ற இருவருக்கு வேறு ரூபத்தில், அதாவது ஒரு பிரயாணியைப்போல் காணப்பட்டார். கடற்கரையில் ஓர் செம்படவனைப்போல் அதிகாலையில் தோன்றினார். அவர் எந்தெந்த ரூபத்தில் காணப்பட்டாலும் ஆள் அவர்தான். இயேசு கிறிஸ்துவே அவர். ரூபம் மாறினதாலே ஆள் மாறிப்போகவில்லை. தேவரூபமாயிருந்தவர் மனுஷரூபமானதும் இதுபோலவே. தெய்வீக ஆள் மாறவில்லை. உன்னதத்திலிருந்த அவரே பூமியில் தோன்றினார். ஆனால் ரூபத்தில் அதாவது சாயலில் மாறினார்.

அப்படியானால் அவர் வெறுமையாக்கினது என்ன? அவரில் உண்டான மாறுதல் என்ன? அவர் பிதாவோடிருந்தபோது அவரை வெளிப்படுத்தும் குமாரனாயிருந்தார். தெய்வீகம் தெய்வீகத்தின் மூலமாய் மாத்திரம் வெளிப்படக்கூடும். பிதாவை வெளிப்படுத்துவதே குமாரனுடைய நித்தியவேலை. இந்த வெளிப்படுத்தல் உன்னதத்தில் புத்திக்கெட்டாத விதமாயிருந்தது. [illegible]

அந்த மகிமையுள்ள குமாரன் நம்மை ரட்சிக்கும்படி சித்தங்கொண்ட போது முந்தி அவர் வெளிப்படுத்தின விதத்தை மாற்றி, தாம் எடுத்துக்கொண்ட மனுஷீக நிலைமைக்கேற்றபடி பிதாவை வெளிப்படுத்துகிறவராக வந்தார். ஆள் மாறவில்லை; அவர் வெளிப்படுத்தின விதம் மாறிற்று. அவர் எடுத்துக்கொண்ட ரூபம் மனுஷர் காணக்கூடியதும் தொடக்கூடியதும் அவர் மூலமாய் பிதாவை அறியக் கூடியதுமாயிருந்தது. இது விஷயத்தில் ஆண்டவரில் விளங்கின தாழ்மையின் சிந்தையை அப்போஸ்தலன் காண்பிக்கிறார். அவர் கடவுளுக்குச் சமமாயிருக்கிற மகிமையை விட்டுப் பிரியமாட்டேன் என்று சொல்லாமல், தூதர்கள் யாவரும் பிரமிக்கத்தக்கவண்ணமாய், தமக்குரிய மகிமையைத் தாமே வெறுமையாக்கி மனுஷசாயலே அணிந்து கொள்ளச் சித்தங்கொண்டார்.

அவர் மனுஷனான பின்பும் தாழ்மையின் சிந்தை அவரைவிட்டு நீங்காமல் வரவர அதாவது மகா நிந்தையான சிலுவை மரணம் வரை அவரது மனத்தாழ்மை ஆழமாய் அவரில் சிறந்து விளங்கினது. உலகத்தில் மேன்மையாய்க் கருதப்படுகிற எந்த அந்தஸ்தையும், வேறு எந்தப் பெருமையையும் அவர் நாடாமல், கடவுளுக்குமுன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் தம்மை அடிமையாக்கினார். எல்லாருக்கும் அவர் பணிவிடைக்காரனானார். தலைசாய்க்க இடமற்ற தரித்திரரானார். அடியார் கால்களைக் குனிந்து கழுவும் அடிமை போலானார். தாம் ஒன்றுமில்லை, பிதாவே தமக்கெல்லாம் என்பது அவர் ஜீவிய பிரமாணம். அவரே "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று சொன்னார். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த மனத்தாழ்மையின் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். எத்தனையோ விஷயங்களைக் குறித்து நாம் பெருமை பாராட்டுகிறோம். நான் என்னும் அகங்காரம் நம்மைப் பலமாய்ப் பிடித்து ஆட்டுகிறது. பெருமையிலிருந்தே ஆங்காரம், மூர்க்கம், பகை, சண்டை, பிரிவினை உண்டாகின்றன. நமது ஆவி, ஆத்துமா, சரீரம் முதல் சகல நன்மைகளும் நாம் ஈவாகப்பெற்றுக் கொண்டும்போது பெருமைக்கு இடமேது? தாழ்மை கிறிஸ்துவின் சிந்தை; பெருமை பிசாசின் சிந்தை.

பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். பெருமையுள்ளவர்கள் நிச்சயமாய்ச் சிறுமையடைவார்கள். பெருமைக்காரர் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் தாழ்மையுள்ள சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

**4. மன்னிக்குஞ் சிந்தை.** பாவிகளை ரட்சிக்கும்படி அன்புமயமாகப் புறப்பட்டுவந்தவர் நமது குற்றங்களை மன்னிக்காதிருப்பது எப்படி? நம்மைக் கைதூக்கி ரட்சிக்கும்படி தமது தெய்வீக மகிமையைக் களைந்து வைத்து, அடிமை ரூபமெடுத்துப் புவியில் தோன்றி, மனுமக்கள் நடுவில் பணிவிடைக்காரனைப் போலிருந்தவர் நம்மை வெறுத்துத் தள்ளுவாரா? நமது பாவங்களைத் தாமே ஏற்றுக்கொண்டு, அப்பாவங்களை அகற்றும்படி தமது ஜீவனைச் சிலுவையில் கொடுத்தவர் நமது பாவங்களை மன்னியாதிருப்பாரா? "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு" என்று அவர் சொன்னது சரியே. அவர் ஊழிய நாட்களில் மனுஷருடைய பாவங்களை மன்னித்து அவர்களுக்கு ஆத்தும இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் அருளும்படி வாஞ்சித்தார். நமது பாவங்களை அவர் கணக்குப் பார்க்கவில்லை. பெரிய பாவி, சின்னப்பாவி என்று வித்தியாசம் பாராட்டவில்லை. தம்மைத் தேடிவந்தவர்களுக்குத் தாராளமாய் தெய்வீக மன்னிப்பைக் கொடுக்கிறவராயிருந்தார். "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன", "மகளே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன, சமாதானத்திற்குள் பிரவேசி" என்பது அவர் கூறின திருவாக்காகும். அவரோடிருந்த சீஷர்கள் குற்றம் குறைகள் இல்லாதவர்கள் அல்ல. அவர்கள் மனம், வாக்கு, செய்கையில் எவ்வளவோ தவறினார்கள். அவைகள் அவருக்குத் தெரியும். [illegible]களைச் சொல்லிக் காட்டினாரா? அவர்களுக்கு மன்னிக்கிறவராக [illegible] இருந்தார். "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்னும் [illegible]குப்படி, அவர் இருதய அன்பு, அவர்கள் குறைகளைக் கவனியாம[illegible] அவர்களுக்கு இரக்கம் பாராட்டுகிறவராகவே யிருந்தது [illegible] துரோகம் ஆதிமுதல் அவருக்குத் தெரிந்திருந்தும், அவனை [illegible] தாழ்ச்சியாய் நடத்தவுமில்லை, அவனை மற்றச் சீஷர்களுக்கு[illegible]

கொடுக்கவுமில்லை. சீஷர்கள் தம்மைவிட்டு ஓடிப்போனபோதிலும் அவர்கள்மேல் கோபங்கொள்ளாமல் அவர்கள் காக்கப்படும்படி ஜெபித்தார். தம்மைப் பலவிதமாய்ப் பாடுபடுத்திச் சிலுவையி லறைந்தவர்கள் எல்லாருக்காகவும், மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக் கொண்டார். ஒருவரையாவது அவர் பகைத்ததில்லை. ஒருவருக்காவது தீமைக்குத் தீமை செய்ததில்லை. அவர் எல்லார் பேரிலும் அன்பும் கிருபையுமுள்ளவராயிருந்தார். தமது ரத்தத்தாலே பாவமன்னிப்பை நமக்காகச் சம்பாதித்தவர் நமக்கு இரங்காதிருப்பது எப்படி? மன்னிக்கும் சிந்தை அவரிலிருந்ததைக் கண்டே சகல ஆயக்காரரும் பாவிகளும் தாராளமாய் அவரை நெருங்கினார்கள். அவரை நம்பினவர்கள் யாவரும் இரக்கம் பெற்றார்கள்.

ஒரே ஒரு பாவம் மாத்திரம் மன்னிக்கப்படாது என்றார். அது "பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மூலம் மன்னிப்புத் தேடுகிறவர்கள் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தவர்கள் அல்ல. "மனுஷர் செய்யும் எந்தப் பாவமும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்" என்ற வாக்கு பாவமன்னிப்பின் விசாலத்தை நமக்குக் காட்டுகிறது. நான் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்று ஒருவரும் பயப்படவேண்டியதில்லை. பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தவன் அப்படிச் சொல்லவுமாட்டான். பாவங்களை மன்னிக்கும் கிறிஸ்துவை வேண்டாமென்று முடிவாகத் தள்ளிவிடுவதே பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம். ஒருவேளை சிலகாலம் கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள், அதற்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி அவரை ஏற்றுக்கொள்ளுகிறதாயிருந்தால் அவர்கள் பாவம் மன்னிக்கப்படும். கடவுள் மன்னிக்கக்கூடாத பாவமில்லை. ஒருவன் கிறிஸ்துவை மனதார வெறுத்து, தன் பாவத்தில் நிலைத்திருக்கும்போது, அவனுடைய இருதயமே, மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு வந்து விடுகிறது. அதுவே பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம். ஆனால் ஆண்டவருக்கு ஒருவராகிலும் கெட்டுப்போகப் பிரியமில்லை. அவர் எல்லாருக்காகவும் மரித்த



படியால் எல்லாரும் மன்னிப்புப்பெற வேண்டுமென்பது அவர் பேராவல்.

கிறிஸ்து இயேசுவில் விளங்கிய இந்த மன்னிப்பின் சிந்தை நமக்கு வேண்டும். ஆண்டவர் நமது பாவங்களை மன்னிக்கிறது மாத்திரமல்ல, நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும் என்பதைக் குறித்து வெகு தெளிவாயும் திட்டமாயும் போதித்திருக்கிறார். "நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ?" "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்." "எங்கள் கடனாளிக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." என்று ஜெபியுங்கள். "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்." இதைப்பார்க்கிலும் தெளிவான போதனை வேண்டியதில்லை. மற்றவர்கள் குற்றங்களை மன்னிப்பதே நமக்குக் கஷ்டமானால் "ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்" என்கிற கட்டளையை நாம் நிறைவேற்றுவது எப்படி? தேவனுடைய மக்களுக்குள்ளேயே தப்பெண்ணங்களும், பேச்சில்லாமையும், மனவருத்தங்களும், பிரிவினையும் இருக்குமானால் மற்றவர்களைப்பற்றி என்ன கூறுவது? ஆண்டவர் காரியங்களில் பிரியமும், ஆராதனையில் விருப்பமும், கர்த்தருடைய பந்தியில் வாஞ்சையும் நமக்கிருந்தும் மற்றவர்கள் விஷயத்தில் பொறாமையும் எரிச்சலும் கூடவே யிருக்குமானால் நமது கிறிஸ்துமார்க்கம் எப்படிப்பட்டது? அன்பும் சகோதர சிநேகமும் கிறிஸ்தவர்கள் லட்சணமாயிருக்கவேண்டியதிருக்க, பகையும் பிரிவினையுங் காணப்படுமானால் எவ்வளவு துயரமான விஷயம்! இதில் ஒருகாரியம் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனுக்கென்கொண்டு அவருக்கென்றே பிழைக்கிறவர்கள் அவருடைய அன்பாலும் மன்னிக்கும் சிந்தையாலும் நிறைந்திருப்பார்கள். [illegible]

சபையிலுள்ளவர்களெல்லாரும் உத்தம கிறிஸ்தவர்களாயிருப்பதில்லை. இங்கேதான் சங்கடமுண்டாகிறது. யூதாஸ் இருக்குமட்டும் ஆண்டவர் இருதயம் கலங்கினது. அவன் அகன்றுபோனவுடனே: "இப்பொழுது மனுஷ குமாரன் மகிமைப்படுகிறார்" என்றார். நமக்குள்ளும் அநேகர் வேறு சிந்தையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களோடு அன்னியோன்னியமாயிருப்பது கஷ்டமாயிருக்கிறது. என்றாலும் நாம் அவர்களைப் பகைக்கக்கூடாது. நமது அன்பினால் அவர்களை ஆதாயப்படுத்தப் பார்க்கவேண்டும். அவர்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவார்களானால் நாமும் அவர்களோடு ஐக்கியமாயிருப்பது லேசாயிருக்கும். அதுவரை அவர்கள் நமக்குள் அன்பையும் பொறுமையையும் உண்டாக்கும் கருவிகளாயிருப்பார்கள். ஒருவர் நம்மோடு அன்பாயிருக்க மனமில்லாதிருந்தாலும், அவர்கள் குறையை நாம் மனதில் பேணாமல் நல்மனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் பொல்லாத குணம் நமக்கு அவர்கள்மேல் வெறுப்பை உண்டாக்குமானால் நமது இருதயம் கறைப்படும். நாம் கல்மனதோடு பிதாவின் சமுகத்தைச் சேரமுடியாது. கிறிஸ்துவின் சிந்தையால் நிறைந்து எல்லார்பேரிலும் இரக்கமாயிருக்கவேண்டும். பகை, விரோதம், பிரிவினை, வியாச்சியம் இவைகளில் பிரியப்படுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.

5. **தேவசித்தத்திற்கு அமைந்த சிந்தை.** கிறிஸ்துவுக்குச் சொந்தமான ஒரு சித்தமிருந்தது. நான் என்று பேசக்கூடியவருக்கு ஒரு சித்தம் இருக்கவேண்டும். அவருக்குப் பிரியமானால் அவர் இஷ்டப்படி நடக்கலாம். ஆனால் அவர் எப்பொழுதும்போல இப்பொழுதும் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றுகிறவராக வந்தார். ஆகையால் அவர் ஜீவியமுழுவதிலும், அவரிலும் அவர் மூலமாகவும் பிதாவின் சித்தம் ஒன்றே நிறைவேறினதைப் பார்க்கிறோம். அவர் பூமிக்கு வரும்போதே "தேவனே, உமது சித்தப்படி செய்யவருகிறேன்" என்று சொல்லிவந்தார். சகல விஷயத்திலும் ஒன்றுபிசகாமல் பிதாவின் சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றுவது லேசான காரியமல்ல. ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவின் சித்தத்தை அறியும்படி அவரோடு பூரண ஐக்கியத்தில் பிழைக்கவேண்டும். அவர் சித்தம் வெளிப்படும்வரை அவர் பிதாவுக்குக் காத்திருக்கவேண்டும். சித்தத்தை அறியும்போது உடனே கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் ஜீவியத்தில் முழுவதும் பிதா சித்தம் ஒன்றையே காண்கிறோம். அவர் உபதேசம் கிரியைகளில் எது பிதாவின் சித்தம், எது கிறிஸ்துவின் சித்தமெனப் பிரித்துப் பேசமுடியாது. கிறிஸ்துவின் சித்தம் பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய், இடைவிடாமல் கீழடங்கியிருந்தபடியால், குழாயின் வழியாய் தண்ணீர் பாய்வதுபோல, பிதாவின் சித்தம் அவர் சித்தத்தின் மூலமாய்வெளிப்பட்டது. இதைக் குறித்து ஆண்டவர்: "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; எனக்குச் சித்தமானதை நான்தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்" என்றும், "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" என்றும்; "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றும் சொன்னார். இது என்ன அற்புதமான ஜீவியம்! உலகில் எந்த மனுஷன் இப்படிச் சொல்லக்கூடும்? அவருடைய நினைவுகள், வார்த்தைகள், செய்கைகள், பிரயாணங்கள், பாடுகள் சகலமும் பிதாவின் சித்தமாகவேயிருந்தன. ஆகையால் அவர் பேசின வார்த்தைகள் கடவுள் வார்த்தைகளும், அவர் செய்த கிரியைகள் கடவுள் செய்த கிரியைகளுமாயிருந்தனவென்பது நிச்சயம். தேவசித்தம்போல் பிழைத்த கிறிஸ்துவே கடவுளை வெளிப்படுத்தின அவரது தற்சொரூபமானவர்.



கிறிஸ்து இயேசுவில் விளங்கின இந்தச் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும். தேவமக்கள் பிதாவின் சித்தம்போல் பிழைக்கவேண்டியவர்கள். "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்" இன்னதென்று நாம் அறிந்து அந்தச் சித்தத்தின்படி பிழைக்கவேண்டும். "பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்

படி ஆண்டவர் கற்பித்தார். கர்த்தருடைய ஜெபத்தை ஒரு மந்திரம் போல் சொல்லிவிடுகிறோம். அதன் பொருளைக் கவனிக்கிறதில்லை. "ஆண்டவரே, பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவது போல் பூமியிலேயும் செய்யப்படுவதாக," ஆனால் என்னைத் தவிர என்பதுதான் நமது கருத்து. இப்படி எல்லாருமே தங்களை விலக்கிக்கொண்டு பூமியில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று ஜெபித்தால் அவர் சித்தம் யாரில்தான் செய்யப்படுவது? கிறிஸ்துவில் பிரதானமாக விளங்கின சிந்தை தேவசித்தத்திற்கு அமைந்து தேவசித்தத்தை நிறைவேற்றின சிந்தை. கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டவனும் தன் சித்தப்படியல்ல, தேவசித்தப்படியே பிழைக்க நாடுவான். பவுல் கிறிஸ்துவைக் கண்டடைந்த நாளில் கேட்ட கேள்வி உத்தம கிறிஸ்தவனுடைய வாஞ்சையைக் காட்டுகிறது. "ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" இது வெறுங்கேள்வியல்ல. பவுல் தமது ஜீவகாலமுழுவதும் தேவசித்தப்படியே பிழைக்கவும் ஊழியஞ்செய்யவும் விரும்பித் தம்மைப் பூரணமாய் ஆண்டவர் நடத்துதலுக்கு ஒப்புவித்து விட்டார். அவருடைய ஆவியினால் நடத்தப்பட்டார். அவர் ஜீவியமும் ஊழியமும் உலகத்திற்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருப்பதற்குக் காரணம் அதுதான். கிறிஸ்து: நானல்ல, என் பிதாவே இவைகளைச் செய்கிறார் என்றார். அவருடைய அடியானாகிய பவுல், கிறிஸ்துவின் சிந்தையுடையவராயிருந்து: "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். இப்படிச் சொல்லக் கூடியவர்களே கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் கிறிஸ்தவனல்ல. கிறிஸ்துவின் ஆவி நமக்குள் வரும்போது அது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றின ஆவியானபடியால், நாமும் பிதாவின் சித்தப்படியே பிழைக்க நாடுவோம். கிறிஸ்துவில் விளங்கிய தேவசித்தத்தைக் கவனியாமல், நாமும் தேவசித்தப்படி பிழைக்கவேண்டும் என்பதை உணராமல், தங்கள் இஷ்டம்போல் சகல காரியங்களையும் நடப்பித்துக்கொண்டு, தங்கள் மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்கிறவர்கள் கிறிஸ்துவின் சிந்தைக்கு அந்நியராயிருக்கிறார்கள். நாம்



நமது இஷ்டம்போல் பிழைக்கும்போது கிறிஸ்தவர்கள் என்கிற பேர் நமக்கு என்னத்திற்கு? சகல காரியங்களிலும் தேவசித்தம் அறிந்து பிழைக்கிறவர்களே தேவமக்களாவார்கள். கிறிஸ்துவின் சகோதரராவார்கள். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." என் தாயார் யார்? என் சகோதரர் யார்? பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறான்." தேவசித்தப்படி பிழைக்கிறவன், தேவசித்தப்படி பிழைத்த கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறான். தன் சுய இஷ்டப்படி பிழைக்கிறவனை அவர் அறியேன் என்கிறார்.

6. தேவராஜ்யத்தைத் தேடின சிந்தை. இதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. நாம் சுவிசேஷத்தைப் படிக்கும்போது தேவராஜ்யத்தைக் குறித்து ஆண்டவருக்கிருந்த தீராத வாஞ்சையைக் காணலாம். அவர் உபதேசிக்கும்படி முதல் முதல் வாய்திறந்தபோதே "மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றார். அதுமுதல் கடைசிவரை தேவராஜ்யம் அவர் மனதைவிட்டு விலகவேயில்லை. அவர்செய்த உபதேசங்கள் எல்லாம் தேவராஜ்யத்தைப் பற்றினதாகவே யிருந்தன. தேவராஜ்யம் என்னும் வார்த்தை மத்தேயுவில் நாற்பத்தேழுதரம், மாற்குவில் பதின்மூன்று தரம், லூக்காவில் முப்பத்தாறு தரம், யோவானில் ஐந்து தரம் வருகிறது. யோவானில் குறைவாய் வருகிறதென்று நாம் நினைக்கக் கூடாது. அவர் தேவராஜ்யத்திற்குப் பதிலாக நித்திய ஜீவன் என்கிற வார்த்தையை அடிக்கடி உபயோகிக்கிறார். மற்றவர்கள் ராஜ்யம் என்று சொல்லும்போது, யோவான் ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைக் குறித்துப் பேசுகிறார். தேவராஜ்யம் என்பது தேவ ஆளுகை. நித்திய ஜீவன் என்பது அந்த ஆளுகையின் பலன்.

கடவுள் ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்பது கிறிஸ்துவின் ஒரே வாஞ்சை. இரவும் பகலும் அதே சிந்தையாயிருந்தார்.

அவர் உபதேசங்களெல்லாவற்றிலும் தேவராஜ்யத்தைக் காணலாம். அவருடைய உவமைகள் யாவற்றிலும் தேவராஜ்யபோதனையை அறியலாம். அவர் எங்கெங்கே போனாலும், யாரோடே பேசினாலும், எதைச் செய்தாலும் தேவராஜ்யமே அவர் மனதிலிருந்தது. அவர் நிக்கொதேமோடு பேசினபோது: "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்றார். லேகியோன் என்னும் பிசாசுகள் நீங்கின மனுஷனைப் பார்த்து: "நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" என்றார். தமது சீஷர்களை அனுப்பினபோது, தேவராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கியுங்கள் என்றார். அவர் குழந்தைகளை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கையில் பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார். அவர் செய்த அற்புத கிரியைகளெல்லாம் தேவராஜ்யத்திற்கு அடையாளங்களாயிருந்தன. பரிசேயரைப்பார்த்து: "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" என்றார். மலைப்பிரசங்கத்தில் தேவராஜ்யத்தைப்பற்றியும் அதன் ஆசீர்வாதங்களைப் பற்றியும் போதித்தார். ஒலிவமலையில் தமது சீஷருக்கு வருங்காரியங்களைப் பற்றிப் பேசினபோது, தேவராஜ்யம் அவர் பிரதான எண்ணமாயிருந்தது. பிலாத்துவிடம்: "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல" என்றார். இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் தேவராஜ்யத்தைப் பற்றிப் பேசினார். அவர் உயிர்த்தெழுந்த பின்பும் நாற்பது நாளளவும் தமது சீஷரோடு தேவராஜ்யத்தைக் குறித்துத் திரும்பவும் பேசினார். ஆவியானவர் வரும்போது தேவராஜ்யம் பலமாய் வரும் என்றார். ஆம், ஆண்டவர் ஒரு நிமிஷமாகிலும் தேவராஜ்யத்தை மறந்தவரல்ல. அதுவே அவரது இடைவிடாத வாஞ்சையும் சிந்தையும் உபதேசமும் கிரியையுமாயிருந்தது. தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டே சிலுவையிலும் மரித்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த தேவராஜ்ய சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும்.

கிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது நாம் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாகிறோம். அவர் நமது ஜீவனாக நமக்



குள் வசிக்கும்போது அவரிலிருந்த சிந்தையே நமது சிந்தையாகிறது. அவர் தேவ ஆளுகையைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டு பிழைத்தது போல நாமும் தேவ ஆளுகைக் குட்படுகிறோம். அவர் தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கும்படி பிரயாசப் பட்டதுபோல நாமும் பிரயாசப்படுகிறோம். அவர் தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும், பாடுகள் மரணத்தாலும் தேவராஜ்யத்தை ஸ்தாபித்தார். அவருடைய கிருபையால், அவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால், மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி நாம் செய்யக்கூடியதை யெல்லாம் செய்கிறோம். திருச்சபை தேவராஜ்யத்திற்கு விரோதமானதல்ல. அவை இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டிருக்கிறது. சபையை ஸ்தாபிப்பேன் என்று ஆண்டவர் சொன்னபோது, ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்றும் சொன்னார். ஆகவே தேவராஜ்யத்தை திருச்சபையோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். அவர் தமது ஆவியின் மூலமாய் சரீரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறார். தமது சரீரமாகிய சபையைக் கொண்டு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது ஆண்டவர் சித்தம். ஆகையால் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு திருச்சபை கருவியாயிருக்கிறது. நாம் தனித்தனியே அவருடைய சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறோம். நமது ஜீவியத்தின் நோக்கமென்ன? நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளானால் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும். எல்லாவற்றைப் பார்க்கிலும் "தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும்" நாம் பிரதானமாய்த் தேடவேண்டும். ஆவியினால் நிறைந்த நமது ஜீவியம் ராஜ்யத்தின் பலத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி நாம் முழுபலத்தோடே ஊழியஞ்செய்யவேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த தேவராஜ்யத்தின் சிந்தை நம்மை ஆளாவிட்டால் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் அல்ல.

7. அவமானம் பாடுகளைச் சகித்த சிந்தை. ஆண்டவர் உலகில் வந்தபோது அவர் எவ்வளவோ அநியாயங்களைச் சகிக்கவேண்டிய

தாயிருந்தது. சகிக்க முடியாவிட்டால் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றியிருக்கமாட்டார். தம்மை அறிந்துகொள்ளாத மனுஷர் நடுவில் சஞ்சரித்ததே பெரிய சங்கடம். அவர் எண்ணத்தையும், நோக்கத்தையும், அவர் போதனைகளையும், ஊழியத்தையும் அறிந்து கொள்ளாதவர்களோடு அவர் சஞ்சரிக்கவேண்டியதாயிற்று. இந்த உள்ளான பிரிவால் அவர் திரளான மனுஷர் நடுவில் இருந்தும் தனித்தவராகவே யிருந்தார். சீஷர்களுங்கூட அவரை அறிந்து அவரோடு அனுதாபப்பட ஏதுவில்லை. அவர்களுடைய அறிவீனத்தையும், மந்த இருதயத்தையும், அவர்களிடம் காணப்பட்ட குறைவுகளையும் எவ்வளவோ பொறுமையாய்ச் சகித்தார். இனத்தாரின் அறியாமையையும் அவிசுவாசத்தையும் சகித்தார். பாவிகள் நடுவில் பரிசுத்தர் சஞ்சரிப்பது எவ்வளவோ போராட்டம். புண்களும் நாற்றமும் நிறைந்த குஷ்டரோகிகள் மத்தியில் சுகதேகி ஒருவன் வசிக்கநேரிட்டால் எவ்வளவு அவஸ்தைப் படுவானோ அதுபோலவே சகல அக்கிரமங்களும் பாவங்களும் நிறைந்த மனுஷர் நடுவில் அவர் அவஸ்தைப் பட்டார். என்றாலும் பாவிகளைப் புறக்கணியாமல் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். அவர் முற்றிலும் ஆவிக்குரியவராயிருந்ததால் மாம்சத்துக்குரிய மனுஷர் அவரைப் பகைத்தார்கள். அவருடைய மாசற்ற பரிசுத்த ஜீவியம் அவர்கள் பாவங்களைக் கண்டித்தது. அவருடைய மேலான உபதேசம் அவர்களுடைய மாயமான ஆசாரங்களைத் தகர்த்தது. அவர்கள் அவரை முழுப்பகையாய்ப் பகைத்துக் கொன்றுபோடத் தீர்மானித்தார்கள். அவரைத் தூஷித்தார்கள். அவர் பேரைக் கெடுத்தார்கள். அவர் ஊழியத்திற்கு இடையூறு செய்தார்கள். அவரைப் பிடித்தார்கள். அவரை அவமானப் படுத்தி இழிவாய் நடத்தினார்கள். அவரை அடித்து, இம்சித்து, கொடிய வேதனைப்படுத்தினார்கள். சிலுவையில் அறைந்து அவரைப் பரியாசம் பண்ணினார்கள். சகிக்க முடியாத இந்தப்பாடுகள் யாவற்றிலும் அவர் காண்பித்த பொறுமை ஆச்சரியம். சகல தீமைகளையும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டார். "வையும்போது பதில் வையாமலும் பாடுபடும்போது பயமுறுத்தாமலும்" பிதாவின் சித்தத்திற்



குத் தம்மைக் கையளித்து மகா பொறுமையாய் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். இவ்வாறு சகித்துக்கொண்டது அவருடைய இயலாமையல்ல. அவர் பார்வைக்குமுன் நிற்பவன் யார்? அவர் பேச்சுக்குப் பதில் பேசத்தக்கவன் யார்? அவர் பலத்தை மேற்கொள்ளக் கூடியவன் யார்? அப்படியிருந்தும், நம்மை ரட்சிக்கும்படி வந்தவர் நமது பாவங்களினிமித்தம் தமக்கு ஏற்படும் சகல அவமானங்களையும் பாடுகளையும் சகித்துக்கொள்ளவேண்டியது தேவ ஏற்பாடாகயிருந்தது. இதுதவிர, அவர் தம்முடைய ஆத்துமாவில் அடைந்த போராட்டமும் வியாகுலமும் நமது புத்திக்கு எட்டாது. பிதா தமக்கு ஏற்படுத்தின இருள் நிறைந்த பாதையில் அவர் நடந்து, கொடிய கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணவும் சம்மதித்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்தச் சகிப்பின் சிந்தை நம்மிலும் இருக்கவேண்டும்.

ஆண்டவரோடு நமக்கு ஐக்கியமுண்டானால் அவருடைய சிந்தை நம்முடையதாகவேணும். அவர் எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டதுபோல நாமும் சகிக்கவேண்டும். "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்." (எபி. 12 : 3). கிறிஸ்தவர்களாகிய நமக்குள் சகிக்கும் சிந்தை இல்லாததினாலேயே சண்டை சச்சரவுகளும், பிரிவினைகளும் காணப்படுகின்றன. ஏன் சகிக்க முடியவில்லை? கிறிஸ்து நமக்குள் ஜீவிக்காததினாலேயே. அவராலேயன்றி நம்மால் சகிக்கமுடியாது. அவர் நமக்குள் ஜீவனுள்ள [illegible]பது நிச்சயமானால் நமக்கு விரோதமாய்ச் செய்யப்படும் சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வோம். கிறிஸ்து[illegible] சிந்தை நமக்குண்டாகும்போது அவருடைய பாடுகளில் பங்கு[illegible] குண்டாகும். எல்லாரும் ஆவிக்குரியவர்கள் அல்ல. [illegible] குடும்பத்திலும், சபையிலும், மற்றவர்களாலும் நமக்குப் பாடு[illegible] உண்டாகும். நாம் தீமைக்குத் தீமைசெய்யாமல் பொறுமையாய்ச் சகிக்கும்போது ஆண்டவர் நமது ஜீவியத்தில் மகிமைப்படுகிறார். [illegible] மூர்க்கமும், கோபமும், எதிர்ப்பும், அவமானப்படுத்தலும் [illegible]

செய்தலும் கிறிஸ்தவர்கள் லட்சணங்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையில்லாதவன் கிறிஸ்தவன் அல்ல.

8. எல்லாருக்கும் நன்மைசெய்யும் சிந்தை. "அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார்." அவரிலிருந்து நன்மையேயல்லாமல் தீமை புறப்பட்டதில்லை. அவருடைய நினைவுகள் நன்மையானவைகள். அவருடைய பேச்சுகள் நன்மையானவைகள். அவருடைய கிரியைகள் நன்மையானவைகள். அவர் மனுமக்கள் நடுவில் நன்மைச் சொரூபியாய் விளங்கினார். அவர் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருந்தார். மனுஷருடைய மனதுக்கு நன்மை செய்தார். ஆத்துமாவிற்கு நன்மைசெய்தார். அவர்கள் சரீரத்திற்கு நன்மை செய்தார். எங்கும் நன்மைசெய்தார். எல்லாருக்கும் நன்மை செய்தார். எப்பொழுதும் நன்மைசெய்தார். இன்னும் அவரை நம்பும் பிள்ளைகளுக்கு நன்மை செய்கிறவராகவேயிருக்கிறார். அவர் ஒருவருக்கும் தீமை செய்ததேயில்லை. கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்த நன்மைசெய்யும் சிந்தை நம்மிலும் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் என்னும் சிறந்தபேரை நாம் வைத்துக்கொண்டு எவ்வளவோ தீமைகளால் நிறைந்திருக்கிறோம். எங்கும் தீமை செய்கிறவர்களாய்ச் சுற்றித்திரிகிறோம். கோழிகள் இரை பொறுக்கும்போது தானியத்தில் ஒரு கொத்தும், பக்கத்திலிருக்கிற கோழிக்கு ஒரு கொத்தும் கொடுத்துக்கொண்டே இரை பொறுக்குவதுபோல, அதிகாரியிடத்தில் சம்பளம் வாங்குகிறவர்கள் உடன் ஊழியரைக் கொத்திக்கொண்டே பிழைக்கிறார்கள். அன்பு, அனுதாபம், இரக்கம், பெருந்தன்மை, நற்குணம் நம்மில் இல்லை. பொறாமையும் எரிச்சலும் கேடுசெய்யும் சிந்தையும், தீமையை விரும்பும் குணமும் நம்மில் காணப்படுகின்றன. இது எவ்வளவு துயரமான விஷயம். கடவுள் ஆசீர்வாதம் நம்மோடிராது. அவருடைய நற்சிந்தைக்கு விரோதமாய் நாம் நடக்கும்போது அவர் நம்மை உபயோகிக்கமாட்டார்; தன்னயமே சகல தீமைகளுக்கும் காரணம். எங்கும் நன்மை செய்த ஆண்டவர் தன்னயமுள்ளவரல்ல. "அவர் தமக்கே பிரிய



ராய் நடக்கவில்லை." நன்மைச் சொரூபியாகிய கிறிஸ்து நமக்குள் வசிப்பாரானால், பெருந்தன்மையும் எல்லாருக்கும் நன்மை செய்யும் சிந்தையும் நமக்கு உண்டாகும். நாம் இயல்பிலே தீயவர்கள் தான். நன்மை நம்மில் இல்லை. 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல' ஆண்டவர் நமக்குள் வசிப்பதாலும், அவரோடுள்ள ஐக்கியத்தாலும், தீயகுணம் நீங்கி நன்மைசெய்யும் குணம் நமக்கு உண்டாகும்.

மேற்கூறியவைகளைச் சுருக்கிப் பார்ப்போம். நாம் கிறிஸ்துவின் அடியார் என்பது உண்மையானால் அவர் சிந்தை நம்மிலிருக்கவேண்டும். அவர் சாயல் நம்மில் காணப்படவேண்டும். அவருடைய அன்புள்ள சிந்தையும், அமர்ந்த சிந்தையும், தாழ்மையான சிந்தையும், மன்னிக்கும் சிந்தையும், தேவசித்தத்திற்கு அமைந்த சிந்தையும், தேவராஜ்யத்தைத் தேடின சிந்தையும், அவமானம் பாடுகளைச் சகித்த சிந்தையும், எங்கும் எல்லாருக்கும் நன்மைசெய்த சிந்தையும் நமது சிந்தையாயிருக்கவேண்டும். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லாவிட்டால் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பிரயோஜனமில்லை. நமக்கு அறிவிருக்கலாம். ஆளும் திறமையிருக்கலாம், காரியங்களை நடத்தும் சமர்த்து இருக்கலாம். கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லையென்றால் என்ன பிரயோஜனம்? புறம்பான ஆசாரங்களில் நாம் ஒழுங்காயிருந்தும், உள்ளான மறுரூபத்தை நாம் பெற்றுக்கொள்ளாமற்போனால் என்ன லாபம்? கிறிஸ்து நமது உள்ளத்தில் வசிக்காவிட்டால் அவருடைய ரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் நமக்கு எப்படிக் கிடைக்கும்? இப்போது நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால் இனிமேல் நாம் அவருக்கு ஒப்பாயிருப்பது எப்படி? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த அநேகர் அக்கினியில் தங்கும்படி நேரிடும். ஆண்டவர் தாமே அவ்வாறு எச்சரித்திருக்கிறார். "நான் உங்களை அறியேன்" என்பார்.

# II
# Heart Without Understanding
## உணர்வற்ற இருதயம்

"உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது" ரோ. 1: 21.

தேவகாரியங்கள் நமது வாழ்க்கையில் ஆசீர்வாதமாகப் பலிக்க வேண்டுமானால் உணர்வுள்ள இருதயம் அவசியம். சத்தியத்தை ஆவலுடன் ஏற்றுக்கொண்டு, அதை இருதயத்திலும் சிந்தையிலும் உறுதியாய்ப் பேணி, அமர்ந்த ஆவியுடன் அதை ஆழமாகத் தியானிப்போமானால் அந்தச் சத்தியவசனம் நமது ஜீவிய முழுவதையும் ஆண்டு நடத்தும் சக்தியாக விளங்கும். உணர்வுள்ள இருதயம் பிரகாசிக்கும். உணர்வற்ற இருதயமோ இருளடையும். இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்ப்போம்.

உணர்வற்ற இருதயம் என்றால் என்ன? என்ன நேரிட்டாலும், எதைக்கண்டாலும், எதைக்கேட்டாலும் உணர்வற்ற இருதயத்தாருக்கு அவைகளைப்பற்றி ஒன்றுமில்லை அவர்களுக்கு எல்லாம் சரிதான். இன்னார் மரித்துப்போனார் என்றால்: சரிதான் என்பார்கள். இன்னாருக்குக் கலியாணமாயிற்று என்றால் அதற்கும் சரிதான் என்பார்கள். நாம் சொல்வதை அவர்கள் கொஞ்சமும் காதில் போட்டுக்கொள்ள மாட்டார்கள். "கல்லியோன் இவைகளில் ஒன்றைக் குறித்தாகிலும் கவலைப்படவில்லை" என்பதுபோல் இவர்களுக்கும் கவலை கிடையாது. கொஞ்சமும் உணர்வில்லை. ஆழமான சிந்தையில்லை. மற்றக்காரியங்களில் அவர்கள் உணர்வற்றிருப்பதுபோலவே தேவ காரியங்களிலும் அவர்களுக்கு உணர்வில்லை. உணர்வற்ற இருதயம் உபயோகமற்றது.

உணர்வுள்ள இருதயமோ காரியங்களை ஆழமாய் ஆராய்ச்சிசெய்யும் தன்மையுள்ளது. தான் கண்டகாரியங்களை அவை தோன்றுகிற



படியல்ல, அவற்றின் உள்ளான விஷயம் என்னவென்று யோசிக்கும். தான் கேட்கும் வார்த்தைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவற்றின் மறைவான பொருள் என்னவென்று சிந்திக்கும். நடக்கும் சம்பவங்களைக்கொண்டு அவற்றில் மறைந்திருக்கும் தேவகரத்தை அறியும்படி நாடும். உணர்வுள்ள இருதயத்தார் ஆத்திரமின்றி பதட்டமின்றி அமர்ந்த சிந்தையுடன் சகல காரியங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பார்கள். ஞானமும் அனுதாபமும் குணசீலமும் உணர்வுள்ள இருதயத்தாரிடம் விளங்கும். ஆகவே உணர்வற்ற இருதயம் நமக்குக் கேடு, உணர்வுள்ள இருதயம் நமக்கு ஆசீர்வாதமுமாகும்.

### 1. உணர்வற்ற இருதயத்தின் கேடுகள்.

முதலாவது வனாந்தரத்திலிருந்த சபையைக் கவனிப்போம். அவர்கள் சரித்திரத்தை பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் விவரமாய்க் காண்கிறோம். சங்கீதக்காரன் அவைகளைச் சங்கீ 78-ம், 106-ம் சங்கீதங்களில் பாடியிருக்கிறார். உணர்வில்லாத இருதயத்தின் கேட்டை அங்கே தெளிவாய்க் காணலாம். கடவுளுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும் அவர் கட்டளைகளின்படி நடக்கச் சம்மதிக்காமலும், அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குச் செய்த அதிசயங்களையும் மறந்தார்கள். கடவுளுக்கு விரோதமாகப் பாவஞ் செய்து உன்னதமானவருக்குக் கோபமூட்டினார்கள். இருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள். கடவுளை விசுவாசியாமலும் அவருடைய ரட்சிப்பை நம்பாமலும் போனார்கள். தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம் பேசி தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய் சொன்னார்கள். அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை. அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை. இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள். அவருடைய வல்லமையையும் அவர் தங்களைச் சத்துருக்களுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள். தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபமூட்டி தங்கள் விக்கிரகங்களினால் அவருக்கு எரிச்சல் உண்டாக்கினார்கள். தேவ ஆலோசனைக்குக் காத்திராமல் தங்கள் மனம்போல் நடந்தார்கள். கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி

கொடாமல் தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள். புறஜாதிகளோடு கலந்து அவர்கள் துர்க்கிரியைகளைப் பின்பற்றினார்கள். இவை யாவற்றையும் கவனிக்கும்போது அவர்களிடத்தில் அவிசுவாசம், கீழ்ப்படியாமை, முறுமுறுப்பு, கலகம், எதிர்ப்பு, துரோகம், நன்றிகேடு, விக்கிரகாராதனை, துர்இச்சை முதலான பாவங்களைக் காண்கிறோம். இத்தனை அக்கிரமங்களுக்கும் மூலகாரணம் இன்னதென்றும் சங்கீதக்காரனே சொல்லுகிறார். “கடவுள் தங்களுக்குச் செய்த அதிசயங்களை உணராமலும், அவருடைய கிருபைகளின் திரட்சியை நினைவுகூராமலும் போனார்கள்”. ஆகையால் உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

கடவுள் விஷயத்தில் உணர்வற்ற இவர்கள் அவர் தாசனாகிய மோசேயிடமும் அவ்வாறே நடந்துகொண்டனர். அவர்கள் மோசேயை எதிர்த்து அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, அவருடைய ஜீவனைக் கசப்பாக்கினார்கள். இழிவும் கொடுமையுமான அடிமைத்தனத்திலிருந்து கடவுள் அவர்களை விடுவிப்பதற்கு அவர் கையாடின கருவி மோசே என்பதை அவர்கள் உணரவில்லை. மோசே தங்களைப் போன்ற ஒரு மனுஷன்தானே, அவனை என்ன பேசினாலென்ன, என்ன பாடுபடுத்தினாலென்ன என்று வெகு லேசாய் நினைத்துவிட்டார்கள். மோசே ஒரு மனுஷன்தான், அவர் வானத்திலிருந்து குதித்தவரல்ல. ஆனால் இந்த மகத்தான விடுதலையை அருளவும், அதிசயமான காரியங்களைத் தங்களுக்காக நடப்பிக்கவும் அவர் கடவுளால் ஏற்படுத்தப்பெற்ற ஊழியக்காரன் அல்லவா? கடவுளுக்கும் ஜனங்களுக்கும் மத்தியிலிருந்து கடவுளுக்காக ஜனங்களோடும், ஜனங்களுக்காக கடவுளோடும் போராடவேண்டிய மத்தியஸ்தன் அல்லவா? அவர் அழைக்கப்பெற்ற அழைப்பும் நிறைவேற்றவேண்டிய வேலையும் எவ்வளவு உத்தரவாதமானது! கடவுளை அறியாத அந்த ஜனங்களைச் சகல காரியங்களிலேயும் வழிநடத்தும்படி கடவுள் ஸ்தானத்தில் நிற்கிறவரல்லவா மோசே? அவரை எவ்வளவோ மதித்து, அவர் சொல் கேட்டு, சகல விஷயத்திலும் அவரை உற்சாகப்படுத்தவேண்டியது அவர்கள் கடமை. அப்படியிருக்க அவர்களோ



அவருக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவரைத் தூஷித்துப் பல வகையிலும் அவரைச் சஞ்சலப்படுத்தினார்கள். உபத்திரவம் சகிக்கக்கூடாமல் ஓர் சமயம் மோசே கடவுளைப் பார்த்து, கர்த்தாவே, நானா இவர்களைப் பெற்றேன், எனக்கேன் இந்தத் தொல்லை என்று புலம்பவும் நேரிட்டது. மோசேக்குக் கடவுளுக்குமுள்ள சம்பந்தத்தை உணர்வற்ற இருதயமுள்ள இந்த ஜனங்கள் அறிந்துகொள்ளவில்லை. சூரிய உஷ்டணத்தைச் சகித்தாலும் சூரிய அனல் பெற்ற மணலில் நடக்கமுடியாது என்கிற சொற்படி, தேவ அருள்பெற்ற மோசேக்கு விரோதமாய் அவர்கள் கலகம்பண்ணி நாசத்துக்குள்ளானார்கள். சற்றுவிலகு மோசே, நான் இந்த ஜனங்களை ஒரு நிமிஷத்தில் அதமாக்குவேன் என்று புறப்பட்டார் கடவுள். ஜனங்கள் அழிவது மோசேக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. ஆ, எவ்வளவு சாந்தம்! எவ்வளவு பொறுமை! அவர் முகங்குப்புற விழுந்து மன்னிக்கும்படி மன்றாடுகிறார். இல்லை மோசே, அவர்கள் உன்னையல்ல, என்னையே நிந்தித்து எனக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்களை அழிப்பதே சரியென்று மோசேக்கு எதிர்த்துநின்ற கோராகு தாத்தான் அபிராம் என்பவர்கள் தங்கள் குடும்பங்களோடு பாதாளத்தில் அமிழ்ந்துபோகும்படி செய்தார். துணிந்து தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பிரபுக்கள் அக்கினிக்கு இரையானார்கள். இது போதாதென்று மூர்க்கம் நிறைந்த ஜனங்கள் முறுமுறுக்க, அவர்களுக்குள் வாதையுண்டாகி பதினாலாயிரத்து எழுநூறுபேர் செத்தார்கள். அதற்குமேல் ஒருவரும் சாகாதபடி மோசே காப்பாற்றினார். இத்தனை துணிகரமான பாவங்களுக்கும் அழிவுக்கும் காரணம் உணர்வில்லாத அவர்கள் இருதயமே. அவர்களுக்கு உணர்வுள்ள இருதயம் இருந்திருக்குமானால் சகல தீங்குகளுக்கும் விலகி கடவுளின் மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள். உணர்வற்ற இருதயத்தால் பாவங்களும், பாவங்களால் அழிவும் நேரிட்டன. இதே உணர்வற்றகுணம் அவர்கள் பின் சந்ததிகளிலும் இருந்தது. இவர்களைக் குறித்து: “இந்த ஜனங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும் இருக்கிறவர்கள்” என்று ஏசாயா அறிவித்தார்.

கடைசியாக கடவுள் குமாரன் மாம்சத்தில் வெளிப்பட்டுத் தம்மை ஏற்றுக்கொள்ளவேண்டிய தமது சொந்த ஜனத்தாரிடம் வந்தபோது, அவர்கள் அவருக்கு என்ன செய்தார்கள் என்பதை நாமறிவோம். அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளாதபடி அவர்கள் கண்களைக் குருடாக்கினது அவர்கள் உணர்வற்ற இருதயமே. இந்த ஜனங்கள் மனந்திரும்பாமலும், பாவங்கள் மன்னிக்கப்படாமலும், குணப்படாமலுமிருக்கும்படி, உணர்வில்லாத அவர்கள் இருதயம் அவர்களைக் கெடுத்ததென்று ஆண்டவரே சொன்னார். தமது வசனத்தைக் கேட்கும் ஜனங்கள் உணர்வடையவேண்டும் என்று அவர் விரும்பி ஒரு சமயம் ஜனங்களெல்லாரையும் தம்மிடத்தில் அழைத்து: "நீங்கள் கேட்டு உணருங்கள்" என்றார்.

இந்த உணர்வில்லாமை பொது ஜனங்களிடத்தில் மாத்திரமல்ல, தமக்குச் சொந்தமானவர்களிடத்திலும் காணப்பட்டது. "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா" என்று அவர் சிறுபிராயத்தில் சொன்ன வார்த்தைகளைப் பெற்றோர் அறியவில்லை. காரணம் என்ன? "தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை". இந்த உணர்வற்ற குணமே அவர் சீஷர்களிடத்திலும் அடிக்கடி காணப்பட்டது. "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்றார். சீஷர்கள் அதை அறிந்துகொள்ளாமல் தங்களுக்கு விளக்கிக் காட்டும்படி கேட்டார்கள். அப்பொழுது ஆண்டவர்: "நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா?" என்று சொல்லி அதை விளக்கிக் காட்டினார். தமக்கு நேரிடும் பாடுகளைக் குறித்து அடிக்கடி அவர்களுக்குச் சொன்னபோதிலும் "அவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை." இவ்வாறு ஆண்டவர் போதித்த அநேக காரியங்களை சீஷர்கள் துவக்கத்தில் உணர்ந்து கொள்ளவில்லை.

உணர்வுள்ள இருதயம் நமக்கு அவசியம் என்பதை ஆண்டவர் முக்கியப்படுத்திப் பேசியிருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். "பரிசேயரின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"



என்று அவர் சீஷர்களுக்குச் சொன்னபோது, தங்களிடத்தில் அப்பமில்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று நினைத்தார்கள். உடனே ஆண்டவர் அவர்களைப் பார்த்து ஒன்பது கேள்விகளைக் கேட்டார். உணர்வுள்ள இருதயம் எவ்வளவு முக்கியம் என்பதை இதனாலே அறிகிறோம்.

1. "உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாததினாலே யோசனை பண்ணுகிறதென்ன?"
2. "இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா?"
3. "இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?"
4. "உங்களுக்குக் கண்கள் இருந்தும் காணாதிருக்கிறீர்களா?"
5. "காதுகள் இருந்தும் கேளாதிருக்கிறீர்களா?"
6. "நினைவு கூராமலுமிருக்கிறீர்களா?"
7. "நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?" சீஷர்கள் அதிகம் பேசாமல் பன்னிரண்டு என்றார்கள்.
8. "நான் ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பங்கிட்டபோது மீதியான துணிக்கைகளை எத்தனைகூடை நிறைய எடுத்தீர்கள்?" கேள்விமேல் கேள்வி சரமாரியாய் வருகிறதைக் கண்டு இத்தனை கூடைகள் என்று சொல்லாமல் ஏழு என்றுமாத்திரம் மெள்ளச் சொன்னார்கள்.
9. "அப்படியானால் நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?" என்றார்.

இவை யாவற்றையும் நாம் கவனிக்கும்போது உணர்வில்லாத இருதயம் எவ்வளவு மோசமானதென்றும், உணர்வுள்ள இருதயமே நமக்கு ஆசீர்வாதமென்றும் அறிகிறோம். உணர்வற்ற இருதயம் ஜென்ம சுபாவத்துக்குரியது. ஒருவனுக்கு புத்தி சாமர்த்தியமும் உலகஞானமும் இருப்பதால் அவனை உணர்வுள்ளவனென்று சொல்லக்கூடாது. கடவுள் விஷயத்தில் அறிவும் அனுபவமுமில்லாதவர்கள் உணர்வுள்ளவர்கள் அல்ல. காண்கிறவைகளையும் சரீரத்தில் அனுபவிக்கக் கூடியவைகளையுமே நாம் பிரதானமாய்ப் பற்றிக்கொள்ளும்

போது உணர்வற்றுப்போகிறோம். நாம் காண்கிற யாவும் காணப்படாத, மெய்யான, நிலையான காரியங்களுக்கு அடையாளங்களாக மாத்திரம் இருக்கின்றன. மெய்யான நிலையான காரியங்களைக் கவனியாமல் காணப்படுகிறவைகளிலே மாத்திரம் மனதைச் செலுத்துகிறவர்கள் உணர்வுள்ளவர்கள் அல்ல. தோன்றும் காரியங்களைக்கொண்டு மறைந்திருக்கும் நித்தியகாரியங்களை நாம் கண்டடையவேண்டுமென்பது தேவ ஏற்பாடு. ஆவியாயிருக்கிற கடவுள் நாம் காணக்கூடிய சரீரத்தில் வெளிப்பட்ட காரணமும் அதுவே. இராப்போஜனமாத்திரமல்ல, சகலத்தையும் ஆண்டவர் சாக்கிரமெந்துகளாக ஏற்படுத்தியிருக்கிறார். நம்மைச்சூழ்ந்திருக்கும் ஒவ்வொன்றும் ஆவிக்குரிய நித்தியகாரியங்களை நமக்குப் போதிக்கிறது. நாம் சரீரத்தில் பூமியோடும், ஆவியில் கடவுளோடும் சம்பந்தமுள்ளவர்களாயிருக்கிறோம். சரீரமல்ல, ஆவியே நித்திய மனுஷன். நாம் புசிக்கும் ஆகாரம் ஜீவ அப்பத்தையும், தண்ணீர் ஜீவதண்ணீரையும், காற்று பரிசுத்த ஆவியையும், நமது ஜீவன் நித்திய ஜீவனையும், பெற்றோர் பிள்ளைகள் கடவுளுக்கும் நமக்கும் உள்ள நிலையான பிதாபுத்திர சம்பந்தத்தையும் நமது சிநேகம் நிலையான சகோதர அன்பையும், இவ்வாறு ஒவ்வொரு காரியமும் மறுமைக்குரிய காரியங்களை நமக்குப் போதிக்கிறது. நாம் இவைகளைக் கவனிக்கிறதில்லை. காணப்படுகிறவைகளையே முடிவாக நாம் நினைத்து அவைகளை அனுபவிக்க நாடும்போது மறைவான நித்தியகாரியங்களை அறியாமல் போகிறோம். உணர்வற்ற இருதயமே இதற்குக் காரணம். ஆண்டவரைப்போல் உணர்வுள்ள இருதயமுள்ளவர்கள் யார்? அவர் ஒன்றையும் அற்பமாய் நினைக்கவில்லை. சகலத்திலும் தேவஞானத்தைக் கண்டார். ஒவ்வொன்றிலும் மறுமையின் போதனையை எடுத்துக் காண்பித்தார். காட்டுப் புஷ்பத்திலும், காகம் அடைக்கலான் குருவிமுதலான பறவைகளிலும் பிதாவைச் சம்பந்தப்படுத்திப் பேசினார். சிறுபிள்ளைகளில் தேவராஜ்யத்தின் தன்மையைக் கண்டார். ஒன்றையும் இருக்கிறபடி அவர் பார்ப்பவரல்ல. ஒவ்வொன்றிலும் மறுமைக்குரிய போதனையைக் கண்டார். பூமிக்குரிய காரியங்களெல்லாம் அவருக்குப் பரம மகிமையை வெளிப்படுத்



தும் உவமைகளாயிருந்தன. கிறிஸ்துவின் ஆவிபெற்றவர்கள் அவரைப்போல் சகலத்திலும் தேவஞானத்தைக்கண்டு மகிழ்வார்கள். இவர்களே உணர்வுள்ள இருதயத்தார்.

## II. உணர்வுள்ள இருதயத்தின் பாக்கியம்.

1. உணர்வுள்ள இருதயம் தன்னை அறியும். இதைப்போல் பாக்கியமில்லை. உல்லியம் லா என்பவரைப்பற்றி சமீபத்தில் அநேகர் அறிவோம். அவர் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்தவர். அவர் எழுதிய நூல்கள் மகா சிறந்தவை. சில புஸ்தகங்களைப்போல் வாசித்துத் தள்ளத்தக்கவையல்ல. எக்காலத்துக்கும் அருமையானவை. தேவபக்தி வாஞ்சையுள்ளவர்கள் எக்காலத்திலும் அவர் புஸ்தகங்களை மதிக்கவேண்டும். தற்காலத்தில் அவை மதிப்புப் பெறவில்லையென்றால் நமது அவபக்தியும் உலகசிநேகமுமே அதற்குக் காரணம். அவர் மரணப்படுக்கையிலிருந்த சமயத்தில் அவர் சிநேகிதரில் ஒருவர் அவரைப் பார்த்து கடவுளைப்பற்றி இவ்வளவு மேலான அறிவு உங்களுக்கு எப்படிக் கிடைத்ததெனக் கேட்க, அவர்: ஜெர்மனி தேசத்து ஜேக்கப் பீமன் என்னும் ஓர் எளிய மனுஷனால் தனக்குக் கிடைத்ததெனக் கூறினார். ஒருவன் தன்னைத்தான் அறியவேண்டுமென்பதே ஜேக்கப் பீமனுடைய பிரதான போதனை. இந்தப் போதனையை ஆதாரமாக வைத்துக்கொண்டு உல்லியம் லா தேவகாரியங்களைப் புறம்பேயல்ல தனக்குள்ளேயே தேடினார். அதன் வல்லமையைத் தன் அனுபவத்தில் கண்டார். அநேக பிரபந்தங்களை எழுதினார்.

தன்னை அறிவதற்கு உதவிவேண்டும். ஒருவன் தானாக யோசித்துக்கொண்டிருப்பதினால் மாத்திரம் தன்னை அறிகிற அறிவு வராது. நான் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும், இப்போது எப்படிப்பட்டவனாயிருக்கிறேன் என்று அறிவதற்கு மாதிரி வேண்டும். கிறிஸ்துவே அந்த மாதிரி. அவர் நமது உள்ளான சகல கேடுகளையும் பிரத்தியட்சமாய்க் காட்டும் கண்ணாடிபோலிருக்கிறார். அவரோடு நெருங்கிப் பழகப்பழக அவரது பூரணமான மனுஷீகம் நமது குறைவுகளை நமக்கு உணர்த்துகிறதேயல்லாமல் அவருக்கொப்பாய் நாம் பிழைக்கவேண்டு

மென்கிற ஆவலையும் உண்டாக்குகிறது. சகல நற்குணங்களும் தன்னை அறிகிற அறிவால் உண்டாகின்றன. ஆண்டவர் தமது சீஷர்களை மாற்றின விதம் அதுவே. அவர் அவர்களோடிருந்த காலத்தில் தங்கள் குறைவுகளைக் கண்டார்கள். அவரைப்போல் நடக்க முடியவில்லை. அவர்கள் குறையை உணர்த்தின ஆண்டவரே பெந்தெகோஸ்தே நாளில் தமது ஆவியால் அவர்களுக்குள் வந்து குறையைப் போக்கி நிறைவை அளித்தார். தங்கள் ஒன்றுமில்லாமையை அந்நாளில் கண்டார்கள். கிறிஸ்துவை அறிகிற அறிவும், தேவவெளிப்படுத்தலும் அவர்களுக்குள்ளே கிடைத்தன. கிறிஸ்துமார்க்கம் இருதயத்துக்குரியது. புறம்பான ஆராதனைகளையும், புறம்பான போதனைகளையும், புறம்பான ஆசாரங்களையும் நம்பி நாம் மோசம்போகக்கூடாது. கடவுள் சகலத்தையும் நமது இருதயத்தில் நிறைவேற்றுகிறார். கிறிஸ்து மார்க்கம் உற்பத்தியான விதம் அதுவே.

தன்னை அறிந்தவன் பிறர் காரியத்தில் தலையிடான். நம்மில் அநேகர் பிறர்காரியங்களை அறிவதில் வெகு முயற்சியுள்ளவர்கள். அவர்கள் யார்? அவர்கள் சம்பாத்தியமென்ன? அவர்கள் சாப்பிடுவதென்ன? உடுத்துவதென்ன? அவர்கள் எங்கே போகிறார்கள்? எங்கே வருகிறார்கள்? அவர்கள் மக்கள் காரியங்கள் என்ன? அந்தக் கலியாண விஷயம் எப்படியாயிற்று? அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்? தந்தி வந்ததாமே என்ன விசேஷம்? இவ்வாறு பிறருடைய காரியங்களை அறிந்துகொள்வதில் எவ்வளவோ ஆத்திரம்! தன்னை அறிந்தவன் இப்படிச் செய்யமாட்டான். தன்னை அறிந்தவனுக்குப் போதுமான வேலையுண்டு. தன் குறைவுகளை எண்ணித் தன்னை மிகவும் தாழ்த்தி, ஆண்டவர் கிருபையைத் தேடுவதில் அனுதினமும் கருத்தாயிருப்பான். தன்னால் பிறருக்கு நன்மையுண்டாகும் விஷயங்களிலேயன்றி மற்றக்காரியங்களில் அவன் தலையிடமாட்டான். மற்றவர்கள் ஊர்க் காரியங்களை அவன் காதில் போட்டாலும் அவை தன் மனதில் தங்க இடங்கொடுக்க மாட்டான். கொடுத்தால் தன் ஜீவியத்தின் சிறந்த நோக்கத்துக்கு இடையூறாகுமென்று அறிவான். பக்தனான சங்கீதக்காரன் "கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமை யுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும் எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை" என்றார். பேதுரு இன்னொரு அப்போஸ்தலன் காரியத்தில் தலையிட்டு: "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" என்று கேட்க, ஆண்டவர்: "அதைப்பற்றி உனக்கென்ன? நீ என்னைப்பின்பற்றி வா" என்றார். தன்னை அறியாத குறையே பிறர் காரியங்களில் பிரவேசிப்பதற்குக் காரணம். தான் ஆண்டவரை வேலையாட்களுக்கு முன்பு மறுதலித்ததையும், வெட்கத்தோடும் துக்கத்தோடும் மனங்கசந்து தான் அழுததையும் பேதுரு உணர்ந்திருப்பாரானால், அவன் காரியமென்ன? இவன் காரியம் என்னவென்று கேட்டிருக்கமாட்டார். இதை நினைத்துத்தான் தாவீது: "தன் பிழைகளை உணருகிறவன் யார்? என்று கேட்டான்.



உணர்வுள்ள இருதயம் தன் நிலைமையை அறிந்து தன்னைத் தாழ்த்தும். தன்னை அறிந்தவன் தன்னைப் பாவிகளில் பிரதான பாவி என்று சொல்லுவான். அவன் பிரதான பாவம் செய்திருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. அவன் அநேகரைப் பார்க்கிலும் நல்லவனாயிருந்தாலும், கிறிஸ்துவோடு அவன் பிழைப்பதினாலும், அவன் ஜீவிக்கவேண்டிய மாதிரி தன் கண்முன்னிருப்பதாலும், மற்றெல்லாரைப் பார்க்கிலும் தான் பெரும்பாவி என்றுணர்ந்து நடக்கும் சிந்தை யுண்டாகிறது. இந்த உணர்வு அவனில் தாழ்மையையும் பொறுமையையும் உண்டாக்குகிறது. வீண்பெருமைக்கும், கோபத்துக்கும், மூர்க்கத்துக்கும், பிடிவாதத்துக்கும் அவனில் இடமிராது. தன்னை அறியாததே சகல பாவங்களுக்கும் காரணம். இஸ்ரவேலிடம் காணப்பட்ட பாவங்களைப்பற்றி சற்றுமுன் கவனித்தோமே. தீர்க்கதரிசி அவர்களைக்குறித்து: "நீ வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும் தோண்டியெடுக்கப்பட்ட துரவின் குழியையும் நினைத்துப்பார்" என்று எச்சரித்தார். அவர்களுடைய உணர்வற்ற இருதயமே அவர்கள் அக்கிரமங்களுக்குக் காரணம். கடவுள் உனக்குச்செய்து வந்திருக்கிற அவருடைய அதிசயமான கிரியைகளை மறவாமல் எப்பொழுதும் நினைத்துக்கொள் என்று மோசே அவர்களுக்கு அடிக்கடி போதித்தார்; மறந்தார்கள்; தொலைந்தார்கள். நமது பாவங்களையும் ஆண்டவர் [illegible]

பாராட்டிவருகிற கிருபைகளையும் நாம் சரியானபடி உணர்ந்து கொள்ளும்போது கடவுளுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் பணிந்த சிந்தையுடன் நடந்துகொள்வோம். நம்மை நாமிருக்கிறபடி அறியும்போது நான் பூரணன், நான் சீமான், என்னில் குறை ஒன்றுமில்லை என்று நினைக்கிற அறிவீனம் நீங்கி, சாந்தமும் மனத்தாழ்மையும் உண்டாகும். தாழ்மையுள்ளவர்களுக்கு பரமபிதா கிருபை அருளுகிறார். பெருமை அவருக்கு வெறுப்பு.

தன்னை அறியும் அறிவில் உத்தரவாதம் ஏற்படுகிறது. நான் யார்? நான் எப்படி உருவானேன்? நான் ஏன் உலகில் இருக்கிறேன் என்னும் கேள்விகள் முக்கியம். ஆடுமாடுகள் அங்கங்கே கண்ணுக்குத் தோன்றும் புல்லுகளை மேய்ந்துகொண்டு போவதுபோல அநேகர் கைக்கெட்டினது எதுவோ, வாய்க்கெட்டினது எதுவோ அதைச் சாப்பிட்டுக் காலங்கழிப்பதே தாங்கள் உலகத்தில் வந்த நோக்கம் போல் நடக்கிறார்கள். அதற்குமேல் விசாரணை என்னத்துக்கு? உணர்வுள்ளவர்களோ கடவுள் தங்களை ஒரு விசேஷித்த நோக்கத்துடன் உலகத்தில் அனுப்பியிருக்கிறதாக அறிவார்கள். "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், நான் ஒளிப்பிடத்தில் உண்டாக்கப்பட்டு, விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டன. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவை உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள், அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்!" என்று உணர்வுள்ள சங்கீதக்காரன் சொன்னார். "நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்துத் தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்" என்று உணர்வுள்ள பவுல் சொன்னார். கடவுள் தமது ஆலோசனைப்படி ஒரு விசேஷித்த நோக்கத்துடன் நம்மை உலகத்தில் அனுப்பியிருக்கிறார் என்று உணரும்போது நமது ஜீவியத்தின் உத்தரவாதம் தானே ஏற்படும். ஆண்டவர் அப்போஸ்தலரை-



யும் தமது அடியார் யாவரையும் தமது சித்தத்தை நிறைவேற்றும் நோக்கமாய் உலகத்தில் அனுப்பினதுபோல, நாம் மனுஷர் பார்வையில் அற்பராயிருந்தாலும் தமது ராஜ்யத்துக்காக உழைக்கும்படி நம்மையும் அவரே அனுப்பியிருக்கிறார் என்பது நிச்சயம். அதற்கு வேண்டிய கிருபையையும் வரங்களையும் அவர் நமக்குத் தந்திருக்கிறார். பிதா தம்மை அனுப்பினதை ஒரு நிமிஷமும் மறவாமல் பிழைத்த நமது ஆண்டவரைப்போல் நாமும் அவரால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து ஜீவிப்போமானால் நமது உத்தரவாதத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். யோ. 20 : 21.

2. உணர்வுள்ள இருதயம் கடவுளை அறியும். மனுஷன் பாவத்தால் தேவசாயலை இழந்தபோதிலும் தன்னைப் படைத்தவரை முற்றிலும் மறந்துவிட முடியாது. தன்னைச் சூழ்ந்துள்ள சிருஷ்டிப்பும் உள்ளான ஆவியும் கடவுளை அவனுக்கு ஞாபகப்படுத்துகின்றன. ஆனால் அவன் பூமிக்குரியவைகளிலே மனதைச் செலுத்திப் பாவத்துக்கு அடிமைப்பட்டுப் போகும்போது அவன் புத்தி அந்தகாரமடைந்து, அவன் சித்தம் பலவீனப்பட்டு, இருதயம் கடினமாகிறது. இந்நிலையில் அவன் கடவுளற்றவனாகிறான். பரம பிதாவை அறியவும் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவும் நமக்கு உணர்வுள்ள இருதயம் வேண்டும். "தேவனைத் தேடுகிறவன் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை" என்று சங்கீதக்காரன் சொன்னார். உணர்வில்லாத இருதயத்தார் கடவுளைத் தேடமாட்டார்கள். "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுப்புத்திரரைக் கண்ணோக்கினார்... தேவனைத் தேடுகிறவன் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை" என்று கண்டார். உணர்வில்லாதவர்கள் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போகிறார்கள். உணர்வில்லாத இருதயமுள்ள இஸ்ரவேலர் ஏகமாய் அழிந்துபோக, உணர்வுள்ள இருதயமுடைய காலேப் கடவுளால் விசேஷித்த தயவையும் சிறப்பான சுதந்தரத்தையும் பெற்றார். கடவுள் தங்களுக்குச் செய்த அதிசயங்களையும் அவரது கிருபைகளின் திரட்சியையும் காலேப் மறந்துபோகவில்லை. "என்னை உத்தமமாகப் பின்பற்றின என் தாசனாகிய

காலேப்" என்று கடவுளும் அவனைப் புகழ்ந்துபேசினார். கடவுளைப் பற்றிய பொதுவான அறிவு ஒருவனுக்கு இருக்கலாம். வேதசாஸ்திர விசாரங்களை எடுத்துக் கூறும் திறமையும் அவனுக்கிருக்கலாம். உணர்வுள்ள இருதயம் அவனுக்கில்லையென்றால் அவன் தேவபக்தனாகமாட்டான். கடவுள் யாரென்றும், அவருக்கும் தனக்குமுள்ள சம்பந்தமின்னதென்றும், அவர் இயேசுவின் மூலமாய்த் தனக்குப் பாராட்டின அளவில்லாத தயவும் கிருபையும் எவ்வளவு பெரிதென்றும் உணர்ந்துகொள்ளுகிறவன் அவரை இடைவிடாமல் தேடி, முழு இருதயத்தோடு அவரை நம்பி, அவருடைய கட்டளைகளுக்குத் தன்னை ஒப்புவித்து விடுவான். அவர் தன்னை நடத்தும் அனுபவத்தால் அவரை அறிகிற அறிவிலே வளருவான்.

3. உணர்வுள்ள இருதயம் நன்றியுள்ளதாயிருக்கும். கடவுள் தங்களுக்குச்செய்த அதிசயமான செயல்களை மறந்த இஸ்ரவேலர் நன்றிகெட்டவர்களும் துரோகிகளுமானார்கள். கடவுளிடத்திலும் மனுஷரிடத்திலும் நன்றியாயிருப்பதற்கு நமக்கு உணர்வுள்ள இருதயம் அவசியம். நமது குழந்தைப் பருவமுதல் இதுவரை ஆண்டவர் நமக்குச் செய்துவந்திருக்கிற சகல உபகாரங்களையும் நன்மைகளையும் நாம் யோசிப்போமானால் நன்றியற்றவர்களாயிருக்கமாட்டோம். உணர்வுள்ள இருதயமுள்ளவர்கள் தாவீதோடு சேர்ந்து "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி; அவர்செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று சொல்லுவார்கள். கடவுள் தனக்குச் செய்த சகல கிருபைகளையும் ஆழமாய் உணர்ந்துகொண்ட சங்கீதக்காரன்: "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கின்றன; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானாலும் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்" என்று பாடினார். அவர் கடவுளுக்கு நன்றி பாராட்டி இடைவிடாமல் அவரை ஸ்தோத்திரித்துப் பாடினதற்குக் காரணம் அவருடைய

உணர்வற்ற இருதயமே. நமது காரியம் என்ன? தாவீது இடைவிடாமல் ஸ்தோத்திரித்தாரென்றால் நாம் இடைவிடாமல் முறுமுறுக்கிறோம். ஆண்டவர் நமக்கு எவ்வளவு நன்மைகள் செய்திருந்தாலும் அவைகளை நாம் சீக்கிரம் மறந்து, நமக்கு நேரிடும் அற்ப சொற்பக் கஷ்டங்களைப் பிரதானமாக நினைக்கிறோம். தாவீதைப் போல் உபத்திரவப் பட்டவர்கள் யார்? அவைகளைப்பற்றி அவர் ஆண்டவரிடத்தில் மன்றாடியிருக்கிறார். அப்படியிருந்தும் கடவுள் தமக்குச் செய்த நன்மைகள் எண்ணிக்கைக்கு மேலானவையென்று சொல்லுகிறார். நமக்கோ ஆண்டவர் எண்ணிக்கைக்கு மேலான தீமைகளைச் செய்ததுபோல் தோன்றும். நமது தன்னயமான ஜீவியமே அதற்குக் காரணம். சங்கீதக்காரன் தமக்கு நேரிட்ட உபத்திரவங்களுங்கூட தமக்கு ஆசீர்வாதமாயிருந்ததென்று கண்டு அதற்காகவும் ஆண்டவரை ஸ்தோத்திரித்தார். நன்மையோ தீமையோ எல்லாமும் தமக்கு ஆசீர்வாதமாயிருந்ததென்று அறிந்து கடவுளுக்கு நன்றி பாராட்டினார். கடவுள் நடத்துதலை நுட்பமாய்க் கவனித்து நடக்கும் தேவமக்கள் அவருடைய தயவுள்ள ஆலோசனையையும் கிருபைகளையும் உணர்ந்து என்றும் நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள்.

மனுஷரிடத்திலும் நாம் நன்றியாயிருப்போம். இது நன்றி கெட்டகாலம். ஒருவர் மற்றொருவருக்குக் காலமெல்லாம் நன்மை செய்தும், நன்மை பெற்றவர் எப்போதோ ஒரு அற்பவிஷயத்தைத் தப்பிதமாக நினைத்துக்கொண்டு, தாம் பெற்றுக்கொண்ட சகல உபகாரங்களையும் நிமிஷத்தில் மறந்து, தன் உபகாரியைத் தனக்குப் பெரிய சத்துருவாக நினைத்து, அவருக்கு விரோதமாகப் பேசவும் தீமைசெய்யவும் துணிந்தால் அதைப்போல் துரோகம் வேறில்லை. பூமியின் ஆண் கட்டத்தார் இரணமிருக்கிறார்கள். கடைசிவரைக்கும் ஆண்டவர் அவனுக்கு நன்மை செய்தார். அவன் துரோகமோ அவர் இருதயத்தைக் கலங்கச் செய்தது. நன்றிகெட்டதைப்போல் அசுசியான காரியம் வேறில்லை. உணர்வில்லாத இருதயமே நன்றி கெட்ட[illegible]லாம். மற்றவர்கள் நமக்குச்செய்யும் நன்மைகளை மற[illegible] நன்றியற்றுப் போவோம். அவைகளை எப்பொழுதும் [illegible]

கொள்ளுவோமானால் நன்றியற்றிருக்கமுடியாது. குஷ்டரோகம் மகா கொடிய வியாதி. ஆண்டவர் பத்துக்குஷ்டரோகிகளைக் குணமாக்கினார். ஆ, எவ்வளவு பெரியதயவு. அவர்களில் ஒருவன் மாத்திரம் திரும்பிவந்து ஆண்டவரை ஸ்தோத்திரித்து நன்றிசெலுத்தினான். மற்றவர்களைக் குறித்து: அந்த ஒன்பது பேர் எங்கே என்று ஆண்டவர் கேட்டார். தங்களுக்கு இவ்வளவு பெரியகாரியத்தைச் செய்தாரே என்கிற உணர்வு அவர்களுக்கில்லை. உணர்வில்லாத மனுஷருக்கு நன்றி கிடையாது. "நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ. 3. 15).

4. உணர்வுள்ள இருதயம் உலகத்துக்கு ஆசீர்வாதம். உணர்வுள்ள இருதயத்தில் தேவவசனம் நிறைவான பலனைக்கொடுக்கும். நல்ல நிலத்தைப்பற்றி ஆண்டவர் விஸ்தரித்துப் பேசினபோது ஐந்து முக்கியமான காரியங்களைச் சொன்னார். அதாவது, அவர்கள் வசனத்தைக் "கேட்டு" "ஏற்றுக்கொண்டு" "உணர்ந்து" "காத்து" "பொறுமையுடன்" பலன் கொடுக்கிறார்கள் என்றார். ஆண்டவர் வசனம் தந்தார். அவ்வசனம் ஆலயங்கள்தோறும் பிரசங்கிக்கப்படுகிறது. விதைப்போடு பலனை ஒப்பிட்டுப்பார்த்தால் எவ்வளவோ துயரம்! நிலத்தில் விதை விதைக்கும் சமுசாரி பலனற்றுப் போவானானால் எவ்வளவோ சஞ்சலப்படுவான். தேவவசனத்தை விதைக்கும் ஊழியராகிய நமக்கு அவ்வளவு சஞ்சலமில்லை. ஏனென்றால் நாம் பலனை எதிர்பார்க்கிறதில்லை. விதைத்ததே போதும் என்றிருக்கிற சமுசாரியை நாம் இதுவரை கண்டதில்லை. பிரசங்கித்ததே போதும் என்றிருக்கிற சமுசாரிகளோ அனந்தம்! விதைப்பது எதற்காக? பலனை அறுப்பதற்காக. பிரசங்கிப்பது எதற்காக? மனுஷர் ஆசீர்வதிக்கப் பெற்று நற்பலனைக் கொடுப்பதற்காக. நாம் பலனை எதிர்பார்க்கிறோமா? நோக்கமில்லாத ஆராதனைகளாலும் பிரசங்கங்களாலும் சபைகள் பாழாய்ப் போகும். பலனை எதிர்பாராத கடமை ஊழியம் இருதயத்தைக் கடினப்படுத்தி, ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரத்தை உண்டாக்கும்.



பலன் கொடுப்பதைப்பற்றி ஆண்டவர் சொன்ன ஐந்து காரியங்களைக் கவனிப்போம். கேட்டு, ஏற்றுக்கொண்டு, உணர்ந்து, காத்து, பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள். பலன் கிடைப்பது லேசான காரியமல்ல. அது லேசாயிருக்குமானால் சபைகள் தோறும் நடக்கிற ஆயிரக்கணக்கான பிரசங்கங்களுக்கு ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்களையும் பரிசுத்தவாட்டிகளையும் இன்று நாம் காணலாம். பலனே இல்லை என்று நாம் சொல்லுகிறதில்லை; கடவுளுக்குத் தங்களை ஒப்புவித்து, அவர் சித்தப்படி பிழைத்து, தங்கள் ஜீவியத்தில் நற்கனிகள் நிறைந்து விளங்குகிற தேவமக்கள் அங்கங்கே யிருக்கிறார்கள். ஆகிலும் விதைப்பின் அளவுக்குத் தக்க பயன் இல்லை என்பதும் உண்மையே. வசனத்தைக் கேட்போரிடம் ஆண்டவர் சொன்ன ஐந்து குறிப்புகளும் பலிக்குமானால், கட்டாயம் அவர்கள் ஜீவியத்தில் மிகுதியான பலனைக் காணலாம். முதலாவது, முழுக்கவனத்தோடும் வாஞ்சையோடும் தேவ வசனத்துக்குச் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். இந்தக் கவனமும் கூர்மையுமான கேள்வியினால் சத்தியத்தை அறியும் அறிவு கிடைக்கும். கேட்ட சத்தியத்தை இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அநேகர் வசனத்தை ஆவலோடு கேட்கிறார்கள், ஆனால் அதை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர்கள் காலமெல்லாம் கேட்கிறவர்களேயன்றி பலன் கொடுக்கிறவர்கள் அல்ல. அவர்கள் ஜீவியம் மாறுவதில்லை. இப்படிப்பட்ட கேள்விக்காரரை சபைகளெங்கும் காணலாம். மூன்றாவது உணர்வு. கேட்ட சத்தியத்தை இருதயத்தில் ஏற்றுக்கொண்டபின் அதைப்பற்றி ஆழமாய் யோசிக்கவேண்டும். சத்தியம் நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளத்தக்கதாக உணர்ந்து தியானிக்கவேண்டும். இந்த உணர்வு விதை மண்ணோடு சேர்ந்து, ஈரத்தால் ஊறி, முளை கிளம்பக்கூடிய பக்குவமடைவது போலிருக்கிறது. நாம் ஒரு சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆழமாய் ஆராய்ச்சிசெய்து, அமர்ந்த மனதுடன் உணரும்போது, ஆவியானவரின் உதவியால் தேவவசனமாகிய விதை நமக்குள் முளைக்க ஆரம்பிக்கிறது. நாலாவது காத்துக்கொள்ளவேண்டும். இச்சமயத்

தில் பாதுகாப்பு மிகவும் அவசியம். நாம் பலன் கொடுப்பது சாத்தானுக்குப் பிரியமில்லை. ஆகையால் நாம் கேட்டு, ஏற்றுக்கொண்டு உணரும் சமயத்தில், அது முளைக்கும் சமயமானதால் பலவித இடையூறுகளை அனுப்பி நமது தியானத்தைத் கெடுப்பான். ஆயிரம் வருஷம் நாம் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. அநேகரை இந்த வஞ்சகமான நிலைமையில்தானே அவன் இன்னும் வைத்திருக்கிறான். ஆனால் சத்தியத்தை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அதைப் பற்றித் தியானித்து உணருவதை அவன் சகிக்கமாட்டான். எப்படியாவது இடையூறுசெய்து கெடுக்கப் பார்ப்பான். உணர்வுள்ள சிந்தையை அவன் வெறுக்கிறான். இதை அறிந்த ஆண்டவர் வசனத்தைக் காத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றிப் போதிக்கிறார். முடிவாக பொறுமைவேண்டும் என்கிறார். "பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள்." பல இடையூறுகள் நேரிட்டாலும் பாடுகள் உண்டானாலும் மனஞ்சோர்ந்து போகாமல் பொறுமையுடன் சத்தியத்தில் நிலைத்திருக்கவேண்டும். "முன்மாரி பின்மாரி வருமளவும் சமுசாரி பொறுமையுடன் காத்திருக்கிறான்." நாம் நல்லவர்களாவதும், கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாவதும், நாம் கனிநிறைந்து உலகத்துக்கு ஆசீர்வாதமாயிருப்பதும் சாத்தானுக்குப் பிரியமில்லை. நம்மைப் பலவிதத்திலும் உபத்திரவப்படுத்த ஆரம்பிப்பான். பாடுகள் அனுபவித்த ஆண்டவர் பொறுமையை இழந்திருப்பாரானால் உலகத்தை ரட்சித்திருக்கமாட்டார். நமது ஜீவியத்தைக் கசப்பாக்கி, ஊழியத்தில் சோர்வை உண்டாக்கி, நம்மைப் பிரயோஜனமற்றவர்களாக்க வேண்டுமென்பது சாத்தானுடைய தீர்மானம். இச்சமயத்தில் தான் நமக்குப் பொறுமை மிகவும் அவசியம். "பொறுமையுடன் பலன்" என்னும் வார்த்தைகளை மறக்கவேகூடாது. தேவவசனத்தில் உறுதியான நம்பிக்கைகொண்ட பரிசுத்தவான்களுக்கு நேரிட்ட துன்பங்கள் அநேகம். என்றாலும் அவர்கள் சோர்ந்துபோகாமல் பொறுமையாய்ச் சகலத்தையும் சகித்துக் கொண்டதினாலேயே உலகத்துக்கு மிகுந்த ஆசீர்வாதமானார்கள். உணர்வற்ற இருதயத்தின் கேடுகளைக் கவனித்



தோம். உணர்வுள்ள இருதயத்தின் பாக்கியத்தையும் பார்த்தோம். உணர்வுள்ள இருதயம் ஆண்டவர் அருளும் ஈவு. அதற்காக நாம் ஜெபிக்கவேண்டும்.

"உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"உமது சாட்சிகளை அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"உமது வசனத்தின்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்."

"என்னை உணர்வுள்ளவனாக்கும்; அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்" சங். 119.

---

# III

# God is Love

## கடவுள் அன்பே

"தேவன் அன்பாகவேயிருக்கிறார்" 1. யோ. 4: 8.

அன்பென்னும் வார்த்தையை அறியாதாரில்லை. கிறிஸ்தவர்களாகிய நமக்கோ அது வெகு சாதாரணம். ஏனென்றால் நமது மார்க்கம் அன்பின் மார்க்கம். அன்பென்னும் வார்த்தையை நமது வாசிப்பில், ஜெபத்தில், பாட்டில், பிரசங்கத்தில், சம்பாஷணையில் இடைவிடாது உபயோகிக்கிறோம். இந்த இடைவிடாத பழக்கத்தால் அன்பை நாம் அறிந்துகொண்டதாகவும், அனுபவிக்கிறதாகவும் எண்ணிக்கொள்ளுகிறோம். அன்பாவது என்னவென்று நாம் விசாரித்ததில்லை. அதை விசாரிக்க ஆரம்பித்த நிமிஷத்தில் அன்பென்பது நமக்கு விளங்காத ரகசியமாகும். எந்த விஷயத்தையும் நாம் விசாரிக்காத வரையில் நாம் அதை அறிந்தவர்களே. அது என்னவென்று ஆராயத் தொடங்கினவுடனே நமது அறிவீனம் வெளியாகும். அன்பு அறிவல்ல, எழுப்புதல் அல்ல, பரவசமல்ல, கண்ணீரல்ல, ஈகையல்ல, பாடுபடுதல் அல்ல. இவையாவும் அன்பின் அறிகுறிகளாகும். அன்பென்பது இன்னும் எட்டாமலேயிருக்கிறது. அது அறிவுக்கெட்டாத அன்பு. மருந்தின் சேர்க்கையை நாம் அறியாவிட்டாலும் அதை உட்கொண்டு சுகமடைவதுபோல அன்பை விஸ்தரிக்க முடியாவிட்டாலும் அதை நாம் அனுபவிக்கக் கூடும்.

யோவான் அன்பாவது என்னவென்று விஸ்தரிக்கவில்லை. அவர் அன்பினால் நிறைந்திருந்தார். அவருக்கு அன்பே கடவுள்; கடவுளோ அன்பு. கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்ட பரமபிதாவின் அன்பை ஆழமாய்த் தியானித்து, பரவசமடைந்து, ஆச்சரியத்துடன் "தேவன் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரி



தென்று பாருங்கள்" என்கிறார். அவருள்ளத்தில் பிரவாகித்த அன்பின் அனுபவத்தால் அன்பின் நிருபங்களை எழுதினார். அன்பைக் குறித்து அவர் எழுதின மாட்சிமையான வசனங்களை நாம் அடிக்கடி வாசித்து வருவதால், அவைகளை எடுத்துப் போதிப்பதால், அவைகள் நமக்கு மனப்பாடமானதால் நாமும் அன்பைப் பெற்றவர்கள்போல் எண்ணிக்கொள்ளலாம். மதுரமான ஒரு கனியை ருசித்தவன் அதைப்பற்றிப் புகழ்ச்சியாக எழுதியிருப்பதை நாம் வாசிப்பதால் அல்லது மனப்பாடம் பண்ணுவதால் நாமும் அந்தக் கனியை ருசித்தவர்களாகுமா? அறிவு வேறே, அனுபவம் வேறே என்பதை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது. தேவகாரியங்களில் நமக்கு அனுபவமில்லாததே சபைகளின் பலவீனமான நிலைமைக்குக் காரணம்.

### கடவுள் அன்பைப்பற்றிச்சில குறிப்புகளைச் சிந்திப்போம்.

1. கடவுளே அன்பு. அன்பு கடவுள் லட்சணங்களில் ஒன்றல்ல. அவர் நித்திய தன்மையே அன்பு. கடவுளை நீதியுள்ளவர் என்கிறோம். ஆனால் நீதியற்ற அன்பு இளக்காரமாகும். கடவுள் பரிசுத்தர் என்கிறோம்; ஆனால் பரிசுத்தமில்லாத அன்பு இச்சையாகும். கடவுளை ஞானம் என்கிறோம்; ஆனால் ஞானமற்ற அன்பு சங்கடமாகும். கடவுளுடைய சகல லட்சணங்களும் சேர்ந்ததே அன்பு. சூரியனுக்கு ஏழு நிறங்கள் உண்டு. எல்லாம் சேர்ந்து வெண்ணொளியாய்ப் பிரகாசிக்கிறது. பிரகாசிப்பதே சூரியனுடைய தன்மை. அது வேறுவிதமாக இருக்கமுடியாது. அன்பே கடவுள் தன்மை. உலகத்தில் கோடிக்கணக்கான அக்கிரமங்களும் பாவங்களும் பெருகியிருந்தும் கடவுள் உலகத்தில் அன்பாகவேயிருக்கிறார். நாம் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும், அதை மதித்தாலும் மதிக்காமற் போனாலும், அதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், கடவுள் அன்பு உலகத்தில் பிரவாகித்துக் கொண்டேயிருக்கிறது. "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை." கடவுளின் அன்பு கூடுவதுமில்லை குறைவதுமில்லை; மாறுவதுமில்லை மறைவதுமில்லை. அன்பு மாறி மறைந்துபோனால் கடவுளே மாறி மறைந்து

போவதாகும். ஏனென்றால் அன்பே கடவுள். அறிவோ, தீர்க்கதரிசனமோ, பாஷைகளோ ஒழிந்துபோகலாம். நிறைவானது வரும்போது குறைவானவைகள் ஒழிந்தேபோகும். "அன்பு ஒருக்காலும் ஒழியாது." கடவுளே அன்பு.

உலகத்தில் என்னென்ன சம்பவித்தாலும் சூரியன் பிரகாசித்த வண்ணமாயிருக்கிறது. மனுமக்கள் சிரித்தாலும் சரி அழுதாலும் சரி; சாப்பிட்டாலும் சரி பசியால் வருந்தினாலும் சரி; சுகமாயிருந்தாலும் சரி நோயாயிருந்தாலும் சரி; பிழைத்தாலும் சரி ஏகமாய்ச் செத்தாலும் சரி சூரியன் பிரகாசித்தவண்ணமாயிருக்கும். உலகத்தில் எல்லாரும் சேர்ந்து சூரியனைத் திட்டினாலும் சூரியன் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். பிரகாசிப்பதே சூரியனுடைய தன்மை. அன்பே கடவுளுடைய தன்மை. உலகத்தின் பாவங்களெல்லாம் சேர்ந்து அவரன்பை அழிக்க முடியாது. தன் வீட்டு ஜன்னல்களையும் கதவுகளையும் இறுக்கமாய் அடைத்துக் கொள்ளுகிறவன் இருளிலிருப்பான். சூரியனோ பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். சூரிய ஒளி அவன் வீட்டைச் சூழ்ந்துகொண்டு உட்பிரவேசிக்க இடமுண்டோ என்று மோதிக்கொண்டிருக்கும். திறந்த நிமிஷத்தில் உள்ளே வெளிச்சம். வெளிச்சம் உள்ளே எப்போ வந்தது, எப்படி நுழைந்ததென்று சொல்லமுடியாது. வெளிச்சம் உள்ளே வந்ததுபோலிராமல் உள்ளேயே இருந்ததுபோல் தோன்றும். அதன் உட்பிரவேசம் அவ்வளவு தீவிரமானது. கடவுள் அன்பு மனுஷனைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அவரன்புக்கு மறைந்துபோக நம்மால் முடியாது. அவரன்புக்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். என்றாலும் அந்த அன்பு நமக்குள் பிரவேசிக்கும்வரை நாம் அதை அறிகிறதில்லை, அனுபவிக்கிறதுமில்லை. மல்லிகைப் புஷ்பம் எங்கும் பரிமளித்தாலும் மூக்கடைத்தவன் வாசனை அறியாததுபோல, பாவத்தால் நமதிருதயம் அடைபட அன்பு உட்பிரவேசிக்க இடமில்லை. கடவுள் அன்பாயிருப்பாரோவென்று சந்தேகிக்கச் செய்வது நமது பாவமே. நல்லவர்களுக்கு அவர் அன்புள்ளவரென்றும், கெட்டவர்களுக்கு அவர் பொல்லாதவரென்றும் நாமே நினைத்துக் கொள்ளுகிறோம். ஓய்வு



நாள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் ஒருவன் உபாத்தியாரைப் பார்த்து: ஐயா, கடவுள் கெட்ட பையன்களை நேசிப்பாராவென்று கேட்டான். அதற்கு உபாத்தியார்: கெட்டபையன்களை கடவுள் ஒருக்காலும் நேசிக்கமாட்டார் என்று சொன்னார். இதுபோலவே மக்களுக்குப் போதிக்கிற பெற்றோரும் உண்டு. இப்படிப் போதிப்பது பொய்யல்லவா? நாம் நல்லவர்களாயிருந்தாலும் பொல்லாதவர்களாயிருந்தாலும் கடவுள் எல்லார் பேரிலும் அன்பாயிருக்கிறார். நல்லவர்கள் அன்பை அனுபவிக்கிறார்கள்; பொல்லாதவர்கள் அன்பை அனுபவிக்கிறதில்லை. இதுதான் வித்தியாசம். மேலும் நாம் நல்லவர்களாயிருந்ததினிமித்தம் அன்பு வெளிப்படாமல், நாம் பாவிகளாயிருக்கும்போதே அவர் அன்பு வெளிப்பட்டது. எல்லார்மீதும் அவர் அன்பாயிருந்தும் சிலரே அவரன்பை ருசிக்கிறார்கள். அவரன்பு மாறுவதில்லை. பூரணசந்திரன் பிரகாசித்த ஓர் இரவில் இரண்டு சிறுவர் கிணற்றண்டை நின்று தண்ணீரில் தோன்றின சந்திரனைப்பார்த்தார்கள். அவர்களிலொருவன் மறைவாய் ஒரு கல்லை எடுத்துத் தண்ணீரில் போட்டான். பக்கத்தில் நின்றவன் ஐயோ, சந்திரன் உடைந்துபோய்விட்டதே என்று கூவினான். அடுத்தவன் அவன் தலையைப் பிடித்து நிமிர்த்தி ஆகாயத்திலிருந்த சந்திரனைக் காட்டி, சந்திரன் உடையவில்லை, தண்ணீரில் தோன்றின அதன் சாயலே கலைந்தது என்றான். இதற்குள் கலங்கின தண்ணீர் அமைதிபெறவே சந்திரனுடைய சாயல் மறுபடியும் அங்கே அழகாய்த் தோன்றினது. பரமபிதாவின் அன்பு ஒருக்காலும் உடைபடுவதில்லை. பாவத்தால் உள்ளங் குழம்பினவர்கள் அவரது அன்பை அனுபவிக்கக் கூடாதிருக்கிறார்கள். தகப்பனுடைய அன்பு மாறாதிருந்தும் கெட்டகுமாரன் தன் சொந்த பாவத்தால் தகப்பனுடைய அன்பைச் சந்தேகித்தான். வீட்டுக்குத் திரும்பி வந்தபோதோ தகப்பன் அன்பு கொஞ்சமும் மாறவில்லை என்று கண்டு உணர்ந்தான். கடவுள் அன்பாகவேயிருக்கிறார்.

2. கடவுள் அன்பு வலிய வந்தது. நாம் கடவுளுக்குப் பிரியமாய் நடந்தால் அவர் நம்மை நேசிப்பார் என்பது நமது பொதுவான

ஸன்னம். தேவ அன்பைச் சம்பாதிக்கும் தகுதி நம்மில் இல்லை. நமது நற்குணத்தினிமித்தமோ அல்லது நாம் செய்த எந்த நற்கிரியையினிமித்தமோ கடவுள் அன்பு வெளிப்பட்டதில்லை. நாம் அதைத் தேடாமலும் அறியாமலுமிருக்க அன்பு வெளிப்பட்டது. சொல்லவேண்டுமானல் அந்த அன்பிற்கு நாம் முற்றிலும் அபாத்திரரே. இனம் இனத்தை விரும்புவது உலக இயற்கை. கல்விமான் கல்விமானையும், சங்கீத வித்வான் சங்கீத வித்வானையும், சாஸ்திரி சாஸ்திரியையும், தனவான் தனவானையும், பராக்கிரமன் பராக்கிரமனையும் விரும்புவது இயல்பு. அவரவருக்குள்ள பொதுவான லட்சணங்களே அவர்கள் பிரியத்துக்குக் காரணம். கடவுள் நம்மில் அன்புகூருவதற்கு நம்மில் என்ன உண்டு? அவர் யார்? நாம் யார்? நமது நடபடிக்கைகள் யாவும் கடவுளுக்கு நேர் எதிரிடை. அவர் பரிசுத்தர் நாம் அசுத்தர். அவர் நீதியுள்ளவர் நாம் அநீதியுள்ளவர்கள். அவர் ஞானமுள்ளவர் நாம் அறிவீனர். அவர் வல்லவர் நாம் பலவீனர். அவர் சம்பூரணர் நாம் தரித்திரர். அவர் நம்மை விரும்புவதற்கு நம்மில் என்னவுண்டு? அவர் முழுப்பகையாய்ப் பகைக்கும் பாவம் நமக்கு முழு இன்பமாகயிருக்கிறது. இவ்வாறு சகல விதத்திலும் நாம் அபாத்திரராயிருந்தும் அவர் நம்மீது அன்பாயிருக்கிறார், உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால் அதனால் உங்களுக்குப் பலன் என்ன? அதிலே விசேஷம் என்னவென்று கேட்ட பகவான் தாமே அன்பாவது என்னவென்று காண்பிக்கிறார். எவ்வித தகுதியும் எவ்வித காரணமுமின்றித் தமது அன்பை நமக்கு அவர் வெளிப்படுத்தினபடியால் அது வலியவந்த அன்பாகும்.

இது வலியவந்த அன்பென்பதை பவுல் தெளிவாய் எடுத்துக் காண்பிக்கிறார். நாம் “பலமற்றவர்களாயிருக்கையில்,” “அக்கிரமக்காரராயிருக்கையில்,” “பாவிகளாயிருக்கையில்,” “அவருக்குச் சத்துருக்களாயிருக்கையில்” பரம பிதாவின் அன்பு திருக்குமாரன் மூலமாய் வெளிப்பட்டது (ரோ. 5.6-10). நாம் பிதாவாகிய கடவுளை மறந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, பற்பல பாவங்களால் நமது புத்தி, சித்தம், ஆத்துமாவை



நாசம்பண்ணிக் கொண்டிருந்தபோது கடவுள் நம்மீது வைத்த தமது அன்பைப் பிரவாகிக்கச் செய்தார். இது வலிய வந்த அன்பென்பதை யோவானும் எடுத்துக் காண்பிக்கிறார். “நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து...... தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்ததினாலே நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்” என்கிறார். இவ்வாறு தமது ஜனங்களல்லாதவர்களைத் தமது ஜனங்களும் தமது பிள்ளைகளுமாக்கி, சிநேகிக்கப்படாதிருந்தவர்களைத் தமது சிநேகத்துக்குரியவராக்கிக்கொள்வது அவர் திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. (ரோ. 9: 25, 26).

இவையாவும் உண்மையாயினும் கடவுள் தமது அன்பை நமக்கு வெளிப்படுத்துவதற்கு முக்கியமான காரணமுமுண்டு. அது அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமே. தங்கம் அழுக்கடைந்து போனாலும் தங்கம் தங்கமே. மகன் எவ்வளவு கெட்டுப்போனாலும் மகன் மகனே. ஆண்டவர் சொன்ன கெட்டகுமாரன் உவமையே இதற்கு ஆதாரம். நாம் எவ்வளவாகக் கெட்டுப்போனாலும் நம்மைப் பிறப்பித்தவரும் நம்மைப் பிழைக்கவைத்தவரும் பரமபிதாவல்லவா? நாம் அவர் [illegible] ளாகும் சந்ததியுமாயிருக்கிறோம். இந்த நெருங்கிய பிராண சம்பந்தத்தால் அவர் நம்மைக் கைவிட்டுவிடமுடியவில்லை. “எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது” என்று புலம்பினாரே. பாவஞ்செய்த மனுஷரைச் சமூலமாய் அழித்துவிட்டாலும் அது கடவுளுக்கு நீதியாகவே யிருக்கும், அப்படியிருந்தும் அவர் நம்மை ரட்சித்தது பெரியகிருபை என்பதுபோல் போகவுகுன்றே. அந்த உபதேசத்தை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. கடவுள் மனுஷனை ஓர் தீர்மானத்தோடே உண்டாக்கினார். அவன் பாவஞ்செய்து தன்னைக் கெடுத்துக்கொண்டபோதிலும் வல்லமையுள்ள தேவன் தமது தீர்மானத்தை நிறைவேற்றாது விடார். அவர் மனுஷனை உண்டாக்கினபோது அவன்மேலிருந்த அன்பும் அவ

ளைப்பற்றிய மேலான தீர்மானமும் பாவத்தால் மாறிப்போகவில்லை. ஆகையால் கெட்டுப்போன மக்களுக்குத் தமது அன்பைப் பாராட்டி அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளும் உத்தரவாதம் கடவுளுக்கு உண்டு. மகன் எக்கேடு கெட்டழிந்தால் எனக்கென்னவென்று சொல்லுகிற தகப்பன் தகப்பனல்ல. நமது ரட்சிப்பு தேவ கிருபை என்பது மெய்தான். ஆகிலும் அவர் பெற்ற பிள்ளைகளைக் கைவிடக்கூடாத உத்தரவாதமும், தம்மோடு சேர்த்தணைக்கும் அன்பின் சம்பந்தமும் பரமபிதாவுக்குண்டு. கடவுள் சகலத்தையும் தமது பிரமாணப்படி ஆளுகிறாரென்றும், நாம் செய்யும் நன்மையோ தீமையோ அதற்குத் தக்கபலனை நாமே அனுபவிக்கவேண்டுமென்றும், கடவுள் அவைகளில் பிரவேசிப்பதில்லையென்றும் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அப்படியானால் கடவுள் அறிவு, உணர்வு, அனுதாபமற்ற ஓர் யந்திரத்திற்குச் சமானமாவார். ஒரு தகப்பன் தன் பிள்ளையைப் பார்த்து: நெருப்பண்டை போகாதே, போனால் நெருப்பு உன்மேல் பற்றி எரியும் என்கிறான். இது தகப்பன் பிள்ளைக்குக் கொடுத்த பிரமாணம். சில நாட்கழித்து அந்தப் பிள்ளை நெருப்பண்டை போனதால், உடுப்பில் நெருப்புப்பற்றவே பிள்ளை [illegible] இச்சமயத்தில் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்ட தகப்பன் என்ன சொல்லுவான்? சரி, என் பிரமாணத்தை மீறினதால் நீ எரிந்து போகவேண்டியதே நியாயம், நான் அதில் பிரவேசிக்க மாட்டேன், நான் நீதிமான் என்று சொல்லுவானோ? ஒருக்காலும் அப்படிச் சொல்லமாட்டான். உடனே பாய்ந்து விழுந்து பிள்ளையை ரட்சிக்கும்படி துடிப்பான் அல்லவோ? மனுஷனுக்கு இவ்வளவு இரக்கமிருக்குமானால் அன்பின் சொரூபியாகிய பரமபிதா நமது காரியத்தில் பிரவேசித்து நம்மை ரட்சிக்காதிருப்பது எப்படி? "பலியைப் பார்க்கிலும் இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று சொன்னவர் அவரல்லவா? ஆகையால் நமது பாவநிலைமை அவர் கோபாக்கினையை அல்ல, அவர் பரிதாபத்தையும் அன்பையும் கொண்டுவந்தது. சூரியன் பாத்திரம் அபாத்திரமறியாமல் சர்வ மனுஷர்பேரிலும் பிரகாசிக்கிறதுபோல பரமபிதா தமது குமாரனைத் தந்து "இவ்வளவாய் உலகத்



தில் அன்புகூர்ந்தார்" (யோ. 3, 16). நாம் அறியாமலும் தேடாமலும் வந்த அன்பாகையால் அது வலியவந்த அன்பாகும்.

3. கடவுள் அன்பு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோ. 5, 8). விளங்கப்பண்ணுகிறார் என்பது வெளிப்படுத்துகிறார், பிரத்தியட்சமாக்குகிறார், திருஷ்டாந்தப்படுத்துகிறார், ரூபித்துக்காண்பிக்கிறார் என்று பொருள்படும். கடவுள் வல்லமை ரூபிக்கப் படவேண்டியதில்லை. ஆகாயத்தில் மின்னுகின்ற [illegible] பிரமாண்டமான உலகங்கள் உன்னத [illegible] யார்? கடவுள் [illegible] சக்தியின் மாட்சிமையை உணராதவர் யார்? கடவுள் ஞானம் ரூபிக்கப் படவேண்டியதில்லை. சர்வ சிருஷ்டிப்புகளின் ஒழுங்கையும் அவைகள் ஆண்டு நடத்தப்படும் ஞானத்தையும் புகழாதவர்கள் யார்? கடவுள் மகிமையை ரூபிக்கவேண்டியதில்லை. [illegible] சிருஷ்டிப்பு முதல் ஒவ்வொரு புல்லும் தேவமகிமையை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன" என்று சங்கீதக்காரன் பாடினார். பிரபஞ்ச ஆராய்ச்சிக்காரரான சாஸ்திரிகளுக்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். காலத்துக்குக் காலம் அவர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தும் சிருஷ்டிப்பின் அதிசயங்கள் கடவுளின் வல்லமை ஞானம் மகிமையை நாம் அதிகமதிகமாய் அறிந்து பரவசமடையச் செய்கின்றன.

[illegible] அன்போ ரூபிக்கப் படவேண்டும். அவரது வல்லமை ஞானத்தைப்போல் அன்பு சிருஷ்டிப்பில் தானாக வெளிப்படவில்லை. சமுத்திரம் மின்னல் அன்பை வெளிப்படுத்துமோ? வானத்தின் நட்சத்திரங்களில் அன்பைக் காணலாமோ? உலகம் அவரன்பைப் பிரத்தியட்சமாக்குமோ? உலகத்தின் காரியங்களைக் கவனித்தால் கடவுள் அன்புள்ளவரோவென்று சந்தேகிக்கவேண்டியதிருக்கிறது. இவ்வுலகம் பெரிய போர்க்களம் போலிருக்கிறது. மனுஷனுக்கு மனுஷன், மிருகத்துக்கு மிருகம், பட்சிக்குப் பட்சி, மீனுக்கு மீன், பூச்சிக்குப் பூச்சி எங்கே பார்த்தாலும் போர். இந்தப் போர் எதற்காக?

[illegible]

னும் வார்த்தைகளால் பயனில்லை. ஆகையால் கடவுள் தமது அன்பை ரூபித்துக் காண்பிக்கவேண்டியது அவசியம். அதை அவர் [illegible] வேற்றின மகத்தான கிரியையினால் வெளியாக்கினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்ததால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." கடவுள் கிறிஸ்துவுக்குள் நமக்காகப் பட்ட பாடுகள் மரணத்தால் நம் மீதுள்ள தமது பேரன்பை ரூபித்துக் காண்பிக்கிறார். ஆனால் ஆண்டவர் தமது அன்பைக் காட்டும்படிக்காக மாத்திரம் மரித்தவரல்ல. ஒருவன் தன் சிநேகிதன் மீதுள்ள அன்பை ரூபிக்கும்படி உயிரை விடுவானாலும் அது பெரிய கஷ்டமாகும். ஆனால் தன் சிநேகிதனை ஆபத்திலிருந்து ரட்சிக்கும்படி அவன் மரிக்கவேண்டியிருந்தால் அது போற்றத் தகுந்ததாகும். நமக்கு தேவ ரட்சிப்பை [illegible] யாக அவர் ஜீவனைக்கொடுத்துத் தமது அன்பை [illegible] னார். இதனை வெற்றிபெற அவர் அன்புக்கு ரூபகாரம். [illegible] விளங்குகிற அன்பின் அதிசயம் நமது உணர்ச்சியை இன்னும் [illegible] [illegible] சொல்லவில்லை. அந்த மரணத்தின் [illegible] நாம் அந்த அன்பு [illegible] வதற்கும், நம்பி ஏற்றுக்கொள்வதற்கும் தக்கதாக அந்த அன்பு [illegible] தன்மைக்குச் சிறப்பு.

கடவுள் அன்பு இதனையல் வெளிப்படுத்தப் பட்டிருந்தபோதிலும் நாம் பல்லோருக்கும் நிரூபிக்க சாதனம் [illegible] என்று நாம் சொல்லுகிறதில்லை. அவரன்பு ரூபிக்கப்பட்டிருக்கும் நமது உயர்ந்திரவக்க அவரது பேரன்பை இன்னும் சந்தேகிக்கும் படி செய்கின்றன என்பது நிச்சயம். கடவுள் இவ்வளவு அன்புள்ளவராயிருந்தால் நமக்கேன் இந்தப் பாடுகள் என்று கேட்கிறோம். அவர் [illegible] இத்துன்பங்களுக்கு அவரே [illegible] என்று கேட்கிறோம். இப்படியே இவ்வுலகிலிருந்தால் [illegible] கடவுள் இவைகளால் என்ன பிரயோஜனம் என்று புலம்புகிறோம். கடவுள் அன்பு ரூபிக்கப்பட்டிருக்கும் நமது பாவங்கள் [illegible] பிறரின் அன்பை அறிவதற்குமுன் [illegible] நாம் [illegible] அபிப்பிராயங்கொண்டிருக்கிறோமே அதுபோலவே அவர் அன்பு

அறிந்தபின்பும் இன்னும் நமது மனதுக்குத் திருப்தியுண்டாகவில்லை. சிலுவைப்போதனையை நாம் சரியாய் அறிந்தோமானால், பிதா நம்மில் அன்பாயிருப்பதால் நமக்குப் பாடுகள் கூடாது என்று சொல்லமாட்டோம். பிதாவின் பூரண அன்புக்குரிய குமாரன் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. நாம் பாடுபட்டால் நமது பிதாவின் அன்பை அவர் சந்தேகிக்கவில்லை. அதற்குப் பதிலாக: "நான் என் ஜீவனைக் கொடுக்கிறபடியால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" என்றார். நாம் கஷ்டப்பட்டாலும் கஷ்டப்படாதிருந்தாலும் பிதா நம்மேல் அன்பாயிருக்கிறார் என்பது நிச்சயம். அந்த அன்பு சிலுவையில் ரூபிக்கப்பட்டு நமது கண்முன் நிற்கிறது. அந்த அன்பை மாற்றவோ குறைக்கவோ, அழிக்கவோ ஒருவராலும் முடியாது. அந்த அன்பை ஆதாரமாக வைத்துக்கொண்டு நமது பாடுகளின் தத்துவத்தை அறிய வேண்டும். நமக்குப் பாடுகளிருப்பதால் நிரூபிக்கப்பட்டிருக்கிற அன்பை இல்லையென மறுக்கமுடியாது. பிதா என்னில் அன்பாயிருக்கிறார் என்று நிச்சயத்துக்கொண்டு அப்புறம் நமது உபத்திரவங்களுக்குச் சமாதானம் தேடவேணும். என்னிடத்தில் அன்புகூர்ந்து எனக்காக ஜீவனைக்கொடுத்த ஆண்டவர் வேண்டுமென்று என்னைச் சஞ்சலப்படுத்துவாரா? ஒருபோதுமில்லை. அவர் அன்பு நமதுள்ளத்திலிருக்கும்போது அந்த அன்பின் பலத்தாலே நாம் பாடுகளைச் சகிக்கக்கூடும். மேலும் கடவுளிடத்தில் அன்புகூரும் பிள்ளைகளாகிய நமக்குச் சகலமும் சேர்ந்து நன்மைக்காகவே நடக்கிறதென்கிற நிச்சயமும் இருக்கிறது. "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது". நாம் மெய்யாகவே பிதாவிடத்தில் அன்புள்ளவர்களாயிருந்தால் அவர் அறியாத பாடுகள் நமக்கு வருவதில்லை. அப்படியே நாம் பொறுமையாய்ச் சகிக்கும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்கும். அவர் அன்பாயிருந்தால் நமக்கேன் இந்த உபத்திரவம் என்று சொல்லமாட்டோம். அப்போஸ்தலனைப்போல் பாடுபட்டவர்கள் யார்? தேவன் அன்பாயிருந்தால் எனக்கேன் இந்தப் பாடுகள் என்று அவர் சொல்லவேயில்லை. அதற்குப் பதிலாக உபத்திரவங்களில் மேன்மை பாராட்டினார். எந்தப் பாடுகளும் எந்த வல்லமையும் பிரிக்க இயே

சவிலுள்ள தேவனுடைய அன்பிலிருந்து தம்மைப் பிரிக்கமுடியாதென்று வெற்றிச்சிதம் பாடினார் (ரோ. 8 : 35-39). பிதா ரூபித்துக் காண்பித்திருக்கும் கல்வாரி அன்பில் நாம் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

4. அன்பு பிரதி அன்பை நாடுகிறது. தமது அன்பை நமக்கு ரூபித்துக் காண்பிக்கிற பரமபிதா நம்மிலிருந்து பதில் அன்பை வாஞ்சையோடு எதிர்பார்க்கிறார். இது நியாயமே. பிதா கிறிஸ்துவுக்குள்ளிருந்து பேதுருவைப் பார்த்து: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்டார். நம் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் நாம் ஒவ்வொருவரையும் பார்த்து அவ்வாறு கேட்பது நியாயமே. கேள்விக்கு உத்தரவு என்ன. இருதயங்களை அறிந்திருக்கிற ஆண்டவருக்கு நாம் என்னபதில் சொல்லுவோம்? கிறிஸ்துவின் பேரால் நாம் அனேகக் காரியங்களைச் செய்யலாம். நாம் செய்யும் எந்தக் காரியமும் அன்புக்கு ஈடாகாது. இதைத் திட்டமாய் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அன்பிலிருந்து உண்டாகாத முயற்சிகள் ஆண்டவருக்கு ஏற்காது. அன்பற்ற ராஜவிருந்தும் அருவருப்பாகும். அன்புடன் உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பது அமிர்தமாகும். மெய்தான் என் உள்ளத்தில் அன்பில்லை. ஆண்டவரோடு அந்நியோன்னியமாக நான் உறவாடுகிறதில்லை, ஆகிலும் நான் செய்கிற ஏராளமான வேலைகளைப்பார்த்து ஆண்டவர் சந்தோஷப் படமாட்டாரா வென்று நினைக்கிறோம். ஒருக்காலுமில்லை. எபேசு சபையைப் பார்த்து ஆண்டவர் சொன்னது நமக்கு எச்சரிப்பாயிருக்கட்டும். உன் கிரியைகளையும் உன் பிரயாசங்களையும் அறிந்திருக்கிறேன், ஆகிலும் உன்பேரில் எனக்குக் குறை உண்டு; நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டாய் என்றார். அன்பின் வழியே ஆண்டவருக்கு உகந்த வழியும். மார்க்கத்துக்காக நமது சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் ஆண்டவர்மீது அன்பில்லையென்றால் ஒன்றுமில்லை. ஆண்டவர் பட்டபாடுகள் மரணம் அவர் நம்மீதுகொண்ட அன்புக்கு அடையாளம். அதுபோல் நமது முயற்சிகள் யாவும் நம்

மீதுள்ள அன்பினால் பிறக்கவேண்டும். நம்மில் அன்புகூர்ந்த ஆண்டவரிடம் நாமும் அன்பாயிருக்கவேண்டும்.

அன்பு எப்படி உண்டாகும்? "என் இயேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்; என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்" என்று பாடுவது அநேகருடைய விஷயத்தில் பொய்யல்லவா? இதைப்போல் ஜெபத்திலும் பிரசங்கத்திலும் வாயாற் சொல்லுகிறோம். நமது உள்ளத்தில் அன்புண்டாவென்று நாம் விசாரிக்கவில்லை. கருத்தும் யோசனையுமில்லாமல் செய்கிற ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களால் நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளுகிறோம். பேதுருவைப்போல "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று அவர் திருமுகத்தைப் பார்த்து நாம் சொல்லக்கூடுமா? உள்ளத்தில் அன்பு உண்டாவதெப்படி? இது விஷயத்தில் அநேகர் தவறிப்போகிறார்கள். என்னிடத்தில் அன்பாயிருக்கும்படிக்கு நான் ஒருவருக்குக் கட்டளையிடலாமா? என்னிடத்தில் அன்பாயிரு என்று நான் ஒருவனை அடித்துப் பலவந்தப்படுத்தலாமா? அதிகாரத்தால் சில வேலைகள் கொள்ளலாம். வேலைக்காரர் மனதில் முறுமுறுத்துக் கொண்டாகிலும் வேலையைச் செய்வார்கள். அதுபோல அன்பையும் அப்படி உண்டாக்கமுடியுமா? அன்பு இருதயத்துக்குரியது. அது தானாய்ப் பிறக்கவேண்டியது. சபையார் கடவுளிடத்தில் அன்புகூராததற்காகப் போதகர்கள் கோபித்துக் கொள்ளலாம். பெற்றோர் தங்கள் மக்களை ஆண்டவரிடத்தில் அன்பு கூருங்கள் என்று அதட்டலாம். மனைவி தன் புருஷனைப்பார்த்து: என்னை நேசிக்கிறதில்லை என்று சண்டை போடலாம். இவையெல்லாம் காரியம் அறியாதவர்கள் செய்கையாகும். நான் எவ்வளவோ பிரயாசப்படுகிறேன், தியானம் பண்ணுகிறேன், ஆண்டவர்மேல் எனக்கு அன்பு வரவில்லையே என்று புலம்புகிறவர்களுமுண்டு. அன்பு கட்டளையால், அதட்டுதலால், பிரயாசத்தால், தியானத்தால் உண்டாகிறதில்லை. தேவ அன்பு சீயோன் மலையில் பலிக்காதிருந்ததினால் அவர் கல்வாரி மலைக்கு வந்தார். அன்பை நாமே நமக்குள் பிறப்பிக்க முடியாது. கடவுள் ஒருவரே அன்பு. அன்பு வேறெங்குமில்லை. அன்பு என்னும் வார்த்

தயத்தை நிரப்பி மறுபடியும் தான் புறப்பட்டுவந்த இடமாகிய பிதாவின் இருதயத்துக்குத் திரும்பிப் போகிறது. இதுவே கடவுளிடத்தில் நாம் அன்பு கூருவது. அன்புக்குப் பதில் அன்பு காண்பிக்கும் வழி இதுவே.

இதன் உண்மையை நமது அனுபவத்திலும் அறிந்திருக்கிறோம். நாம் எத்தனையோ மனுஷரைச் சந்திக்கிறோம்; அவர்களைக் கண்டும் காணாதவர்களைப்போல் போய் விடுகிறோம். இன்னும் பலரோடு நாம் பேசிப் பழகுகிறோம் என்றாலும் எல்லாரும் நமக்கு உற்ற சிநேகிதர்கள் ஆவதில்லை. இப்படியிருக்க சிலரை மாத்திரம் நமது மனம் நாடுகிறது. அவர்கள் சிநேகத்தை விரும்புகிறோம். இதற்குக் காரணமென்ன? அவர்களுடைய வசீகர தோற்றமோ, நயமான பேச்சோ, கல்வித் திறமையோ, ஆழ்ந்த புத்தியோ, அன்பின் சிந்தையோ ஏதோ ஒன்று நமது உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. அவர்களைச் சிநேகிக்காமலிருக்க முடியவில்லை. இந்தச் சிநேகம் எப்படி உண்டாயிற்று? அவர்களிலிருந்து ஏதோ ஒரு விசேஷித்த காரியம் நமது மனதை முந்திக் கவர்ந்து கொண்டதினால் அல்லவா? ஒரு வழியே போகிறோம். புஷ்பங்கள் நிறைந்த மரங்களைக் காண்கிறோம். ஒரு மரம் நிறையப் பூவரசம் பூக்கள். பக்கத்திலுள்ள தோட்டத்தில் எங்கும் பூசணிப் பூக்கள். இவைகளில் நமது மனம் நாடவில்லை. சற்று நடந்து போகிறோம். ஒரு தோட்டம் நிறைய ரோஜாப்புஷ்பங்கள். அதைவிட்டு முன் நடக்கக் கால்வரவில்லை. எப்படியாவது இரண்டு புஷ்பங்களைப் பறித்துக்கொள்ளலாமா? அல்லது காசு கொடுத்தாகிலும் சில புஷ்பங்களை வாங்கலாமா என்கிற ஆசை உண்டாகிறது. வழியில் கண்டதெல்லாம் புஷ்பங்கள் தானே, அவைகளை நாம் விரும்பாமல் இந்த ரோஜாமேல் மாத்திரம் நமக்குப் பிரியம் வந்த காரணமென்ன? மற்றப்புஷ்பங்களுக்கு நமது மனதைக் கவர்ந்துகொள்ளும் சக்தியில்லை. ரோஜாவின் அழகான வடிவமும் அதன் நறுமணமும் நமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆகையால் ரோஜாவில் நமக்குள்ள பிரியம் நமது சுய பிரியமல்ல; அந்த ரோஜாவே நமதுள்ளத்தைக் கவர்ந்து தன்னில் பிரியங்கொள்ளும்

படி செய்தது. நாம் ரோஜாவை விரும்புவதற்குக் காரணம் ரோஜாவே. நாம் கடவுளிடம் அன்பு கூருவதற்குக் காரணம் கடவுளே. நமக்குள் அன்பில்லை. வேறொன்றும் அன்பில்லை. கடவுள் ஒருவரே அன்பு. அவர் தமது பேரன்பை கிறிஸ்துவுக்குள் சிலுவையில் வெளிப்படுத்த நாம் அந்த அன்பை அறிந்து தியானிக்கும் வேளையில் ஆவியானவர் தேவ அன்பை நமது இருதயங்களில் ஊற்றுகிறார். அந்த அன்பின் காந்தம் நமது உள்ளத்தை இழுத்துத் தான் புறப்பட்டுவந்த பிதாவோடு நம்மை இணைத்துக் கட்டுகிறது. அவர் நமது அருமைப் பிதாவும் நாம் அவர் அருமைப் பிள்ளைகளுமாயிருக்கிறோம். இந்த அன்பின் கட்டிலிருந்து ஒன்றும் நம்மைப் பிரிக்கமாட்டாதென்பது நிச்சயம். ஏனென்றால் இந்த அன்பின் சக்தி கடவுளே.

5. **தேவ அன்பால் நிரப்பப்படுவதின் பலன் என்ன?**

ஆண்டவரிடத்தில் அன்புகூருவதின் பலன்கள் அநேகம். அவைகளை இங்கே விவரிக்காமல் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணமாயிருக்கிற மூலபலனைக் கவனிப்போம். ஆண்டவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவதே அந்தப்பலன். "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவனுக்கு நான் என்னை வெளிப்படுத்துவேன்" என்றார் (யோ. 14:21). சங்கீதம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்கு காதுகளிருந்தும் பிரயோஜனமில்லை. சாஸ்திரம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்குக் கண்களிருந்தும் பிரயோஜனமில்லை. சிருஷ்டிப்பு அதில் பிரியமுள்ளவர்களுக்கே தன் அழகை வெளிப்படுத்தும்; மற்றவர்கள் அதை ஆயிரந்தரம் பார்த்தாலும் அவர்கள் ஒன்றும் காணாதவர்களே. சிநேகிதன் தன் சிநேகிதனுக்கே தன் உள்ளத்தை வெளிப்படுத்துவான்; அந்நியனிடத்தில் ஒன்றுமே சொல்லமாட்டான். அன்பற்றவர்களுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துகிறதில்லை.

கிறிஸ்துவை உள்ளத்தில் வெளிப்படுத்தப் பெற்றவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். ஆண்டவரைத் தங்கள் உள்ளத்தில் வெளிப்படுத்தப் பெற்றவர்கள் மூலமாய் கிறிஸ்துமார்க்கம் உண்டா

யிற்று. புறம்பான ஆராதனைகளும் புறம்பான வேலைகளுமே அநேகருடைய கிறிஸ்துமார்க்கம். உயிரில்லாத விக்கிரகத்தைப் புறம்பே பீடத்தில் வைத்துப் பூஜிக்கிறார்கள். ஆவியும் ஜீவனுமாயிருக்கிற ஆண்டவரை எந்த மேடையில் வைத்து நாம் பூஜிக்கிறது? அவர் சீஷர்களுக்கு வெளியேயிருந்த மூன்று வருஷகாலமும், அவர்கள் அவரைப் பார்த்தார்கள், அவர் போதனைகளைக் கேட்டார்கள்; அவர் ஜீவியமாதிரியைக் கவனித்தார்கள். என்றாலும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை அப்போது உண்டாகவில்லை. கிறிஸ்தவர்கள் என்னும் பேரும் அப்போது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆண்டவர் மகிமையடைந்த பின்பு அவர் வாக்குப் பண்ணினபடியே தமது ஆவிமூலம் அவர்களுக்குள் வந்தார். அவர்கள் கிறிஸ்துவைத் தங்களுக்குள் கண்டார்கள். அவரே அவர்களுக்கு ரட்சிப்பும், ஜீவனும், நீதியும், சமாதானமும், உன்னத பலமுமானார். அவர்கள் ஜீவியமும் ஊழியமும் வல்லமை நிறைந்து விளங்கின. கிறிஸ்துவுக்கொப்பான சாயலை அவர்களிடம் கண்டவர்கள் அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள். அவர்கள் ஆண்டவரிடம் முழு அன்பு வைத்தபடியால் அவர் தமது வாக்குப்படியே தம்மை அவர்களுக்குள் வெளிப்படுத்தி, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை உலகத்துக்கு ஆசீர்வாதமாக்கினார்.

கிறிஸ்துவைத் தங்களுக்குள் வெளிப்படுத்தப் பெறாதவர்கள் கிறிஸ்தவர்களல்ல. ஞானஸ்நானம், ராப்போஜனம், ஆராதனைகள் நம்மைக் கிறிஸ்தவர்களாக்காது. இவைகள் கிருபையின் எத்தனங்களாயிருந்தாலும் அநேகருடைய ஜீவியம் மாற்றப்படவில்லையே. அவர்கள் நினைவுகள், வார்த்தைகள், செய்கைகள் ஆண்டவருக்குப் பிரியமானவைகளல்ல. ஜென்ம சுபாவத்தின்படியே நடக்கிறார்கள். ஆண்டவரை அவர்கள் முழு இருதயத்தோடும் நேசிக்கிறதில்லை. அன்பற்ற அவர்களுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துவதுமில்லை. அப்படியிருந்தும் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்களென்ற நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பேர்க் கிறிஸ்தவர்கள் ஆயிரமாயிரமாய் பெருகினாலும் ஆண்டவருக்கு அதனால் மகிமையில்லை.

சபைகளுக்கும் உலகத்துக்கும் அவர்களால் ஆசிர்வாதமில்லை. இந்தக்
களில் அநேகர், நாங்கள் கிறிஸ்துவை மதித்து வணங்குகிறோம்,
ஆனால் உங்கள் சபைகளில் சேரமாட்டோம் என்று சொல்லுகிறதற்
குக் காரணம் இதுவே. கிறிஸ்துமார்க்கம் அன்பின் மார்க்கம். அது
பகையும், விரோதமும், பிரிவினையும், பெருமையும், பொறாமையும்,
எரிச்சலும், தீமைபேசுதலும், அவமானப்படுத்தலுமான மார்க்கமல்ல.
உலகத்தாரைப்போல நாம் நடந்துகொண்டு, கிறிஸ்தவர்கள் என்னும்
பேரை வைத்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? நாம்
அழைப்பைப் பெற்றிருக்கிற அன்பின் அழைப்புக்குப் பாத்திரராய்
நடக்க மனமில்லாவிட்டால் கிறிஸ்தவர்கள் என்னும் பேரை விட்டு
விடுவது நல்லது. இருந்தால் உண்மையாயிருக்கவேண்டும். மாயத்தை
ஆண்டவர் முழுப்பகையாய்ப் பகைக்கிறார். அன்பே கடவுள். அவரே
நமது அன்புள்ள பிதா. அவர் தமது அன்பைத் தமது குமாரன்
மூலமாய்ச் சிலுவையில் ரூபித்துக் காண்பிக்கிறார். இந்த அன்பை
நாம் அறிந்து, உள்ளத்தில் பெற்று, அவரிடத்தில் பதில் அன்புகூர
வேண்டுமென்று விரும்புகிறார். அவ்வாறு நாம் அன்புகூரும்போது
ஆண்டவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துகிறார். இந்த உள்ளான
வெளிப்படுத்தலே நமக்கு ஜீவனும் ரட்சிப்புமாகும். இந்த அனுப
வம் நமக்கிருந்தாலே நாம் உண்மையான கிறிஸ்தவர்களாகலாம்.
புறம்பான ஆசாரங்கள் ஆராதனைகளை நம்பி நாம் மோசம் போகக்
கூடாது. நமது குணமும் ஜீவியமும் ஆண்டவருக்குப் பிரியமும்,
மனுஷருக்கு ஆசீர்வாதமுமாக மாற்றப்படவில்லையென்றால் நாம்
கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

முடிவாக ஒருவார்த்தை. தேவன் தமது குமாரன் மூலமாய்
வெளிப்படுத்தின அன்பு இரண்டாயிரம் வருஷத்துக்குமுன் நடந்த
ஓர் சம்பவமாயிராமல் இக்ஷணத்திலும் பிரவாகித்துக்கொண்டிருக்
கிற அன்பாகயிருக்கிறது. எப்படியென்றால், நாம் பாவிகளாகயிருக்
கையில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்ததினால் தேவன் நம்
மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார் என்று சொல்
லாமல், விளங்கப் பண்ணுகிறார் என்று சொல்லுகிறார். சூரியப் பிர

காசம் எப்பக்கத்திலும் நம்மைச் சூழ்ந்துகொண்டிருப்பது போல, பரம பிதாவின் அன்பு நம்மைச் சூழ இந்த நிமிஷத்திலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. நமது பாவங்களை நீக்கி நம்மை ரட்சிக்கும்படி நமது கண்களுக்கு முன்பாக இப்போதே ஆண்டவர் சிலுவையில் தொங்குகிறதுபோலிருக்கிறது. ஆகையால் பிதா தமது அன்பை இப்போதே நமது கண்களுக்கு முன்பாக விளங்கப் பண்ணுகிறார். தமது அதிசயமான அன்பை இப்போதே வெளிப்படுத்துகிறார், இப்போதே பிரத்தியக்ஷமாக்குகிறார், இப்போதே நமது கண்களுக்கு ரூபித்துக் காண்பிக்கிறார். நமது பக்தியினிமித்தமல்ல, புண்ணியங்களினிமித்தமல்ல, நீதியின் நிமித்தமல்ல, எந்த நற்கிரியையினிமித்தமுமல்ல. இப்போது நாம் பாவஞ்செய்து கொண்டிருக்கிறோம். ஆண்டவரை மறந்தோம், வேதத்தை அசட்டை செய்தோம்; ஜெபத்தை விட்டோம், தீய வழியில் செல்லுகிறோம். நாம் செய்கிறது நமக்கே தெரியவில்லை; நமது மனச்சாட்சி நம்மை வாதிக்கிறது. நமது நிலைமை இவ்வளவு கேவலமாயிருந்தும், பிதாவின் அன்பு நமக்கு ஆக்கினை கூறாமல் நம்மை ரட்சிக்க வாஞ்சை கொண்டு நமது உள்ளத்தில் பிரவேசிக்கும்படி நம்மை மோதிக்கொண்டிருக்கிறது. பிதா தமது அன்பை நமக்கு இந்த நிமிஷத்தில் விளங்கப் பண்ணுகிறார். இது பாவிகளான நம்மிடத்தில் வலிய வந்திருக்கிற அன்பு. சகோதரனே! சகோதரியே! உன் காரியங்கள் எவ்வளவு கேவலமாயிருந்தாலும் மனம் கலங்காதே. ஆயக்காரரையும், பாவிகளையும், வேசிகளையும் அன்பின் கரத்தாலணைத்து, அவர்களை ராஜ்யத்தின் மக்களாக்கின காருண்யமும் அனுதாபமும் இரக்கமும் நிறைந்த ரட்சகர் உன் பக்கம் நிற்கிறார். உன் சகல பாவங்களையும் அவர் அறிந்திருந்தும் உன்பேரிலுள்ள அவர் அன்பு மாறவில்லை. உனக்காக அவர் சகித்த மரணத்தை உனக்குக் காட்டி, தமது அன்பை உனக்கு ரூபித்துக் காண்பிக்கிறார். நீ என்ன சொல்லப் போகிறாய்? என் பாவத்திலேயே நிலைத்திருப்பேன், உமது அன்பு எனக்கு வேண்டாமென்றும் நீ சொல்வாயா? அல்லது நான் பாவியாயிருந்தும், என்மீது அன்புகொண்டு எனக்காக உயிர்கொடுத்த பகவானே, என் அருமை ரட்சகனே, இனி எனக்கு

பாவ ஜீவியம் வேண்டாம் உமது அன்பு ஒன்றே எனக்குப்போதும் என்றும் சொல்லலாம். ஆண்டவர் உன்னைப் பலவந்தம் பண்ணமாட்டார். பலவந்தத்தால் வருவது அன்பல்ல. நீயே அவரன்பை அறிந்து அவரை நேசிக்கவேண்டுமென்பது அவர் விருப்பம். அவர் அன்பின் காந்தத்தைப் பிடி. காந்தம்போல் அவரன்பு உன் உள்ளத்தில் பெருகக் காண்பாய். உன் இருதயத்தில் அன்புண்டானவுடனே ஆண்டவர் தம்மை உனக்குள் வெளிப்படுத்தித் தமது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களால் உன்னை நிரப்புவார். ஆண்டவர் உன்னோடு பேசும் இந்த நேரத்தைத் தவற விடாதே.

பரமபிதாவின் அன்பை கிறிஸ்துமூலம் ஆவியானவர் நமது உள்ளத்தில் ஊற்றும்போது நாம் கடவுளிடத்தில் அன்பு கூருவது நமக்கு இயல்பாயிருக்கும். தேவனிடத்தில் மாத்திரமல்ல மனுஷரிடத்திலும் அன்பாயிருப்போம். பாஷைகள், வரங்கள், ரகசியங்கள், சகல அறிவுகள் இவை யாவற்றிலும் அன்பே விசேஷம். இவை யாவுமிருந்தும் அன்பில்லாமற்போனால் நாம் ஒன்றுமில்லை. ஏனென்றால் கடவுள் அன்பே. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். எல்லாம் ஒழிந்தாலும் அன்பு ஒருக்காலும் ஒழியாது. கடவுளே அன்பு. அன்பால் நிறைந்தவர்கள் கடவுளால் நிறைந்தவர்கள். அன்பில்லாதவன் கடவுளை அறியான். அன்பற்றவன் கிறிஸ்தவனல்ல-

# IV

# The Body of Christ

# கிறிஸ்துவின் சரீரம்

"கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.........தலையாகிய கிறிஸ்து"

எபே. 4 : 12, 15.

திருச்சபை "தேவனுடைய ஆலயம்" என்றும், "ஆவிக்குரிய மாளிகை" என்றும், "கடவுளுடைய வாசஸ்தலம்" என்றும், "கிறிஸ்துவின் மணவாட்டி" என்றும் அழைக்கப்படுகிறது. அது "கிறிஸ்துவின் சரீரம்" என்று அழைக்கப்படும்போது மேலான நெருங்கிய உயிருள்ள சம்பந்தமுள்ளதாயிருக்கிறது. கிறிஸ்துவைத் தங்கள் ரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரோடிணைக்கப் பெற்ற விசுவாசிகள் எல்லாரும் அவரது சரீரத்தின் அங்கங்களாகிறார்கள். எல்லாரும் சேர்ந்து அவருக்குச் சரீரமாகிறார்கள். அந்தச் சரீரத்துக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இன்னும் பூரணப் படவில்லை. அது கட்டப்பெற்று வளர்ந்துகொண்டு வருகிறது. அதை மாளிகையாகப் பேசும்போது: "அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார், அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பெற்று, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பெற்று வருகிறீர்கள்" என்று பவுல் சொல்லுகிறார். இதன் சம்பந்தமாக பேதுரு: "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகக் கட்டப்பெற்று வருகிறீர்கள்" என்கிறார். திருச்சபையை எந்த உவமானத்தைக்கொண்டு பேசினாலும், அது ஜீவ

றுள்ளதென்பதும் கிறிஸ்துவாகிய சிரசோடு இணைக்கப்பெற்றுக் கட்டப்படுகிறதென்பதும் நிச்சயம்.

**தலையும் சரீரமும்.** சரீரத்தில் தலை சிறிய பாகமாயிருந்தாலும் தலையே பிரதானம். சரீரத்துக்கு அவசியமான முக்கிய உறுப்புகள் யாவும் தலையிலேயே அமைக்கப்பெற்றிருக்கின்றன. காரியங்களைப் பார்த்து அறியும் கண்கள், மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் செவிகள், பிறரோடு பேசும் வாய், சுவாசிக்கும் மூக்கு, விஷயங்களைச் சிந்தித்து ஆலோசிக்கும் மூளை இவையாவும் தலையிலேயே இருக்கின்றன. இவ்வுறுப்புகள் கெட்டுப்போவது சரீரத்துக்கு நஷ்டம். குருடர், செவிடர், ஊமையர், பைத்தியகாரர் முதலானவர்களைக் கண்டு பரிதபிக்கிறோம். தலையிலுள்ள இவ்வுறுப்புகளின் வேலையால் சரீரம் ஆளப்படுகிறது. கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருக்கிறார். சரீரமாகிய சபைக்காகப் பார்க்கிறவரும், பேசுகிறவரும், கேட்கிறவரும், ஆலோசிக்கிறவரும், பிழைக்கிறவரும், சரீரத்தை நடத்துகிறவரும் அவரே. மேலும் சரீரத்தை இனங் காட்டுவது தலையாகும். ஒருவனைக் கொலைசெய்தபின் அவனை இனம் கண்டுகொள்ளாதபடி கொலைகாரர் தலையை மறைத்து விடுகிறார்கள். சபை எத்தன்மையானதென்பதை தலையாகிய கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். தலையின்றி சரீரமில்லை. கைகள் கால்கள் இழந்தவர்கள் பிழைத்திருக்கிறார்கள். தலையிழந்து பிழைத்தவர்கள் இல்லை. தலையாகிய கிறிஸ்து இல்லாமல் சரீரமாகிய சபை இல்லை. சரீரத்துக்குத் தலை பிரதானம்.

சரீரத்துக்குத் தலை பிரதானம் என்பது போலவே தலைக்கும் சரீரம் பிரதானம். சரீரமின்றி தலை என்ன செய்யக்கூடும்? ஏரோதியாள் யோவான் ஸ்நானகன் தலையைக் கேட்டாள். அது பார்க்காது, கேட்காது, பேசாது, பிழைக்காது. தலை எவ்வளவு பிரதானமானாலும் அது தன் கிரியைகளை நடப்பிக்க அதற்கும் சரீரம் அவசியம். கிறிஸ்து தம்மில் எவ்வளவு பூரணமுள்ளவரா யிருந்தும், நம்மை யல்லாமல் அவர் எல்லாவற்றையுஞ்செய்ய வல்லவராயிருந்தும், இரட்சணிய ஒழுங்குப்படி சரீரமாகிய திருச்சபை யில்லாமல் அவர் தாமாக ராஜ்யத்தின் வேலையை நடப்பிக்க மாட்டார். [illegible]

யால் சரீரத்துக்குத் தலை பிரதானமாயிருப்பதுபோல, தலைக்குச் சரீரமும் பிரதானம். ஒன்றின்றி மற்றது பிழைக்காது. இரண்டும் சேர்ந்தே பூரணமாகிறது. இதுவும் தேவச் செயலே.

ஆண்டவர் உலகத்திலிருந்தபோது அவருக்கே ஒரு சரீரம் இருந்தது. பிதா அவருக்கு அந்தச் சரீரத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். அவர் அதில் வசித்துப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். ஆண்டவர் தமது சரீரத்தை பிதாவாகிய கடவுளை உலகத்துக்கு வெளிப்படுத்தும் சாதனமாகக் கொண்டார். மனுஷனுடைய கெட்டுப்போன நிலைமையை தமது சரீரத்தால் வெளிப்படுத்தினார். அவரது சிலுவை ஜீவியத்தைக் கண்டதால் நமது பாவக்கேட்டை உணர்கிறோம். இது மாத்திரமல்ல, அந்தச் சரீரத்தின் மூலமாய் நாம் கடவுளோடு ஒப்புரவாகும் வழியை உண்டாக்கினார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்." இவ்வாறு தேவராஜ்யத்திற்காக ஆண்டவர் செய்து முடிக்கவேண்டிய சகல காரியங்களுக்கும் அவரது சரீரம் அவருக்கு அவசியமாயிருந்தது. ஜனங்களெல்லாரும் அவர் சரீரத்தின் மூலமாக அவரை அறிந்து, அவர் திருவசனத்தைக் கேட்டு, அவர் செய்த கிரியைகளையும் கண்டார்கள். அவர் உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றபின் அவர் சரீரம் மறைந்தது. அவர் தொடங்கின வேலையோ முடியவில்லை. அவர் மறைந்தாலும் அவர் தொடங்கின வேலை பூமியில் நடக்கவேண்டும். அதற்காக ஒரு சரீரம் அவருக்கு அவசியம். திருச்சபையே அந்தச் சரீரம். அவர் பூலோகத்திலிருந்த காலத்திலும் தமது சரீரமாகிய சபையைக் கட்டுவதாகச் சொன்னார். அவர் மகிமையடைந்தபின்பே சபையைக் கட்டினார். இந்த வேலை பெந்தெகோஸ்தே நாளில் ஆரம்பித்தது. மகிமையடைந்த ஆண்டவர் அதற்குத் தலையானார், சபை அவரது சரீரமாயிற்று. "கிறிஸ்துவின் சரீரமாகிய சபை."

ஆதிச்சபையை நாம் குழந்தைச் சபையென்று அழைப்பதுண்டு. இப்போது இரண்டாயிர வருஷகாலமானதால் நாம் அநேக விஷயங்களில் வளர்ந்து பெருகினதாக எண்ணுகிறோம். ஒரு விதத்

தில் இது உண்மைதான். நமக்கு அநேக சிறந்த ஆலயங்களும், கல்வியம்பெற்ற திறமான ஊழியக்காரரும், பொன்மயமான பூவின வேதாகமங்களும், பாட்டுப் புஸ்தகங்களும், விலையேறப்பெற்ற கின்னரங்களும், ஒழுங்கான ஆராதனைகளும், மிகுதியான பணமும், பற்பல சங்கங்களும் உண்டு. இவைகளைக் குறித்து அவர்கள் மேன்மை பாராட்ட முடியாது. ஆனால் அவர்களுக்குள்ளது நமக்குண்டோவென்பதுதான் கேள்வி. நமக்குப் புறம்பான எவ்வளவு சிலாக்கியங்கள் இருந்தபோதிலும் சபைக்குரிய பிரதான அடையாளங்கள் அவைகள் அல்ல. இவைகள் யாவும் மாறிப்போகும். சபைக்குரிய மேலான காரியங்கள் உண்டு. அவைகளையே நாம் கருத்தாய் தேடவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை ஆண்டவர் கட்டத் தொடங்கின மாதிரியின்படியே கட்டப்படவேண்டும். கர்த்தர் மோசேயைப் பார்த்து, "நான் உனக்கு மலையில் காண்பித்த மாதிரியின்படியே கட்ட எச்சரிக்கையாயிரு" என்றார். ஆசரிப்புக் கூடாரம் முதலில் கடவுளுடைய மனதிலிருந்தது. பின்பு மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டது. பின்பு பற்பல வேலைக்காரரால் கடவுள் வெளிப்படுத்தின மாதிரிப்படியே கூடாரம் கட்டி முடிந்தது. திருச்சபையும் முதலில் கடவுள் மனதில் இருந்தது. பின்பு அது கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது. பின்பு ஆண்டவர் தமது ஆவியினால் பெந்தெகோஸ்தே நாளில் கட்டத் தொடங்கினார். அன்று முதல் இதுவரை திருச்சபையைக் கட்டும் வேலை நடந்தேறிவருகிறது. ஆண்டவர் அதைக் கட்டத்தொடங்கின மாதிரியை நாம் மறந்து நமது இஷ்டம்போல் வேலைசெய்யக்கூடாது. "அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்" என்று அப்போஸ்தலன் எச்சரிக்கிறார்.

**கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஆண்டவர் கட்டத் தொடங்கின மாதிரி என்ன ?**

1. ஜீவனுள்ள கற்களைக்கொண்டு கட்டுகிறார். "ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்த நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல்

ஆவிக்கேற்ற மாளிகையாகக் கட்டப்பெற்று வருகிறீர்கள்." (1. பேது 2 : 4, 5). கிறிஸ்துவின் சரீரமாகிய சரீரத்தில் உயிரற்ற அவயவங்கள் இருக்கமுடியாது. இதன் உண்மையை திருச்சபை ஸ்தாபிக்கப்பெற்ற நாளிலே காண்கிறோம். "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்." (அப். 2 : 47). பாவத்தால் மரித்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவனைக் கண்டடைகிறார்கள். இவ்வாறு ஜீவன்பெற்ற விசுவாசிகளை ஆண்டவர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக் கட்டுகிறார். தலையின் ஜீவனே சரீரத்தின் ஜீவன். தலையும் சரீரமும் ஒரே ஜீவனால் பிழைக்கின்றன. பரிசுத்த ஆவி கிறிஸ்துவின் ஜீவனாயிருந்தார். அவர் ஆவியினால் பிறந்தார். ஆவியில் வளர்ந்தார். ஆவியினால் நிறைந்தார். ஆவி ஏவுதலால் வனாந்தரம் சென்றார். ஆவியின் பலத்தால் ஊழியத்தில் பிரவேசித்தார். ஆவியினால் உபதேசித்தார். ஆவியின் வல்லமையால் அற்புத கிரியைகளை நிறைவேற்றினார். நித்திய ஆவியினால் சிலுவைக்குச் சென்று மரித்தார். ஆவியினால் உயிர்த்தெழுந்தார். ஆவியினால் பரத்துக்குச்சென்று மகிமையடைந்தார். ஆகவே ஆவியானவரே கிறிஸ்துவின் ஜீவனாக விளங்குகிறார். தலையின் ஜீவனே சரீரத்துக்கும் ஜீவன். ஆண்டவர் தமது ஜீவனாகிய ஆவியின் மூலமாக விசுவாசிகளுக்கு உயிரளித்து அவர்களைத் தமது சரீரத்தின் அங்கங்களாக இணைத்துக்கொள்கிறார். இதுவே நாம் கட்டவேண்டிய மாதிரி.

ஆண்டவர் காண்பித்த இந்த மாதிரியை நாம் மறந்துவிடுகிறோம். சபையின் தொகையைப் பெருகச் செய்யவேண்டும் என்கிற ஆத்திரம் நமக்குப் பலத்த சோதனையாயிருக்கிறது. மார்க்கத்தில் சேருகிறோம், வேதத்தில் விழுகிறோம் என்று பேசுகிறவர்கள் கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல. மார்க்கத்தில் சேருகிறீர்களா என்று கேட்பவர்களும் இரட்சிப்பின் வல்லமையை அறிந்தவர்கள் அல்ல. எவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக அறிந்து அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்களோ அவர்களே ஜீவன் பெற்றவர்கள். கிறிஸ்து அவர்களுக்கு ஜீவன். ஜீவன்பெற்ற விசுவாசிகளே கிறிஸ்துவின்

சரீரமாகிய சரீரத்தில் அவயவங்களாகக்கூடும். காரியம் அறியாதவர்களை ஞானஸ்நானத்தின் மூலமாய் சபையில் சேர்ப்பது மிகுந்த தீமையைப் பிறப்பிக்கும். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதிருந்தும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லி வஞ்சித்துக்கொள்வார்கள். சபையிலுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் பெருந்த இடறலாயிருப்பார்கள். சபையைக் கவனிக்கும் மற்றவர்கள் நிந்திப்பதற்குக் காரணமாவார்கள். ஆண்டவர் நாமத்துக்கு அவமானமாயிருப்பார்கள். தற்காலத்துச் சபைகளில் உண்டாகும் சகல குழப்பங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணம் இப்படிப்பட்டவர்களே. ஆயிரம்பேர்க் கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் ஐம்பது உத்தம கிறிஸ்தவர்களே சபைக்குப் பலம். காரியங்கள் நடந்தால் போதுமென்றிராமல் சரீரமாகிய சபையின் அங்கங்களில் ஜீவனுண்டாவென்பதை நாம் கவனிக்கவேண்டும். "அவனவன் தான் அதன்மேல் இன்னவிதமாகக் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்".

2. அன்பின் ஒற்றுமையில் கட்டினார். இந்த ஒற்றுமையை நமது சரீரத்தின் அவயவங்களுக்குள் நிச்சயமாகக் காண்கிறோம். அவயவங்கள் அநேகமாயிருந்தும், ஒன்றுக்கொன்று சாயலில் வித்தியாசமாயிருந்தும், அவைகளின் வேலை வெவ்வேறாயிருந்தும், அவைகளுக்குள் பூரண ஒற்றுமையைப் பார்க்கிறோம். ஒரு அவயவத்தின் சந்தோஷம் முழுச்சரீரத்துக்கும் சந்தோஷம். ஒரு அவயவத்தின் துக்கம் எல்லாவற்றிற்கும் துக்கம். கையின் ஓர் விரலில் மோதிரம் போட்டால் எல்லா அவயவங்களும் சந்தோஷப்படுகின்றன. அவைதங்களுக்கேகிடைத்த மேன்மைபோல் எண்ணுகின்றன. அந்த மோதிரத்தை என் காதில் ஏன் போடக்கூடாதென்று காது பொறாமைப் படுகிறதில்லை. அதுபோலவே எதாவது ஒரு அவயவத்துக்கு நோயோ அல்லது சேதமோ ஏற்பட்டால், மற்ற அவயவங்கள் படும் பாடு கொஞ்சமல்ல. கண்கள் அழுதாகக் கண்ணீர் வடிக்கின்றன. கைகள் உதவிசெய்யத் தீவிரிக்கின்றன. சரீரத்திலுள்ள அவயவங்களின் ஒற்றுமை ஆச்சரியம்.

ஆண்டவர் தமது சரீரமாகிய சபையில் அவயவங்களை அமைத்த மாதிரியும் இதுபோலவே. "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்". அவர்கள் தங்களுக்குள் எத்தனையோ வித்தியாசம் உள்ளவர்கள். கல்வியில், அறிவில், வரத்தில், வேலையில், சுபாவத்தில், சாமர்த்தியத்தில் கட்டாயம் வித்தியாசம் இருக்கவேயிருக்கும். அதை மாற்றமுடியாது. எல்லாரையும் ஒரே மாதிரியாக்கிவிடுவது தேவசித்தமல்ல. பேதுரு பேதுருதான். யோவான் யோவான்தான். தோமா தோமாதான். ஸ்தேவான் ஸ்தேவான்தான். அவயவங்களாகிய இவர்களுக்குள் பற்பல வித்தியாசங்களிருந்தபோதிலும், அவர்களெல்லாரும் "ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்".

இந்த ஒற்றுமைக்குக் காரணமென்ன? ஆயிரக்கணக்கான அவர்களெல்லாரும் ஒரே ஜீவனாலே பிழைத்ததே காரணம். நமது சரீரத்தின் அவயவங்களுக்குள் நாம் காண்கிற ஒற்றுமைக்குக் காரணம் ஒரே ஜீவனாலே அவை பிழைப்பதேயாகும். காலுக்கு ஒரு ஜீவனும் கைக்கு வேறு ஜீவனுமல்ல. அவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துவே ஜீவன். தலையாகிய கிறிஸ்துவோடு அவரது ஜீவனாலே இணைக்கப் பெற்றிருந்தார்கள். அது அன்புநிறைந்த ஜீவன். அன்பாகிய ஜீவனாலே அவர்கள் பிழைத்ததால் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் சிந்தை கிறிஸ்து. அவர்கள் பேச்சு கிறிஸ்து. அவர்கள் ஜெபம் கிறிஸ்து. அவர்கள் வேலை கிறிஸ்து. அவர்கள் பாடு கிறிஸ்து. அவர்கள் நோக்கம் கிறிஸ்து. அவர்கள் பிழைப்பு கிறிஸ்து. இவ்வாறு அன்புமயமாகிய கிறிஸ்துவுடன் அவர்கள் ஒவ்வொருவரும் இணைக்கப் பெற்றிருந்ததால், தங்களுக்குள் அன்பின் ஒற்றுமையில் பிழைப்பது இயல்பாயிருந்தது. இது வேறுவிதமாய் இருக்கமுடியாது. கிறிஸ்துவோடு ஒற்றுமைப் படாதவர்களை, அவர் அன்பில் பிழைக்காதவர்களை ஒற்றுமைப்படுத்தப் பார்ப்பது மேற்பூச்சும் வீண் பிரயாசமுமாகும். ஒரு தனிச்சபைக்குள் ஒற்றுமை காணப்படவேண்டுமானால் இதுவே பிரமாணம். பல சபைகள்சேர்ந்து ஐக்கியப்படவேண்டுமானாலும் இதுவே பிரமாணம். ஒவ்வொரு அவ-

வரும் தனித்தனியாக கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவர் அன்பில் பிழைக்கும்போது தங்களுக்குள் கட்டாயம் அன்பாயிருப்பார்கள். ஒருவருடைய உற்ற சிநேகிதர்கள் தங்களுக்குள் சிநேகிதர்கள். இதுவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

நமது சபைகளின் காரியங்கள் எப்படியிருக்கின்றன? நாம் ஆதிச் சபையைப் பார்க்கிலும் அநேக விஷயங்களில் வளர்ந்துவிட்டோம் என்கிறோமே, எதிலே வளர்ந்தோம்? ஒரு சகோதரன் சகோதரி மேன்மையடைந்தால் நமக்குப் பொறாமை உண்டாகிறது. அவர்களைக் குறைவுபடுத்த ஆரம்பிக்கிறோம். அல்லது ஒரு சகோதரன், சகோதரி தவறிவிட்டால் நமது சந்தோஷத்திற்கு அளவில்லை. அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல் அதோகதியாக்கிவிட நினைக்கிறோம். முன் கவனித்தபடி நமது சரீரத்தில் ஒரு அவயவத்தின் மேன்மை எல்லா அவயவங்களுக்கும் மேன்மை, ஒரு அவயவத்தின் வேதனை எல்லா அவயவங்களுக்கும் வேதனை. நமக்குள் ஏன் அப்படியிருக்கிறதில்லை? "அழுகிறவர்களோடே அழுவதும், சந்தோஷப்படுகிறவர்களோடே சந்தோஷப்படுவதுமே" மெய்யான அனுதாபம். மற்றவர்கள் அழுவது நமக்குச் சந்தோஷமும், அவர்கள் சந்தோஷம் நமக்கு அழுகையுமாயிருந்தால் நாம் ஆண்டவர் சரீரத்தின் அவயவங்கள் அல்ல. அவர் ஜீவனும் அன்பும் அனுதாபமும் நமக்குள் இல்லை. நமது பேர் சபை டாப்பில் இருக்கலாம்; ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறதோ? ஞானஸ்நானம் இராப்போஜனம்பெற்று நாம் ஓர் ஆலயத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம்; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நாம் ஜீவனுள்ள அவயவங்களாகப் பிழைக்கிறோமா?

பிரிவினைகளும் சண்டைகளும் கிறிஸ்துவின் சரீரத்துக்குரியவைகள் அல்ல. போர்க்கிறிஸ்தவர்களின் தொகை பெருகப்பெருக சபைகள் பாழாய்ப்போகும். சபைக்கு அவர் பிரதானமாகக் கொடுத்த அடையாளத்தை நாம் புறக்கணிக்கிறோம். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனால் நீங்கள் என்னுடைய சீஷரென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்றார். இந்தப் பிரதான கட்டளையை நாம் கவனிக்காமல் நமது ஆராதனைகளையும் ஆசா

ரங்களையும், ஒழுங்காய் நடத்திக்கொண்டு போகிறோம். ஆண்டவருக்கு இது எவ்வளவு விசனம்! "மதிகேடரே குருடரே எது முக்கியம்?" என்று கேட்கிறார். இந்த அன்பின் ஒற்றுமைக்காக ஜெபித்தார். "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." ஜெபித்தது மாத்திரமல்ல, அவ்வாறு நிறைவேறும் என்பதாக சீஷர்களுக்குச் சொன்னார். "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலுமிருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்றார். அவர்கள் ஆவியினால் நிறைந்தபோது இந்த ஒற்றுமையை அநுபவத்தில் அறிந்தார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்றார்கள். "திரளான விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்." ஆண்டவர் வாக்குப்பண்ணினதும் அடியார் பெற்றுக்கொண்டதுமான ஐக்கியம் ஜீவனுள்ளது. இந்த ஒற்றுமையை உண்டாக்க அநேக சங்கங்கள்கூடி தர்க்கிக்க வேண்டியதில்லை. நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுங்கள், நாங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கிறோம் என்று புலம்ப வேண்டியதில்லை. தற்காலத்து சபை ஐக்கியம், புறம்பான கொள்கைகள் ஆசாரங்களைப் பற்றியதாயிருக்கிறது. ஒருவேளை இந்த ஐக்கியம் வாய்த்தாலும் அது ஆண்டவர் கூறினதும், அடியார் அநுபவித்ததுமான உயிருள்ள ஐக்கியம் ஆகாது. ஆண்டவர் தமது அன்பின் ஒற்றுமையில் இணைத்த அவரது சரீரமாகிய சபையை "அவனவன் தான் என்ன விதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்."

3. ஆவியின் நிறைவில் கட்டினார். "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" (அப். 2, 4). கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை உண்டானது ஆவியினாலேயே. சீஷர்கள் தம்மோடிருந்தபோது சபையைக் கட்டுவதாகச் சொன்னார். என்றாலும் சபை அப்போது கட்டப்படவில்லை. ஆண்டவரது ஜீவிய மாதிரியாலும், போதனையாலும் மாத்திரமே சபை ஸ்தாபிக்கப்படவில்லை.

இதை ஆண்டவர் அறிந்து ஆவியானவரால் அவர்கள் நிரப்பப்படும்
நாளுக்காக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சீஷரின் அறி
யாமை பலவீனங்களைக் குறித்து அவர் சோர்ந்து போகவில்லை. ஆவி
யானவர் வரும்போது எல்லாம் சரியாயிருக்கும் என்பதை அவர் அறி
வார். அதற்குமுன் அவர் மரித்து, எழுந்து மகிமைக்குள் பிரவே
சிக்கவேண்டும்.

பெந்தெகோஸ்தே நாளின் விசேஷமென்ன? சீஷர் ஆவியால்
நிறைந்தார்கள். ஆவியால் நிறைந்ததின் பயன் என்ன? ஆண்டவர்
எதிர்பார்த்திருந்த காரியம் கைகூடினது. கைகூடின காரியம் என்ன?
கிறிஸ்து அவர்களுக்குள் வந்தார். ஆவியால் அவர்கள் நிறைந்தபோது
கிறிஸ்துவை தங்களுக்குள் கண்டார்கள். ஆண்டவர் தம்மோடிருந்த
நாட்களில் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. அவரது
தெய்வீக அறிவு உள்ளத்துக்கு வெளிப்பட்டு அறியவேண்டியதாகும்.
"நான் என்பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்
பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்" என்றார். அந்தப்படியே
அவர் தமது ஆவியால் அவர்களுக்குள் வந்து, தம்மை அவர்கள் உள்
ளத்துக்கு வெளிப்படுத்தினபோது, அவருக்கும் பிதாவுக்குமுள்ள
சம்பந்தத்தைக் கண்டார்கள். அவர் அவர்களோடிருந்தபோது அவர்
போதனைகளை அறிந்துகொள்ளவில்லை. இப்போது அவரே அவர்
களுக்குள்ளிருந்து போதிக்க யாவையும் அறிந்து கொண்டார்கள்.
மூன்று வருஷமாக அறிய முடியாத காரியங்களை அரைமணிநேரத்
தில் அறிந்து கொண்டார்கள். முன்னே ஆண்டவர் மாதிரியைப் பின்
பற்ற அவர்கள் பிரயாசப்பட்டும் முடியவில்லை இப்போது அவரே
அவர்களுக்குள் வந்து ஜீவித்து தம்மைப்போல் நடக்கும்படி அவர்
களைப் பலப்படுத்தினார். முன்னே ஆண்டவர் ஏவின வேலைகளைச்
செய்தார்கள். இப்போது அவரே அவர்களுக்குள்ளிருந்து கிரியை
நடப்பித்தார். அப்படியானால் பெந்தெகொஸ்தே நாளின் விசேஷ
மென்ன? முன்னே சீஷர்களுக்கு வெளியேயிருந்து ஜீவித்து, உப
தேசம்பண்ணி, கிரியைகளை நடப்பித்த ஆண்டவர், இப்போது
சீஷருக்குள்ளே வந்து தாம் முன்செய்த வேலையை அவர்கள் மூல

மாய்ச் செய்தார். தமது ரட்சிப்பை அவர்களுக்குள் பலிதப்படுத்தினார். திருச்சபை உண்டான ரகசியம் இதுதான். இவ்வாறு தமது ஆவியினால் அவர்களுக்குள் ஜீவனாக வெளிப்பட்டு, அவர்களைத் தம்மோடும், அவர்களை ஒருவரிலொருவரோடும் இணைத்து தமது சரீரமாகிய சபையை ஸ்தாபித்தார். ஆவியினால் நிறைந்தவர்கள் ஆவியைப்பற்றிப் பேசாமல் கிறிஸ்துவைப் பற்றியே பேசினார்கள். ஏனென்றால் ஆவியானவர் தம்மை வெளிப்படுத்தாமல் கிறிஸ்துவை வெளிப்படுத்தி அவரை மகிமைப் படுத்தும்படி வந்தவர். "அவனவன் தான் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்."

4. தம்மை வெளிப்படுத்தும் சரீரமாகக் கட்டினார். கிறிஸ்துவின் சுயசரீரம் மற்ற மனுஷருக்கு அவரை வெளிப்படுத்தும் சாதனமாயிருந்ததுபோல, திருச்சபையாகிய சரீரம் அவரை உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டும். "நீங்கள் எனக்குச் சாட்சிகள்" என்றார். தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சொல்லுகிறவர்கள் சாட்சிகள். சீஷர் ஆண்டவரிடத்தில் கண்டதையும் கேட்டதையும் உலகத்துக்கு அறிவிக்கவேண்டியவர்களே. ஆகிலும் சாட்சிகள் என்பதற்கு இதிலும் மேலான கருத்துண்டு. அதாவது அவர்கள் தங்கள் வாயால் அவரைப்பற்றிப் பிரசங்கிப்பதுந் தவிர, தங்கள் ஜீவியத்தால் அவரை எப்படிப்பட்டவரென்று வெளிப்படுத்தும் மாதிரிகளாயிருக்கவேண்டும். சாட்சிகள் என்பதற்கு மாதிரிகள் என்று அருத்தம். கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவது லேசு, அவரைக் காண்பிப்பதோ கஷ்டம். ஆண்டவருக்கு இரண்டும் தேவை. தலை எப்படிப்பட்டதென்பது சரீரத்தில் விளங்கும். மதிகெட்ட தலையோ அல்லது ஞானமுள்ள தலையோ என்பது சரீரத்தின் கிரியைகளினால் வெளிப்படும். நான் என் பிதாவினிடம் போகிறேன், உலகம் இனி என்னைக் காணாது, நீங்கள் என்னை உங்களுக்குள் இருக்கக் காண்பீர்கள். ஆகையால் நான் எப்படிப்பட்டவரென்பதை நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். இதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்றார்.

ஆவியின் ஜீவனும் சரீரத்தின் ஜீவனும் ஒன்றென்று ஏற்கனவே கவனித்தோம். கிறிஸ்துவின் ஜீவனால் பிழைத்த, அவருடைய அன்பால் ஒருவரோடொருவர் இணைக்கப்பெற்று, அவர் ஆவியால் கிறிஸ்துவை தங்களுக்குள் கண்ட அவரது சரீரமாகிய சபை ஆண்டவரை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் சபையாயிருக்கும். நம்மில் காணப்படும் பாவங்களும், கிறிஸ்துவின் சிந்தைக்கு விரோதமான காரியங்களும் ஆண்டவரை உலகத்துக்கு மறைக்கின்றன. அவரைத் தப்பாய்க் காண்பிக்கிறோம். ஆண்டவர் சபையை ஸ்தாபித்த நோக்கம் தவறுகிறது. அவர் நமக்குள் வசிப்பது உண்மையானால் அவரது பரிசுத்தம், தாழ்மை, சாந்தம், பொறுமை, அன்பு, அனுதாபம், மன்னிக்கும் சிந்தை, நன்மைசெய்யும் குணம், தேவசித்தப்படி பிழைத்தல், ஆத்மவாஞ்சை முதலான லட்சணங்கள் நம்மில் காணப்படவேண்டும். மாதிரிக் கூண்டுகளாகிய நம்மைப் பார்த்து கிறிஸ்துவை இன்னாரென்று மனுஷர் அறிந்து கொள்வார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை "அவனவன் இன்னவிதமாகக் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன்."

மார்க்கவிஷயத்தில் நாம் மிகவும் நெருக்கடியான காலத்திலிருக்கிறோம். நமக்கு இது பரீட்சைகாலமாகும். இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்தால் இந்துக்களை கிறிஸ்துமார்க்கத்தில் சேர்க்கும் வேலையை மிஷனெரிமார் நடத்திப்போக இடங்கொடுப்பீர்களா வென்று ஓர் பத்திரிகாசிரியர் மகாத்மா காந்தியைக் கேட்க அவர், கல்விச்சாலை வைத்தியசாலை மூலமாய் மதமாற்றஞ் செய்வது தமக்குப் பிரியமில்லையென்றும், எல்லா மார்க்கங்களிலும் சத்தியமுண்டென்றும், அவரவர் மதம் அவரவருக்குப் போதுமென்றும், ஆனால் உண்மையான குணப்பிரசாரங்களுக்குத் தாம் விரோதியல்லவென்றும் சொன்னார். அவரை மதிப்பவர்கள் அவர் சொன்னதை வேதவாக்காகக் கொண்டு அப்படியானால் கிறிஸ்துமார்க்கத்தில் சேரவேண்டிய அவசியமில்லை யென்பதாகவும் பேசினார்கள். அவர் சொன்ன வார்த்தையின் நிமித்தம் பலரும் பலவிதமாய்ப் பேசவும் எழுதவும் ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட மகாத்மா மறுபடியும்

தாம் சொன்னதை விளக்கிக்காட்டி, உண்மையான குறைப்படுதலை நான் தடுக்கிறவனல்ல, ஆனால் தகாத முறைகளால் மதமாற்றஞ் செய்வதை நான் இன்னும் ஆட்சேபிக்கிறேன் என்றார். அவர் இவ்வாறு கூறினதால் கிறிஸ்துமார்க்கத்துக்கு ஆபத்து வந்ததென நாம் கலங்க அவசியமேயில்லை. கடவுளருளிய ஜீவனுள்ள மார்க்கத்தை அழிக்க ஒருவராலும் முடியாது. ஆனால் கிறிஸ்து மார்க்கத்தின் பேரில் இவ்வாறு இந்துக்கள் யாவரும் கவனஞ்செலுத்த நேரிட்டதும் தேவச் செயலே. மிஷனெரிமாரும், சுதேச போதகர்களும், பிரசங்கிகள் யாவரும் தங்கள் ஜீவியத்தைக் குறித்தும், தாங்கள் செய்துவரும் வேலையின் தன்மையைக் குறித்தும் ஜாக்கிரதையாயிருப்பதற்கு இது அவசியம். இந்துக்கள் மத்தியில் சஞ்சரிக்கும் கிறிஸ்தவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் எந்த விஷயத்தில் தாங்கள் விசேஷித்தவர்கள் என்பதைக் காட்டுவதற்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மகாத்மாவின் வார்த்தைகளும் அவற்றாலுண்டான தர்க்கங்களும் நமக்குத் தீமையாயிராமல் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமது நடுவில் பற்றியெரியும் அக்கினியாயிருக்கின்றன.

மேலும் மகாத்மா எவ்வளவு பெரியவராயிருந்தபோதிலும், தாழ்மை, சாந்தம், பொறுமை, சுயவெறுப்பு, முதலான நற்குணங்கள் வாய்த்தவராயிருந்தாலும், பவுலும் மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை இன்னாரென்று அறிந்திருந்தது போல அவர் அறிந்தவரல்ல. பவுலுக்கும் அவரைப்போன்ற விசுவாசிகள் யாவருக்கும் கிறிஸ்து மார்க்கத்தில் வெளிப்பட்ட கடவுள். மகாத்மா காந்திக்கோ கிறிஸ்து ஓர் சிறந்த போதகராக மாத்திரம் தோன்றுகிறார். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தர் என்று ஒருவரும் அறியமுடியாது." அப்படியிருக்க அந்தந்த மதம் அவரவருக்குப் போதுமென்று அவர் சொன்னதைக் குறித்து நாம் ஏன் ஆத்திரப்படவேண்டும்? அவர் சொன்னதைக் குறித்து ஆயாசப்படாமல் கிறிஸ்து இன்னாரென்பதை உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டியது சரீரமாகிய சபையின் கடமை. ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரமாயிருந்த அநேகர் விழித்தெழும்படி ஆண்டு-

விட்ட மகாத்மாவுக்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். அவர் கிறிஸ்தவர்கள் காரியங்களை கவனிக்காதவரல்ல. பேர்க்கிறிஸ்தவர்களுடைய தகாத நடக்கைகளையும், உலக சிந்தையையும், அதிகாரப் பெருமையையும், சுயநலத்தையும் அவர் அறிந்தேயிருக்கிறார். "கிறிஸ்துவை மதிக்கிறோம், அவரைப் பின்பற்ற விரும்புகிறோம், ஆனால் உங்கள் சபையில் சேரமாட்டோம்" என்று இந்த நண்பர்கள் நம்மிடம் சொல்வதற்குக் காரணமென்ன? இதைப்பற்றி நாம் யோசிக்கவேணும். வீண் வைராக்கியங் கொள்வதில் பிரயோஜனமில்லை. நமது பாவங்களை உணர்ந்து கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவது நல்லது. ஆலயங்களாலும் புறம்பான ஆசாரங்களாலும் காரியம் பலிக்காது. நாமே கடவுள் வசிக்கும் ஜீவனுள்ள ஆலயமாகவேண்டும். நாமே பிறர் படிக்கும் நிருபங்களாகவேண்டும். நாமே நற்கந்தமாக மணக்கவேண்டும். நம்மில் கனிகள் உண்டானால் பட்சிகள் தாங்களாகவே வரும். நமக்குள் ஜீவதண்ணீருண்டானால் தாகமுள்ளோர் தண்ணீரண்டை வருவார்கள். கிறிஸ்துவின் சிந்தையற்றுப் பேருக்குக் கிறிஸ்தவர்களாயிருந்துகொண்டு, மற்றவர்களைக் குணப்படுத்தப் பார்ப்பது பிரயோஜனமற்ற வேலையாகும். ரோஜாவின் மணத்துக்கும், கரும்பின் மதுரத்துக்கும் விளம்பரம் தேவையில்லை.

ஆகையால் ஆண்டவர் சபையைக் கட்டின மாதிரியையும் நோக்கத்தையும் மனதில் வைத்து நமது ஊழியத்தை நடத்துவோமாக. ஆலயங்களை எப்படிக் கட்டவேண்டும், ஞானஸ்நானம் இராப்போஜனம் எப்படிக்கொடுக்கவேண்டும், ஆராதனைகளை எப்படி நடத்தவேண்டும், பண்டிகைகளை எப்படிக்கொண்டாடவேண்டும் என்பதைக் குறித்து அவர் நமக்கு விவரம் கூறவில்லை. ஆவியினால் போதிக்கப்பெற்ற கடவுளடியார் திருச்சபையின் பக்தி விருத்திக்கேதுவாக இவைகளைச் செவ்வையாய் நடத்திக்கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவருடைய முழுக்கவனமும் பேதுரு, யோவான் முதலான ஆட்கள் பேரிலேயே இருந்தது. அவர்கள் ஜீவியம் மாற்றப்படவேண்டுமென்பதே அவருடைய தீராத வாஞ்சை. இன்னும் அதுவே அவர் வாஞ்சை. நமது சரீரமாகிய சபையை

ஆண்டவர் கட்டத் தொடங்கினபோது அவர்களுக்கு ஆலயமில்லை. நாம் அனுசரித்துவரும் அநுகூலமான காரியங்களும் சௌகரியங்களும் அவர்களுக்கில்லை. ஆனால் அவர்களே "ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருந்தார்கள்". கடவுள் மெய்யாகவே அவர்களுக்குள் வசித்தார். நமது கவனமோ புறம்பான ஆசரிப்புகளில் பிரதானமாகச் செல்லுகிறது. இவைகள் ஒழுங்காய் நடந்தால் நமக்குத் திருப்தியும் உண்டாகிறது. எத்தனமோ, காரியமோ எது பிரதானம்? காரியமே பிரதானம். கிறிஸ்து தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால் அவருடைய சிந்தையும் அவருடைய சாயலும் நமக்குக் கிடைக்கவேண்டும். அவர் மூலமாய் பிதாவோடு நாம் ஐக்கியமாகிப் பிழைப்பதால் நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாகயிருக்கவேண்டும். மற்றவர்களுக்கு நாம் ஜீவதண்ணீருள்ள நதிகளாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் இதுவே. இந்த நோக்கம் நம்மில் நிறைவேறும்படி கிருபையின் வரங்கள் அருளப்பட்டிருக்கின்றன. காரியம் பலிக்காவிட்டால் நமது மார்க்க ஆசாரங்கள் யாவும் வீணும் வியர்த்தமுமாகும். பேர்க்கிறிஸ்தவர்களின் பெருக்கம் திருச்சபைக்குப் பெருத்த இடறல். கிருபையுள்ள ஆண்டவர் தமது ஆவியால் நம்மை உயிர்ப்பித்து ரட்சிப்பாராக. தமது சரீரமாகிய சபையில் நாம் ஜீவனுள்ள அவயவங்களாயிருக்கும்படி அருள்செய்வாராக.

# V

## To me to live is Christ

## என் பிழைப்பே கிறிஸ்து.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" பிலி. 1 : 21.

கிறிஸ்துமார்க்கம் என்றால் என்னவென்று புறம்பேயுள்ள ஒருவரைக் கேட்டால் அவர்: ஒரு கூட்டம், ஒரு ஆலயம், ஆராதனை, போதகர், பிரசங்கம், ஞானஸ்நானம் என்பவைகளை நினைப்பார். ஏனென்றால் அவர் புறம்பேயிருந்து கண்டவைகள் அவைகளே. நம்மில் அநேகருடைய கிறிஸ்து மார்க்கமும் அதுதான். தாங்கள் அநுசரித்துவரும் ஆசாரங்களே கிறிஸ்துமார்க்கம் என்பது பொதுவான எண்ணம். இவைகளை ஒழுங்காய் ஆசரித்தால் ஓர் திருப்தி; தவறினால் விசனம். ஆராதனைக்குப்போகத் தவறிவிட்டால், வேதம் வசிக்கத் தவறிவிட்டால் கடவுள் தங்கள்மேல் கோபமாயிருப்பதுபோல் நினைத்து இவர்கள் துக்கிப்பார்கள். இவைகளின் நோக்கம் என்னவென்பதையும், எது பிரதானமென்பதையும் இவர்கள் யோசிக்கிறதில்லை. நாம் ஆசரித்துவரும் காரியங்கள் யாவும் ஆண்டவர் நமக்கருளிய கிருபையின் எத்தனங்களாகும்; நாம் அடையவேண்டிய ஓர் பிரதானமான காரியத்துக்கு இவைகள் சாதனங்களாகும். மனுஷர் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு நோக்கமுண்டு. நோக்கம் கைகூடாவிட்டால் பட்டபாடுகள் யாவும் வீணாகும். ஏராளமான திரவியம் செலவுசெய்து ஒருவன் கப்பலை உண்டுபண்ணுகிறான். அந்தக் கப்பல் பிரயாணத்துக்கு உதவாது என்று தள்ளப்படுமானால் அவன் கஷ்டத்துக்கும் துக்கத்துக்கும் அளவிராது. கிறிஸ்தவர்களில் அநேகர் நோக்கமற்றுக் காரியங்களை வழக்கம்போல் நடத்திக்கொண்டு போகிறார்கள். நமது மார்க்கத்தின் நோக்கம் கிறிஸ்து. நமது வேத அறிவு, ஆராதனைகள், கொள்கைகள் இவை யாவற்றி

னுடைய முடிவான நோக்கம் கிறிஸ்து. அவரே மெய்ப்பொருளானவர். கிறிஸ்துவை நமது ஜீவனாக அனுபவிக்கும்போதுதான் கிறிஸ்து மார்க்கத்தின் வல்லமையை அறிவோம். ஏனென்றால் கிறிஸ்துவே கிறிஸ்துமார்க்கம். ஆராதனைகள், கொள்கைகள், ஆசாரங்களைத் திட்டமாய் அனுசரித்துவந்த அப்போஸ்தலன் தமது கிறிஸ்துமார்க்கம் இன்னதென்று சுருக்கிச் சொல்லுகிறார். "கிறிஸ்து எனக்கு ஜீவன்." அதாவது "நான் பிழைப்பதே கிறிஸ்து" என்கிறார். கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே நாம் பிழைக்காவிட்டால் நாம் அனுசரித்துவரும் சகல காரியங்களும் வீணாகும்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அப்போஸ்தலன் எந்தச் சமயத்தில் சொன்னார்? அவர் ரோமாபுரிச் சிறையிலிருந்தபோது பிலிப்பியருக்குத் தாம் எழுதின நிருபத்தில் இந்த வார்த்தைகளைச் சொன்னார். அச்சமயத்தில் இரண்டு காரியங்கள் அவர் கண்முன் நின்றன. ஒன்று நேரோ ராயன் கட்டளை பிறந்தவுடன், தான் பட்டணத்துக்கு வெளியே கொண்டு போகப்பட்டு, சிரச்சேதமடைந்து சாகவேண்டும். ஒருவேளை ராயன் விடுதலை செய்தால் உடனே பிலிப்பிப் பட்டணம்போய் அங்குள்ள தேவமக்களைக்கண்டு அவர்களுக்கு ஆசீர்வாதமான ஊழியம் செய்யவேண்டும். இவ்விரண்டினாலும் நெருக்கப்பட்டார். சரீரத்தை விட்டுப்பிரிந்து கிறிஸ்துவிடம் போகவும் அவருக்கு ஆசை. அது அவருக்கு அதிக நன்மை. ஆனால் சரீரத்தில் பிழைத்திருப்பதோ பிலிப்பியருக்கு அதிக நன்மை. இவற்றில் எதைத் தெரிந்துகொள்வதென்று அவருக்குத் தெரியவில்லை. இரண்டும் அவருக்குச் சரிதான். கிறிஸ்து அவருக்கு ஜீவனாகையால் சாவு அவருக்கு லாபம். சரீரத்தில் அவர் தங்கினாலும் அவருக்கு ஜீவன் கிறிஸ்துவே. சரீரத்தைவிட்டுப் போனாலும் அவருக்கு ஜீவன் கிறிஸ்துவே. ஆகையால் சரீரத்தில் இருந்தாலும் சரீரத்தை விட்டுப்போனாலும் இரண்டும் அவருக்கு ஒன்றுதான். இவ்வளவு நிச்சயமான அனுபவம் நமக்கிருந்தால் எவ்வளவு பாக்கியம்! "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்னும் இந்த வசனம் எல்லாருக்கும் தெரியும். தெரிந்து பிரயோஜனமென்ன? கிறிஸ்துவை ஜீவனாக

கண்டவர்கள் எத்தனைபேர்? எங்கள் பிழைப்பே கிறிஸ்து என்று சொல்லக்கூடியவர்கள் எத்தனைபேர்? ஒருவன் கிறிஸ்துவைத் தனக்கு ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே பிழைக்கிறதாயிருந்தால் அவன் ஜீவியம் முற்றிலும் மாறி அநேகருக்கு அவன் ஆசீர்வாதமாயிருப்பான் என்பது நிச்சயம். கிறிஸ்துவே கிறிஸ்துமார்க்கம்.

“கிறிஸ்து எனக்கு ஜீவன்” என்று சொன்ன அப்போஸ்தலனுடைய கருத்து என்னவென்பதை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

1. **ஜீவனின் உற்பத்தி கிறிஸ்து.** அப்போஸ்தலன் எந்த நாளில் கிறிஸ்துவைக் கண்டடைந்தாரோ அதையே தமது பிறந்த நாளாகக் கொண்டாடினார். அந்த நாளை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. அதற்கு முன்னுள்ள காலத்தை உயிருள்ள காலமாக அவர் எண்ணவில்லை. அதை மரித்தகாலமாகவே மதித்தார். கிறிஸ்துவைத் தரிசித்த நாளிலேதான் அவர் பிழைத்தார். ஆகையால் தமது ஜீவகாலத்தை இரண்டாகப் பிரிக்கிறார். முந்தினதை மரித்த காலமென்றும் பிந்தினதைப் பிழைத்த காலமென்றும் பேசுகிறார். மரித்த நிலைமையைப் பழைய மனுஷனென்றும் பிழைத்த நிலைமையைப் புது மனுஷனென்றும் அழைக்கிறார். அவர் புதிய ஜீவனை கிறிஸ்துமூலமாய்க் கண்டடைந்தது தமக்கே ஆச்சரியமாயிருந்தபடியால் “ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” என்று கூறுகிறார். பின்னானவைகளை மறந்து, புதிதாய்த் தாம் பெற்றுக்கொண்ட ஜீவனாலே, ஆவிக்குரிய புதிய காரியங்களிலே பிழைத்தார். கிறிஸ்துவை அவர் ஜீவனாகக் கண்டபோது அவர் பிழைப்பு முழுவதும் கிறிஸ்து மயமாயிருந்தது.

அப்போஸ்தலனுடைய முந்தின ஜீவியத்தில் விசேஷம் ஒன்றுமில்லையா? பவுலே! நீர் கிறிஸ்துவைச் சந்திப்பதற்குமுன் எவ்வளவோ விசேஷித்த மனுஷனாயிருந்தீர். எல்லாரும் அதை அறிவார்கள். கீர்த்திபெற்ற கமாலியேலின் பாதத்திலிருந்து கல்வி கற்றீர். யூதமார்க்கத்தின் சகல சிலாக்கியங்களையும் அனுபவித்தீர். நீர் துன்மார்க்கமாக நடந்தவரல்ல. நீர் பரிசேயரில் பரிசேயன். எபிரேய

யில் பிறந்த எபிரேயன். நியாயப் பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவர். கடவுளுக்காக மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவர். அறிவிலும் ஞானத்திலும் சிறந்தவர். அப்படியிருக்க அக்காலத்தைச் செத்தகாலமென்று நீர் சொல்வதெப்படி? மெய்தான். ஆனால் அக்காலத்தில் காரியம் அறியாத குருடனைப் போலிருந்தேன். மார்க்கம் என்னும் பேராலே நான் என்பவனையே பூஜித்துவந்தேன். தமஸ்குவுக்குப் போகிறவழியில் நான் கண்டகாட்சியும் கேட்ட வார்த்தைகளும் செத்தவனைப்போல் என்னைக் கீழே விழச்செய்தன. நான் என்பவன் நொறுங்கினான். என் ஜீவனாகிய கிறிஸ்து சிங்காசனம் ஏறினார். அதுமுதல் அவரே எனக்கு ஜீவனானார். முன்னே எனக்கு மேன்மையாய்த் தோன்றினவைகள் எவைகளோ, லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவையெல்லாம் இப்பொழுது எனக்குக் குப்பையாகத் தோன்றுகின்றன. கிறிஸ்து என்னைப் பிடித்ததுமுதல் அவரே எனக்கு ஜீவனானார். அவர் சித்தமே எனக்குச் சித்தமாயிற்று. என் ஜீவனின் உற்பத்தி அவரே. நான் பிழைப்பதும் அவரே. ஆகையால் நான் கிறிஸ்துவைக் கண்டநாளே நான் பிறந்த நாள் என்கிறார்.

அநேகர் தாங்கள் பிறந்தநாளை வருஷாவருஷம் கொண்டாடுகிறார்கள். அந்நாளில் இனத்தார் சிநேகிதர் நம்மை வாழ்த்துவதும் வெகுமதிகளை அனுப்புவதும் வழக்கம். ஆண்டவர் நம்மை வருஷாவருஷம் காப்பாற்றிவந்த தயவை நினைத்து அவரை ஸ்தோத்திரிப்பது நல்லது. ஆனால் நமது ஜீவனாகிய கிறிஸ்துவை நாம் கண்டடைந்த நாளே கடவுள் பார்வையில் உண்மையாய் நாம் பிறந்தநாள். அக்கிரமங்களிலேயும் பாவங்களிலேயும் மரித்தவர்களாயிருந்த நாம் ஜீவனாகிய கிறிஸ்துமூலமாய் எந்த நாளில் உயிர்ப்பிக்கப் பட்டோமோ அதுவே நாம் பிறந்த நாள். இதற்கு மறுபிறப்பு என்று பேர். இது ஆவியின் பிறப்பு. இந்தப் பிறப்பிலேயே நாம் "மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பிரவேசிக்கிறோம்." சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு நீங்கி தேவராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். பழைய காரியங்கள் ஒழிந்தன, சகலமும் புதிதாயின. இன்று

நமக்குச் சோதனைகளும், போராட்டங்களும், கலக்கமும் இருந்த போதிலும் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது ஒரு பெரிய மாறுதல் நம்மில் சம்பவிக்கிறதென்பது நிச்சயம். "நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாகும்படி வந்தேன்" என்று ஆண்டவர் சொன்னார். "குமாரனையுடையவன் ஜீவனுடையவன்." ஆகையால் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லும்போது நமது ஜீவனின் உற்பத்தி கிறிஸ்து என்று அர்த்தம்.

2. ஜீவனின் வளர்ச்சி கிறிஸ்து. நாம் கிறிஸ்துமூலமாக ஜீவனைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, அந்தப் புதிய ஜீவன் வளர்ந்து பூரணப்படுவதும் அவராலேயே. அப்போஸ்தலன் கிறிஸ்துவைச் சொந்தமாக்கின சமயத்தில் ஜீவனைக் கண்டடைந்தார். அதுமுதல் இதுவரை முப்பது மூன்று வருஷங்களாகின்றன. இதற்கிடையில் எத்தனையோ மாறுதல்கள்! எத்தனையோ பாடுகள், எத்தனையோ பிரயாணங்கள், எத்தனையோ கஷ்டங்கள், சவால்கள்! கடைசியாக இப்போது சிறைப்படுத்தப்பட்டு மரணமோ விடுதலையோ எதுவென்று தெரியாத நிலைமையிலிருக்கிறார். அப்படியிருந்தும் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அவர் சாதிக்கும் உறுதித் தொனியோ மங்கவில்லை. அவர் பெற்றுக்கொண்ட ஜீவன் குறையவுமில்லை, மறையவுமில்லை, அழியவுமில்லை. அது நாளுக்கு நாள், வருஷத்துக்கு வருஷம் அவருக்குள் வளர்ந்து பெருகி அவர் ஜீவியத்திலே அவருக்குள் ஜீவனாயிருந்தார். கிறிஸ்து மாறவில்லை. திருச்சபை சரித்திரத்தில் எந்த மனிதனாவது பவுலைப்போல் கிறிஸ்துவின் ஜீவனைத் தன் ஜீவியத்தில் வெளிப்படுத்தினதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான தேவ நிர்ணயத்தை அவரைப்போல் தன் அனுபவத்தில் கண்டவருமில்லை. இதற்குக் காரணமென்ன? அவர் பிழைப்பே கிறிஸ்து. "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை! தன் சுய ஞானத்தால், சுய பலத்தால், சுய நீதியினால் ஒன்றையும் அவர் செய்யவில்லை. "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே

எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" என்று சொல்லுகிறார் (பிலி 4 : 13). கிறிஸ்துவாகிய ஜீவனாலே அவர் பிழைத்தது மாத்திரமல்ல, அந்த ஜீவனையே வளர்த்தார்; சகல கிரியைகளையும் நிறைவேற்றினார். நான் கிறிஸ்துவைப் பிடித்த பிடியல்ல, அவர் என்னைப் பிடித்த பிடி; என் நம்பிக்கையல்ல, அவர் என்மீது வைத்த நம்பிக்கை; என் உண்மையல்ல, அவர் உண்மை; என் அன்பல்ல அவர் அன்பின் பெருக்கம்; என் பலமல்ல அவர் வல்லமை; என் தீர்மானமல்ல அவர் மாறாத் தீர்மானம் இதுவரை என்னைப் பிழைக்கச் செய்திருக்கிறது. எல்லாரையும் விட அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன் ஆகிலும் நான் அல்ல, எனக்குள்ளிருந்த தேவகிருபையே அப்படிச் செய்தது என்கிறார். அந்தத் தேவகிருபை கிறிஸ்துவே.

நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணப்படும் சகல குறைவுகளுக்கும் காரணம் நாம் நம்மையும் நமது வேலைகளையும் பிரதானமாய் நோக்குவதால்தான். எந்த ஜீவனால் நாம் பிழைத்தோமோ அந்த ஜீவனையே நாம் வளர்த்து பெருகவேண்டும். கிறிஸ்துவை நாம் ஜீவனாகக் கண்டபோது நமது ஒன்றுமில்லாமையை முற்றிலும் உணர்ந்து நம்மைத் தாழ்த்தி அவரையே உறுதியாகப் பிடித்தோம். காலம் செல்லச் செல்ல, அறிவும் வேலைகளும் பெருகவே, கிறிஸ்து நமது ஜீவன் என்பதை மறந்தோம். அவரோடிருக்கவேண்டிய இடைவிடாத உயிருள்ள ஐக்கியத்தை விட்டுவிட்டோம். சகலமும் நமது யோசனைகளும் நமது முயற்சிகளுமாக மாறிவிட்டன. ஜீவனுள்ள கிறிஸ்துவாலே நாம் பிழைக்கிறதுமில்லை, உழைக்கிறதுமில்லை. ஒரு ஜெபம் செய்துவிட்டால் சகலமும் முடிந்ததென்று நினைக்கிறோம். ஒரு கூட்டத்தை நடத்தும்போது ஆரம்பத்தில் வேதம் வாசித்து சுருக்கமாய் ஜெபித்துவிட்டுப் பகல் முழுவதும் பேசுவதும் தர்க்கிப்பதும் தீர்மானிப்பதும் நமது சித்தமாயிருப்பது எவ்வளவு வஞ்சகமான காரியம். கிறிஸ்துவே நமது ஜீவனின் உற்பத்தி. அவரே நமது ஜீவனின் வளர்ச்சி. அவரே நமது சகல காரியங்களிலும் விளங்கவேண்டிய ஜீவன். அவர் திராட்சச்செடி; நாம் கொடிகள் என்றால் அர்த்தமென்ன? கிறிஸ்துவை அடிமரமாகவும் நம்

கைக்கிளைகளையும் கவனிக்கச்சொல்லுவது எமக்கு வழக்கம். ஒரு விதத்தில் அது சரியே. ஆண்டவர் சொன்ன அந்த உவமை மேலான கருத்துள்ளது. அவர் தம்மை அடிமரமாகப் பேசவில்லை. "நானே திராட்சச்செடி" என்றார். திராட்சச்செடியானது என்ன? வேர், அடிமரம், கொடிகள், இலைகள், கனிகள் எல்லாம் சேர்ந்தே திராட்சச் செடி. அடிமரமாத்திரம் திராட்சச்செடியல்ல, அல்லது கொடிகள் மாத்திரம் திராட்சச்செடியல்ல. எல்லாம் சேர்ந்தே திராட்சச்செடி. இந்தத் திராட்சச் செடியின் ஜீவன் ஒன்றே. செடியின் ஜீவனும் கொடிகளின் ஜீவனும் ஒரே ஜீவன். கொடிகள் உண்டாவதும், வளருவதும், பூரணப்படுவதும், கனிகொடுப்பதும் செடியின் இடைவிடாத ஜீவனாலேயே. "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அப்போஸ்தலன் சொன்னபோது இந்த கருத்துதான் அவர் மனதிலிருந்தது. அதாவது தமக்குத் தெரியும் வழியில் கிறிஸ்துவால் நான் பிழைத்த மாத்திரமல்ல, இந்த ரூபமாய்த் தழைத்து வருஷக்காலமும் அவராலேயே பிழைத்திருக்கிறேன். அவரே என் ஜீவனின் உற்பத்தியும் வளர்ச்சியுமானவர். "நான் அவைகளுக்கு ஜீவனுண்டாகவும் அந்த ஜீவன் பரிபூரணப் படவும் வந்தேன்". (யோ. 10:10).

3. ஜீவனின் பிரமாணம் கிறிஸ்து. நியாயப் பிரமாணத்தாலே நீதியைத் தேடினவர் பவுல். அவர் அறியாத பிரமாணம் இல்லை. நியாயப் பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவர். நியாயப் பிரமாணத்தில் அவருக்கு இவ்வளவு பற்றுதல் இருந்தபோதிலும் மெய்ச் சமாதானம் அவருக்கில்லை. ஜீவனுக்குப் பதிலாக மரணத்தையும் ஆசீர்வாதத்துக்குப் பதிலாகச் சாபத்தையும் கண்டார். அவர் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டபோது கிறிஸ்துவே அவருக்குப் பிரமாணமானார். கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் அவரை பாவம் மரணம் என்னும் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்று. சுமப்பதற்கு அரிதான சட்டங்களாலும் பிரமாணங்களாலும் பாரஞ்சுமந்த பவுல் கிறிஸ்துவைத் தமது ஜீவப் பிரமாணமாகக் கொண்டபோது, நியாயப் பிரமாணத்திலும் மேலான பிரமாணம்

தம்மை ஆளுவதைக் கண்டார். "கிறிஸ்துவே நியாயப் பிரமாணத்தின் முடிவு."

கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்ட கலாத்திய சபையினர் அதில் நிலைத்திராமல் யூதரால் வஞ்சிக்கப்பட்டு மறுபடியும் நியாயப் பிரமாண நுகத்தில் சிக்கிக்கொண்டதைக் கண்ட பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு: புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் படம்போல் வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. நியாயப் பிரமாணத்தினாலேயா ஆவியைப் பெற்றீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா அற்புதங்கள் நடந்தன? நியாயப் பிரமாணத்தினாலேயா நீதிமான்களானீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா தேவ மக்களானீர்கள்? நியாயப் பிரமாணத்தினாலேயா ஆசீர்வாதத்தைப் பெற்றீர்கள்? நியாயப் பிரமாண ஆசரிப்புக்காரர் யாவரும் சாபத்துக்கும் மரணத்துக்கும் உரியவர்களாயிருக்கிறார்களே. ஏனெனில் நியாயப் பிரமாணம் முழுவதையும் தவறின்றிக் கைக்கொள்ளுகிறவன் ஒருவனுமில்லையே. அப்படியிருக்க கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்ற சபையினரான நீங்கள் மறுபடியும் நியாயப் பிரமாணத்துக்கு அடிமைகளானதென்னவென்று கேட்டார்.

கிறிஸ்துவின் பிரமாணம் அன்பு. அது புது உடன்படிக்கைக்குரியது. புது உடன்படிக்கைப் பிரமாணம் புஸ்தகங்களில் எழுதப்படாமல் இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொள்ளுகிறவன் அவரது அன்பின் பிரமாணத்தால் ஆளப்படுகிறான். அன்பின் பிரமாணத்துக்கு நிகரான பிரமாணமில்லை. சகல விதிகளும் பிரமாணங்களும் அன்புக்குள் அடக்கம். உலக சரித்திரத்தையும், மனிதர் காரியங்கள் காலத்துக்குக் காலம் மாறுவதையும் கவனித்தால் எத்தனை பிரமாணங்களைத்தான் உண்டாக்குவது? மீறுதல்களும் பெருகும் பிரமாணங்களும் பெருகும் காரியமேயொழிய வாய்க்காது. அவசரச் சட்டங்களை உண்டாக்கினபோதிலும் அவசர மீறுதல்களும் கூடவே பெருகும். சட்டங்களும் பிரமா

ங்களும் நற்குணத்தை உண்டாக்குவதில்லை. ஒரு தகப்பன் தன் மகனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினபோது: நீ இப்படி அப்படி நடக்கக்கூடாதென்று கட்டளைகொடுத்து அனுப்பினான். மகன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஏதோ ஒரு தப்பிதம் செய்ததாகத் தெரியவந்தது. தகப்பன் மகனைப்பார்த்து நீ ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்க அவன்: நீங்கள் அப்படிச் செய்யவேண்டாம் என்று சொல்லவில்லையே என்றான். சரி, நீ இதையும் செய்யக்கூடாதென்று கற்பித்து அனுப்பினான். அன்று வேறொரு புதிய குற்றத்தைச் செய்ததாகத் தெரியவந்தது. தகப்பன் பார்த்தான், இது என்ன தொந்தரவாயிருக்கிறது, புதிதுபுதிதாக அவன் தப்பிதத்தைச் செய்ய, நானும் புதிதுபுதிதாகச் சட்டங்களை உண்டுபண்ணினால் இதற்கு முடிவு எங்கே என்று எண்ணி, மகனைத் தன்னிடம் அழைத்து: மகனே நீ நல்லபிள்ளையாயிரு என்று மாத்திரம் சொல்லி அனுப்பினான். அந்த ஒரு சொல் மகனைச் சகல குற்றங்களிலுமிருந்து காப்பாற்றினது. இதுதான் அன்பின் பிரமாணத்தின் ரகசியம். கிறிஸ்துவை பிதாவுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மாசற்ற பரிசுத்தராய் நடத்தினது இந்த அன்பின் பிரமாணமே. கிறிஸ்து நமக்குள் வரும்போது அன்புமயமாகிய அவரே நமது ஜீவிய முழுவதுக்கும் பிரமாணமாகிறார். அன்பின் பிரமாணத்துக்கு அளவு எல்லையில்லை. கிறிஸ்து நமக்கு ஜீவனாகும்போது, நாம் அவராலே பிழைக்கும்போது, புறம்பேயுள்ள சட்டங்கள் அல்ல, நமக்கு நாமே பிரமாணங்களாகிறோம். சகல விஷயங்களிலும் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று அன்பு நமக்கு போதிக்கிறது. கிறிஸ்துவைத் தன் ஜீவியத்துப் பிரமாணமாக்கிக் கொண்டவன் ஆவிக்குரிய மேலான பிரமாணத்தின்படி நடக்கிறான். “கிறிஸ்து எனக்கு ஜீவன்” என்று அப்போஸ்தலன் சொன்னபோது இதுவும் அவர் கருத்தாகும்.

4. நமது ஜீவியத்தில் வெளிப்படுவார் கிறிஸ்து. அந்தந்த ஜீவன் தன்தன் இனத்தை வெளிப்படுத்துவது இயல்பு. ஜீவன் முயற்சி

யுள்ளது. மறைவான ஜீவன் தன் தன்மையைப் புறம்பே வெளிப்படுத்தும். வேம்பு தன் தன்மையாகிய கசப்பை வெளிப்படுத்தும். கரும்பு தன் தன்மையாகிய மதுரத்தை வெளிப்படுத்தும். மல்லிகை ரோஜா தங்கள் மணத்தை வெளிப்படுத்தும். ஜீவராசிகளெல்லாம் தம்தம் ஜீவனுக்குரிய தன்மையை வெளிப்படுத்தாமல் இல்லை. புலி ஆட்டைப்போல் சாந்தமாயும், ஆடு புலியைப்போல் மூர்க்கமாயுமிருக்கும் என்று எதிர்பார்ப்பது வீண். அப்போஸ்தலன் கிறிஸ்துவைத் தன் ஜீவனாகக் கண்டடையுமுன் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தினவர். தேவசாயலையணிந்த கிறிஸ்தவர்களைப் பலவாறு துன்பப்படுத்துவதும் கொலைசெய்வதும் அவருடைய கெட்டுப்போன ஜீவனுக்கு நியாயம்போலிருந்தது. அவரில் காணப்பட்ட சுயநீதி, குருட்டு வைராக்கியம், தற்பெருமை, மூர்க்கவெறி முதலான துர்க்குணங்களைப்பற்றி அவரே எடுத்துரைக்கிறார். அது நான் என்பவன் ஆளுகைசெய்த காலம். ஆனால் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டபின் அவர் காரியம் வேறே. "இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். அவர் பிழைத்த ஜீவன் கிறிஸ்துவாயிருந்தால், கிறிஸ்துவின் ஜீவனே அவரில் வெளிப்படவேண்டும். ஆ! என்ன மாறுதல்! இவர் இரண்டாம் கிறிஸ்துதானோ என்று சொல்லத்தக்கதாக பவுல் கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்திருந்தார். "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று சொன்னவரும் அவரே. அவரில் வெளிப்பட்ட சாந்தம், மனத்தாழ்மை, அனுதாபம், அன்பு, பொறுமை, சுயவெறுப்பு, சகோதர சிநேகம், முதலான லட்சணங்களைக் கவனிக்கும்போது அவர் கிறிஸ்துவின் அவதாரமோ வென்றும் நினைக்கவேண்டியதிருக்கிறது. இவ்வளவு பலத்த மாறுதலுக்குக் காரணம் கிறிஸ்து அவருக்கு ஜீவனாயிருந்ததே. கிறிஸ்துவாகிய ஜீவனாலே அவர் பிழைத்தார். அந்த ஜீவன் அவரில் வெளிப்பட்டது.

"கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று நாம் லேசாய்ச் சொல்லிவிடுகிறோம். அது உண்மையா? அவர் நமது ஜீவனா? நம் பிழைப்

பது கிறிஸ்துவா? நமது நினைவு, வாக்கு, செய்கை எப்படிப்பட்டவை? அவைகள் கிறிஸ்துவில் காணப்படுமோ? நாம் மனங்கொண்டபடி நடந்துகொண்டு "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லுவதில் பிரயோஜனமென்ன? பெருமையும், பொறாமையும் கோபமும், மூர்க்கமும், இடும்பும், பகையும், பிரிவினையும், தீமைசெய்யுங் குணமும், குடி வெறியும், துன்மார்க்கமும் கிறிஸ்துவில் காணக்கூடுமா? அவர் நமது ஜீவனானால், அவராலே நாம் பிழைப்பது மெய்யானால் அவர் ஜீவனுக்கு முற்றிலும் விரோதமான இத்தீயகுணங்கள் நம்மில் காணப்படுவது நியாயமா? நாம் இன்னும் கிறிஸ்துவுக்கொப்பாகப் பூரணராகவில்லை என்பது மெய்தான். இன்னும் நாம் அநேக விஷயங்களில் தவறுகிறோம் என்பதும் மெய்தான். ஆனாலும் நமது ஜீவியத்தின் வாஞ்சையென்ன? சகல பாவங்களுக்கும் நாம் நீங்கலாக, ஆவியானவருடைய உதவியினால் நாளுக்குநாள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறவேண்டுமென்பதல்லவா? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று சொல்லிக்கொண்டு அவருடைய குணத்துக்கும் சித்தத்துக்கும் விரோதமாய் நடந்தால் அது துணிகரமான பொய்யாகும். அவர் நமக்குள் பிழைப்பது மெய்யானால், அவர் தம்மை நமது மூலமாய் வெளிப்படுத்துவாரேயன்றி, பிசாசின் குணங்களை வெளிப்படுத்தமாட்டார். மார்க்க வைராக்கியத்தில் பிரயோஜனமில்லை. காரியத்தை அமர்ந்து யோசிக்கவேண்டும். ஆயிரம் காரியங்களை யோசிப்பார்கள். ஆத்ம காரியங்களை அமர்ந்து யோசிக்கிறவர்கள் யார்? கிறிஸ்து நமது ஜீவனின் உற்பத்தியும், வளர்ச்சியும், பிரமாணமுமானால் அவரது சிந்தை கட்டாயம் நம்மில் காணப்படவேண்டும். இல்லையானால் கிறிஸ்து நமக்கு ஜீவனாக இல்லை.

5. ஜீவியத்தின் நோக்கம் கிறிஸ்து. கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது, கிறிஸ்துவின் நோக்கமே பவுலின் நோக்கமாயிற்று. ஆண்டவர் ஜீவிய நோக்கம் என்ன? மனுக்குலத்தாரின் ரட்சிப்பே. கெட்டுப்போன குமாரர் குமாரத்திகளை பிதாவோடு ஐக்கியப்படுத்தும் நோக்கத்தோடே அவர் உலகில் வெளிப்பட்டார். அவர் மரித்து-

ஜீவியமும், நிகரற்ற உபதேசமும், அற்புத செயல்களும், கொடிய பாடுகளும், புத்திக்கெட்டாத மரணமும் மகத்துவமான உயிர்த்தெழுதலும், மானிடர் ரட்சிப்புக்காக அவர் தம்மில் நிறைவேற்றின அரிய கிரியைகளாகும். நாம் ரட்சிக்கப்படவேண்டும் என்கிற ஒரே நோக்கமே ஆண்டவர் பட்ட சகல பாடுகளுக்கும் காரணம்.

கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது கிறிஸ்துவின் நோக்கமே பவுல் நோக்கமுமாயிற்று. எதற்காக ஆண்டவர் பிழைத்தாரோ, உழைத்தாரோ, பாடுகள் அனுபவித்தாரோ, அதற்காகவே பவுலும் பிழைத்தார், உழைத்தார், பாடுகளை அனுபவித்தார். "எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொல்லுகிறார். பாவிகளின் ரட்சிப்பே அப்போஸ்தலனுடைய ஜீவியத்தின் நோக்கமாயிருந்தது. இதற்காக நீண்ட பிரயாணங்கள் செய்தார், மோசங்களில் அகப்பட்டார், உபத்திரவங்களைச் சகித்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எங்கும் கூறி அறிவித்தார். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு ரட்சிப்பைப் பெற்றவர்களுக்கு அங்கே சபைகளையும் ஸ்தாபித்தார். தமது ஞானப்பிள்ளைகளை நினைத்து இடைவிடாது ஜெபித்தார். அவர்கள் தவறிப்போகாதபடி அவர்களை விசுவாசத்தில் நன்றாக் கட்டும்படி சமயோசிதமான நிருபங்களை எழுதியனுப்பினார். சிறைச்சாலையும் விலங்குகளும் அவர் ஊக்கத்தைக் குறைக்கவில்லை. அவர் எழுதிய நிருபங்கள் நாளதுவரை உலகெங்குமுள்ள சபைகளுக்கு அழியாச் செல்வமாயிருக்கின்றன. ஆதிமுதல் திருச்சபையில் ஊழியஞ்செய்துவரும் கண்காணிமார், குருமார், பிரசங்கிகள், சபையார் அப்போஸ்தலனுக்கு எவ்வளவோ நன்றிபாராட்டக் கடனாளிகளாயிருக்கிறார்கள். அவர் ஊழியம் அவரோடு மறையாமல் கணக்கற்ற தேவ ஊழியருக்குச் சுதந்தரமாகக் கிடைத்திருக்கிறது. பிரசங்கங்களும் வியாக்கியானப் புஸ்தகங்களும் எங்கேயிருந்து வந்தன? தலைமுறை தலைமுறையாக தேவ ஊழியஞ்செய்து பிழைக்கிறவர்கள் பிரசங்கிக்கும் வாக்கியங்களை எங்கிருந்து எடுக்கிறார்கள்? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்னும் வாக்கியத்தை எடுத்துப் பிரசங்கிக்கிறோம். அந்த வசனத்தை நமக்குத் தந்தவருக்கு நன்றியாயிருக்

கிறோமா? எத்தனை வசனங்கள் வேதாகமத்திலிருக்கிறதென்று நினைக்கிறோமே தவிர பக்தனாகிய பவுல் உள்ளத்திலிருந்த எண்ணங்களை என்று உணருகிறோமா? கிறிஸ்துவைத் தம் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவர் ஜீவிய நோக்கத்தையே தமது பிழைப்பின் நோக்கமாக்கிக் கொண்ட ஒரு பவுலாலோ ஆண்டவர் உலகத்துக்குச் செய்த நன்மைகளை அளவிடமுடியாது. நமது ஜீவியத்தின் நோக்கமென்ன? எதைப் பற்றி அடிக்கடி நினைக்கிறோம்? எதைப்பற்றிப் பேசுகிறோம்? எதைப்பற்றி இடைவிடாது கவலை கொள்ளுகிறோம்? எதற்காக நமது நேரத்தையும் பலத்தையும் செலவுசெய்கிறோம்? அதுவே நமது ஜீவியத்தின் நோக்கம். கிறிஸ்து நமது ஜீவன் என்பது மெய்யானால் அவர் நோக்கம் நமது நோக்கமாகி, மற்றவர்கள் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பிழைப்போம், உழைப்போம், சகலத்தையும் செய்வோம்.

6. ஜீவிய வாஞ்சை கிறிஸ்து. கிறிஸ்துவின் வாஞ்சையே பவுலின் வாஞ்சையாயிற்று. ஆண்டவர் நம்மை ரட்சிக்கும்படி உழைத்துப் பலபாடுகள் பட்டதுமாத்திரமல்ல, தமது ஜீவனை நமக்காகக் கொடுக்க ஆவலுள்ளவராயிருந்தார். சத்துருக்கள் அவரைப் பிடித்துக் கொன்றுபோடவில்லை. அவர் ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. "ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்று ஆண்டவரே சொன்னார். நம்மீதுள்ள அன்பினால் தமது ஜீவனை நமக்காகக் கொடுக்க வாஞ்சையாயிருந்தார். "நான் முழுகவேண்டிய ஓர் ஸ்நானம் உண்டு; அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்" என்றார். வேளை வந்தபோது எருசலேமுக்கு நேராகத் தமது முகத்தைத் திருப்பி முன் நடந்துபோனார். தமது உயிரைக் கொடுத்து நம்மைப் பிழைக்கவைத்த ரட்சகன் அவர். கிறிஸ்துவைத் தமக்கு ஜீவனாக்கிக்கொண்ட பவுலுக்கும் அதே வாஞ்சையிருந்தது. மற்றவர்களை ரட்சிக்கும்படி அவர் தமது பிராணனையும் அருமையாக எண்ணவில்லை. "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே

நிறைவேற்றுகிறேன்" என்று சொன்னார். பாவிகள் ரட்சிப்புக்கு கிறிஸ்து பட்டபாடுகள் குறைவாயிருந்தது என்று அர்த்தமல்ல. ஆண்டவர் பாடுகள் உலகத்தின் ரட்சிப்புக்குப் பூரணமானவை. ஆனால் ஆண்டவர் சம்பாதித்த அந்த ரட்சிப்பை உலகத்துக்குச் கொடுக்கும் ஊழியத்தில் அப்போஸ்தலன் பாடுபட அவசியமாயிற்று. பாடுபட்ட கிறிஸ்துவின் ஜீவன் பவுலுக்குள்ளிருந்ததால் ஆண்டவர் "பாடுகளில் ஐக்கியப்பட" வாஞ்சித்தார்.

மேலும் சிலுவை சாபத்துக்குரியது. "மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்றெழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமானார்." இந்த வாஞ்சையும் அப்போஸ்தலனுக்குள் இருந்தது. ரோமர் ஐந்தாம் அதிகாரத்தில் நீதியையும், ஆறில் பாவத்தைப்பற்றியும், ஏழில் பாவப் போராட்டத்தைப்பற்றியும், எட்டில் பாவ விடுதலையைப் பற்றியும் பேசி முடிவில் எப்பேர்ப்பட்ட வல்லமையும் கடவுள் அன்பிலிருந்து தம்மைப் பிரிக்கமாட்டாதென்பது நிச்சயம் என்று முழங்குகிறார். இப்படிச் சபதம் கூறினவர் ஒன்பதாம் அதிகாரம் முதல் வசனத்தில் "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது" என்று புலம்புகிறார். இந்தத் துக்கத்துக்கும் இடைவிடாத மனவேதனைக்கும் காரணமென்ன? "நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்; மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" என்றார். எப்பேர்ப்பட்ட வல்லமையாலும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய அன்பிலிருந்து தன்னைப் பிரிக்கமுடியாதென்று கர்ச்சித்தவர் கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்பின காரணமென்ன? கடவுளுடைய மகத்தான ரட்சிப்பையும் அவரது அதிசய அன்பையும் தமக்குள் அனுபவித்த பவுல், யூதர்களான தமது இனத்தாருடைய மோசமான நிலைமையை நினைத்தபோது, சகிக்கவொண்ணாத துக்கத்திற்குள்ளாகி அவர்கள் ரட்சிக்கப்படக்கூடுமானால் அதற்கு ஈடாகத் தாம் சபிக்கப்பட்டுப் போனாலும் பரவாயில்லை

என்கிறார். இது கிறிஸ்துவிலிருந்த வாஞ்சையல்லவா? நம்மை ரட்சிக்கும்படி எல்லா பாடுகளுக்கும் அவமானங்களுக்கும் சிலுவைக்கும் மனதாரத் தம்மை ஆண்டவர் ஒப்புக்கொடுத்தாரே. அவரே பவுலுக்குள் ஜீவனாயிருந்ததால் அதே வாஞ்சையை பவுலிடத்திலும் காண்கிறோம். இதுபோலவே மோசேயும் தன் சமயத்தில் பாவஞ்செய்த இஸ்ரவேலருக்காக கர்த்தரை நோக்கி, அவர்களை நீர் அழிப்பதைப் பார்க்கிலும் ஜீவ புஸ்தகத்திலிருந்து என்பேரைக் கிறுக்கிப்போடுவது நலமாயிருக்கும் என்று மன்றாடினார்.

பாவிகளின் ரட்சிப்பு கொஞ்சமான காரியமல்ல. எப்பாடுகளால் ரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டதோ அப்பாடுகளாலேயே ரட்சிப்பு பலிதப்படக்கூடும். ரட்சிப்பின் பிரயாசம் எக்காலத்திலும் ஒன்றே. ஆத்துமாக்களை அடிமைப்படுத்தி யிருக்கும் சாத்தான் அவைகளைத் தன் பிடியிலிருந்து லேசாய் விடமாட்டான். அவர்களை ஜீவ வழிக்குத் திருப்பும்படி முயற்சிக்கும் ஊழியர் பாடுகளுக்கும் சிறைக்கும் தப்பமுடியாது. அவர்களை இருளிலிருந்து ஒளியினிடம் திருப்புவது லேசான காரியமல்ல. அலங்காரமான உபதேசங்களும், ஒழுங்கான வாசிப்புகளும், வசீகரமான சத்தமும், இனிமையான பாட்டுகளும் ஆராதனைக்குச் சிறப்பாகத் தோன்றினாலும் காரியம் பலிக்காது. பாவத்தால் வஞ்சிக்கப்பட்ட மனுஷர் புதுச் சிருஷ்டிகளாய் மாறுவதும், சுய இஷ்டம்போல் நடப்பவர்கள் தேவ சித்தத்தின்படி பிழைக்கத் தங்களை ஒப்புக்கொடுப்பதும் லேசாய் நடக்கிற காரியமல்ல. ஜனங்கள் ரட்சிக்கப்படவேண்டுமே, அவர்கள் ஆவிக்குரியவர்களாகி பிதாவால் அனுதினமும் நடத்தப்படவேண்டுமே என்று கவலைகொண்டு உழைக்கும் ஊழியர்களுக்கே இதன் கஷ்டம் தெரியும். எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறவர்கள் எல்லாருக்கும் எல்லாமாகாமல் தீராது. தாம் நினைப்பதைச் செய்யாமல் பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்கமுடியாது. பிழைப்புக்காகவும் கடமைக்காகவும் செய்யப்படும் ஊழியம் சாபத்துக்குரியது. கிறிஸ்துவின் வாஞ்சையற்ற மனுஷர் செய்யும் ஊழியத்தால் ஜனங்கள் மனக்கடினமாகி கெட்டுப்போவார்கள்.

தற்காலத்தில் அநேக சபைகளின் மோசமான நிலைமை இதுவே. உலகம் ரட்சிக்கப்படும்படி கருணை ரட்சகர் முழுமையான ஸ்தானத்தில் நமக்கும் பங்குண்டு. கிறிஸ்து பவுலுக்கு ஜீவனானபோது அவரிலிருந்த ஆத்ம வாஞ்சையே பவுலுக்குள்ளும் இருந்தது. நமக்கும் அந்த வாஞ்சையில்லாவிட்டால் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று நாம் சொல்லுவது பொய்.

7. ஜீவகிரீடம் கிறிஸ்து. ஆண்டவர் அப்போஸ்தலனுக்கு ஜீவ உற்பத்தியும், ஜீவ வளர்ச்சியுமாத்திரமல்ல அவரே அவருக்கு ஜீவ கிரீடமுமானார். கிரீடம் என்பதற்கு பூரணம் அல்லது நிறைவு என்று அருத்தம். பாவத்தால் மரித்த பவுல் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டபோது புதிதாகப்பிறந்தார். அது முதல் தன் ஜீவகால முழுவதும் கிறிஸ்துவாகிய ஜீவனாலேயே பிழைத்தார். இந்த ஜீவன் இடையில் மாறிப்போகவில்லை, நின்று போகவுமில்லை. இம்மை மறுமை என்று நாம் பிரித்துப் பேசினபோதிலும் இரண்டு ஜீவன்கள் இல்லை. கிறிஸ்துவின் ஜீவன் ஒரே தொடர்ச்சியான நித்திய ஜீவன். கிறிஸ்துவே நமக்கு ஆதியும் அந்தமுமான ஜீவனானவர். அவரது ஜீவனை அழிக்க மரணத்துக்கு அதிகாரமோ வல்லமையோ இல்லை. கிறிஸ்துவின் ஜீவன் மரணத்தை விழுங்கி வெற்றியடைந்த ஜீவன். ஆகவே நாம் மரணம் என்று பேசுவது பூரண ஜீவனுக்குள் நாம் பிரவேசிக்கும் வாசலேயாகும்.

இப்போது கிறிஸ்து நமது ஜீவனாக நமக்குள் பிழைப்பதால் நமது ஜீவியம் ஆசீர்வதிக்கப்பெற்று கனிகள் நிறைந்ததாயிருந்த போதிலும் அது இன்னும் குறைவுள்ளதே. "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்." அப்போஸ்தலனுடைய ஜீவியமும் ஊழியமும் நமக்குப் பிரமிப்பை உண்டு பண்ணினபோதிலும் அவர் முற்றிலும் தேறிவிட்டதாக எண்ணவில்லை. எவ்வளவோ கிருபை அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது, அப்படியிருந்தும் தாம் பூரணராகும் ஓர் காலத்தை எதிர்நோக்கியே பிழைத்தார். அவர் எவ்வளவு நல்ல ஜீவியம் செய்து, எவ்வளவு சிறந்த ஊழியத்தை நிறைவேற்றி வந்தபோதிலும் அநேக இடையூறுகளின் மத்தியிலேயே

அவைகளைச் செய்துவந்ததாக அவருக்குத் தெரியும். அவர் செய்த திருப்பணிவிடைக்கு அவர் சரீரம் துணையாயிருந்ததுபோலவே அந்தச் சரீரமே பெரிய இடையூறாயிருந்ததையும் அறிவார். அதைக் குறித்து: "ஆவியின் முதற்பலன்களைப்பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவீகாரம் வருவதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" என்கிறார் (ரோம 8 : 23). ஆகையால் ஜீவகிரீடமாகிய பூரண ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வாஞ்சை அவருக்கிருந்தது. அந்த ஜீவகிரீடமும் கிறிஸ்துவே. "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம்" என்கிறார் (கொலோ. 8 : 4). தமது பலவீனமான சரீரத்தைக் குறித்து: "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்றார் (பிலி. 3 : 21). அதுவே பூரண ரட்சிப்பு. அப்போஸ்தலனுக்கு ஆண்டவர் ஜீவ உற்பத்தி மாத்திரமல்ல ஜீவகிரீடமுமானார். ஆகையினால்தான் "சாவு எனக்கு ஆதாயம்" என்றார்.

யாருக்கு சாவு ஆதாயம்? கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அந்த ஜீவனில் வளர்ந்து, அந்த ஜீவனைத் தங்களுக்குப் பிரமாணமாக்கி, அந்த ஜீவனைத் தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தி, அந்த ஜீவனையே தங்கள் ஜீவியத்தின் நோக்கமாக்கி, அந்த ஜீவனை மற்றவர்கள் ரட்சிப்புக்காக வாஞ்சைகொண்டு பாடுபட்டு, கிறிஸ்துவை ஜீவகிரீடமாகப் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கிறவர்களுக்கே சாவு ஆதாயமாகும். அது மரணம் என்று எண்ணப்படாமல் அவர்களைப் பூரண ஜீவனுக்குள் நடத்தும் வாசலாகும். அநேகருடைய ஜீவியத்தில் கிறிஸ்து ஜீவனாக விளங்கவில்லை. ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களுக்குப் போவதாலேயோ, படுக்கும்போது 'இயேசுவே ரட்சியும்' என்று தலை சாய்ப்பதாலேயோ, அவர் நமக்கு ஜீவனாகிவிடமாட்டார். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் பார்க்கிலும் நமது சரீர ஜீவன் நமக்கு அருமை. ஏனென்றால் நாம் எதை இழந்தாலும் உயிருள்ளவரை அதைத் திரும்பவும் சம்பாதிக்கலாம். உயிர் போய்விட்டால் என்னவாகும்? ஆகையால் சரீர ஜீவனைக் குறித்து

மனுஷர் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். கிறிஸ்துவாகிய நித்திய ஜீவனைப்பற்றி இவ்வளவு ஜாக்கிரதை நமக்குண்டா? ஒருவன் எதைப் பிரதானமாக நாடுகிறானோ அதுவே அவனுக்கு ஜீவன். அழிந்துபோகும் உலகக் காரியங்களில் நமக்கிருக்கும் பற்று அழியாத ஜீவனாகிய கிறிஸ்துவின் பேரில் இல்லையே. உலகக் கல்வி, உத்தியோகம், பணம், அந்தஸ்து முதலான காரியங்களை ஜீவனைப்போல் பற்றிக்கொண்டிருக்கிறோம். இவைகளில் நமக்கு நஷ்டம் நேரிடுமானால் எவ்வளவோ சோர்ந்து புலம்புகிறோம். இவைகளில் நாம் மோகமாயிருக்கும்படிக்கே இயேசுவே ரட்சியும் என்னும் மந்திரத்தையும் சொல்லிக் கொள்ளுகிறோம். கிறிஸ்து நமது பிரதான வாஞ்சையுமல்ல, நமக்கு ஜீவனுமல்ல. கிறிஸ்து இன்றுமென்றும், அவர் மகிமை எப்படிப்பட்டதென்றும் நாம் இன்னும் சரியாய் அறிந்தவர்களல்ல. அவரை அறிந்தவன் அவரை விடமாட்டான். தன் ஜீவனாகிய கிறிஸ்துவைவிட்டு அவனால் விலக முடியாது. அவரை ருசித்தவன், அந்த ருசியிலேயே வளருவான். "அவர் சாயல் கண்டவன் அந்தச் சாயலுக் கொப்பாக மாறுவான். இவர் ஆராதனைக்கும் ஜெபக்கூட்டத்துக்குமாத்திரம் உரிய கிறிஸ்து அல்ல. ஆபத்துகாலத்தில்மாத்திரம் தேடி அனுப்பிவிடும் வைத்தியன் அல்ல. இடைவிடாமல் இரவும் பகலும் நிமிஷந்தோறும் நமக்குள் பிழைக்கிற நித்திய ஜீவனாயிருக்கிறார். ஆகையால் சாவு நமக்கு ஆதாயம்.

சாவு எப்படி ஆதாயம்? சாவு என்று அப்போஸ்தலன் நாடோடிய பாஷையில் பேசினபோதிலும் அவர் கருத்து மூலத்திலும் வேறே. "நான் சரீரத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட விருப்பேன்" என்றதே அப்போஸ்தலன் சாவு என்பதற்குக் கொடுத்த அருத்தம். தன் ஜீவனாகிய கிறிஸ்துவை முகமுகமாய்ச் சந்திக்கும்படி அவர் ஆவலாயிருந்தார். அது தமக்கு அதிக நன்மையாயிருக்கும் என்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியும்படி எல்லாவற்றையும் குப்பையாக எண்ணி விட்டுவிட்டவர் பவுல். மரணத்தின் மூலமாய் கிறிஸ்துவின் பக்கத்தில் போனால் முன்னில்லாத புதிய அறிவு, புதிய ஊழியம், புதிய அனுபவம், புதிய ஆனந்தம்

தமக்குக் கிடைக்கும் என்கிற நிச்சயத்தால் சாவு நஷ்டமல்ல லாபமே என்கிறார்.

என் லாபம்? ஜீவனாகிய கிறிஸ்துவை முகமுகமாய்ப் பார்ப்பதால், அவரோடு நெருங்கிப் பழகுவதால், மறைவாயிருந்த அநேக ரகசியங்களை அறிவதால், மாம்ச இடையூறுகள் நீங்கிப் பூரணமாய் ஆண்டவரை அனுபவிப்பதால், திரளான பக்தர்களைச் சந்திக்கப்போவதால் சாவு தமக்கு லாபமேயன்றி நஷ்டமல்ல என்கிறார். நமக்குச் சகிக்கமுடியாத நஷ்டமாகிய சாவு அப்போஸ்தலனுக்கு அளவில்லாத லாபம். நாம் ஜீவனாகிய கிறிஸ்துவை மறந்து இம்மைக்கென்று பிழைப்பதால் மரணம் நமக்குக் கொடிய கசப்பாயிருக்கிறது. கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலேயே நாம் பிழைப்போமானால் நமக்கும் சாவு ஆதாயமாகும். இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, இயேசு கிறிஸ்துவை உன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரால் பிழைக்கிறாயா? அந்த நிச்சயம் உனக்கு உண்டா? இல்லையென்றால், வீணே கிறிஸ்துமார்க்கத்தில் இருப்பதால் என்ன பிரயோஜனம்? கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்கிற பேர் நம்மை ரட்சிக்காது. நமது ஜீவனாகிய கிறிஸ்துவே நம்மை ரட்சிப்பவர்.

# VI

# Seal - Inheritance - Earnest

# முத்திரை – சுதந்தரம் – அச்சாரம்

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." எபே. 1 : 13, 14.

இவ்விரண்டு வசனங்களில் அப்போஸ்தலன் நாம் அறியவேண்டிய மூன்று முக்கியமான காரியங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அதாவது, நாம் சுவிசேஷ வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, கிறிஸ்துவை நமது ரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை கிறிஸ்துவுக்குள் முத்திரிக்கிறார். இந்த முத்திரையினாலே நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறோம். இவ்வாறு அவருக்குச் சொந்தமானவர்களுக்கு சுதந்தரமுண்டு என்பதை நிச்சயப்படுத்தும்படி ஆவியானவர் இப்பொழுதே நமக்கு அச்சாரமாக அருளப்பட்டிருக்கிறார் என்பது. ஆகையால் அந்த மூன்று விஷயங்களையும் குறிக்கிற மூன்று வார்த்தைகளை எடுத்து வரிசையாய்ச் சிந்திப்போம்.

## I. முத்திரை.

முத்திரை பலகாரியங்களுக்கு உபயோகப்படும். பத்திரங்கள், மரணசாதனங்கள், உடன்படிக்கை முதலிய ஏற்பாடுகளுக்கு முத்திரை போடுவார்கள். இது அனேகரின் உண்மைக்கு ஆதாரம். தானியேலைப்போட்ட சிங்கக்குகைக்கு முத்திரை போட்டார்கள். பிரதான ஆசாரியர் நமதாண்டவருடைய கல்லறைக்கு முத்திரை போட்

டார்கள். சபைகள் காகிதங்களைத் தபாலில் அனுப்பும்போது முத்திரை போடுவார்கள். இது அவைகளைப் பத்திரப்படுத்துவதற்கு அடையாளம். மரவியாபாரிகள் தங்கள் மரங்கள் கலந்து போகாதபடி மரத்தில் தங்கள் பேரை முத்திரை போடுவார்கள். புஸ்தகவியாபாரிகளும் தங்கள் புஸ்தகங்களில் முத்திரை போடுவார்கள். இது அவர்களுக்குச் சொந்தம் என்பதற்கு அடையாளம். ஆண்டவர் தமது ஆவியால் நம்மை முத்திரிக்கும்போது இந்த மூன்று கருத்துகளும் அதிலுண்டு. நாம் பேர்க்கிறிஸ்தவர்கள் அல்ல, உண்மையாய் கடவுள் பிள்ளைகளென்பதற்கு பரிசுத்த ஆவியின் முத்திரை அவசியம். இவைகளால் நாம் கெட்டுப்போகாதபடி நாம் பாதுகாக்கப்பட முத்திரை அவசியம். நாம் பிதாவுக்குச் சொந்தமானவர்கள் என்று விளங்க நமக்கு முத்திரை அவசியம். இந்தக் கடைசிக் கருத்தையே அப்போஸ்தலன் முக்கியப்படுத்திப் பேசுகிறார். இந்த முத்திரையின் பலனாக நாம் கடவுளுடைய சுதந்தரமென்றும், அவருக்குச் சொந்தமானவர்கள் என்றும் சொல்லுகிறார்.

முத்திரை போடும் சமயம். பிறக்கும்போதே இந்த முத்திரையுடன் நாம் பிறந்தவர்கள் அல்ல. மாம்சத்தின்படி பிறப்பது மாம்சமே. அல்லது இந்த முத்திரையை நாமே போட்டுக்கொள்வதுமல்ல. பரமபிதா தமது ஆவியால் இந்த முத்திரையை நமக்குள் பதிக்கிறார். முத்திரையை பெற்றுக்கொள்ளத்தக்க நிலைமையில் நமது இருதயம் இருக்கும்போது உடனே ஆவியின் முத்திரையைப் போடுகிறார். கடினமானபொருள்மேல் முத்திரை பதியாது. அரக்கை நெருப்பில்காட்டி அது இளகும்போது முத்திரையைப் பதிப்பார்கள். செம்போ, வெள்ளியோ, பொன்னோ இளகும்போது ராஜாவின் சாயலையுடைய முத்திரையை அவற்றில் பதிப்பார்கள். சிலுவைக்காட்சியின் உன்னத ரகசியத்தை நாம் அறிந்து, கிறிஸ்துவில் விளங்கிய பிதாவின் அதிசய அன்பு நமதுள்ளத்தில் பிரவேசித்து, அவருடைய பாடுகள் மரணத்துக்கு அடியேன் பாவங்கள் அல்லவோ காரணம் என்றுணர்ந்து, நமது உள்ளம் நொறுங்கி உருகும் சமயத்தில் தேவன் தமது பரிசுத்த ஆவியின் முத்திரையை நமது இருதயத்தில் பதிக்

கிறார். கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொள்ளும் சமயத்தில் கிறிஸ்துவின் சாயலாகிய பரிசுத்த ஆவியின் முத்திரையை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். நமது ஜீவியம் மாறுகிறது. நாம் புதுச் சிருஷ்டியாகிறோம். புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் போலிருக்கிறோம். நாம் இன்னும் பூரணராகவில்லை. இன்னும் வளரவேண்டியதிருக்கிறது. ஆனால் நாம் பெற்றுக்கொண்ட இந்த ஆவியின் முத்திரை நாம் உண்மையாகவே தேவமக்கள் என்பதற்கும், அவரது பாதுகாப்புக்குரியவர்கள் என்பதற்கும், நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கும் ஆதாரம்.

இது கிறிஸ்துவுக்குப் புறம்பான முத்திரையல்ல. "அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்," என்கிறார். "கிறிஸ்துவுக்குள்" "அவருக்குள்" என்னும் வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் நூற்றுமுப்பது தரம் வருகின்றன. ஆகையால் அதை நாம் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவுக்குப் புறம்பேயுள்ளவனுக்கு பரிசுத்த ஆவியின் முத்திரை கிடையாது. அவரோடு சம்பந்தப்பட்டவனுக்கே கிடைக்கும். நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்போது அவர் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகிறார். இது ஒரு வட்டத்தின் மத்தியில் ஒருவன் இருப்பதுபோல் அல்ல. வட்டம் ஒரு பக்கமாத்திரம் அவனைச் சூழ்ந்திருக்கும். கிறிஸ்துவோ ஒரு கோளம்போல் எப்பக்கத்திலும் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகிறார். இது தண்ணீருக்குள் அமிழ்ந்திருக்கும் ஒரு குடம்போல. அந்தக் குடத்துக்குள்ளும் தண்ணீர், அதைச் சுற்றிலும் எப்பக்கத்திலும் தண்ணீர். விசுவாசி கிறிஸ்துவுக்குள் தங்குகிறான். இவ்வாறு நாம் அவருக்குள்ளிருக்கும்போது, நோவா பேழைக்குள்ளிருந்து நடத்தப்பட்ட விதமாய், புறம்பேயுள்ளவைகளிலிருந்து நம்மைப் பிரித்து, சகல தீமைகளுக்கும் நம்மைப் பாதுகாத்து, நம்மைப் போஷித்துப் பராமரிக்கிறார். கிறிஸ்துவுக்குள் பிழைக்கும் விசுவாசிகளின் பாக்கியம் இதுவே.

இவ்வாறு நாம் கிறிஸ்துவுக்குள் முத்திரிக்கப்படும்போது பிதா நம்மைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறார். ஒரு நல்ல நிலத்தை அல்லது வீட்டைச் சொந்தமாக்கிக் கொண்டவன், நல்ல உத்தியோகத்

தைச் சொந்தமாக்கிக் கொண்டவன், நல்ல மனைவியைக் கண்டடைந்தவன் மகிழ்ச்சியடைவதுபோல "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்" என்னும் நிச்சயத்தால் பிதா சந்தோஷப்படுகிறார். அவர் ஆதியில் பூமியைச் சிருஷ்டித்த நாளில் மகிழ்ந்ததைவிட, இழந்துபோன தேவசாயலை நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் புதிய சிருஷ்டிப்பைக் காணும் போது அவர் திருவுள்ளம் பூரிக்கிறது. கிறிஸ்து பிதாவுக்கு மிகவும் பிரியமானவர். பிரியமானவருக்குள் இருப்பவர்களும் அவருக்குப் பிரியமானவர்களே. ஆகையால் அவர் கண்ணும் பார்வையும் இடைவிடாது நம்மீதிருக்கின்றன.

நாம் பெற்றுக் கொண்ட முத்திரையின் சாயல் மங்கவும் இடமுண்டு. எப்படியென்றால் ராஜாவின் சாயல்பெற்ற அழகான நாணயங்கள் பலர் கைக்குப்போவதால் அழுக்குப் படிந்து சாயல் மறைந்து போகின்றன. மேலும் நெடுங்கால உபயோகத்தால் ராஜாவின் சாயல் முழுவதுமே தேய்ந்து மழுங்கிச் செல்லாக் காசுகளாகின்றன. பரம பிதா தமது குமாரனுடைய சாயலை நம்மில் பதித்தவுடனே நம்மை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை. அப்படிச் சேர்க்கக் கூடாதென்று ஆண்டவர் பிதாவை நோக்கி ஜெபித்திருக்கிறார். "பிதாவே, நீர் இவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல் தீமையிலிருந்து காக்கும்படிக்கே வேண்டிக்கொள்ளுகிறேன்." ஆவியின் முத்திரையாகிய கிறிஸ்துவின் சாயல் பெற்றவர்கள் உலகத்துக்கு அவசியம். அவர்கள் பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும், கனிநிறைந்த விருட்சங்களாகவும் இருக்கவேண்டும். இதற்குத் தாங்கள் பெற்றுக்கொண்ட முத்திரை மங்காமலும் அழிந்துபோகாமலும் காக்கப்படவேண்டும். இங்கேதான் நமக்குப் போராட்டமிருக்கிறது. பலவித கவலைகள், குடும்பப் பாரங்கள், வறுமை, நோய், பல சோதனைகள் வெள்ளம்போல் நம்மை மோதுகின்றன. நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் சாயலை அழிப்பதற்குப் பல இடையூறுகள் உண்டு. நாம் செல்லாக்காசுகளாகி விடுவோமோ? அப்படியானால் ஒருவரும் ஈடேறப்போகிறதில்லை. தமது

குமாரனைக், கொடுத்த பிதாவுக்கு அதைப்போல் வேறு தோல்வியுமில்லை. தேவ சாயலாகிய முத்திரை ஒருநாள் இரண்டு நாட்களுக்கல்ல; மீட்கப்படும் கடைசிநாளுக்கென்று நமக்கு அச்சாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் இடையில் அதை இழந்துபோனால் முடிவில் என்னசெய்வார்கள்? ஒரு ஸ்டேஷனில் டிக்கட்டுப்பெற்றுத் தூரமான இடத்துக்குப் பிரயாணம் பண்ணுகிறவன் டிக்கட்டை வழியில் இழந்துவிட்டு, இறங்குமிடத்தில்: உண்மையாகவே டிக்கட்டை வாங்கினேன், பத்திரமாகவே வைத்திருந்தேன், அது எனக்குச் சொந்தமாகவே யிருந்தது என்று சொன்னால் அவனை விட்டு விடுவார்களா? நாம் பெற்றுக்கொள்ளும் ஆவியின் முத்திரை கடைசிவரை நமக்குள்ளிருந்து நம்மை வழி நடத்தவேண்டும். நாம் பெற்றுக்கொண்ட தேவசாயல் வளரப் பெருகிப் பூரணப்படவேண்டும். ஆனால் அந்தச் சாயல் மங்கி அழுக்கடையலாம். இதற்குப் பாவமே காரணம். நம்மேல் இடைவிடாது கண்ணோக்கமாயிருக்கும் பரமபிதா அழுக்கைப் போக்குகிறவரும் சாயலைப் புதுப்பிக்கிறவருமாயிருக்கிறார். அழுக்கடைந்த காசுகளைக் கழுவினால் ராஜாவின் சாயல் தோன்றும். காசு மழுங்கிப்போனால் அதை உருக்கிச் சாயலைப் பதிக்கலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம் அழுக்கைப்போக்கி தேவசாயலைப் புதுப்பிக்கும். சாயல் மழுங்கிப்போகிற நிலைமையிலிருந்தால் கடவுள் தமது கூர்மையான ஆயுதங்களைக் கையாடவேண்டியதிருக்கும். நமக்கு நேரிடும் பாடுகள் துன்பங்களின் நோக்கம் அதுவே. உபத்திரவப்படுகிறவர்கள் தேவன் தங்கள்மேல் கோபமாயிருக்கிறார் என்று நினைக்கக்கூடாது. உபத்திரவமாகிய புடத்தின் மூலமாய் தமது குமாரனுடைய சாயலை நமக்குள் புதுப்பிக்கிறார் என்றறிய வேண்டும். ஏன் எனக்கு இந்தப் பாடுகள்? இப்பாடுகளில்லாவிட்டால் நாம் சந்தோஷமாயிருந்து வேலைசெய்யலாமே என்று நினைக்கிறோம். பரிசுத்தாவியின் முத்திரையினால் பிதா நமக்குள் பதித்த கிறிஸ்துவின் சாயல் மங்கிப்போவதை அவர் சகிக்கமாட்டார். தேவமக்களுக்கு நேரிடும் பாடுகளில் அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவே. ஆயுதத்தைக் கையாடு

யது அன்புள்ள பிதாவின் நாம் அன்பதை மறக்கலாகாது. இதனாலேதான் "ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்றும், "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" என்றும் "ஆவியிலே அனலாயிருங்கள்" என்றும் அப்போஸ்தலன் கூறினார். எவ்வளவுக்கு நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு ஆவியானவர் கிறிஸ்துவின் சாயலை நம்மில் உண்டாக்குவார். அவர் செய்ய வந்தவேலை அதுவே.

பரிசுத்த ஆவியின் முத்திரையை நாம் பெற்றுக்கொள்ளும்போது அதை நாம் அறிவோம். நமக்குத் தெரியாமல் பிதா நம்மை முத்திரிக்கிறதில்லை. நாம் அதை அறியாதபடி மறைக்கவேண்டுமென்பது அவர் நோக்கமல்ல. நமது இருதயத்தை, நமது ஜீவிய நமது உள்ளத்து அனுபவம் அதை நமக்கு முடிவைப்பதாம் பிரயோஜனமென்ன! நமக்கு நிச்சயம் வேண்டுமே. நாம் கடவுள் பிள்ளைகளோ என்னவோ? ரட்சிப்பைப் பெற்றோமோ என்னவோ? பரலோக ஒப்புரவானோமோ என்னவோ என்கிற சந்தேகங்கள் இருந்தால் நமக்குச் சந்தோஷமிராது, பிறருக்கும் பிரயோஜனப்படமாட்டோம். அநேகர் தங்கள் ஆத்ம விஷயத்தில் நிச்சய மற்றவர்களாயிருக்கிறார்கள். அந்தந்த மார்க்கங்களில் பிறந்தவர்கள் அந்தந்த மார்க்கத்தாராயிருப்பதுபோல, கிறிஸ்தவர்களுக்குப் பிறந்ததின் பலனாக கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் அநேகர். ஏன் நாம் இந்த மார்க்கத்திலிருக்கிறோம், இதனால் நமது ஆத்துமாவுக்குக் கிடைத்த ஆசீர்வாதமென்னவென்று அவர்கள் கேட்பதில்லை. என்னவோ மார்க்கத்திலிருக்கிறோம், ஆராதனைகளுக்குப் போகிறோம்; செய்யவேண்டிய காரியங்களைச் செய்கிறோம், அவ்வளவுதான், ஆனால் நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது என்பார்கள். இன்னும் அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லியும் கிறிஸ்துவின் சித்தத்துக்கு விரோதமாய் நடக்கிறார்கள். இது எவ்வளவு துக்கமான விஷயம்! நமது காரியமே இப்படியிருந்தால் மற்றவர்களுக்கு நாம் என்னத்தைப் போதிப்பது? கிறிஸ்துவைப்பற்றி நாம் மற்றவர்களுக்கு எவ்வளவு வர்ணித்தாலும் நமது விஷயமே நிச்சயமற்றிருந்தால் நாம் போதகத்தில் பிரயோ

ஜனம் என்ன? பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றவர்கள் நிச்சயமுள்ளவர்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நமது ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்." "அவர் உங்களுக்குள்ளே வாசம்பண்ணி உங்களுக்குள் இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்." பரமபிதா தமது ஆவியின் முத்திரையால் நம்மைத் தமக்குச் சொந்தம் பாராட்டுவதுபோல, நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்கிற நிச்சயம் நமக்கும் வேண்டும். அது நமது ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் மிகவும் அவசியம். "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்." 1. கொ. 9: 26.

நாம் முத்திரைபெற்றவர்கள் என்பதை மற்றவர்களும் அறிவார்கள். ஆண்டவர் நிக்கோதேமோடே ஆவியானவரைப்பற்றிப் பேசின சமயத்தில் காற்றைக் காணாவிட்டாலும் அதன் கிரியைகளை அறியலாமென்று சொன்னார். காற்றைப்பற்றி நமக்கென்ன தெரியும்? என்றாலும் அது நமது தேகத்தில் வீசுவதாலும், மரக்கிளைகள் அசைவதாலும், பாய்க்கப்பல்கள் ஓடுவதாலும், நாம் சுவாசித்துப் பிழைப்பதாலும் காற்று இருக்கிறதென்று நிச்சயமாய் அறிகிறோம். ஆவியானவரை நமது கண்ணால் காணக்கூடாவிட்டாலும் அவர் நமது இருதயத்தில் பிரவேசித்து அங்கே தங்கும்போது அவர் நடப்பிக்கும் கிரியைகள் நமது ஜீவியத்தில் காணப்படும். பெருமை தாழ்மையாக, பகை அன்பாக, பிடிவாதம் இணக்கமாக, ஆத்திரம் சாந்தமாக, தீமை நன்மையாக, பொருளாசை பரலோக ஆசையாக, தன்னயம் சுயவெறுப்பாக ஒருவனுடைய ஜீவியம் மாறுதலடையும்போது யார் இந்த மாறுதலை அறியாதிருக்கக் கூடும்? ரோஜாப்புஷ்பம் பரிமளிப்பதுபோல கிறிஸ்துவின் சாயல்பெற்றவனுடைய ஜீவியமும் சுகந்தமாக விளங்கும். நமது குணத்தை மாற்றாத கிறிஸ்துமார்க்கத்தால் என்ன பிரயோஜனம்? புறம்பான ஆசாரங்களை ஒழுங்காய் ஆசரிப்பது, செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விடுவதுமே கிறிஸ்து மார்க்கமாகாது மனுஷன் புதுச் சிருஷ்டியாகவேண்டும். பரமபிதா தமது ஆவியின் முத்திரையினால் புதிய சிருஷ்டிப்பை நம்மில் உண்டாக்கி மற்றவர்கள் அதை அறியும்படி செய்கிறார். கிறிஸ்துவின் சிந்தையற்றவர்கள் கிறிஸ்தவர்களல்ல.

## II. சுதந்தரம்.

நம்மை முத்திரிக்கும் "ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." தேவமக்கள் அநுபவிக்கப் போகிற சுதந்தரத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டில் பலவிடங்களிலும் வாசிக்கிறோம். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோ. 8: 17). "நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய்" (கலா. 4: 7). சுதந்தரம் என்னும் சொல் நாம் அறிந்த ஓர் வார்த்தையாயிருந்தாலும் கடவுள் நமக்கு வைத்திருக்கிற சுதந்தரமாவது என்னவென்று நமக்குத் தெரியவில்லை. பிதாவும் அதை நமக்கு விளக்கிக் காட்டவில்லை. விளக்கிக் காட்டினாலும் இவ்வாழ்வில் அது நமக்கு விளங்காது. சுதந்தரத்தின் மேன்மையைப்பற்றி: அது "சிறப்பான சுதந்தரம்," "மாசற்றதும் வாடாததுமான சுதந்தரம்," "அழியாத சுதந்தரம்," "மகிமையுள்ள சுதந்தரம்," "பரிசுத்தவான்களுடைய சுதந்தரம்," "வாக்குப்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரம்" என்று புகழ்ச்சியாகக் கூறியிருந்தபோதிலும் அந்தச் சுதந்தரம் இன்னதென்று சொல்லப்படவில்லை. மனுஷன் பாவத்தால் கெட்டபோது அவன் பாஷையும் கெட்டது. தேவனுடைய மேலான ஆவிக்குரிய காரியங்களை மனுஷர் பாஷையில் விஸ்தரிப்பது கஷ்டம். இந்தக் கஷ்டம் சரீரத்தில் வெளிப்பட்ட நமதாண்டவருக்கும் இருந்தது. அவர் தேவராஜ்யத்தின் காரியங்களை இருக்கிறபடியே கண்டார். ஆனால் அவைகளை இருக்கிறபடி பேசமுடியாமல் உலககாரியங்களைக் கொண்டு உவமானமாகப் பேசினார். அப்போஸ்தலன் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டுத் தாம் அங்கு கண்டவைகளையும் கேட்ட வார்த்தைகளையும் திரும்ப அவரால் பேசமுடியவில்லை. ஏனென்றால் அவைகள் "மனுஷரால் பேச முடியாததும் வாக்குக் கெட்டாதவைகளுமாயிருந்தன." மனுஷனுடைய நாவு அவைகளை உச்சரிக்கவும் தகுதியுள்ளதல்ல. "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவு

யில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." நமது சுதந்தரம் எத்தன்மையானதென்று கடவுள் விஸ்தரிக்காமல் விட்ட காரணம் இதுதான். கடைசியாகப் பார்க்கப்போனால் "கர்த்தரே நமது சுதந்தரமாவார்." அதற்குக் குறைந்ததொன்றும் நம்மைத் திருப்தி செய்யாது.

அந்தச் சுதந்தரத்தின் பூரண மகிமையை இப்போது நாம் பூரணமாய் அறிய முடியாவிட்டாலும், அதன் முன் ருசியை இங்கேயே அனுபவிக்கலாம். "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே" (கொலோ. 1: 12). எப்படி ஆயத்தப்படுத்துகிறார்? முதலாவது, பாவத்தால் மரித்தவர்களான நம்மை உயிர்ப்பித்துப் புதுச்சிருஷ்டியாக்குகிறார். கிறிஸ்துவின் மூலமாய் தேவ ஜீவனை நாம் பெற்றுப் பிழைக்கிறோம். இரண்டாவது, நம்மைத் தமக்குப் புத்திரராக்குகிறார். கிறிஸ்துவைத் தங்கள் சொந்த ரட்சகராக்கிக் கொண்டவர்கள் யார் யாரோ அவர்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாகும்படியான அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் என்னும் சொல் நமக்குள் வெகு சாதாரணமாய்ப் போய்விட்டதால் அதன் மகத்துவத்தையும் மேன்மையையும் நாம் சரியாய் உணரவில்லை. இராஜகுமாரன் ஒருவன் தன் உடையால் நடையால் பார்வையால் சத்தத்தால் தன் தேகத்தில் ஓடும் ரத்தத்தால் தான் இராஜகுமாரன் என்பதை உலகத்துக்குக் காண்பிக்கிறான். நாம் சர்வத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றும் ராஜாதிராஜாவின் பிள்ளைகளாயிருக்கும் நமது காரியம் பரிதாபமாகயிருக்கிறது. உலகத்தில் நாம அற்பராயிருந்தாலும் கடவுளுடைய சொந்தப் பிள்ளைகள் என்பது நிச்சயமல்லவா? கடவுள் நமது பிதாவென்பதையும் நாம் அவருடைய பிள்ளைகளென்பதையும் நாம் இன்னும் சரியாய்க் கிரகித்துக்கொள்ளவில்லை. ஐந்து நிமிஷமாவது அமர்ந்திருந்து இந்த மகத்துவமான பிதாபுத்திர சம்பந்தத்தின் உன்னதமான மேன்மையை நாம் உணர்ந்தால் நலமாயிருக்கும். நாம் பிள்ளைகள் என்கிற உணர்ச்சிபற்றுப் போகும்போது அவர் நமது பிதாவென்கிற உணர்ச்

சியும் அற்றுப்போகும். பிள்ளைகள் என்கிற நிச்சயம் பெருகும் போது சுதந்தரர் என்கிற நிச்சயமும் பெருகும். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே", என்றுவது, சுதந்தரவாளிகளாக்கிறார். சுதந்தரம் அந்நியருக்கல்ல, மக்களுக்கே உரியது. அரசர் மாளிகை ஒன்றைச் சுற்றிப்பார்க்கப் போனவர்கள், பல அறைகளைப் பார்த்தபோதிலும் சில அறைக்குள் பிரவேசிக்க அவர்களுக்கு அனுமதியில்லை. இப்படியிருக்க வெளியிலிருந்து வந்த ஒரு சிறுவன் தாராளமாய் அந்த அறைக்குள் சென்றான். அவன் யாரென்று விசாரித்ததில் அரசர் குமாரன் என்றறிந்தார்கள். அவனே சுதந்தரவாளி. அந்நியருக்கு அங்கு இடமில்லை.

பாவத்தால் இழந்த பிதாபுத்திர சம்பந்தம் திரும்பக்கிடைக்கும் போது இழந்துபோன சுதந்தரமும் நமக்குக் கிடைக்கவேண்டியது நியாயமே. தகப்பன் மரித்தபின்பே மக்கள் சுதந்தரத்தைப் பெறுவார்கள். இது மக்கள் பிரயாசப்பட்டுச் சம்பாதித்த சுதந்தரமல்ல. தகப்பனுக்கும் மக்களுக்குமுள்ள சம்பந்தத்தின் பலனைக் கிடைக்கும் சுதந்தரம். தகப்பனுக்குப் பின்பே மக்களுக்குச் சுதந்தரம் கிடைக்கும் என்று சொன்னோம். நமது பரம தகப்பன் மரிப்பதெப்போ, நாம் சுதந்தரத்தைப் பெறுவதெப்போ? நித்திய பிதாவுக்குச் சாவில்லை. ஆகையால் நமக்குச் சுதந்தரமில்லையென்று சொல்லலாமா? அவர் சாவாமையுள்ளவராதலால் அவர் சாகுங்காலத்துக்காக நாம் காத்திருக்கவேண்டியதில்லை. பூரண சுதந்தரம் இனி வருகிறதாயிருந்தாலும், அதன் முன் ருசியை இப்போதே நாம் அனுபவிக்க வேண்டுமென்பது நமது பிதாவின் சித்தம். அவர் "நம்மை கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார்". கிறிஸ்துவினுடையவைகள் யாவும் நம்முடையவைகளே. அவைகளை அனுபவியாதிருப்பது நமது குற்றமே. சகல சம்பூரணமுமுள்ள ஒரு தகப்பனுடைய பிள்ளை சரியாய்ச் சாப்பிடாமலும் உடுத்தாமலும் ஏழைக்கோலமாய் நடந்தால் அது அவன் தப்பிதமே. அவ்வாறு நடப்பதால் தகப்பனுக்கும் அவமானத்தை உண்டாக்குகிறான்.

நமது காரியமும் அதுபோலவே. நமது பாவத்தாலும் அவிசுவாசத்தாலும் பரமபிதா நமது ஆஸ்திக்குள் நமக்காக வைத்திருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவியாதிருக்கிறோம். கிறிஸ்து எப்படி நமக்குச் சொந்தமோ அதுபோலவே அவருடைய சுதந்தரமும் நமக்குச் சொந்தம். பிதாவினுடையவைகள் நம்முடையவைகளே. பூமியில் நிறைந்துள்ள அலங்காரமான சிருஷ்டிப்புகளைக் காணும்போதும், வான ஜோதிகளை நோக்கும்போதும், விசாலமான சமுத்திரத்தையும் உன்னதமான மலைகளையும் பார்க்கும்பொழுதும், இவை யாவும் என் பிதாவினுடையவைகள் அல்லவா? ஆகையால் அவைகள் என்னுடையவைகளே என்று நாம் ஏன் சொல்லக்கூடாது? நாம் தரித்திரராயிருப்பதால் அப்படிச் சொல்லக்கூடாதோ? தரித்திரமென்றால் என்ன, ஐசுவரியமென்றால் என்னவென்பதையும் நாம் சோதித்து அறியவேண்டும். ஆபிரகாமுக்கு ஒரு அடி நிலமாவது சொந்தமில்லாதிருந்தபோது தேவன் அவரைப்பார்த்து: "ஆபிரகாமே, உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலேயிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்குக் கொடுத்தேன்; நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எவ்வளவோ அவ்வளவும் நடந்து திரி, அதை உனக்குத் தருவேன்" என்றார். பார்வைக்கு ஆபிரகாம் பரதேசி. தேவன் ஆபிரகாமைப் பார்த்து நீ பரதேசியல்ல, நீ என் பிள்ளையாகையால் என்னுடையவைகள் யாவும் உன்னுடையவைகளே என்றார். தலை சாய்க்க இடமற்றவரான பரதேசியாகிய கிறிஸ்து தாம் சர்வபூமிக்கும் ஆண்டவரென்பதை மறக்கவில்லை. "பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகளே" என்று சொன்னவரும் அவரே. "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்றார். இந்த நிச்சயத்தாலே அப்போஸ்தலன் "நாங்கள் தரித்திரரென்றெண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். தரித்திரத்திற்கும் ஐசுவரியத்துக்குமுள்ள வித்தியாசத்தைத் திரும்பவும் காண்கிறோம். கடவுள் பார்வையில் பொருளுள்ளோர் ஐசுவரியவான்களல்ல; ஏழைகள் தரித்திரருமல்ல-

திருப்தியுள்ளவனே ஐசுவரியவான். திருப்தியற்றவன் தரித்திரன். ஐசுவரியவான்கள் எப்பொழுதும் அதிருப்தியுடையவர்கள். அவர்கள் பணமும் பொன்னும் வெள்ளியுமோ அவர்கள் தாகத்தைத் தீர்ப்பதில்லை. மற்றவர்கள் அவர்களை ஐசுவரியவான்கள் என்று போற்றினாலும் கடவுள் பார்வையில் அவர்கள் தரித்திரரே. அவர்கள் மனக்கவலையும் பேராசையும் பொருளைப்பற்றிய இடைவிடாத அச்சமும் அவர்களை நிர்ப்பாக்கியராக்கிவிடுகின்றன. கடவுள் பிள்ளைகள் ஏழைகளானாலும் அவர்கள் மனோரம்மியத்தையும், அமர்ந்த சிந்தையையும், முக மலர்ச்சியையும் அவர்கள் காணும்போது வெட்கப்படவேணும். அவர்கள் தரித்திரரென்றெண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கும் சித்து அவர்கள் வசமிருக்கிறது. ஐசுவரியவான்களோ அநேகரைத் தரித்திரராக்குகிறார்கள். ஏனென்றால் அநேகருடைய வறுமையே ஒருவனுடைய ஐசுவரியம். கடவுளிடத்தில் ஐசுவரியமாயிருக்கும் வழிபற்றாமல் தங்களுக்காகவே ஆஸ்தியைச் சேர்க்கிறவர்களுக்கு சுதந்தரம் இங்குமில்லை அங்குமில்லை. கர்த்தரைச் சுதந்தரமாக்கிக்கொண்ட பிள்ளைகளின் நற்காலம் பிறந்து வருகிறது. கடவுளுடைய நகரம் வெளிப்பட்டு, தேவராஜ்யம் எங்கும் ஆளுகை செய்யும்போது, தேவமக்கள் யாவரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தராயிருந்து அந்தப் பாக்கியமான காலத்தில் ஆளுகை செய்வார்கள். அழிந்துபோகும் வெள்ளியும் பொன்னும் அவர்கள் சுதந்தரமல்ல. அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரத்தைப் பெற்று வாழுவார்கள். இம்மையிலும் அவர்கள் கைவிடப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் சுதந்தரமாக்கியிருப்பதால் அவர்களுக்குத் தேவையான நன்மைகளை பிதா தவறாமல் அவர்களுக்குக் கொடுத்துப் பராமரித்துவருகிறார். ஆண்டவர் கிருபையாய்த் தங்களை நடத்துவதை அவர்கள் அறிந்து மகிழ்ச்சியுடன் பிழைக்கிறார்கள். இவர்களே சுதந்தரவாளிகள்.

## III. அச்சாரம்

பரமபிதா நம்மைத் தமது சொந்தப் பிள்ளைகளும் சுதந்தரருமாக்கினதுமன்றி பூரண சுதந்தரத்தை நாம் பெற்றுக்கொள்ளுவோ

என்கிற நிச்சயம் நமக்கு உண்டாகும்படி ஆவி என்னும் அச்சாரத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கு முத்திரையும், சுதந்தரிப்போம் என்பதற்கு அச்சாரமும் நமக்கு வேண்டும். "அவர் நம்மை முத்திரித்து நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (2 கொ. 1:22; எபே. 1:14).

அச்சாரமாவது என்ன? பின் வரப்போகிற பெருந்தொகைக்கு முன் பெற்றுக் கொள்ளும் சிறு தொகை. வியாபாரம் விற்பனை முதலிய விஷயங்களில் அச்சாரம் என்னும் சொல் ஆதிமுதல் வழங்கப் பெற்று வருகிறது. அதே வார்த்தையைத்தான் அப்போஸ்தலன் இந்த இடத்திலும் உபயோகிக்கிறார். நிலத்தை விற்பவன் முதலில் பெற்றுக் கொள்ளும் அச்சாரமாகிய சிறுதொகை இனி அவன் பெற்றுக்கொள்ளப் போகிற பெருந்தொகைக்கு ஆதாரமும் உறுதியுமாயிருக்கிறது. யூதர்கள் வயலிலிருந்து சேர்க்கும் முதற்பலன் சொற்பம், ஆகிலும் சீக்கிரத்தில் கிடைக்கும் பெரிய அறுப்புக்கு அது அச்சாரமும் நிச்சயமுமாகிறது. இம்மையில் நாம் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அப்போஸ்தலன் முதற்பலன் என்று அழைக்கிறார். "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாம்" (ரோ. 8:23). ஒரு பெண்ணை விவாகம் செய்யப்போகிறவன் நிச்சயார்த்த தினத்தில் அவளுக்கு ஒரு ஆபரணத்தைக் கொடுக்கிறான். அது ஒரு மோதிரம் அல்லது பொற்சங்கிலியாயிருக்கலாம். பெண் அணிந்துகொள்ளும் இந்த ஆபரணம் புருஷனுடைய ஆஸ்தி முழுவதும் சீக்கிரம் தனக்குச் சொந்தமாகுமென்பதற்கு அச்சாரம். இதுபோலவே நமக்குள் வசிக்கும் ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். நமக்குச் சுதந்தரம் உண்டோ இல்லையோவென்று வேறொருவரை நாம் கேட்கவேண்டியதில்லை. ஆவியானவர்தாமே நமக்குள்ளே உறுதியான சாட்சியாயிருக்கிறார். அதுவே நமக்கு ஆதாரம். உலகத்தில் அச்சாரத்தைக் கொடுத்த பின்பு வாக்குமீறி மோசஞ்செய்கிற மனுஷர்

இருக்கிறார்கள். பரமபிதாவோ உண்மையுள்ளவர். அவர் வாக்கு மாறுகிறவரல்ல. ஒருசமயத்தில் ஆம் என்றும் மறுசமயத்தில் அல்லவென்றும் அவர் ஒருபோதும் சொல்லமாட்டார். அவர் ஆவியானவரால் நம்மை முத்திரித்தபோது ஆம் என்று சொன்னார். ஆமென் என்பதே அவரது நித்திய வாக்கு.

இந்த ஆவியின் அச்சாரத்தை நாம் பெற்றிருக்கிறோமா? சுதந்தரம் கிறிஸ்துவினுடையது. அவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியத்தின் பலனாக நாம் உடன் சுதந்தரராகிறோம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." அவருடையவனல்லவென்றால் பின்னை யாருடையவன்? அவனுக்கும் சுதந்தரமேது? கடவுளுடைய சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளே. அவர் தமது ஆவியினால் நமக்குள் வரும்போது அவருடைய ஆசீர்வாதங்களும் நமக்குள்ளே வருகின்றன. இனி நாம் அடையப்போகும் பூரணமான சுதந்தரத்திற்கு அவருடைய ஆவி இப்போது நமக்கு அச்சாரமும் நிச்சயமுமாயிருக்கிறார். ஆவியானவரே நமது சுதந்தரத்தின் முன்ருசி.

ஆவியானவர் நமக்குள்ளிருந்தால் ஆவியின் கனி நம்மில் காணப்படவேண்டும். ஆவியின் கனிகளே நமது சுதந்தரத்தின் முதற்பலன்கள். நமதாண்டவருடைய ஜீவிய முழுவதும் ஆவிக்குரியதாயிருந்தது. ஆவியில் பிறந்து, ஆவியில் வளர்ந்து, ஆவியில் நிறைந்து, ஆவியில் வனாந்தரஞ்சென்று, ஆவியில் கலிலேயா திரும்பி, ஆவியில் உபதேசித்து, ஆவியில் பலத்த கிரியைகளை நடப்பித்து, ஆவியில் கல்வாரி சென்று, ஆவியில் உயிர்ப்பிக்கப்பெற்று, ஆவியில் மகிமைக்குள் பிரவேசித்து, தம்மை முழுவதுமாய் ஆண்டு நடத்தின அந்த ஆவியையே சீஷர்கள்மேல் பொழிந்தார். திருச்சபை பிறந்தது. கிறிஸ்துமார்க்கம் உண்டாயிற்று. அவரது அடியாரும் ஆவியினால் நடத்து, ஆவியினால் போதிக்கப்பெற்று, ஆவியினால் நடந்து, ஆவியினால் பிரசங்கித்து, ஆவியினால் ஜெபித்து, ஆவியினால் நிருபங்களையும் சுவிசேஷத்தையும் எழுதினார்கள். ஆவியின் பலத்தால் சபைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த ஆவியானவரே நமது சுதந்

தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். அச்சாரமில்லாதவர்களுக்குச் சுதந்தரமில்லை.

இவ்வளவு முக்கியமான விஷயத்தைக் குறித்து நாம் அஜாக்கிரதையாயிருக்கக் கூடாது. நமது காரியம் எப்படியென்று திட்டமாய் அறியவேண்டும். நாம் ஆவிக்குரியவர்களா, மாம்சத்துக்குரியவர்களா? கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மாற்றுவதே ஆவியானவர் நமக்குள் நடப்பிக்கும் பிரதானமான வேலை. நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போது கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகிறது. கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்து மார்க்கம். நமது ஆலய அலங்காரங்களைக் குறித்தும், ஆராதனை ஒழுங்கைக் குறித்தும், ஆசாரங்களின் சிறப்பைக் குறித்தும், பற்பல முயற்சிகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுவதில் பிரயோஜனமில்லை. பரமபிதா தமது குமாரனை அனுப்பின நோக்கம் நம்மில் பலிக்காமற்போனால் இவைகள் யாவும் வீணாகும். நமது புறம்பான காரியங்களைக் கண்டு ஆண்டவர் திருப்தியடையமாட்டார். கிறிஸ்தவர்கள் என்கிற பேரை வைத்திருக்கிற ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவின் சிந்தையை அணிந்து அவர் சாயலுக்கொப்பாக மாற்றப்படவேண்டும். அவர் பட்ட பாடுகளும் அவர் நிறைவேற்றின சகல கிரியைகளும் இதற்காகவே. காலமெல்லாம் பாவமன்னிப்புக் கிறிஸ்தவர்களாயிருப்பதில் பிரயோஜனமில்லை. பாவமன்னிப்பு அவசியமே. பாவமன்னிப்புக்காக மாத்திரமல்ல, தமது திவ்ய சுபாவத்துக்கு ஒப்பாக நம்மை மாற்றும்படிக்கே ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்தார். நோய் நீங்கினால் மாத்திரம் போதாது; ஆள் பலப்படவேண்டும். நமக்குள் வசிக்கும் ஆவியானவர் கிறிஸ்துவின் அழகை நமக்குக் காண்பித்து, அவர்மேல் நமக்கு ஆவலை உண்டுபண்ணி, நம்மை அவருடைய சாயலுக்கொப்பாக மாற்றுகிறார். இந்த மாறுதல் இனி நாம் அவருக்கொப்பாக மாற்றப்படுவதற்கு அச்சாரம். இப்போது ஜீவியத்தில் மாறுதலடையாதவர்கள் இனி அவருக்கொப்பாக மாறுதலடையும் பாக்கியத்தைப் பெறமாட்டார்கள். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல் கண்டு

ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." (2 கொ. 3 : 18) இந்த அறிவும் இந்த வாஞ்சையும் அநேகருக்கு இல்லை. அவர்களுடைய கிறிஸ்து மார்க்கம் சுவிசேஷமார்க்கமல்ல. முற்றிலும் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து தங்கள் சுய இஷ்டப்படி நடந்து, சகல பாவங்களையும் நடப்பித்துக்கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவற்ற கிறிஸ்துமார்க்கம் எங்கேயாவது உண்டா? இந்தியா முழுவதும் இம்மாதிரிக் கிறிஸ்தவர்களாவார்களானால் அதைப்போல் ஆண்டவருக்கு மனவேதனையான காரியம் வேறில்லை. ஆனால் நம்முடைய சந்தோஷத்திற்கோ அளவிராது. ஏனென்றால் நமது அறிக்கைப் பத்திரங்களில் கிறிஸ்தவர்கள் தொகையைக் கோடிக்கணக்காய்க் கண்டு மகிழுவோம். எந்த சபை ஜாபிதாவில் பேர் எழுத இடமிராது. ஆகிலும் என்ன? இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒருவர் பேராகிலும் ஜீவ புஸ்தகத்தில் இராதென்பது நிச்சயம். காரியம் அறியாமல் அநேகர் மோசம் போகிறார்கள். ஏராளமான ஜனங்களை மார்க்கத்தில் சேர்த்துவிட வேண்டுமென்பது அவர்கள் தீர்மானம். மார்க்கத்தில் அல்ல, கிறிஸ்துவிடம் சேர்ந்தால் அல்லவோ அவர்களுக்கு மீட்புக்கிடைக்கும். கிறிஸ்து மார்க்கம் ஒரு ஜாதிக்கோ ஒரு தேசத்துக்கோ உரிமையானதல்ல. அக்கிரமங்களால் நிறைந்திருக்கும் நாங்கள் கடவுளுக்குச் சொந்தமான ஜனமென்று பெருமைபாராட்டின யூதஜாதி வேருடன் அழிந்தது. எவனொருவன் மனந்திரும்பி கிறிஸ்துவைச் சொந்தமாக்கி அவரால் புதுச்சிருஷ்டியாக்கப்படுகிறானோ அவனே அவருக்கு உரியவனாவான். எங்கள் தேசம் கிறிஸ்தவதேசம் என்னும் பெருமை ஒழிந்தது. கிறிஸ்தவர்கள் என்னும் பேர்பூண்ட தேசத்தவர் நடப்பிக்கும் அக்கிரமங்களும் கொலைபாதகங்களும் சிறப்பெருமையும் உலகம் அறியாத விஷயமல்ல. உள்ளம் நடுங்கத்தக்க பயங்கரமான காரியங்களை இவர்கள் துணிந்து நடப்பிக்கிறார்கள்; பெரிய கிறிஸ்து

வர்கள். இவர்களை நினைத்து அருமை ரட்சகர் இடைவிடாது கண்ணீர் சிந்துகிறார். ஒரு சபையில் அல்ல, ஒரு தேசத்திலே மட்டுமல்ல, கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான அருமையான தேவமக்கள் உலகமெங்கும் சிதறுண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித்தனியே அவயவமாயும், எல்லாரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமாயுமிருக்கிறார்கள். அவருடைய ஆவிபெற்றவர்களே அவர் சரீரத்தின் அவயவங்களாயிருக்கக்கூடும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."

ஆண்டவர் அச்சாரமாகிய ஆவியைப்பெற்ற தமது சீஷர்களைப் பார்த்து: நீங்கள் உலகத்தில் எனக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்றார். தான் கண்டதையும் கேட்டதையும் சொல்லுகிறவனே சாட்சியாவான். சீஷர்களும் ஆண்டவரிடத்தில் தாங்கள் கண்டதையும் கேட்டவைகளையும் உலகத்துக்கு அறிவிக்கவேண்டியவர்களே. ஆனால் சாட்சிகள் என்று ஆண்டவர் சொன்னபோது அவர் கருத்து மிகவும் மேலானது. அவர்கள் தமக்கு மாதிரிகளாயிருக்கவேண்டுமென்று விரும்பினார். சாட்சி வாய்க்குரியது; மாதிரி ஜீவியத்துக்குரியது. அவர்கள் வாக்கிலும் ஜீவியத்திலும் ஆண்டவருக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும். வியாபாரிகள் சிறு மாதிரித் துண்டுகளை நமக்குக் காண்பித்து, அவற்றில் எந்த மாதிரியை நாம் கேட்கிறோமோ அதில் எவ்வளவு துணி வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள். எந்த ஒரு மனுஷனும் தன்னிலே பூரணமுள்ளவனல்ல. கிறிஸ்துவின் சாயல்பெற்ற பிள்ளைகள் தனித்தனியே சிறு மாதிரித்துண்டுகள்போலிருக்கிறார்கள். நான் இனி உலகத்திலிரேன், நான் என்பிதாவிடம் போகிறேன். நீங்கள் உலகத்தில் இருக்கிறீர்கள், நீங்கள் எனக்கு மாதிரிகள் என்றார். கிறிஸ்துவின் சாயல்பெற்ற பிள்ளைகள் மூலமாய் கிறிஸ்து உலகத்தில் அறியப்படவேண்டும். நமது வார்த்தைகளைப் பார்க்கிலும் நமது ஜீவியமே விசேஷம்.

இதுவரை தியானித்ததைச் சுருக்கிப்பார்ப்போம். கர்த்தரே நமது சுதந்தரம். அவரை நாம் அனுபவிப்பது நித்திய பேரின்பம். "பரா

லோகத்தில் உம்மையல்லாமல் எனக்கார் உண்டு; பூலோகத்தில், உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை." கர்த்தர் நமது சுதந்தரமாயிருப்பதுபோல நாமும் அவர் சுதந்தரமாயிருக்கிறோம். "நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்" என்பதற்கு அடையாளமாகத் தமது ஆவியினால் நம்மை முத்திரித்திருக்கிறார். நாம் சுதந்தரவாளிகள் என்பதற்கு ஆவியானவர் நமக்கு அச்சாரமாயிருக்கிறார். நாம் பிள்ளைகளாகாவிட்டால் சுதந்தரமில்லை. மறுபிறப்பில்லாமல் பிள்ளைகளாவதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் மறுபிறப்பில்லை. விசுவாசமில்லாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. அவரை இன்னாரென்று அறிவதுமில்லை, ஆசீர்வாதமுமில்லை.

பட்டு, யுகாயுகமாய் ஜாதிகள் வழியாகச் சென்று காலம் நிறைவேறின போது பிரத்தியக்ஷமாக வெளிப்பட்டிருக்கிறார். பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமான சகலமும் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமைப் படவேண்டுமென்பதே அந்தத் தீர்மானம்.

கடவுள் தமது தீர்மானத்தை ஆதியிலேயே ஏன் நிறைவேற்றக் கூடாது? இது அவர் பலக்குறைவும் வாஞ்சைக்குறைவுமல்ல. மனுஷனுடைய அறியாமையும் சுயசித்தாட்டமுமே தாமதத்திற்குக் காரணம். மற்றச் சிருஷ்டிகளைப்போல் மனுஷனை நடத்துவதற்கு மனுஷன் ஒரு யந்திரமல்ல. பிரமாண்டமான உலகங்களை கடவுள் தமது சித்தப்படி எத்தடையுமின்றி நடத்தக்கூடும். மனுஷன் விஷயத்தில் மாத்திரம் அவர் கஷ்டப்படுகிறார். அவன் இணங்கும் வரை காத்திருக்கிறார். தம்மைப்போல் மனுஷனுக்கும் சுயாதீன சித்தத்தைக் கொடுத்தார். அதுவே தேவசாயல். அவன் பலவந்தமில்லாமல் தானாகவே தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொண்டு பிழைக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால் எங்கே சுயசித்தமுண்டோ அங்கே நன்மையைத் தெரிந்துகொள்வது போலவே தீமையைத் தெரிந்துகொள்ளும் இயல்பு இருக்கவேண்டும். மற்றப்படி மனுஷன் ஆட்டிவிட்ட பம்பரத்துக்கும், தட்டி நடத்தும் மோட்டாருக்கும் ஒப்பாவான். தானே தெரிந்துகொள்ளும் இந்தச் சுயாதீனமே பாவ ஆரம்பத்துக்கும் பாவப்பெருக்கத்துக்கும் காரணம். இன்று நாம் நன்மைசெய்தாலும் தீமை செய்தாலும் நாம் தானே செய்கிறோம். கடவுளைக் குற்றப்படுத்துவதில் என்ன பயன்? சுயாதீன சித்தம் மனுஷனுக்குப் பாக்கியமும் மேன்மையுமானது. அது கடவுளுக்குக் கீழ்ப்படியவும் கூடும், எதிர்க்கவும் கூடும். இந்த எதிர்ப்பை அடக்குவதற்கு ஆண்டவர் கையாடின முறை காலங்கள். நீண்டகாலமாக மனுமக்கள் பட்ட கஷ்டங்களாலும், பாவத்தின் கேடுகளாலும், தாங்களே கடவுளைத் தேடவும், ரட்சிப்பை வாஞ்சிக்கவும் அவர் சித்தத்திற்குக் கீழடங்கவும் ஏதுவுண்டாயிற்று. இதன் உண்மையை வேதசரித்திரங்களில் காண்கிறோம். அவர்களுக்கு இக்கட்

மும் சஞ்சலமும் உண்டானபோது அவரே தங்கள் ரட்சிப்பின் கன்மலையென்று உணர்ந்து அதிகாலமே அவரைத் தேடினார்கள். பசியில்லாதவன் விருந்தை அசட்டை செய்வான். காலம் நிறைவேறின போது அதாவது ஏற்றசமயத்தில் தேவன் தமது குமாரனை உலகத்தில் அனுப்பினார். அவர் வெகுதூரத்திலிருந்து வந்தவரல்ல. உலகத்திலிருந்தவரை அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர் மாம்ச சரீரத்தில் வெளிப்பட்டபோது அவரைக் கண்டார்கள். உலகத்தின் பாவப்பெருக்கம் கடவுளின் அநாதி தீர்மானத்தை அழிக்காமல் அந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கே ஏதுவாயிற்று. "பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படவேண்டும்" என்பதே அந்தத் தீர்மானம்.

சகலமும் ஒற்றுமைப்படும் வழி கிறிஸ்து. "கிறிஸ்துவுக்குள்ளே" என்பது விசேஷமாய் அவர் சிலுவையைக் குறிக்கும். சிலுவை என்பது மரத்தையல்ல அவரடைந்த மகாபெரிய ரகசியமாகிய அவருடைய மரணத்தைக் குறிக்கும். அவருடைய மரணத்தின் மூலமாகவே பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் பூரண ஒற்றுமைப் படவேண்டியது. எனக்காக மரித்தீரே, என் பாவங்களை மன்னியும் என்பது அநேகருடைய ஜீவகால விண்ணப்பம். அதற்குமேல் அவர்கள் யோசிக்கிறதில்லை. கிறிஸ்துவின் மரணத்தில் வெளிப்பட்ட தேவதீர்மானமோ மகா விசாலம். நாம் அதை அறியவேண்டும். நமது மனம் பரவசப்படத்தக்கதாக நாம் அதைத் தியானிக்கவேண்டும். இந்த மகத்தான பெரிய ரட்சிப்பை நாம் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். சகலமும் ஒற்றுமைப்படுவது நாளைச் சம்பவிக்கும் காரியமல்ல. அல்லது நாம் தீர்மானிக்கும் காலத்தில் நடக்கும் காரியமுமல்ல. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி" என்று அப்போஸ்தலன் கூறுகிறார். கடவுள் ஆதிமுதல் உலகத்தை நடத்திவந்திருக்கிற விதம் காலக்கிரமப்படியே. அவர் ஒரு காரியத்தை ஆரம்பித்து, அதற்குக் காலங்கொடுத்து, அது முடிவுக்கு வரும்போது மறுகாரியத்தை ஆரம்பிக்கிறார். இவ்வாறு ஆதிமுதற்கொண்டு காலத்துக்குக்காலம் மனுஷ

படியாக மனுஷரைப் பக்குவப்படுத்தித் தமது தீர்மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி வந்திருக்கிறார். சகலத்தையும் ஒற்றுமையாய்க் கூட்டிச் சேர்க்கவேண்டும் என்னும் அவருடைய தீர்மானத்தை கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றி, அவரையே அதை நடத்திவைக்கும் தலையாக்கினார். மகிமையடைந்த ஆண்டவர் தமது ஆவியின் வல்லமையால் ஒற்றுமையாக்கும் ஊழியத்தை உலகில் நடப்பித்து வருகிறார். பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் கிறிஸ்துவுக்குள் பூரண ஒற்றுமைப்படுங்காலம் எப்போதென்று நமக்குத் தெரியாது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும்." இதுவரை உலகத்தைத் தமது சித்தப்படி நடத்தி வந்தவரே, இனிமேலும் நடத்தித் தமது தீர்மானத்தை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள்ளே நடக்கவேண்டிய ஒற்றுமையைக் கவனிப்போம்.

1. **தேவனுக்கும் மனுஷனுக்கும் ஒற்றுமைவேண்டும்.** இதை "ஒப்புரவாகுதல்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஒப்புரவாகுதல் என்றால் ஒற்றுமைப்படல் அல்லது ஐக்கியப்படல் என்று அர்த்தம். பாவம் மனுஷனை கடவுளைவிட்டுப் பிரித்தது. அவன் தன் பாவத்தால் கடவுளுக்குப் பகைஞனானான். பரம பிதாவாகிய கடவுளோ மனுஷனைத் தள்ளிவிடவில்லை. கிருபையுள்ள பிதா பாவியைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளச் சித்தங்கொண்டார். நாம் அவரோடு ஒப்புரவாகிற வழியை அவரே உண்டாக்கினார். அந்த வழி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணமே. கிறிஸ்துவின் சிலுவை பாவிகளை இழுத்துக்கொள்ளும் சர்வகாந்தம். "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்" என்று அவரே சொன்னார். "கடவுள் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்." அவர் வழியை உண்டாக்கின பின் நாம் அவரோடு ஒப்புரவாகும்படி அன்புடன் நம்மை அழைக்கிறார். பாவத்தால் என்னைவிட்டுப் பிரிந்துபோன மக்களே, நீங்கள் என்னோடு ஐக்கியப்படக்கூடிய வழியை நானே உண்டாக்கியிருக்கி

றேன், நீங்கள் என்னிடம் வாருங்கள் என்று தமது கரத்தை நீட்டி நம்மைக் கூப்பிடுகிறார்.

நமது பாவங்களுக்காகத் துக்கப்பட்டு கடவுளிடம் மன்னிப்புக் கேட்டால் அவர் மன்னிக்கக் கூடாதா? குற்றமற்ற கிறிஸ்துவைத் தண்டித்து அவரை மரணத்திற்குள்ளாக்கித் தானா நம்மோடு ஒப்புரவாகவேண்டும் என்று கேட்பார் பலர். இது சிலுவையின் தாற்பரியத்தை அறியாத பேச்சு. இந்த அறியாமைக்குக் காரணம் சிலுவையைப்பற்றிய தவறான போதனை. அந்தப் போதனை பாவத்தால் வேதனையடைகிறவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கலாம்; யோசிக்கிறவர்களுக்கோ சங்கடமாயிருக்கும். அந்தப் போதனை என்ன? கடவுள் மகா பரிசுத்தரும் நீதியுமுள்ளவர்; நாமோ அந்தப் பாவிகள். நீதியின்படி கடவுள் கோபம் நம்மேல் பற்றியெரிந்து நாம் அழிக்கப்படவேண்டியது நியாயம். ஆனால் அவர் தமது கோபத்தைக் கிறிஸ்துவின்மேல் சுமத்தி, நமக்குப் பதிலாக அவரைத் தண்டித்து, அவரை மரிக்கும்படி செய்ததால் கடவுள் கோபம் நீங்கி சாந்தம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு மன்னிக்க அவருக்கு மனமுண்டாயிற்று என்பதே. இந்தப் போதனை கடவுள் நம்மேல் கோபமாயிருந்ததுபோலவும், கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து நமக்கு வரவேண்டிய ஆக்கினையைத் தாம் ஏற்றுக்கொண்டு பாடுபட்டதால், கடவுள் கோபம் தீர்ந்து, நமக்கு மன்னிக்க அவருக்கு மனம் வந்தது போலவும் காட்டுகிறது. இது வேதபோதனைக்கு விரோதம். ஆண்டவர் நமக்காகக் கொடிய பாடுகள் பட்டது உண்மையே. அது கடவுள் கோபத்தைத் தீர்ப்பதற்கும், அவரை நம்மோடு ஒப்புரவாக்கச் செய்வதற்கும் அல்ல. அவர் பாடுகளின் ரகசியத்தை நாம் அறியவேண்டும்.

பாவ மன்னிப்பும் ஐக்கியமும் லேசாய்க் கிடைக்கிற காரியமல்ல. ஒருவனுடைய அக்கிரமத்தை உண்மையாய் மன்னிப்பது மன்னிக்கிறவனுக்கு வேதனையான காரியம். பெருந்தொகை கடன்பட்டவனுக்கு மன்னிக்கவேண்டுமானால் அத்தொகையை இழந்து நஷ்டப்படாமல் முடியாது. கடவுள் நமக்கு மன்னித்துக்கொள்ளக் கூடாதா? ஆண்டவருக்கு இவ்வளவு அவஸ்தைகள் என்னத்துக்கு என்று பே

கிறவர்கள் முன்பின் யோசிக்காதவர்கள். ஒரு நல்ல தகப்பனுடைய மகன் ஒரு பொல்லாப்பைச் செய்து மன்னிப்புக் கேட்டால் தகப்பன் மன்னித்துக்கொள்ளக் கூடாதா? மன்னிப்பது இலேசு காரியம். தகப்பனைப் பாருங்கள்! அவன் அவமானத்தாலும் துக்கத்தாலும் நிறைந்து கண்ணீர் வடிக்கிறான். சாப்பிடவோ தூங்கவோ முடியாமல் அவஸ்தைப் படுகிறான். இவ்வளவு துயரத்துக்கும் காரணம் என்ன? மகன் செய்த பாவமும், பிதாபுத்திர சம்பந்தமுமே. மகன் குற்றத்தைத் தன் குற்றமாகவும், மகன் அவமானத்தைத் தன் அவமானமாகவும் உணர்ந்து புலம்பாத தகப்பன் ஒரு தகப்பனா? மன்னித்து விடுவதா பெரிய காரியம்? கடவுள் நமது பிதாவும் நாம் அவர் பிள்ளைகளுமானால் நமது பாவமும் அவமானமும் அவர் இருதயத்தைச் சஞ்சலப் படுத்தாதிருப்பது எப்படி? அவரைப்போல் பரிசுத்தமும் அன்புமுள்ள தந்தை யார்? அவரைப்போல் பாவத்தைப் பகைக்கிறவர்கள் யார்? மகன் தன் துர் நடத்தைக்காகத் துக்கப்படுவதைப் பார்க்கிலும் பெற்றதாய் அதிகமாய்த் துக்கப்படுகிறாளே? நமது பாவத்தை நாம் உணரவுமில்லை அதற்கேற்ற துக்கம் நம்மில் உண்டாகவுமில்லை. பிதாவாகிய கடவுளோ சகிக்கமுடியாத அவஸ்தைப் படுகிறார். ஆனால் ஆவியாயிருக்கிற கடவுள் நமக்காகப் படும் வேதனையை அறியக் கூடியவன் யார்? சொன்னாலும் நம்பப்போகிறவன் யார்? ஆகையால் நமது பாவத்தினிமித்தம் அவர் நெடுகிலும் தமக்குள் அடைந்த அவஸ்தையை மாம்சத்தில் வெளிப்பட்டு உலகத்துக்குப் பிரத்தியக்ஷமாக வெளிப்படுத்தினார். "தேவன் நம்மேல் கோபமாயிருக்க;" "கிறிஸ்து நம்மேல் அன்பாயிருக்க" என்பதல்ல. தேவனே நம்மேல் அன்புகூர்ந்து நாம் தம்மோடு ஒப்புரவாகும் வழியை உண்டாக்கினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." அவரே தமது குமாரனைத் தந்து இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். நிந்தையைச் சகிக்க முடியாமல் மரித்தவர்களுண்டு. பாவத்தின் பலனாகிய மரணத்தை ஆண்டவர் ஏற்றுக்கொண்டார். தேவன் கிறிஸ்துவுக்



குள்ளிருந்து நமது பாவங்களினிமித்தம் பாடுபட்டு வெற்றிசிறந்தார். இந்த அதிசயமான அன்பின் காட்சி பாவியின் உள்ளத்தைத் தொட்டுக் கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளும்படி செய்கிறது. பிதாவோடு ஒப்புரவாகும் வழியைக் கண்டடைகிறான். கடவுளோடுள்ள ஐக்கியத்துக்கு சிலுவையே ஆதாரம். கடவுள் சும்மா மன்னித்துக்கொள்ளக் கூடாதாவென்றால் அவர் மன்னித்தாரென்பதற்கு ஆதாரமென்ன? நமக்கு நிச்சயமுண்டாவதெப்படி? அதுமாத்திரமல்ல, சிலுவையில்லாமலே கடவுள் மன்னிக்கிறாரென்று வைத்துக்கொண்டாலும் தேவ ஐக்கியம் கிடைப்பதெப்படி? காலமெல்லாம் அவர் மன்னிக்கிறவராகவும் நாம் அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தைச் செய்து மன்னிப்புக் கேட்கிறவர்களாகவுமே இருப்போம். கிறிஸ்துவின் மரணம் நமக்கு மன்னிப்பை மாத்திரமல்ல, பாவ வல்லமையிலிருந்தும் பாவ ஆளுகையிலிருந்தும் நம்மை விடுவித்து பரிசுத்த பிதாவோடு நாம் அந்நியோன்னியமாய்ப் பிழைக்கச் செய்கிறது. பாவமன்னிப்புக்காக மாத்திரம் அவர் மரிக்காமல், கடவுளையும் நம்மையும் பிரித்த பாவத்தை ஏற்றுக்கொண்டு, அதைச் சிலுவையில் ஆக்கினைக்குள்ளாக்கி நிர்மூலம் பண்ணினார். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் பாவமன்னிப்போடு, பிதாவுக்குப் பிரியமான பிள்ளைகளாகி, அவரோடு ஒற்றுமைப்பட்டுப் பிழைக்கிறார்கள். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று அறிக்கையிடுகிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் கடவுளோடு ஒன்றுமைப் படவேண்டுமென்பது அவரது தீர்மானம்; அந்த வழியை விட்டால் வேறு வழியில்லை.

**2. மனுஷனுக்குள்ளேயே ஒற்றுமை வேண்டும்.** மனுஷன் ஒருவனேயானாலும் அவன் பல அம்சங்கள் சேர்ந்தவன். ஆவி, ஆத்துமா, சரீரமாகிய மூன்று பிரதான பாகங்கள் அவனிலுண்டு. இவை தவிர மனம், புத்தி, சித்தம், உணர்ச்சி, இருதயம், ஆசை முதலிய அம்சங்களும் உண்டு. இவையாவும் ஒற்றுமையுடன் பிழைப்பது மனுஷனுக்குப் பாக்கியம். ஆனால் வெடிகுண்டு ஓர் வீட்டுக்குள் விழுந்து வீட்டிலுள்ள யாவும் நொறுங்கிச் சிதறுவதுபோல, பாவம் மனுஷ

னுக்குள் பிரவேசிக்கவே அவன் காரியங்கள் யாவும் அலங்கோலமாயின. பாவம் மனுஷனை கடவுளை விட்டுப் பிரித்தது மாத்திரமல்ல, அவனுக்குள்ளேயே குழப்பங்களும் பிரிவினைகளும் ஏற்பட்டன. தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்திருக்கும் வீடும் ராஜ்யமும் தத்தளிப்பதுபோல மனுஷன் தன்னில் தானே சஞ்சலமடைகிறான். கண் ஒன்று பார்க்க, மனம் ஒன்று யோசிக்க, வாய் ஒன்று பேச, கை ஒன்று செய்ய, கால் ஒருதிசை நோக்க, இவ்வாறு ஏழைமனுஷன் குடிகாரனைப்போல் தள்ளாடுகிறான். இது வெளிக்கு அவ்வளவாய்த் தோன்றுகிறதில்லை. மனுஷர் பொதுவாய் இந்நிலைமையிலிருக்கிறபடியால் உள்ளான சீர்கேட்டை அவர்கள் கவனிக்கிறதில்லை. உள்ளூர் கலகம்போல் அவனுக்குள்ளேயே விரோதங்கள் ஏற்பட்டு மனுஷன் சமாதானமிழந்து சஞ்சலத்துக்குள்ளாகிறான். தன் உள் நிலையை அறிந்த மனுஷனோ தன்னை மனுஷனல்லவென்றும், தான் ஒரு புழுவென்றும், நாயென்றும் தன்னை இகழுகிறான். அந்தோ! என்ன பரிதாபம்! "நிர்ப்பந்தமான மனுஷன் நான்."

மனுஷனுக்குள்ளே ஒற்றுமையில்லையென்பதைப் புறம்பான குறிப்புகளால் அறியலாம். ஒருவன் ஒன்று கேட்டால் சள்ளென்று விழுதல், தனக்கு விரோதமாய் ஒருவர் பேசினதை அறிந்தால் ஆங்காரம் பொங்குதல், பெற்றோர்களை மரியாதையின்றி நாயே கழுதை என்று கூப்பிடல், வேலைக்காரர்மேல் வெடு வெடுவென்று விழுதல், முகத்துக்குமுன் மரியாதையாகவும் அப்புறம் போய் அவமானமாகவும் பேசுதல், சிறிய கஷ்டத்தையும் சகிக்க முடியாமல் நடுங்குதல், தீமைக்குத் தீமை செய்யும் ஆத்திரம், சரீரம் ஆலயத்திலும் மனம் வேறிடத்திலும் செல்லுதல், காரியங்களைச் சீக்கிரமாய் மறந்து சங்கடப்படல், இவை போன்ற குறிப்புகள் யாவும் மனுஷன் தனக்குள்ளே ஒற்றுமையற்றிருக்கிறான் என்பதற்கு அடையாளங்கள்.

உள்ளான ஒற்றுமை கிறிஸ்துவுக்குள் கிடைக்கும். கிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது பிதாவோடு நம்மை ஒற்றுமைப்படுத்தி அதன் பலனாக நமக்குள்ளே ஒற்றுமையை உண்டாக்குகிறார். "அவர் தமது ஜனத்துக்கு சமாதானம் கூறுவார்." சகல



மும் நமக்குள் ஒற்றுமைப்படும். கிறிஸ்து பிரிந்தவரல்ல. அவரிலுள்ள சகல தத்துவங்களும் பூரண ஒற்றுமைப் பட்டிருக்கின்றன. அவர் தமது ஆவியின் மூலமாய் நமக்குள் வசிக்கும்போது தேவ சமாதானம் நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளும். உலகம் கொடுக்கமுடியாததும் நம்மிலிருந்து எடுக்கமுடியாததுமான சமாதானத்தை ஆண்டவர் அருளுகிறார். புறம்பே எவ்வளவு பாடுகள் துன்பங்கள் இருந்தபோதிலும் உள்ளான சமாதானம் சகலத்தையும் சகிக்கும். சகலத்தையும் மேற்கொள்ளும். உள்ளான குழப்பமே சிறிய விஷயத்தையும் மலைபோல் காண்பிக்கிறது. நடத்துகிறவனின்றி வாத்தியக்காரர் அவரவர் இஷ்டம்போல் வாசிப்பார்களானால் சர்வ குழப்பமாகவும், காதுக்கு அருவருப்பாகவும் இருக்கும். தலைவன் நடத்தும்போது சங்கீதம் ஒற்றுமைப் பட்டு கேட்பதற்கு இன்பமாயிருக்கும். ஆண்டவர் நமக்குள் பிரவேசித்து நம்மை நடத்தும்போது நமது ஆவி, ஆத்துமா, சரீரம், சித்தம், புத்தி, விருப்பம் முதலான தத்துவங்கள் பூரண ஒற்றுமைப்படும். தேவ சமாதானம் நமது பங்காகும். காற்றையும் கடலையும் பார்த்து: இரையாதே அமைதலாயிரு என்று அவர் சொன்னவுடனே, படிப்படியாக அல்ல, அதே நிமிஷத்தில் விரித்த பாய்போல கடலின் கோஷ்டம் அடங்கி மிகுந்த அமைதலுண்டானது. அந்த அதிசய காட்சி சீஷர்களுக்கு பிரமிப்பை உண்டாக்கினது. அதேமாதிரி சமாதானகாரணரும் சமாதான கர்த்தருமாகிய ஆண்டவர் நமக்குள் பிரவேசிக்கும்போது சகல கோஷ்டங்களும் உள்ளூர் கலகமும் நீங்கி பூரண ஒற்றுமை உண்டாகும். பங்கிட்ட தேசம் பராபரனுக்கு உதவாது. நமக்குள் ஒற்றுமை உண்டாகும்போது நாம் பிதாவிடத்தில் முழுஇருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் முழுச் சிந்தையோடும் முழு பலத்தோடும் அன்பு கூருகிறவர்களாயிருப்போம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டிச்சேர்க்கப் படவேண்டும்."

3. மனுஷனுக்கும் மனுஷனுக்கும் ஒற்றுமை. நாம் கிறிஸ்துவின் மூலமாய் பிதாவோடு ஒற்றுமைப் படும்போது நமக்குள்ளேயே ஒற்றுமை உண்டாகிறது. இதன் பலனாக கடவுள் பிள்ளைகளோடும் ஒற்றுமைப்

படுகிறோம். நமக்குள்ளேயே குழப்பமிருந்தால் பிறரோடு அன்பும் சமாதானமுமாய் நடந்துகொள்ளமுடியாது. சகோதர சிநேகத்தைப் பற்றியும் ஒருவரிலொருவர் அன்பும் சிநேகமுமாயிருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் ஆண்டவர் பிரதானமாய்ப் போதிக்கிறார். அவர் எதைப் பிரதானமாகப் போதித்தாரோ அதுதான் நம்மிடத்தில் இல்லை. நமக்குள் பெருமையும், பொறாமையும், குற்றம் பிடித்தலும், அவமானப் படுத்தலும், தீங்குசெய்வதும் காணப்படுவது எவ்வளவு துயரமான விஷயம்! இப்படிப்பட்ட தீய சுபாவங்கள் நம்மை ஆண்டு கொண்டிருக்கும்போது கிறிஸ்தவர்கள் என்னும் பேர் நமக்கென்னத்துக்கு? ஆண்டவர் தமதடியாருக்கு அன்பையே அடையாளமாகத் தந்தார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனாலே நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றார். பொறாமையும் பகையும் பிரிவினையும் கேடான சிந்தையுமுள்ளவர்களை யாருடைய சீஷரென்று சொல்வது? ஜனங்களுக்குள் வெளியரங்கமாகப் பகைக்கிறவர்களும் தீமை செய்கிறவர்களுமுண்டு. மரியாதையாக நடப்பவர்கள் அவ்வளவு தூரம்போகமாட்டார்கள். "வைத்தியர் கொலைகாரர் அல்லவென்றாலும் அவர்கள் செய்யும் கொலைகள் சாஸ்திரமுறைப்படி யிருக்கும்" என்று ஒருவர் சொன்னார். நமது உத்தியோகம் அந்தஸ்தினிமித்தம் நாம் பகிரங்கமாய்த் தீங்குசெய்யாவிட்டாலும் நமது அறிவுக்கேற்றபடி ரகசிய தீமை செய்யும் சுபாவம் நீங்காது.

நமக்குள்ளே பல வித்தியாசங்கள் ஒற்றுமைக்கு இடையூறாயிருக்கின்றன. கற்றோர் கல்லாதவர்; தனவந்தர் ஏழைகள்; எஜமான்கள் வேலைக்காரர்; பலசாலிகள் பலவீனர்; நாகரீகத்தார் நாகரீகமற்றவர்கள்; செல்வாக்குள்ளவர்கள் செல்வாக்கற்றவர்கள்; உயர்ந்தோர் தாழ்ந்தோர் இவைமுதலான பேதங்கள் நமக்குள் பிரிவினையை உண்டாக்கி நம்மைப் பாழாக்குகின்றன. அப்படியானால் நமக்குள் ஒற்றுமையும் சிநேகமும் உண்டாவதெப்படி? கிறிஸ்துவே அதற்குப் பரிகாரம். கிறிஸ்துவுக்குள்ளேயே மெய்யான ஒற்றுமை உண்டாகும். "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்



துக்கொள்ளுவேன்" என்றார். நாம் ஒவ்வொருவரும் அவர் அன்பின் காந்தத்தால் இழுக்கப்பட்டு அவரையே ஜீவனாக நாம் ஏற்றுக்கொண்டு பிழைப்பது உண்மையானால், மேற்கூறிய வித்தியாசங்கள் யாவும் இடையூறாயிராமல் ஒருவருக்கொருவர் அனுகூலமாகயிருக்கும். அவரது அன்பின் வெள்ளம் நமக்குள் வரும்போது, சிம்சோனைக் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்கள்போல் எரிந்துபோனதுபோல நமது பிரிவினைகள் அழிந்துபோகும். இதன் உண்மையை அப்போஸ்தலர் நடபடியில் காண்கிறோம். "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்." நமக்குள் ஒரு சபையிலுள்ள சொற்பப்பேர் முதலாய் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருக்கிறதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான அன்பும் ஒற்றுமையும் நமக்கில்லையென்றால் நாம் செய்துவருகிற சகல காரியங்களும் வீணாகும். திரளான ஆதிச்சபையார் பூரண ஒற்றுமையில் பிழைத்ததெப்படி? அவர்கள் நிர்மாணமும் பிரயாசமுமல்ல. அவர்கள் நோக்கம் கிறிஸ்து, ஜீவன் கிறிஸ்து, நினைவு கிறிஸ்து, தேட்டம் கிறிஸ்து, பேச்சு கிறிஸ்து, ஊழியம் கிறிஸ்து, எழுத்து கிறிஸ்து, ஜெபம் கிறிஸ்து, பாட்டு கிறிஸ்து, நம்பிக்கை கிறிஸ்து, மகிமை கிறிஸ்து, மோட்சம் கிறிஸ்து, அவர்களுக்குச் சகலமும் கிறிஸ்துவே. இவ்வாறு பற்பல வித்தியாசங்களுள்ள திரளான விசுவாசிகள் தனித்தனியே கிறிஸ்துவோடு ஒற்றுமைப்பட்டிருந்ததால், அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையும் ஒரே மனமுமாயிருப்பது இயல்பாயிருந்தது. ஒருவருடைய சிநேகிதர் தங்களுக்குள் சிநேகிதர். அவர்களெல்லாரும் கிறிஸ்துவாகிய ஒரே ஜீவனாலே பிழைத்தார்கள். நமக்கும் கிறிஸ்துவுக்கும் அன்பும் ஐக்கியமுமில்லாமற்போனால் நாம் மற்றவர்களோடு ஒற்றுமையாயிருக்கமுடியாது.

இந்த மெய்யான ஒற்றுமை கிறிஸ்துவுக்குள்ளாக வேண்டுமென்பது தேவ நிர்மாணமாயிருக்க, அதுவே நியாயமுமாயிருக்க, மனுஷரை ஒற்றுமைப் படுத்தும்படி கடந்த ஐம்பது வருஷகாலங்களாக ஞானிகள் சாஸ்திரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சமல்ல. சமுதாயத்தை விருத்திபண்ணவோ, நாகரீகத்தைப் பெருக்கவோ,

கல்வியை உயர்த்தவோ, சுகாதாரத்தை உண்டாக்கவோ, வேலையில்லாக் கஷ்டத்தை நீக்கவோ, ஆயுதங்களைக் குறைக்கவோ, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்துப் போடவோ, ராஜ்யமந்திரிகள் கூடி ஆலோசிக்கவோ, ஆகா! உலகில் சமாதானத்தை நிலைநாட்டும்படி அறிவாளிகள் எடுத்துக்கொண்ட பிரயாசங்களுக்கு அளவில்லை. இப்போர்க்கொத்த சீர்திருத்தங்களால் மனுமக்களுக்குள் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்கி விடலாம் என்பது நாளதுவரை அநேகருடைய நம்பிக்கையாயிருக்கிறது. உள்ளே அழுக்கடைந்த பாத்திரங்களை வெளியே பூசி பளபளப்பாக்குவதால் பிரயோஜனம் என்ன? சட்டங்களாலும் பிரமாணங்களாலும் ஜாதிகளுக்குள் உண்மையான ஒற்றுமை ஏற்படமாட்டாது. மெய்யான ஒற்றுமை இருதயத்துக்குரியது. இருதயம் சரிப்படாவிட்டால் ஒன்றுமே சரிப்படாது. இரட்சக நாயகன் இருதயத்தைக் கைப்பற்றித் தமது அன்பை அங்கே ஊற்றுகிறார். அவருடைய ஒரே அன்பு பலருடைய இருதயங்களில் ஊற்றப்படும்போது, பலரான மனுஷர் சகல வித்தியாசங்களையும் மறந்து தங்களுக்குள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாகிறார்கள். உண்மையான ஐக்கியம் கிறிஸ்துவுக்குள்ளேதான் ஆகவேண்டியது. ஏனென்றால் சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்பது தேவ தீர்மானம்.

4. **குடும்பத்தில் ஒற்றுமை.** குடும்பம் என்றாலே ஒற்றுமையென்று அருத்தம். அவர்கள் ஒரே ரத்தமாகையால் இயற்கையாகவே அங்கே ஒற்றுமையிருக்கவேண்டியது. அப்படியிருந்தும் குடும்பங்களில் ஒற்றுமை காண்பதரிது. ஆண்டவர் சொன்னதுபோல் அநேக குடும்பங்கள் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்கின்றன. கடவுள் அறிவற்ற குடும்பங்களைக் குறித்துப் பயங்கரமான காரியங்களைக் கேள்விப்படுகிறோம். தகப்பன் மகனை, மகன் தகப்பனை; புருஷன் மனைவியை, மனைவி புருஷனை; சகோதரன் சகோதரனை, தகப்பன் பிள்ளைகளை கொலைசெய்யும் விஷயத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் வாசிக்கிறோம். இது எவ்வளவு கொடிய விஷயம்! நமக்குள் அப்போர்க்கொத்த துணிகரச் செயல்கள் இல்லாவிட்டாலும்,

பற்பல காரணங்களாலே மனஸ்தாபமும் பிரிவினைகளும் குடும்பங்களில் காணப்படுவது உண்மையே. உடற்கூற்றின் வித்தியாசம் ஒரு காரணம். சிலருடைய சரீரம் பலமும் உறுதியுமானது; எதையும் செய்ய, எதையும் சகிக்க அவர்களால் கூடும். மற்றவர்கள் சரீரத்தில் பலவீனர்; சோர்வும் தளர்ச்சியுமே அவர்கள் பங்கு. இந்த வித்தியாசத்தால் குறைகூறுதலும் மனஸ்தாபமும் ஏற்படும். வேறொரு காரணம் குணபேதம். ஒருவருக்கு துடுக்கான சுபாவம், மற்றவருக்கு அசமந்தம்; ஒருவருக்கு உற்சாகமான ஆவி, மற்றவருக்கு அமரிக்கை; ஒருவருக்கு ஓயாப்பேச்சு, மற்றவருக்கு மௌனம்; ஒருவருக்குச் சிரிப்பு, மற்றவருக்கு விசனம். இப்படியுள்ள சுபாவ வித்தியாசங்களாலும் பிரிவினை உண்டாகிறது. இன்னொன்று, ருசிகளில் வித்தியாசம். ஒருவருக்குப் புஸ்தகவாசிப்பே பிரியம், மற்றவர் அதைக்கையினாலும் தொடுவதில்லை. அவர் இயந்திரக் கருவிகளும் யந்திரங்களுமே ஆராய்ச்சி. ஒருவருக்குச் சங்கீதமே பிரியம், மற்றவருக்கு வீட்டுவேலையே கவனம். ஒருவருக்கு ஓயாத முயற்சி, மற்றவருக்கு ஆழ்ந்த சிந்தை. இவ்வாறு தேக வித்தியாசம், குணபேதம், வரங்கள் வித்தியாசங்களால் தங்களுக்குள் பொருத்தமின்றி மாறுபடுகிறார்கள். பிள்ளைகள் சாமர்த்தியம், முக அழகினிமித்தம் பெற்றோர் சில பிள்ளைகளை விசேஷித்து நேசிக்கும்போதும் குடும்பத்தில் முறுமுறுப்பும் பிரிவினையும் உண்டாகும்; ஆஸ்தியைப் பாகம் பிரிக்கும் விஷயத்திலும் அதிருப்தியும் சண்டையும் வியாச்சியமும் ஏற்படும். பூரண அன்பும் ஒற்றுமையும் காணப்படவேண்டிய குடும்பங்களில் பகையும் பிரிவினையும் காணப்படுவது எவ்வளவோ துயரமான விஷயம்!

குடும்பங்களில் ஒற்றுமை உண்டாவதெப்படி? இவர்கள் எல்லாரையும் ஒரே தேகக்கட்டு, ஒரே நிறமும், ஒரே அழகும், ஒரே குணமும், ஒரே புத்தியும், ஒரே வேலையும் உள்ளவர்களாய் அமைத்தால் ஒற்றுமை ஏற்படுமோ? அல்லாது எல்லாரும் ஒரே தேகக்கட்டும், ஒரே தோற்றமும், ஒரே குணமும், ஒரே வரமுமாயிருக்க வேண்டுமென்பது தேவசித்தமோ? ஒருக்காலும் அல்ல. அப்படி எல்லாரையும்

ஒன்றுபோலாக்கக் கூடுமானாலும் நாம் எதிர்பார்க்கும் ஒற்றுமை வராது. கிறிஸ்துவினால் மாத்திரம் குடும்பத்தில் மெய்யான ஒற்றுமை உண்டாகும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் சித்தையால் நடத்தப்படும்போது நிச்சயமாகவே அவர்களுக்குள் ஒற்றுமை காணப்படும். அவரவருக்குரிய இயற்கையான வரங்களையும் திறமையையும் அழிப்பதினால் அல்ல; எல்லாரையும் தமது ஒரே ஆவியினால் ஆளுவதாலேயே ஒற்றுமை உண்டாகும். பேதுரு யார்? யோவான் யார்? கிறிஸ்துவின் ஒரே ஆவி அவர்களிருவரையும் இணைத்ததால் அவர்களிருவரும் எவ்வளவோ அன்பாய் ஒருமித்து ஊழியஞ்செய்தார்கள். சகோதரரையே எடுத்துக்கொண்டாலும் அந்திரேயாவுக்கும் பேதுருவுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! யாக்கோபுக்கும் யோவானுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! ஆனால் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பூரண ஒற்றுமையுடன் பிழைக்கவில்லையா? அருணோதயப் பிரகாசம் பட்சிகள்மேல் பட்ட மாத்திரத்தில் எல்லாப் பட்சிகளும் ஒரே குரலில் பாடாமல், ஒவ்வொரு பட்சியும் தன்தன் சுயசத்தத்தில் மகிழ்ச்சியுடன் பாடுவதுபோல, கிறிஸ்துவின் அன்பு மக்கள் உள்ளத்தில் பிரவேசித்தவுடனே அவரவருக்கு இயற்கையாயுள்ள சுபாவலட்சணங்கள் அழிந்துபோகாமல் மேன்மையாக விளங்கும். பெற்றோரும் மக்களும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இணைக்கப்பெற்று ஆண்டவர் அன்பால் நடத்தப்படுவார்கள். இதுவே குடும்பத்தின் பாக்கியம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்."

5. திருச்சபையின் ஒற்றுமை. திருச்சபையை எங்கே காணலாம்? எந்த மிஷனில் காணலாம்? அது இங்கே என்றும் அங்கே என்றும் சொல்லப்படுவதற்கு ஏதுவில்லை. ஆவிக்குரிய பகுத்தறிவில்லாமல் புறம்பான காரியங்களில் பற்றுதல் வைத்தவர்கள் தங்கள் சபையே மெய்யான சபையென்று சாதிப்பார்கள். திருச்சபை ஒரு இடத்துக்கும் ஒரு கூட்டத்தாருக்கும் உரியதல்ல. பெந்தெகோஸ்தே நாளில் ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தார். அது அவர் கிருபையால் உலகமெங்கும் பரவியிருக்கிறது. எந்த ஒரு சபையும்



தன்னிலே பூரணமுள்ளதல்ல. விசுவாசிகளான கடவுள் பிள்ளைகள் உலகெங்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமென்பதும், தனித்தனியே அவயவமென்றும் அழைக்கப்படுகிறார்கள். ஆண்டவர் உலகத்திலிருந்தபோது தமது சொந்தச் சரீரத்தின் மூலமாய்த் தம்மை வெளிப்படுத்தினார். தமது சரீரத்தின் மூலமாய் உபதேசித்து, நற்கிரியைகளைச் செய்து, கடைசியாக தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினால் ஒப்புரவாகுதலையும் உண்டாக்கினார். அவர் மகிமையடைந்தபோது அவர் சரீரம் மறைந்தது. ஆனால் உலகத்தில் அவர் தொடங்கின ரட்சிப்பின் ஊழியம் நடந்தேறவேண்டும். அப்படியானால் மகிமையடைந்த ஆண்டவருக்கு உலகத்தில் சரீரம் அவசியம். திருச்சபையே அந்தச் சரீரம். சபையாகிய சரீரத்துக்கு ஆண்டவர் தலையானவர். சரீரத்திற்குத் தலை பிரதானம். சரீரத்திற்குரிய காரியங்களை நடத்துவது தலையே. அதுபோலவே தலைக்கும் சரீரம் அவசியம். சரீரமில்லாமல் தலை என்ன செய்யும்? இது ஆண்டவருக்கும் சபைக்குமுள்ள பிராண ஐக்கியத்தைக் காட்டுகிறது. தலையின் ஜீவனும் சரீரத்தின் ஜீவனும் ஒன்றே. கிறிஸ்துவின் ஜீவன் பரிசுத்த ஆவி. ஆண்டவர் தமது ஜீவனாகிய ஆவியை அடியாருக் கருளினபோது அவர் சரீரமாகிய திருச்சபை உண்டானது. அந்த ஜீவனாலேயே சபை பிழைத்து வளர வேண்டியது. விசுவாசிகள் யாவரும் அவர் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஜீவனாலே அவர்கள் பிழைக்கிறார்கள். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." அவன் பூமியில் ஒரு சபையைச் சேர்ந்திருந்தாலும் ஆண்டவருடைய சரீரத்தின் அவயவமல்ல.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள பிராண ஐக்கியத்தைப் பற்றியும், சரீரத்தின் அவயவங்களில் ஒவ்வொன்றுக்குமுள்ள ஐக்கியத்தைப் பற்றியும் அப்போஸ்தலன் தமது நிருபங்களில் தெளிவாய்ப் பேசுகிறார். தலைக்கும் சரீரத்துக்கும் ஒற்றுமையிருக்கிறது போல, அவயவங்களுக்குள்ளும் ஒற்றுமையிருக்கவேண்டும். நமது சரீர அவயவங்களை நாம் பகைக்கிறதில்லை. அவயவங்களுக்குள் எவ்

வரேயோ ஒற்றுமையைக் காண்கிறோம். ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் பாடுபடுகிறது. ஒரு அவயவம் மேன்மையடைந்தால் எல்லா அவயவங்களும் மேன்மை பாராட்டுகிறது. துக்கத்திலும் சந்தோஷத்திலும் அவயவங்கள் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. அவயவங்களெல்லாம் சரீரத்தின் ஒரே ஜீவனாலே பிழைப்பதே இந்த ஒற்றுமைக்குக் காரணம். விசுவாசிகள் எல்லாரும் கிறிஸ்துவின் ஜீவனாலே பிழைக்கிறதாயிருந்தால் கட்டாயம் அவர்களுக்குள் ஒற்றுமையிருக்கும். கிறிஸ்துவைப் பார்க்கிலும் மற்றக் காரியங்களில் வைராக்கியம் பாராட்டுவதால் பிரிவினை உண்டாகிறது. சபைகள் தங்களுக்குள்ள அற்ப பேதங்களாலும், கொள்கை ஆசாரங்களாலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கின்றன. ஒரு கொள்கையின் பற்றுள்ள கூட்டத்தார், தாங்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, மற்றக் கிறிஸ்தவர்களைவிட்டு விலகி, மற்றவர்களை அந்நியரைப்போல் பார்க்கிறார்கள். அவர்களைத் தங்களுடைய பந்தியில் சேர்க்கிறதில்லை. அந்தக் கூட்டத்தாரிலும் தங்களுக்குள் ஒற்றுமையாயிருக்கிறார்களென்று பார்த்தால் அவர்களுக்குள்ளும் பலபிரிவு. இது எங்கேபோய் நிற்கும் என்று தெரியவில்லை. ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு பிரிவாக ஆகித்தான் தீரும்போலிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் கிறிஸ்துவைப் பிரதானமாய்ப் பற்றிக்கொண்டிராமல் மற்றமற்ற விஷயங்களை முக்கியப்படுத்தினதேயாகும். இவ்வாறு பிஷப் பேர்களாஸம், ஆசாரம், கொள்கையாலும் சபைகளுக்குள் பிரிவினை காணப்படுவது எவ்வளவு துயரமான விஷயம்! இன்னும் எத்தனை புதுக்கூட்டத்தார் புறப்படுவார்களோ தெரியாது. ஜீவனுள்ள கிறிஸ்துவைப் பிரதானமாய்ப் பற்றிக்கொண்டிராமல் நாமங்கள், சட்டங்கள், கொள்கைகள், சடங்காசாரங்கள், ஆளுகை முதலான காரியங்களில் நாம் வைராக்கியம் பாராட்டும்போது கட்டாயம் பிரிவினை இருக்கவேயிருக்கும். பிஷப் பேர்களும் சபைப்பேர்களும் ஆலயங்களின் சிறப்பான காரியங்களும் அழிந்துபோகும். எல்லா நாமத்துக்கும் மேலான நாமமாகிய இயேசுவின் நாமம் ஒன்றே நித்தியமாய் நிலைத்திருக்கும். தேவராஜ்யத்தின் திறவுகோல்கள் எங்களுக்கே உரியதென்று எந்தச் சபையும் பெருமை பாராட்ட முடியாது. நாம் ஒரு சபையின் அங்கங்



களாயிருப்பதால் கிறிஸ்துவின் சரீரத்திலும் அவயவமாயிருக்கிறோம் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது. எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் கிறிஸ்துவின் ஜீவனாலே பிழைப்பவர்கள் மாத்திரமே அவரது சரீரத்தின் அவயவங்களாயிருப்பார்கள். அவர்கள் கட்டாயம் தங்களுக்குள் ஒற்றுமையும் ஐக்கியமுமாயிருப்பார்கள். சபையில் ஏதோ மந்திரமிருக்கிறதென்றும், அதைச் சேர்ந்தாலே மோட்சம் என்றும் நினைக்கவேண்டாம். சபைக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள ஐக்கியத்துக்குத் தக்கதாகவே சபையில் அவருடைய ஆசீர்வாதமும் வல்லமையும் விளங்கும். புறம்பேயுள்ள ஒரு மனுஷன் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவர் சித்தைகொண்டு பிழைப்பானானால், சபையிலிருக்கிற நூர்பேர்க் கிறிஸ்தவனைப் பார்க்கிலும் அவனே ஆண்டவருக்கு உகந்தவனாவான். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. ஆலய அலங்காரங்களையும் ஆராதனைச் சிறப்பையும் ஜனத்தொகையையும் கண்டு ஆண்டவர் ஏமாந்துபோகிறவரல்ல.

ஒரு சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள்ளேயே அன்பும் ஐக்கியமும் இல்லாதபோது மற்றச் சபைகளின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவானேன்? ஆதிச்சபை ஆவியினால் பிறந்தது, அன்பில் நிறைந்தது, சகோதர சிநேகமுள்ளது, கிறிஸ்துவோடிணைக்கப்பெற்றது. அதுவே கிறிஸ்துவின் சரீரம். தலையாகிய கிறிஸ்து சரீரமாகிய சபையைப் போஷித்துக் காப்பாற்றினார். திரளான விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். தற்காலத்துச் சபைகள் காரியம் முற்றிலும் வித்தியாசம். ஆவியல்ல, மாம்சம் நம்மை ஆளுகிறது. அன்பல்ல, பொறாமை ஆளுகிறது. சகோதர சிநேகமல்ல, பகைவிரோதம் நிலைக்கிறது. கிறிஸ்துவோடல்ல, உலகத்தோடிணைக்கப் பெற்றிருக்கிறது. எல்லாரையும் குறித்து நாம் இப்படிச் சொல்லுகிறதில்லை. சபைகள்தோறும் ஆண்டவரை உத்தமமாய்ப் பின்பற்றுகிற அடியார் பிள்ளைகளுண்டு. சபையிலுள்ள பேர்க் கிறிஸ்தவர்களால் அவர்களுடைய சஞ்சலம் கொஞ்சமல்ல. கடந்த பத்து வருஷங்களாகச் சபைகளை ஐக்கியப்படுத்தும்படி சபைத் தலைவர்கள் அரிய முயற்சிசெய்து வருகிறார்கள். ஐக்கியம் விரும்பத்

தக்க காரியமே. அதற்கு இவ்வளவு போராட்டமும் தாமதமும் ஏன்? நாங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கிறோம், நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள் என்று புலம்புவது எவ்வளவு பரிதாபம்! மறுபடியும் கொள்கை, ஆளுகை, ஆசாரம் முதலியகாரியங்களை முக்கியப் படுத்தி அவற்றில் ஐக்கியப்படுவோமானால் அந்த ஐக்கியம் வாய்க்காது. சபைகளின் மெய்யான ஐக்கியம் கிறிஸ்துவுக்குள்ளாகவேண்டும். அவர் ஆதிச்சபையை எப்படி ஒற்றுமைப்படுத்திக் கட்டினாரோ அதே மாதிரி நாமும் கட்டவேண்டியது. "பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனாலே நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்." "நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் அறிவீர்கள்." ஆண்டவர் விரும்பின ஐக்கியமும் ஒற்றுமையும் எத்தன்மையானதென்று மேற்கூறிய வசனங்களில் திட்டமாய்க் காண்கிறோம். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப் படவேண்டும்."

௬. பரலோக பூலோக ஒற்றுமை. கிறிஸ்துவால் உண்டாகும் ஒற்றுமை பூமிக்குரியது மாத்திரமல்ல. அது பரலோகத்தையும் சேர்த்து இணைக்கிறது. ஏனென்றால் "அவர் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராயிருக்கிறார்." இவ்வுலகில் சகல பாடுகள் போராட்டங்கள் மத்தியில் தேவராஜ்யத்துக்காக உழைத்துவருகிற நாமும், நம்மைவிட்டுப் பிரிந்து மறுமைக்குட் பிரவேசித்திருக்கிற திரளான விசுவாசிகளும் சேர்ந்து கிறிஸ்துவுக்குள் ஒரே குடும்பமாக இருக்கிறோம். அவர்கள் கிறிஸ்துவுடன் கூட அவர் பாதுகாப்பில் இருப்பதுபோலவே நமது ஜீவனும் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நமது சரீரம் இங்கேயிருந்தாலும் நமது குடியிருப்பு பரலோகத்தி லிருக்கிறது. நாம் ஆவியில் உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு அவர்களோடு உலாவுகிறோம். நாம் இப்பக்கத்திலும் அவர்கள் அப்பக்கத்திலும் இருந்தாலும் ஓர் மெல்லிய திரையே இடையிலிருக்கிறது. நாம் ஜீவ



னாகப் பற்றிப் பிடித்துப் பிழைக்கிற ஆண்டவரையே அவர்களும் பற்றிப் பிடித்து, அவருடைய ஐக்கியத்தில் ஆனந்தித்து, அவராலே பிழைக்கிறார்கள். அவர்களும் நாமும் சேர்ந்தே கிறிஸ்துவின் சரீரமாகிறோம். பரமபிதா இருதிறத்தாரையும் ஒரே குடும்பமாகப் பாவித்து கிறிஸ்துவுக்குள் பராமரித்துக் காப்பாற்றுகிறார். அவர்களை நம்மை விட்டுப் பிரிக்க மரணத்துக்கு அதிகாரமில்லை. அவர்கள் சரீரத்தில் இராததினாலே, நாம் அவர்களைக் கண்ணால் காணாததினாலே, அவர்களை நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள் என்று உலக முறைப்படி பேசுகிறோம். அவர்கள் நமக்கு அந்நியர்கள் அல்ல. அவர்களும் நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே குடும்பமாயிருக்கிறோம். ஆண்டவர் அப்படியே காண்கிறார். இதுவே சிலுவையின் வெற்றி.

தேவதூதர்களையும் கவனிப்போம். இவர்கள் கடவுள் சமுகத்தில் வசிப்பவர்கள். அவர்கள் முற்றிலும் ஆவிக்குரியவர்களானதால் மாம்சசரீரத்தில் வசிக்கிற நமது தற்கால நிலைமைக்கு சற்று மேற்பட்டவர்களே. மனுஷனைக்குறித்து "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்" என்று சொல்லியிருக்கிறது. ஆண்டவர் கூட மாம்சத்தில் வந்தபோது அவரைக்குறித்தும் அப்படியே சொல்லியிருக்கிறது (எபி. 2: 9.) ஆவியே மெய்யான மனுஷன். அவன் பூமியில் பிழைக்கவேண்டியவனானதலால் கடவுள் அவனுக்குச் சரீரத்தைக் கொடுத்தார். இந்தச் சரீரத்தாலேயே மனுஷன் தேவதூதர்களுக்குத் தாழ்ந்தவன்போல் எண்ணப்படுகிறான். வாஸ்தவத்தில் அவன் தாழ்ந்தவனல்ல. கடவுளுடைய பரிசுத்த தூதர்கள் அவனுக்கு வேலைக்காரர். நமக்காகவே தேவதூதர் பூமியிலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதுமாயிருக்கிறார்கள். சிறுபிள்ளைகளுக்காக அவர்கள் பிதாவின் சமுகத்தை ஓயாது தரிசிக்கிறார்கள். பக்தர்கள் விஷயமாய் அவர்கள் செய்திருக்கும் பணிவிடைகளை வேதத்தில் எங்கும் வாசிக்கிறோம். அப்படியிருந்தும் நாம் அவர்களுக்குப் பயப்படுகிறோம். பாவமும் பலவீனமுமுள்ள இந்தச் சரீரத்தில் நாம் குடியிருப்பதால் தேவதூதர்களைச் சந்திப்பது நமக்கு நடுக்கத்தை உண்டாக்குகிறது. புருஷர் ஸ்திரீகள் தேவதூதர்களைக் கண்டபோதெல்லாம் பயந்

கவெக்கிறார்களென்பதை வேதத்தில் படிக்கிறோம். ஆவி, சரீரம் என்னும் வித்தியாசத்தால் அவர்களோடு நெருங்கிப் பழகக் கூடவில்லை. கிறிஸ்துவின் கிருபை இந்தப் பிரிவினையை உடைத்தெறிந்தது. இனி வருங்காலத்தில் நாம் தேவதூதரோடு ஒற்றுமைப்பட்டு வாழுவோம். நமது தலையாகிய "கிறிஸ்து பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன." (1 பேது. 3: 22). "மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2: 10). பாவத்தால் தாழ்ந்துபோன நாம் கிறிஸ்துக்குள் பரிசுத்த தூதர்களோடு ஒற்றுமையாய்ப் பிழைக்கும் கிருபை கிடைத்தது. இதைக்குறித்து ஆண்டவர்: "அவர்கள் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" என்றார். அதாவது, ஆவிக்குரிய தன்மையில் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், சம்பந்தத்தில் கடவுள் பிள்ளைகளுமாகத் தக்கவராய் அவர்களிலும் மேலான பதவியிலிருப்போம். இந்த உன்னத ஒற்றுமையை நாம் சம்பாதிக்கவில்லை. நமது ரட்சகரான இயேசு கிறிஸ்து கிருபையின் மூலம் இதை நமக்காகச் சம்பாதித்தார். அவ[illegible] கைவிட்டால் இகமும் பரமும் ஒற்றுமைப்பட வழியில்லை. கிருபையில் தேவதூதர்களும் சம்பந்தப்பட்டிருக்கிற மகிமையும் ஆழமானது. "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்."

7. சர்வ சிருஷ்டிக்கும் ஒற்றுமை. இப்பிரபஞ்சம் அநேக விநாசங்களின் காக்கு ஆதாரமாயிருப்பது போலவே, அவற்றால் ஆபத்துகளும் உண்டாகின்றன. இயற்கையில் சம்பவிக்கும் அழிவை மேற்கொள்ளும்படி மனுஷன் செய்த ஆராய்ச்சி கொஞ்சமல்ல. அழிவை உண்டாக்கும் சக்திகளின் பிரமாணங்களைக் கண்டுபிடித்து அவைகளைக் கட்டுப்படுத்தி மனுஷருடைய பிரயோஜனத்திற்கென்று உபயோகித்து வருகிறார்கள். கடற்கரையில் வருகைகளுக்குள் [illegible] யிருக்கும் [illegible] பிரயோசனத்தக்கது. இன்னும் என்னென்ன அற்புத விஷயங்களை மனுஷன் கண்டுபிடிக்கப்போகிறா



னென்று சொல்வதற்கில்லை. எப்படியிருந்த போதிலும் இயற்கைக்கு முன் மனுஷன் எம்மாத்திரம்? திடீரெனக் கிளம்பும் புயல்காற்று அரணான பட்டணங்களைத் தரைமட்டமாக்குகிறது. எதிர் பாராத வெள்ளப்பெருக்கு கிராமங்களையும் வயல்களையும் பாழாக்கி மனுஷனைத் தத்தளிக்கச் செய்கிறது. விளைந்தது அறுத்தோம் என்று சொல்ல இடமில்லை. எரிமலைகளாலும் பூகம்பங்களாலும் உண்டாகும் அழிவு சேதத்திற்குக் கணக்கில்லை. பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் பல ஆபத்துகளாலும் மனுஷர் பாழாய்ப்போகின்றனர். இயற்கை வல்லமைக்கு முன் மனுஷனுடைய ஞானம் கவிழ்ந்துபோகிறது. உள்ளான பாவவினையால் மனுஷன் சஞ்சலப்படுவது போதாதென்று இத்தனை புறம்பான தீங்குகளும் நம்மைச் சூழ்ந்து வதைக்கின்றன. மனுஷனிலுள்ள தத்துவங்கள் ஆரோக்கியமான பலனாக விருத்தியடைவதற்கும், சர்வத்துக்கும் மேலான கடவுளை அறிந்து அவர் சித்தப்படி பிழைப்பதற்கும் பாடமாக இத்தீங்குகளை வைத்தாரோ? பிதா அறியாமல், அவர் இடங்கொடாமல் தீங்கு சம்பவிப்பதில்லை. என்றாலும் இத்தப் பயங்கரமான போராட்டத்துக்கும் முடிவு உண்டு. கடவுள் மற்றக் காரியங்களை ஒற்றுமைப்படுத்தி, இந்தப் பிரபஞ்சத்தை அழிவுக்குரிய மோசமான நிலைமையில் விட்டுவிடமாட்டார். அப்படி விடுகிறதாயிருந்தால் "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்" என்கிற தேவவாக்குப் பொய்யாகும். இதைப்பற்றி அப்போஸ்தலன் சொல்வதைக் கேட்போம். "நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது. ஆகும் அந்தச் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையினாலே மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" என்கிறார் (ரோ. 8: 20-22). பாவத்தால் சீர்குலைந்துபோன மனுக்குலத்தை ரட்சிக்கும்படி உயிர்கொடுத்த ஆண்டவர், பாவத்தால் சாபத்துக்குள்ளான சிருஷ்டிப்பைப் புதுப்பிக்காமல் விடார். பாவத்தால் எங்கெங்கு கேடு விளைந்ததோ அங்கெல்லாம் அவர் கிருபை வெற்றியடையும். மேலும்

கிறிஸ்துவுக்கும் சிருஷ்டிக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிக்கும்போது பிரபஞ்சத்தை இந்தப் போராட்டமான அழிவுக்குரிய நிலைமையில் விட்டுவிடமாட்டாரென்பது நிச்சயம். "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன." "உண்டானதொன்றும் அவராலேயன்றி உண்டாகவில்லை." (கொலோ. 1 : 16; யோ. 1 : 3). இது மெய்யானால் தமது மகிமைக்கென்று அவர் உண்டாக்கினவைகளை அழிவும் ஒழுங்கீனமுமான நிலைமையில் அவர் விட்டுவிடுவதெப்படி? "சகலமும் அவருக்குள்ளே ஒற்றுமைப் படவேண்டும்." சகலமும் அவருக்குள் ஜெயிக்கவேண்டும். கல்வாரிச் சிலுவையின் வெற்றி அளவு கடந்தது. அந்தச் சிலுவையின் ஆழம் அகலம் உயரம் நீளம் என்னவென்பதை அறிந்தவன் யார்? கிறிஸ்தவர்களின் அநேகர் சிலுவையின் விரிவான நோக்கத்தை அறியவில்லை. "என் பாவங்களை மன்னிக்க இயேசு மரித்தார்" என்பதே அவர்கள் காலமெல்லாம் படித்த பாடம். ஆனால் சிலுவையோ பரலோகத்திலிருக்கிறவைகள் பூலோகத்திலிருக்கிறவைகளுமான சர்வத்தையும் சேர்த்து ஒற்றுமைப்படுத்தும் தேவதந்திரமாயிருக்கிறது. இவ்வாறு பாவமும் சாபமும் மரணமும் சகல இடறலும் முற்றிலுமாய் நீங்கி, எங்கும் எல்லாருக்குள்ளும் எக்காலத்திலும் இடைவிடாமல் தேவசித்தமும் தேவ ஆளுகையுமே நடக்கும். இதுவே சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படும் நித்திய ரட்சிப்பு. இதுவே தேவராஜ்யம்! இதுவே தேவ நகரம்! இதுவே தேவ மாளிகை! பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள சகலத்தையும் தமக்குள் ஒற்றுமையாக்கி, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஆளுகையை ஒப்புக்கொடுக்கும் காலம் இதுவே! "புதிய வானம் புதிய பூமி" என்னும் பூரிப்பான காலம் இதுவே! "இதோ சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்னும் வாக்கு நிறைவேறும் காலம் இதுவே! கிறிஸ்து சிலுவையில் அடைந்த வெற்றியின் பூரணமகிமையை நாம் கண்டுகளிகூரும் காலம் இதுவே!



உலகத்தின் காரியங்களைக் கவனிக்கும்போது இப்பேர்க்கொத்த பாக்கியமான காலமும் வருமோவென நாம் சந்தேகிக்கலாம். மனுஷர் முயற்சியால் இது ஆகவேண்டியதாயிருந்தால் அக்காலம் ஒருக்காலும் வராது. ஆனால் கடவுளே அந்தக் காலத்தைக் கொண்டுவருகிறவர். அவரே தமது ராஜ்யத்தைத் தமது மக்களுக்குக் கொடுப்பவர். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." சகலத்தையும் தமது சித்தத்தின் நோக்கத்திற்கேற்றாற்போல் நடப்பித்துக்கொண்டு போகிற அவருடைய மறைவான கரத்தை நாம் மறக்கக்கூடாது. சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டிச் சேர்க்கப் படவேண்டுமென்பது கடவுளுடைய நிர்ணயம். பூமியில் சகலமும் பேர்விரோதம்போல் நடப்பதாக நமக்குத் தோன்றினாலும், வல்லமையும் உண்மையுமுள்ள கடவுள் தமது தீர்மானத்தை நிறைவேற்றாமல் விடார். அவரே நமது நம்பிக்கை. சிலுவையின் பலனாக நமக்கும் பிதாவுக்கும், நமக்குள்ளேயும், நமக்கும் தேவமக்களுக்குள்ளும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், நமக்கும் பிரிந்துபோன விசுவாசிகளுக்கும் ஐக்கியமும் ஒற்றுமையும் ஏற்பட்டிருப்பதை நாம் ஒருவாறு இங்கேயே அனுபவிக்கிறோம். இவ்வளவுதூரம் நமக்குள் ஒற்றுமைப்படுத்தின பரமபிதா, சீர்கேடான சகலத்தையும் கிறிஸ்துவுக்குள் சீக்கிரம் கூட்டிச்சேர்த்து ஒற்றுமைப்படுத்துவாரென்பது நிச்சயம். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தமது தயவுள்ள சித்தத்தின் ரகசியம்" வெளியரங்கமாய் நிறைவேறும்.

இன்னும் எங்கெங்கே சிருஷ்டிகள் வசிக்கிறார்களென்றும், அவர்கள் எத்தன்மையுள்ளவர்களென்றும் நமக்குத் தெரியாது. மேலுலகில் வாழும் தேவதூதர்களைப்பற்றியும் அவர்கள் வகுப்பு அந்தஸ்துகளைப் பற்றியும் சொற்பம் அறிந்திருக்கிறோம். நமது வேதாகமம் நம்மைக் குறித்த புஸ்தகமேயல்லாமல் ஆண்டவர் சிருஷ்டித்த சர்வலோகம்

களைப் பற்றிக் கூறும் புஸ்தகமல்ல. நாம் வசிக்கும் பூமி மகா சிறிய கிரகம். எல்லையில்லா அகண்ட ஆகாயத்தில் எத்தனையோ கிரகங்களும் அவைகளுக்குரிய சூரியர் சந்திரரும் இருக்கின்றனவென்று சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அங்கே வசிப்பவர்கள் யாரென்று நாம் அறியோம். சமுசாரிகள் சிறு நிலத்தில் நாற்றுண்டாக்கி, அவைகளை விசாலமான நிலங்களில் நடுவதுபோல, பரமபிதா நம்மை நாற்றுகளாக இங்கே வைத்திருக்கிறார். ஆதிமுதல் சென்றுபோன கோடா கோடி மனுஷர் பிழைக்கிறதாயிருந்தால் இந்தப்பூமி கொள்ளுமா வென்று சிலர் கேட்கிறார்கள். கடவுளுக்குச் சித்தமானால் அவர்களைக் குடியேற்ற வேண்டிய அநேக வாசஸ்தலங்கள் அவருக்குண்டு. சர்வ சிருஷ்டிப்புகளும் சேர்ந்து பிதாவின் வீடாகிறது. "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று ஆண்டவரும் சொன்னார். "தேவன் தமது குமாரனைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார்" என்று எபிரேயர் நிருபத்தாரும் சொல்லுகிறார். கடவுளின் அதிசயமான சிருஷ்டிப்புகளை அறிந்தவர்கள் யார்? சமுத்திரப்பிரயாணம் செய்கிறவர்கள் உலகத்தைச் சுற்றிவிட்டோம் என்கிறார்கள். அகண்ட ஆகாயத்தில் பிரயாணம் செய்து அதன் தூரத்தைக் கண்டவன் யார்? எத்தனைகோடி வருஷம் அவன் வாயுவேகமாய்ப் பிரயாணம் செய்யக்கூடுமானாலும் அவன் போய்க்கொண்டேயிருக்கவேண்டியதுதான். அகண்ட ஆகாயத்திற்கு எல்லையுமில்லை, முடிவுமில்லை. அதை யோசிக்கப்போனால் புத்தி தடுமாறுகிறது. சாட்சாத் பகவானுடைய அதிசயந்தான் என்ன? அப்போர்க்கொத்த பெருமான் மனுக்குலத்தைத் தேடிவந்த இருமையை, அவரது தாழ்மையை விஸ்தரிக்க கோடி நாவுகளாலும் முடியாது. சர்வ சிருஷ்டிப்புகளும் கிறிஸ்துவைக்கொண்டும் அவருக்கென்றும் உண்டாக்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதால், சகலமும் கட்டாயம் அவருக்குள் பூரண ஒற்றுமைப்படும் என்பது நிச்சயம். அவருக்கே சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக; ஆமென்.

---

# VIII

# The Cure of Care

# கவலைக்குப் பரிகாரம்

"நீங்கள் கவலைப்படுகிறதென்ன?" மத். 6: 28.

## I. கவலை என்றால் என்ன?

நமது விருப்பத்துக்கும் எதிர்பார்க்குதலுக்கும் விரோதமாய்க் காரியங்கள் சம்பவிக்கும்போது மனதிலுண்டாகும் குழப்பம், துக்கம், விசாரமே கவலையாகும். நமது குடியிருப்பு, கல்வி, உத்தியோகம், பிழைப்பு, சுகம் இவையாவும் திருப்தியாயிருக்கும்போது நாம் சந்தோஷமாயிருப்போம். இவைகளுக்கு இடையூறுகள் நேரிடும்போது மனங்கலங்கிக் கவலைக்குள்ளாகிறோம். பாவத்தின் பலனாக புத்தி அந்தகாரமடைந்து, சித்தம் பலவீனமாகி, நமது அறியாமையினால் நாமே பலகாரியங்களில் சிக்கிக்கொண்டு சங்கடப்படுகிறோம். கவலைக்குத் தப்பினவன் ஒருவனுமில்லை. குழந்தைகள் கூட பசிக்கும்போது முகத்தைச் சுளித்துக்கொண்டு அழுகின்றன. பரீட்சையில் தேறாத பிள்ளைகள் முகம்வாடிக் கவலைக்குள்ளாகிறார்கள். மாலை இருண்ட நேரத்தில் தகப்பனோடு நடந்துவந்த சிறுவன் கண்களில் கண்ணீரைக் கண்டு: என் அப்பா அழுகிறாய் என்று அவர் கேட்க, மகன் கவலை என்றான். ஆஹா, இந்த வயசிலேயே இவருக்குக் கவலை வந்துவிட்டதென்று சொல்லி தகப்பன் சிரித்தார். கவலை யாரைத்தான் விட்டது? வேலையில்லாமை, வியாதி, தரித்திரம், விக்கினம், நிந்தை, அவமானம், மரணம் முதலியவற்றால் மக்கள் படும்பாடு கொஞ்சமல்ல. யாரிடம் போவோம்? எங்கே குடியிருப்போம்? என்னத்தை உண்போம்? என்னத்தை உடுப்போம்? எப்படிப் பிழைப்போம் என்கிற கவலைகள் நமது மனதைப் புண்ணாக்கி நம்மை ஆழ்த்துயரத்தில் அமிழ்த்து

வின்றனர். நம்மை ஆட்கொண்ட பகவான் மனுஷர்கள் நடுவில் சஞ்சரித்தபோது அவர்கள் பற்பல கவலைகளால் மனம் நொறுங்கித் தவிப்பதைக் கண்டு அவர்களுக்காகப் பரிதபித்தார். கவலை தன்னிலே பிரயோஜனமற்றதென்றும், பரமபிதாவின் பராமரிப்பை அறியாததே கவலைக்குக் காரணமென்றும், கவலைக்குப் பரிகாரம் இன்னதென்றும் ஜனங்களுக்குப் போதித்தார்.

## II. கவலையும் முன் யோசனையும்.

கவலைக்கும் முன்யோசனைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆண்டவர் கவலையைக் கண்டித்தாரே யொழிய, முன்யோசனை முன்ஜாக்கிரதையை அவர் கண்டிக்கவில்லை. ஆகாரமில்லையே என்று துக்கித்து மூலையில் படுத்துக்கொள்வது கவலையாகும். புறப்பட்டுப்போய் ஏதாவது ஒரு வேலையைச் செய்து காசு சம்பாதிப்பது முன்யோசனையாகும். மழைகாலம் வருகிறது, வீடு ஒழுகுமே என்று புலம்பிக்கொண்டிருப்பது சோம்பேறித்தனமும் வீண்கவலையுமாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முற்கூட்டியே செய்துமுடிப்பது முன்ஜாக்கிரதையாகும். காரியத்தில் கவனம், எச்சரிக்கை, முன்யோசனையில்லாததே கவலைக்குக் காரணம். ஆகையால் முன்யோசனை கவலைக்கு எதிரான நிலைமை. கவலைக்குள்ளானவன் ஒன்றும் செய்யமுடியாதிருக்கிறான். முன்யோசனையுள்ளவன் ஜாக்கிரதையாய்க் காரியங்களை நடப்பிக்கிறான். கவலையினால் மாத்திரம் காரியம் ஆகாதென்பதை அவன் அறிவான். செய்யவேண்டிய காரியங்களை கடவுளை நம்பி முன் ஜாக்கிரதையுடன் செய்துமுடிப்பான். வெள்ளிக்காசைக் காணாமற் போட்டவள் தன் கவலையினால் அல்ல, ஜாக்கிரதையாக அதைத் தேடினதினாலே கண்டடைந்தாள். வருங்காரியங்களைப் பற்றியும் அவைகள் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதைப்பற்றியும் கர்த்தருக்குள் நாம் ஆலோசிக்க வேண்டும். நாம் யோசிக்கும்போது ஆண்டவர் தமது ஆலோசனையை நமக்கு வெளிப்படுத்துவார். முன்யோசனையை ஆண்டவர் குற்றப்படுத்தவில்லை. அவர் தாமே சீஷர்களோடிருந்த நாட்களில் தமது தினசரி வேலையைச்செய்து கொண்டிருக்கும்போதே வருங்காரியங்களைப்பற்றியும் யோசித்தார். தமக்கு

வரு



நேரிடப்போகும் பாடுகளையும் அவற்றின் முடிவையும் சீஷர்களுக்கு முன்னதாகவே அறிவித்தார். சீஷர்கள் தம்மைவிட்டு ஓடிப்போவதையும் முன்னதாக அறிந்து தெரிவித்தார். ஆனால் கவலைக்கு அவர் இடங்கொடுக்கவேயில்லை. அவர் இருதயம் தமது பிதாவை நம்பித் திடனாயிருந்தது. செய்யவேண்டிய சகல வேலைகளையும் ஒழுங்காய் நடத்திக்கொண்டே போனார். எவ்விதமான கவலையும் அவர் ஜீவியத்திலே அழியத்திற்கு இடமுண்டாயிருக்க அவர் இடங்கொடுக்கவில்லை. அவர் கவலையால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் கவலையற்றிருக்கும்படி மற்றவர்களுக்கு அவர் போதிப்பது வீணாகும். பவுலும் தமது காரியங்களைக் குறித்து முன்யோசனை செய்யாதவரல்லவென்பது அவர் ஜீவியத்தைப் படித்தால் தெரியும். நாம் அவசியம் யோசிக்கத்தான் வேண்டும். முன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். காரியங்களைத் தீவிரமாய் நடப்பிக்கவேண்டும். எதிலும் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கவலை வேறு; முன்யோசனை வேறு. விசாரத்தில் ஆழ்ந்தவன் ஏதும் செய்யமுடியாதவனாயிருக்கிறான். தீராத கவலை தீமையையும்; அமர்ந்த யோசனை நன்மையையும் விளைவிக்கும்.

## III. கவலையால் உண்டாகும் கேடுகள்.

கவலை கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொள்ளும்போது நமது மனம் குழம்பி இருதயம் கலங்குகிறது. ஆண்டவர் தங்களை விட்டுப்போய்விடுவார் என்ற கவலை சீஷர்கள் இருதயங்களைக் கலங்கப்பண்ணிற்று. இதை அறிந்த ஆண்டவர் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்றார். மார்த்தாளைப் பார்த்து: "நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" என்றார். நாம் கவலைக்குள்ளாகும்போது, நமது சித்தம் தடுமாறி புத்தி குழம்பும். ஒன்றும் செய்யமுடியாத நோயாளியைப் போலாகிறோம். அல்லது பதட்டமாக ஏதாகிலும் ஒன்றை மதியீனமாய்ச் செய்கிறோம். நமக்கு நேரிடும் கஷ்டத்தைப் பார்க்கிலும் அதைப்பற்றிய விசாரமே அதிகத் தீமை உண்டாக்கும். ம

சியில் பணமிழந்தவர்களில் சிலர் மிஞ்சின விசாரத்தால் புத்தி மாறாட்டமடைந்தார்கள். வேறு சிலர் தாங்க முடியாத கவலையால் தற்கொலை செய்துகொண்டனர். மற்றவர்களோ கவலையில் அமிழ்ந்து போகாமல் இனிப்பிழைக்கும் வழி என்னவென்பதை அமர்ந்து யோசித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். கவலை நம்மையுங் கெடுத்து பிறருக்கும் நம்மைப் பிரயோஜனமற்றவர்களாக்கும். மார்த்தாள் தன் மனக்கவலையால் கலங்கித் தன்னைக் கெடுத்தது மன்றி மரியாள்பேரில் எரிச்சலும், ஆண்டவர் பேரில் அதிருப்தியுமடைந்தாள். மனக்கலங்கின பின் நமக்கு நிதானமான யோசனையும் நிதானமான பேச்சுமிராது.

கவலை அவநம்பிக்கையை உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொண்டால் கர்த்தர்மேல் இருக்கவேண்டிய நம்பிக்கை அற்றுப்போகும். சீஷர்கள் காற்றின் மும்முரத்தையும் கடலின் கொந்தளிப்பையும் கண்டு கலங்கினபோது, ஆண்டவர் அவர்களைப்பார்த்து: "உங்கள் விசுவாசம் எங்கே?" என்று கேட்டார். ஆபத்திலிருந்த அவர்கள் கலங்கினது இயற்கையே. நாம் அந்த மோசத்தில் அகப்பட்டிருந்தால் அவர்களைப் பார்க்கிலும் அதிகமாய்க் கலங்கியிருப்போம். அருமைக் குழந்தை கொடிய ரோகத்தால் அவஸ்தைப்படும்போது பெற்ற தாய் அதை எப்படிச் சகிக்கக்கூடும்? அவள் மனதில் கவலையும் கலக்கமும் வராதிருப்பதெப்படி? நமது வாழ்க்கையில் சம்பவிக்கும் எதிர்பாராத சங்கடங்களால் நாம் மிகுந்த கவலைக்குள்ளாகித் தத்தளித்துப் போகிறோம். கவலை நமது சரீரத்தையும் தாக்குகிறது. மனங்கலங்கும்போது போஜனத்தின்மேல் பிரியமற்றுப் போகிறது. தண்ணீர் வாய்க்குக் கசப்பாகிறது. கண்களுக்கு நித்திரை வருவதில்லை. நாம் படும் அவஸ்தையைப் பார்த்து ஆண்டவர்: உங்கள் விசுவாசம் எங்கே? பிதாவின் மீதுள்ள உங்கள் நம்பிக்கை எங்கே என்கிறார். அவர் அன்பாய்க் கேட்கும் இக்கேள்வி கூட நமக்குச் சங்கடமாயிருக்கிறது. ஏனென்றால் நாம் படும் அவஸ்தையில் அவர் அன்பை நம்புவது நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. பிதா அன்புள்ளவரானால் நான் ஏன் இப்படிக் கலங்கவேணும்? எனக்கேன் இந்தத் துன்பம்? நான் என்ன



செய்தேன்? என் கவலை என்னால் சகிக்க முடியவில்லையே என்று புலம்புகிறோம். அவ்வேளையில் ஆண்டவரை உறுதியாய் நம்பமுடிவதில்லை. சிலர் இயற்கையிலே தைரியமுள்ளவர்கள். என்ன நேரிட்டாலும் சற்றும் கலங்கமாட்டார்கள். அது கடவுள்மீதுள்ள நம்பிக்கையாலுண்டாகும் தைரியமல்ல. அவர்கள் உணர்ச்சியற்றவர்கள். அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான். வீட்டில் என்ன ஆபத்து நேரிட்டாலும், கொடிய வியாதியால் அவஸ்தைப்பட்டாலும், திடீரென்று பிராணச்சேதம் நேரிட்டாலும் அவர்கள் எப்போதும் போலவே குறைவாமல் சாப்பிடுவார்கள், ஒழுங்காகத் தூங்குவார்கள். எதையும் கேட்டால் செய்வார்கள்; அதுவும் ஒரு இயந்திரம் போலத்தான். இப்படிப்பட்டவர்களுக்குக் கவலை யென்பது தெரியாது. ஆனால் அறிவும் அன்பும் அனுதாப உணர்ச்சியுமுள்ளவர்களோ சீக்கிரத்தில் மனஞ் சோர்ந்துபோவார்கள். இரக்கமுள்ள அவர்கள் இருதயத்திற்கு குடும்பத்தில் நேரிடும் கஷ்டங்களைச் சகிக்கமுடிகிறதில்லை. நோய், பாவம், அவமானம் உண்டானால் அவர்கள் இருதயம் குழம்பி துக்கசாகரத்தில் அமிழ்ந்துபோவார்கள்.

நாம் எவ்வளவு கவலைப்பட்டபோதிலும் அந்தக் கவலையால் மாத்திரம் நமக்கு விமோசனம் வராது. நமது கஷ்டங்களையும் நமது மனவியாகுலங்களையும் ஆண்டவர் அறியாதவரல்ல. நமக்குக் கவலைகள் உண்டென்று ஆண்டவர் அறிவார். ஆனால் பிதாவின்மீது வைக்கும் நம்பிக்கையினால் கவலைகளை நாம் மேற்கொள்ளவேண்டுமென்பதே ஆண்டவர் போதனை. இது விஷயத்தில் கடவுள் பிள்ளைகளையும் உலகத்தாரையும் அவர் பிரித்துப்பேசுகிறார். உலகத்தார் பிதாவின் அன்பையும் ஆளுகையையும் அறியாததால் பற்பல கவலைகளால் தங்களைப் பாரப்படுத்திக் கெட்டுப்போகிறார்கள். கடவுள் பிள்ளைகளாகிய நீங்களோ அவரது அதிசய அன்பையும், கிருபையையும், காப்பாற்றும் வல்லமையையும், தவறாத விசாரணையையும், மாறாத வாக்குகளையும் அறிந்திருக்கிறீர்கள். அப்படியிருக்க நீங்களும் அவர்களைப்போல் கவலைப்பட்டுக் கலங்குவது சரியா? பிதாவின்மேல் உங்களுக்கு இருக்

கவேண்டிய பற்றும் நம்பிக்கையும் எங்கே? உங்கள் அவநம்பிக்கையல்லவா இந்தக் கவலைக்கும் கலக்கத்துக்கும் காரணம் என்கிருர்.

இதெல்லாம் உண்மைதான். ஆகிலும் துன்பங்கள் நேரிடும்போது கவலைப்பட்டுக் கலங்காதிருக்கமுடியவில்லையே. அன்புள்ள பிதாவை நாம் மறுதலிக்கவில்லை. அவர் வல்லமையைச் சந்தேகிக்கிறதில்லை. அப்படியிருந்தும் காரியங்கள் மனதுக்குச் சஞ்சலமாய் நேரிடும்போது எப்படிக் கவலைப்படாதிருக்கமுடியும் என்று கேட்கிருேம். பிதாவின்மீதுள்ள நம்பிக்கை கவலையை மாற்றும் என்று அறிவோம். அவரை நம்பும்போதே கவலையும் கூடவேயிருப்பதற்குக் காரணமென்ன? பிதாவை நாம் காண்பதைப் பார்ப்பதிலும் நமது பாடுகள் அதிகப் பிரத்தியக்ஷமாய் நமக்குக் காணப்படுகின்றன. அவர் அன்பு நமது இருதயத்தை ஆளுவதைப்பார்க்கிலும் நாம் அனுபவிக்கும் துன்பம் அதிகப்பலமாய் நம்மை ஆண்டுகொள்ளுகிறது. அவ்வேளையில் பிதாமீதுள்ள நம்பிக்கையின் உணர்ச்சியைப் பார்க்கிலும் நமது கஷ்டங்களின் உணர்ச்சி ஆழமாய் நம்மை ஆண்டுகொள்ளுகிறது. ஆவியாயிருக்கிற ஆண்டவர் சமுகம் நிச்சயமாயிருப்பதை விட நமக்கு அருமையானவர்கள் படும் அவஸ்தையே அதிக நிச்சயமாய்த் தோன்றுகிறது. இதுவே நமது கவலைக்கும் கலக்கத்துக்கும் காரணம். நமதாண்டவர் சகல பாடுகளின் மத்தியில் யாதொரு மனக்குழப்பமின்றி தைரியமாக நடந்துகொண்டதற்குக் காரணம் தம்மோடிருந்த பிதாவின் பிரத்தியக்ஷமான சமுகமே. மக்களைப் பார்க்கிலும் பிதாவின் முகத்தையும், வியாதிபாடுகளைப்பார்க்கிலும் அவர் அன்பையும், இந்த வேதனையைப்பார்க்கிலும் அவர் வல்லமையையும் நாம் நிச்சயமாய்க் காணக்கூடுமானுல் துன்பத்தின் மத்தியில் அமைதியும் நம்பிக்கையும் நமது மனதில் உண்டாகும். பூமிக்குரிய சரீர சம்பந்தமான பற்று குறைந்து, நாம் ஆவிக்குரியவர்களாகி, ஆண்டவரையே நமது ஜீவனும் பொக்கிஷமுமாக்கிக் கொள்வோமானுல், அவர் சித்தம் எப்பொழுதும் நமக்கு நன்மையாயிருக்கும் என்கிற நிச்சயத்தால் சகலத்தையும் பொறுமையாய்ச் சகித்துக் கொள்வோம். இந்தப் பொறுமை நமக்கு ஆசீர்வாதமாகும்.



கவலை நம்மைக் கனியற்றவர்களாக்கும். தேவனுடைய பிள்ளைகள் கனிநிறைந்தவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் பெற்றிருக்கிற பிதாவின் ஆவியானவர் கிறிஸ்துவின் லட்சணங்களாகிய கனிகளை அவர்களில் உண்டாக்குகிருர். இந்தக் கனிகளைப்பற்றி கலாத்தியர் ஐந்தில் வாசிக்கிறோம். அவை அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகளே. இவைமாத்திரமல்ல, நமதாண்டவரிடத்தில் என்னென்ன தேவலட்சணங்கள் காணப்பட்டதோ அவைகளெல்லாம் நம்மிலும் காணப்படவேண்டும். கிறிஸ்துவின் ஆவியை நாம் பெற்றிருப்பதும், அந்த ஆவிக்கேற்றபடி நாம் நடப்பதும் உண்மையானுல் ஆவியின் கனியாகிய கிறிஸ்துவின் சிந்தை நம்மில் காணப்படவேண்டியது அவசியம். அவ்வாறு காணப்படும்போது நாம் அநேகருக்கு கனிகள் நிறைந்த விருக்ஷம்போல் ஆசீர்வாதமாயிருப்போம். நமது ஜீவியமும் ஊழியமும் மற்றவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்புவதற்கும், தேவராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்கும், அவர்கள் பாவங்களை மேற்கொண்டு கிறிஸ்துவின் சாயலில் வளருவதற்கும், துக்க துன்பகாலங்களில் பொறுமையுடன் தேவசித்தத்திற்குக் கீழடங்குவதற்கும், தங்கள் தினசரி ஜீவியத்தில் சகல காரியங்களிலும் கடவுளால் நடத்தப்படுவதற்கும் அனுகூலமாயிருக்கும். ஆண்டவருக்குத் தன்னைப் பூரணமாய் ஒப்புவித்து அவரால் நடத்தப்படுகிற ஒரு மனுஷனுல் மற்றவர்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதம் உண்டாகக் கூடுமென்று அளவிட நம்மால் முடியாது. அதை அவன்தானும் அறியமாட்டான். ஏனென்ருல் கிறிஸ்துவுக்குள் பிழைக்கும் அவன் உள்ளத்திலிருந்து "ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று சொன்னவர் உண்மையுள்ளவர். ஆனுல் பற்பல கவலைகள் நம்மை ஆண்டுகொண்டு நமது இருதயத்தைக் கலங்கச் செய்யும்போது நாம் ஒருக்காலும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமுடியாது. யார் யாருக்குள் கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் சம்பூரண ஆளுகை செய்கிறதோ அவர்கள் ஜீவியமே ஆசீர்வாதமான கனிகள் நிறைந்ததாயிருக்கும். கவலைகள் நமது

ளத்தைப் பாரப்படுத்தி நெருக்கும்போது நாம் பலன் கொடுக்கமுடியாது. விதைக்கிறவன் உவமையில் ஆண்டவர் சொன்ன காரியம் அதுதான். விதைகள் விழுந்து முளைத்துப் பயிர் வளர்ந்தன. பக்கத்தில் முட்செடியும் வளர்ந்தது. பலன்கொடுக்கப்போகிற சமயத்தில் முட்செடிகள் வளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன. நாம் திருவசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொள்ளும்போதிலும் "உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால்" நாம் பலனற்றவர்களாகிறோம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு எவ்வளவு வேத அறிவு, பிரசங்கக்கேள்விகள் கிடைத்தும் நாம் பிரயோஜனமற்றவர்களாயிருப்பதற்குக் காரணம் கவலைகளே. கவலைகளாகிய முட்களால் நமது ஆவிக்குரிய ஜீவியம் பாழாய்ப்போகிறது.

கவலை நமது வேலையைக் கெடுக்கும். கடவுள் ஊழியத்தை மனுஷருக்குள் ஏற்பிப்பதற்கு நமக்குத் தெளிந்த புத்தியும் அமர்ந்த மனமும் வேண்டும். கவலையோ இவை இரண்டையும் கெடுக்கும். கவலை நமது புத்தியை அந்தகாரப்படுத்தி மனதைக் கலக்கஞ்செய்வதால் ஆண்டவர் ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்றமுடியாது. முழுமனதோடும் முழுக்கருத்தோடும் முழுபலத்தோடும் செய்வதே உண்மையான ஊழியமாகும். பற்பல உலகக்கவலைகள் நம்மை ஆண்டுகொள்ளும்போது நமது வாய் பேசினாலும், கைகள் முயற்சியாயிருந்தாலும், மனம் வேறுபட்டிருப்பதால் நமது ஊழியம் மாயமும் பொய்யுமாகும். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது" என்றார். அதாவது "கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது." உலகக்காரியங்களில் பற்றுதல் வைத்து, அதே விசாரமாயிருப்பவர்கள் கடவுள்மீது பற்றுதல் வைப்பது முடியாத காரியம். அவர்மீது பற்றுதல் இல்லாதபோது அவருக்கு ஊழியஞ்செய்வதாக நினைப்பது வஞ்சகமாகும். அநேகர் இந்த நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் புறம்பாகச் செய்வதை மனுஷர் தேவ ஊழியமென்று நினைக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தைக் கண்டதார்? உள்ளம் உலகமயக்கத்தால் கடவுளைவிட்டுப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய ஜீவியத்தின் நோக்



கம் எதுவோ அதுவே அந்த மனுஷன். நமது இருதயத்தை பூமிக்குரிய ஆசாபாசங்கள் நிரப்பிக்கொண்டிருக்கையில் கடவுளுக்கு எப்படி நாம் ஊழியஞ்செய்யமுடியும்? முடியாது என்று ஆண்டவர் சொல்லும்போது முடியும் என்று சொல்லுகிறவன் யார்? இப்படிப்பட்ட இரண்டகமான ஊழியங்களால் அநேக சபைகள் பாழாய்ப்போகின்றன. பூமி, பொருள், தங்கம், பெருமை முதலியவற்றால் நிறைந்த இருதயங்கள் அவைகளைப்பற்றிய சம்பாஷணைகளை நடத்துவதே உண்மை. ஏனென்றால் இருதயத்தின் நிறைவின்படிதானே வாய் பேசவேண்டும். அப்படியிருக்க இருதயம் ஒருவிதமும் வாய் வேறுவிதமுமாயிருப்பது மாயமல்லவா? உலகக்கவலை ஊழியத்தைக் கெடுக்கும்.

கவலையால் ஒரு பிரயோஜனமுமில்லை. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று நினைத்து கவலைகொண்டிருப்பதாலே உணவும் பானமும் உடுப்பும் வரமாட்டாது. கவலையால் முன் கவனித்தபடி நஷ்டமேயன்றி லாபமில்லை. "கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" என்று ஆண்டவர் கேட்கிறார். கவலையால் ஒரு முழமல்ல ஒரு அங்குலமாகிலும் கூடுவதில்லை. "மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க நீங்கள் கவலைப்படுகிறதென்ன?" என்கிறார். எத்தனை மணிநேரமாய், எத்தனை நாட்களாய் நாம் கவலை என்னும் மஞ்சத்தில் படுத்துப் புரண்டாலும் கடுகளவு நன்மை ஏற்படப்போவதில்லை. கவலையால் கால நஷ்டமும், தேகநஷ்டமும், வேலை நஷ்டமும், கடவுள்மீது அவநம்பிக்கையுமே கைகண்ட பலனாகும்.

## IV. கவலைக்குப் பரிகாரம்.

நமது பாவங்களாலும், பலகாரணங்களாலும் கவலைக்கு ஆளாகிறோம். கவலையற்ற மனுஷன் உலகில் இல்லை. மனுஷனுக்குக் கவலையில்லையென்றால் கவலையைப்பற்றி ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் அவ்வளவு விஸ்தாரமாகப் பேசவேண்டியதில்லை. கவலையற்றிருக்கவேண்டும் என்று அவர் போதித்ததே உலகில் கவலை இருக்கிற

தென்பதற்கு ஆதாரம். அப்படியானால் இந்தக் கவலைக்குப் பரிகாரமென்ன? அதை மூன்று வார்த்தைகளில் சொல்லி விஸ்தரிப்போம். கவலைக்குப் பரிகாரம்: தெரியப்படுத்தல், வைத்துவிடல், தேடுதல் என்பவைகளே.

தெரியப்படுத்தலைப்பற்றி பவுல் பேசுகிறார். இது அவர் தமது அனுபவத்தில் கண்ட நிச்சயமான விஷயம்: "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி. 4: 6,7). கிறிஸ்துவைப் பின்சென்ற பிலிப்பி சபையார் பலவித உபத்திரவங்களுக்கு ஆளானார்கள். எங்கே உபத்திரவமுண்டோ அங்கே கவலையுமுண்டு. அந்தக் கவலைக்குப் பரிகாரமென்னவென்பதை அப்போஸ்தலன் தமது அனுபவத்திலிருந்து கூறுகிறார். கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் கவலை நீங்காது. காரியங்களை உள்ளபடி ஒன்றையும் மறைக்காமல் பிதாவுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர் இதுவரை நமக்குச்செய்த எல்லா உபகாரங்களையும் கிருபைகளையும் நினைவுகூர்ந்து, துக்கமும் கவலையும் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி நமது கஷ்டங்களை அவருக்கு அறிவிக்கவேண்டும். நன்றியறிதலான ஸ்தோத்திரம், நமது உள்ளத்தை ஆண்டுகொண்டிருக்கும் அந்தகாரமாகிய கவலையை நீக்கிப் புது நம்பிக்கையை உண்டாக்கும். அதுமாத்திரமல்ல, புத்திக்கெட்டாத உன்னத தேவசமாதானம், நமது இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குள் எல்லாத் தீமையிலிருந்தும் காத்துக்கொள்ளும். அருமை ரட்சகர் நமது ஊக்கமான ஜெபத்தைக்கேட்டு அதிசயமான பிரகாரம் நம்மை ஆபத்திலிருந்து ரட்சிப்பார். அல்லது நமது பாடுகளைச் சகிக்கத்தக்க கிருபையளித்து நமது கவலையைப்போக்கிச் சமாதானத்தை அருளுவார். நமது கவலைகளை மனதில் வைத்து வியாகுலப்பட்டுக்கொண்டிருப்போ



மானால் நமது ஆத்துமாவுக்குச் சுகமிராது. "நான் அடக்கிவைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உருகிப்போயிற்று" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். ஆனால் அவர் தமது காரியங்களைக் கர்த்தருக்கு விபரமாய் அறிவித்து விண்ணப்பித்தபோது ஆண்டவர் அவருடைய கலக்கத்தை நீக்கி ரட்சணிய பாடல்கள் அவரைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார். நமது துயரங்களை ஆண்டவர் பாதத்தில் கொட்டிவிடும் வரைக்கும் நமக்கு ஆறுதல் கிடையாது. இதன் உண்மையை மனுஷருக்குள்ளேயே காண்கிறோம். மனுஷர் நமது மனக்கவலையை நீக்க வல்லவர்களல்ல. அப்படியிருந்தும் நமது துயரங்களை அனுதாபமுள்ள சிநேகிதரிடம் சொல்லுவதால் ஒருவிதமான ஆறுதல் கிடைத்ததுபோல் தோன்றுகிறது. சிநேகிதன் சிநேகிதியிடம் தன் பாடுகளைச்சொல்லி அழுவதால் ஒருவகை ஆறுதல் காண்கிறான். அப்படியானால் அன்பும் கிருபையும் அனுதாபமும் நிறைந்த ஆண்டவர் நமது விண்ணப்பத்தைக்கேளாதிருப்பாரா? நமது கவலையை நீக்கி நம்மை ஆறுதல்படுத்த அவருக்கு வல்லமையில்லையா? அன்னாள் மனதைப் புண்படுத்தின அவமானமும் நிந்தையும் கொஞ்சமல்ல. கவலையால் நிறைந்து மனக்கிலேசமுள்ள ஸ்திரீயாகக் காலங்கழித்தாள். கவலை மிஞ்சிப்போகவே அதைச் சகிக்கமுடியாமல், பவுல் பிற்காலத்தில் பிலிப்பியருக்குச் சொன்ன ஆலோசனைப்படி, அவள் விரைந்து தேவசமூகம் சென்று தன் சஞ்சலம் யாவையும் ஆண்டவர் பாதத்தில் ஊற்றிவிட்டாள். கடவுள் அவள் மனக்கவலையை அகற்றி அவளை ஆறுதல் படுத்தி ஆசீர்வதித்தார். "அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை."

ஜெபத்தின் வல்லமையை நாம் இன்னும் சரியாய் அறிந்தவர்களல்ல. வாயில் வந்ததெல்லாம் ஜெபமாகாது. உத்தமமான ஜெபத்துக்கு சுத்த ஜீவியமும் விசுவாசமும் வேண்டும். ஜெபத்தில் ஜீவனுள்ள பிதாவோடு பேசுகிறோம். நாம் சொல்லுவதை அவர் செவிசாய்த்துக் கேட்கிறார் என்ற நிச்சயம் நமக்கு வேண்டும். அந்த நிச்சயம் நம்மில் ஊக்கத்தையும் பயபக்தியையும் உண்டாக்கும். ஜெபம் ஆகாயச்சிலம்பமல்ல, அநேக வார்த்தைகள் அல்ல. நமக்கேயாம்

விண்ணப்பித்துக்கொள்வதல்ல. ஜெபிக்கும்போது சர்வவல்லமையுள்ள பிதாவாகிய கடவுளிடத்தில் பேசுகிறோம். நமது கவலைகளையும் மனவியாகுலங்களையும் நமது பாவங்களையும் உள்ளதை உள்ளபடி அவருக்குத் தெரிவித்து இரக்கத்துக்காகக் கெஞ்சுகிறோம். அவர் நமது காரியங்களை இருக்கிறபடி அறிந்திருக்கிறபடியால் மாயக்காரப் பரிசேயனைப்போல் ஜெபிக்கக்கூடாது. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறார். நமது சஞ்சலங்களைக் கண்ணீரோடு தகப்பனுக்கு அறிவிக்கும்போது அவர் இருதயம் நமக்காகப் பரிதபிக்கும். அவர் வல்லமை நமக்கு உதவிசெய்யத் தீவிரிக்கும். ஊக்கமும் உண்மையுமான விண்ணப்பம் ஒருக்காலும் வீண்போகாது. கொடிய கவலை ஊக்கமான மன்றாட்டுக்கும், ஊக்கமான மன்றாட்டே பெரியவெற்றிக்கும் வழிநடத்தும். எல்லாம் க்ஷேமமாயிருக்கும்போது நாம் ஆண்டவரை கரிசனையோடு தேடுகிறதில்லை. ஒருவேளை ஜெபித்தாலும் அதை ஒரு கடமைபோல் செய்கிறோம். கடவுள் தமது வல்லமையை நமக்கு வெளிப்படுத்த விரும்புங்காலத்தில் நம்மை அந்தகாரமான பாதையில் நடத்துகிறார். காரிருள் நம்மைச் சூழ்ந்துகொள்ள நாம் கலங்குகிறோம். யாதொரு துணையுமின்றி அவர் பாதத்தில் விழுந்து இரக்கத்துக்காக ஊக்கமாய்க் கெஞ்சுகிறோம். "ஆபத்துகாலத்தில் நீ என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" என்று அவர் சொன்ன வாக்கு நமக்குப் பலிக்கிறது. நமது பாரத்தை அவர் அகற்றி "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தால் நமது இருதயத்தை நிரப்புகிறார்." ஆகையால் நமது கஷ்டம் கவலையை உள்ளபடி பிதாவுக்குத் தெரிவிப்பது கவலைக்குப் பரிகாரமாகும்.

வைத்துவிடுவதைப்பற்றி பேதுரு சொல்லுகிறார். "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1. பேது. 5 : 7). இங்கே ஒரு காரியம் நமக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுக்கிறது. பரமபிதா நமது க்ஷேமங்களை விசாரிக்கிறவர். சிநேகிதர் நமது சுகசெய்தியை விசாரிப்பது நமக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. எல்லாம்



வல்ல கடவுள், சர்வத்தையும் ஆண்டு நடத்தும் சிருஷ்டிகர்த்தா, தமது பிள்ளைகளின் க்ஷேமத்தை விசாரிக்கிறவராயிருக்கிறார். தமது திருக்குமாரனைக்கொடுத்த சம்பவத்தில் அதிசயமாய் அன்புகூர்ந்த பிதா நமது காரியங்களை அற்பமாய் நினைக்க முடியவே முடியாது. கடவுள் எவ்வளவு பெரியவர்! என் காரியங்களை அவர் கவனிப்பாரா என்று நாம் நினைக்கிறோம். இந்த நினைவு அவருக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது. நிச்சயமாகவே அவர் விசாரியாத காரியமில்லை. அவர் தமது அருமைப் பிள்ளைகளை விசாரிக்காவிட்டால் வேறு யார் நம்மை விசாரிப்பது? இந்த உலககாரியங்களில் அவர் நம்மை விசாரிக்காவிட்டால் கிறிஸ்துவுடன் நாம் உடன் சுதந்தரராவதும் அவர் மகிமையில் பங்குபெறுவதும் வீண்பேச்சேயாகும். அன்புள்ள பிதா நம்மை நாள்தோறும் விசாரிக்கிறார். இன்று உன் சுகம் எப்படி? பிள்ளைகள் காரியங்கள் எப்படி? செலவுக்குப் பணமில்லையோ? சாப்பாட்டுக் கஷ்டமுண்டோ? இன்னார் உன்னை நிந்தித்தது உன் மனதுக்கு வேதனையாயிருக்கிறதோ? மக்கள் உத்தியோகம் விவாக விஷயங்களில் கவலைப்படுகிறாயோ? என்பதுபோல் நமது காரியங்களை அனுதாபத்தோடு விசாரிக்கிறார். எல்லாம் அறிந்த பரமபிதா நமக்கு உதவிசெய்யவும் வல்லவராயிருக்கிறார்.

இவ்வாறு அவர் நம்மை விசாரிக்கிற தகப்பனாயிருப்பதால் நாம் நமது கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடவேண்டும் என்று பேதுரு தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறார். பவுல் நமது கவலைகளை தேவனுக்குத் தெரியப்படுத்துவதினால் உண்டாகும் சமாதானத்தைப்பற்றிச் சொன்னார். பேதுரு தெரியப்படுத்துவதுமாத்திரமல்ல, அவைகளை அவரிடமே வைத்துவிடவேண்டும் என்கிறார். வைத்துவிடவேண்டும் என்னும் சொல்லானது, கவலைகளை ஒரு மூட்டைபோல் கட்டி அதை ஆண்டவரிடம் விட்டுவிடவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இதே அனுபவம் சங்கீதக்காரனுக்கும் இருந்ததாகத் தோன்றுகிறது. "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு" என்று அவரும் சொல்லியிருக்கிறார். திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வந்ததைக்கண்ட நமதாண்டவரும் அவர்கள் பசியை

கவலைகளால் அமிழ்ந்தப்படுவதை அறிந்து: "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார். கவலைக்குள்ளானவர்கள் பாரமான மூட்டையைச் சுமக்கிறவர்கள்போலிருக்கிறார்கள் என்பது ஆண்டவர் சொன்ன வார்த்தைகளிலும் வெளிப்படுகிறது. பிதா நம்மை விசாரித்து நமது பாரத்தை நீக்கச் சித்தமுள்ளவரென்பது ரட்சகர் ஜீவியத்தில் காணப்படுகிறது. ஏனென்றால் கிறிஸ்துவானவர் நமது பாவங்களையும், நோய்களையும், கவலைகளையும் பலவீனங்களையும் சுமந்தாரென்பது நிச்சயம். விசாரிக்கிறவர் என்பது அவர் நமக்காகக் கவலைப்படுகிறவர் என்றும் அர்த்தமாகும்.

நாம் பிதாவுக்கு நமது கவலைகளைத் தெரியப்படுத்துவதோடு கவலைகளாகிய பாரத்தை அவரிடத்திலேயே விட்டுவிடவேண்டும். இப்படிச் செய்யக்கூடுமானால் சமாதானமும் ஆறுதலும் நமது பங்காகும். இதை மனுஷருக்குள் பார்த்திருக்கிறோம். ஒரு சிக்கலான விஷயத்தில் நாம் அகப்பட்டுக்கொண்டோம். அதைச் சமாளிக்க நம்மால் முடியவில்லை. நாம் கலங்கித் தவிக்கிறோம். அனுதாபமும் திறமையும் வாய்ந்த ஒரு சிநேகிதன் நமது ஞாபகத்தில் வருகிறார். அவர் காரியத்தை முடிப்பதில் வல்லவர். அவரிடத்தில் ஓடி நமது தத்தளிப்பை அறிவித்து உதவி செய்யும்படி கேட்கிறோம். அவர் நம்மைப்பார்த்து, பயப்படவேண்டாம், நான் இந்தக் காரியத்தை உங்களுக்காகச் செய்து முடிக்கிறேன் என்கிறார். நமது கலக்கம் நீங்கி தைரியமும் சந்தோஷமும் உண்டாகின்றன. வேறொரு சிநேகிதர் நம்மைப்பார்த்து: சந்தோஷமாயிருக்கிறீர்களே, அந்தக்காரியம் எப்படி முடிந்தது என்று கேட்கிறார். அந்தப்பாரத்தை இன்னார் ஏற்றுக்கொண்டதால் கவலை விட்டது என்கிறோம்.

பிதாவிடம் நமது பாரத்தை விட்டுவிடுவதும் இதுபோலவேயன்றி வேறல்ல. நமது திண்டாட்டத்துக்குக் கவலை நம்மை ஆட்கொள்ளுவதற்கும் காரணம் உண்டு. மனுஷர் நமது கண்களுக்குப் பிரத்தியக்ஷமாயிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கிறோம், அவர்கள் சத்தம் கேட்கிறோம். ஆகையால் அவர்கள்மேல் நமக்கு நம்பிக்கையும்



பற்றுதலும் அதிகம். கடவுள் அவ்வளவு பிரத்தியக்ஷமாய் நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை, ஆகையால் அன்புள்ள பிதாவிடம் மனுஷரிடத்தில் வைக்கும் அவ்வளவு நம்பிக்கைகூட நாம் வைக்கிறதில்லை. காணப்படுகிறவைகளையே பிடித்து நடக்கும் நமக்கு ஆவியாயிருக்கிற பிதா மங்கி மறைந்துபோனார். நமது மார்க்கந்தான் என்ன? நமது பக்திதான் என்ன? தேவசமுகத்தில் இடைவிடாமல் சஞ்சரிக்கப் பழகாத நாம் ஆராதனைகளாலும் ஜெபக்கூட்ட உற்சாகங்களாலும் நம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம். நாசியில் சுவாசமுள்ள மனுஷன்மேல் நாம் வைக்கிற அவ்வளவு நம்பிக்கை நமக்காக உயிர்கொடுத்த அப்பன்மேல் நமக்கில்லையே. நம்மைப்போன்ற மனுஷனாகிய மோசே லட்சக்கணக்கான முரட்டு இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்ததும், வனாந்தரத்தில் வழிநடத்தினதும் எப்படி? அதரிசனமான கடவுளை நேருக்கு நேரே தரிசிப்பதுபோல் அவர் நடந்துகொண்டதினால் அல்லவோ? அவருடைய விசுவாசப்பார்வைக்கு கடவுள் மனுஷரைப்பார்க்கிலும் பிரத்தியக்ஷமாய் காணப்பட்டார். சகிக்கமுடியாத தொல்லைகள் கவலைகள் மத்தியில் மோசே அவ்வளவு சாந்தமும் பொறுமையும் தாழ்மையுமாய் நடந்துகொண்டதற்குக் காரணம் தேவசமுகத்தை எப்போதும் அவர் தரிசிக்கிறவராயிருந்ததாலேயே. உயிரோடிருக்கும் ஆண்டவரை நமது ஆத்துமா காணக்கூடுமானால், நமக்குக் கஷ்டம் கவலை நேரிடும்போது உடனே அவருக்கு அவைகளைப்பற்றித் தெரிவிப்போம்.

நமது கஷ்டங்களை பிதாவுக்குச் சொல்லுவதோடுகூட அந்தப் பாரத்தை அங்கேயே விட்டுவிடவும் வேண்டும். கிறிஸ்தவ ஜீவியம் லேசான காரியமல்ல. ஒரு மணிநேர ஆராதனைக்குமாத்திரம் உரியதல்ல. சகல காரியங்களிலும் நாம் ஆண்டவருக்குப் பிரியமானதைச் செய்து ஜீவியத்தில் பூரணப்படவேண்டியதிருக்கிறது. அதற்கேற்றபடியே ஆண்டவரும் நம்மை நடத்துகிறார். நாம் எவ்வளவு தவறினாலும் சோர்ந்துபோகாமல் புதுப்புதுப் பாடங்களைப் படித்துத் தேறவேணும். நமக்குக் கஷ்டங்கள் நேரிட்டால் நாம் பிதாவுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பது ஒருபாடம். தெரியப்படுத்துவது

மாத்திரமல்ல நமது பாரத்தை அவரிடமே விட்டுவிட வேண்டுமென்பது இன்னொரு பாடம். இந்தப் பாடத்தில்தான் நம்மில் அநேகர் தேறவில்லை. ஜெபிக்கு முன்னும் கவலை, ஜெபித்தபின்னும் கவலை. பாரத்தை ஆண்டவரிடம் கொண்டுபோய் அதைப்பற்றி அவருக்குச் சொல்லிவிட்டுத் திரும்பவும் அந்தப் பாரத்தை எடுத்துச் சுமந்து கொண்டு வருகிறோம். கடவுளுக்குத் தெரியப்படுத்தியும் பாரம் பாரமாகவே யிருக்கிறது. இதனாலேதான் பேதுரு: "உங்கள் கவலைகளை யெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" என்றார். ரஸ்தா மார்க்கமாய் ஒரு வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டிக்குப் பின்னாலே ஒரு மனுஷன் தலையில் ஒரு பாரத்தைச் சுமந்துகொண்டு கஷ்டத்தோடு நடந்து வந்தான். அவன் வண்டிக்காரனைக் கூப்பிட்டு: ஐயா, பாரம் சுமக்க முடியவில்லை, வண்டியில் என்னை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சினான். வண்டிக்காரன் மனமிரங்கி அவனை ஏறிக்கொள்ளும்படி சொன்னான். சற்றுதூரம் சென்றபின் வண்டிக்காரன் திரும்பி அந்த மனுஷனைப்பார்த்து: பெரியவரே, இன்னும் தலைமேலே மூட்டையை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்க அவன்: எனக்குத் தானே வண்டியில் இடங்கொடுத்தீர், என் மூட்டைக்குமா என்றான். அதற்கு வண்டிக்காரன்: நீயும் உன் மூட்டையும் சேர்ந்துதானே என் வண்டிக்குப் பாரம், அதை வண்டியில் வைத்து விட்டால் உன் தலைப்பாரம் நீங்கிச் சுகமாயிருக்கலாமே என்றான். நமது கவலைகளை ஆண்டவருக்குச் சொல்லியும் மூட்டையை அவரிடம் விட்டுவிடா திருந்தால் நமக்கு இளைப்பாறுதல் இல்லை. "உன்னை ஏந்துவேன், சுமப்பேன், தாங்குவேன்" என்று பிதா வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நம்மையே சுமக்கும்போது நமது கவலைகளாகிய பாரத்தை ஏன் சுமக்கமாட்டார்? நாமே அந்த மூட்டையை நமது தலையில் வைத்துக்கொண்டால் அவர் என்ன செய்வார்? ஆகையால் நமது பாரத்தை அவரிடமே விட்டுவிடுவது நமது கவலைக்குப் பரிகாரம்.

3. தேடுதல். "நீங்கள் தேவராஜ்யத்தையே தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"



என்றார். பவுல் பேதுரு சொன்னதை நிறுத்தி, கவலைக்கு ஆண்டவர் சொல்லும் பரிகாரத்தைப் பார்ப்போம். நமது கவலைகளைப் பிதாவுக்குத் தெரியப்படுத்தி அவைகளை அவரிடம் விட்டுவிட்டபின் நமது மனம் வெறுமையாயிருந்தால் போன கவலைகள் திரும்பவும் வந்து நம்மை ஆண்டுகொள்ளும். கவலை மனதுக்குரியது. ஆகையால் நமது மனம் வேறுகாரியங்களில் முயற்சியாயிருக்கவேண்டும். அந்த வேறுகாரியங்கள் ஆவிக்குரிய தேவகாரியங்கள். அநேகர் தங்கள் கவலைகளைப் போக்க வேடிக்கை கண்காட்சிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். அவற்றால் கவலைகள் நீங்கிச் சமாதானம் கிடைப்பதில்லை. இது குடிகாரன் தன் கவலையை மறக்கும்படி மதுபானம் பண்ணுவதற்கு ஒப்பாகும். வெறி நீங்கினபின் கவலை கவலைதான்.

ஆண்டவர் காண்பிக்கும் வழியோ ஆசீர்வாதமானது. அதுவே தேவராஜ்யத்தின் பிரமாணம். நமக்கடுத்த கவலைகள் யாவும் இச்சரீரத்துக்குரியவை என்பது நிச்சயம். இதற்கு என்ன செய்வோம்? அதற்கு என்ன செய்வோம்? இதை எப்படி முடிப்போம்? அதை எப்படி நடத்துவோம் என்று நமது வாழ்க்கைக்கடுத்த அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறோம். எல்லாம் நமது விருப்பம்போல் நடந்தால் நமக்குக் கவலையில்லை. அப்படி நடப்பதும் முடியாத காரியமே. எத்தனையோ காரியங்கள் சரியாய் நடவாததால் நமக்குக் கவலை ஏற்படுகிறது. "நீங்கள் கவலைப்படுகிறதென்ன? தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்கிறார். அவர் பொய் சொல்லமாட்டார். கூடக்கொடுக்கப்படும் என்பதாலே ஐசுவரியத்தையும் உலகப்பொருள்களையும் ஏராளமாய் நமது வீட்டில் கொட்டிவிடுவார் என்று அருத்தமல்ல. அப்படிச் செய்வாரானால் அது நமது அழிவுக்கே ஏதுவாகும். "எல்லாம் கூடக்கொடுக்கப்படும்" என்பது நமது நிலைமைக்கும் தேவைக்கும் அவசியமான நன்மைகள் எவைகளோ அவைகளைத் தவறாது கொடுப்பார் என்பதே கருத்து. "நமக்கு இன்னது தேவை என்பதை நமது பரமபிதா அறிந்திருக்கிறார்" அந்த நன்மை நமக்குக் கிடைப்பதற்கு நாம் தேவராஜ்யத்தைத் தேட வேண்டும்.

ஏன் தேவராஜ்யத்தைத் தேடவேண்டும்? தேவராஜ்யம் என்பது தேவ ஆளுகை. அதைத் தேடுதல் என்பது, முதலாவது நமே தேவ ஆளுகைக் குட்பட்டு, அவர் சித்தப்படி பிழைப்பதோடு மற்றவர்களும் ராஜ்யத்தின் பிள்ளைகளாகும்படி உழைப்பதைக் குறிக்கும். தேவராஜ்யம் என்னவென்பதை நமது ஆண்டவர் ஜீவியத்தில் திட்டமாய்க் காண்கிறோம். மனுஷன் ஆவியாயிருக்கிறான். அவன் வசிக்கும் வீடு சரீரம். ஆவி கடவுளோடு சம்பந்தப்பட்டது; சரீரம் பூமியோடு சம்பந்தப்பட்டது. பூமிக்குரிய நன்மைகளாலே சரீரம் பிழைக்கவேண்டியதிருக்கிறது அப்படிப் பிழைத்தாலும் அந்தச் சரீரம் நமது ஆவிக்குரிய ஜீவியத்துக்கு உதவிசெய்யும் சாதனமாயிருக்கவேண்டும். ஆனால் காரியமோ தலைகீழாய் மாறிவிட்டது. பாவத்தால் மனுஷனுடைய புத்தி அந்தகாரப்பட்டதால் ஆவியை மறந்து சரீரத்தையே பிரதானமாக்கினான். அழிந்துபோகும் வீட்டை முக்கியப்படுத்தி, ஆவிக்குரிய உள்ளான மனுஷனை அசட்டை செய்தான். ஆவிக்குரியவனாயிருக்கவேண்டியவன் மாம்சத்துக் குரியவனானான். பரத்துக்குரியவனாகப் பிழைக்கவேண்டியவன் இகத்துக்குரியவனானான். உலககாரியங்களில் வாஞ்சையுற்று, கண்கண்டதே காட்சி என்பதுபோல, சரீரத்தை வளர்ப்பதும் சந்தோஷப்படுத்துவதுமே தன் ஜீவியத்தின் பிரதான நோக்கம்போல் பிழைக்கிறான். தேவ அமைப்பின் ஒழுங்கு தவறினபோதே சகல கேடுகளும் கவலைகளும் மனுஷனை ஆண்டுகொண்டன. உலக மனுஷன் தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததால் சரீரத்தைவிட்டு அவன் ஆவி பிரியும்போது பரத்தில் அவனுக்கு இடமிராது. அவன் பூமியில் தேவசித்தப்படி பிழைக்காததால் உலககாரியங்களிலும் தேவாசீர்வாதம் இராது. ஆகவே ஆவியை மறந்து மாம்சசரீரத்திற்கென்று பிழைப்பவனுக்குப் பங்கு இங்குமில்லை அங்குமில்லை. வெளித்தோற்றத்தைக் கண்டு அவர்கள் நன்றாயிருக்கிறார்களே என்று நாம் பேசக்கூடாது. கடவுளற்ற ஜீவியத்தில் எப்படி ஆசீர்வாதமிருக்கும்? ஆத்ம ஆசீர்வாதமே நிறைந்த ஐசுவரியம். மனுஷர் பார்வையில் ஆண்டியாக எண்ணப்பட்ட யோவான்ஸ்நானன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருந்தான்.



இந்த இருமோசங்களையும் அறிந்த ஆண்டவர் மனுஷன் பிழைக்கும் ஆசீர்வாதமான வழியை அவனுக்குப் போதிக்கிறார். "நீ தேவனுடைய ராஜ்யத்தையே தேடு, அப்பொழுது இவைகள் யாவும் உனக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்கிறார். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய நன்மைகளும் கொடுக்கப்படும். ஒருவன் கடவுளுக்குரிய காரியங்களைப் பிரதானமாய்த் தேடும்போது, அவர் அவனுக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பதில் உண்மையும் ஜாக்கிரதையுமாயிருக்கிறார். அவனைச் சகல விஷயங்களிலும் நடத்த வேண்டிய கவலையை அவர் எடுத்துக்கொள்ளுகிறார். இதுவரை அவனைப் பாரப்படுத்தின கவலைகள் ஒழிந்தன. பிழைக்கும் வழியறியாமல் நம்மில் அநேகர் வீணாய் நம்மைப் பாரப்படுத்திக்கொள்ளுகிறோம். தேவராஜ்யத்தின் பிரமாணத்தை நாம் கவனிக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களைப் பிரதானமாய்த் தேடும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய நன்மைகளும் நமக்குக் கிடைக்கின்றன. நமது ஜீவிய வண்டி சரியாய் ஓடவேண்டுமானால் குதிரையைச் சரியான இடத்தில் கட்டவேண்டும். வண்டி முன்னும் குதிரை பின்னுமாகக் கட்டினால் வண்டி ஓடாது. நமது ஜீவியத்தில் தேவராஜ்யமாகிய ஆளுகை முதலிடத்தில் இருக்கவேண்டும். ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவே நமது பிரதான நோக்கமும் வாஞ்சையும் முயற்சியுமாயிருக்கவேண்டும். நமது இஷ்டம்போல் அல்ல, அவர் சித்தம்போலவே பிழைக்கவேண்டும். அவர் மகிமை ஒன்றையே நாடி அநேகர் தேவராஜ்யத்தின் மக்களாகும்படி உழைக்கவேண்டும். இதுவே பாக்கியமான ஜீவியம். நாம் இவ்வாறு பிழைக்கும்போது பரமபிதா தமது மாறாத வாக்கின்படி நமக்கும் நமது குடும்பத்துக்கும் தேவையான சகல நன்மைகளையும் தவறாது கொடுப்பார். இது மெய்தான் என்பதைத் தங்கள் அனுபவத்தில் அறிந்த தேவமக்கள் அநேகர் உண்டு. நாம் தேவனடத்துதலுக்கும் அவர் சித்தத்திற்கும் நம்மை ஒப்புவிக்காமல், நமது இஷ்டம்போல் நடந்துகொண்டிருக்க, நமக்குச் சங்கடங்கள் நேரிடும்போது முறுமுறுப்பதும் அவரைக் குற்றப்படுத்திப் பேசுவதும் சரியல்ல. அறிவிருந்தும் அனுபவமற்ற

போக்கிறிஸ்தவர்களாலே ஆண்டவர் நாமத்துக்கு எவ்வளவோ அவமானமும் இடறலும் உண்டாகின்றன!

தேவராஜ்யத்தைத் தேடுவதே கவலைக்குப் பரிகாரமென்றும், பிதா நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பவரென்றும் சொல்லி, அதை உறுதிப்படுத்த ஆண்டவர் சில திருஷ்டாந்தங்களை எடுத்துக்காண்பிக்கிறார். ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை, சாலொமோன் முதலாய்த் தன் சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? மேலும் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா என்கிறார். மேற்கூறியவைகளை நாம் அடிக்கடி வாசித்து வெகுசாதாரணமாகிவிட்டன. ஆண்டவர் நமது கவலையைப்போக்கும்படி சொல்லும் நியாயங்கள் நமக்குள் நம்பிக்கையை உண்டாக்குகிறதில்லை. அவை யாருடைய வார்த்தைகள்? யாருக்குச்சொல்லப்பட்ட வார்த்தைகள்? பரமபிதாவாகிய கடவுளே தமது குமாரனுக்குள்ளிருந்து பேசின வார்த்தைகள். நாம் அவைகளை எவ்வளவோ பயபக்தியுடன் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்போது பிதாவின்மேல் பற்றுதலுண்டாகி நமது கவலைகள் நீங்கும். மனுஷன் தேவசாயல் தேகரூபத்தின்படி உண்டாக்கப்பட்டவனாகையால் சர்வ சிருஷ்டிக்கும் மேலானவன். அற்பப்பட்சிகளைத் தவறாது போஷித்து, காட்டுப்புஷ்பங்களை அலங்கரிக்கும் பரமபிதா நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடாதிருப்பாரா? ஆகாரம் ஜீவன் இவை இரண்டிலும் ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவன் எவ்வளவோ



மேலானது. மேலான ஜீவனைக்காப்பாற்ற அதைப்பார்க்கிலும் அற்பமான அழிந்துபோகிற போஜனத்தைக் கொடாமலிருப்பாரா? சரீரம் உடை இவை இரண்டிலும் அற்புதமான சரீரம் எவ்வளவோ மேலானது. மேலான சரீரத்தை உடுத்த அற்பமான உடையைக்கொடாதிருப்பாரா? வயலில் நாற்றை நட்டின சம்சாரி தன்னை நம்பியிருக்கும் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சாதிருப்பானா? கடவுள்மீது நம்பிக்கையற்றுப் பல கவலைகளுக்குள்ளானவர்களுக்கு ஆண்டவர் நியாயமான திருஷ்டாந்தங்களை எடுத்து மனதில் படும்படி பேசுகிறார். நமக்காகக் கவலைப்படுகிற பிதா ஒருவர் இருக்கிறார் என்கிற நிச்சயம் இருந்தால்தானே இந்தத் திருஷ்டாந்தங்கள் நமக்குப் பிரயோஜனப்படும். பிதாவுக்கே மோசமானால் ஆண்டவர் எவ்வளவு ஊக்கமாய்ப்பேசினாலும் என்ன பிரயோஜனம்? காலமெல்லாம் கவலைதான்.

தேவனுடைய ராஜ்யத்தையே தேடிக்கொண்டிருந்தால் ஆண்டவர் சாப்பாடுகொண்டுவந்து வாயில் ஊட்டுவாரா என்று கேட்பவருண்டு. அப்படி ஊட்டத்தக்க நிலைமையில் நாம் இருந்தபோது ஊட்டியுமிருக்கிறார். ஆனால் சோம்பேறிகளைப் போஷிப்பதாக வாக்கில்லை. "ஒருவன் வேலைசெய்ய மனமற்றவனாயிருந்தால் அவன் சாப்பிடாதிருக்கக் கடவன்" என்றும், வேலைசெய்கிறவனைக் குறித்து "உன் கையின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்" என்றும் வேதம் கூறுகிறது. ஆண்டவர் நமக்கு நன்மை செய்யவேண்டுமானால் நாம் தேவராஜ்யத்தையே தேடவேணும் என்றும், தேவபக்தியாய் ஜீவனம் பண்ணவேண்டுமென்றும் சொல்வதை அநேகர் தப்பாய் அருத்தப்படுத்துகிறார்கள். ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஆண்டவர் எல்லாவற்றையும் கொடுக்கவேணும் என்பது அவர்கள் அருத்தம். பட்சிகளைக் குறித்தும் காட்டுப் புஷ்பங்களைக் குறித்தும் ஆண்டவர் சொன்னதை தப்பாய் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகாயத்துப் பறவைகள் சோம்பலாய் உட்கார்ந்திருந்தால் சாகும். காட்டுச்செடிகள் தங்கள் வேர்களை ஆழத்தில் அனுப்பிச் சாரத்தை உட்கொள்ளாதிருந்தால் பட்டுப்போகும். அவைகளே முயற்சியாயிருக்கும்போது புத்தி சித்தம் பலமுள்ள மனுஷன் முயற்

நியமித்திருப்பது நியாயமா? நாம் கவலையற்றிருக்கவேண்டுமென்று அவர் சொன்னாரேயன்றி, வேலை செய்யக்கூடாதென்று சொல்லவில்லை.

மேலும் தேவபக்தியுள்ள கடவுளோடு ஐக்கியப்பட்டவர்கள் சோம்பேறிகளாயிருக்கமுடியாது. நமது பிதா இடைவிடாமல் கிரியை செய்கிறவர். சுதன் இடைவிடாமல் கிரியை செய்கிறவர். ஆவியானவர் சுறுசுறுப்பாய் உழைக்கிறவர். இப்படியிருக்க தேவபக்தன் எப்படிச் சோம்பலாயிருக்கக் கூடும்? தேவராஜ்யத்திற்காகப் பிழைக்கிறவனுக்குக் காலம் மகா அருமை. பகற்காலமிருக்குமட்டும் தன்னை உலகத்தில் அனுப்பினவருடைய சித்தத்தை அவன் செய்து முடிக்கவேண்டும். அவன் எந்த இடத்திலிருந்தாலும், எந்த வேலையைச் செய்தாலும் தன்னை மீட்டுக்கொண்ட ஆண்டவருக்காகவும் அவர் ராஜ்யத்திற்காகவும் பிழைப்பான் என்பது நிச்சயம். தனது நேரம், பலம், வரம் யாவையும் மற்றவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்காகச் செலவிடுவான். ஆவிக்குரியவன் இடைவிடாத வேலைக்காரன். ஆராதனை முடிந்தால் சகலமும் முடிந்ததென்று அவன் நினைக்கமாட்டான். ஆராதனை வேளையிலிருக்கும் தேவசந்நிதி இரவும் பகலும் அவனுக்குள் இருக்கும். ஒருமணி நேரமாத்திரமல்ல, இடைவிடாமல் அவன் ஆண்டவர் சமுகத்தில் சஞ்சரிப்பான். எங்கே போனாலும், யாரோடே பேசினாலும், கடிதம் எழுதினாலும் அவரவருடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமான காரியங்களைச் சொல்லாதிரான். இதுவே தேவராஜ்யத்தைப் பிரதானமாகத் தேடுதல். தான் தேவபக்தியாயிருப்பதினிமித்தம் தன் வேலையை, வீட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளை அசட்டைசெய்யமாட்டான். இவன் இவ்வாறு எப்பொழுதும் பிதாவைச் சார்ந்து பிழைக்கிறபடியால் அவர் இவனுக்குத் தேவையான நன்மைகளையும் அநுகூலங்களையும் கொடுத்து, அவனைப் பராமரித்து நடத்துகிறார். கடவுள் சகல காரியங்களையும் அவனுக்காக நடத்துவதால் அவன் கவலையற்று வாழ்கிறான். நாம் கவலையற்ற ஜீவியம் செய்யவேண்டுமானால் மேற்கூறிய மூன்று காரியங்களையும் அநுபவத்துக்குக் கொண்டுவரவேண்டும். நமக்கு எவ்வ



ளவு கஷ்டங்கள் சஞ்சலங்களிருந்தபோதிலும் அவைகளை மனதில் வைத்து வேதனைப்பட்டுக்கொண்டிராமல், அன்புள்ள பிதாவிடம் சென்று, அவர் நமக்கு இதற்குமுன் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஸ்தோத்திரித்து, நமது கஷ்டங்களைத் தாராளமாய் அவருக்குத் தெரிவிக்கவேண்டும். தெரிவித்தபின் அவைகளை மறுபடியும் மனதில் வைக்காமல் அந்தப் பாரத்தை ஆண்டவரிடமே வைத்துவிடவேண்டும். ஆவியான நமது [illegible] காரியங்களில் சித்தப்படி தேவராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் நாம் முயற்சியாயிருக்கவேண்டும். நம்மை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புவித்து, அவர் சித்தப்படிமாத்திரம் பிழைத்து, அவரை மகிமைப்படுத்தும்போது, அன்புள்ள பிதா தமது மாறாத வாக்கின்படியே நமது சகல காரியங்களையும் நமக்காக நடப்பித்து நம்மை ஆசீர்வதிப்பார். "எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே" (ஏசா. 26: 12). கவலைக்குப் பரிகாரம் இதுவே.

## V. நமக்கு இருக்கவேண்டிய கவலை.

தேவமக்களான ராஜ்யத்தின் புத்திரர் கவலையற்றவர்களும் கவலையுற்றவர்களுமாயிருக்கிறார்கள். சரீரத்துக்கடுத்த, உலகத்துக்கடுத்த கவலைகள் ஒழிந்தன. ஆவிக்குரிய, பரத்துக்கடுத்த கவலைகள் ஒழியவில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்குக் கவலை கூடாதென்று போதித்த ஆண்டவரே நமக்குக் கவலைவேண்டுமென்றும் போதித்திருக்கிறார். இது என்ன கவலை? தேவ கவலையே நமது கவலை. இந்தக் கவலை ஆசீர்வாதமும் பிரயோஜனமுமானது. மனுமக்களுடைய ரட்சிப்புக்காகவும், அவர்கள் தம்மோடு ஐக்கியப்படும்படியாகவும், கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் அவர்கள் வளரும்படியாகவும் பிதா எவ்வளவோ கவலையோடிருக்கிறார். அவருடைய கவலையை கிறிஸ்துவில் காண்கிறோம். கிறிஸ்துவைப்போல் துக்கம் நிறைந்தவர்கள் யார்? அவருடைய ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருந்தது. வியாகுலமும் பயமும் திகிலும் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்தன. அவர் கண்களிலிருந்து கண்ணீர் பாய்ந்தது. அவர

வியர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தன. அவருக்கொப்பான கவலை யாருக்குண்டு? இது என்ன கவலை? நிலமில்லையே, உத்தியோகமில்லையே, பொருள் இல்லையே, சாப்பாடில்லையே, உடுப்பு இல்லையே என்னும் கவலையோ? ஒருக்காலும் அல்ல. அவர் ஒருபோதும் தமக்காகக் கவலைப்பட்டவரல்ல. உலகம் ரட்சிக்கப்படவேண்டும் என்பதே ஆண்டவர் கவலை. நமது ரட்சிப்புக்காகப் பரமபிதா எவ்வளவு பாடுபடுகிறார் என்பதைச் சரீரத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவில் காண்கிறோம். நாம் ஆண்டவரிடம் காண்பது யாவும் பிதாவின் கிரியைகளே. இந்தக் கவலையில் பாவமில்லை. இது பாவத்தை அகற்றும் கவலை. இந்தக் கவலைதான் நமக்கும் வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை நமக்குள்ளிருந்தால் கிறிஸ்துவின் கவலையும் நமக்குள்ளிருக்கும். தேவராஜ்யத்திற்கென்று நாம் பிழைப்போமானால், பிறர் ரட்சிப்புக்காக நாம் உழைப்போமானால், தேவ கவலை தானாகவே நமக்குள் வரும்.

“நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்” என்று கொரிந்தியருக்கு எழுதின பவுல் தாமே கவலையுள்ளவராயிருந்தார். தேவ கவலையே அவர் கவலையாயிருந்தது. மனுஷர் ரட்சிக்கப்படும்படி அவரடைந்த பாடுகளும் சிந்தின கண்ணீரும் கொஞ்சமல்ல. “எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறதென்றும்,” “எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது” என்றும் பவுல் புலம்பினார். தேவராஜ்யத்துக்குரிய கவலை நம்மை ஆண்டுகொள்ளும்போது, நம்மைப் போஷித்துக் காப்பாற்றி வழிநடத்தவேண்டிய கவலை பரமபிதாவை ஆண்டுகொள்ளுகிறது. நாம் அவர் காரியங்களில் கவலைப்படும்போது அவர் நமது காரியங்களில் கவலைப்படுகிறார். தேவமக்களுக்கும் தேவ ஊழியர்களுக்கும் ஆவிக்குரிய மேலான கவலை வேண்டும். வழிவிலகிப்போன இஸ்ரவேலருக்காக எரேமியா அழுதவண்ணமாயிருந்தார். ரட்சிப்பின் ஊழியம் சொகுசான வேலையல்ல. சன்மைபொருந்திய பட்டத்திற்காகத் தவிப்பவர்கள் பலர். கிறிஸ்துவின் சிந்தையை அணிந்து உண்மையாய் ஊழியம் செய்யும்போது



தான் அதன் உத்தரவாதம் தெரியும். அலங்கார உடையாலும், ஒழுங்கான வாசிப்பாலும், இனிய குரலாலும், சாமர்த்தியப் பேச்சாலும் காரியம் பலிக்காது. மனுஷர் ரட்சிக்கப்படும்படி அப்போஸ்தலன் “கர்ப்பவேதனைப்படுகிறேன்” என்றார். சபைகள் எத்தனை! ஊழியர் எத்தனை! ஆராதனை பிரசங்கங்கள் எத்தனை! கண்ட பலன் என்ன? நமது வேலைக்கும் முயற்சிகளுக்கும் தகுந்த பலனில்லையே. கிறிஸ்துவை அறியாத கிறிஸ்தவர்கள் ஏராளம்! ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்ததே கண்டபலன். கிறிஸ்துவின் சிந்தையுள்ள ஆண்கள் பெண்கள் எத்தனைபேர்? கிறிஸ்துவின் சிந்தையற்றவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. தேவ ஊழியர்களாகிய நாம் இதை உணர்ந்தோமா? அவர்களை கிறிஸ்துவிடம் நடத்தி அவரோடு இணைக்கும் உத்தரவாதமான வேலை நம்முடையதென்பதைக் கண்டோமா? அவர்களில் அநேகருடைய ஜீவியம் மாறாதிருப்பது நமக்குத் துக்கத்தை உண்டாக்குகிறதா? தனித்தும் மொத்தமாகவும் அவர்களை தேவமக்களாக்கும்படி, ஆவிக்குரியவர்களாக்கும்படி, வாஞ்சையோடு பேசுகிறோமா? நமது ஜீவியத்தின் ஒரே நோக்கம் தேவராஜ்யமும் பாவிகள் ரட்சிப்புமாயிருக்கிறதா? நமது ஜீவியத்தின் ஒரே நோக்கம் அதுதான் என்று சபையார் அறிந்திருக்கிறார்களா? நமது வார்த்தைக்கும் கண்டிப்புக்கும் மதிப்புண்டா? அல்லது யார் கெட்டால் எனக்கென்ன? என்வேலை முடிந்ததென்று இருக்கிறோமா? ஆண்டவர் ஊழியத்தில் நாம் பாரம் சுமந்து தவிக்காவிட்டால், நமது ஜீவனும் பலமும் வரமும் அவர்களுக்காகச் செலவழிக்கப்படாவிட்டால் ஆண்டவர் நமது வேலையை ஆசீர்வதிக்கமாட்டார். கிறிஸ்துவில் விளங்கின தேவ கவலையும் துயரமும் வாஞ்சையும் நம்மையும் ஆண்டுகொள்ளவேண்டும். இது ஆசீர்வாதமான தேவ கவலை. பாவிகள் தங்கள் ரட்சிப்புக்காகக் கவலைப்படும்படி நாம் தேவகவலையோடு ஊழியஞ்செய்யவேண்டும். இவ்வளவு பெரிதான ரட்சிப்பைக் குறித்து அவர்கள் கவலையற்றிருந்தால் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். இதை உணர்ந்து மிகுந்த கவலையுடன் நாம் போதிக்கவேண்டும். அவர்களுக்கு நாமே மாதிரியாகப் பிழைக்கவேண்டும். நமக்கில்லாததை நாம் மற்ற

வர்களுக்குக் கொடுக்கமுடியாது. ஜனங்களில் நடக்கவேண்டிய ஆவிக்குரிய வேலை முதலில் நம்மில் நடந்திருக்கவேண்டும். அதுவே உண்மையான வழியுமாகும். நாம் அறியாததையும் அனுபவிக்காததையும் குறித்து எவ்வளவு சிறப்பாய்ப் பேசினாலும் அது பொய்யானதே. கிறிஸ்துவை அறிகிற அறிவிலும், அன்பிலும், ஐக்கியத்திலும் நாம் வளரும்போது கிறிஸ்துவின் ஆத்ம வாஞ்சையும் கவலையும் நமக்குண்டாகும். உலகக் கவலை நீங்கி, ஆவிக்குரிய தேவ கவலை நம்மை அணுகவே நாம் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு நிச்சயமான வழி.

---

# IX

# How to overcome evil

# தீமையை வெல்லும் வழி

"நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" ரோ. 12: 21.

"என்னிடம் வாருங்கள்," "என்னைப் பின்செல்லுங்கள்," "என்னில் நிலைத்திருங்கள்," என்பவை ஆண்டவர் நமக்கருளிய அருமையுள்ள கட்டளைகள். என்னிடம் வாருங்கள் என்பது இரட்சிப்பு. என்னைப் பின்செல்லுங்கள் என்பது கற்றுக்கொள்ளுதல். என்னில் நிலைத்திருங்கள் என்பது கனிகொடுத்தல். பாவி ஆண்டவரைத் தேடிப் போகும்போது அவர் அவன் பாவங்களை மன்னித்துச் சமாதானமருளுகிறார். அவரைப் பின்பற்றுவதால் அவரால் போதிக்கப்பெற்று அவருடைய சாயலுக்கொப்பாக மாறுகிறான். அவரில் நிலைத்திருக்கும்போது அவர் ஆவியின் மூலம் கனிநிறைந்து பிறருக்கு ஆசீர்வாதமாகிறான். இவைகளை லேசாய்ச் சொல்லிவிட்டோம். ஆனால் ஆண்டவரை இடைவிடாது பின்பற்றுவதும், அவரில் நிலைத்திருப்பதும் லேசான காரியமல்ல. கிறிஸ்துவைப் பின்செல்ல விரும்பும் உத்தம விசுவாசிக்குப் பாடுகளும் உபத்திரவங்களும் நேரிடும். நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்கும்போது நமக்கேன் பாடுகளென்று ஆச்சரியப்படக்கூடாது. கிறிஸ்தவ ஜீவியம் ஒருநாள் காரியமல்ல. ஒரு ஜெபக்கூட்டத்தோடு முடிவதல்ல. ஒரு சிறு செடி பெரிய விருக்ஷமாக வளருவதுபோல நாம் கிறிஸ்துவுக்குள் பிறந்து பூரண புருஷராகும்வரை வளரவேண்டும். கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இந்த வளர்ச்சிக்கு இடையூறுகள் அனந்தம். போராட்டமில்லாமலும், போராட்டத்தை மேற்கொள்ளாமலும் நமக்கு வளர்ச்சியில்லை. வளர்ச்சியின்றி [illegible]வில்லை. நாம் ஆண்டவரை உண்மையாகப் பின் செல்லுகிறோமா

பதற்கு காரணமில்லாத பாடுகள் அடையாளம். அப்பாடுகளை நாம் பொறுமையுடன் சகிப்பது நமது ஜீவியம் பூரணப்படுவதற்கும், மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாயிருப்பதற்கும் அவசியம்.

“நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு.” அதாவது, மற்றவர்கள் உனக்குச் செய்யும் தீமைக்கு நீ பதில் தீமைசெய்து தோல்வியடையாமல், அத்தீமையை நீ பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, அதற்குப் பதிலாக நன்மை செய்வதினாலே அந்தத் தீமையை நீ மேற்கொள்ளவேண்டும். நமக்கு நேரிடும் பாடுகளைப்பற்றிக் கவனிக்குமுன், நமதாண்டவருக்கு நேரிட்ட தீமைகளையும் அவைகளை அவர் மேற்கொண்ட விதத்தையும், அது விஷயத்தில் அவர் மாதிரி என்னவென்பதையும் பார்ப்போம்.

1. **ஆண்டவருக்கு நேரிட்ட தீமைகள்.** பரிசுத்தத்தை விரும்பும் ஓர் மனுஷன் மகா அசுத்தத்தின் மத்தியில் சஞ்சரிக்க நேரிட்டால் எப்படிச் சஞ்சலப்படுவானோ, அதுபோலவே மாசற்ற பரிசுத்தராகிய கிறிஸ்து பாவம் நிறைந்துள்ள உலகத்தில் தோன்றினபோதே அவருக்குப் பாடுகள் ஆரம்பித்தன. அவர் பிறக்கத்தான் இடமுண்டா? பிறந்தாலும் ஏரோது குழந்தையை அமர்ந்திருக்க விட்டானா? அதுமுதல் கடைசிவரை அவர் பாடனுபவித்தவராகவே இருந்தார். தாம் நிறைவேற்ற வந்த ஊழியத்துக்கு நேர் எதிரிடையான மனுஷர் நடுவில் அவர் வேலைசெய்யவேண்டியதாயிற்று. மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரியவரை அறியவில்லை. உலக மக்கள் பரலோக புருஷனை விரும்பவில்லை. ஆகவே அனுதாபமற்ற மனுஷர் நடுவில் அவர் ஊழியஞ்செய்தார். தமக்குச் சில சீஷரைத் தெரிந்துகொண்டார். அவர்களைத் தம்முடன் வைத்து, தமது அன்பாலும், உபதேசத்தாலும், நற்கிரியைகளாலும் பக்குவப்படுத்தினார். அவர்கள் அவரைப் பின்சென்றபோதிலும் அவர் இன்னாரென்றும் அவரது ராஜ்யத்தின் தன்மை இன்னதென்றும் கடைசிவரை அறிந்துகொள்ளவில்லை. உலக ராஜ்யமும் உலக மேன்மையுமே அவர்கள் எண்ணமாயிருந்தது. அவர் மரித்தபோது அவர்களும் மறைந்தார்கள். திரளான வேறு சீஷர்களும் அவருக்கிருந்தார்கள்.



அவர்கள் எங்கும் அவரைப் பின்சென்றார்கள். ஆவிக்குரிய அவரது போதனையை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்களும் பின்வாங்கிப் போனார்கள். அவருக்குச் சகோதரர் இருந்தார்கள். இவர்கள் அவரை நம்பவில்லை. இவைகளெல்லாம் ஆண்டவர் மனதுக்கு எவ்வளவு [illegible]யிருந்திருக்கும்? ஆகிலும் அவரிடத்தில் யாதொரு பதட்டம், ஆத்திரம், மனச்சோர்பு, வெறுப்பு முதலிய குறிப்புகளை நாம் காண[illegible].

ஒரு காரியத்தில் ஒருவன் எவ்வளவு கவனமும் கருத்துமாயிருக்கிறானோ, அவன் எடுத்துக்கொண்ட கருமத்துக்கு ஆபத்[illegible]னால் சகிக்கக்கூடாத சஞ்சலமடைவான். பாவிகளை ரட்சிக்கும் நோக்கத்துடன் ஆண்டவர் உலகத்தில் பிரவேசித்தார். [illegible] அந்த நோக்கத்துக்கு விரோதமாயிருந்தன. அவருடைய ரட்சிப் பலிக்கவேண்டுமானால் ஜனங்கள் அவரை நம்பவேண்டும். நம்பாதவர்களை ரட்சிக்க பகவானாலும் முடியாது. அவரை நம்பாதவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் ரட்சிக்கப்படமாட்டார்கள். ஜனங்கள் அவரை நம்பாதிருக்கும்படி செய் [illegible] முயற்சியுமிருந்தன. வேத அக்காலத்து அதிகாரிகள் தீர்மானமும் [illegible]. ஆண்டவர் எங்கெங்கே போனாரோ அங்கெல்லாம் இவர்கள் தங்கள் ஆட்களை அனுப்பி அவர் ஊழியத்தைக் கெடுக்கும்படி வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். தீமையான காரியங்களை அவருக்கு விரோதமாய்ப் பிரஸ்தாபித்தார்கள். ஆவிக்குரிய அவரது உன்னத பதவியை ஜனங்கள் உணர்ந்துகொள்ளாமல் வீண்பழிகளை அவர்மீது சுமத்தி அவருக்குச் செவிகொடாதபடி செய்தார்கள். ஓய்வுநாளை மீறுகிறவன், பிசாசுபிடித்தவன், மோசேயின் பிரமாணங்களை அழிக்கிறவன், தேவதூஷணம் சொல்லுகிறவன், பைத்தியக்காரன், ஜனங்களை [illegible]வன், பெயல்செபூலை உடையவன், போஜனப் பிரியன், மதுபானப் பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்று பலவாறாய் அவரைத் தூஷித்து அவர் வேலைக்குப் பலத்த இடையூறு செய்தார்கள். கடவுள் ஊழியர் என்றெண்ணப்பெற்ற அதிகாரிகளின் சொல்லை மீறி நடக்க ஜனங்களுக்குத் தைரியமில்லை. ஊழியத்தின் ஆரம்பமுதலாய் ஆண்டவருக்குச் சந்தோஷ[illegible]

கொடுத்தபோதிலும், வரவர எல்லாம் அவர் வந்த நோக்கத்துக்கு நேர் விரோதமாகத் திரிந்தது. இவ்வளவெல்லாம் நேரிட்டபோதிலும் அவரிடத்தில் கொஞ்சமாகிலும் ஆத்திரமோ, கோபமோ, பழிவாங்கும் சுபாவமோ காணப்படவில்லை. சாந்தமுள்ள ஆட்டுக்குட்டியாகிய அவர் சகல தீமைகளையும், விரோதங்களையும், இடையூறுகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, தமது ஊழியத்தைக் கைவிடாது நடத்திக்கொண்டே போனார்.

சிலுவை சமீபித்தது. அவரைப் பிடித்தார்கள். கைகளைக் கட்டினார்கள். தங்கள் கைகளில் அவர் அகப்பட்டுக்கொண்டதை பெரிய வெற்றியாக நினைத்தார்கள். மாய விசாரணை நடத்தினார்கள். வாய்க்கு வந்தபடி அவரைத் தூஷித்தார்கள். கண்களைக் கட்டி மறைத்தார்கள். கன்னத்தில் அடித்தார்கள். முகத்தில் துப்பினார்கள். கூரிய ஆணிகள் இணைந்த வார்களால் அவரை அடித்து அவர் முதுகைக் கிழித்தார்கள். பலத்த முள்ளுள்ள பிலாறுகளால் ஒரு கிரீடத்தைப் பின்னி அவர் சிரசில் வைத்து கோலால் தலையில் அடித்தார்கள். இவை யாவற்றாலும் பெலங்குன்றியிருந்த அவர் தோள்மேல் பாரச் சிலுவையை ஏற்றி நகரத்துக்குப் புறம்பே தள்ளிக்கொண்டுபோனார்கள். அங்கே இருகள்ளர் நடுவில் அவரைச் சிலுவையிலறைந்து எல்லாரும் பார்க்கத்தக்க மேட்டில் நிறுத்தினார்கள். இத்துடன் நிறுத்தாமல் வேதனையோடு சாகிற மனுஷனை நிந்தித்துப் பரியாசம் பண்ணினார்கள். இவ்வளவெல்லாம் தமக்கு நேரிட்டும் சகலத்தையும் அவர் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டார். மறு வார்த்தை பேசவில்லை. காரணமென்ன? தீமையினால் தம்மை மேற்கொள்ளத் துணிந்தவர்களைத் தமது நன்மையினால் மேற்கொள்ள வேண்டுமென்பதே ஆண்டவர் தீர்மானம்.

2. இவ்வளவு சகிப்புத்தப் பொறுமைக்கும் காரணம் என்ன? தீமையின் மத்தியில் நன்மை பாடுபடும் என்றறிவார். [illegible] தப்பாது. பொல்லாத மனுஷர் நல்லவரைப் பகைத்தார்கள். "பொல்லாங்கு செய்கிற எவனும் இந்த ஒளியைப் பகைக்கிறான்." உலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகள் என்று அவர்



பிரசங்கித்தது அவர்களுக்குப் பிரியமில்லை. உலகத்தின் நோக்கமும் அவர் நோக்கமும் நேர் விரோதமாயிருந்தபடியால் அவர்கள் தம்மைப் பகைத்ததைக் குறித்து அவர் ஆச்சரியப்படவில்லை. இப்படியெல்லாம் தமக்கு நடக்கும் என்பதை முன்னறிந்தே அவர் வந்தார். கொதி தண்ணீரை எதிர்பார்ப்பவன் சுடுதண்ணீருக்குப் பயப்படான். ஆனபடியால் எதிர்பார்த்த பாடுகளே அவருக்குச் சம்பவித்தபடியால் அவர் அவைகளைச் சகித்துக்கொள்வதே சரி.

தமக்கு நேரிட்ட பாடுகளுக்கு ஜனங்களுடைய அறியாமை காரணம் என்பதையும் அறிவார். ஆகையால் அவர்கள் தமக்கு விரோதமாகப் பின்னி செய்த தீமைகளை அவர் நோக்காமல் அவர்கள் அறியாமைக்காகப் பரிதபித்தார். அவர்களுக்கு தேவ அறிவில்லை. தேவ பக்தியில்லை. ஆவிக்குரிய சிந்தை இல்லை. அவர்கள் இருதயம் எப்படியோ அப்படியே அவர்கள் பேசினார்கள்; தீமையை நடப்பித்தார்கள். முட்செடிகளிலிருந்து அத்திப் பழங்களையும், எட்டி மரத்திலிருந்து திராட்சப்பழங்களையும் அவர் எதிர்பார்த்தவரல்ல. அவர்கள் தம்மைச் சிலுவையிலறைந்தபோது, மகாவேதனையான சமயத்தில், அவர்கள் செய்த தீமையை நோக்காமல் சகல தீமைகளுக்கும் காரணமாயிருந்த அவர்கள் அறியாமையை நினைத்து: "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று மன்றாடினார்.

தீமைக்குத் தீமைசெய்தால் தமக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியம் கெட்டுமென்று அறிவார். பிதா தீமையற்றவர். அன்பின் சொரூபி. திருக்குமாரன் பிதாவின் பூரண ஐக்கியத்தில் பிழைத்திருந்தார். அந்த ஐக்கியமே அவருக்கு ஜீவன். [illegible] தீமை அவருக்குள் பிரவேசித்தால் ஜீவன் போன்ற பிதாபுத்திர ஐக்கியம் கெட்டுப்போகும். எவ்வளவு தீமைகளானாலும் சகித்துக்கொள்வாரேயன்றி, தீமைக்குத் தீமைசெய்து தமக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியத்தை இழக்கச் சம்மதிக்கமாட்டார். அவரது ஆச்சரியமான பொறுமைக்கு இதுவும் காரணமாகும்.

மன்னிக்க மனதில்லாவிட்டால் மன்னிக்கும் சிந்தையுள்ள பிதாவின் முகத்தைப் பார்க்கமுடியாது. தமக்குத் தீமை செய்தவர்களுக்கு அவர் பதில் தீமைசெய்தால் அவர் இருதயத்தின் சமாதானம் கெடும். ஆகையால் தம்மைப் பகைத்த ஒருவரையாவது அவர் பகைக்கவில்லை. சமாரியர் தம்மை ஏற்றுக்கொள்ளாதபோது அவ்வூராரை அழிக்கும்படி சீஷர்கள் கேட்டார்கள். அந்தப் பழிவாங்கும் சுபாவத்தை ஆண்டவர் வெறுத்து அவர்களைக் கடிந்துகொண்டார். பிதா எல்லார்மேலும் இரக்கமாயிருப்பதுபோல ஆண்டவரும் சத்துருக்கள்மீது இரக்கமுள்ளவராயிருந்தார். பிதாவின் சிந்தையே கிறிஸ்துவின் சிந்தை. அவரது மன்னிக்கும் சுபாவமே தீமைகளை அவர் சகித்துக்கொண்ட காரணம்.

பாவிகளை ரட்சிக்கவந்தவர் அவர்களை அழிப்பதெப்படி? பைத்தியகார மகன் என்னென்ன பேசினாலும், எப்பாடு படுத்தினாலும் பெற்ற தகப்பன் மனமுருகி அவனைக் குணமாக்க வாஞ்சிப்பதுபோல, புத்தியில் அந்தகாரப்பட்ட பாவிகள் தமக்கு எவ்வளவு தீமைகள் செய்தபோதிலும் அவர்களை ரட்சிக்கும்படியான அளவில்லாத அன்பு அவர் உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருந்தபடியால் தீமைக்குத் தீமை செய்ய அவருக்கு மனம் வரவில்லை. மேலும் அவர்கள் ஈடேற்றத்துக்காகத் தமது உயிரையுங் கொடுக்க வாஞ்சைகொண்டிருந்த ஆண்டவர் எப்படி அவர்கள் தீமைக்குப் பதில் தீமை செய்வார்? தமக்கு விரோதமாகச் சத்துருக்கள் பேசின, செய்த சகலகாரியங்களையும் ஒன்றுவிடாமல் அறிந்திருந்த ஆண்டவர் தமது சீஷரிடம் அவைகளைப்பற்றிப் பேசாமலும் [illegible] சொல்லாமலும் இருந்தது எவ்வளவு ஆச்சரியம்! அவர் ஒன்றையும் தமது மனதில் போட்டுக்கொள்ளவில்லை. அன்பு சகலத்தையும் சகிக்கும்.

தமக்கு நேரிட்ட சகல தீமைகளிலும் பிதாவின் சித்தத்தைக் கண்டார். பிதா சித்தமின்றித் தமக்கு ஒன்றும் சம்பவிப்பதில்லையென்று அறிவார். பிதாவின் சித்தப்படி பிழைப்பதே அவர் ஜீவியத்தின் ஒரே வாஞ்சை. அந்தச் சித்தத்தை நிறைவேற்றும் வழியில் நேரிடும் பாடுகளும் பிதா சித்தமே. ஆகையால் அவர் தீமைக்குத்



தீமை செய்வாரானால் தேவசித்தத்திற்கு எதிர்த்து நிற்பதாகும். "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்றார்.

முடிவாகச் சொல்லவேண்டுமானால் தமக்குச் சம்பவித்த சகல தீமைகளையும் நியாயத் தீர்ப்புச்செய்யும் பிதாவின் கையில் விட்டுவிட்டார். எல்லாவற்றையும் இடைவிடாமல் கவனித்துக்கொண்டிருக்கும் பிதா நியாயத்தீர்ப்புச் செய்வார் என்பது அவர் பூரண நம்பிக்கை. ஆகையால் அவர்கள் தம்மை வையும்போது பதில் வையவில்லை பாடுபடுத்தும்போது அவர்களைப் பயமுறுத்தவில்லை. எல்லாவற்றையும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டார். அவர் தம்மைத் தாழ்த்தினதினிமித்தம் அவர் நியாயத்தைக் கவனிப்பாரில்லை. அவருடைய சாந்தம் கோழைத்தனமாகத் தோன்றினது. தங்கள் இஷ்டம்போல் அவரைப் பாடுபடுத்தி அவரை மேற்கொண்டதாக நினைத்தார்கள். வெற்றி யாருடையதென்பது அவர்களுக்குத் தெரியாது. தீமை செய்கிறவன் சண்டாளன். அவன் கடவுள் ஆக்கினைக்குரியவன். தீமைகளைப் பொறுமையாய்ச் சகிப்பவனே வெற்றியடைந்தவன். கடவுள் புகழ்ச்சி அவனுக்கே உரியது. நமதாண்டவருக்குத் தீமை செய்தவர்கள் குற்றவாளிகளாகித் தோல்வியடைந்தார்கள். ஆண்டவர் அவர்கள் செய்த தீமைகளைத் தமது நன்மையினால் மேற்கொண்டார். அவருடைய நீடியபொறுமையும் சாந்தமும் உலகத்துக்கு ரட்சிப்பாயிற்று.

இது விஷயத்தில் ஆண்டவர் தமதடியாருக்குச் சிறந்த மாதிரியானார். அவருடைய ஆச்சரியமான பொறுமையை அப்போஸ்தலர் ஒருக்காலும் மறக்கமுடியவில்லை. "கிறிஸ்துவின் பொறுமை," "கிறிஸ்துவின் பொறுமை" என்று தங்கள் நிருபங்களில் எழுதினார்கள். தீமையை நன்மையினால் வென்ற கிறிஸ்துவின் சிந்தை அவர்கள் இருதயங்களில் ஆழமாய்ப் பதிந்தது. "இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உடன் பங்காளியாயிருக்கிற யோவானாகிய நான்" என்று யோவானும் "கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்

துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக" என்று பவுலும்; "அவர் வையப்படும்போது பதில் வையாமலும் பாடு படும்போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" என்று பேதுருவும்; "தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எபிரேயர் நிருபத்தாரும் எழுதினார்கள். பொறுமையுள்ள ஆண்டவர் தாமே நம்மைப் பார்த்து, "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். அப்போஸ்தலரும் தேவபக்தர் யாவரும் ஆண்டவர் பொறுமையைப் பின்பற்றி நடந்தவர்களே. "நாங்கள் நிந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்படுத்தப்பட்டு ஜெயிக்கிறோம்" என்றார் பவுல். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும்."

## II. இந்த உபதேசத்தின் தாற்பரியம் என்ன?

பதிலுக்குப் பதில் செய்யாவிட்டால் காரியம் மிஞ்சிப்போகாதா? நாமாக வலியச் சண்டைக்குப் போகாவிட்டாலும் வந்த சண்டையை விடலாமா? உலகத்துக்கு இந்த உபதேசம் பொருந்துமா? நியாயஸ்தலத்தில் இந்தப் போதனை செல்லுமா? தீமையைச் சகித்துக்கொண்டே போனால் தீமைசெய்கிறவர்கள் கொழுத்துப் போகமாட்டார்களா? நாமும் அழிந்துபோக நேரிடுமே. வந்த யுத்தத்தை எதிர்த்துப்போராடுவதை நீதியுள்ள யுத்தம் என்றும் சொல்லுகிறார்களே என்று கேட்கலாம். தீமையைச் சகித்துக்கொள்வதும்; தீமைக்கு நன்மை செய்வதும் உலகத்துக்கு விபரீதந்தான். பேச்சுக்குப் பேச்சு, தூஷணைக்குத் தூஷணை, அவமானத்துக்கு அவமானம்; கேட்டுக்குக்கேடு என்பதே உலகவழக்கம். இது "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்னும் பூர்வகாலத்து முரட்டுப்பிரமாணத்தை ஒத்தது. தேவராஜ்யத்தின் காரியமோ வேறு. அதன் வல்லமையை உலகம் அறியாது. தேவமக்கள் கையாடும் போராயுதங்கள் தடிகளும், கத்திகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளுமல்ல. ஆகிலும் ஆவிக்குரிய ஆயுதங்கள் அரண்களையும் நிர்மூலமாக்கக்கூடிய தேவபலமுள்ளவைகள். நீதி



யுள்ள சண்டை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அவர்கள் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாதலால் அவர்கள் ஆயுதங்கள் ஆவிக்குரியவைகளே. அவர்கள் ஆட்டுக்குட்டியைப்போல் சாந்தமும் தாழ்மையுமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களை மேற்கொள்ள கர்ச்சிக்கிற சிங்கங்களாலும் முடியாது. அவர்கள் தேவசித்தப்படி பிழைக்கிறபடியால் அவர் சித்தமின்றி அவர்கள் தலைரோமங்களில் ஒன்றாகிலும் தரையிலே விழுவதில்லை. தேவனே அவர்களைப் பாதுகாக்கிறவர்; அவரே அவர்களுக்காகப் போராடுகிறவர். ஒருவேளை அவர்களுக்குத் தீமை நேரிட்டாலும் அதுவும் அவர்களுக்கு நன்மையாகவே இருக்கும். அவர்கள் தீமைக்குப் பதிற்றீமை செய்யமாட்டார்கள். தீமையை நன்மையாலே வெல்லவேண்டுமென்பதே அவர்கள் பிரமாணம். இதன் தத்துவத்தை ஆராய்வோம்.

1. நியாயத்தீர்ப்பு கடவுளுக்கே உரியது. "பழிவாங்குதல் எனக்கே உரியது நானே பதிற்செய்வேன்" என்று சிருஷ்டிகர்த்தா சொல்லுகிறார். அவன் என்னை அடித்தான்; அதற்காக நான் அவன் தலையை உடைத்தேன் என்னும் பேச்சு நியாயஸ்தலத்தில் செல்லாது. சர்க்கார் அதிகாரத்தை அவன் தன் கையில் எடுத்துக்கொண்ட குற்றத்துக்குள்ளாகித் தண்டனை அடைவான். ஒருவர் நமக்குத் தீமைசெய்யும்போது நாமே பதிலுக்குப் பதில் செய்வோமானால் கடவுள் ஏன் இருக்கிறார்? சகலத்தையும் நாமே நடத்துகிறதானால் அவர் நியாயாதிபதியுமல்ல, பூமியை ஆளுகிறவருமல்ல. "நானே பதில் செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நாமே பதில் செய்வோமானால் காரியம் நல்லமுடிவுக்கு வராது. முடியாத தொல்லையே அதன் பலனாகும். நமது இருதயம் கெடும், சத்துருவுடைய மனமும் கடினப்படும். கடவுள் பதில் செய்யும்போது நாவுகள் யாவும் அடங்கும். அவரை எதிர்ப்பவன் யார்? அவர் செய்வதே நீதி. மற்றவர்களுடைய கெட்ட எண்ணங்களை அறிகிறவரும், அவர்கள் துரோகப்பேச்சைக் கேட்பவரும், அவர்கள் தீமைகளைக் கவனிப்பவருமான கடவுள் நியாயத் தீர்ப்புச் செய்வாரென்று நம்பி, நாமே தீமைக்குத் தீமைசெய்யாமல் அதைப்பொறுமையாய்ச் சகித்,

துக்கொள்வதே நல்லது. ஆண்டவர் நமக்குக் காண்பித்த மாதிரி அதுவே. கூடுமானால் நாம் செய்யும் நன்மையினால் தீமையை மேற்கொள்ளவேண்டும்.

2. குற்றவாளி குற்றவாளியை நிந்திப்பதில் பிரயோஜனமில்லை. ஜெயில் கைதிகளில் ஒருவன் மற்றக் கைதிகளைப் பார்த்து: நீங்கள் என்ன அயோக்கியர், வெட்கமில்லாமல் கைகளில் விலங்கு பூண்டு இங்கே அடைபட்டுக் கிடக்கிறீர்கள் என்று தூஷித்தால் எப்படியிருக்கும்? தானும் ஒரு கைதிதானே என்பதை யோசிப்பானானால் அப்படிப் பேசுவானா? மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவர்களும் ஆக்கினைப்படுத்தப் பார்க்கிறவர்களும் தங்களை அறியாதவர்களே. ஒரு கிராமத்தில் ஒருவன் ஏதோ குற்றத்தைச் செய்ததாகச் சில மனுஷர் அவனைப் பிடித்துக் கட்டி, அவன் முகத்தில் துப்பி, அவனை அடித்தார்கள். அப்படி அடித்தவர்கள் யாரென்று பார்த்தால் சகல அக்கிரமங்களுக்கும் உறைவிடமாகிய பேர்வழிகளே. நல்லமனுஷர் தகாத செய்கையைக் கண்டு வருந்துவார்களேயன்றி மூர்க்கமாக எதையும் செய்யார்கள். குற்றஞ்செய்தவனைத் தண்டிக்கவேணும் என்பதைப் பிரதானமாகக் கருதாமல் அவனைச் சீர்ப்படுத்தும் வழியைத் தேடுவார்கள். இதுவிஷயத்தில் ஆண்டவர் போதனை தெளிவாயிருக்கிறது. "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" இதன் சம்பந்தமாக அப்போஸ்தலன் சொல்வதையும் பார்ப்போம். "மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே! நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்."



இவைகளின் தாற்பரியம் என்ன? மனுஷர் எல்லாரும் கடவுள் பார்வையில் குற்றமும் குறைவுமுள்ளவர்களே. தேவபக்தியில் எவ்வளவு தேறினாலும், கிறிஸ்துவுடன் நெருங்கி ஜீவிக்கும்போது, நமது குறைவுகள் நமக்குக் காணப்பட, எவ்வளவோ துக்கப்பட்டு நம்மைத் தாழ்த்தவேண்டியதாயிருக்கிறது. ஆண்டவருடைய மாதிரிப்படி பிழைக்கத் தீர்மானித்தவர்களுக்கே இதன் உண்மை தெரியும். கிறிஸ்துவின் பிரகாசத்தில் நம்மை இன்னும் ஆண்டுகொண்டிருக்கும் சுயசுபாவம் வெளிப்படுவதால் நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து நம்மைத் தாழ்த்துகிறோம். மற்றவர்கள் நமக்கு விரோதமாகப் பேசினாலும் நாம் அதைக் கவனிக்கமாட்டோம். அவர்கள் பேசும் தீமை நாம் நம்மை அறிந்திருப்பதைப் பார்க்கிலும் பெரிதல்ல. ஒரு தேவபக்தனை ஒருவர் குறைவாய்ப்பேசினதாக அவருக்கு அறிவித்தபோது அவர் சிரித்துக்கொண்டு: அவர் என்னை உள்ளபடி அறியாததற்காக விசனப்படுகிறேன், என்னை அவர் பேசினதைப் பார்க்கிலும் நான் அதிகக் குறைவுள்ளவன் என்று எனக்குத் தெரியும் என்று சொன்னார். தீமைக்குத் தீமை செய்ய முன்னிற்கிறவர்களும் தீமையைச் சகிக்காதவர்களும் தங்களை அறியாதவர்களே. தங்கள் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணர்ந்தால் பிறர் துரும்பின்மேல் இவ்வளவு வைராக்கியம் பாராட்டமாட்டார்கள். நமது உள்ளான தீமையை மேற்கொள்ளும் வேலையில் நாம் கவனம் செலுத்துவோமானால் பிறர் பேசும் தீமையைக் கவனிக்கவும் நமக்கு நேரமிராது. தீமைக்குத் தீமை செய்கிறவர்கள் தீமையை மேற்கொள்ளாமல் தீமையினால் மேற்கொள்ளப்படுகிறார்கள். தங்கள் உள்ளான தீமையை வெளிப்படுத்துகிறார்கள்.

3. தீயோராகிய நமக்கு தேவன் இரங்கவேண்டியதாயிருப்பதால் தீயோருக்கு நாமும் இரங்கவேண்டும். ஆண்டவர் இரக்கமும் மன்னிப்பும் எக்காலமும் நமக்கு வேண்டியதே. நமது ஜீவகாலமுழுவதிலும் அவர் நமக்குக் காண்பித்த பொறுமை தயவு எவ்வளவு! நமது பாவங்களுக்குத் தக்கதாக அவர் நமக்குச் செய்யவில்லை; நமது அக்கிரமங்களுக்குத் தக்கதாக அவர் நமக்குப் பதிலளிக்கவில்லை. மீறுதலை

மன்னிக்கிற அவருக்கு ஒப்பானவர் யார்? அவருடைய இரக்கமும் மன்னிப்பும் நமக்குக் கிடைத்திராவிட்டால் நாம் இதுவரை பிழைத்திருக்கமாட்டோம். அவருடைய நீடியபொறுமையையும் அன்பையும் யோசிக்கும்போது நமது இருதயம் நன்றியால் பொங்குகிறது. நாம் இவ்வாறு இரக்கம்பெற்றவர்களாதலால் மற்றவர்களுக்கும் இரங்கவேண்டியதே நியாயம். ஆண்டவர் சொன்ன உவமை இதற்குப் பலத்த திருஷ்டாந்தம். ஒருராஜாவிடம் ஒருவன் பதினாயிரம் தாலந்து கடன்பட்டிருந்தான். அதைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகமில்லை. அவன் தாழவிழுந்து வணங்கி: ஆண்டவனே, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று கெஞ்சினான். ஆண்டவன் மனதிரங்கி கடனை அவனுக்கு மன்னித்துவிட்டான். இவனிடத்தில் வேறொருவன் நூறுவெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தான். அவனை இவன் பிடித்துத் தொண்டையை நெரித்து: நீ பட்டகடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அந்த ஏழைமனுஷன் இவன் காலில் விழுந்து: என்னிடத்தில்பொறுமையாயிரும் எல்லாவற்றையும் உமக்குக்கொடுத்துத் தீர்க்கிறேன் என்று வெகுவாய்க் கெஞ்சினான். இவனோ அதற்குச் சம்மதியாமல் அவனைக் காவலில் போட்டான். இதைக் கேள்விப்பட்ட எஜமான் அவனை அழைத்து: பொல்லாத மனுஷனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியால் உன் பெரியகடன் முழுவதையும் மன்னித்தேன் அல்லவா? நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலையாளுக்கு இரங்கவேண்டாமா என்று சொல்லி அவன் பட்டகடனைக் கொடுக்குமளவும் வேதனைப்படுத்துகிறவர்களிடம் ஒப்புவித்தான் என்றார். பெருங்கடன் மன்னிக்கப்பெற்று, குதூகலத்தோடே போனவன் மறுபடியும் அந்தக் கடனைத் தீர்க்கும்வரை சித்திரவதை செய்வோரிடம் அகப்பட்டுக்கொண்ட காரணம் என்ன? எஜமான் தனக்கு இரங்கினதுபோல் தன் சகோதரனுக்கு இரங்க மனதில்லாததினாலே அல்லவா? "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதத்தை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார்.



மற்றவர்களுக்கு இரங்கும் குணமில்லாததினாலேயே அநேகர் மனதிலும் சரீரத்திலும் சித்திரவதைக்குள்ளாயிருக்கிறார்கள். நமது பாவக்குற்றங்களை பிதா நமக்கு மன்னிக்கவேண்டுமென்றும், ஆபத்து அவசரங்களில் அவர் நமக்கு இரங்கவேண்டுமென்றும் நாம் விரும்புகிறோமே. மற்றவர்களுக்கு இரங்கவோ மன்னிக்கவோ நமக்கு மனதில்லை. பிறரிடம் வர்மத்தையும் பகையையும் சாதிக்கிறோம். இரக்கமற்ற சுபாவம் நமக்கிருக்குமானால் நாம் அடிக்கடி சொல்லுகிற கர்த்தருடைய ஜெபத்தை நமக்கு விரோதமாகவே சொல்லுகிறோம். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். ஆண்டவர் எவ்வளவு ஞானமாய் இந்த விண்ணப்பத்தை அமைத்திருக்கிறார். பிறர் செய்யும் தீமைகளை நாம் சகித்து அவைகளை மன்னித்தாலன்றி நாம் மன்னிப்பை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. நாங்கள் மன்னிப்பதுபோல எங்களுக்கு மன்னியும் என்பது, நாங்கள் மன்னியாதிருப்பதுபோல எங்களுக்கும் மன்னியாதிரும் என்று அர்த்தமாகும். ஆண்டவர் நமக்கு எவ்வளவோ இரங்கியிருக்கிறாரே என்பதை உணரும்போது மற்றவர்களுக்கு நாம் இரங்காதிருக்கமுடியாது. இரங்கும் சிந்தை நமக்கிருக்குமானால் தீமைக்குத் தீமை செய்ய வழியில்லை.

4. தீமையைச் சகிப்பது நமது ஜீவியவளர்ச்சிக்கு அவசியம். நம்மை ரட்சித்த ஆண்டவர் தம்மைப் பின்பற்றி நடக்கும்படி அழைக்கிறார். அவரைப் பின்பற்றும்போது நமக்குப் பாடுகள் வரும். ஆண்டவர் இதைப்பற்றித் திட்டமாய் அறிவித்திருக்கிறார். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு; ஆகிலும் என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானமுண்டு." இரண்டும் கலந்ததே ஆண்டவருடைய ஜீவியம். தீமைகள் சமுத்திர அலைகள்போல் அவரை மோதி அடித்தன; அவர் இருதயமோ தேவசமாதானத்தால் நிறைந்திருந்தது. அவருடைய ஜீவனையே நாம் பிழைக்கும்போது அதே அநுபவம் நம்முடையதாகும். ஆகையால் தீமைகள் நேரிடும்போது "ஏதோ புதுமையென்று நீங்கள் நினைக்கவேண்டாம்" என்று பேதுரு சொல்லு

கிறார். கர்த்தர் நிமித்தமும் அவர் ஊழியத்தினிமித்தமும் பாடுகளை நாம் சகிக்கும்படி அழைப்புப் பெற்றிருக்கிறோம்.

தீமைகளைச் சகிப்பதால் பிரயோஜனம் என்ன? நமது ஜீவியம் பலப்படவும் அனுபவம் உண்டாகவும் ஏதுவாகும். கிறிஸ்தவ ஜீவியம் லேசானதல்ல. ஜெபக்கூட்டங்கள் ஆராதனைகள், பாட்டுகளிலே அடங்கினதல்ல. கிறிஸ்தவர்களாயிருப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறதென்று யாராகிலும் சொல்லுவார்களானால் அவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் பிரவேசித்தவர்கள் அல்லவென்பது நிச்சயம். "துன்பப்படவேண்டியது அவசியம்" என்று பேதுரு சொல்லுகிறார். கிறிஸ்தவ ஜீவியத்திலுள்ள போராட்டத்தைக் குறித்துப் பேசாத அப்போஸ்தலர் பரிசுத்தவான்கள் இல்லை. செத்தமீனுக்கு வெள்ளத்தின் பலம் தெரியாது; உயிருள்ள மீனே அதை அறியும். ஆண்டவரைத் தங்கள் தினசரி ஜீவியத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் பின்பற்ற விரும்பும் தேவமக்களுக்கே போராட்டமின்னதென்று தெரியும். கஷ்டமில்லாத ஜீவியம் குழந்தைக் கொப்பானது. அது பலவீனமுள்ளது. தாதி குழந்தையைக் கையிலெடுத்து விளையாடுவது பிள்ளைக்குச் சந்தோஷம். ஆனால் அது தானாக நடந்தோடித் திரியும் காலத்தில் தான் அதன் தேகம் பலப்படும். போராட்டமில்லாத சொகுசான ஜீவியம் பிரயோஜனமற்றது. பலத்த காற்று அடித்து மரத்தை இரக்கமின்றி அசைப்பது மரத்தின் வேர்கள் பலப்படுவதற்கு ஏதுவாயிருப்பதுபோல "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை அனுபவத்தையும், அனுபவம் நம்பிக்கையையும்" நம்மில் உண்டாக்குகின்றன. தீமைக்குத் தீமைசெய்வது கோழைத்தனம். தீமையைச் சகிப்பதும் அத்தீமையை நன்மையினால் மேற்கொள்ளுவதுமே சிறந்த தேவலட்சணம். "பட்டணத்தைப் பிடிப்பவனைப் பார்க்கிலும் தன் ஆவியை அடக்குகிறவனே பராக்கிரமன்". பாடுகளின்றிப் பொறுமை என்கிற வார்த்தைக்கு இடமேயில்லை. "பொறுமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்". நமக்குத் தீமைகள் நேரிடாமலும், தீமையைச் சகிக்காமலும் பொறுமை சாந்தம் முதலான நற்குணங்கள் உண்டாவதெப்படி? தீமை நம்மைச் சூழ்ந்துகொள்



ளும்போது, உபத்திரவம் தாங்கக்கூடாமல் ஆண்டவரிடம் நமது துயரத்தைத் தெரிவிக்கிறோம். அவர் தமது கிருபையால் நம்மைத் தாங்கிப் பலப்படுத்துகிறார். பாடுகள் நம்மைப் பாவங்களிலிருந்து விடுவித்து கிறிஸ்துவின் சாயலில் வளரச்செய்கின்றன. நாம் தீமைக்குத் தீமை செய்வோமானால் இவ்வாசீர்வாதங்களை இழந்துபோவோம்.

5. தீமைக்குத் தீமை பரிகாரமாகாது. ஒருவன் நமக்குத் தீமை செய்யும்போது அதைச் சகிக்கமுடியாமல் அவனுக்குத் தீமைசெய்ய யோசித்தால் அல்லது செய்தால் இருபட்சத்தாருக்குமே அது கேடாகும். நாம் தீமை செய்யும்போது நமக்குள் வசிக்கும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். கிறிஸ்துவின் சிந்தைக்கு விரோதமாக நடக்கிறோம். பிதாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறோம். சாத்தானுக்குக் கீழ்ப்படிகிறோம். அவன் கையைப் பலப்படுத்துகிறோம். நாம் பெற்றமக்களுக்கு கெட்டமாதிரி காண்பிக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்குச் சஞ்சலத்தை உண்டாக்குகிறோம். சபையில் பிரிவினைக்குக் காரணமாகிறோம். இத்தனை கேடுகளுக்கும் காரணமாகிய ஒரு தீமையைச் செய்துவிட்டு நமது பிதாவின் முகத்தைப் பார்த்து நாம் ஜெபிப்பதெப்படி? ஆராதனையில் பங்குபெறுவதெப்படி? ஆண்டவர் இரக்கத்தையும் அன்பையும் குறித்து மற்றவர்களுக்குப் போதிப்பதெப்படி? குடும்ப ஜெபம் நடத்துவதெப்படி? மக்களே நீங்கள் நல்ல பிள்ளைகளாயிருங்கள் என்று அவர்களுக்குப் புத்திசொல்வதெப்படி? தீமை செய்வதாலுண்டாகும் கேடுகள், சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்துவது போலிருக்கும்.

நாம் செய்யும் தீமையால் எதிரிக்காவது நன்மை உண்டாகுமா? அதுவுமில்லை. தீமைக்குத் தீமைசெய்வது கொடியதீமையாகும். தீமைக்குத் தீமை பரிகாரமாகாது. நமக்குத் தீமைசெய்தவன் நாம் அவனுக்குப்பதில் தீமை செய்தோம் என்று அறிந்தவுடனே முன்னிலும் அதிக மூர்க்கங்கொள்வான். முன்னிலும் அதிகமான தீமையை நமக்குச்செய்ய வகைதேடுவான். அதைச்செய்தே முடிப்பான். இதனால் நாம் கண்ட பலன் என்ன? நம்மையும் கெடுத்து அவனையும்

கெடுத்து நமக்கே அதிகத்தீமையைச் சம்பாதித்துக்கொள்ளுகிறோம். தேவபக்தியற்ற மனுஷர் தீமைக்குத் தீமைசெய்யவேண்டுமென்ற வைராக்கியத்தாலே துணிகரமாய் நடந்து பெரும்பாதகங்களை நடப்பிக்கிறார்கள். ஆங்காரத்தால் கொலைசெய்து, மரணத்தீர்ப்புக்குள்ளாகி, ஆஸ்தியை இழந்து, தங்கள் மனைவிமக்களைத் திக்கற்றவர்களாக விட்டுப்போகிறார்கள். நாம் அவ்வளவு தூரம் போகாவிட்டாலும் கொடிய பகை கொலைக்குச் சமானம் என்றறியவேண்டும். விரோதிகளைக் கொலைசெய்யும் தைரியம் நமக்கில்லாவிட்டாலும் அவர்கள் சாகமாட்டார்களாவென்று நினைக்கும் தீய எண்ணமும் கொலையாகும். தீமைக்குத் தீமை ஒருபோதும் பரிகாரமாகாது. "இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமற் செய்கிறார்களே" என்று ஜெபித்த ஆண்டவர் சிந்தை எப்போதும் நமது சிந்தையாயிருக்கவேண்டும்.

6. தீமைக்கு நன்மை இருபட்சத்தாருக்கும் நன்மை. பிறர் செய்யும் தீமைகளை நாம் சகித்துக்கொள்வது மாத்திரமல்ல, சமயம் வாய்க்கும்போது அவர்களுக்கு மனப்பூர்வமாய் நன்மை செய்யவேண்டும். அதட்டுதலுக்கும் அடிகளுக்கும் அடங்காத பிள்ளைகள் அன்புக்கு அடங்குவார்கள். அன்புக்கு நிகரான சக்தி இல்லை. "நீ தீமையால் வெல்லப்படாமல் தீமையை நன்மையால் வெல்லு." ஆண்டவர் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட தீமைகளைத் தமது நன்மைகளாலே வென்றார். அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் அவரை வென்றதாக நினைத்தார்கள். ஆகிலும் சில நாட்களுக்குள்ளாக அவரது ஒப்பற்ற அன்பையும், அவர் நடப்பித்த காருண்ய செயல்களையும் நினைத்து, இருதயம் நொறுங்கி, அவர் பாதாரவிந்தத்தில் விழுந்து இரக்கத்துக்காகக் கெஞ்சினார்கள். அன்பு எப்பேர்ப்பட்ட கல்நெஞ்சையும் மாற்றும். ஒரு பட்டாளத்தில் ஓர் போர்வீரன் இருந்தான். அவன் அடங்காத்துஷ்டன், அவன் அடைந்த தண்டனைகளுக்கோ கணக்கில்லை. தண்டனை பெருகப்பெருக அவன் மீறுதல்களும் பெருகின. அவன் தனக்கு மேற்பட்ட அதிகாரிகளை மதிக்கிறதில்லை. சேனை விதிகளுக்குக் கீழ்ப்படிகிறதில்லை. அவனை எப்படிச் சகிப்



யமுத்துகிறதென்று அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. இப்படியிருக்கும்போது பட்டாளமுழுமைக்கும் மேலதிகாரியான ஜெனரல் இந்தச் சேனையைப் பார்வையிட வந்தார். இந்தத் துஷ்டனுக்கு விரோதமாக அநேக பிராதுகளை அவர்முன் சமர்ப்பித்தார்கள். ஜெனரல் தமது அறையில் தனித்திருந்தபோது அவனைத் தம்மிடம் வரும்படி கட்டளையிட்டார். தனக்கு என்ன ஆக்கினை வரப்போகிறதோவென்று அவன் நடுக்கத்தோடு அந்த அறைக்குட்சென்றான். ஜெனரல் யாதொன்றும் அறியாதவர்போல் புன்சிரிப்போடு அவனைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு: அப்பா, உனக்கு விரோதமாக எத்தனையோ பிராதுகள் வந்திருக்கின்றன. நான் செய்யப்போகிறதை உனக்கு அறிவிக்கிறேன். உன் சகல குற்றங்களையும் நான் மன்னித்துவிட்டேன், நீ நல்லவனாயிரு என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் அவன் உள்ளமுடைந்து கண்ணீர் சிந்தி அழுதான். அதுமுதல் அவன் மகாயோக்கியமாய் நடந்துகொண்டான். நன்மை தீமையை வென்றதின் உண்மையை இங்கே காண்கிறோம். தீமைக்கு நாம் நன்மை செய்யும்போது கடவுள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஏனென்றால் நமது பிதா நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்யும் சுபாவமுள்ளவர். இனம் இனத்தை விரும்புவதுபோல் அவர் சிந்தை நமக்குள்ளிருக்கும்போது அவர் பிரியம் நம்மீதிருக்கும். தீமையை மறந்து நாம் நன்மைசெய்யும்போது நமக்குத் தீமைசெய்தவன் அதை உணர்ந்து தனக்குள் வெட்கப்படுவான். அவன் சீர்படவும் ரட்சிக்கப்படவும் அது ஏதுவாகும். இவ்வாறு தீமைக்கு நன்மைசெய்வது இருபட்சத்தாருக்கும் ஆசீர்வாதமாகும்.

7. தீமையைச் சகிப்பவர்கள் மற்றவர்களுக்கு மாதிரியாவார்கள். உலகம் பார்த்து நடப்பதற்கு மாதிரி வேண்டும். தீமைக்குத் தீமை செய்கிறவன் எப்படிப்பட்ட மாதிரியாவான்? அவனைப் பின்பற்றுகிறவர்கள் கெட்டுப்போவார்கள். தீமைக்கு நன்மைசெய்த ஆண்டவரோ தமது அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி நடக்கும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவரது அடியாராகிய அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும்

தங்களுக்கு நேரிட்ட சகல தீமைகளிலும் பொறுமையைக் காண்பித்து, தீமைசெய்தவர்களுக்கு நன்மைசெய்ததால் அவர்களுடைய ஜீவியத்தை எக்காலமும் நமக்குச் சிறந்த மாதிரியாக நோக்குகிறோம். ஒருவன் தீமை பாடுகளால் சூழப்பட்டிருக்கும்போது மற்ற மனுஷர் அவனைக் கவனிக்கிறார்கள். அவன் பதில் தீமைசெய்யாமல் சகலத்தையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வதையும், தீமை செய்தவர்களுக்கு அவன் நன்மை செய்வதையும் பார்க்கிற அவர்கள் அந்த ஜீவியத்தைத் தங்களுக்கு மாதிரியாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆயிரம் போதனைகளைப் பார்க்கிலும் உத்தம ஜீவியமே வல்லமையுள்ளது. நமது பேச்சைப் பார்க்கிலும் நமது மாதிரியே நமது மக்கள் மனதில் ஆழமாய்ப் பதியக்கூடியது. கிறிஸ்துவின் சிந்தையற்ற பெற்றோர் தங்கள் சட்டங்களால் மக்களை தேவபக்தராக்கலாமென்று நினைப்பது வீண்.

நாம் பிறருக்கு மாதிரியாயிருப்பதோடு, தீமைகளால் மனங்கலங்கி நிற்பவர்களை ஆறுதல்படுத்தக் கூடிய அனுபவமும் நமக்குக் கிடைக்கும். தனக்கு நேரிடும் தீமைகளை நினைத்துக் கலங்கி நிற்கும் மனுஷனிடம், தீமைக்குத் தீமைசெய்யும் சுபாவமுள்ளவன் போனால் எவ்வாறு ஆறுதல்படுத்துவான்? அவன் அந்த மனுஷன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு: இதைக்குறித்து நீ ஏன் இவ்வளவு கவலைப்படுகிறாய்? என் சொல்லைக்கேட்டு நீ இன்னின்ன பிரகாரம் செய்துவிட்டால் கட்டாயம் அவனுக்குக் கேடு வந்தே தீரும் என்று ஆலோசனை சொல்லுவான். தீய ஆலோசனைக்குச் செவிகொடுத்துத் தங்களையும் மற்றவர்களையும் கெடுத்துக்கொண்டவர்கள் அநேகர். "தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்" என்று ஆண்டவர் சொல்லியிருக்க, இந்த மனுஷனோ தீமையைத் தீமையினால் வெல்லவேண்டுமென்று ஆலோசனை கூறுகிறான். இது மனுஷரைக் கெடுக்கும் சாத்தானுடைய ஆலோசனையேயன்றி வேறல்ல. ஆனால் உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்து, தீமைகளை நன்மைகளால் மேற்கொண்ட அனுபவமுள்ள ஒருவன் அந்த மனுஷனிடம் சென்றால், அவனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவனைத் தைரியப்படுத்தி, இருவ



ரும் முழங்கால்படியிட்டு, நீதியாய் நியாயந் தீர்க்கும் பிதாவுக்குச் சகல காரியங்களையும் ஒப்புவிப்பார்கள். தீமைசெய்தவனுக்கு நல்லுணர்வுண்டாகவும், சமயம் வாய்த்தால் அவனுக்கு நன்மைசெய்யவும் வேண்டிய கிருபைக்காக ஜெபிப்பார்கள். தீமையைப் பொறுமையாய்ச் சகிப்பவர்களும் தீமைசெய்தவர்களுக்கு நன்மை செய்யும் சுபாவமுடையவர்களுமே மற்றவர்களுக்கு நல்மாதிரியாயிருப்பார்கள்.

8. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் கர்த்தரால் மாத்திரம் உறுதிப்படும். ஒருவனைத் தாழ்த்தவோ உயர்த்தவோ கூடிய அதிகாரம் அவருக்கே உரியது. தேவமக்கள் மற்ற மனுஷர் தங்களைப் புகழுகிறார்களா, இகழுகிறார்களாவென்பதைக் கவனியாமல் ஆண்டவர் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதையே யோசிப்பார்கள். தேவபக்தன் ஒருவரை பெருமாட்டி ஒருத்தி விருந்துக் கழைத்திருந்தாள். விருந்துவேளையில் அவள் அவரைப்பார்த்து: பக்திமானே, கடவுளைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர் என்று பரியாசமாய்க் கேட்டாள். அம்மா! கடவுளைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பது பெரியகாரியமல்ல, கடவுள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதே காரியம் என்றார். மற்றவர்கள் நம்மை நிந்தித்து அவமானமாகப் பேசுவதால் நமக்கு அவமானம் வந்துவிடாது. அல்லது மற்றவர்கள் நம்மைப் புகழ்ந்து பேசுவதாலே நமக்குப் புகழ்ச்சி வந்துவிடாது. ஆண்டவர் நம்மை மகிமைப்படுத்தும்போது நம்மை அவமானப்படுத்தக் கூடியவன் யார்? ஆண்டவர் நம்மைத் தாழ்த்தும்போது நம்மை உயர்த்த வல்லவன் யார்? மனுஷரால் நிந்தைகளையும் அவமானங்களையும் அடைந்த அப்போஸ்தலன் கொஞ்சமும் கலங்காமல் "கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" என்றும், "எனக்கோ ஆண்டவரால் வரும் புகழ்ச்சியே போதும்" என்றும் சொன்னார். நாம் ஆண்டவரை உறுதியாய் நம்பி, அவர் அன்பில் நிலைத்திருந்து, அவருக்குப் பிரியமானதைச் செய்யும்போது, யார் என்ன பேசினாலும், யார் என்னென்ன தீமைகளை நமக்கு விரோதமாய் நடப்பித்தாலும், அதனாலே நாம் கெட்டுப்போவதில்லை. தீமை செய்கிறவர்களைத் தீமை கெடுக்குமேயன்றி நமக்கு ஒரு சேதமும்

இல்லை. இதை நமது அனுபவத்தில் நிச்சயமாய்க் கண்டிருக்கிறோம். "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும்." எவ்வளவோ அவமானங்களும் தீமைகளும் அவருக்கு நேரிட்டபோதிலும், அவர் அவமானத்துக்குள்ளாகாமல் சர்வத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டு மேன்மையையும் மகத்துவத்தையும் அடைந்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து பின்செல்லும் அடியார் பங்கும் அதுவே. ஆகையால் நாம் தீமைக்குத் தீமை செய்யாமல் தீமையை நன்மையினால் மேற்கொள்ளவேண்டும்.

9. தீமை தீமையாக முடியாமல் நன்மையாக முடியும். கடவுள் பிள்ளைகளுக்கு நேரிடும் தீமைகள் ஒருக்காலும் தீமையாக முடியாது. "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாகத் தோன்றாமல் துக்கமாகவே தோன்றும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." தீமைகள் அவமானங்களைப் பொறுமையாய்ச் சகிப்பது லேசான காரியமல்ல. ஒருவேளை நாம் பதிலுக்குப் பதில் பேசாமலும் செய்யாமலும் இருந்தாலும் நமது இருதயம் சஞ்சலப்படாமலிருக்காது. நாம் தீமைக்குத் தீமை செய்யாவிட்டாலும் மனது வேதனைப்படும் என்பது நிச்சயம். வெளிக்குப் பொறுமையும் உள்ளுக்குள் வேதனையும். ஆகையால் இதை "சந்தோஷமாகக் காணப்படாமல் துக்கமாகத் தோன்றும்" என்று பேதுரு சொல்லுகிறார். பவுல் இதற்கும் ஒரு அடி மேலே போகிறார். நாம் பொறுமையோடு சகிக்கவேண்டும் என்பது மாத்திரமல்ல "சந்தோஷத்தோடே கூடிய பொறுமையோடு" சகிக்கவேண்டும் என்கிறார். அவ்வளவு மேலான ஜீவியத்துக்கு நாம் இன்னும் வரவில்லையே. நமதாண்டவர் "இலச்சையை அவமானமாக எண்ணாமல் தமக்குமுன் வைத்திருக்கும் சந்தோஷத்தினிமித்தம் நிந்தையைச் சகித்தார்" அவமானமும் நிந்தையும் அவரைச் சூழ்ந்துகொண்டபோதிலும் அவைகளுக்காக அவர் துக்கப்படாமல், தமது பாடுகளினாலுண்டாகும் பெரிய ரட்சிப்பை நினைத்துச் சந்தோஷப்பட்டார். நாம் பொறுமையோடு சகிக்கலாம், சந்தோஷத்தோடே சகிக்கமுடியவில்லை



யே. காரணமென்ன? தீமைகளைப் பொறுமையாய்ச் சகிக்கும்போது முடிவு நன்மையாயிருக்கும் என்பதை நாம் உணருகிறதில்லை. ஆதி முதல் சாத்தானுக்கு வேதனையான ஓர் காரியமுண்டு. அவன் கடவுள் பிள்ளைகளுக்குத் தீமை செய்யும்போதெல்லாம், தேவ ஆளுகையால் அத்தீமை நன்மையாகவே முடிகிறது. அவன் நோக்கம் தேவ மக்களிடத்தில் எப்போதும் தோல்வியே அடைகிறது. அப்படியிருந்தும் அவன் தீமைசெய்வதை நிறுத்துவதில்லை. ஆதாமை வஞ்சித்தபோது அவன் கெட்டே போவான் என்று சாத்தான் நினைத்தான். கிறிஸ்துவினாலுண்டான ரட்சிப்போ மனுஷனை முன்னிருந்த நிலைமையிலும் மேலான பதவிக்கு உயர்த்திவிட்டது. பாவத்தாலுண்டான கேட்டைப் பார்க்கிலும் பிதாவாலுண்டான சவு மகா மேன்மையுள்ளது. "பாவம் பெருகின இடத்தில் கிருபை மிகவும் ஏராளமாய்ப் பெருகிற்று" மனுஷனை உன்னத நிலைமைக்கு உயர்த்திவிட்டது. இப்படியாகும் என்று சாத்தான் நினைத்தானில்லை. நாம் செய்யும் பாவங்களைக்கூட நம் மேலான ஜீவியத்துக்கு ஏறிச்செல்லும் படிகளாகும்படி தேவன் செய்கிறார். கடவுள் பிள்ளைகளுக்கு நேரிடும் தீமைகள் ஒருக்காலும் தீமையாக முடிகிறதில்லை. யாக்கோபின் மக்களுக்குள் சாத்தான் புகுந்து யோசேப்புக்கு அநேக தீமைகளைச் செய்யும்படி ஏவிவிட்டான். யோசேப்போடு கர்த்தர் இருந்தார். யோசேப்பு கெட்டுப்போகவில்லை. அவன் எகிப்தில் மேலான பதவிக்கு உயர்த்தப்படுவதற்கு அந்தத் தீமைகளே படிகள் போலிருந்தன. யோசேப்பு தன் சகோதரரைக் கண்டபோது: "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான். தேவமக்களுக்கு இதுவே எக்காலமும் பிரமாணம். கடந்தகால அனுபவம் இதற்கு ஆதாரம். இப்போதும் நமக்குத் தீமை நேரிடுகிறதானால் அதைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்துவருவோமானால், தீமை நன்மையாக முடிந்ததென்பதைக் கண்டு சந்தோஷப்படுவோம். நமது சொந்த ஆத்துமாவுக்கு ஆசீர்வாதமாயிருக்குமானால் இந்தத் தீமைகள் நமக்கு இருமையின் வத்தனங்களாகும். ஒருவேளை நமக்கு நன்மை

போல்தோன்றுவிட்டாலும் அதினாலுண்டாகும் ஆசீர்வாதத்தை நமது சபையார் கண்டடைவார்கள். ஒருபக்கம் பாடில்லாமல் மறுபக்கம் ஆசீர்வாதமில்லை. ஆகையால் நாம் தீமைக்குத் தீமைசெய்யாமல் தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்.

தீமையைச் சகிப்பதும் தீமைக்கு நன்மை செய்வதும் நம்மால் முடியுமாவென்று கேட்கலாம். தீமைக்குத் தீமைசெய்யும் ஆத்திரம் ஜென்ம சுபாவத்துக்குரியது. நான் என்கிற உணர்ச்சியே சகல தீமைகளுக்கும் காரணம். கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக் கொண்டு அவரே நமக்குள் பிழைக்கும்படி இடங்கொடுப்போமானால், நம்மைப் பலப்படுத்தும் கிறிஸ்துவாலே சகலத்தையும் சகிக்கவும், பொறுக்கவும், மன்னிக்கவும், நன்மை செய்யவும் நமக்குப் பலமுண்டாகும். நமது சுயபலத்தால் சுயதீர்மானத்தால் காரியம் பலிக்காது. கிறிஸ்துவின் சிந்தை நமக்கில்லாமல் கிறிஸ்தவர்கள் என்னும்பேர் நமக்குத் தகாது. கிறிஸ்துமார்க்க ஆசாரங்களாலே நாம் வஞ்சிக்கப் படக்கூடாது. ஆயிரங்காரியங்களை நாம் கொண்டாடினாலும் நமது ஜீவியம் மாற்றப்படவில்லையென்றால் அவைகளால் பிரயோஜனமில்லை. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சிந்தையே கிறிஸ்துமார்க்கம்.

---

# X

# Reconciliation

# ஒப்புரவாகுதல்

"முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களை பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" கொலோ. 1. 21.

மார்க்க விஷயத்தில் மனுஷர் எவ்வளவு வாய் வேதாந்தம் பேசினாலும் நாம் அதைக்கேட்பதேயன்றி அதற்குமேல் நாம் யோசிக்கிறதில்லை. ஆனால் கடவுளைப்பற்றி ஒருவர் அனுபவமாக அறிந்ததைத் தீர்க்கமாய்ச் சொல்லும்போது அது நமது கவனத்தை நிச்சயமாய் ஆண்டுகொள்ளும். பவுல் கிறிஸ்துவைப்பற்றிய அபிப்பிராயங்களையும் உத்தேசங்களையும் வெளியிட்டவரல்ல. ஆண்டவர் தமது உள்ளத்தில் நிறைவேற்றின ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அனுபவத்தில் அறிந்தவராக அவைகளைப் பிரசங்கித்தார். "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்துக்குரிய நயவசன முள்ளதாயிராமல் ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது." "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது." "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோம் என்பதற்கு நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி" என்று திருச்சபைக்கு எழுதினார் (1. கொ. 2 : 5; 1. தெச. 1 : 5; 2 : 10).

அப்போஸ்தலனுடைய உபதேசம் அதை ஏற்றுக்கொண்டவர்களின் ஜீவியத்தை மாற்ற வல்லமையுள்ளதாயிருந்தது. மார்க்க

விஷயத்தில் அறிவாளிகளின் சுய அபிப்பிராயப் போதனைகள் சமாதான விசுவாசத்துக்குப் பங்கமுண்டாக்கும் இக்காலத்தில், உண்மையுள்ள சாட்சியாகிய பவுலுடைய போதனைக்கு நாம் செவிகொடுப்பது நல்லது. அவர் கிறிஸ்துவைக் குறித்து எவ்வளவு உன்னதமான காரியங்களைச் சொன்னாலும் அவைகளைச் சந்தேகிக்காமல் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால் அவருடைய மேலான ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் அறிவோம். அவர் வயிற்றுப் பிழைப்புக்காகவோ, சுயமகிமைக்காகவோ, பிறரை வஞ்சிப்பதற்காகவோ ஊழியஞ்செய்தவரல்ல. அவர் கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து அவர் நாமத்துக்காகப் பட்ட பாடுகளும் அவமானங்களுங்கொஞ்சமல்ல. அவர் போதனைக்கு விரோதமாக ஒருவன் பேசுவானேயானால் அவன் அவரைப்பார்க்கிலும் மேலான ஜீவியமும் ஆவிக்குரிய அனுபவமுமுள்ளவனாயிருக்கவேண்டும். அப்பொழுது நாம் அவனுக்குச் செவிகொடுக்கலாம். உலகஞானத்தையும் தன்னயமும் தற்பெருமையுள்ள மனுஷர் தங்கள் கல்விச்செருக்கினால் எதையும் துணிந்து எழுதுகிறார்கள். படிக்கும் புஸ்தகங்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பவுல் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம். அவர் போதனைகளை நாம் ஏற்றுக்கொள்ளும்போது அவருக்கொப்பான ரட்சிப்பின் அனுபவத்தை ஆண்டவர் நமக்கும் தருகிறார். தேவனுடைய ஊழியர் என்னும் பேர்கொண்ட இளமான மனுஷர் ரட்சிப்பின் அனுபவமுள்ளவர்களாக வேலைசெய்தால் திருச்சபைக்கு எவ்வளவோ ஆசீர்வாதம்!

கொலோசேயர் நிருபத்தின் மொத்தப் போதனையை அப்போஸ்தலன் இரண்டு வசனங்களில் அடக்கினார். அதாவது, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." "அவருக்குள் நீங்களும் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (2: 9, 10). மகிமையான கிறிஸ்து! அவர் மகிமையாவும் தேவனுடைய தன்மையும் பரிபூரணமுமான சித்தத்தை நாம் நிறைவேற்றும்படி திருச்சபைக்குச் சுதந்தரமாக அளிக்கப்பட்டிருக்கிறது என்பதே இந்த நிருபத்தின் மொத்தப்பொருள். அப்போஸ்தலன் இதை விளக்கிக்காட்டும்போது நமதாண்டவருடைய மூன்றுவிதமான



மகிமைகளை எடுத்துக் காண்பிக்கிறார். (1) பிதாவோடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம்" (2) சர்வசிருஷ்டிப்போடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும் கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன; எல்லாம் அவருக்குள் நிலைநிற்கின்றன." (3) திருச்சபையோடுள்ள சம்பந்தத்தின் மகிமை: "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்." இவ்வாறு கிறிஸ்துவின் மூன்றுவித மகிமைகளை விவரித்து, சர்வத்துக்கும் அவரை மகிமையாக நிறுத்துகிறார். அவரது சிலுவையையும் சர்வத்துக்கும் மத்தியாக நிறுத்துகிறார். அவர் சிலுவையும் சர்வத்துக்கும் மத்தியாக நிறுத்துகிறார். அவரது சிலுவையும் மகா விசாலம். சிலுவையில் சிலுவையாலுண்டான ஒப்புரவாகுதல் மகா விசாலம். சிலுவையாலுண்டான அறையுண்டவர் எவ்வளவு மகிமையுள்ளவரோ, சிலுவையாலுண்டான ஒப்புரவாகுதலும் அவ்வளவு மகிமையுள்ளது. அது நம்மைத் தனித்தனியாகப் பிதாவோடு ஒப்புரவாக்குகிற [illegible] பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ள [illegible] பிரசங்க வசனத்தையும் ஒப்புரவாக்கும் சர்வகார்தமாயிருக்கி[illegible] ஆராய்ந்துபார்க்கும்போது, நாம் ஒப்புரவாகவேண்டிய அவசியம்; ஒப்புரவாகும் வழி; ஒப்புரவாகும் நோக்கம் என மூன்று காரியங்களைக் காண்கிறோம்.

## 1. ஒப்புரவாகுதல் அவசியம்.

ஒப்புரவாகுதல் என்பது ஒற்றுமை, ஒருங்கு, சமாதானம், ஐக்கியம், அன்னியோன்னியம் எனப்பொருள் [illegible] இல்லாத விடத்தில் ஒப்புரவாகுதல் என்னும் பேச்[illegible] மனுஷன் கடவுளோடு ஒப்புரவாகவேண்டியது அவசியம் [illegible] என்பதை வசனத்தில் காண்கிறோம். "முன்னே அந்நியராயும் துர்க்கிரியையினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்தீர்கள்" மனுஷன் ஆவி, ஆத்துமா, சரீரமாகிய மூன்று பாகங்களுள்ளவன். அவன்

பாவஞ்செய்தபோது இந்த மூன்றிலும் கேடு வந்தது. அவன் ஆவி கடவுளை விட்டுப்பிரிந்தது; ஆகையால் அவன் கடவுளுக்கு அந்நியனானான். அவன் மனம் அந்தகாரமடைந்தது; ஆகையால் அவன் கடவுளை வெறுத்து மனதிலே சத்துருவானான். கடவுளை விட்டுப்பிரிந்த ஆவி அவன் சரீரத்தை ஆளுவதால் அவன் கிரியைகள் துர்க்கிரியைகளாயின. பிரிவு, பகை, பொல்லாங்கு ஆகிய மூன்று தீமைகளும் பாவத்தின் பலனாக வந்தன.

முதலாவது அந்நியர். பாவம் மனுஷனை தேவ ஐக்கியத்திலிருந்து பிரித்ததால் அவன் கடவுளுக்கு அந்நியனானான். ஒருவன் தேச துரோகியாகும்போது அவனைத் தேசத்துக்குப் புறம்பாக்குவது போல, மனுஷன் பாவஞ்செய்தபோது தேவன் அவனைத் தமது சமூகத்திலிருந்து அகற்ற வேண்டியதாயிற்று. கடவுள் எங்குமிருப்பதால் அவர் சமூகத்துக்கு மனுஷன் எப்படி விலகமுடியும் என்று கேட்கலாம். இங்கே சமூகத்தைவிட்டு விலக்கினாரென்பது அவரோடுள்ள பாக்கியமான ஐக்கியத்திலிருந்து நீக்கினார் என்பதே கருத்து. அவன் தேவ ஐக்கியத்தை இழந்தபோதிலும் தோட்டத்திற்குள்ளேயே இருந்துகொள்ளலாமென்று நினைத்தான். கர்த்தரோ அவனைத் தோட்டத்தைவிட்டு வெளியே போகும்படி செய்தார். இது அவர் கோபத்தால் செய்ததல்ல. பரிசுத்தர் பாவத்தோடு அந்நியோன்னியமாய் இருக்கமுடியாது. பாவிமேல் கடவுள் கிருபையுள்ளவராயிருந்தபோதிலும் அவனிடத்தில் பாவம் இருக்கும்வரை அவர் அவனோடு ஐக்கியமாயிருப்பது முடியாதகாரியம். தேவ ஐக்கியத்தை இழந்த இஸ்ரவேலரைக்குறித்து: "உங்கள் பாவங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவே பிரிவினையை உண்டாக்கியிருக்கிறது" என்று தீர்க்கதரிசிகள் சொன்னார்கள். இது எக்காலமும் உண்மையே. பாவத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்தவர்கள் பரமபிதாவுக்கு அந்நியரே. நாம் ஜெபிக்கலாம், பாடலாம், பிரசங்கிக்கலாம், ஆலயம் சென்று ஆராதிக்கலாம். ஆனால் நமக்குள் பாவமிருக்கும்வரை ஆண்டவருக்கும் நமக்கும் ஐக்கியமில்லை என்பது நிச்சயம். பரமபிதாவின் ஐக்கியத்தில் நாம் பிழைக்கிறோம் என்கிற நிச்சயம் நமக்கில்லா



திருக்கும்போது கிறிஸ்தவர்கள் என்னும் பெயரால், நாம் நிறைவேற்றும் ஆசாரங்களால் நமக்குப் பிரயோஜனமென்ன?

இரண்டாவது மனதிலே சத்துருக்கள். கடவுள் ஐக்கியத்திலிருந்து பிரிந்ததின் பலனாக மனதில் பகை உண்டாகிறது. பரிசுத்த தேவன் பாவத்தோடு ஒருக்காலும் சமாதானமாகமாட்டார். பாவத்தை அவர் நித்திய பகையாய்ப் பகைக்கிறார். மனுஷனோ பாவத்தால் வஞ்சிக்கப்பட்டுப் பாவவழியில் நடக்கிறான். நாம் பாவிகள், அவர் பரிசுத்தர் என்னும் அறிவு நமது மனதில் பகையை உண்டாக்குகிறது. நாம் விரும்புகிற பாவத்தை அவர் வெறுப்பதாலே நாம் அவரை வெறுக்கிறோம். வேறே காரணமில்லை. அவர் நமது பாவத்தைப் பகைக்கிறவர் என்னும் அறிவே நாம் அவரைப் பகைக்கும்படி செய்கிறது. அவரை நினைப்பது நமக்குச் சங்கடமாயிருக்கிறது. ஒழுங்கீனமான பையன் கண்டிப்பான உபாத்தியாயரைப் பகைத்து வெறுக்கிறான். பொல்லாத காயீன் நல்ல ஆபேலைப் பகைத்துக் கொன்றான். துஷ்டரான யாக்கோபின் மக்கள் நீதிமானான யோசேப்பைத் துன்பப்படுத்தினார்கள். கலகக் குணமுள்ள யூதர், சாந்தகுணமுள்ள கிறிஸ்துவைப் பகைத்துக்கொன்றார்கள். தீமை எக்காலமும் நன்மையைப் பகைக்கும். பொல்லாங்கு செய்கிறவன் ஒளியைப் பகைக்கிறான். ஆகவே பாவத்தில் நிலைத்திருக்கும் மனுஷர் தேவ பகைஞராயிருக்கிறார்கள். கடவுளின் பரிசுத்த தன்மையை அறியாததினாலே அநேகர் தேவதாபக்தியுள்ளவர்கள்போல் தோன்றலாம். பாவத்தை அவர் முழுப்பகையாய்ப் பகைக்கிறவர் என்று அறிந்தவுடனே அவர்கள் தேவதாபக்தி பறந்துபோகும். அநேகருக்கு கடவுளோடு தனித்துப்பேச ஏன் பிரியமில்லை? பாவமே அதற்குக் காரணம்.

மூன்றாவது துர்க்கிரியைகள். தேவ ஐக்கியத்தைவிட்டு நாம் பிரிந்து, நமது மனது கடவுளை வெறுக்கும்போது, நம்மிடத்தில் நற்கிரியைகள் காணப்படுவது கூடாதகாரியம். மரம் நல்லதென்றால் அதன் கனிகள் நன்றாயிருக்கும்; மரம் கெட்டதானால் கனிகளும் கெட்டதாகவேயிருக்கும். மனுஷருக்குள் இவை நற்கிரியைகள்,

இவை துர்க்கிரியைகள் என்று பேசப்படுவதுண்டு. நமது பார்வையில் அவைகள் அவ்வாறு தோன்றலாம். கடவுள் இருதயத்தை ஆராய்கிறவர். அவரோடு ஐக்கியமில்லாமலும் மனதிலே அவரை விரும்பாமலும் இருக்கிற மனுஷர் செய்யும் கிரியைகள் எப்படி நற்கிரியைகளாயிருக்கக்கூடும்? அவை தகாத நோக்கத்தோடும், தன்னயத்தோடும், சுயமகிமைக்காகவும் செய்யப்படுவதால் அவைகள் துர்க்கிரியைகளே. இதுவே பாவியின் நிலைமை. அவன் கடவுளைவிட்டுப் பிரிந்து அவருக்கு அந்நியனானான். அவர் பாவத்தைப் பகைக்கிறவர் என்னும் அறிவால் மனதிலே அவருக்குச் சத்துருவானான். இவ்வாறு ஆவியில் பிரிவும் மனதில் பகையும் உண்டானபடியால் அவன் செய்கைகள் துர்க்கிரியைகளாயின. இப்படியிருக்க நாம் பரிசுத்த கடவுளோடு ஒப்புரவாகிறதெப்படி?

## II. ஒப்புரவாகும் வழி.

பாவத்தால் மனுஷன் கடவுளைவிட்டுப் பிரிந்தபோதிலும் அவனை அப்படியே விட்டுவிட அவருக்கு மனம் வரவில்லை. அவர் அன்பும் கிருபையுமுள்ள பரமபிதா. ஆகையால் தமது குமாரன்மூலமாய் நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக்கொள்ளச் சித்தமானார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். மாம்ச சரீரம் என்பது கிறிஸ்துவை நமக்குக் காண்பிக்கிறது. அவர் சரீரத்தில் வந்தவுடனே சிலுவையில் மரிக்கவில்லை. தாம் பூமியில் நிறைவேற்றவேண்டிய சகல கிரியைகளையும் முடித்தபின்பே தமது சரீரத்தைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். ஆண்டவர் ஜீவியத்தில் சிலுவை கடைசிக் காரியம். ஆகையால் நம்மை ஒப்புரவாக்கும்படி வந்தவர் எப்படிப்பட்டவரென்பதை முந்திக் கவனிக்கவேண்டும். இவருக்கும் மற்ற மனுஷருக்கும் உள்ள வித்தியாசமென்ன? சற்றுமுன் நாம் கவனித்தபடி நமது பாவத்தால் நாம் கடவுளைவிட்டுப் பிரிந்து அவருக்கு அந்நியரானோம். கிறிஸ்துவோ பிதாவின் பூரண அன்பிலும் ஐக்கியத்திலும் இடைவிடாது பிழைத்தவர். நாம் மனதிலே கடவுளுக்குச் சத்துருக்களானோம். இவரோ தமது பிதா



வைப் பூரணமாய் நேசித்து எப்பொழுதும் அவருக்குப் பிரியமாய் நடந்தவர். நாம் துர்க்கிரியைகளுக்கு ஆளானோம். இவரோ எங்கும் எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மைசெய்கிறவராகவே யிருந்தார். பிரிவு, பகை, பொல்லாங்கு நமது பங்காயிற்று. ஐக்கியம், அன்பு, நற்கிரியை அவர் பங்காயிற்று. ஆகையால் அவரை நம்மோடு ஒப்பிட முடியாது. பார்க்கும்போது அவர் நம்மைப்போல் ஒரு மனுஷன். ஆனால் அநுபவத்தில் அவருக்கும் நமக்கும் எவ்வளவோ தூரம்! அவர் பரிசுத்தர்; நாம் பாவிகள். நாம் பிரிக்கப்பட்டவர்கள், மனதிலே சத்துருக்கள், துர்க்கிரியைகளை நடப்பித்தவர்கள். அவரோ பிதாவின் ஐக்கியத்தில் பிழைத்தவர், மனதிலே அன்பர், கிரியைகளில் நன்மை செய்தவர். மரணத்துக்கு முன்னுள்ள கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பார்க்கும்போது இதுவே நாம் காண்கிற காரியம்.

இன்னும் நாம் ஒப்புரவாகிற வழியைக் காணோம். ஏனென்றால் சிலுவைக்கு முன்னுள்ள அவரது ஜீவியத்தை நாம் மாதிரியாக விரும்பலாம். அவரைப்போல் நாமும் பிழைத்தால் நல்லதே என்று நினைக்கலாம். ஆகிலும் அவரது ஜீவியம் உபதேசம் கிரியைகளால் நாம் ஒப்புரவாகும் வழியைக் காண்பதில்லை. அவரது ஜீவியம் கடவுளோடு நாம் ஒப்புரவாகலாம் என்னும் நம்பிக்கையை அழித்து, இன்னும் அதிகத் தூரத்தில் விலகிப்போகும்படி செய்கிறது. "ஐயா, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போய்விடும்" என்றே சொல்லவேண்டியதிருக்கும். ஏனென்றால் அவரது மாசற்ற பரிசுத்த ஜீவியம் என் பாவஜீவியத்தைக் கண்டித்து என்னை வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறது. அவரது உபதேசம் என்னைக் குற்றவாளியாக்கி ஆக்கினைக்குள்ளாக்குகிறது. அவரது நற்கிரியைகள் என் துர்க்கிரியைகளைக் கண்டித்து என்னைக் கலங்கச் செய்கின்றன. அவரைப்போல் நான் ஜீவிக்கமுடியாது. அவர் உபதேசங்களைக் கைக்கொண்டு நடக்கமுடியாது. அவரைப்போல் நற்கிரியைகளைச் செய்யவும் முடியாது. இப்படியிருக்க நான் எப்படி கடவுளோடு ஒப்புரவாகிறது? ஆகையால் "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

ஆண்டவரின் ஜீவியம் உபதேசம் சற்கிரியைகளை அனுகரிய மென்று நாம் ஒருக்காலும் சொல்லுகிறதில்லை. அவர் வெளிப்பட்டதின் பலனாக கடவுளுடைய அளவில்லாத இரக்கத்தையும் அன்பையும் அறியலானோம். அவர் வெளிப்பட்டதினாலே நாம் பாவத்தால் எவ்வளவு சீர்கெட்டுப்போயிருக்கிறோமென்றும், கடவுளுக்குமுன்பாக நாம் எப்படிப் பிழைக்கவேண்டியவர்கள் என்பதையும் அறிந்துகொண்டோம். ஆனால் நமது பாவத்தை நீக்குவதற்கும், அவர் மாதிரியைப் பின்பற்றுவதற்குச் சக்தி ஒன்றும் உண்டாகவில்லை. இந்நிலையில் கடவுளோடு ஒப்புரவாகிறது எப்படி? இதை உணராமல் அவர் மாதிரிபோதும், அவர் உபதேசம்போதும் என்று பேசுகிறவர்கள் அநேகர். இவர்கள் கிறிஸ்துவைச் சிறந்த போதகரென்று அழைக்கிறார்கள். அவரது ஜீவிய மாதிரியும் அவர் உபதேசமும் தங்கள் சீர்கேடுகளை வெளியாக்கித் தங்களை ஆக்கினைக்குள்ளாக்குகிறதென்பதை இவர்கள் அறிகிறதில்லை. ஆகையால் அவர்கள் கிறிஸ்துவைப்போல் நடக்கப் பார்க்கிறோம் என்பதும், அவர் உபதேசத்தைக் கைக்கொள்ளுகிறோம் என்பதும் உண்மையல்ல; வெறும் பேச்சு. ஆண்டவர் சரீரத்தில் வெளிப்பட்டது நமக்கு அதிகத் துயரத்தையும் மனச்சோர்பையும் உண்டாக்கினதேயன்றி தேவ ஐக்கியத்தை உண்டாக்கவில்லை.

அவர் மரித்தார். பரிசுத்த மாதிரி காண்பித்ததும், சிறந்த உபதேசம் செய்ததுமான தமது சரீரத்தைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். இது தற்செயல் அல்ல. [illegible]லும் அவர் எதிர்பார்த்திருந்த ஸ்நானம் அதுவே. நாம் கடவுளோடு ஐக்கியப்படுவதற்கு தமது மரணம் அவசியம் என்பதைத் திட்டமாய் அறிவார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்." "இயேசுகிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபி 10:10). அவரது ஜீவியம் உபதேசத்தால் நாம் கடவுளோடு ஐக்கியப்படக் கூடுமென்பது உண்மையானால், அவர் மரணத்தைப்போல் அநியாயமும்கொடுமையுமானது வேறொன்



றுமில்லை. ஏனென்றால் பிதாவிடம் இவ்வளவு ஐக்கியமும் அன்பும் பூரண கீழ்ப்படிதலுமுள்ளவரை, சாகும்படி சத்துருக்களின் இஷ்டத்துக்கு விட்டுவிடுகிறதாயிருந்தால், அது கடவுள் வல்லமைக்கும் ஞானத்துக்கும் அன்புக்கும் மகா குறைவாகும். அவர் ஜீவியம் உபதேசத்தால் ஒப்புரவாகுதல் கிடைக்கக் கூடுமானால் அவர் மரித்தது அனாவசியமும் வீணுமாகும். மேலும் சத்துருக்கள் தங்கள் இஷ்டப்படி அவரைப் பிடித்துக் கொன்று போட்டார்கள் என்பதுமாத்திரம் அவர் மரணத்தின் கருத்தாயிருக்குமானால், கடவுள்மேல் நாம் நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவில்லை. அவரது நீதி அன்பைப் பற்றி நாம் சந்தேகிப்போம். ஏனென்றால் மனுஷனைப் பற்றிய தேவ சித்தத்தைப் பூரணமாய்த் தமது ஜீவியத்தாலும் கிரியைகளாலும் நிறைவேற்றி, சகல காரியங்களிலும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்த அவரை மகிமைப்படுத்தினவரை கடவுள் காப்பாற்றாமல், சத்துருக்களின் இஷ்டத்துக்கு விட்டுவிட்டாரேயானால் நாம் அவரை எப்படி நம்பக்கூடும்? "இவன் தேவனை நம்பியிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை ரட்சிக்கட்டும்" என்று சத்துருக்கள் செய்த பரியாசம் உண்மையாகும். ஆகையால் இந்த மரணத்தில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். அந்த விசேஷத்தை பேதுரு கொஞ்சம் விளக்கிக் காட்டுகிறார். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியும் அவர் முன்னறிவின்படியும் ஒப்புக்கொடுக்கப்பட்ட இயேசு." கடவுளைவிட்டு நம்மைப் பிரித்த பாவத்தை நீக்கவும், பகையைச் சிலுவையினால் கொல்லவும், பிதாவோடு நமக்கு ஐக்கியத்தை உண்டாக்கவும், தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான வழியை உண்டாக்கவும், அவர் தேவசித்தத்தின்படியே சிலுவைக்குப் போனார். தமது மரணத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் ஒப்புரவாகுதலையும் தேவ ஐக்கியத்தையும் நினைத்து, அவமானத்தை எண்ணாமல் சிலுவையை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு மரித்தார். "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்."

அந்த மரணத்தின் விசேஷமென்ன? இருபக்கத்துச் சிலுவைகளில் கள்ளர் மரித்ததுபோல் மரித்தாரோ? தமது சரீரத்தைவிட்டு ஜீவன் போய்விடுமே என்பதைக் குறித்துத்தான் அவர் நெடுகிலும் கலங்கினாரோ? தம்மைச் சிலுவையிலறைந்து கொன்று விடுவார்கள் என்பதை நினைத்துத்தான் தோட்டத்தில் திகிலடைந்தாரோ? மிகுந்த வியாகுலப்பட்டு ரத்த வேர்வை சிந்தினாரோ? என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்று புலம்பினாரோ? இந்த மரணமாகிய வேளை தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டுமென்றுதான் பிதாவைநோக்கி வேண்டிக்கொண்டாரோ? உயிர் போய்விடுமே என்று பயந்துதான் கீழேவிழுந்து கண்ணீர்விட்டு அழுதாரோ? ஆண்டவர் சிலுவையில் அடைந்த மரணம் அதுவாயிருந்தால் அவர் இவ்வளவு பயந்து நடுங்கவேண்டியதென்ன? எத்தனையோ மனுஷர் தைரியமாக சாந்தமாக மரித்திருக்க உலகரட்சகன் இவ்வளவு பயந்து கலங்குவானேன்?

தமது சரீரம் கொல்லப்படுவதற்கு ஆண்டவர் பயந்தவரல்ல. சரீரத்தைக்கொல்லுகிறவர்களுக்குப் பயப்படக்கூடாதென்று அவர் தமது சீஷர்களுக்குச் சொன்னார். அவர்களும் பயப்படவில்லை. அவரைச் சிலுவைவரை எவ்வளவோ கொடியபாடு படுத்தினார்கள். சித்திரவதை செய்து அவர் ரத்தத்தை ஏராளமாய்ச் சிந்தினார்கள். ஏறக்குறைய அவர் உயிரே அவரைவிட்டு நீங்கினதுபோலாயிற்று. ஆண்டவரோ கொஞ்சமாகிலும் கலங்கவில்லை, கண்ணீர்விட்டு அழவில்லை. தமது ஜீவன் போய்விடுமே என்று எவ்வளவேனும் அவர் பயந்தவரல்ல. "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளுக்குள்ளே எழுப்புவேன்" என்றும், "என் ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு" என்றும் கர்ச்சித்தவர் அவர். தமது சீஷர்களிடத்தில் எருசலேமுக்குப்போய்த் தாம் சிலுவையில் அறையப்படவேண்டுமென்றும் ஆனால் மூன்றாம் நாளில உயிரோடெழும்பி விடுவதாகவும் உறுதியாய்ச்சொன்னார். தமது சரீரம் கொல்லப்படும் விஷயத்தில் பயமோ திகிலோ ஒன்றும் அவர் காண்பிக்கவில்லை. ஆகிலும் அவர்



பயந்து நடுங்கின மரணம் ஒன்றுண்டு. அதுவே உலகத்தின் ரட்சிப்புக்காக அவர் சிலுவையில் சகித்த மரணம். மனுமக்களில் அவர் ஒருவரே அந்த மரணத்தை அனுபவித்தவர். "கிறிஸ்துவே மரித்தவர்" என்றும், "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" என்றும், "ஒவ்வொருவருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்" என்றும், "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்" என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். ஆண்டவர் மரணம் என்று சொன்னபோதெல்லாம் அவர் கருத்து வேறே. சரீரத்தைவிட்டு ஜீவன் பிரிவதே மரணமானால் "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் மரிப்பதில்லை" என்று சொன்னாரே. விசுவாசிகளில் மரிக்காதிருந்தவர்கள் யார்?

சரீரத்தை விட்டு உயிர் நீங்குவதை ஆண்டவர் நித்திரை என்று போதித்தார். அதை அவர் மரணம் என்று சொல்லவில்லை. ஆண்டவர் சகலமும் முடிந்தது என்று கண்டபோது மற்ற மனுஷரைப் போலவே தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். அவர் நித்திரையடைவதற்கு முன்னே மரணத்தை அனுபவித்தார். அந்த மூன்றுமணிநேரமும் அவர் தமது ஆத்துமாவில் அடைந்த போராட்டத்தை மனுஷன் அறியமாட்டான். "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அவர் சொன்னவார்த்தைகள் நடந்த காரியத்தைக்கொஞ்சம் நமக்கு வெளிப்படுத்துகின்றன. கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்ட மனுஷன் உலகத்தில் ஒருவனுமில்லை. நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, நமக்காகப் பாவமான ஆண்டவர் பாவத்தின் பலனாகிய கொடிய மரணத்தை, அதாவது கடவுளை இழந்து தவிக்கும் நிலைமையைத் தமது ஆத்துமாவில் அனுபவித்தார்.

அவர் மரணத்தின் ரகசியத்தை நாம் அறிந்துகொண்டவர்கள் அல்ல. அவர் மரணத்தை அறியுமுன் மரித்தவர் இன்னாரென்பதை முற்றி அறியவேண்டும். நாம் முன் கவனித்தபடி "அவர் அநாதி சனமான தேவனுடைய தற்சொரூபம்." "உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை." சகலமும் அவரைக்கொண்

டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." சர்வத்தையும் ஓர் பூர்ண ஒற்றுமைக்கு நடத்திக் கொண்டுபோகும் ஆண்டவர் அவர். அவர் மரித்தார். ஆள் நமது புத்திக்கு எட்டாதிருப்பது போல அவர் மரணமும் நமது புத்திக்கு எட்டவில்லை. ஆகிலும் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவர் மரணத்தின் பலனாகிய நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

ஆண்டவர் தமது மரணத்தால் சம்பாதித்த ஒப்புரவாகுதல் மகா விசாலமானது. "பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய காணப்படுகிறதும் காணப்படாததுமான சகலமும்" அவருக்குள் ஒப்புரவாக்கப் படவேண்டும். பாவிகளான நமக்குத்தானே ஒப்புரவாகுதல் அவசியம்; நமக்காகத்தானே கிறிஸ்து மரித்தார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் நமது பாவம் கடவுள் முதற்கொண்டு சர்வசிருஷ்டிப்புகளிலும் குழப்பத்தை உண்டாக்கினதென்பதை நாம் அறியவேண்டும். அன்புள்ள பிதாவின் உள்ளம் நமது பாவத்தால் வேதனையடைந்தது. தேவதூதர்கள் நம்மைப்போல் பாவிகள் அல்லவென்றாலும், நமது பாவம் அவர்களுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தில் குழப்பத்தை உண்டாக்கினது. பாவியின் மனந்திரும்புதல் அவர்களுக்குச் சந்தோஷமானால் அவன் கெட்டிருப்பது அவர்களுக்குத் துக்கமல்லவா? சாபத்துக்குள்ளான சிருஷ்டிப்புக்கும் விமோசனம் வேண்டும். சிலுவையின் வெற்றியால் சகலமும் ஒற்றுமைப்படும். கிறிஸ்துவின் சிலுவை நம்மில் உண்டாக்கும் மாறுதல் மாத்திரமல்ல அது சகலத்திலும் நடப்பிக்கும் முடிவான வெற்றியைக் காணும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கும். தேவனுடைய பிள்ளைகளான நாம் இப்போதே அந்த ஒப்புரவாகுதலின் பலனை அனுபவிக்கிறோம். கடவுளைவிட்டுப் பிரிக்கப்பட்டிருந்த நாம் அவரைப் பிதாவாகக் கண்டு அவரோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம். மனதிலே சத்துருக்களாயிருந்த நாம் முழுமனதோடு அவரில் அன்புகூருகிறோம். சரீரத்தில் துர்க்கிரியை நடப்பித்த நாம் அவர் ஆவியின் பலத்தால் நற்கிரியைகளைச் செய்கிறோம். இந்த அனுபவம் சகலமும் கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாகும் காலம்வரும் என்கிற நிச்சயத்தை நமக்குத்தருகிறது.



## III. ஒப்புரவாகும் நோக்கம்.

இப்போது கிறிஸ்துவின் மூலமாய் பிதாவின் ஐக்கியத்தில் நாம் பிழைப்பது உண்மையாகிலும் நமது ஐக்கியம் பூரணமுள்ளதல்ல. எத்தனையோ விஷயங்களில் தவறுகிறோம். நினைவிலும் வாக்கிலும் செய்கையிலும் எப்பொழுதும் இடைவிடாமல் பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்யமுடியவில்லையே என்னும் துக்கம் நமது மனதிலிருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையில் பிழைக்க விரும்புகிறவர்களுக்கே இதன் உண்மை தெரியும். நாட்களெல்லாம் மனம்போல் நடந்துகொண்டு ஞாயிறு ஒருமணிநேரம் ஆராதனைக்குப்போவதே போதும் என்றிருப்பவர்கள் என்ன அறிவார்கள்? தேவபக்தர்கள் எப்பொழுதும் கிறிஸ்துவோடு ஜீவிக்க விரும்புவதால் தங்கள் குறைவுகளைக் காண்கிறார்கள். "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நமது சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" என்று பரிசுத்த அப்போஸ்தலன் சொன்னார். ஒப்புரவாகுதலின் பூரண ஆசீர்வாதம் இனி வருகிறதாயிருக்கிறது. அதைக்குறித்து அப்போஸ்தலன்: "உங்களைப் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப் படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்திலே அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்கிறார்.

ஒப்புரவாகுதலின் முடிவான நோக்கம் கர்த்தருக்குப் பிரியமான ஜீவியம். அநேகர் இதை யோசிக்கிறதில்லை. பாவமன்னிப்புக்காக மாத்திரம் சிலுவையை நோக்குகிறார்கள். கிறிஸ்துவின் மூலமாய் பிதாவோடு ஐக்கியப்பட்டு அவருக்குப் பிரியமான குமாரர் குமாரத்திகளாக நாம் பிழைப்பதே சிலுவையின் முடிவானநோக்கம். இந்த நோக்கத்தோடே நாம் ஜீவிக்கவேண்டும். ஆண்டவர் தமது ஆவியினால் நமக்குள் வசிக்கும்போது அவர் சிந்தை நமக்குண்டாகும். இதுவே ஆவியினால் உள்ளாக உண்டாகும் மறுரூபம். பொருளாசையும், உலக நேசமும், பொறாமை, பெருமை, பகை, தீமைசெய்யும்

சுபாவமும் கிறிஸ்துவில் காணமுடியாது. இப்படிப்பட்ட குணங்கள் நம்மிலிருக்குமானால் நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களல்ல. அன்புள்ள பிதாவோடு ஒப்புரவானவர்கள் அல்ல. பிதாவோடு ஐக்கியப்பட்டு அவர் சிநேகத்தை அனுபவிப்பது நமது கிறிஸ்தவ ஜீவிய வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கவேண்டும். நாம் நாளுக்குநாள் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் அவர் சாயலுக்கொப்பாக மாறவேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கிற நோக்கம் இதுதான். இவ்வாறு பல போராட்டங்களின் மத்தியில் அவர் சாயலுக்கொப்பாக வளருவது மெய்யானால் அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருப்போம் என்பது நிச்சயம். "பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும்" ரட்சிப்பின் பூரண ஆசீர்வாதத்தைப் பெற்று அருமைப் பிதாவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம்.

இந்த ஒப்புரவாகுதலுக்கு கிறிஸ்துவின் மரணம் அவசியமா? அன்புள்ள கடவுளுக்கு கிறிஸ்துவின் மரணமில்லாமல் நம்மோடு ஒப்புரவாக முடியாதோ? அவரைப் பாடுபடுத்தி மரணத்திற்குள்ளாக்கின பின்புதான் அவர் கோபந்தீர்ந்து ஒப்புரவாக மனம் வந்ததோ? பழிக்குப் பழி வாங்கின பின்புதான் அவர் சமாதானமாவாரோ? இது போன்ற கேள்விகள் காலத்துக்காலம் கேட்கப்படுகின்றன. நாம் கற்றுக்கொண்ட வேதசாஸ்திரமும் இக்கேள்விகளுக்குக் காரணமாகும். நீதியுள்ள கடவுள் பாவிகளைத் தொலைப்பதற்குக் கச்சைகட்டிக்கொண்டிருந்தது போலவும், கிறிஸ்து நடுவில் விழுந்து நமக்காகப் பரிதபித்து, கடவுள் தண்டனையைத் தாம் ஏற்றுக்கொண்டு அவரைச் சாந்தப்படுத்தினது போலவும் பேசுவாருண்டு. இது முழுவதும் காரியம் அறியாத பேச்சு. கிறிஸ்து மரித்ததினாலே கடவுள் நம்மில் அன்புகூராமல், கடவுள் அன்பாயிருந்ததினாலேயே கிறிஸ்து மரித்தார். மேலும் கடவுளே கிறிஸ்துவுக்குள்ளிருந்து இந்த ஒப்புரவாகும் வழியை உண்டுபண்ணினார். ஒப்புரவாகுதல் நம்மால் உண்டானதல்ல. பிதாவாகிய கடவுளே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி, இந்த நற்செய்தியை உலகத்துக்குத் தெரிவித்தார். கிறிஸ்து



வில் நாம் காண்கிற சகல கிரியைகளும் பிதாவினுடையவைகளே. கடவுள் நம்மேல் கோபமாயிருந்தார்; கிறிஸ்து நம்மேல் அன்பாயிருந்தாரென்று நாம் ஒருக்காலும் பேசக்கூடாது. நாம் கிறிஸ்துவில் காண்கிற அன்பு பிதாவின் அன்பே. கிறிஸ்துவில் வெளிப்பட்ட கிருபை கடவுள் கிருபையே. கிறிஸ்து பட்டபாடுகள் பிதாவின் பாடுகளே. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ஆகையால் கடவுள் நம்மேல் வைத்த தமது கோபத்தை கிறிஸ்துவின்மேல் வைத்து, அவரைத் தண்டித்து விட்டபடியால் நம்மோடு ஒப்புரவாகக் கூடியவரானார் என்று நாம் பேசக்கூடாது.

பாவம் தேவ ஆளுகைக்கு விரோதம். பாவம் இருக்கும் வரையில் பிதாவுக்கும் நமக்கும் ஐக்கியமிருக்காது. பாவம் ஆக்கினைக்குள்ளாகி அகற்றப்படவேண்டும். உலகத்தின் மனுமக்கள் பாவத்துக்கு அடிமைகளானதால் அவர்களால் பாவம் நீங்காது. கடவுளே அதை நீக்கினால் அல்லாமல் அது நீங்காது. பாவத்தால் நாம் தேவனுக்குச் சத்துருக்களானது அவருக்குச் சொல்லமுடியாத சஞ்சலம். ஆகையால் அவர் தமது குமாரன் மூலமாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளச் சித்தங்கொண்டார். கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு மனுக்குலத்தின் பிரதிநிதியானார். பரிசுத்த ஆண்டவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி நமது பாவத்தை ஏற்றுக்கொண்டார். பாவம் எங்கேயோ அங்கே மரணம் உண்டு. பாவத்தால் விளைந்த பிரிவினை, பகை, பொல்லாங்கு ஒழியவேண்டுமானால் பாவம் அழிக்கப்படவேண்டும். சத்துருவோடு நேருக்கு நேர் போராடி வெற்றியடையும்படி வந்த வீரன் அவர். அவர் ஏற்றுக்கொண்ட போரின் கொடுமையை நாம் அறிந்தவர்களல்ல. அவர் மரணத்தை ஏற்றுக்கொண்டு தமது மரணத்தாலே மரணத்தை அழித்து, பகையைச் சிலுவையினால் கொன்று, நாம் பிதாவிடம் சேரும் திறந்த வழியை உண்டாக்கினார். நாம் பாவமன்னிப்பையும் பிதாவோடு ஐக்கியத்தையும் பெற்றுக்

கொள்ள கிறிஸ்து வழியானார். வேறு வழியிருக்குமானால் கடவுள் அப்படிச் செய்யாதிருக்கமாட்டார். இதுவே அன்பும் நீதியுமுள்ள பிதாவின் இருதயத்திற்கு ஏற்றவழி. இந்த ஒப்புரவாகுதலை நாம் நமது அனுபவத்தில் கண்டு பாவிகளைத் தம்மிடம் சேர்த்துக்கொண்ட அன்புள்ள பிதாவைத் துதிக்கிறோம். நாம் அவரோடு ஐக்கியமாகும் படி அவரது அன்பின் கரம் கிறிஸ்துவுக்குள் நீட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிதான கிருபையை அசட்டை பண்ணுகிறவன் தன்னைத்தானே அழிவுக்குரியவனாக்கிக் கொள்ளுகிறான்.

---

# XI
# Humility
## மனத்தாழ்மை

"மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" 1. பேது. 5:5.

கிறிஸ்தவ லட்சணங்களில் மிகச் சிறந்தது மனத்தாழ்மை. மனத்தாழ்மை எவ்வளவு அவசியம் என்பது இன்னும் நமக்குத்தெரி யவில்லை. இது பிரதானமாகப் போதிக்கப்படுவதுமில்லை. போத கர்மார் தங்கள் சபையாருக்கோ, பெற்றோர் தங்கள் மக்களுக்கோ, உபாத்திமார் தங்கள் மாணாக்கருக்கோ, உபதேசிகர் தங்கள் உபதேசி ருக்கோ மனத்தாழ்மையைப் பற்றிப் பேசுவது அபூர்வம். தாழ் மையை இழிவாகவும் கோழைத்தனமாகவும் உலகம் நினைக்கிறது. பெருமையே உலகத்துக்குச் சிறப்பு. பெருமையை விரும்பாதவர் கள் இல்லை. அது ஐசுவரியவானை மாத்திரமல்ல, கொடியதரித்திர னையும் ஆண்டுகொண்டிருக்கிறது. இடுப்பில் கந்தையும் கையில் ஓடுமுள்ள பிச்சைக்காரன் தன் முன்னோர்களுக்கு எத்தனையோ எக் கர் நிலங்களும், அநேக வீடுகளும், திரளான ஆடுமாடுகளும், தோட் டம் துரவுகளும், ஏராளமான வேலைக்காரரும் இருந்தார்கள் என்று பெருமையாய்ப் பேசத் தவறுவதில்லை. பிச்சையிலும் பெருமை! இது பெரியவர்களை மாத்திரமல்ல குழந்தைகளையும் ஆளுகிறது. தொட்டிலில் கிடக்கும் குழந்தையை அதட்டினால் முகத்தைச் சுழித் துக்கொண்டு அழும். இல்லடா ராஜா என்று கொஞ்சினால் அழுகை நீங்கி முகத்தில் மகிழ்ச்சி தோன்றும். இளமையிலே பெருமை! இதற்குப் அவர்கள் வளரவளர பெருமையிலேயே வளருகிறார்கள். பக்கத்தாலேதும் உண்டு. பெற்றோர் தங்கள் மக்கள் முன்னுக்குவர விரும்பி அவர்களைப் பார்த்து: இன்னாரைப் பார்த்தீர்களா? அவர்கள் கல்வியென்ன! உத்தியோகம் என்ன! சம்பாத்தியம் என்ன! பங்க ளாக்கள் என்ன! உடை நடைகள் என்ன! மோட்டார்கள் என்ன!

வேலைக்காரர் என்ன! அவர்கள் எவ்வளவு மேன்மையாய் வாழுகிறார்கள் என்று உற்சாகப்படுத்துவது வழக்கம். மக்கள் சிறுமையடைய எவரும் விரும்பார்கள். முன்னுக்கு வரவேண்டுமென்பதே எல்லாருக்கும் வாஞ்சை. ஆனால் இவை யாவற்றிலும் பெருமைக்கும் பொறாமைக்கும் போட்டிக்கும் இடமுண்டாகிறது. முன்னுக்கு வரவேண்டுமென்பது நல்விருப்பமானாலும் உண்மையான மேன்மை எதுவென்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். மனத்தாழ்மையின் பாக்கியத்தைப்பற்றிப் பேசுமுன் பெருமையின் கேட்டை முந்தி ஆராய்வது நல்லது.

## I. பெருமை உலகத்தைக் கெடுத்தது.

உலகத்தில் எண்ணுதற்கரிய ஏராளமான பாவங்கள் பெருகின. அவற்றை இவ்வளவென்று சொல்லமுடியாது. அவைகள் கணக்கிற்கடங்காத பெயர்கொண்டவை. உலகில் காணப்படும் பகை விரோதங்கள், சண்டை பிரிவினைகள், பொறாமை யுத்தங்கள், மூர்க்கம் கொலைகள், களவு தூஷணைகள், அவமானம் தீமைகள், கண்ணீர் பெருமூச்சுகள் முதலான யாவும் பெருமையால் விளைந்த கேடுகளே. இவை யாவற்றிற்கும் ஊற்று பெருமை. பெருமை மனுமக்களை அரிபிளவையைப்போல் அரிக்கிறது. சரீரத்தில் வேதனைப் படுகிற ஒருவன் தன் நோய் இன்னதென்று அறியாதிருப்பதுபோல, நமது சகல கேடுகளுக்கும் காரணமாயிருப்பது பெருமை என்பதை நாம் அறியாதிருக்கலாம்.

பெருமையாவது என்ன? சிருஷ்டியாகிய மனுஷன் தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தைவிட்டு விலகினதே பெருமை. கடவுளைச் சார்ந்து பிழைப்பதும் அவரால் நடத்தப்படுவதும் சிருஷ்டியின் ஸ்தானம். மனுஷன் கடவுளை அகற்றி நான் என்பவனைச் சிங்காசனம் ஏற்றினான். சகல கேடுகளும் இங்கேயிருந்து ஆரம்பித்தன. நாம் ஒரு அதிசய காட்சியைப் பார்க்கும்போது, நம்மையும் மறந்து, நாம் நிற்கும் இடத்தையும் மறந்துபோகிறோம். அந்த அதிசய காட்சி நமது கவனமுழுவதையும் ஆண்டுகொள்ளுகிறது. இதைப்போல் அளவில்லாத ஞானமும் வல்லமையும் மகிமையும் நிறைந்த



கடவுளுடைய ஐக்கியத்திலிருப்பவன் ஆனந்த பரவசமடைந்து தன்னை முற்றிலும் மறந்துபோகிறான். இதுவே மனுஷனுடைய ஆதி நிலைமை. இந்த நிலைமையை அவன் காத்துக்கொள்ளவில்லை. மற்றச் சிருஷ்டிப்புகள் யாவும் கடவுளைச் சார்ந்து பிழைக்கும் பாக்கியமான நிலைமையில் நிலைத்திருக்கின்றன. அவர் தமக்குச் சித்தமான யாவற்றையும் அவைகள்மூலம் நிறைவேற்றி மகிமைப்படுகிறார். அவைகள் தங்களில் ஒன்றுமில்லை. அவரே அவைகளைச் சிருஷ்டித்தவரும் ஆண்டு நடத்துகிறவருமாயிருக்கிறார். மனத்தாழ்மை என்று அவைகள் சொல்லாவிட்டாலும் மனத்தாழ்மையாவது என்னவென்பதை அவைகள் நமக்குப் போதிக்கின்றன. நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து பரமபிதாவைச் சார்ந்து பிழைப்பதே மனத்தாழ்மை. அவர் நமக்குள் வசித்து நம்மை ஆண்டு நடத்துவதே மனத்தாழ்மை. சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் மற்றச் சிருஷ்டிகளைப்போல் தான் உண்டாக்கப்பட்ட ஆதிநிலைமைக்கு வருவதே மனத்தாழ்மை. அந்த நிலைமையே அவனுக்குப் பாக்கியம். பெருமை கடவுளையும் மனுஷனையும் பிரித்தது. அவர் வசித்த இடத்தில் நான் என்பவன் உட்கார்ந்தான். அவர் சித்தம் செய்யப்பட்ட இடத்தில் சுயசித்தம் ஏற்பட்டது. மனுஷன் கெட்டான்.

பெருமையே ஆதிவித்து. அந்த வித்திலிருந்து பாவம் என்னும் மரம் முளைத்து, விஷம் நிறைந்த கனிகளைக் கொடுத்து, மனுமக்களைச் சாபத்திற்குள்ளாக்கிற்று. பெருமை பரத்தில் உண்டானது. கடவுள் கணக்கற்ற தேவதூதர்களை உண்டாக்கியிருந்தார். அவர்கள் அவருடைய மகிமையாலும், பிரகாசத்தாலும், பலத்தாலும் நிறைந்திருந்தார்கள். தங்கள் சிருஷ்டிகரின் மகத்துவத்தைக் கண்டு, ஆனந்த பரவசமடைந்து, இடைவிடாமல் அவரைப் போற்றி, அவர் சித்தத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். அவரைக் கண்ட காட்சியில் தங்களை மறந்தார்கள். இப்படியிருக்க, அவர்களில் ஒரு கூட்டத்தார் சாத்தான் என்னும் அவர்கள் தலைவனால் இழுப்புண்டு, தங்களை நோக்கிப்பார்த்து, தங்கள் மகிமையையும் பலத்தையும் தங்களுடையதென்று எண்ணி, கர்வங்கொண்டு, நாம் என்

கடவுளைச் சார்ந்து பிழைக்கவேண்டும்? இவ்வளவு மகிமையும் பிரகாசமும் நமக்கிருக்கும்போது, நாமும் கடவுளைப்போல் ஏன் சுயாதீனமாய் நடக்கக்கூடாது என்று நினைத்தார்கள். தங்கள் பாக்கியமும் மகிமையும் தங்களுடையதல்ல வென்பதையும், தாங்கள் சிருஷ்டிகரைச் சார்ந்து பிழைப்பதின் பலனாகவே அந்த மகிமை தங்களில் காணப்படுகிறதென்பதையும் மறந்துபோனார்கள். இந்தத் தீய எண்ணம் அவர்களில் தோன்றின நிமிஷத்தில், அவர்கள் இருதயபற்று கடவுளைவிட்டுப் பிரிந்தபடியால், எல்லா மகிமையையும் பிரகாசத்தையும் இழந்து இருள்நிறைந்த பிசாசுகளாகிக் கீழே தள்ளப்பட்டார்கள். "தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட" இந்தக் கூட்டத்தாரான தூதர்கள் அந்தகாரத்திற்குரியவர்களானார்கள். மற்றத் தூதர்களும் பெருமைகொண்டு கெட்டுப்போகாதபடிக்கு இவர்களுடைய விழுதல் அவர்களுக்கு எச்சரிப்பாயிற்று. "தங்களுக்குரிய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல்" என்று சொல்லியிருக்கிறது. அந்த ஆதிமேன்மையாவது என்ன? தங்கள் ஒன்றுமில்லாமையை உணர்ந்து சிருஷ்டிகர்த்தாவைப் பூரணமாய்ச் சார்ந்து பிழைப்பதே அந்த ஆதிமேன்மை. இதையே மனத்தாழ்மை என்கிறோம். சிருஷ்டி தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இருப்பதே மனத்தாழ்மை. அதைவிட்டு விலகுவது மனப்பெருமை. பெருமையே அவர்களை கடவுளைவிட்டுப் பிரித்தது. சகல பாக்கியங்களும் மறைய, சகல கேடுகளும் அவர்கள் பங்காயின.

தேவன் அவர்களை நல்லவர்களாக உண்டாக்கியிருக்க தீமை எப்படி அவர்களுக்குள் வந்தது? தீமை எங்கிருந்தும் வரவேண்டியதில்லை. நன்மையும் தீமையும் உள்ளேயேயிருக்கிறது. தீமை என்பது ஒரு ஆள் அல்ல. நன்மையை இழப்பதே தீமையாகும். ஒளியை இழப்பதே இருளாகும். ஜீவனை இழப்பதே மரணமாகும். ஒன்று ஒன்றோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. தீமையே செய்யமுடியாமல் நன்மை மாத்திரமே செய்கிறவர்களாக தூதர்கள் உண்டாக்கப்படவில்லை. அப்படியானால் சுயசித்தமற்ற ஒரு இயந்திரத்திற்கு



அவர்கள் சமானமாவார்கள். நாம் சாவிகொடுத்து ஓட்டும் கெடிகாரத்தைப்போலும் ஆட்டிவிட்ட பம்பரம்போலும் இருப்பார்கள். இங்கேதான் அறிவுள்ள சிருஷ்டிக்கும் அறிவில்லாத சிருஷ்டிக்கும் வித்தியாசமிருக்கிறது. அறிவில்லாத சிருஷ்டிகள் வானத்திலும் பூமியிலும் தேவசித்தத்தை நிறைவேற்றுகின்றன. நிறைவேற்றுகிறோம் என்பது அவைகளுக்குத் தெரியாது. கடவுளே அவைகளில் தமது சித்தத்தை நிறைவேற்றுகிறவர். அவர் தேவதூதர்களையும் அவ்வாறு நடத்துவாரானால், அவர்கள் கீழ்ப்படிதல் சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் கீழ்ப்படிதலைப்போலவே அறிவற்ற கீழ்ப்படிதலாகும். அறிவும் உணர்வுமுள்ள தேவதூதர்கள் அறிவு உணர்வோடு கீழ்ப்படிய வேண்டும். அறிவு உணர்வு எங்கே உண்டோ அங்கே உத்தரவாதமும் உண்டு. ஆகையால் சுயாதீன சித்தமுள்ள தேவதூதர்கள் நன்மைக்குச் சாயும் இயல்புடையவர்களாயிருந்தது போலவே தீமைக்கு அதாவது நன்மையைவிட்டு விலகும் இயல்புடையவர்களாகவுமிருக்கவேண்டும். மற்றப்படி அவர்கள் சுயாதீனரல்ல. அவர்கள் தங்கள் இஷ்டப்படி கீழ்ப்படியாமல், கடவுள் அவர்களைப் பலவந்தமாய்க் கீழ்ப்படியச் செய்வாரானால், அது கீழ்ப்படிதல் ஆகாது; அவர்கள் தவறவுமாட்டார்கள். சுயாதீன சித்தம் எங்கே உண்டோ அங்கே கீழ்ப்படிவதுபோலவே, கீழ்ப்படியாதிருப்பதற்கும் ஏதுவுண்டு. ஆகையால் தூதர்கள் பெருமை கொள்வதற்குப் பாவம் வெளியே யிருந்து வரவேண்டியதில்லை.

இப்போது மனுஷனுடைய தவறுதலைக் கவனிப்போம். மனுஷன் தானாகக் கெடாமல் சாத்தானுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக் கெட்டான் என்பது சரித்திரம். மனுஷன் கடவுளோடுள்ள ஐக்கியத்தில் பிழைத்து ஆனந்த சந்தோஷத்திலிருந்தான். அந்தப் பாக்கியமான நிலைமையைக் கண்டு பொறாமைகொண்ட சத்துரு, அனுபவத்தில் இன்னும் குழந்தைகள் போன்ற ஆதித்தந்தையரை ஏமாற்றினான். நீங்கள் தேவனையே சார்ந்திருக்கவேண்டியதென்ன? இது அடிமைத்தனமல்லவா? நீங்கள் உங்கள் இஷ்டம்போல் நடந்தால் கடவுளைப்போலாவீர்கள். இதை அறிந்துதானே

நீங்கள் அந்தக் கனியைப் புசிக்கக் கூடாதென்று உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அதைப் புசித்துப் பாருங்கள், அப்பால் உங்கள் பாக்கியத்தை நீங்களே கண்டுகொள்வீர்கள் என்றான். இவனை "ஆதிமுதல் பொய்யன்" என்று ஆண்டவர் சொன்னதும் சரிதானே. சாத்தான் சொன்ன வார்த்தைகள் அவர்களுக்குச் சோதனையாயிருந்தது. இந்த வார்த்தைகளைக் கேட்டதால் அவர்கள் பாவிகளாகவில்லை. சோதிக்கப்படுவது பாவமல்ல. அவர்கள் பாவிகளாவது அவர்கள் செய்யும் தீர்மானத்திலிருக்கிறது. பிதாவாகிய கடவுள் தங்களுக்குக் கொடுத்த எச்சரிப்பு அவர்களுக்குத் தெரியும். இப்போது சாத்தான் சொன்ன வார்த்தைகளையும் கேட்டார்கள். அவர்கள் வெற்றியும் விழுதலும் அவர்கள் செய்யும் தீர்மானத்திலிருக்கிறது. கடவுள் வார்த்தையை நம்பி சாத்தான் வார்த்தையைப் புறக்கணிக்கவேண்டும். அல்லது சாத்தான் வார்த்தையை நம்பி கடவுள் வார்த்தையைப் புறக்கணிக்கவேண்டும். இரண்டிலொன்றைத் தீர்மானிக்கும் சுயாதீன சித்தம் அவர்களுக்குண்டு. அவர்கள் செய்ததென்ன? சாத்தான் சொல்லுக்கு இணங்கினார்கள். ஏன் இணங்கினார்கள்? மனுஷனுக்கு விசுவாசப் பார்வையை விட காணப்படுகிறவைகளில் கவர்ச்சி அதிகம். கிறிஸ்தவ ஜீவியத்தில் நமது போராட்டங்களுக்குக் காரணம் அதுதானே. எவ்வளவாய் நாம் ஆண்டவரையும் அவரது அன்பையும் அறிந்திருந்தாலும், காணப்படுகிறவைகளால் லேசாய் இழுப்புண்டு போகிறோம். ஆவிக்குரிய ஜீவியத்தின் பலம் விசுவாசப் பார்வையில் இருக்கிறது. காணப்படுகிறவைகளோ இப்போது உடனே நாம் அனுபவிக்கக் கூடியதாய் நமது கண்முன் நிற்கின்றன. "ஸ்திரீயானவள் அந்த விருக்ஷம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருக்ஷமுமாயிருக்கக் கண்டான்" (ஆதி. 3:6). வினை வந்தது! நாங்கள் ஒன்றுமில்லை, எங்களுக்கு எல்லாம் கடவுளே என்று அவருடைய ஐக்கியத்தில் பிழைத்தவர்கள், இப்போது நாங்கள் என்றும், கடவுளைப்போலாவோம் என்றும் நினைத்தது அவர்களுக்குக் கேடாயிற்று. இவ்வாறு சாத்தான் தான் கெட்ட பெருமையின் விஷத்தையே அவர்களுக்குள்ளும் ஊற்றி அவர்களையும் கெடுத்தான். வளரும் எந்த மரமும் அதன் வேரின் ஜீவனைப் பெற்றே வளருவதுபோல, மனுக்குல முழுவதும் ஆதாமிலிருந்து வந்தவர்களானதால் அவன் பெருமைக்கு ஆளாகிக் கெட்டார்கள். பாக்கியமான நிலைமையாகிய மனத்தாழ்மையை இழந்த தூதர்கள் பிசாசுகளானார்கள். சாத்தானுடைய வஞ்சகத்தை நம்பி ஏற்றுக்கொண்ட மனுஷனும் தன் பெருமையால் கடவுளை இழந்து கெட்டான். நான் என்னும் கர்வமும் சுய இஷ்டப்படி நடக்கும் பெருமையும் உலகத்தைக் கெடுத்தது.



## II. மனத்தாழ்மை உலகத்திற்கு ரட்சிப்பு.

"பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்." எதிலே நாம் கெட்டோமோ அதிலிருந்து ரட்சிக்கப்படுவதே நமக்கு ரட்சிப்பாகும். பெருமை மனுக்குலத்தைக் கெடுத்தது மெய்யானால் மனத்தாழ்மையே உலகத்தை ரட்சிக்கும். பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தது மெய்யானால், அவர்களுக்குள் மனத்தாழ்மையை உண்டாக்குவதே அவர்களுக்கு ரட்சிப்பாகும். ரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டவனுக்கு: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்கள்" என்று அப்போஸ்தலன் சொன்னார். அன்று ராத்திரி அவனுக்குச் சொல்லக்கூடியது அவ்வளவுதான். ரட்சிப்பாவது என்னவென்றும் விசுவாசமாவது என்னவென்றும் விஸ்தரிப்பதற்கு அது சமயமல்ல. விசுவாசத்திற்கும் ரட்சிப்புக்குமுள்ள சம்பந்தத்தை அவன் பிந்தி அறியலாம். தன்மீது பற்றும் நம்பிக்கையுமுள்ள ஒருவனும் ரட்சிக்கப்படமாட்டான். தன் பாவங்களையும் தன் ஒன்றுமில்லாமையையும் நினைத்து மனம் நொறுங்கி, ஆண்டவரைப்பற்றிப் பிடித்து, அவரையே தனக்கு எல்லாமாக்கிக் கொள்ளுகிறவனே ரட்சிக்கப்படுவான். இதுவே மனத்தாழ்மை. நமது ரட்சிப்பு மனத்தாழ்மையிலே ஆரம்பித்து, மனத்தாழ்மையில் வளர்ந்து, மனத்தாழ்மையில் பூரணப்படுகிறது. ஆண்டவர் நம்மை ரட்சிக்கவந்தார் என்று சொல்லுவதும், அவர் நமக்குள் மனத்தாழ்-

மையை உண்டாக்கவந்தார் என்று சொல்வதும் சரிதான். பெருமை நமக்குக் கேடானால் மனத்தாழ்மையே நமக்கு ரட்சிப்பாகும். தமது சிலுவை மரணத்தால் நமது பெருமையைத் தகர்த்து, தமது உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனால் நமக்குள் மனத்தாழ்மையை உண்டாக்கி நம்மை ரட்சிக்கிறார். மனுஷன் கடவுளுக்குமுன்பாக எப்படிப் பிழைக்கவேண்டும் என்பதற்கும், எது அவனுக்குப் பாக்கியமான நிலைமை என்பதற்கும் அவரே நமக்குச் சிறந்த மாதிரியாகவும் வெளிப்பட்டார்.

## III. கிறிஸ்துவிலிருந்த மனத்தாழ்மை.

“நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்” என்றார். இந்த மனத்தாழ்மை அவர் மனுஷனாக வெளிப்பட்டபோதல்ல, பரத்திலேயே காணப்படுகிறது. அவர் எக்காலமும் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் திருக்குமாரன். அவருக்குள் மனத்தாழ்மை இருந்திராவிட்டால் பிதா சித்தப்படி பிழைத்திருக்கமாட்டார். மனத்தாழ்மை என்பது தெய்வீக லட்சணம்; அது இழிவான குணமல்ல. குமாரன் எப்பொழுதும் பிதாவைச் சார்ந்து பிழைப்பவர். இந்தச் சார்புதான் மனத்தாழ்மை. இது பரலோக சிந்தை. இப்படியிருக்க அவர் நம்மை ரட்சிக்கும்படி உலகத்திற்கு வரவேண்டியதிருந்தபோது மனுஷநிலைமைக்குத் தக்கவாறு அவர் தம்மைத் தாழ்த்தவேண்டியதாயிருந்தது. “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின (விட்டுப் பிரியக்கூடாத) பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்; அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகித் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான



நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.” (பிலி. 2:6-11). அந்த மேலான நாமம் அவர் பிறக்கும்போது பிதாவால் அவருக்குக் கொடுக்கப்பட்ட இயேசு என்னும் நாமமே. அது மனுஷரால் அற்பமாய் எண்ணப்பட்டாலும், எல்லாரும் நம்பவும் நமஸ்கரிக்கவும் ஏற்ற மேலான உன்னத நாமமாயிற்று. மேற்கூறிய வசனங்களில் கிறிஸ்துவின் மனத்தாழ்மையும், அதனால் அவரடைந்த மேன்மையும் காட்டப்பட்டிருக்கின்றன. தேவதூதர்களும் பிரமிக்கத்தக்கவிதமாய் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினார். தமது தெய்வீகத்தை அவர் வெறுமையாக்கவில்லை. தமக்குப் பிதாவோடிருந்த மகிமையை அங்கிருந்து அவர் பிதாவை வெளிப்படுத்தின போங்கை மாற்றி, நமது நிலைமைக்கேற்ற பிரகாரம் தமது நிலைமையை அளவுக்குட்படுத்தினார். ஆள் மாறிப்போகவில்லை. பரத்திலிருந்த குமாரனையே சிலுவையிலும், உயிர்த்தெழுதலிலும் காண்கிறோம். ஆனால் அவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலில் காணப்பட்டார். அவருடைய மனத்தாழ்மை எந்த நிலைமையிலும் அவரை மனரம்மியமாய் இருக்கச்செய்தது. “நரிகளுக்குக் குழிகள் உண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை” என்றார். இங்கே சௌகரியமாய் வாழவேண்டுமென்று அவர் விரும்பினவரல்ல. பிறந்த இடம் அவருக்குச் சொந்தமல்ல. பிரயாணம் செய்த படவு சொந்தமல்ல. தங்கின வீடு சொந்தமல்ல. அவர் தூங்கின தலையணை சொந்தமல்ல. ஏறின வாகனம் சொந்தமல்ல. அடக்கமான கல்லறை சொந்தமல்ல. மற்றவர்கள் செய்த உபகாரத்தால் பிழைத்தார்.

அவர் பேச்சில் மனத்தாழ்மை வெளிப்படுகிறது. “நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. என்னில் வாசமாயிருக்கிற பிதாவே இந்தக் கிரியைகளைச் செய்கிறார். என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை.” அவருடைய ஜீவியத்தைப் படிக்கும்போது அவர் தம்மை மறைத்து பிதாவையே முற்றிலும் சார்ந்து பிழைத்ததாகக் காண்கிறோம். “நான் அல்ல, பிதாவே” என்பது

அவரது ஜீவியத்தின் பிரமாணமாயிருந்து. 'தமது சித்தப்படி பிழைக்காமல் பிதாவின் சித்தப்படியே பிழைத்தார். இவ்வாறு பூரணமாய் இடைவிடாமல் பிதாவைச்சார்ந்து பிழைத்த கிறிஸ்துவின் மூலமாய் பிதா தாராளமாகக் கிரியைசெய்ய இடம்பெற்றிருந்தார். "கடவுள் அல்ல, நான்" என்பதிலேதான் பாவம் உண்டானது. "இனி நான் அல்ல கடவுள்" என்பதிலேதான் ரட்சிப்பு உண்டாக வேண்டும். நமக்குள் மனத்தாழ்மையை உண்டாக்கி நம்மை ரட்சிக்க வந்த ஆண்டவர் மனத்தாழ்மையின் பாக்கியத்தைத் தமது ஜீவியத்திலே உலகத்திற்கு மாதிரியாகக் காண்பித்தார். கிறிஸ்துவால் ரட்சிப்படைந்த பவுல்: "இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். மனத்தாழ்மையை அவர் அணிந்துகொண்டவர். மனத்தாழ்மை கிறிஸ்துவோடு நம்மை இணைத்து ரட்சிக்கிறது. பெருமை தாழ்மைச் சொரூபியாகிய ஆண்டவரை விட்டு நம்மைப் பிரித்துக் கெடுக்கிறது.

## IV. ஆண்டவர் போதனையில் மனத்தாழ்மை.

பெருமையால் மனுஷன் கெட்டது மெய்யானால் மனத்தாழ்மையாலேதான் அவன் ரட்சிக்கப்படவேண்டும் என்று அறிந்த ஆண்டவர் மனுஷன் கடவுளுக்குமுன் எப்படிப் பிழைக்கவேண்டும் என்பதைத் தாமே தமது ஜீவியத்தில் மாதிரியாகக் காட்டினதுமல்லாமல், தமது போதனையில் மனத்தாழ்மையை முக்கியமாய் எடுத்துக் காண்பித்தார்.

மலைப்பிரசங்கத்தில்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்களென்றும், சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்களென்றும், தேவராஜ்யம் அவர்களுக்கே உரியதென்றும் போதித்தார். திரளான ஜனத்தை அவர் கண்டபோது: வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்கள் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கொடுப்பேன் என்றார். எப்படிக் கொடுப்பாரென்று கேட்டால்: நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன், என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார். அவருடைய சீஷருக்குள் பெருமை கடைசிவரை இருந்தது. தங்களுக்குள் யார் பெரியவன் என்பதைக் குறித்து அடிக்கடி தர்க்கித்தார்கள். ஆண்டவர் ஒரு சிறுபிள்ளையை அவர்கள் மத்தியில் நிறுத்தி: இந்தச் சிறுபிள்ளையைப்போல் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பெரியவனாயிருப்பான் என்றார். ஜனங்கள் தம்மைத் தொடர்ந்து வந்தபோது அவர் திரும்பிப்பார்த்து: ஒருவன் எனக்குச் சீஷனாயிருக்கவேண்டுமென்று விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுக்கவேண்டும் என்றார். நான் என்னும் கர்வமுள்ளவன் அவருக்குச் சீஷனாயிருக்கமுடியாது. செபெதேயுவின் குமாரர் யாக்கோபும் யோவானும் அவருடைய ராஜ்யத்தில் வலது இடது பக்கங்களில் இருக்க உத்தரவாகவேண்டுமென்று கேட்டபோது: உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவே வந்தேன் என்று சொல்லி மனத்தாழ்மையே மேன்மைக்கு வழி என்று காண்பித்தார். பரிசேயர் விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் விரும்பும் பெருமையைக் கண்டித்து: "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன், தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான்" என்றார். வேறொரு பரிசேயன் வீட்டில் அவர் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தபோது, அழைக்கப்பட்டவர்கள் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொள்வதைக் கண்டு: "தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்" என்றார். ஆயக்காரன் பரிசேயனைப்பற்றி அவர் சொன்ன உவமையில்: "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று சொல்லி முடித்தார். வியாழன் இரவில், மேல் வீட்டிலே, பந்தியிருக்கும்முன் கால்களைக் கழுவும் விஷயத்தில், சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருக்க, ஆண்டவர் தாமே அவர்கள் கால்களைக் கழுவி அவர்களை

நோக்கி : ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவ வேண்டாமா? நான் உங்களுக்குச் செய்ததுபோல் நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். இக்கட்டளையை எழுத்தின்படி சடங்காகச் செய்கிறவர்களுமுண்டு. கால்களைக் கழுவியும் மனதில் தாழ்மை யற்றவர்களுமுண்டு. நமக்கு மனத்தாழ்மை வேண்டுமென்பதே ஆண்டவர் போதனையின் முக்கிய கருத்து. அதே இரவில் சீஷர்களுக்குள் தங்களில் யார் பெரியவன் என்னும் தர்க்கம் மறுபடியும் உண்டானது. "உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கவேண்டும். பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போலிருக்கிறேனே" என்று ஆண்டவர் அவர்கள் பெருமையைக் கடிந்துகொண்டு தாழ்மையின் அவசியத்தை வற்புறுத்தினார். மனத்தாழ்மை என்பது ஆண்டவர் போதனையில் ஒரு சாதாரண விஷயமாயிராமல், அவர் போதனை முழுவதிலும் மகா பிரதானமான அம்சமாகக் காண்கிறோம். நான் என்னும் பெருமைச் சிந்தை மனுஷனை கடவுளைவிட்டுப் பிரித்துக் கெடுத்தது மெய்யானால், இனி நான் அல்ல, பிதாவாகிய கடவுளே எனக்கெல்லாம் என்னும் தாழ்மையான சிந்தையே மனுஷனை ரட்சிக்கும். தேவராஜ்யத்தின் குமாரர் குமாரத்திகளிடம் இருக்கவேண்டிய பிரதான லட்சணம் மனத்தாழ்மையே.

ஆண்டவர் ஜீவியத்தில் மனத்தாழ்மை சிறந்து விளங்குவது மாத்திரமல்ல, அவர் போதனையில் மனத்தாழ்மையின் அவசியம் வற்புறுத்தப்பட்டது மாத்திரமல்ல, அவர் கடைசியாகப் பட்டபாடுகளில் மனத்தாழ்மையின் பரிபூரணத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். சாந்தமுள்ள தேவாட்டுக்குட்டியாகிய அவர், கெத்சமெனேதொடங்கி கல்வாரிச் சிலுவை வரையில் அடைந்த பாடுகளும், அவமானம் நிந்தையும், சித்திரவதைகளும் புத்தியால் கிரகிக்கவோ, நாவால் விவரிக்கவோ முடியாது. இதைக் குறித்து அப்போஸ்தலன் : "மரண



பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் அவர் தம்மைத் தாமே தாழ்த்தினார்" என்று சொல்லுகிறார். ஆண்டவர் சர்வசக்தியுள்ளவராயிருந்தும் பதிலுக்குப் பதில் செய்யாமல், சகல பாடுகளையும் விபரீதங்களையும் அவ்வளவு பொறுமையோடு சகித்துக்கொண்டதற்கு இரகசியம் அவருடைய மனத்தாழ்மையே. ஆகையால் பிதா அவரைச் சர்வத்திற்கும் மேலாக உயர்த்தி, அவரே ஆண்டவரும் கர்த்தருமானவரென்று ரூபித்துக் காண்பித்தார். "தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று ஆண்டவர் சொன்ன சத்திய வாக்கு முதலில் அவருக்கே பலித்தது.

## V. அப்போஸ்தலர் போதனையில் மனத்தாழ்மை.

ஆண்டவர் ஜீவியத்திலும் அவர் உபதேசத்திலும் பிரதானமாக விளங்கின மனத்தாழ்மையை அவரது அடியார் மறக்கமுடியுமா? பவுல் எழுதின நிருபங்களிலெல்லாம் மனத்தாழ்மையைப்பற்றி முக்கியமாய்ப் பேசியிருக்கிறார். "நீங்கள் மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள் அதாவது தாழ்மைப்படுங்கள்" என்பதாக பேதுரு எழுதுகிறார். "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்; கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று யாக்கோபு எழுதுகிறார். "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்" என்று நமது ஆண்டவர் போதித்த போதனை அப்போஸ்தலர் மனதில் ஆழமாய்ப் பதிந்தது என்பதின் உண்மையை நிருபங்களில் காணலாம்.

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். இது எவ்வளவு பயங்கரம்! அவர் நமக்கு எதிர்த்து நிற்பதானால் நாம் பிழைப்பதெப்படி? நமது காரியங்கள் நமக்கு அனுகூலமாய் முடிவ

தெப்படி? அன்புள்ள பிதா நம்மை எதிர்ப்பாரா? நாம் அவருக்கு ஒரு எதிரியா? இதன் கருத்தென்ன? கடவுள் மனுஷரைப் பகைக்கிறவரல்ல. அவர் நம்மை கெடுக்க விரும்புகிறவரல்ல. ஆனால் பெருமை நம்மை கடவுளைவிட்டுப் பிரித்து, அவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளக் கூடாதபடி செய்கிறது. நமது இருதயத்தில் நான் என்பவன் ஆளுகை செய்யும்போது பரமபிதாவுக்கு உள்ளத்தில் இடமில்லை. நான் என்பவன் கடவுளுக்கு விரோதி. அவர் இருக்கவேண்டிய ஆசனத்தில் அவன் இருப்பதை அவர் சகிக்கமாட்டார். ஏனென்றால் "என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடேன்" என்று அவரே சொல்லியிருக்கிறார். தூதர்கள் மேன்மையிலிருந்து தள்ளப்பட்டதும், மனுஷன் பரதீஸின் பாக்கியத்தைவிட்டுத் துரத்தப்பட்டதும் இந்தப் பெருமையினாலேயே. தனக்கு ஜீவனை கடவுளை இழந்த மனுஷன் சமாதானத்தைக் காணமாட்டான். அவன் உள்ளத்தில் இடைவிடாத போராட்டமே இருக்கும். கடவுளும் தமது வாசஸ்தலமாகிய நமது இருதயத்தைத் திரும்பக் கைப்பற்றுகிறவரை சும்மா இருக்கமாட்டார். எந்த விதத்திலாவது நான் என்பவனைத் தகர்த்துத் தமது ஆளுகையை உள்ளத்தில் ஸ்தாபிக்கப் போராடுவார். அதுவே இப்போது நடக்கிற காரியம். பெருமைக்காரர் படும் பாடுகளுக்கும் சீரழிவிற்கும் காரணம் இந்தப்போராட்டமே. நான் ஒன்றுமில்லை சுவாமி என்று மனுஷன் புலம்பும் வரையில் அவனை ஒருகை பார்ப்பார். ஆம், கடவுள் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் என்பது உண்மையே. நேபுகாத்நேச்சார் என்பவன் தன்னை உண்டு பண்ணினவரும் தனக்குச் சகல மேன்மைகளையும் அளித்தவருமான கடவுளைப் புறக்கணித்து, நான் என்னும் விக்கிரகத்தை இருதயத்தில் ஏற்றி வணங்கினான். "இது நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" என்றான். அடுத்த நிமிஷத்தில் வனத்தின் மிருகங்களோடு புல்மேயும்படி கடவுள் அவனைத் தாழ்த்தினார். அவனுக்குப் புத்திதெளிந்து, நான் என்பவனை அகற்றி, கடவுளை உயர்த்தினபோது மேன்மையடைந்தான். பெருமைக்காரருக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறார்.



பெருமை நமக்குப் பிறப்புரிமையாகிவிட்டது. அது எவ்வாறு நம்மை ஆளுகிறதென்பதை முதலாய் நாம் அறியாதிருக்கலாம். பெருமைக்குத் தப்பின மனுஷன் இல்லையென்பது நிச்சயம். சிலரிடம் பகிரங்கமாகவும், சிலரிடம் அந்தரங்கமாகவும் அது ஆளுகிறது. உலகத்தை வெறுத்த சந்நியாசியிலுங்கூட தான் எல்லாம் வெறுத்தவன் என்கிற எண்ணம் பெருமையாகும். அப்படியானால் மற்றவர்களைக் கேட்பானேன்? பெருமை கணக்கற்ற விதமாய் ஆண்கள், பெண்கள், பிள்ளைகளை ஆளுகிறது. சிலருக்குள் அது மறைந்திருந்தாலும் சமயம் வாய்க்கும்போது அது வெளிப்படும். மற்றவர்கள் நம்மை எந்தக் காரியத்திலாவது குறைவாய் நினைப்பது நமக்குப் பிரியமில்லை. அவர்கள் நம்மை அவமானமாய்ப்பேசுவது நமக்குத் துக்கத்தையும்; புகழ்ச்சியாய்ப் பேசுவது நமக்கு மகிழ்ச்சியையும் கொடுக்கும்போது, பெருமையின் உணர்ச்சியை அது வெளிப்படுத்துகிறது. உலகத்தின் மேன்மை, தாழ்வு நம்மில் பலனாய்க் கிரியை செய்யும்போது நான் என்னும் பெருமையாகிய உணர்ச்சி இன்னும் நீங்கவில்லை.

மேலும், நம்மைக் குறித்தும் நமக்குள்ளவைகளைக் குறித்தும் பெருமை பாராட்டுவது நியாயமல்ல. நம்மையும் நமக்குள்ளவைகளையும் நாம் சிருஷ்டித்தவர்களல்ல. நம்மை உண்டாக்கினவரும் நமக்குள்ளவைகளைக் கொடுத்தவரும் கடவுள். பெருமை அவருக்கே உரியது. நாம் பெற்றுக்கொண்ட ஈவுகளுக்காக கடவுளை ஸ்தோத்தரித்து அவரையே மகிமைப்படுத்தவேண்டியது. இவ்வளவு யோசனையில்லாமல் பெருமைக்கு இடங்கொடுத்து கடவுளால் தாழ்த்தப்பட்டுப்போகிறோம். "உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் அதாவது தானே உண்டாக்கிக்கொண்டவன்போல் என் பெருமை பாராட்டுகிறாய்? (1. கொ. 4: 7) சரீர பலமோ, அழகோ, கல்வியோ, செல்வமோ, உத்தியோகமோ, காரியங்களை நடத்தும் திறமையோ, எவைவானாலும் கடவுள் கொடுக்க நாம் பெற்றுக்கொண்டவைகளே. மகிமை அவருக்குரியதே யன்றி நமக்குரியதல்ல. இவைகள் மூலமாய் நமக்

குப் பெருமை உண்டாகும்போது தேவன் நமக்கு எதிர்த்து நிற்கிறார். இவைகள் நாம் அறியாத விஷயங்கள் அல்ல. தாழ்மையின் பாக்கியத்தையும், பெருமையின் கேட்டையும் நாம் அறிந்துகொள்ளும்படி கடவுள் திருஷ்டாந்தங்களை நமது கண்முன் வைத்திருக்கிறார். "உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த விருட்சத்தை உயர்த்தினேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசேக். 17 : 24). கோலியாத்தைத் தாழ்த்தி தாவீதை உயர்த்தினார். ஆமானைத் தாழ்த்தி மொர்தெகாயை உயர்த்தினார். பரிசேயனைத் தாழ்த்தி ஆயக்காரனை உயர்த்தினார். சாதாரணமான நிலைமையிலிருக்கும் மனுஷர் மேலான பதவியடைந்து, சிறுமை நீங்கிச் செல்வம் வந்தவுடனே தங்களை முற்றிலும் மறந்துபோகிறார்கள். அவர்கள் நடையும், பார்வையும், சத்தமும், கைவீச்சும் வித்தியாசப்படுகின்றன. முந்தின சிநேகிதர்களைக் கண்டால் இனம் தெரியவில்லை. ஐயோ, இது என்ன பரிதாபம்! இவர்கள் வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்கள் என்று நாம் நினைக்கிறதில்லை. அந்தஸ்து, பணப்பெருக்கத்தாலுண்டான மயக்கம் இது! இந்த மயக்கமும் நீங்கி சுயபுத்தி வருவதற்கும் நாட்செல்லாது. எல்லாரையும் குறித்து இப்படிச் சொல்லமுடியாது. சிலர், எவ்வளவு உலக மேன்மையடைந்தாலும் சற்றும் கர்வமடையாமல் எப்பொழுதும்போலவே தாழ்மையாய் இருக்கிறார்கள். இந்தத் தாழ்மையுள்ள சிந்தை கிறிஸ்துவால் அவர்களுக்குக் கிடைத்தது. "தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்" என்பது நிச்சயம். ஏனென்றால் பெருமையுள்ளவர்களுக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறார்.

## VI. மனத்தாழ்மையின் பாக்கியம்.

மனத்தாழ்மை என்பது நாம் முன்னே கவனித்தபடி இழிவல்ல, கோழைத் தனமல்ல. சிருஷ்டி தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இருப்பது மனத்தாழ்மையாகும். சர்வ சிருஷ்டிப்பும் சிருஷ்டிகரைச் சார்ந்து, அவரால் நடத்தப்படுகின்றன. ஆனால் கடவுள் அவைகளை நடத்துகிற மாதிரி மனுஷனை நடத்தமுடியாது. மனுஷனுக்குச்



சுயாதீன சித்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அறிவு உணர்வு இல்லாத மற்றச் சிருஷ்டிப்புகளை அவைகள் அறியாமலே அவர் ஆண்டு நடத்துவதுபோல மனுஷனை நடத்துவது ஒருக்காலும் சரியல்ல. மனுஷன் தானே தன் ஒன்றுமில்லாமையை உணர்ந்து, சிருஷ்டிகர்த்தருக்குத் தன்னைக் கையளித்து, அவர் தன்னை ஆண்டு நடத்தும்படி, அவரைச் சார்ந்து பிழைப்பதே மனத்தாழ்மையாகும். மனத்தாழ்மையின் ஜீவியம் எப்படிப் பட்டதென்பதை நமது ஆண்டவர் நமக்குக் காண்பித்திருக்கிறார். அவரைப்போல் நாமும் பிதாவை முற்றிலும் சார்ந்து பிழைப்போமானால் அதுவே நமக்கு மனத்தாழ்மையாகும். இவ்வாறு நாம் மனத்தாழ்மையுள்ளவர்களாய்ப் பிழைக்கும்போது பரமபிதா நம்மைச் சகலவிஷயத்திலும் ஆசீர்வதித்து நடத்துகிறார்.

நமது பாவத்தினிமித்தம் இருதயம் நொறுங்குண்டு ஆண்டவர் பாதத்தில் நம்மைத் தாழ்த்தும்போது, அவர் கிருபையாய் நமது பாவங்களை நமக்கு மன்னித்து நம்மை நீதிமான்களாக்குகிறார். இதற்கு ஆயக்காரன் பரிசேயன் உவமை நமக்கு ஆதாரம். தேவசமூகத்தில் தன்னைத் தாழ்த்தி, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்த ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டு வீட்டுக்குத் திரும்பினான். பெருமைக்காரப் பரிசேயனோ அவர் சந்நிதானத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டான். மனத்தாழ்மையுள்ள ஆயக்காரனுக்கு தேவன் பாவமன்னிப்பு அளித்தார்.

பாவிகளுக்கு மாத்திரமல்ல பரிசுத்தவான்களுக்கும் மனத்தாழ்மை அவசியம். முன் கவனித்தபடி சிருஷ்டியின் பாக்கியமான நிலைமையே மனத்தாழ்மை. கிறிஸ்து பாவமற்றவராயிருந்தும் மனத்தாழ்மையுள்ளவராயிருந்தார். ஆவியினால் நிறைந்த யோவான் ஸ்நானகன் மனத்தாழ்மையுள்ளவராயிருந்தார். பரத்தின் பரிசுத்த தூதர்கள் மனத்தாழ்மை யுள்ளவர்களாக யிருக்கிறார்கள். சிருஷ்டிகளை கடவுளோடு இணைப்பது மனத்தாழ்மை. அதாவது நான் என்பவன் ஆளாமல் கடவுளே நமது உள்ளத்தில் ஆளுகைசெய்வது மனத்தாழ்மை. தேவனுடைய பிள்ளைகள் மேலும் மேலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு மனத்தாழ்மை அவர்களுக்கு எப்பொழுதும் அவசியம்.

மனத்தாழ்மையுள்ளவர்களை கர்த்தர் உயர்த்துகிறார். இந்த உயர்வு உலகத்தின் மேன்மையையும் ஐசுவரியத்தையும் குறிக்காது. "உலகத்தில் மேன்மையாய் எண்ணப்படுகிறவைகள் கர்த்தருக்குமுன்பாக அருவருப்பாயிருக்கின்றன". ஆகையால் இந்த உயர்வு உலகமேன்மையல்ல. கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு அவசியமான உலக நன்மைகளைக் கொடாதிரார். மனத்தாழ்மையுள்ளவர்கள் கிறிஸ்துவுடனேகூட உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். பரம பிதா அவர்களில் வசிப்பதே அந்த உயர்வு. அவர் தமது ஆசீர்வாதங்களால் அவர்களை நிரப்ப, அவர்கள் அவரது ராஜ்யத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறார்கள். மனுஷரால் அற்பமாய் எண்ணப்பட்ட யோவான் ஸ்நானகன் கடவுள் பார்வையில் பெரியவனாயிருந்தார். கடவுளால் வரும் உயர்வை உலகம் அறியாது.

தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். கிருபையின் மாட்சிமையை விஸ்தரிக்க யாரால் கூடும்? சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று கிருபையே. தேவகிருபையில்லாமல் அரை நிமிஷம் நாம் பிழைப்பதெப்படி? இதை அறிந்தல்லவா சங்கீதக்காரன்: "ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது" என்றார். என்னை வேதனைப் படுத்தும் முள்ளை நீர் எடுக்காவிட்டாலும் உமது கிருபை ஒன்றே எனக்குப் போதும் என்று பவுல் சொன்னார். "சுவாமி உன்றன் கிருபைக் கடையமே" என்று சாஸ்திரியார் பாடினார். கிருபை என்னும் வார்த்தை வரும் வாக்கியங்களை வேதத்தில் ஆராய்ந்து படித்தால் அதன் ஆச்சரியம் விளங்கும். பள்ளங்களில் மாத்திரம் தண்ணீர் நிறைவதுபோல அவருடைய கிருபையின் ஐசுவரியம் மனத்தாழ்மையுள்ளவர்களுக்கே அளிக்கப்படும். எல்லாம் நமக்கு விரோதமாய்த் தோன்றும் காலத்தில் அவர் கிருபை ஒன்றே நமக்கு ஆதரவு. இவை யாவும் மனத்தாழ்மையுள்ளவர்களின் பாக்கியமாகும்.

## VII. மனத்தாழ்மை எப்படிக் கிடைக்கும்?

மனத்தாழ்மை போதனையைக் கேட்பதினால் மாத்திரம் வராது. மனத்தாழ்மையைப்பற்றிய இந்தப் பிரசங்கத்தைப் படிப்பதால் மாத்திரம் வராது. ஆண்டவர் தமது சீஷர்களுக்குக் கடைசிவரை பெருமையால் வரும் கேட்டையும், தாழ்மையால் வரும் பாக்கியத்தையும் எவ்வளவோ திருஷ்டாந்தங்களோடே தெளிவாய்ப் போதித்தார். அவர்களும் அவரை நேசித்து அவர் போதித்தபடி நடக்கும்படி விரும்பினார்கள் என்றாலும் பெருமை கடைசிவரை அவர்களைவிட்டு நீங்கவில்லை. போதனை மாத்திரமா? அவரே அவர்கள் கண்களுக்கு முன்பாக "சாந்தமும் மனத்தாழ்மையும்" உள்ளவராய், சிறந்த மாதிரியாக அவர்கள் நடுவில் சஞ்சரித்தார். அந்த மாதிரிப்படி நடக்க அவர்கள் பிரயாசப்பட்டும் கடைசிவரை பெருமை அவர்களைவிட்டு நீங்கவில்லை. அநேக சிறந்த காரியங்கள் அவர்களில் இருந்தன. அவர்கள் எல்லாவற்றையும் விட்டு அவர் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின் சென்றார்கள். எத்தனையோ கஷ்டங்களைச் சகித்து அவர் கொடுத்த வேலைகளைச்செய்தார்கள். அப்படியிருக்க ஆண்டவர் தாழ்மையைப்பற்றிப் போதித்ததையும், அவர் காண்பித்த மனத்தாழ்மையின் மாதிரியையும் குறித்து அவர்கள் அசட்டையாய் இருந்தார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. மனத்தாழ்மை போதனையால், மாதிரியால் வருவதல்ல. அது மனத்தாழ்மை. மனுஷரிடத்தில் முகத்தாழ்மை, வாய்த்தாழ்மை, தொனித்தாழ்மை, தோற்றத் தாழ்மை காணப்படுவதுண்டு. கொஞ்சம் அவர்களைத் தீண்டினால் உள்ளே மறைந்திருக்கும் பெருமை இடிமுழக்கம்போல் வெளியே புறப்படும். ஆண்டவர் போதித்தது மனத்தாழ்மை. அது மனதில் உண்டாகி புறம்பே காணப்படவேண்டியது.

இந்த மனத்தாழ்மை சீஷர்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஆண்டவர் அவர்கள் பெருமையை அல்லது நான் என்னும் அகங்காரத்தைத் தமது சிலுவையால் நொறுக்கி, அவர் உயிர்த்தெழுந்த புதிய ஜீவனை ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் அனுப்பி, மனத்தாழ்மையை அவர்களில் உண்டாக்கினார். அதை வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால், மனத்தாழ்மையுள்ள ஆண்டவர், மகிமை யடைந்தபின், தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து, தாமே அவர்கள் மனத்தாழ்மையானார். "இனி நாங்கள் அல்ல, மனத்தாழ்மையுள்ள கிறிஸ்துவே எங்களில் பிழைக்கிறார்" என்று சொல்லக்கூடிய

வர்களானார்கள். தங்கள் ஒன்றுமில்லாமையை உணர்ந்து கிறிஸ்துவின் மூலம் பிதாவோடு ஐக்கியப்பட்டு, அவரையே சார்ந்து பிழைக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். இவ்வாறு மனத்தாழ்மையை அவர்கள் ஈவாகப் பெற்றதுமன்றி, ஆண்டவர் அவர்களை உலகத்தில் நடத்தின மாதிரியாலும் அவர்கள் மனத்தாழ்மையை உடைபோல் அணிந்துகொள்ளவும் ஏதுவாயிற்று. எப்படி பொறுமைக்குணம் தானாய் வராமல், சகலவித பாடுகளையும் நாம் சகிக்கச்சகிக்க அந்தப் பொறுமைக்குணம் நமக்குச் சொந்தமாகிறதோ, அதேபோல, மனத்தாழ்மையும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் நமக்குக் கிடைத்தபோதிலும், நம்மைச் சிறுமைப்படுத்தும் வழியில் நாம் நடத்தப்படும்போது, தேவனுடைய பலத்த கரத்திற்குள் நாம் அடங்குவதால், மனத்தாழ்மை நமக்குச் சொந்தக்குணமாகிறது. ஆண்டவரின் மனத்தாழ்மை அவரடைந்த அவமானம் நிந்தைகள் மூலமாகப் பூரணப்பட்டது. அந்த வழியை நாம் மறந்துவிடக்கூடாது. மனத்தாழ்மையுள்ள ஆண்டவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிப்பதால் மனத்தாழ்மை நமக்குள் வருகிறது. ஆனால் ஆண்டவர் பலவிதமான பாடுகள் அவமானங்கள் வழியாக நம்மை நடத்தும்போது, உள்ளே ஈவாக நாம் பெற்றுக்கொண்ட மனத்தாழ்மை, நமது ஜீவியத்தில் அதாவது நமது அனுபவத்தில் பலிதப்படுகிறது. ஆகையால் நிந்தை அவமானங்களைக் குறித்து நாம் கலங்கக்கூடாது. மேலும் நமது சொந்தப் பாவங்கள் தவறுதல்கள் நம்மில் சோர்வை உண்டாக்காமல் இன்னும் அதிக மனத்தாழ்மையை நம்மில் உண்டாக்குவதற்கு எத்தனங்களாக்கிக் கொள்வோமாக. கிறிஸ்து நமக்குள் இடைவிடாமல் வசிப்பதால் அவரிலிருந்த மனத்தாழ்மையாகிய சிந்தை நம்மிலும் காணப்படும்.

# XII
# The Death of Christ
# கிறிஸ்துவின் மரணம்

"எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" 2. கொ. 5 : 14.

மரணம் பயங்கரமான சத்துரு. மனுஷன் எதை இழந்தாலும் தன் உயிரை இழக்கச் சம்மதிக்கமாட்டான். ஆகையால் ஒருவன் தன் உயிரைக் கொடுக்கக் கூடிய அன்புக்கு நிகரான அன்பு இல்லையென்று ஆண்டவரும் சொன்னார். மனுக்குல மனைத்துக்கும் மரணம் என்றால் கொடிய திகில்தான். என்ன நேரிட்டபோதிலும் ஊரை விட்டு நீங்காதவர்கள், கொள்ளைநோய் வந்து குடும்பங்கள் சாவதைக் கண்டால் நெடுங்காலம் வாழ்ந்த கிராமத்தைவிட்டு ஓடிப்போவார்கள். பணமிழந்தால் திரும்பச் சம்பாதிக்கலாம். உத்தியோக மிழந்தால் வேறொன்றைத் தேடலாம். சுக மிழந்தால் சுகப்படுத்திக்கொள்ளலாம். உயிர்போன பின் மனுஷன் என்ன செய்வான்? ஆகையால் குடும்பங்களில் சாவுநேரிட்டால் மக்கள் படும்பாடு கொஞ்சமல்ல. அவர்கள் அழுது புலம்புவதையும் முட்டிமோதுவதையும் யார் தடுக்க முடியும்! இருதயத்தின் தவிப்பு இருதயத்திற்கே தெரியும். 'போனது போயிற்று, அழுதால் இனிவரப்போகிறதா' என்னும் ஞான உபதேசம் அச்சமயத்தில் பலிக்காது. மரண கஷ்டம் சகிக்கவொண்ணாத கஷ்டம். அன்புக்குரிய கணவர் மரிக்கக் கூடவே மரித்த மனைவிகள் உண்டு. கூடவே மரிக்காவிட்டாலும் ஆறுத்துயரத்தில் அமிழ்ந்து, பட்டினியாய்க் கிடந்து, அகாலமரணமடைந்தவர்கள் பலர். மரணத்துக்கொப்பான கஷ்டமும் துக்கமும் வேறில்லை.

## 1. மரணம் என்றால் என்ன?

மனுஷனுடைய ஆவி அவன் சரீரத்தைவிட்டு நீங்குவதைச் சாவு என்று எல்லா மனுஷரும் அழைக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய

நாமுங்கூட அதே வார்த்தையையே உபயோகித்து வருகிறோம். ஒருவர் நோயினாலோ விருத்தாப்பியத்தினாலோ தேகத்தைவிட்டுப் போய் விடுவாராகில் இன்னார் மரித்துப்போனாரென்றே நோட்டீஸ் அனுப்புகிறோம். எல்லா மனுஷரும் பேசுகிறபடியே நாமும் பேசுகிறோம். எல்லா மனுஷரும் துக்கிக்கிறபடியே நாமும் துக்கிக்கிறோம். மறுமையைப்பற்றிய நம்பிக்கை நமக்கிருந்தபோதிலும் இந்தத் துயரமான சமயத்தில் அந்த நம்பிக்கை மங்கி மறைந்துபோகிறது. நம்மை விட்டுப் பிரிந்துபோகிறவர்கள் வேதனை பாடுகளில்லாத ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறார்களென்றும், சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவிடம் போயிருக்கிறார்களென்றும் மற்ற நேரங்களில் நாம் சந்தோஷமாகப்பேசி மோட்ச கீதங்கள் பாடினபோதிலும், நமக்கு அருமையானவர்கள் நம்மை விட்டுப் பிரியும் வேளை வரும்போது சகலமும் மாறிப்போகிறது. அவர்கள் மகிமையில் பிரவேசித்து கிறிஸ்துவிடம் போயிருக்கிறார்கள் என்பதற்காகவே நாம் அழுது புலம்புகிறதுபோல் தோன்றுகிறது. அவர்கள் ஆண்டவரிடத்தில் போயிருக்கிறார்கள் என்பதற்காக நாம் அழுகிறதில்லை என்பது வாஸ்தவமானாலும், நம்மை விட்டுப் போய்விட்டார்களே, இனி அவர்களைப்பார்த்து அவர்களோடு பேசமுடியாதே, அவர்களும் நம்மோடு பேசமுடியாதே என்பதை நினைத்தே அழுகிறோம். என்றாலும் அவர்கள் கர்த்தரிடம் போனதற்காக நாம் அழுகிறதுபோலவே தோன்றும்.

தேவ கிருபையால் நமது எண்ணங்களும் விருப்பங்களும் வேறு விதமாய் மாறவேண்டியதிருக்கின்றன. நாம் பூமிக்குரிய காரியங்களில் அதிகப்பற்றுவைத்து, நமக்கருமையானவர்கள் கடவுளைப்பார்க்கிலும் நமக்கே அதிகச் சொந்தம்போல் உரிமை பாராட்டி நேசித்து இப்பூமியை நமது நித்திய குடியிருப்பாகவும், அதன் இன்ப சந்தோஷங்களை நமது அனுபவமாகவும் பாவித்து நடக்கும்போது, அவர்கள் நம்மை விட்டுப் பிரிவது மரணமாகவும் தாங்கமுடியாத துயரமாகவும் இருக்கும் என்பது நிச்சயம். இங்கிருக்கும் காலத்தில் நாமும் நமக்குச் சொந்தமானவர்களும் கிறிஸ்துவுக்குள் பிழைத்து, பரத்தை நமது குடியிருப்பாக்கி, ஆவிக்குரிய அந்த ராஜ்யத்திற்காக நம்மை நாள்



தோறும் ஆயத்தஞ்செய்துகொண்டுபோவோமானால், அருமையானவர்கள் நம்மைவிட்டுப் பிரிவது சாவாயிராமல் அவர்கள் அன்புள்ள பிதாவின் வீட்டுக்குப் பிரயாணம் போவதாயிருக்கும். அவர்கள் பிரிவால் நாம் துக்கித்துக் கண்ணீர் சிந்தினபோதிலும், மறுமையின் நிச்சயமில்லாத மற்றவர்களைப்போல் நாம் ஆறாத்துயரத்தில் அமிழ்ந்து போகமாட்டோம். நாம் கண்ணீர் சிந்துவதற்காக ஆண்டவர் ஒருக்காலும் நம்மைக் கடிந்துகொள்வதில்லை. ஏனென்றால் நமது உள்ளத்தின் நம்பிக்கை அவருக்குத் தெரியும். சிலுவை சுமந்த ஆண்டவர் எருசலேம் குமாரத்திகளைப்பார்த்து: நீங்கள் எனக்காக அழவேண்டாம் என்றதுபோல, பாக்கியமான இடத்துக்குப் போனவர்களுக்காக நாம் அழாமல், அவர்கள் நம்மோடில்லையே என்கிறதற்காகவே அழுகிறோம். இது இயற்கை. பில்லி பிரே என்பவர் தன் மனைவி ஆவி பிரிந்தவுடனே, ஆ, என் அருமை மனைவி ஆண்டவரிடம் போயிருக்கிறாளே, அங்கே என்ன சந்தோஷம்! என்ன ஆனந்தம்! என்று அவள் கட்டிலைச் சுற்றி ஆடிப் பாடினதுபோல, நாம் அழுகையை நிறுத்தி ஸ்தோத்திர கீதம் பாடக் கூடுமானால் அதற்கு நிகரான விசுவாசம் இல்லை. ஆனால் கிறிஸ்துவின் சமுகம் நமக்கு அவ்வளவு பிரத்தியக்ஷமாகாததினால் நாம் கலங்கித் தவிக்கிறோம்.

ஒரு காரியம் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மனுஷருக்குள் மரணம் என்பது மகா பயங்கரமும் துக்கமுமான விஷயம். இன்னார் மரித்தாரென்றால் எல்லாரும் அதைக் குறித்துக் கவலையோடு பேசிக்கொள்வார்கள். மரணம் நமக்குள் இவ்வளவு பெரிய சம்பவமாகக் கருதப்படும்போது, ஆண்டவர் தமது போதனைகளில் அதைப்பற்றி ஒன்றுமே பேசாமல் விட்ட காரணமென்ன? அவர் மரணமென்றும், மரித்தோர் என்றும் பேசியிருக்கிறார். ஆனால் அதன் கருத்து வேறே என்பது பிரத்தியக்ஷம். நாம் மரணம் என்று சொல்வதை ஆண்டவர் மரணம் என்று சொல்வதில்லை. மரணத்தை அவர் நித்திரையென்றே அழைக்கிறார். அவர் யவீரின் வீட்டில் நுழைந்தபோது அங்கே அழுது புலம்புகிறவர்களைக் கண்டு: ஏன் இப்படி அழுகிறீர்கள்? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவர்களெல்லாரும்

அவரைப் பைத்தியகாரனென்றே நினைத்தார்கள். பிரத்தியக்ஷமாய்த் தங்கள் கண்கள் காண பிள்ளை மரித்திருக்கும்போது, அது நிச்சயமாயிருக்கும்போது, பிள்ளைக்குப் பேச்சு மூச்சில்லாதிருக்கும்போது, பிள்ளை மரிக்கவில்லை, நித்திரைசெய்கிறது என்று சொன்னால் யார்தான் பரியாசஞ் செய்யாதிருப்பார்கள்? லாசருமரித்து, அடக்கமாகி, நாலு நாளுமாகிவிட்டது. லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்று ஆண்டவர் சொன்னார். அவன் வியாதியாயிருந்ததை அறிந்திருந்த சீஷர்கள் அவரைப் பார்த்து அவன் நித்திரைசெய்தால் சுகமாவான் என்று நாம் சொல்லுகிறது போலவே அவர்களும் சொன்னார்கள். காரியம் அறியாமல் பேசுகிறார்கள் என்று ஆண்டவர் அறிந்து, நாம் உபயோகிக்கிற தப்பிதமான வார்த்தையையே அவரும் அவர்கள் நிமித்தம் உபயோகித்து "லாசரு மரித்துப்போனான்" என்றார். உடனே அதை அறிந்துகொண்டு விசனப்பட்டார்கள். ஜீவனாவது என்னவென்று கேட்டால் உடனே நமது சரீரத்தையே நினைக்கிறோம். மரணமாவது என்னவென்று கேட்டால் உடனே ஜீவனில்லாத ஒரு சரீரத்தையும், பிரேதப்பெட்டியையும், கல்லறையையும் நினைக்கிறோம். ஆகவே ஜீவனாவது என்னவென்பதையும், மரணமாவது என்னவென்பதையும் நாம் சரியானபடி கிரகித்துக்கொண்டவர்களல்ல. ஜீவன் என்பதும் மரணமென்பதும் நமது அறிவுக்கு எட்டாமலேயிருக்கிறது. நமது சரீரமும் நம்மைச்சூழ்ந்திருக்கும் சகல காரியங்களும், நாம் அனுபவிக்கும் நன்மைகளும், மறைவான மெய்யான நிலையான நித்தியகாரியங்களுக்குப் புறம்பான அடையாளங்களாகும். அநேக காரியங்களில் நமது அறியாமையைப் போக்கி உண்மையை வெளிப்படுத்தின ஆண்டவர், மரணம் என்னும் விஷயத்தின்பேரில் போதிப்பதற்கு நாம் செவிகொடுக்கவேண்டும். அவர் போதிப்பது நமது வழக்கத்துக்கு விரோதம்போல் தோன்றினாலும், அதை ஏற்றுக்கொள்வது நமக்குக் கஷ்டம்போலிருந்தாலும், சத்தியபரனாகிய ஆண்டவரிடத்தில் கற்றுக்கொள்ளும வாஞ்சை நமக்கிருக்கவேண்டும். அவர் வாக்கை நம்புவதாலேயே மரணத்தின் பயமும் கசப்பும் நீங்குகிறது. நாம் மரணமென்று



அழைப்பதை அவர் நித்திரையென்று அழைப்பதாலே நாமும் அதை நித்திரையென்றே சொல்லவேண்டும். அவர் சரீரத்தைவிட்டு ஆவி நீங்குவதை நித்திரையென்று சொன்னபடியால், மரணம் என்பதே இல்லை என்று நாம் நினைக்கக்கூடாது. பாவத்தின் சம்பளமாகிய மரணம் இருக்கவேயிருக்கிறது. அது மகா பயங்கரமானது, மகாகொடியது. அந்த மரணம் எப்படிப்பட்டதென்பதை கிறிஸ்து ஒருவரே அறிவார். ஏனென்றால் அவர் ஒருவரே அந்த மரணத்தை ருசி பார்த்தவர். அதனுடன் போராடினவர். அதை மேற்கொண்டு வெற்றிபெற்றவர். "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" (2. கொ. 5. 14). சரீரத்தைவிட்டு ஆவி பிரியும் அனுபவத்தை அவர் மரணமென்று ஒப்புக்கொள்ள மாட்டார். அப்படியானால் ஆண்டவர் கருத்துப்படி, அவர் அனுபவத்தின்படி மரணமாவது என்னவென்று சற்று சிந்திப் பார்ப்போம்.

## II. மரணத்திலிருந்து நமக்கு ரட்சிப்பு.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து படிக்கும்போது பாவத்தால் மரணம் வந்ததென்றும், அந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்க கிறிஸ்து வந்தாரென்றும் அறிகிறோம். சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதே மரணமானால் ஆண்டவர் தம்மை நம்பின ஒருவரையும் அந்த மரணத்திலிருந்து ரட்சிக்கவில்லை என்றே சொல்லவேண்டியதாகும். ஏனென்றால் தேவமக்கள் யாவரும் சகல பரிசுத்தவான்களும் நமது கருத்தின்படி மரித்தே போனார்கள். ஆகையால் ஆண்டவர் நம்மை ரட்சிக்கும்படி வந்த மரணம் வேறே. சரீரத்தைவிட்டு ஆவி பிரிவது அந்த மரணமல்ல. சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதை ஆண்டவர் நித்திரை என்கிறார். ஆகையால் அவர் நம்மை நித்திரையிலிருந்து ரட்சிக்கும்படி வராமல், பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்தே ரட்சிக்க வந்தார். சரீரத்தை விட்டு ஆவி பிரிவதையே நாம் மரணம் என்று சொல்லுவோமானால் மரணத்தைப்பற்றி ஆண்டவர் கூறின வசனங்கள் குழப்பமாகும். திருஷ்டாந்தமாக இரண்டு மூன்று வசனங்களை மாத்திரம் நாம் எடுத்து ஆராய்வோம். "ஒருவன் என்

வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோ. 8: 51). அப்போஸ்தலர் ஆண்டவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளவில்லையா? ஆதிமுதற்கொண்டு பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும் அவர் வசனத்தைக் கைக்கொண்டு நடக்கவில்லையா? அவர்களெல்லாரும் நமது பாஷையின்படி மரித்துப்போனார்களே. ஆனால் ஆண்டவரோ அவர்கள் ஒருக்காலும் மரணத்தைக் காண்பதில்லை என்றாரே. அவர்கள் சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோனதை நாம் மரணம் என்று சொல்வோமானால் ஆண்டவர் சொன்னது பொய்யாகுமே. ஆண்டவர் போதித்தபடி சரீரத்தைவிட்டு ஆவி நீங்குவதை நாம் நித்திரையென்று ஒப்புக்கொள்ளுவோமானால் ஆண்டவர் நம்மை ரட்சிக்கவந்த மரணம் வேறொன்றாக யிருக்கவேண்டும். இன்னொரு வசனம். "இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் மரிக்காமலிருக்கும்படி வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே." (யோ. 6 : 50). ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவை அனுதினமும் உட்கொண்டு பிழைக்கும் தேவபக்தர்கள் ஆதிமுதல் இருந்துவந்திருக்கிறார்களே. அவர்களில் யார்தான் நமது பேச்சுப்படி சாகாதிருந்தார்கள்? கிறிஸ்துவைத் தங்களுக்கு ஜீவனாக்கி நிமிஷந்தோறும் அவராலே பிழைத்த பவுல் யோவான் முதலானவர்கள் மரிக்காதிருந்தார்களா? அவர்கள் மரித்தார்கள் என்று சொல்வோமானால், அவர்கள் "மரிக்காமலிருக்கும்படி நான் வானத்திலிருந்து இறங்கின அப்பம்" என்று ஆண்டவர் சொன்ன வார்த்தை பொய்யாகுமே. ஆகையால் ஆண்டவர் போதனைப்படி அவர்கள் தேகத்தைவிட்டு நீங்கினதை நாம் நித்திரை என்று ஏற்றுக்கொள்வோமானால், அவர்கள் மரிக்கமாட்டார்கள் என்று ஆண்டவர் சொன்ன மரணம் வேறொன்றாயிருக்கவேண்டும். வேறொரு வசனம். "என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோ. 5 : 24.) இந்த வசனத்தை ஆராயும்போது, மனுஷன் ஏற்கனவே மரணத்துக்குட்பட்டி-



ருக்கிறான் அதாவது மரித்திருக்கிறான் என்றும், அவன் ஆண்டவர் வசனத்தைக் கேட்டு அவரையும் அவர் மூலமாய் பிதாவையும் நம்பி ஏற்றுக்கொள்ளும்போது, தன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பிரவேசிக்கிறான் என்றும் தெளிவாய் அறிகிறோம். ஜீவனில் மரணமில்லை. அவன் நித்திய ஜீவனுக்குரியவனாகிவிட்டான். அவன் மரணத்துக்குரியவனல்ல. இதுவே ஆண்டவருடைய தெளிவான போதனை. இதன் உண்மையை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் அநேக வசனங்கள் உண்டு. இப்படியிருக்க தேவமக்கள் பரிசுத்தவான்கள் நோயாலோ அல்லது விருத்தாப்பியத்தாலோ பலவீனப்பட்டு, அவர்கள் ஆவி தேகத்தை விட்டுப் பிரிந்துபோனால், உடனே இன்னார் மரித்துப்போனார் என்று எங்கும் நோட்டீஸ் அனுப்புகிறோம். இன்னார் மரிக்கவில்லை நித்திரையாயிருக்கிறார் என்று ஆண்டவர் யவீரின் மகளைக் குறித்துச் சொன்னதுபோல் நாம் சொல்லுவோமானால் அது எல்லாருக்கும் விகாரமாகத்தோன்றும். ஆகையால் ஆண்டவர் லாசருவைக்குறித்து: "அவன் மரித்துப்போனான்" என்று சீஷர்களினிமித்தம் சொன்னதுபோல நாமும் பேசவேண்டியதாயிருக்கிறது. வழக்கம் வல்லமையுள்ளது. அதை மாற்றிப்பேசுவது எவ்வளவோ கஷ்டம். கிறிஸ்துமூலம் வெளிப்பட்ட சத்தியத்தை நாம் ஏற்றுக்கொள்ளும்போது "சத்தியம் நம்மை விடுதலையாக்கும்." சரீரத்தைவிட்டு ஆவி பிரிவது நமக்கு மரணமாயிராமல் நித்திரையாகும். ஆண்டவர் நமது சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதாகிய நித்திரையிலிருந்து நம்மை ரட்சிக்க வராமல், பயங்கரமான கொடிய மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்க வந்தார். ஜீவனாகிய அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் மரண நிலைமையைவிட்டுநீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்களைக் குறித்து மரணம் என்று பேச இனி இடமில்லை. நித்திரை எல்லாருக்கும் உரியது. நல்லார் பொல்லார் யாவரும் நித்திரையடைவார்கள். ஆனால் எல்லாரும் மரிக்கமாட்டார்கள். கிறிஸ்துவைத் தங்களுக்கு ஜீவனாக்கி அவராலே பிழைக்கிறவர்களுக்கு இனி மரணம் இல்லை. அவர்கள் ஒருக்காலும் மரிக்கமாட்டார்கள். நித்திரை

மரணம் என்னும் இரண்டு வார்த்தைகளை நாம் இதுவரை உபயோகித்தபோதிலும், நித்திரையைப்பற்றி விஸ்தரித்தோமே யல்லாமல் மரணமாவது என்னவென்று இன்னும் நாம் பார்க்கவில்லை. அதை கிறிஸ்துவிலேதான் அறியக்கூடும்.

## III. கிறிஸ்து மரித்தார்

கிறிஸ்துவின் நிகரற்ற ஜீவியத்தையும் அவரது மேலான உபதேசத்தையும் போற்றுவார் அநேகர். அவரைக் குருவாக மதித்து அவர் நல்மாதிரியைப் பின்பற்றப் பார்ப்பவர் அநேகர். ஆண்டவர் ஜீவியத்தில் அவர் மரணமே பிரதானம். அவர் எவ்வளவு பரிசுத்தமாகப் பிழைத்தும், எவ்வளவு தெய்வீக உபதேசங்கள் செய்தும் மரிக்காமலே மறுமைக்குட் பிரவேசித்திருப்பாரானால் உலகத்துக்கு ரட்சிப்பில்லை. ஆகையால் அப்போஸ்தலன்: "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" என்றார். ஆகையால் கிறிஸ்துவின் ஜீவியத்தில் அவர் மரணமே பிரதானம். எல்லா மனுஷரும் பாவத்தால் மரணத்துக் குள்ளானவர்கள். அந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்கும்படி பாவமற்ற கிறிஸ்து நமக்காக மரணத்தை ஏற்றுக்கொண்டார். மரணமாவது என்னவென்பதை அவரிலேதான் அறியவேண்டும். நமக்கு அருமையானவர்கள் தேகத்தைவிட்டுப் போவதை நாம் மரணமென்று பேசுவது நமக்கு வழக்கமானபடியால் கிறிஸ்துவும் அவ்வாறே மரித்ததாக நினைக்கிறோம். ஆ, என் ஆண்டவர் எனக்காகச் சிலுவையிலறையப்பட்டு, ரத்தஞ்சிந்தி, வேதனையுற்று, தலை சாய்த்து மரித்தாரே என்று புலம்புகிறோம். அவர் சரீரத்தைவிட்டு ஆவி பிரிந்ததையே நாம் மரணமாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் விஷயத்தில் நித்திரை என்னப்படுவது அவர் விஷயத்தில் மாத்திரம் மரணமாகுமோ? சரீரத்தைவிட்டு ஜீவன் பிரிவதை அவர் மரணமென்று சொல்லாமல் நித்திரையென்று போதித்தாரே. அப்படியிருக்க மற்றவர்களுக்கு ஒருபோதனையும் தமக்கு ஒரு போதனையுமா? சத்தியமென்றால் எல்லாருக்கும் எக்காலத்திலும் சத்தியந்தானே. அப்படியிருக்க மற்ற



வர்களுக்கு நித்திரையாயிருப்பது தமக்குமாத்திரம் மரணமாகுமா? ஆகையால் ஆண்டவர் தமது ஆவியை பிதாவின் கரத்தில் ஒப்புவித்தது அவருக்கு நித்திரையாகும். "கிறிஸ்து நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார்" என்று சொல்லியிருப்பதால் சிலுவையில் அவர் நித்திரை யடைந்தாரென்பதும் உண்மை. சிலுவையில் இரண்டு காரியங்கள் சம்பவித்தன. ஒன்று மரணம், மற்றது நித்திரை. மரணம் முந்தினது; நித்திரை பிந்தினது. அவர் மரணத்தை ஏற்றுக்கொண்டு அத்தோடு போராடி, அதன் கசப்பை ருசிபார்த்து, மரணத்தை மேற்கொண்டு வெற்றியடைந்த பின்பே தமது ஆவியைத் தமது பிதாவின் கரத்தில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். "முடிந்தது" என்று அவர் சொன்ன சொல்லானது, வியாதியால் அதிகக் கஷ்டப்பட்டு, சகலமும் ஒடுங்கி, ஆவிபிரியும் வேளையில், நோயாளி பெருமூச்சோடு சொல்லுகிற வார்த்தை போன்றதல்ல. சிலுவையில் தொங்கின ரட்சகர் இன்னும் பலத்தோடிருக்கும்போதே தாம் அடைந்த ஒரு வெற்றியைக் குறிக்கும்படி 'முடிந்தது" என்று கர்ச்சித்தார். ஆகையால் ஏதோ ஒரு கொடிய போராட்டம் அதற்குமுன் அவருக்குள் நடந்திருக்கிறது. அந்தப் பயங்கரமான போராட்டத்தில் ஆண்டவர் வெற்றிபெற்றார். அந்தப் போராட்டமே மரணம். அவர் சரீரத்தில் பிழைத்திருக்கும்போதே மரித்து, தமது மரணத்தால் நமது மரணத்தை அழித்தார். அவர் நித்திரையடைவதற்குமுன் சிலுவையில் அனுபவித்த மரணத்தின் ரகசியத்தை நாம் பூரணமாய் அறியமுடியாது. ஆள் ரகசியமாயிருப்பதுபோலவே அவரடைந்த மரணமும் ரகசியமாயிருக்கிறது. அவர் ஒருவரே மரித்தபடியால் அவருக்கே அதன் ரகசியம் தெரியும். பாவமற்றவர் மரிக்கவேண்டுமானால் அது எப்படிப்பட்ட மரணம்? அதற்கு நிகரான மரணம் வேறில்லை. "கிறிஸ்துவே மரித்தவர்" (ரோ. 8: 34). "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்" (2 கொ. 5. 14). "ஒவ்வொருவருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்" (எபி. 2: 9). "கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" (1. கொ. 15: 3). மேற்கூறிய வசனங்கள் எவ்வளவோ கருத்துள்ளவைகள். மரணமாவது என்னவென்பதை கிறிஸ்து ஒருவரே பூரணமாய் அறிச்

தவர். அவர் ஒருவரே மரித்தவர். அவர் ஒவ்வொருவருக்காகவும் மரித்தவர். நமது பாவத்தின் பலனாகிய மரணத்தை அழித்து நமக்கு நித்திய ஜீவனை அருளும்படி மரித்தவர்.

## அந்த மரணமாவது என்ன?

ஆண்டவர் அடைந்த மரணத்தை நாம் பூரணமாய் அறியமுடியாவிட்டாலும், அவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளைக்கொண்டு ஒருவாறு அனுமானிக்கலாம். வியாழன் இரவு தமது சீஷரோடு அவர் பேசினபோது, பிதா தம்மோடு கூடயிருப்பதாகவும், பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டென்பதாகவும், தாம் பிதாவிடம் போவதாகவும், பிதா தம்மில் அன்பாயிருப்பதாகவும், தாம் பிதாவிலும் பிதா தம்மிலும் பூரண ஐக்கியத்திலிருப்பதாகவும் அமர்ந்த இருதயத்தோடும் உறுதியான நிச்சயத்தோடும் பேசினார். கெத்செமனே தோட்டத்தில் பிரவேசித்ததும் காரியமுழுவதும் வேறுவிதமாகக் காணப்படுகிறது. மகா சௌரியமுள்ள ஆண்டவர், அற்புதமூர்த்தி, அஞ்சாநெஞ்சன், ஜீவநாயகன் அங்கே படும்பாடுகள் பிரமிக்கத்தக்கதாயிருக்கின்றன. அவரைப் பிடிப்பாரில்லை அடிப்பாரில்லை. சத்துருக்கள் இன்னும் அங்கே வரவில்லை. அப்படியிருக்க ஆண்டவர் படும்கொடிய அவஸ்தைகளுக்குக் காரணமென்ன? காற்றையும் கடலையும் அதட்டி அமைதலுண்டாக்கினவர், பிசாசுகளைத் துரத்தினவர். உயிர்போனவர்களைப் பிழைக்கவைத்தவர் இச்சமயத்தில் பயந்து நடுங்குவதின் ரகசியமென்ன? பேதைச் சீஷர்களின் துணையை நாடுகிற காரணமென்ன? மும்முறை தரையில் விழுந்து "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்" பிதாவைநோக்கி வேண்டிக்கொள்வதின் முகாந்தரமென்ன? தம்மை மரணத்திலிருந்து ரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார் என்று எபிரேயர் நிருபத்தார் சொல்லுகிறார். அது எந்த மரணம்? ஆண்டவர் சிலுவைக்குப் பயந்தாரோ? வாரடிகள் வேதனைகளுக்குப் பயந்தாரோ? சிலுவையிலறைந்தால் தமது ஜீவன் சரீரத்தைவிட்டுப் போய்விடுமே என்று பயந்தாரோ? சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்குப் பயப்படவேண்டா



டென்று சீஷர்களைத் தைரியப்படுத்தினவர் தமது சிலுவைக்குப்பயந்து நடுங்கினாரோ? ஒருக்காலும் இவைகள் அவர் பயத்துக்குக் காரணமல்ல. தமக்கு நேரிட்ட சகலபாடுகளையும் வேதனைகளையும் எவ்வளவோ பொறுமையாய் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டாரென்பது நிச்சயம். அவரது அடியார்கள் கொடிய பாடுகளையும் குரூர வேதனைகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு தங்கள் பிராணனைச் சந்தோஷமாகக்கொடுத்திருக்க, அவர்கள் எஜமானும் ஆண்டவருமானவர் சிலுவையில் தமது ஜீவன் போய்விடுமே என்று பயந்தார் என்று சொல்வது எவ்வளவு அவமானம்! தமது ஆவியைத் தமது பிதாவின் கையில் ஒப்புவிக்கும்வரை சகல பாடுகளையும் வேதனைகளையும் எவ்வளவோ சாந்தமாய் தைரியமாய்ச் சகித்தாரென்பதற்கு சுவிசேஷ சரித்திரமே ஆதாரம். அப்படியானால் கெத்செமனேயில் அவர் எதற்காகப் பயந்து நடுங்கினார்? தாம் சிலுவையில் அனுபவிக்கப்போகிற, மனுஷர் கண்காணாத, புத்திக்கெட்டாத மரணத்தை நினைத்தே அவர் மயங்கினார். இது சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதல்ல. அது என்னவென்று பார்ப்போம்.

மகா பயங்கரமான ஓர் போராட்டம் தோட்டத்தில் அவருக்கு உண்டானதென்பது நிச்சயம். அதைப்பற்றி ஆண்டவர் தாமே வாய்விட்டுச் சொல்லாதிருந்தால் நமக்கு ஒன்றுமே தெரியாது. கிறிஸ்து மரிப்பதற்காகவே வந்தவர். தமது மரணத்தால் நமது மரணத்தை அழிக்கவேண்டுமென்பது அவர் தீர்மானம். இந்த விஷயம் நெடுகிலும் அவருக்குத் தெரிந்திருந்தபோதிலும் அவர் பயப்படவில்லை. அவர் ஊழியத்தில் உற்சாகம் குறையவுமில்லை. இந்த மரணத்தை அவர் நினைத்தபோதெல்லாம் அதை வேளை என்று அழைத்தார். அதாவது மரணத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் போராடும் வேளை. அவர் சிலுவைக்குப் போகவேண்டிய நாள் சமீபித்தபோது அந்த வேளை அதிகப் பலமாய் அவர் மனதில் வந்தது. "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த வேளையிலிருந்து என்னை ரட்சியும் என்று சொல்வேனோ? ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்றார். சிலுவைக்கு முந்தின நாள் இரவில் "பிதாவே வேளை வந்தது" என்றார்.

மரணமாகிய அந்த வேளைக்குள் பிரவேசிக்கும் நேரம் சமீபித்துவிட்டது. தோட்டத்தில் மரணமாகிய அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளவேணும். சிலுவையில் அதைப் பானம் பண்ணவேண்டும். பிதாவே அந்தப் பாத்திரத்தை அவருக்குக் கொடுத்தவர். அதில் பானம் பண்ணுகிற விஷயத்திலேதான் மகா போராட்டம் நேரிட்டது. நெடுகிலும் அவர் எதிர்பார்த்த வேளை தோட்டத்தில் முகமுகமாய் வந்தது. இதுவரை சகல விஷயத்திலும் பிதாவின் சித்தத்துக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்த ஆண்டவர் இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் திகைக்கிறார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய அவருக்கு மனமுண்டு. ஆனால் பாத்திரமோ மகா பயங்கரமானது. பாவிகளை ரட்சிக்க அவருக்கு எவ்வளவோ வாஞ்சையுண்டு. ஆனால் பானம் பண்ணவேண்டிய பாத்திரமோ கொடிய கசப்பு. இதுவரை உடனுக்குடனே கீழ்ப்படிந்த ரட்சகர் இந்த இடத்தில் மாத்திரம் தாமதிக்கிறார். சரீரத்தில் எவ்வளவு பாடுகள் வேதனைகளானாலும் சந்தோஷமாய்ச் சகித்துக்கொள்வார். தாம் அனுபவிக்கப்போகிற மரணத்தை நினைத்தபோதோ நிற்கமுடியாமல் கீழே விழுகிறார். "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்." "என் ஆத்துமா மரணத்தேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். முகங்குப்புற விழுந்து: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்தார். "திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்." அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று பிதாவை வேண்டிக்கொண்டார். "அவருடைய வேர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தன." நம்மை ரட்சிக்கும்படி வந்து எவ்வளவோ காரியங்களை நிறைவேற்றினவர் கடைசிநேரத்தில் நம்மை ரட்சிக்கத் தமக்கு மனமில்லை என்று சொல்வாரா? அந்த வேளை தம்மைவிட்டு நீங்கவேண்டுமென்று ஜெபிப்பதைப் பார்க்கும்போது அப்படித்தோன்றுகிறது. ஆனால் நடந்த காரியம் வேறே. நம்மை மரணத்திலிருந்து ரட்சிக்கவேண்டுமானால் அந்த மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டு, அதன் கொடிய பயங்கரத்தை தமது ஆத்து-



மாவில் அனுபவிக்கவேண்டும். இதுவே பானம் பண்ணுதல், ருசிபார்த்தல் என்பதின் அருத்தம். காலமெல்லாம் மறுவார்த்தை பேசாமல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினதுபோல, தோட்டத்திலும் ஒரு வார்த்தையின்றி பாத்திரத்தை ஏற்றுக்கொண்டிருப்பாரானால் ஆண்டவர் அனுபவித்த மரணத்தின் பயங்கரத்தை நாம் அறியவேமுடியாது. அவர் நமக்காகச் சிலுவையில் மரித்தாரென்று வெகு சாதாரணமாய்ப் பேசுவோம். ஆனால் ஆண்டவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளும் அவரடைந்த பயம் திகில் வியாகுலங்களும், அவர் தேகத்திலிருந்து கீழேவிழுந்த ரத்தத்தின் பெருந்துளிகளும், அவர் ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கின கொடிய மரணத்தின் தன்மையைக் கொஞ்சமாகிலும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அப்படியிருந்தபோதிலும் எப்பொழுதும்போல பிதாவின் சித்தத்துக்குக் கீழடங்கி, மனப்பூர்வமாய் அந்தக்கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டு சிலுவைக்குப் புறப்பட்டார். அந்த மரணமாவது என்னவென்று இன்னும் நாம் சொல்லவில்லை.

சரீரத்தைவிட்டு ஆவி நீங்குவதை நித்திரையென்றோம். ஆண்டவர் சிலுவையிலிருந்து தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்தபோது நித்திரை அடைந்தார். ஆகையால் அவர் மரணத்தை அனுபவித்தது அதற்கு முந்தி நடந்திருக்கவேண்டும். அவர் சிலுவையில் உயிரோடிருந்தபோதே மரணத்தை அனுபவித்தார். பாவியின் நிலைமையும் அதுதானே. "நீ உயிருள்ளவனென்று பேர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்." பாவிக்காகப் பாவமான ஆண்டவர் தமது ஆத்துமாவில் மரணத்தை ஏற்றுக்கொண்டார். தோட்டத்திலிருந்தபோது "என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். சிலுவையில் அந்த மரணதுக்கத்தை அனுபவித்தார். அவர் சிலுவையிலறையப்பட்டபோது யாதொரு திகிலின்றி சாந்தத்தோடு தொங்கினார். சத்துருக்களை மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டார். கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தார். தாயாரை யோவானிடம் ஒப்புவித்தார். மரண அனுபவத்திற்குள் இன்னும் அவர் பிரவேசிக்கவில்லை. மூன்றாம் வசனம் சொல்லி முடித்ததும்

அவர் தோட்டத்தில் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டிய வேளை வந்தது. அப்போது மத்தியானம் பன்னிரண்டு மணி. பன்னிரண்டு முதல் மூன்றும் மணிவரை ஆண்டவர் யாதொரு வார்த்தையும் பேசவில்லை. சூரியன் இருண்டுபோனதால் அந்த மூன்றுமணிநேரமும் எங்கும் அந்தகாரமாயிருந்தது. சிலுவையில் தொங்கினவரை ஒருவரும் பார்க்கமுடியாதபடி இருள் மூடிக்கொண்டது. ஆண்டவர் அடைந்த கொடிய மரணபோராட்டத்தை மனுஷன் பார்க்க யோக்கியன் அல்ல. சிலுவையைச் சூழ நின்ற சத்துருக்கள் இருளில் அகப்பட்டுத் திகைத்து நின்றார்கள். பரியாசக்காரர் வாயடங்கி பேச்சு மூச்சற்றுப்போனார்கள். இந்த மூன்றுமணிநேரமாக ஆண்டவர் பட்ட அவஸ்தையை அவரேயன்றி அறிந்தவர்களில்லை. கொடிய இருள் அவர் ஆத்துமாவை மூடிக்கொண்டது. பாழ்த்த வெள்ளப் பிரவாகம் அவரை மோதியடித்தது. அவர் தோட்டத்தில் வெளியிட்ட வார்த்தைகளைக்கொண்டுதான் அந்த மரணத்தின் தன்மையை அனுமானிக்கக்கூடும். பிதாவும் வாசஸ்தலங்களும் மறைந்தன. திக்கற்றவராய், துணையற்றவராய், கைவிடப்பட்டவராய், இருளில் தள்ளுண்டவராய்க் கலங்கித் தவித்தார். கொடிய திகிலும் மிகுந்த வியாகுலமும் அவர் இருதயத்தை ஆண்டுகொண்டன. சுருக்கிச் சொல்வோமானால் கடவுளற்றவராய்ப் போனதே அவரடைந்த மரணம்.

கடவுளால் கைவிடப்படுவதே மரணம். பிதா தம்மோடிருக்கிறவரை, பிதாவின் ஐக்கியத்தில் அவர் பிழைக்கும் வரை, எவ்வளவு கொடிய பாடுகளையும் வேதனைகளையும் அவர் அஞ்சாது சகித்துக்கொள்வார். பிதாவாகிய தேவனை இழந்துபோவதை அவர் சகிக்கவே முடியாது. அவர் தோட்டத்தில் ஏற்றுக்கொள்ளத் திகைத்த பாத்திரம் அதுதான். தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கவேண்டுமென்று அவர் ஜெபித்த வேளை அதுதான். பிதாவாகிய தேவன் அவருக்கு ஜீவன். அவரை இழந்துபோகும் அனுபவம் மரணம். மூன்றுமணிநேரம் இந்த நிலைமையிலிருந்து போராடினார். சாத்தான் அவரது திக்கற்ற, கைவிடப்பட்ட நிலைமையை அறிந்து அவர் ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்டு கொடிய உபத்திரவப்படுத்தினான். திக்கற்ற, கைவிடப்பட்ட, மகா பயங்கரமான வேளையில் அவரிருந்தாலும் கடவுள்மீதுள்ள நம்பிக்கையை அவர் இழந்துபோகவில்லை. காரிருளில் மறைந்துபோன கடவுளை அவர் இருதயம் தொடர்ந்து பற்றிக்கொண்டேயிருந்தது. மூன்றுமணிநேரமானதும் அந்தகாரம் நீங்கி வெளிச்சம் தோன்றினது. உடனே அவர் மறுபடியும் வாய்திறந்து: "என் தேவனே, என் தேவனே, என் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டார். அந்த மூன்றுமணிநேரத்தில் நடந்ததென்னவென்பதை இந்த வார்த்தைகள் மகா தெளிவாய் உண்மையாய்க் காண்பிக்கின்றன. கடவுளால் கைவிடப்படும் அனுபவமே மெய்யான மரணம். பாவிகளில் ஒருவனாகிலும் கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்டவனல்ல. அவன் கடவுளைக் கைவிட்டாலும் கடவுள் அவனைக் கைவிடவில்லை. கொடிய துன்மார்க்கனையும் அவர் பராமரித்துக் காப்பாற்றுகிறார். கடவுள் ஒருவனை முற்றிலும் கைவிட்டால் அவன் அதைச் சகிக்கமுடியுமா? உயிரோடே நரகத்திலிருப்பானே. பாவி மரணத்துக் குரியவனாயிருந்தாலும், அவன் மரணத்துக்குட்பட்டிருந்தும், தேவகிருபைக்கும் தேவ அன்புக்கும் அவன் புறம்பானவனல்ல. ஆனால் கிறிஸ்துவோ நமக்காகப் பாவமாகிப் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைப் பூரணமாய் ருசிபார்த்தவர். ஆகையால் "கிறிஸ்து ஒருவரே மரித்தவர்" என்று சொல்லியிருக்கிறது. மரணத்தை மேற்கொண்டு ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கின ஆண்டவரை முற்றிலும் புறக்கணிக்கும் பாவிகள், மரணத்தின் பூரண பயங்கரத்தை, கடவுளற்ற மோசமான நிலைமையை தாங்களே அனுபவித்துப் புலம்பும் காலம் வரும். அதுவே நரகம்



பாவமற்றவருக்கு மரணமேன்? ஆண்டவரிடத்தில் பாவமில்லை. அவர் எப்பொழுதும் பிதாவுக்குச் சித்தமானதைச் செய்து சகலகாரியங்களிலும் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்தவர். அப்படியிருக்க கடவுளால் கைவிடப்படுவதாகிய கொடிய மரணம் அவருக்கேன் வந்தது? அவருக்கு வந்த மரணம் நமது மரணமே. பாவத்தின் பலனாகிய மரணத்துக்குரியவர்களாயிருந்த நம்மை அந்தக் கொடிய மரணத்திலிருந்து ரட்சிக்கும்படிக்கு அவர் ஒருவரே நமக்காக மரித்தார்.

இது அவருடைய அளவற்ற அன்பும் கிருபையுமாகும். அவர் உலகத்தில் வந்தபோதே மற்றவர்களைப்போல் ஒரு தனிமனுஷனாக வராமல், மனுக்குல முழுவதுக்கும் பிரதிநிதியாக, நம்மை அவர்களோடு பூரணமாய் ஒன்றாக்கின மனுஷகுமாரனாக வந்தார். இந்த ஒற்றுமையின் பலனாக அவர் மரணத்தைச் சகிக்கவேண்டியதாயிற்று. நாம் அவரை நமது ரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரோடு ஐக்கியப்படும் பலனாக மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறோம். மனுமக்கள் யாவரும் "பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தால்" ஆளப்பட்டுத் தவிக்கிறார்கள். பாவம் எங்கேயோ அங்கே மரணம் உண்டு. பாவத்தையும் மரணத்தையும் அழிக்கவே பாவமற்ற கிறிஸ்து நமக்காகப் பாவமாகி பாவத்தின் பலனை மரணத்தையும் ஏற்றுக்கொண்டு வெற்றியடைந்தார். "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" என்பதற்கு கைவிடப்பட்ட கிறிஸ்து உயிர்த்தெழுந்து பிதாவின் மகிமைக்குள் பிரவேசித்து அவருடைய பூரண ஐக்கியத்தில் பிரவேசித்த ஆதாரம். இவ்வாறு மகிமையடைந்த ஆண்டவர் தமது புதிய ஜீவனை விசுவாசிகள் உள்ளங்களில் அருளி, அவர்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்கச் செய்கிறார். "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்றே" (ரோ. 8: 2). நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசித்தாயிற்று. நாம் நித்திரை யடையலாம், ஆனால் மரணம் என்று பேச இனி இடமில்லை. மரணத்தை மேற்கொண்ட ஆண்டவரைத் தங்களுக்கு ஜீவனாக்கிக்கொண்டவர்களுக்கு இனி மரணமில்லை. கிறிஸ்து மரித்ததின் பலனாக நமக்குக் கிடைத்த ரட்சிப்பு இதுவே. கிறிஸ்து நமக்கு ஜீவனானார். நாம் அவராலே பிழைக்கிறோம். "நமது ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது."

## IV. மரணத்தைப்பற்றி அப்போஸ்தலர் போதனை.

மரணத்தைப்பற்றி இதுவரை ஆண்டவர் போதித்ததைக் கவனித்தோம். சரீரத்தை விட்டு ஆவிபிரிவதை நித்திரையென்றும்,



கடவுளை இழந்து, காரிருள் சூழ்ந்து, முற்றிலும் கைவிடப்பட்ட நிலைமையை மரணமென்றும் ஆண்டவர் அழைக்கிறார். பவுல் சொல்வதையும் கவனிப்போம். நாம் சாவு என்று அழைப்பதை அப்போஸ்தலன் "தேகத்தைவிட்டுக் குடிபோகுதல்" என்கிறார். அதாவது, ஒரு மனுஷன் ஒரு வீட்டில் குடியிருந்து வரும்போது, அந்தவீடு விழுந்து போகத்தக்க மோசமான நிலைமையிலிருந்தால் உடனே அந்த மனுஷன் அந்த வீட்டைவிட்டு வேறு வீட்டுக்குக் குடிபோவான். பவுல் சரீரமாகிய தமது வீட்டில் குடியிருக்கும்போது அந்தச் சரீரம் நோயாலோ அல்லது சிரச்சேதத்தாலோ தாம் வசிக்கத்தகுதியற்றதாகும்போது உடனே அதைவிட்டு கர்த்தரிடம்போய் குடியிருப்பதாகப் பேசுகிறார். ஆவியே மெய்யான மனுஷன். அவன் வசிக்கும் வீடு சரீரம். ஆனால் உள்ளே வசிக்கும் ஆவியாகிய மனுஷனை வெளிப்படுத்தும் சாதனம் சரீரமாயிருப்பதால் சரீரத்தையே நாம் ஆளாகப் பாவிக்கிறோம். ஆவிக்கும் சரீரத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. சரீரமாகிய வீடு பலவீனப்பட்டு, கண்மங்கி, காதடைத்து, பேச்சுநின்று, கால்கள் தள்ளாடி, மூச்சுத்திணறி, அது குடியிருக்கத் தகுதியற்றதாகும்போது மனுஷன் வீட்டைக் காலிபண்ணி விடுகிறான். தேவபக்தியுள்ள விருத்தாப்பியர் ஒருவரைப் பார்த்து. ஐயா, உங்கள் சுகமெப்படி என்று கேட்டபோது அவர்: நான் சுகமாகவேயிருக்கிறேன், ஆனால் நான் வசிக்கும் வீடுதான் மோசமான நிலைமையிலிருக்கிறது என்றார். வீடு அழிந்தாலும் அவனே இருக்கிறான். ஆதலால் அது அவனுக்கு மரணமாகாமல் குடிபோகுதலாகும் என்று பவுல் போதிக்கிறார். அவர்தாமே வேறொரு இடத்தில் சரீரத்தைப் போர்வைக்கு ஒப்பிடுகிறார். குளிர்காலத்தில் போர்வை மூடினவன் உஷ்டண காலத்தில் அதை எடுத்துவிடுவதற்கொப்பாகும் என்கிறார். பேதுரு சொல்வதையும் கேட்போம். "நான் கூடாரத்தைவிட்டுப் போவது சீக்கிரம் நேரிடும், இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயம்." சரீரத்தைக் கூடாரத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். நான் என்று அவர் சொல்வது கூடாரத்தில் வசிக்கும் பேதுருவையும், கூடாரம் என்பது அவர் சரீ-

ரத்தையும் காட்டுகின்றன. அதேயிடத்தில் "நான் சென்று போன பின்பு" என்று பிரயாணத்துக்கு ஒப்பிட்டும் பேசுகிறார். மரணம் என்கிற பேச்சில்லை. நித்திரை என்று ஆண்டவர் போதித்த வார்த்தையை அப்போஸ்தலரும் உபயோகித்திருக்கிறார்கள். ஆகிலும் தங்கள் சொந்த உவமானங்களைக் கொண்டும் பேசியிருக்கிறார்கள். ஆண்டவர் தாமே வேறொரு இடத்தில் "நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்துக்கு வந்தேன், மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவிடம் போகிறேன்" என்றார். இதுவும் பிரயாண உவமானமே. மரணம் என்று பேச இடமில்லை. இவை யாவற்றையும் கவனிக்கும்போது சரீரத்தை விட்டு ஆவி நீங்குவது மரணமல்லவென்றும், அது நித்திரை, பிரயாணம், வீடுமாற்றுதலாகுமென்றும் அறிகிறோம். கடவுளற்ற, திக்கற்ற, கைவிடப்பட்ட, காரிருள் சூழ்ந்த மகா பயங்கரமான நிலைமையே மரணமாகும். அந்த மரணத்தை கிறிஸ்து ஏற்றுக்கொண்டு போராடி மேற்கொண்டார். அவரைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டவர்கள் இந்த மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குரியவர்களாகிறார்கள். இனி அவர்கள் மரிப்பதில்லை. இது உண்மையானால் நமக்கு அருமையானவர்கள் சரீரத்தைவிட்டுப் போகும்போது நாம் சகிக்கமுடியாத துக்க சாகரத்தில் அமிழ்ந்துபோகிற காரணமென்ன?

## V. துக்கசாகரத்துக்குக் காரணம்.

இரண்டு காரணங்கள். இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஒன்று இம்மைக்குரிய பற்று; மற்றது மறுமையில் பற்றில்லாமை. இம்மைக்குரிய பற்றினால் மறுமையில் பற்றில்லாமற்போகும்; மறுமையில் பற்றில்லாமற்போனால் இம்மையில் பற்று வைக்க நேரிடும்.

இம்மைக்குரிய பற்று மகா வல்லமையுள்ளது. அதை இல்லையென்று மறுக்கமுடியாது. ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் ரத்தச் சம்பந்தமுள்ளவர்கள். நீண்டகாலம் ஒன்றாய் வசிக்கிறவர்கள். தாய், தகப்பன், சகோதரர், சகோதரிகள், பெற்றோர் மக்கள் என்னும் அருமையான நெருங்கிய சம்பந்தத்தில் வாழ்கிறவர்கள். முகம், பார்வை,



பேச்சு, சத்தம், அன்பு, வேலை, உதவி முதலான காரியங்களில் ஒருமித்துப் பிழைக்கிறவர்கள். சந்தோஷமோ துக்கமோ, லாபமோ நஷ்டமோ, கீர்த்தியோ அவமானமோ, சகலத்தையும் அவர்கள் பொதுவாய் அனுபவிக்கிறவர்கள். இச் சம்பந்தத்தில் காலம் செல்லச்செல்ல அவர்கள் அன்பும் பாசமும் வளர்ந்து பெருகுகின்றன. அவரவருடைய சரீரங்களே நமக்கு அருமையான ஆட்களாகின்றன. அவர்கள் எங்கேயாகிலும் சிலகாலம் பிரிந்துபோக நேரிட்டால் அவர்கள் முகப்படங்களைப்பார்க்க எவ்வளவோ ஆவலாயிருக்கிறோம். நமக்கு அருமையானவர்களுடைய சரீரத்தோற்றமும் அவர்கள் அன்பான முகமும் நமது இருதய பற்றைக் கவர்ந்துகொள்ளுகின்றன. இப்படியிருக்க நமக்கு அருமையாயிருப்பவர்களில் யாராவது ஒருவர் தன் சரீரத்தைவிட்டுப் பிரியநேரிட்டால் நம்மால் சகிக்கமுடியவில்லை. அவர்களுக்கும் நமக்கும் உண்டான ஆழமான அன்பின் பற்றே நமது ஆறாத் துயரத்துக்குக் காரணம். அந்நியர் ஒருவருடைய பிரிவுக்கு நாம் இதைப்போல் அழுது புலம்புவதில்லை. வழியிலே ஒரு பிரேதத்தைக் கண்டால் நாம் அழுவதில்லை. அதுவும் மரணந்தானே. நாம் ஏன் அழக்கூடாது? அந்த ஆளுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை. அது யாரோ நமக்குத் தெரியாது. அப்படியானால் இந்த ஆறாத் துயரத்திற்குக் காரணம் குடும்பப்பற்றும் அன்புமே. ஒரு தகப்பனுடைய பிள்ளைகளில் ஒன்று சிறு குழந்தையாயிருக்கும்போதே பெற்றாரை விட்டுப் பிரிந்து சிறியதாயார் வீட்டில் வளர்ந்தது. அந்தச் சிறிய தாயாரையே தன் சொந்தத் தாயாராகப் பாவித்து வந்தது. அந்த அம்மாளும் இந்தப் பிள்ளையை தான் பெற்றபிள்ளை போல் அன்புடன் வளர்த்தார்கள். அந்தப் பிள்ளைக்குத் தன் சிறிய தாயார்மேல் இருந்த பாசமும் அன்பும் சொந்தப் பெற்றோர்மேல் இல்லை. பெற்றோருக்கும் மற்றப்பிள்ளைகள்பேரில் இருந்த அன்பு அந்தப் பிள்ளையின்பேரில் இல்லை. இதில் ஒருவரையும் நாம் குறை சொல்லமுடியாது. இயற்கையே அப்படி. பெற்றோரென்பதும் பிள்ளையென்பதும் நெடுங்காலம் அன்பில் ஒருமித்து வாழுகிறதினால் உண்டாகிறதேயன்றி மற்றப்படியல்ல. சொந்தப் பிள்ளையாயினும் குழந்

தையில் பிரிந்துபோனால் பெற்றோரை அறியாது. அந்நிய பிள்ளையாயினும் தன்னை வளர்த்தவர்களையே பெற்றோராக மதிக்கும். உலகத்தில் அன்பும் பாசமும் இவ்வாறாக இருக்கின்றன. அந்தப் பிள்ளைக்கு மரணம் நேரிட்டால் எடுத்து வளர்த்தவர்கள் அழுவதுபோல் பெற்றோர் அழமாட்டார்கள். இது நெடுங்காலப் பழக்கத்தால் உண்டாகும் அன்பின் பற்றாகும். இந்த அன்பின் பற்றுக்குத் தக்கபடியே துக்கமும் துயரமும் உண்டாகின்றன. சரீரமே நமக்கு மெய்யான ஆளாகத் தோன்றுவதால் அந்தச் சரீரம் மறைவதை நாம் சகிக்கமுடியவில்லை. ஆகையால் சொந்தம் பாராட்டுவதில் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அளவுக்குமிஞ்சிச் சொந்தம் பாராட்டுவது சகிக்கக்கூடாத துயரத்தை உண்டாக்கும்.

மக்கள் உற்பத்தியைக் கவனிப்போம். எபிரேயர் நிருபத்தார் பெற்றோரை "நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்" என்றும் கடவுளை "ஆவிகளின் பிதா" என்றும் பேசுகிறார். நமது சரீரத்துக்கு பெற்றோர் காரணமென்பது உண்மையாயினும் அதைச் சிருஷ்டித்தோம் என்கிற பெருமை அவர்களுக்கு ஏற்காது. நமது புத்திக்கெட்டாத பிரகாரம் மக்கள் பிறக்கிறார்கள் என்பது நிச்சயம். அவர்கள் சாயல், வடிவம், நிறம், குணம் முதலானவைகள் நமக்கே ஆச்சரியமாயிருக்கின்றன. மக்கள் உற்பத்தி விஷயத்தில் பெற்றோர் உதவி அற்பத்திலும் அற்பமென்றே சொல்லவேண்டும். இதை நினைத்தல்லவோ சங்கீதக்காரன்: "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டன, அவைகளில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தன" என்கிறார். பெற்றோர் சம்பந்தத்தைக் குறித்தோ "இதோ துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்



தில் கர்ப்பந்தரித்தாள்" என்கிறார். மக்கள் உற்பத்தியில் பரமபிதாவின் அதிசய செயல்களை உணர்ந்தவர்கள் தாங்கள் என்னமோ பிரமாதமாகச் சாதித்தோம் என்று எண்ணாமல், கடவுளே தங்கள் மக்கள் ஆவிக்குப் பிதாவும், அவர்கள் சரீரத்திற்கு ஆண்டவருமாயிருக்கிறார் என்று சொல்லுவார்கள். இது உண்மையானால் நமது மக்கள் நமக்குச் சொந்தமாயிருப்பதிலும் அவர்களைத் தமது ஆலோசனைப்படி அதிசயமாய் உருவாக்கி உலகத்தில் அனுப்பின பிதாவுக்கே அவர்கள் முற்றிலும் சொந்தம் என்பது நிச்சயம். ஆகவே அவர்கள் கடவுளுக்குச் சொந்தம் என்பதை மறவாமல் அவருடைய மகிமைக்கென்று வளர்த்துவிடுவதே நமது கடமை. பார்வோன் குமாரத்தி மோசே என்னும் குழந்தையை அதன் தாயிடம் கொடுத்து: "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்காக வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்" என்று சொன்னதுபோல பரமபிதா நமது மக்களைத் தமக்காக வளர்க்கும்படி நமது கையில் கொடுத்திருக்கிறார். அவர்கள் நம்மைப் பார்க்கிலும் அவருக்கே சொந்தம். அவருக்குச் சொந்தமானவர்களாக அவர்களை வளர்ப்பதே நமக்குக் கிடைத்த சிலாக்கியமும் ஆசீர்வாதமுமாகும். அவர்கள் தங்கள் ஆவிகளின் பிதாவை அறிந்து, அவரில் அன்புகூர்ந்து, அவர்மேல் பூரண நம்பிக்கைவைத்து அவரால் நடத்தப்படுவார்களானால் மக்களைப்பற்றிய நமது கவலைகள் ஒழிந்துபோகும். அவர்கள்மேல் நாம் வைக்கும் அன்பு கிறிஸ்துவுக்குள்ளான அன்பாயிருக்கவேண்டும். மாம்ச சம்பந்தமான பற்றுவைப்போனால் அவர்கள் சரீரத்தைவிட்டுப் பிரியுங் காலம் வரும்போது நாம் சகிக்கமுடியாத துயரத்தில் அமிழ்ந்துபோவோம். குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் பரமபிதாவுக்குத் தங்களை ஒப்புவித்து அவர் சித்தம்போல் பிழைக்கும்போது சகல நிலைமைகளுக்கும் அவர் நம்மை விலக்கிக்காத்து கடைசிவரை நம்மை நடத்துவாரென்பது நிச்சயம். அவர் சித்தமின்றி நமக்கு ஒன்றும் சம்பவிக்காது. அவர் ஞானமும் கிருபையும் நிறைந்த பிதா.

வேறொரு காரணம் மறுமையில் பற்றில்லாமை. மறுமையைப் பற்றிய அறிவும் நிச்சயமும் நமக்கில்லாமற்போனால் நமக்கு அருமை

யானவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும் வேளை வரும்போது நாம் எப்படிச் சகிக்கக்கூடும்? நாம் பிறந்தது முதல் இந்தப் பூமியோடு சம்பந்தப்பட்டிருக்கிறோம். பூமிக்குரிய காரியங்கள் நமது சரீரத்துக்கு அவசியமானதால் அவைகளைப் பிரதானமாய்த் தேடுகிறோம். இவ்வாறு நாம் காண்பதும், தொடுவதும், அனுபவிப்பதுமான காரியங்கள் நமது கவனத்தைப் பூராவாய் ஆண்டு கொள்ளுகின்றன. நாம் பூமிக்குரியவர்களாகவே பிழைக்கிறோம். இம்மைக்குரிய காரியங்கள் நமக்கு அனுகூலமாய் முடியும்படி வேளாவேளை ஜெபம் செய்துகொள்ளுகிறோம். மோட்சத்தைக் கடைசியில் சேர்த்துக்கொள்ளுகிறோம். ஆகவே நமது நோக்கமும் பிரயாசமும் பிழைப்பும் பூமிக்குரியதாகி விடுகின்றன. மறுமைக்குரிய நித்திய மெய்யான காரியங்கள் மங்கலாகி நிச்சய மற்றுப்போகின்றன. கிறிஸ்து உலகத்துக்கு வந்தது முதல் பிதாவைக்குறித்தும், மறுமையின் பாக்கியங்களைக் குறித்தும் எவ்வளவோ அறிவு நமக்குக் கிடைத்திருந்தும், நமது மனம் பூமிக்குரியவைகளில் உலாவுவதுபோல பரத்தில் உலாவுவதில்லை. ஒரு விஷயத்தில் நாம் எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அவ்வளவுக்கு அது நம்மை ஆண்டுகொள்ளும். மறுமைக்குரிய காரியங்களில் நமக்கு அவ்வளவு கரிசனை இல்லை.

அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் சரீரத்தில் பிழைத்தாலும் அவர்கள் குடியிருப்பு பரலோகத்திலிருந்தது. அவர்கள் தங்கள் மனக்கண்களால் பிதாவையும் அருமை ரட்சகரையும், கோடிக்கணக்கான தேவதூதர்களையும், பூரணராக்கப்பட்ட ஆவிகளையும் கண்டார்கள். நமக்கு இந்த உலகம் எவ்வளவு பிரத்தியக்ஷமாயிருக்கிறதோ, அதைப் பார்க்கிலும் அதிகமாய் மறுமை அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாயிருந்தது. அதுவே அவர்கள் வாஞ்சையும், சம்பாஷணையும், எதிர்பார்க்குதலுமாயிருந்தது. எப்போது பிதாவின் வீட்டுக்குப் போகலாம், எப்போது கிறிஸ்துவிடம் சேரலாம் என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். "அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருந்தது." அவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும்வேளை வந்தபோது கிறிஸ்துவிடம் போவதை நினைத்து மகிழ்ந்



ஒன்று. கிறிஸ்து எக்காலும் கிறிஸ்துவா யிருக்கும்போது மற்றவர்கள் மாத்திரம் இனம் மாறிப்போவ தெப்படி?

அவர்கள் கிறிஸ்துவோடேகூட யிருக்கிறார்கள். "தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூடயிருக்க எனக்கு அதிக ஆசையுண்டு" என்றார் பவுல். அவர் சாவுப்பெட்டியை நினைக்கவில்லை. கல்லறையையும் அடக்கமாவதையும் முற்றிலும் மறந்தார். தன் ஜீவனாகிய கிறிஸ்துவையே லக்காக நோக்கினார். அவர் விரும்பினபடியே ஆண்டவர் பாதுகாப்பில் போய்ச்சேர்ந்தார். கிறிஸ்துவில் அன்பு வைத்து அவருக்கென்று பிழைக்கிற தேவமக்கள் யாவரும் தங்கள் தேகத்தைவிட்டுப் பிரியும்போது ரட்சகரிடம் போய்ச்சேருகிறார்கள் என்பது நிச்சயம். ஆண்டவர் நம்மில் அன்பாயிருக்க, நாமும் ஆண்டவரிடத்தில் அன்பாயிருக்க, இந்த அன்பில் நாம் வளர்ந்து பெருகியிருக்க, திடீரென இந்த அன்பு இருபக்கமும் அழிந்து, ஆயிரமான வருஷங்களுக்கப்புறம் திரும்பவும் அந்த அன்பு தொடங்கும் என்று சொல்லுகிறவன் யார்? அன்பு இடையில் நின்றுபோகுமானால் அது அன்பாகாது. வேதவாக்கியம் கூறுகிறபடி "அன்பு ஒருக்காலும் ஒழியாது". ஆகையால் ஆண்டவரிடத்தில் அன்புவைத்தவர்கள் சரீரத்தைவிட்டு நீங்கும்போது அந்த அன்பரிடமே போய்ச் சேருகிறார்கள்.

அவர்கள் சந்தோஷமும் பாக்கியமுமான நிலைமையிலிருக்கிறார்கள். ஆண்டவர் வலதுபக்கத்துக் கள்ளனைப்பார்த்து: "இன்று நீ என்னோடேகூடப் பரதீசில் இருப்பாய்" என்றார். அவன் சரீரம் சிலுவையிலிருந்தது. அவன் ஆவியோ பரதீசுக்குள் பிரவேசித்தது. பரதீஸ் என்றால் இன்பமும் சந்தோஷமும் அழகும் ஆனந்தமும் நிறைந்த தோட்டம் என்று அருத்தம். இது மறுமைக்குள் பிரவேசித்தவர்களின் பாக்கியமான நிலைமையைக் குறிக்கும். இந்த இடம் "ஆபிரகாமின் மடியென்றும்" சொல்லப்பட்டிருக்கிறது. லாசருவின் ஆவியைத் தேவதூதர்கள் ஆபிரகாமின் மடியில்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மடி என்பது அன்புக்கும் ஐக்கியத்திற்கும் அடையாளம். லாசரு காணாமற்போகவில்லை. இல்லாமல் அழிந்துபோகவு

யில்லை. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு முதலான கணக்கற்ற விசுவாசிகள் கடவுளுக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறார்கள். அவர்களோடு லாசருவும் சேர்ந்துகொண்டான். தேகத்தைவிட்டுப் பிரியும் தேவமக்கள் பாக்கியமான இடத்தில், திரளான விசுவாசிகள் கூட்டத்தில் சேர்ந்து மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். உலகிலுள்ள கவலை, கஷ்டம், துன்பம், சோதனை, பாவம் அவர்களை அணுகுவதில்லை. நாமோ அவர்களை நினைத்து அழுகிறோம்.

அறிவு விர்த்தியாகிற இடம். மறுமைக்குட்பிரவேசித்தவர்கள் யோசனை அறிவு இல்லாதவர்கள் அல்ல. மனுஷன் சாகும்போது அவன் மூளை அழிந்துபோவதால் யோசனையும் அழிந்துபோகவேண்டியதுதானே என்று ஒரு வகுப்பார் கூறுகிறார்கள். மனுஷன் மரிக்கும்போது அவன் அழிந்துபோகிறான் என்றும், இடையில் அவன் இல்லையென்றும், கிறிஸ்து வரும்போதுதான் மறுபடியும் புதிதாய் அவனை உயிரோடெழுப்புகிறார் என்றும் சொல்லுகிறார்கள். இது சதுசேயர் கொள்கையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் முற்பிதாக்கள் மரித்து இல்லாமற் போனார்கள் என்பது சதுசேயர் கொள்கை. ஆண்டவர் அதற்கு உத்தரவாக: கடவுள் அவர்கள் கடவுளாய் இருந்தேன் என்று சொல்லாமல், அவர்கள் கடவுளாய் இருக்கிறேன் என்றல்லவா சொன்னார். மரித்து இல்லாமற்போனவர்களுக்கு அவர் கடவுளாயிருப்பதெப்படி? அவர்கள் கடவுளுக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறார்களே; அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல் ஜீவனுள்ளோர் தேவனாயிருக்கிறாரே என்று சொன்னார். மேலும் மூளை அழிந்தால் யோசனையும் அழியும் என்பது உண்மையா? மூளையே அறிவுக்கும் யோசனைக்கும் கருவியானால் அந்த மூளையைப்பற்றி ஆராய்ச்சிசெய்து எழுதும் யோசனை எங்கேயிருந்து வந்தது? மனம் மூளைக்கு மேலானது. மூளையில்லாத தேவதூதர்கள் எப்படி யோசிக்கிறார்கள்?

பலிபீடத்தின் கீழுள்ள ஆவிகள் தேவனைப்பார்த்து: ஆண்டவரே எதுவரைக்கும் தாமதிப்பீர், பொல்லாதவர்களுக்கு நியாயத் தீர்ப்புச் செய்யுங்காலம் இன்னும் வரவில்லையா என்று கேட்டார்கள். யோச



னையும் அறிவுமற்றவர்கள் இப்படிப் பேசுவார்களா? யோசிப்பதற்கும் பேசுவதற்கும் மாம்ச சரீரம் அவசியம் என்று நினைப்பது பிசகு. கடவுள் ஆவியாயிருக்கிறார். அவருக்கு நம்மைப்போல் சரீரமில்லை. ஆகையால் அவருக்கு ஞானமும் அறிவும் இல்லையா? நமது சரீர அனுபவத்தால் ஆவிக்குரிய அனுபவத்தை அறியக் கூடாதவர்களாயிருக்கிறோம். அறியக்கூடாததால் அதை நம்புவது கஷ்டமாயிருக்கிறது. காணப்படுகிறவைகளிலேயே பழகினவர்களுக்கு காணப்படாதவைகள் சந்தேகமாயிருக்கின்றன. என்றாலும் ஆவிக்குரிய காரியங்களே நிலையுள்ளவைகள். நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள் நாமறியாத காரியங்களை அறிவார்கள். கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவருக்கு ஒப்பாக மாற்றப்பட்டு பரம காரியங்களை இருக்கிறபடி அறிந்துகொள்வோம். "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்."

தேகத்தைவிட்டுப் பிரிவது குணத்தை மாற்றாது. எவ்விதமான குணத்தோடு இம்மையில் பிழைக்கிறோமோ அதே குணத்தோடுதான் மறுமைக்குள் பிரவேசிப்போம். துன்மார்க்கன் தூங்கி விழித்தாலும் துன்மார்க்கனே. நித்திரை அவனைப் பரிசுத்தவானாக்காது. கிறிஸ்துவின் அன்பிலும் அறிவிலும் நாம் இங்கே பிழைத்தால், மறுமையில் பிரவேசிக்கும்போது அந்த அன்பிலும் அறிவிலும் வளருவோம். இம்மையில் ஆண்டவரை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரிலே பிழைத்தால், ஆவிபிரியும்போது பூரண ஜீவனுக்குள் பிரவேசிப்போம். இங்கே ஜீவனாகிய கிறிஸ்துவைச் சொந்தமாக்காமல் பேர்க்கிறிஸ்தவர்களாக மாத்திரம் நாம் பிழைத்தால் புறம்பான இருளில் தள்ளப்படுவோம். அதுவே கொடிய மரணமாகும். ஆவிக்குரிய நித்திய காரியங்களில் அநேகர் நிர்விசாரமாயிருக்கிறார்கள். இம்மைக்காகவே பிழைத்து இம்மைக்காகவே முயற்சி செய்கிறார்கள். நினையாதநேரம் அவர்கள் சரீரத்தைவிட்டு நீங்கவேண்டியது நிச்சயம். அப்போது என்ன செய்வார்கள்? தாங்கள் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்த உலகத்தைவிட்டு விடவேண்டும். தாங்கள் அசட்டையாயிருந்த மறுமைக்குள் பிரவேசிக்கவேண்டும். இவர்கள் கண்ட பலன் என்ன? இங்குமில்லை; அங்குமில்லை. இகத்தையும் இழந்து

பரத்தையும் இழந்து மரணமாகிய நரகத்துக்கு ஆளாகவேண்டியதுதான்.

இதுவரை கவனித்ததைச் சுருக்கிப் பார்ப்போம். தேகத்தைவிட்டு ஆவி நீங்குவதை நாம் மரணம் என்று பேசுகிறோம். ஆண்டவரோ அதை நித்திரை என்று அழைக்கிறார். அப்போஸ்தலரும் அதை நித்திரை, குடிபோகுதல், போர்வை களைதல், கூடாரத்தைவிட்டு நீங்குதல், பிரயாணம் என்று அழைக்கிறார்கள். பாவத்தின் பலனான மரணத்தையே ஆண்டவர் மரணம் என்று அழைத்தார். இந்த மரணம் பயங்கரமானது. ஆண்டவர் நம்மை நித்திரையாகிய அல்லது பிரயாணமாகிய அனுபவத்திலிருந்து ரட்சிக்க வராமல் கொடிய மரணத்திலிருந்து ரட்சிக்க வந்தார். பாவிகள் சரீரத்தில் உயிரோடிருக்கும்போதே இந்தக்கொடிய மரணத்தில் அகப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உலகத்தோடுள்ள சம்பந்தத்தால் இழுப்புண்டு இந்த மரணத்தை அவர்கள் உணருவதில்லை. மேலும் கடவுள் மனுஷரைக் கைவிடவில்லை. அவருடைய அன்பும் கிருபையும் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றன. ஆகையால் மனுஷர் தங்கள் மரணத்தின் பயங்கரத்தை உணராதிருக்கிறார்கள். அவர்கள் ஆத்துமா தேகத்தைவிட்டுப் பிரியும்போது மரணத்தின் பயங்கரத்தை அறிவார்கள். ஆண்டவர் உயிரோடிருக்கிறவர்களை மரித்தோர் என்று அழைத்தார். இந்த மரணத்திலிருந்து நம்மை ரட்சிக்கும்படி அவர்தாமே மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவர் சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதாகிய நித்திரைக்குப் பயப்படவில்லை. "என் ஜீவனைக் கொடுப்பேன், திரும்பவும் எடுத்துக் கொள்ளுவேன்" என்று அவரே சொன்னார். பாவத்தின் பலனான மரணத்திற்கு ஆண்டவர் பயந்து கலங்கினார். சிலுவையில் அந்த மரணத்தை ஏற்றுக்கொண்டு, போராடி மேற்கொண்டார். அவர் ஒருவரே மரித்தவர். அவர் ஒருவரே அந்தப் பயங்கரமான மரணத்தை மேற்கொண்டவர். மரணத்தை மேற்கொண்ட பின்பு தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்து நித்திரையடைந்தார். அவர் உயிர்த்தெழுதல் அவரடைந்த வெற்றிக்கு ஆதாரம். கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக் கொள்ளுகிறவன் இப்போதே மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்-



யடைந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து நிற்கும் தேவமக்கள் பிரிவாற்றாமையால் கண்ணீர் சிந்தினபோதிலும் நம்பிக்கையற்றவர்களைப் போல துக்கத்தில் அமிழ்ந்துபோனதில்லை. மறுமையைப்பற்றிய நிச்சயமே இந்த ஆறுதலுக்கும் அமைதலுக்கும் காரணம்.

கொடிய காலத்தில் நாம் இருக்கிறோம். பூமிக்குரிய நாட்டமும் கவலையும் மனுமக்களை ஆண்டுகொண்டன. ஐசுவரியவான் பொருள்தாகத்தால் கவலைகொண்டிருக்கிறான். ஏழைகள் இல்லையே எனக் கவலைகொண்டிருக்கிறார்கள். சரீரம் பிழைப்பதற்காகவே மனுஷர் இரவும் பகல் பாடுபடுகிறார்கள். மாம்சத்துக்குரிய உலகசிந்தையே பிரதானமாய் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த வெள்ளத்தால் இழுப்புண்டு போகிறோம். "உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயம் இருக்கவேண்டும்" என்றும்; "பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே தேடுங்கள்" என்றும்; "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்" என்றும் நாம் போதிக்கப்பெற்றிருந்தும் அவைகளை மறந்தோம். மறுமையைப்பற்றிய பிரசங்கங்களும் குறைவு. ஞானப்பாட்டில் பாடுகிற எழுத்து மோட்சத்தை யன்றி வேறு மோட்சம் நமக்குத் தோன்றவில்லை இவ்வாறு மறுமையில் நம்பிக்கை யற்றுப் போகும்போது, நமக்கு அருமையானவர்கள் நம்மை விட்டுப் பிரிவது கொடிய சஞ்சலமாகிறது. "விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல்" என்னும் ஓர் அருமையான புஸ்தகம் உண்டு. அது இப்போது கிடைப்பது அரிது. அந்தப் புஸ்தகத்தை நாம் கவனத்தோடு படிப்போமானால் நாம் உலகத்தை மறந்து பரத்தில் வசிக்கிறவர்களாவோம். பரம நாட்டம் சந்நியாசிக்கோலமல்ல. நமதாண்டவரைப்போல் பரம சிந்தையுள்ளவர்கள் யார்? அவர் பரத்துக்குரியவராகவே இகத்தில் பிழைத்தார். அவர் சரீரத்திலிருந்தபோது மோட்சமகிமை அவரைச் சூழ்ந்திருந்தது. ஆகிலும் எவ்வளவோ அன்போடும் கிருபையோடும் மனுமக்களோடு உறவாடினார். அவர் உலகத்தால் இழுப்புண்டு போகாமல் உலகத்தைத் தம்மிடம் இழுத்துக்கொள்ளும் பரம [illegible]

வராயிருந்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும். நித்திய வீட்டில் நாம் பிரவேசிப்பதற்கு நம்மை ஆயத்தப் படுத்திக்கொள்வதற்காகவே ஆண்டவர் சுருக்கமான காலத்தைத் தந்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

## VI. மறுமைக்குட் சென்றவர்கள் நிலைமை என்ன ?

மறுமையின் அனுபவத்தைப்பற்றிப் பூரணமாய் நமக்குத் தெரியாது. "மரணத்துக்குப்பின் ஜீவன்" "மறுமையின் வாழ்வு" என்னும் புஸ்தகங்களைக் கண்டால் நாம் ஆவலோடு வாசிக்க விரும்புகிறோம். அது இயற்கையே. ஆனால் வேதமோ அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவில்லை. ஏனென்றால் சரீரத்தில் பிழைக்கிற நமக்கு மறுமைக்குரிய அனுபவம் சொன்னாலும் விளங்காது. பாவத்தால் நாம் கெட்டுப்போனதே நமது பாஷையும் கெட்டது. நமது பாஷை பரலோக காரியங்களை இருக்கிறபடி விளக்கத் தகுந்ததல்ல. ஆண்டவர் கூட தேவராஜ்யத்தின் காரியங்களை பூமிக்குரிய காரியங்களைக்கொண்டு ஒப்பிட்டுப் பேசினாரேயன்றி இருக்கிறபடி பேசவில்லை. யோவான் மோட்ச மகிமையை உலகத்தில் விலையேறப் பெற்றதும் அழிந்து போவதுமான கற்களுக்கு ஒப்பிட்டுப் பேசினார். பவுல் பரதீசில்கண்ட காட்சியை மற்றவர்களுக்குச்சொல்ல முடியாமல் விட்டுவிட்டார். பரம காரியங்களை உள்ளபடி நாம் அறிந்துகொள்ள முடியாமற் போனாலும் பொதுவாகச் சிலவிஷயங்களைத் திட்டமா யறியலாம்.

**அவர்கள் இனம் மாறாது.** பூமியிலிருந்த ஆபிரகாமே மறுமையிலும் ஆபிரகாம். பூமியிலிருந்த லாசருவே மறுமையிலும் லாசரு. மறுமைக்குட் பிரவேசிப்பவர்களை நாம் இனம் அறிய முடியாதபடி வேறு ஆட்களாக மாறுவதில்லை. எவ்வளவோ காலத்துக்கு முன்னுள்ள மோசே எலியா மறுரூபமலையில் ஆண்டவரைச் சந்தித்துப் பேசினபோது இன்னும் மோசே எலியாவாகவே யிருந்தார்கள். நாம் நாமாகவே இருப்போம். நமக்கு அருமையானவர்களையும் அன்பான சிநேகிதர்களையும் இருக்கிறபடி அறிந்து கொள்வோம். இவ்வாறு நாம் இனம் அறிந்து சந்தோஷப்படுவது பரலோக பாக்கியங்களில்



கிறான். இனி அவனுக்கு மரணமில்லை. அவன் ஆவி சரீரத்தைவிட்டு நீங்குவது அவனுக்கு நித்திரையாகும். அவனோ கிறிஸ்துவிடம் போய் குடியிருக்கிறான். நமக்கு அருமையானவர்கள் தேகத்தைவிட்டுப் பிரியும் வேளை வரும்போது நாம் நம்பிக்கை யற்றவர்களைப்போல் துக்கசாகரத்தில் அமிழ்ந்து போகாதபடி, நாம் பரத்திற்குரியவர்களாக ஜீவிப்பதோடு, நமக்கு அருமையானவர்களையும் ஆவிக்குரியவர்களாகவும், கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாகவும் பாராட்டி வளர்க்கவேண்டும். பூமிக்குரிய காரியங்களை நாம் கண்டு அவைகளில் பற்று வைப்பதைப் பார்க்கிலும் மறுமைக்குரிய நித்தியகாரியங்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு, மேலானவைகளில் நாட்டங் கொள்ளவேண்டும். நம்மை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவரால் அனுதினமும் நடத்தப்பட்டு, அவர் சிந்தையால் நிறைந்து, அவருடைய ராஜ்யத்திற்கென்று பிழைப்போமானால் பவுல் சொன்னதுபோல "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று நாமும் சொல்லலாம்.

# XIII
# What happened at Pentecost
# பெந்தெகொஸ்தின் விசேஷம்

"அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" யோ. 14: 20.

கிறிஸ்தவர்களாகிய நாம் சில பண்டிகைகளை விசேஷித்துக் கொண்டாடுகிறோம். கிறிஸ்மஸ் பண்டிகை நமக்கு மகா சந்தோஷமான நாள்! அந்த நாளை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள் அநேகர். எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நாள்! உலகமுழுவதும் அந்த நாளை அறியும். உலகத்தை ரட்சிக்கும்படி கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்ட நாள்! ஆகையால் அந்த நாளை நாம் மிகுந்த நன்றியோடும் சந்தோஷத்தோடும் கொண்டாடுவது நியாயமே. கிறிஸ்து பாடுபட்ட தினமாகிய பெரிய வெள்ளிக்கிழமையையும் கொண்டாடுகிறோம். இதற்கு ஆங்கிலத்தில் நல்ல வெள்ளிக்கிழமை என்று பெயர். இந்த நாளில் அநேக சபைகளில் ஆண்டவர் பாடுகளைத் தியானிக்கும்படி மூன்று மணிநேர ஆராதனைகள் நடக்கும். அப்புறம் உயிர்த்தெழுந்த பண்டிகை. ஆண்டவர் மரணத்தை ஜெயித்து மறுபடியும் உயிரோடெழுந்ததால் ஈஸ்தர் பண்டிகையை மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடுகிறோம். பின்பு கிறிஸ்து பரத்திற்கு எழுந்த திருநாள். இதைப் பண்டிகைபோல் கொண்டாடாவிட்டாலும் அவர் பரமேறி மகிமையடைந்ததை நாம் மறக்கிறதில்லை. கடைசியாக பரிசுத்த ஆவியின் திருநாள். இதற்கு பெந்தெகொஸ்தே நாள் என்று பெயர். ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளில் தேவ ஆவியானவர் சீஷர்களை நிரப்பினார். இது ஓய்வு நாளாயிருப்பதால் ஆலயங்களில் ஆராதனைகளும், ஆவியானவரைப் பற்றிய பிரசங்கங்களும் நடக்கும். இந்த நாளை மறந்துபோகிற சபைகளும் உண்டு. இவைகளில் நமக்கு கிறிஸ்மஸ் பண்டிகையே எல்லாவற்றிலும் பிர



தானமாகத் தோன்றும். பெரிய வெள்ளிக்கிழமையும் உயிர்த்தெழுந்த பண்டிகையும் விசேஷந்தான். ஆனால் பரிசுத்த ஆவியின் பண்டிகையை நாம் அவ்வளவு விசேஷமாகக் கொண்டாடுவதில்லை. பார்க்கப்போனால் எல்லாப்பண்டிகைகளிலும் விசேஷித்த பண்டிகை பரிசுத்த ஆவியின் பண்டிகையே. எல்லா நாட்களுக்கும் அதுவே சிறந்த நாள். ஆண்டவருடைய ஜீவியம் ஊழியம் யாவுக்கும் அதுவே கிரீடம்

கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டது மகா பெரிய கிருபையே. அது நாம் என்றும் மறக்கக்கூடாத விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் அவர் பிறப்பில் நிறைவேறினதோ? இல்லை. பாவிகளை ரட்சிக்கும்படி அவர் பட்டபாடுகளும் மரணமும் விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் நிறைவேறினதோ? இல்லை. அவர் உயிர்த்தெழுதல் மகா பெரிய வெற்றியே. ஆகிலும் அவர் வந்த நோக்கம் நிறைவேறினதோ? இன்னும் இல்லை. மனுக்குலத்தின் பிரதிநிதியாயிருந்து கடவுளுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மகா தாழ்மையாய் நடந்த மனுஷகுமாரன் உன்னதத்திற்கு உயர்த்தப்பெற்று, பிதாவினால் மகிமையையும் கனத்தையும் அடைந்தது பெரிய விசேஷமே. ஆகிலும் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் நிறைவேறினதோ? இன்னும் இல்லை. இவையாவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் நடந்த காரியங்கள். ஆண்டவர் தமது பிறப்புமுதல் மகிமையடைந்ததுவரை நிறைவேற்றின காரியங்கள் யாவும் நமது ரட்சிப்புக்கு அவசியமே. என்றாலும் அவர் உலகத்திற்கு வந்தநோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. ரெயில் வண்டி ஓடவேணுமானால் நிலம் வாங்கி, பாதை உண்டாக்கி, இரும்புச் சட்டிகள் பதித்து, தண்டவாளங்கள் போட்டு, வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தவேண்டியது அவசியமே. இவையாவும் அவசியமான வேலைகள்தான். என்றாலும் என்ஜின்வந்து வண்டிகளோடு சேர்க்கும்வரை வண்டி ஓடமாட்டாது. பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் நமது ஆண்டவர் நிறைவேற்றின கிரியைகள் யாவும் அவசியந்தான்.

ஆகிலும் பரிசுத்த ஆவி சீஷர்களை நிரப்புகிறவரை அவர் வந்த நோக்கம் நிறைவேறாது.

உலகம் ரட்சிக்கப்படும்படி ஆண்டவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினபடியால் பெந்தெகொஸ்தே மகா விசேஷித்த நாள் என்பது நிச்சயம். உலக சரித்திரத்திலும் திருச்சபை சரித்திரத்திலும் பெந்தெகொஸ்தே நாள் விசேஷித்த நாளாகும். தேவ ஒழுங்கிலும் ஏற்பாட்டிலும் பெந்தெகொஸ்தே நாள் விசேஷித்த நாள். ஆதிமுதல் சகலமும் இந்த நாளையே நோக்கியிருந்தது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் உள்ள சடங்குகளும், அடையாளங்களும், சகல விதிகளும், பிரமாணங்களும், தீர்க்கதரிசனங்களும் இந்த நாளையே நோக்கியிருந்தன. ஆவியானவர் பிதாவின் வாக்குத்தத்தம். தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர். வெகு காலமாக நம்பிக்கையோடு எதிர் பார்க்கப்பட்டவர். கடைசியாக பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களை நிரப்பினவர். ஆகையால் பெந்தெகொஸ்தே நாள் தேவ ஒழுங்கில் நிகரற்ற நாள். மனுஷர் சரித்திரத்தில் மகா விசேஷித்த நாள். அதற்கு ஒப்பான நாள் முன்னில்லை. ஆண்டவர் வாக்குப் பண்ணின திருச்சபை அந்த நாளில் உண்டானது. ஆண்டவர் நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பு அந்த நாளில் பலித்தது. இந்த நாளுக்காக ஆண்டவர் எவ்வளவோ ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருந்தார். "பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன்; ஆகிலும் நான் முழுகவேண்டிய ஓர் ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." இங்கே அக்கினி என்பது பரிசுத்த ஆவிக்கு அடையாளம். பெந்தெகொஸ்தே நாளில் அக்கினி நாவுகள் போன்ற நாவுகள் சீஷர்கள்மேல் இறங்கின. ஆவியானவர் சீக்கிரம் வரவேண்டுமென்பது ஆண்டவர் பேராவல். ஏனென்றால் அதுவரை அவர் நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பை நிறைவேற்ற முடியாமல் நெருக்கப்பட்டார். அவர் மகிமையடைந்தபோது தமது ஆவியை அனுப்பி தாம் உலகத்திற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றினார்.



இதற்குமுன் ஆவியானவர் உலகத்தில் இருந்ததில்லையா? சந்தேகமில்லாமல் இருந்தார். ஆதியாகமம் முதற்கொண்டு பழைய ஏற்பாடு ஆகமங்களில் அவரைப்பற்றி வாசிக்கிறோம். ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். கிதியோன்மேல் வந்திறங்கினார். ஒத்னியேல் மேல் வந்தார். சிம்சோன்மேல் பலமாய் இறங்கினார். யோசுவாவுக்கு ஞானத்தைக் கொடுத்தார். கூடாரவேலை செய்வதற்கு பெசலெயேலுக்கு ஞானத்தையும் புத்தியையும் தந்தார். விசுவாசிகளை நடத்தினார். தீர்க்கதரிசிகளைப் பேசும்படி ஏவினார். ஆவியின் பலத்தை அருளினார். ஆவியானவரின் கிரியைகளை பழைய ஏற்பாட்டில் ஏராளமாகக் காணலாம். அப்படியானால் பெந்தெகொஸ்தே நாளின் விசேஷமென்ன? பெந்தெகொஸ்தே நாளின் விசேஷம் விசுவாசிகள் உள்ளத்தில் தேவ ஆவியானவர் என்றென்றைக்கும் வாசம் பண்ணும்படி வந்தார். முன் காலங்களில் நிலைவரமான ஆவி கிடைக்கவில்லை. விசேஷித்த சமயங்களில் விசேஷித்த வேலையை நடப்பிப்பதற்காக ஆவியானவர் அருளப்பட்டார். அவர் போகிறதும் வருகிறதுமாயிருந்தார். தாவீது வாஞ்சித்த "நிலைவரமான ஆவி" பெந்தெகொஸ்தே நாளில் வந்தார். இந்த நாளின் விசேஷத்தைப்பற்றி யோவேல் தீர்க்கதரிசியும் முன்னுரைத்தார். சீஷர்கள் ஆவியினால் நிறைந்து பேசினபோது, எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்றார்கள். பேதுரு அவர்களைப்பார்த்து: தீர்க்கதரிசியாகிய யோவேலினால் முன்னுரைக்கப்பட்டதே இது என்றார்.

இன்னும் இந்த நாளின் விசேஷம் என்னவென்றால், கடவுள் தாம் இழந்த மனுஷனைக் கண்டடைந்தார், மனுஷனும் தான் இழந்த கடவுளைக் கண்டடைந்தான். பாவத்தால் மனுஷன் பிதாவாகிய கடவுளை இழந்தான். "இழந்து போனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்." இதற்காகவே அவர் மனுஷர் [illegible] மாசற்றவராகச் சஞ்சரித்து, அரிய உபதேசங்கள் செய்து, மகத்துவமான கிரியைகளை நிறைவேற்றி, பாடுபட்டு மரித்து, உயிர்த்தெழுந்து மகிமையடைந்து, பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியை

அனுப்பினார். ஆவியானவரால் சீஷர்கள் நிரப்பப்படுவதின் அவசியத்தைப் பற்றி அவர் அவர்களோடிருந்தபோது திரும்பத் திரும்ப அவர்களுக்குச் சொல்லியிருந்தார். அவரைப் பெற்றுக் கொள்ளும் வரை அவர்கள் எருசலேமைவிட்டுப் போகக் கூடாதென்றும் கட்டளையிட்டிருந்தார். அவர்கள் ஒருமனப்பட்டுக் கூடியிருந்தபோது பெந்தெகோஸ்தே நாளில் ஆண்டவர் சொல்லியிருந்தபடியே ஆவியானவர் அவர்களை நிரப்பினார். ஆவியானவர் வந்தபோது கடவுளே அவர்களுக்குள் வந்து வாசம்பண்ணினார். கடவுள் வாசம் பண்ணுவதற்காகவே மனுஷன் உண்டாக்கப்பட்டான். பாவம் கடவுளை அகற்றி, நான் என்பவனை சிங்காசனம் ஏற்றினது. ஆவியானவர் வந்து நிரப்பினபோது நான் என்பவன் நிர்மூலமாகி கடவுள் சிங்காசனம் ஏறினார். "நாங்கள் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்று ஆண்டவர் சொல்லியிருந்த வாக்கு பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. திரித்துவத்தைப் பிரிக்கமுடியாது. ஆவியானவர் எங்கேயோ அங்கே குமாரனும் இருப்பார். குமாரன் எங்கேயோ அங்கே பிதாவும் இருப்பார். பிதா, குமாரன், ஆவியே கடவுள். மேலும் "தேவன் ஆவியாகவே இருக்கிறார்." ஆகையால் சீஷர்கள் ஆவியானவரால் நிறைந்தபோது கடவுள் தங்களுக்குள் வசிப்பதை அறிந்தார்கள். "நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்" என்று ஆண்டவர் குறிப்பிட்ட நாள் இந்த பெந்தெகொஸ்தே நாளே. மனுஷனுக்கு ஜீவனுள்ள தேவனுடைய ஐக்கியம் கிடைத்தது. "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று அப்போஸ்தலர் அநுபவ நிச்சயத்துடன் சொன்னார்கள். இந்த உன்னதமான ஐக்கியத்திற்கு காரணம் பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவர் முற்காலங்களில் மனுஷரிடத்தில் கிரியை செய்திருந்தபோதிலும், சீஷர்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் கிடைத்த நிலைவரமான கடவுள் ஐக்கியம் முன் ஒருபோதும் ஒருவருக்கும் கிடைத்ததில்லை. இதுவே ரட்சிப்பு. இதுவே கிறிஸ்து மார்க்கம். ஆவியானவர் மூலமாய் கடவுளை உள்ளத்தில் பெற்றுக்கொள்



வதே கிறிஸ்து மார்க்கம். முன்பின் யோசியாமல் மனுஷருக்கு ஞானஸ்நானம் கொடுத்துச் சபையில் சேர்த்துக்கொள்வது கிறிஸ்துமார்க்கமல்ல. ஆவியானவரால் ஆண்டவர் கட்டின சபையை மாம்ச முயற்சியினால் கட்டப் பார்ப்பது தேவ சித்தத்திற்கும் அவர் ஏற்பாட்டிற்கும் விரோதமாகும். அப்படிப்பட்ட புறம்பான வேலைகள் அக்கினியால் எரியுண்டுபோகும்.

## 1. பெந்தெகோஸ்தே நாள் ஆண்டவருக்கு விசேஷம்.

இந்த நாளுக்காகத் தானே அவர் ஆவலோடு எதிர்நோக்கி வந்திருந்தார். தாம் உலகத்திற்கு வந்த நோக்கம் இந்த நாளில் தான் நிறைவேறுமென்பது அவருக்குத் தெரியும். தமது பரிசுத்த ஜீவியம், தேவ உபதேசம், அற்புதகிரியைகள், பாடு, மரணம், உயிர்த்தெழுதல் யாவும் உலக ரட்சிப்புக்கு அவசியமானாலும், பரிசுத்த ஆவி வராமல் தாம் சம்பாதிக்கும் ரட்சிப்பு மனுஷருக்குப் பலிதப்படாதென்பது அவருக்குத் தெரியும். ஆகையால் மனுஷர் ரட்சிக்கப்பட பெந்தெகொஸ்தே நாள் அவர்களுக்கு எவ்வளவு அவசியமோ அது போலவே மனுஷரை ரட்சிப்பதற்கு பெந்தெகொஸ்தே நாள் ரட்சகருக்கும் அவசியம். ரட்சகர் நமக்குள் வராமல் நாம் ரட்சிக்கப்படுவதில்லை. ஆவியின் மூலமாயல்லாமல் ரட்சகர் நமக்குள் வருவதில்லை. கிறிஸ்துவே நமது ரட்சிப்பு. இதை அறியாமல் அநேகர் ரட்சிப்பைப் பிரத்தியேகப் படுத்திப் பிரசங்கிக்கிறார்கள். ஆண்டவர் கொடுக்கிறார், நீ விசுவாசத்தினாலே வாங்கிக்கொள் என்கிறார்கள். என்னத்தை வாங்குகிறது? இப்படிப்பட்ட போதனைகளால் குழப்பமுண்டாகும். கிறிஸ்துவே நமது ரட்சிப்பு. ரட்சிப்பின் ஆசீர்வாதங்களெல்லாம் அவருக்குள் இருக்கின்றன. அவரைச் சொந்தமாக்கிக்கொண்டவன் அவரது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைச் சொந்தமாக்கிக்கொள்வான். அவரில் நிலைத்திருந்து பிழைக்கிறவன் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவிப்பதில் வளருவான். நமது ரட்சிப்பு, ஞானம், நீதி, பரிசுத்தம், சமாதானம், சகலமும் கிறிஸ்துவே. "அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று சீஷர்களுக்குச் சொன்னார். அந்தப்படியே ஆவியானவர்

அவர்களை நிரப்பினபோது கிறிஸ்துவைத் தங்களுக்குள் கண்டார்கள்.
"இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார்"
என்று சொல்லக்கூடியவர்களானார்கள். இவ்வாறு கிறிஸ்து ஆவியின்
மூலமாய் அவர்களுக்குள்ளே வந்தது அவருக்கு மிகுந்த அனுகூலமா
யிற்று. தாம் உலகத்தில் செய்யும்படி வந்த வேலையை அவர்களுக்குள்
நிறைவேற்றக் கூடியவரானார். தாம் அவர்களோடு சரீரத்தில் இருந்த
காலத்தில் நிறைவேற்ற முடியாதிருந்த காரியங்களை ஆவியின்மூல
மாய் அவர்களுக்குள் வந்தபோது நிறைவேற்றினார்.

ஆண்டவர் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் செய்த ஊழியத்தை
இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று வெளிப்படுத்தல்; இன்னொன்று
ரட்சித்தல். அவர் பிதாவை உலகத்திற்கு வெளிப்படுத்தும்படி
வந்தார். அந்தப் பிதா அவருக்குள்ளேயே இருந்து தம்மை அவர்
மூலமாய் வெளிப்படுத்தினார். ஆகையால் பிதாவை அறிவதற்கு
கிறிஸ்துவை அறியவேண்டும். வேறு வழியில்லை. கிறிஸ்துவை
இன்னாரென்று அறியாவிட்டால் பிதாவை அறிய முடியாது. ஆண்ட
வர் தமது கிருபை நிறைந்த ஜீவியத்தாலும் அருமையான உபதேசத்
தாலும், அரிய கிரியைகளாலும் பிதாவை வெளிப்படுத்தினார். அப்
படியிருந்தும் அவரோடேகூடயிருந்த சீஷர்களாவது, அவரைப் பின்
பற்றின மற்ற மனுஷராவது, அவரை இன்னாரென்று அறிந்து
கொள்ளவில்லை. அவர் ஜீவியத்தைக் கவனித்து அவரைப் பரிசுத்தர்
என்றார்கள். அவர் உபதேசத்தைக் கேட்டு அவரை நிகரற்ற போத
கர் என்றார்கள். அவர் கிரியைகளைக் கண்டு: அவர் கைகளில்
பலத்த செய்கைகள் விளங்குகின்றன என்றார்கள். ஆகிலும் அவரை
இன்னாரென்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவரை அறியாத
போது அவர் வெளிப்படுத்தின பிதாவையும் அவர்கள் அறியவில்லை.
ஆண்டவர் மாம்சத்தில் தங்கின நாட்களில் பிதாவை வெளிப்படுத்து
கிறவராகவே யிருந்தார். அவர் ஜீவியம் உபதேசம் கிரியைகளின்
நோக்கம் அதுதான். பிலிப்பு அவரைப் பார்த்து: ஆண்டவரே,
பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்டபோது, ஆண்டவர்
துக்கத்தோடு: "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே



கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதா
வைக் கண்டான்" என்றார். மறுபடியும் "நான் பிதாவிலும் பிதா
என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படி யில்லாவிட்டாலும் என்
கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்" என்றார். சீஷர்
களும் ஜனங்களும் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லையே
என்பது ஆண்டவருக்கு விசனம். அவர் சமாரியா ஸ்திரீயைப் பார்த்
து: 'தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார்
என்பதை நீ அறிந்திருந்தாயானால்" என்கிறார். அதிகாரிகளைப் பார்த்
து: "மனுஷகுமாரனைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்"
என்று கேட்டார். சீஷர்களைப்பார்த்து ஓர் சமயம்: "மனுஷகுமாரனாகி
ய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" என்றுகேட்டார்.
சீஷர்களையே பார்த்து: "நீங்கள் என்னை யார் என்று சொல்
லுகிறீர்கள்" என்று கேட்டார். இக்கேள்விகளினாலே ஜனங்கள்
தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை என்பதும், தம்மை
அறிந்து கொள்ளாததால தாம் வெளிப்படுத்தும்படி வந்த பிதாவை
யும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை என்பதும் தெளிவாகிறது.
அப்படியானால் அவரையும் பிதாவையும் நாம் அறியாத நிலைமையி
லேயே ஆண்டவர் நம்மை விட்டு விடுவாரா? ஒருபோதும் அல்ல.
தமது அடியார் தம்மையும் பிதாவையும் கட்டாயம் அறிவார்கள் என்
பது ஆண்டவருக்குத் தெரியும். அப்படி அறியும் நாள் பெந்தெ
கொஸ்தே நாள் என்பதையும் அவர் ஏற்கனவே அறிவித்தார். பிதாவை
வெளிப்படுத்த வந்தது தவறிப்போனதே என்று ஆண்டவர் துக்கப்
படவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் நீங்கள் என்னையும் பிதாவை
யும் அறிவீர்கள் என்று திட்டமாகச் சொன்னார். அப்படியே ஆயிற்று.

ஆவியானவர் சீஷர்களை நிரப்பினபோது கிறிஸ்துவே அவர்
களுக்குள் வந்தார். மாம்சத்திலிருந்தபோது இன்னாரென்று அறி
யாத கிறிஸ்துவை அவர் உள்ளத்தில் வெளிப்பட்டபோது நிமிஷத்
தில் அறிந்தார்கள். அவரை அறிந்தபோதே பிதாவையும் அறிந்தார்
கள். கிறிஸ்துவை அறியும் மெய்யான அறிவு உள்ளான அறிவு. உள்
ளான அறிவு ஆவியினால் கிடைக்கிற அறிவு. ஆவியின் உள்ளான வெ

வெளிப்படுத்தல் இல்லாமல் கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறியமுடியாது. இதனிமித்தமே "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தர் என்று ஒருவனும் சொல்லமுடியாது" என்று பவுல் சொன்னார் (1. கொரி. 12: 3). தமது அனுபவத்தைக் குறித்தும்: "தேவன் தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தார்" என்கிறார். (கலா. 1. 16). ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிய கேள்வி அறிவும், புஸ்தக அறிவும், மற்றவர்கள் கற்றுக்கொடுத்த வெளிப்பிரகார அறிவும் நமது ரட்சிப்புக்கேற்ற அறிவல்லாது. ஆண்டவர் கூடவேயிருந்து தம்மை வெளிப்படுத்தியும் சீஷர்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை யென்றால் நாம் எப்படி அவரை அறியமுடியும்? ஆவியின் உள்ளான வெளிப்படுத்தலைப் பெறாத அநேகர் அவரை கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஜீவியம் மாற்றப்படாமலிருப்பதே அவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்கள் என்பதற்கு அடையாளம். மெய்யான ஆவியானவர் தம்மையல்ல கிறிஸ்துவையே மெய்யாய் மகிமைப்படுத்துகிறார். ஆவியினால் நிறைந்தவர்கள் ஆவியைப்பற்றிப் பேசாமல் கிறிஸ்துவைப்பற்றியே பேசுவார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு ஐக்கியப்படும்போது பிதாவோடேயும் ஐக்கியப்படுகிறார்கள். அவரை அறிவதே பிதாவை அறிவது; அவரை விசுவாசிப்பதே பிதாவை விசுவாசிப்பது; அவரை ஏற்றுக்கொள்வதே பிதாவை ஏற்றுக்கொள்வது; அவரைக் கனம் பண்ணுவதே பிதாவைக் கனம் பண்ணுவது; அவரில் அன்பாயிருப்பதே பிதாவில் அன்பாயிருப்பது; அவரில் நிலைத்திருப்பதே பிதாவில் நிலைத்திருப்பது. ஆகையால் ஆவியால் நிறைந்தவன் பிலிப்புவைப் போல, ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்கமாட்டான். கிறிஸ்துவை உள்ளத்தில் கண்டவன் பிதாவைக் கண்டான். ஆண்டவர் விரும்பின பிரகாரம் தமது மூலமாய் பிதா சீஷர்கள் உள்ளத்தில் வெளிப்பட்டபடியால், பெந்தெகொஸ்தே நாள் ஆண்டவருக்குச் சந்தோஷமான விசேஷித்த நாள். அவர் பிதாவை வெளிப்படுத்தும்படி உலகத்திற்கு வந்த நோக்கம் அந்த நாளில் நிறைவேறினது. ஆகையால் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் ஆண்



டவர் பிதாவை வெளிப்படுத்தும்படி எடுத்துக்கொண்ட முயற்சிகள் அரைகுறையென்றாவது வீணென்றாவது நாம் சொல்லுகிறதில்லை. இந்த உள்ளான வெளிப்படுத்தலுக்கு புறம்பான அவரது ஜீவியமும் உபதேசமும், கிரியைகளும் ஆயத்தம் செய்வதாக இருந்தன. அவைகளின் மூலமாய் அவர்கள் பக்குவப்படுத்தப் பட்டிருந்ததினாலே தான் இந்த உள்ளான வெளிப்படுத்தலைப்பெறத் தகுதியுள்ளவர்களாயிருந்தார்கள்.

ஆண்டவர் விஷயமாய் நாம் கவனிக்கவேண்டிய இரண்டாம் காரியம் அவர் சம்பாதித்த ரட்சிப்பு. அவரது ஜீவியம், உபதேசம், கிரியைகள் தம்மை வெளிப் படுத்துவதற்கு அவசியமாயிருந்தது போல, அவரது பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், மகிமையடைதல் அடியாரின் ரட்சிப்புக்கு அவசியமாயிருந்தன. ஆண்டவருடைய பாடுகள் மரணம் சீஷர்களுக்குப் பிரியமில்லை. அவர் மரிக்கக் கூடாதென்பதே அவர்கள் நினைவு. அவர் மரித்தபோது எல்லாரும் சிதறுண்டு ஓடிப்போய் விட்டார்கள். அவரை நம்பி நாங்கள் மோசம் போனோம் என்பது அவர்கள் எண்ணம். "இஸ்ரவேலை மீட்டு ரட்சிப்பார்" என்று எண்ணியிருந்தோம், இப்படி எங்களைக் கைவிட்டு மடிந்துபோனாரே என்பதுதான் அவர்கள் புலம்பல். இப்படியிருந்த நிலைமையிலிருந்து தங்களுக்கு ரட்சிப்பு ஆண்டவர் மரித்ததால் வரும் என்று அவர்கள் எப்படிச் சொல்லக்கூடும்? தெரியும் அப்படியும் போது சீஷர்கள் இருந்த நிலைமை என்னத் தெரியுமா? சிலுவை மூலம் பட்டவர்கள் சிலுவையைப் பற்றிப் பேசுவார்களா? அவர் உயிர்த்தெழுந்த ரட்சிப்பு உண்டென்று பிரசங்கிப்பார்களா? அவர் பரத்திற்கு ஏறினதைக் கண்டபோது சந்தோஷப்பட்டார்கள். அவர் உயிரோடு எழுந்து போனதைப் பார்த்தபோது இன்னும் அதிகமாய் சந்தோஷப்பட்டார்கள். சிலுவையோடே சகலமும் முடிந்தது என்று எண்ணி மனம் கலங்கியிருந்த சீஷர்கள் அவர் உயிரோடே எழுந்ததையும் பரத்திற்கு ஏறினதையும் கண்டபோது மகிழ்ந்தார்கள். ஆகிலும் என்ன? சிலுவை ரத்தத்தையும் அதின் ரட்சண்ய வெற்றியையும் அறிந்துகொண்டார்களா? அல்ல.

பெந்தெகொஸ்தே நாள் வந்தது. ஆண்டவருக்கு அதைப்போல் மகிழ்ச்சியான நாள் வேறில்லை. தாம் சிலுவையில் சம்பாதித்த ரட்சிப்பை சீஷர்கள் உள்ளத்தில் பலிதப்படுத்தினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் ரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் ஆண்டவர் தமது ரட்சிப்பை அவர்கள் உள்ளங்களில் பலிதப்படுத்தினார். அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் பாவமன்னிப்பைப் பற்றியும், சமாதானம் நீதியைப் பற்றியும், பரிசுத்தம் நித்திய ஜீவனைப்பற்றியும், சாந்தம் மனத்தாழ்மையைப் பற்றியும், தேவராஜ்யம் அதனால் வரும் பாக்கியங்களைப்பற்றியும், பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டென்பதைப் பற்றியும் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் கவனமாய்க் கேட்டார்கள். இவை யாவும் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களாகும். இவைகள் நமக்குக் கிடைப்பதற்கு அவர் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும் அவசியம் என்று சொன்னார். இவைகளின் கருத்துகளை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ரட்சிப்பின் வழியை அவர்கள் அறியாதிருக்கும்போது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை எப்படிப் பெற்றுக்கொள்ளக் கூடும்? அவர் தமது ஜீவியத்தில் பிதாவை வெளிப்படுத்தியிருந்தும் அவர்கள் கண்டும் காணாதவர்களாக இருந்ததுபோலவே, ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைக் குறித்துக் கேட்டும் அறியாதவர்களாகவேயிருந்தார்கள். கிறிஸ்து ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்தபோது தமது ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் ஜீவியத்திற்குச் சொந்தமாக்கினார். முன்னே தாங்கள் கேட்ட ரட்சிப்பு தங்களுக்குச் சொந்தமானதைக் கண்டார்கள். அவர்கள் ஜீவியத்தில் பலத்த மாறுதலடைந்தார்கள். கிறிஸ்துவே அவர்கள் ரட்சிப்பும், ஞானமும், நீதியும் பரிசுத்தமும், நித்திய ஜீவனும், உன்னத பலமுமானார். அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதலின் கருத்தின்னதென்று அனுபவத்தில் கண்டுகொண்டார்கள். வேண்டாமெனத் தாங்கள் வெறுத்த சிலுவை ஜீவனாயிருப்பதை அறிந்து: "கிறிஸ்துவுடன் கூடச் சிலுவையில் அறையப்பட்டோம், இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார்கள். அவர் உயிர்த்தெழுதலின் புதிய ஜீவ



னைப்பெற்று தாங்களும் அவரோடே கூட எழுந்தவர்கள் என்றார்கள். அவர் பரமேறினதைக் குறித்து: நாங்கள் கிறிஸ்துவுடன் எழுந்தபடியால் பூமிக்குரியவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுகிறோம்; நாங்கள் கிறிஸ்துவுடன் கூட உன்னதங்களில் உட்கார்ந்தோம் என்றார்கள். அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் எவ்வளவு பலத்த மாறுதலைக் காண்கிறோம். மாங்கொட்டை போட்டு மரம் முளைக்கப் பண்ணுவேன் என்று மாய வித்தைக்காரன் சொன்னால் அதைப்பார்க்க எத்தனையோபேர் கூடுவார்கள். பரம வித்தைக்காரன் செய்த அற்புதத்திற்கு நிகர்தானுண்டோ? தெற்கு வடக்குத் தெரியாத செம்படவர்களைப் பிடித்து தமது அன்பினால் அவர்களை வசப்படுத்தி, மூன்றுவருஷக் காலமாய் தேவராஜ்யத்திற்குரிய காரியங்களில் பக்குவப் படுத்திவந்தார். புத்தியில்லாத மந்தகதியுள்ளவர்கள்! அவர் ஒன்று சொன்னால் அவர்கள் ஒன்று சொல்லுவார்கள். சிலுவை என்றால் கூடாது என்பார்கள். ராஜ்யம் என்றால் இக்காலத்திலா என்பார்கள். தாழ்மை என்றால் தங்களில் யார் பெரியவன் என்பார்கள். அருமை ஆண்டவரின் பொறுமைதான் என்ன? இந்த ஆசாமிகளே அவருடைய சிஷ்யர்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதுபோல இந்தப் பேதையர்களைக் கொண்டு தமது மகிமையை வெளிப்படுத்த வேண்டுமென்பது அவர் சித்தம். அவர்கள் எவ்வளவு குறையுள்ளவர்களாயிருந்தபோதிலும் அவர்களைக்கொண்டு தாம் பூமியில் வந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடும் என்று உறுதியாய் நம்பியிருந்தார். ஆகையால் அவர்களைக் கோபிக்காமல் சாந்தமாய் நடத்தினார். அவர் பிடிபட்டதும் அவர்கள் சிதறுண்டு போவார்கள் என்பது அவருக்குத் தெரியும். அவர் கொஞ்சமாகிலும் மனஞ்சோர்ந்து போகவில்லை. பெந்தெகொஸ்தே நாள் வரும்போது தமது சித்தம் அவர்கள் மூலமாகப் பரிபூரணமாய் நிறைவேறும் என்று அறிவார். அந்தப்படியே ஆயிற்று. அறிவீனரும் பலவீனருமான அவர்களைத் தமக்குச் சிறந்த சாட்சிகளாக்கினார். அவர்களைக்கொண்டு தமது சபையை உலகத்தில் ஸ்தாபித்தார். அந்தச்சபை இன்று உலகமுழுவதையும் ஆண்டுகொண்டது. அதின் சிறப்பை என்ன சொல்ல?

ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும், சர்வத்துக்கும் மேலான கடவுளும் இவரல்லவோ? அவருக்கே என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் மகிமையும் கனமும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

## II. பெந்தெகோஸ்தே நாள் சீஷர்களுக்கு விசேஷம்.

பெந்தெகொஸ்தே நாள் ஆண்டவர் உலகத்திற்கு வந்த நோக்கத்தை சீஷர்களுக்குள் நிறைவேற்றினதால் அவருக்கு அனுகூலமான நாளாக இருந்ததுபோல, சீஷர்களுக்கும் அது விசேஷித்த நாளாகயிருந்தது. சீஷர்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள சம்பந்தம் மூன்று வகைப்படும். அவர்கள் அவருக்குச் சீஷராகவும், சிநேகிதராகவும், ஊழியக்காரராகவும் இருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னும் அவர்கள் அவ்விதமாகவே யிருந்தார்கள். ஆனால் அந்த மூன்று சம்பந்தமும் புறம்பானதாக மாத்திரம் இராமல், உள்ளான ஆழமான கருத்துள்ளதாயிருந்தது. இந்த மாறுதலை அவர்களே தங்கள் அனுபவத்தில் அறிந்தார்கள்.

சீஷர்களாக அவர்களைப் பார்ப்போம். பரம குருவாகிய கிறிஸ்துவோடு அவர்கள் மூன்று வருஷமாய் இருந்து அவர் போதனைக்குச் செவிகொடுத்தார்கள். குருவிடம் கற்றுக்கொண்டு அவரைப் பின் செல்லுகிறவனே சீஷன். ஆண்டவரின் சீஷர்கள் அவரிடம் கற்றுக் கொண்டார்கள். ஆனால் அவர் போதித்த ஆவிக்குரிய காரியங்கள் அவர்களுக்கு விளங்கவில்லை. சாதாரணமான காரியங்களைக்கூட அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. "இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா" என்று ஆண்டவர் அடிக்கடி அவர்களைக் கேட்க வேண்டியதாயிற்று. இது அவர்கள் கவனக்குறைவல்ல. அவர் போதனைக்குச் செவிகொடாததினாலுமல்ல. சத்தியம் உள்ளத்தில் வெளிப்படுத்தப்பட்டால் அல்லாமல் நாம் அதைக் கேள்வியால் மாத்திரம் அறியமுடியாது. ஆண்டவர் அவர்களுக்குப் போதித்த உபதேசங்கள் வீணாய்ப் போகமாட்டாது. பெந்தெகொஸ்தே நாள் வந்தது. கிறிஸ்து தமது ஆவியினால் அவர்களுக்குள் வந்தார். அவரே அவர்களுக்கு ஜீவனானார். ஒளியாக அவர்கள் உள்ளத்தில் பிரகாசித்தார். முன்னே அவர்



போதித்ததும் அவர்கள் அறிந்து கொள்ளாததுமான சத்தியங்களை இப்பொழுது ஆவியானவர் உள்ளத்தில் வெளிப்படுத்தினார். தாங்கள் முன் [illegible] அறியாதிருந்த அநேக சத்தியங்களை அவர் மூலமாய் தெரிந்து அறிந்துகொண்டார்கள். கிறிஸ்து மார்க்கத்திற்கும் மற்ற மார்க்கங்களுக்கும் இருக்கிற வித்தியாசம் இதுதான். மற்ற மார்க்கங்களில் குருக்கள் [illegible] உபதேசங்கள் [illegible] நாம் செய்யுமெனின் அக்குருக்கள் போய்விடுகிறார்கள், அவர்கள் உபதேசங்கள் [illegible]. இங்கே கிறிஸ்துவிலிருந்து அவர் உபதேசத்தை பிரிக்கமுடியாது. அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். மேலும் உலகத்தின் குருக்கள் [illegible] இவர்கள் புறம்பேயிருந்து உபதேசம் சொல்ல, சீஷர்கள் அவர்கள் முன் பக்தி வினயத்தோடிருந்து கற்றுக்கொள்ளவேணும். கேட்ட உபதேசம் பிரயோஜனப்படுவதும், பிரயோஜனப்படாததும் சீஷர்களைப் பொறுத்தது. ஏனென்றால் குருக்கள் வெளியே. சீஷர்கள் [illegible]. எவ்வளவு சிறந்த குருக்களானாலும் சீஷர்களுக்குள் தங்கள் ஜீவனை அனுப்பி தங்கள் போதனையை அவர்கள் அறிந்து கொள்ளவும் அதன்படி நடக்கவும் செய்யமுடியாது. கிறிஸ்துவின் காரியமோ அப்படி யல்ல. அவர் சரீரத்தில் இருந்த காலத்தில் சீஷர்களுக்கு ராஜ்யத்திற்குரிய காரியங்களைப் போதித்தார். அவர் அக்காலத்தில் அவர்களுக்குப் புறம்பேயிருந்தார். அவர்கள் அவரால் போதிக்கப் பெற்றார்கள். ஆனால் அவர் போதித்தவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவுமில்லை, அதன்படி நடக்கவுமில்லை. பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து, தாமே அவர்களுக்கு ஜீவனானார். அவரே அவர்களுக்கு ஜீவனானபோது அவர் சிந்தை அவர்களுக்கு உண்டாயிற்று. அவர்செய்த உபதேசங்களை யாவையும் அறிந்து கொண்டார்கள். முன்னே இருளாயிருந்தவைகள் தெளிவாயிற்று. [illegible] கூடாதென்று கடிந்துகொண்ட பேதுரு, ஆவியினால் நிறைந்தும், அதாவது கிறிஸ்து உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தும் [illegible] நேரத்தில் பிரசங்கித்த போதனையை நாம் மறக்கமுடியாது. சிலுவையின் அவசியத்தையும் அதனால் கிடைக்கும் ரட்சிப்பையும் வைராக்கியத்துடன் கூறி அறிவிக்க, மூவாயிரம்பேர் கிறிஸ்து அடியார்

கள். புறம்பான போதனை அவசியம் என்றாலும், சத்தியம் உள்ளத்திற்கு வெளிப்படுத்தப்படும் வரை நாம் அதை அனுபவத்தில் நிச்சயமாய் அறிய முடியாது. நம்மில் அநேகர் புறம்பான கேள்விக்காரரே. எத்தனை பிரசங்கங்களைக் கேட்டாலும், எத்தனை புஸ்தகங்களைப் படித்தாலும் நமது ஜீவியமோ மாற்றப்படவில்லை. சத்தியமாகிய கிறிஸ்து நமக்குள் வந்து தமது பரம ரகசியங்களை நமக்குள் வெளிப்படுத்தும் வரை நாம் அவைகளை அறிய முடியாது. வெளியிலிருந்து போதித்த கிறிஸ்து, சீஷர்களுக்கு உள்ளே வந்து சத்தியங்களை வெளிப்படுத்தினதினாலே பெந்தெகொஸ்தே சீஷர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதமான நாளாயிற்று.

சிநேகிதராக அவர்களைக் கவனிப்போம். ஆண்டவர் அவர்களைச் சிநேகிதர் என்றழைத்தபோது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் யார்? நாம் யார்? அவருக்குச் சிநேகிதராயிருக்க நாம் பாத்திரவான்களா என்பதுபோல் நினைத்தார்கள். அவர்களிடத்தில் எத்தனை குறைவுகள் இருந்தபோதிலும், அவர்கள் அவரை இன்னும் சரியாய் அறியாதிருந்தபோதிலும், ஆண்டவர் அவர்களைச் சிநேகிதராகப் பாராட்டி நடத்தினது உண்மையே. அவர்களும் தங்களால் இயன்றமட்டும் அவரை நேசித்தார்கள். அவருக்கு நேரிட்ட சோதனைகளில் அவரோடு நிலைத்திருந்தார்கள். தங்களுக் குரியவைகளை விட்டுப் பிரிந்து அவரையே பற்றிக்கொண்டிருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளிலும் அவர்கள் அவருடைய சிநேகிதர்கள்தான். ஆனால் நடந்த காரியம் வேறே. முன்னே கிறிஸ்து அவர்கள் சிநேகிதராக அவர்களோடுகூட அவர்கள் பக்கத்தில் இருந்தார். இப்போது ஆவியின் மூலமாக அவர்களுக்குள்வந்து அவர்கள் பிராண சிநேகிதனானார். சிநேகிதனே அவர்களுக்கு ஜீவனானார். செடியும் கொடியும்போல் ஒரே ஜீவனால் அவர்கள் அவரோடிணைக்கப்பட்டார்கள். அவர் காரியம் வேறே, அவர்கள் காரியம் வேறே அல்ல. சகலமும் அவர்களுக்குப் பொது. சந்தோஷமோ துக்கமோ, லாபமோ நஷ்டமோ, மேன்மையோ அவமானமோ, சகலமும் சிநேகிதர்களுக்குப் பொது. அவர்தான் அவர்கள், அவர்கள்தான் அவர். நான் என்றும் நீங்கள் என்றும் சிநேகிதருக்



குள் வித்தியாசமில்லை. இதுவே பிராணசிநேகம். "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை அறிவீர்கள்" என்று ஆண்டவர் சொன்னவாக்கு இந்தப் பிராணசிநேகத்தை நிச்சயப்படுத்துகிறது. முன்னே அவர்களுக்கு வெளியே, புறம்பே இருந்த சிநேகிதராகிய ஆண்டவர், பெந்தெகொஸ்தே நாளில் அவர்களுக்குள் ஜீவனாக வந்தபோது அவர்கள் அவருக்குப் பிராணசிநேகிதர்கள் ஆனார்கள். அவருடைய அன்பு அவர்கள் உள்ளங்களில் பிரவாகித்தது. கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவினது.

ஊழியக்காரராக அவர்களை நோக்குவோம். பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் அவர்கள் ஆண்டவருடைய ஊழியக்காரராயிருந்தார்கள். அவர் கற்பித்தவைகளைச் செய்தார்கள். நீங்கள் புறப்பட்டுப் போய் கிராமங்களில் பிரசங்கியுங்கள் என்று அவர் கட்டளையிட்டால் அப்படியே செய்வார்கள். உங்களுக்கு முன்னேயிருக்கிற கிராமத்திற்குப்போய் கழுதையை அவிழ்த்து வாருங்கள் என்றால் அப்படியே செய்வார்கள். எருசலேமுக்குப் போய் மேல்வீட்டறையை ஆயத்தம் பண்ணுங்கள் என்றால் அப்படியே செய்வார்கள். அவர்கள் எஜமானுக்குக் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் என்பது நிச்சயம். இப்போதும் அவர்கள் ஊழிக்காரர் தான். ஆனால் நடந்த காரியம் வேறே. முன்னே அவர் புறம்பேயிருந்து அனுப்ப அவர்கள் போகிறவர்களாகவும், அவர் ஒன்றைக் கற்பிக்க அவர்கள் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். உலகத்தில் எஜமான்கள் வேலைக்காரருக்குள்ள சம்பந்தம் போலவே அப்பொழுதிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் அந்தச் சம்பந்தம் வேறுவிதமாக மாறினது. கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து அவர்கள் ஜீவனானபோது, எஜமான் வேறே ஊழியக்காரர் வேறே என்கிற சம்பந்தம் மாறி, அவரே அவர்களுக்குள்ளிருந்து உபயோகிக்கும் கருவிகளானார்கள். அவர்கள் மனம் அவருக்கு மனமாயிற்று. அவர்கள் கண்கள் அவர் கண்களாயிற்று. அவர்கள் வாய் அவருக்கு வாயாயிற்று. அவர்கள் கைகள் அவருடைய கைகளாயிற்று. அவர்கள் கால்கள் அவருடைய கால்களாயிற்று. இவ்வாறு அவரே அவர்களை முழுவதுமாய் ஆண்டுகொண்டு தமது ராஜ்யத்தின் வேலையை அவர்களைக் கொண்டு நடத்தினார்.

இதன் உண்மையை அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணலாம். அப்போஸ்தலர் நடபடியின் விசேஷம் அதுதான். அவர்கள் ஜீவியத்தில் கிறிஸ்துவின் சிந்தையையும் அவருடைய சாயலையும் காண்கிறோம். முன்னே ஆண்டவர் எவ்வளவாகப் போதித்தாலும் அவரது சாந்தம், மனத்தாழ்மை, பொறுமை, அன்பு முதலான திவ்ய லட்சணங்கள் அவர்களிடத்தில் காணப்படவில்லை. இப்பொழுதோ கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்தவர்களானார்கள். ஊழியத்திலும் ஆண்டவர் போக்கு காணப்படுகிறது. "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று ஆண்டவர் சொன்னார். "ஐனேயாவே, நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என்று பேதுரு சொன்னார். "தலீத்தாகூமி" என்று ஆண்டவர் சொன்னார். "தபீத்தாள் கூமி" என்று பேதுரு சொன்னார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்றும், "என் ஆவியை உமது கைகளில் ஒப்புவிக்கிறேன்" என்றும் ஆண்டவர் சொன்னார். "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்றும், "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்றும் ஸ்தேவான் சொன்னார். பவுலிடத்தில் விளங்கிய கிறிஸ்துவின் சிந்தையை விவரிக்கப்போனால் இடம் போதாது. "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று அவரே சொன்னார். ஆண்டவர் தமது அடியார்களைப் பூரணமாய் ஆண்டுகொண்டு அவர்களுக்கு அவரே ஜீவனானபோது, அவர்கள் ஜீவியமும் ஊழியமும் அவருடையதாகவே யிருந்தன.

இவையாவையும் கவனிக்கும்போது நாம் எங்கேயிருக்கிறோம்? அவர்களும் ஊழியர்கள் நாமும் ஊழியர்களா? நமது இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நமது ஊழியத்தைக் குறித்துப் புறம்பே யுள்ளவர்கள் குறைவாய் நினைக்கிறார்கள். மிஷனில் சம்பளம் பெறுவதால் இவர்கள் பிரசங்கிக்கிறார்கள்; மிஷனரிகள் போய் விட்டால் இவர்கள் வேலை செய்வார்களோ என்கிறார்கள். சம்பளம் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் நாம் போதிப்பது சத்திய மெய்பதை இவர்கள் கவனிக்கிறதில்லை. ஆகவே நன்மைக் கேதுவான

மிஷன்கள் தீமைக்கேதுவாய்ப் பேசப்படுகிறது. இந்தியாவிற்குச் சுவிசேஷத்தைக் கொண்டுவந்த மிஷனெரிகளுக்காக நாம் கடவுளை ஸ்தோத்திரிக்கிறோம். ஆனால் நாம் எக்காலமும் அவர்களையே சார்ந்திருப்பது சரியல்ல. எவற்றைப் பார்த்தால் நமது ஜனங்களுக்கு ஊழியஞ்செய்யும் உத்தரவாதம் நம்மையே பொறுத்திருக்கிறது. மிஷன்களின் உதவி எக்காலமும் இருக்குமென்பது என்ன நிச்சயம்? மிஷனெரிமார் பணத்தினால் எவ்வளவு உதவிசெய்தபோதிலும் நமது ஜனங்களை நாம் அறிந்திருப்பதுபோல அறியவும், அவர்களுக்குள் நெருங்கி வேலைசெய்யவும் அவர்களால் முடியாது. ஆகையால் நமது ஜனத்தின் ரட்சிப்பு, அயல்தேசத்து மிஷனெரிமார் இங்கே திரளாய் வருவதினால் அல்ல, கர்த்தருக்குத் தம்மை ஒப்புவித்து, ஆவியின் பலத்தோடு ஊழியஞ்செய்யும் தேச மக்களையே ஆகவேண்டியதிருக்கிறது. ஓர் காலத்தில் முழுவதும் மிஷன்களால் பராமரிப்புப் பெற்ற சபைகள் இப்பொழுது தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்வதைக் காண்கிறோம். எல்லாச் சபைகளும் சுயபராமரிப்புள்ள சபைகளாகுங் காலம் சீக்கிரம் வரும். மிஷன் உதவி நிற்குமானால் நாம் கர்த்தரைப் பூரணமாய்ப் பற்றிப்பிழைப்பதற்கு அவசியமாகும். தேவ ஊழியர் மிஷனில் சம்பளம் பெறுவதால் சபையார் தங்கள் பொறுப்பை உணராமல் நிர்விசாரமாயிருக்க இடமுண்டாகிறது. தங்களுக்காக வேலைசெய்யும் ஊழியரைச் சபையாரே ஆதரிப்பார்களானால், இவர்கள் மிஷன் சம்பளத்திற்காகப் பிரசங்கிக்கிறார்கள் என்கிற பேச்சு நீங்கிப்போகும். ஏனென்றால் ஜனங்கள் தங்கள் குருக்களைப் போஷிக்கவேண்டிய கடமையை எல்லா மதஸ்தரும் அறிந்தேயிருக்கிறார்கள்.

உத்தம ஊழியர்களை ஜனங்கள் உற்சாகமாய்ப் பராமரிப்பார்கள். அதுவே தேவ ஏற்பாடு. நாம் ஜனங்களுடைய ஆத்தும நன்மைக்காகப் பாடுபடுகிறோம் என்பதை அவர்கள் காணும்போது, தங்கள் சரீர நன்மைகளால் நமக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருப்பார்கள். கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆவியின் பலத்தோடே நாம் ஊழியஞ்செய்யும்போது, பரமபிதா நமக்குத் தேவையானவை [illegible]

களைக் கொடாதிரார். பஞ்சம் வருகிறதென்று அறிந்தபோது அந்தியோகியாவிலுள்ள கிரேக்க கிறிஸ்தவர்கள் பணம் சேகரித்து எருசலேமிருந்த தேவ ஊழியருக்கு அனுப்பினார்கள். இப்படி உதவிசெய்யும்படி அப்போஸ்தலர் அவர்களைக் கேட்கவுமில்லை. ஆவிக்குரிய தேவ ஊழியர் தங்கள் பராமரிப்பைக் குறித்து ஒருக்காலும் கவலைப்படவேண்டியதில்லை. ஆகையால் மிஷன்கள் உதவி நின்றாலும் ஆண்டவருடைய ஊழியம் நிற்காது. கர்த்தரை முழுவதுமாய்ப் பற்றிக்கொள்ளாமல் சம்பளத்திற்காக மாத்திரம் வேலைசெய்கிறவர்கள் கஷ்டத்திற்குள்ளாவார்கள். மிஷனில் பலதிறத்தாரும் வேலைசெய்யலாம். மாதச் சம்பளம் தவறாது. ஆனால் சபையாரோ, ஒருவருடைய ஊழியம் தங்களுக்கு ஆசீர்வாதமாயில்லை என்று கண்டால் அவரைப் பராமரிப்பதற்கு முன் வரமாட்டார்கள்.

மேலும் இந்த ஊழியம் குறிக்கப்பட்ட சிலரை மாத்திரம் பொறுத்ததல்ல. தேவமக்கள் எல்லாரும் சேர்ந்து ஆண்டவரை மகிமைப் படுத்தவேண்டும். நாம் எந்தெந்த வேலையில், எந்தெந்த நிலைமையிலிருந்தாலும் நமது அன்புள்ள ஜீவியமும் கிருபையுள்ள பேச்சும் ஆண்டவருக்குச் சாட்சியாக விளங்கவேண்டும். அக்கினி பரவுவதுபோல் ஆவியைப்பெற்ற தேவமக்களால் கிறிஸ்துவின் நற்கந்தம் ஜனங்களுக்குள் இயல்பாகவே பரவும். நமது தேசத்தார் கிறிஸ்துவை அறிவதற்கு இதுவே சிறந்த வழி. பெந்தெகொஸ்தே சபையின் லட்சணமும் இதுவே. கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஜீவியத்தில் மாறுதலடைந்து, கிறிஸ்துவின் அன்பிலே பிழைப்பார்களானால் மற்ற மனுஷருக்கு ஜீவநதிகளாயிருப்பார்கள்.

## III. பெந்தெகோஸ்தே நாள் உலகத்திற்கு விசேஷம்.

பெந்தெகொஸ்தே விசேஷத்தில் உலகத்திற்கும் சம்பந்தம் உண்டு. ஆண்டவர் மாம்சத்தில் வெளிப்படுமுன் உலகத்திலிருந்தார். உலகத்தில் வருகிற எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவிருந்தார். உலகம் அவரை அறியவில்லை. அவருடைய ஒளி யார் யாருக்குள் அக்காலங்களில் பிரகாசித்ததோ அவர்கள் கட-

யுள் அடியாரானார்கள். அவர் சரீரத்தில் வெளிப்பட்டபோது ஒளியாகிய அவர் உலகத்திற்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தமானார். இது பெரிய கிருபை! நித்திய ஒளியாகிய அவர் மனுஷருக்குள் மனுஷனாக வந்து தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும் தமது ஒளியைப் பரவச்செய்தார். உலகம் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளா யிருந்தபடியால் அவர்கள் ஒளியாகிய கிறிஸ்துவை விரும்பவில்லை. நாட்செல்லச் செல்ல அவரைப் பகைத்து அந்த ஒளியை அவித்துப்போடத் தீர்மானித்தார்கள். அவரைச் சிலுவையில் அறைந்து அந்த ஒளியை அவித்துவிட்டதாக நினைத்தார்கள். ஜீவனுள்ள நித்திய ஒளியை அவிக்க யாரால் கூடும்? அவர் சரீரத்தைக் கொலைசெய்தார்கள். ஒளியை அவர்கள் தொடவில்லை. சூரியன் தன் மண்டலத்தில் மகிமையாயிருக்கிறதுபோல நித்தியமாகிய ஒளி தமது பிரயாணத்தை முடித்து மகிமையில் பிரவேசித்து மறுபடியும் தமது அடியார் உள்ளங்களில் பிரகாசித்தார். ஒளிகொடுக்கப்பட்ட அவர்களும் ஒளியில் நடந்துகொண்டார்கள். வெளிச்சம் மறைவான காரியங்களை வெளிப்படுத்துவதுபோல, மனுமக்களின் மறைவான பாவங்களை வெளிப்படுத்தும்படி தமதடியாரை வெளிச்சங்களாக உலகத்தில் வைத்தார்.

**உலகத்தின் பாவம் திருச்சபையால் உணர்த்தப்படவேண்டும்.**

“அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.” உலகம் உணர்த்தப்படுவது பெந்தெகொஸ்தே நாளின் பலனாயிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளிலே தானே மூவாயிரம்பேர் பாவத்தை உணர்ந்து ரட்சிக்கப்பட்டதை காணுகிறோம். அதுமுதற்கொண்டு ஆவியினால் நிறைந்த ஊழியர் மூலமாய் மனுஷர் திரள் திரளாக உணர்த்தப் பட்டார்களென்பது நிச்சயம். ஆண்டவர் ஊழிய நாட்களில் உலகம் இதே மாதிரி ஏன் உணர்த்தப்படவில்லை? கிறிஸ்து மரிப்பதற்குமுன் பிரசங்கிப்பதற்குச் சுவிசேஷமில்லை. அவர் மரிக்குமுன் சுவிசேஷமேது? “என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற

கிரியைகளையும் செய்வான், இதைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று ஆண்டவர் சொன்ன கருத்தும் அதுதான். காட்டு யானையைப் பிடித்துப் பழக்கி அதைக்கொண்டு மற்ற யானைகளைப் பிடிப்பதுபோல, பாவிகளை ரட்சித்து, அவர்களைத் தமக்குச் சொந்தமாக்கி, அவர்களைக்கொண்டு மற்ற மனுஷரை ரட்சிப்பது ஆண்டவருடைய ஒழுங்கு. மீன் பிடிக்கிறவர்களைப் பார்த்து: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று ஆண்டவர் சொன்ன வாக்கு பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது.

ஆவியினால் நிறைந்த அடியார் கிறிஸ்துவின் சாட்சிகளானார்கள். சாட்சிகள் என்பது கிறிஸ்துவின் மாதிரிகளானார்கள் என்று அருத்தம். தங்களைப்போன்ற பலவீனமான பாவிகள் கிறிஸ்துவை நம்பி மேலான ஜீவியம் செய்வதை உலகத்தார் கண்டார்கள். அவர்கள் கிறிஸ்துவைப்பற்றிப் பேசின வார்த்தைகள் உண்மையும் ஆவியின் பலமும் பொருந்தினதாயிருந்தன. அவர்கள் பேச்சுக்கு எதிர் நிற்கக் கூடாமல், தங்கள் பாவங்களை உணர்ந்து அறிக்கையிட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்பட்டார்கள். உலகம் தன் பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்தப்படுவதற்கு ஆவியினால் நிறைந்த தமது சபையை ஆண்டவர் பெந்தெகொஸ்தே நாளில் கட்டினார். இந்தச் சபை ஆண்டவர் உலகத்தில் தமது ரட்சிப்பை நிறைவேற்றுவதற்கு, ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு, அவர் கிரியை நடப்பிக்கும் சரீரமாயிருக்கிறது. கிறிஸ்து தமது ஆவியினால் நமக்குள் வசிப்பதும், நாம் அவரோடிணைக்கப்பட்டதும் நிச்சயமானால் அவர் நம்மைக் கொண்டு உலகத்தில் தமது சித்தத்தை நிறைவேற்றி வருகிறாரென்பது நிச்சயம். அவர் நமக்குள் வசிக்கிறதில்லையென்றால் நாம் ஒன்றுக்கும் உதவாதவர்களும், அவருடைய ராஜ்யத்திற்கு இடறல் உண்டாக்குகிறவர்களுமாயிருக்கிறோம் என்பது நிச்சயம்.

முடிவாகச் சில கேள்விகள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாக நமக்குள் வசிக்கிறாரா? அவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவதால் அவரை இன்னாரென்று நாம் அறிந்துகொண்டோமா? அவரை அறிந்

தால் அவர் மூலமாய்ப் பிதாவையும் அறிந்திருக்கிறோமா? நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறதா? ஆண்டவர் தமது போதனைகளை நமக்கு வெளிப்படுத்துகிறாரா? சத்தியத்தை அறிகிற அறிவில் நாம் நாளுக்குநாள் வளருகிறோமா? கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த ரட்சிப்பை நமது ஜீவியத்தில் பலிதப்படுத்தியிருக்கிறாரா? ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிறைந்து மற்றவர்களுக்கு ஜீவநதிகளாயிருக்கிறோமா? அவர் நமக்குள்ளே வல்லமையாய்க் கிரியை செய்வதால் நாம் புறம்பே ஊழியஞ்செய்கிறோமா? கிறிஸ்துவின் சிந்தையும் அவர் சாயலும் கொஞ்சமாகிலும் நம்மில் காணப்படுகிறதா? நமது வீட்டாரும், நமது சபையாரும், நம்மோடு பழகுகிறவர்களும் கிறிஸ்துவின் சாயலை நம்மில் காண்கிறார்களா? நாம் கிறிஸ்துவை உலகத்திற்கு வெளிப்படுத்தும் மாதிரிகளா? கிறிஸ்துவின் அன்பு நம்மை நிரப்புவதால் நாம் விசேஷமாய் தேவமக்களோடும், மற்றவர்களோடும் அன்பாயிருக்கிறோமா? துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறோமா? எல்லாருக்கும் முன்பாகத் தாழ்மையாக நடந்துகொள்ளுகிறோமா? “அழுகிறவர்களோடு அழுது சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்பட்டு” நமது அநுதாபத்தைக் காண்பிக்கிறோமா? மற்றவர்கள் நமது ஜீவியத்தாலும் ஊழியத்தாலும் உணர்வடைந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரால் நடத்தப் படுகிறார்களா? தீமை ஒருவருக்கும் செய்யாமல் எப்பொழுதும் நன்மையே செய்துவருகிறோமா? எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் கர்த்தரையே நம்பியிருக்கிறோமா? தேவன் நிச்சயமாகவே நம்மை நடத்துகிறார் என்பதை மற்ற விசுவாசிகள் கண்டு அவர்களும் தேவநடத்துதலைத் தேடுகிறார்களா? ஜெபமானாலும், வேதவாசிப்பானாலும், பாட்டானாலும், சம்பாஷணையானாலும், பிரசங்கமானாலும் முழு இருதயத்தோடும் உண்மையோடும் வாஞ்சையோடும் செய்கிறோமா? கிறிஸ்து ஒருவரே நமது ஜீவியத்தின் நோக்கம் என்பதை மற்றவர்கள் அறிவார்களா? ஆண்டவர் நமது ஊழியத்தை ஆசீர்வதிக்கிறார் என்கிற நிச்சயம் நமக்குண்டா?

இக்கேள்விகள் உன்னதமானவைகள்போல் தோன்றலாம். அதுவே பெந்தெகொஸ்தே சபையின் அடையாளங்கள். அதுவே உண்மையான கிறிஸ்துமார்க்கம். 'மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடியபொறுமையும் உள்ளவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்பதை ஆலயத்தில் வாசிப்பதும் சபையார் அதைக் கேட்பதுமே போதுமா? அவ்வாறு நாம் நடக்கவேண்டுமென்பது தேவ நோக்கமா? இவ்வாசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்காவிட்டால் நமது ஆலயங்கள், சபைகள், ஆராதனைகள், போதனைகளால் பிரயோஜனமென்ன? இவைகள் இல்லாததினால் தானே கிறிஸ்துமார்க்கத்தின் வல்லமையை மற்றவர்கள் அறியக்கூடாமல் எல்லா மார்க்கங்களும் ஒன்றுதான் என்று பேசத்துணிந்திருக்கிறார்கள். நாம் தனித்தனியே கிறிஸ்துவின் ஐக்கியத்தில் பிழைத்து, அதன் பலனாக நமக்குள் அன்பும் ஒற்றுமையும் பெருகுமானால் திருச்சபையின் பலத்தை உலகம் அறியும். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் நமக்குள் வசிப்பதும், போதிப்பதும், கிரியை செய்வதுமே பெந்தெகொஸ்தின் விசேஷம்.

---

# XIV

# God's Guidance

# தேவ நடத்துதல்

*"கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது, நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" எரே. 10 : 23.*

நாம் சிறுவர்களாயிருக்கும்போது நமது பெற்றோரைச் சார்ந்து பிழைக்கிறோம். நாம் பெரியவர்களாகும்போது உத்தரவாதம் நமது பேரில் விழுகிறது. கடவுளை அறிந்து அவராலே நாம் நடத்தப்பட வேண்டியது அவசியம். சிறு பிராயத்தில் நம்மைக் காப்பாற்றின தேவனே முடிவுபரியந்தம் நம்மைக் காப்பாற்றி நடத்தவேண்டியவரா யிருக்கிறார். நம்மை நாமே நடத்திக்கொள்ளத் திராணியற்றவர்களா யிருக்கிறோம். பாவத்தால் நமது புத்தி அந்தகாரமடைந்து, சித்தம் பலவீனமாகி, கடவுளுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்னதென்று பகுத்தறியக் கூடாதவர்களானோம். அவரவருக்கு நலமாகத்தோன்றின பாதையில் நடந்து அநேக சங்கடங்களுக்கு ஆளானோம். கர்த்தருடைய வழியோ ஜீவனும், சமாதானமும், ரட்சிப்புமான வழி. அந்த வழியில் நடப்பதே நமக்குப் பாக்கியம். ஆண்டவரே அந்த வழியில் நம்மை நடத்தவேண்டும். ஆண்டவரைப் பற்றிய நிச்சயம் நாம் செய்கிற ஆராதனைகள் ஆசாரங்களால் அல்ல; அவர் நமது ஆவிக்கும் சரீரத்திற்கும் உரிய காரியங்களில் நம்மை நடத்துவதினாலே தான் உண்டாகவேண்டும். அவருடைய நடத்துதல் நிற்கும்போது நாம் திகைக்கிறோம். ஏனென்றால் "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல; தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல."

## I. பிதா நம்மை நடத்தவேண்டியது அவசியம்.

"கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது." சிருஷ்டிகர் பிரபஞ்சமனைத்தையும் உண்டாக்கின பின் அவை தாங்களே தங்களை நடத்திக்கொள்ளும்படி விட்டுவிட்டவரல்ல. அவர் சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கிரியை இடைவிடாமல் நடந்துகொண்டேயிருக்கிறது. கடவுள் நமது கண்களுக்கு மறைவாயிருப்பதுபோல, அவரது ஆளுகையும் நமக்கு மறைவாயிருக்கிறது. கடவுளை ஒப்புக்கொள்ளாத சாஸ்திரிகளுங்கூட பிரபஞ்சத்தின் ஒற்றுமையையும், அது ஆண்டு நடத்தப்படுகிற ஒழுங்கையும் கவனித்து, இவை யாவற்றையும் ஓர் பெரிய மனது நடத்துகிறது என்று அறிக்கையிட்டிருக்கிறார்கள். கடவுளை ஏற்றுக்கொண்ட தேவபக்தியுள்ள சாஸ்திரிகளோ, சிருஷ்டிப்பில் விளங்கும் அவரது அளவற்ற ஞானத்தையும் இடைவிடாத அவரது ஆளுகையையும் சிந்தித்து ஆனந்த பரவசமடைந்து அவரைப் போற்றுகிறார்கள். தேவாவியால் மனக்கண் பிரகாசிக்கப்பெற்ற சங்கீதக்காரன்: "கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார், அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது" என்கிறார். சர்வத்தையும் ஆளுகிறது என்று சொல்லும்போது அவர் ஆளுகைக்குத் தப்பினது ஒன்றுமில்லை. சகலமும் அவர் பார்வையிலும் விசாரணையிலும் இருக்கிறதென்பது நிச்சயம். நாம் உலகத்தின் காரியங்களைக் கவனிக்கும்போது தேவன் ஆளுகிறதுபோல் நமக்குத் தோன்றுகிறதில்லை. சகலமும் தன்தன் இஷ்டம்போல் நடக்கிறதாகத் தோன்றும். கடவுளற்ற மனுஷர் உலகத்தில் நன்றாயிருக்கிறார்களே, அவர்கள் தங்கள் சுய இஷ்டப்படி காரியங்களை நடத்திக்கொள்ளுகிறார்களே, தேவ நடத்துதலை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததினால் அவர்கள் கெட்டுப்போகவில்லையே என்கிறோம். அவர்கள் நன்றாயிருக்கிறார்கள் என்று நாம் நினைத்துக்கொள்வதேயல்லாமல், தங்களைத் தாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்கள் நன்றாயிருப்பதில்லை. கடவுளால் நடத்தப்படும் சிருஷ்டிப்புகளில் அவருடைய ஞானம் மகிமை விளங்குவதுபோல, தங்களைத் தாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்களில் அவருடைய மகிமை விளங்காது. ஏனென்றால் "மனுஷ

னுடைய வழி அவனாலே ஆகிறதல்ல, தன் நடையை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல.” உலகத்தில் க்ஷேமமாயிருப்பதுபோல் அவர்கள் காணப்படலாம், ஆகிலும் கடவுள் நடத்துதல் இல்லாத வாழ்வில் சகலமும் சஞ்சலமாக முடியும்.

மேலும் கடவுளற்ற மனுஷரும் அவர் ஆளுகைக்குத் தப்பினவர்கள் அல்ல. பொல்லாதவர்கள் செழித்தோங்குகிறார்கள் என்று நாம் கலங்கவேண்டியதில்லை. மனதாரத் தங்களை தேவ நடத்துதலுக்கு ஒப்புவித்து அவரால் நடத்தப்படுகிறவர்கள் அவருடைய ஆசீர்வாதத்திற்கு உரியவர்களாயிருப்பதுபோல, கடவுளை மறந்து, சுய இஷ்டப்படி நடந்து, பொல்லாப்பைச் செய்கிறவர்கள் அவருடைய ஆக்கினைக்கு உரியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவ ஆளுகையை உதறித் தள்ளிவிட்டாலும் அவர் அவர்களை ஆளாமல் விடார். நல்லோர் பொல்லார் யாவரும் அவர் ஆளுகைக் குட்பட்டவர்களே. பொல்லாதவர்கள் செய்யும் தீங்குகளையும் தமது ஆலோசனைக்கேற்றாற்போல் நடத்த அவர் வல்லவராயிருக்கிறார். எஸ்தரின் புஸ்தகம் இதற்கு ஏற்ற திருஷ்டாந்தம். எஸ்தர் புஸ்தகம் வேதத்தில் இருந்தும் கடவுள் என்னும் பேர் அந்தப் புஸ்தகத்தில் இல்லை. அப்படியானால் அது கடவுளற்ற புஸ்தகமா? ஒருக்காலுமல்ல. கடவுள் பேரை அங்கே காணவிட்டாலும் அவர் நடத்துதலை பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். அந்தச் சரித்திரத்தில் தேவகரம் மறைந்திருக்கிறது. மறைவான அவரது கரம் செய்த கிரியையோ பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ஆகாஸ்வேரு, வஸ்தி, எஸ்தர், மொர்தெகாய், ஆமான் என்பவர்களை சரித்திரத்தில் காண்கிறோம். சகலரும் அவர்கள் பேச்சும் அவர்கள் நடத்தையும் போல் தோன்றுகிறது. மெய்யாகவே தேவன் அங்கேயிருந்தார். சரித்திரமுழுவதையும் அவரே நடத்தினார். தீமையைத் தண்டித்தார், நன்மையை மேன்மைப்படுத்தினார். உலகசரித்திரமும் இதுபோலவே அவரால் ஆளப்படுகிறது. சகலமும் தேவசித்தத்திற்கு விரோதம் போல் தோன்றினாலுமென்ன? துஷ்டர் ஜயத்துக்கு வந்ததுபோல் காணப்பட்டாலுமென்ன? பிரபஞ்சத்தின் அதிகாரம் அவர் கையிலிருக்கிறதென்பது நிச்சயம். நாம் சொற்பப் பார்வை

யுள்ளவர்களாதலால், நீண்டபார்வையுள்ளவரின் நடத்துதலை கிரகித்துக் கொள்ளமுடியாமல், ஆண்டவர் சும்மாயிருக்கிறார் என்று நினைக்கிறோம். அவர் ஆளுகிறது மெய்யானால் இப்படிப்பட்ட அக்கிரமங்களை ஏன் அடக்கவில்லை என்கிறோம். அவர் பொல்லாதவர்களைக் கொஞ்சத்தூரம் போகவிட்டிருப்பது மெய்தான். ஆகிலும் அவர்கள் அவருடைய ஆளுகைக்கு மிஞ்சிப் போகமுடியாது. மனுஷன் தீமையானவைகளை யோசிக்கவோ செய்யவோ விடாமல் அவர் தடுக்கிறதாயிருந்தால் உலகத்தில் பாவமேயிராது. அப்படிச் செய்கிறதாயிருந்தால் அவர் ஆதாமைத் தடுத்திருப்பார். அப்படித் தடுக்கிறதாயிருந்தால் மனுஷன் சுயாதீனன் அல்ல. சாத்தான் சகல தீமைகளுக்கும் காரணனாயிருந்தும் அவனும் அவர் ஆளுகைக்குட்பட்டவனே. அவன் கடவுள் முன்பாக ஆஜராகி உத்தரவுபெற்றே தன் காரியங்களை நடத்தவேண்டும். ஆண்டவர் குறித்த அளவுக்கு மிஞ்சி ஒரு அங்குலமாகிலும் அவன் அசையக்கூடாது. நல்லோரின் செய்கையை அவர் ஆசீர்வதிப்பதுபோல, பொல்லாதவரின் செய்கைகளை தமது நோக்கத்துக் கிசைவாக மாற்ற வல்லவராயிருக்கிறார். இதுவே அவர் ஆளுகையின் மகத்துவம். அவருடைய திட்டத்திற்கு மிஞ்சிப்போக ஒருவனாலும் முடியாது. " அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது."

தேவமக்களாகிய நம்மை தேவன் நடத்தவேண்டும். அவருடைய நடத்துதலுக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புக் கொடுக்கும்போது, தமது தயவுள்ள சித்தத்தின்படியும், கிருபையுள்ள ஆலோசனைப்படியும் அவர் நம்மை நடத்துவார். காலம் கொடிய காலமாயிருக்கிறது. வேலையில்லாமை, சம்பாத்தியமில்லாமை, சரீரத்திற்குத் தேவையான நன்மைகள் இல்லாமை முதலான கஷ்டங்கள் மனுஷரைச் சஞ்சலத்திற்குள் அமிழ்த்தியிருக்கின்றன. மக்களைப்பற்றிய கவலையும் குடும்பத்திலுள்ள பலசிக்கலான விஷயங்களும் மனதைப் பாரப்படுத்துகின்றன. கடவுளுடைய பிள்ளைகள் என்பது நமக்குப் பெயர்; நிலைமையோ மகாபரிதாபம். இதற்குக் காரணமென்ன? பரமபிதா நம்மைச் சகல விஷயத்திலும் நடத்தும்படி நாம் அவருக்கு இடங்கொடுக்கவில்லை. எல்லாம் நமது சுய ஆலோசனைகளும் சுயமுயற்சிகளுமா

யிருக்கின்றன. சர்வத்தையும் ஞானமாய் ஆளுகிற பரமபிதா தமது பிள்ளைகளை இவ்வுலகில் நடத்தாதிருப்பாரா? அவர் நம்மை நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். "நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." இதைவிடத் தெளிவான வாக்கு வேண்டுமோ? சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கடவுள் சர்வத்துக்கும் மேலானவர், தமக்கு அருமையான பிள்ளைகளை விசாரித்து நடத்துவதில், கவலையற்றிருப்பாரா? "அவர் உங்களை விசாரிக்கிறவர்" என்று வேதம் கூறுகிறது. நட்சத்திரங்களைப் பேர் சொல்லி அழைக்கிறவர் நமது தலையிலுள்ள மயிரை எண்ணியிருக்கிறார். உன்னதமான பர்வதங்களைப் பார்க்கிறவர், சிறுபுல்லின் இதழையும் கவனிக்கிறார். விசாலமான சமுத்திரத்தை ஆளுகிறவரின் கண்களுக்கு புல்லின் மீதிருந்திலங்கும் பனித்துளியும் மறைவானதல்ல. அடைக்கலான் குருவிமுதலாய் அவர் கூடயிராமல் விழுவதில்லை. இவ்வாறு ஒவ்வொன்றும் அவர் கவனத்தில் இருக்கும்போது தமது பிள்ளைகளை அவர் மறப்பதெப்படி? நம்மை இடைவிடாது நடத்த அவர் வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். "தன்வழியை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல." தன்னைத்தான் நடத்துகிறவன் கெட்டுப்போவான். கடவுள் நம்மை நடத்தவேண்டியது அவசியம்.

## II. கடவுள் யார் யாரை நடத்துவார்?

1. சாந்தகுணமுள்ளவர்களை. "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங். 25:9). தேவ நடத்துதலை நாம் பெற்றுக்கொள்வதற்குச் சாந்தகுணம் அவசியம். சாந்தகுணம் என்பது அமர்ந்த குணம். பெற்றோர் தனக்கு வேண்டியதெல்லாவற்றையும் செய்வார்கள் என்று நம்பி சாந்தமாயிருக்கும் குழந்தையைப்போல, நமது பரமபிதாவை நம்பி நாமும் சாந்தமாயிருக்கவேண்டும். மனுஷர் செய்யும் தீமைகளும் பலவித தொல்லைகளும் நம்மைக் கலக்கச் செய்வதால் நமக்கு ஆத்திரமும் பதட்டமும் உண்டாகலாம். நாம் ஆத்திரப்பட்

நமது சுய இஷ்டப்படி காரியங்களை நடத்தத் துணியலாம். ஆத்திரமும் பதஷ்டமும் எங்கே உண்டோ அங்கே சாந்தகுணம் என்று பேச இடமில்லை. பரம பிதா இருக்கிறார். அவர் எல்லாம் அறிவார். அவர் நமக்கு நன்மையானதைச் செய்வாரென்று நம்பி நாம் அமர்ந்திருப்பதே சாந்தகுணம். மனுஷர் நமக்கு அநியாயம் செய்தபோதிலும் நாம் ஆண்டவர் பேரில் நம்பிக்கையாயிருக்கும்போது அவர் நம்மை நியாயத்திலே நடத்தித் தமது வழியை நமக்குப் போதிக்கிறார். அவர் ஆசீர்வாதமுள்ள நடத்துதலை நாம் காணலாம். வீட்டிலுள்ள ஒரு பையன் துடுக்கனாயிருந்து, தகப்பன் சொல் கேளாமல், தன் இஷ்டப்படியே நடக்கிறதாயிருந்தால் தகப்பன் அவனை நடத்தமுடியாது. மற்ற மகன் தகப்பனை நம்பி சாந்தகுணமுள்ளவனாயிருந்தால் அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்ய தகப்பன் உத்தரவாதியாயிருப்பான். நமது குணம் எப்படிப்பட்டது? நமது இருதய நிலைமை என்ன? சாந்தகுணம் நமக்குண்டா?

2. குருடரை. "குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்" (ஏசா. 42.16). குருடன் துணிந்து நடக்கமாட்டான், ஏனென்றால் தான் போகும் வழி இன்னதென்று அவனுக்குத் தெரியாது. அவனுக்கு எல்லாம் இருளே. அவன் துணிந்து நடந்தால் குழியில் விழுவான் அல்லது வேறு ஆபத்திற்குள்ளாவான். ஆகையால் குருடன் தன்னை வழி நடத்தும்படி நம்பிக்கையான ஒரு மனுஷனை எப்பொழுதும் சார்ந்திருக்கிறான். அவன் குருடனானபடியால் காலமெல்லாம் பார்வையுள்ள மற்றொருவனால் நடத்தப்படவேண்டியவனாயிருக்கிறான். தேவனுடைய பிள்ளைகளும் குருடரே. ஆண்டவரும் அவர்களை அப்படியே பாவித்து நடத்துகிறார். "என் தாசனையல்லாமல் குருடன் யார்? உத்தமனையல்லாமல் குருடன் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனையல்லாமல் அந்தகன் யார்?" முதலில் குருடரைத் தாம் நடத்துவ

தாகச் சொல்லி, சற்று பிந்தி அந்தக் குருடர் இன்னாரென்று விவரிக்கிறார். ஆண்டவருடைய பிள்ளைகளும் உத்தம ஊழியருமே குருடர். அவர்கள் சுய இஷ்டப்படி எதையும் துணிந்து செய்யார்கள். சகல காரியங்களையும் பிதாவுக்கு ஒப்புவித்து அவருடைய நடத்துதலுக்குக் காத்திருப்பார்கள். ஆண்டவர் அவர்களை நடத்துவதற்கேற்றாற்போல் இணங்கி நடப்பார்கள். அவர்கள் குடும்பக் காரியங்களில் இதைப்பற்றி அதைப்பற்றி என்னசெய்யப்போகிறீர்களென்று யாராகிலும் அவர்களைக் கேட்டால்: தெரியாது என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்வது பெருமையுமல்ல பொய்யுமல்ல. உண்மையிலேயே அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் பரம பிதாவின் கரத்தைப் பிடித்து நடக்கும் குருடர்கள். அவரையே பூரணமாய் நம்பி அவர் நடத்துதலுக்கு மனப் பூர்வமாய்க் காத்திருப்பவர்கள். இவர்கள் தாங்களாக ஒன்றைச் செய்யத் திராணியற்றவர்களாக இருப்பதால் ஆண்டவரே தங்களை நடத்தும்படி தங்களையும் தங்கள் காரியங்களையும் அவர் கையில் விட்டு விடுகிறார்கள். உண்மையுள்ள ஆண்டவர் தமது வாக்குப் பிசகாமல் அவர்களைக் கிருபையாய் நடத்துகிறார். அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குகிறார். அவர் அவர்களைப் படிப்படியாக நடத்தி, இருள் என்று நினைத்த காரியத்தை வெளிச்சமாகவும், கோணல் என்று மயங்கின விஷயத்தைச் செவ்வையுமாக்கி அவர்களை மகிழ்ச்சியாக்குகிறார். இந்த அனுபவம் அவர்களுக்கு இருப்பதால் சுய இஷ்டப்படி எதையும் செய்யத் துணியார்கள். கர்த்தரை எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் நம்பிப் பிழைப்பதே அவர்கள் பாக்கியம். மற்றவர்கள் விஷயத்தில் எவ்வளவோ பிரயாசத்தோடும் எவ்வளவோ காலஞ்சென்றும் முடிகிற காரியங்கள், இவர்கள் விஷயத்தில் ஒரே நாளில் முடியும். இவ்வாறு கர்த்தரையே அவர்கள் சார்ந்து பிழைப்பதால் அவர்கள் சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."

**3. தேவராஜ்யத்தைத் தேடுவோர்.** நமது கவலைகள் யாவும் முக்கியமாய் நமது சரீரத்தைப் பற்றினதாயிருக்கின்றன. என்னத்

தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், எங்கே குடியிருப்போம், மக்கள் காரியங்களை எப்படி ஒழுங்கு பண்ணுவோம், கடனை எப்படித் தீர்ப்போம் என்று குடும்பத்திற்குரிய பற்பல கவலைகள் நம்மைப் பாரப்படுத்துகின்றன. ஐசுவரியவான் தனக்குள்ளதைப் பாதுகாப்பதில் விசாரமுற்றிருக்கிறான். லட்சாதிபதியும் கவலைக்கு நீங்கினவனல்ல. உள்ளவன் தனக்குள்ளதில் கவலைகொள்ளும்போது, இல்லாதவன் தனக்கு இல்லையே எனக்கவலை கொள்ளுகிறான். இதுவிஷயத்தில் கடவுள் நடத்துதல் நமக்கு மிகவும் அவசியம். அவர் நம்மைச் சகல காரியங்களிலும் பராமரித்து நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். நமது சங்கடங்கள் நீங்கி சமாதானத்தோடு நமது வாழ்நாளைக் கழிப்பதற்கு ஒரு வழி தோன்றுமானால் நமக்கு எவ்வளவோ சந்தோஷம்! அந்த வழியைத்தான் ஆண்டவர் நமக்குக் காண்பிக்கிறார். "நீங்கள் தேவராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் கூடக்கொடுக்கப்படும்." ராஜ்யத்தையே தேடுங்கள் என்பது தேவ ஆளுகையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதாவது தேவனுடைய ஆட்சிக்குரிய காரியங்களில் நாம் முழுக்கவனம் வைத்து, அவருடைய ராஜ்யத்திற்காகச் சிரமம் எடுத்துக் கொள்ளும்போது, நமக்கான காரியங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் ஏற்றுக்கொண்டு நம்மை நடத்துகிறார். காலமெல்லாம் நம்மைப் பாரப்படுத்திக் கவலைக்குள்ளாக்கின காரியங்களை அவர் ஏற்றுக்கொண்டு காலமெல்லாம் நாம் அனுபவிக்காத ராஜ்யத்தின் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நமக்கு அருளுகிறார். இதுவே தேவ ஒழுங்கு. இதுவே நாம் பிழைக்கும்வழி. ஆண்டவர் காரியத்தில் நாம் சிரத்தையாயிருக்கும்போது, நமது காரியத்தில் அவர் சிரத்தையாயிருக்கிறார். ஆவிக்குரிய ராஜ்யத்தின் பிள்ளைகளாக நாம் பிழைக்கும்போது இருபக்கங்களிலும் நமக்கு ஆசீர்வாதமுண்டாகும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுவோம், சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளையும் அடைவோம். தேவராஜ்யத்தை அசட்டை செய்து சரீரத்திற்குரிய காரியங்களுக்காக நாம் கவலைப்படுவோமானால், ஆவிக்குரிய நன்மைகளையும் பூமிக்குரிய பராமரிப்பையும் இழந்துபோவோம்.

அப்படியானால் நாம் வேலை செய்யாமலும் பிரயாசப் படாமலும் கடவுளைத் தியானித்துக் கொண்டேயிருந்தால் ஆண்டவர் சாப்பாடு போடுவாரா என்று கேட்பவரும் உண்டு. இப்படிக் கேட்பவர் கடவுளை அறியாதவர் என்பதற்கு இந்தக் கேள்வியே அத்தாட்சி. சோம்பேறியைப் போஷித்துக் காப்பாற்றுவதாக ஆண்டவர் சொல்லவில்லை. "உன் கையின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்" என்பதே அவர் வாக்கு. மூன்று வருஷம் பிரசங்க ஊழியம் செய்த ஆண்டவர் பதினெட்டு வருஷங்களைப் பாடுபட்டு வேலைசெய்து குடும்பத்தைப் பராமரித்தார். பரம பிதா அவர் கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்தார். அவர் முற்றிலும் ராஜ்யத்தின் ஊழியத்திற்கென்று வெளிப்பட்ட பின் அவருக்குத் தேவையானதை பிதா அவருக்குக் கொடுத்தார். ஆண்டவர் நம்மை எந்த நிலைமையில், எந்த இடத்தில், எந்த வேலையில் வைத்திருக்கிறாரோ, அங்கே நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளாக நடந்துகொண்டு, நமது வேலையை கடவுள் பார்வையில் உண்மையோடும் முழுபலத்தோடும் செய்யவேண்டும். ஆண்டவர் தமது வாக்குப்படி நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பார். நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து, அவருடைய பிள்ளைகளிடத்தில் அன்புவைத்து, அவருடைய ராஜ்யத்திற்காக உழைக்கும்போது பரம பிதா நமது குடும்பக் காரியங்களை ஏற்றுக்கொண்டு, நம்மைக் கிருபையாய் நடத்தி, நமக்கு வேண்டிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பார். முந்தின கவலையும் கலக்கமும் நீங்கி நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம்.

4. **தமது ஆடுகளை.** "தன் ஆடுகளைப்பேர் சொல்லிக் கூப்பிட்டு அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான்." (யோ. 10:3). இந்த அதிகாரத்தில் ஆண்டவர் தம்மை நல்ல மேய்ப்பன் என்கிறார். தமது ஆடுகளை நடத்துவதாகச் சொல்லுகிறார். கபடும் தந்திரமுமுள்ள நரிகளை அல்ல. பிடிவாத குணமுள்ள கரடிகளை அல்ல. பட்சிக்கும் குணமுள்ள ஓநாய்களை அல்ல. சாந்தமுள்ள ஆடுகளை அவர் நடத்துவார். தமது ஆடுகளுக்கு மூன்று அடையாளங்கள் கொடுக்கிறார். அவைகள் அவரை அறியும்; அவரும் அவைகளை அறிவார். ஆடுகளை அறிந்த மேய்ப்பன்; மேய்ப்பனை அறிந்த ஆடுகள்.

ஆடுகள் அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். ஆடுகள் அவரைப் பின்செல்லும். ஆண்டவர் நடத்தும் ஆடுகள் அவரை இன்னாரென்று அறிந்து, அவர் வார்த்தைக்குச் செவிகொடுத்து, அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும். மேய்ப்பனாகிய அவர் அவைகளுக்கு நல்ல மேய்ச்சல் கொடுத்து, தண்ணீர் காட்டி, மத்தியானத்தில் சோலையின் கீழ் மடக்கி இளைப்பாற வைத்து, இரவில் துஷ்டமிருகங்களால், திருடரால் மோசம் வராதபடிக்கு விழித்திருந்து பாதுகாக்கிறார். தமது உயிரையும் அவைகளுக்காகக் கொடுப்பார். இதுவே தேவ நடத்துதல். அந்த நடத்துதலில் பராமரிப்பும் பாதுகாப்பும் உண்டு. தேவனுடைய மக்கள் பேதை ஆட்டுக்கொப்பானவர்கள். அவர்கள் சாந்த குணமுள்ளவர்கள். அவர்கள் தங்கள் பலவீனத்தை உணர்ந்து தேவனையே சார்ந்து பிழைப்பதால் அவர்களை வழி நடத்தும் உத்தரவாதத்தை அவரே எடுத்துக்கொள்ளுகிறார். ஆண்டவருடைய கிருபையுள்ள நடத்துதல் நமக்குக் கிடைக்கவேண்டுமானால் நாமும் ஆடுகளைப் போல நல்ல மேய்ப்பராகிய கிறிஸ்துவை அறிந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

5. கர்த்தரை எப்பொழுதும் நினைத்துக் கொள்ளுகிறவர்களை. "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்" (நீதி. 3.6). எங்கேயிருந்தாலும், எங்கே போனாலும், என்னவேலை செய்தாலும், இரவும் பகலும் கர்த்தரை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். இது மந்திர உச்சரிப்பு போல் அல்ல. ஜெப மாலையைக் கையில் வைத்து எண்ணுவதல்ல. உண்மையிலேயே நமது இருதயம் ஆண்டவர் அன்பால் நிறைந்து, அவர் சமுகம் நம்மோடிருப்பது நமக்குப் பிரத்தியக்ஷமாகவேண்டும். அவர் நமது பாதைகளைச் செவ்வை பண்ணவேண்டுமானால் அவர் கூடயிருப்பதை நாம் மறந்துபோகக் கூடாது. நமது கண்கள், கைகள், கால்கள் வேலையில் முயற்சியாயிருந்தாலும் நமது மனம் எப்போதும் ஆண்டவர் பேரிலேயே யிருக்கவேண்டும். ஒரு வேளை வேலையின் ஊக்கத்தால் நாம் அவரை நினைக்கக் கூடாமற்போனாலும் அது மறதியல்ல. நாம் முழுக்கவனத்தோடு செய்யும்

வேளையும் அவரை நினைப்பதாகும். நாம் நினைக்காத நேரத்திலும் "கர்த்தரோ நம்மை நினைத்திருக்கிறார்." இவ்விதமாய் நமது ஜீவியத்தில் ஆண்டவரை நினைத்துக்கொள்ளும்போது அவர் நமது காரியங்களைச் செவ்வைப் படுத்துகிறார்: அநேக தீமைகளுக்கு நம்மை விலக்கி ரட்சிக்கிறார். அந்நிய தேசத்தில் யோசேப்பு கர்த்தரோடு சஞ்சரித்தார். கர்த்தரும் யோசேப்பை விட்டு விலகவில்லை. எவ்வளவோ பாடுகள் அவமானங்கள் நேரிட்டும், கர்த்தர் அவைகளின் மூலமாய் யோசேப்பின் பாதைகளைச் செவ்வைப் படுத்தினார். யோசேப்பு எகிப்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார். கர்த்தரை எப்பொழுதும் நாம் நினைத்துக்கொள்ளும்போது நாம் ஒன்றிலும் சோர்ந்து போகமாட்டோம். ஒருவரிடத்தில் ஒரு தயவுக்காகப் போகிறோம். நமக்கு உதவிசெய்யும்படி அவரைக் கேட்கிறோம். அவர் அனுகூலமான உத்தரவு கொடுத்தாலும் சரிதான், முடியாது என்று சொல்லி விட்டாலும் சரிதான். ஏனென்றால் கர்த்தரை எப்பொழுதும் நினைத்து, நமது கண்கள் அவர் பேரில் இருக்கிறபடியால், அவர் நமக்கு நன்மையாயிருப்பதைச் செய்வாரென்று அறிந்திருக்கிறோம். சுய இஷ்டப்படி முயற்சி செய்வோமானால் காரியம் வாய்த்தால் சந்தோஷமும், வாய்க்காவிட்டால் மனச்சோர்வும் துக்கமும் உண்டாகும். நமது வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்ளும்போது அவர் நமது பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.

6. **தமக்குக் காத்திருப்பவர்களை.** "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்யவைகளை, நீரே யல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" (ஏசா. 64 : 4). இது மகா உன்னதமான வாக்கு. ஆண்டவர் தமக்குக் காத்திருக்கும் பிள்ளைகளுக்குச் செய்யும் நன்மைகளையும், அவர்களை நடத்தும் வழியையும் மனுஷன் அறியமுடியாது. அவர் ஒருவருக்கே அது தெரியும். அவர் நன்மையானவைகளைச் செய்யும்போது மனுஷர் கண்டு ஆச்சரியப்படுவார்கள். அவர் தமது பிள்ளைகளை நடத்தும் விஷயத்தில்

ஒருவரிடத்திலும் ஆலோசனை கேட்பதில்லை. இந்த ஆசீர்வாதமான நடத்துதல் அவருக்குக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கே கிடைக்கும்.

நாம் சுருக்கமான வாழ்வுள்ளவர்களாதலால் நாம் விரும்பும் காரியங்களை ஆண்டவர் சீக்கிரமாய்ச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அதற்காக ஊக்கமாய் ஜெபிக்கிறோம். உத்தரவைக் காணோம். ஏன் ஆண்டவர் காது கேளாதவர்போலிருக்கிறார், ஏன் மறு உத்தரவு கொடாதிருக்கிறார் என்று நமக்குள்ளே கேட்டுக்கொள்ளுகிறோம். ஆனால் ஆண்டவர் நமது காரியங்களை அறியாதவர் அல்ல; நமது ஜெபங்களைக் கேளாதவருமல்ல. நாம் கேட்பதிலும் மேலான நன்மைகளை நமக்குக் கொடுப்பதற்காக அவர் தாமதிக்கிறார். நம்மைக் காத்திருக்கும்படி வைக்கிறார். நாம் விரும்புகிறபடியல்ல அவர் விரும்புகிறபடி; நாம் கேட்கிற நேரத்தில் அல்ல அவர் கொடுக்கும் நேரத்தில் நன்மையானவைகளை நமக்குச் செய்வார். ஒரு நிமிஷமும் முந்தவுமாட்டார் ஒரு நிமிஷம் பிந்தவுமாட்டார். ஆகையால் தேவமக்கள் ஆண்டவருடைய வேளைக்காகக் காத்திருக்கவேண்டும். அவர் சும்மாயிருப்பதுபோல் நமக்குத்தோன்றலாம். ஏன் சும்மாயிருக்கிறீர் என்று நாமும் கேட்கலாம். அவர் சும்மாயிருப்பதுபோல் தோன்றும்போதுதான் நமக்கான காரியத்தை அவர் ஆயத்தம் பண்ணுகிறார். தகப்பனைப் பார்த்து மகன்: அப்பா, நான் கேட்டதைப் பற்றி ஒன்றும் பேசாமலிருக்கிறீர்களே என்று கேட்க, தகப்பன்: மகனே, உன் காரியமாகத்தானே அலுவலாயிருக்கிறேன் என்றார். சங்கீதக்காரனும் நம்மைப்போலவே ஜெபித்தும் உத்தரவு வராதபோது: என் ஆண்டவரே, பேசாமலிருக்கிறீர்? ஏன் பேசாமல் சும்மாயிருக்கிறீர் என்று கேட்டார். காத்திருக்கவேண்டிய அவசியம் அப்போது அவருக்குத் தெரியவில்லை. பிற்பாடு அதை அறிந்துகொண்டார். "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்" என்கிறார். கர்த்தருக்காக நாம் பொறுமையுடன் காத்திருக்கும்போது, நாம் எதிர்பார்ப்பதிலும் மேன்மையான காரியங்களை அவர் நமக்குச் செய்வார். என்னைக் காத்திருக்கும்படி செய்த ஆண்டவர் எனக்குப் பெரிய காரியத்தைச் செய்

தாரே என்று சொல்லி, ஆனந்த பரவசமடைந்து, ஆனந்தக்கண்ணீர் சொரிவோம்.

ஆத்திரமும் அவசரமும் நமக்கே கேடாகும். இஸ்ரவேல் தேவனுடைய ஆலோசனைக்குக் காத்திராமல் வனாந்தரத்தில் தங்களை அழித்துக்கொண்டார்கள். ஆத்திரமான நினைவு, ஆத்திரமான பேச்சு, ஆத்திரமான செய்கை நமக்கே அவமானத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கும். தேவ நடத்துதலுக்குக் காத்திராமல் குறுக்கு வழி பாய்வது நமக்கே ஆபத்தாகும். தேவ ஆலோசனைக்குக் காத்திராமல் அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று காரியத்தை நடத்துவதும் கவலைக்கு இடமாகும். உயர்ந்த சிகரத்தில் ஏறும்படி சிலர் மலையேறினார்கள். மலை வழிகாட்டி அவர்களைத் தகுந்த பாதை வழியாக நடத்திக்கொண்டுபோனான். அந்தச் சிகரத்திற்குச் சமீபிக்கவே, அவர்களில் ஒருவன் எல்லாருக்கும் முந்திச் சிகரத்தில் ஏறும்படி விரும்பி, திடீரென அவர்களைவிட்டுப் பிரிந்து குறுக்குவழி பாய்ந்தான். இதைக் கண்ட வழிகாட்டி வேகமாய்ப் பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்துப் பின்னாக இழுத்து: நீ அவ்வழி நடந்திருந்தால் சில நிமிஷத்திற்குள் பாதாளம்போய்ச் சேர்ந்திருப்பாய் என்றான். ஏனென்றால் அவன் பாதை என்று நினைத்து நடக்க ஆரம்பித்த குறுக்குவழி பயங்கரமான பிளப்புள்ள அகாதப்பெருங்குழி. உறைபனி அந்தப் பிளப்பை மறைத்திருந்தது. தேவன் நம்மை நடத்தும் பாதையைவிட்டு நாம் குறுக்குவழி பாய்வது நமக்கு அபாயமாகும்.

தேவ நடத்துதலை அறிவதற்குப் பொறுமையுடன் காத்திருப்பது நல்லது. பொறுமை அமர்ந்த மனதை நமக்குத் தந்து ஆண்டவர் நம்மை நடத்தச் சித்தங்கொண்டிருக்கிற வழியை நாம் காணும்படி செய்யும். ஆத்திரமும் பதஷ்டமும் நமது புத்தியைக் குழப்பி நமது மனதைக் கலங்கச் செய்யும். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் மண்டித் தண்ணீரை வார்த்தால் அந்தத் தண்ணீரின் அடியைப் பார்க்கமுடியாது. அதை அப்படியே ஒரு மேஜைமேல் வைத்து சற்றுநேரம் காத்திருந்தால் வண்டல் யாவும் அடியில் இறங்க, தண்ணீர் தெளிவாகி, நாம் ஊடுருவிப் பார்க்கக் கூடியதாகும். தேவ

னுடைய தன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்ன தென்று நாம் பகுத்தறிய வேண்டுமானால் நமக்குத் தெளிந்த புத்தி அவசியம். கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறவர்களுக்கே இந்தத் தெளிவுள்ள புத்தி கிடைக்கும். அவர்கள் ஜீவ பாதையில் நடத்தப்பட்டு தேவனால் ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள்.

## III. எப்படி நடத்துவார்?

கடவுள் நம்மை நடத்தவேண்டியது அவசிய மென்பதையும், அவர் யார் யாரை நடத்துவார் என்பதையும் கவனித்தோம். இப்போது அவர் நம்மை எப்படி நடத்துவார் என்பதைப் பார்ப்போம். இது நமது அனுபவத்தோடு சம்பந்தப் பட்டிருப்பதால் இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது அவசியம்.

1. தமது வசனத்தால் நடத்துவார். "நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" என்கிறார். எப்படிப் போதிப்பார்? வானத்திலிருந்து அசரீரி வாக்கு நமது காதிற்குத் தொனிப்பதல்ல. நமது கையிலிருக்கும் திருவசனத்தின் மூலமாய் அவர் நம்மைப் போதித்து நடத்துகிறார். கர்த்தருடைய வசனம் நமது பாதைக்கு வெளிச்சமும் நமது வழிக்கு ஒளியாகவும் இருக்கிறது. கர்த்தருடைய வசனத்தில் பிரியமாயிருந்து எப்பொழுதும் அதில் தியானமாயிருப்பவர்கள் தங்கள் வாழ்விற் கடுத்த காரியங்களில் தேவ சித்தமின்னதென்று அறிந்துகொள்ளுகிறார்கள். இது வேதாகமத்தைத் திடீரெனத் திறந்து ஒரு வாக்கியத்தில் விரல் வைத்துப் பார்ப்பதல்ல. அது நல்ல வழக்கமல்ல. தேவசித்தம் அறிய விரும்பின ஒருவன் இவ்வாறு திறந்து விரல் வைத்து வாசித்தான். "யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்" என்னும் வாக்கியம் வந்தது. அதை வெறுத்து மறுபடியும் திறந்து வேறொரு இடத்தில் விரல் வைத்து வாசித்தான். "நீயும் போய் அந்தப்படியே செய்" என்று வந்தது. ஆ, இந்த வழக்கம் மோசம் என்று அதை விட்டுவிட்டான். தேவ சித்தம் அறிய விரும்புகிறவர்கள் நாள்தோறும் ஒழுங்காய் சில அதிகாரங்கள் வாசித்துத் தியானிப்பார்கள். அவர்கள் கருத்தாய் வாசித்து ஆராய்ச்சிசெய்யும் வசனங்

கள் மூலமாய்த் தேவன் தமது சித்தத்தை அவர்களுக்குத் தெரிவிக்கிறார். ஜார்ஜ் முல்லர் இதற்குப் பலத்த திருஷ்டாந்தம். அவர் மனுஷரிடம் உதவிதேடாமல் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை போஷித்துக் காப்பாற்றி வந்தார். இது மகா பொறுப்பும் உத்தரவாதமுமான வேலை. தமக்கு வேண்டிய சகல காரியங்களுக்கும், செய்யவேண்டிய சகல வேலைகளுக்கும் தேவ நடத்துதலைத் தேடினார். அந்த நடத்துதலை தாம் தினந்தோறும் வாசிக்கும் வேதவசனத்தின் மூலமாய்க் கண்டடைந்ததாக அவரே சொல்லுகிறார். இதன் உண்மையை தேவ மக்கள் அநேகர் அறிவார்கள். தங்கள் குடும்பம் உத்தியோகம் முதலிய பல காரியங்களில் தேவ நடத்துதல் அவர்களுக்கு வேண்டியதிருக்கிறது. தாங்கள் அனுதினமும் வாசிக்கும் வேத வசனத்தின் மூலமாகவும், அன்றாட தியானம், வழிக்கு ஒளி என்னும் புஸ்தகங்கள் மூலமாகவும் தேவ சித்தத்தைக் கண்டடைகிறார்கள். அவர்கள் யோசனையை அறிந்த ஆண்டவர் தமது வசனத்தின் மூலமாய் அவர்கள் மனதைப் பிரகாசிப்பித்து, அவர்கள் கலங்கின காரியத்தில் தைரியத்தையும், சந்தேகித்த விஷயத்தில் நிச்சயத்தையும் கொடுக்கிறார். தேவ வசனம் அவர்கள் இருக்கும்போது அவர்களோடு சம்பாஷிக்கும், நடக்கும்போது வழிகாட்டும், படுக்கும்போது அவர்களைக் காப்பாற்றும். தேவ ஆலோசனையைத் தேடும் மக்களை ஆண்டவர் தமது வசனத்தின் மூலமாய்ப் போதித்து நடத்துகிறார். வேதத்தை அசட்டை செய்கிறவர்களுக்கு தேவ நடத்துதல் இல்லை.

2. **ஆவியினால் நடத்துவார்:** "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்." ஆண்டவருடைய ஜீவியம் முழுவதும் ஆவியின் நடத்துதலே. அவர் ஆவியினால் பிறந்தார். ஆவியில் வளர்ந்தார். ஆவியினால் வனாந்தரம் சென்றார். ஆவியின் பலத்தால் கலிலேயா திரும்பினார். ஆவியினால் உபதேசித்தார். ஆவியினால் பலத்த கிரியைகளைச் செய்தார். ஆவியினால் சிலுவைக்குச் சென்றார். ஆவியில் உயிர்த்தெழுந்து மகிமைக்குட் பிரவேசித்தார். தம்மை நடத்தின அதே ஆவியைச் சீஷர்களுக்கு அருளினார். அந்த ஆவியானவர் சீஷர்களை நடத்தி

அவர்களை ஜீவியத்திலும் ஊழியத்திலும் வழி நடத்தினார். "உங்களை சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்." தேவ வசனத்தின் ரகசியங்களை வெளிப்படுத்தி, நமது ஜீவியத்தைப் பலப்படுத்தி, நமது ஊழியத்தில் நம்மை நடத்துவதும் தவிர, சகல காரியங்களிலும் ஆவியானவர் நம்மை நடத்துகிறார். நாம் ஆவிக்குரியவர்களாயிருந்து, ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போது ஆவியானவரின் உள்ளான போதனையும் நடத்துதலும் நமக்குக் கிடைக்கும். ஒரு காரியம் தேவ சித்தத்திற்கு விரோதமாயிருந்தால் ஆவியானவர் சந்தேகத்தையும் மனக்குழப்பத்தையும் உண்டாக்குவார். ஒரு காரியம் அவருக்குச் சம்மதியானால் உற்சாகத்தையும் நிச்சயத்தையும் உண்டாக்குவார். இது விஷயத்தில் நாம் தவறிப் போகாதபடி தேவ வசனத்தின் போதனையையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் ஆவியானவரின் போதனை எப்பொழுதும் சத்திய வசனத்திற்கு ஒத்திருக்கும். அவர் வஞ்சக வழியில் அல்ல, சகல சத்தியத்திலும் நடத்தும் சத்திய ஆவியாயிருக்கிறார். ரதத்துடனே சேர்ந்துகொள்ளும்படி பிலிப்புவை ஆவி நடத்தினார் (அப். 8:29). கொர்நேலியு அனுப்பின மனுஷரோடு போகும்படி பேதுருவை ஆவி நடத்தினார் (அப். 10:19). ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குத் தடை பண்ணினார். அவர்கள் பித்தினியா நாட்டுக்குப் போகவேண்டாம் என்று தடுத்தார் (அப். 16.6, 7). இவ்வாறு தடுத்த ஆவியானவரே அவர்கள் பிலிப்பி பட்டணத்துக்குப் போகவும் அங்கே சபை உண்டாகவும் செய்தார். இது புறம்பான நடத்துதல் அல்ல. தேவாவியானவர் நமது ஆவியின் மூலமாய் இதைச் செய், செய்யாதே; போ, போகாதே என்று ஆவி நடத்துகிறார். ஆவிக்குரியவர்களுக்கு இதன் அனுபவம் தெரியும். ஒரு மனுஷன் தங்களைப் பார்க்க வரும்போதே அவன் முகத்தைப் பார்த்து, ஆள் எப்படிப்பட்டவன் என்று அறிந்து கொள்வார்கள். ஒருவன் பேசும்போதே அவன் சத்தத்தைக் கொண்டு அவன் தன்மையைக் கண்டுகொள்ளுவார்கள். உத்தமன் இவன், மாயக்காரன் இவன் என்பதை ஆவியினால் பகுத்தறிவார்கள். ஜெபம் எவ்வளவு தொனியாயிருந்தாலும், பிரசங்கம் எவ்வளவு சாமர்த்தியமாயிருந்தாலும் அவைகள் ஆவிக்குரியவைகள் அல்லவென்

யதை உடனே அறிந்துகொள்வார்கள். இதுபோலவே சகல காரியங்களிலும் ஆவியானவர் அவர்களைப் போதித்து நடத்துகிறார். கிறிஸ்துவின் ஆவியில்லாதவர்களுக்கு தேவ நடத்துதல் இல்லை.

**3. தமது பிள்ளைகளைக்கொண்டு நடத்துவார்.** தேவதூதர்கள் தமது பணிவிடைக்காரராகிலும் அவர்களை நமது கண்கள் காண்பதில்லை. அவர்கள் பணிவிடை நமக்குண்டென்பது நிச்சயம். ஆனால் நமது கண்கண்ட தேவதூதர்கள் கடவுளுடைய பிள்ளைகளே. ஆண்டவர் தமது பிள்ளைகளைக்கொண்டு தமது பிள்ளைகளை நடத்துகிறார். பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில் கீழே விழுந்து, கண்பார்வையற்று: ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேட்க அவர்: நீ எழுந்து பட்டணத்திற்குள்போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அந்தப்படி ஆண்டவர் தமது அடியானாகிய அனனியாவை அனுப்பி பவுலைத் தைரியப்படுத்தி வழி நடத்தினார். பவுல் பிந்தி அப்போஸ்தலரோடு சேர்த்துக்கொள்ளப் பார்த்தபோது, அவர்கள் சந்தேகப்பட்டு அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. பர்னபா பவுலைச் சேர்த்துக்கொண்டு அவரைத் தைரியப்படுத்தினார். இதுபோலவே ஆண்டவர் சகலத்துக் காலம் தமது பிள்ளைகளைக்கொண்டு நம்மைத் தைரியப்படுத்தி வழிநடத்தி வந்திருக்கிறார். தேவனுக்குத் தங்களை ஒப்புவித்து அவருடைய ராஜ்யத்திற்கென்றும் அவருடைய மகிமைக்கென்றும் உத்தமமாய் உழைக்கிற தமது அடியாருக்கு உதவிசெய்ய, அவர் தமது மக்களை எப்பொழுதுமே ஆயத்தமாய் வைத்திருக்கிறார். நமது ஜீவகாலத்தைக் கொஞ்சம் பின்னாகப் பார்ப்போமானால் ஆண்டவர் தமது பிள்ளைகள் மூலம் நம்மைத் தைரியப்படுத்தி நம்மை வழி நடத்தி வந்த கிருபையைக் காணலாம். அவர்கள் ஆலோசனையும், அன்பும், அனுதாபமும், சகாயமும் நாம் நமது ஊழியத்தில் முன்னேறிச் செல்வதற்கு எவ்வளவோ அனுகூலமாயிருந்தன என்பது நிச்சயம். நாம் கார் [illegible] செய்து திரியவேண்டிய அவசியமில்லை. நமது ஜீவியமும் ஊழியமும் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்குமானால், நமக்குத் தேவையான நன்மைகளை நமக்குக் கொடுத்து [illegible]

கையைப் பலப்படுத்துவதற்கு ஆண்டவர் தமது பிள்ளைகளை எழுப்புவார் என்பது நிச்சயம்.

கிராமங்களில் வசிக்கும் ஊழியக்காரர் மிகுந்தொருக்கும் சொற்பச் சம்பளத்தில் பிழைக்கவேண்டியதிருக்கிறது. குழந்தைகள் பெருகவே அவர்களைப் போஷிக்கவும் கல்வி கற்பிக்கவும் முடியாமல் கடனுக்குள்ளாகிக் கலங்கித் தவிக்கிறார்கள். பற்பல கவலைகள் அவர்களைப் பாரப்படுத்தவே தேவ ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்ய முடியவில்லை. அநேகருடைய நிலைமை இவ்வண்ணமாகவே யிருக்கிறது. இதற்குப் பரிகாரமென்ன? என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்னும் கவலைகள் நம்மை மேற்கொள்ளுமானால் நாம் ஆண்டவருக்கு உற்சாகமாய் ஊழியஞ்செய்வதெப்படி? கர்த்தர் தமது ஊழியரை மறந்துவிட்டாரா? “ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை என் பிதா கனம்பண்ணுவார்” என்று ஆண்டவர் சொன்னாரே. மனுஷர் கண்காணாமல் வனாந்தரத்தில் இருந்த எலியாவை அவர் காகங்கள் மூலமாய்ப் போஷித்தாரே. கர்த்தர் நம்மைப் பராமரிக்கக் கடப்பாடுற்றிறதில்லையென்றால் நாம் அவருடைய ஊழியக்காரர் அல்ல. ஆண்டவர் தமது ஊழியத்தில் நம்மை உபயோகிக்கக் கூடாதபடி பாவம் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. நாம் சுய இஷ்டப்படி நடந்து பாவத்தில் நிலைத்திருக்கும்போது அவருடைய கிருபையுள்ள உதவி நமக்குக் கிடைக்காது. மறுபடியும், ஆத்துமாக்கள் ரட்சிப்பும் நமது ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்து, நாம் அவருக்கென்றே பிழைத்து உழைப்போமானால் நமக்கும் நமது குடும்பத்திற்கும் தேவையான சகல நன்மைகளையும் அவர் நிச்சயமாகவே அருளுவார். மிகுந்த கொடிய பஞ்சம் நமக்குப் போதாதிருந்தாலும் தேவன் தமது பிள்ளைகளை எழுப்பித் தமது ஊழியக்காரருக்கு வேண்டிய யாவையும் கொடுப்பார். தங்களுடைய ஆத்தும ரட்சிப்புக்காகவே நாம் பாடுபடுகிறோம் என்பதைச் சபையார் உணருவார்களானால் தங்களுக்குரிய நன்மைகளில் நமக்குப் பகிர்ந்து கொடுக்கும்படி வாஞ்சைகொள்ளுவார்கள். இவ்வாறு கடவுள் தங்களைப் பராமரித்து நடத்துவதை அனுப

வத்தில் அமிர்த தேவ ஊழியர் அநேகரிருக்கிறார்கள். கர்த்தரே லேவியரின் சுதந்தரம்.

இதன் சம்பந்தமாய் என் உடன் ஊழியர்களோடு நான் பேச வேண்டும். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் தமக்குச் சித்தமான வரங்களை அளித்து அவர் ஊழியத்தை உலகத்தில் நிறைவேற்றும்படி நம்மை அனுப்பியிருக்கிறார். ஆகையால் நாம் தனித்தனியே ஆண்டவருக்கு உத்தரவாதிகளாயிருக்கிறோம். பல மிஷன்கள் நமது தேசத்தில் வேலைசெய்து வருகின்றன. இவற்றில் ஏராளமான தேவ ஊழியருண்டு. நமது வேலைகளைக் கவனிக்கவும் நமக்குச் சம்பளம் கொடுக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் நமக்குச் சம்பளம் கொடுக்கிறவர்களாதலால், அவர்கள் தயவைச் சம்பாதிக்கும்படி, எவ்விதத்திலும் அவர்களுக்குப் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டும் என்கிற கவலை நமக்கு உண்டாகிறது. இதனாலே அவர்களே நமது கண்ணும் கருத்துமாகிறார்கள். நாம் அவர்கள்மேல் பற்றுதல்வைத்து அவர்கள் இஷ்டம்போல் பிழைக்க நாடும்போது, அறிந்தோ அறியாமலோ, நமது சுயசித்தத்தை இழந்துபோகிறோம். இவ்வாறு ஒருவருடைய சித்தம் அநேகருடைய சித்தத்தை ஆண்டுகொள்ளுகிறது. அவர்கள் பிரியமென்ன, அவர்கள் சொல்வதென்ன என்பதே நமது கவலையாயிருக்குமானால் நமக்குரிய சுயாதீனத்தை நாம் இழந்துபோவோம். நமக்குச் சுயாதீனமில்லாவிட்டால் ஆண்டவர் நமக்குத் தந்த வரங்களை நாம் தாராளமாய் விருத்திபண்ணவோ உபயோகிக்கவோ முடியாது. தேவ ஊழியரான பலர், ஒருவருடைய இஷ்டத்தையே நிறைவேற்றும் கருவிகளாகும்போது, ஆண்டவர் அவர்களை உலகத்தில் அனுப்பின நோக்கத்தை நிறைவேற்றக் கூடாதவர்களாவார்கள். அநேக சித்தங்களை ஒரு சித்தம் ஆளும்போது, அவர்களுக்குச் சுயாதீனமில்லாததால், ஆண்டவர் அவர்களுக்கு அருளிய வரங்கள் மங்கி மழுங்கிப்போகவுங் கூடும். காலஞ் செல்லச் செல்ல, குடும்பமும் பெரிதாக, அவர்களைப் பராமரிக்கும் பாரம் நம்மேல் விழுவதால், எஜமான் தயவிருந்தாலேபோதும் என்கிற எண்ணமும் உண்டாகிறது. குடும்பக்காரியம் நடக்கவேண்டிய திரும்ப

னால், உபகாரிகள் தயவைச் சம்பாதிப்பதே நமது ஜீவியத்தின் நோக்கமாகிவிடுகிறது. நாமாக ஒன்றை யோசிக்கவோ செய்யவோ வழியில்லை. ஆவிக்குரிய வல்லமையையும் சந்தோஷத்தையும் இழந்துபோகிறோம்.

இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமையில் நாம் என்ன செய்யக் கூடும்? நாம் எழும்பிப் பிரகாசிப்பதெப்படி? அதிகாரிகள் என்ன சொல்லுவார்களோ, என்ன நினைப்பார்களோ என்கிற பயம் உண்டாகிறது. கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய அநேக சகோதரர் சகோதரிகள் நிலைமை இப்படியே இருக்கிறது. அதிகாரிகளாலும் ஊழியர்களாலும் நாம் அன்பில் கட்டுப்படலாமே தவிர நமது சுயாதீனத்தை விற்றுப்போடக் கூடாது. நமது சித்தம் ஆண்டவருக்கே உரியது. பிதாவின் சித்தம் கிறிஸ்துவின் சித்தத்தை ஆண்டு நடத்தினதுபோல தேவசித்தம் நம்மையும் ஆண்டு நடத்த வேண்டும். "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்ட பவுல், கடவுளால் நடத்தப்பட்டு உலகத்திற்கு நிறைந்த ஆசீர்வாதமானார். அவர் மற்றவர்களுக்கு அடிமைப்பட்டவரல்ல. "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைத்திருங்கள்" என்று சொன்னவரும் அவரே.

ஊழியத்தில் நாம் அதிகாரிகளோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், நமது நம்பிக்கையும் பற்றுதலும் கர்த்தர் பேரிலேயே இருக்கவேண்டும். அவர் நடத்துதலை அனுதினமும் தேடவேண்டும். ஆண்டவர் நமக்குளிய அறிவு, வரம், பலத்துக்குத் தக்கதாக, அவர் மகிமைப்படும்படி உண்மையோடும் ஊக்கத்தோடும் ஊழியஞ்செய்யவேண்டும். ஒருவேளை நாம் உத்தியோகம் பார்க்கிற இடத்தில் தாராளமாய் ஊழியஞ்செய்யக்கூடாதபடி இடைஞ்சல் உண்டாகுமானால், கர்த்தர் வேறு வழியை நமக்குக் காண்பிக்கும்படி கருத்தாய் ஜெபிக்கவேண்டும். உண்மையான ஊழியர்களை அவர் நிச்சயமாகவே வழி நடத்திப் பராமரிப்பார். நமது வரங்கள் மற்றவர்களால் அடக்கப்பட இடங்கொடுக்கக் கூடாது. கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்தவர்களும், இன்று செய்கிறவர்களும் கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தைப்

பெற்றவர்களே. அடிமைத் தனம் புருஷத்துவத்தை அழித்து கடவுள் நம்மைக்கொண்டு செய்யத் தீர்மானித்திருக்கும் காரியங்களுக்கு இடையூறாயிருக்கும். நம்மை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதை ஆண்டவர் ஒருவரே அறிந்திருக்கிறார். அவர் நடத்துதலே நமக்கு ஆசீர்வாதம். அவர் நம்மை நடத்தவேண்டுமானால் நாம் முற்றிலும் அவருக்குச் சொந்தமாகி, அவர் பேரில் பூரண பற்றுதல் உள்ளவர்களாயிருக்கவேண்டும். மனுஷர்மேல் நம்பிக்கை வைத்தவர்களை ஆண்டவர் நடத்தமுடியாது. மனுஷர்பேரில் பற்றுதல் வைத்து அவர்களால் பிழைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறவர்கள் கைவிடப் படுவார்கள். அவர்கள் செய்யும் ஊழியமும் தேவ ஊழியமாயிராமல் மனுஷரைப் பிரியப்படுத்தும் ஊழியமாகவே யிருக்கும். தேவபக்தியுள்ள மிஷனெரிமார் அதை விரும்ப மாட்டார்கள். கடவுள் தயவு நமக்கு இருக்குமானால் மனுஷர் தயவு தானாகவே வரும். ஆகையால் நாம் எந்தச் சபையிலிருந்தாலும், எந்தச் சங்கத்தைச் சேர்ந்து வேலைசெய்தாலும், கிறிஸ்து ஒருவரே நமது எஜமான் என்பதை மறவாமல், அவர் சித்தப்படியே பிழைத்து, அவருக்குப் பிரியமாக ஊழியஞ் செய்யவேண்டும். நமது சகலகாரியங்களையும் அவர் நமக்காக நடத்தி நம்மை ஆசீர்வதிப்பார் என்பது நிச்சயம்.

**4. எதிர் பாராத சம்பவங்களைக் கொண்டு நடத்துகிறார்**

நாம் எதிர் பாராத விதமாய் ஆண்டவர் நம்மை நடத்துகிறார். கழுதை தேடப் புறப்பட்ட சவுல் ராஜாவானான். உழுதுகொண்டிருந்த எலிசா தீர்க்கதரிசியானான். ஆடுமேய்த்த தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவானான். மீன் பிடித்தவர்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலரானார்கள். இதைப்போல் திரளான திருஷ்டாந்தங்களை திருச்சபை சரித்திரத்தில் அறிந்திருக்கிறோம். சர்வத்தையும் ஆண்டு நடத்தும் கர்த்தர் எதிர் பாராத காரியங்களைச் செய்யும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தம்மை நம்பியிருக்கும் பிள்ளைகள் விஷயமாய் அவர் எதிர் பாராத காரியங்களைச் செய்து, அவர்களை மகிழ்ச்சியாக்கி நடத்துகிறார். நாளை நடப்பது நமக்குத் தெரியாது. நாம் வழக்கம்போல் அன்றன்றைய வேலையைச் செய்துகொண்டு போகிறோம். திடீரென

நாம் எதிர்பாராத விதமாய்ச் சந்தோஷமான காரியத்தை அவர் நடப்பித்து நம்மை உற்சாகப் படுத்துகிறார். அவர் என்ன செய்யப் போகிறார் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் நமது ஊழியத்தை ஊக்கமாய் நிறைவேற்றிக்கொண்டுபோகிறோம். நமக்கு எந்தெந்தச் சமயத்தில் என்னென்ன செய்யவேண்டுமென்பதை அவர் ஒருவரே அறிந்திருக்கிறார். அவர் ஆலோசித்த நன்மைகளைத் திடீரெனச் செய்யும்போது நாம் ஆனந்த பரவசமடைந்து அவர் திருநாமத்தைப் போற்றுகிறோம். நமது காரியம் எப்பொழுதும் ஒன்றுபோலிருந்தால் நாம் சோர்ந்து போவோம் என்றறிந்து, எதிர் பாராத நன்மைகளால் நம்மை உற்சாகப் படுத்துவது அவரது சித்தமாயிருக்கிறது.

5. சாதாரண காரியங்களைக்கொண்டும் நடத்துகிறார். அவர் நடத்தும் வழியில் சமயத்திற்கேற்றபடி நாம் நடந்துகொள்ளவேண்டியது. சாமுவேல் சவுலை அனுப்பியபோது அவனைப்பார்த்து: நீ ராகேலின் கல்லறையண்டை போகும்போது இரண்டு மனுஷர் உன்னைச் சந்தித்து, உன் தகப்பன் கழுதைமேல் உள்ள கவலைநீங்கி உன்பேரில் கவலையாயிருக்கிறார் என்று சொல்லுவார்கள். அதன்பின் தாபோரின் சமபூமியில் நீ சேரும்போது பெத்தேலுக்குப் போகிற மூன்று மனுஷர் உன்னைச் சந்திப்பார்கள். அவர்கள் உன் சுகசெய்தியை விசாரித்து உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள். பின்பு பெலிஸ்தர் தாணையம் இருக்கிற இடத்திற்கு நீ போகும்போது தீர்க்கதரிசிகளின் கூட்டம் உனக்கு எதிர்ப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார், நீயும் தீர்க்கதரிசனம் சொல்லி வேறு மனுஷனாவாய். இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது, சமயத்திற்கு ஏற்றபடி நீசெய், தேவன் உன்னோடே இருக்கிறார் என்றான். சாதாரணமான காரியங்களில் தேவநடத்துதலைக் காண்கிறோம். நாம் ஆவியைப்பெற்ற தேவனுடைய பிள்ளைகளானாலும் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்து, அவர்களோடு சேர்ந்துதான் காரியங்களை நடத்துகிறோம். உலகத்தைவிட்டு நாம் போய்விடவில்லை. கடவுளை அறிந்த, அவரை அறியாத சகல மனுஷரோடும் நாம் சம்பந்தப்பட்டிருக்கிறோம். இவர்கள் நடுவில் நாம் எப்படி

நடந்துகொள்ளவேண்டுமென்பதை ஆவியானவர் நமக்குப் போதிக்க வேண்டும். அந்தந்த இடத்தில் சமயத்திற்கேற்றபடி நாம் நடந்து கொள்ள ஆண்டவர் நம்மோடு கூடயிருக்கிறார். சாதாரண காரியங்களை நாம் அற்பமாய் நினைக்கக் கூடாது. விசேஷித்த சமயங்களில் மாத்திரம் தேவ நடத்துதல் நமக்கு வேண்டுமென்று எண்ணக் கூடாது. நமது ஜீவியம் மிகுதியாய் சாதாரண காரியங்கள் நிறைந்துள்ளது. இந்தச் சாதாரண காரியங்களிலேயே நாம் தவறிப்போகிறோம். பெரிய விஷயங்களைப்போலவே, சாதாரண காரியங்களிலும் தேவ நடத்துதல் அவசியம். நமது ஜீவியம் ஒரே தொடர்ச்சியானது. அது பங்கிடப்பட்டதல்ல. அநேக சாதாரண காரியங்கள் சேர்ந்தே ஜீவியமாகிறது. நிமிஷங்களை அற்பமாய் நினைத்தால் மணியேது? மணியை அலட்சியஞ்செய்தால் நாள் ஏது? நிமிஷங்கள் சேர்ந்தே நமது ஜீவகால மாகிறது. ஆகையால் ஒவ்வொரு விஷயத்திலும் தேவ நடத்துதல் நமக்கு வேண்டும். சமயத்திற்கேற்றபடி பேசவும் செய்யவும் தகுந்த ஞானம் நமக்கு அவசியம். ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை நடக்கும் காரியங்களில் தேவகரத்தை நாம் காணவேண்டும். கர்த்தரை நம்பிப் பிழைக்கும் பிள்ளைகளுக்குத் தற்செயல் என்பதில்லை. நம்மைப் பார்க்க வரும் மனுஷரை நாம் கவனிக்கவேண்டும். நம்மை அழைக்கும் இடங்களுக்குப் போவதில் தேவ நடத்துதலை நாம் அறியவேண்டும். வரும் கடிதங்களைப்பற்றியும் நாம் எழுதும் பதிலைப்பற்றியும் கவனமிருக்கவேண்டும். அந்த நாளில் நமக்குச் சந்தோஷமோ, அல்லது விசனமான காரியமோ சம்பவிக்கலாம். இவை யாவற்றிலும் நமது கண்கள் கர்த்தர் பேரில் இருக்கவும், நாம் சமயத்திற்கேற்றபடி நடந்துகொள்ளவும் தேவ கிருபையைத் தேடவேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் முக்கியமான விஷயம் தேவ நடத்துதலே. நாம் கடவுளோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்பதற்கும், அவரையே நம்பிப் பிழைக்கிறோம் என்பதற்கும் அவர் நம்மை நடத்துவதே அத்தாட்சி. தேவ நடத்துதலைப் பற்றிப் பேசாதவர்கள் தேவனை அறிந்தவர்கள் அல்ல. தங்கள் சுய இஷ்டப்படி நடக்கிற

வர்கள் தேவனால் நடத்தப் படுகிறவர்கள் அல்ல. எவ்வளவாய் வேதம் கற்றாலும், எவ்வளவு வேலை செய்தாலும், எத்தனை ஆராதனைகளை நடத்தினாலும், தேவன் நம்மை நடத்துகிறார் என்கிற நிச்சயம் நமக்கில்லாவிட்டால் இன்னும் நாம் அவருக்குத் தூரமானவர்களே. என் பேனாவை ஒருவன் கையில் விட்டு விடாவிட்டால் அவன் எப்படி எழுதுவான்? நாம் நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கா விட்டால் அவர் எப்படி நம்மை நடத்துவார்? "உமது ஆலோசனையின் படியே நீர் என்னை நடத்தி முடிவிலே உமது மகிமையில் என்னைச் சேர்த்துக் கொள்ளும்." என்று ஜெபிப்போமாக.

முடிவாக நாம் கவனிக்கவேண்டிய ஓர் விஷயம் உண்டு. பிதாவுக்கு நம்மைச் சமூலமாய் ஒப்புவித்து ஜீவிப்பதால் சகலமும் நமது பிரியம்போலவே நடக்குமென்று எண்ணிக்கொள்ளக்கூடாது. கொஞ்சத்தூரம் எல்லாம் நமக்குச் சந்தோஷமாக நடக்கலாம். ஆனால் நாம் எதிர்பாராத சங்கடங்களும் நேரிடலாம். நமது எண்ணம் தேவ எண்ணத்திற்கு இசைந்திருக்கும் காரியங்களில் அவர் ஆசீர்வாதத்தைக் காண்போம். ஆனால் எப்பொழுதும் நமது நினைவுகள் கடவுள் நினைவுகளோடு இசைந்திருப்பதில்லை. நமது அறியாமையால், ஆத்திரத்தால் சில சமயங்களில் நாம் வழி விலகிப் போகிறோம். அதனாலே நமக்குக் கஷ்டங்களும் கவலைகளும் ஏற்படும். ஆண்டவர் நம்மை வழி நடத்தாமல் நம்மை விட்டு விலகினதுபோல் தோன்றும். அது மாத்திரமல்ல, கழுகு தன் கூட்டைக் கலைப்பதுபோல் தேவன் சில சமயங்களில் நமது ஒழுங்குகளையும் ஏற்பாடுகளையும் திடீரெனக் கலைப்பார், அவர் நடத்துதல் கலைக்குந் தன்மையுள்ளது. தேவ மக்கள் இதன் உண்மையை அறிவார்கள். அவ்வாறு அவர் நம்மைக் கலைப்பது நமக்குச் சங்கடமாயிருந்தாலும் சிறந்த நோக்கத்தோடேயே அவர் அப்படிச் செய்கிறார். கழுகு கூட்டைக் கலைக்கும்போது குஞ்சுகள் திகைக்கும். அப்புறம் அந்தக் குஞ்சுகளைக் கழுகு தன் பலத்த சிறகுகளால் சுமந்து, உயரத்தில் கொண்டுபோய் கீழே தள்ளிவிடும். குஞ்சுகள் கீழே விழும்போது பயந்து உயிர்தப்பும்படி தாங்கள் அறியாமலே தங்கள் சிறு சிறகுகளை விரித்து அடிக்கும். இதற்குள்ளாக

தாய்க் கழுகு குஞ்சுகளுக்குக் கீழே வேகமாய் வந்து அவைகளை மறுபடியும் தன் சிறகுகளால் ஏந்தி மேலே பறந்துபோய் திரும்பவும் கீழே விழும்படி விட்டுவிடும். இப்படிப் பலமுறை செய்வதால் குஞ்சுகளுக்குத் தங்கள் சிறகுகள் எதற்காகவென்பது தெரியவரும். அவைகளை அடிக்கடி உபயோகிப்பதின் பலனாக தாய்க் கழுகைப் போலவே அவைகளும் உன்னதத்திற்கு எழும்பிப் பறக்கும். தேவ நடத்துதலின் சம்பந்தமாய் மோசே இந்த உவமானத்தைச் சொன்னார். நம்மாலுண்டான பாடுகளானாலும், ஆண்டவர் கலைப்பதால் உண்டாகும் பயமானாலும், அவர் நடத்துதலை ஏற்றுக்கொண்டவர்களுக்கு சகலமும் நன்மையாகவே முடியும்.

சந்நியாசி சாதுக்கள் ஜீவியத்தை மனுஷர் மேன்மையாக எண்ணுவது வழக்கம். ஆண்டவருக்குத் தம்மை முழுவதுமாய் ஒப்புவித்து ஊழியஞ்செய்த அப்போஸ்தலனுக்குப் பல பாடுகள் நேரிட்டதென்பது நிச்சயம். அவரும் ஒரு சாதுதான். மனைவி, மக்கள், கல்வி, உத்தியோகம் முதலான காரியங்களைப்பற்றிய கவலைகள் அவருக்கு இருக்கவில்லை. குடும்பத்திலிருந்துகொண்டு கடவுளுக்குப் பிரியமாய் நடப்பதும் உத்தம ஊழியஞ்செய்வதும் லேசான காரியமல்ல. இங்கேதான் நமக்குப் போராட்டமிருக்கிறது. இங்கேதான் அநேகர் நிலை நிற்காமல் தவறிப்போகிறார்கள். ஆவியில் ஆரம்பித்தவர்கள் உலகத்தால் இழுப்புண்டு போகிறார்கள். கர்த்தரைவிட்டு எவ்வளவு தூரம் விலகிப்போனோம் என்பது முதலாய் அவர்களுக்குத் தெரிகிறதில்லை. இந்த நிலைமையிலிருந்துகொண்டுதான் கடவுள் ஊழியத்தையும் பேருக்கு நடத்திக்கொண்டுமிருக்கிறார்கள். சாதாரணமான உலகக் காரியங்களைப்போலவே கடவுள் காரியமும் நடக்கிறது. இப்படியிருப்பது சரியல்ல.

குடும்ப சாகரம், உத்தியோகம், சம்பாத்தியம், பல மனுஷரோடுள்ள சம்பந்தம் இவை யாவற்றிலும் நமக்கு உத்தரவாதமுண்டென்பது நிச்சயம். [illegible] பாடுகளில் தனித்து வசிக்கும் சந்நியாசிகள் அல்ல. அது தேவசித்தமும் அல்ல. ஆண்டவர் நம்மை வைத்த [illegible] நாம் அவருக்குப் பிரியமாய் நடக்கவேண்டும்.

காலமோ மிகவும் கொடியதாயிருக்கிறது. உலகத்துக்குத் தப்ப நம்மால் முடியாது. இவைகளின் மத்தியில் கடவுளால் நாம் நடத்தப்படுவதற்கு அவருடைய விசேஷித்த கிருபை வேண்டும். குடும்பத்திற்கு அடுத்த பற்பல விஷயங்கள் நமக்குக் கவலையை உண்டாக்கும். அயலகத்தாரின் காரியங்கள் நம்மைக் கலக்கச் செய்யும். நமக்கு ஆக வேண்டிய காரியங்களைக் குறித்து, என்ன செய்வது, எவ்வழி நடப்பது என்று தெரியாமல் நாம் திகைக்க நேரிடும். நோய், வேதனை, பாடு, தரித்திரம் நம்மைப் பாரப்படுத்தும். இவ்வாறு பல சிக்கலுக்குள் நாம் அகப்படும்போது கலங்குகிறோம். கடவுள் நம்மை நடத்துவது மெய்யானால் இந்தக் கஷ்டங்களேன் என்று கேட்கிறோம். நம்முடைய பாதை அந்தகாரமாயிருப்பதால் ஆண்டவர் விலகிவிட்டாரே. அவர் நம்மை நடத்தவில்லையே என்று பேசுகிறோம். நேரிடும் சஞ்சலமான விஷயங்கள் நமது கவனத்தை ஆட்கொள்வதால் அவை ஆண்டவர் சமுகத்தையும் அவர் நடத்துதலையும் நமக்கு மறைக்கின்றன. ஆனால் ஆண்டவரோ தம்மை நம்பியிருக்கும் பிள்ளைகளை ஒருபோதும் கைவிடுகிறவரல்ல. நம்மைவிட்டு அவர் ஒரு நிமிஷமாகிலும் விலகுகிறவரல்ல. நடத்துவோம் என்னும் தமது வாக்கை அவர் மீறுகிறவரல்ல. வெளிச்சத்தில் அவர் நம்மோடு கூடயிருந்தது போலவே அந்தகாரத்திலும் அவர் கூடயிருக்கிறார். சந்தோஷத்தில் அவர் நம்மை நடத்தினது போலவே துக்கத்திலும் நம்மை நடத்துகிறார். நமது விசுவாசத்தைப் பலப்படுத்தவும் நமது நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் சில சமயங்களில் நெருக்கமான பாதையை அவர் தெரிந்துகொள்ளுகிறார். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பூரணப்படவும், அனுபவத்தில் உறுதிப்படவும் கஷ்டமான பாதை நமக்கு அவசியம். இருண்ட மேகத்தில் வானவில் அழகாய்த் தோன்றுவதுபோல பாடுகளைப் பொறுமையாய்ச் சகிக்கும் தேவமக்கள் ஜீவியத்தில் தேவ மகிமை வெளிப்படுகிறது. செழிப்பான காலத்தில் நாம் அவரில் நம்பிக்கை வைப்பதுபோல, கஷ்டமான நாட்களிலும் நம்பிக்கையாயிருந்து அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்பது தேவசித்தம். சொகுசான [illegible] மார்க்கத்தில் பலனுமில்லை, கர்த்தருக்கு மகிமையுமி

மில்லை. ஆகையால் நன்மையானாலும் தீமையானாலும், சந்தோஷமானாலும் துக்கமானாலும், மேன்மையானாலும் அவமானமானாலும், அன்புள்ள பிதாவின் மீதுள்ள நம்பிக்கையை மாத்திரம் நாம் விட்டுவிடாமல், ஊக்கமாய் ஜெபித்து, அவர் வேளைக்காகப் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். சீக்கிரத்தில் ஆண்டவர் நமது இருளை வெளிச்சமும், கோணலை நேரும், கவலையைக் களிப்பாகவும் மாற்றி நம்மை ஜீவபாதையில் நடத்துவார். நமது ஜீவியம் பலப்படுவதற்கும் தேவ அறிவில் நாம் வளருவதற்கும் சிலசமயங்களில் கஷ்டமான பாதையில் நாம் நடத்தப்படுவதும், நமது கூடு கலைக்கப்படுவதும் அவசியம். குடும்பத்திலிருந்து கர்த்தரை மகிமைப்படுத்தும் தேவ மக்கள் எவ்விதத்திலும் சோர்ந்து போகக்கூடாது. நம்மால் முடியாத காரியங்களை அவர் நமக்காக முடிக்க வல்லவராயிருக்கிறார். விசுவாசமும் ஊக்கமான ஜெபமும் அதிசயமான காரியங்களை நடப்பிக்கும். நமதாண்டவரும் உலகத்திற்கு ஆசீர்வாதமாயிருந்த அவரது உத்தம அடியார் யாவரும் போராட்டமான பாதைகளில் நடத்தப்பட்டு வெற்றியடைந்தவர்களே. "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங். 48: 14).

# XV

# The Kingdom and the Cross

# தேவராஜ்யமும் சிலுவையும்

"பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்றார். அதுமுதல் இயேசு தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தமது சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" மத். 16: 19, 21.

---

இயேசு கிறிஸ்து உலகத்தில் செய்யும்படி வந்தவேலை மகாபெரிதும் உன்னதமுமானது. "பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" என்று பவுல் கூறினது உண்மையே. அந்த ரட்சிப்பாவது என்னவென்பதைத்தான் நாம் அறியவேண்டியது. கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தபடியால் நமக்குப் பாவ மன்னிப்பு கிடைக்கும்படி அவரை நோக்கிப் பார்க்கிறோம். மற்றவர்களும் ஆண்டவரை விசுவாசித்து அவரால் பாவ மன்னிப்பாகிய ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பிரசங்கிக்கிறோம். ஆனால் ஆண்டவர் உலகத்தில் நிறைவேற்றும்படி வந்தவேலை பாவ மன்னிப்பு மாத்திரமல்ல. அதுவே பூரணமான ரட்சிப்பும் அல்ல. அநேகருடைய கிறிஸ்துமார்க்கம் பாவ மன்னிப்பு தேவை இலேயே நின்றுவிடுகிறது. "எங்கள் பாவங்களை மன்னித்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்பதே அவர்கள் ஜெபம். பாவம் என்று பேசும்போது நம்மில் காணப்படும் தீமையான காரியங்களை நினைக்கிறோம். பாவமாவது என்னவென்று அறிவோமானால், கிறிஸ்து நிறைவேற்றும்படி வந்த ரட்சிப்பாவது என்னவென்பது நமக்குத் தெரியவரும்.

மனுஷன் கடவுள் ஆளுகைக்கு விலகித் தன் சுய இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்ததே பாவம். தேவசித்தப் பாதையை விட்டு விலகி வந்தது பாவமாவதுமின்றி, அவ்வாறு விலகினதால் சம்பவித்த செய்கைகள் பாவங்களும் சகல கேடுகளுமாகத் தீர்ந்தன. அவனவன் தன் தன் வழியில் நடந்ததே சகல பாவங்களுக்கும் காரணமாயிற்று. தேவ ஆளுகைக்கு விலகினது பாவமானால், அந்த ஆளுகைக்குள் நாம் மறுபடியும் பிரவேசிப்பதே நமக்கு ரட்சிப்பாகும். நாம் வழி விலகினதின் பலனாக ஏற்பட்ட பாவங்களை மன்னித்தலில் மாத்திரம் நமக்கு ரட்சிப்பாகாது. தேவசித்தப்படி நாம் பிழைக்கும் வரையும் நாம் ரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. பாஷாணத்தைத் தின்றவன் சாகுந்தருவாயிலிருக்கும்போது தாய் அவனுக்கு மன்னிப்பதால் என்ன பிரயோஜனம்? சாவுக் கேதுவான பாஷாணத்தை மகனை விட்டு அகற்றுவதே அவனுக்கு ரட்சிப்பாகும். வழி விலகிப்போன பாவிகளாகிய நம்மை தேவ ஆளுகைக் குட்படுத்தவே இறங்கி உலகத்திற்கு வந்தார். நாம் தேவனால் ஆளப்படுவதே நமக்கு ரட்சிப்பு.

## I. தேவராஜ்யமும் கிறிஸ்துவும்.

தேவராஜ்யமென்பது தேவ ஆளுகை. தேவஆளுகையே நமக்கு ஆசீர்வாதம். தேவ ஆளுகை கடவுளுக்கு மகிமை. மனுஷன் தவிர சர்வ சிருஷ்டிப்பும் கடவுளால் ஆளப்படுகிறது. அவரது ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது. அவர் சித்தம் ஒன்றே எங்கும் செய்யப்படுகிறது. தேவதூதர்கள் அவர் சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள். ஆகையால் அவருடைய ஆளுகை அவர்களுக்குள் நடக்கிறது. வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சிருஷ்டிப்பிலும் அவரது ஆளுகை நடக்கிறது. மனுஷன் மாத்திரம் தன் சுய சித்தப்படி நடக்கிறான். மனுஷன் சுயாதீனமுள்ளவனாகையால் மற்றமற்ற சிருஷ்டிகளை ஆண்டவர் ஆண்டு நடத்துவதுபோல் அவனை நடத்துவது சரியல்ல. மற்றச் சிருஷ்டிகள் தாங்கள் அறியாமலே தேவ சித்தத்தை நிறைவேற்றுகின்றன. கடவுளே தமது சித்தத்தை அவைகள் மூலம் நிறைவேற்றுகிறார். மனுஷனென்றால் தேவதூதரைப்போல் மனப்பூர்

மாக தேவ ஆளுகையை ஏற்றுக்கொண்டு தேவ சித்தப்படி பிழைக்க வேண்டும். இது பலவந்தத்தினால் ஆகிற காரியமல்ல. ஆகையினால்தான் உலகத்தின் ரட்சிப்புக்கு கஷ்டசாத்யமாகிறது. ஆண்டவர் எவ்வளவு அன்பு பாராட்டினாலும், எவ்வளவு பாடுகள் பட்டாலும், எவ்வளவு கிருபைகளை அருளினாலும், மனுஷன் தானாக, மனப்பூர்வமாக தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் ராஜ்யத்தின் புத்திரன் ஆகமாட்டான். தேவ ஆளுகையே பாவியின் ரட்சிப்பு.

ஆண்டவர் ஊழியத்தில் பிரவேசித்தபோது அவர் முழு மனதையும் ஆண்டுகொண்டிருந்த ஒரே விஷயம் தேவராஜ்யமே. தேவ சித்தத்தை விட்டு விலகிக் கெட்டுப்போன உலகத்தை தேவ ஆளுகைக்குட்படுத்தி ரட்சிக்க வேண்டுமென்பது அவரது உறுதியான தீர்மானம். அந்தத் தீர்மானத்தை அவர் முதலிலிருந்து கடைசிவரை விட்டு விடவேயில்லை. சகலமும் அவர் நோக்கத்திற்கு விரோதமாக நேரிட்டும் அவர் தேவ ராஜ்யத்தை விட்டுவிட்டவரல்ல. தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடாமற் போனதினால் அதற்குப் பதிலாக திருச்சபையை ஸ்தாபித்தாரென்பது சிலருடைய அபிப்பிராயம். அது ஒருபோதும் உண்மையல்ல. தேவராஜ்யத்திற்குப் பதிலாக திருச்சபையை ஸ்தாபிக்காமல், தேவராஜ்யத்திற்காக உழைக்கும்படி திருச்சபையை ஸ்தாபித்தார். திருச்சபை தேவராஜ்யத்திற்குள் அடங்கினதே. நாமோவென்றால் ஆண்டவருடைய விசாலமான நோக்கத்தை மறந்து சபைகளையே பிரதானப்படுத்துகிறோம். கிறிஸ்தவர்களில் அநேகர் தேவராஜ்யம் என்பதை முற்றிலும் மறந்தவர்களாயிருக்கிறார்கள். சபைகளையும் சபைக்கொள்கைகளையும் முக்கியப்படுத்தி சகல பிரிவினைகளுக்கும் ஆளாகிறோம். ஆண்டவருடைய விசாலமான எண்ணம் நமக்கில்லை. அவர் இருதயத்தை நிரப்பிக்கொண்டிருந்தது தேவராஜ்யமே. அவர் பட்டபாடுகள் யாவும் உலகில் தேவராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே. சபையை நாம் அற்பமாய் நினைக்கிறதில்லை. பரிசுத்த பவுல் திருச்சபையைக் குறித்துச் சொல்லியிருக்கிற மகத்தான காரியங்களை நாம் எப்படி மறக்கக்கூடும்? ஆனால் சபைகள் எண்ணத்திற்காக இருக்கின்றனவென்றும், அவற்றின் [illegible]

வரை சேர்க்கும் என்னவென்றும் அவரே எடுத்துக் கூறியிருக்கிறார். சபையினுடைய பிள்ளைகள் ராஜ்யத்தின் புத்திரராயிருந்து தேவராஜ்யத்திற்காக உழைக்கவேண்டியவர்கள். தேவ ஆளுகை பகிரங்கமாக வெளிப்பட்டு, தேவனே சகலத்திலும் சகலமுமாய் இருக்கும் அக்காலத்தில் இவர்கள் அந்தப் பரிபூரண ஆளுகைக் காலத்தில் பிரவேசிப்பார்கள். இந்த நம்பிக்கையும் எதிர்பார்க்குதலும் நமது சபைகளுக்குண்டா?

தேவராஜ்யத்தைக் குறித்து ஆண்டவர் போதித்தவைகளில் சில முக்கியமான விஷயங்களைக் காண்கிறோம். முதலாவது, அவர் உலகில் மனுஷரூபமெடுத்த தேவராஜ்யம் அவருக்குள் வந்தது. இது எவ்வளவு உண்மை! அவர் ஜீவியத்தில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். அவரைப்போல் தேவ ஆளுகையைத் தம் ஜீவியத்தில் பூரணமாய் ஏற்றுக்கொண்டவர்கள் வேறு யாருமில்லை. பூர்வபிதாக்கள், தீர்க்கதரிசிகள். எப்பேர்ப்பட்ட பரிசுத்தவான்களானாலும் சரி, கொஞ்சமேனும் பிசகாமல் எப்பொழுதும் இடைவிடாமல் தேவசித்தப்படி பிழைத்தவர்கள் ஒருவருமில்லை. ஆவியின் நிறைவைப் பெற்று நடத்தப்பட்ட அப்போஸ்தலருங்கூட அநேக விஷயங்களில் தவறினார்கள். கிறிஸ்துவுக்கும் பிதாவுக்குமுள்ள ஐக்கியத்திற்கு ஒப்பான ஐக்கியத்தை யாரும் அடைந்ததில்லை. என்ன ஆச்சரியமான புருஷன் இவர்! அவர் தேவ சித்தப்படியே பிழைத்து, தேவ ஆளுகைக்குட்பட்டவராய் ஜீவித்ததினாலே: "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்றார். அவர் வெளிப்பட்டபோதே அவருக்குள்ளும் அவர் மூலமாயும் தேவராஜ்யம் வெளிப்பட்டது.

இரண்டாவது அவர் உபதேசத்தில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். அவரது போதனைகளின் மொத்தச் சாரம் தேவராஜ்யமே. அவர் சொன்ன உவமைகளெல்லாம் தேவராஜ்யத்தைப் பற்றினவைகளே. மலைப்பிரசங்கத்தின் சாரமெல்லாம் தேவராஜ்யமே. சிறு பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது தேவராஜ்யப் போதனையே. தமது சீஷரோடு செய்த சம்பாஷணைகளில் தேவராஜ்யமே. ஒலிவமலையில் அவர் சொன்ன தீர்க்கதரிசனங்களில் தேவராஜ்யமே. [illegible]

இரவில் இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் தேவராஜ்யமே. "நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழ ரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லை." உயிர்த்தெழுந்த பின்னும் சீஷர்களோடு தேவராஜ்யத்தைக் குறித்தே பேசினார். தேவராஜ்யம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு சுவிசேஷத்தை வாசிப்போமானால் முழுவதும் தேவராஜ்யமாகவேயிருக்கக் காண்போம். தேவராஜ்யத்தை அதாவது தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்பதே ஆண்டவருடைய தீராத வாஞ்சையும், ஸ்திரமான தீர்மானமும், உறுதியான நோக்கமும், பிடிவாதமான வேலையுமாயிருந்தது. ஒரு நிமிஷமாகிலும் அவர் அதை மறந்தவரல்ல. தாம் உபதேசித்தது மாத்திரமல்ல தமது சீஷர்களான பன்னிரண்டு பேரையும், எழுபது பேரையும் அனுப்பினபோது: "மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபம்" என்று பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார்.

மூன்றாவது, அவர் கிரியைகளில் தேவராஜ்யத்தைக் காண்கிறோம். சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி மனுஷரைக் குணமாக்கினார். பிசாசுகளைத் துரத்தினார். மரித்தோரை எழுப்பினார். பசித்திருந்த திரளான ஜனங்களைப் போஷித்தார். அவர் செய்த அற்புதகிரியைகளில் நாம் காண்பதென்ன? பாவத்தால் விளைந்த கேடுகள் மனுஷரை ஆண்டுகொண்டு சஞ்சலப்படுத்துவது தேவ சித்தமல்ல. தேவ ஆளுகையில் அப்படிப்பட்ட குறைவுகள் ஒன்றும் இருக்கப்படாது. வெளிப்படப்போகிற தேவராஜ்யத்தில் மனுஷருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் சகல பாடுகளும் நீங்கிப் பூரண சுகத்தோடிருக்கும் என்பதற்கு ஆண்டவர் செய்த அற்புதங்கள் அடையாளங்களாகும். பரிசேயர் அவரைக் குறித்து: பெயல்செபூலினாலே இவன் பிசாசுகளைத் துரத்துகிறான் என்றபோது, அவர்: "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் வந்திருக்கிறதே" என்றார். ஆகையால் ஆண்டவர் செய்த அற்புதகிரியைகள் யாவும் தேவராஜ்யத்தின் கிரியைகளாகும்.

நாலாவது நாம் ராஜ்யத்தின் புத்திரர் ஆகவேண்டுமானால் தேவ ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்கவேண்டும் என்றார். இதை நிக்கொதேமுடன் சொன்னார். (யோ. 3 : 3, 5). மனுஷன் இருக்கிற படி தேவராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல. தேவ ராஜ்யம் ஆவிக்குரியது. மனுஷனோ மாம்சத்துக்குரியவன். இவன் தேவ ராஜ்யத்தை அறிந்து அதில் பிரவேசிக்கவேண்டுமானால் தேவ ஆவி முந்தி அவனுக்குள் பிரவேசிக்கவேணும். அவன் ஆவியினால் பிறக்க வேண்டும். இது ஒரு அற்புதம். அவன் கண்கள் திறக்கப்படும். தேவ ஆளுகையின் மாட்சிமையை அவன் அறிவான். தேவ ஆவி எங்கேயோ அங்கே தேவசித்தம் செய்யப்படும். அவன் ராஜ்யத்தின் புத்திரன் ஆகிறான். தேவராஜ்யத்திற்குரியவர்கள் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள் என்று ஆண்டவர் சொன்னார். சிறுபிள்ளைகள் பெற்றோரை முற்றிலும் நம்பிப் பிழைப்பதுபோல இவர்களும் தங்கள் பிதாவைப் பூரணமாய் நம்பி அவரையே சார்ந்து பிழைக்கிறார்கள். ஆகையால் நாம் தேவராஜ்யத்தின் பிள்ளைகளாவதற்கு மறுபிறப்பு அவசியம். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்டவர்கள் மறுபடி பிறந்தவர்கள். அவர்களே தேவ ஆளுகைக்குள் பிரவேசித்தவர்கள்.

ஐந்தாவது, தேவராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறார்கள். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது." "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது." "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்." மறுபிறப்பால் நாம் ராஜ்யத்திற்குள் பிரவேசித்து, ராஜ்யத்தின் பிள்ளைகளாயிருப்பதுமாத்திரமல்ல, அந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கும் சிலாக்கியங்களுக்கும் சுதந்தரவாளிகளாகிறோம். நம்மை ஆண்டு நடத்தும் பரமபிதா நமக்குத் தேவையான நன்மைகளை நமக்குக் கொடுக்கிறார்.

ஆறாவது, நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளாயிருந்து, ஆசீர்வாதங்களை அனுபவிப்பதோடு, ராஜ்யத்திற்காக உழைக்கும் உத்தரவாதமும்

நமக்குண்டு. "நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி." "நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள்." "பரலோக ராஜ்யத்திற்கடுத்த கலைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்." பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, 'உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபியுங்கள். இவைகளைக் கவனிக்கும்போது தேவராஜ்யத்தின் பிள்ளைகளுடைய உத்தரவாதம் இன்னதென்று தெரிகிறது. அவர்கள் ராஜ்யத்தின் புத்திரராக ஜீவிக்க வேண்டும்; ராஜ்யத்தின் புத்திரராக ஊழியம் செய்யவேண்டும்; ராஜ்யம் பகிரங்கமாய்ப் பூமியில் வரும்படி ஜெபிக்கவேண்டும். இந்த மூன்றிலும் நாம் உண்மையாயிருக்கிறோமா? ஞானஸ்நானம் பெற்றபோதே பரலோகராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகி விட்டோம் என்கிற எண்ணம் நமக்கிருக்கும்போது அப்புறம் அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படப்போகிறோம். "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்களும் அதில் பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" என்று நமதாண்டவர் யூதச் சபையின் ஊழியர்களை எச்சரித்தது நமக்கும் எச்சரிப்பாயிருக்கிறது.

ஏழாவது தேவராஜ்யம் பெரிய போராட்டத்தின் பலனாகவே உலகில் ஸ்தாபிக்கப்படும் என்கிறார். ராஜ்யத்தைப்பற்றி ஆண்டவர் சொன்ன உவமைகளில் இதன் உண்மையைக் காணலாம். ஆண்டவருக்கு விரோதியான பொல்லாங்கன் ஒருவன் இருக்கவே இருக்கிறான். அவன் தேவ ஆளுகைக்கு விரோதி. அவன் முதலில் தேவ ஆளுகையை மீறி ஆக்கினைக்குள்ளானவன். தேவ ஆளுகையை மீறி சுயசித்தம்போல் நடக்கும்படி மனுமக்களை வஞ்சித்தவன். தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி கிறிஸ்து குழந்தையாய்ப் பிறந்தபோது அப்

போதே அவரைக் கொல்லும்படி துணிந்தவன். வனாந்தரத்தில் உலக ராஜ்யத்தையும் அதன் மகிமைகளையும் அவருக்குக்காண்பித்து, தேவ ராஜ்ய பாதையைவிட்டு விலகும்படி அவரை வஞ்சகமாய்ச் சோதித்தவன். மனுமக்களை நாளதுவரை தன் அந்தகார ஆளுகைக்குள் வைத்து நடத்துகிறவன். இப்படிப்பட்ட உலகத்தில் தேவ ஆளுகையை ஸ்தாபிப்பதென்றால் லேசல்ல. அது ஒரு நாள் இரண்டு நாள் காரியமல்ல. மேலும் மனுஷர் அறியாமல், அவர்களுக்குத் தெரியாமலே, அவர்கள் உள்ளங்களில் தேவ ஆளுகையை ஸ்தாபித்து விடுவதல்ல. ராஜ்யத்தின் சுவிசேஷத்தை மனுஷர் கேட்டு, உணர்ந்து, அவர்களாகப் பொல்லாங்கனுடைய ஆளுகையைவிட்டு நீங்கி, கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படி அவர்களே தீர்மானிக்கவேண்டும். ஆகையால் ராஜ்யம் ஸ்தாபிப்பதில் போராட்டமுண்டு. காலதாமதமும் ஆகும். நிலையுள்ள தீமைகள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டு நீதியுள்ள ராஜ்யம் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

உலகம் வரவரக் கெட்டுப்போகிறது என்பார் ஒரு திறத்தார். அப்படியல்ல, உலகம் வரவரச் சீர்ப்படுகிறது என்பார் மறுதிறத்தார். இரண்டுமே உண்மைதான். ஆண்டவர் போதனையும் அதுதான். கோதுமையும் களையும் பக்கத்திற்குப் பக்கம் வளருகிறது. கோதுமையின் வளர்ச்சி களையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. களையின் வளர்ச்சி கோதுமையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. உலகத்தின் தற்கால நிலைமை அதுவே. உலகமெங்கும் சபைகள் பெருகினதைக் குறித்தும், தேசங்கள் கிறிஸ்தவ தேசமாயிருப்பதைக் குறித்தும் நாம் சந்தோஷப்பட்ட காலங்கள் உண்டு. காலம் செல்லச்செல்லக் காரியம் வெளிப்படுகிறது. வளர்ச்சியில்தான் தீமை நன்மை திட்டமாய்த் தெரியும். கிறிஸ்தவ தேசத்தார் என்னும் பேர் பூண்டவர்கள் துணிந்துசெய்யும் அக்கிரமங்களை வாசிக்க உள்ளம் நடுங்குகிறது. கொள்ளை, கொலைகள் வளர்ந்து வெளியரங்கமாகும் காலம் வந்துவிட்டது. கடவுள் இல்லையென்று மறுப்பவர்களும், கிறிஸ்துவை மறுதலிப்பவர்களும், வேதப்புரட்டரும், [illegible] அசட்டைக்காரரும் தற்காலம் திரள் திரளாகப் பெருகியிருக்கிறார்கள். பெற்றோர் உலகசிந்தையில் அமிழ்ந்து மக்களின் தேவ பக்தியைக் [illegible]

ளிக்காததினாலும், கல்லூரிகளில், வேதசாஸ்திரப் பாடசாலைகளில் வேதத்திற்கு விரோதமான போதனைகள் செய்வதாலும், மக்கள் பெரியவர்களாகும்போது முற்றிலும் கெட்டுப்போகிறார்கள்.

தீமை வளருகிறதுபோலவே நன்மையும் வளருகிறதென்பது நிச்சயம். ராஜ்யத்தின் புத்திரர் தேவ ஆளுகையை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் வளருகிறார்கள். மற்றவர்களை ராஜ்யத்தின் புத்திரராக்கும்படி ஊக்கமாய் உழைத்து, தேவராஜ்யம் பூமியில் வரும்படி கருத்தாய் ஜெபிக்கிறார்கள். அவர்கள் தொகையும் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. என்றாலும் தேவ்ராஜ்யம் எப்படிப் பட்டதென்று உலகம் இன்னும் அறிய ஏதுவில்லை. எந்த ஒரு சபையும் தேவராஜ்யத்தின் சிறப்பை, அதன் பலத்தை வெளிப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை. புறம்பேயுள்ளவர்கள் ஒரு சபையைக் கவனிக்கும்போது தேவராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைக் காண்பதில்லை. சபையில் கோதுமையும் களையும், சொல்லவேண்டுமானால் கோதுமையைப் பார்க்கிலும் களைகள் ஏராளமாயிருப்பதே இந்தக் குறைவுக்குக் காரணம். என்றாலும் தேவ ராஜ்யத்தை உள்ளத்தில் பெற்ற தேவ மக்கள் உலகமெங்கும் சிதறுண்டிருக்கிறார்கள். பொல்லாங்கனுடைய ராஜ்யத்திற்கும் தேவராஜ்யத்திற்கும் போராட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது. தீமைகளின் மத்தியில் ஆண்டவர் பிள்ளைகள் தற்காலம் எவ்வளவோ சங்கடப்படுகிறார்கள். அவர்கள் பெருமூச்சையும் கண்ணீரையும் கர்த்தர் ஒருவரே அறிவார். இதற்கு முடிவு இராதோ? முடிவு உண்டு. கோதுமைகள் களைகளை மேற்கொள்வதாலுமல்ல, அல்லது களைகள் கோதுமைகளை மேற்கொள்வதாலுமல்ல. இயேசுராஜா வெளிப்படவேண்டும். அவர் வெளிப்பட்டுச் சகல இடறல்களையும் தீமைகளையும் முற்றிலுமாய் அழித்து, தேவராஜ்யத்தை பூமியில் வெற்றியுடன் ஸ்தாபிப்பதே முடிவு.

## II. தேவ்ராஜ்யமும் சிலுவையும்.

தேவராஜ்யத்தின் பாக்கியம் இன்னதென்றும், மனுஷர் தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததால் சகல விதத்திலும் கெட்டுப்போனார்களென்றும் கவனித்தோம். அவர் தேவராஜ்யத்தை உலகத்தில்

ஸ்தாபிக்கும்படி வந்தார். அவர் வந்தபோதே ராஜ்யமும் வந்தது. அதைத் தமது ஜீவியத்தாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும் விளங்கக் காட்டினார். பாவத்தின் வஞ்சகத்தால் மனுமக்கள் இருதயம் அந்தகாரப்பட்டு, சித்தமும் பலவீனப்பட்டிருந்ததால் அவர்கள் தேவராஜ்யத்தின் காரியங்களை அறிந்துகொள்வதோ, தேவ ஆளுகையை ஏற்றுக்கொள்ளுவதோ மகா கடினமாயிருந்தது. ஆண்டவரோ கொஞ்சமும் மனஞ்சோர்ந்து போகவில்லை. தேவராஜ்யம் உலகில் ஸ்தாபிக்கப்படுமோ என்னமோ என்று அவர் என்னளவும் சந்தேகிக்கவில்லை. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு எவ்வளவு விரோதம் இடையூறுகள் இருந்தபோதிலும், கடவுளுடைய பூரணமான ஆளுகை பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதில் உறுதியான நிச்சயமுள்ளவராயிருந்தார். ராஜ்யத்தின் போதனையைச் சீஷர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும், ஜனங்கள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் முடிவு வெற்றியாயிருக்கும் என்பதில் அவருக்கு எவ்வளவேனும் சந்தேகம் இருந்ததில்லை. ஆகையால் ஊழியத்தின் ஆரம்பமுதல் முடிவுவரை, கொஞ்சமும் பின்வாங்காமல், தாம் ஸ்தாபிக்க வந்த ராஜ்யத்தைக் கண்ணாரக் கண்டவர்போல, ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கிறவராகவும், ராஜ்யத்தின் கிரியைகளை நிறைவேற்றுகிறவராகவும் முன்னேறிச் சென்றார். தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குச் சிலுவை அவசியமென்றும், தேவராஜ்யம் உலகில் அறியப்பட திருச்சபை அதற்குக் கருவி என்றும், திருச்சபையாலே ராஜ்யம் வெளிப்படாதபடி தீமை அதற்கு விரோதமாய்ப் போராடும் என்றும், கடைசியாகத் தாமே வந்து சகல இடறல்களையும் அக்கிரமங்களையும் முற்றிலும் அழித்து, ராஜ்யத்தை பகிரங்கமாய் உலகம் அறிய ஸ்தாபிப்போம் என்றும் சொன்னார்.

அவர் பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது தமது சீஷரைப்பார்த்து: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லு

கிறார்கள் என்றார்கள். நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு சொன்னார். இதன் கருத்து என்னவென்றால்; யூதர்களாகிய நாங்கள் நெடுநாளும் எதிர்பார்த்திருந்த மேசியாவும் ராஜாவும் நீரே என்பதாகும். இந்த உத்தரவு ஆண்டவருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. இது பேதுருவுக்குக் கிடைத்த அனுபவ அறிவல்ல. பிதா சொல்லிக்கொடுக்க அவர் சொன்னதாகும். என்றாலும் அச்சமயத்தில் கல்லறிக்கை செய்தார். உடனே ஆண்டவர் சபை ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றியும், சிலுவையின் அவசியத்தைப்பற்றியும், நேரிடும் போராட்டத்தைப்பற்றியும், முடிவான வெற்றியைப்பற்றியும் அவர்களுக்குச் சொன்னார். இந்த நாலு விஷயங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுள்ளது. இச்சமயத்தில் ஆண்டவர் இரண்டுமுறை ராஜ்யத்தைப்பற்றிப் பேசினார். பேதுருவைப்பார்த்து: "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" என்றார். சற்றுபின்பு, "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

ஆண்டவர் தமது சிலுவைப் பாடுகளை அறிவித்த சமயத்திலேயே தேவராஜ்யத்தைப்பற்றியும் பேசுகிறார். ஆகையால் சிலுவை தேவராஜ்யத்தோடு சம்பந்தப்படாததல்ல. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சிலுவை அவசியம் என்கிறார். சிலுவை என்பது யூதர்களுக்கு எவ்வளவேனும் பிரியமேயில்லை. ராஜா மரிக்கிறதாயிருந்தால் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது எப்படி ? ஆகையால் சிலுவை கூடாதென்பதே அவர்கள் தீர்மானம். அவர்களுக்கு விளங்கினாலும் விளங்காவிட்டாலும் ஆண்டவர் தமது தீர்மானத்தை விட்டு விலகவில்லை. தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குச் சிலுவை அவசியம் என்பதை அவர் திட்டமாய் அறிவித்தார். ஆகையால் சிலுவையைப்பற்றி யூதர்களுக்குத் திரும்பவும் போதித்தார். சிலுவைப்பாதை வழியாகத்தான் தேவராஜ்யம் வெளிப்படவேண்டும் என்பதை ஆண்டவர் அறிவார்.

அதற்கு ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். அதுவே அவருடைய இடைவிடாத எண்ணமாயிருந்தது.

பிலிப்புச்செசரியாவில் தாம் மரிக்கவேண்டும் என்று சொன்னதிலிருந்து ஒருவாரமாகப் பேச்சு மூச்சைக் காணோம். ஆண்டவர் அவர்களோடு பேசினதாவது அல்லது அவர்கள் ஆண்டவரோடு பேசினதாவது சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. அந்த ஆறுநாட்களை மௌன நாட்களென்று சொல்லவேண்டும். தாம் மரிக்கவேண்டியது அவசியமென்று ஆண்டவர் உறுதியாய்ச் சொன்னது சீஷர்களுக்குக் கொடிய சஞ்சலமாயிற்று. அவர்கள் அதுமுதல் ஒன்றும் பேசக்கூடாதவர்களானார்கள். ஆண்டவரோ தமது பாடுகளையும் அவற்றின் மூலமாய் உண்டாகும் ராஜ்யவெற்றியையும் நினைத்து ஆழ்ந்த சிந்தையுள்ளவராயிருந்தார். ஆறுநாட்களுக்குப் பின்பு ஒரு விசேஷித்த சம்பவம் நடந்தது. அது அவருடைய மறுரூபமகிமை. அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லுகிற மூன்று சுவிசேஷகர்களும் அவர் தமது மரணத்தைப்பற்றியும் தேவராஜ்யம் வருவதைப்பற்றியும் சொன்ன ஒரு வாரத்திற்குள் மறுரூபமானார் என்று எழுதியிருக்கிறார்கள். மறுரூபத்தின் நோக்கமென்ன? அங்கே நடந்த சம்பவம் வெளிப்படப்போகிற தேவராஜ்யத்திற்கு முன்னடையாளம் என்று சொல்லலாம். ஆண்டவர் மகிமையாய்ப் பிரகாசிக்கிறார். மோசேயும் எலியாவும் அவரோடு சம்பாஷிக்கிறார்கள். ராஜரீக மகிமையடைந்த ஆண்டவர் அவர்களோடு செய்த சம்பாஷணை என்ன? "அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்" (லூக். 9: 31). "நிறைவேற்றப் போகிற" என்கிற வார்த்தை, அவர் சத்துருக்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு சாகிறவராக அல்ல, தாமே போய்த் தமது பாடுகள் மரணத்தை நிறைவேற்றுகிற அவருடைய முயற்சியைக் காண்பிக்கிறது. இங்கேயும் தேவராஜ்யத்தோடு சிலுவை சம்பந்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சிலுவையில்லாமல் தேவராஜ்யம் வரும்படி விரும்பின சீஷர்களோடு பிதா பேசினார். "இவர் என் நேச குமாரன் இவருக்குச் செவிகொடுங்கள்" என்றார். அதாவது, என்

குமாரன் போகிறவழியே சரியானவழி; சிலுவை மூலமாகத்தான் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று அவர் சொன்னால், நீங்கள் மறுவார்த்தை பேசாமல், அவர் சொல்லுகிறதற்குச் செவி கொடுக்கவேண்டும் என்கிறார். அவர்கள் மலையிலிருந்து இறங்கின பின்பு, தமது மரணம் உயிர்த்தெழுதலின் அவசியத்தைப்பற்றி மறுபடியும் சீஷர்களுக்குச் சொன்னார். அவர்கள் அதைக்கேட்டுத் துக்கப்பட்டார்களேயன்றி, அவர் சொன்னவைகளின் கருத்தை அறிந்துகொள்ளவில்லை. யாக்கோபும் யோவானும் அவருடைய ராஜ்யத்தில் வலது இடது பக்கம் இருக்கும்படி உத்தரவாகவேண்டுமென்று கேட்டபோது, "நான் குடிக்கும் பாத்திரம், நான் பெறும் ஸ்நானம்" என்று அவர் சொன்னது சிலுவையையே குறிக்கும். இவ்வாறு நமதாண்டவருக்கு தேவராஜ்யம் சிலுவையோடு சம்பந்தப்பட்டிருந்தது. தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சிலுவை அவசியம் என்பதை மகா உறுதியாய்ப் போதித்தார். ராஜ்யத்திற்கும் சிலுவைக்கு முள்ள சம்பந்தத்தை மறுரூபகாட்சியில் சீஷர்களுக்குப் படம்போல் காண்பித்தார்.

## III. சிலுவை அவசியம் என்பதற்குக் காரணங்கள் எவை?

1. விரோதிகளின் எதிர்ப்பு. சனகரீம் என்னும் யூதருடைய ஆலோசனைச் சங்கம் தேவராஜ்யத்தின் விரோதியாகிய அந்தகார அதிபதியின் கையிலிருந்தது. இந்தச் சங்கத்தில் மூப்பர், பிரதான ஆசாரியர், வேதபாரகர் என்னும் அதிகாரக் கூட்டத்தார் ஆளுகை செய்தார்கள். இங்கே பரிசேயரைக் காணோமே என்று நினைக்க வேண்டாம். வேதபாரகரே பரிசேயராவார்கள். இந்த மூன்று வகுப்பாரும் சேர்ந்து யூதருக்குள் அதிகாரஞ்செலுத்தினார்கள். மூப்பர் தேசகாரியங்களில் அதிகாரிகள். பிரதான ஆசாரியர் மார்க்க அதிகாரிகள். வேதபாரகர் சன்மார்க்க, சடங்காசார அதிகாரிகள். இந்த மூன்று அதிகாரங்களும் சேர்ந்து தம்மை எதிர்க்கும் என்றும், தாம் அவர்கள் கையில் பாடுபடவேண்டியது அவசியம் என்றும் ஆண்டவர் சீஷர்களுக்குச் சொன்னார். "தாம் எருசலேமுக்குப்போய், மூப்பரா

லும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும்” என்றார். ஏனென்றால் இந்த மூன்று அதிகாரங்களும் கெட்டுச் சீரழிந்துபோயிருந்தன. இவர்கள் தேச விசாரணையாலும், மார்க்க ஆசாரங்களாலும், பாரம்பரியங்களாலும் கடவுளுடைய ஜனங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு, ஆத்துமாதொய்ந்து, சிதறுண்ட ஆடுகளைப்போல் வழிதப்பி அலைந்தார்கள். இப்படியான ஜனங்களை ஆண்டவர் கண்டபோது, அவர்களுடைய ஆத்ம நிலைமை அவருக்குள் பரிதாபத்தையும் மனதுருக்கத்தையும் உண்டாக்கினது. இயேசுகிறிஸ்து கடவுளால் அபிஷேகம் பெற்ற ராஜா. உலகத்தில் தேவ ஆளுகையை ஸ்தாபிக்கும்படி பிதாவால் அதிகாரம் பெற்று வந்தவர். ஆனால் அவருடைய ராஜ்யம், பிலாத்துவிடம் அவர் சொன்னதுபோல, இவ்வுலகத்துக்குரியதல்ல. அவர்களுடைய ராஜ்யமோ இவ்வுலகத்துக்குரியது. ஆண்டவருடைய ராஜ்யம் ஆவிக்குரியது; அவர்களுடைய ராஜ்யமோ மாம்சத்துக்குரியது. இது ஒன்றொடொன்று கட்டாயம் மோதும் என்பது நிச்சயம். சாந்தமுள்ள ராஜா அவர்களோடு சண்டைசெய்யப் போகிறவரல்ல. தீமைக்குத் தீமை செய்கிறவருமல்ல. பாவிகள் கையில் என்ன பாடுபட்டாகிலும் தமது ஆவிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது அவருடைய உறுதியான தீர்மானம். அவரை எவ்விதத்திலும் பிடித்துப் பாடுபடுத்திக் கொன்றுபோடவேண்டுமென்பது தேவராஜ்யத்தின் விரோதிகளாகிய அவர்களுடைய உறுதியான தீர்மானம். இதை அறிந்துதான் ஆண்டவர் தமக்குப் பாடுமரணம் அவசியம் என்று அறிவித்தார். விரோதிகளின் கொடிய எதிர்ப்பு தமது மரணத்தில் முடியும் என்பது ஆண்டவருக்குத் தெரியும். சிலுவை அவசியம் என்பதற்கு இது ஒரு காரணம்.

2. **பிதாவின் கட்டளை.** நாம் இப்பொழுது கவனித்த முதல் காரணம் நமது மனதிற்கு திருப்தியாயில்லை. ஏனென்றால், எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்த ஆண்டவரை, எப்பொழுதும் நன்மைசெய்த ராஜாவை தீயோர் கையில் மடியும்படி விட்டது நியாயமா? கடவுள் ஏன் அக்கிரமக்காரரை அழித்து, தமது குமார

னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடாது என்று கேட்கிறோம். நான் எருசலேமுக்குப் போகவேண்டும், பல பாடுகள் பட்டு மரிக்கவேண்டும் என்று ஆண்டவர் சொல்வதைப் பார்க்கும்போது, ஏதோ ஒரு பலத்த காரணம் இருப்பதுபோல் தோன்றுகிறது. அவர்கள் என்னைக்கொலைசெய்ய விரும்புகிறார்கள், ஆகையால் நான் எருசலேமுக்குப்போய் அவர்கள் என்னைக் கொல்லும்படி ஒப்புக்கொடுப்பேன் என்பதுமாத்திரம் நியாயமான காரணமாகாது. வேறொரு பலத்த காரணமும் உண்டு. ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி வந்த கிறிஸ்து பிதாவின் ஆலோசனைப்படியும் அதிகாரத்தின்படியும் நடத்தப்பட்டவர். அவர் இப்படிப் பாடுபட்டு மரிப்பதும் பிதாவின் ஏற்பாடாகயிருந்தது. அதைக்குறித்து ஆண்டவரே என்ன சொல்லுகிறார்? "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக்கொடுக்கிறேன், அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு; இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்" என்கிறார் (யோ. 10: 17, 18). முந்தின காரணத்தைப் பார்க்கிலும் இரண்டாம் காரணம் பலமாயிருக்கிறது. இப்படிப் பாடுபட்டு மரிக்கவேண்டுமென்பது பிதாவின் தீர்மானமும் கட்டளையுமாயிராவிட்டால் ஆண்டவர் எருசலேமுக்குப் போயிருக்கமாட்டார். அவரைப் பிடிக்கவோ கொல்லவோ ஒருவனாலும் முடியாது. அவர் தம்மை ஒப்புக்கொடுத்ததினால் அவர்கள் அவரைக் கொன்றார்களேயல்லாமல், மற்றப்படி அவரைப் பிடிக்க முடியவேமுடியாது. முன் பல சமயங்களில் அவரைக் கொல்லவும், கற்களை அவர்மீது எறியவும் துணிந்தபோது அவரைக் காணோம். இப்பொழுதோ அவர் தம்மை அவர்கள் கையில் ஒப்புவித்தபடியால் அவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி செய்தார்கள். பேதுரு ஆவியினால் நிறைந்து பேசினபோது இந்த மறைவான காரணத்தைச் சொல்லுகிறார். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனைப்படியேயும் அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய

கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" (அப். 2: 23). இங்கே மனுஷன் மாத்திரமல்ல, கடவுளும் சிலுவையில் சம்பந்தப்பட்டிருக்கிறார் எனத்தெரிகிறது.

கடவுள் தமது ராஜ்யத்தைப் பாடுகளின் வழியாக ஸ்தாபிக்க வேண்டியதென்ன? அவர் நீதியுள்ளவரானால் துன்மார்க்கரை வேரோடே அழித்து நிக்கிரகம்பண்ணி, தமது நீதியுள்ள ஆளுகையை உலகில் ஸ்தாபிக்கக்கூடாதா? ஆம், அவருடைய நீதியைப்பற்றி மாத்திரம் பேசுவோமானால், உலகத்தில் அவர் ஆளுகைக்கு விரோதமாயிருக்கிற எல்லா மனுஷரையும் எல்லாக் காரியங்களையும் சர்வ நாசம் பண்ணுவதே சரி. அப்படிச் செய்வாரானால் கடவுளுக்கு என்ன கீர்த்தி? "நன்மை செய்வதோ, தீமை செய்வதோ; ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்?" என்று அவரே கேட்டவர். ஒரு துஷ்டனை நீதியின்படி அழித்துவிடுவதிலும் அவனை எவ்விதத்திலும் நல்லவனாக்கக் கூடுமானால் அதுவே சிறந்த வெற்றியாகும். ஒரு அரசன் தன்னை எதிர்த்து நிற்கும் பட்டணத்தை அழித்துவிடுவது நீதியாகலாம். ஆனால் அந்தப் பட்டணத்தாரை மனப்பூர்வமாய்த் தனக்குக் கீழ்ப்படியச் செய்யக்கூடுமானால் அதற்கு நிகரான வெற்றியில்லை. கடவுள் உலகத்தை அழித்துவிடுவாரானால் அவருடைய ராஜ்யம் எங்கே? அவர் ஆளுவதற்கு மனுஷர் எங்கே? தமது ராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு ஏலாமல் சர்வநாசம் செய்துவிட்டார் என்றாகுமல்லவா?

அதுமாத்திரமல்ல, அப்படிச்செய்வது அவருடைய தன்மைக்கு விரோதமுமாகும். கடவுளுடைய தன்மை அன்பு. அந்த அன்பிலேதான் நீதி, பரிசுத்தம், வல்லமை, ஞானம் என்பவைகள் அடங்கியிருக்கின்றன. இவையாவும் சேர்ந்து அவர் அன்பின் மயமாயிருக்கிறார். அன்பு அழிப்பதையல்ல, ரட்சிப்பதையே நாடும். தம்மை இன்னாரென்று அறியாமலும், தமது ராஜ்யத்தின் தன்மையை அறியாமலும், தம்மை எதிர்க்கும் மனுஷரை ரட்சிக்க வேண்டுமென்பதே அவர் வாஞ்சை. அவர்கள் அவரைப் பகைத்து அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தாலும், அவரோ அவர்களுக்கு மன்னித்து அவர்

களை ரட்சித்துக் கொள்ளும்படி விரும்பினார். ஒரு அன்புள்ள தாய் தன் துஷ்டமகனை நல்வழிக்குத் திருப்பும்படி பிரயாசப்படுகையில், மூர்க்கனாகிய மகனால் ஏச்சையும், அவமானத்தையும், அடிகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வதுபோல, பாவிகள் தமக்குச் செய்த சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்து, அவர்கள் தீமையைத் தமது நன்மையால் வென்று, எப்படியாகிலும் அவர்களை ராஜ்யத்தின் பிள்ளைகளாக்க வேண்டுமென்பது தேவ தீர்மானமாக யிருந்தது. அப்படியே அவர் மரணத்திற்குப் பின் அநேகர் இருதயம் நொறுங்கி, கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டு ராஜ்யத்தின் புத்திரரானார்கள். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்" என்று ஆண்டவர் சொன்ன பிரகாரம் அவர்கள் அவரைச் சிலுவையில் உயர்த்தின பின்புதான் அவரை இன்னாரென்று அறிந்தார்கள். அவருடைய சிலுவையில் வெளிப்பட்ட அன்பின் காந்தம் உலகத்தில் ஆயிரமாயிரமான பாவிகளை இழுத்து தேவராஜ்யத்தின் பிள்ளைகளாக்கி யிருக்கிறதென்பது நிச்சயம். ஆக்கினையினால் அல்ல, தமது அன்பினாலேயே ஆண்டவர் உலகத்தை ரட்சித்தார். அவர் ஸ்தாபிக்கும் ராஜ்யமும் அன்பின் ராஜ்யமே யாகும்.

3. **பொல்லாங்குகளுக்கு அழிவு.** விரோதிகள் எதிர்ப்பும், பிதாவின் கட்டளையு மாத்திரமல்ல, தீயோனாகிய சாத்தானையும் அவன் சகல கிரியைகளையும் அழிப்பதற்கு சிலுவை அவசியமென்பது மூன்றாம் காரணமாகும். மனுமக்கள் தேவ ஆளுகையைவிட்டு விலகிப்போகும்படி வஞ்சித்தவன் சாத்தான். அவன் வஞ்சகத்தாலேயே பாவமும் சாபமும் மரணமும் சகல கேடுகளும் மனுமக்களை ஆண்டுகொண்டன. அவன் தூண்டுதலாலேயே மனுஷர் கடவுளைப் பகைக்கவும், அவருடைய ஆளுகையை எதிர்க்கவும் துணிந்தார்கள். ஆகையால் சகல கேடுகளுக்கும் மூலகாரணனாகிய சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழிக்காவிட்டால் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வழியிராது. தீயோன் ஆளும்வரை தீமைகளும் இருக்கும். தீமைகள் இருக்கும் வரை தேவ ஆளுகை என்று பேசவிடமிராது. மனை

ரைத் தீமையிலிருந்து ரட்சிப்பதும், அவர்கள் தேவ ஆளுகையைத் தங்கள் ஜீவியத்தில் ஏற்றுக்கொள்வதும் ஒரு விதத்தில் சந்தோஷமான காரியமானாலும், தீயோன் இருக்கும் வரை தீமைக்கு இடமுண்டு என்பது நிச்சயம். தேவராஜ்யம் உலகில் வெளிப்படும்போது அங்கே பாவம், சாபம், பிணி, வேதனை, மரணம் முதலான எவ்வித கேடும் தலைகாட்டக்கூடாது. அப்படித் தலைகாட்டுமானால் அது தேவ ராஜ்யமாகாது; அது கடவுள் ஏகாதிபத்தியம் ஆகாது. ஆகையால் தேவராஜ்யத்திற்கு விரோதமான சகல தீமைகளுக்கும் மூலகாரணனாகிய சாத்தானையும் அவனால் விளைந்த சகல கேடுகளையும் அழிக்க வேண்டும். "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவ குமாரன் வெளிப்பட்டார்" (1. யோ. 3:8) ஆண்டவர் தமது மரணத்தைப் பற்றிப் பேசினபோது: "இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்றார் (யோ. 12:31). "மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு" ஆண்டவர் சிலுவையில் மரித்ததாக எபிரேயர் நிருபத்தார் கூறுகிறார் (எபி. 2:14).

ஆண்டவருடைய மரணம் எப்படி சாத்தானையும் அவன் சகல கிரியைகளையும் அழிக்கக்கூடும் என்பது முக்கியமான கேள்வி. "இதுவே உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்று ஆண்டவர் சொன்னபடி, அவருடைய பாடுகளையும் மரணத்தையும் கவனிக்கும்போது, அவர் சத்துரு கையில் அகப்பட்டுக்கொண்டதால் அவரும் அவர் ஊழியமும் அழிந்ததுபோல் தோன்றுகிறதேயல்லாமல் அவர் சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழித்ததுபோல் தெரியவில்லையே. இதனாலேதான் சிலுவையை ரகசியம் என்று அழைக்கிறோம். சிலுவையில் நடந்த காரியங்களை நாம் பூராவாக அறிந்தவர்கள் அல்ல. முதல் மூன்று வசனங்களை அவர் சொன்னபின்பு மூன்று மணி நேரங்களாக யாதொரு பேச்சில்லை. அந்த மூன்றுமணிநேரமும் நடந்த காரியத்தை மனுஷர் அறியாதபடி காரிருள் சிலுவையை மூடிக்கொண்டது. சிலுவையில் தொங்கின ஆண்டவரை மனுஷர் பார்க்கமுடியவில்லை. அந்த மூன்று

மணிநேரத்தில் ஆண்டவர் சாத்தானோடும் அவன் சகல வல்லமைகளோடும் வெகுமும்முரமாய்ப் போராடினார். உலகத்தின் பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் தாமே தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டு, அவற்றால் விளைந்த பயங்கரமான கசப்பை அனுபவித்து வெற்றியடைந்தார். அவர் தமது சரீரத்தைச் சிலுவையில் அறைந்தபோதே அவைகளையும் சேர்த்து ஆணியறைந்தார். தம்மை மரணத்திற்கு ஒப்புவித்தபோதே அவைகளையும் மரணத்திற்குள்ளாக்கினார். அவரடைந்த மரணமே பாவத்துக்கும் சாபத்துக்கும் மரணத்துக்கும் மரணமாயிற்று. இவ்வாறு மரணத்திற்கு அதிகாரியான பிசாசையும் அவன் சகல தீயகிரியைகளையும் தமது மரணத்தினாலே அழித்தார். அவர் சற்றுநேரத்திற்குப்பின் "முடிந்தது" என்று முழங்கின கர்ச்சிதமானது அவரடைந்த வெற்றியை வெளிப்படுத்தினது.

அவர் சாத்தான்மேல் வெற்றியடைந்தாரென்பதற்கு அவர் மரணமாத்திரம் போதாது. சற்றுமுன் நாம் கவனித்தபடி அவரது மரணம் சாத்தான் அவர்மேல் அடைந்த வெற்றிபோல் தோன்றிற்று. சிலுவையில் மறைவாய் நடந்த காரியத்தை அறியாதவர்களுக்கு ஆண்டவர் தோல்வியுற்றது போலவே தோன்றும். அவர் மரணம் சாத்தானையும் அவன் கிரியைகளையும் அழித்ததென்பது வாஸ்தவம். அதற்கு ஆதாரமென்ன? ஆண்டவர் தாம் மரிக்கவேண்டும் என்று மாத்திரம் சொல்லாமல் உயிரோடெழும்பவேண்டும் என்றும் சொன்னார். அவர் தமது மரணத்தைப்பற்றிப்பேசின இடங்களிலெல்லாம் உயிர்த்தெழுதலையும் சேர்த்தே பேசியிருக்கிறார். "மெய்யாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்" (லூக். 24: 34). முந்தின நெருக்கமும் பாடுகளும் நீங்கிப் புதியஜீவனோடு வெற்றியாய் எழுந்தார். இதுவரை மனுமக்களை மரணத்தால் நடுங்கவைத்த சாத்தானுடைய கர்வம் அழிந்தது. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களைப் பிடுங்கிக்கொண்டு, மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று கர்ச்சித்தார். அவர் உயிர்த்தெழுதலின் வெற்றியே அவர் பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் முதலாவது தம்மிலே அழித்தவரென்பதற்கும், அவரோடு ஐக்கியப்படு

கிறவர்களுக்கு தமது ரக்ஷண்ய வெற்றியை அருளுகிறவரென்பதற்கும் உறுதியான ஆதாரம். இவ்வாறு நமக்கு விரோதமாயிருந்த சகல நிலைமைகளையும் அழித்து, நாம் தேவராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு தமது மரணத்தின் மூலமாய் “புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை” உண்டாக்கினார்.

நாம் சுவிசேஷத்தை வாசிக்கும்போது சத்துருக்கள் அவரைப் பிடித்ததையும், பாடுபடுத்தினதையும், அவமானப்படுத்தினதையும், கடைசியாகச் சிலுவையில் அறைந்து கொன்றதையும் காண்கிறோம். சகலமும் சத்துருக்களின் ஆரவாரமும், அவர்கள் முயற்சியும், அவர்கள் தீர்மானமும். அவர்கள் வெற்றியுமாகத் தோன்றும். அவரோ வாய்திறவாமல் சாந்தமான ஆட்டுக்குட்டியைப்போல் சகல பாடுகளையும் சகித்து மரித்தார் என்பதாகத் தோன்றும். சரித்திரப்படி நாம் காண்கிற காரியம் அதுதான். ஆகிலும் விஷயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, சத்துருக்களின் முயற்சியல்ல, சகலமும் ஆண்டவருடைய முயற்சிதான் என்பது தெரியவரும். தமது பாடுகளைக்குறித்து மோசே எலியாவோடு அவர் பேசினபோது, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற மரணத்தைக்குறித்து” பேசினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. “நிறைவேற்றப்போகிற” என்கிற வார்த்தை அவருடைய முயற்சியைக் காட்டுகிறது. “என் ஜீவனை ஒருவனும் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்” என்று அவர் சொன்னதும் அவருடைய முயற்சியைக் காட்டுகிறது. இதைச் சத்துருக்கள் அறியார்கள். தாங்களே அவரைப் பிடித்துக்கொண்டது போலவும், தாங்களே அவரைக் கொன்றுவிட்டது போலவும் அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். பாடுகளும் சிலுவைமரணமும் பிதா தமக்கு ஏற்படுத்தின பாதை என்பதை ஆண்டவர் அறிந்து, தோல்வியுற்றவனைப்போல் அல்ல, ஒரு யுத்தவீரனைப்போல சத்துருக்களுக்கு எதிர்கொண்டு போனார். அவ்வாறு போகும்போது: “என் பிதா எனக்குத் தந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்று சொல்லிக்கொண்டு போனார். கொடிய போரில் சென்ற யுத்தவீரன் சத்துருவை ஜெயித்

துத் திரும்பும்போது, அவன் தேகத்திலுள்ள காயங்களும் ரத்தமும் அவனுக்குப் பெருமையாய் விளங்குவதுபோல, ஆண்டவர் தமது ராஜ்யத்திற்காக நடத்தின இந்த யுத்தத்தில் அவர் சிந்தின ரத்தமும் காயங்களும் அவருக்கு வெற்றிச் சின்னங்களாயிருக்கின்றன. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து தம்முடைய ரத்தத்தினாலே நமது பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக." (வெளி. 1: 6).

## IV. தேவராஜ்யமும் நாமும்.

கிறிஸ்து தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி உலகத்திற்கு வந்தார். ராஜா வந்தபோதே ராஜ்யமும் அவரோடே வந்தது. அவர் தமது ஜீவியத்திலும், உபதேசங்களிலும், கிரியைகளிலும் தேவராஜ்யத்தின் தன்மையை, அதன் பலத்தை, அதன் ஆசீர்வாதங்களை வெளிப்படுத்தினார். உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுக்குச் சகிக்கக் கூடவில்லை. அவன் தன் ஆட்களைச் சேர்த்து அவரைப் பகைக்கவும், தங்கள்மேல் அவர் ராஜாவாயிராதபடி அவரை அகற்றிக் கொலைசெய்யவும் தீர்மானித்தான். ஆண்டவரோ, அவர்கள் தமது சரீரத்தைக் கொலைசெய்தாலும் தமது ராஜ்யத்தை அழிக்க முடியாதென்று அறிந்தவராக, தமது ஊழியத்தைக் கடைசிவரை நடத்திக்கொண்டே போனார். தமது ராஜ்யம் அன்பின் ராஜ்யமாதலால், அவர் தீமைக்குத் தீமைசெய்து, சத்துருக்களை நிர்மூலம் பண்ணி, அவ்விதமாய்த் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கருதாமல், சத்துருக்களையும் ஆதாயம்பண்ணி, அவர்களையும் ராஜ்யத்தின் புத்திரர் ஆக்க வேண்டுமென்று விரும்பி, அவர்கள் தமக்குச் செய்த சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டார். மனுமக்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி பாவம் குறுக்கே நின்றபடியால், உலகத்தின் பாவத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு, தமது மரணத்தால் பாவத்தையும் பிசாசின் சகல கிரியைகளையும் அழித்தார். அவர் புதிய ஜீவனோடு உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்று, ஆவியின்

மூலம் தமது அடியார்களுக்குள் வந்து அவர்களை ஆசீர்வதித்தார். அவர் கட்டுவேன் என்று சொல்லியிருந்த சபை உண்டாயிற்று. இவர்கள் தேவராஜ்யத்தின் புத்திரராகி, தேவ ஆளுகையைப் பெற்றார்கள். தேவராஜ்யம் பலமாய் அவர்களுக்குள் வந்தது. அவர்களுடைய ஆவிக்குரிய மாறுதலைக் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தேவராஜ்யத்தின் பலமும் ஆசீர்வாதமும் அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் சிறந்து விளங்கின.

இனிமேல் பகிரங்கமாக பூமியில் வெளிப்படப்போகிற தேவராஜ்யத்திற்கு இந்தத் திருச்சபையைத் தமது கருவியாகக் கொண்டார். தேவராஜ்யத்தின் திறவுகோல்களை அதற்குக் கொடுத்தார். ராஜாவாகிய அவர் அவர்களுக்குள்ளும் அவர்களோடும் இருப்பதால், அவர்கள் எங்கும் புறப்பட்டுப்போய், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்கவும், மனுமக்களை ராஜ்யத்தின் புத்திரராக்கவும் கட்டளையிட்டார். அந்த ஊழியம் அந்நாள் தொடங்கி இந்நாள்வரை நடந்து வருகிறது. உலகமெங்கும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் தேவராஜ்யத்தை வெளிப்படுத்தும் விஷயத்தில் சபைகள் தவறிப்போயின வென்றே சொல்லவேண்டும். நாம் ஆதிச்சபையைப் போல் இல்லை. ராஜா நம்மைப் பூரணமாய் ஆண்டு நடத்தும்படி நாம் இடங்கொடாததால், அவரது ராஜ்யத்தின் சிறப்பை மற்றவர்கள் நம்மில் காணமுடியவில்லை. கிறிஸ்துவை அறியாதவர்களும், அவர் அன்பில் நிலைத்திராதவர்களும், அவரோடு ஏக ஐக்கியமில்லாதவர்களும் சபைகளில் மிகுதியாய் இருப்பதால், புறம்பேயிருந்து கவனிக்கிறவர்களுக்கு சபைகளில் யாதொரு விசேஷமுமில்லை. திருச்சபை கோதுமைகளாயிருப்பதற்குப் பதிலாக, சபைக்குள்ளேயே கோதுமைகளும் களைகளும் கலந்திருப்பது மகா விசனமான காரியம். தேவராஜ்யத்தை உலகில் பரவச்செய்வதற்கு ஆண்டவர் திருச்சபையைத் தமது கருவியாகக் கொண்டார் என்று கவனித்தோம். சபைகள் தேவ ஆளுகைக்கு இடங்கொடாமல் உன்னத பலமிழந்து தவிப்பதால் ராஜாவின் கட்டளையை நிறைவேற்றக் கூடாதிருக்கின்றன. ஜனங்கள் மார்க்கத்தில் சேருகிறதாயிருந்தாலும் அது களைகள்போய்க்

களைகளைக்கொண்டு வருவதுபோலிருக்கிறது. ஒரு சபையின் நிலைமை எப்படியோ அதுபோலவே அதில் சேருகிறவர்களு மிருப்பார்கள். ஆகையால் எந்த ஒருசபையும் தேவராஜ்யத்தின் ஆவிக்குரிய பலத்தை வெளிப்படுத்தத் தகுதியுள்ளதல்ல.

அப்படியானால் ஆண்டவர் சபையை ஸ்தாபித்த நோக்கம் தவறிப் போகுமோ? தேவராஜ்ய ஆளுகை பூமியில் பகிரங்கமாய் வெளிப்படும் காலம் வராதோ? தேவராஜ்யம் பூமியில் கட்டாயம் ஸ்தாபிக்கப்படும். ஒரு தனித்த சபை அவருடைய ராஜ்யத்தின் சிறப்பை வெளிப்படுத்தக் கூடாமற்போனாலும், உலகமெங்கும் சிதறுண்டிருக்கிற ராஜ்யத்தின் புத்திரருடைய ஆவிக்குரிய ஜீவியமும் ஊக்கமுள்ள ஊழியமும் வியர்த்தமாகாது. அவர்களெல்லோரும் சேர்ந்து தேவ பார்வையில் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஜீவனுள்ள அவயவங்களாயிருக்கிறார்கள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வசித்து, அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்துகிறார். அவர்கள் உள்ளங்களிலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் பாய்கின்றன. அநேகருக்கு அவர்கள் ஆசீர்வாதமாயிருக்கிறார்கள். அவர்கள் மூலமாய் அநேகர் கிறிஸ்துவோடு ஐக்கியமாகி ராஜ்யத்தின் புத்திரராகிறார்கள். உலகெங்கும் சிதறுண்டிருக்கிற இவர்கள் மூலமாய் ராஜ்யத்தின் ஊழியம் நடைபெறுகிறது.

ராஜ்யத்தின் சுவிசேஷம் சபைகளில் ஆவியின் பலத்தோடும் அனுபவத்தோடும் பிரசங்கிக்கப் படாததால் புதிய சுவிசேஷங்கள் எழும்பக் காரணமாயிற்று. கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கத்தினாலேயே காரியம் பலிக்காது என்றும், ஜனங்கள் எத்தனையோ கஷ்டங்களிலிருக்கிறார்கள், அவர்களுக்கு உண்ண ஆகாரமும், உடுத்த வஸ்திரமும், சரீரத்திற்குச் சுகமும், சகல சௌகரியங்களும் வேண்டுமென்றும், அப்படியானால்தான் அவர்கள் கடவுளைத் தேடுவார்கள் என்றும் போதிக்கிற புதிய சுவிசேஷங்கள் கிளம்பியிருக்கின்றன. அவைகளுக்கு சோஷல் காஸ்பல், லேபர் காஸ்பல், மதுவிலக்கு காஸ்பல், சுகாதார காஸ்பல் என்று பேர் சொல்லுகிறார்கள். இச்சங்கங்களுக்

குப் பணம் கொடுக்கும் உபகாரிகளும் அநேகர். மனுஷருக்குப் பிழைக்கும் வழி காண்பித்து அவர்கள் சௌக்கியமாக வாழ்வதற்கு ஏற்பாடுகள் செய்வது எக்காலமும் பாராட்டத்தக்கதே. ஆனால் தேவ ராஜ்யத்தின் சுவிசேஷ வேலையால் மாத்திரம் காரியம் பலிக்காதென்றும், இப்படிப்பட்ட புதிய சுவிசேஷ வேலைகளாலேதான் ஜனங்கள் ஆத்மகாரியங்களில் பிரியப்படுவார்கள் என்றும் சொல்வது சரியோ?

பரத்தின் தேவதூதன் "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் சுவிசேஷத்தை" (நற்செய்தியை) அறிவித்தான். அது என்ன சுவிசேஷம்? "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" என்பதே. அவர்தான் சுவிசேஷம். மனுஷனுடைய ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் தேவையான சகல நன்மைகளும் அவருக்குள்ளிருக்கின்றன. ஆத்துமாவுக்கு ஒரு சுவிசேஷத்தையும் சரீரத்துக்கு வேறொரு சுவிசேஷத்தையும் தேவதூதன் பிரசங்கிக்கவில்லை. கிறிஸ்து நமது ஆத்துமாவை மாத்திரம் ரட்சிக்கிறவராயிருந்து, சரீர நன்மைகளை நமக்குக் கொடாவிட்டால் அவர் எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குவதெப்படி? அப்படியிருக்குமானால் வேறே சுவிசேஷங்கள் அவசியந்தான்.

ஆண்டவர் வாழ்ந்த நாட்களில், பிழைக்கும்வழி, மதுவிலக்கு, சுகாதாரம், கைத்தொழில், நாகரீகம் முதலான முயற்சிகளில் அவர் ஈடுபட்டவரல்ல. அவரது அப்போஸ்தலரும் ஜனசமுதாய ஊழியத்தில், சரீரத்திற்குரிய புறம்பான சீர்திருத்தங்களில் பிரவேசித்தவர்கள் அல்ல. ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்போது சகல நன்மைகளும் கூடக்கொடுக்கப்படும் என்பது ஆண்டவருடைய உறுதியான வாக்கு. இரண்டு சமயங்களில் பசியாயிருந்த ஜனங்களுக்காகப் பரிதபித்து அவர்களைப் போஷித்தார். அவர்கள் அப்பம் சாப்பிடுவதற்காகவே தம்மைப் பின்செல்லுகிறார்கள் என்று கண்டபோது அதை நிறுத்திவிட்டார். ஜனங்களும் அதிருப்தல்

அவரைப் பின்செல்லாமல் விலகிப்போனார்கள். சரீர நன்மைகளைக் கொடுப்பதால் ஜனங்கள் கடவுள் பக்தராவார்கள் என்று எப்படிச் சொல்லலாம்? ஜனங்களைப் போஷித்துக் காப்பாற்றும் காருண்ய ஊழியத்தில் ஈடுபட்டிருந்த லார்ட் ஷாவ்ட்ஸ்பரி என்ன சொன்னார்? “மனுமக்களைப் பராமரித்துப் போஷிக்கும் ஊழியத்தில் ஐம்பது வருஷக்காலம் நான் சம்பந்தப்பட்டிருந்தேன், ஆனால் அதன் மூலமாய் மனுஷர் கடவுளை நெருங்கினார்கள் என்று நான் சொல்லமுடியாது” எனஎழுதிவைத்தார். இப்படிப்பட்ட தர்ம ஊழியங்களை நாம் குற்றப்படுத்துவதில்லை. கிறிஸ்துவின் சபைகளில் தர்மசகாய ஊழியம் ஆதிமுதல் இருந்தே வந்திருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் மாத்திரம் காரியம் பலிக்காது என்றும், இப்படிப்பட்ட புதிய சுவிசேஷ வேலைகளாலேதான் ஜனங்கள் கடவுளைத் தேடக்கூடும் என்றும் சொல்வது மரத்தைத் தலைகீழாய் நடுவதற்குச் சமானமாகும்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆத்துமாவையும் சரீரத்தையும் ரட்சிக்கிறது. சகல ஆசீர்வாதங்களும் அவரது ராஜ்யத்தின் சுவிசேஷத்தில் அடங்கியிருக்கின்றன. “நீங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் யாவும் கூடக்கொடுக்கப்படும்” என்று சொன்னார். இதன் உண்மையை அனுபவத்தில் கண்டுகளித்தவர்கள் அனந்தம். ஆகையால் வேறொரு சுவிசேஷத்திற்கு இடமில்லை. ஒரு தனி மனுஷனானாலும், ஒரு குடும்பமானாலும், ஒரு கிராமமானாலும் கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஜீவியத்தில் மாறுதல் அடைந்து, ராஜ்யத்தின் புத்திரராய்ப் பிழைக்கட்டும், அவர்களை ஆண்டவர் தமது வாக்கின்படியே போஷித்துக் காப்பாற்றுகிறாரோ இல்லையோ என்பது அப்போது தெரியும். கர்த்தரை நம்பாதவர்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்தாலும் அவர்கள் கடவுளைவிட்டுத் தூரமாய்ப் போவதற்கே ஏதுவாகும். உள்ளான மாறுதலே புறம்பான ஆசீர்வாதம். குடிகாரன் குடும்பத்தைப் பாருங்கள். வீட்டில் ஓயாச்சண்டை. சம்பாத்தியம் மனைவி கையில் கிடைப்பதில்லை. எல்லாம் ஒழுங்கீனம்.

வீடு அசுத்தம். சாமான்கள் உடைந்து சிதறுண்டிருக்கின்றன. மக்கள் உடைகள் கந்தை. அவர்கள் தேகம் அழுக்கு. அவர்களுக்குச் சந்தோஷமில்லை. எவ்வளவு பரிதாபமான காட்சி! இப்படியிருக்க கிறிஸ்து அடியான் ஒருவர் அங்கே போய் அவர்களுக்கு ரட்சிப்பின் வழியை ஊக்கமாய்ப் போதித்தார். அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, ஆண்டவரைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, ரட்சிப்பைக் கண்டடைந்தார்கள். சிலகாலம் சென்று அந்தக் குடும்பத்தைப் பார்ப்போம். எவ்வளவு மாறுதல்! சகலமும் சுத்தமாய் ஒழுங்காய்க் காணப்படுகின்றன. புருஷன்மனைவி மக்கள் சுத்தமாய் உடைதரித்து மகிழ்ச்சியோடு காணப்படுகிறார்கள். அவர்கள் மக்கள் ஒலிவமரக்கன்றுகளைப்போல் பந்தியைச் சுற்றிலும் உட்கார்ந்திருக்கிறார்கள். சச்சரவும், அதிருப்தியும், குழப்பமும் அகன்றுபோயின; சந்தோஷமும் சமாதானமும் நிலவுகின்றன. வேறே சுவிசேஷம் அல்ல, புறம்பான சீர் திருத்தமல்ல, கிறிஸ்துவே இந்த மாறுதல்களுக்குக் காரணம். அவர் எங்கே பிரவேசிக்கிறாரோ அங்கே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் சரீரத்திற்குரிய நன்மைகளும் குறைவுபடாது. தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள் இருக்கிறது. பவுல் என்ன சொல்லுகிறார்? "நாம் அநுபவிப்பதற்கு சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கள்" என்கிறார் (1. தீமோ 6 : 17). ஜனசமுதாயச் சுவிசேஷம் ஒருவேளை சரீரத்திற்கு நன்மை அளித்தாலும் நித்திய ஆசீர்வாதத்தைத் தொடாது. "சரீர முயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது, தேவபக்தியோ இம்மைக்கும் இனிவரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1. தீமோ. 4:8). இப்படியிருக்க, தேவ ஊழியராகிய நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதாலேயே காரியம் வாய்க்காது என்று சந்தேகித்து, வேறுமுறைகளைக் கையாடும்படி சங்கங்கூடி ஆலோசிப்பது எவ்வளவு பரிதாபம்! கிறிஸ்துவின் சுவிசேஷம் வல்லமையற்றுப்போகவில்லை. நாம் மாறினோமே யல்லாமல் ராஜ்யத்தின் சுவிசேஷமும் அதன் ஆசீர்வாதங்களும் மாறவில்லை. கடவுளை மறந்து அவர் ஆளுகையை ஏற்றுக்கொள்ளாததே உலகத்தின் தத்தளிப்புக்கும் தவிப்புக்கும் காரணம்.

அப்படியானால் திருச்சபை செய்யும் ஊழியத்தின் பலனாகவே தேவராஜ்யம் பூமியில் வரப்போகிறதா? ஒருக்காலும் அல்ல. அநேகருடைய எண்ணம் அப்படியே இருக்கிறது. தேர்ந்த வேதபண்டிதர்களுடைய பேச்சிலும் அவர்கள் புஸ்தகங்களிலும் இந்தக் குறிப்புகளைக் காணலாம். நமது முயற்சிகளாலும், தீமைகளை மேற்கொள்ளும்படி நாம் செய்யும் பலத்த வேலைகளாலும் தேவராஜ்யத்தைக் கொண்டு வரலாம் என்பது இவர்கள் நம்பிக்கை. தீவிரமாய் வளர்ந்து பெருகுகிற சாஸ்திர அறிவு இதற்கு அனுகூலம் என்று நினைக்கிறார்கள். வெளிப்படப்போகிற தேவராஜ்யத்தின் தன்மையை நாம் அறிந்தோமானால் ஒருபோதும் இப்படி நினைக்கமாட்டோம். அது கடவுளால் மாத்திரம் ஆகுமேயன்றி மனுஷனால் ஆகிறகாரியமல்ல. மனுஷன் புறம்பான சீர்திருத்தங்களை எவ்வளவோ செய்வான். உள்ளான பாவவினையை அகற்றி பாக்கியமான காலத்தைக் கொண்டுவர அவனால் ஆகவே ஆகாது. மனுஷர் படும்பாடுகளுக்கும் உள்ளான சஞ்சலங்களுக்குங் கணக்கு வழக்கில்லை. மக்கள் விடும் பெருமூச்சுகளையும் சிந்தும் மறைவான கண்ணீர்களையும் அறிந்தவன் யார்? எந்த மந்திராலோசனைச் சபையாலும், ஜாதிகளின் சங்கமானாலும், சாஸ்திரிகளின் ஞானமானாலும் நமது உள்ளத்தின் தவிப்பை அகற்றி, பாடுகள், நோய்கள், மரணத்தை அழித்து நமக்குப் பாக்கியமும் சமாதானமுமான வாழ்வைக் கொடுக்கமுடியுமா? இது கடவுளால் மாத்திரம் ஆகுமேயன்றி மனுஷனால் ஆகிற காரியமல்ல.

தேவராஜ்யம் மனுஷனுடைய பிரயத்தனத்தால் எப்படி வரமாட்டாதோ அதுபோலவே அது திருச்சபையின் பிரயத்தனத்தால் மாத்திரம் வரமாட்டாது. ராஜ்யத்தின் புத்திரராகிய நாம் ஆண்டவருக்கு எவ்வளவு பிரியமாய் நடந்து கொண்டபோதிலும், இன்னும் நமது ஜீவியத்தின் குறைவுகளையும் ஊழியத்தின் குறைவுகளையும் நன்கு அறிந்தேயிருக்கிறோம். தீமை எவ்வளவு பலமாய் உலகத்தை ஆண்டுகொண்டிருக்கிறது என்பதை நாம் நினைக்கும்போது நமது உள்ளம் கலங்குகிறது. "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட

நம்முடைய சரீரமீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" என்று பவுல் புலம்பினார். அதுவே நமது அனுபவம். இதை மறுக்க எந்தப் பரிசுத்தவானாலும் முடியாது. ஆகையால் நமது பிரயாசத்தாலேயே பாக்கியமும் நீதியும் சமாதானமும் நிறைந்த தேவராஜ்யம் உலகத்தில் வரமாட்டாது. ராஜ்யத்தை உலகத்தில் கொண்டுவந்த கிறிஸ்துவே ராஜ்யத்தைப் பூரணப்படுத்த வல்லவர். ராஜாவாகிய கிறிஸ்து மறுபடியும் வந்து சகல இடறல்களையும், அக்கிரமங்களையும், பாவத்தையும், சாபத்தையும், மரணத்தையும், இவையாவற்றிற்கும் காரணனான சாத்தானையும் அறவேயொழித்து; தேவராஜ்யத்தை பூமியில் பகிரங்கமாய் நிலைநாட்டுவார். இதுவே அவர் வருகைக்கு ஆதாரம். சிலர் சொல்லுகிறபடி அவர் திரும்ப வருவதில்லையென்றால் உலகத்திற்கு விமோசனம் என்ன? உலகத்தை இப்படியே விட்டுவிடுகிறதானால் இதன் கதி எப்படியாகும்? இதுவரை உலகத்தின் கல்வியும் நாகரீகமும் சாஸ்திரமும் சாதித்ததென்ன? முன்னில்லாத பிரகாரம் அக்கிரமங்களும், கொலைபாதகங்களும், பயங்கரமான துணிகரச் செயல்களும், கடவுள் மறுப்புமே நாம் கண்ட பலன். எவ்வளவுதான் உலகத்தின் காரியங்களை மனுஷன் சீர்திருத்தக்கூடுமானாலும் அது தேவராஜ்யமாகாது.

தேவராஜ்யம் மனுஷனுடைய பிரயாசத்தின் பலனாயிராமல் கடவுளுடைய ஈவாக இருக்கிறது. "பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்." இது பிதாவின் ஈவு. தமது மக்களுடைய இருதயங்களில் மறைவாகத் தொடங்கின ராஜ்யம் கிறிஸ்துவின் மூலமாய் பூமியில் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்படும். இதைக் குறித்து பவுல்: அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள், அதன் பின்பு முடிவு உண்டாகும்; (இந்த முடிவு உலகத்தின் முடிவல்ல, சகல தீமைகளையும் முற்றிலுமாய் அழிக்கும் முடிவு) அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்... சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது தேவனே சகலத்திலும்

சகலமுமாயிருப்பார்” என்கிறார். அதாவது நன்மை தீமையைப்படிப்படியாய் மேற்கொள்வதினால் அல்ல, அல்லது ஞானிகள் சாஸ்திரிகள் சேர்ந்து தீமையோடு போராடி அதை மேற்கொள்ளுவதினாலுமல்ல, ஆண்டவர் தாமே சொன்னபடி, அவரே தீமை நிறைந்துள்ள உலகத்தில் திடீரென வெளிப்பட்டு, முதலாவது களைகளைப் பிடுங்கிச் சுட்டெரித்து, கோதுமையாகிய ராஜ்யத்தின் புத்திரரை தமது களஞ்சியத்தில்சேர்ப்பார். கிறிஸ்துவின் ராஜ்யத்திலே திரளான தேவமக்கள் அவரோடு கூடச் சேர்ந்து ஆளுகைசெய்வார்கள். அவருடைய ஆளுகையின் காலத்தில் சகல தீமைகளும் சாபங்களும் முற்றிலுமாய் அகற்றப்படும். இவ்வாறு பழையவைகள் ஒழிந்து சகலமும் புதிதாகும்போது, அதாவது எங்கும் நீதியும் சமாதானமும் ஆசீர்வாதமும் நிறைந்து பூரிக்கும்போது, “புதியவானமும் புதிய பூமியும்” வந்தது என்று சொல்லத்தக்கதாகயிருக்கும். அவர் ஆளுகைக்கு விரோதமான ஒரு சிறு காரியமானாலும் பூமியில் காணப்படமாட்டாது. இவ்வாறு நமதாண்டவர் தாம் ஏற்றுக்கொண்ட ரட்சிப்பின் கிரியையைப் பூரணப்படுத்தி, உலகில் தேவராஜ்யத்தை ஸ்தாபித்தபின் பிதாவைப் பார்த்து: பிதாவே, நீர் ஆதியில் எனக்குத் தந்த ரக்ஷண்ய வேலையைச் செய்து முடித்தேன்; தேவ ஆளுகையை உலகில் ஸ்தாபித்தேன், இதோ, உமது ராஜ்யத்தை நீர் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி பிதாவுக்கு ராஜ்யத்தை ஒப்புவித்துவிடுவார். அப்பொழுது “தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்.” பரலோகத்தில் அவர் சித்தம் பரிபூரணமாய்ச் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் எங்கும் எல்லாவற்றிலும் தேவசித்தம் ஒன்றே செய்யப்படும். இதுவரை நாம் செய்துவருகிற கர்த்தருடைய ஜெபம் அப்பொழுது நிறைவேறும். “உம்முடைய நாமம் பரிசுத்தமாக்கப்படுவதாக உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று ஜெபித்துவருகிறோம். எத்தனை ஆயிரம் முறை ஜெபித்தாலும் காரியம் இன்னும் பலிக்கவில்லை. ஆண்டவர் ராஜ்யத்தை பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, “தேவனே சகலத்திலும் சகலமுமாய்” இருக்கும் அக்.

காலத்தில் அவர் நாமம் பூரணமாய் அர்ச்சிக்கப்படும். அவர் ஆளுகை பூரணமாய் நடக்கும். எங்கே அவர் ஆளுகை பூரணமாய் நடக்கிறதோ அங்கே அவர் சித்தமும் பூரணமாய்ச் செய்யப்படும். தேவன் தமது குமாரனுக்குள் செய்த அறுதி தீர்மானத்தை இவ்வாறு நிறைவேற்றி முடிப்பார். என் பாவத்தை மன்னித்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும் என்பது சிலுவையின் முடிவான நோக்கமல்ல. நாமெல்லாரும் தேவனால் பூரணமாய் ஆளப்படுவதே சிலுவையின் முடிவான நோக்கம். அதற்கொப்பான ஆசீர்வாதமும் பாக்கியமுமான காலமுமில்லை. பிதாவே, உமது மகிமையின் ராஜ்யம் சீக்கிரம் வருவதாக.

---

# BOOKS & BOOKLETS.

BY

Rev. S. PARAMANANDAM,

ROYAPURAM.

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்துவின் ஜீவியம் | ... | 3 | 0 | 0 |
| நூறு பிரசங்கங்கள் | ... | 1 | 8 | 0 |
| கிறிஸ்துவின் சிந்தை | ... | 1 | 0 | 0 |
| விசேஷ பிரசங்கங்கள் | ... | 0 | 8 | 0 |
| இரக்ஷண்ய கீர்த்தனைகள் | ... | 0 | 8 | 0 |
| தேவனுடைய ஈவு | ... | 0 | 4 | 0 |
| வலையும் வேடனும் | ... | 0 | 1 | 0 |
| [illegible]ங்கள் அநேகர் | ... | 0 | 1 | 0 |
| தேவகுமாரனுடைய சத்தம் | ... | 0 | 1 | 0 |
| மேன்மையான மதிப்பு | ... | 0 | 1 | 0 |
| தேவன்மீது தாகம் | ... | 0 | 1 | 0 |
| உன்னதமான கன்மலை | ... | 0 | 1 | 0 |
| எரிந்து பிரகாசிக்கிற விளக்கு | ... | 0 | 1 | 0 |
| அன்பே பிரதானம் | ... | 0 | 1 | 0 |
| ஆத்தும தாகம் | ... | 0 | 1 | 0 |
| பிதாவின் வாக்குத்தத்தம் | ... | 0 | 1 | 0 |
| தேவ அக்கினி | ... | 0 | 1 | 0 |
| கிரியை செய்யும் மூவர் | ... | 0 | 1 | 0 |

Copies can be had from the C. L. S. Madras, or from the Author or from K. R. Press, Madras.